

நெஞ்சுக்கு நீதி

முதல் பாகம்

கலைஞர் மு. கருணாநிதி

நெஞ்சுக்கு நீதி

முதல் பாகம்

கலைஞர் மு. கருணாநிதி

திருமகள் நிலையம்
55.வெங்கட்நாராயண ரோடு
தி.நகர்,சென்னை-600017.

முதற் பதிப்பு	டிசம்பர் 1975
இரண்டாம் பதிப்பு	மார்ச் 1986
மூன்றாம் பதிப்பு	நவம்பர் 1989
நான்காம் பதிப்பு	ஜூன் 1994
ஐந்தாம் பதிப்பு	செப்டம்பர் 1997
ஆறாம் பதிப்பு	செப்டம்பர் 1998
ஏழாம் பதிப்பு	மார்ச் 2000
எட்டாம் பதிப்பு	ஏப்ரல் 2002
உரிமை	**தமிழ்க்கனி பதிப்பகம்**

பேப்பர் *70 ஜி.எஸ்.எம்*
ஜே. கே. மேப் லித்தோ டபுள் டிம்மி

பைண்டிங் *காலிகோ அட்டை பைண்டிங்*

விலை : ரூ.300/-

திருமகள் நிலையம்
சென்னை - 600 017
தொலைபேசி எண் 4342899, 4327696
பேக்ஸ் எண் 91-44-4341559

சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிட்.
34, நெல்சன் மாணிக்கம் ரோடு,
அமைந்தகரை, சென்னை - 600 034.
தொலைபேசி எண் 3741188, 3741199

நெஞ்சுக்கு நீதி

முதல் பாகம்

இரண்டாம் பதிப்பின்

பதிப்புரை

மெல்லத் தவழும் தென்றல் காற்று பூஞ்சோலையில் நுழைந்து அன்றலர்ந்த மலர்களின் நறுமணத்தை அள்ளிக் கொண்டு புதிய சுகந்தத்துடன் வெளிக் கிளம்புகிறது. அதைப் போலவே தமிழ் மொழியும் கலைஞரின் நாவிலும், பேனாவிலும் புகுந்து வெளிக்கிளம்பும்போது கற்பனை நயத்தையும் கருத்துச் செறிவையும் சுமந்துகொண்டு, எழிலார் நடையிட்டு வருகின்றது.

சொற்பொழிவு, கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை உரையாடல், கட்டுரை, தலையங்கம், கடித இலக்கியம் என்று பல்வேறு இலக்கியத்துறைகளிலும் புகழொடு தோன்றிப் புதிய சாதனைகளைப் படைத்த கலைஞர், அரசியலில் மட்டுமன்றி இலக்கியத்திலும் தலைமைச் சிறப்புடையவர்.

கலைஞரின் பழுத்த அரசியல் அனுபவமும் முதிர்ந்த இலக்கியப் புலமையும் ஒருங்கிணைந்ததன் விளைவே அவரது "நெஞ்சுக்கு நீதி" எனல் மிகையன்று.

ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் சுயசரிதை இலக்கியம் ஒரு தனிச் சிறப்புடையது. நாவல், நாடகம், சிறுகதை போன்றவை சாதாரணமானவர்கள் புகழ்பெறக் காரணமாகின்றன. ஆனால் புகழ்பெற்றவர்கள் மற்றவர்களோடு தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள எழுதப்படுபவை 'சுயசரிதை'. எனவே சுயசரிதை நூல்கள், இலக்கியமாக மட்டுமின்றி, வரலாறாக, சமூக மாற்றங்களைக் குறித்த சாசனமாக, கால பெட்டகமாக விளங்கும் ஆற்றல் மிக்கவை.

கலைஞரின் எழுத்து வன்மையையும், உள்ளம் மயங்கவைக்கும் சொல்லாட்சியையும் துள்ளு தமிழ் நடையையும், உயிர்த் துடிப்புள்ள உணர்ச்சி ஓவியங்களையும், அவரது ஏனைய படைப்புகளில் கண்டு மகிழ்ந்த நாம், இங்கே 'நெஞ்சுக்கு நீதி'யில் அவரது இதயத்தைக் காண்கிறோம்; அவர் பெற்ற மனநெகிழ்ச்சிகளையும், வாழ்க்கைப் பயணத்தில் அவர் தாண்டிவந்த தடைக் கற்களையும் தெரிந்து கொள்கிறோம்; அவரது முன்னேடிகளையும், அவருக்கு அறிவூட்டிய பெரியாரையும், ஆளாக்கிய அறிஞர் அண்ணாவையும் பற்றிய சிறப்புமிக்க செய்திகளையும் அறிந்து கொள்கிறோம். இந்நூலின் சிறப்பை எடுத்துக் கூற இன்னொரு கம்பன்தான் பிறந்து வரவேண்டும்.

உரை நடையில் அமைந்த இந்தக் காவியம், தேவ குமாரர்களும், அரசகுமாரர்களுமட்டுமல்ல சாமானியர்களும் சரித்திரம், படைக்கலாம் என்னும் நீதியை உணர்த்தி நிற்கும் நீங்காப் புகழ்மிக்க வரலாற்று ஓவியம் ஆகும்.

இணையிலாத சிறப்புமிக்க இந்நூலின் மூன்றாம் பதிப்பை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அ. இராமநாதன்,
திருமகள் நிலையம்.

முதல் பதிப்பின் பதிப்புரை

சுய சரிதம் யாரும் எழுதி விடலாம். அதை அச்சிட்டு விற்பனையும் செய்து விடலாம். இது ஒரு பெரிய காரியம் அல்ல. ஆனால், சுயசரிதம் யார் எழுதுகிறார்கள் என்பதுதான் முக்கியம்.

வரலாறு படைக்கும் சரித்திர புருஷர்கள் சுயசரிதம் எழுதினால் அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும்.

சுயசரிதம் என்றதும் உடனடியாக நம் நினைவில் தோன்று கிறவர்கள் காந்தி மகாத்மா, பண்டித் ஜவஹர்லால் நேரு, மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் இவர் கள்தான். இவர்கள் சுயசரிதம் எழுதும் ஆற்றல் பெற்ற வர்கள் என்பதைக் காட்டிலும் அதற்குரிய தகுதி படைத்த வர்கள் என்பதே முக்கியம். முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழகத்தில் வரலாறு படைக்கும் காரணத்தால் அந்த வரிசையில் சேர்க்கப்பட வேண்டியவர்.

'நெஞ்சுக்கு நீதி' என்னும் கலைஞரின் இந்தச் சுயசரிதத் தில் எத்தனையோ நிகழ்ச்சிகளும், உணர்ச்சிகளும், போராட்ட நினைவுகளும் நெஞ்சின் அலைகளாய், நினைவின் சுழல்களாய் ஒவ்வொன்றாக மோதிக்கொண்டு வருகின்றன.

கலைஞர் வெறும் எழுத்தாளர் மட்டும் அல்ல. சிறந்த கவிஞர். எழுத்திலே உள்ள அத்தனைக் கோணங்களையும் நுட்பங்களையும் அறிந்தவர். ஈடு இணையற்ற பேச்சாளர். அரசியல்வாதி. அரசியல் தியாகி. ஆட்சித் திறமை மிக்கவர். சமூக சீர்திருத்தவாதி. பகுத்தறிவாளர். அறிஞர் அண்ணாவின் இதயத்தைக் கவர்ந்தவர். நெஞ்சுறுதி மிக்கவர். முப்பது நாற்பதாண்டுப் பொது வாழ்வின் அலை மோதல்களை, அனு பவங்களை இவரது எழுத்தாற்றலின் வாயிலாக அறியும்போது நமக்கு மெய் சிலிர்க்கிறது. ஒரு வீரம் செறிந்த காவியம் போல் இந்த நூல் அமைந்துள்ளது. நமக்கெல்லாம் தெரி

யாத பல ரகசியங்கள் இந்த நூலில் இழையோடுகின்றன. பூத்துக் குலுங்கும் நகைச்சுவைக் குமிழ்களுடன் கூடிய நீரோட்டம் போன்ற அவருடைய தெள்ளு நடை இந்தப் புத்தகத்தில் துள்ளி விளையாடுகிறது.

அவருடைய அரசியல் வாழ்வு, பொது வாழ்வு, சொந்த வாழ்வு-மூன்றும் கங்கையும் யமுனையும் சரசுவதியும் போல் கலந்து வெள்ளப் பெருக்கெடுத்தோடுகின்றன.

கலைஞரின் எழுத்தை நூல் வடிவமாக வெளியிடுவதன் மூலம் தினமணி கதிர் நிறுவனத்தினர் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றனர்.

இந்த முயற்சியில் எங்களுக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்கியவர்களுக்கு நன்றி கூறுமலிருக்க முடியாது. கலைஞரின் உருவத்தை வண்ணப் படமாக அட்டையில் வெளியிடுவதற்குப் போட்டோ எடுத்துக்கொடுத்த பாச்சாவுக்கும், நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற வகையில் பக்கம் பக்க மாகச் சித்திரங்கள் வரைந்து கொடுத்துள்ள ஓவியர் திரு எஸ். செல்லப்பனுக்கும் (செல்லம்) அழகிய முறையில் அட்டைப்படம் அமைத்துக் கொடுத்த 'ராஜு'வுக்கும் நன்றி.

—தினமணி கதிர்

1975

என்னுரை

மனிதன், நூருண்டுகளுக்கு மேலும் வாழ்வது என்பது அதிசயச் செய்திகளில் ஒன்று. தொண்ணூறு ஆண்டுகளைக் கடந்து வாழ்பவர்களே மிகச் சிலர்தான். இந்த அடிப்படையில் பார்த்தால், ஐம்பது வயதைத் தாண்டிய நான், வாழ்க்கையில் முக்கால் பகுதிக்கு மேல் முடித்துவிட்ட நிலையில் என் கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து ''நெஞ்சுக்கு நீதி'' என்ற தலைப்பில் இந்தப் பெருநூலின் முதற் பாகத்தைத் ''தினமணி கதிர்'' இதழில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாம் பாகத்தை ''குங்குமம்'' இதழில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாம் பாகத்தை எழுதி முடிக்கும்போது அறுபது வயதைக் கடந்து; இந்த நூல்களுக்கான முன்னுரையை எனது அறுபத்தி இரண்டாவது அகவையின்பொழுது எழுதுகிறேன்.

இந்த அறுபத்து இரண்டு ஆண்டுகளில்—மிகப் பெரும் பகுதி—பொது வாழ்வுக்கே செலவாகியிருக்கிறது என்பது, என் இதயத்துக்கு ஆறுதலளித்தர வல்லதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் சிறப்பாகத் தமிழுக்கும், தமிழின மக்களுக்கும்—பொதுவாக மக்கட் பணிக்கே பெரிதும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை.

நடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, ''ஏ, அப்பா! இவ்வளவு தூரம் நடந்துவிட்டோமா? இனிமேல் நடக்க முடியாது'' என்று அயர்ந்து போவதற்குப் பதிலாக—''பரவாயில்லே! இவ்வளவு தூரம் நடந்துவிட்டோம். இன்னும் சிறிது தூரம் தானே!'' என்ற புதிய விறுவிறுப்பைப் பெற்றுக வேண்டும்.

அந்த விறுவிறுப்பைப் பெறத்தான் என் வாழ்க்கையை நான் திரும்பிப் பார்த்துக்கொள்கிறேன்.

வாழ்க்கையை ஒரு போராட்டம் என வர்ணிப்போர் உளர்! எனக்கோ: போராட்டமே வாழ்க்கையாகிவிட்டது.

போர் வீரனுக்கு மகிழ்ச்சியே கிடையாதா? ஏன் கிடையாது? கொட்டும் குளிரில், பனிப் பாறைகளில் ஊர்ந்து சென்று பகையைத் தாக்கும்போது சூடாக ஒரு கோப்பைத் தேநீர், அவனும் அருந்துவது உண்டு. அதுவே அவனுக்குப் பெரிய இன்பம்.

மீனைச் சுவைத்துச் சாப்பிடும்பொழுது, அதன முள் நாவிலே குத்தி விடுவதுண்டு. அதனால் சிறிது ரத்தமும் கசிவ துண்டு. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மீன் துண்டு களைச் சுவைப்போரைப் பார்த்திருக்கிறோம்.

சில பேருக்கு மீனின் முள், தொண்டையிலே அடைத்துக் கொண்டு, அவஸ்தைப்படுவதும் உண்டு.

என் வாழ்வு, இதில் இரண்டாவது வகை.

''உன்னை ஒருவன் இழித்துப் பேசினான்'' என்று தன் நண்பனிடம் ஒரு நண்பன் கூறினான். அதைக் கேட்ட அந்த நண்பன் வியப்புற்று, ''அப்படியா! இருக்காதே! என்னை அவன் இழித்துப் பேசியிருக்கமாட்டானே! நான் அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லையே! பிறகு எப்படி அவன் என்னை ஏசியிருக்க முடியும்?'' என்று கேட்டான்.

இந்த உரையாடல் துணுக்கில் இந்த உலகத்தின் படமே தெரிகிறதல்லவா? இத்தகைய உலகில்தான் நமது வாழ்க் கைப் பந்து உருளுகிறது.

அந்தப் பந்தை நாம்தான் உதைத்து விளையாட வேண்டும். யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலா யிருந்தால், அவர்கள் நம்மையும் சேர்த்து உதைப்பார்கள்.

கல்லிலும், முள்ளிலும், கட்டாந்தரையிலும் அடித்து "அவுட்" (Out) ஆகாமல் பந்து, (Goal) கோலுக்குள் நுழைந் திட வேண்டும். (Goal) கோல் இல்லாமல் பந்தாடுவதில் மட்டும் திறமையைக் காட்டிப் பயனில்லை. வெற்றி தோல்விகள் இயற்கைதான் எனினும் விடா முயற்சியும் கொள்கை உறுதி யும் ஒயா உழைப்பும் தேவை.

'ஓய்வெடுத்துக் கொள்க!' என்று சில மாற்றுக் கட்சி நண்பர்கள் கேலியாகக் கூறினர். ''ஓய்வெடுக்கும்வரை உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்'' என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும் என்று பதில் சொன்னேன்.

அந்த உணர்வுகளின் தொகுப்புத்தான் இந்த நூல். இது முழுமையானதல்ல. இன்னும் நிறைய இருக்கிறது, எழுத! மூன்றும் பகுதியாக, அது வெளிவரக்கூடும்.

இந்த முதல் பகுதியைத் தொடர்ந்து எழுதத் தூண்டியவர் என் நண்பர் சாவி. ஆர்வமுடன் தினமணி கதிரில் வெளியிட்டவரும் அவரே! அவருக்கு என் நன்றி!

தொடர்ந்து எழுதுவதற்குத் துணையாக, அவ்வப்போது நான் கேட்ட அரசியல் குறிப்புகளைத் தந்து உதவிய, தி. மு. க. தலைமை நிலைய நண்பர் சண்முகம், தம்பி சண்முகநாதன், நண்பர் மறைமலையான் ஆகியோர் மறக்க முடியாதவர்கள்.

இதன் முதற்பதிப்பை, தினமணிக் கதிர்' நிறுவனத்தார் வெளியிட்டனர். முதல் பாகத்தின் இரண்டாம் பதிப்பையும், இரண்டாம் பாகத்தின் முதல் பதிப்பையும் ''திருமகள் பதிப்பகம்'' நண்பர் திரு. இராமநாதன் அவர்கள் வெளியிடுவதற்கு முன்வந்தமைக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது அரிய முயற்சிக்கு என் நன்றி!

★ பெரியாரைப் போல் சிந்திக்க

★ அறிவூட்டிய பெரியார்

★ ஆளாக்கிய அண்ணா

ஆகியோருக்கு இது காணிக்கை.

சென்னை
1985

அன்புள்ள

நெஞ்சுக்கு நீதி

தொடக்கம்

'எழுதுவதற்கு முடிகிறதா? நேரங்கூடக் கிடைக்கிறதா?' என்று என் அலுவல்களை உணர்ந்தோர் அடிக்கடி கேட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கிறேன். முப்பதுக்கு மேற்பட்ட திரைப்படங்களுக்கான கதையும் உரையாடலும், என் பாடல்களுங்கூடத் தீட்டியிருக்கிறேன். பத்து நாடகங்களாவது எழுதியிருப்பேன். வாரந்தோறும் முரசொலி இதழில் தொடர்கதையென்ன, அரசியல் கட்டுரைகள் என்ன, முப்பதாண்டு காலமாக இடைவிடாது எழுத்துப் பணியைத் தொடர்ந்து செய்திருக்கிறேன்.

"எல்லாம் சரி; 1966 வரையில்தானே? அப்போது உனக்கு நிறைய ஓய்விருந்தது. ஓய்வு கிடைக்காதபோதெல்லாம் காங்கிரஸ் அரசினர் சிறைச்சாலைக்கு அனுப்பிவைத்து ஓய்வு அளித்தனர். அதனால் எழுத முடிந்தது. இந்த ஏழு ஆண்டுக் காலத்தில் கழகம் ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நீயும் அமைச்சரான பிறகு எதப்பா எழுதுவதற்கு நேரம்?" என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது.

அமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு எனக்கேற்படுகிற மன உளைச்சல்களை அயர்வை, சோர்வை, அனைத்தையும் போக்குகின்ற அருமருந்தாக அமைந்திருப்பதே எழுத்துப் பணிதான்.

அதுவும் முதல்வர் எனும் சுமை என் தோளில் ஏற்றப்பட்ட பிறகு இந்த நான்கு, ஐந்து ஆண்டுகளில் ஓட்டப் பந்தயத்தில் ஓடிவிட்டு வந்தவன் எலுமிச்சம்பழத் தண்ணீரை விரும்புவதுபோல், நானும் களைப்பாற்றிக்கொள்ளக் கவிதை, கட்டுரை, கதை ஏதாவதொன்றை எழுதுவதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறேன்.

பல்வேறு தலைப்புக்களில் முப்பதுக்கு மேற்பட்ட கவியரங்குகளில் நான் தலைமை ஏற்றுக் கவிதை பாடியிருப்பது இந்த நான்கு, ஐந்து ஆண்டுகளில்தான்!

அந்தக் கவிதைகளை எழுதுவதற்கு எனக்குக் கிடைக்கிற இடம் பெரும்பாலும் புகைவண்டிதான்.

இரவு நேரத்தில் பத்து மணிக்கு மேல் புகைவண்டியின் பெட்டிகளின் கதவுகளை மூடிவிட்டுத் தூங்குவது போல ஒரு நடிப்பு! அதன் பிறகு பார்வையாளர்கள், முறையீடுகள், நிச்சயமாக இல்லை என்று நம்பலாம். அதிலும் சில நிலையங்களில் கதவைத் 'தடார், தடார்' எனத் தட்டி வெளியே ஆளை இழுத்து, ''பாவம், நல்ல தூக்கம் போலிருக்கிறது. எழுப்பி விட்டோம். பரவாயில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்'' எனப் புன்னகை புரிகிறவர்களும் உண்டு. இவை களுக்கிடையே இருபது முப்பது பக்கங்கள் எழுதி விட்டோம் என்ற மன நிறைவோடு விடியற்காலை ஐந்து மணிக்குத் தூங்கி, ஆறு மணிக்கு இறங்க வேண்டிய ஊரில் விழிப்பதிலே ஒரு தனி இன்பம் இருக்கத் தான் செய்கிறது.

காலையில் எழுந்ததுமே வீட்டு வாயிற்புறத்தில் ஐம்பது பேர் இருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துவிட்டுச் சிற்றுண்டி அருந்துவதற்குள் ஐம்பது நூறுகிறது. சரியாக அழுக்குத் தேய்த்துக் குளித்தே ஆண்டு ஏழுக்கு மேலாகிறது. நூறு பேருடைய பிரச்சினைகளைக் கவனித்துக் கொண் டிருக்கும்போதே, மேலும் பத்துப் பார்வையாளர் சீட்டுக்களோடு பையன் மேலே வருகிறான். அதில் இருபது பேரைப் பார்க்க முடியாமல் போய், ''கோட்டைக்கு வாருங்கள்; அல்லது மாலையிலே வாருங்கள்'' என்று கூறிவிட்டு, 'அய்யோ இப்படிச் சொல்லிவிட்டுப் புறப்படு கிறேமே; என்ன நினைத்துக் கொள்கிறார்களோ?' என்ற மன வேதனை யோடு காரிலே ஏற வேண்டியிருக்கிறது.

கோட்டையிலே அதிகாரிகளுடன்-அமைச்சர்களுடன் ஆலோசனை பதிர்பாராமல் எழுகின்ற எத்தனையோ சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டிய இன்றியமையாமை! மூன்று மணிக்குச் சோறு! அதற்காக வெளியே கிளம்பும்போது அலுவலகத்தைச் சுற்றிப் பெரியதோர் பார்வையாளர் அணிவகுப்பு. அவர்களுடைய முறையீடுகளைப் பெற்று அதற்காவன செய்வதாக உறுதியளித்து மீண்டும் மாலை 4-30 மணிக் கெல்லாம் வீட்டில், பார்வையாளர்கள் சந்திப்பு! இதற்கிடையே சிறப்பு நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள், சுற்றுப் பயணங்கள், சட்டசபை இருந்தால் அந்த வேலைகள்!

இத்தனையிலும் கழக நினைவும் கலை உணர்வும் இழையோடிக் கொண்டிருப்பதால், களைப்பு ஆளை வீழ்த்துவதில்லை; தாங்கிக் கொள்ள முடிகிறது.

அரசாங்கப் பொறுப்பு எவ்வளவுதான் மனத்தை அழுத்திக் கொண்டிருந்தாலும் நம் கழக நண்பர்களைப் பார்க்கின்றபோது,

இதயத்தில் சுமை குறைகிறது. சுவை ஏறுகிறது. அவர்கள் ஏதாவது சூடான விஷயங்களைக் கொண்டு வந்திருந்தால்கூடக் கழகத்தைப் பற்றி அவை இருந்தால் சூடும் சுவையும் கலந்த இன்பத்தை அனுபவிக்க முடிகிறது.

சமுதாயத்தின் அடித்தளத்திலே கிடக்கிற மக்களுக்கும் மனம் குளிரத்தக்க வண்ணம் ஒவ்வொரு நாளும் அரசின் சார்பில் ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும். அப்படிச் செயல்படுகிற நாளெல்லாம் உள்ளத்தில் இன்பம் துள்ளும் நாளாகவே இருந்திருக்கின்றது. சில மாதங்களுக்குமுன் 'ஸ்டேட்ஸ்மேன்' நிருபரிடம் பேசியபோது,

''வெளிநாடுகளைப் போல, அற்புத விஞ்ஞான முன்னேற்றங்கள் தமிழ்நாட்டுக்கு வரவேண்டுமென்று ஆசையிருந்தாலும் அதற்கு நீண்டகாலம் பிடிப்பதைப் பற்றிக்கூட எனக்குக் கவலை இலலை. எங்கள் நோக்கமெல்லாம் இங்குள்ள சாதாரண மக்களை மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வாழச் செய்யவேண்டுமென்பதுதான்'' என்று குறிப்பிட்டேன். நிருபர் போன பிறகு நீண்ட நேரம் யோசித்தேன்.

''என்ன செய்திருக்கிறோம் ஏழை எளியவர்களுக்கு?''

எல்லாவற்றையும் செய்து முடித்துவிடவில்லை யென்றாலும், ஏதோ நம்மாலானதைச் செய்திருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து வருகிறோம். அவர்களும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைக் காணும்போதும், அவர்களுடைய உள்ளத்தை உணரும்போதும் உற்சாகம் பீரிடுகிறது. உணர்ச்சல் நீங்குகிறது. எண்ணங்கள் பூரிக்கின்றன. அவை எழுத்தாரமாவதற்குத்தான் நேரத்தையும் இடத்தையும் தேடியலைய வேண்டும். எப்படியோ முடிகிறது. அந்தப் பணியையும் நிறைவேற்றி வருகிறேன்.

பழைய தமிழகம், புதிய தமிழகம், மக்கள் நிலை, அறிவு வளர்ச்சி, இலக்கிய இன்பம், அரசியல் அலைகள்- அனைத்தையும்

பற்றிய விளக்கங்களோடு ஒரு தொடர் கட்டுரை எழுத வேண்டும் என்பது என் நெடு நாளைய அவா! வெறும் கட்டுரையாக மட்டு மிருந்தால் சுவை குன்றுமோ என்ற பயத்தில் தொடர்கதைபோல் அந்தக் கட்டுரையை எழுத எண்ணுகிறேன். கதையென்றால் அதற்கு ஒரு இழையோடும் கதாபாத்திரம் வேண்டுமே! அதற்கு என்னையே நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

"ஏன் இப்படி வளைத்து வளைத்துச் சொல்கிறாய்? வாழ்க்கை வரலாறு எழுதப் போவதாகச் சுருக்கமாகச் சொல்லிவிடுவது தானே!" என்று கூடத் தோன்றும் உங்களுக்கு! நான் முன்பு சில இதழ்களில் என் வாழ்க்கைக் குறிப்புகளை எழுதியிருக்கிறேன். அதுவல்ல இது. என்னுடைய இந்த ஐம்பதாவது வயது முடிவுக்குள் ஒரு பெரிய சகாப்தம் ஆரம்பமாகி அதனைத் தொடங்கிய சரித்திர நாயகன் மறைந்து போயிருக்கிறான். ஆனால் அந்தச் சரித்திரம் மறையாது. என்னை நூலாக வைத்துக் கொண்டு அந்தச் சரித்திர முத்துக்களைக் கோத்திடப் போகிறேன்.

என்னை வெறும் நாராக வைத்துக்கொண்டு அந்த வரலாற்று வேந்தனின் புகழ் மலர்களைத் தொடுத்து மாலையாக்கப் போகிறேன். வாழ்க்கை வரலாறு என்ற பெயரால் ஒரு இயக்க வரலாற்றை அளிக்கலாம். அதிலே அங்கொன்றும் இங்கொன்றும் என்னைப் பற்றிய குறிப்புகள் வராமல் தொடர்ந்து வந்திடும் என்பதால் 'சுய புராணம்' என்று எண்ணுதீர்கள். எழுச்சிமிக்க வரலாற்றுச் சம்பவங்கள், எண்ணத்தைக்கிளறும் அறிவியக்கச் சாதனைகள் இன்பம் பெருக் கெடுக்கும் இலக்கியக் காட்சிகள், அதிர்ச்சி தரும் அரசியல் மாற்றங்கள் இவைகளை விளக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறேன்.

அவனவனும் தன் நெஞ்சுக்கு, தனக்குத்தானே நீதி வழங்கிக் கொள்ளவேண்டும். அதைப் போலவே ஒரு சமுதாயம், ஒரு கட்சி, ஒரு கூட்டம் தாங்கள் செய்யும் நல்லவைகளுக்கோ அல்லது தீயவை களுக்கோ தங்கள் நெஞ்சுக்கு நீதி வழங்கிக் கொள்ளப் பழக்கப் பட்டாக வேண்டும்.

ஒருவனைக் குறை கூறி விடுவது எளிது. அந்த நாக்கிற்கு இரண்டு கைதட்டல் கிடைக்கும். ஆனால் குறை கூறியவனின் நெஞ்சுக்கு நீதி கிடைக்க வேண்டாமா?

நான் நேர்மையாளன் என்று எவனும் மார்தட்டிப் பேசி விடுவது எளிது. நேர்மையைப் பற்றிய நீதியை அவன் நெஞ்சுக்கு அவனே வழங்கியாக வேண்டுமல்லவா? நீதி வழங்குவது—தீர்ப் பளிப்பது! நீதியை ஏற்பது—தீர்ப்பை ஏற்பது! நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு 'அப்பீல்' உண்டு. நெஞ்சுக்கு வழங்கப்பட்ட நீதிக்கு 'அப்பீல்' எது?

2

பிறந்த ஆண்டு

"வாழ்க்கை வரலாறு எழுதுகிற அளவுக்கு நீ என்ன அவ்வளவு பெரிய மனிதனுகி விட்டாய்?"

யாரோ கேட்பதல்ல: என் நெஞ்சே என்னைக் கேட்டுத்தான் முடித்தது. ஆனல் அதற்குரிய பதிலையும் அது தன் கைவசம் வைத்துக் கொண்டிருந்தது.

பெரிய மனிதர்களுக்குத்தான் வாழ்க்கையும் வரலாறும் சொந்தமா? சின்னவர்களுக்குக் கிடையாதா?

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை வரலாறு உண்டு. அதனை அவன் எழுதிவைக்க நினைப்பதில்லை. எழுத நேரம் இருப்ப தில்லை. அல்லது கோத்துத் தொகுத்து எழுதத் திறமை பெற்றிருப்ப தில்லை.

ஆனல் இரண்டு சிறைச்சாலைக் கைதிகள், தங்களுக்குள்ளாகவே, தங்கள் வாழ்க்கைக் கதைகளைப் பேசிக் கொள்கிறார்கள். கேட்க முடிகிறது.

வயது முதிர்ந்த இரண்டு ரிக்ஷாக்காரக் கிழவர்கள் மரத்து நிழலில் தங்கள் வாகனங்களின்மீது ஒயிலாகச் சாய்ந்தவாறு, தங்கள் வாழ்க்கையின் சுவையான கட்டங்களை ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள்.

சத்திரத்துத் திண்ணையில், தூக்கம் வராமல் படுத்திருக்கும் இரு சாமியார்களின் உரையாடல்களை ஊன்றிக் கவனித்தால் அங்கேயும் அவர்கள் வாழ்க்கை வரலாறுதான்

மரணப் படுக்கையிலே தன்னுடைய முடிவை உணர்ந்து கொண்ட நோயாளியின் மனக் கண்ணில் சப்தமின்றிச் சுற்றிச் சுழலும் வாழ்க்கை வரலாற்றை அவன் எழுதவும் முடியாமல், பேசவும் முடியாமல் தன் நெஞ்சிலேயே திரைப்படமாக ஓடவிடுகிறான். மரண முகப்பிலும் அவனையறியாத புன்னகை, பெருமூச்சு கண்ணீர்— இவையத்தனையும் அவனது வரலாற்றின் பல்வேறு அத்தியாயங்களே யாகும்.

ஒவ்வொரு தனி மனிதனுடைய வரலாற்றிலும் பெரிய சமுதாய மாற்றம் ஏற்படக் காரணம் இல்லாமல் இருந்திருக்கலாம் அரசியல் புரட்சிக்கு அவன் வாழ்க்கை வரலாற்றில் இடமில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் நாட்டில் நடைபெறுகிற மாற்றமானாலும், புரட்சியானாலும் அதில் அவனையறியாமல் பங்கு பெற்றிருக்கக்கூடும். அவன் சமுதாயத்திலே ஓர் அங்கம்—அவனைப் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்துதான் சமுதாயம்—நாடு என்கிற உண்மையான நிலையை யார்தான் மறுக்க முடியும்?

ஆகவே அவனுக்கு நாட்டின் மாற்றங்களில் எப்படியோ ஒரு பங்கு இருக்கிறது. அதை அவன் வரலாற்றுக் குறிப்பாக எழுதுகிற அளவுக்கு அவ்வளவு பெரிய விஷயமாகக்கூட அவன் நினைக்காமல் இருந்திருக்கக்கூடும். ஒரு ஊரையே அழிக்கின்ற புயல் காற்றில் சிக்கிப் பறக்கின்ற ஒரு மரக்கிளை. ஒரு வீட்டின் முகப்பில் விழுந்து முகப்பை இடித்துத் தள்ளுகிறது. இதில் செயல் பட்டது புயல் காற்று? மரக் கிளையா? எப்படியோ அந்த மரக்கிளையின் வரலாற்றில் ஒரு சம்பவம் இணைந்துவிடுகிறது.

இதனையெல்லாம் சிந்தித்துப் பார்த்த பிறகுதான், என் நெஞ்சுக்கு நீதி வழங்கும் தெம்பு ஏற்பட்டது. தீர்ப்பு, கேள்வி வடிவத்திலேயே கிடைத்தது.

"பெரிய மனிதர்களுக்குத்தான் வாழ்க்கையும் வரலாறும் சொந்தமா? சின்னவர்களுக்குக் கிடையாதா?"

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு என் எழுதுகோலின் வேலை தங்கு தடையின்றித் தொடங்கிவிட்டது.

ஜூன் மூன்றும் தேதி எனக்குப் பிறந்த நாள் கொண்டாடினார்கள். பிறந்த நாளைப் பற்றிச் சிந்தனையாளன் 'ரூசோ' சொன்னதை நான் நினைவுகூறத் தவறவில்லை.

"என்னுடைய முதல் துன்பம் மனிதனுக்குப் பிறந்ததுதான்!" என்றான் அவன்.

பிறவி உரிமைகளைப் பேணும் வகை பற்றி மனிதகுலம் முழுமைக்கும் போதித்த அந்தப் பேரறிஞன், தன் பிறந்தநாளைச் சபித்துக் கொரித்துக் கொண்டிருந்தது வேடிக்கையான ஒன்றுதான். அவன் பிறந்தபோது அவன் பிறந்த வீடும், நாடும், நாட்டின் அரசியல் சமுதாயச் சூழ்நிலைகளும் இருந்த அலங்கோலங்கள் அவனைப் பெரிதும் கலக்கியிருக்கக்கூடும். அதனை எண்ணி 'ஏன் தான் பிறந்தோம்?' என்று அவன் நெடுநாட்களுக்குப் பிறகு தன்னைத் தானே நொந்து கொண்டிருக்கக்கூடும்.

என் பிறந்த நாள் அத்தகு சூழ்நிலையில் பிறக்கவில்லை. நான் பிறந்தபோது என் குடும்பம் செல்வச் சூழ்நிலையில் தோய்ந்திருக்கவில்லை



யென்ருலும், என் பெற்ருேர் வறுமையின் இருட் குழியில் கழுத்து முட்ட அமிழ்ந்திருக்கவில்லே. அதேபோல என் அன்னே பூமி அடிமை விலங்கிற்கு ஆட்பட்டிருந்தது எனினும், ரூசோ பிறந்த நாள் பிரான்சினேப்போல் நிலேகுலேந்து நெறி தவறி அழிவினே நோக்கி 'அசுர' வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கவில்லே. ஆகவே மனிதன் பிறக்கும் போதே அழுதுகொண்டு பிறப்பதைப்போல வாழ்நாள் முழுதும் பயனற்றுத் தேம்பித் தேய்ந்து விடுவதாக ரூசோ கருதியதைத் தவறு எனச் சுட்டிக் காட்டிய வால்டேரைப் போல்நானும் பிறந்த நாள் பற்றி ரூசோ கொண்ட கருத்துக்கு மாறுபடுகிறேன்.

நினேத்து நினேத்துக் குமுறிக் கதறவேண்டிய நாட்கள், மனித வாழ்க்கையில் எத்தனேயோ இருப்பதுண்டு. அதற்கு நான் விதிவிலக்கு அல்ல. எனினும் நான் பிறந்த நாள், என் திருமணம் நடைபெற்ற நாள், நான் முதன் முதலாக அன்புத் தெய்வத்தை—என் அருமைத் தலேவனேச் சந்தித்த நாள், மொழி காக்கும் போரில் முதன் முறையாகச் சிறையேகிய நாள்—அத்தனேயும் எனக்கு இன்பம் தருபவை. நினேத்து மகிழத்தக்கவை.

பிறந்த நாள் நட்சத்திரத்தைப் பற்றி ஆருடங்கணித்து நல்லது கெட்டது சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லே என்ருலும், நான் பிறந்த ஆண்டு இருக்கிறதே, அது உலகத்தில் நல்லது கெட்டதுகளே வெகு துல்லியமாகக் கணித்த ஆண்டுகளில் ஒன்ருகும். நான் பிறந்த தன் பயனுய் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை தீமைகள் பற்றியும், என் தாய் நாட்டுக்கு நான் ஆற்றியுள்ள தொண்டுகளின் மதிப்பீடு பற்றியும், பின்னுல் வரும் குறிப்புகள் கணிக்கப்படும். ஆனுல் நான் பிறந்த ஆண்டு இருக்கிறதே, அந்த ஆண்டின் நாட்டி நடப்பும், அகில உலக அரசியல் நடப்பும் எப்படிப்பட்டதாக இருந்தன என்பதைப் பின்னுல் படித்து நினேவு கூறும்போது எனக்கு மகிழ்ச்சியே பிறந்தது.

1924—இருபதாம் நூற்ருண்டு எப்படியிருக்கும் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் ஓரளவு தெளிவு பெற்ற காலம். உலக சரித்திரமே காணுத அளவுக்கு அழிவையும் தேக்கத்தையும் ஏற்படுத்திய

முதலாம் உலகப் போர் நடந்து உலகத்து வல்லரசுகள் அனைத்தும் களைத்துச் சளைத்துக் கிடந்த காலம். அதே நேரத்தில் 'காலனி' மக்களிடம் ஏறக்குறைய எல்லா வல்லரசுகளும் கெடுபிடிகளையும் ஆகாத சட்டங்களையும் அமுல்படுத்தி ஆழம் பார்க்கத் திரிந்து கொண்டிருந்த காலம்.

உலகப் போரில் ஈக்கள் எறும்புகளைப்போல மனிதர்கள் செத்து மடிந்ததை நேரில் கண்ட சாகாத காலனி மக்கள், 'உயிர் எமக்கு வெல்லமல்ல' என்று துணிந்து ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்க்கக் கிளம்பிய காலம். பழைமைக்கும் புதுமைக்கும் இடையே இருந்த வெட்டவெளி வெகுவாகக் குறைந்து இரண்டும் நேருக்கு நேராக ஒவ்வொரு துறையிலும் மோதிக் கொண்டிருந்த காலம். தொழிலாளர்கள் தங்கள் அடிமைத்தனத்தைத் துறந்து உரிமைகளைப் பெறப் பட்டியல் போட்டுக் கொண்டிருந்த காலம். நிலப் பிரபுத்துவமும், ஜமீன்தாரி முறையும் தனது கடைசி மூச்சை வெளியிட்டுக் கொண்டிருந்த காலம். இந்தியாவில் தெற்குப் பகுதியில் சமுதாய நீதிக்கும், சமூக புரட்சிக்கும் ஏறக்குறைய கால்கோள் விழா நடத்திய நேரம் வடக்கில் வகுப்புக் கலவரங்கள் வளர்வதற்கான அடிப்படைகள் உருவான காலம்.

இந்தியா, ஆங்கிலேயரிடம் அடிமையாக இருக்கக்கூடாது என்பதில் ஒற்றுமையும், அடிமை ஆட்சியிலிருந்து விடுபட வழி முறைகள் யாவை என்பதில் பலமான கருத்து வேறுபாடும் அவிழ்க்க முடியாத சிக்கல்களும் உருவாகிவிட்டிருந்த காலம். ஏதாவதொன்று நிகழவேண்டும் என்பதை யாராவது தெளிவாகச் சொல்லமாட்டார்களா என்று ஏங்குவதும் மககளின் அன்றாட வாடிக்கையாகிவிட்டிருந்த காலம்.

1924—தமிழகத்தின் ஆயிரமாண்டு இருட்படலத்தையும் விலக்கி நாட்டில் எல்லாத் துறைகளையும் புதுமைக்கு ஏற்ப ஒரேயடியாகப் புரட்டிப் போட்ட மேதை—என் ஆசான் அறிஞர் அண்ணா அவர்கள் அப்போது பதினேந்து வயது இளைஞராக உயர்நிலைப்பள்ளியில் ஒரு பெரிய சரித்திரத்தின் கதாநாயகனைத் தன்னை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

இந்தியா, நீண்ட உறக்கத்தைக் களைந்து சிலிர்த்துக்கொண்டு எழுந்து நின்ற நேரம் அது. காந்தியடிகளின் வருகையும் அவர்தம் அரசியல் ஈடுபாடும் புதுவகையான எழுச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. 'பூரண சுயராஜ்யமா? கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சுயாடசியா?' என்பதில் காங்கிரஸ் தலைவர்கள் இரண்டுபட்டுக் குழம்பிக் கொண்டிருந்தார்கள்.

லஜபதி ராய், சுபாஷ் சந்திர போஸ், சத்தியமூர்த்தி, சீனிவாச அய்யர், சி. ஆர். தாஸ், மோதிலால் போன்றவர்கள் காந்தியாருடன் அவ்வப்போது பிணக்குக் கொண்டு வாதப் பிரதிவாதங்கள் ஓயாது நடத்திக் கொண்டிருந்த வேளை அது. காங்கிரஸ் பேரவையின் தலைவராக அதிகாரபூர்வமாகக் காந்தியடிகள் தலைமையேற்ற சிறப்பு 1924-க்கு மட்டுமே உண்டு. அதற்கு முன்பும் அதற்குப் பின்னாலும் அதிகாரபூர்வமான தலைவராகக் காங்கிரஸ் கட்சியில் அவர் இருந்த தில்லை.

1924-ல் பெல்காம் பேரவையில் உருவான திட்டங்களே இன்று வரை காங்கிரஸ் கட்சியில் பூரணத்துவம் பெற்றுள்ளன.

1924-ல் உருவான திட்டந்தான் இன்று தந்தை பெரியார் என நாடு போற்றுகின்ற ஈ. வெ. ராமசாமி அவர்களை வைக்கம் வீரராக மாற்றியது. தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் ஏகாதிபத்தியத்திற்குச் சண்டமாருதமாக மாறியது இந்தக் காலத்தில் தான். தொழிலாளர் இயக்கம் தமிழகத்தில் வேரூன்றத் தலைப்பட்டதும் இந்த நாட்களில்தான். காந்தியின் அகிம்சை போதனைகள் ஆழமாகப் பதிந்தது இந்த ஆண்டில்தான். அதேபோல் 'சௌரிசௌரா' நிகழ்ச்சிகள் போன்ற கொடிய பலாத்காரம் தலைவிரித்தாடியதும் இந்த ஆண்டில் தான். இந்து முஸ்லிம் வேற்றுமை வட பகுதியிலும் காலூன்றியதும் இந்த ஆண்டில்தான்.

1924-ஐப் போல் கேள்விக் குறியாக இருபதாம் நூற்றாண்டின் எந்த ஆண்டும் இருக்கவில்லை. அந்த ஆண்டில் பிறந்த காரணந்தான்போலும், நானும் வாழ்நாள் முழுதும் பலருக்குக் கேள்விக் குறியாக இருந்து வருகிறேன்.

ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனையேற்று இடையில் இரண்டே ஆண்டுகளில் உடல் நிலையின் சீர்கேடு காரணமாக வைசிராய் ரீடிங் பிரபுவினால் காந்தியடிகள் விடுதலை செய்யப் பட்டது 1924 பிப்ரவரியில்தான். முற்றிலும் புதியவராக, இந்திய அரசியலை ஆன்மீக வாதிக்கும் புரட்சிவாதிக்கும் இடையில் மிக லாவகமாக நடத்திச் செல்லும் 'உத்திகளை'க் கற்றவராக அப்போது அவர் சிறையிலிருந்து வெளி வந்தார். இரண்டாண்டு சிறை வாசத்தில் காந்தியடிகள், கீதையை மனப்பாடம் செய் தாராம். குரானைப் படித்தாராம். தமிழ் கற்க முயன்றாராம். அனைத்துக்கும் மேலாக இந்தியாவின் கிராமப்புறங்களில் இருந்து தான் விடுதலைக்கான 'கனல்' கிடைக்க முடியும் என்று சிந்தித்துத் தெளிந்தாராம்.

இளைஞர் ஜவஹர்லால் நேரு, தமது 35-வது வயதில் காங் கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளராக முதன்முதலாக

அவருடைய விருப்பத்திற்கு மாறுகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஆண்டு அது.

அகிம்சை, சத்தியம், உழைப்பு, சிறைவாசம், சுதந்திரம், நீண்டாமை ஒழிப்பு என்று வீட்டுக்கு வீடு, மனிதர்க்கு மனிதர் மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்த சூழலிலியிலான 1924-ல்தான நான் பிறந்தேன் என்பதை எவ்வளவு பெருமையோடு சொல்லிக் கொள்ள முடிகிறது!

அது மட்டுமல்ல! பிற்காலத்தில் எனது அரசியல் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் நான் ஓயாது சொல்லி மகிழ்ந்த கமால் பாட்சாவின் சீர்திருத்தம் 1924-ல்தான் உருவானது—செயல்படத் தொடங்கியது.

இந்த ஆண்டில்தான் புரட்சி வீரன் லெனின் மறைந்தார். உலகத்தின் ஒரு சகாப்தம் முடிவுக்கு வந்து, இன்னொரு சகாப்தம் இந்த ஆண்டில் தோன்றியது. உலகமெங்கும் ஒரே நேரத்தில் ரத்தப் புரட்சி என்கிற 'ட்ராட்ஸ்கீய' சித்தாந்தம் அடிபட்டுப் போய், அந்தந்த நாடுகளுக்குற்ற சூழ்நிலைக்கேற்பப் புரட்சி என்று கம்யூனிச இயக்கம் இறங்கி வந்த காலமும் அதுவே.

என் தலைவர் அண்ணா அவர்களிடத்தில் எனக்கிருக்கும் வெறித்தனமான பக்திக்கீடாகத் தன் தலைவன் லெனினிடம் வெறி கொண்ட ஸ்டாலின் பதவிக்கு வந்த நேரம் அது! டிராட்ஸ்கீய வாதம் —மெத்தப் படிப்பு—தன்னிடத்தில் தானே நம்பிக்கை கொள்ளாத ராஜதந்திரம் அனைத்தும் அந்த ஆண்டில் அடிபட்டுப் போய், உழைப்பின் ஆற்றல், தலைவனிடத்தில் தளராத பற்று, மக்களுக்குச் சேவை செய்வதில் தன்னலமற்ற ஊக்கம்-ஆகியவை தான் உறுதியான தலைமைக்கு அழகு என்று அறுதியிட்டுக் கூறுவது போல், ஸ்டாலின் அந்த ஆண்டில்தான் உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு இயக்கத்தின் தலைவனுகவும் பொறுப்பேற்றான்.

1924-ல்தான் பவேரியாச் சிறைக் கோட்டத்தில் 'மெயின் காம்ப்' என்ற தனது சுயசரிதையை எழுதிக் கொண்டிருந்தான் அடால்ப் ஹிட்லர். அந்தச் சுயசரிதை பிற்காலத்தில் எத்தனை நாடுகளின்-சமுதாயங்களின் பழஞ் சரிதையைத் தலைகீழாக மாற்றிப் போட்டு விட்டது என்பதை உலகம் அறியும்.

நாசிசம், பாசிசம், கம்யூனிசம் போன்ற தத்துவங்கள் ஓங்கி வளர்ந்த 1924-ல்தான் இந்தியாவில் காந்தியடிகள் காட்டிய-அன்பின் காரணமாகத் தனி மனிதருக்குச் சமுதாயம் காண்பிக்க வேண்டிய தனி மரியாதையை, மகத்தான அன்புணர்வை மக்கள் கூட்டம் வெளிப் படுத்திக் காட்டிற்று.

மொத்த இந்தியாவில் காந்தியடிகளைப் போல். அந்தந்த மாநிலங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த தலைவர்கள் அறிமுகமாகுல் தான் இந்தியாவின் அரசியலை ஜனநாயக ரீதியில் நடத்த முடியும் என்ற கருத்தும் முளைவிடத் தொடங்கிய காலம் இதுவெனக் கூறலாம்.

இத்தகு கலவையான சூழ்நிலைகளுடே வழி நடந்த 1924-ல் நான் பிறந்தேன்.

நான் பிறந்த 1924-ல்தான் மைசூருக்கும் நம்முடைய மாநிலத்திற்கும் காவிரி நீர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் ஐம்பது ஆண்டு காலத்திற்குச் செய்துகொள்ளப்பட்டது. 1974-ல் மீண்டும் அந்த ஒப்பந்தம் மறு பரிசீலனை செய்யப்படும் நிலையில் இருக்கிறது. அதில் தமிழ் நாட்டின் உரிமையைப் பாதிக்காத நிலையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டுமென்பதில் தமிழர்கள் கவலை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதற்கிடையே இப்போது மைசூர் முதல்வர் ஹேமாவதித் திட்டத்தைத் தமிழக அரசின் எதிர்ப்பிற்கிடையே அமைக்கத் துணிந்துள்ளார். தமிழக அரசு தன்னுடைய வன்மையான எதிர்ப்பை மத்திய அரசிற்குத் தெரிவித்திருக்கிறது. மைசூர் தமிழ்நாடு ஒப்பந்தம் நடந்த 1924-ம் ஆண்டு நான் பிறந்த போது, அந்த ஒப்பந்தத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் அமைக்கப் படும் ஹேமாவதி அணைக்கட்டுத் திட்டத்தை எதிர்த்து நிற்கும் தமிழகத்தின் முதலமைச்சராக ஆவேன் என்று யார்தான் எண்ணியிருப் பார்கள்? என்னைப் பெற்றவர்களே கூட என்னை 'ராஜா' என்று தான் அழைத்திருப்பார்களே தவிர 'மந்திரி' என்று அழைத்திருப்பார்கள்?

என்னைப் பற்றி எழுதுவதற்கு முன்பு என் பெற்றோர்களைப் பற்றிய சிறு குறிப்பாவது தர வேண்டாமா?

தஞ்சை மாவட்டத்தில் அழகான சிற்றூர்களில் ஒன்று திருக்கோளிலி! திருக்குவளை என்றும் அதனை அழைப்பார்கள். திருவாரூரிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ள கிராமம். அங்கே தான் எங்கள் குடும்பம். எழில் நிறைந்த திருக்குளம். குளத்தைச் சுற்றிச் சோலை! எதிரே சிவன்கோயில்! மேற்கு எல்லையில் முனியன் கோயில்! தெற்கெல்லையில் ஐயனார் கோயில். இவையெல்லாம் நான் கண்ட திருக்குவளை. இப்போது அந்த அழகில் முக்கால் பகுதி குறைந்துவிட்டது. என் தந்தையார் காலத்திலே மிகச் சிங்காரமாக இருந்த ஊர் அது.

3

தந்தையின் துணிவு

அய்யாத்துரை — பெரியநாயகத்தம்மாள் இருவரின் இல் வாழ்க்கை அன்புச் சின்னமாக அம்மையார் கர்ப்பவதியானார். துணைவி ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள், நாம் தந்தையாகப் போகிறோம் என்ற பூரிப்பில் அய்யாத்துரை அந்த வட்டாரத்தில் உள்ள பெரிய கோவில்கள், குட்டி தேவதைகள் எல்லாவற்றிற்கும் பூஜை செய்வித்தார். அர்ச்சனைகள் நடத்தினார். படையல்கள்—பள்ளயங்கள் போட்டார். ஊர் மக்கள் அந்த இன்பச் செய்தி கேட்டு மகிழ்ந்தனர். எதிர்பார்த்தவாறு குழந்தை பிறந்தது. மிக அழகான குழந்தை.

குழந்தை பிறந்த ஏழாம் நாள் அதன் தாயார் பெரியநாயகத் தம்மாளை இயற்கை இரையாக்கிக் கொண்டது. துணைவியை இழந்த வேதனை தாங்காமல் கவலையால் துவண்ட இரண்டாம் மாதம் தந்தை யும் கண்ணை மூடிவிட்டார். இருவரையும் இழந்து விட்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் அந்தப் பச்சைச் சிசு படுத்துக் கிடந்தது. வயிறு காய்கிற நேரத்தில் மட்டும் அழும். அதன் வயிற்றுப் பசியை யார் போக்குவது? எப்படிப் போக்குவது? குளக்கரையில் அழுது கொண்டிருந்த திருஞானை சம்பந்தருக்குப் பார்வதி வந்து பால் கொடுத்துப் பசி தீர்த்தாள் என்பது கதைதானே தவிர, நடைமுறை அல்ல. அன்புக்கு அப்போதெல்லாம் திருக்குவளையில் குறைவேயில்லை

தில்லையம்மாள்—மீனாட்சி என்ற மங்கையர் திலகங்கள் இருவர் அந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை மேற்கொண்டனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது என்பார்களே, அப்படியே அந்தக் குழந்தை அவர்கள் மடியிலும் தோளிலும் வளர்ந்தது. முத்து ஒன்றை எடுத்தது போன்ற மகிழ்ச்சியோ; அல்லது சிப்பியின் அழிவிற்கு முத்து காரணமாய் இருக்கிறது என்பதாலோ தெரியவில்லை. குழந்தைக்கு முத்துவேல் என்று பெயரிட்டார்கள். அந்தக் குழந்தைதான் என் தந்தை யென்று உங்களுக்குக் கூறி ஒரு பெருமூச்சு விட்டுக் கொள்கிறேன்.

என் தந்தை நல்ல விவசாயி; சிறந்த வித்வான்; கவி எழுதும் ஆற்றல் பெற்ற புலவர்; வட மொழிக் கிரந்தங்களில் தனித் தேர்ச்சி பெற்றிருந்தார். பாரத, ராமாயணக் கதைகளைப் பண்டிதரை விட அழகாகச் சொல்லுவார்; கிராமத்து நிகழ்ச்சிகளை வைத்து உண்மைக் கதைகள் பல இயற்றியிருக்கிறார். கிராமிய மெட்டுக்களில் அவர்இயற்றிய கேலிப் பாடல்களை இன்றைக்கும் திருக்குவளையில் பலர் பாடக் கேட்க

லாம். அவர் இயற்றிய பாடல்கள் உண்மையின் படப்பிடிப்பாகவும், யாருக்கும் அஞ்சாமல் கருத்துக்களை வெளியிடுபவைகளாகவும் இருந்தன. குத்தகைக்கார அய்யர் என்று ஒரு பெரும் பண்ணைக்காரர் திருக்குவளையில் இருந்தாராம். அவரிடத்திலே அனைவரும் அஞ்சி நடுங்கிக் கிடந்த காலம்; அப்போது ஒரு பாட்டு எழுந்தது ஏழைகளின் குரலாக.

" இந்தக் கொடுமை செய்தால் ஏழைகள்
என்ன செய்வோம்?
இனிப் பொறுக்க மாட்டோம்
ஈட்டியாய் வேலாய் மாறிடுவோம் "

என்ற வரிகளைத் தொடக்கமாக வைத்து அந்தச் சீமானைக் கண்டிக்கும் பாடல் எழுதி உரத்த குரலில் எடுத்துப் பாடினார். அந்த ஊரே பாடிற்றும்; குத்தகைக்காரர் கொட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிற்றும்.

பெரிய குடும்பத்துப் பெண்ணைருத்தி நெறி தவறிவிட்டாள். பல நாயகர்களைக் கூடிக் கிடந்தாள். வேதனை தாங்காமல் அவள் கணவன் மடாலயத்தில் தம்பிரானாகச் சேர்ந்துவிட்டார். பெரிய இடத்துப் பெண்ணின் காமச் சேட்டைகள் அதிகமாயின. ஊரிலே உள்ள பெரும் புள்ளிகள் பலர் அவள் வலையில் விழுந்தனர். அதைக் கண்டிக்க வேண்டும். எதிர்க்க வேண்டும் என்ற நல்ல உள்ளம் பெற்றார் என் தந்தை. அவரது உறவினர்கள் பலர் அவரால் கண்டிக்கப்பட வேண்டியவர்களானார்கள். நெறி தவறியவர்களும் முத்துவேல் புலவரால் தாக்கப்பட்டனர். அப்பட்டமான உண்மையை அணுவும் மறைக்காமல் எழுதினார் ஒரு பாட்டு, 'ஏலேலோ' என்கிற மெட்டிலே! அதில் சில வரிகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த மங்கை தன் மணவாளனைப் பார்த்துப் பாடுவது போல் எழுதப்பட்ட கவிதை இது:

" அண்டை வீட்டுக்காரர்கள்
கண்டால்தான் என்ன?
அபச்சாரம் புரிந்தேன்னு
சொன்னால்தான் என்ன?
மண்டல முழுவதும்
தெரிந்தால்தான் என்ன?
மரியாதை மானங்கள்
போனால்தான் என்ன?
தாயாரின் பேச்சுக் கேட்டுத்
தாலியைக் கட்டித்
தட்டாரைச் சிநேகித்து
அவரோடு விட்டீர்!
பெண்களே தெய்வமென்
றெண்ணியே கெட்டீர்
தகாத பண்புகள்
பழக்கமும் பெற்றீர்—"

மனைவி கணவனை மேலே சொன்ன விதம் இடித்துரைக்கிறாள். அதோடு தான் பிறரோடு நடத்திய காமச் சேட்டைகளின் சிறப்புப் பற்றிக் கணவனிடையே வர்ணிக்கிறாள். கணவனுக்கு நல்ல வீடு வசதி இருக்கின்றது; ஆனால் அவளோ, கள்ளக் காதலர்களில் ஒருவனோடு ஆலயத்தில் பிரவேசிக்கிறாள். அந்த நிகழ்ச்சியைக் கவியாக்குகிறார் என் தந்தை:

தங்களுக்குத் தனிக்கிராமம்
குத்தகை யிருந்தும்
தன் வீட்டுத் தரகுமூட்டை
தலைமேலிருந்தும்
தனியாகப் போகசாலை
மனைக் கட்டிடங்களிருந்தும்
தியாகேசன் யாகசாலைக்
குள்ளேயே சென்று
அங்கிருந்து ஆபாசத்தைக்
கண்ணாலே கண்டு
அவசரமாய் முந்தானையால்
கூட்டியே நின்று
அமிர்தகலச பானத்தை
அத்தனையும் உண்டு
அவசரமாய் மதிலேறிக்
குதித்துமே சென்றேன்"

அத்தோடு, முடிந்ததா விளையாட்டு?

" அங்கிருந்து கன்னி மூலை
அறைக்குள்ளே சென்றேன்
அழகான வேலப்ப
சாமியையும் கண்டேன்
அவரோடு ஊடியும்
கலந்துமே வந்தேன்
அங்கிருந்த விநோதத்தை
யாரிடம் சொல்வேன்?
அம்மம்மா—
நீதானே கேளு!"

இன்னும் அந்தப் பாடல் நீனமாக இருக்கிறது. வெகு நீன மானது. கதாநாயகியின் பெயரும், அவன்பால் விழுந்த காமுகர்களின் பண்புகளும் சித்திரிக்கப்படுகிற அந்த வரிகளெயெல்லாம் இப்போது நான் குறிப்பிட விரும்பவில்லை. அதாவது என் தந்தைக்கு இருந்த துணிவு எனக்கில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அனுதைக் குழந்தையாக வளர்த்து, யாருடைய ஆதரவும் மிகுதியாக இல்லாத நிலையில் ஒரு சிற்றூரில் பல ஆண்டுகளுக்கு முன்பு தன்னந்தனியாக ஒருவர் அனை வரையும் கண்டிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பது வியப்புக்குரியது அல்லவா? அதுவும் ஊரிலுள்ள பெரிய மனிதர் எனப்படுவோர் மடாதி பதிகள், அடியாட்கள் நிலையிலுள்ளோர் இவர்களெயெல்லாம் பகிரங்க மாகக் கேலி புரிவது என்பது ஆபத்தான செய்கைதான். ஆனலும் அதைத் துணிவுடன் மேற்கொண்டார்.

இத்தனைக்கும் என் தந்தை பழுத்த கடவுள் பக்தர்! விடிகிறதோ இல்லையோ அவர் நெற்றியில் விபூதி ஏறிவிடும். சிறந்த மாந்திரீகர் என்று கூட அவரை நம்பிப் பலர் வந்து கொண்டேயிருந்தனர். பாம்புக் கடி, தேள் கடி, பெரிய ரணங்கள், இவைகளுக்கு எல்லாம் முத்துவேல் மாந்திரீகரிடத்திலே மக்கள் நிரன் நிரளாக வருவார்கள்! மந்திரமும் ஜெபித்து மருந்தும் கட்டி அனுப்புவார்; மருந்தால் நீங்கியதோ, மந்தி ரத்தால் நீங்கியதோ அந்த நோய் என்பது அவருக்கே தெரியாது. இரண்டையும் சேர்த்துச் செய்வதுதான் மந்திரம் என்று அவர் நம்பினர். அவர் அதற்கு யாரிடமும் காணிக்கை வாங்குவதில்லை. அப்படி யாராவது கொடுத்தாலும், இடும்பன் சாமிக்குப் பால் வைப்பது என்ற பூஜையின் பெயரால் கள்ளுப் புட்டிகளை வைத்துப் படைக்கச் சொல்வார். இந்த இடும்பன் பூஜை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் வீட்டிற் கெதிரிலேயுள்ள திருக்குளத்தில் நடைபெறும்.

இப்படி மந்திரவாதியாக, வித்வானுக, உழைக்கும் விவசாயியாக, புலமை மிக்கவராக இருந்த அவருக்கு மிக இளமையிலேயே திருமணம் நடைபெற்றது. அவரையே திருமணம் செய்து கொள்ள வேண்டு மென்று ஒரு பெண்மணி காத்திருந்தாள். விருப்பம் போல் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த சில ஆண்டுகளில் தந்தை தன் துணைவியாரை இழந்தார். ஆமாம்; எங்கள் பெரிய தாயாரை நாங்கள் இழந்தோம். குஞ்சம்மாள் என்ற அந்தக் குலவினக்கு அணைந்து விட்டதே என்று தந்தை குமுறினர். ஆனல் அந்த விளக்கு அவருடைய இருதயத்தில் அணையாத ஜோதியாக நிலைத்து அவருடைய குலதெய்வ மாக ஆயிற்று. அழகான ஒரு செல்லப் பெட்டியில் திருமண தினத் தன்று அணிந்த மாலையை நிரப்பி முதல் மனைவியைத் தனது குல தெய்வமாக ஆக்கிக் கொண்டார். அந்தப் பெட்டியும் அதனுள் எங்கள் தந்தை நிரப்பி வைத்த அந்த மலர் மாலைகளுடன் இன்றைக்கும் எங்கள்

வீட்டில் இருக்கிறது. பிறகு இரண்டாவதாக அவர் திருமணம் செய்து கொண்டார். அந்தத் துணைவியையும் இழந்தார். வேதம்மாள் என்பது அவர்கள் பெயர்.

மூன்றுவதாக அஞ்சுகம் அவருக்கு மனைவியானார்கள். எங்கள் அன்புத் தெய்வம்—எங்களைப் பெற்று வளர்த்த பெருமாட்டி—எறும்பு போல் உழைத்து எங்களை ஆளாக்கிவிட்ட தங்கம்-'அம்மா!'என்று வாய் நிறைய அழைத்து, அந்த அழைப்பிலே இன்ப சுகம் கண்டு, அமைதி தவழும் பெரும் குடும்பத்தைக் கட்டிக் காக்கும் வலிமையை, உள்ள வளத்தை எமக்களித்த எங்கள் அருமருந்தன்ன தாய்! அவர்கள் வாழ்க்கைத்துணை நலமாக அமைந்த பிறகு தந்தையின் நெஞ்சிலே மீண்டும் இன்பம் தளிர்த்தது. தந்தைக்கிருந்த பல தொல்லைகளோடு பயிர்த் தொழிலைக் கவனிக்கும் பொறுப்பும் மிகுந்தது. கஷ்டப்பட்டுத் தான் சம்பாதிக்க வேண்டுமென்கிற நிலைமை இல்லாமல் இருந்துங் கூடத் தந்தை ஏர் கலப்பையுடன் வயலுக்குச் சென்று விடுவார். அன்னையும் அவருக்கு உதவியாக வயல் வேலைகளில் ஈடுபடுவார். நாற்று நடுதல், களையெடுத்தல் முதலிய காரியங்களை மற்றத் தொழிலாளர்களோடு சேர்ந்து அம்மாவும் மேற்கொள்ளுவார். கழனிக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் எங்கள் வீட்டில் ஒன்று விடாமல் கச்சிதமாக இருக்கும். மாடு ஓட்டுகிற கம்பிலிருந்து பரம்பு அடிக்கும் பலகை வரை எல்லாமே ஒழுங்காகச் செப்பனிடப்பட்டிருக்கும்.

தந்தைக்குத் தூண்டில் போடுதல் ஒரு பொழுது போக்கு. ஒவ்வொரு மீனுக்கும் வகை வகையான தூண்டில்கள் வீட்டில் இருக்கும். வரால் மீனுக்கு ஒரு தூண்டில், கெண்டைக்கு ஒரு தூண்டில் என்று பல உண்டு. தென்னந்தோப்பிலே தேங்காய் பறிக்க ஆள் தேவையில்லை. எங்கள் வீட்டில் தென்னையை விட நீளமான துரட்டிகள் என்ற அலக்குக் கம்புகள் உண்டு. அதன் உதவியால் கீழே இருந்த படியே அப்பா தேங்காய்களைப் பறிப்பார். அப்படிப் பறித்த போது ஒரு சமயம் பெரிய இளநீர் ஒன்று அவர் தலையிலே வந்து விழுந்து விட்டது. இளநீருக்கும் சேதமில்லை! அப்பாவின் தலையிலும் காயமில்லை.

நெடுநாட்கள் முத்துவேலரும் அஞ்சுகமும் குழந்தையில்லாக் கவலையால் வாடினார்கள்.

> " அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்."

—இந்தக் குறள் தந்தையின் நெஞ்சில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. எவ்வளவு கவலையோடு கூடத்தில் அமர்ந்து கஞ்சிக் கலயத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாலும் அப்போது தாழ் வாரத்தில் விளையாடுகின்ற குழந்தை தன் பிஞ்சுக் கரத்தைக் கலயத்துக்குள் நுழைத்து விட்டால் அந்தக் கூழ் அமிர்தமாகி விடு

மல்லவா? அபபடி அமிழ்தாக்கும் திறன் படைத்த அரும்பில்லாக் கவலை யினுல் அப்பாவும் அம்மாவும் பீடிக்கப்பட்டார்கள். பின்னர் பெரிய நாயகம், சண்முகசுந்தரம் என்ற இரு பெண் குழந்தைகளைப் பெற் றெடுத்தார்கள். ஆயினும் அவர்களுக்கு மன நிறைவில்லை. ஆண் குழந்தை இல்லையே என்ற ஆழ்ந்த கவலையால் திருத்தலங்கள் சென்றனர். தீர்த்தங்கள் ஆடினர். கடும் விரதங்கள் மேற்கொண்டனர்.

பின்னர் சாலிவாகன சகாப்தம் 1846-கலி யுகாப்தம் 5025 கொல்லம் 1099-இதற்குச் சரியான ரக்தாட்சி ஆண்டு, வைகாசி மாதம் 21-ம் நாள் செவ்வாய்க்கிழமை, அதாவது 1924-ம் ஆண்டு மூன் மாதம் 3-ம் நாள் முத்துவேலருக்கும் அஞ்சுகத்து அம்மை யாருக்கும் சுபயோக சுப தினத்தில் ஒரு குழந்தை அவதரித்தது. அந்தக் குழந்தைதான் நான். நான் பிறந்து சிசுவாக இருக்கும் போதே என் தாயார் தாலியை இழந்தார்கள். தந்தை சாகவில்லை. ஆனலும் என் தாய் தாலியை இழந்தார்கள்!

ஒரு நாள் விடியற்காலை. சிசுப் பருவத்தில் தூங்கிக் கொண்டு, இருக்கிறேன். தந்தையும் தாயும் சகோதரிகளும் கூட ஆழ்ந்த தூக்கத்தில்! அந்த நேரம் பார்த்துத் திருடர்கள் வீட்டிற்குள்ளே நுழைந்து விட்டார்கள். வீட்டிலே இருந்த பண்டம் பாத்திரங்கள், ஒன்று விடாமல் சுருட்டிக் கொண்டு போய்விட்டார்கள். எனக்குக் கட்டப்பட்டிருந்த ஏணைத் துணியைக் கூட விடவில்லை. திருடர்களிலும் பிச்சைக்காரத் திருடர்கள் போலும்! பாவம், ஆழ்ந்த நித்திரையி லிருந்த அன்னையின் கழுத்திலே மின்னிய பொற்ருலியையும் அவர்கள் கத்தரித்துக்கொண்டு போய்விட்டனர். என் தாயார் சாகும் வரையில் சொல்வார்கள். "நல்ல வேளை, திருடர்கள் நுழைந்த போது கத்தாமல் இருந்தாய்; கத்தியிருந்தால் உன் கழுத்தை நெரித்துப் போட்டுவிட்டுப் போயிருப்பார்கள்" என்று!

இதை அம்மா சொன்னபோது நான் நினைத்துக் கொள்வதுண்டு, 'ஐயோ, நாம் அப்போது கத்தியிருக்கக்கூடாதா? கத்தியிருந்தால் இப்போது நான்கு பக்கமிருந்தும் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியதில்லையே' என்று!

வீட்டிலே எங்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் கொள்ளை யடித்துக் கொண்டு திருடர்கள் வெளியேறிவிட்டார்கள். அவர்கள் போன பிறகு எங்கள் வீட்டுக் காவல்கார நாய் குரைத்ததாம்! விழித்துக் கொண்ட தாயார் தன் கழுத்திலே தாலியைக் காணுமல் அழுது புரண்டார்களாம். உடனே தந்தை, "நான்தான் இருக்கிறேனே! ஏன் அழுகிருய்?" என்று ஆறுதல் சொல்லி, வேருெரு தாலியை அம்மாவின் கழுத்திலே கட்டினர்களாம். ஆக, எங்கள் அப்பா மூன்று மனைவிக்கு நான்கு தாலிகள் கட்டினர்!

:"தாலியைக் கூடத் திருடிக் கொண்டு போய் விட்டானே" என்று அம்மா வருத்தத்தோடு கேட்டார்களாம்.

அதற்கு அப்பா, "ஆமாம்! தாலியைப் பித்தளையால் செய்து போட்டிருந்தால், 'ஐயோ, எதைத் திருடினலும் தாலியைத் திருடக் கூடாது பாவம்!' என்று திருடன் அதைத் தொடாமல் போயிருப்பான். தாலி பொன்னல் அல்லவா செய்யப்பட்டிருக்கிறது! பொன்னுக்குப் பாவம் இல்லை என்று கருதியிருப்பான்!" என்ற விதத்தில் திருட்டிற்குத் தத்துவம் கூறினராம்.

4

''சிவாய நம! ஓம் நமசிவாய''

விழக்கமாக வைதிகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் அத்தனையும் என் பெற்றோர்கள் ஒன்று விடாமல் எனக்குச் செய்தார்கள். காதணி விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. அதைப் போலவே 'வித்யாரம்பம்' என்ற பெயரில் ஆடம்பரமாகப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டேன். முடி இறக்குதல், பிரார்த்தனை என்ற பேரால் பல கோவில்களுக்கு என் தலை முடி காணிக்கையாக்கப்பட்டது. முடி முளைக்க வேண்டியதுதான்; உடனே ஒரு கோயிலுக்குப் பிரார்த்தனை. என் தலையை மழித்துச் சந்தனத்தை அப்பிவிடுவார்கள். இப்போதுகூட நினைத்தால் சிரிப்பு வருகிறது. கனியாகுரிச்சி மாரியம்மன் கோயிலுக்கு எனக்கு முடியிறக்குவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள். ஆனால் குறிப்பிட்ட நல்ல நாளில் அந்த ஊருக்குப் போவதற்கான வசதிகள் இல்லாமல் போய்விட்டன. அதற்காக என் பெற்றோர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா! கனியாகுரிச்சிக்குப் போகாமல் உள்ளூரிலேயே என் தலையை மொட்டையடித்துத் தலை முடியை ஒரு கலயத்தில் போட்டுப் பத்திரமாகத் தோட்டத்திலே வைத்து அதற்குரிய காணிக்கைப் பொருளை மட்டும் கனியாகுரிச்சி கோயிலுக்கு அனுப்பி விட்டார்களாம். யாராவது போனாலோ அல்லது வீட்டில் உள்ளவர்களே போனாலோ—அப்போது கொண்டு போய்க் கலயத்தில் உள்ள என் தலைமுடியைக் காணிக்கை செலுத்திவிடலாம் என்று அப்பாவும் அம்மாவும் கூறிக்கொண்டேயிருந்தனர். மிக விலை உயர்ந்த பொருளைக் காப்பாற்றுவது போலவே கலயத்தைக் கவலையோடு காப்பாற்றி வந்தனர்.

இரண்டாவது முறையாக எங்கள் வீட்டில் நுழைந்த திருடன், அனைவரும் விழித்துக் கொண்டதால் எதுவும் கிடைக்காமல் அந்தக் கலயத்தை, உண்டியல் கலயம் என்று எண்ணித் தூக்கிக்கொண்டு ஓடி விட்டான். அதை அவன் பிரித்துப் பார்த்த பிறகல்லவா தெரிந்திருக்கும் செய்தி!

பள்ளிக்கூடம் போவது மட்டுமின்றி, இசைக் கல்விக்கும் என் தந்தை ஏற்பாடு செய்தார். ஆனால் இசைப் பயிற்சியில் எனக்கு நாட்டம் செல்லவில்லை. நாலு பெரிய மனிதர்கள் இருக்குமிடத்தில்

சட்டை போட்டுக்கொடுண் போகமுடியாது. மேல் சண்டையும் எடுத்து இடுப்பிலே கட்டிக்கொள்ள வேண்டும். செருப்பு அணிந்து கொள்வதும் தவறு. இப்படியெல்லாம் கடுமையான அடிமைத்தனம்; தெய்வீகத்தின் பெயராலும், சாதி, மத சாத்திர சம்பிரதாயங்களின் பெயராலும் ஒரு சமுதாயத்தைக் கொடுமைக்கு ஆளாக்குவதை என் பிஞ்சு மனம் வன்மையாக எதிர்க்கக் கிளம்பியது. அதன் காரணமாகவே இசைப் பயிற்சியை வெறுத்தேன். என் எழுச்சிக்குக் காரணமாக என்னைச் சுற்றியிருந்த சமுதாயச் சீர்கேடுகள் அமைந்தன; கல்லிலும் முள்ளிலும் நடந்து பார்த்தால்தானே அதன் சுகத்தை வர்ணிக்கமுடியும்? கனக மணிக் கட்டிலே விட்டு இறங்காதவன், கரடு முரடான பாதைகளைப் பற்றி எங்ஙனம் புரிந்து கொள்ள முடியும்? மேல் சாதி—மேன்மையான கோத்திரம்—மேட்டுக் குடி—அப்படிப்பட்ட இடங்களிலேயிருந்து கிளம்பும் புதுமை எண்ணங்கள் ஆருத புண்ணுக்குப் புனுகு தடவிக் கொண்டிருக்கும் வேலையைத் தான் பெரும்பாலும் செய்திருக்கின்றன. பிற்படுத்தப்பட்ட கும்பலிலேயிருந்து கிளம்பும் புரட்சிக் குரல்கள் ஆருத புண்ணை அறுவை முறையிலே சுகப்படுத்தும் சக்தி பெற்றவை. உதைக்கப்பட்ட பந்து மேலும் வேகமாகக் கிளம்புவதுபோல். ஒடுக்கப்பட்ட இனத்திலேயிருந்து புறப்படுகிறவன் இழிவு துடைக்க ஆவேசமாகப் புறப்படுகிறான்.

என் மனப்போக்கை உணர்ந்து கொண்ட தந்தை பள்ளிப் படிப்பில் என்னைத் தீவிரமாக ஈடுபடுத்தினார். தனியாகவும் எனக்கு ஆசிரியர் அமைத்துப் பாடம் போதிக்கப்பட்டது. அந்த ஆசிரியருக்கு ஊதியமாக, காலை மாலை ஒரு சேர் பசும்பால்-இடையிடையே காய்கறிகள் வழங்கப்பட்டன. அவர் தான் எங்கள் கிராமப் பள்ளிக் கூடத்திற்கும் தலைமை ஆசிரியர். படிக்கும் போது கிராமத்திலே நடிக்கவும் ஆரம்பித்தேன். பகல் நேர நாடகங்களில்! பள்ளியில் விடுமுறை என்றால் போதும்; எங்கள் மாட்டுத் தொழுவத்தை நாடக மேடையாக்குவேன். பத்து வயதுப் பருவம். அப்போதே மாட்டுத் தொழுவத்திலே நாடகம்! அந்தக் கூத்துகளில் அர்ச்சுனன், கிருஷ்ணன் வேடங்கள் போட்டுக் கொள்வதிலே தணியாத ஆசை! ஏனென்றால் அவர்களைப் பற்றித்தான் அப்பா அடிக்கடி கதை சொல்லுவார்—அதனால் அந்தப் பாத்திரங்களால் கவரப்பட்ட நான், நீலப் பவுடரை அள்ளி உடம்பிலே பூசிக் கொண்டு நடிப்பேன். எங்கள் நாடகத்தையும் பார்க்க ஊரார் கூடுவார்கள்.

திருக்குவளைக் கோயிலிலே அடிக்கடி உற்சவம் நடக்கும். அத்தத் திருவிழா முடிந்த மறுநாளே, அதேபோல, மாதிரித் திருவிழா எங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் ஆரம்பமாகும். மண்ணால் 'சாமி' செய்வேன். ஒரு வெண்கல ரிஷப வாகனப் பொம்மை எங்கள் வீட்டிலே இருந்தது. களிமண் சாமியை அதன் மேல் தூக்கிவைத்து, வாயிலால் மேள வாத்தியங்கள் முழங்க, சாமி ஊர்வலம் நடத்துவோம்.



இதனை நான் எழுதும்போது அந்தப் பழைய ரிஷப வாகன வெண்கலப் பொம்மையின் நினைவு எனக்கு வந்துவிட்டது. அதனை எங்கேயாவது தேடிக் கண்டுபிடித்துவிட்டால் அதைப் பார்க்கும்போது எனக்கு எத்தனை பசுமையான நினைவுகள், என் இளமைப் பருவத்தைப் பற்றி நிழலாடும் தெரியுமா?

சிறிது உடைந்து போன அந்தப் பொம்மை அறவே அழிந்து போயிருக்க முடியாது. எத்தனையோ இன்பக் கதைகளைச் சொல்லும் அந்தப் பொம்மையைக் கண்டு பிடித்து என் மேசையின் முன் வைத்துப் பார்த்தால் அந்த இன்பத்திற்கு அளவே இருக்காது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு என் பிறந்த ஊர் செல்லக் கூடிய வாய்ப்புக் கிட்டியது. போகும் வழியெல்லாம் தோழர்களுடன் என் பழைய நாள் நினைவுகளைச் சொல்லிச் சொல்லி எனக்குள் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொண்டேன்.

இளமை நினைவுகளிலேதான் எவ்வளவு உற்சாகம்! முகம் வற்றித் தோல் சுருங்கி, எழில் குறைந்து காணப்படும் முதியவளிடம் முதுமை நிறைந்த அவள் கணவன் அன்பு காட்டும்போது பருவக் காலத்திலே அவள் பெற்றிருந்த முழு நிலா முகத்தையும் மாம்பழக் கதுப்புப் போன்ற கன்னத்தையும், மின்னிடும் மேனியையும் மனக் கண்ணால் நினைத்துக் கொள்வதால் தானே அந்த அன்பிலே பூரணத்துவம் பொலிகிறது.

எண்ணச் சுழல்களிலே நினைவுச் சருகுகள் மேலும் கீழும் வந்து வந்து தலைநீட்டும்போது மனிதனுக்கு ஏற்படும் தனி உற்சாகத்தையும் அந்த உற்சாகத்தினிடையே மறைந்து கிடக்கும் உணர்ச்சி மயமான இன்பங்கலந்த சோகத்தையும் அனுபவித்தவர்கள் மட்டுமே உணர முடியும். அந்த உணர்வை வெளிப்படுத்துவதுங்கூட எந்தக் கலைவல்லாராலும் ஆகாத ஒன்றுதான். அத்தகைய உணர்விலே மதிமயங்கித்

திருக்குவளை செல்லும் வழியிலே போய்க் கொண்டிருக்கிறேன் தோழர்களுடன் காரில்!

"இதோ இந்த ஊர் தான் கச்சனம்! திருவாரூரில் படிக்கும் போது இந்த ஊரில்தான் பஸ்ஸில் இறங்குவேன்! இங்கிருந்து நாலைந்து மைல் நடந்து கிராமத்துக்குச் செல்வேன் தினந்தோறுமல்ல! விடுமுறை நாட்களில்! கச்சனத்துக் காப்பி ஓட்டலில் ஒரணாவுக்கோ, இரண்டணாவுக்கோ காராபூந்தி வாங்கித் தின்று கொண்டே போனால் தனியே வழி நடந்து செல்லும் சிரமம் தெரியாது.

"சில சமயம் இரவு நேரங்களில் தனியே நடந்து செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். நெஞ்சிலே திக்திக்கென்று பயம் பீரிட்டுக் கிளம்பும். வழிதடைக்கு என் தகப்பனாரும், அவரது நண்பரான சரவண சாமியார் என்ற பெரியவரும் எனக்கு ஒரு மந்திரம் சொல்லிக் கொடுத்தார்கள். 'சிவாய நம! ஓம் நம சிவாய!' இதை முணு முணுத்துக் கொண்டே நடப்பேன். பேய் பிசாசுகள் அருகே வராதாம். அந்த மந்திரத்தைக் கேட்டால்! என் இளம் உள்ளத்திலே அந்த நம்பிக்கை வேரூன்றி இருந்தது! இப்போதுதான் அந்த வேரே கெல்லி எறியப் பட்டுவிட்டதே!

"இதோ இதுதான் காருகுடி! இங்கிருந்து ஒரு மைல் தொலைவு தான் எங்களூர்! எங்கள் வீட்டுக்குத் தயிர் வாங்க இந்த ஊருக்குத்தான் வரவேண்டும். கையிலே ஒரு ஈயச் செம்புடன் நானும் இரண்டொரு தோழர்களும் சேர்ந்து காலையிலேயே ஏழு மணிக்கு இந்த ஊருக்கு வருவோம். ஒன்பது, பத்து மணிக்குத் தயிரோடு வீடுவந்து சேருவோம். இடையில் தாகம் ஏற்பட்டால் தயிரைச் சிறிது குடித்துக் கொள்வோம். குறைவை நிவர்த்தி செய்து கொள்ளத்தான் கிராமங்களில் குளங்கள் ஏராளமாக உண்டே!

"இதோ மரங்களடர்ந்த இடம். ஒரு காலத்தில் இந்த இடத்தைக் கண்டு எப்படிப் பயப்படுவோம் தெரியுமா? 'பட்டாணி' என்ற துஷ்ட தேவதையின் கோயில் அதற்குள்ளே இருக்கிறது. அந்தத் தேவதை இரவு நேரத்தில் தன் படைகளோடு தீவட்டி ஊர்வலமாக வயல்வெளி களில் போகுமாம். அந்தக் காட்சியை நேரில் பார்த்ததாகவே பலர் கூறுவார்கள், அவர்கள் பார்த்த தீவட்டி வெளிச்சங்கள் என்னவோ உண்மைதான். ஆனால் வயல் வெடிப்புகளில் தோன்றும் ஒருவிதமான கந்தக வாயுவிலிருந்து கிளம்பும் தீச்சுடர்களின் வரிசைதான் அந்தப் பட்டாணி தேவதையின் தீவட்டி ஊர்வலம் என்பதை அவர்கள் அப் போது எப்படி அறிவார்கள்? இப்போதுகூட இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளப் பலர் தயாராயில்லையே! நான் கூட அப்போதெல்லாம் நம்பித்தான் நடுங்கிக் கொண்டிருந்தேன். 'நமசிவாய' மந்திர உதவியோடுதான் இந்தப் பகுதிகளைக் கடந்து செல்வேன். அப்படிப்

போகும்போது ஒரு கோட்டர் உள் கத்திஞலும் போதும், நிச்சயம் நெஞ்சு வெடித்துத்தான் விடும்!

"பய முதிர்ச்சியால் நெஞ்சு வெடித்து ரத்தம் கக்கிச் செத்தவர்களே யெல்லாம் பேயடித்துச் செத்தவர்கள் என்று தானே பக்தர்கள் வர்ணிக் கிறார்கள்.

"அதோ, பாழடைந்து, நிறமிழந்து, பெரிய உருவமொன்று மூளியாக உட்கார்ந்திருக்கிறதே, அதுதான் முனீஸ்வரன்; ஊருக்கு ஏதாவது கேடு வந்தால்—அம்மை—காலரா பரவினுல் அந்த முனீஸ் வரன், வீரப்ப வேளார் என்பவர் மீது ஆவேசமாக ஆடி ஆடி ஊருக்கு ஆறுதல் சொல்லும். இப்போது அந்த வேளாரும் இல்லே! ஊருக்கு நோய் தொடி வந்து கொண்டுதானிருக்கின்றன—ஆனுல் முனீஸ்வரன் அபயம் தருவதற்கு வருவதே இல்லே. அவர் பாடே கஷ்டமாயிருக்கும் போது, அவர் மற்றவர்க்குத் துணே புரிய வருவதெப்படி?

"இதோ இருக்கிறதே எங்கள் தெருக்கோடியில்! இதுதான் அங்காளம்மை கோயில்! கோழிக்கறி சாப்பிட வேண்டுமென்று என் அப்பாவுக்குப் பிரியம் ஏற்பட்டு விட்டால் உடனே அங்காளம்மன் கோயில் பூஜைக்கு ஏற்பாடாகிவிடும்!

"என் தலே அடிக்கடி மொட்டையடிக்கப்பட்ட கோயில்களில் இது தலே சிறந்த" கோயிலாகும். எங்கள் குடும்பத்துக் குறைகளே யெல்லாம் இங்கேதான் வந்து அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்போம். ஊராருக்குக்கூடக் குறை சொல்லுவதற்கு இது ஒரு நல்ல இடம். பல பக்தர்கள் தங்களுக்குப் பிடிக்காத குடும்பங்கள் அழிய வேணடுமென்ற 'நல்ல' எண்ணத்தோடு இந்தக் கோயில் வாசலில் வந்து மண்ணே வாரி இறைப்பார்கள்! அப்படி இறைக்கப்படும் மண் அவர்கள் கண்ணிலே கூடக் காற்றிலே பறந்து விழுவதுண்டு!

"இந்தக் கோயிலே அடுத்து, இதோ தரைமட்டமாக இடிந்து கிடக் கிறதே! இதுதான் என்னே ஆளாக்கிவிட்ட அறிவுக் கோயில்! நான் படித்த பள்ளிக்கூடம். ஆகா! அதைப் பார்க்கும் போது என்னென்ன வகையான உணர்ச்சிகள் வெள்ளம்போல் கரை புரன்கின்றன? கைவிரல் தேயத் தேய 'அரிநமோத்து சித்தம்' என்ற எழுத்துக்களே மணலில் எழுதி எழுதிக் கல்வி பயின்ற இடமல்லவா இது! எதிர்காலம் எப்படி யெல்லாம் இருக்குமோ என்ற ஏக்கமோ வாட்டமோ இல்லாமல் நிகழ் கால விளையாட்டுக்களில் கவலையற்று ஈடுபட்டிருந்த பச்சிளம் பருவம். அந்தப் பருவம் மனிதனுல் மற்றெரு முறை சந்திக்கக் கூடிய பருவமா?

"மலேபோல் குவிந்து கிடக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடி யாமல் குழம்பித் திரும்பிய பக்கமெல்லாம் காத்திருக்கும் வேலேகளே முடிக்கும் வகையறியாது புலம்பித் தவித்துக்கொண்டு கிடக்கும் சங்கடம் சந்தோஷமான இளம் பிராயத்தின் பக்கம் அடியெடுத்து வைத்ததே

மிடையாதே! சிரிப்பு முழக்கி வாழ்ந்த சிட்டுக் குருவிகளாம் எங்களை வாழ்க்கையில் வானில் பறக்கும் வலிவுடையோராய் ஆக்கிய பெருமைக்கு உரியதல்லவா இந்தப் பள்ளிக்கூடம்!

"பள்ளிக்கடுத்து இதோ வரிசையாகத் தெரிவதெல்லாம் என் உறவினர் வீடுகள்! அடடா! என் மனக்கண் முன் எத்தனை கடந்த காலச் சரித்திரங்கள்!

"இந்தத் தெருக்களிலே எத்தனை பெரியவர்கள்—எத்தனை இசை மேதைகள்—எத்தனை அன்புள்ளம் கொண்டவர்கள் நடமாடியிருக்கிறார்கள்! அவர்கள் எல்லாம் இப்போது எங்கே? புயலில் அடியோடு விழுந்த ஆலமரம் போல எத்தனை குடும்பங்கள் போய்விட்டன!

"அந்தக் குளத்தங்கரை ஓரமாகத்தானே கைகளை முறுக்கிக் கொண்டே வைத்தியலிங்க மாமா நிற்பார், ஆகாயத்தை நோக்கியபடி! ஏதாவது நல்ல சகுனம் கொடுக்கக் கருடன் பறக்கிறதா என்பதுதானே அவரது ஆவல்! அவர் பறந்து போய்விட்டாரே இப்போது! புல்தரையைச் சுத்தப்படுத்திக் கொண்டு பரபரப்போடு மண்வெட்டியும் கையுமாக இந்த இடத்திலேதானே வைத்தித் தாத்தா உழைத்துக் கொண்டிருப்பார்! அதோ அந்தக் குளக்கரை மரத்தடியில் தானே என்னைப் பெற்ற என் அன்புத்தந்தை, 'தாண்டில் உத்தமியார்' மீன் வேட்டையாடிக் கொண்டிருப்பார்!

"குள்ள உருவமும், குறுகுறுப்பான நடையுங்கொண்ட மெய்க் காவல் குப்புசாமித் தாத்தாவின் மடியிலே தொங்குகிற சாவிக் கொத்து மாத்திரம் காணுமற் போய்விட்டால் பெரிய கோயில் சாமிகள் எல்லாம் பட்டினிதான்! அவரிடம்தான் கோயில் திறவுகோல்கள் எல்லாம்!

"பூனை போலக் கூனிக் குறுகிச் சாகும் வரையில் திருக்குவளையில் இரண்டு ஔவையார்களாக விளங்கியவர்கள் தில்லையம்மா-வைரியாத்தா!

"அவர்களெல்லாம் இப்போது இல்லை. தென்றல் சுகத்திலே சீட்டாடிப் பொழுதுபோக்கும் அக்கிரகாரத்துத் திண்ணைகள் அதோ

அக்கரையிலே ஒரு வீட்டில் தபால் ஆபீசு...தபால் வந்தவுடன் போஸ்ட் மாஸ்டர் அய்யர் குளத்தின் அக்கரையில் இருந்தபடியே இக்கரையில் உள்ள வீடுகளுக்கு உரத்த குரலில், 'தபால் வந்திருக்கு நோக்கு! பிள்ளையாண்டானே அனுப்பு! அனுப்பறேன்' என்று அழைப்பு விடுத்து நாங்கள் ஓடிப்போய் வாங்கிவரும் காட்சி, இன்னும் என் நெஞ்சத் திரையைவிட்டு அகலவில்லை!

''அதோ நான் தவழ்ந்து விளையாடிய வீடு...அது எத்தனை இன்பக் கதைகளையும் துன்பக் கதைகளையும் எனக்குச் சொல்கிறது! அந்த இல்லத்தைத் தொடர்ந்தாற்போல் சற்று நேரம் பார்க்க முடிய வில்லையே! ஏன்? அம்மவோ — எவ்வளவு பேர் முப்பது வருடங்களுக்குள் மறைந்தொழிந்து விட்டார்கள்! ஆஸ்பத்திரியே – அசைந்து வருவது போல் – மருத்துவ நிலையத்தையே மடியில் கட்டிக்கொண்டு திருவாரூர்த் தேர் மாதிரி வருவாரே, காருகுடி வைத்தியர்! அவரெங்கே இப்போது?

''நோஞ்சான் போல் இருந்தாலும் நெஞ்சிலே நீங்காத உறுதியும் எங்கள் பால் அன்பும் கொண்டு அல்லலுற்ற போதெல்லாம் எங்கள் குடும்பத்திற்கு ஆறுதல் அளித்த ரத்தினப் படையாச்சியைக் காண முடியவில்லை இப்போது!''

கிராமத்தில் நுழைந்த உடன் உற்றாரும், நண்பர்களும் என்னைச் சூழ்ந்துகொண்டு அன்பால் நிணறடித்தனர்.

''நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்: இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' என்று கூறி உறவைப் புதுப்பித்துக் கொண்டு என்னை உச்சிமோந்து உபசரித்தார்கள். அப்போதெல்லாம் நான் என் தாய் தந்தையரை எண்ணிக் கொண்டு கண் கலங்கி நின்றேன். சொந்த ஊரார் என்னை அணைத்து மகிழ்ந்து வாழ்த்தி அனுப்பியதை அம்மாவும் சகோதரிகளும் கேட்டு எப்படிப் பூரித்துப் போனார்கள் தெரியுமா?

முத்துமாரி பொழிந்து, 'முத்துவேல் மைந்தனே நீ வாழ்க!" என ஆசீர்வதித்த தாய்மார்களையும் பெரியவர்களையும் தவழ்ந்துவிளையாடிய ஊரையும் விட்டுவிட்டுத்தான் எனது பனிரெண்டாவது வயதில் திருவாரூருக்குப் படிப்பதற்காகப் புறப்பட்டேன்.

இரண்டாம் படிவத்தில்—திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் சேருவதற்காக அழைத்துச் செல்லப்பட்டேன். ஆனால் என்னை ஐந்தாம் வகுப்பில்கூடச் சேர்க்க இயலாது என்று உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் கூறிவிட்டார்!

5

என்னுடைய அரசியல் அரிச்சுவடி

1936-ம் ஆண்டு, திருவாரூர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார். அவர் தனது அறையில் உட்கார்ந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். பன்னிரண்டு வயதுள்ள ஒரு பையன் திடீரென்று அவரது அறையினுள்ளே ஓடுகிறான். வாயிலில் 'பங்கா' இழுத்துக் கொண்டிருந்த 'பியூன்' தடுத்தும் கேட்க வில்லை. தலைமை ஆசிரியர் அந்த இளைஞனைக் கண்டு திகைக்கிறார்.

''யார்? யாரப்பா? என்ன வேணும் நோக்கு?'' என்று கேட்டபடி எழுகிறார்.

''சார், என்னை எப்படியாவது இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்'' என்கிறான் பையன்.

''எந்த வகுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும்? எதில் சேருவதானாலும் பரீட்சை எழுதியாக வேண்டும்.''

''பரீட்சை எல்லாம் எழுதிவிட்டேன் சார். முதலில் இரண்டாம் படிவப் பரீட்சை எழுதினேன். பிறகு முதல் படிவப் பரீட்சை எழுதினேன். இப்போது ஐந்தாம் வகுப்பில்கூட எனக்கு இடமில்லை என்கிறார்கள்.''

''ஏன் இப்படி மேலேயிருந்து கீழே எழுதிக் கொண்டு வந்தாய்?''

''என் கிராமத்து ஆசிரியர் என்னை இரண்டாம் படிவத்தில் சேர்ப்பதாக உறுதியளித்து அழைத்து வந்தார். அதை நம்பி என் தந்தையும் வந்தார். ஆனால் கிராம ஆசிரியர் அளித்த பயிற்சி அப்படி!''

''அதற்கு நான் என்ன செய்வது தம்பி?''

உயர்நிலைப்பள்ளியில் சேராமல் ஊருக்குத் திரும்பினால், எல்லாரும் கேலி செய்வார்கள். எப்படியாவது ஐந்தாம் வகுப்பில் என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.''

''இடமில்லை என்று சொன்ன பிறகு எப்படியப்பா முடியும்? முடியாதப்பா முடியாது!''

''முடியாதா? இதோ உங்கள் கண் முன்னாலேயே எதிரே உள்ள தெப்பக்குளத்தில் விழுந்து சாகப்போகிறேன்!''

இதைச் சொல்லியபடி பையன் கண்கலங்க நின்றான். தலைமை யாசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. அவருடைய நினைவில் எதிரே யுள்ள கமலாலயம் என்ற புகழ்பெற்ற தெப்பக்குளம் சுழன்றது. கோயில் ஐந்து வேலி குளம் ஐந்து வேலி என்று பாராட்டப்பெறும் திருக்குளம் அது. அதன் பாசி பிடித்த படிக்கட்டுகளில் வழுக்கி விழுந்து எத்தனையோ பேர் முழுகிப் போயிருக்கிறார்கள். வேண்டு மென்றே பலர் அந்தக் குளத்தில் விழுந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டுமிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குளத்தைப் பற்றிப் பையன் சொன்னதும் தலைமை ஆசிரியர் அதிர்ச்சியடைந்துதான் போனார். சிறிது யோசித்தார். பிறகு பையனைத் தட்டிக் கொடுத்தார். ஐந்தாம் வகுப்பில் அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. 'வெற்றி' என்றபடி வெளியே ஓடி வந்தான். ஆசையோடு நின்று கொண்டிருந்த அவனது அருமைத் தந்தையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினான். ஐந்தாம் வகுப்பில் முதன்மையான மார்க்குகள் பெற்று அந்த ஆண்டு அந்தப் பையன் வெற்றி பெற்றான்.

அந்தப் பையன் யார் என்று புரிந்து கொண்டிருப்பீர்கள். நானே தான்! என்னுடைய உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையின் ஒரு தொடக்கச் சம்பவம்தான் அது. ஐந்தாம் வகுப்பில் 'பனகல் அரசர்' என்ற தலைப் புள்ள புத்தகம் துணைப்பாடக் கட்டுரையாக எங்களுக்கு வைக்கப் பட்டிருந்தது. ஏறத்தாழ ஐம்பது பக்கங்கள் இருக்கும். வகுப்பிலே நான் ஒருவன்தான் அந்தச் சிறு நூல் முழுவதையும் அப்படியே மனப் பாடம் செய்து சொல்வேன். அந்தப் பனகல் அரசர்' என்ற புத்தகம் தான் எனக்கு அரசியல் அரிச்சுவடியாகக் கூட அமைந்தது.

திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை கொண்டு அவர்களது தனியகற்றப் பெரும் பணியாற்றி அரசியல், சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்கு இடமளிக்க சர். பி. தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர், பனகல் அரசர், டாக்டர் நடேச முதலியார் ஆகியோர் ஒன்று கூடி 1916-ம் ஆண்டு நவம்பர் திங்கள் சென்னையில் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' எனும் பெயரால் ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்தனர். அந்தக் கட்சியின் கொள்கைகளை வெளியிடவும், பரப்பவும், டாக்டர் நாயரை ஆசிரியராகக் கொண்டு "ஜஸ்டிஸ்" என்ற பெயருடன் ஓர் ஆங்கில நாளிதழும், பக்தவச்சலம் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு "திராவிடன்" என்னும் தமிழ் நாளிதழும், ஏ. சி. பார்த்தசாரதி நாயுடுவை ஆசிரியராகக் கொண்டு "ஆந்திரப் பிரகாசினி" எனும் தெலுங்கு இதழும் தொடங்கப் பெற்றன. மெல்ல மெல்ல ஆங்கிலப் பத்திரிகையின் பெயரிலேயே கட்சியின் பெயரும் 'ஜஸ்டிஸ்' கட்சி என்று அழைக்கப்படும் நிலை பெற்று விட்டது.

இந்திய வைஸ்ராய் செம்ஸ்ஃபோர்டு பிரபுவும், இந்தியா மந்திரி மாண்டேகு பிரபுவும், 1917-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் சென்னை வந்தபோது ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்கள் திராவிடர்களின் நிலையை விளக்கி ஓர் அறிக்கையை முன் வைத்தனர். அப்போது நடந்த "ஹோம்ரூல்" இயக்கத்தின் நிட்டங்களைவிட ஜஸ்டிஸ் கட்சியினர் விடுத்த அறிக்கையே திராவிட சமுதாயத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தியது. பின்னடைந்த, தாழ்த்தப்பட்ட சமுதாயங்களின் அவல நிலையை அந்த அறிக்கைதான் விளக்கியது. இந்த அறிக்கைக்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் ஜஸ்டிஸ் கட்சி என்ற நீதிக் கட்சியில் இணைந்து செயல் புரிந்தனர்.

என். சிவராஜ், எம். சி. ராஜா, இரட்டைமலை சீனிவாசன், போன்ற பெருந்தலைவர்கள் எல்லாம் நீதிக் கட்சியின் மூலமாக நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் ஒளியேற்றிட முன்வந்தனர். 1919-ம் ஆண்டு சூலைத் திங்கள் 17-ம் நாள் டாக்டர் நாயர் லண்டன் மாநகரத்தில் மறைவு எய்தினர். இந்த இழப்பால் நீதிக்கட்சி பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியது. 1920 நவம்பர் 2-ம் நாள் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தலை நடத்தும்படி மாண்டேகு-செம்ஸ் ஃபோர்டு சீர்திருத்தம் கூறியது. அந்தத் தேர்தலில் கலந்து கொள்வது என்று நீதிக்கட்சி முடிவு செய்தது. அன்னிபெசண்ட் அம்மையார் நடத்திய 'ஹோம்ரூல்' இயக்கம் நீதிக் கட்சியுடன் எதிர்த்துப் போட்டியிட்டது. காந்தியடிகள் காங்கிரஸைத் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை.

அப்போதைய சென்னை மாநிலத் தேர்தலில் நீதிக் கட்சி மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. கட்சித் தலைவரான தியாகராயரை அழைத்து மந்திரி சபை அமைக்குமாறு மாநில கவர்னர் வெலிங்டன் பிரபு கேட்டுக் கொண்டார். தியாகராயர் தனக்கு அமைச்சர் பதவி வேண்டாமெனக் கூறிவிட்டு ஏ. சுப்பராயலு ரெட்டியாரை முதல் மந்திரியாகவும், பனகல் அரசரை இரண்டாவது மந்திரியாகவும், சர். கே. வி. ரெட்டியாரை மூன்றாவது மந்திரியாகவும் நியமித்தார். சர். பி. ராசகோபாலச்சாரியார் சட்டசபைத் தலைவராக கவர்னரால் நியமிக்கப்பட்டார். இதுதான் சென்னையில் முதன் முதல் தோன்றிய தமிழர்களின் மந்திரி சபை.

இந்த மாநில சுய ஆட்சிச் சட்ட மன்றம் 1921-ம் ஆண்டு சனவரித் திங்கள் 12-ம் நாள் துவக்கி வைக்கப்பட்டது. அந்த ஆண்டே முதல் மந்திரி சுப்பராயலு இயற்கை எய்தி விட்டதால் பனகல் அரசர் முதன் மந்திரியாகவும், சர். கே. வி. ரெட்டி, சர். ஏ. பி. பாத்ரோ ஆகியோர் துணை மந்திரிகளாகவும் பதவியேற்றனர். பனகல் அரசரின் ஆட்சிக் காலத்தில் திராவிடர்களுக்காக உருவாக்கப்பட்ட சாதனைகளைச் சொல்வதுதான் எனக்கு ஐந்தாம் வகுப்பில் வைக்கப்பட்ட 'பனகல் அரசர்' என்ற சிறு நூலாகும்.

நீதிக்கட்சி சென்னை மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த போது சென்னையில் நடை பெற்ற மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஆறு தொழிலாளர் உயிரிழந்தனர். தொழிற்சங்கத் தலைவர்களான திரு.வி.க., பி.பி. வாடியா, சக்கரைச் செட்டியார், நடேச நாயக்கர் இ. எல். அய்யர் ஆகிய ஐவரையும் நாடு கடத்தும்படி கவர்னர் லார்டு வெலிங்டன் ஓர் அவசர ஆணை பிறப்பித்தார். இது கண்ட நீதிக் கட்சித் தலைவர் சர். பி. தியாகராயர் கொதித்தெழுந்தார். தொழிற் சங்கத் தலைவர்களை நாடு கடத்தும் உத்தரவை கவர்னர் திரும்பப் பெற வேண்டும் என்றும், இல்லையேல் நீதிக் கட்சி மந்திரி சபை பதவி விலகும் என்றும் முடிவெடுத்து, இதனை கவர்னருக்கு அறிவித்ததோடு, மந்திரிகளின் பதவி விலகல் கடிதத்தையும் கவர்னர் கையிலே கொடுத்தார். நீதிக் கட்சியின் போராட்டத்தையும் நாட்டில் தோன்றிய கொந்தளிப்பையும் கண்டு லார்டு வெலிங்டன் தொழிற்சங்கத் தலைவர்களை நாடு கடத்தும் ஆணையை உடனடியாகத் திரும்பப் பெற்றார்.

1923-ம் ஆண்டு நவம்பரில் இரண்டாவது பொதுத் தேர்தல் வந்தது. இதிலும் நீதிக் கட்சியே வெற்றி பெற்றது. பனகல் அரசரை முதல்வராகக் கொண்டும், சிவஞானம் பிள்ளை, ஏ.பி. பாத்ரோ ஆகிய இருவரையும் துணை அமைச்சர்களாகக் கொண்டும் அமைச்சரவை உருவாக்கப்பட்டது. பேராசிரியர் எம். ரத்தினசாமி சபாபதி தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

மூன்றாவது பொதுத் தேர்தலுக்கு முன்பே 1925-ம் ஆண்டு நவம்பர் 29-ம் நாள் திராவிடர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த தியாகராயர் இயற்கையின் மடியில் நீங்காத் துயில் கொண்டார். அதன் பின்னர் பனகல் அரசர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1926-ம் ஆண்டு நடைபெற்ற மூன்றாம் பொதுத் தேர்தலில் எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையில் சுயாட்சிக் கட்சி என்னும் பெயரில் காங்கிரஸ் கட்சி நீதிக் கட்சியை எதிர்த்தது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வென்றது. ஆனால் மந்திரி சபை அமைக்க அது முன் வரவில்லை. பெரும்பான்மையற்ற நிலையில் பிறர் உதவியுடன் மந்திரி சபை அமைக்க பனகல் அரசரும் மறுத்து விட்டார். எனவே டாக்டர் சுப்பராயனுடைய மந்திரி சபை அமைந்தது.

மாநிலங்களுக்கு முழு சுயாட்சி தரப்பட வேண்டும் என்று ஆங்கிலேய அரசாங்கத்தை வற்புறுத்தும் நிர்மானம் ஒன்றைப் பனகல் அரசர் தலைமையில் நீதிக் கட்சி நிறைவேற்றியது. ஆனால் கட்சிக்கும் நாட்டிற்கும் பேரிழப்பாக 1928-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் நாள் பனகல் அரசர் உயிர் துறந்தார். இவரது பிரிவால் நாடு கண்ணீர் வடித்தது.

நாயரும், தியாகராயரும், பனகல் அரசரும் வரிசையாக மறைந்து விட்டதால் நீதிக்கட்சி கலகலத்து நின்றது.

பனகல் அரசருடைய காலத்தில்தான் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதற்கிடையில் காங்கிரஸை வளர்க்கும் பெரும் தூணாய் இருந்த தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 1926-ம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். 'குடியரசு' என்னும் வார ஏட்டின் மூலம் பகுத்தறிவுச் சுடர் விடும் ஆயிரக் கணக்கான கட்டுரைகள் வெளி வந்தன. ப. ஜீவானந்தம், பட்டுக் கோட்டை அழகிரிசாமி, சௌந்திரபாண்டியன், குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார், சிங்காரவேலர், கைவல்யசாமி, எஸ். ராமநாதன் போன்ற பலர் பெரியாருக்குத் துணையாக நின்று சுயமரியாதைக் கருத்துக்களைச் சூருவளி வேகத்தில் தமிழகத்தில் பரப்பி வந்தனர். 1930-ம் ஆண்டில் சென்னையில் 'சுயமரியாதை இளைஞர் கழகம்' ஒன்று தொடங்கப் பெற்றது. அப்போது பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்த அண்ணா அவர்கள் இந்த இளைஞர் மன்றத்தில் வாரந்தோறும் சொற்போர் பட்டியலில் இடம் பெற்றுக் கலந்து கொண்டு கருத் துரைகள் வழங்கினார்.

1930-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று, திவான் பகதூர் முனுசாமி நாயுடு தலைமையில் பி.டி. இராசன், குமாரசாமி ரெட்டியார் இருவரையும் துணை மந்திரிகளாகக் கொண்ட அமைச்சரவை அமைக்கப் பெற்றது இந்தச் சமயத்தில்தான் பெரியார் அவர்கள் தமிழர்களின் அரசியல் முன்னேற்றம் கருதி ஒரு திட்டத்தைத் தயாரித்து அதை நீதிக் கட்சி ஒப்புக் கொள்ள வேண்டு மென்று நிபந்தனை விதித்தார். அதனை அந்தக் கட்சியும் ஒப்புக் கொண்டதால் பெரியார் நீதி கட்சியுடன் இணைந்து பணி புரியத் தலைப் பட்டார்.

6

நீதிக் கட்சியில் பல மாற்றங்கள்

1932-ல் நீதிக் கட்சித் தலைவர் முனுசாமி நாயுடு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் தொடர் பாகத் தஞ்சையில் கூடிய மாநாட்டில் பொப்பிலி அரசர் கட்சியின் தலைவராகவும் முறைப்படி முதல் மந்திரியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். மூன்று ஆண்டுக் காலமே இந்த மந்திரி சபை நடைபெற வேண்டுமெனினும் சைமன் கமிஷனுடைய அறிக்கைவெளிவரக் காலம் தாழ்ந்ததால் இந்த மந்திரி சபையின் உயிர் ஏழு ஆண்டுகள் நீடித்தது. அந்தக் காலத்தில்தான் செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியாரும் தஞ்சைத் தங்கம், தமிழ்ச் சிங்கம். சர் ஏ.டி. பன்னீர் செல்வமும் இடையே அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

1936-ல் சைமன் கமிஷன் வெளியிட்ட அறிக்கையின்படி ஏற்பட்ட சீர்திருத்தத்தின்படி நடந்த பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி அடியோடு வீழ்ச்சி யடைந்து விட்டது. அந்த ஆண்டில் தான் நான் ஐந்தாம் வகுப்பில் உயர்நிலைப் பள்ளியில் பனகல் அரசருடைய வரலாற்றைத் தலைகீழ்ப் பாடம் செய்து ஆசிரியரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

1937-ல்தான் காங்கிரஸ் மந்திரிசபை முதன் முதலாகச் சென்னை மாநிலத்தில் பதவி ஏற்றுக் கொண்டது. இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி நேரிடையாகப் பங்கு கொண்டதால் சுயராஜ்யக் கட்சி மறைந்து ஒழிந்தது. காங்கிரஸ் அமைச்சரவை ராஜாஜி அவர்களை முதல்வராகக் கொண்டு அமைக்கப்பட்டது. ராஜாஜி தமிழக முதல்வரானதும் இந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கினார். 'இந்திகட்டாயம்' என்று சட்டம் பிறந்தவுடன் அதனை முன்னாலே அறிந்து எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி வந்த தமிழ்ப் பற்றுடையோரும் புலவர் பெருமக்களும் வீறிட்டெழுந்தனர். கிளர்ச்சிகள் நடத்தினர். இந்தி வேண்டாமென்று முடிவுகள் எடுத்து அரசுக்கு அனுப்பினர். செந்தீயென எழும் தங்கள் கண்டனங்களைச் செய்தித் தாள்களில் வாயிலாக வெளியிட்டுக் குவித்தனர். தமிழகத்தின் நகரங்கள், பட்டிதொட்டிகள், சிற்றூர்கள் எங்கணும் இந்தி எதிர்ப்புக்

கிளர்ச்சி! எதிர்ப்புக் கண்ட ராஜாஜி மேலும் வன்மையாக இந்தியைத் திணிக்கத் தொடங்கினர்.

காங்கிரசிலே உள்ள தமிழர்கள் கட்டாய இந்தியை உள்ளூர விரும்பவில்லை. அதற்கு நல்ல எடுத்துக் காட்டாக நாவலர் சோம சுந்தர பாரதியார் காங்கிரசை விட்டு விலகி இந்தி எதிர்ப்புக்குச் சிம்மக் குரல் கொடுக்கத் தொடங்கினர். சட்ட மன்றத்திலே பேசிய ராஜாஜி, ''இந்தியை எதிர்ப்பவர்கள் யார்? இரண்டே இரண்டு பேர்தான்! ஒருவர் ராமசாமி நாயக்கர், மற்றொருவர் பசுமலை பாரதியார்'' என்றார்.

எதிர் வரிசையில் அமர்ந்திருந்த பன்னீர் செல்வம் உடன் எழுந்து, ''எதிர்ப்பவர் இருவர். ஆனால் இந்தியைக் கொண்டு வருபவர் நீங்கள் ஒருவர்தான். ஆகவே, பெரும்பான்மை எதிர்ப்பின் பக்கம்தான்,'' என்று பதில் கூறினர். அந்தப் பதில் உரை கேட்டுத் தமிழகமே பன்னீர் செல்வத்தைப் பாராட்டி மகிழ்ந்தது.

இந்தி எதிர்ப்பில் பல்லாவரத்தார் பழத்தமிழ்ப் பேச்சாளர் பண்பு மிக்க மறைமலையடிகளாரும் குதித்திட்டார். ''அந்தோ! வடமொழி வந்து தமிழைப் பெரிதும் வீழச் செய்து விட்டதே! அதைக் குற்றுயிராக்கி விட்டதே ஆங்கிலம்! இனி இந்தி வந்தால் தமிழ் அழிதல் திண்ணமே. அய்யகோ! என் செய்குவோம்'' என்று ஏங்கிய மறைமலையடிகளாருக்கு இந்தி எதிர்ப்பு இயக்கம் பெரும் ஆறுதலை அளித்தது. 1938-ம் ஆண்டு சூன் திங்கள் 3-ம் நாள் சைதாப்பேட்டையில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு மறைமலையடிகள் தலைமை தாங்கினர். ஆம்! நான் பிறந்த சூன் திங்கள் 3-ம் நாளில் தமிழ் காக்க இந்தி எதிர்ப்பு முதல் போருக்கு மக்களைத் திரட்டி யெழுப்பும் மாநாட்டில் மறைமலையடிகளார் தலைமை தாங்கினர் என்பதை எண்ணி எண்ணி இறும்பூது எய்துகின்றேன்.

1938-ல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போருக்குப் பெரியார் தலைமை தாங்கினர். அறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மற்றும் புலவர் பெருமக்கள், தமிழ்ச் சான்றோர்கள் இந்தி எதிர்ப்புப் படையில் முன்வரிசையில் அணி வகுத்து நின்றனர். இந்தியைக் கட்டாயமாக வைத்துள்ள பள்ளிகளின் வாயில்களில் மறியல் நடைபெற்று, ஆடவரும் பெண்டிருமாய் ஆயிரம் பேருக்கு மேல் சிறைக் கோட்டம் சென்றனர். தாளமுத்து, நடராசன் என்ற இரு தமிழ் வீரர்கள் இந்தியை எதிர்த்துச் சிறை புகுந்து, சிறைக் கோட்டத்தில் பிணமாயினர். தமிழன் மொழிப் போராட்டத்தின் கொடியை அந்த வீரர்களின் குருதியிலே தோய்த்து விண்முட்டப் பறக்கவிட்டான்.

1924-க்கும் 1938'க்கும் இடையே 14 ஆண்டுகள். பள்ளியில் நான் இரண்டாம் படிவத்திற்குச் சென்று விட்டேன். இந்த ஆண்டுக் காலத்தில் நாட்டில் எத்தனை யெத்தனை நிகழ்ச்சிகள்!

1938'ல்தான் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் பண்டித நேரு ஓய்விற்காக ஐரோப்பா சென்று விட்டார். அந்த ஆண்டு முழுவதும் நேரு இந்தியாவில் இல்லை!

நீதிக் கட்சியின் உதவியோடு சென்னை மாநிலத்தில் முதலமைச்சராக ஆட்சி நடத்திய டாக்டர் சுப்பராயன் 1938-ல் ராஜாஜி மந்திரி சபையில் கல்வி அமைச்சராக இருந்தார். அவரது அறையில்தான் 1938 பெப்ரவரி 25-ம் நாள் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் பெப்ரவரி 27-ல் காஞ்சீபுரத்தில் கான்பகதூர் கலிபுல்லா சாகிப் எம்.எல்.ஏ அவர்களால் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பிற்கான கொடி உயர்த்தப்பட்டது. இந்த மாநாட்டில்தான் சோமசுந்தர பாரதியார் இந்தியை எதிர்த்துக் குரல் கொடுத்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைப் பெரியார் திறந்து வைத்ததும் இந்த மாநாட்டில்தான். 'பொதுமக்கள் பணத்தைக் கொண்ட சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் அவசியமற்ற இந்தி மொழிக்காகப் பணம் செலவழிக்கக் கூடாது' என்று இந்த மாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டு வரப் பட்டது. தீர்மானத்தை ஆதரித்துத் தமிழவேள் உமாமகேஸ்வரன் பிள்ளையும், சிதம்பரம் என்.சுந்தரபாணியும் முழக்கமிட்டனர். தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் யார் தெரியுமா? அவர்தான் பேரறிஞர் அண்ணா! அன்றைக்கு சி.என். அண்ணாதுரை எம்.ஏ.

தமிழகம் மொழிப் போர்க்களமான இந்த ஆண்டில்தான் துருக்கியில் கமால் பாட்சா மறைந்தார்!

செக்கோஸ்லோவாக்கியாவை ஹிட்லர் விழுங்கிய ஆண்டும், இரண்டாம் உலகப் போருக்கு முதலடி வைத்த ஆண்டும் இந்த ஆண்டுதான்.

ரஷியாவில் பெருத்த கலையெடுப்பு நடத்தி மனிதர்களை ஆயிரக் கணக்கில் சைபீரியாவுக்கும், மற்ற இடங்களுக்கும் ஸ்டாலின் அனுப்பிக் கொண்டிருந்ததும் இந்த ஆண்டு தான்.

காந்தி அடிகளின் அகிம்சைக் கொள்கைகள் காங்கிரஸ் தலைவர் சுபாஷ் போசின் கொள்கைகளுடன் கடுமையாகப் போரிட்ட காலமும் இதுதான்!

"நீங்கள் சொல்வதை எழுத்துக்கு எழுத்து என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் சொல்வதற்குத் துணிச்சலாக முன்வரும் தங்களின்

க்குத்துக்கள் எந்த விதத்திலும் தடைப்படக் கூடாது என்பதற்காக என் உயிரையும் கொடுத்துப் போராடுவேன்" என்று வால்டேர் சொன்னது போல், காந்தியடிகள் சொன்னது எதையும் ஒப்புக் கொள்ளாமல், ஆனால் அவருடைய நலம், புகழ், தொண்டு, மரியாதை ஆகியவை களுக்கு ஊறு தேடுவனவாக எது தெரிந்தாலும் அதனை மிக மூர்க்கமாக, சுபாஷ் சந்திர போஸ் எதிர்த்து வந்த ஆண்டு அது!

அகிம்சை-ஜனநாயகம்-தனிமனித உரிமை-சுயாட்சி-பாதுகாப்பான எல்லைக் கோடுகள்-இனத்தின் பெருமை-தாய்மொழியின் அருமை-நேர்மையான அரசியல் ஆகிய அத்தனையும் கடுமையான அறைகூவ லுக்கு, அகில உலகம் முழுவதும் ஆளான ஆண்டு அது!

பெரியார் இந்தி எதிர்ப்புப் போருக்குத் தலைமையேற்றது குறித்து எத்தனையோ கருத்துக்கள் வெளியிடப்பட்டன. "அவருக்குத் தமிழ் வளர்ச்சி முன்னேற்றத்திற்காக இந்தியை எதிர்க்க வேண்டுமென்று எண்ணமில்லை. தமிழர்களைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. காங்கிரசை ஒழிக்க வேண்டும் என்ற தன் ஆர்வம் நிறைந்த குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள இந்தி எதிர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டுள்ளார்," என்றெல்லாம் எழுதப்பட்டது. பேசப்பட்டது. இந்தி எதிர்ப்புத் தலைவராயிருந்த பெரியார் அந்தக் காலத்தில் தமிழர் தலைவராக ஏற்றுக் கொள்ளப் பட்டார். புலமை வாய்ந்த சாமி சிதம்பரனார் அவர்கள் 'தமிழர் தலைவர்' எனும் பெரும் நூலையே பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறாகத் தீட்டினார். இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் அண்ணாதுரை என்ற ஒரு புதிய பெயர் தமிழ்நாட்டு மூலைமுடுக்கெல்லாம் எதிரொலிக்கத் தொடங்கியது.

"எப்படிப் பேசுகிறார் மனுஷன்!"

"சங்கீதம் கேட்பது போல் இருக்கிறதே.

"ஆட்ட பாட்டமில்லாமல் அசைவில்லாமல் மெல்ல சுழன்று மேடையிலே தமிழ்ச் சொற்களே மாதரே முத்துக்கள் போல் உதிர்க்கிறாரே!"

"என்ன உவமை! என்ன அழகு!"

"குள்ளமான உருவம்! கள்ளமில்லாப் பார்வை! மடை திறந்தாற் போல் பேச்சு."

"ஆணித்தரமான வாதங்கள். யாரும் மறுக்கவொண்ணாத புள்ளி விவரங்கள். அடடா! பேச்சா அது! குற்றாலத்து அருவி! கொஞ்சு தமிழ்ச் சிந்து!"

இப்படியெல்லாம் அவர் பேச்சுக்குப் படித்தவர் மத்தியிலும், பாமரர் மத்தியிலும் பாராட்டுரைகள் குவிந்தன.

7

தமிழ் காக்கும் போர்முனை

அஞ்சா நெஞ்சன் என்று தமிழர்களால் அழைக்கப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரிசாமி திருச்சியிலிருந்து தமிழர் படையொன்றை அணிவகுத்து சென்னை நோக்கிப் பயணம் நடத்தினர். அந்த அணிவகுப்பில் மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் அம்மையார், மணவை திருமலைசாமி ஆகியோர் முக்கியமானவர்கள்.

அழகிரிசாமி, சுயமரியாதை இயக்கத்துச் சூருவளிப் பேச்சாளர். தனக்கென எதுவும் விரும்பாமல், நாளெல்லாம் நாட்டுத் தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். பெரியார் பேச்சில் காணப்பட்ட அழுத்தம் திருத்தமான வாதமும்—அழகிரி பேச்சில் காணப்பட்ட வீரங்கொப்பளிக்கும் வரிகளும்— அண்ணா பேச்சின் அழகு தமிழும் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

அழகிரிக்குக் கோடையிடி அழகிரி என்ற பெயரே உண்டு. வாட்ட சாட்டமான உருவம். வணங்காமுடி மன்னன் போன்ற நடை. எளிய வாழ்க்கை. அவர் தலைமையில் தமிழர் படை வருகிறது சென்னை நோக்கி என்பது அப்போது மிகப் புரட்சிகரமான செய்தி!

மூவலூர் அம்மையார் சமுதாயப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயல் வடிவில் பல நற்றொண்டுகளை ஆற்றியவர். விதவைத் திருமணங்கள் பலவற்றை நடத்தி வைத்துச் சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை நிறைவேற்றியவர். அந்த அம்மையார் தமிழர் படைக்கான உணவு முதலியவைகளை வழி நெடுகத் தயாரிக்கும் பணியினை ஏற்றுக் கொண்டார்.

நறுக்குத் தெறித்தாற்போல் அரசியல் கருத்துக்களை எழுதும், 'நகர தூதன்,' என்ற வார ஏட்டுக்கு ஆசிரியர் மணவை திருமலைசாமி என்பார். 'பேனா நர்த்தனம்' என்ற தலைப்பில் அவர் எழுதும்போது உண்மையிலேயே அவரது பேனா நடனமே புரியும்!

அவரும் தமிழர் படைக்கு ஒரு தளபதியாகத் திகழ்ந்தார். திருச்சியிலிருந்து இருநூறு கல் தொலைவு நடந்தே சென்னைக்கு வரும் தமிழர் படைக்கு வழியெங்குமுள்ள இந்தி எதிர்ப்பாளர் வரவேற்புக்கள் நடத்தினர். இந்தியை ஆதரித்த காங்கிரஸ் நண்பர்கள் தமிழர் படைக்குப் பல தொல்லைகளைக் கொடுத்தனர். தடி கொண்டு தாக்கினர். கல் கொண்டு வீசினர். எதற்கும் கலங்காது தமிழர் படை ஊருக்கு ஊர் அதிகமாகப் பெருகிச் சென்னை நோக்கி வீர நடை போட்டது.

ஒரு கிராமத்துச் சாலையில் காங்கிரசார் செருப்புக்களைத் தோரணங்களாகக் கட்டி, தமிழர் படைக்கு வரவேற்புத் தருவதாக அவமானப்படுத்த முயன்றனர். அந்தத் தோரணங்களை அவிழ்த்து எறிய அந்த ஊரிலே உள்ள தமிழ் உணர்ச்சி பெற்றவர்கள் முனைந்த போது அவர்களை அழகிரிசாமி, தடுத்து அந்தத் தோரணத்திற்கு முன் நின்று கொண்டு பேசத் தொடங்கினர். மக்கள் ஆயிரக் கணக்கில் கூடினர். அழகிரிசாமி நிறுத்தவில்லை. பேசிக்கொண்டேயிருந்தார்.

புலி உறுமியது!

சிம்மம் கர்ச்சித்தது!

கோடை இடி குமுறியது!

அழகிரியின் பேச்சு இரண்டு மணி நேரத்தையும் கடந்தது.

''தமிழுக்கும் தமிழனுக்கும் வர இருக்கும் களங்கத்தைத் தடைக்கப் போகிறோம். எங்களுக்குத் தமிழர்களே, நீங்கள் தரும் வரவேற்பு இதுதான். ஆகாயத்தில் தொங்கவிட்ட செருப்புக்களைத் தரையில் பரப்பியிருந்தாலாவது ஆளுக்கு ஒரு ஜோடி மாட்டிக் கொண்டு நடப்போமே," என்று அவர் முழங்கினர். மக்கள் வெள்ளம் ஆர்ப்பரித்தது. அந்தத் தோரணத்தை வெட்டியெறியக் கிளம்பியது. அழகிரி அவர்களைத் தடுத்து, ''கட்டியவர்களே அவிழ்க்கட்டும்!" என்று கூறினர். அழகிரி பேச்சை நிறுத்தாதற்கு முன்பே, அந்தக் காங்கிரசார் ஓடி வந்து அழகிரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர்கள் கட்டிய தோரணத்தை அவர்களே அவிழ்த்து எறிந்தனர். அது மட்டு மல்ல; தமிழர் படைக்குத் தேநீர் விருந்தொன்று நடத்தி, அதன் பின்னர் வழியனுப்பி வைத்தனர். தமிழர் படை இருநூறு மைல் நீளத்திற்கு உள்ள சின்னஞ்சிறு கிராமங்களில் எல்லாம் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை விதைத்து வந்தது.

மாணவர்களை எவ்வாறு இந்தி எதிர்ப்பு ஈர்த்தது என்பதற்கு நானே ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தேன். பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் பலரை இணைத்துச் சங்கங்கள் அமைப்பதில் எனக்குத்

தனி ஆர்வம் உண்டு, சிறுவர் சீர்திருத்தச் சங்கம், இளைஞர் சங்கம் இப்படிப் பலப்பல!

வாரந்தோறும் கூட்டங்கள், சிறப்புத் தலைப்புக்களில் சொற் பொழிவுகள்!

1938-ல் நாள்தோறும் மாலை நேரத்தில் மாணவர்கள் பலரை அணி வகுத்துத் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் வருவேன். கையில் தமிழ்க் கொடி! ராஜாஜி கட்டாய இந்தி என்னும் கட்டாரியால் தமிழ்த் தாயைக் குத்த முற்படுவதுபோன்ற படம் அமைந்த ஒரு வண்டி! என் தலை மையில் அந்த ஊர்வலம்! நான் எழுதிய ஒரு பாடல்; மாணவர்கள் அனைவரும் சேர்ந்து ஒலிப்பர்.

"வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்!
வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டி திருப்பிடுவோம்"

இதுவே பாட்டின் பல்லவி. அப்போது இந்தியை எதிர்த்து ஜெகதீசன் என்பவர் சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார். அறுபது எழுபது நாட்களைக் கடந்து உண்ணாவிரதம் நீண்டது. அவரைப் பார்க்கப் பெரியார் சென்றார். பெரியாரின் பச்சைக்கல் மோதிரத்திடம் தனக்குள்ள இச்சையை உண்ணாவிரதி தெரிவித்தாராம். அன்றைக்கே பெரியார் உண்ணாவிரதம் போன்றவைகளில் தனக்கு நம்பிக்கையில்லை யென்று ஒரு கூட்டத்தில் அறிவித்துவிட்டார்.

மாணவ ஊர்வலத்தில் தினந்தோறும் என் கையில் இருந்த அந்த உண்ணாவிரதியின் படத்தை உடைத்து நொறுக்கி விட்டோம். அதற்கு முன்பே அவர் உண்ணாவிரதத்தையும் நிறுத்தி விட்டார்.

ஒருநாள், எங்கள் ஊர்வலத்தை எனது வகுப்பு இந்தி ஆசிரியர் பார்த்து விட்டார். என் கையிலிருந்த இந்தி எதிர்ப்பு முழக்கங்கள் அடங்கிய துண்டு அறிக்கையை அவரிடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கிக் கொண்டு பேசாமல் போய் விட்டார். மறுநாள் வகுப்பில் அதற்குப் பதில் காத்திருந்தது.

இந்தி ஆசிரியரிடத்தில் துண்டு அறிக்கையைக் கொடுக்கும் போதும் அவர் எதிரே தமிழ்க் கொடியேந்தி, "இந்தி வீழ்க! தமிழ் வாழ்க!" என முழங்கிய போதும் எனக்கு எந்தவிதமான அச்சமும் தோன்றவில்லை. என் ரத்த ஓட்டத்திலும் மூச்சிலும், "தமிழ் தமிழ்" என்றே உணர்வு பொங்கிக் கொண்டிருந்தது. அந்த உணர்வை வெறி என்றும் சிலர் கூறக் கூடும், பற்று வைப்பதற்குப் பெயர் வெறி என்றால் அந்தப் பொருள் சரியானதுதான!

எதனையும் மீறி நிற்பது தாய் மொழிப் பற்று என்பதற்கு மிகச் சிறந்த சான்று வேண்டுமானால், காங்கிரஸ் கட்சியின் சார்பில் சென்னை பெத்துநாயக்கன்பேட்டையில் உழைத்துக் கொண்டிருந்த திரு என்.

வி. நடராசன் அவர்கள், இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழ் காக்கும் இயக்கத்தில் ஈடுபட்டார் என்பதேயாகும். தன்மான இயக்கக் கருத்துக்களில் எதிர்ப்பு அணியில் இருந்த மறைமலை அடிகளார் போன்ற பெரும் தமிழ் அறிஞர்கள் எல்லாம் தன்மான இயக்கத் தலைவர் பெரியார் அவர்களுடன் இணைந்து இந்தியை எதிர்த்தது தமிழ்ப் பற்று மிகுதியால் அன்றே? துடிக்கும் இதயத் துடிப்பெல்லாம் தமிழ்ப் பண் ஒலிக்கும் வயதும், ஆர்வமும் படைத்த நான், இந்தி எதிர்ப்புத் துண்டு அறிக்கையை இந்தி ஆசிரியர் கையிலே கொடுத்ததும் ஒரு புரட்சிகரமான செயல் என்றுதான் கருதினேன்.

வகுப்பறையில் உள்ள கரும் பலகையில் இந்திச் சொற்கள் சிலவற்றை அவர் எழுதினர். அவைகளை உச்சரிக்குமாறு எனக்கு ஆணையிட்டார். நான் எழுந்து நின்றேன்.

"ம்! படி பார்க்கலாம்?" என்றார்.

எனக்குப் புரிந்தால்தானே படிக்க முடியும்? அதனால் பேசாமல் நின்றேன், அருகே வந்தார். வகுப்பறை எதையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆசிரியர் என் காதைத் திருகினர்.

"படிக்க முடியுமா? முடியாதா?" என்று உறுமினர்.

"புரியவில்லை" என்றேன். கன்னத்தில் ஓங்கி அறைந்தார். வகுப்பறை சுழல்வது போன்ற உணர்ச்சியில் தலை சுற்றியது எனக்கு. சமாளித்துக் கொண்டு பலகையில் உட்கார்ந்து விட்டேன். ஆசிரியர் ஏன் அடித்தார் என்பது எனக்குப் புரிந்து விட்டது.

"முதல் நாள் ஊர்வலத்தின்போது நான் செய்ததும் சரி தான்! இப்போது அவர் செய்ததும் சரிதான்." இவ்வாறு என் நெஞ்சு எனக்கு நீதி வழங்கியது. ஆசிரியர்கள் அனைவரும் எதிர்பார்த்தார்கள். மாணவர்களைத் திரட்டி இந்தி ஆசிரியர்க்கு எதிராக வேலை நிறுத்தம் போன்ற கிளர்ச்சிகளைச் செய்வேன் என்று!

என் மூளை அப்படி வேலை செய்யவில்லை. இந்தி ஆசிரியர் அவராகவே இரண்டு மூன்று நாள் உயர்நிலைப் பள்ளிக்கு வராமல் இருந்து விட்டார். திருவாரூர் உயர்நிலைப்பள்ளி வாயிற்புறத்திலும் தமிழ் இயக்கத்தார் நாள்தோறும் மறியல் அறப்போர் நடத்தினர்கள். நான் இந்தி வகுப்புக்களுக்குப் போவதை நிறுத்திக் கொண்டேன்.

இந்தி ஆசிரியர் என்னை அடித்து முப்பத்து ஆறு ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதே இந்தி ஆசிரியர் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை மயிலையில் நடந்த ஒமியோபதி மாநாட்டுக்கு என்னை அழைத்துச் செல்ல வெளியே காத்துக் கொண்டிருந்தார்.

இப்போது அவர் இந்தி ஆசிரியர் அல்ல! தமிழ் நாட்டில் பல ஓமியோபதி மருத்துவர்களைத் தயாரித்துள்ள பெரிய நிறுவனத்தின் தலைமையாளர்.

முப்பத்து ஆறு ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் மூண்டெழுந்த மொழிப் போராட்டத்தில் முனைத்தெழுந்தவன் நான் என்பதை எண்ணிடும்போது என்னையறியாமல் ஒரு பீடு நடையும் பெருமித நோக்கும் எங்கிருந்தோ வந்து சேர்கிறது!

அந்தத் தமிழ் காக்கும் போர் முனையின் தலைப்பிலேதான் தாள முத்து, நடராசன் என்ற இரு தமிழ்க் காளையர் சிறைச் சாலையில் பிணமாயினர்.

''இன உணர்ச்சி ஊற்றெடுக்க, நமது தியாகம் தெரிய, உண்மை வெளிப்பட, உழைப்பு பலன் அளிக்க, கட்டாய இந்தி நல் வாய்ப்பாக அமைந்தது. எத்தனை தாய்மார்கள் தமிழுக்காகச் சிறை புகத் தயார் என்பதை நமது போராட்டம் எடுத்துக் காட்டிவிட்டது. தாளமுத்து, நடராசன் போல் தமது உயிரையும் தரும் மணிகளின் ஒளி தெரிய அது உதவிற்று'' என்று அண்ணா அவர்கள் கட்டாய இந்தி பற்றிக் கருத்தறிவித்தார்கள்.

தமிழகத்தில் மொழிப் போர் நடந்து கொண்டிருந்த போது, வடபுலத்தில் இந்து முஸ்லீம் கலவரங்கள் பரவிடத் தொடங்கின.

கிழக்கு வங்கத்தில் சுற்றுப் பயணம் செய்த சுபாஷ் சந்திரபோஸ் முஸ்லீம் மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியவரானார்.

முகம்மதலி ஜின்னா, முஸ்லீம் லீக் கார்பில் காங்கிரஸ் கட்சிக்கு அறைகூவல் விடுத்தார். அதனை, 'யுத்தப் பிரகடனம்' என்று காந்தியார் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் முஸ்லீம்களுக்கு இழைக்கப்படும் அநீதியையும் அவர்கள் படும் இன்னல்களையும் முஸ்லீம் லீக் சுட்டிக் காட்டியது.

தமிழ் நாட்டுப் பள்ளிகளில் கட்டாய இந்தி வைக்கப்பட்டு இருப்பதை அகில இந்திய முஸ்லீம் லீக் கண்டித்துக் குரல் எழுப்பியது. அதன் தொடர்பாக இந்தி எதிர்ப்பாளர்கள் வரிசையில் தமிழ் நாட்டில் உள்ள முஸ்லீம் லீக் தலைவர்களும் நடை போட்டார்கள். தமிழ்க் கொடியும், பச்சைப் பிறைக் கொடியும் சேர்ந்து பறந்திட இந்தி எதிர்ப்பு மாநாடுகள் நடைபெற்றன.

8

''நீங்களா 'மாணவ நேசன்' நடத்துகிறீர்கள்?''

ஜின்னாவிற்கும் ஜவாஹர்லால் நேருவிற்கும் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. அவைகள் முழுவதும் முஸ்லீம் சமுதாயத்தைப் பற்றியே அமைந்ததாக இருந்தது. அதன் தொடர்பாக முஸ்லீம்களின் கோரிக்கை பற்றி 1938 அக்டோபர் 9-ம் தேதி ஜின்னா எழுதிய முடங்கலில் இருந்த நிபந்தனைகளைக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. ஜின்னாவிற்கும் காங்கிரசுக்குமிடையே எதிர்ப்பு ஆணிவேர் விட்டது. தமிழ்நாட்டு முஸ்லீம்கள் நீதிக்கட்சித் தலைவர்களுடன் நட்புறவு கொண்டு வாழ்ந்தனர். தமிழகத்தில் நடைபெற்ற நபிகள் நாயகம் விழாக்களில் பெரியார், அண்ணா, அழகிரி சிற்றரசு போன்றவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்த உறவுதான் எதிர்காலத்திலும் திராவிட இயக்கத்திற்கும் முஸ்லீம் லீகிற்கும் இடையே அழுத்தமான பிணைப்பை ஏற்படுத்த உதவியது என்று சொன்னால் அது மிகையாகாது.

காந்தியடிகளும் ஜனப் ஜின்னாவும் சந்தித்துப் பேசியபோது காந்தியடிகள் ஜின்னாவை வியப்புடன் பார்த்து, ''1915-ல் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பிரதிநிதியாக விளங்கிய ஜின்னாவா நீங்கள்?'' என்று கேட்டார். அதற்கு ஜனப் ஜின்னா, ''தேசியம் ஒருவருடைய தனிச் சொத்து அல்ல.'' என்று பதிலளித்தார்.

காந்தியடிகளும் சுபாஷ் போஸும், ஜின்னாவும் சேர்ந்து 1938 ஜூன் பதினெட்டில் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். 14 நிபந்தனைகள் அடங்கிய ஒரு திட்டத்தை ஜின்னா அளித்தார். அது ஒப்புக் கொள்ளப்படவில்லை. அந்த ஆண்டு காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்கிற்கும் இடைவெளி அதிகமாகி விட்டது. அதற்கு நேர்மாறுகத் தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கத்திற்கும், லீக்கிற்கும் நெருக்கம் அதிகமாயிற்று.

வடக்கே இந்து முஸ்லீம் போராட்டமும் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டமும் நடைபெற்ற அந்த ஆண்டில் இந்தியாவின் பக்கத்து நாடான சீனாவில் உள்நாட்டுக் குழப்பமும், வெளிநாட்டுப் படையெடுப்பும் ஒன்றையொன்று மிஞ்சிக் கொண்டிருந்தன.

ஐரோப்பாவில் யுத்தக் கருமேகங்கள் குமுறிச் சூழ்ந்தன. போருக்கான சூழ்நிலைகள் உருவாகி விட்டன. அந்த ஆண்டு பர்மாவில் விளைந்த அமளிகளின் மூலம் பல உயிர்கள் பலி கொள்ளப்பட்டன.

பெருத்த அளவில் பெருட்சேதம் ஏற்பட்டது. அந்த ஆண்டு போர்ச் சூழலுக்கு இடையே ஆரம்பமான போதிலும், அடுத்த 1939-ல் ராஜாஜி அமைச்சரவை முடிவுற்றது. இடைக்கால அமைச்சரவை உருவாயிற்று. அந்த அமைச்சரவை கட்டாய இந்திச் சட்டத்தை நீக்கியது. இதனால் 1939-ம் ஆண்டையே மொழிப் போராட்டத்தில் முதல் கட்ட வெற்றி ஆண்டாக நாம் எண்ணிக் கொள்ளலாம்.

இப்பொழுதுதான் அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலும் ஒரு பெரும் பிளவு ஏற்படத் தொடங்கியது. திரிபுராவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் மீண்டும் தலைவராக சுபாஷ்போஸ் போட்டியிட்டார். வெளி நாட்டிலிருந்து திரும்பிய ஜவஹர்லால் நேரு தடுத்தும் சுபாஷ் கேட்கவில்லை. இரண்டாவதுமுறை சுபாஷ் போட்டியிட்டதை காந்தியடிகளும் விரும்பவில்லை. ஜவஹர்லால் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து காங்கிரஸ் தலைவராக இருந்ததைப் போலத் தானும் ஏன் இருக்கக் கூடாது என்று சுபாஷ் சந்திர போஸ் வாதிட்டார். இறுதியாக காந்தியடிகள் எதிர்ப்பிற்கிடையே சுபாஷ் சந்திர போஸ் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார்.

காந்தியடிகளுடைய எண்ணம் ஒரு முஸ்லீமைக் காங்கிரஸ் தலைவராகக் கொண்டு வரவேண்டும் என்பது. அதற்கு அவர் அபுல் கலாம் ஆசாத்தை எண்ணிக் கொண்டிருந்தார். சுபாஷ் பிடிவாதமாகப் போட்டியிடவே ஆசாத் விலகிக்கொண்டார். காந்தியார் சுபாஷை எதிர்த்துப் பட்டாபி சீதாராமய்யாவை நிறுத்தினர். பட்டாபியின் தோல்வி தன் தோல்வி என்று மகாத்மாகாந்தி மனமுருகிச் சொல்ல வேண்டிய அளவிற்குச் சீதாராமையா தோல்வியுற்றார். அந்தத் தோல்வியைத் தொடர்ந்து காந்தியடிகள், ஆசாத், படேல், ராசேந்திரப்பிரசாத் ஆகியோர் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலகி விட்டார்கள்.

சுபாஷ் தலைமையை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். சிக்கல் வளர்ந்து கொண்டே போவதைக் கண்ட சுபாஷ்போஸ் தனது பதவியை ராஜினாமாச் செய்தார். அடுத்து காந்தியடிகளின் அன்பைப் பெற்றார், ராசேந்திர பிரசாத் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கிடையே ஐரோப்பாவில் போரை எதிர்பார்த்து அல்லல் பட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எதிராக இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கி விடவேண்டும் என்று சுபாஷ் சந்திரபோஸ் தெரிவித்தார். நெருக்கடியில் சிக்கியிருக்கும் இங்கிலாந்தை எதிர்ப்பதற்குச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வது சந்தியாகிரக நெறியை மீறிய செயலாகும் என்பது காந்தியாரின் வாதமாகும்.

தலைமைப் பொறுப்பை உதறி விட்ட சுபாஷ் போஸ் காங்கிரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவும் கிளம்பினார். பம்பாயில் காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய தீர்மானங்களை எதிர்த்து முழங்கினார். நாடெங்கும் அவரது அனுதாபிகள் காங்கிரஸ் தீர்மானத்துக்கு எதிராகப் பேசத் தொடங்கினர். உடனடியாக அவர் மீது காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுத்தது. பெரும் தலைவர்களில் ஒருவரான சுபாஷ் மூன்று ஆண்டுகள் வரை காங்கிரஸ் கட்சியின் பதவிக்குப் போட்டியிடக் கூடாது எனறு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது எந்தத் தனி மனிதரையும்விட கட்சி அமைப்பு பெரிது என்று கருதப் பட்ட ஒரு வாய்ப்பு. ஆனாலும் அதில் காந்தியடிகளுக்குள்ள இடம் முக்கியமானது என்பதை உலகிற்கு பறையறைவிக்கும் நிகழ்ச்சி யாயிற்று.

காந்தியாரையும் சுபாஷையும் இணைத்து வைக்க நேரு மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டார். அதற்காகவே , பெருந்தலைவர்கள் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலகியபோதும் அவர் விலகாமல் இருந் தார்.

'சுபாஷைத் தலைவராக ஏற்றுக் கொள்வது நல்லது' என்று பண்டித நேரு காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதினர். ஆனால் காந்தி யடிகள் இதற்கு இறுதி வரை இணங்கவில்லை.

திரிபுரா காங்கிரசிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுபாஷ் போசிற்கு 105 டிகிரி காய்ச்சல். அவரைத் தூக்கிக் கொண்டு வந்து மாநாட்டில் உட்கார வைத்தார்கள். 'அந்தப் பரிதாபகரமான நிலை யிலும் இரண்டு குழுவினரும் தங்கள் கொள்கைகளையோ, தங்கள் பிடி வாதத்தையோ விட்டுக் கொடுக்கவில்லை; என்று அப்போது பத்திரிகை களில் வந்த செய்திகளைப் படித்தது எனக்கு நன்கு நினைவிருக்கிறது. நவம்பர் 14ம் நாள் ஜவஹர்லால் நேருவுக்கு ஐம்பதாம் ஆண்டு பிறந்த நாள் வந்தது. 'உன்னுடைய முதல் 30 ஆண்டுகள் இந்தியாவின் சரித் திரத்தில் தலையாய இடம் பெற்று விட்டன, என்று கவிக்குயில் சரோஜினி தேவி நேருவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினர்.

காந்தி - சுபாஷ் உறவை ஏற்படுத்த முடியாத நேரு விரக்தியுடன் காங்கிரஸ் தூதுவராக சீனாவின் அழைப்பை யேற்று அங்கு சென்றார். சென்றவுடன் உலக யுத்தம் தொடங்கி விடவே, பத்து நாட்களில் இந்தியாவிற்குத் திரும்பினர். இந்த 1939-ல் தான் புரட்சி ஜனநாயகக் கட்சி என்று எம். என். ராய் ஒரு கட்சியைத் துவக்கி வைத்தார். சுபாஷ் போசின் பார்வர்ட் ப்ளாக் கட்சியும் வேறு ஒரு திசையில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நடை போட்டுகொண்டு இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் பல பகுதி களிலும் ஊடுருவுவதற்குப் பலத்த ஆயத்தங்களைச் செய்து கொண்

டிருந்தது. அப்படிப் பட்ட முயற்சிகளில் ஈடுபட்ட ஒருவர் பள்ளிக் கூடத்திலிருந்த என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பினார்.

அவர் எண்ணிக் கொண்டிருந்திருக்கிறார், கருணாநிதி என்ருல் கிட்டத்தட்ட அவனைப் போன்ற வயதுடையவன், உருவமுடையவன் என்றெல்லாம்;15 வயது இளைஞனை மெலிந்த உருவினனை நான் போய் எதிரே நின்றேன். அவர் சந்தேகத்துடன், ''நீங்கள்தானு 'மானவ நேசன்' நடத்துகிற கருணாநிதி" என்று கேட்டார்.

'மானவ நேசன்' என்பது நான் நடத்திய கையெழுத்து ஏடு. இப் போது கூட மாணவர்கள் பல இடங்களில் கையெழுத்து ஏடுகள் நடத்து கிறார்கள். கவிஞர் பாரதிதாசன், ஒருமுறை ஒரு மாணவர் தந்த கையெழுத்து ஏட்டைப் படித்து விட்டு, ''கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பைத்தியக்காரத்தனம் இந்தக் கையெழுத்துப் பத்திரிகையும்" என்று மதிப்புரை எழுதிக் கொடுத்தார்.

மாணவர்கள் நடத்தும் கையெழுத்து ஏட்டால் நாடு ஒரேயடியாக முன்னேறி விடும் என்று யாரும் கூறவில்லை. சிறுதுளி பெருவெள்ளம். பலர் சேர்ந்ததே நாடு. அந்த நாட்டின் எதிர்காலத்திற்குரியவர்கள் மாணவர்கள். அவர்கள் தங்கள் எண்ணங்களைச் செம்மைப் படுத்திக் கொள்ள மெருகேற்றிக்கொள்ளக் கையெழுத்துப் பிரதிகள் நல்ல வாய்ப்பு அளிக்கின்றன என்பதே என் நம்பிக்கை. இளமைப் பருவத்தில் எழுதுகின்றவைகளைப் பெரிய பத்திரிகைகள் எடுத்துக் கொள்வதில்லை. அந்தப் பத்திரிகைக்கு எழுதுவது போன்ற தகுதியைக் கையெழுத்துப் பிரதியில் ஏற்படும் பயிற்சி தாராளமாகத் தருகிறது என்பேன்.

ஆனல் ஒன்று, எல்லோரும் கையெழுத்துப் பிரதி என்ற பெயரால் பொங்கல் மலர்போல ஒன்று தயாரித்து விடுகிறார்கள். நான் பள்ளியில் நடத்திய கையெழுத்து ஏடுகளை ஒரு சமயம் ஒருவர்தான் படிக்க முடியும். நான் நடத்திய ஏடு மாதத்திற்கு இரண்டு வெளியீடு. ஒவ்வொரு வெளியீட்டிலும் எட்டு பக்கங்கள். பிரதிகளோ ஐம்பதுக்கும் குறை யாது. ஐம்பது பிரதிகளையும் நானும் சில நண்பர்களும் மட்டுமே உட் கார்ந்து காப்பி எடுப்போம். டெம்மி பேப்பர் செலவை மட்டும் வசூல் செய்து கொள்வோம். உழைப்பும் கட்டுரைகளும் இனம்!

இந்த ரீதியில் 'மானவ நேசன்' ஏழெட்டு மாதங்கள் நடை பெற்றது. இப்படி ஐம்பது பிரதிகள் கையாலேயே எழுதி வழங்குவது சிரமமாயிருக்கிறதே வேறு என்ன செய்யலாம் என்று சிந்தித்தபோது தான் 'முரசொலி' தோன்றியது. வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை என்ற அளவிலே அல்ல. தூண்டு வெளியீடுகளாக!

'முரசொலி' தூவங்குவதற்கு முன்னால் நானகு மாதங்களுக்கு முன்புதான் கதர்ச் சட்டைக் கண்ணுடிக்காரர் என்னைச் சந்தித்ததாகும்!

''மாணவர்களையெல்லாம் ஒன்றுபடுத்திச் சுதந்திரம், சமாதானம், சமத்துவம் ஆகியவைகளுக்காக அணி வகுத்துக் குரல் எழுப்ப வேண்டும். அதற்குப் பாசறையாக மாணவர் சம்மேளனம் என ஒன்று தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதன் அமைப்பாளராக நீங்கள் இருந்து திருவாரூர்ப் பள்ளியில் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும்." என்று அவர் கேட்டுக் கொண்டார். அணிந்திருந்தது கதர்ச்சட்டையாயினும், நாட்டுத் தலைவர்களைப் பெருமையோடு பேசினாராயினும் அவர் காங்கிரஸ்காரரல்ல என்று தெளிவாகியது. திரை மறைவில் வந்தவர் கம்யூனிஸ்ட் என்பது எனக்கு அப்போது தெரியாது,

சுதந்திரம் - சமாதானம் - சமத்துவம் என்ற வார்த்தைகள் ஒரு பதினேந்து வயது இளைஞனின் உள்ளத்தில் எவ்வளவு உணர்ச்சிகளை ஏற்றவல்லவை.! அதனால் மாணவர்கள் சம்மேளனத்தின் அமைப் பாளன் ஆனேன். இருநூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். சம்மேளனம் காங்கிரஸ் சார்புடையது எனக்கருதி, காங்கிரஸ் மாணவர் களும் சேர்ந்தனர். இருநூறு பேரில் நூறு பேர் எக்கட்சியிலும் சேராத பொதுமாணவர்கள். சம்மேளனத்தின் போக்கு நம்மையும் சேர்த்து அடித்துச் செல்லும் போலிருந்தது. ஆழந் தெரியாமல் காலை விட்டு விட்டோம் என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்.

9

தமிழ் மாணவர் மன்றம்

கதர்ச் சட்டைக்காரர் வந்து சம்மேளன நிர்வாகிகள் தேர்தல் நடத்தி, என்னையே மாணவர் கிளையின் செயலாளராகவும் ஆக்கினர்.

என் நண்பர் எஸ். பி. சிதம்பரம் பொருளாளராகவும் ஆக்கப் பட்டார்.

நிர்வாகி தேர்தல் நடந்ததிலிருந்து என் மனம் குழப்பமாகவே ஆகி விட்டது. 'இதுவே நீடித்தால் நாம் எங்கு போய் நிற்போம்? கம்யூனிஸ்ட்டிலா? காங்கிரசிலா?' என்று என் இளம் மனம் அஞ்சியது. அதற்குள் சம்மேளனத்தில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் மேலிடு வதற்கான அறிகுறிகள் தென்படலாயின. அந்த ஆதிக்கமும், என் வாயிலாகவே படையெடுக்கத் துணிந்தது. 'தமிழ் வாழ்க! இந்தி வளர்க' என்பதை நமது சம்மேளனக் கோஷமாக வைத்துக் கொள்ளலாமே!" என்றார் ஒரு காங்கிரஸ் நிர்வாக உறுப்பினர்.

கம்யூனிஸ்ட் அனுதாபமுள்ள மாணவர்களும் தலையசைத்தனர். நான் மறுத்து விட்டேன். ஓர் இரவு முழுதும் எனக்குத் தூக்கமே யில்லை. விடிந்தது. நேரே சம்மேளனப் பொருளாளர் நண்பர் சிதம் பரம் வீட்டுக்குப் போனேன். அவரிடம் உறுப்பினர் கட்டணம் என்ற வகையில் நூறு ரூபாய் இருந்தது. அவசரமாகக் கேட்டு வாங்கினேன்.

''நமது சம்மேளனத்தைக் கலைக்கப் போகிறேன். உறுப்பினர்கள் பணத்தைத் திருப்பித் தரப்போகிறேன்." என்று கூறி, உறுப்பினர் களிடம் கட்டணப் பணத்தைத் திருப்பித் தந்தேன். அப்படித் தரப் பட்டது இருபத்தைந்து ரூபாய்தான். மிச்சமுள்ள உறுப்பினர்கள், ''சம்மேளனத்தைக் கலைத்து விடுவது பற்றிக் கவலையில்லை. கட்டணம் உன்னிடமே இருக்கட்டும்" என்றனர்.

அன்று மாலையே, 'தமிழ் மாணவர் மன்றம்' என்ற ஓர் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. என்னிடம் எழுபத்து ஐந்து ரூபாய் இருந்த தல்லவா? அந்த ரூபாய்க்குரியவர்களையெல்லாம் அந்த மன்றத்தில் உறுப்பினராக்கிக் கொண்டேன். அதே சமயத்தில் சேலத்தில் வெங்கட் ராமன் என்பவர் துவங்கிய 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற'த்தின் தொடர்பும் ஏற்பட்டு, திருவாரூர் மன்றமும் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் எனப் பெயர் பெற்றது. என்னை வலையில் வீழ்த்த எண்ணிய தோழர் பிறகு என் கண்ணில் படவே இல்லை! சம்மேளனத்தை மீண்டும்

தோற்றுவிக்க முயன்றும் முடியாமல் திரும்பி விட்டார். 1941-ம் ஆண்டுத் துவக்கத்தில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் ஆரம்ப விழா நடைபெற்றது. தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்களை நிறுவப் பணியாற்றினேம்

மன்றத்தின் ஆண்டு விழா 1942-ம் ஆண்டு மிகச் சிறப்பாகத் திருவாரூரில் கொண்டாடப்பட்டது.

"தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்,
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்" எனத் துவங்கி,
"கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்!
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை!"

என முழக்கமிடும் பாரதிதாசனின் பாட்டு அந்த விழாவுக்கென அவரால் வரையப்பட்டதுதான்! திருவாரூரில் ஆண்டு விழா நடைபெறுகிறது. குடந்தையிலே தவமணிராசனும், கருணானந்தமும் நடத்திய திராவிடர் மாணவர் கழக மாநாடு துவங்குகிறது! அந்த மாநாட்டில் கலந்து கொண்ட அன்பழகன், மதியழகன் ஆகியோர் திருவாரூர் வந்து எழுச்சியுரை ஆற்றினர். விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலோர் வரவில்லை. அவர்களோ வரவேற்கப் புகை வண்டி நிலையத்திற்குப் போனபோதுதான் அவர்கள் வரவில்லையென்று தெரிந்தது. விழியிலே நீர் பெருக நின்றேன். நல்ல வேளை, அப்போது நான் அன்பழகன், மதியழகன் இருவரும் வந்து எனக்கு ஆறுதல் அளித்தனர்.

விழாவுக்கு ஒப்புக் கொண்டு, வராதவர்கள் வழிச் செலவுப் பணத்தையாவது திருப்பி அனுப்பக் கூடாதா? அதுவுமில்லை. வந்தவர்களையும், புதிதாகத் திடீரென்று வருவிக்கப்பட்டவர்களையும் வழியனுப்பக் கையிலே பணமில்லை! நேரமோ ஓடுகிறது. என் கவலையும், விழாவிலே இல்லை! நன்கொடைக்குக் கையெழுத்துப் போட்டவர்களிடம் ஓடினேன்; ஒரு வாரம் பத்து நாள் என்று அவர்கள் தவணை கூறி விட்டார்கள்! யோசித்தேன்! வழி தெரியவில்லை! சரி, திருடத்தான் வேண்டுமென்றத் தீர்மானத்திற்கு வந்து விட்டேன்.

என் தாயாருக்கு ஒரே பிடிவாதம்; என் கையிலே ஒரு தங்கச் சங்கிலி போடவேண்டுமென்று! எனக்கோ அதைப் போட்டுக்கொள்ள வெட்கம். ஐந்தாம் வகுப்பு. ஆரும் வகுப்புப் படிக்கும் வரையில் உயர் நிலைப் பள்ளிக்குக்கூடச் சடைப் பின்னிப் போட்டுக் கொண்டு போவதுண்டு. ஆனால், இப்போது சங்கிலியொன்றைக் கையில் மாட்டிக் கொள்ளச் சங்கடமாக இருந்தது. அம்மா கல்லு குளிரப் பார்க்க வேண்டுமென்கிறார்களே! அதற்காக அந்தச் சங்கிலியைப் போட்டுக்

கொண்டிருந்தேன். அதில் ஒரு வகையம் ஒடிந்து பழுது பார்க்கக் கொடுக்க வேண்டுமென்பதற்காக அம்மாவின் பெட்டியில் வைத்திருந்தார்கள். அந்த நினைவு எனக்கு வந்தது. வீட்டுக்குள் நுழைந்தேன். அம்மா கொல்லைப்புறத்துக் கிணற்றோரத்தில் ஏதோ வேலையாக இருந்தார்கள். தந்தை நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார். தாழ்வாரத்தில் பூனைபோல் அறைக்குள் நுழைந்தேன். பெட்டி எங்கே இருக்கிறது என்று தேடினேன்.

அய்யோ ; அந்த நேரம் என் இதயம் துடித்த துடிப்பை இப்போதும் நினைத்துப் பார்க்க முடிகிறது. 'திருடுவதா?' கேள்வி எழுந்தது. 'வேறென்ன செய்வது? வந்திருக்கும் சொற்பொழிவாளர்களை எப்படி ஊருக்கு அனுப்புவது?' பதிலும் பிறந்தது. தங்கச் சங்கிலியைக் காணாமல் அம்மா என்ன பாடுபடுவார்கள்?' ''நாமென்ன, போனால் போகிறது; வேறொரு சங்கிலி செய்து கொள்ளலாம் என நினைக்கிற அளவுக்கு வசதி படைத்த குடும்பமா?" இப்படி நெஞ்சிலே வினைக்கள் வேலைனத் தைத்தன. பெட்டியிருக்குமிடத்தை அணுகினேன்.

என்ன ஆச்சரியம்! எனக்காகவே அந்தப் பெட்டி திறந்திருந்தது! அதுமட்டுமல்ல; அந்தப் பொன் சங்கிலியும் முட்டையிலிருந்து வந்த பாம்புக் குட்டிபோல் வளைந்து கிடந்தது. கை நடுங்கிற்று. தொண்டை காய்ந்து விட்டது. கண் கலங்கியது. வேறு வழியில்லை. திருடி விட்டேன். வெகு வேகமாக வீட்டைவிட்டு வெளியேறினேன். தோழன் தென்னனை அழைத்துக் கொண்டு திருவாரூர் செட்டியார் பாங்குக்குப் போனேன். ஐம்பது ரூபாய்க்கு ஈடு வைத்துப் பணம் வாங்கினேன், சொற் பொழிவாளர்களைத் தாராளமாக ஊருக்கு அனுப்பி வைத்தேன். பெருமூச்சு விட்டபடி வீடு திரும்பினேன்.

வீட்டில் ஒரே ரகளை. அம்மா அங்குமிங்கும் பம்பரம்போல் சுற்றி அலைகிறார்கள். ''பெட்டியை ஏன் திறந்து போட்டாய்!" என்று தந்தை ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

''எந்தப் படுபாவிகள் எடுத்தார்களோ தெரியவில்லையே!" என்று அம்மா சாபம் கொடுக்கிறார்கள். அவர்கள் கண்களிலிருந்து உதிரும் நீர்த் துளிகளைப் பார்க்கிறேன். எனக்கும் அழுகை வருகிறது. ''என் வீட்டில் வந்து திருடினார்களே! அவர்கள் மண்ணைப் போக!" இப்படி அம்மாவின் நடுங்கும் குரல்கள் உச்சரிக்கின்றன. எனக்கு ஒரு தைரியம். உலகில் பிறந்த எல்லோரும் தான் மண்ணைப் போகப் போகிறோம் என்று! அது மட்டுமல்ல; மண்ணைப் போவதற்கு அம்மா ஒன்றும் காலம் குறிப்பிட்டுச் சாபம் தரவில்லை. அதிலே ஒரு திருப்தி. நானும் அவர்களோடு சேர்ந்து கொண்டு தேட ஆரம்பித்தேன் சங்கிலியை. செட்டியார் பாங்கில் போய்த் தேட வேண்டிய பொருளை வீட்டின் மூலை முடுக்குகளில் தேடினால் கிடைத்து விடுமா? மந்திரம், ஆருடம் எல்லாம் கேட்டும் பயனில்லை.

அந்த வீட்டை விட்டு வேறு வீட்டிற்கு நாங்கள் குடி போகிற வரையில் சுமார் இரண்டு மூன்று வருஷங்கள் என் தாயாருக்கு அந்த வீட்டில் சங்கிலி தேடுவதுதான் வேலை. கொல்லைப் பக்கம் போனால் குப்பைமேட்டைக் கிளறிப் பார்ப்பார்கள் தண்ணீர் தேங்கியிருக்கும் குழியில் கிண்டிப் பார்ப்பார்கள். இப்படி ஒரே வேலையாக இருந்தார்கள். ஐம்பது ரூபாய்க்கு ஈடு வைக்கப்பட்ட சங்கிலி வட்டி வளர்ந்து முழுகிப் போகிற நிலையில் அதை விற்றுக் கடனைக் கொடுத்து விட்டு மிச்சப்பட்ட நாலைந்து ரூபாய்க்கு நானும் நண்பர்களும் ஓட்டலில் சாப்பிட்டோம். சினிமா பார்த்தோம். சங்கிலியின் கதை அதோடு முடிந்தது. என் கையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து, ''எங்கய்யாவுக்கு வெறுங்கையா இருக்கே'' என்று அம்மா மனம் நொந்து கொள்வார்கள்.

நீண்ட காலத்திற்குப் பின் நான் உண்மையைச் சொன்னதும் அதைக் கேட்டு மகிழ்ச்சியும் அடைந்தார்கள், ''குறும்புக்காரப் பிள்ளை'' என்று. அவர்கள் நெஞ்சிலே எழும் பாராட்டு முகத்தின் மூலம் வெளிப்பட்டது. அதையும் உணர்ந்தேன். ஆனால் அப்போது சொல்ல முடியுமா? முடியவில்லை. இப்படித் தாயின் மனம் நோகுமாறு ஒரு முறையும், அடுத்து என் அருமை மனைவியின் மனம் நோகுமாறு ஒரு முறையும் நான் திருடியிருக்கிறேன்.

மாணவர் மன்றத்தின் சார்பாக நடைபெற்ற பொதுக் கூட்ட மொன்றுக்குத் தோழர் சனுர்த்தனத்தை அழைத்திருந்தேன். வந்து விட்டார். வருவதற்குச் செலவுக்கு அனுப்பி விட்டேன். போவதற்கு என்ன செய்வது? கூட்டம் ஏற்பாடு செய்யச் சொன்னவர்கள், கூட்டத்தில் மேடையேறித் தங்கள் தங்கள் பிரதாபங்களைக் காட்டிக் கொண்டவர்கள் எல்லாரும் தங்கள் வீடுகளுக்குப் போய் விட்டார்கள். எப்படியாவது பணம் வசூலித்துத் தோழரை அனுப்பி விடலாமென்று நினைத்து அவரை ஒரு நாள் தங்குமாறு கேட்டுக் கொண்டேன். அவரும் தங்கியிருந்தார். மறுநாள் மாலைவரையில் யாரும் சிக்கவில்லை, வீட்டுக்குச் சென்றேன். என் திருமணத்தின் போது என் மனைவிக்குப் பரிசாகத் தரப்பட்ட சந்தனக் கிண்ணம் ஒன்று இருந்தது; அதில் என் துணைவியாரின் மஞ்சள், குங்குமம் எல்லாம் இருக்கும், அந்தக் கிண்ணத்தை எடுத்து ஒளித்தவாறு வெளியேறினேன். ஜெயசீலன் என்ற உறவினர் ஒருவர்; அவரிடம் கொடுத்து அந்தக் கிண்ணத்தின் மீது பத்து ரூபாய் கடன் வாங்கி வருமாறு கெஞ்சினேன். அவர் தடுத்தார். நான் விடவில்லை; பிறகு உடன் பட்டார்.

பணம் வாங்கி வந்தார். பொதுக் கூட்ட விவகாரம் முடிவுற்றது. சந்தனக் கிண்ணத்தைத் தொலைத்து விட்டாள் என்று என் மனைவியை எல்லாரும் குறை கூறினர்கள். திட்டினர்கள். அவளால் பாவம் அழ முடிந்ததே தவிரப் பதில் சொல்ல முடியவில்லை. நானும் உண்மையை வெளியிடவில்லை. என் மனைவி படும் வேதனையைக் கண்டு மனத்துக்குள் அழுது கொள்வேன்!

10

கலகக்கார நாரதர் புகுந்தார்.

'சே சே'. எவ்வளவு கொடியவனாக நான் இருந்திருக்கிறேன். இல்லா விட்டால் என் துணைவி சாவதற்குள்ளாவது அந்த உண்மையை நான் அவளிடம் சொல்லியிருக்கலாமே!

தன் தவற்றினாலேயே அந்த அழகான் சந்தனக் கிண்ணம் காணாமற் போய் விட்டதாக அவள் எண்ணியிருந்தாள். என் துணைவி மறைந்த பிறகுதான் சந்தனக் கிண்ணத்தின் நினைவு என்னைத் துளைத்தெடுத்தது. அந்தக் கிண்ணத்தை மீட்டு விடலாமென்று, நினைந்து முயன்றேன். கடன் பட்டது பத்து ரூபாய்தான். ''நூறு ரூபாய் தருகிறேன். அந்தக் கிண்ணம் திரும்ப வேண்டும்'' என்று கேட்டேன். என் அருமை மனைவி பத்மாவின் நினைவாக அந்தச் சந்தனக் கிண்ணம் வீட்டில் ஒளி விடட்டும்-என்று ஏங்கினேன். ஈடு வாங்கியவர்கள் அதை உருக்கி விட்டார்களாம். ஐயோ, அவர்கள் அந்த வெள்ளிக் கிண்ணத்தையா உருக்கினார்கள்? இல்லை, இல்லை; என் உள்ளத்தையல்லவா நெருப்பில் போட்டு உருக்கி விட்டார்கள்!

பள்ளி வாழ்க்கையிலே என்னைப் போல ஒரு மாணவன் தீவிர அரசியல்வாதியாகி விட்டால் அவன் தேர்வுகளில் எந்த முடிவை எய்துவான் என்பதை விளக்கவும் வேண்டுமோ! மூன்று முறை பள்ளி இறுதி வகுப்பில் தோல்வியுற்றேன். அதற்கடுத்த முறை இல்லாத காரணத்தால்; 'அப்பாடா! விட்டது தொல்லை' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டேன்.

மூன்றாவது முறை தேர்வில் வெற்றி பெற்று விட்டதாக என் பெற்றோர்களிடம் கூறி ஒன்றிரண்டு வருடங்கள் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்தேன் என்றால் என் திறமையை எண்ணிப் பாருங்களேன். நான் அதைத் திறமையென்றுதான் அப்போது எண்ணியிருந்தேன். வாய் வயிற்றைக் கட்டிச் சேர்த்து வைத்த காசுகளை எவ்வளவு அக்கிரமமாக வீணாக்கியிருக்கிறேன் என்பதைப் பிறகு உணர்ந்து அதற்காக அழாமல் இல்லை நான்; முதல் தடவை தேர்வில் தோல்வி ஏற்பட்டதும், ''பரவாயில்லை அடுத்த தடவை வெற்றி பெற்று விடலாம்'' என்று வீட்டார் சமாதானம் கூறி மீண்டும் படிக்கச் சொன்னார்கள். எப்படியும் தேறி விட வேண்டும் என்பதற்காக அவர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல; ஒவ்வொரு நாளும் இரவு பன்னிரண்டு மணி வரையில் படிப்பேன். ஆகா, பிள்ளைக்குப் படிப்பில் எவ்வளவு அக்கறை வந்து விட்டது; இந்தத் தடவை

கட்டாயம் வெற்றிதான்'' என்று வீட்டார் பேசிப் பேசி மகிழ்த் தார்கள்.

நான் 'குடியரசுப் பதிப்பக' வெளியீடுகளைப் படித்துக் கொண்டிருக் கிறேன் என்ற உண்மை அவர்களுக்கு எப்படித் தெரியும்? ''அய்யோ பாவம், இப்படிக் கண்விழித்துப் படித்தால் உடம்பு எதற்கு ஆகும்!'' என்று பால்காய்ச்சித் தருவார்கள். நெய்யை உருக்கித் தொண்டை யிலே ஊற்றுவார்கள். நானே என்னையறியாமல் அவர்கள் உள்ளத்தை உருக்கிக் கொண்டிருந்தேன். அரை வருடப் பரீட்சை வந்தது. முதல் நாள் எழுதினேன். மறுநாள் நாகையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு வரவேற்புக் கூட்டம் என்று செய்தி வந்தது. பள்ளிக் கூடம் செல்வதாக வீட்டில் விடை பெற்றுக்கொண்டு நானும் தென்ன னும் நாகைக்கு ரயில் ஏறினோம். அரை வருடப் பரீட்சை, நான் வரவில்லை என்று காத்திருக்குமா, என்ன? அது நடந்து முடிந்தது. பிறகு எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்த இரண்டாவது போர்க் களத்திற்குப் புறப்பட்டேன். கட்டாயம் வெற்றி பெற்று விடுவேன் என்று வீட்டில் கூறினேன். நான்கூட ஓரளவு நம்பினேன்.

விடுமுறையைக் கழிக்க எண்ணித் திருக்குவளைக்கு அனைவரும் சென்றோம். நான் என் சொந்த ஊருக்குச் சென்றதும், ''இந்த வருடம் பாஸாகி விடுவாயா?'' என்ற கேள்வியைக் கேட்காதவர்கள் யாருமே இல்லை. கேட்டவர்களுக்கெல்லாம் நானும் என் வீட்டாரும் வெற்றிச் சேதியே கூறி வந்தோம்! விடுமுறை நாட்களை உற்சாகமாகக் கழித்துக்கொண்டிருந்தபோது திடீரென்று ஒருநாள் எனக்கு ஒரு இந்திராணி கிடைத்தாள். இந்திராணி கிடைத்ததும் நானும் இந்திரனாக மாறாமல் என்ன செய்வது?

கிராமத்தில் நான் படித்த பள்ளிக்கூடத்தில்தான் அந்தப் பாவையுடன் ஒரு நாள் கொஞ்சு மொழி பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது எனக்கு. எதிர்பாராமல் கிடைத்த அந்த வாய்ப்பினை இப்போது எண்ணிப் பார்த்தாலும் நெஞ்சு இனிக்கத்தான் செய்கிறது. ''நாமிரு வரும் இந்தத் தேரட்டத்தில் நாள்தோறும் ஆடிப் பாடி அகமகிழ்ந்திருப் போம். என்ன சொல்கிறீர்கள்!'' என்று அவள் கேட்டாள். ''கரும்பு வேண்டாமென்று கூறுவேனா. கண்மணி?'' என்று பதில் சொல்லி அவளைத் தழுவிக்கொண்டேன். எங்களின் இன்ப மயமான காதல் கட்டத்தில் ஒரு கலகக்காரர் புகுந்தார். ''நிலைமை தெரியாமல் நடந்து கொள்கிறாய்!'' என்று என்னை எச்சரித்தார். எனக்கும் அவருக்கும் பேச்சு முற்றி விட்டது. கடைசியில அவரே வெற்றி பெற்றார். நான் இந்திராணியை விட்டு விட்டு ஓடினேன். ஓடிக்கொண்டே இருந்தேன். எங்கே? பூலோகத்துக்கு! எதற்காக? துருவன் தவம் செய்கிறானாம்!

அதுபற்றி விவரமறிய! கலகக்கார நாரதன் என்னை அழைத்துக் கொண்டு ஓடினான்.

பள்ளி மாணவர் சங்க ஆண்டு விழாவில் 'துருவன்' நாடகம். அதில் இந்திரனாக நடிக்க இருந்த பையனுக்கு நாடகத்தன்று திடீரெனக் கடுமையான காய்ச்சல்! வேறு வழியில்லை! பழைய மாணவனாகிய நான் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய நெருக்கடிக்கு ஆளானேன். இந்திரனுக்குரிய வசனங்களை நானே எழுதிக்கொண்டேன். வசனங்கள் எல்லாமே 'குடியரசு' வாடைதான்.

நாரதர் என்னைப் பார்த்து, "ஹே இந்திரா! பூலோகத்தில் ஒரே குழப்பம்! நீ இந்திராணியோடு கொட்டமடிக்கிறாய். இதுதான் உன் ராஜ்ய பரிபாலனத்துக்கு அழகோ!" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

உடனே இந்திரன், "ஆமாம், இதுதான் என் ராஜ்ய பரிபாலனத்தின் அழகு, இலக்கணம், எல்லாமே! நான் இந்திராணியோடு கொட்டமடிக்காமல் வேறு யாரோடு கொட்டம் அடிப்பேன்? அகல்யாவிடம் கொஞ்சியதற்குத்தான் உடம்பெல்லாம் கண்களாகிப் போகுமாறு சாபம் பெற்றுவிட்டேன். ஒரு கண் இரண்டு கண் இருக்கும் தேவர்களே காதல் வியாதியால் கஷ்டப்படும்போது ஆயிரங் கண்ணுடைய நான் என்ன செய்வேன்? ஏனய்யா நாரதரே! எனக்குத் தான் ஆயிரம் கண்கள்; காளிதேவியையும் ஆயிரங் கண்ணுடையாள் என்கிறார்களே- அவளுக்கும் என்னைப் போல் ஏதாவது சாபந்தானே?" என்று பதில் கூறுவான். இப்படியொரு புதுமையான இந்திர வேஷத்தைப் போட்டுக்கொண்டேன்.

அந்த நாடகத்தில் துருவனுடைய தம்பியாக நடித்த பால் நடிகன் யார் தெரியுமா? என் கண்களின் கருமணியாய் விளங்குகின்ற செல்வ மருமகன், முரசொலி மாறன்தான்! துருவனைப் பார்த்து, 'ஏய் துதுவா, நான் யார் தெரியுமா? எங்கப்பா மதியில் நீ உக்காதக் கூதாது!" என்று பேசிய மழலை மொழியை நான் இன்னும் மறக்கவில்லை. இப்போதும் சமயத்தில் நான் அதைச் சொல்லி வீட்டில் அவனைக் கேலி செய்யும்போது மணமகளைப் போல் நாணிக் கோணி ஓடிவிடுவான்!

துருவன் நாடகம் முடிந்து பதினைந்து நாள் கழித்து என் பள்ளித் தேர்வு முடிவு கிராமத்தை நோக்கி எட்டிப் பார்த்தது. காலையிலே தினசரிப் பத்திரிகையில் செய்தி வரப்போகிறது. முதல் நாள் மாலையிலேயே எனக்குச் செய்தி கிடைத்துவிட்டது. தோல்விதான் என்று! யாரிடமும் விஷயத்தைக் கூறவில்லை. இரவு சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதற்குத் திண்ணைக்குப் பாயை எடுத்துக்கொண்டு வந்தேன். "என்றைக்குமில்லாமல் இன்றைக்கென்ன திண்ணையில் படுக்கை?" என அம்மாவும் அப்பாவும் விசாரித்தார்கள். சமாளித்தேன். அப்பாவும்

என்னருகே துணைக்குப் படுத்துக்கொண்டார். "அய்யோ, இவ்வளவு அருமையாகப் பாதுகாக்கும் வீட்டாருக்கு எவ்வளவு கொடுமையான சேதி காலையில் காத்திருக்கிறது!" என்று நினைத்தேன். தலையணை கண்ணீரால் நனைந்து விட்டது.

தூக்கம் வரவில்லை தூங்குவது போல் படுத்திருந்தேன். ஒரே இருட்டு. இரவு 2 மணி இருக்கலாம். மெதுவாக எழுந்தேன். தந்தை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். பாயில் சிறிது நேரம் உட்கார்ந்து தந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். 'மினுக் மினுக்' என்று எரிந்துகொண்டிருந்த சிறிய விளக்கை ஊதி அணைத்தேன். தோல்விச் சேதியைக் கூறிவிட்டு எப்படி உயிரோடு இருப்பது? ஊரார் முகத்தில் எப்படி விழிப்பது? எனக்காக என் வீட்டார் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு நான் அளிக்கும் பதில் நியாயமானதுதானு? விடிந்ததும் பத்திரிகை வரும். என் தேர்வு எண்ணைத் தேடித் தேடிப் பார்ப்பார்கள். இல்லையென்றதும் தேம்பி அழுது விடுவார்கள். அதைப் பார்த்துக்கொண்டு வெட்கமில்லாமல் நான் நிற்க வேண்டுமா? கேள்விகள் என்னைக் குடைந்தன! மயக்கம் வருவது போல் இருந்தது. குமுறல்! கொந்தளிப்பு!

தலை சுற்ற ஆரம்பித்தது. எதிரேயுள்ள திருக்குளம் தன் மெல்லிய அலைக் கரங்களால் கரையைத் தொட்டுத் தொட்டு மெதுவாக ஓசையை எழுப்பிக்கொண்டிருந்தது. ஆனால் என் உள்ளம் எழுப்பிய ஒலியோ கடல் அலையையும் மிஞ்சிய வண்ணம் இருந்தது. படுக்கையை விட்டு எழுந்தேன். நடக்க ஆரம்பித்தேன்.

எங்கே போவது என்ற தெளிவில்லை. நடந்துகொண்டேயிருக்கிறேன். என்னைச் சித்திரவதை செய்யும் குழப்பம் நான் நடப்பதை மாத்திரம் தடுக்கவில்லை. என் கண் எதிரே என் வீட்டார் ஒவ்வொருவராக வந்து நின்று, "நீ இந்தக் காரியம் செய்யலாமா?" என்று தழுதழுத்த குரலில் கேட்பது போல் இருக்கிறது. என்னையும் மீறி என் கண்கள் குளமாகின்றன. எதிர்பார்த்த தோல்விதான் எனக்குக் கிடைத்தது, ஆனாலும், ஓர் ஆசை, தப்பித் தவறித் தேறிவிட மாட்டோமா என்று! இப்படி ஆசைப்படுவது சகஜம்.

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு 'டெபாசிட்' பணம் திரும்பி வருவதே கஷ்டமாயிருக்கும். ஆனாலும் ஒரு துருப்பிடித்த நம்பிக்கை அவர்களைச் சுற்றிக்கொண்டு இல்லாத கனவுகளையெல்லாம் காணச் செய்யும்! அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை, இடிந்து தரை மட்டமான போது நான் கலங்கிப் போனேன். எதிர்பார்க்கப்பட்ட முடிவுக்கே இதயம் கனத்து விட்டதென்றால், எதிர்பாராத வகையில் ஏற்படும் திடீர் அதிர்ச்சிகளை எப்படித்தான் இளம் மாணவ இதயங்கள்

நாங்கிக்கொள்ளுமோ தெரியவில்லை! பரீட்சை முடிவுகளும், அவைகளைத் தொடர்ந்து மாணவர்களின் தற்கொலைச் செய்திகளும் வருவதையாரும் கவனிக்காமல் இல்லை. 'பரீட்சை முறையால் பல மாணவர்களின் வாழ்வு பாழாகிறது. ஆகவே அந்த முறையைச் சிறிது சிறிதாக மாற்றியாக வேண்டும், என்ற ஒரு கருத்துப் பொதுவாக நிலவி வருகிறது. ''பரீட்சையும் இல்லையென்று ஆகிவிட்டால் மாணவர்களின் கல்வித் தரம் அவர்களின் அலட்சியத்தால் வீணாகி விடக்கூடும்" என்று வாதிடுவோரும் உண்டு. இரண்டு வாதங்களும் முடிவடையாதவைதான். இரண்டுக்கும் இடையே பொதுவான ஒரு நிலை. கல்வி-தரம் குலையாத வகையில் உருவாக்கப்பட்டேயாக வேண்டும். கல்வியில் நல்ல பயிற்சி அளிக்க வேண்டும். அந்தப் பயிற்சியினைப் படிப்படியாகப் பெறும் வேலையில் மாணவன் ஈடுபடுகிறான். பயிற்சி முடிந்த பிறகு அவன் தகுதி, திறமைகளுக் கேற்றவாறு அலுவல்களை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்படுவதே சாலச் சிறந்த முறையாகும். தகுதி, திறமை, ஆராய்ச்சி, கல்வி பயிலும் காலத்திலேயே ஏற்படுமேயானால் அது அவன் கல்வி வளர்ச்சிக்குப் போடப்படும் தடையேயாகும். பரீட்சையில் நன்கு தேறியவர்கள் எல்லாம் அலுவல்களில் தலைசிறந்து விளங்குகிறார்களா? குறைபாடின்றியாவது வேலைகளில் திறமையைக் காட்டுகிறார்களா?

ஆகவே பரீட்சையில் தேறியவர்களையெல்லாம் திறமைசாலிகள் என்று கூறிவிட முடியாது. தேறுதவர்கள் திறமையற்றவர்கள் என்றும் கருதி விடக்கூடாது. என்னைப் பொறுத்தவரையில், பள்ளி இறுதி வகுப்பில் பரீட்சை குறுக்கிட்டு முட்டுக்கட்டை போடாமல் இருந்தால் நான் கல்லூரியில் நுழைந்திருக்க முடியும். சரியாகவோ தவருகவோ என்னிடம் ஏதோ ஆற்றல் இருக்கிறது என்கிறார்களே; அந்த ஆற்றல் கல்லூரிப் படிப்பால் இன்னும் மெருகேறியும் இருக்கக்கூடும். நான் கல்லூரிக்கே தகுதியில்லை என்றல்லவா தடை விதிக்கப்பட்டுவிட்டது.

11

நண்பன் நடித்த நாடகம்

நானவது சரியாகப் படிக்கவில்லை. அரசியலில் ஈடுபட்டுப் பரீட்சையில் தோல்வி கண்டேன். ஒரு மார்க் இரண்டு மார்க் குறைவினால் என்போன்ற நிலைக்கு ஆளான மாணவர்கள் எத்தனை பேர்? அவர்களுடைய கதியெல்லாம் என்ன?

இந்தக் கேள்விகள் அன்றிரவு மின்னல் கீற்றுப்போல் என் நெஞ்சத்தில் தோன்றித் தோன்றி மறைந்தன. ஏதேதோ நினைத்தவாறு நடந்துகொண்டிருந்த நான் நின்றேன். திரும்பிப் பார்த்தேன். ஏழு மைற் கற்களைத் தாண்டி வந்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டேன். எதிரே நோக்கினேன். திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையம் என் கண்ணில் பட்டது.

பொழுதும் அதிகமாக விடிந்துவிட்டது. நடந்த களைப்பு; பசியுடன் சேர்ந்து கண்களைச் சுற்றியது. பாசி பிடித்த குளமொன்று இருந்தது. அதில் இறங்கி அங்குள்ள கருங்கல்லில் ஒரு சிறு செங்கல்லைத் தேய்த்து அந்தத் தூளையெடுத்துப் பல் துலக்கிக்கொண்டேன். அருகில் ஒரு சிற்றுண்டிச்சாலை. அங்கே நுழைந்தேன். அப்போதுதான் என் பையில் எவ்வளவு காசு இருக்கிறது என்று ஞாபகம் வந்தது. பையைத் தடவிப் பார்த்தேன். அணாக் கணக்கில்தான் இருந்தது. அதனால் கணக்கிட்டுக் கொண்டுதான் சாப்பிட வேண்டும் என எண்ணி இட்லி தோசை விலைகளைக் கேட்டு இரண்டே இரண்டு இட்லி மட்டும் தின்றுவிட்டு காப்பி சாப்பிடும் வழக்கமில்லையெனக் கூறிவிட்டுப் புகைவண்டி நிலையத்தை நோக்கிச் சென்றேன். நான் போவதற்கும் திருத்துறைப் பூண்டி செல்லும் வண்டி வருவதற்கும் சரியாக இருந்தது. தோப்புத் துறைக்கு ஒரு டிக்கெட் எடுத்துக்கொண்டு ஏறி உட்கார்ந்தேன்.

அசன் அப்துல் காதர் என்று ஒரு நண்பர் என்னுடன் நான்காம் படிவத்தில் ஒன்றாகப் படித்தார். அசன் அப்துல் காதர் என்று இப்போது நினைத்தாலும் ஒடிந்து விழுவதுபோன்ற ஒரு மெலிந்த உருவம் தன் பெரிய விழிகளில் குளிர்ச்சியைக்கொட்டிக் கொண்டு சிரித்த முகத்தோடு தாவிப்பாய்ந்து என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு அன்பைச் சொரிவது போலவே இருக்கும்.

தோப்புத்துறையில் திடீரென்று அவர் வீட்டு வாயிலில் நான் போய் நின்றதும், சிறு குழந்தைபோல ஆவல் மிகுதியால், ''கருணாநிதி!'' என்று கத்திவிட்டார். எடுத்த எடுப்பிலேயே அவரிடம் விஷயம் எதுவும் சொல்லவில்லை.

அடுத்த நாள் அவரே புரிந்துகொண்டார். ''வேண்டுமென்றே உங்களைப் பழிவாங்கி விட்டார்கள் தோழர்!'' என்று அவர் எனக்கு ஆறுதல் கூறினார். தோப்புத்துறையின் எழில்மிக்க இயற்கைக் காட்சிகளும் பல தோழர்களின் வீடுகளில் நடைபெற்ற விருந்துகளும் என் கவலைகளைச் சிறிது நீக்கிடத் துணை செய்தன. அங்கிருந்தவாறே தென்னனுக்கு ஒரு கடிதம் எழுதினேன்—''நான் இங்குதான் இருக்கிறேன். இதை என் வீட்டாருக்குத் தெரிவித்து அவர்களைக் கவலைப்படாமல் இருக்கச்செய்க'' என்று. அதை நான் எழுதாமல் இருந்தால் தினசரிப் பத்திரிகைகளில், ''கண்மணி கருணாநிதி! பரீட்சை முடிவைப் பற்றிக் கவலைப்படாதே! அதற்காக நாங்கள் கோபிக்கவில்லை. நீ உடனே எங்கிருந்தாலும் வந்து சேரவும். இப்படிக்கு உன் தாயும் தந்தையும்!'' என்று விளம்பரம் வெளிவந்திருக்கும்.

என் கடிதத்தை எடுத்துக்கொண்டு தென்னன் திருக்குவளை போயிருக்கிறான். அழுது அழுது வீங்கிக்கிடந்த என் வீட்டாரைப் பார்த்திருக்கிறான். ''பிள்ளையைப் போய் உடனே அழைத்து வா!'' என்று வழிச் செலவுக்குக் கொடுத்து அவனையும் தோப்புத்துறைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். சுற்றிப் பார்க்கப் பணமும் கிடைத்து விட்டது. பெற்றோர் கோபம் குறைந்துவிட்டது என்ற செய்தியும் மனத்துக்கு ஓர் ஆறுதலை அளித்துவிட்டது. எல்லோருமாகச் சேர்ந்து வேதாரண்யம், கோடிக்கரை முதலிய இடங்களுக்குப் புறப்பட்டோம். கோடிக்கரைக் காட்டில் நுழைந்து, முடிந்த வரையில் அலைந்தோம்.

அந்தக் காட்டிலேயுள்ள ஒரு மேட்டில் நின்று கொண்டுதான் அந்தக் காலத்தில் ராமர் கடலை நோக்கினார். அப்போது அவர் வைத்த காலடிதான் இந்த இடம் என்று ''ராமர் பாதம்''. என்று ஒரு மண்டபத்தைக் காட்டினார்கள். கருங் கல்லால் இரண்டு பாதங்கள் செதுக்கப்பட்டிருந்தன. ''செந்தாமரைப் பாதங்கள் என்பார்களே ராமருக்கு! கருங்கல்லாயிருக்கிறதே?'' என்று கேட்டேன். அப்படிக் கேட்டது இன்னும் என் நினைவில் இருக்கிறது. பக்கத்தில் சிறிது தூரத்தில் ஒரு சிறிய கோயிலின் கர்ப்பக்கிரகம் இடிந்து கிடந்தது. இது ஏன் இடிந்தது என வினவியபோது, இடி விழுந்துவிட்டது என்று பதில் சொன்னார்கள். ''அந்தோ ஆண்டவனே!'' என்று என் ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டேன். எங்கள் சுற்றுப்பயணம் நடக்கும்போதுதான் அப்பகுதியில் இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் அதிகாரி முகாம்

செய்திருந்தார். அந்த முகாமைக் கண்டதும் எனக்கோர் யோசனை தோன்றியது. தென்னனிடம் அந்த யோசனையை வெளியிட்டேன். அதில் வெற்றியும் பெற்றேன்.

''கருணாநிதியைத் தேடிக்கொண்டு நான் தோப்புத்துறைக்குப் போனேன். அதற்குள், அவன் அங்கு முகாம் செய்திருந்த ராணுவத்தில் சேரத் தன் பெயரைக் கொடுத்துவிட்டான். எவ்வளவோ சொன்னேன் கேட்கவில்லை. 'யுத்த களத்தில் போய்ச் சாகிறேன். திரும்பிவந்து என் தாய் தந்தையாரைப் பார்க்க மாட்டேன்' என உறுதியாகக் கூறி விட்டான். 'உனக்கு இராணுவத்தில் பணி புரிய உடம்பில் தெம்பிருக் கிறதா?' என்று கேட்டேன். 'இதோ பார்! என்னைவிட மோசமானவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று பதினைந்து நோஞ்சான் குமாஸ்தாக் களைக் காட்டினான். திடகாத்திரம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இராணுவத்தில் மற்ற வேலைகளுக்கும் ஆள் எடுக்கிறார்கள் எனக் கேள்விப் பட்டுப் பயந்துபோனேன் பிறகு ஏழெட்டு நண்பர்களை விட்டுக் கருணாநிதி மனத்தை மாற்றச் செய்து திரும்ப அழைத்து வந்திருக்கிறேன்!''

இப்படி ஒரு கற்பனைக் கதையை என் வீட்டாரிடம் தென்னன் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்தினேன். வற்புறுத்துவதென்ன? இதைவிட மேலான பொய்களையெல்லாம் திறமையாகச் சொல்லக் கூடிய ஆற்றல் பெற்ற என் அருமை நண்பன், வீட்டாரிடம் அழகாக நடித்துக் காட்டிவிட்டான். உடனே தாய் தந்தை. அக்கரள்கள் எல்லாரும் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டார்கள்!

''போகாதே! போகாதே என் மகனே! போருக்குப் போகாதே என் மகனே!'' என்று பாடவில்லை; அவ்வளவுதான்!

12

இளம் எழுத்தாளர்

பேரறிஞர் அண்ணு கூறிய அறிவுரை எனக்கு நினைவு வருகிறது. இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்த வேண்டுவது பெரும் எழுத்தாளர்களின் கடமையென்று அகிலமெங்கும் வற்புறுத்தப்படு கிறது. இதனை வற்புறுத்துகிறவர்களில் பெரும்பாலும் இளம் எழுத்தாளர்களேதான்! இவன் எங்கே வளர்ந்து விடுவானோ என்று பெரிய எழுத்தாளர்கள் பயந்து புது எழுத்தாளர்களை முளையிலேயே தடுத்து விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் சில மூலைகளிலிருந்து பலமாக எழுகிறது. மற்றும் சில பேர் பெற்ற எழுத்தாளர்கள் வளரும் பிறைகளான எழுத்தோவியர்களை இருட்டுக்குள் மூடி வைத்துக் கொண்டு அவர்களின் உழைப்பையும் அறிவையும் தங்கள் பெயர் ஒளிபெற மெருகாக்கிக்கொள்கிறார்கள் என்றும் சில பல திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளில் அறவே உண்மையில்லையென்றும் கூறிவிட முடியாது. ஆனால் அண்ணு அவர்கள், 'எழுதாதே!' என்று எனக் குக் கட்டளையிட்டது இளம் எழுத்தாளர்களை அரும்பிலேயே கருக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. அவர் தாய் மையின் உறைவிடமாயிற்றே! நல்லெண்ணப் பூங்காவன்றோ அவர் உள்ளம்! நான் ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்பது அவர் ஆசை. மாணவர்கள் அரசியலில் முழு மூச்சுடன் ஈடுபடுவது அவருக்குப் பிடிக்காத ஒன்று. ஆகவேதான் அவர் என்னிடம், "நன்றாகப் படி! படித்து முடித்த பிறகு கட்சியில் தீவிரமாக ஈடுபடலாம்" என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்

இளம் எழுத்தாளன்-பெரும் எழுத்தாளர் இருவரிடையே நிகழ்ந்த உரையாடல் அல்ல இது. அண்ணன் தம்பி இருவரிடையே எழுந்த பாச உணர்ச்சியின் எதிரொலி! மறக்க முடியாத பசுமை குலையாத முதல் சந்திப்பு! எப்போது நினைத்துக்கொண்டாலும் இதயத்தில் விவரிக்க முடியாத ஓர் இன்ப ஊற்று! இளம் எழுத்தாளருக்கு ஊக்கம் தரவேண்டியது இன்றியமையாததுதான். அவர்களின் திறமைக்குத் திரையிட்டுவிட்டு அவர்கள் உழைப்பிலே புகழ் பெறுகிறவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். ஆனால் யார் இளம் எழுத்தாளர் கள்? என்னைப்போல பள்ளி வாழ்க்கையில் படிப்பைக் கெடுத்துச்

கொள்கிற அளவுக்கு அரசியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு அலைந்து திரிபவர்களா? அப்படிப்பட்டவர்களையாவது மன்னித்து விடலாம். இன்னும் ஒரு கூட்டம் இளம் எழுத்தாளர்கள் என்ற பெயரில் உலவிக் கொண்டிருக்கிறதே! அந்தக் கூட்டத்தைத் தழைக்க விடலாமா? ஒரு சில எழுத்தாளர் வாழ்வு வளமாக இருக்கிறது என்பதைக் கண்டு, 'சுலபமாக வளம் பெறும் துறை எழுத்துத் துறைதான்' எனக் கருதி, ''கதை வாங்கலியோ கதை!'' எனக் கூவிக்கொண்டு திரிகிற இளம் எழுத்தாளர்களைப் பார்த்தால் எவ்வளவு வேதனையாக இருக்கிறது?

முதல் பக்கத்திலேயே தமிழ்த் தாயின் மூக்கைப் பிடித்து அவளை மூச்சுத் திணறச் செய்து, இரண்டாம் பக்கத்தில் அவள் இருதயத்தைப் பிரண்டி, மூன்றும் பக்கத்திற்குள் அவள் மூச்சை எடுத்துவிடுகிற மொழிக் கொலையை மிகச் சாதாரணமாகச் செய்கிற இளம் எழுத்தாளர்கள் பலரை நாள்தோறும் சந்திக்கிறேன். மொழியின் அரிச்சுவடி தெரியாதவர்கள் எல்லாம் எழுதி வருகிறார்கள் என்றால், எழுத்தை எவ்வளவு இழிவாகக் கருதிவிட்டார்கள்! திரைப்பட நிலையங்கள், நடிகர்களின் வீடுகள்-எழுத்தாளர் இல்லங்கள்-புத்தகப் பண்ணைகள், இவைகளின் வாயிற் புறங்களில் ஒரு பையிலே ஐந்தாறு கதைகளைப் போட்டுக் கொண்டு, அதை யாராவது வாங்கிக்கொள்வார்கள், ஆயிரம் பதினாயிரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நின்றுகொண்டிருக்கும் எழுத்தாளர்கள்மீது எவ்வாறு இரக்கம் ஏற்படும்?

போனால் போகிறதென்று ஒருநாள் கற்றையை வாங்கிப் புரட்டிப் பார்த்தால்-அம்மாவோ! சொல்லுந் தரமன்று அந்தச் சோகக் கதை! ஒரு கதையின் தலைப்பு, 'ரத்தக் குலம்பு', இன்னொரு கதைக்குப் பெயர் 'மகாராணி', மற்றொன்றின் மகுடம் 'யேழையின் தளி', புரியவில்லையே என்று கேட்டால் ஆசிரியர் விளக்கம் தருகிறார். ''ஏழையின் தாலி'' என்று. எங்கு சென்றாலும் இளந் தமிழ்க் கொலைஞர்களின் படையெடுப்பு! அவர்களில் சிலரோடு பேசும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அண்ணாவை நான் முதலில் பார்த்த நிகழ்ச்சியையும்

அப்போது அவர் எனக்குத் தந்த அறிவுரையையும் எடுத்துக் கூறுவேன். என் எழுத்துக்களுக்கு மதிப்பு ஏற்பட எத்தனை ஆண்டு காலம் பிடித்தது என்பதையும், என் எழுத்துக்கள் பண்படவும், வளம் பெறவும் எவ்வளவு நாட்கள் ஆயின என்பதையும் சான்றுகளோடு குறிப்பிடுவேன்.

இன்று தென்னகத்துப் பெருமக்களால் ஆர்வமுடன் ஆதரிக்கப் படுகிற 'முரசொலி' ஏடு, முன் திருவாரூரில் துண்டு வெளியீடாக வெளியிடப்பட்டது. திங்கள்தோறும் ஆயிரக்கணக்கிலே அச்சிடப்பட்டு ஊர்தோறுமுள்ள திராவிட இயக்கக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கிளைக் கழகத்தினர் திரட்டித் தரும் நன்கொடைகளினால் 'முரசொலி' துண்டு அறிக்கை வெளியிட்டுக் கழகம் வளர்ந்தது. அதன் நிரந்தர எழுத்தாளன் நான்தான். கழகச் செயலாளர் தென்னன், பொருளாளர் டி. எஸ். கோபால். 'சேரன்' என்பது என் புனை பெயர். அந்தப் பெயரில் நான் வளர்த்துக்கொண்டேன் எழுத்துக் கலையை— அதற்கென நான் பட்ட சிரமங்களோ என்னைச் சந்திக்கும் அவசர எழுத்தாளர்களிடம் நான் சொல்லாமல் இருந்ததில்லை.

13

''எடுக்கவோ, கோக்கவோ?''

''ஐயா! இப்போதுதான் என் எழுத்துக்கு இவ்வளவு செல்வாக்கு. நான் எழுத ஆரம்பித்துப் பல வருடங்கள் ஆகின்றன. என் முதல் புத்தகம் 'கிழவன் கனவு'. அதன் விலை மூன்றணா தான். முரசொலி துண்டு அறிக்கைகளைநாங்கள் அச்சியற்றி, இனாமாக வழங்கி கொள்கை களையும் கூறி, அத்துடன் என்னை எழுத்தாளனாகவும் அறிமுகப்படுத்திக் கொண்டேன். என்னைப் போன்று கஷ்டப்பட்டு முன்னேறியவர்கள் தான் இன்று பல திறமை பெற்ற எழுத்தாளர்கள். நீர், திடீரென உச்சிக்கு வந்து விட வேண்டுமென்று ஆசைப்படுகிறீரே நியாயமா?'' என்று என்னைச் சந்திக்கும் அவசர எழுத்தாளர்களிடம் சற்றுக் கடுமை யாகக் கூட நான் பேசுவதுண்டு.

நான் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் முன்னேக்கி அடியெடுத்து வைத்தேன். இப்போது எண்ணிலும் எனக்கொரு மகிழ்ச்சியும் பெரு மையும் ஏற்படுகிறது; எழுத்தாளனாவதற்கு எத்தனை இன்னல்கள் ஏற்றிருக்கிறேம் என்று! அதுவும் சமுதாயத்தில் எதிர்நீச்சல் போடும் எழுத்தாளன்! இன்னும் பயங்கரம் என்னவென்றால் நான் பணியாற்றிய திராவிடர் கழகத்திலுள்ள குறைபாடுகளையும் குறிப்பிட்டு எழுதும் எழுத்தாளன்! இதோ, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய முரசொலி துண்டுத்தாள்! சிதம்பரத்தில் 'வருணசிரம மாநாடு' நடக்க இருந்தது. அதை வன்மையாகக் கண்டித்து வெளியிடப் பட்டது. 5-10-1944-ல் அச்சியற்றி வழங்கப்பட்ட முரசொலித் துண்டு அறிக்கை. அப்படியே தந்திருக்கிறேன். படித்துப் பாருங்கள்.

முரசொலி

தோற்றம்: ஈ.வே.ரா. ஆண்டு 67 முரசு; 2 - ஒலி: 7.

1944 புரட்டாசி 20-ம் நாள்.

எழுத்தாளன்: சேரன். செயலாளர்: தென்னன்.

வருணமா? மானமா?

தில்லையிலே! ஆம்! தீட்சிதர் கோட்டையிலே! தீனதயாபரன் கான முழக்கத்துடன் காலைத் தூக்கிக் காளியிடம் நடனம் செய்த கலைப்பதி யிலே புனிதர் மாநாடாம்! பூரி தட்சிணையாம்! புண்ணிய கூட்டமாம்! புல்லர்கள் உள்ளவரை நல்லது எது! தீண்டாமை ஒழிக' என



வேண்டா வெறுப்பாகக் காங்கிரஸ் கூறிடும் வேளையிலே சமதர்ம சங்க நாதம் சனுதனிகளின் காதைத் துளைக்குமளவு சுயமரியாதைக்காரர் களால் ஒலிக்கப்படும் நேரத்தில், 'உயர்வென்று கூறினுல் அது உண்மைத் தமிழர்கள் வாழ்வு' என்ப் பண்பாடி அகம் பிடித்த வாழ்வை அழிக்க அரிமாக்கள்புறப்பட்ட காலையிலே வருணுசிரம மாநாடு கூட்டுகிற வக்கிரங்கள் பல உள்ளன நாட்டிலே! வரப்போகும் கேட்டிலே கவனம் செலுத்த வேண்டும். வீட்டிலே உண்டு உருண்டு கிடக்கும் இந்த உயரிய கருத்தினர் கூடிப் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் எனப் பிரித்துப் பிழைக்கும் வழி வகுத்தனர். நான் கூறுவதல்ல! நாடறிந்த உண்மை! சரித்திரம் சாற்றும் சான்றுகளுடன்! மதப் பாத்திரத்திலே ஊற்றிக் கொடுத்த சூத்திர சுராபானம் மறதி தமிழர் வாழ்விலே மயக்கம் தரும் பொருளாயிற்று.

போதை தலைக்கேறிய திராவிடத் தோழன் விழித்தானின்று. வீரத்தை விற்ற படலத்தைக் கண்டு வெட்கினுன் துள்ளி. அதன் எதிரொலி சுயமரியாதை இயக்கம்! புது சகாப்தம் கண்ட தமிழன்! பெரியாரின் சகாப்தம் கண்ட தமிழன்! இத்தகைய தமிழன் வாழ்வில் மறுபடியும் வலை வீச்சா? என்று கேட்கத் துவங்கி விட்டான். பிள்ளை, முதலியார், ரெட்டியார், தேசிகர் போன்ற வால்களை ஒட்ட வைத்துக்கொள்வதே ஒய்யார வாழ்வின் உச்ச ஸ்தானம் எனக் கருதிடும் ஒரு சில முற்போக்கினர் உள்ள வரையில் நால்வகை வருணத்தைக் கண்டிக்க நமக்கும் சிறிது நாக் கூசுகிறது. முட்டாள் என்று சொல்வது எனக்குப் பொருந்தும். அதுவே எனக்கு சர் பட்டம் எனக்கூறிடும் காட்டாள்களிடம் நமக்கு வேலையில்லைதான்! ஆனுலும், இரங்கும் தன்மை இயற்கையாகவே ஏற்பட்டு விடுகிற தல்லவா? இளித்தவாயர்களை உண்டு பண்ணினுல்தான் களித்திருக்க வழி ஏற்படும் எனக் கண்டு மடிந்துபோன வருணுசிரம பிணத்தை மயக்கமென்று கூறித் தண்ணீர் தெளித்துக் கண்ணீர் பெருக்குகிறார்கள். அந்தக் காட்சிதான் அக்டோபர் 8, 9, 10 தேதிகளில் சிதம்பரத்தில் காட்டப்படப் போகிறது. பிணத்திற்கு மணக்கோலமிட்டு, மக்களிடம்

கூசு பறிக்கும் இந்த முயற்சிக்குத் தில்லியில் குழி வெடிடப்படும். அழுக்கைப் போக்கிக் கொள்ள அனைவரும் திரண்டு செல்வீர்! பகை வரைக் குறை கூறிப் பல்லவி பாடிட மட்டும் நேரமில்லை இப்பொழுது! விடுதலை விருத்முடன் விரைந்து செல்வீர் தில்லிக்கு!

பரணி பலபாடிப் பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமில்லாச் சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே மானங்காக்க
மறத்தமிழா! போராடு!
வருஞ்சிரமம் வீழ்க!

—இப்படித் துவங்கிய 'முரசொலிதான்' இன்று விடுதலைப் படை வீரர் ஏந்துகின்ற கருவிகளில் ஒன்றாக இருக்கிறது. இப்படித் எழுதத் துவங்கிய கருணாநிதிதான் நான்! நான் எழுத்தாளனான வரலாறு இளம் எழுத்தாளர்களுக்குத் தெரிய வேண்டாமா? அதனால்தான் இவ்வளவும் சொல்கிறேன்.

மேடைப் பேச்சுக்கு என்னைத் தயாராக்கிக் கொண்டது பள்ளிக்கூட சொற்போர் போட்டிகளின் முதல் பேச்சுப்பற்றி என்னால் எண்ணிப் பார்க்காமலிருக்க முடியவில்லை. முதன் முதலாக நான் மன்றத்தில் நின்று எழுப்பிய குரல் 'நட்பு' என்ற பொருள் பற்றித்தான்! அதில் பாரதத்தில் எல்லாம் மேற்கோள் காட்டிப் பேசினேன். கர்ணனும் துரியோதனனும் ஆருயிர் நண்பர்கள். ஒரு நாள் கர்ணனும் துரியன் மனைவியும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயம் துரியோதனன் அங்கு வருகிறான். துணைவன் வருவதைக் கண்ட துணைவி மரியாதை காட்டுவதற்காக ஆட்டத்தை விட்டு எழுகிறாள். துரியன் வருவதைக் கவனிக்காத் கர்ணன் அவள் ஆட்டத்திலிருந்து போய் விட எண்ணுகிறாளாக்கும் என்று கருதி, அவளது முத்தாரத்தை இழுக்கவே ஆரம் சிதறிக் கீழே கொட்டுகிறது. எந்தக் களங்கமும் இல்லாமல் சிரித்துக்கொண்டே துரியோதனன் நண்பனைத் தட்டிக் கொடுத்து, ''எடுக்கவோ கோக்கவோ?'' என்கிறான். சிந்திய முத்துக் களை எடுத்துக் கோக்கட்டுமா எனக் கேட்கிறான். நண்பனின் பெரு மனங் கண்டு கர்ணன் பூரித்துப் போகிறான். நண்பனுக்காகச் சோதரரைப் போர்க்களத்தில் சந்தித்து எதிர்த்து இறுதியில் உயிர் விடு கிறான். இந்த நிகழ்ச்சியை வில்லிப்புத்தூரார் பாரதத்திலிருந்து அழகாக எடுத்துச் சொல்லி மன்றத்தின் அமோக ஆதரவைப் பெற்றேன். அழகான தமிழில் தங்கு தடங்கலின்றிச் சொன்மாரி

பொழிந்ததாக ஆசிரியர்கள் கூட்டப் பாராட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் எப்படித் தெரியும், நான் மூன்று நாள் இரவும் பகலும் அந்தப் பேச்சை எழுதி மனப்பாடம் செய்து வீட்டிலேயுள்ள தூண்களிடம் பேசிக் காட்டினேன் என்கிற ரகசியம்! இப்போதல்லவா புரிகிறது! கர்ணனிடமும் துரியனிடமும் 'நட்பு' என்ற சிறந்த பொருள் இருந்தது—ஆனால் பிறன் மனைவியின் கழுத்திலுள்ள ஆரத்தைப் பற்றியிழுத்ததால் கர்ணனிடம் இழுக்கு மிகுந்த ஒரு பண்பும் இருந்தது என்பது!

நட்பு பற்றி நான் உணர்ச்சியோடு பேசுவதற்கு ஊக்கம் தரும் வகையில் — உள்ளக்கிளர்ச்சி ஏற்படுத்தும் தன்மையில் -- நெருங்கிய நண்பர்கள் பலர் இருந்தார்கள் எனக்கு! இந்த நீள் வையத்தில் நான் பெற்ற பெருஞ்செல்வமே நண்பர்கள்தான்! கோடி கோடியாகக் குவிந்து கிடக்கும் பொன் நாணயங்கள் அல்ல செல்வம், தேடித் தேடி அலைந்தாலும் கிடைக்க முடியாத திரவியமே உற்ற நண்பர்கள்தான்! அந்த வகையில் நான் மிகப் பெரும் பாக்கியசாலி! 'நகுதற் பொருட்டன்று நட்டல்' என்ற சூறளைக் கடைப்பிடித்து இடித்துரைத்த அறிவுரைகளும், 'உடுக்கையிழந்தவன் கைபோலாங்கே இடுக்கண் களையும்' நண்பர்களும் என் வாழ்க்கைக்குத் தக்க துணையாயினர். இன்று போல் அன்றும் நண்பர்கள் சூழவேயிருப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டேன். இவர்களுடைய தொடர்பால் இன்றைய அரசியல் விழிப்புக்கான 'துவஜாரோகணம்' நடைபெற்றது என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வேன்.

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் பெருமை பெற்ற நான், சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவராக இருந்திருக்கிறேன், 1939-ம் ஆண்டில்! இடம் ஓர் ஓலைக் குடிசை. வளர்ந்த இடம் ஒரு பாழடைந்த ஆஞ்சநேயர் கோவில்! உறுப்பினராகச் சேர்வதற்குக் கட்டணம் காலணு! சேர்ந்த பிறகு வாரந்தோறும் சந்தா ஒரு பைசா! சங்கத்தின் குறிக்கோள் அனைத்தும் ஒழுக்கம், சுகாதாரம் ஆகியவைகளின் அடிப்படையில் அமைந்தவைதான். பீடி, சிகரெட்டை யாரும் தொடக்கூடாது. தீய வார்த்தைகளைத் தவறியும் பேசக் கூடாது. நன்கு படிக்க வேண்டும். இவை போன்ற போதனைகள். வாரந்தோறும் சிறப்புக் கூட்டங்கள். அதில் தெருவிலே உள்ள ஒரு பெரியவர் வந்து அறிவுரை வழங்குவார். கூட்டத்திற்கு மக்கள் வரவேண்டுமே! அதற்காகக் கூட்ட முடிவில் 'சாக்லெட் வழங்கப்படும்' என்று அறிவிக்கப்படும் முன்னதாகவே! ஆரம்பத்திலேயே வழங்கி விட்டால் கூட்டத்திற்கு இருக்க மாட்டார்கள் அல்லவா! அதனால் முடிவில்தான் வழங்குவது.

என்ன சிரிக்கிறீர்கள்? சாக்லெட்டைக் காட்டிக் கூட்டம் சேர்த்தீர்கள் என்றுதானே கேலி செய்கிறீர்கள்?

பஜனை மடத்தில் தினந்தோறும் சுண்டல் கடலை விநியோகம் இல்லாவிட்டால் யாராவது அந்த மார்கழி மாதக் குளிரில் விடியற் காலையில் பனியில் நனைந்துகொண்டு பஜனை செய்ய முன் வருவார்களா என்று கேட்கிறேன்? பெரியவர்கள், பக்தசிரோன்மணிகள் பாடே அப்படியென்றால் இளைஞர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா என்ன? ஒரு முறை தம்பய்யா பிள்ளை என்றவொரு பிரமுகர் எங்கள் வாராந்திரச் சிறப்பு விழாவில் கலந்துகொண்டார். அவ்விழாவிற்கு வரவேற்புத் தட்டிகள் கூட அமைத்து ஆடம்பரமாகக் கொண்டாடினோம். அப்போதே பாருங்கள் அடுக்குத் தொடரை!

"தலைமை தாங்கும் தம்பையாவே வருக, வருக!"

எங்கள் சங்கத்திற்குப் போட்டியாக 'இளைஞர் சங்கம்' என ஒன்று தோன்றியது. இரண்டு சங்கங்களும் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளத் தொடங்கின. என் இணைபிரியா நண்பனுமிருந்து வாலிபப் பருவத்திலேயே சாவினைக் கொள்ள கொள்ளப்பட்ட தியாகராசன் தான் அந்தப் போட்டிச் சங்கத்தின் தலைவர்.

சிவப்பும் வெள்ளையும் கலந்த இரு வண்ணக் கொடி எங்கள் சங்கத்தின் கொடி. இளைஞர் சங்கமோ ஜனநாயகக் கட்சியின் கொடியான ஏர் கலப்பை உழவனைத் தன் கொடியாகக் கொண்டது! இரு பிரிவுகளும் மோதிக்கொண்டு பலாத்கார நடவடிக்கைகள் வரையிலே ஆரம்பமாயின.

ஒரு நாள் கிணற்றங்கரையிலே குளித்துக் கொண்டிருக்கும்போது ஒரு கல் என் தலையின்மீது விழுந்தது. சிறிய கல். காயம் விளைவிக்க வில்லை. அந்தக் கல்லில் ஒரு தாள் இணைத்துக் கட்டப் பட்டிருந்தது. எடுத்துப் படித்தேன். 'இளைஞர் சங்கத்துக்கும்-சிறுவர் சீர்திருத்தச் சங்கத்திற்கும் தேர்தல் நடத்தலாமா? இரு சங்கத் தலைவர்களில் யார் அதிக வோட்டு வாங்குகிறார்களோ அவர்கள் ஆணைக்கு மற்ற இளைஞர் கள் கட்டுப்படுவது என்று வைக்கலாமா?' என அதில் கேட்கப்பட்டிருந் தது! அந்த அறை கூவலை நாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

'வோட்டர் ஜாபிதா' தயாரிக்கப்பட்டு இரண்டு சங்கங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. நாங்களே புதிய வோட்டர்களை உண்டாக் கினோம். இப்போது உள்ளதுபோல் 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் வோட்டர்கள் என்ற சட்டம் எங்களிடமில்லை! பதினெட்டு வயதும் அதற்கு உட்பட்டவர்களுமே வோட்டர்கள் என்று தீர்மானித்தோம். அதன்படி எங்கள் தொகுதியில் சுமார் முன்னூறு வோட்டர்கள் பதிவு செய்யப்பட்டார்கள்.

இரு சாராரும் வோட்டுச் சேகரிக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டோம்.

தேர்தல் நாள் நெருங்கிக்கொண்டேயிருந்தது. நானும் எதிர்த் தரப்பில் நண்பர் தியாகராசனும் போட்டியிட்டோம். தேர்தல் பிரசாரம் திண்ணைக்குத் திண்ணை, கடைக்குக் கடை மும்முரமாக நடைபெற்றது

14

மாமனுர் தந்த வரவேற்பு

என்னுடைய சீர்திருத்தச் சங்கத்துக்கும் நண்பர் தியாகராச னின் இளைஞர் சங்கத்துக்கும் தேர்தல் போட்டி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

தேர்தலுக்கு மூன்று நாட்கள் முந்தி இளைஞர் சங்க நாடக மொன்று நடைபெற்றது. தியாகராசன் வீட்டுத் திண்ணையில் அந்த நாடகத்தில் கதாநாயகன் வேடம் தாங்க வேண்டியவர் கோபித்துக் கொண்டு போய்விட்டார். நாடகத்துக்குக் காலணு டிக்கட் வீதம் வசூல் வேறு செய்யப்பட்டுவிட்டது! தியாகராசன் என்னிடம் ஓடிவந்து செய்தியைக் கூறி வேதனைப்பட்டார்.

உடனே நான் ஒரு நிபந்தனை விதித்தேன். ''நாடகத்தில் நான் வேடம் புனைகிறேன். அதற்குக் கைமாருக நீ தேர்தல் போட்டியிலிருந்து விலகி விடு" என்றேன். சரியென்றார். தேர்தல் அதோடு முடிந்து விட்டது. நாடகம் ஆரம்பமாயிற்று. நான் துஷ்யந்தனாக நடித்து சபாஷ் பெற்றேன் இதோடு இளைஞர் சங்கம் கலைக்கப்பட்டு எல்லாமே சீர்திருத்தச் சங்கமாகி அதுவும் விரைவில் அழிந்து விட்டது!

அந்த அழிவுக்குக் காரணம் எனது அரசியல் ஈடுபாடுதான். தென்னக வாழ்வுக்கென ஏற்பட்ட அமைப்புக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. 1938-ம் ஆண்டு ஆரம்பமான இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் வேகம் என்னைத் தமிழர் படையில் அணி வகுத்து நிற்கத் தூண்டியது. முழு வேகத்துடன் ஈடுபட வாய்ப்புக் கிடைக்கவில்லையாயினும், ''தமிழ் வாழ்க!" ''இந்தி ஒழிக!" என முழக்கமிடும் படை வரிசையினரில் ஒருவனாகக் கொடி பிடித்துத் திரியலானேன்.

மறைந்த மாவீரன் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் கூட்டம் ஒன்று. அதுதான் என்னைக் 'கருணாநிதி' ஆக்கிற்று எனக் கர்வத்தோடு கூறிக் கொள்வேன்! தமிழ் காக்கும் படை வீரர்க்குப் போர்முரசு தந்து அழகிரி ஆற்றிய அந்தச் சொற்பொழிவு இன்னும் என் காதில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது; ஒரு மணி நேரத்துக்கு மேலாக மேடையில் புயல் வீசியது! புரட்சியின் ஒலி வானத்தை எட்டியது! ஆயிரம் சிங்கங்கள் ஏக காலத்தில் கூடி நின்று கர்ஜிப்பதுபோல் முழக்கம்.

''இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா? எல்லோரும் வாருங்கள் தமிழர்களே!" எனக் கூவினர்-குமுறினர்-கூட்டம் முடிந்ததும் குருதி

கிக்கினூர். மயக்கம் போட்டு வீழ்ந்தார். அடி வயிற்றிலும் விலாவிலும் வலி தாங்கவில்லையெனத் துடிதுடித்துத் துவண்டார். காரணம் வினவினேன். அவர் நோயாளி என்றனர். ஏன் இப்படிக் கத்த வேண்டும் என்று கேட்டேன். இந்தக் கேள்வி அழகிரியின் காதில் விழுந்து விட்டது. அவர் என்னை அன்போடு அணைத்து, ''தம்பி, என்னைவிட இந்த நாடு நோயாளியாக இருக்கிறது! டாக்டருக்கு ஜலதோஷம் என்பதற்காக ஜன்னி பிறந்தவனைக் கவனிக்காமலிருக்கலாமா? அதுபோலத்தான் நான் பணியாற்றுகிறேன்'' என்றார், வலியையும் பொறுத்துக் கொண்டு.

அந்தச் சொற்கள்தான் என்னை உங்கள் முன்னே ஒரு தொண்டனாக நிறுத்திக் காட்டியிருக்கின்றன. அழகிரி எனக்கு நெருங்கிய வரல்ல; அடிக்கடி பழகியவருமல்ல அப்போது! ஆனாலும் அவர் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார். அழகிரியின் கொள்கை வெறிக்கு அடிமையானேன்.

கையெழுத்து ஏட்டிலே எழுதி நூற்றுக்கணக்கான மாணவர்கள் மட்டுமே நமது எழுத்தைப் படித்தால் போதுமா என்ற அதிருப்தி என் மனத்தில் மூண்டது. அச்சு வாகனத்தில் என் எழுத்துக்கள் ஏறிட வேண்டுமென்ற ஆவல் மிகுந்தது.

அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து 'திராவிடநாடு' இதழைத் தொடங்கியிருந்தார்கள். அதில் மூன்றாவது இதழிலோ அல்லது நான்காவது இதழிலோ என்னுடைய கட்டுரை வந்தது என்றால் எனக்கு எவ்வளவு குதூகலமாக இருந்திருக்கும்? பள்ளி மாணவன் நான். நானே எழுதி நானே படித்து மகிழும் நிலை மாறிப் பத்து, நூறு பேர் படித்துப் பாராட்டும் நிலைக்கு வளர்ந்தேன். ஏதோ ஆசையில் ஒரு கட்டுரை எழுதி 'திராவிடநாடு, காஞ்சிபுரம்' என்று அனுப்பி வைத்தேன். அடுத்த வாரமே கட்டுரை திராவிட நாட்டில் வந்துவிட்டது. நாடெங்கும் என் கட்டுரையைப் படித்து மகிழ்வார்கள் என்று எனக்குள் நானே புகழ்ந்து கொண்டேன். எனக்கு உறுதுணையாயிருந்தவரும் இயக்கத்தில் நீங்காப் பற்றுக் கொண்டவருமான ராஜகோபால் என்பவர் என் கட்டுரை கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு திருவாரூர் முழுவதும் ஒரு வார காலம் சுற்றி வந்தேன். அந்த மகிழ்ச்சியை வர்ணிக்கவே முடியவில்லை! நாலு பேர் உட்கார்ந்து பேசுமிடத்திற்கு அந்தப் பத்திரிகையுடன் போவேன். பேசிக் கொண்டே கையில் இருக்கும் பத்திரிகையைக் கீழே வைப்பேன். யாராவது எடுத்து என் கட்டுரையைப் படிக்க மாட்டார்களா என்று ஆவலோடு அமர்ந்திருப்பேன். அவர்கள் அதைப் படித்து என்னைப் பாராட்டிய பிறகே அந்த இடத்தை விட்டு அகல்வேன்.

இப்படி என் வாழ்வில் பெரு மகிழ்ச்சியளித்த அந்த நாளை நினைத்தால் இப்போதும் இன்பம் அலை மோதுகிறது. என்னை உற்சாகத்தில் ஆழ்த்திய அந்தக் கட்டுரையின் தலைப்பு என்ன தெரியுமா? 'இளமைப் பலி!' ஆம். அதுதான் அந்தக் கட்டுரையின் தலைப்பு! அப்போதே என் நாட்டுக்கு என் இளமையைப் பலியிடத் துணிந்து விட்டேன் என்று என்னை அறியாமலே கூறியிருக்கிறேன், அந்தத் தலைப்பின் மூலம்.

அடுத்த கிழமை இன்னொரு கட்டுரை அனுப்பினேன். 'பகுத்தறிவு பரமசிவம்' கட்டுரையின் தலைப்பு. அது பிரசுரமாகவில்லை. அதற்கு அடுத்த வாரம் நபிகள்நாயகம் விழாவில் கலந்து கொள்ள அறிஞர் அண்ணா அவர்கள் திருவாரூர் வந்தார்கள். அதுவரை நான் அண்ணாவைச் சந்தித்ததில்லை. இயக்கத்தின் தூண்போன்றவராம் டி. என். ராமன் அவர்கள் இல்லத்தில் அண்ணா தங்கியிருந்தார். ''இந்த ஊரில் கருணாநிதி என்பவர் யார்? அழைத்து வாருங்கள், பார்க்க வேண்டும்'' என்று அண்ணா கூறவே என்னை அழைத்துப் போனார்கள்; என்னைப் பார்த்ததும் அண்ணா ஆச்சரியத்தில் மூழ்கினார். அவ்வளவு பொடிப் பையனாக நானிருப்பேன் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ''படிக்கிறாயா?'' என்றார். ''படிக்கிறேன்'' என்றேன், நடுங்கும் குரலில். ''இனிமேல் கட்டுரை எதுவும் எழுதி எனக்கு அனுப்பாதே!'' என்று சற்றுக் கடுமையாகக் கூறினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது!

அன்று அறிவுரை கூறி என்னை அணைத்து மகிழ்ந்த அண்ணன் தொடர்ந்து 27 ஆண்டுக் காலத்திற்கு மேலாக எனக்கு உடன் பிறவா அண்ணனாய், அரிய தலைவனாய், ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரனும் காட்டிடாத பாசத்தை என்னிடம் காட்டிய அன்புத் தெய்வமாய், என் தாயினும் மேலான தாயாய் இலங்கி இன்றைக்கும் எனது இலட்சியத் திருவுருவாய் விளங்குகிறார் என்பதை எண்ணி மகிழ்கிறேன். மகிழ்ச்சியினூடே விழிநீர்த் திரை விழுகிறது. திரையில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற பொன் எழுத்துக்கள் மின்னுகின்றன.

அந்த அன்புக் கோயில் அண்ணாவின் அறிவுரைகளையும் மீறி எழுந்த இயக்கவெறி என் பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற நிதிக்காக நானே எழுதி, நடித்த 'பழனியப்பன்' என்ற நாடகத்தைத் திருவாரூரில் நடத்தினேன். நாடகம் நடத்துவதற்கான செலவு இருநூறு ரூபாய்! வசூல் எண்பது ரூபாய்! பயங்கர மழையின் காரணமாக ஏற்பட்ட அந்த விளைவு எங்களை நட்டாற்றில் தவிக்க விட்டது. நூறு ரூபாய்க்கு மேல் தாண்டி விட்ட கடனை அடைத்தாக வேண்டும். என்ன செய்வது? எங்கு சென்றாலும் கடன்காரர்கள் எதிரே வருகிறார்கள். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது அநாகரிகம் என்ற புதிய பாடத்தை நான் படித்ததில்லை.

அதன் வழி நிற்க விரும்பியதும் இல்லை. நானும், என் நண்பர் தென்னனும் உட்கார்ந்து அழுதோம். நாடகக் கொட்டகைக்குள்ளேயே வந்து கடன்காரர்கள் முற்றுகையிட்டு விட்டனர்.

எங்கள் நாடகத்தில் கதாநாயகி வேடம் தரித்த நடிகைக்கு சம்பளமும், அவள் ஊருக்குச் செல்ல வழிச்செலவுப் பணமும் தந்தாகவேண்டும். வழியெதுவும் தென்படவில்லை. நாடகத்தில் ஒரு நண்பர் எனக்கு வெள்ளிக் கோப்பையொன்று பரிசாகக் கொடுத்தார். இருபது ரூபாய் பெறும் அந்தப் பரிசுப் பொருள். அந்தக் கோப்பையை அந்த நடிகையிடம் கொடுத்து வழியனுப்பி வைத்தோம். பாக்கிக் கடனைத் தீர்ப்பது எப்படி? தென்னனின் யோசனைப்படி யாருக்கும் தெரியாமல் நாகப்பட்டினம் ஓடிவந்தோம். அங்கு திராவிடர் கழகத் தலைவர் ஆர். வி. கோபால் அவர்களை அணுகி, எங்கள் நிலைமையை விளக்கினோம். ஆர். வி. கோபால் அவர்களுக்கு என்மீது நல்ல அன்பு உண்டு. இருந்தாலும் நூறுரூபாய் கடன் தருவதென்றால்... அதற்குச் சிறிது யோசித்தார். அங்கு உள்ள நண்பர்கள் பக்கிரிசாமி, மலைக்கொழுந்து ஆகியோர் எங்களுக்காகச் சிபாரிசு செய்தனர். இறுதியில் நூறு ரூபாய் பணம் கிடைத்தது. எப்படித் தெரியுமா? திரு. ஆர். வி. கோபால் ஆரம்பிக்க விருந்த நாகை திராவிட நடிகர் கழகத்துக்கு 'பழனியப்பன்' நாடகத்தை நூறு ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள். அதன் மூலம் ரூபாய் கிடைத்தது. என்னுடைய முதல் நாடகம் 'பழனியப்பன்', 'சாந்தா' என்னும் தலைப்பில் பல இடங்களில் நடத்தப்பட்டது. அதுவே 'நச்சுக் கோப்பை' என்னும் பெயரில் இன்றைக்கும் பல இடங்களில் நடத்தப் படுகிறது.

ஒரு நாடகம் விற்பனையானதும் மேலும் ஆசை எழுந்தது எனக்கு. இன்னும் பல நாடகங்களை எழுதி விற்பனை செய்யலாம், அதையே வாழ்க்கைக்குத் தொழிலாகவும், அதே சமயம் நல்ல கொள்கைப் பிரசார சாதனமாகவும் கொள்ளலாம் என்று கருதி மளமளவென்று எழுத ஆரம்பித்தேன். அந்த முயற்சிக்கு என் வீட்டாரும் உறவினரும் தடையாக நின்றனர். ''ஏதாவது ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதித்தாலும் போதும்! அதற்கு முயற்சி செய்!'' என்று என்னை விரட்டத் தொடங்கினார்கள். எனக்கு வேலை பார்ப்பது என்பது விஷம் போல் இருந்தது. மன நிம்மதி குலைந்தது. சோற்றுக்குத் தண்டமாக வீட்டில் இருக்கிறோம் என்ற நினைவு வேறு என்னைக் குடைய ஆரம்பித்தது. இந்த வெட்டிக்கேட்டில் காதல் ஒரு கேடா? அதுவும் வந்து சேர்ந்தது. காதலுடன் கூடக் கட்டுப்பாடும் தொடர்ந்தது. கன்னியொருத்தியின் கைப்பிடித்து வாழ்க்கையின் பயணம் தொடங்கலாம் என்று நானே தீர்மானித்தேன். அவளும் சம்மதித்தாள். இடையே பெற்றோர் குறுக்கிட்டனர். இரு தரப்பிலும் படை திரண்டது. இறுதியில் காதல் தோற்றது.

அத்தத் தோல்விக்கு முக்கிய காரணம் நான் சுயமரியாதைக் காரன்; அவ்வளவுதான். புரோகித முறைப்படி அவளுக்கும் இன்னொருவனுக்கும் திருமணம் நடைபெற்றது. காதலில் தோல்வியுற்ற என் உள்ளத்தின் எதிரொலிதான் 'பழனியப்ப'னுக இருந்து நச்சுக் கோப்பையாக மாறிய அந்த நாடகம். மனமுடைந்து போய் விட்ட எனக்கு உடனடியாகத் திருமணம் செய்து விட வேண்டும் என்று என் வீட்டார் பெண் தேடப் புறப்பட்டு விட்டனர். எனக்காக ஒருத்தி சிதம்பரத்திலே காத்திருந்தாள். இசைவாணர் சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் அருமைத் தங்கை தான் அவள். பெண் பார்ப்பதற்காக என் உறவினர் ராஜ சந்தானம் அவர்களும், என் சகோதரிகளும் சென்றார்கள். பெண் வீட்டார் சம்மதம் தந்து விட்டனர். சிதம்பரத்திலிருந்தவாறே என்னை உடனே வருமாறு தந்தி கொடுத்தனர். நானும் தென்னனும் புறப்பட்டோம்.

திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்துகிற அளவுக்கு நமக்கு என்ன மாத வருமானம் இருக்கிறது? ஏதாவது ஒரு வேலையில் போய் உட்கார்ந்து கொண்டு அல்லவா திருமணம் செய்து கொள்ள வேண்டும்? புகைவண்டி போகும் வேகத்தையும் மிஞ்சிக் கொண்டு எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

சிதம்பரம் நிலையமும் வந்து விட்டது. நானும் தென்னனும் குதிரை வண்டியொன்றைப் பிடித்துக்கொண்டு பெண் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். வாசலில் போய் அடியெடுத்து வைத்தோம். ''மகமாயி, தாயே!'' என்ற பெருங்குரல் ஒன்று கேட்டது. திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தோம். திண்ணையில் மலை போன்ற ஓர் உருவம். ஆம்! அவர்தான் பெண்ணின் தகப்பனார். பாடக சுந்தரனார் எனும் இசைத்துறை மேதை. அவரது அன்புச் செல்வியைக் காணத்தான் நான் வந்திருக்கிறேன்

15

வாழ்வதற்கு வழி? நடிகனானேன் நான்!

பெண் எப்படி இருப்பாளோ?

அழகியோ? அல்லவோ?

கறுப்போ? சிவப்போ?

குணவதியாக இருப்பாளோ?

குடும்பத்துக்கு ஏற்றவள்தானு?

சிந்தனை இந்தக் கேள்விகளோடு நின்றுவிடவில்லை. அதற்குள் நமக்கேன் கல்யாண ஆசை வந்தது? சே, சே, அந்தக் காதல் விவகாரம் அல்லவா நம்மை இப்படி நம் வீட்டாரிடம் காட்டிக் கொடுத்துவிட்டது என்றெல்லாம் எண்ணிக் குழம்பியவனுகப் பெண் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த என்னைப் பெண்ணின் தகப்பனுர் அறிமுகம் செய்து கொண்டதும்—

"மகமாயி!" என்று உரத்த குரலில் அவர் கூறினுர். யானை பிளிறுவது போல் இருந்தது. தலையணைக்கு அருகேயிருந்த விபூதியை எடுத்து என் கையிலே பக்தி சொட்டச் சொட்டக் கொடுத்தார். மறுக்க முடியுமா? வாங்கிக்கொண்டேன். பூசிக்கொள்ளவில்லை.

அதற்கு முன்பே நான் என் வீட்டாரிடம், "பெண்ணைப் பார்ப்பது இருக்கட்டும். சீர்திருத்தத் திருமணத்துக்கு ஒப்புக்கொள்வார்களா? ஒப்புக்கொள்ளாவிடில் பெண்ணைப் பார்த்து என்ன பயன்? முதலில் நான் பார்த்த பெண் போல் ஆகிவிடப் போகிறது!" என்று கூறினேன்.

பெண்வீட்டார் சீர்திருத்தத் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார்கள். அதன் பிறகு பெண் பார்க்கும் படலம்! எனக்குச் சொல்ல முடியாத வெட்கம்! எவ்வளவோ முயன்றுலும் என் தலை நிமிர மறுத்துவிட்டது. கடைசியாக தாழ்வாரத்துப் பக்கம் என்னை நிற்கவைத்துக் கொஞ்ச தூரத்தில் பெண்ணை அழைத்து வந்து நிறுத்தினுர்கள். என் வாழ்க்கையில் நான் கண்ட எத்தனையோ காட்சிகள் மறந்துவிட்டன. ஆனுல் அந்தக் காட்சி நான் இன்னும் மறக்காத காட்சிகளில் ஒன்றுகவே ஆகிவிட்டது!

இப்போது நினைத்துப் பார்த்தாலும் சிதம்பரம் விளங்கியம்மன் கோவில் தெருவில் உள்ள அந்த இல்லத்துத் தாழ்வாரத்தில் அடுக்களை

ஓரமாக உள்ள தட்டிக்கு மறைவில் நின்றவாறு, முதல் தடவையாக அவள் என்னைப் பார்த்த அந்த மோகனக் காட்சியை அதே சுவையுடன் நான் காணமுடிகிறது. அது மறையாத காட்சி! அழியாத காட்சி!

திருமணத்திற்கான நாளும் குறிக்கப்பட்டது.

1944-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதின்மூன்றும் நாள் நான் வாழ்க்கைப் பாதையில் புதிய திருப்பத்தைச் சந்திக்க வேண்டியவனானேன். திருவாரூரில் எனக்கும் என் உயிர் அணுக்களில் கொலுவீற்றிருக்கும் அன்புப் பத்மாவிற்கும் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் நடைபெற்றது. அதே நாளில் எனது மைத்துனர் ஜெயராம் அவர்களுக்கும் அதே வீட்டில் திருமணம்.

எனக்குச் சுயமரியாதை முறையில் 'மணவிழா' நடைபெற்றது. அவருக்குப் புரோகித முறையில் 'விவாக சுபமுகூர்த்தம்' நடைபெற்றது. இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தனது இளவல் செழியனுடன் வடகண்டம் என்னும் சிற்றூரிலிருந்து (அவரது சொந்த ஊர்) ஏறத்தாழ ஆறு மைல் நடந்தே வந்து திருமணத்தில் கலந்துகொண்டார் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

கழகச் சட்டமன்ற உறுப்பினராகவும், கடலூரில் சிறந்ததொரு வழக்கறிஞராகவும் விளங்கிய நண்பர் இளம்வழுதி எனக்கு நெருங்கிய தோழர். இரண்டு நாட்கள் முன்னதாகவே மணவிழாவுக்கு வந்து பணியாற்றினர். நாகை வழக்கறிஞர் விசயராகவலு என்னும் பெரியவர் தலைமையில்தான் நானும் பத்மாவும் மாலை மாற்றிக் கொண்டோம். எங்கள் திருமண நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, என் மைத்துனரின் திருமணத்திற்குக் குறிப்பிட்ட லக்கினம் தவறிவிடுமோ என்ற கவலை பழைமை வாதிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் என் திருமணத்தில் நுழைந்து பரபரப்புக் காட்டினர். பதைத்தனர்; சீறி விழுந்தனர்.

அவர்களின் லக்கினம் தவறிவிடக்கூடாதே என்பதற்காக நாங்களும் திருமண நிகழ்ச்சியையொட்டிய சொற்பொழிவுகளை மாலை நேரத்துக்கு மாற்றி வைத்துக்கொண்டு அவர்கள் விரும்பி வரவேற்ற லக்கினத்துக்கு வழிவிட்டோம்.

அன்றிரவு கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் 'கிந்தனார் கதா காலட்சேபம். காலட்சேபம் என்றால் பழமையின் முடை நாற்றம் வீசுகின்ற ஒரு நிகழ்ச்சி என்னும் நிலையை மாற்றியவர் கலைவாணர் அவர்கள். பாகவத சிரோன்மணியைப் போலவே வேடமணிந்து, பக்கவாத்தியக் குழுவினருடன் மேடையில் அவர் காட்சியளிக்கும் போது, இன்றைக்குப் பக்திரசம் சொட்டுகின்ற அருமையான

கதையொன்றை ரசிக்கப் போகிறோம் என்று புராணீகர்கள் வாய் பிளந்து நிற்பார்கள்.

''ஆலயத்துக்குச் சென்றான் அந்தக் காலத்து நந்தன்; அறிவாலயத்துக்குச் செல்கிறான் இந்தக் காலத்துக் கிந்தன்'' என்று கலிவாணர் முழங்கும்போது கூடியிருப்போரின் முகம் மலரும். ''கருத்து விருந்து இதுவன்றோ!'' எனக் கூறிக் களிப்படைவர். அவரது புரட்சிகரமான கதாகாலட்சேபத்துக்குத் தென்னகமெங்கும் வரவேற்பு, ஆதரவு, பாராட்டு.

சேரியிலே பிறந்து செழிப்பின்றித் திரிந்த ஓர் இளைஞன் சென்னையம்பதிக்குச் சென்று கல்வி பயின்று 'நானும் மனிதனே' எனக் கர்ஜனை செய்யும் கதைப் போக்குக் கண்டு கலிவாணரின் துணிவைப் பாராட்டாதவர் யார்?

''அனைவரும் சமம்!'' என்ற தத்துவம் ஆல்போல் தழைத்துவிட்ட காலத்தை இன்று கண்டு மகிழ்கின்றோம். ஆனால் கலிவாணரின் 'கிந்தனார்' புரட்சி நடைபெற்ற காலம் எப்படிப்பட்டது? பழைமையில் மோகமும், வெறியுங்கொண்டவர்கள் கலிவாணருக்குத் தந்த எதிர்ப்புகள் எப்படிப்பட்டவை? அத்துணைக் கிளர்ச்சிக்குக் காரணமான 'கிந்தனார்' எங்கள் திருமண விழாவிலே நடைபெறுகிறதென்றால் பந்தல் கொள்ளுமா? நீண்ட நெடும் பந்தல் இருந்த இடம் தெரியவில்லை. அலைகடலெனக் கூட்டம் உள்ளே நுழைந்துவிட்டது. கிந்தனார் கதை நிகழ்ச்சி தடைப்பட்டது. பாதுகாப்புக்கு நூற்றுக் கணக்கில் போலீசார் வந்தனர்.

மாப்பிள்ளைகளான நானும் என் மைத்துனரும் கூடப் பந்தலுக்குள் நுழைய முடியாமல் தவித்தோம். அந்த நேரத்தில் என் கண்கள் என்னையறியாமல் பெண்கள் பகுதியில் பார்த்தன. ஏன் என்று சொல்லவும் வேண்டுமோ? அவள் பத்திரமாக இருக்கிறாளா என்று பார்க்கத்தான். என்னைப் போலவே அந்தக் கூட்டத்துக் குள்ளேயிருந்து என் பத்மாவின் கண்கள் ஏக்கத்துடனும், அச்சத்துடனும் நான் எங்கேயிருக்கிறேன் என்று தேடிக்கொண்டிருந்தன.

கூட்டத்தில் சிக்கிக் கொண்டு நான் தவிப்பதை அவள் பார்த்து விட்டாள். ஐயோ! அந்த முகம் எவ்வளவு வாடிவிட்டது? காலையில்தான் எனக்கும் அவளுக்கும் வாழ்க்கைப் பிணைப்பு ஏற்பட்டது. அதற்குள் எங்கிருந்து வந்தது இந்தப் பாச உணர்ச்சி! இப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போதே ஒரு பேரலை எழுந்து வந்து என்னையும் அவளையும் ஒருவரையொருவர் பார்க்க முடியாமல் பிரித்துவிட்டது.

அந்த அலையில் இரண்டொரு வாலிபர்கள் தங்கள் கால்களை முறித்துக் கொண்டார்கள். பிறகு 'கிந்தனார்' நிகழ்ச்சி பந்தலை விட்டுத்

தெருவுக்கே மாற்றப்பட்டுவிட்டது! வெள்ளமெனக் கூடியிருந்த மக்களைக் கண்ட கலிவாணர் அவர்கள் அன்றையத் தினம் புதிய தெம்புடன் தனது கருத்துக்களை அள்ளிக் கொட்டினார். நானும் நண்பர்களும் இரவு உணவு கூட அருந்தாமல் கலிவாணரின் நிகழ்ச்சியைத் திருமண வீட்டின் கொல்லைப்புறத்துக் கிணற்றோரத்தில் அமர்ந்து ஒலிபெருக்கியின் வாயிலாகக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

கொல்லை வழியாக உள்ளே நுழைந்து 'கிந்தனார்' மேடைக்குப் போக வழியிருந்தது. அந்த வழியே போகலாம் என்ற தீர்மானத்துடன் கொல்லைக் கதவைத் தட்டினேன்.

நடந்தது என்ன? உள்ளேயிருந்து பெண்கள் ஒரே கூச்சல் போட ஆரம்பித்து விட்டனர். கூட்டத்திலேயுள்ள முரடர்கள் தான் கதவை இடிக்கிறார்கள் என்று பெண்கள் கருதிக்கொண்டு கத்திவிட்டனர். பிறகு என்ன செய்வது? இனி அங்கிருந்தால் ஆபத்து என எண்ணி அதைவிட்டு ஓடிவிட்டோம். மணவிழாவில் மாப்பிள்ளையின் கதி இப்படி ஆகிவிட்டது!

ஒருவாறு திருமண நிகழ்ச்சிகள் முடிவுற்றன. நண்பர்களும், சுற்றத்தாரும் அவரவர் ஊர் போய்ச் சேர்ந்தனர்.

ஓராண்டுக் காலம் வரையில் வாழ்க்கையின் சுவைப் படலம் பேரானந்தமாகத்தானிருந்தது. அதற்குப் பிறகு மன அமைதி குறையத் தலைப்பட்டது.

''இப்படியே வேலை இல்லாமல் திரிந்து கொண்டிருந்தால் வருங்காலம் எப்படிப் போய் முடிவது?" என்ற கேள்விகள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் கிளம்பின. அவைகளையெல்லாம் விட அருகிலிருந்து புறப்பட்ட அன்புக் கணைகள் என் உள்ளத்தைத் துளைக்கத் தொடங்கின. திருமணம் முடிந்த அடுத்த வாரமே பத்து நாட்கள் சுற்றுப் பயணம் அமைத்துக் கொண்டு பிரசங்கத்திற்குச் சென்று விட்டவன் நான். அப்படிக் கட்சி வெறி பிடித்து அலைந்த என் காதுகளில் யாருடைய சொல்லும் விழவில்லை. ஆனால் என் துணைவியின் அறிவுரைகள் என் கட்சி வேகத்தைத் தணிக்காமலே குடும்பப் பொறுப்பு என்னும் உணர்ச்சியை எனக்கு உண்டாக்கின. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் வேலை தேடி அலைந்தேன்.

ஆனால் அப்படிக் கிடைக்கிற எந்த வேலையும் என்னை அடிமைப்படுத்திடும் வேலையாய் இருப்பதை நான் விரும்பவில்லை. பிறகு எனக்கு யார் வேலை தருவார்கள்? 'வாழ்வதற்கு என்ன வழி?' என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினேன்.

என் பத்மா - என் கழுத்தில் மாலை சூட்டும்போது என்னென்ன எண்ணி இருப்பாள்? இப்போது அவள் என் நிலை கண்டு எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருப்பாள்! சே! சே! அவளை வேதனையடையச் செய்யக் கூடாது என்று திடமான முடிவு செய்து கொண்டேன். அதன் விளைவு? நான் நடிகனானேன்!

16

நண்பர்கள் முகம் வாடலாமா?

நான் எழுதி நடித்த 'பழனியப்பன்' நாடகத்தை நூறு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டவர் 'திராவிட நடிகர் கழகம்' என்ற பெயரால் ஒரு கலை மன்றத்தைத் துவக்கி கழகப் பிரசார நாடகங்களை நடிப்பது என்ற தீர்மானத்துடன் என்னை அணுகினர். நானும் அதற்கு ஒப்புதல் அளித்து, முதல் முதலாக நாடகக் குழு விழுப்புரத்தில் முகாமிட்டது. என்னையும் அந்த மன்றத்தில் இணைந்து நடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் எழுதும் நாடகத்தில் மட்டுமே நடிப்பது என்ற நிபந்தனையுடன் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

நாடகங்களைத் துவக்குவதற்கு முன்பு ஒரு மாத காலம் விழுப்புரத்தில் ஒத்திகைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கே நாடக மன்றத்தினர் தங்குவதற்காக ஒரு வீடு வாடகைக்குப் பிடிக்கப் பட்டது. என்னுடன் தென்னனும், சி. டி. மூர்த்தியும் இருந்தார்கள். இளமை முதல் நான் தனியாக இருந்து பழக்கப்பட்டவன் அல்ல. இரண்டு, மூன்று நண்பர்களுடன்தான் என்னைக் காண முடியும்.

அன்பு, நட்பு என்பதற்குப் பொருள் புரியாத ஒரு சில மனிதர் களுக்கு நான்கு நண்பர்களுடன் ஒருவனைப் பார்ப்பதே பொருமையாக இருக்கும். ஏதாவது பொய்லாங்கு கூறச் செய்யும். யார் யாருடைய கண்களையோ உறுத்துகிறது என்பதற்காக நான் கவலைப்பட்டவனும் அல்ல. என் நண்பர்களின் முகம் வாடுவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பல நண்பர்களில் ஒரிருவர் நான் காட்டும் பாசத்தைப் பைத்தியக்காரத்தனம் என்று கருதியிருக்கலாம்; அல்லது அதனைப் பயன்படுத்திக் கொண்டு என்னை ஏமாற்றியிருக்கலாம்.

அதைப் போலவே என்னைப் பற்றி அவர்கள் தவருகக் கருது மளவிற்கு என்னையறியாமல் இடையிலிருப்பவர்களால் ஏதாவது நடந்தும் இருக்கலாம். ஆனால் ஒரு சில நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு பொதுவாக நட்பு என்னும் பண்புக்கே புதிய தத்துவம் கற்பித்து விடக்கூடாது. தென்னன், மூர்த்தி இருவரின் துணை யுடன் விழுப்புரத்து வேதனைகளை நான் சமாளித்துக் கொண்டேன். விழுப்புரத்தில் எங்கள் அன்றாட நிகழ்ச்சிகளின் பட்டியலைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

காலையில் எழுந்ததும் கடமைகளை முடித்துக்கொண்டு எல்லாரும் நடுக்கூடத்திற்கு வந்து விடுவோம். அனைவரும் வரிசையாக எழுந்து நிற்க வேண்டும். நாடகக் குழுக்களில் வழக்கமாகக் கடைப்பிடித்து வரும் 'கோரஸ்' பாட்டு, கடவுள் வணக்கம் அல்ல. நாட்டு வணக்கமாக இருந்தது.

திராவிடம் திராவிடம்' என்று தொடங்கும் நாட்டுப் பாடலைப் பாடி முடித்ததும் காலை அரைகுறையாகக் கிடைக்கும் உணவு. அதை முடித்துக் கொண்டு நாடக ஒத்திகையை ஆரம்பிப்போம். ஒத்திகை முடித்ததும் குளிப்பதற்குப் புறப்படுவோம். குளிப்பது என்பது அங்கு மிகப் பெரிய பிரசினை. நாங்கள் குடியிருந்த வீட்டிலிருந்து ஒரு மைல் தூரமாவது செல்ல வேண்டும். அங்கு குழாய்கள் மூலம் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் இடங்களில்தான் எங்களுக்குக் குளியல். ஆம். அந்தக் குழாய் நீர் தான் எங்களுக்குக் குற்றால அருவி. அந்த ஓரிரு நிமிடங்களிலே நான் வாழ்க்கையில் குளிர்ச்சியைக் கண்டேன் என்று சொன்னால் அது மிகப் பொருத்தமேயாகும். ஆனால் அந்தச் சமயங்களிலும் என் கண்களிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் நீர்த்துளிகள் குழாய்த் தண்ணீரோடு கலந்து விடுவதை நான் மட்டுமே அறிவேன்.

குளித்து விட்டு வீட்டிற்குக் கிளம்புவோம். கடுமையான வெயில் கொளுத்தும். சிறிய துண்டை இடையில் கட்டிக்கொண்டு துவைத்த சட்டையைத் தோளில் உலரப் போட்டுக் கொண்டு அரையணா சவுக்கார சோப்பினால் வெண்மையாக மாற்றப்பட்ட வேட்டியை இரு கைகளாலும் தலைக்கு மேலே குடைபோலப் பிடித்துக் கொண்டு அதனை உலர வைத்தவாறு வீட்டிற்கு வந்து, உலர்ந்த பின் அவற்றை அணிந்து கொண்டு, பிற்பகல் உணவிற்குத் தயம் இருப்போம். 'தண்டனை'யை அனுபவித்த பிறகு சற்று நேரம் கண் அயர்வோம். எனக்குத் தூக்கம் வரும் என்று கருதுகிறீர்கள்.

இளமையிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சுமை தாங்க முடியாமல் உள்ளத்தை நலித்துக் கொண்டு, வேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன். கட்சிக் கொள்கைகளை நாடக வாயிலாகப் பரப்புவதற்கு நமது பணி பயன்படுகிறது என்ற ஒரே ஆறுதல் தவிர வேறு எந்த ஆறுதலும் எனக்கில்லை. மாலை நான்கு மணிக்கு மீண்டும் ஒத்திகை தொடங்கும். இரவுச் சாப்பாட்டை எட்டு மணிக்கே முடித்துக் கொண்டு நாடகக் கொட்டகைக்கு 'வேஷம்' தடவிக் கொள்ளப் புறப்பட்டு விடுவோம். ஒவ்வொரு வேளை உணவிற்கும் 'கோரஸ்' பாடி, கடைசியில் நாடகத் துவக்கத்திலும் இறுதியிலும் பாடுவதோடு மொத்தம் ஐந்து முறை ஒரு நாளைக்கு நாங்கள் 'கோரஸ்' பாடியாக வேண்டும்.

ஒரு வழியாக அன்றைய நாடகம் ஆரம்பிக்கப்படும். ஒரு வழியாக என்று அந்த வார்த்தையை ஏன் அழுத்திச் சொல்லுகிறேனென்றால், நாடக வருமானப் பொறுத்துத்தானே நாடகத்தை ஆரம்பிக்க வேண்டும்

என்ற உண்மையைப் புரிய வைப்பதற்காகத்தான்! முதல் ஒரு வாரம் நான் எழுதிய 'பழனியப்பன்' நாடகம் நடைபெற்றது. மக்களைக் கவரும் வகையில் அந்த நாடகத்தின் பெயரை 'சாந்தா', அல்லது 'பழனியப்பன்' என்று மாற்றிக் கொள்ளலாம் என்று நாடக உரிமையாளர் கருத்துத் தெரிவித்தார் என்னதான் பெயர் மாற்றினாலும் எங்கள் நாடகத்தைக் காண மக்கள் வரவில்லை. பார்த்த மக்கள் நாடகத்தைப் பாராட்டினர் ஆனால் வசூலில்லை. நாடக மன்றம் கடனாளியாகத் தொடங்கிற்று ஒரு நாளைக்கு எண்பது ரூபாயும், எழுபது ரூபாயும் வசூல் என்றால் என்ன செய்ய முடியும்?

ஒரு நாள் நாடகத்திற்குத் தலைமை வகிக்கப் பெரியார் வந்திருந்தார். இன்னொரு நாள் அண்ணா வந்திருந்தார். அவரிடத்திலேயே நாடக மன்ற உரிமையாளர் பத்து ரூபாய் கடன் கேட்டு வாங்கிய நிகழ்ச்சியையும், அண்ணா புன்னகையோடு அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்த நிகழ்ச்சியையும், நாடகம் முடிந்து ஊருக்குப் போகு முன் அண்ணா அவர்கள் என் முதுகில் தட்டி, ''கருணா, போய் வருகிறேன்" என்று அன்பொழுகக் கூறியதையும் என்னால் மறக்கவே முடியாது.

விழுப்புரத்தில் எங்கள் நாடகங்கள் வெற்றிகரமான வசூலைத் தராததற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. திராவிட நடிகர்க் கழகம் என்ற பெயரை விழுப்புரத்து மக்கள் வெறுத்தனர். எதற்காக? அரசியல் காரணங்களுக்காகவா? அல்ல! அல்ல! அவர்கள் கடைத் தெருவில் பேசிக் கொண்டதை அப்படியே தருகிறேன்:

''நாகப்பட்டினத்திலிருந்து ஒரு நாடகக் கம்பெனி வந்திருக்கப்பா. நாற்பது பசங்களுக்கு மேல் இருக்காங்க. எல்லாம் படிச்ச பறப்பசங்க. பறயன் பேராலேயே கம்பெனிக்கும் பேர் வச்சிக்கிட்டிருக்காங்க."

''அப்படியா சங்கதி? அந்த நாடகத்தைப் பார்க்க அவன் சாதிக்காரன்தான் வரணும்.''

எங்கள் தோல்விக்குக் காரணம் இதுதான். 25-ஆண்டுகளுக்கு முன்பு விழுப்புரம் போன்ற பட்டணங்களில் சாதி வெறி எந்த அளவிற்குத் தலைதூக்கி இருந்திருக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். அது மட்டுமல்ல. 'திராவிட' என்ற சொல் சாதி வேறு — பாடின்றித் தென்னகத்தில் உள்ள பழம் பெரும் இனத்தினைக் குறிக்கும் பெயர் என்ற உண்மையையும் உணர்ந்து கொள்ளக்கூடிய பக்குவம் பெறுதவர்களாக மக்கள் இருந்தார்கள் என்பதற்கும் இது எடுத்துக் காட்டாகும்.

விழுப்புரத்தில் 1944-ஆம் ஆண்டு 'திராவிட' என்ற சொல்லைத் தவருகப் புரிந்து கொண்டு அதன் காரணமாக அருமையான தாழ்த்தப்பட்ட மக்களை அவதூருகப் பேசுகிற நிலை இருந்தது

என்றாலும், அதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் 1940-ல் திருவாரூரில் கூடிய நீதிக் கட்சி மாநாட்டில் பெரியார் அவர்களுடைய தலைமையில், ''திராவிட் நாடு திராவிடருக்கே'' என்ற தீர்மானத்தைத் திரு பி. பாலசுப்ரமணியம் முன்மொழிய, அறிஞர் அண்ணா அவர்களும் சி. பாசுதேவ் அவர்களும் வழிமொழிந்தனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் தொன்மை திராவிட மொழி ஒன்றிலிருந்து தோன்றியவைகளே என்பதும் அம்மொழிகளைப் பேசுவோர் திராவிடர் என்பதும் கால்டுவெல் பாதிரியார் போன்ற அறிஞர் பெருமக்கள்செய்த ஆராய்ச்சி முடிவுகளாகும்.

இதனை அடிப்படையாக வைத்துத்தான் திருவாரூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பெருளாதார முன்னேற்றம் ஆகியவைகளுக்கான வழிமுறைகளைப் பற்றி நீண்டதொரு விளக்கச் சொற்பொழிவாற்றினார். அதுவரை நீதிக் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பை வகித்து வந்த திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், கட்சித்தலைவர் பெரியார் அவர்களிடம் பல்வேறு காரணங்களால் கருத்து வேறுபாடு கொண்டு அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார். அப்போது 'விடுதலை'ப் பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்த அண்ணா அவர்கள் நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திராவிடம், திராவிடர் என்ற உத்வேகத்தை நாட்டில் எழுப் புவதற்காக திராவிட நாடு' என்கிற கிழமை இதழை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் துவக்கினார்கள். அதனையொட்டித் திராவிடர்க் கழகம் என்ற பெயரால் ஒரு தனி மன்றம் போன்ற அமைப்பினை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் உருவாக்கினர். அந்தத் தனி அமைப்பு எதிர்காலத்தில் நாடு தழுவிய இயக்கமாக ஆகுமென்று அன்று யாரும் எதிர்பார்த்திட்டதில்லை.

நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக அண்ணா அவர்கள் இருந்ததால் கட்சி வளர்ந்திடவும் புதிய வேகம் கொண்டிடவும் புதிய குறிக்கோள் பெற்றிடவும் வழிமுறை காண வேண்டுமென்று அண்ணா அவர்கள் துடித்தார்கள். நீதிக் கட்சியில் இருந்த பெரும் தலைவர்கள் மாட மாளிகை, மல்லிகை மஞ்சம், கூட கோபுரம்,

கொட்டு முழக்கு என்றெல்லாம் ஆடம்பரப் பிரியர்களாக இருந்தார்கள். குடிசைகளும், அங்கேயெழும் குரல்களும் அவர்கள் காதில விழ வாய்ப்பில்லை. அத்தகையோர் பிடியிலிருந்த நீதிக்கட்சியை அண்ணா விடுவிக்க முயன்றார்.

நான் விழுப்புரத்திலே நாடகம் நடத்திக் கொண்டிருந்த அதே 1944-ம் ஆண்டில்தான் சேலத்தில் நீதிக் கட்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பெரியாரை இறக்கிவிட நீதிக் கட்சிச் சீமான்களும், கோமான்களும் முயன்றார்கள். அப்படி நடைபெற்று விடாமல் பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பிரயாணம் செய்து, கட்சித் தொண்டர்களின் ஆதரவைப் பெருக்கினார்.

எதிர்ப்புக்களை முறியடிக்கவும் நீதிக் கட்சியை ஏழைகளின் இலக்கத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், இந்திய விடுதலையில் தனக்கிருந்த அழிக்க முடியாத பற்றினை வெளிப்படுத்திக் கொள்ளவும் அண்ணா அவர்கள் சேலம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். சரித்திரப் புகழ் படைத்த அந்தத் தீர்மானத்திற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயர்.

நீதிக் கட்சி என்ற பெயரை மாற்றித் திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட வேண்டுமென்றும், வெள்ளையன் ஆட்சியால் தரப்பட்ட 'சர்', 'ராவ்பகதூர்' திவான்பகதூர்' போன்ற பட்டங்கள் துறக்கப்பட வேண்டுமென்றும் கௌரவ நீதிபதி மற்றும் நியமனப் பதவி கொண்டவர்கள் அவைகளை ராஜினாமாச் செய்யவேண்டுமென்றும், தங்களுடைய பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்-டொழிக்க வேண்டுமென்றும் அண்ணாவின் தீர்மானம் முழக்கமிட்டது.

35-மணி நேர விவாதத்திற்கு அந்தத் தீர்மானம் உள்ளாகியது. கட்சியின் ஆய்வுக் குழு அண்ணாவின் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது. பின்னர் பொது மாநாட்டினில் அண்ணாவின் தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டுப் பிறகு இறுதியில் அண்ணா விளக்கவுரை வழங்கினார். அதனைக் கட்சித் தோழர்களும், பொது மக்களும் தங்கள் ஆர்வமிகுந்த கையொலிகளால் வரவேற்றவாறு இருந்தனர். அதனைக் கண்ட நீதிக் கட்சிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவராக மாநாட்டை விட்டு வெளியேறினார்கள். இறுதியில் அண்ணா தீர்மானம் இடி முழக்கமெனக் கையொலிகளுக் கிடையே நிறைவேறியது. பெரியார் தலைமையை அண்ணா காப்பாற்றியது மட்டுமல்ல, நீதிக் கட்சிக்கு ஒரு புதிய திருப்பத்தையும் தந்தார்.

அப்பொழுது பரவத் தொடங்கிய 'திராவிட' என்னும் அந்தச் சொல்தான் விழுப்புரத்தில் பிரசினைக்குரியதாக மாறி எங்கள் நாடக மன்றத்தின் வசூலையும் பாதித்து எங்களை அந்த ஊரிலிருந்து முட்டை கட்டிக் கொள்ளவும் செய்தது!

17

கம்புகள்! குண்டாந்தடிகள்!

வாழ்க்கை வரலாற்றின் குறிப்புக்களை எழுதிக் கொண்டிருக்கும் எனக்கு, இன்றைய மனோநிலை-அமைதியற்றது! ஆழ்கடலின் கொந்தளிப்பும்-எரிமலையினின்று ஒங்கிச் சிதறிடும் கனற்குழம்பும் என் நெஞ்சத்து வேதனைக்கு ஈடாகச் சொல்லப்படும் உதாரணங்கள் ஆகமாட்டா!

நண்பர்கள் மாலைகளை அணிவிக்கிறார்கள். நல்லாட்சி நடத்து கிறேன் என்று பாராட்டுக் குவிக்கிறார்கள். அவர்களோடு கை குலுக்கு கிறேன். மகிழ்கிறேன். அளவளாவுகிறேன். ஆனால் இந்த என் செயல்கள் அத்தனையிலும் எனக்கே முழு மன நிறைவு இல்லை.

நீட்டிய கையைக் குலுக்காவிட்டால் வருந்துவார்களே என்ற பயம்! சூட்டிடும் மாலையை வாங்காவிட்டால் அவ்வளவு மமதையா?' என எண்ணிடுவரே என்ற அச்சம்! மகிழ்வுடன் இருப்பதாகக் காட்டிக் கொள்ளாவிட்டால், 'ஏதோ வெளியில் சொல்ல முடியாத நோய் போலும்!' எனச் செய்தி பரப்பிடுவார்களே என்ற கவலை. இப்படியொரு வேதனையான, வேடிக்கை வாழ்வு.

பார்வைக்கு என்னவோ பதவி—புகழ்—பாராட்டு.

பட்டு மெத்தை தைத்த நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு மெத்தைக்குள்ளிருந்து ஊசிகளை உடலெல்லாம் குத்தச் செய்துவிட்டு, எதிரே இருக்கும் மக்கள் கூட்டம் 'ஆகா! இவர் இந்திரனல்லவா? சந்திரனல்லவா?' என்று புகழ்ந்து கொண்டிருந்தால்—ஊருக்குப் பயந்து ஊசிக் குத்துக்களை வாங்கிக் கொண்டு உதிரத்தோடு ஒப்புக்குச் சிரிக்கும் மனிதனைப் போல் நான் இன்று சிரிக்கிறேன்; மகிழ்கிறேன். இதுவே நான் பதவியால் பெறும் பயன்!

இந்த ஊசி முனைக் குத்துக்களைத் தாங்க முடியாத நான் ஈட்டி முனைக் குத்துக்களை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்ட காலம் ஒன்று இருந்தது. அதுதான் 1966-ம் ஆண்டு முடிய ஏறத்தாழ முப்பதாண்டு எதிர்க்கட்சி வாழ்வு!

ஈட்டிகள் என் நெஞ்சைக் குறி பார்த்திருக்கின்றன. கற்கள் என் தலையைப் பதம் பார்த்திருக்கின்றன. கம்புகளும், கழிகளும், குண்டாந் தடிகளும் என் மேனியைச் சுவைத்திருக்கின்றன. சாவு என்னை நெருங்கி நெருங்கி எத்தனையோ முறை விலகியிருக்கிறது! சிலரிடத் திலே நெருங்கியதற்காக அல்ல! விலகியதற்காக!

ஆனால் அந்தக் கொடிய நிகழ்ச்சிகளை நான் சந்தித்தபோதெல்லாம் பூரிப்பு அடைந்திருக்கிறேன். மனப் புண் அடைந்தது கிடையாது.

போர்க்களத்தில் பாய்ந்து வரும் வாளுக்குத் தலை கொடுக்கத் தயாராயிருப்பான் வீரன்! ஆனால் அவனையே அவன் தோட்டத்தில் நிறைந்து கிடக்கும் நெருஞ்சி முள் மீது படுத்து உருளச் சொன்னால் தாங்கிக் கொள்வானா?

என் தலைக்கு வந்த ஆபத்துக்களில் மிகப் பெரிய வரிசையில் ஒன்று தான் புதுச்சேரி ஆபத்து!

விழுப்புரத்தில் கழகப் பிரச்சார நாடகங்களை முடித்துக் கொண்ட நாங்கள் அங்கிருந்து புதுச்சேரிக்குப் புறப்பட்டோம்.

அரவிந்தர் வாழ்ந்த மண்—அடிமைத் தளையொடிக்கும் அருமைக் கவிகள் இயற்றிய பாரதியார் உலவிய பூமி-அஞ்சா நெஞ்சும் ஆற்றல் மிகு சொல் வளமும் கொண்ட தன்மானக் கவிஞன் பாரதிதாசன் ஏடெடுத்து எழுதி, பாதிலம்-அங்கே எமது நாடக மன்றத்துப் பணியினைத் தொடங்கினோம்.

இந்தியா, ஆங்கிலேயர் பிடியிலும், புதுவை—காரைப் பகுதிகள் பிரெஞ்சுக்காரர் பிடியிலும் இருந்த காலம் அது.

புதுவையின் எழிலுறு வீதிகளில் பிரெஞ்சு நாட்டு ஆடவரும் பெண்டிரும் வண்ணக் கோலம் காட்டி உலவிடுவர். மாலை வந்து விட்டால், அவர்கள் ஆடவரும் பெண்டிரும் மது வெறியேறி ஒருவரை யொருவர் தழுவியவாறும் முத்தமிட்டவாறும் தமிழர்கள் இழுக்கும் ரிக்ஷாக்களில் கடை வீதிகளில் சென்று கொண்டிருப்பர். புதுவைத் தெருக்களில் அழகும் தூய்மையும் நிறைந்திருந்தது. எனினும் அயல் நாட்டு நாகரிகமெனும் சகிக்க முடியாத காட்சிகளும் புதுவைக்குப் பெருங்களங்கமாக இருந்து வந்தன.

ஆறு வயதுச் சிறுவர்கள் கூட வீதிகளில் புகை பிடித்தவாறு செல்வார்கள். அவர்களிடம் தங்கள் பீடிக்கு நெருப்புக் கேட்கும் காவலர்களும் நிறைய இருந்தனர்.

இந்தியாவை வெற்றி கொள்ள முயன்று, 'கிளாவ்' குறுக்கீட்டால் தடைப்பட்டு, புதுவை, காரை, மாகி, ஏனம் என்று சில சிறு நிலப் பகுதிகளை மட்டும் பிரஞ்சு ஆதிக்கத்தின் கீழ் நிலைத்திடச் செய்த டுய்ப்ளே'யின் சிலையொன்று எடுப்பும் சிறப்புமாகப் புதுவைக் கடற்கரையை நோக்கி நின்று கொண்டிருந்தது.

உடல் போன்ற இந்தியா ஆங்கிலேயனிடமும், அதன் கழுத்தில தொங்கும் பதக்கம் போன்ற புதுவைப்பகுதி பிரெஞ்சுக் காரனிடமும் இருந்த 1945-ம் ஆண்டு எங்கள் திராவிட நடிகர்க் கழகம், தனது நாடகங்களை 'கெய்லே' என்ற தியேட்டரில் நடத்தத் தொடங்கியது.

விடுப்புரத்தில் ஏற்பட்ட ஏமாற்றம் இங்கு இல்லை நாடகம் காணத் திரளான மக்கள் நாள்தோறும் வந்தனர். இடமின்றிப் பலர் திரும்பினர் நான் நடித்த ''சாந்தா, அல்லது பழனியப்பன்'' நாடகம் மிக வெற்றிகரமான வசூலுடன் இருபத்து ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. அந்த நாடகத்தில் நான் தாங்கிய பாத்திரத்திற்குப் பெயர் சிவகுரு!

என்னைப் புதுவையிலேயுள்ள பொதுமக்கள், 'சிவகுரு,' என்றே செல்லமாக அழைக்கத் தொடங்கினர்

புதுவையில் திராவிடர்க் கழகத் தொண்டர்கள் — முன்னணியினர் என்னைச் சூழ்ந்து கொண்டு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார்கள்.

திரு. பெருமாள் அவர்களது ஆதரவோடு ''தொழிலாளர் மித்திரன். என்ற வார இதழை, திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் நடத்தி வந்தார்கள். அந்தப் பெருமாள் தான் அவுக்காப் பெருமாள் என்று அழைக்கப்படுகின்ற சில காலம் புதுவைச் சபாநாயகராக இருந்தவர்!

அவுக்கா என்றால் அங்கே வழக்கறிஞர் என்று பொருள் படும்.

'தொழிலாளர் மித்திரன்' இதழில் என்னைக் கட்டுரைகள் எழுதுமாறு அதன் ஆசிரியர் தூண்டினார். அதை நிறைவேற்றி னால் ஒரு வாரத்திற்கு அவரது அலுவலகத்திலே தொடர்ந்து தேநீர் கிடைக்கும். அந்த அலுவலகம், கார்கள் நிறுத்தும் ஓர் இடம். காருக்குப் பதிலாக அச்சுக் கோக்கும் இடமும் ஆசிரியர் இருக்கையும் இருந்தது.

'அந்தப் பேனா!'' என்று ஒரு கட்டுரை எழுதினேன். காந்தி அடிகளின் ஆசிரமத்தில் காணாமற்போய்விட்ட ஒரு பேனாவைப் பற்றிய கட்டுரை அது!

அந்த இதழ் வெளிவந்த மறுநாளே, அந்த ஊர் காங்கிரசார் என்னை அடையாளம் பார்த்து வைத்துக் கொண்டார்கள்.

அடுத்த இதழில், 'காந்தி வைசிராய் ஆனால்?" என்ற ஒரு கட்டுரை எழுதினேன்.

மூன்றாவது கட்டுரை எழுதுகிற வரையில் காங்கிரஸ் நண்பர்கள் பொறுத்துக் கொண்டிருக்கவில்லை.

அவர்களுக்குரிய பயங்கர வீடொன்றில் ஒரு நாள் இரவு கூடி, சதித் திட்டத்தைத் தீட்டி விட்டார்கள்.

அவர்கள் திட்டத்திற்கு வெற்றி கிடைக்கும் நிலையில் எதிர்பாராத விதமாக, புதுவையில் கழக மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் அனைவரும் முழுமூச்சாக ஈடுபட்டோம். இரவெல்லாம் நாடக வேலை-பகலில் மாநாட்டு வேலை!

மாநாடு, சீரும் சிறப்புமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் எங்கள் எண்ணம் போல் முடித்துவிட்டனர்.

பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி-மற்றும் கழகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர்.

மாநாடு காலை பத்து மணிக்குத் தொடங்கிற்று. மாநாட்டில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டவர்களும் ஒன்று, இரண்டு, பத்து, நூருக, மாநாட்டு முகப்புக்கெதிரே கூடி எதிர்ப்பு முழக்கங்கள் செய்திடத் தொடங்கினர்.

''திராவிடத் தலைவர்களே! திரும்பிப் போங்கள்!' என்பதே அவர்களது கூச்சலாக இருந்தது.

''வா!' என்றழைப்பதுதான் தமிழர் பண்பு! 'போ!' என்று கூறக் காரணம் யாதோ?" என்று தொடங்கி, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த விநாடியே கொடி மரத்தை வீழ்த்தி விட்டார்கள் எதிரிகள்?

அவ்வளவுதான், அமளி தொடங்கி விட்டது. பெரியாரையும் அண்ணாவையும் ஏனைய தலைவர்களையும் வண்டிகளிலும் ரிக்ஷாக் களிலும் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பி விட்டு பாரதிதாசனும் நானும், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோரும் வீதியில் நடந்து வந்து கொண் டிருந்தோம்.

திடீரென ஒரு பெருங்கூட்டம் எங்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டது. நாங்கள் மூவரும் திசைக்கொருவராக ஆகிவிட்டோம். பாரதிதாசனை யாரோ அழைத்துக் கொண்டு ஓடி ஒரு வீட்டில் ஒளித்து விட்டார்கள். அவரது காலணியொன்று தெருவிலே கிடந்தது. அதனைக் கருவியாகக் கொண்டு என்னைத் தாக்கினார்கள். பெரிய லாடம் அடிக்கப்பட்ட பூட்ஸ்!

அடி எப்படியிருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அப்பொழுது வலித்தது. ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அந்தச் சம்பவம் இனிக்கிறது.



18

குளிப்பது ஒரு குற்றமா?

கலகக் கூட்டத்தினரிடம் சிக்கிக் கொண்ட தாலுப் அண்ணன் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களும் திசைக்கொருவராகப் பிரிக்கப் படடோம். அவர் எங்கு போனார் என்று எனக்குத் தெரியாது. என்னைக் கூட்டத்தினர் அடித்துத் துரத்திக்கொண்டே வந்தார்கள். நான் அடி வாங்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். மாநாட்டிற்கு வந்திருந்த திருவாரூர் ராசகோபால் என்மீது விழுந்த அடிகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டார். நல்ல வலிவான உடல் அவருக்கு. அதற்குப் பிறகு அவரையும் விட்டு நான் பிரிக்கப் பட்டேன்.

புதுச்சேரியில் அப்போது அடிக்கடி கலவரங்கள் நடைபெறுவது உண்டு. அங்கு நடைபெறும் ஒவ்வொரு தேர்தலிலும்—அது சாதாரண நகராட்சித் தேர்தலாக இருந்தாலும்கூட ஐந்தாறு கொலைகள் விழுவது வழக்கம். ரிவால்வர் சண்டைகள் நடைபெறுவதும் உண்டு. இப்படிக் கலவரங்களைக் கண்டு கண்டு பழக்கப்பட்டவர்கள் புதுச்சேரிப் பொது மக்கள். தெருவில் கூச்சலென்றால் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு, தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். நான் அடித்துத் துரத்தப்பட்டு என் பின்னால், எதிரிகள் கூட்டமாக ஓடிவரும்போது அப்படித்தான் ஒவ்வொரு வீட்டாரும் தங்கள் வீட்டுக் கதவுகளைப் பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

இடையே சந்து பொந்து இல்லாத நீண்ட பெருஞ்சாலை யொன்றில் நான் ஓடிக் கொண்டேயிருக்கிறேன். எதிரிகள் துரத்திக் கொண்டிருக் கிறார்கள். என் சட்டையில் மாட்டப்பட்டுள்ள 'பெரியார் பேட்ஜை'ப் பறிப்பதற்காக ஒருவன் சட்டையைக் கிழித்தான். நான் அந்த பேட்ஜை இறுகக் கையால் பற்றியவாறு ஓடிக் கொண்டேயிருந்தேன்.

அந்த நீண்ட தெருவில் ஒரேயொரு வீட்டில் மாத்திரம் கதவு திறந்திருந்தது. வாயிற்புறத்தில் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு இருந்தார்கள். நான் வீட்டிற்குள்ளே நுழைந்தேன். வீட்டிற்குள்ளே நுழைந்த என்னை அந்தப் பெண்கள் தடுக்கவில்லை. திண்ணையில் இருந்தவாறு எந்தவிதச் சலனமும் இன்றி இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் சென்ற நான் தொடர்ந்து வந்த கூட்டத்தினர் என்னைப் பிடித்துவிடாமலிருக்கக் கதவைச் சாத்தினேன். அதற்குள் கூட்டத்தினர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். நான் கதவிடுக்கின் மறைவில் நின்று கொண்டு அந்த வீட்டை ஒரு முறை பார்த்தேன். தாழ்வாரத்திலும் கூடத்திலும் மதுப் புட்டிகள் இறைந்து கிடந்தன. காலி செய்யப்பட்ட புட்டிகளும், காலி செய்யப்படாத புட்டிகளும் ஏராளமாக இருந்தன. அந்த வீடுதான்-கலகக்காரர்கள் சதித் திட்டம் தீட்டிய இடம் என்பதைப் பிறகு புரிந்து கொண்டேன். உள்ளே நுழைந்தவர்கள் கதவின் மறைவில் இருந்த என் தலைமயிரைப் பிடித்திழுத்துத் தெருப்புறத்தில் தள்ளினார்கள். 'க்யூ' வரிசையில் நிற்பது போல நின்று கொண்டிருந்த கலகக்காரர்கள் ஆளுக்கொரு அடி என்னை அடித்தார்கள். நான் மயக்கமுற்றேன். சுருண்டு விழுந்தேன். நான் இறந்து விட்டதாகக் கருதி, சாக்கடை ஓரத்தில் தூக்கியெறிந்துவிட்டுப் போய் விட்டார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்துத்தான் நான் கண் விழித்துப் பார்த்தேன். எங்கேயோ வீட்டுத் தாழ்வாரத்தில் நான் படுக்க வைக்கப்பட்டிருந்தேன். முதிர்ந்த ஒரு தாயும் ஒரு சிறுமியும் ஓர் இளைஞனும் என் அருகே இருந்தார்கள். நான் கண் விழித்துப் பார்த்தபோது அந்தத் தாய் சொன்ன வார்த்தை என் நெஞ்சில் அப்படியே பதிந்து விட்டது.

"ஐயோ, யார் பெற்ற பிள்ளையோ! இப்படிச் சாகக் கிடக்கிறதே?" என்பதுதான் அந்தத் தாயின் வாயிலிருந்து வந்த கனிவு மிக்க வாசகம்.

நீண்ட நாள் வரை தேடிக் கொண்டிருந்தேன்; புதுவையில் எனக்கு உயிரளித்த அந்த நல்லவர்கள் யாரென்று. அதற்குப் பிறகு நான் அவர்களை இரண்டொரு முறைச் சந்தித்தேன் தஞ்சை மாவட்டத்தைச்சேர்ந்த குடும்பத்தினர் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

இதற்கிடையில் காலியில் கலைக்கப்பட்ட கழக மாநாடு மீண்டும் மாலியில் கூட்டப்பட்டு அழகிரிசாமி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர். அப்போது அவர் சொன்ன வாசகம்தான், "காலியில் சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப் பட்டேன்—நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்பதாகும்.

என்னுடைய நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவர்கள் ஊரெல்லாம் ஆள் அனுப்பித் தேடியிருக்கிறார்கள். பெரியாரும், அண்ணாவும் என்னைக் காணாமல் துடித்துப்போயினர். விடியற்காலை நாலு மணிக்கு தலைவர்கள் தங்கியிருக்கும் இடம் தெரிந்து

அவர்களிடம் போய்ச் சேரப் புறப்பட்டேன். மீண்டும் என்னைத் தெருவில் கண்டால் கலகக்காரர்கள் உயிரைப் பறித்துவிடக் கூடுமென்று அஞ்சிய எனக்கு உதவி செய்த வீட்டார் என்னை மாறுவேடத்தில் போகுமாறு வலியுறுத்தினர். அவர்களே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து, மூஸ்லீம் வேடத்தில் என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் இவைகளுடன் ரிக்ஷா ஏறி தலைவர்கள் இருக்குமிடம் சென்றேன். பெரியார் கண்ணுறங் காமல் என்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந் திருந்தார். என்னைக் கண்டதும் ஆரத் தழுவிக்கொண்டு, ''சுகமாக இருக்கிறயா?'' என தழுதழுத்த குரலில் கேட்டார்.

அதற்குப் பிறகு அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். ''என்னுடன் வா, போகலாம்'' என்று ஆணையிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பெரியாரின் ஈரோட்டுக் 'குடியரசு' அலுவலகத்தில் துணையாசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. என் இனிய நண்பர் கருணானந்தம், ஜனார்த்தனம், தவமணி ராஜன் ஆகியோர் குடியரசு அலுவலகத்தில் பணியாற்றி வந்த காலம் அது.

திருவாரூர் சென்று வீட்டாரிடம் விடை பெற்று கருணானந் தத்தையும் வழித்துணையாக அழைத்துக் கொண்டு ஈரோடு புறப் பட்டேன். அன்று என்னுடன் முதன் முதலாகப் பிரயாணம் செய்தவர் தொடர்ந்து பல ஆண்டு என்னுடன் பயணம் செய்து கொண்டிருந்தார்.

''குடியரசு துணை ஆசிரியனாக இரு!'' என்று பெரியார் பணித் ததோடு மட்டுமல்லாமல் அந்த இதழில் என்னைக் கட்டுரைகள் எழுத அனுமதித்து, அதனைப் படித்து மகிழ்ந்தார். எனக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம், அதில் பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக இருபது ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டி, மாலைச் சிற்றுண்டிக்கு மாதம் பத்து ரூபாய் ஆகிவிடும். இதரச் செலவுகள் ஐந்து ரூபாய். மீதம் ஐந்து ரூபாயை என்னை

அண்டி வந்த அருமை மனைவிக்கு— பத்மாவிற்கு மாதந்தோறும் திருவாருருக்கு மணியார்டர் செய்து வந்தேன்.

எப்படியோ பிள்ளை சம்பாதிக்கிறான் என்று என்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் உற்ற சகோதரிகளுக்கும் பெருமகிழ்ச்சிதான்.

கருணானந்தம், தவமணி, ஜனார்த்தனம் மூவரும் பெரியாரின் பழக்க வழக்கங்களில் மிகவும் ஒட்டிப் போனவர்கள். என்னால் அது முடியவில்லை. நாள்தோறும் அதுவும் காலையில் நான் குளித்து விடுவேன். தூய்மையான உடை அணிவேன். இது அந்த நண்பர்களால் பெரிய குற்றமாகக் கருதப்பட்டது. இதெல்லாம் பெரியாருக்கு விரோதமாகச் செய்கிற காரியங்கள் என்றுகூட அந்த நண்பர்கள் என்னை அடிக்கடி பயமுறுத்தினார்கள். ஒரு நாள் பெரியார் என்னைக் கேட்டேவிட்டார்.

"என்ன, குளிக்கிறயா நீ? பிறகு எப்படி வேலை செய்வது?" என்பது தான் அவர் கேள்வி.

"குளிப்பதும் ஒரு வேலைதான். அதைக் காலையில் முதல் வேலையாகச் செய்துவிட்டுப் பிற மற்ற வேலைகளையும் நான் கவனிக்கிறேன் அய்யா!" என்று பெரியாரிடம் சொன்னேன்.

அவருக்கு என்மீது ஏற்கெனவே ஏற்பட்டிருந்த தனிப்பட்ட அன்பினால் என் பதிலைப் பொறுத்துக் கொண்டார்.

காலை எட்டு மணிக்கெல்லாம் பெரியார் வீட்டில் அவர் முன்னால் அமர்ந்து-அன்று வருகிற தபால்களை அவர் பார்த்து அது பற்றிய விளக்கங்களை அறிவித்து-அதனைச் செயல்படுத்துகிற வழிவகைகளை நாங்கள் தொடங்கிவிட வேண்டும். பிறகு அலுவலக வேலை. மாலையில் பெரியார் அலுவலகம் வருவார். அது வரையில் விழித்துக் கொண்டு, வேலை பார்த்துக்கொண்டிருக்கும் நண்பர் ஜனார்த்தனம் அப்போது தான் தூங்கிக் கொண்டிருப்பார்.

"இவன் எப்போதுமே தூங்குகிறானே?" என்பது பெரியாரின் ஆத்திரமான கேள்வியாக இருக்கும். 'குடியரசு' க்கான தலையங்கத்தை எழுதிவிட்டு-அதனை எங்களிடம் படித்துக் காட்டிவிட்டுப் பெரியார் அலுவலகத்தை விட்டுப் புறப்படுவார். 'குடியரசு'க்குக் கரிவரதசாமி என்பவர் பெயரளவில் ஆசிரியராக இருந்தார். ஒவ்வொரு வாரக் 'குடியரசு' தலையங்கத்தையும் படித்து முடித்துப் பெருமூச்சுவிட்ட பிறகுதான் அவருக்கு நிம்மதி. ஏனென்றால் பெரியார் ஏதாவது சட்ட விரோதமாகத் தலையங்கம் எழுதியிருந்தால் தன் உயிலுக்கல்லவா ஆபத்து என்ற பயம் அவருக்கு!.

'குடியரசு' இதழில் நான் எழுதிய ''அண்ணாமலைக்கு அரோகரா!'' என்ற கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரையாகும் அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை ''தீட்டாயிடுத்து!'' என்ற துணைத் தலையங்கமாகும்.

திருவையாற்றில் தியாகப் பிரம்ம உற்சவம் நடக்கும் பொழுது ஒரு தமிழ்ப் பாடகர் தமிழ்ப் பாட்டு ஒன்றைப் பாடிவிட்டார் என்பதற்காக, அடுத்துப் பாட வந்த ஒரு பாடகர் மேடை தீட்டாகி விட்டது என்று சொல்லி, பிராய்ச்சித்தம் செய்து, அதன் பிறகே பாடினார் என்று வந்த செய்தியையொட்டி நான் எழுதிய துணைத் தலையங்கமாகும் அது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் தமிழுக்கிருந்த பரிதாபகரமான நிலையை இந்த நிகழ்ச்சி குறிக்கும்.

ஒவ்வொரு நாளும் இரவு பெரியார் வீட்டில் உணவு முடிந்ததும், பெரியார் தன் வீட்டு மாடியில் காற்றோட்டமான பகுதியில் எங்களை உட்கார வைத்துக் கொண்டு, சமுதாயச் சீர்திருத்தங்கள், அரசியல் மாற்றங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் விளக்கங்கள் அளிப்பார். எங்களுக்குத் தூக்கம் வருவதைத் தெரிந்து கொண்ட பிறகே அவர் தூங்கக் கிளம்புவார்.

ஓராண்டுக் காலம் 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றிப் பெரியாரிடம் கல்வி கற்கும் மாணவனாக இருந்தேன். அதற்குப் பிறகு கோவையிலிருந்து எனக்கொரு அழைப்பு வந்தது. திரைப்படத்திற்கு வசனம் எழுதவேண்டுமென்ற அழைப்புத்தான் அது. அழைப்பை அனுப்பியவர் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களாவார். என்னுடைய நண்பர் முத்துகிருஷ்ணன் என்பாரின் துணையுடன் கோவை சென்று, திரு சாமியிடம் விவரங்களை அறிந்தேன். கோவை ஜுபிடர் நிறுவனத்தின் சார்பில் எடுக்கப்பட்ட 'ராஜகுமாரி' என்ற படத்திற்கு நான் வசனம் எழுதவேண்டும் என்று கூறப்பட்டது. பெரியாரிடம் தெரிவித்தேன். அவரும், ''போய் வா!'' என்று விடை கொடுத்தார்.

19

அசல் நரிகளிடமிருந்து தப்பினேன்!

என்னுடைய கட்சி வேலைகளுக்கு இடையூறு இல்லாமலிருந்தால் 'ராஜகுமாரி' என்ற திரைப் படத்துக்கு வசனம் எழுத ஒத்துக் கொள்வதாகக் கூறி அதற்குத் திரு. ஏ. எஸ். ஏ. சாமி அவர்களும் ஒப்புதல் அளித்த பிறகு வசனம் எழுதத் தொடங்கினேன்.

அந்தப் படத்தில்தான் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். முதல் முதலாகக் கதாநாயகனாக நடித்தார். கதர் உடையும் கழுத்தில் துளசி மணிமாலையும் துலங்கிடக் காட்சியளிக்கும் காந்தி பக்தரான எம் ஜி. ஆர். அவர்களுடன் எனக்குத் தொடர்பும் நட்பும் தோன்றிய காலம் அதுதான். அண்ணாவின் நூல்களை அவருக்கு நான் கொடுப்பேன். காந்தியின் நூல்களை அவர் எனக்குக் கொடுப்பார். எங்களுக்கிடையே அடிக்கடி விவாதங்கள் நடைபெறும். அவைகளின் முடிவு, பிறகு அவர் கழக அணியில் இருந்ததுதான்!

கோவைக்கு அடுத்த சிங்காநல்லூரில் பத்து ரூபாய்க்கு ஒரு வீடு பிடித்துக் கொண்டு நானும் என் மனைவியும் தங்கியிருந்தோம். திருவாரூரில் இருந்த என் தந்தைக்கு உடல் நிலை சரியில்லை; ஆபத்தாக இருக்கிறது என்று நானும் பத்மாவும் திருவாருருக்கு விரைந்தோம். தந்தை சாவோடு போராடிக் கொண்டிருந்தார். பெரிய அளவில் வைத்திய உதவிகளைச் செய்ய வசதியான நிலையில் குடும்பம் இல்லை. உள்ளூர் மருத்துவம்தான். வேறு வழியில்லை. ஏறத்தாழ 15 நாட்களுக்கு மேல் தந்தை மரண வேதனையை அனுபவித்தார். அவர் அருகிலேயே நானும் என் தாயும் உட்கார்ந்திருந்தோம். எத்தனையோ நினைவுகள்! என்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அக்கறை காட்டிய என் தந்தையின் கண்களில் நீர் துளிர்த்தவாறு இருந்தது. அவரால் அதிகம் பேச முடியவில்லை.

"அடுத்த கதை எழுதி முடித்து விட்டாயா?" என்று ஈனசுரத்தில் கேட்டார்.

"இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது" என்றேன்.

"நான் என் கதையை முடிக்கப் போகிறேன்" என்று சொன்னார். சாவுப் பிடியிலும் அவரது இயல்பான இலக்கியச் செழுமை அழிந்து விடவில்லை.

ஒரு மாதத்திற்கு முன்புதான் நான் எழுதி வெளி வந்திருந்த 'ராஜகுமாரி' படத்தைக் காண அவர் விரும்பினர். அவருக்கோ கண் ஒளி சரியில்லை. ஆயினும் படத்தைப் பார்க்கா விட்டாலும் வசனங்களைக் கேட்கவாவது வருகிறேன் என்று திருவாரூர் தியேட்டரில் வந்து படத்தைப் பார்த்துவிட்டு,, அல்ல-அல்ல-கேட்டு விட்டு வந்தார். நான் எழுத்தாளனை வேண்டும் என்பதில் அவ்வளவு ஆசை அவருக்கு. அந்த ஆசைகள் அலைமோதும் உள்ளத்தோடு அவர் மலையென மரணப் படுக்கையில் சாய்ந்து கிடந்த காட்சியை எங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆயினும் இயற்கை தன் வேலையைச் செய்யத் துடித்துக் கொண்டிருந்தது. நாங்களெல்லாம் அவர் அருகில் அமர்ந்திருந்தபோது திடீரென அவர் உடல் நிலை மிகக் கவலைக் கிடமாயிற்று. நான் மருத்துவரை அழைத்து வர ஓடினேன்.

மருத்துவர் வடிவேலு என்பவர் மருத்துவ மாநாடு ஒன்றினை தலைமை வகித்து நடத்திக் கொண்டிருந்தார். நான் போய் மாநாடு நடைபெறும் அரங்கில் அமர்ந்தேன். என்னைப் பார்த்ததும் தலைமை வகித்துக் கொண்டிருந்த வடிவேலு என்னை மாநாட்டில் பேசுமாறு பணித்தார். ஒரு கணம் தந்தையை மறந்தேன். அம் மாநாட்டில் பேசத் தொடங்கினேன். நான் வந்த வேலையை மருத்துவர் வடிவேலுவிடம் சொல்லவில்லை. பேசிக் கொண்டே யிருந்தேன். நண்பன் தென்னன் உள்ளே ஓடோடி வந்தான். மாநாட்டுத் தலைவர் காதில் ஏதோ சொன்னான். தலைவர் என் கையில் ஒரு சீட்டை எழுதிக் கொடுத்தார். என் தந்தை காலமாகி விட்டார் என்ற செய்திதான் அந்தச் சீட்டில் இருந்தது. பேச்சை முடித்துக் கொண்டு வீட்டிற்கு ஓடி வந்தேன்.

என்னை அணைத்தும்-மகிழ்ந்தும்-அன்பொழுகப் பேசியும்– கண்டித்தும்-கனிவு காட்டியும் வளர்த்த என் தந்தை நீண்ட துயில் கொண்டு விட்டார். தன் கணவரிடத்தில் உயிரையே வைத்திருந்த என் தாயின் தாலியை ஏன்தான் பிரித்துக் கொண்டாரோ தெரியவில்லை. எப்படியோ எங்கள் குடும்பத்து ஆலமரம் சாய்ந்து விட்டது. நாங்கள் ஆலையிலிட்ட கரும்பானோம்.

> "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்"

என்று வள்ளுவர் பாடினார். தன் மகனை அவையில் முதன்மையான வனாக ஆக்க முயல்வது தான் தந்தை செய்திட வேண்டிய கடமை யாகும் என்பது இதற்குப் பொருள். அந்த முயற்சியில் என் தந்தை ஈடுபட்டது உண்மை. அதன் விளைவினை-வெற்றிக் கனியினை அவர்

கண்டிடவில்லை. ஆனால் அவரது தொடக்க முயற்சி என்னை மனிதனாக்கியது என்பதனை எண்ணுந்தோறும் என் கண்கள் அருவிகளாகின்றன.

மகனுக்குத் தந்தை ஆற்ற வேண்டிய கடமையுடன் திருவள்ளுவர் தனது அறிவுரையை நிறுத்திக் கொள்ளவில்லை. அந்தத் தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய உதவி என்ன என்பதையும் வரையறுத்துக் காட்டியிருக்கிறார். மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய உதவி என்ன? தள்ளாத காலத்தில் அவரைத் தன்னோடு வைத்துக் கொண்டு தான் பெறும் ஊதியத்தில் பாதுகாப்பதா? அல்ல! அல்ல! அது மட்டுமல்ல. ஆடம்பரமான மாளிகையில் தந்தையை அமர வைத்து அகமகிழ்வு கொள்வதா? அல்ல! அல்ல! தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய கடமை வேறு ஒன்றிருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் குறள் எழுதியவர்.

மகனின் பெருமை கண்டு உலகத்தார் நேரடியாக அந்த மகனைப் பாராட்டாமல், இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தாரோ என்று வியப்படையுமாறு செய்வது தான் மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமையாகும். இதற்குக் குறள்:

> ''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
> என்நோற்றான் கொல் எனும்சொல்''

என்பதாகும். இந்தக் குறளில் முழுப் பொருளையும் நிறைவு செய்து விட்டேனே? இல்லையெனில் நிறைவு செய்வதுதான் காலமெல்லாம் எனக்காகக் கவலைப்பட்ட என் தந்தைக்கு நான் செய்யக்கூடிய கைம் மாறாகும்.

தந்தையின் ஈமக் கடன்களை முடித்துவிட்டு நானும் துணைவி பத்மாவும் மீண்டும் கோவை சிங்காநல்லூருக்குச் சென்றோம். சிங்கா நல்லூரில் நாங்கள் இருந்த வீடு இரயிலடியிலிருந்து இரண்டு கல் தொலைவிற்கு மேல் இருக்கும். இரவு 12 மணிக்கு இரயிலடியில் இறங்கினோம். நின்று கொண்டிருந்த இரண்டு குதிரை வண்டிகளை, முந்திக் கொண்டவர்கள் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். வேறு வண்டி எதுவும் இல்லை. திகைத்து நின்றோம். பிறகு பெட்டி படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு நடந்தே செல்வது என்று தீர்மானித்தோம்.

இரயில் நிலையத்துக்கும் சிங்காநல்லூர் நகருக்கும் இடையே உள்ள பாதை பயங்கரமானது. அடிக்கடி வழிப்பறிகள் நடக்கும். அரசியல் எதிர்ப்புக்கள் அந்தப் பாதையில் பல தடவை கொலையில் முடிந்திருக்கிறது. அப்படிப்பட்ட ஆபத்தான பாதையில் நள்ளிரவில் நானும் என் மனைவியும் ஒருவருக்கொருவர் துணையாக நடந்து கொண்டிருந்தோம். என் மனைவி தலையில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கையில்

பைகளையும் கூஜாவையும் தூக்கிக் கொண்டாள். நான் படுக்கையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு மூட்டை முடிச்சுக்களை கையில் எடுத்துக் கொண்டேன். அந்தக் காட்சி இன்னும் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது.

நான் வறுமையோடும், வாழ்க்கை வசதியற்ற தன்மையோடும் கஷ்டப்பட்ட நாளில் எல்லாம் என் மனைவி பத்மா இன்முகத்தோடு அவைகளில் பங்கு கொண்டாள். என்னோடு சேர்ந்து வாழ்க்கைப் போராட்டத்தைச் சமாளித்தாள். சிதம்பரத்தில் வசதி மிகுந்த குடும்பத்தில் பிறந்து, பெரிய வீட்டில் வளர்ந்து, என்னுடன் குருவிக்கூடு போன்ற சிறு அறையில் அவள் வாழ்க்கை நடத்த முக மலர்ச்சியோடு ஈடுபட்டதை எப்படித்தான் நான் மறக்க முடியும்? அந்த குருவிக்கூட்டு வாழ்க்கை அவ்வளவு இன்பமாக இருந்தது. இன்பத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் ஏற்படுகிற மகிழ்ச்சியை விடத் துன்பத்தைப் பங்கிட்டுச் கொள்வதில் உள்ளத்திற்கு எவ்வளவோ ஆறுதல

கடுமையான உணவு நெருக்கடி இருந்த காலம் அது. பையைத் தூக்கிக் கொண்டு ரேஷன் கடைகளுக்குத்தான் செல்ல வேண்டும். புழுத்துப் போன அரிசிதான் கிடைக்கும். கொஞ்சம் நல்ல அரிசி வாங்குவது என்றால் பக்கத்தில் உள்ள கோவைக்குச் செல்ல வேண்டும். அன்றாடம் அரிசி வாங்கிக் கொண்டு வந்து தருகிற பொறுப்பை நண்பர் எஸ். ஏ. ராசமாணிக்கம் ஏற்றுக் கொண்டார். அவர் அப்போது கோவையில் எனக்குக் கிடைத்த கட்சி நண்பர். அவர் அரிசி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தால்தான் அன்றைக்குச் சாப்பாடு. இல்லையேல் சிற்றுண்டிச் சாலையில் எடுப்புச் சாப்பாடுதான்.

சிங்காநல்லூரிலிருந்து கோவைக்குச் செல்ல பஸ்கள் உண்டு என்றாலும் இடம் கிடைப்பது அரிது. குதிரை வண்டியில்தான் செல்ல வேண்டும். ஒரு வண்டியில் ஆளுக்கு இவ்வளவு கட்டணம் என்று பேசிக் கொண்டு பல பேர்கள் ஏறிக்கொள்வதுண்டு. அப்படித்தான் நாங்கள் கோவைக்குச் செல்வோம்.

ஒரு நாள் மனைவி பத்மாவிற்குக் கடுமையான காய்ச்சல். ஏன் தெரியுமா? மாவு அரைப்பதற்காக அரிசி மூட்டையை அவளே தலையில் தூக்கிக்கொண்டு இரண்டு பர்லாங் தொலைவிலுள்ள மில்லுக்குப் போய் வந்ததை நான் பார்த்துவிட்டேன்.

"யாராவது ஆட்களிடம் கொடுத்தனுப்பக்கூடாதா?" என்று ஆத்திரத்தோடு கேட்டேன். அதற்காகும் செலவை அவள் கணக்கிடடுச் சொன்னாள். இருந்தாலும் அவள் அப்படிச் செய்தது எனக்குப் பிடிக்கவில்லை. அடித்துவிட்டேன். அதன் விளைவுதான் காய்ச்சல். அன்று எனக்கு ஸ்டுடியோவில் ஒரு கதை விவாதம். முடிவதற்கு இரவு

ஒரு மணிக்கு மேலாகிவிட்டது. வீட்டிற்கு வரவேண்டும். ஸ்டுடியோவி லிருந்து ஒரு கார் மூலம் என்னை அனுப்ப திரு ஏ.எஸ்.ஏ. சாமி முயற்சி செய்தார். ஆனால் டிரைவர்கள் யாரும் இல்லை. ஸ்டுடியோவிலேயே படுத்துவிட்டுக் காலையில் போகலாம் என்று சொன்னார். கர்ப்பச்சலோடு மனைவியை வீட்டிலே விட்டு விட்டு நான் எப்படி ஸ்டுடியோவில் தூங்க முடியும்? போய்த்தான் தீரவேண்டுமென்று புறப்பட்டேன். நல்ல இருட்டு. மழைத் தூறல் வேறு! அந்த இரண்டொரு மைல்களை நடந்தே கடக்க எண்ணி வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தேன்.

அதற்கு முதல் நாள்தான் நான் செல்லும் வழியில் ஒரு பயங்கர மான அரசியல் கொலை நடைபெற்றது. ஒரு மைல் தூரம் நடந்திருப் பேன். இருமருங்கிலும் உள்ளப் புதர்க் காடுகளிலிருந்து ஐந்து, ஆறு நரிகள் ஒன்றுக வந்து சாலை நடுவே உட்கார்ந்து கொண்டன. எனக்குப் பின்னால் திரும்பி ஓடவும் முடியவில்லை; முன்னால் அடிபெயர்த்து வைக்க வும் முடியவில்லை! நரிகளிடம் சிக்கிக் கொண்டால் அவைகள் ஆளைச் சூழ்ந்து கொள்ளும் என்பதும் மண்ணை வாரி இறைத்து மனிதனை வீழ்த்தி விடும் என்பதும் வீழ்ந்த மனிதனை அவைகள் என்ன செய்யும் என்பதும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு கணம் என்னை மறந்து நின்றேன். திடீரென ஓர் இராணுவ லாரி எதிரே வந்தது. அதன் பேரிரைச்சலிலும் விளக்கொளியிலும் நரிகள் மிரண்டு ஓடிப் புதருக் குள் புகுந்து கொண்டன. நான் அங்கெடுத்த ஓட்டம் சிங்காதல்லூரில் வீடு போய்த்தான் நிற்றேன்.

மாலையில் என் கையால் அடிபட்ட மனைவி, வாசல் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அந்தக் காரிருளில் என் வருகையை எதிர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். உடம்பெல்லாம் நெருப் பாகக் கொதித்தது அவளுக்கு. எனக்கு வீடு வாடகைக்கு அளித்த நண்பர் அண்ணுசாமியின் உதவியைக் கோரி மருத்துவ உதவி பெற்று மனைவியின் உயிரை அப்போது காப்பாற்றினேன்.

அந்தக் குருவிக் கூட்டினுள்ளே உட்கார்ந்து கொண்டு நான் எழுதிக் குவித்தவைகள் ஏராளம். 'அபிமன்யு' என்கிற புராணப் படத்திற்குப் புதுமையான வசனங்களை எழுதுகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தப் படம் வெளிவந்தபோது என் மனைவியையும் நண்பர் களையும் அழைத்துக் கொண்டு, திரையரங்கிற்குச் சென்றேன். ஆனால் அந்தப் படத்தில் நான் எழுத்துப் பணியாற்றிய செய்தி திரையில் விளம்பரப்படுத்தப்படவே இல்லை!

20

சங்கிலியை விற்றுக் கடனை அடைத்தேன்

ஓர் எழுத்தாளன் தான் எழுதுவதற்குப் பெறுகிற பணத்தை விட அதற்குக் கிடைக்கிற விளம்பரத்தையும், புகழையும் தான் அதிகமாக விரும்புவான். அந்த நிலை எனக்கு விதி விலக்கல்ல. உளிளம் குமுறியது. மறுநாள் பட அதிபரிடத்திலே சென்று, ''திரையில் என் பெயர் ஏன் போடப்படவில்லை?'' என்று கேட்டேன்.

''கொஞ்சம் பொறு, உனக்கு விளம்பரம் கிடைத்த பிறகு போடு கிறேன்'' என்று அவர் சொன்னார்.

அந்தப் பதில் எனக்கு வேடிக்கையாக இருந்தது. என் விழிகளைக் குளமாக்கிற்று. உடனே வீட்டைக் காலி செய்து விட்டுத் துணைவியுடன் திருவாரூர் திரும்ப முடிவு கட்டினேன்.

நான் கோவையிலிருந்து செல்வதைக் கட்சி நண்பர்கள் யாரும் விரும்பவில்லை. காரணம் நான் அங்கிருந்தபோது நாள்தோறும் கூட்டங்கள், கழக நண்பர்களின் திருமண விழாப் பேச்சுக்கள் என்ற அளவில் கட்சிப் பணியாற்றி வந்தேன்.

விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அவர்களிடம் அப்போது மாணவர் விடுதிக் காவலராகப் (Warden) பணியாற்றி வந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் நானும் ஐந்து மைல், ஆறு மைல் தூரம் நடந்து சென்றே கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோம். ஒரு முறை கோவை யிலிருந்து குணியமுத்தூர் திருமணம் ஒன்றிற்குச் செல்ல வாகன வசதி யில்லை. கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டே நாங்கள் அந்த ஊருக்கு நடந்தே சென்று திரும்பி வந்தோம். இன்று கோவை சிதம் பரம் பூங்காவில் கூட்டமென்றால் அந்த மைதானமே கொள்ளாத அளவிற்கு இலட்சக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். அன்றே காந்தி சதுக்கம் என்கின்ற சின்னஞ்சிறு வெளியில்தான் கூட்டம் நடைபெறும். ஆயிரம் பேர் கூடுவார்கள். அதுவே எங்களுக்கு ஐந்து லட்சமாகத் தெரியும். கட்சியின் வளர்ச்சியைத் திரும்பிப் பார்க்கும்போது எவ்வளவு பெருமிதம் ஏற்படுகிறது!

கட்சி நண்பர்களுக்கு எப்படியோ சமாதானம் சொல்லி விட்டு நான் திருவாரூர் திரும்பி விட்டேன். ஒரு பெரிய திரைப்பட நிறுவனத் தாரிடம் கோபித்துக்கொண்டு திரும்புகிறோமே என்ற கவலையோ,

அவர்களுடைய வெறுப்பிற்கு ஆளாகிறோமே என்கிற சஞ்சலமோ இல்லாமல் இனி என்ன செய்வது என்பதைப் பற்றி நினையாமல், திருவாரூர் சென்றேன். படத்திற்கு எழுதுவது நின்று பத்திரிகைகளுக்கு எழுதுவது, நாடகங்கள் எழுதுவது என்ற அளவில் என் பணி நடை பெற்றது.

அப்போது திருவாரூரில் தேவி நாடக சபையார் முகாமிட்டிருந்தனர். அவர்கள் புகழ் பெற்ற நவாப் ராசமாணிக்கம் நாடகக் கம்பெனியிலிருந்து பிரிந்து வந்த சக்தி நாடக சபையிலிருந்து பிரிந்தவர்கள். அவர்கள் என்னிடம் ஒரு நாடகம் கேட்டனர், குண்டலகேசியை அடிப்படையாக வைத்து, இலக்கியச் செறிவு சிறிதும் குறையாமல் 'மந்திரி குமாரி' என்ற நாடகத்தை எழுதினேன். அது திருவாரூரில் அரங்கேற்றப்பட்டது. அடுத்து அந்த நாடகம் குடந்தையில் நடைபெற்றது. மிக வெற்றிகரமாகக் குடந்தை மாநகரில் நடந்த அந்த நாடகம் மக்களால் விரும்பப்பட்டது. அதனுடைய வெள்ளி விழாவிற்கு என்னை அழைத்திருந்தார்கள். பாராட்டுவதற்குப் பல பெரியவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். விழாவில் கலந்து கொள்ள நானும், என் மனைவி பத்மாவும் சென்றிருந்தோம்.

அப்போது அவள் கருவுற்றிருந்தாள். ஆம், என் மூத்த மகன் முத்து அவள் வயிற்றில் அமைதியாக இருந்தான். நாடகம் முடிவுற்றது. பலரும் பாராட்டுரை வழங்கிக் கொண்டிருந்தார்கள். நானும் பேச வேண்டுமென்று கூறினார்கள். நான் ஒப்புக் கொண்டிருந்தேன். என் அருகே என் மனைவி உட்கார்ந்திருந்தாள். கும்பகோணத்தில் ஒரு வெற்றிலை பீடா விற்கப்படுவது உண்டு. அதில் சுண்ணாம்பை மொத்தமாக வைத்து விடுவார்கள். பிரித்துப் பார்த்துத் தேவையான அளவை வெற்றிலையில் தடவிப் போட்டுக் கொள்ள வேண்டும். என்னிடம் ஒரு பீடாவைக் கொடுத்ததும் எனக்கு அந்தச் சூட்சுமம் புரியாமல் அப்படியே வாயில் போட்டுக் கொண்டேன். உள்ளேயிருந்த மொத்த சுண்ணாம்பும் என் வாயை வேக வைத்து விட்டது. நாவிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டேயிருந்தது. நாக்குத் தடித்துவிட்டது. வாயை மூட முடியவில்லை. பிறகு நான் எப்படிப் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேச முடியும்? என் நன்றியுரை இல்லாமலேயே பாராட்டு விழா முடிந்தது.

துண்டுத் தாளாக வெளியிட்டுக் கொண்டிருந்த 'முரசொலி'யை வார இதழாகத் திருவாரூரிலிருந்து வெளியிடலாம் என்று திட்டமிட்டேன். வீட்டிலிருந்த நகை நட்டுக்களை அடகு வைத்து வாரப் பத்திரிகை தொடங்கினேன். திருவாரூரில் திரு கருணை ஜமால் அவர்களை உரிமையாளராகக் கொண்ட கருணாநிதி அச்சகத்தில் 'முரசொலி' அச்சடிக்கப்பட்டது. பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அதில்

வரும எழுத்துக்களே வியக்காதாரில்லே. வாழ்த்துக் கடிதங்கள் குவிந்தன. ஆனல் விற்பனேயாளரிடமிருந்து பணம்தான் வந்து சேர வில்லே. வாரந்தோறும் பத்திரிகை வெளியிடுவது என்பது ஓர் அறுவைச் சிகிச்சைப் பிரசவமாகவே இருந்தது.

அச்சக உரிமையாளர் ஒரு வாரம், இரண்டு வாரம் கடனேப் பொறுத்துக் கொண்டார். மூன்ருவது வாரம் அவரால் பொறுத் துக் கொள்ள முடியவில்லே. என்ன செய்வது? அவர் நிலே அப்படி? என் மனேவி போட்டிருந்த தாலிச் சங்கிலியைத் தாலிக் கயிருக மாற்றிவிட்டு, அந்த சங்கிலியை விற்று இரண்டு வாரக் கடனே அடைத்து, மூன்ருவது வாரப் பத்திரிகையை 'டெலிவரி' எடுத்தேன். விசயபுரம் என்ற பகுதியில் அச்சகத்தில் அச்சடிக்கப்படுகிற பிரதிகளேத் திருவாரூர் அலுவலகத்திற்குக் கொண்டு வர ஆள் வைக்கவோ வண்டி வைக்கவோ என்னிடம் வசதிகள் இருந்ததில்லே. இரவோடு இரவாக அவைகளே நானும் பத்திரிகை மானேஜர் கனகசுந்தரமும் தலேயில் தூக்கிக்கொண்டு வருவோம். ஆற்றைக் கடக்க அப்போது ஒரு மூங்கில் பாலம் இருந்தது. அந்தப் பாலத்தின் வழியாகப் பத்திரிகைகளேத் தூக்கிக்கொண்டு அலுவலகம் வருவோம். நாங்கள் இருவரும் இரவெல் லாம் உட்கார்ந்து விற்பனேயாளர்களுக்கும். சந்தாதாரர்களுக்கும் ஒட்டி அனுப்புவோம். இப்படி எத்தனே நாளேக்கு ஒரு பத்திரிகையை நடத்த முடியும்? பத்திரிகை வாழ்வதா, சாவதா என்ற போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தபோது, என் வாழ்க்கையிலும் ஒரு பெரும் போராட்டம் ஆரம்பித்து விட்டது. அதுதான் என் மனேவியின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய போராடடம். இந்தப் போராட்டங்களுக்கு முன்பு நான் எதிர்பாராத அரசியல் போராட்டம் வேறு.

1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. லாலா லஜபதிராயும் லோகமான்ய பாலகங்காதர திலகரும், காந்தியடிகளும், பண்டித நேருவும், வல்லபாய் படேலும், சுபாஷ் சந்திர போசும், பெரியாரும், திரு.வி.க.வும், வ.உ.சிதம்பரனரும், பாரதியும் இல்லட்சோப லட்சம் புடம் போட்ட தியாகிகளும், எழுப்பிய விடுதலேக் கனலுக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட்டது. வெள்ளேயன் இந்தியாவிற்கு விடுதலே கொடுத்தான். பாகிஸ்தானுக்குக் குரலெழுப்பிய ஜின்னுவிற்கும் வெற்றி கிடைத்தது.

இந்தியா விடுதலே பெற்ற நானேப் பெரியார் துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று அறிக்கை விட்டார். ஆனல் அறிஞர் அண்ணு அவர்கள், 'அது துக்க நாளல்ல; ஆகஸ்ட் 15 இன்ப நாள்' என்று அறிக்கை விடுத்தார். ''உலகம் முழுவதும் கூர்ந்து கவனிக்கும் ஒரு மகத்தான திகழ்ச்சியை நமது கொள்கையை மட்டும் அளவு கோலாகக் கொண்டு அளந்து பார்ப்பது சரியாகாது. ஆகஸ்ட் 15-ம்

நாள் இரண்டு நூற்றுண்டுகளாக இந்தத் துணைக் கண்டத்தின்மீது இருந்து வந்த பழிச் சொல்லை, இழிவை நீக்கும் நாள் அது திராவிடருக்குத் திருநாள்" என்று அண்ணா ஆணித்தரமாகக் கூறினார் ஆகஸ்ட் 15-பற்றிய பெரியாரின் கருத்தை வரிக்கு வரி மறுத்தார். இதனால் திராவிடர் கழகத்தில் பெரும் பிளவு ஏற்பட்டது.

அப்போதுதான் தூத்துக்குடியில் கழக மாநில மாநாடு மிகப் பெரிய அளவில் ஏற்பாடாயிற்று. இந்த மாநாட்டிற்கு அண்ணா வரவில்லை! பெரியார், அண்ணா மனக்கசப்பு மேலும் மேலும் வளரலாயிற்று. பெரும் தலைவர்கள் இருவரின் இடையே ஏற்பட்ட கசப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நல்லவர்கள் சிலரும் இரு கூருகப் பிரிந்து நின்றார்கள். கட்சிக்கென ஒரு துரும்பை எடுத்துப் போடாதவர்களும், அந்தக் கசப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தாங்கள் வளரலாம் என்று மனப்பால் குடித்தனர்.

அண்ணாவைக் கட்சியிலிருந்து விலக்க வேண்டுமென்று ஆர்ப் பாட்டங்கள் செய்தார்கள். தூத்துக்குடி மாநாட்டில் அண்ணாவின் படத்தைக்கூட ஆத்திரப்பட்ட சில அவசரக்காரர்கள் கொளுத்தினர். இந்தச் செய்திகளை எல்லாம் கேள்விப்பட்ட அண்ணா புன்னகை புரிந்தார். பெரியாருக்கும் அண்ணாவிற்கும் இடையே பாலம் அமைக்கப் பட வேண்டுமென்ற கருத்தில் 'முரசொலி' வார இதழில் 'கடைசி நாட்கள்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரை எழுதினேன். பெரியாரையும் அண்ணாவையும் ஒன்று சேர்க்கும் முயற்சிக்கு இடையூறாக நிற்கின்ற சந்தர்ப்பவாதிகளைப் பற்றி எல்லாம் அதில் நான் விமரிசித்திருந்தேன். அந்தக் கட்டுரைக்குத் திராவிடர் கழகத்தில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. 'முரசொலி' இதழைப் பல இடங்களில் கொளுத்தினர். பயமுறுத்தல் கடிதங்கள் பல வந்தன. அடுத்த இதழை அச்சேற்ற முடியாதபடி திராவிடர் கழகத்தினர் எனக்கு இடையூறு விளைவித்தனர்.

இந்தக் கட்சிப் போராட்டத்தின் இடையேதான் என் மனைவியின் உயிரை மீட்கும் போராட்டத்தில் நான் ஈடுபட வேண்டியவனானேன். பிள்ளைப் பேற்றிற்காக என் மனைவியை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல, வீட்டார் முற்பட்டார்கள்.

பத்மாவுக்கு இரண்டு நாட்களாகவே சிறிதளவு காய்ச்சல் இருந்தது. அதனால் அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள். மருத்துவ மனைக்கு அவளை அழைத்துச் செல்ல வாசலில் குதிரை வண்டி தயாராக நின்றது. எங்கள் குல தெய்வமாக வீட்டில் வழிபட்டு வந்த பெரிய தாயாரின் செல்லப் பெட்டியிடம் குத்து விளக்கு ஏற்றி வைத்து வழிபடச் செய்து மெதுவாக அழைத்துக் கொண்டு தெருப் பக்கம் வந்தார்கள். ஏனோ தெரியவில்லை. அவள் கண்களில் இருந்து பொல பொலவென்று நீர் கொட்டியது.

நான் அவளைக் கவலையோடு கவனித்துக்கொண்டு நிற்பதை அவள் பார்த்து விட்டாள்.

21

போய் வருகிறேன் என்றுள் என் பத்மா

என் மனைவி பத்மாவின் கலங்கிய விழிகள் என்னைக் கண்டு பிடித்து விட்டன. காய்ச்சல் களைப்பிலும், பிரசவ வேதனை வலியிலும், ஏதோ இனந் தெரியாத சோகத்திலும் மூழ்கியிருந்த அவள் என்னைப் பார்த்துத் தழுதழுத்த குரலில், ''போய் வருகிறேன்'' என்றாள். அவள் என்னிடம் விடை பெற்றுக் கொண்டது மருத்துவ மனைக்குத்தானா? இல்லை! இல்லை!

'ஆ! ஊ!' என்ற நோயாளிகளின் அலறலும், 'அம்மா! அய்யோ! என்ற கூச்சலும், டாக்டர்கள், நர்சுகளின் நடமாட்டங்களும் நிறைந்த அமைதியற்ற மருத்துவ மனைக்குச் செல்ல அவள் என்னிடம் விடை பெற்றுக்கொள்ளவில்லை. அமைதி நிறைந்த ஓர் இடத்துக்கு அவள் என்னிடம் விடை பெற்றுக் கொண்டுதான் அப்படிக் கண்ணீர் விட்டிருக்கிறாள்

தான் தைரியமாக இல்லாவிட்டாலும் நோய் நொடி விஷயங்களில் மற்றவர்களுக்குத் தைரியம் கூறும் என் தாயாரின் முகமும் சரியாக இல்லை. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பத்மாவுக்கு மறுநாளே குழந்தை பிறந்தது.

இப்போது என்னைவிட உருவத்தில் ஒரு பங்கு அதிகப் பெரிய வனுக இருக்கும் முத்து, சின்னஞ்சிறு பிஞ்சாக, பத்மாவின் அருகில் படுத்திருந்தான். தன் அரவணைப்பில் உள்ள குழந்தையையும் என்னையும் மாறி மாறிப் பார்த்தவாறு பத்மா புன்னகை புரிந்தாள். அதுதான் அவளது கடைசிப் புன்னகை என்று எனக்கு அப்போது தெரியாது.

இரண்டு நாள் தொடர்ந்தாற்போல் கூட்டங்களுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய என்னிடம், பத்மாவுக்கு விடாமல் காய்ச்சல் அடிக்கிறது என்ற செய்தி கூறப்பட்டது. மருத்துவ மனைக்கு ஓடினேன். அவளால் சரியாகப் பேசமுடியவில்லை. டாக்டர்களிடம் கேட்டேன். அவர்கள் பத்மாவின் ரத்தத்தை எடுத்து கிண்டிக்குச் சோதனைக்காக அனுப்பியிருப்பதாகவும் அந்த முடிவு வந்தால்தான் காய்ச்சலுக்கான காரணம் தெரியுமென்றும் சொன்னார்கள். உடனடியாகக் கிண்டிக்குச் சென்று சோதனை முடிவைத் தெரிந்து வரும் வசதி ஏது எங்களிடம்?

அதற்குள் என் பத்மாவின் உடல்நிலை மிகவும் மோசமாகி விட்டது. நான் மருத்துவமனைத் தாழ்வாரத்திலேயே இரவு பகல் எந்நேரமும் காத்திருந்தேன். இறுதியாக டாக்டர்கள், "இனிமேல் இங்கிருந்து பயனில்லை. வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போய்விடுங்கள்!" என்று கூறிவிட்டார்கள். சென்னைக்கோ, திருச்சிக்கோ அவளை அழைத்துச் சென்று கடைசி வரையில் பார்த்து விடலாம் என்ற வசதி வாய்ப்பு எதுவுமற்ற நிலையில் வீட்டுக்கு அவளை அழைத்து வந்தோம். வீட்டுக்கு வந்ததும் அவள், என் தாயாரை அருகே அழைத்து, "ஏன் அத்தை, என்னை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டீர்கள்? நான் பிழைக்க மாட்டேனா?" என்று அழுத்தந் திருத்தமாகக் கேட்டாள்.

"அதெல்லாம் இல்லையடி என் கண்ணே! உனக்கு ஒரு குறையும் இல்லை!" என்று பத்மாவுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, என் அன்னை மறைவாகப் போய்த் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார்கள்.

"என் பிள்ளைக்கு மாமா பெயரை வையுங்கள்", என்று மரணப் படுக்கையில் இருந்தவாறு அவள் கட்டளை பிறப்பித்தாள்.

கண்களைக் குளமாக்கிக்கொண்டு, அருகே நிற்கும் என்னைத் தனது இளைத்த கரங்களால் பற்றிக்கொண்டு, "கவலைப்படாதீர்கள்; எனக்கு ஒன்றும் இல்லை. இன்னும் பத்து நாளில் சரியாகிவிடும்" என்று அடிக்கடி ஆறுதல் கூறினாள். நானும் அவளும் சிங்காநல்லூரில் நடத்திய வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக என் மனக் கண்ணில் சுழலத் தொடங்கின—

ஒரு நாள் அவளிடம் கோபித்துக் கொண்டு சிங்காநல்லூரில் இருந்து கோவை செல்வதற்காகப் பஸ் நிலையத்துக்குப் போய்க் காத்திருந்தேன்.

மாலை மணி ஆறுக்கு மேல் இருக்கும். பஸ் எதுவும் வரவில்லை, பலருடன் நானும் கியூவில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது, "கொஞ்சம் வாங்களேன்", என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன். தலையில் முக்காடிட்டுக்கொண்டு கையில் ஒரு குவளைக் காப்பியுடன் பத்மா நின்றுகொண்டிருந்தாள். வீட்டுக்கும் பஸ் நிலையத்துக்கும் இரண்டு பர்லாங் தூரம் இருக்கும். நான் கோபத்தில் காபி சாப்பிடாமல் சென்றதை அவளால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. அவளைப் பார்த்ததும் கோபமெல்லாம் பறந்தோடியது. கியூவிலிருந்து வில்கி வந்து அவளை அழைத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

பெண் உள்ளம் எவ்வளவு பொறுமையுடையது. ஆண் நெஞ்சம் எவ்வளவு கடுமையானது என்பதை அன்று உணர்ந்தேன். அந்த நிகழ்ச்சி என் இதயத்தில் எவ்வளவோ பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி

விட்டது. அதற்குப் பிறகு நான் அவளிடம் கோபம் கொண்டதே கிடையாது. அந்தப் பொறுமையின் கருவூலம்தான் என்னைப் பார்த்து பார்த்துப் பெருமூச்சு விட்டவாறு கடைசி மூச்சு விடப் போகிற, நேர்த்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

பாலைக்கலியில் கோடையின் வெப்பம் தாங்காமல் அலைந்து கொண்டிருந்தனவாம் இரண்டு மான்கள்! ஆண் ஒன்று—பெண் ஒன்று தான் வருந்தினாலும் பரவாயில்லை என்று வெய்யிலிலே நின்றுகொண்டு! தன்னுடைய நிழலில் தனது பெண் மானைப் படுக்க வைத்து! இளைப்பாறச் செய்ததாம் ஆண்மான்! இதனை:

''இன்நிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குந்
தன்நிழலைக் கொடுத் தளிக்கும் கலை''

என்று புலவர் பாடுகிறார்.

மான்கூடத் தன் மனைவிக்கு நிழலாக இருந்திருக்கிறது. ஆனால் நானே கொடுமையான வறுமையிலும், கடுமையான நோயிலும் என் மனைவிக்கு நிழலாக இருந்திட முடியவில்லை!

அவள் என் மருமகன்களைத் தன் பிள்ளைகளாகவே பாவித்து அன்பொழுக நடத்தி வந்தாள். மாறன 'மூத்த தம்பி' என்றும், அமிர்தத்தை 'நடுத் தம்பி' என்றும், செல்வத்தை 'சின்னஞ்சிறு தம்பி, என்றும் செல்லமாக அழைப்பாள்.

''எல்லாரும் என் பக்கம் வாருங்கள்'' என்றாள். என் அன்னை! குழந்தை முத்துவுடன் அவளை அருகே நின்றார்கள். மற்றவர்கள் அவளைச் சூழ்ந்து நின்றோம். அவளது சகோதரிகளும், சகோதரர்களும், வந்திருந்தார்கள். அவள் பேசத் தொடங்கினாள்.

மருமகன்களை எப்படிப் படிக்க வைக்க வேண்டும்—மகனை எப்படிக் கண்டிப்பாக வளர்க்க வேண்டும் – குடும்பம் எப்படி ஒற்றுமையாக இருக்க வேண்டும் ஒரே அறிவுரைதான்! பேச்சின் முடிவில் பிரக்ஞை இழந்தாள். மூச்சு மாத்திரம் இழுத்துக் கொண்டிருந்தது.

கிண்டிக்குச் சோதனைக்காக அனுப்பிய ரத்தப் பரிசோதனை முடிவும் இருபது நாட்கள் கழித்து வந்து சேர்ந்தது. ''குதிரை வேக ஷையரோகக் காய்ச்சல்'' என்பதுதான் அந்த முடிவாகும்.

இந்த நிலையில் புதுக்கோட்டையிலிருந்து கட்சி நண்பர் அருணாசலம் என்பவர் திருவாரூர் வந்து சேர்ந்தார். எதற்காகத் தெரியுமா? புதுக்கோட்டையில் ஒரு கூட்டத்தில் பேச ஒப்புக் கொண்டிருந்தேன்; அதற்கு அழைப்பதற்காக!

அவரை இட்டுச் சென்று மனைவியின் நிலைமையைக் காட்டினேன். மூச்சு மட்டுமே இழையோடியவாறு நினைவிழந்து கிடந்த என் பத்மாவைப் பார்த்து அவரும் கோவெனக் கதறியழுதார். பிறகு வாயிற்புறம் வந்ததும் என்னிடம், ''எப்படியாவது புதுக்கோட்டை கூட்டத்திற்கு வந்தால் நல்லது!'' என்று வலியுறுத்தினார். என் மனத்தில் பெரும் போராட்டம்! அந்தக் கடைசி நேரத்திலாவது நான் என் மனைவிக்கு நிழலாக இருந்திருக்கக் கூடாதா? கல் நெஞ்சமா? கடமை உணர்வா? எது வென்றது? எனக்கே தெரியவில்லை.

நண்பர் அருணாசலத்தின் வார்த்தையைத் தட்டாமல் புதுக் கோட்டைக்குப் புறப்பட்டேன். இரவு கூட்டம் முடிந்தது. உடனே என்னை ஊருக்கு அனுப்ப வேண்டும் என்ற கருணை உள்ளம் அவர் களுக்கு! மனைவியை இந்நிலையில் விட்டு விட்டு வந்து விட்டோமே என்ற அவசரம் எனக்கு!

ஒரு லாரி கிடைத்தது. லாரியில் ஏறித் திருவாரூர் வந்து சேர்ந்தேன், மறுநாள் இரவு. வீட்டு வாசலில் ஒரே கூட்டமாக இருந்தது. வீட்டை நெருங்கினேன். அழுகுரல் பலமாக இருந்தது. அப்போதுதான் என் அருமை பத்மா, கடைசியாகக் கண்களை மூடி யிருக்கிறாள். இனித் திறந்து பார்க்க மாட்டாள். அப்போது என்னைத் தேடினாளோ, அல்லது இரக்கமற்றவன் எங்கேயோ போகட்டுமென்று முணுமுணுத்தாளோ - அதெல்லாம் தெரியாது! அருகே சென்று பார்த்தேன். வாழ்க்கைப் போரை இளமையிலேயே முடித்துக்கொண்டு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

மூன்று வருட இல்லற வாழ்வு; அதற்குள் அவளுக்கு அது கசந்து போயிற்று போலும்! என் கண்ணீர்த் துளிகள் அவள் சலனமற்ற முகத்தில் விழுந்து உருண்டன. மெதுவாக அவள் முகத்தின் பக்கம் குனிந்தேன். பக்கத்தில் ஏராளமான பெண்கள் அமர்ந்திருந்தனர். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னுடையவளின் நெற்றியில் முத்தமிட்டேன். அவளுக்குத் தர அந்த ஒன்றுதான் என்னிடமிருந்தது.

அவள் தன் அத்தியாயத்தைத் தனது இருபதாம் வயதிலேயே என் வாழ்க்கைப் புத்தகத்தில் முடித்துக்கொண்டு போய் விட்டாள்.

22

காந்தியார் கண்ட கனவை நனவாக்குகிறோம்

பத்மாவை இழந்த நானும் என் குடும்பத்தாரும் அழுது கொண்டிருந்த அந்த 1948-ம் ஆண்டில்தான் உலகமே அழத்தக்க வண்ணம் உத்தமர் காந்தியாரைக் கோட்கேயெனும் கொடியவன் சுட்டுக் கொன்று விட்டான்.

இந்தியச் சுதந்திரத்திற்காக அரும்பாடு பட்ட காந்தியடிகளார், சுதந்திரம் பெற்ற மக்கள் அந்தச் சுதந்திரத்தை எவ்வாறு துய்த்திட வேண்டுமென்று நேரிடையாக அறிவுரை கூறுவதற்கு வாய்ப்பற்றுப் போயிற்று. வழக்கம்போல் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட காந்தியடிகளைக் கொடியவன் குறி பார்த்துச் சுட்டான். எந்த இதயத்தை இந்திய மக்களுக்காக ஒதுக்கி வைத்து இருந்தாரோ அதில் மூன்று குண்டுகள் பாய்ந்தன. அதே இடத்தில் சாய்ந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அவர் உயிர் அமைதியாகப் பிரிந்தது. மாலையில் வானொலிகள் மூலம் இந்தத் திடுக்கிடும் செய்தியைக் கேட்ட உலக மக்கள் தேம்பித் தேம்பி அழுதனர்.

'இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே உண்மையான நட்பில்லை என்பதைத் தென்னப்பிரிக்காவில் வெகு காலத்திற்கு முன்பே நான் தெரிந்து கொண்டேன். ஒற்றுமைக்குத் தடையாக இருப்பவை களைப் போக்குவதற்குக் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் நான் தவற விடுவதில்லை. முகஸ்துதியாகப் பேசியோ சுயமதிப்பிற்காகப் பாதகமான வகையில் நடந்தோ ஒருவரைச் சமாதானப்படுத்திக் கொண்டு விடுவது என்பது என் சுபாவத்திற்கு விரோதமானது. இந்து—முஸ்லிம் ஒற்றுமை விஷயத்தில்தான் என்னுடைய அகிம்சை கடுமையான சோதனைக்கு உள்ளாக நேருமென்பதை எனது தென்னப்பிரிக்க அனுபவம் எனக்குத் தெளிவாகக் காட்டியிருந்தது' என்பதாகக் காந்தியடிகள் தமது சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் குறிப்பிட்டது உண்மையாகவே ஆகிவிட்டது.

அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து அவர் எத்தனையோ போராட்டங்களை நடத்தினார். உண்ணாவிரதங்கள் இருந்து மரணத்தின் முகப்பு வரை சென்று மீண்டு வந்தார். வெள்ளையனின் துப்பாக்கி, பீரங்கி முனைகளுக்கு நேராக நின்று அவர் விடுதலைக் கொடியைக் கம்பீரமாக உயர்த்திய போதும் அவர் உயிருக்கு ஆபத்து நேரிடவில்லை.

வித்தவையோ துணிவான அறப்போர்களில் அவர் ஈடுபட்ட போதெல்லாம் அவர் உயிரைப் பிரிக்க யாரும் எண்ணியதில்லை. அன்னிய ஆதிபத்தியத்திலிருந்து நாடு விடுதலை பெற்று அவர் விரும்பிய சுதந்திரம் கிட்டிய பிறகு, அவர் கொல்லப்பட்டார்.

யாரால்? அன்னியரால்? அல்ல! இந்துக்களிடமும் முஸ்லிம்களிடமும் ஒற்றுமையை உருவாக்கச் சுதந்திரத்திற்குப் பிறகு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள், சில மதவெறியர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்திய மண்ணிலே பிறந்த ஒருவன், அந்தப் புனிதமான உயிரைப் பறித்துக் கொண்டான். தவறு, தவறு. அந்தப் புனிதமான உயிரை யாரும் பறிக்கமுடியாது. அது இந்தியாவில் உள்ள பல கோடி உயிர்களோடு ஒன்றிவிட்ட உயிராகும்.

ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவை நாடெங்கும் கொண்டாடுகிறோம். அவர் போதித்த அன்பு வழி, அறவழி, அமைதி வழி அனைத்தையும், பழைய தலைமுறையினர் புதிய தலைமுறையினருக்கு எடுத்து விளக்குகிறார்கள். கட்சிச் சார்பற்று அனைத்து மக்களும் காந்தியடிகளின் விழா சிறப்புற அமைய ஊக்கம் காட்டுகின்றனர்.

இந்தியா விடுதலை பெற்ற, ஒன்றைத் தவிர, காந்தியடிகளின் கொள்கை, குறிக்கோள்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டனவா என்றால் இல்லையென்றுதான் பதில் கிடைக்கும். காந்தியடிகளின் எல்லாக் கொள்கைகளும் அனைவருக்கும் உடன்பாடு உள்ளவை தானா என்ற கேள்விக்கு வேறுபாடான விடைகளைத்தான் பெற்றிட முடியும். ஆதாரக் கல்வி, கருத்தடை போன்றவைகளில் காந்தியடிகள் சொன்ன கருத்துக்களைப் பற்றி-காந்தியடிகள் இப்போது உயிரோடிருந்தால்-ஒரு வேளை அவைகளை அவரே கூட மறுத்து இருக்கக் கூடும்.

தீண்டாமை ஒழிப்பு, பெரிய வட்டாரங்களில் பேசப்படுகிற மேலை மினுக்கிப் பேச்சாக இருக்கிறதே தவிர, அதனைச் செயல்படுத்தத் தீவிர எண்ணங்கள் உருவாகவில்லை. மனிதன் மலமெடுப்பதா என்று மனமுருகக் கேட்டார் மகாத்மா காந்தி. இன்றும் அந்த நிலையில் மாற்றமில்லை. அந்தக் கொடுமை தொடர்கிறது. காங்கிரசைப் பற்றிய தம் முதல் அனுபவம் இதுதான் என்று கல்கத்தாவில் நடை பெற்ற காங்கிரஸ் மாநாடு பற்றிக் காந்தியடிகளே கூறுவது கவனிக்கத்தக்கது!

'காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குள்ளேயே தீண்டாமை இருந்து வருகிறது என்றால், இவர்கள் யாருக்குப் பிரதிநிதிகள் என்று வந்திருக்கிறார்களோ அந்த மக்களிடம் தீண்டாமை இன்னும் எவ்வளவு

மோசமாக இருந்து வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். என்பதாக அவர் மனம் நொந்து குறிப்பிடுகிறார் தமது வாழ்க்கை வரலாற்றில்.

காந்தியடிகள் பட்ட வேதனை இன்று மெள்ள மெள்ள மறைந்து வருகிறதென்றாலும் அறவே மறைந்திட வழி காணப்படவில்லை. சனாதனக் கருத்துக் கொண்டவர்கள், சாதி வெறிபிடித்தவர்கள் இன்று எல்லாக் கட்சிகளிலும் பரவலாக இருக்கிறார்கள். அந்தப் பழங் கருத்துக்கள் சாடப்பட வேண்டுமானால் காந்தியடிகளின் போதனைகளை ஒரு மணி நேரம் விளக்கவுரையாற்றிக் கைதட்டல்களைப் பெறுவதால் மட்டும் வெற்றி காணமுடியாது. பேசுபவர்கள் செயல்படுபவர்களாக இருக்கவேண்டும். காந்தியடிகள் செயலுக்கும் பேச்சுக்கும் நல்ல தொடர்பு வைத்திருந்தார். அதனை அவர் புகழ் பாடுபவர்கள் பின் பற்றிட வேண்டும். அவரது விழாக் கொண்டாடும் இந்த நேரத்திலா வது வெறும் நிகழ்ச்சிகள், வண்ண வண்ண அலங்காரங்கள், வாண வேடிக்கைகள், கண்காட்சிகள், வேள்விகள், பஜனைகள், பிரார்த் தனைகள் என்ற அளவில் மட்டும் அமையாமல் நாட்டிற்குத் தேவையான அவரது பொதுவான தத்துவங்களைச் செயல்படுத்துகிற சூழ்நிலையை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

நூற்றாண்டு விழாவையொட்டி காந்தியடிகளின் வாழ்க்கைச் சரித்திரம்- அதன் ஒவ்வோர் ஏட்டிலும் உள்ள அவரது தியாகப் பொன் வரிகள்-இவைகளை உள்ளடக்கி ஒரு மகத்தான கண்காட்சியைப் புகை வண்டியில் அமைத்து அதனை ராமேசுவரம் தீவிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு அனுப்புகிற முயற்சியினை மேற்கொண்டிருந்தார்கள். அதனைத் தொடங்கி வைக்கும் பணியினை எனக்கு அளித்தபோது, அந்தக் கண்காட்சிப் புகை வண்டியைப் பார்த்தேன். காந்தியடிகள் மூன்றாவது வகுப்பு வண்டியைப்பற்றி எழுதியதும், பேசியதும் என் நினைவிற்கு வந்தன.

'மூன்றும் வகுப்புப் பெட்டிகள் இப்பொழுது எவ்வளவு அசுத்தமாக இருக்கின்றனவோ அவ்வளவு அசுத்தமாகவே அப்பொழுதும் இருந்தன. கக்கூசுகளும் இப்போதிருப்பதைப் போலவே அப்பொழுதும் அசுத்தமாக இருந்தன. இப்பொழுது ஏதோ கொஞ்சம் அபிவிருத்தி இருக்கக்கூடும். ஆனால் முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கு அளிக்கப் படும் வசதிக்கும் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு அளிக்கப்படும் வசதிக்கும் உள்ள வித்தியாசம், இவ்விரு வகுப்புகளின் கட்டணங் களுக்கு உள்ள வித்தியாசத்திற்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாததாக இருக்கிறது. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் ஆடுகளாகவே நடத்தப் படுகின்றனர். அவர்களுக்குள்ள வசதிகளும் ஆடுகளுக்கு உள்ள வசதி

கள்தான்! ஐரோப்பாவில் நான் மூன்றும் வகுப்பிலேயே பிரயாணம் செய்து வந்தேன். முதல் வகுப்புப் பிரயாணம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க ஒரே ஒரு தடவை மாத்திரம் முதல் வகுப்பில் பிரயாணம் செய்தேன். ஆனால் முதல் வகுப்புக்கும் மூன்றும் வகுப்புக்கும் இங்கே இருப்பதைப் போன்ற பேதத்தை நான் அங்கே காண வில்லை. தென்னப்பிரிக்காவில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் அநேகமாக நீக்ரோக்களே.

'ஆயினும் இங்கே இருப்பதை விட, அங்கே மூன்றும் வகுப்பு வசதிகள் நன்றாக இருக்கின்றன. தென்னப்பிரிக்காவின் சில பகுதி களில் மூன்றும் வகுப்பு வண்டிகளில், பிரயாணிகள் தூங்குவதற்குரிய இட வசதியும் மெத்தை தைத்த ஆசனங்களும் உண்டு. கூட்டம் அதிக மாகி, இட நெருக்கடி ஏற்பட்டு விடாதபடியும் பார்த்துக் கொள்ளப் படு கிறது. ஆனால் இங்கேயோ மூன்றும் வகுப்பு வண்டிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு அதிகமாகப் பிரயாணம் செய்வதே வழக்கமாக இருந்து வருகிறது.

'மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் சௌகரியத்தைக் கவனிப்பதில் ரெயில்வே அதிகாரிகளுக்கு இருந்து வரும் அசிரத்தை ஒரு புறம். மற்றொரு புறம் பிரயாணிகளின் ஆபாசமான யோசனையில்லாத பழக்கங் கள். இந்த இரண்டும் சேர்ந்து சுத்தமான பழக்க வழக்கமுள்ள ஒருவருக்கு மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வதை ஒரு சோதனை யாக்கி விடுகின்றன. கூட இருக்கும் பிரயாணிகளின் சௌகரியம், சுகம் ஆகியவைகளைக் குறித்துக் கொஞ்சமேனும் கவனிக்காமல் வண்டிக்குள்ளேயே கண்டபடியெல்லாம் சுருட்டுப் பிடிப்பது, வெற்றிலை பாக்குப் புகையிலை போட்டு வண்டி முழுவதையும் எச்சில் ஆக்கி விடுவது, கூச்சல் போட்டுப் பேசுவது, கத்துவது, ஆபாசமாகப் பேசுவது போன்றவை பிரயாணிகளிடம் பொதுவாக இருக்கும் பழக்கங்களாகும். 1902-ல் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்தேன். 1915 முதல் 1919 வரையில் இடைவிடாமல் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்தேன். இந்த இரு தடவைகளிலும் மூன்றும் வகுப்புப் பிரயாணத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தில் எந்த விதமான வித்தியாசத்தையும் நான் காணவில்லை'—இவ்வாறு காந்தியடிகள் எழுதினார்.

ஆனால் இன்று கூட மூன்றாவது வகுப்பு (இப்போது இரண்டாம் வகுப்பு) ரயில்வே பெட்டிகளில் அடையாள பூர்வமான சில மாற்றங்கள் தென்படுகின்றனவேயல்லாமல், பொதுவான முன்னேற்றமில்லை. மூன்றும் வகுப்புப் பிரயாணிகளின் நிலையில்தான் இன்றைய இந்தியாவில் பலகோடி மக்கள் இருக்கிறார்கள். ஏறத்தாழ ரயில் வண்டிகளில் இருக்கும் வாய்ப்பு வசதிகள்தான் அவர்களுக்கு வாழ்க் கையிலே இருக்கின்றன. சொல்லப்போனால் இரயில் விடக்குறை

வான வசதிகள்தான் அவர்களுக்கு வாழ்க்கையில் இருக்கிறது. இரயிலிலாவது ஒரு பொதுக் கக்கூசு இருக்கிறது. அது கூட இல்லாமல் எத்தனையோ கிராமங்களில் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

எத்தனையோ நகர்ப்புறங்களில் சாலையோரங்களில் அவர்கள் துன்பப்படுகிறார்கள். இரயிலில் இருக்கும் விளக்கு வசதி, காற்றோட்ட மான ஜன்னல் வசதி இவைகள் கூட இல்லாமல் குடிசைகளில் முடங்கிக் கிடக்கும் மக்கள் கோடானு கோடி. அவர்கள் அல்லல் அகற்றப் பாடுபட்ட அடிகளாரின் வாழ்வை 1948-ல் ஒருவன் முடித்து விட்டான். இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பாமர மக்களுக்குத் தொண்டாற்றக் கனவு கண்ட காந்தியடிகளின் கனவை நனவாக்கும் முயற்சியில் இன்றையத் தமிழக அரசு முனைந்து கிராமங்கள்தோறும் மின்வசதி, குடிநீர் வடிகால் வசதி, இலவசக் கல்வித்திட்டம், சாலைப் போக்குவரத்து வசதி, உணவு உற்பத்திப் பெருக்கம், தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை நிறைவேற்றி வருகிறது.

காந்தியடிகள் மறைந்த அந்த 1948-ம் ஆண்டு தமிழ்நாட்டு அரசியலில் எத்தனையோ மாற்றங்களுக்கு விதை தூவிய ஆண்டாக அமைந்தது.

தாயற்ற குழந்தைக்கு ஒரு தாய் வேண்டுமென்று சொல்லி எனக்கு இரண்டாந்தாரம் திருமணத்திற்கும் இந்த ஆண்டில் ஏற்பாடு செய்தனர்.

23

என் திருமணத்துக்கு நானே தலைமை தாங்கினேன்!

என் இரண்டாவது திருமணத்திற்காக எங்கெல்லாமோ பெண் தேடினார்கள். வசதிகள், வாய்ப்புக்கள், சொத்துக்கள், நகை நட்டுக்கள் இவைகளுடன் பெண் பார்த்துப் பார்த்து என் வீட்டார் இறுதியாக இரண்டொரு இடங்களைத் தேர்ந்தெடுத்து என் முடிவினைக் கேட்டார்கள். வசதி படைத்தவர்கள் வீட்டுப் பெண் வேண்டியதில்லை என்ற என் கருத்தை அவர்களுக்கு வெளியிட்டுக் காரணத்தையும் கூறினேன். என் போன்ற நிலையில் உள்ளவர்கள் இப்போதும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய காரணங்கள்தாம் அவைகள்!

வீட்டுக்கு வருகிறவள், தான் உயர்ந்த இடத்திலிருந்து சாதாரண இடத்திற்கு வந்திருக்கிறோம் என்ற மனக்குறையை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

நம் வீட்டுப் பெருமையை வைத்துத்தான் நம் கணவன் வாழவேண்டும் என்ற அகம்பாவம் அவளையுமறியாமல் அவள் உள்ளத்தில் எழுந்துவிடக் கூடாது.

தன்னை மணந்து கொண்டானா அல்லது தன் வீட்டுப் பணத்தை மணந்து கொண்டானா என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டு விடக் கூடாது.

பணம் படைத்த பெருமையில் கணவனை அலட்சியப்படுத்தினாலும் பரவாயில்லை. மாமியார், நாத்தனார் முதலியவர்களைத் தூசுக்குச் சமானமாக எண்ணி விடக் கூடாது.

எந்நேரமும் தன் குடும்பப் பெருமையை நினைத்துக் கொண்டு, புகுந்த வீட்டை என்றைக்கோ போய்ப் பார்த்துவிட்டு வருகிற சுற்றுலா இடம் போல ஆக்கிவிட்டுப் பிறந்த வீட்டிலேயே வாழ்வைக் கழிக்கத் துணிந்து விடக்கூடாது.

கணவன், கட்சி வேலையைத் தவிர, எந்த வேலையும் செய்து குடும்பப் பொறுப்பைப் பார்க்காமல் இருக்கிறானே என்ற அலட்சியம் தோன்றி விடக்கூடாது.

தாயில்லாக் குழந்தையொன்றைத் தன் தலையில் பாரமாகக் கட்டிவிட்டார்களே என்ற வேதனையும் வெறுப்பும் உருவாகி விடக் கூடாது.

இவ்வளவையும் நான் எண்ணிப் பார்த்து நடுத்தரமான குடும்பத்தில் எனக்குப் பெண் பார்த்தால் போதும் என்று தீர்மானமாகக் கூறிவிட்டேன்.

தஞ்சை மாவட்டத்திலே பூந்தோட்டம் என்ற கிராமத்திற் கருகேயுள்ள திருமாகாளம் என்ற சிற்றூரில் கோவிந்தசாமி அவர்களின் மகள் தயாளுவை என் வீட்டார் எனக்கு மணமகளாக நிச்சயித்தனர். தயாளுவின் அண்ணன் தட்சிணமூர்த்தி கழகக் கொள்கைகளில் தீவிரப் பற்றுக் கொண்டவர். கழகப் போராட்டங்களில் சிறை சென்றவர். பெண்ணை நான் நேரில் பார்க்கத் தேவையில்லை எனக் கூறிவிட்டேன். புகைப் படம் இருந்தால் வாங்கி வாருங்கள் என்று கூறியிருந்தேன்.

அந்த வீட்டில் பெண்ணின் புகைப்படம் எதுவுமே எடுக்க வில்லையாம். என் சகோதரிகள் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்து, எங்கள் வீட்டில் மாட்டியிருந்த 'காலண்டர்' படங்கள் நாலைந்தைக் காட்டி அவைகளில் ஒவ்வொரு சாயலைக் குறிப்பிட்டு, 'பெண்ணின் உயரம் இத்தப் படம் போல இருக்கும்' 'பெண்ணின் நெற்றி இந்தப் படம் போல இருக்கும்'; 'பெண்ணின் மூக்கு இந்தப் படம் போல இருக்கும்' என்றெல்லாம் விளக்கம் தந்தார்கள்.

திருமணத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டு விட்டது. 1948-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள்! அப்போதெல்லாம் அந்த நாள்தான் அண்ணா பிறந்த நாள் என்று யாருக்கும் தெரியாது.

அன்றுதான் இந்தியை எதிர்த்து நாடெங்கும் உள்ள பள்ளிகளின் முன்னே ஒரு நாள் அடையாள மறியல் நடைபெறவேண்டும் என்று பெரியார் அவர்கள் அறிக்கை விட்டிருந்தார். என் திருமணத்திற்கு நாள் குறித்து அழைப்பிதழ்கள் எல்லாம் அச்சான பிறகுதான் பெரியாரின் அறிக்கை வந்தது. என் திருமணச் செலவுக்காக நான் எழுதிய 'தூக்குமேடை' நாடகத்தை அண்ணா அவர்கள் தலைமையில் திருச்சியில் நடத்தினேன். நானே நடித்தேன். யாரிடமும் சென்று நாடகத்திற்காக நன்கொடை வசூலிக்கவில்லை. நாடகத்தில் மிச்சப் பட்ட தொகை எண்ணூறு ரூபாய்! அதிகமாகக் கொண்டு வருவேன் என்று எதிர்பார்த்திருந்த வீட்டார் ஏமாற்றமடைந்தனர். அத்துடன் சிறிது கடன் வாங்கிப் போட்டுத் திருமணக் காரியங்களை நடத்தத் தொடங்கினர். முதல் நாள் இரவு பெண் வீட்டார் திருவாரூருக்கு வந்து விட்டனர்.

என் வீட்டு வாயிலிலேயே பந்தலிட்டுத் திருமணத்தை நடத்த ஏற்பாடுகள் செயயப்பட்டன. காலியில் மணப்பந்தலுக்கு மணமகனை அழைத்து வர மேள தாளங்கள் சென்றன.

உள்ளூர் உறவினர், நண்பர்கள் பந்தலில் குழுமியிருந்தனர். ஊர்ப்பெருந்தனக்காரர்கள் சிலரும் அன்றையத் திருமணத்திற்கு வந்திருந்தது எனக்கு வியப்பை அளித்தது. நான் பந்தல் முகப்பில் நின்றுகொண்டு வருவோரை வரவேற்றுக் கொண்டிருந்தேன். அப்போது உயர்நிலைப் பள்ளியில் அடையாள மறியல் செய்வதற்காக இந்தி எதிர்ப்பு ஊர்வலம் என் வீட்டு வழியாக வந்தது. உணர்ச்சி மயமான முழக்கங்கள்! என் உள்ளத்தில் ஏதோ ஓர் எழுச்சி! அந்த ஊர்வலத்தோடு சேர்ந்துகொண்டு புறப்பட்டு விட்டேன்.

''பெரியார் வாழ்க!''

''தமிழ் வாழ்க!''

''இந்தி வீழ்க!''

இந்த ஒலியில், திருமணப் பந்தலில் முழங்கிய இசை ஒலி எடுபடவில்லை. என் வீட்டிலிருந்து நான்கு பர்லாங் தொலைவில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு ஊர்வலம் சென்றது. நானும் அத்துடன் சென்று விட்டேன்.

மண வீட்டில் 'மாப்பிள்ளை எங்கே?' என்ற கூச்சல்! தவிப்பு! மணப்பெண் எனக்காக, மணவறையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாகக் காத்திருந்தாள்.

நல்ல வேளை, முதல் நாளே அப்படிக் காத்திருந்து பழக்கப் பட்டு விட்ட காரணத்தினால், இப்போது நான் எவ்வளவு நேரங் கழித்து - எவ்வளவு நாள் கழித்து - வீட்டுக்கு வந்தாலும் சகித்துக் கொள்ளப் பழகிவிட்டாள்.

பெண் வீட்டார் முணுமுணுப்புத் தாங்காமல், என் நண்பர்களும், உறவினர் சிலரும் என்னை ஊரெல்லாம் தேடியலைத்திருக்கிறார்கள். கடைசியில், மறியல் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அதற்குள் மறியல் முடிந்து நாங்கள் திரும்பிக்கொண்டிருந்தோம். அன்று ஒரு வேடிக்கை என்னவென்றால், அடையாள மறியல் நடந்த பல ஊர்களில் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சில ஊர்களில் யாரும் கைது செய்யப்படவில்லை; அதில் திருவாரூரும் ஒன்று! கைது செய்திருந்தால், மாப்பிள்ளை 'மாமியார்' வீட்டுக்குப் போயிருப்பார்; மணவறைக்குப் போயிருக்க முடியாது.

உறவினர், நண்பர்கள் உறுமலுடன் மன மேடைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

திருமணத்திற்குத் தலைமை வகிப்பது யார் என்ற பிரச்னை எழுந்து விட்டது. இரண்டு சார்ச்சைக்குரியவர்களின் பெயர்கள் கூறப்பட்டு ஒவ்வொரு தரப்பிலும் பத்துப் பேர் வாதாடினர்கள்.

திடீரென நான் ஒலிபெருக்கியின் முன்னால் பேச ஆரம்பித்தேன்:

''பெரியோர்களே! நண்பர்களே!

இந்தி எதிர்ப்பு அடையாள மறியலின் காரணமாக இந்த மணவிழாவுக்குத் தலைமை வகிக்க அண்ணா அவர்கள் வர இயல வில்லை. இப்போது யார் தலைமை வகிப்பது என்பது பிரச்சினையாகி விட்டது. சங்க இலக்கியங்களில் காதல் தலைவன் - காதல் தலைவி என்றுதான் பார்த்திருக்கிறோம். ஆகவே இந்த மணவிழாவுக்கு நானும், என் மனைவியும்தான் தலைவனும், தலைவியும்! ''இப்போது நாங்கள் மாலை மாற்றிக் கொள்கிறோம்'' என்று கூறிவிட்டுத் திருமணத்தை முடித்துக்கொண்டேன். பிறகு நானே தலைமை உரை யாற்றிவிட்டு, விழாவுக்கு வந்திருந்த நண்பர்கள், டி. கே. சீனிவாசன், கவி கா. மு. ஷெரீப் ஆகியோரையும் மற்றவர்களையும் வாழ்த்துக் கூறச் சொன்னேன். இப்படி ஒரு விதமாக என் திருமணம் முடிந்தது.

திருமணம் முடிந்ததும், இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் தொடர்ந்து என் கவனம் சென்றது. அந்த ஆண்டு சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் கட்டாய இந்தியை எதிர்த்து ஓர் எழுச்சி மிக்க கூட்டம் நடைபெற்றது. 1940 -ம் ஆண்டு அளவில் மறைந்த இந்திக்கு, மீண்டும் தமிழ்நாட்டில் உயிரூட்டக் காங்கிரஸ் அரசு முயன்றது. அந்த முயற்சியைக் கிள்ளி எறியத் தான் தமிழ்த் தலைவர்களின் பேரணி அமைந்தது. தமிழ்த் தென் றல் திரு. வி. க., பெரியார், அறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வர் ம. பொ. சி., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மறைமலை அடிகள் ஆகியோர் இந்தியை எதிர்த்துத் தமிழகம் திரண்டெழும் விதத்தில் வீர உரையாற்றினர்.

1947-ஆகஸ்டு 15-ம் நாளினைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்ற பெரியார் கருத்துக்கு எதிர்க் கருத்து வழங்கிய காரணத்தால், அண்ணா அவர்களுக்கும் பெரியார் அவர்களுக்கும் இடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்புக்கூட மெல்ல மெல்ல மாறத்தக்க அளவுக்கு இருவரும் இந்தி எதிர்ப்புப் போரில் ஒன்றுபட்டுப் பணி யாற்றத் தொடங்கினர்.

இந்தி எதிர்ப்பு வீரர்கள் மீது குடந்தை மாநகரில் அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தெருக்களில் குருதி ஆறு பெருக் கெடுத்தது. மீண்டும் சிறைச்சாலை, சித்திரவதை, இந்தியை எதிர்த்துக் கழகத்தினர் பெறுகிற பரிசாக ஆயிற்று!

1948-அக்டோபர் 23, 24-ஆகிய நாட்களில் இந்தியை எதிர்த்துத் திராவிடர் கழகத் தனி மாநில மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்கள். பெரியார், அண்ணா ஒரே மேடையில்.

அண்ணா மாநாட்டுக்குத் தலைவராக!

அய்யா, மாநாடு நடத்துபவராக!

அப்போதுதான் பெரியார் சொன்னார்:

"பெட்டிச் சாவியை அண்ணா கையில் கொடுத்து விட்டேன்" என்று.

ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கூடிய அந்த ஈரோடு மாநாட்டில் பெரியாரும் அண்ணாவும் ஆற்றிய பேருரைகள் மட்டுமின்றி, திரு. வி. க. ஆற்றிய உரையும் என்றென்றும் நினைவு கூறத்தக்கது.

"நான் பழைய காங்கிரஸ்வாதி. பெரியாரும் காங்கிரசில் இருந்தவர்தான். நாங்கள் இருவரும் அரும் பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ்தான் இன்று சிலரது சுயநலக் கோட்டையாகக் காட்சி தருகிறது. காங்கிரசில் உண்மை உழைப்பாளிக்கு இடமில்லை. அது கள்வர் குகைக்குச் சமம். தூயவர் காந்தியார் கண்ட காங்கிரசையோ, நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றிய காங்கிரசையோ நான் அழிக்க முனையவில்லை. பாசிசப் பாதையில் வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் காங்கிரசையே நான் அழிக்க விரும்புகிறேன்."

இதுபோலக் கர்ச்சனை செய்தார் தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனார் அம்மாநாட்டில்!

காஞ்சீபுரத்தில் திரு. வி.க. தலைமையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார். பெரியார் ஈரோட்டில் நடத்திய மாநாட்டில் திரு. வி.க. காங்கிரசைப் பற்றி இப்படிக் கருத்தறிவித்தார்.

ஈரோட்டு மாநாட்டில் நெஞ்சுருக்கும் பேச்சொன்றும் கேட்டேன். அதுதான் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் இறுதிப் பேச்சு:

"தோழர்களே! இந்த மாநாட்டுக்குப் பிறகு சிறை செல்ல நேரிடும். எனவே, அவ்வகையில் இது கடைசி மாநாடு என்றெல்லாம் பத்திரிகையிலே பார்த்தேன். என்னைப் பொறுத்தவரையில் என் உடல் நிலையைக் கவனித்தால், எனக்கு இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவனுக்கு என் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே இன்று வந்தேன். என் உடல் நிலை மிகவும் மோசமாகி இருக்கிறது. நோயினால் படுத்த படுக்கையாக இருந்து வந்தேன். இன்னும், என் உடல் தேறும் வரை நான் இயக்கப் பணியில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கிறேன். இது எனக்கு மிகவும் வேதனையைத் தருகிறது" என்று கூறினார்.

ஆம்! அழகிரிக்கு அதுவே கடைசி மாநாடாயிற்று. அதன் நோயில் விழுந்தவர் எழவேயில்லை.

24

பெரியார்-மணியம்மை திருமணம்

ஈரோடு மாநாட்டில் பிரச்சார நாடகங்கள் நடைபெற்றன. அவைகளில் ஒன்று எம்.ஆர். ராதாவின் நாடகம். மற்றொன்று நான் எழுதி நடிக்கும் 'தூக்குமேடை' நாடகம். அந்த நாடகத்தில் நடிக்கத் திருவாரூரிலிருந்து இசைக் குழுவினர் உட்பட நாங்கள் இருபது பேர் ஈரோடு செல்ல வேண்டியிருந்தது. மாநாட்டின் பொறுப்புகளைப் பெரியார் அவர்களே நேரடியாகக் கவனித்துக்கொண்டிருந்ததால் எங்கள் இருபது பேரின் போக்குவரத்துச் செலவுக்காக எண்பது ரூபாய் அனுப்பி வைத்திருந்தார். அந்தப் பணம் போதாமையால் நாங்களே கொஞ்சம் பணம் போட்டுக்கொண்டு ஈரோடு போய்ச் சேர்ந்தோம்.

மாநாடு முடிந்த பிறகு நானும் நாடகத்தின் நண்பர்களும் ஊருக்குத் திரும்ப வேண்டும். வழிச் செலவிற்குப் பணம் வேண்டும். பெரியாரை அணுகினால்தான் பணம் கிடைக்கும். மாநாடு முடிந்ததும் அவனவன் பணத்துக்கு வருவான் என்று பெரியார் அவர்கள் யார் கண்ணிலும் படாமல் இருந்தார். பிறகு ஒருவாறு பெரியாரைச் சந்தித்து விஷயத்தை விளக்கினேன். ஒரு நாடகத்திற்கு அவ்வளவு செலவா என்று மேலும் ஐம்பது ரூபாய் கொடுத்தார். மீண்டும் நாங்கள் ஆளுக்குக் கொஞ்சம் கைப்பணம் போட்டுக்கொண்டு திருவாரூரைச் சேர்ந்தோம். பெரியார் அவர்களின் சிக்கனத்திற்கு இது மற்றும் ஓர் எடுத்துக் காட்டு.

ஈரோடு மாநாடு முடிந்ததையொட்டி அழகிரியை எப்படியாவது பிழைக்க வைக்க வேண்டுமென்ற ஆசையுடன் அண்ணா அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டார்கள். சென்னைக்கு அவரை அழைத்து வந்து மருத்துவர்களின் யோசனையைக் கேட்டார்கள். தாம்பரம் எலும்பு புருக்கி நோய் மருத்துவ மனையில் அழகிரி சேர்க்கப்பட்டார். தன்னை யார் கூட்டங்களுக்கு அழைத்தாலும், அழகிரியின் சிகிச்சைக்காக நூறு ரூபாய்க்குக் குறையாமல் அழகிரி குடும்பத்திற்கு நிதி அனுப்பி விட்டு, அந்த ரசீதைத் தனக்கு அனுப்பி வைத்தால்தான் கூட்டங்களுக்கு ஒப்புக்கொள்வதாக அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, பல தோழர்கள் அழகிரியின் குடும்ப நிதிக்குத் தகுந்த தொகை அனுப்பினர்; ஆனாலும் தாம்பரம் மருத்துவ மனை அழகிரியைக் கைவிட்டது.

ஊருக்குத் திரும்பச் செல்ல வேண்டுமென்பதைத் தவிர வேறு வழியில்லை. அண்ணா அவர்கள் அழகிரியை வழியனுப்பி வைக்கப் பூகை

வண்டி நிலையம் வந்தார். படுத்த படுக்கையாக இருந்த அழகிரி இரயிலில் ஏற்றப்பட்டார். அண்ணுவைப் பார்த்ததும் அழகிரியின் கண்கள் குளமாயின. பக்கத்திலே நின்ற நண்பர் மதியழகனே அழகிரி பார்த்து, ''அண்ணுவிடம் சொல்; நண்பர்கள் யார், விரோதிகள் யார் என்பதை அழகிரி புரிந்துகொண்டான் என்பதை அண்ணுவிடம் சொல்'' என்று கதறினர்.

காரணம், அவர் தோயில் விழுவதற்கு முன்பு வரையில் அண்ணுவை நண்பர்களிடமும், மேடையிலும் தாக்கிப் பேசுவது அவரது வழக்கம். எப்படியோ அண்ணு அவர்களிடம் அழகிரி அப்படியொரு பகை உணர்ச்சியை வளர்த்துக்கொண்டிருந்தார். ஆனால் அழகிரி தன்னைப்பற்றி எதிர்ப்பாகவும், ஏளனமாகவும் பேசுகிறார் என்று அண்ணு அவர்கள் கேள்விப்பட்டபோதெல்லாம் புன்னகை புரிவாரே தவிர, ஆத்திரப்பட்டதோ, பதில் அளித்ததோ இல்லை.

கட்சிக்குள் இருந்துகொண்டே தன்னைப்பற்றிக் கடுமையான விமரிசனம் செய்தவர் என்பதையும் எண்ணிப் பாராமல் அவர் நோயில் விழுந்தார் என்றதும் ஓடோடி வந்து உதவி செய்த அண்ணுவின் பெருந்தன்மையை எண்ணித்தான் அழகிரி அவ்வாறு கதறியழுதார். அண்ணு அவர்கள் தன்னிடம் மிச்சமிருந்த செங்கற்பட்டு மாவட்டச் சுயமரியாதை மாநாட்டு நிதி ரூபாய் ஆயிரத்தை அழகிரி கையில் கொடுத்தார். படுத்தவாறே அதனை அழகிரி வாங்கிக் கொண்டார். புகை வண்டி புறப்பட்டது. அண்ணு கண்களைத் துடைத்துக்கொண்டு இரயில் நிலையத்திலிருந்து திரும்பினர்.

தஞ்சை வந்து சேர்ந்த அழகிரி பல நாட்கள் படுக்கையாகவே இருந்து 1949-ம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ம் நாள் இயற்கை எய்தினர். அவர் இயற்கை எய்திய செய்தியைத் திருவாரூரில் இருந்த நான் கேட்டுத் திடுக்கிட்டேன். அப்பொழுது எனக்குக் கடுமையான காய்ச்சல். செய்தியைக் கேள்விப்பட்டதும் காய்ச்சல் எங்கேயோ பறந்து போய் விட்டது. தஞ்சை நோக்கி ஓடினேன். பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ மாவீரன் அழகிரி இறுதிப் பயணத்தை நடத்தினர். அழகிரி புதைக்கப்பட்ட இடத்தில்-தஞ்சையில் ஒரு நினைவுச் சின்னம் கட்டப்பட்டது.

அவர் மறைந்த சில நாட்களுக்கெல்லாம் தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் மாணவர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் நானும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும், தோழர் ஜனார்த்தனம் அவர்களும் கலந்து கொண்டோம். அந்த மாநாட்டில் அழகிரியின் படத்தை நான் திறந்து வைத்தேன். அழகிரியைப் பற்றி நான் பேசும் போது அவரது கடைசிக் காலத்தில் சரிவரக் கவனிக்காமல் கைவிடப் பட்டு விட்டார் என்பதைச் சற்று வருத்தத்துடன் நான் குறிப்பிட்டேன்.

அழகிரியின்மீது நான் கொண்டிருந்த வற்ருத பாசத்தால் எனினுள் னத்தில் ஏற்பட்ட வேதனைகளே ஒளிவு மறைவின்றி அந்த மாநாட்டில் நான் கொட்டி விட்டேன்.

பேராசிரியர் அன்பழகன் அவர்களும் அந்த மாநாட்டில் சற்றுக் கடுமையான கருத்துக்களே எடுத்துச் சொன்னர். அப்பொழுது மாவூர் சர்மா என்பவரது தோட்டத்தில் மாணவர்கள் பயிற்சி முகாம் நடத்திக் கொண்டிருந்த பெரியார் அவர்கள், தஞ்சை மாநாட்டில் நாங்கள் பேசியதைக் கேள்விப்பட்டு, அன்பழகனையும், என்னையும் யாரும் இனிமேல் கூட்டத்திற்கு அழைக்கக்கூடாது என ஓர் அறிக்கை தயாரித்து, அண்ணு தூண்டிவிட்டுத்தான் அன்பழகனும், கருணுநிதியும் தஞ்சை மாநாட்டில் தன்னை எதிர்த்துப் பேசினர்கள் என்று விளக்கமும் தந்து, அதனை 'விடுதலை'யில் உடனடியாகப் பிரசுரிக்க உத்தரவிட்டு, அந்த அறிக்கையை திரு என்.வி. நடராசன் அவர்களிடம் கொடுத்து அவரைச் சென்னைக்கு அனுப்பினர். திரு என்.வி. நடராசன் எவ்வளவோ வாதாடியும் பெரியார் ஏற்கவில்லை.

பெரியாரின் அறிக்கை எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. நான் எந்தப் பதிலும் கூருமல் இருந்து விட்டேன். எங்களைத் திராவிடர் கழகத் தோழர்கள் கூட்டத்திற்கு அழைப்பதை நிறுத்திக் கொண் டார்கள்.

இதற்கிடையில் அண்ணு அவர்களின் பெருமுயற்சியோடு நாங்க ளெல்லாம் அயராது பாடுபட்டு, யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை போன்றவர்களின் உறுதுணையோடு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களைக் கொண்டு அழகிரியின் குடும்ப நிதிக்காகத் தஞ்சையில் ஒரு கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கிடைத்த தொகையுடன் கலைவாணர் அவர்கள் கொடுத்த ரூபாய் இரண்டாயிரத்தையும் சேர்த்து மொத்தமாக ஆருயிரம் ரூபாய் நிதி தரப்பட்டது. அப்போது ஆருயிரம் ரூபாய் என்பது பெருந்தொகை!

இதற்கிடையில் அதே ஆண்டு மே மாதம் 14-ம் நாள் அப்பொழுது இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் திருவண்ணு மலை சென்ருர். அங்கு பெரியாரும் ராஜாஜியும் தனியாக நீண்ட நேரம் பேசினர்கள். அந்தப் பேச்சு தமிழ் நாட்டில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. காரணம், ராஜாஜி ஒரு முனை; பெரியார் ஒரு முனை என்ற அளவிற்குப் பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் போராட்டம் உச்சக் கட்டத்தில் இருந்த காலம் அது. அந்த நேரத்தில் இரு தலைவர் களும் சந்தித்துப் பேசுகிறர்கள் என்பதும், அதுவும் பெரியார் அவர்கள் திருவண்ணுமலைக்கே சென்று நீண்ட நேரம் உரையாடுகிறர் என்பதும் பரபரப்பிற்குரியனவாகும். அந்தப் பேச்சின் விவரத் தைக் கட்சித் தோழர்கள் எதிர்பார்த்தனர். ஆனல் அதுபற்றிய ஒரு சிறு குறிப்புக்கூடப் பெரியார் அவர்களால் வெளியிடப்படவில்லை.

இந்தச் சமயம் கோவையில் முத்தமிழ் மாநாடு ஒன்று நடை பெற்றது. அந்த மாநாட்டில் விஞ்ஞான மேதை ஜி.டி. நாயுடு பெரும் பங்கேற்றார். அதில் பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் கலந்து கொண்டார்கள். என்றாலும், ஒருவரோடொருவர் அதிகம் பேசிக் கொள்ளாத அளவிற்கு மனக்கசப்பு வளர்ந்திருந்த நேரம் அது. பெரியாருக்கு முன்பு பேசிய அண்ணா அவர்கள், திருவண்ணாமலையில் ராஜாஜியுடன் பெரியார் பேசியது என்ன என்பதை அறிய நாடு ஆவலாக இருக்கிறது. அதனை இந்த மாநாட்டில் பெரியார் விளக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் பெரியார் அவர்கள் அது முற்றிலும் தன் சொந்த விஷயம் என்றும், மாநாட்டில் வெளியிட முடியாதென்றும் கனல் கக்கப் பதில் சொன்னார்.

தொடர்ந்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தனக்கொரு வாரிசு ஏற்படுத்திக்கொள்வது பற்றி ராஜாஜியுடன் பேசியதாகக் குறிப்பிட்டார். அடுத்து அவர் வெளியிட்ட மற்றோர் அறிக்கையில், 'எனக்கும், எனது பொருளுக்கும் சட்டப்படிக்கான வாரிசாக ஒருவரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமும், அவசரமும் ஆகும். ஆகையால் நான் ஐந்தாறு வருடங்களாகப் பழகி, நம்பிக்கை கொண்டதும், என் நலத்திலும், இயக்க நலத்திலும் உண்மையான பற்றும், கவலையும் கொண்டு நடந்து கொண்டிருக்கிறதுமான மணியம்மையை எப்படியாவது வாரிசுரிமையாக ஆக்கிக்கொண்டு, அந்த வாரிசு உரிமையையும், தனிப்பட்ட தன்மையையும் சேர்ந்து மற்றும் 4, 5 பேர்களைச் சேர்த்து இயக்க நடப்பிற்கும், பொருள் பாதுகாப்பிற்குமாக ஒரு டிரஸ்ட் பத்திரம் எழுதி வைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். பத்திரம் எழுதப்படவிருக்கிறது. அது சட்டப்படி செல்லுபடி ஆவதற்காக என்று நமது இஷ்டத்திற்கு விரோதமாகச் சில சொற்கள் பயன்படுத்த நேரிட்டால், அதனால் கொள்கையே போய்விட்டது என்றோ, போய்விடும் என்றோ, பயப்படுவது உறுதியற்ற தன்மையாகும்" என்று பெரியார் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில், 'சட்டப்படி செல்லுபடி ஆவதற்காக' என்று எழுதப்பட்டிருந்த வாசகத்தின் இரகசியத்தை அனைவரும் புரிந்து கொண்டார்கள். மணியம்மையைப் பெரியார் மணக்கப் போகிறார் என்பதுதான் அந்த வாசகத்தின் உண்மைப் பொருளாகும். அந்த ஏற்பாட்டைத் தடுக்க, குடந்தை கே.கே. நீலமேகம், என்.வி.என்., எஸ். குருசாமி ஆகியோர் பெரியாரைச் சந்திப்பதற்கு ஏற்காட்டில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் பெரியார் மறுத்து விட்டார். பின்னர் சென்னையில் மாவட்டப் பிரதிநிதிகளுடைய கூட்டம் கூடி அண்ணாவின் அறிவுரையின் படி காஞ்சி மணிமொழியார், டி.எம். பார்த்தசாரதி, கண்ணபிரான், சி.வி. இராசன் ஆகியோர் கொண்ட ஒரு தூதுக் குழு ஏற்காடு சென்றது

அவர்களுடைய பணிவன்பான வேண்டுகோளையும் பெரியார் மறுத்து, திருமணம் நடந்தே தீரும் என்று குறிப்பிட்டார்.

சுயமரியாதை இயக்கத் தலைவரான பெரியாரின் இந்தப் போக்கு கழகத் தோழர்கள் அனைவரையும் பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. தோழர்கள் பதைத்தனர். திராவிடர் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் கள் பெரும்பாலும் திருமண ஏற்பாட்டைக் கண்டித்துப் பெரியாருக்குக் கடிதங்கள் எழுதினர். கழகத்தின் முன்னணி வீரர்கள் அனைவரும் அண்ணாவைச் சூழ்ந்து கொண்டு கண்ணீர் வடித்தனர். அண்ணா செய்வதறியாது திகைத்தார். அனைத்தையும் மீறி 1949-ம் ஆண்டு சூலைத் திங்கள் 9-ம் நாள் திருமணம் நடந்தது. திருமணம் நடந்த விஷயம் தெரியாமல் இது குறித்து விவாதிக்க திராவிடர் கழக நிர்வாகக் குழு, சூலை 10-ம் நாள் காலையில் திருச்சியில் கூடியது; 46 நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 32 பேர் வருகை தந்தனர்.

25

அண்ணு அசைந்து கொடுக்கவில்லை

திருச்சியில் கூடிய திராவிடர் கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில், திருமண ஏற்பாட்டைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேறியது. தீர்மானம் நிறைவேறும் அதே சமயத்தில் பெரியார்-மணியம்மை திருமணம் நடந்துவிட்ட தந்தியும் திருச்சிக்கு வந்து சேர்ந்தது.

அனைவரும் கொதிப்படைந்திருந்த நேரத்தில், அண்ணு அவர்கள் எச்சரிக்கையாக ஓர் அறிக்கை விடுத்தார்கள். அதில், 'இனிச் செய்ய வேண்டியது என்ன என்பதை அவசரமும் ஆத்திரமுமின்றித் தூண்டி விடுவோர், தூபம் இடுவோர், சிண்டு முடிந்து விடுவோர், கண்டதைக் கிளறிப் பார்ப்போர், சந்தி சிரிக்க வைப்போர் என்போருக்கு இரையாகாமல் யோசித்துத் தீர்மானிக்கவேண்டும். இதை விளக்கிப் பொதுக் கூட்டங்கள் போடுவதோ, கண்டன நோட்டீசுகள், மறுப்புக்கள் வெளியிடுவதோ நிலைமையைத் தெளிவுபடுத்தாது. பிரச்சினை தனிப்பட்ட மாற்சரியம், குரோதம் ஆகியவைகளை வைத்துக்கொண்டு நடத்தும் விளையாட்டல்ல. பல ஆண்டு காலமாக இருந்து வரும் பந்தம், பாசம் ஆகியவை. இந்த ஒரு வேண்டுகோளை அவர் மதிக்கக்கூடப் பயன்படவில்லை என்ற நெஞ்சு நோகும் நிலையில் உள்ளவர்கள் இனிக் கொள்கைக்கு முரண்பாடின்றி எப்படிப் பணிபுரிவது, எத்தகைய பணி புரிவது, என்ற சிக்கலில் தள்ளப்பட்டிருக்கும் பிரச்சினையாகும். ஆகவேதான் அமைதியாகச் சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் நானே அவசரமாகக் காரியம் செய்து விட்டேன் என்று சிலரால் எண்ணப்படுகிறேன் என்றால் இந்தப் பிரச்சினையில் திடீர் முடிவுகள் செய்வது எவ்வளவு தீமை தரக்கூடியது என்பதைத் தோழர்கள் சிந்திக்கவேண்டும்' என்று அண்ணு அவர்கள் அவருக்கே உரிய பெருந்தன்மையோடு கழகத் தோழர்களையெல்லாம் வேண்டிக் கொண்டார்.

பெரியாரின் திருமணத்தையொட்டிப் பெரியாரையே திராவிடர் கழகத்திலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று எழுந்த கடுமையான குரலை அண்ணு அவசரப்பட்டு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

பெரியார் எடுத்த முடிவினால் மனம் புண்ணடைந்த கழகத் தோழர்கள் திராவிடர் கழகப் பணியிலிருந்து விலகி நிற்பதாக ஒருவருக்குப் பின் ஒருவராக அறிவிக்கத் தொடங்கினர். அப்படிப்

பட்டவர்களுடைய பட்டியலே அறிஞர் அண்ணா தனது திராவிட நாடு' இதழில் வெளியிட்டு, அந்தப் பட்டியலுக்கான தலைப்பைக் 'கண்ணீர்த் துளிகள்' என்று குறிப்பிட்டார்.

அதனையே பெரியார் அவர்கள் கேலியாக எடுத்துக்கொண்டு அவரது முடிவை எதிர்த்தவர்களையெல்லாம், 'கண்ணீர்த் துளிகள்' என்று கண்டிக்கத் தொடங்கினர். பெரியாரின் போக்குப் பிடிக்காத அனைவரும் கூடிப் பெரியாரை திராவிடர் கழகத்திலிருந்து விலக்குவது தான் முறையாகும் என்று வலியுறுத்தினர். 1949-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாள் சென்னை, பவளக்காரத் தெருவில், குடந்தைப் பெரியவர் திரு. கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் கழகத் தோழர்களின் கூட்டம் நடைபெறும் என்றும், எதிர்கால வேலைத் திட்டம் பற்றி அதில் முடிவு செய்யப்படும் என்றும் அண்ணா ஓர் அறிக்கை வெளியிட்டார்.

இதற்கிடையே அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு, தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்களின் மேற்பார்வையில் 'மாலை மணி' என்ற நாளேடு தொடங்கப்பட்டது. பவளக்காரத் தெரு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் முக்கியமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் திராவிடர் கழகத்திலிருந்து பெரியாரை விலக்கி வைத்துக் கழகத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினார். ஆனால், அண்ணா அவர்கள் கூட்டத்தில் தனக்குரிய அறிவாற்றலோடு ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

அதில், 'கழகத்தைக் கைப்பற்றுவதும், புதிய தலைமையின் கீழ் நமது பணியை நடத்துவதும் சாத்தியமான காரியமேயாகும். இதை நான் ஒப்புக்கொள்கிறேன். போதிய வலிவும், தேவையான வசதியும், மறுக்க முடியாத நியாயமும் நம்மிடமிருக்கின்றன. எனினும் நாம் இவ்வழி செல்வது நாட்டிலே நாசம் நர்த்தனம் செய்வதும், பாசத் திற்கும் பயமைக்கும் நம்மையறியாமல் இடம் தேடிக் கொடுத்திடவும், நாம் ஆளாகிவிடுவோமா என்று அஞ்சுகிறேன். கனி பறிக்க மரம் ஏறும்போது, கருநாகம் காலைச் சுற்றிக் கொள்வதைப்போலப் பெரியாரிடமிருந்து கழகத்தை மீட்கும் காரியத்தில் நாம் ஈடுபடும் சமயமாகப் பார்த்து அதைச் சாதகமாக ஆக்கிக்கொண்டு பாசிசமும், பழைமையும் மக்களைப் பிடித்தாட்ட முற்படக்கூடும். கழகத்தைக் கைப்பற்றுவது என்பதற்கு யாரும், எவரும் கட்டுப்பட வேண்டிய முறைகள் உண்டு. நாம் அறிந்துள்ள பெரியார் இந்த முறைகளுக்குக் கட்டுப்படவோ இதனை ஏற்கவோ தயாராயில்லை. நாம் ஒரு புறம் திராவிடர் கழகம் என்ற 'லேபி'லுடனும் அவர் மற்றொரு புறம் அதே 'லேபி'லுடனும் உலாவுவதும்-இருசாராருக்கும் இடையில் மோதவிட விரும்பும் சந்தர்ப்பவாதிகள் ஆட்டம் ஆடுவதற்கும்-இந்தச் சூழ்நிலையை

சாதகமாக ஆக்கிக்கொண்டு நாட்டை நாசம் ஆக்குவதற்குமான காரியம்தான் நடைபெறும். கழகத்தின் 'லேபிள்' அல்ல முக்கியம். கொள்கைகள்-வேலைத் திட்டம் இவைகளே முக்கியம். ஒரு தனி தபர்கூட 'லேபிள்' தன்னிடம் இருப்பதாக எப்போதும் கூறிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் கூட்டு முயற்சி இல்லாமல் கொள்கை பரவாது; இலட்சியமும் மலர்ச்சியடையாது. அந்தக் கூட்டு முயற்சிக்கான வசதியும், வாய்ப்பும், வலிவும் நம்மிடம் இருக்கின்றன. ஏராளமான அளவில் வளரக்கூடிய விதத்தில் கொள்கைகளைப் பரப்பி, இலட்சியத்தை வெற்றிகரமாக ஆக்க நாம் தலைத்திருந்து அவருடைய தலைமையை மட்டுமல்ல, 'லேபிளை'யே நீக்கிவிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயருடன் பணியாற்றி வருவதுதான் நல்ல வழி என்பது என் கருத்து. நமக்குள்ள ஆதரவின் அளவையோ தரத்தையோ குறைத்து மதிப்பிட்டு நான் அந்த முடிவிற்கு வருகிறேன் என்று எண்ண வேண்டாம். அந்த ஆதரவு பெரியாரின் தலைமையோ, அவருடன் உள்ள 'லேபி'லோ இல்லாமலேயே நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களைப் பரப்பி சமுதாயத்தைச் சீராக்குவது என்ற ஆசையாலும், நம்பிக்கையாலும் இந்த முடிவினை நான் உங்களுடைய கருத்துக்கு வைக்கிறேன்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையைக் கூட்டத்தினர் ஏற்றுக்கொண்டார்கள்.

பொதுக் குழு என்றும், அமைப்புக் குழு என்றும், சட்டதிட்டக் குழு என்றும், நிதிக் குழு என்றும் பல்வேறு குழுக்கள் அமைக்கப் பட்டன. அதை அறிவிக்க அன்று மாலை சென்னை, ராயபுரம் ராபின்சன் பூங்கா மைதானத்தில் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பெரும் மழைக்கிடையே அண்ணா அவர்கள் அந்தக் கூட்டத்தில் விரிவுரையாற்றினார்கள். முன்னேற்றக் கழகம் தோன்றவேண்டிய அவசியங்களை எடுத்துரைத்த அண்ணா, தன்னுடைய பேச்சின் இறுதியில், "முக்கியமாக, முதல் வேலையாக எழுத்துரிமை, பேச்சுரிமை எதையும் அடக்கும் சர்க்காரின் போக்கை எதிர்த்துப் போரிட திராவிட

முன்னேற்றக் கழகம் முன்னணிப் படையாக அமையவேண்டும் அதில் பங்கு கொள்ள அனைவரும் வாரீர்! பெரியார் அவர்களே! நீங்கள் அளித்த பயிற்சியும் பக்குவமும் பெற்ற நாங்கள் உங்கள் வழியே சர்க்காரை எதிர்த்துச் சிறைச்சாலை செல்லத்தான் இந்த வேண்டுகோள் விடுக்கிறேன், துவக்க நாளாகிய இன்றே!" என்று குறிப்பிட்டார்

முன்னேற்றக் கழகம் துவக்கி வைக்கப்பட்ட இரண்டு மாதங் களுக்குள் தமிழ்நாடு எங்கணும் 700-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் உருவாயின. 50,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கழகத்தில் சேர்ந்தார்கள். 1950-ம் ஆண்டு, மே திங்கள் 2-ம் நாள் காங்கிரஸ் அமைச்சர் மாதவ மேனன் 1 முதல் 6-ம் படிவம் வரையில் இந்தி கட்டாயப் பாடமென்று ஓர் உத்தரவினை வெளியிட்டார்.

தமிழகம் அதனை எதிர்த்து ஒரு மகத்தான புரட்சிக்குத் தயாராயிற்று. தி. மு. கழகம் அறப்போரில் ஈடுபட்டது. 1938 முதல் பல கட்டங்களில் தமிழகத்தில் கால் ஊன்றுவதற்கு முற்பட்ட இந்தி, இந்தக் கட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரெதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் திணறியது. சிறைச்சாலைகள் திறக்கப்பட்டன. தடியடிகளைத் தாங்கிக் கொண்டனர் தோழர்கள். கட்டாய இந்தியை எதிர்த்து, அண்ணா பேரணி ஒன்றினைத் திரட்டத் தொடங்கினார். எதிர்ப்பின் சக்தியைத் தாங்க முடியாமல் இரண்டே மாதத்தில் கல்வி அமைச்சர் மாதவமேனன், 'இந்தி கட்டாயப் பாடமில்லை, விருப்பப் பாடம்தான்' என்று மறு உத்தரவு பிறப்பித்தார்.

இது திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கிடைத்த முதல் கட்ட வெற்றியாகும். கட்டாய இந்தி ஒழிந்ததைப் பெரும் களிப்பு நாளாக முன்னேற்றக் கழகம் கொண்டாடியது.

இதற்கிடையே அண்ணா அவர்களின் 'திராவிட நாடு' பத்திரிகை மீது ஜாமீன் வழக்கு நடைபெற்றது. மூவாயிரம் ரூபாய் ஜாமீன் கட்ட வேண்டுமென்று சர்க்கார் அறிவித்ததை யொட்டி, அந்த வழக்குத் தொடரப் பெற்றது. ஜாமீன் தொகையை அண்ணா அவர்கள் முதலில் கட்டிவிட்டார். அதற்கான பணத்தை நாடெங்கணும் உள்ள கழகத் தோழர்கள் நிதியாக வசூலித்து அனுப்பினார்கள். வழக்கின் முடிவு அண்ணாவிற்குச் சாதகமாக அமைந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் ராஜமன்னார், சந்திரா ரெட்டி இருவரும் அரசாங்கத்தின் ஆணையைத் தள்ளுபடி செய்ததோடு, அண்ணா ஏற்கெனவே கட்டியிருந்த மூவாயிரம் ரூபாய் ஜாமீன் தொகையை அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பளித்தனர். திருப்பித் தரப்பட்ட அந்தத் தொகையை, முதலில் அதை நன்கொடையாக அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பி விட்டார் அண்ணா.

அதைத் தொடர்ந்து அண்ணாவும் பெரியாரும் ஒரே இடத்தில் தங்கியிருக்க நேரும் என்று தமிழகம் எதிர்பார்க்கவில்லை!

26

எழுத்துரிமை, பேச்சுரிமை

அறிஞர் அண்ணு அவர்கள் எழுதிய 'ஆரிய மாயை' என்ற நூலுக்கு 1950-ல் அரசு தடை விதித்தது. 1943-ல் எழுதப்பட்டுப் பல பதிப்புகள் வெளிவந்து, பல்லோராலும் படிக்கப்பட்ட அந்த நூலை, ஏழு ஆண்டு காலம் கழித்து அரசு தடை செய்தது ஆச்சரியமாக இருந்தது. அந்த நூலை எழுதிய அண்ணு அவர்களையும் அதனை வெளியிட்ட திருச்சி திராவிடப் பண்ணை உரிமையாளரையும் அரசாங்கம் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியது. அண்ணு அவர்களுக்கு ஆறு மாத காலம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அதே நாளில் ''பெரியார் பொன் மொழிகள்' என்ற ஒரு நூலை வெளியிட்டதற்காகப் பெரியார் அவர்களுக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அண்ணுவும், பெரியாரும் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டனர். பெரியாரை விட்டுப் பிரிந்து, புதுக் கழகம் கண்ட பிறகு, அவர்கள் இருவரும் ஒரே சிறைச் சாலையில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதைத் தமிழகம் எண்ணி எண்ணி வியப்படைந்தது. அந்தச் சிறை அனுபவத்தைப் பற்றி அண்ணு அவர்கள் எழுதியதை இப்போது படித்தாலும் நம் கண்களில் நீர் துளிர்க்கத்தான் செய்கிறது.

'ஆரியமாயை' என்னும் ஏடு தீட்டியதற்காக எனக்குச்சிறை.

'பொன் மொழிகள்' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

''திருச்சிக் கோர்ட்டாருக்கு இப்படியொரு காட்சியைக் காண வேண்டும் என்று ஆசை போலும்! இரண்டும் தனித் தனி வழக்குகள். தனித் தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் தீர்ப்பு மட்டும் ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது. பிரிந்து நெடுந்தூரம் வந்து விட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில் பெரியாருக்குப் பக்கத்திலேயே நிற்கச் செய்து வேடிக்கை பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து ஒரே வேனில் ஏற்றிச் சென்றனர். அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டு வந்திருந்த சாமான்களைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம்! எனக்கு உள்ளூர பயம். கேள்விக் கணையுடன் நிறுத்திக் கொள்ளாமல் அன்புக் கணையையும் ஏவினால் என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் என்றெல்லாம் அச்சப்பட்டேன்.

''பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்: பலர் வருவார்கள். இங்கு சிறிது நேரம், அங்கு சிறிது நேரம்: இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள். நாங்கள் இருவரும் பேசிக் கொள்கிறோமா என்று. அவர் அறைக்கு உள்ளே இருக்கும் பொழுது நான் வெளியே மரத்தடியில்; அவர் வெளியே வர முயல்கிறார் என்று தெரிந்ததும் நான் அறைக்கு உள்ளே சென்று விடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்.

''நானோய தினம் எங்களை விடுவிக்கிறார்கள். முன் தினம் நடுப் பகலுக்கு மேல் ஒரு ருசிகரமான சம்பவம் நடைபெற்றது. பெரியாருக்கு, வேலைகளை செய்து வந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து, 'ஐயா தரச் சொன்னார்' என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்டுகளைக் கொடுத்தார். கையில் வாங்கியதும் என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின் மீது சென்றது.

''மறுநாள் திடீரென்று விடுதலை கிடைத்தது. அந்த வேடிக்கையையும் கேள். தம்பி! எங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி சிறையின் உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே, வெளியே தெரிந்து விட்டிருக்கிறது. எனவே, எங்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி விட்டிருந்தனர். நமது தி. மு. கழகத்தார் வரவேற்பு ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு நேரத்தை மறந்து விட்டனர். எனவே சிறைக் கதவு திறக்கப்பட்டு, எங்களை வெளியே அனுப்பியதும் வாசற்படியருகே பெரியாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் கொண்டு வந்த மோட்டார் தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர். இது போதாதென்று போட்டோ எடுப்பவர் ஒருவர் ஓடிவந்தார். ''இருவரும் அப்படியே நெருக்கமாக நில்லுங்கள்'' என்று போட்டோ எடுத்து விட்டார்; ஆனால் அது வெளியிடப்படவில்லை. வேதாசலம் அவர்கள் வீடு வரையில் சென்று அவர் இறங்கிக் கொண்டார். நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்.

"கவனித்தாயா தம்பி!" எனக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தை! திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு தனி அமைப்புக்குப் பெரியதோர் ஆபத்து இந்தப் பத்து நாட்கள்" என்று நண்பர் ஒருவர் கூறினார் உண்மைதான். நான் அவ்வளவு சுலபத்தில் மனதைக் கரைய விட்டு விடுபவன்தான். ஆனால், பத்து நாட்கள் அவருடன் பேசி, மீண்டும் பழைய நட்பைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னைத் தட்டித் தட்டி அழைத்த போதும் நான் அந்த எண்ணத்திற்கு இடம் கொடுக்காதிருந்தேன். காரணம், கொடியவன் என்பதல்ல; நான் ஓர் அமைப்புக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டதால், நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் அந்த அமைப்பை உருக் குலைக்கக் கூடியதாக இருக்கக் கூடாது என்ற நேர்மையான எண்ணத்திலேதான்."

இப்படிக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு விடுதலை பெற்ற அண்ணா அவர்களை, சென்னை மாநகரம் கோலாகலமாக வரவேற்றது. 1950-அக்டோபர் 23-ல் சென்னையில் கூடிய கழகத் தலைமைச் செயற்குழு எழுத்துரிமை, பேச்சுரிமையை நிலைநாட்டும்பொருட்டு அரசினரின் அடக்குமுறையை எதிர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது. அந்த ஆண்டு அக்டோபர் 24-ஆம் நாள் டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்த ராஜாஜிக்கு தி. மு. கழகம் கருப்புக்கொடி காட்டியது. அப்போது ராஜாஜி அவர்கள் வந்த பாதையில் கருப்புக் கொடி காட்டச் சென்ற பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் போன்றவர்களின் தடியடிக்கு உள்ளாயினர்.

குன்றத்தூரில் கழகக் கூட்டத்திற்கு விதிக்கப்பட்ட 144 தடை உத்தரவை மீறி திரு என். வி. நடராசன் பேசினார். போலீசார் அவரைக் கைது செய்தனர். கூட்டத்தில் பயங்கரமாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. மாங்காடு தோழர் குட்டி என்பவர் மார்பில் குண்டு பாய்ந்து விழுந்தார். குன்றத்தூர் வெறியாட்டத்தை நாடு முழுவதும் கண்டித்தது. திருச்சி மாவட்டம் நாரணமங்கலத்திலும், சென்னையிலும் பேச்சுரிமையை நிலை நாட்டத் தடையுத்தரவு மீறப் பட்டுக் கழகத் தோழர்கள் பலர் கைதாயினர்.

இப்படிப் பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 17 - ம் நாளில் சென்னையிலே தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் ஓராண்டு காலத்திற்குள், தான் ஈடுபட்ட அறப் போராட்டங்கள் வாயிலாகத் தமிழக மக்களின் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பிடித்துக்கொள்ளத் தலைப்பட்டது. சென்னையில் கழகம் தொடங்கியமுதல் நாள் அன்று நானும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அப்போது சேலத்தில் திரைபடத் தொழிலில் ஈடுபட்டு இருந்த நான் சென்னைக்குக் கழகத் தொடக்கத்திற்காக வந்ததும் மீண்டும் சேலம் திரும்பிச் சென்றதும், சுவை மிக்க சம்பவங்களாகும். ஆமாம்; நான் சேலத்துக்கு எப்படி வந்து சேர்ந்தேன்?

27

நண்பர் கண்ணதாசன்

திருவாரூரில் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த எனக்கு ஒரு நாள் பொழுது போக்குவதே கஷ்டமாக இருந்தது. 'முரசொலி' வாரப் பத்திரிகையையும் வாரந்தோறும் தொடர்ந்து நடத்த முடிய வில்லை. எழுதுவதும் கூட்டங்களுர்குப் போவதும் எனக்கு ஆறுதல் தரும் வழிகளாக இருந்தன.

அப்பொழுது என்னுடைய நண்பர் கவி கா. மு. ஷெரீப் சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் திரைப் பட நிறுவனத்தில் பாட்டு எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒரு நாள் என்னைப் பார்க்கத் திருவாரூர் வந்திருந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமை யாளர் (மறைந்த) திரு டி. ஆர். சுந்தரம் அவர்கள் என்னுடைய எழுத்துக்களை விரும்புவதாகவும், என்னைக் கொண்டு படங்களுக்கு வசனம் எழுத வேண்டும் என்று கூறியதாகவும் குறிப்பிட்டு என்னுடைய சம்மதத்தைக் கேட்டார். நான் அதுபற்றி யோசிப்பதற்கு முன்பே நண்பர் ஷெரீப் அவர்களே அதை நான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று உரிமையோடு வற்புறுத்தினர்.

சேலத்திற்குப் புறப்பட்டேன். மாதம் ஐந்நூறு ரூபாய் சம்ப ளத்தில் 1949 - ம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸில் எழுத்தாள ராக அமர்ந்தேன். கட்சிப் பணிகளில் தடையில்லாமல் ஈடுபடவும், கூட்டங்களுக்குச் செல்ல எந்தவிதமான இடையூறும் இருக்கக் கூடாது என்ற நிபந்தனையுடனும் அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டேன்.

அங்கே ஷெரீபுடன் மருதகாசி என்ற நண்பரும் பாட்டு எழுதிக் கொண்டிருந்தார். அந்தப் பட நிலையத்திற்கு ஒத்திகைக் கூடம் என்ற ஒரு தனி இடம் உண்டு. அங்கே சில கதாசிரியர்களும், பாடல் ஆசிரியர்களும், இசைத் துறையினரும், நடிகர்களும் தங்கியி ருந்தனர். நான் ஓட்டல் ஒன்றில் தங்கியிருந்தேன். ஒத்திகைக் கூடத்தில்தான் கதை பற்றிய விவாதங்கள், பாட்டமைத்தல், இசை யமைப்பு இவை யாவும் நடைபெறும். மாடர்ன் தியேட்டர்ஸில் திரு எம். சி. சக்ரபாணியும் நிரந்தர நடிகர் போல இருந்தார். அவரும் கா. மு ஷெரீபும் ஒரு நாள் அங்கே எனக்கு ஒரு நண்பரை அறிமுகப்படுத்தினர்கள்.

வளர்ந்த உருவம்; நெற்றி முழுவதும் திருநீற்றுப் பூச்சு; இவரும் இங்கே பாட்டெழுதுகிறார்' என்று என்னிடத்தில் கூறி

ஞர்கள். அவரைப் பார்த்தவுடனேயே அவருடைய முகத்தில், 'இவர் எதைப்பற்றியுமே கவலைப்படாதவர்' என்று கொட்டை எழுத்தில் எழுதியிருந்ததை நான் புரிந்து கொண்டேன். மற்றவர்களை அவர் தாக்குவதும், மற்றவர்களால் அவர் தாக்கப்படுவதும் அவரைப் பொறுத்தவரையில் ஒரு வேடிக்கையான காரியமாகக் கருதுகிறார் என்பதைச் சில வினாடிகளில் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த நண்பர் தான் இன்று மிகுந்த கவித்திறன் பெற்றவராக விளங்கும் கவியரசு கண்ணதாசன்.

அந்த ஒத்திகைக் கூடத்தில் அவரைக் கிண்டல் செய்யாதவர்களே இல்லை. அவற்றில் சில காரசாரமாய் இருக்கும். சில கடூரமாகவும் இருக்கும். சிலர் மீது அவர் எரிந்து விழுவார். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அப்படி எரிந்து விழுந்தவர்களின் தோளிலே கை போட்டுக் கொண்டு உலவிக் கொண்டிருப்பார். அந்த நண்பர் சில நாட்களில் முழுக்க முழுக்க என்னுடைய கட்சிக்காரராக ஆகி விட்டார்.

சேலத்தில் முதல் மாதம் அவரைச் சந்தித்துவிட்டு வெளியூர் சென்றவர்கள் அடுத்த மாதம் வந்து பார்க்கும்போது அவர் தன்னுடைய கொள்கைகளை எல்லாம் மாற்றிக் கொண்டு முன்னேற்றக் கழகத்தை நோக்கி அடி எடுத்து வைத்து விட்டதை உணர்ந்து வியப்படைந்தார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், கழகத்தின் கொள்கைகள் அவரைக் கவர்ந்ததைவிட, எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட நட்பு என்னும் உறவு அவரை அதிகமாகக் கவர்ந்தது என்றே சொல்ல வேண்டும். ஒரு வேளை அந்தக் காரணத்தினால்தானோ என்னவோ. அவரிடத்தில் கொள்கைப் பிடிப்புக் குறைவாகப் போய்விட்டது.

சேலத்திலிருந்து பொள்ளாச்சிக் கூட்டத்திற்கு நான் அழைக்கப் பட்டிருந்தேன். கோவைவழியாக என்னுடைய பயணம் ஏற்பாடாகி இருந்தது. நண்பர் கண்ணதாசனும் கோவையில் இருந்து என்னுடன் கலந்து கொண்டு பொள்ளாச்சி வருவதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவ்வாறே கோவையில் என்னைச் சந்தித்தார்:

நெற்றி நிறையத் திருநீறு பூசிக் கொண்டிருந்த அவர் சில நாட்களாக அதனைப் பூசுவதை விட்டிருந்தார். ஆனால் நான் கோவையில் பார்க்கும்போது நெற்றியின் நடுவே ஒரு குங்குமப் பொட்டு இருந்தது. அதன் கீழே ஒரு விரல் விபூதியும் பூசப்பட்டு இருந்தது. "என்ன?" என்று வேடிக்கையாகக் கேட்டேன் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டார். இருவரும் பேருந்து வண்டியில் ஏறிப் பொள்ளாச்சிக்குப் பயணமானோம் பயணத்தின் பொழுது, பேருந்து வண்டியிலேயே மீண்டும் என் பகுத்தறிவுப் பிரசாரம் தொடங்கிற்று அவரும் என்னுடன் வாதம் செய்துகொண்டே வந்தார். பொள்ளாச்சி

யில் போய் இறங்கினேம். என்னுடன் வந்து கொண்டிருந்த அவர் கொஞ்சம் பின் தங்கினர். திரும்பிப் பார்த்தேன். என்னருகே வந்து கொண்டிருந்தார். நெற்றியைக் கவனித்தேன். விபூதியும் இல்லை; குங்குமமும் இல்லை. வெறும் நெற்றிதான் இருந்தது! (இப்போது மீண்டும் அணிந்து கொள்வதைச் சில நேரங்களில் பார்த்திருக்கிறேன்.

பொன்னாச்சிக் கூட்டத்தில் தானும் பேச வேண்டும் என்றார். கொஞ்ச நாட்கள் பொறுத்திருந்து பேசலாம் என்று நான் தடுத்துப் பார்த்தேன். அவரோ பேசத் துடித்தார். சரியென்று ஒப்புக் கொண்டேன்.

'அன்பினும் ஆர்வம் உடைமை' என்பதுபோல அன்பிலிருந்து பிறந்த அவரது ஆர்வத்தை அதிக நேரம் என்னால் தடுக்க முடியவில்லை. அவருடைய பேச்சின் முதல் வாசகமே, ''வட்டிக்கு வட்டி வாங்கும் செட்டிமார் நாட்டில் பிறந்தவன் நான்'' என்பது ஆகும். ஓர் ஐந்து நிமிட நேரம் பேசி முடித்தார். கழக முத்திரை அழுத்தமாகக் குத்தப்பட்டு விட்டதாக அவர் உணர்ந்தார். நானும் மகிழ்ந்தேன். பிறகு இருவரும் சேலத்தில் இருந்தவாறு கழகக் கூட்டங்களுக்குச் செல்வதை வாடிக்கையாகக் கொண்டோம்.

இதற்கிடையிலேதான் — அவர் கழகத்தில் முழுமையாகச் சேருவதற்கு முன்புதான் — சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்ற வேண்டிய சூழ்நிலை உருவாகியது. நானும் அவரும் சென்னையில் முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட நாள் அன்று சென்னைக்குச் சென்றிருந்தோம். அதற்கு மறுநாள் திருவாரூரிலிருந்து என் தாயும், மனைவியும் சேலத்திற்குக் குடிவருவதற்கு ஏற்பாடுகள் ஆகியிருந்தன. சென்னை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு மறுநாளே சேலம் திரும்பி, அம்மாவையும் மனைவியையும் சேலத்தில் சந்திக்க வேண்டும். வாடகைக்குப் பார்த்து இருந்த வீட்டில் குடி போக வேண்டும் என்ற திட்டத்துடன் என் சென்னைப் பயணத்தை நான் ஏற்பாடு செய்திருந்தேன்.

28

கனிவு வென்றது!

சென்னை, பவளக்காரத்தெருவில் வேதனையோடு கூடி இருந்த முன்னணி வீரர்களோடு நானும் அமர்ந்து நடவடிக்கைகளில் கலந்து கொண்டேன். திராவிடர் கழகத்தில் ஏற்பட்ட பெரும் விபத்தால் பாதிக்கப்பட்ட நண்பர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு கனல் கக்கினர்கள் என்பதை நேரில் கண்டு உணர்ச்சிப் பிழம்பானேன். பூகம்பமும், சூருவளியும், எரிமலையும் ஒன்றை ஒன்று போட்டிக்கு அழைப்பது போல உணர்ச்சி பீரிட்டுக் கொண்டிருந்த அந்தக் கூட்டத்தில், இளந்தென்றல் காற்று போல வீசிய அறிஞர் அண்ணவின் உருக்கம் மிக்க பேச்சு அனைவரையும் ஆட்கொண்ட விதம் கண்டு அயர்ந்து போனேன்.

கடுமையான வார்த்தைகள்—

தீண்டன முழக்கங்கள்—

கனல் கக்கும் எதிர்ப்புகள்—

காய்ச்சிய இரும்பில் அடிப்பது போன்ற கூடான வார்த்தை கள்—இவைகளிடையே

—கனிவு

—கண்ணீர்

இவை வெற்றிக் கொடி நாட்டிய வியப்பு நிகழ்ச்சியைக் கூணக் காண என் விழிகள் அகன்றன. இதயம் விரிந்தது.

விடியற்காலத்து மலரில் தேங்கி இருக்கும் பனித் துளி போன்ற கனிந்த சொல்லெடுத்துக் கொதித்தவர்கள் உள்ளங்களுக்கெல்லாம் ஆறுதல் வழங்கினர் அண்ணு. அந்த விவாதத்தில் அவரே வென்றார் ஆம்!

—அன்பும்

—அறிவும்

—ஆற்றலும்

வென்றன!

''கருணாநிதி, உன்னைப் பிரசாரக் குழு உறுப்பினராக ஆக்கி இருக்கிறேன்'' என்று அண்ணு அவர்கள் சொன்னது, இப்போதும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது.

மாலையிலே, மழை நடுவே, சென்னை ராபின்சன் பூங்காவிலே முன்னேற்றக் கழகத்தின் முதல் கூட்டம் நடைபெற்று முடிந்தது. "சில விஷயங்கள் பேச வேண்டும். என்னுடன் வா" என்று அண்ணு என்னை அழைத்தார்.

என்னுடன் இருந்த கண்ணதாசன் தனக்குத் தூக்கம் வருகிறது என்றும், தான் போய் லாட்ஜில் தூங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டார். நானும் அவரும் சென்னையில் உள்ள விருதுநகர் நாடார் லாட்ஜில்தான் தங்கியிருந்தோம். "நீர் போய் அங்கே படுத்திரும். நான் அண்ணுவுடனும், மற்றவர்களுடனும் பேசி விட்டு லாட்ஜுக்கு வருகிறேன்" என்று அவரிடம் கூறிவிட்டு அண்ணுவுடன் போய்விட்டேன்.

தேவராச முதலியார் என்ற அண்ணு அவர்களுடைய பழைய நண்பர் ஒருவரின் வீட்டுக் கூடம்தான் அண்ணுவும், கழகத்தின் முக்கியஸ்தர்களும் அமர்ந்து உரையாடும் இடமாகும். ஒரு கிழிந்த சேபா; இரண்டு உடைந்த நாற்காலிகள்; ஓட்டை விழுந்த இரண்டு பாய்கள்; அழுக்கேறிய நான்கைந்து தலையணைகள். அங்குதான் அண்ணுவின் ராஜரீகம் நடக்கும்.

காராபூந்தி, பகோடா, சிங்கிள் டீ—இதுதான் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை அங்கு நடைபெறும் விருந்து.

அதனை அண்ணு அவர்கள் சுவைத்துச் சாப்பிடும் அழகே அழகு!

இரவு இரண்டு மணி வரையில், ஏன், விடியற்காலை ஐந்து மணிவரையில்கூட அங்கே விஷயாலோசனைக் கூட்டம் தொடர்ந்து நடைபெறுவது உண்டு. நாள்தோறும் நடைபெறுவதும் உண்டு.

ராபின்சன் பூங்காக் கூட்டம் முடிந்த பின்னர் அண்ணுவும், மற்ற கழகத்தினரும், நானும் இந்தக் கூட்டத்தில் இரவு இரண்டு மணிவரையில் உரையாடல் நிகழ்த்தினோம். அதற்குப் பிறகு விடை பெற்றுக் கொண்டு விருதுநகர் லாட்ஜுக்குப் புறப்பட்டேன்.

காலையில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் ஏழு மணிக்கு ரயில் ஏறி இரவு சேலம் போய்ச் சேரவேண்டும். அந்த நினைவோடு லாட்ஜுக்கு வந்தேன். நானும் கண்ணதாசனும் தங்கியிருந்த அறைக்குச் சென்று கதவைத் தட்டினேன். நீண்ட நேரம் வரை கதவு திறக்கப்படவே இல்லை! பக்கத்து அறைக்காரர்கள் கதவைத் திறந்துகொண்டு வந்து என்னைப் பார்த்து, "தூங்கும் போது தொல்லை கொடுக்காதே" என்று கண்டித்துவிட்டுச் சென்றார்கள். கடைசியில் ஒரு வழியாகத் தூக்கம் கலைந்து கண்ணதாசன் கதவைத் திறந்தார். நான் உள்ளே நுழைந்தேன். அதற்குள் அவர் தன்னுடைய கட்டிலில்

போய்ப் படுத்துக் கொண்டு குறட்டைவிட ஆரம்பித்தார்! நான் பக்கத்திலே உள்ள கட்டிலில் படுக்க முனைந்தேன்.

அந்தக் கட்டிலில், இரண்டு தட்டுகள் இருந்தன. காலையில் நாங்கள் சிற்றுண்டி அருந்திவிட்டுப் படுக்கை மீதே போட்டு விட்டுப் போன தட்டுகள் அவை. அவைகளை அப்புறப்படுத்த விரும்பினேன். ஒரு தட்டை எடுத்தேன். கையில் ஏதோ வழவழவென்று நெளிந்தது. தட்டுக்கடியில் இருந்தது சிறிய ஒரு கரு நாகப்பாம்பு! தட்டுக்குக் கீழே அந்தப் பாம்பு சுற்றிக்கொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை. ''ஐயோ!'' என்று அலறிக் கையில் எடுத்த தட்டைக் கீழே போட்டு விட்டேன், பாம்புப் படுக்கையில் நெளிந்தது!

என் கூச்சலைக் கேட்டுக் கண்ணதாசன் எழுந்தார். கதவைத் திறந்து கொண்டு இருவரும் கத்தினோம். லாட்ஜ் காவலாளிகள் கம்புடன் ஓடி வந்தனர். ஒரு வழியாகப் பாம்பை அடித்து முடித்தனர். மிகப் பயங்கரமான பாம்பு என்று அவர்கள் வர்ணித்தார்கள். கடித்தால் உடனடியாகச் சாவைத் தவிர வேறு மார்க்கமில்லை என்றும் குறிப் பிட்டார்கள். அதோடு விடக் கூடாதா?

இது குட்டிப் பாம்பு; இன்னும் சில குட்டிப் பாம்புகள் இங்கே இருக்கலாம் என்று கூறிவிட்டுச் செத்த பாம்பைத் தூக்கிக் கொண்டு அவர்கள் போய் விட்டார்கள். அதற்குப் பிறகு அந்த அறைக்குள் இருக்கவே எனக்குப் பயமாக இருந்தது. கண்ணதாசன் தன் படுக்கை யில் போய்ப் படுத்துக் கொண்டார். நான் மெதுவாகக் கண்ண தாசனைக் கூப்பிட்டு, ''ஐயா, நான் படுக்கையில் பாம்பைப் பார்த்து விட்டதால் அந்தப் படுக்கையில் படுக்க எனக்குப் பயமாக இருக்கிறது அதனால் நான் உமது படுக்கையில் படுத்துக் கொள்கிறேன். நீர் என் படுக்கையில் படுத்துக் கொள்ளும்'' என்று சொன்னேன்.

உடனே அவர், ''என்னய்யா, பயந்தாங்கொள்ளியாக இருக்கிறீர். பாம்பைக் கண்டால் இவ்வளவு பயமா? பேசாமல் உம் படுக்கை லேயே படுத்துக் கொள்ளும்'' என்று பதில் சொன்னார்!

''நீர்தான் வீரராயிற்றே, இதில் படுத்துக் கொள்ளுமே'' என்று நான் சொன்னேன்.

அதற்குப் பதில் அவருடைய குறட்டைச் சத்தம்தான்; வேறு வழி இல்லாமல் விளக்கைப் போட்டுக் கொண்டே அங்கு இருந்த ஒரு நாற காலியில் உட்கார்ந்து கொண்டே தூங்க ஆரம்பித்தேன்.

29

மறக்க முடியாத பயணம்

பொழுது விடிந்தது. சேலம் ரயிலுக்குப் புறப்பட இருவரும் ஆயத்தம் ஆனோம். சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு ஆட்டோ ரிக்ஷாவில் சென்றோம். என்னிடமிருந்த மணிபர்சைக் கண்ணதாசனிடம் கொடுத்துச் சேலத்திற்கு இரண்டு டிக்கெட் எடுத்து வரச் சொன்னேன். டிக்கெட்டுகளோ வாங்கிக் கொண்டு வந்த கண்ணதாபன் மணிபர்சை என்னிடம் திருப்பிக் கொடுத்தார். பிரித்துப் பார்த்தேன். பர்ஸ் காலி யாக இருந்தது.

''என்னய்யா? பர்ஸ் காலியாக இருக்கிறதே?'' என்று கேட்டேன்.

''இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுக்கு உமது பணம் சரியாக இருந்தது'' என்று அவர் பதில் சொன்னார்.

''ஐயையோ! உம்மை யார் இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கச் சொன்னது? மூன்றும் வகுப்புப் போதாதா?'' என்று நான் சலித்துக் கொண்டேன்.

''என்னிடம் இரண்டு அணா இருக்கிறது, பயப்படாதீர்'' என்று ஆறுதல் சொன்னார்.

காலையில் நாங்கள் சிற்றுண்டிகூட அருந்தவில்லை. பகல் எல்லாம் பயணம் செய்து இரவு சேலம் போய்ச் சேர வேண்டும். இரண்டு அணாவை வைத்துக் கொண்டு என்ன செய்வது? பயணம் செய்வதோ இரண்டாம் வகுப்பு!

பையோ காலி!

எங்களை ஏற்றிக் கொண்ட வண்டி சேலத்தை நோக்கிப் புறப் பட்டது. நாங்கள் இருந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியில் அறுபது வயது உடைய ஒரு பெரியவர் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் எங்களிடம் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டார்.

அவர் சேலத்திற்கும் ஜோலார்பேட்டைக்கும் இடையில் உள்ள ஒரு பழைய ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவராம். அவருடைய தோற்றத் தில் முதுமை இருந்தாலும் பேச்சில் மிடுக்கும், பெருந்தன்மையும் காணப்பட்டன. நாங்கள் யார் என்பதை அவர் தெரிந்து கொண்டார். எங்களோடு அரசியல் பேசுவது, அவருக்கு மிகுந்த விருப்பமாய் இருந்தது. நீதிக் கட்சி தோன்றிய காரணத்தையும், வளர்ந்த

விதத்தையும் அவர் மிகுந்த உணர்ச்சியோடும், உருக்கத்தோடும் விவரித்தார்.

வயதான பாட்டிகள் தங்கள் இளமைக் காலத்தில் கணவரோடு உற்சாகமாக வாழ்ந்ததை எல்லாம் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்கிற நேரத்தில், அவர்களுடைய உள்ளங்களில் ஏற்படுகிற இனந் தெரியாத உற்சாகம் அந்தப் பழைய ஜமீன்தாரின் அரசியல் பேச்சில் வெளிப்பட்டதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

இனிக்க இனிக்க எங்களிடம் பேசிக்கொண்டே அவர் தன்னிட முள்ள ஆப்பிள் பழங்களை அறுத்து அறுத்துச் சாப்பிட்டுக் கொண்டே வந்தார். ஒரு துண்டை எங்களிடம் நீட்டி, 'சாப்பிடுகிறீர்களா?' என்று மாத்திரம் கேட்கவில்லை. எங்களுக்கோ பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்துவிட்டது. ''என்ன இரண்டாம் வகுப்புப் பயணம் வேண்டி இருக்கிறது, சாப்பிடக் கூட முடியாமல்? இந்த இரண்டாம் வகுப்பே ஒழிந்தாலும் பரவாயில்லை'' என்று நான் கவிஞரைக் 'கடிந்து கொண் டேன் (இப்போது இரண்டாம் வகுப்பை ஒழித்து விட்டார்கள்!)

''ஆப்பிள் ரொம்பப் பெரிதாக இருக்கிறதே! இது என்ன காஷ்மீர் ஆப்பிளா?'' என்று கண்ணதாசன் அவரிடத்திலே கேட்டார்.

''ஆமாம். நான் வேறு எந்த ஆப்பிளும் சாப்பிடுவதில்லை'' என்று கூறிக் கொண்டே ஜமீன்தார் தன் காரியத்தைக் கவனித்துக் கொண் டிருந்தார். இப்படிக் கேட்டாலாவது ஒரு பழத்தை எடுத்து நீட்ட மாட்டாரா என்பது என் நண்பருடைய ஆசை. அந்த ஆசையிலும் மண் விழுந்து விட்டது.

வண்டி ஜோலார்பேட்டை வந்து சேர்ந்தது. அங்குதான் பிர யாணிகள் பிற்பகல் உணவை முடித்துக் கொள்ள வேண்டும். ஜமீன் தாருக்கு வண்டிக்குள்ளேயே சாப்பாடு வந்தது. நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். ஜமீன் தார் எங்களைப் பார்த்து, ''என்ன, உங்களுக்குச் சாப்பாடு வர வில்லையா?'' என்று கேட்டார்.

நான் சமாளித்துக்கொண்டு, ''இல்லை, நாங்கள் போய்ச் சாப்பிட்டு விட்டு வரப் போகிறோம்'' என்று கூறிக்கொண்டே, கண்ணதாசனை அழைத்துக் கொண்டு வண்டியை விட்டு இறங்கினேன். இருவரும் சிறிது நேரம் அங்கும் இங்குமாக உலவினோம். உலவினால் பசி ஓடிவிடுமா என்ன? மேலும் அதிகமாகியது. சரி, திரும்பப் போனால் சாப்பிட்ட முகத்தோடு ஜமீன்தாருக்கு நேராகக் காட்சி தர வேண்டுமே! அதற்கு என்ன செய்யலாம்? நானும் கண்ணதாசனும் யோசித்தோம். அதற்கு உடனடியாக நான் விடையளித்தேன். காரணம் எனக்கு இதற்கு முன்பு ஒரு முறை இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது:

நான் திராவிடர் கழகத்திலிருந்தபோது, தஞ்சை மாவட்டத்தில் திருவாஞ்சியம் என்னும் ஊரில் மாலை ஐந்து மணிக்கு ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள். நான் அதை முடித்துவிட்டு ஏழு மைல் சென்று குடவாசலில் பஸ் ஏறிக் கும்பகோணம் சென்று ரயிலைப் பிடித்துச் சீர்காழியில் நடைபெறும் ஒரு நாடகத்திற்குத் தலைமை வகிக்கச் செல்ல வேண்டும்.

திருவாஞ்சியம் கூட்டம் முடிந்ததும் என்னைக் கொண்டுபோய்க் குடவாசலில் ஒரு டாக்சியில் விட்டு விடுவதாகக் கூட்டம் நடத்தியவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால் கூட்டம் முடிந்த பிறகு கூட்டத்தை நடத்தியவர்கள் மெல்ல நழுவி விட்டார்கள். நான் நடந்தே இரவு ஒன்பது மணிக்குக் குடவாசலை அடைந்தேன். நான் ஏறவேண்டிய பஸ் அப்போதுதான் போய்விட்டது என்று சொன்னார்கள். அடுத்த பஸ் ஏறிக் குடந்தைக்குச் சென்றேன்.

நான் பிடிக்க வேண்டிய ரயில் ஐந்து நிமிடத்திற்கு முன்புதான் புறப்பட்டுப் போயிற்று என்று அறிந்தேன். என்னை வரவேற்பதற்காக, சீர்காழி ரயிலடியில் மாணவத் தோழர்கள் ஏராளமாகக் காத்திருந்தார்களாம். ஆனால் நானே குடந்தைத் தெருவில் நடந்து கொண்டிருந்தேன். சீர்காழி போய்ச் சேர்ந்திருந்தால், திரும்ப ஊருக்குச் செல்ல விழா முடிந்ததும் மாணவர்கள் வழிச் செலவுப் பணம் கொடுத்திருப்பார்கள். நான், குடந்தையிலேயே சிக்கிக் கொண்டதால், காலையில் திருவாரூருக்குத் திரும்புவதற்கான பஸ் கட்டணத்திற்குத் தான் என்னிடம் பணம் இருந்தது!

குடந்தை நாகேசுவரன் கோவில் சந்நிதியில் உறவினர் ஒருவர் இருக்கிறார் என்ற ஞாபகம் வந்தது. அந்த வீட்டிற்குச் சென்றேன். திண்ணையில் இருந்தவாறே உள்ளேயிருந்த உறவினரைப் பார்த்து, "என்ன சௌக்கியமா?" என்று கேட்டேன். அவர் உள்ளேயிருந்தவாறே என்னை, "வாங்க, வாங்க!" என்று வரவேற்று, "சாப்பிட்டு விட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே, "இங்கே நம் வீட்டில் பத்தியச் சாப்பாடுதான்" என்று நிலைமையைத் தெளிவாக விளக்கினார். நான் ஓர் அசட்டுப் புன்னகையோடு, நான் பக்கத்துத் தெரு ஓட்டலில் போய்ச் சாப்பிட்டு விட்டு வருகிறேன். தூங்குவதற்குத் திண்ணையில் ஒரு பாய் மாத்திரம் எடுத்துப் போட்டு வையுங்கள்" என்று கூறி விட்டு அருகில் உள்ள காந்திப் பூங்காவின் பக்கம் சென்றேன்.

ஓட்டலில் நுழைந்து சாப்பிட்டால் காலையில் பஸ்ஸில் ஊருக்குத் திரும்புவதற்குக் காசில்லாமல் போய்விடும். ஆகவே சாப்பிட்டதுபோல் நடிப்போம் என்று தீர்மானித்துக் கொண்டேன். உறவினரிடத்தில் விட்டுக் கொடுக்கக்கூடாதல்லவா? அதனால் அங்கேயுள்ள வெற்றிலைப்

பாக்குக் கடையில் வெற்றிலை வாங்கிப் போட்டுக்கொண்டு, வாய் சிவக்கச் சிவக்க, உறவினர் வீட்டுக்கு வந்தேன். அவர் எனக்காகத் திண்ணையில் காத்துக் கொண்டிருந்தார். நான் சென்றதும் சிறிது நேரம் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர் படுக்கச் சென்றுவிட்டார்.

நான் திண்ணையில் உடலைச் சுருட்டிக்கொண்டு படுத்திருந்தேன். விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து முதல் பஸ்ஸைப் பிடித்துத் திருவாரூருக்குச் செல்லக் கிளம்பினேன். பஸ்ஸில் உட்கார்ந்த பிறகு திருவாரூருக்கு நான் தர வேண்டிய பஸ் கட்டணம் குறைவாக இருக்குமோ என்று ஒரு சந்தேகம் எழுந்தது. அப்போது எனக்குத் தெரிந்த ஒருவர் திருவாரூர் செல்ல பஸ் ஏறினார். அவர் டிக்கெட்டுக்கான பணத்தைச் சில்லறையாக எடுத்தார். நான் என் கையில் இருந்த சில்லறைக் காசுகளை அவருடைய கையிலே போட்டு, ''எனக்கும் ஒரு டிக்கெட் எடுங்கள்'' என்று சொன்னேன். நல்ல வேளையாக அவர் எண்ணிப் பார்க்காமல் இரண்டையும் ஒன்றுகச் சேர்த்துக் கண்டக்டரிடம் கொடுத்து எனக்கும் சேர்த்து ஒரு டிக்கெட் வாங்கிவிட்டார்.

இந்த நிகழ்ச்சிதான் எனக்கு ஜோலார்பேட்டை சந்திப்பில் ஞாபகத்திற்கு வந்தது. நான் உடனே கண்ணதாசனிடம் சொன்னேன்: ''இருவரும் ஆளுக்கொரு வெற்றிலை பீடா வாங்கிப் போட்டுக்கொண்டு சாப்பிட்டவர்கள் போல, வாய் சிவக்க ஜமீன்தார் எதிரிலே செல்லலாம்'' என்று.

எங்களிடம் அதற்குக் காசு இருந்தது. இருவரும் வெற்றிலைப் பாக்குக் குழையக் குழைய இரண்டாம் வகுப்புப் பெட்டிக்குள் சென்றோம். ஜமீன்தார் ஏப்பம் விட்டவாறு, ''என்ன சாப்பிட்டீர்கள்?'' என்று கேட்டார் ''ஓ, பிரமாதமான சாப்பாடு!'' என்றவாறு நாங்கள் எங்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டோம். ஜமீன்தார், ''கொஞ்சம் பெட்டியைப் பார்த்துக் கொள்ளுங்கள். சற்று வெளியில் போய் வருகிறேன்'' என்று கூறி விட்டுக் கீழே இறங்கிச் சென்றார்.

நொடித்துப் போன ஜமீன்தார் என்ற காரணத்தினால் அவரைச் சுற்றி யாரும் ஆள் அம்புகள் இல்லை. அவர் கீழே இறங்கிச் சென்ற பிறகு நானும் கண்ணதாசனும் அவர் கூடையில் வைத்துப் போன பழங்களையே பார்த்துக் கொண்டிருந்தோம். கண்ணதாசன் என்னிடம் மெதுவாக, ''ஏனையா, ஜமீன்தாரிடம் ஓர் ஐந்து ரூபாய் பணம் கேட்டால் என்ன?'' என்று ஆரம்பித்தார். நான் உடனே சொன்னேன் ''பேசாமல் இரும்; பணம் கேட்டு அவமானப்படவேண்டாம்'' என்று.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஜமீன்தார் வந்துவிட்டார். வண்டியும் புறப்பட்டது. கண்ணதாசன் உதடுகள் ஏதோ ஒரு பாட்டை முணு

முணுத்துக் கொண்டிருந்தன. நான் கூர்ந்து கவனித்தேன். ''ஐயா, சிறுவன்; ஏழை என்மேல் மனம் இரங்காதா?'' என்ற பாடலைத் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தார். எனக்கு எப்பொழுதுமே பசி ஒரு பிரச்னையல்ல: அதற்குத் தன்னைப் பழக்கிக் கொள்ளாத என் நண்பர்தான் மிகவும் வாடிவிட்டார்.

மாலையில் ஜமீன்தாருக்குக் காப்பி வருகிறது. சுவைத்து அருந்துகிறார், ''நீங்கள் காப்பி சாப்பிடவில்லை?'' என்று எங்களை வேறு கேட்கிறார். ''எங்களுக்குக் காப்பியே பிடிக்காது'' என்று பதில் சொல்கிறோம். பச்சைப் பொய்தான், என்ன செய்வது? ''ஆகா, இந்தக் காலத்து இளைஞர்கள் காப்பி கூடச் சாப்பிடுவது இல்லையா?'' என்று வியப்போடு எங்களைப் பாராட்டுகிறார். எங்கள் உள்ளத்தின் துடிப்பு அவருக்கு எப்படித் தெரியும்?

இரவு எட்டு மணிக்கு மேல் எங்களைச் சுமந்து வந்த வண்டி சேலத்தை அடைந்தது. இரயிலடியில் அப்போதுதான் திருவாரூரிலிருந்து வந்திறங்கிய என் அன்னையும், மனைவியும், மாறனும், எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தும் எங்களுடைய முதல் கேள்வி, ''சாப்பிட என்ன வைத்திருக்கிறீர்கள்?'' என்பதுதான்.

அவர்கள் கொண்டு வந்த கட்டுச் சோற்று மூட்டையை இரயிலடியிலேயே அவிழ்த்து அங்கே உட்கார்ந்தவாறே நாங்கள் இருவரும் சாப்பிட ஆரம்பித்தோம். கண்ணதாசன் இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கிய கதையை அம்மாவிடம் சொல்லி, எல்லாருமாகச் சேர்ந்து சிரித்தோம்.

30

சேலத்தில் குடும்பம

சேலத்தில் எங்கள் குடும்ப வாழ்க்கை தொடங்கியது. சேலம் கோட்டையில் உள்ள ஒரு தெருவில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வீட்டில் நாங்கள் குடி புகுந்தோம்.

என்னுடைய 'மந்திரி குமாரி' நாடகத்தைப் படமாக எடுக்க வேண்டுமென்ற விருப்பத்தை மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் திரு. டி. ஆர். சுந்தரம் வெளியிட்டார். நானும் ஒப்புதல் அளித்து அதற்கான திரைக்கதையையும், உரையாடல்கள் அனைத்தையும் படத்திற்கேற்றவாறு எழுதி முடித்தேன். அப்பொழுதுதான் அவர்கள் வெளியிட்ட 'மாயாவதி' என்ற ஒரு படம் பெரும் தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்தது. மிகுந்த செலவில் எடுக்கப்பட்ட அந்தப் படத்தின் நஷ்டத்தை ஈடு கட்டுவதற்காக 'மந்திரி குமாரி' படத்தைச் சிறந்த முறையில் எடுக்கத் திரு டி. ஆர். சுந்தரம் முடிவு செய்தார். படத்திற்கான ஆரம்ப விழாவிற்குத் தேதி குறிக்கத் தொடங்கினர்கள். நல்லநாள் பார்க்க ஓர் ஆடிட்டர்-அழைத்து வரப்பட்டார். அவரை என்னிடம் அறிமுகப்படுத்தினர்கள்.

நான் அவரிடத்தில், "மந்திரி குமாரி" பட ஆரம்ப விழாவிற்கு நாள் பார்க்க வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"ஆமாம்" என்று மிக்க மகிழ்ச்சியோடு, ஆனந்தம் பொங்க அவர் பதில் அளித்தார்.

"மாயாவதி" படத்திற்கும் நீங்கள் தானே நாள் பார்த்தீர்கள்?" என்று நான் கேட்டதற்கு, அசடு வழிய, "ஆமாம்" என்றார்.

திறமை வாய்ந்த இயக்குநர் எல்லிஸ் ஆர். டங்கன் அவர்களின் முழுப் பொறுப்பிலும், திரு. டி. ஆர். சுந்தரம் அவர்களின் மேற்பார்வையிலும் வெளியான 'மந்திரி குமாரி' படம் தமிழ் நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. சனாதனிகளின் எதிர்ப்பும், எதிர்க்கட்சிக்காரர்களின் மேடைத் தாக்குதலும் அந்தப் படத்தின் காரணமாக நிரம்ப ஏற்பட்டன.

"கொள்ளை அடிப்பது சிறந்த கலை" என்று அந்தப் படத்தில் வரும் ஒரு கதாபாத்திரமான கொள்ளைக்காரப் பார்த்திபன் கூறுவதாக ஒரு கட்டம். அது ஒரு பாத்திரத்தின் கொள்கை என்பதை மறந்து விட்டுக் கதாசிரியராகிய என் கொள்கையும் அதுதான் என்று கற்பனை செய்து, "இப்படி ஒரு கொள்கையை நாட்டிற்குச் சொல்லலாமா?"

என்றெல்லாம் எதிர்க்கட்சி அரசியல் மேடைகளில் வேகமாக விமரிசிக்கப்பட்டது.

இந்தக்கொள்கையைச் சொல்கிற கொள்ளைக்காரப் பார்த்திபன் கதையின் முடிவில் அழிவிற்கு ஆளாகிறான். கொடியவனின் முடிவை நான் எப்படிச் சித்தரித்திருந்தேன் என்பதைப் பற்றிக்கூட எண்ணிப் பாராமல் என்னையும் நான் சார்ந்த கட்சியையும் தூற்றுவதற்கு 'மந்திரி குமாரி' கதையை மாற்றூர் ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர். எதிர்ப்புகள் அதிகமாக அதிகமாகப் படம் பெரும் வெற்றியை ஈட்டியது. ஒவ்வொரு ஊரிலும் நீண்ட நாட்கள் நடை பெற்றுப் பெரும் புகழைப் பெற்றது.

சேலத்திற்கு வந்திருந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு தியேட்டரில் 'மந்திரி குமாரி' படத்தைப் பார்த்துவிட்டு, மறுநாள் காலையில் என்னை வந்து சந்தித்து வாழ்த்தினார் தான் எடுக்கவிருக்கும் 'மணமகள்' படத்திற்கு நான்தான் திரைக்கதை, வசனம் எழுத வேண்டுமென்றும் வலியுறுத்தினார். நான் ஒப்புக் கொண்டேன். எனக்கும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும் கலையுலகில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த இந்தச் சந்திப்புக் காரணமாக இருந்தது.

சேலத்தில் அவர் தங்கியிருந்த விடுதிக்கு என்னை அழைத்துக் கொண்டு காரில் புறப்பட்டார். என்னுடன் உடுமலை நாராயண கவிராயரும், அவரது மாணவர் செல்லமுத்துவும் இருந்தார்கள். ''மணமகள்'' வசனம் எழுத எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று கலைவாணர் என்னைக் கேட்டார். ''எனக்குத் தெரியாது?'' என்று பதில் சொன்னேன். என்னைச் சொல்லுமாறு கட்டாயப் படுத்தினார். நான் கடைசிவரையில் பணம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இறுதியாக அவர் ஒரு துண்டுச் சீட்டில் ஏதோ எழுதி அதைச் சுருட்டி மடக்கி என் கையிலே கொடுத்தார். நான் அதை பிரித்துப் பார்க்காமலேயே கையில் வைத்துக்கொண்டிருந்தேன்.

''பிரித்துப் பாருங்கள்'' என்று என்னைப் பிடிவாதப் படுத்தினார் துண்டுத்தாளைப் பிரித்துப் பார்த்தேன். அதில் நாலு பூஜ்யங்கள் எழுதப்பட்டிருந்தன! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது 'என்ன, நாலு பூஜ்யங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறீரே?' என்று சற்றுத் திகைத்தேன் அவர் என்னைப் பார்த்து களங்கமற்ற புன்னகை புரிந்து கொண்டிருந்தார். நான் அதில் ஏதோ நகைச் சுவை இருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டு, ''சரி, சம்மதம்'' என்று கூறினேன் அவர் விழிகளை அகலமாக ஆக்கிக் கொண்டு, ''அப்படியா, சம்மதமா?'' என்று ஆவலோடு கேட்டார். நான் மறுபடியும், ''ஆமாம், சம்மதம் தான்!'' என்று சொன்னேன்.

31

கலைவாணரின் பெருந்தன்மை

கலைவாணர், கண்களைக் கேலியாகச் சிமிட்டிக் கொண்டே என்னை மறுபடியும் பார்த்து, ''நான்கு பூஜ்யங்கள் போட்டிருக்கிறேன். அதற்குச் சம்மதமா என்று கேட்கிறேன். 'ஆமாம்' என்கிறீர்கள். நான் நம்பலாமா?'' என்று கேட்டார். 'ஒத்துக் கொண்டுதானே ஆமாம் என்கிறேன்'' என்று பதில் சொன்னேன்.

''சீட்டைக் கொடுங்கள்'' என்று வாங்கிக் கொண்டார்.

''இதில் 'ஒன்று' எங்கே போடுவது? முன்னாலா? பின்னாலா?'' என்று கேட்டார். ''எங்கு வேண்டுமானாலும் போடுங்கள்'' என்றேன். அவர் நான்கு பூஜ்யங்களையும் கடந்து, கடைசியாக ஒன்று என்று எழுதினார். அதாவது 00001 என்று எழுதப் பட்ட சீட்டை என்னிடம் கொடுத்தார். சிரித்துக் கொண்டே, ''சரிதானே?'' என்றார். நான், ''சரிதான்'' என்று கூறியவாறு அவர் கொடுத்த சிறிய சதுரமான சீட்டைத் தலைகீழாக மாற்றிக் காட்டினேன். அப்படி மாற்றிய போது 1 முதலிலும், நான்கு பூஜ்யங்கள் அதனைத் தொடர்ந்தும் (10,000 என்று) காட்சியளித்தது. அதைப் பார்த்துவிட்டுக் கலைவாணர், ''ஆகா, என்னையே ஏமாற்றிவிட்டீர்களே!'' ஏன்று வயிறு குலுங்கச் சிரித்தார்.

இப்படி நகைச்சுவையுடனே எங்கள் கலையுலகத் தொடர்பு ஆரம்பமானது. அந்தக் கலைவாணர் இன்றில்லாவிட்டாலும், அவர் கலையுலகத்தில் பதித்துவிட்டுச் சென்ற முத்திரைகள் என்றென்றும் அழியாதவைகளாகும். அவர் சாகும் வரையில் என்னுடைய உற்ற நண்பராக விளங்கினார், என் குடும்பத்து உறுப்பினர்களில் ஒருவராகத் தன்னையாக்கிக் கொண்டார்.

சேலத்தில் இருந்த என்னைச் சென்னைக்குக் குடிவந்து விட வேண்டுமென்று அடிக்கடி அவர் வற்புறுத்தியதின் விளைவாக நான் சென்னையில் குடியேறினேன். நாள் தோறும் காலையிலோ மாலையிலோ. என்னைச் சந்திக்கா விட்டால் அவருக்கு நிம்மதியே இருக்காது. அவரும், கலையுலக நண்பர்களும் நானும் எத்தனையோ நாட்கள் சென்னைக் கடற்கரையின் மணற்பரப்பில் ஆயிரம் ஆயிரம் கதைகளைப் பேசிப் பேசி மகிழ்ந்திருக்கிறோம்.

கலையுலகம் கண்டெடுத்த நல்முத்து அவர்; உழைப்பால் உயர்ந்த உத்தமர். கலையுலகத்திற்குக் குளிர் தருவாக அவர் இருந்தார். ஏழை,



எளியவர்களின் பக்கம் அவரது கொடைக்கரம் நீண்டு கொண்டே யிருந்தது. வறுமைச் சகதியில் அமிழ்ந்து வேதனைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அழுது கொண்டு இருந்த மனிதனையும் அவர் சிரிக்க வைத்தார். அந்தச் சிரிப்பு வெறும் சிரிப்பாக இல்லாமல், விதவிதமான கருத்துக்களை, எண்ண வளங்களை உருவாக்கக் கூடியதாயிருந்தது. ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அடக்கமாகத் தன்னுடைய வாழ்க்கையை அவர் அமைத்துக் கொண்டார். பிறரின் துன்பங்களைத் தனக்குற்ற துன்பம் போல் கருதிக் கொண்டார்.

அறிஞர் அண்ணாவின்பால் அவருக்கு இருந்த பற்றும், பாசமும் எழுதிட ஏடு அடங்காது. அவர் இல்லாமல் படங்கள் வெற்றி யடைவது இயலாத ஒன்றுகயிருந்தது. சரித்திரப் படங்கள் ஆயினும், புரட்சிப் படைப்புக்கள் ஆயினும் கலைவாணரும் அவரது வாழ்க்கைத் துணைவியார் மதுரம் அம்மையாரும் அந்தப் படங்களில் சில காட்சி களிலாவது தோன்றினால்தான் படம் வெற்றி பெறும். அவர் நடித்த எல்லாப் படங்களிலும் பகுத்தறிவுக் கருத்துக்களை எடுத்துச் சொல்லத் தவறியதில்லை.

நகைச்சுவை நடிப்பென்றால் வாயைப பிளப்பது, வயிற்றில் அடித்துக் கொள்வது, தலைகீழாக நடப்பது, தடதடவென உருளுவது என்பதுதான் என்று இருந்த காலத்தை மாற்றி, அரிய கருத்துக்களால் மக்களைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைப்பது என்ற புதிய முறையைப் புகுத்திய தனிப் பெருமை கலைவாணருக்கே சொந்தமாகும்,

அவர் பெற்று வந்த புகழ் கண்டு மனம் பொருத சில பேர்கள் அவரைப் பற்றியும், அவரது கலையுலக நண்பர் எம். கே. தியாகராச பாகவதர் அவர்களைப் பற்றியும் தாறுமாறுகப் பேசவும், எழுதவும் முற்பட்டார்கள். அதற்குச் சில மஞ்சள் பத்திரிகை ஆசிரியர்களின் உதவியையும் பெற்றார்கள்.

தன்னைத் தாக்குவது பற்றியோ, தனது புகழுக்கு எதிராகப் பிரசாரம் செய்வது பற்றியோ, பத்திரிகைகளில் எழுதுவது பற்றியோ

கலிவாணர் கவலைப்படவில்லை. அந்த எதிர்ப்புக்களைச் சிரித்துச் சிரித்துச் சமாளித்துக் கொண்டார். ஈவுத்தனமாக எதிர்ப்புக்கள் வரும்போதும், மறைமுகமான தாக்குதல்கள் வரும்போதும் அண்ணா காட்டிய மௌனமும், கலிவாணர் காட்டிய சிரிப்பும் இன்றைக்கும் என்னால் மறக்க முடியாதவைகளாகும். அத்தகைய எதிர்ப்புக்கள் என்னை நோக்கி வருகிற நேரத்தில் நான் அண்ணாவையும் கலிவாணரையும்தான் எண்ணிக் கொள்கிறேன்.

ஒரு கொலை வழக்கில் கலிவாணரும், எம். கே. தியாகராச பாகவதரும் சம்பந்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார்கள். அப்போது பாகவதர் கண் கலங்கினார். கலிவாணர் சிரித்துக் கொண்டே சிறை புகுந்தார். அந்தக் கலையுலக மாமணிகளின் விடுதலைக்காகப் பெரியாரும், அண்ணாவும் பெரும் பாடுபட்டார்கள். தமிழகமே அவர்கள் இருவரது விடுதலைக்காகக் குரல் ஒலித்தது. இறுதியில் வழக்கறிஞர் எத்திராஜ் அவர்களின் வாதத் திறமையோடு நீதி வென்றது. கலிவாணரும், பாகவதரும் இரண்டு ஆண்டு காலச் சிறைவாசத்திற்குப் பிறகு வெளிவந்தார்கள். தன் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களையும், கழக நண்பர்களையும் கலிவாணர் கடைசியாகக் கண் மூடும் வரையில் மறக்கவே இல்லை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருக்குறளின் உண்மைப் பொருளுணர்ந்து நடந்து காட்டிய அந்தப் பெருமகன் எனக்குச் சிறு இடர் வந்தாலும் அது தனக்கு வந்தது போல் துடிதுடிப்பார்.

ஒரு நாள் எனக்குக் காய்ச்சல் என்று கேள்விப்பட்டுச் சென்னையில் தியாகராயநகரில் குடியிருந்த என்னைப் பார்ப்பதற்காக வந்தார். அவருடன் கலையுலக நண்பர்கள் சிலரும் வந்தார்கள். எப்பொழுதாவது நாங்கள் பொழுது போக்கிற்காகச் சீட்டு விளையாடுவது உண்டு. சோர்ந்து படுத்திருந்த என்னைப் பார்த்துக் கலிவாணர், கொஞ்ச நேரம் சீட்டு விளையாடலாம் என்று அழைத்தார். நான் மறுத்தேன். "அப்போதுதான் உடம்பு சுகமாகும்; எழுந்து உட்காருங்கள்" என்று என்னை எழுப்பி உட்கார வைத்தார்.

வந்தவர்கள் தலைக்கு ஆயிரம் ரூபாய் வைத்துக் கொண்டு சீட்டு விளையாட ஆயத்தமாய் இருந்தார்கள். நானோ நூறு ரூபாய் வைத்துக் கொண்டு சீட்டு விளையாட ஆயத்தமானேன். பணம் குறைவாகத் தான் இருக்கிறது என்று கலிவாணரிடம் சொன்னேன். "பரவாயில்லை. வேண்டுமானால் நான் தருகிறேன்" என்று தைரியப்படுத்தினார்.

அன்று சீட்டாட்ட முடிவில் கலைவாணர் உட்பட அனைவரும் என்னிடத்தில் தோற்றுவிட்டார்கள். ஐயாயிரம் ரூபாய் எனக்கு இலாபம்! கலைவாணர் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு அதற்கு மேல் தேவையான பணத்தைத் தானே போட்டு ஒரு கார் வாங்கித் தருவதாகச் சொல்லிவிட்டுப் போனார். மறுநாளே ஒரு புதிய கார் என் வீட்டிற்கு வந்தது. அதில் என்னை உட்கார வைத்துக் கலைவாணரே ஸ்டுடியோவிற்கு அழைத்துச் சென்றார்.

ஒரு நாள் நானும், கலைவாணரும் அந்தக் காரில், கலைவாணர் நிறுவனத்தில் பணியாற்றிய நண்பர் செல்லமுத்துவும் கலைவாணர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். நான் கலைவாணருடன் மாடியில் பேசிக் கொண்டிருந்தேன். என் காரில் பெட்ரோல் இல்லை என்று டிரைவர் செல்லமுத்துவிடம் சொல்லியிருக்கிறார். உடனே செல்ல முத்து அங்குள்ள முக்கியமான மானேஜரிடம் என் காருக்கு ஒரு காலன் பெட்ரோல் போடக் கேட்டிருக்கிறார். அவர் பெட்ரோலுக்காக ஒரு கூப்பனைச் செல்லமுத்துவிடம் கொடுத்து விட்டு, ''இனிமேல் இப்படி எல்லாம் கலைவாணர் வீட்டுப் பணத்தை அழிக்காதே'' என்று கூறியிருக்கிறார். இந்தச் செய்தி என் காதிற்கு வரவில்லை.

மறுநாள் அதே மானேஜர், முதல் நாள் என் காருக்கு ஒரு காலன் பெட்ரோல் போட்ட செய்தியைக் கலைவாணரிடம் கூறியதோடு, தான் செல்லமுத்துவிடம் கண்டிப்பாகச் சொன்ன விஷயத்தையும் விவரித் திருக்கிறார். கலைவாணர் 'மணமகள்' படத்தில் ஆசிரியர் வேடத்தில் நடித்துக் கொண்டிருந்த நேரம் அது. மானேஜர் இதைச் சொன்னதும், கலைவாணர் படப்பிடிப்பு நிலையத்தை விட்டு வெளியே வந்திருக்கிறார். மானேஜருக்கு ஒரே திருப்திதான். கலைவாணர் குடும்பத்திற்கு எவ்வளவு காப்பாக இருக்கிறோம் என்பதைக் காட்டிக் கொண்டதாக அவருக்கோர் எண்ணம். ஆனால் வெளியே வந்த கலைவாணர் காரில் ஏறி நேராக என் வீட்டிற்கு ''மணமகள்'' ஆசிரியர் வேடத்துடனேயே வந்திருக்கிறார்.

நான் வீட்டிலில்லை. என் அம்மா இருந்திருக்கிறார்கள். அவர் களிடத்தில் கலைவாணர், ஓர் ஆயிரம் பெட்ரோல் கூப்பன்களைக் கொடுத்து, ''இதை வைத்துக் கொண்டு தம்பி வந்ததும் வேண்டிய அளவு பெட்ரோல் போட்டுக்கொள்ளச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாளே அந்த மானேஜர் வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். வீட்டிற்கு வந்த நான் என் அன்னை கொடுத்த பெட்ரோல் கூப்பன்களை எடுத்துக் கொண்டு போய்க் கலைவாணரிடம் கொடுத்து விட்டு, ''தேவையானால் வாங்கிக் கொள்கிறேன். இப்போது நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு, அவரையும் வேலை நீக்கம் செய்யப்பட்ட மானேஜரையும் சமாதானப்படுத்த முயன்றேன். கலைவாணர் என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு, நடந்துவிட்ட விஷயத் திற்கு வருந்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அந்தப் பெரும் உள்ளத்தைக் கலையுலகத்தில் அவரைப் போல் யார்தான் பெற முடியும்?

32

பண்டார உருவில்...

கார் விபத்தில் கண்ணில் அடிபட்டு, மருத்துவர்கள் எச்சரித்திருந்தும் கேளாமல், தொடர்ந்து 'மணி மகுடம்' என்ற நாடகத்தை எஸ். எஸ். ஆர். குழுவுக்காக எழுதிக் கொண்டிருந்த போது, தாங்க முடியாத கண் வலி ஏற்பட்டு, சென்னைக் கண் மருத்துவ மனையில் நான் சேர்க்கப்பட்டேன். பெங்களூரில் இருந்த கலைவாணர் இந்தச் செய்தியைப் பெங்களூரில் உள்ள பத்திரிகைகளில் பார்த்து விட்டு, அங்கே தனக்கு இருந்த இரண்டு, மூன்று நாள் நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்துச் செய்து விட்டுச் சென்னைக்கு ஓடோடி வந்தார். ஆறு மாத காலம் நான் கண் மருத்துவ மனையில் இருந்தேன். காலையிலும், மாலையிலும் அவரும் மதுரம் அம்மையாரும் மருத்துவ மனைக்கு வந்து என்னோடு ஒரு மணி நேரம் இருந்து ஆறுதல் கூறிவிட்டுத்தான் திரும்புவார்கள்.

'மணி மகுடம்' நூறுவது நாடக விழாவின் போது டாக்டர் மு. வரதராசனார் தலைமை வகித்தார். அந்த விழாவில் கலந்து கொள்ளு வதாக இருந்த கலைவாணருக்கு உடல் நலமில்லை. தான் பேச வேண்டியதை எழுதியனுப்பியிருந்தார். அதில் இன்றைக்கு நினைத் தாலும் நான் உணர்ச்சி வசப்படக் கூடிய ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு இருந்தார்.

அவர் வீட்டு மாடியில் நான் தனியாக அமர்ந்து 'மணமகள்' படத்திற்குத் திரைக்கதை-வசனம் எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுதுகிற வேகத்தில் எழுதப்பட்ட தாள்களை ஒழுங்காக அடுக்கி வைக் காமல், அவை காற்றிலே பறந்து மாடி முழுவதும் சிதறிக் கிடக் கின்றன. நான் அவைகளைக் கவனிக்காமல் எழுதிக்கொண்டேயிருக் கிறேன். திடீரென இரைந்து கிடந்த தாள்கள் என் முன்னால் அடுக்கி வைக்கப்படுகின்றன. அதனை அடுக்கி வைத்தது யார் என்று திரும்பிப் பார்க்கிறேன். என் பின்னால் கலைவாணர் புன்னகை பூத்தவாறு நிற்கிறார். ''என்ன நீங்களா?'' என்று கேட்கிறேன். ''ஆமாம், கம்பன் எழுதிய போது இப்படித்தான் சோழ மன்னன் பின்னால் இருந்து அடப் பக்காரன் போல் தாம்பூலம் கொடுத்தான்'' என்று கூறுகிறார் கலைவாணர். ''நீங்கள் சோழ மன்னனாக இருக்கலாம்; ஆனால் நான் கம்பன் அல்ல'' என்று பதில் அளித்தவாறு அவரைத் தழுவிக்கொள் கிறேன் நான்.

இந்த நிகழ்ச்சியை மஞ்சி மகுடம்' நூறாவது நாடக விழாவில் கலைவாணர் அப்படியே குறிப்பிட்டு எழுதியிருந்தார். அதை மேடையில் நடிகமணி நாராயணசாமி அவர்கள் படித்தபோது என்னுடைய உள்ளம் எத்தகைய உணர்ச்சி அலைகளுக்கு ஆளானதோ, அதே நிலைதான் அதனை நினைத்து இப்போது எழுதும் போதும் எனக்கு ஏற்படுகிறது

அரசியலில் முழுக்க முழுக்க அவர் தன்னை ஒரு கட்சிக்கு உரியவராக ஆக்கிக் கொள்ளாவிட்டாலும், பெரியாரிடத்திலும் அண்ணாவிடத்திலும் என்னைப் பேர்ன்ற சிலரிடத்திலும் தனி அன்பு செலுத்தி வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜீவானந்தம், அவருக்குச் சகோதரரைப்போல் இருந்தார்.

ஒரு முறை நான் வழக்கம் போல் கலைவாணர் வீட்டிற்குப் போயிருந்த போது என்னை அவர், ''மாடிக்கு வாருங்கள், தனியாகப் பேசுவோம்" என்று அழைத்துக் கொண்டு போனார். மாடியில் ஜன்னல்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ''ஏன் பகற்காலத்தில் ஜன்னல்களை மூடிவிட்டு, வெளிச் சத்திற்காக விளக்குகளைப் போட்டிருகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே நான் அவருடன் சென்றேன். ''காமெடியன் வீடு அல்லவா எல்லாம் காமெடியாகத்தான் இருக்கும்!" என்று சிரித்துக் கொண்டே அவர் பதில் சொன்னார்.

மாடிக்குப் போனதும் என்னைப் பார்த்து, ''உங்களுக்கு ஒரு பண்டாரத்தை அறிமுகப்படுத்தப் போகிறேன். பார்த்தால் பண்டாரம் போல் தெரியும். ஆனால் பெரிய மாயாவி!'' என்று குறிப்பிட்டார். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒரு மஞ்சள் திரை புதிதாகத் தொங்கிக் கொண்டிருந்தது. ''பண்டாரம் எங்கே?'' என்று கேட்டேன் ''பாருங்கள், இப்போது வருவார்'' என்றுகூறிக்கொண்டே கலைவாணர் கைகளைத் தட்டினார்.

மஞ்சள் திரையை விலக்கிக் கொண்டு ஓர் உருவம் நாங்கள் இருந்த இடத்தை நோக்கி வந்தது. நல்ல கட்டான உடல். மழுமழு வென்றிருக்கும் மொட்டைத் தலை. இடையிலே காவியாடை. தோளிலே ஒரு காவித் துண்டு. கழுத்தில் ருத்திராட்ச மாலை. நெற்றி நிறைய விபூதி. ''இவர்தான் அந்தப் பண்டாரம்" என்று கலைவாணர் அவரை எனக்கு அறிமுகப் படுத்தினார்.

நான் பண்டாரத்தைப் பார்த்து, ''சாமிக்கு எந்த ஊர்?" என்று கேட்டேன். பண்டாரம் பதில் சொல்லவில்லை. உடனே கலைவாணர், ''சாமிக்குக் காது கேட்காது. நான் சொல்கிறேன். சாமி ரஷ்யாவிலிருந்து வருகிறது" என்று கூறினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'ரஷ்யா நாஸ்திகப் பூமியாயிற்றே. அங்கே இப்படிப் பட்டை தீட்டிக்

கொட்டை கட்டிக்கொண்ட பண்டாரங்கள் ஏது?' என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். கலிவாணர் பண்டாரத்தைப் பார்த்து, ''உண்மையைச் சொல்லட்டுமா?'' என்று சற்று உரத்த குரலில் கேட்டார். பண்டாரம் தலையாட்டினார்.

''அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அரசாங்கத்தால் தேடப்பட்டு வருகிற கம்யூனிஸ்ட்டுகள் 'அண்டர் கிரவுண்ட்' வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட 'கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவர்தான் இங்கே அடைக்கலம் புகுந்திருக்கிறார். அவர்தான் இவர் இவரை யார் என்று கண்டுபிடியுங்கள். பார்க்கலாம்'' என்று கலிவாணர் எனக்கு அறைகூவல் விட்டார்.

என்னால் உடனே கண்டு பிடிக்க முடியவில்லை. பண்டாரத்தை உற்றுப் பார்த்தேன். பிறகு புரிந்து கொண்டேன். அடர்த்தியான மீசையுடன் அடலேறு போல் முழங்கிடும் ஜீவானந்தம்தான் அந்தக் கோலத்தில் இங்கேயிருக்கிறார் என்பதை!

சுமார் மூன்று மாதங்களுக்கு ஜீவானந்தம் கலிவாணர் வீட்டு மாடியிலேயே காவியுடைப் பண்டாரமாக வாழ்ந்து வந்தார். ஜீவானந்தத்தின் மீது கலிவாணர் வைத்திருந்த பற்றைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது வைத்திருந்தார் என்று சொல்ல முடியாது.

33

வானத்து மத்தாப்பு

1957ம் ஆண்டு முதன் முதலில் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபட்டபோது கழகத்தின் வெற்றிக்காகக் கலைவாணர் பல்வேறு தொகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

நான் அப்போது குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டேன். என்னுடைய தேர்தல் பிரசாரத்திற்குக் கலைவாணரை ஒரு முறைதான் அழைத்தேன். அவரே தானாக மூன்று முறை வந்தார். தேர்தல் பிரச்சாரத்தை நடத்திக் கொடுத்தார்.

வாரி வாரி வழங்கிய அந்தக் கலையுலக வள்ளல் தன்னுடைய கடைசிக் காலத்தில் வறுமையால் கொட்டப்பட்டாரெனினும் வரட்டம் அடைந்தாரில்லை. அந்த நிலைமையையும் சிரித்தே சமாளித்தார். அந்த நெருக்கடியிலும் அவரது வள்ளல் தன்மை குறையவில்லை.

சேலம் உணவு விடுதி ஒன்றில் அவர் தங்கியிருந்தபோது ஓர் ஏழை நடிகன் தன்னுடைய திருமணச் செலவிற்குப் பணம் கேட்கக் கலைவாணரிடம் வந்தான். அவனைத் தான் தங்கியிருந்த அறைக்கு வெளியே நிற்கச் சொல்லி விட்டுக் கை கழுவுவதற்குத் தண்ணீர் எடுத்துச் செல்வதுபோல் அங்குள்ள வெள்ளிக் கூஜாவை அறைக்கு வெளியே எடுத்து வந்து, அதனை அந்த நடிகனிடம் கொடுத்து இதை வைத்துக் கொள்'' இப்போது என்னால் கொடுக்க முடிந்தது இவ்வளவுதான்'' என்று கண் கலங்கக் கூறி அந்த நடிகனை அனுப்பி வைத்தாராம். மதுரம் அம்மையாருக்குத் தெரியாமல் கூஜாவைக் கொண்டு போய் அவனிடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக அவர் அப்படிச் செய்தாரென்றாலும், அதனைத் தெரிந்து கொண்ட அம்மையார், புரிந்தும் புரியாதது போல் நடந்து கொண்டார்களாம்.

அப்போது சேலத்தில் தங்கியிருந்த சமயத்தில்தான் ஓர் ஊராட்சி மன்றத்தில் அண்ணாவின் திருவுருவப் படத்தைக் கலைவாணர் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். அதுதான் அவர் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி. அங்கிருந்து சென்னை திரும்பியதும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவரது உயிரற்ற உடலைத்தான் நான் திரும்பப் பெற முடிந்தது அண்ணாவினுடைய கடைசிப் பொது நிகழ்ச்சி கலைவாணர் சிலையைச் சென்னையில் திறந்து வைத்ததுதான். அரசியல்

தலைவனுக்கும், கலையுலகத் தலைவனுக்கும் இடையே இப்படிப்பட்ட தொடர்பு இருந்திருக்கிறது

கலைவாணர் மறைந்த காலத்திலிருந்து அவருக்குச் சிலை வைக்க வேண்டும் என்ற முயற்சி பல முறை தோன்றி அது அரும்பிலேயே கருகி விட்டிருக்கிறது. ஆனால் அந்த முயற்சியில் எப்படியும் வெற்றி பெற்றாக வேண்டும் என்று நான் எடுத்துக்கொண்ட ஊக்கத்திற்கு, மறைந்த பெரியவர் ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசனும், நண்பர் ஏ. எல். சீனிவாசனும் உற்றதுணையாக இருந்தார்கள். தமிழகம் கலைவாணருக்குக் காட்டுகின்ற மரியாதையின் அறிகுறிதான் சென்னை வாணிமகால் மண்டபத்திற்கு எதிரே அமைத்திருக்கிற சிலை.

என் வாழ்க்கை ஏட்டில் அண்ணா என்ற அந்தப் புனிதமான எழுத்துக்கள் ஆங்காங்கு ஒளிவிட்டுக் கொண்டிருப்பது போல், கலைவாணர் என்ற வார்த்தையும் சுழன்று வந்து கொண்டிருக்கும். அவரது வாழ்வின் கடைசி அத்தியாயம் சோகம் நிரம்பியது. அந்தச் சோகத்திலும் அவரது புன்னகை மாறவில்லை என்பது உண்மைதான். சிரிப்பது உடலுக்கு நல்லது என்று அவர் அடிக்கடி சொல்வார். ஆனால் அவர் தன்னுடைய உடலுக்கு நல்லது அல்லாத ஒன்றைத் தனக்கு விருப்பமில்லாமலே நாடிச் சென்றார். அது அவரை அடிமை யாக்கிக் கொண்டது. அவர் விரைவில் தன் வாழ்வை முடித்துக் கொள்ள விரும்பினார். அவர் விருப்பம் ஈடேறியது. மெல்ல மெல்ல அவர் தன் உயிரைப் போக்கிக் கொண்டார். யார் மீதும் அவருக்கு வருத்தமில்லை. எந்த மனமாச்சரியமும் அவருக்கு ஏறபட்டதில்லை. பயங்கர அதிர்ச்சிகள் எதுவும் அவரைத் தாக்கியதில்லை.

வறுமை.

அது, கடைசி காலத்தில் அவரைப் பிடித்துக் கொண்டது. அதுவே அவரைக் கொன்றும் விட்டது. இதனை நான் இவ்வளவு வெளிப்படை யாக எழுதுவதற்குக் காரணம், கலையுலகில் புகழேணி நோக்கிப் போகின்றவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்; கலைவாணர் வாழ்வை ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும் என்று எச்சரிப்பதற்காகத்தான்.

"வானத்தில் ஒளி சிந்தும் மத்தாப்பு வாணங்கள் கீழே விழுந்ததும் கரிக்கட்டையாகி விடுகின்றன. இதுதான் கலைஞர்களின் வாழ்வுமாகும்" என்று அண்ணா அடிக்கடி கூறுவார்.

ஒரு திருமண விழாவில் அண்ணா அவர்களுக்கு முன்னால் பேசிய ஒரு நடிக நண்பர், மணமக்கள் எப்படியெல்லாம் ஒழுக்கத்தோடும், சிக்கனத்தோடும் வாழ வேண்டும் என்று அறிவுரை கூறினார். அடித்துப் பேசிய அண்ணா சொன்னார்

''என் நடிக நண்பர் சொன்னது போல் வாழுங்கள். ஆனல் அவர் செய்வது போல் வாழாதீர்கள்.''

கலைவாணர் தனக்கு ஏற்பட்ட விரக்திக்கு அமைதி தேடினர். அந்த அமைதி அவருக்கு நீண்ட அமைதியைக் கொடுத்தது. அவரது சடலத்தைக் காண இலட்சக்கணக்கான மக்கள் திரண்டனர். அவரது வீட்டுச் சுவர்கள் எல்லாம் இடிந்து வீழ்ந்தன; அவ்வளவு கட்டுக் கடங்காத கூட்டம். பூ விரித்த வண்டியிலே அவர் சடலம் கொண்டு செல்லப்பட்டதைக் கண்ட நான் அந்தக் காட்சியைக் கவிதை வரிகள் ஆக்கினேன்:

பனிப்பார்வை-கனிப்பேச்சு-தனித்திறமை
இனிப்போடு எழிற்காட்சி வருகின்ற இசைப் புலவன்!
அழைக்கின்ற போதெல்லாம் மக்கட் பணிபுரிய...
வருகின்ற நற்றெண்டன் : சிரிப்பு...
தழைக்கின்ற செந்தமிழன்! மழைக் கரத்தால்
மாநாடு காக்கின்ற வள்ளல் !
உழைக்கின்ற ஒருபேறே-பெரும்பேறு எனக்கொண்ட தமிழேறு!
கலையுலகில் தனிவேந்தன்...அலைகடலாம் அவன் உள்ளம்
நிலைகுலைய நமைவிடுத்து நீங்காத துயில் கொண்ட
கொடுமை என்னே!
''சிரிப்பொன்றே மனித வாழ்வுக்கு மருந்து...அதைச்
சிந்தனைத் தேனில் குழைத்து நாள்தோறும் அருந்து...
நான் உள்ளவரை குறையாது அவ் விருந்து!''
என மொழிந்து வாழ்ந்திட்டான்...அந்தோ,
எரி நெருப்பில் வீழ்ந்திட்டான்!
ஏழைகளைச் சிரிக்க வைத்தான்...
கோழைகளை நிமிர வைத்தான்...
எமையெல்லாம் கதறவைத்து இறப்புலகு ஏகிவிட்டான்!
படக்கலையில் அறிவுமணங் கமழச் செய்து-நாட்டின்
வலக்கரமாய் அமைந்திருந்த 'நல்லதம்பி!'
முடக்கலாம் பெருநிதியை எனக்கிளம்பும் மூளி எண்ணம்
முளைமுறிந்து போகும் வண்ணம் 'பணம்' தந்த பாவாணன்
விதவைதனை 'மணமக'ளாய் ஆக்கிவைத்துக் காதற்
பறவைகளைப் புதுவானம் மேவவிட்ட கர்மவீரன்!
கல்லடிக்கும்-கயவர்தம் சொல்லடிக்கும் மத்தியிலே
கூறிவந்த கொள்கைகளை
வல்லடி வம்பர்களும் பல் இளிக்கும் விருதத்தினிலே
வில்லடிப் பாட்டாலே விளக்கிவந்த வித்தகனும்!
ஆடுகின்ற கோயிலுக்குப் போகின்ருன் பழையநந்தன் அறிவு

தேடுகின்ற ஆலயத்தை நாடுகின்ருன் புதிய 'கிந்தன்'
ஒடுகின்ருர் உனேக்கண்டு ஒதியமிலார் உள்ளத்தார்-
என மகிழ்ந்தோம்; இன்ருே,
உனே இழந்து உளம் நெகிழ்ந்தோம்!
இதழ்க்கடையில் புன்னகையைத் தேக்கிக் கொண்டு
மலர்க் கண்ணுல் வரவேற்புக் கூறுகின்ற காட்சி எங்கே?
கிளிச்சிறகின் நிறம்போல இலேயெடுத்துப் புதுக்
கிளிஞ்சல் சுண்ணும்பும் பாக்கும் சேர்த்துக்
குதப்புகின்ற கோலச் செவ்வாய் காட்டுகின்ற
குறுஞ்சிரிப்பு முகந்தான் எங்கே?
புனலிலே மிதக்கட்டும் தமிழர் என்றே
தணலாகிப் போனயோ-கலேத் தலேவா?
வார்முரசம் ஆர்க்கின்ற விடுதலே நாள்-
வானெலி நிலேயத்தார் உனேயழைத்துப் பாடச் சொன்னுர்!
பெருநாட்டின் விடுதலேக்குப் பாடுபட்ட தலேவர்களில்
பெரியார் ஈ வே. ரா. ஒருவன்ருே-
உரிமை வேண்டும் அவர் பெயரை உச்சரிக்க-எனக்கேட்டுப்
பெருமை மிகு போராட்டம் கண்டாய்!
தருணமதில் வெற்றி கண்டாய்:
தன்மானச் சீயமன்ருே கலேவாணர்-என வாழ்த்தும்
தமிழ்நாட்டுச் சேனே கண்டாய்!

தங்கம் நிகர் குணத்தினனே!
தமிழ்குலத்தின் விடி விளக்கே
அங்கதமெலாம் பதைக்க விட்டு
அனல்தேடி ஏன் மறைந்தாய்?

நீரோடை நிலங்கிழிக்கும் நெடியபெருந் தமிழ்நாட்டில்
சீரோடு வாழ்ந்திருந்த கலேயரசே! நீ,
வேரோடு சாய்ந்துவிழப் புயல்வீசும் என உணர்ந்தால்
கோடானு கோடிகரம் அப்புயலேத் தடுத்திருக்கும்!

"எதிர்ப்புகளே இளநகைப்பால் இடறிவிட்டு
இன்பத் தீராவிடத்தின் விடுதலேக்குத் தலேமை ஏற்ற
என் தலேவன் அண்ணுவின் அருகிருப்பேன்"

என உரைத்து எழுந்திட்டாய்! அதற்குள்
சாவின் மடிதனிலே விழுந்திட்டாய்!
என்னுயிரே! இன்னமுதே! என்ன நினேத்(து) உயிர்விட்டாய்?
"பொன்மலேயைக் குவித்திட்டேன்; இன்று புழுதிமலே
அடிவாரத்தில் கிடக்கின்றேன்" எனச் சொல்லிப்

புகழ்மலையின் உச்சிக்குப் போனயோ?
புது மணியே! புகழ் முத்தே!
பொதுவுடைமை முளைக்கின்ற 'ருசியா'வில்
கலைப் பயணம் நடத்துதற்குச் சென்றயே:
அதுபோல எண்ணமிட்டோ பெரும்பயணம் மேற்கொண்டாய்?
எம்மீது பெரும் பழியைச் சுமத்திவிட்டு?

கலையே-கற்பனையே!
அழகே-அறிவே!
அன்பே-அறமே!

யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்!
நீயுண்டு! நின்புகழுண்டு-எனிறென்றும் தமிழர் நெஞ்சில்!

எப்படியோ கலையுலகில் எனக்குப் பெருந்துணையாக இருந்த கலைவாணர் போய்விட்டார். கலைஞர்கள், கவிஞர்கள், கற்பனையாளர்கள் இப்படித்தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று நிர்ணயித்துக் கொள்ளாமல், எப்படியும் வாழலாம் என்று வாதிடுகிற வாஞ்சையுள்ள என் நண்பர்களுக்குச் சீன நாட்டு இலக்கியக் கலை மேதைகள் சிலரை அறிமுகப்படுத்த வேண்டியது, என்னுடைய நீங்காத கடமையாகிறது.

34

சீனத்துக் கவிஞர் மூவர்

சீன நாட்டில் 'லிபோ' என்ற கவிஞன், தனது பத்தாம் வயதிலேயே கற்பனை குலுங்கும் எழுச்சிக் கவிதைகள் பாடத் தொடங்கினான். நீண்ட பல நாட்கள் அவன் மேற்கொண்ட மலைவாசத்தின் காரணமாக உடலில் ஒரு பொலிவும், வலிவும் வாய்க்கப் பெற்றான். அவன் கவிதையிலும். அழகிலும் கன்னியர் பலர் மயங்கினர். காதல் மது தட்டாமல் கிடைத்தது. அவனுக்கு அது மட்டுமல்ல; ஒரு கிண்ணம் மது அருந்த அவன் பல மைல் தூரம் நடந்துகூடச் செல்வானும்; இவனுடைய காலத்தில் இருந்த 'தூபு' என்ற மற்றொரு கவிஞன் ''லிபோவுக்கு ஒரு ஜாடி நிறைய மதுவைக் கொடுத்து விட்டால் நூறு கவிதைகள் உடனே பாடுவான்'' என்று குறிப்பிட்டான். கவிதையை விற்று மதுவை வாங்குபவன் 'லிபோ' என்று புகழப்பட்டான்.

லிபோவுக்குத் திருமணம் நடைபெற்றது. கிடைத்த பணத்தை, அவன் மதுவுக்கே செலவிட்டுக் குடும்பத்தை வறுமையில் தள்ளினான், சில ஆண்டுகள் அவனோடு பொறுமையோடிருந்து வாழ்க்கை நடத்திய மனைவி, மக்கள் அவனை விட்டுப் பிரிந்து விட்டனர். அந்த வறுமைக் கொடுமையிலும் கவிதை பிறக்கிறது அவன் நெஞ்சில்; மதுநாறும் அவன் உதடுகள், மது பிதற்றும் கவிதைகளோ அள்ளி இரைக்கின்றன மனைவியை நினைத்து அழுகின்றன.

' அழகே உருவானவளே, என்னுடன் நீ இருந்தபோது இல்லம் நிறைய மலர்களைப் பரப்பி வைத்தேன். நீ, என்னை விட்டுப் போய் விட்டாய். சூன்யமான கட்டில் மட்டும் கிடக்கிறது. மெத்தை சுருட்டி; வைக்கப்பட்டிருந்தது."

இப்படிப் புலம்பிய கவிஞன் லிபோ, சில நாட்கள் சிறை புகுந்தான்; சில காலம் நாடோடி வாழ்க்கை நடத்தினான். சில காலம் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தான். அவன் இயற்றிய கவிதைகளைப் பலரும் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் அவனோ!

ஒரு நாள் போதை தலைக்கேறிய நிலையில் ஆற்றோரமாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

மது வெறி, ரத்த நாளங்களை உசுப்பி விட்டுக்கொண்டிருக்கிறது. நரம்புகள் முறுக்கேறி நிற்கின்றன. ஆற்றோரத்தில் கவிஞன் கம்பீரமாக நடக்கிறான்.

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது. சிந்து பாடியவாறு ஓடுகிற ஆற்றின் நீரை அந்தக் கவிஞன் கூர்ந்து கவனிக்கின்றான். வானத்து முழு நிலவின் வட்ட வடிவம் ஆற்றில் தெரிகிறது. "எவ்வளவோ தொலைவில் இருந்து எத்தனையோ முறை உன்னைப் பாடியிருக்கிறேன். இப்போது அருகிலேயே வந்து விட்டாயா? உன்னை அணைத்துக் கொள்கிறேன் பார்!" என்று கவிஞன் ஆற்றில் குதிக்கிறான்.

"கவிதை உலகில் திகழும் பல்லாயிரக்கணக்கான குன்றுகளுக்கு மேற்பட்ட மலைச் சிகரம்"-

என்று புகழப்பட்ட 'லிபோ' என்ற அந்தக் கவிப் பெருமகன் ஆற்றோடு போய்விட்டான்.

அவனைப் போலவே 'தூபூ' என்ற கவிஞனும், மது, மங்கையின் மடியில், கவிதை மாலைகளைத் தொடுத்தான். இவனை ஆதரித்து வளர்த்துக் கவிதைகளை இயற்றச் செய்த இராணுவப் பிரபு ஒருவர், திடீரெனக் காலமாகி விடவே, மனைவி, மக்களுடன் 'தூபூ' ஊர் ஊராகத் திரிந்தான். பசியால் அலைந்தான். கடைசியில் ஒரு நண்பன். அவனுக்குப் பசியாறச் சோறு போட்டு ஒரு கவிதைப் பாடச் சொன்னான். விருந்துண்ட கவிஞன் தன் கற்பனை வளமெல்லாம் கூட்டிக் கவிதையொன்றைப் பாட நிமிர்ந்து உட்கார்ந்தான், அப்படியே மயங்கி விழுந்தான். மாண்டான்.

தன் வாழ்வை அழித்துக் கொள்ளும் சமுதாய விரோதப் பழக்கங்கள் இருந்தால்தான் கலைமனம் கமழும் என்றும், கற்பனைகள் உருவாகும் என்றும், ஏழ்மையில்தான் கவிதைகள் பொங்கிடும் என்றும் வாதாடுகிறவர்களுக்கு இந்த இரண்டு கவிஞர்களும் உதாரண புருஷர்களாக விளங்குவார்கள் என்றாலும், அதே சீன நாட்டில் வாழ்ந்த 'போசூயி' என்ற கவிஞனுக்குக் கிடைத்த புகழ், சாதாரணமானதல்ல.

ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையைக் கவிஞன் 'போசூயி' அமைத்துக் கொண்டான். இராணுவ இலாகாவின் தளபதியாகக் கூட

இருந்தான். அரசு அலுவல்களுக்கிடையே கவிதைகள் எழுதிடத் தனியாக நேரம் ஒதுக்கிக் கொண்டான். நாள்தோறும் நண்பர்கள் பலர் சூழ அவன் இருப்பான். எனினும் அடிக்கடி, அவனி தனிமையை ஏற்படுத்திக் கொண்டு நாலாயிரம் கவிதைகளுக்கு மேல் எழுதியிருக் கிருன்.

மேலான பதவியில் அவன் இருந்த போதிலும் மிகச் சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களிடம் தான் எழுதிய கவிதைகளைப் படித்துக் காட்டுவான். அவர்களுடைய அன்பும், மரியாதையும் அவனுக்குப் பெருவாரியாகக் கிட்டின. அவனுடைய கவிதைகள் பரவாத இடமில்லை. வீட்டுச் சுவர்கள் எல்லாம் 'போரூயி'யின் கவிதைகளைத் தாங்கி நின்றன.

மதுப் பழக்கம்; அதனால் மன எழுச்சி; வறுமைத் தொல்லை; அதனால் உணர்ச்சி வெள்ளம்; கவலைகள்; கஷ்டங்கள்; அதனால் கற்பனையூற்றுக்கள்- என்ற தவருன இலக்கணத்தைக் கவிஞன் 'போரூயி' அறைகூவல் விட்டு வென்று காட்டினுன்.

கலிவாணர் வாழ்வையும் மூன்று சீனக் கவிஞர்களின் வாழ்வையும் சுருங்கிய அளவில் சுட்டிக் காட்டியுள்ளேன். கலிவாணரின் கலை உணர்வு அவர் வளமுடன் வாழ்ந்த போதும் கொடி கட்டிப் பறந்தது. வறுமையுடன் போராடிய போதும் அந்தக் கொடி கீழே இறங்க வில்லை; பட்டொளி வீசிப் பறந்து கொண்டுதான் இருந்தது.

இந்த மேதைகளின் வாழ்க்கைக் குறிப்புகளை நான் தெரிந்து வைத்திருக்கிறேன் என்பதற்காக எழுதிக் காட்டவில்லை. மற்றவர்கள் தெரிந்து கொண்டு அதனால் திருந்திக் கொள்ள வேண்டுமென்பதற் காகவே எழுதிக் காட்டுகிறேன்.

புராணக் கதையில், சிதம்பரம் கோயிலுக்குச் செல்ல வேண்டு மென்று நந்தன் என்ற தாழ்த்தப்பட்ட தோழன் போராடுகிருன் கலிவாணர், நந்தனைக் கிந்தனை மாற்றிக் கதை நடத்தினுர்.

கிந்தன் ஆண்டவன் கோயிலுக்குப் போக வாதாடவில்லை. அறிவுக் கோயிலுக்குப் போக வாதாடுகிருன். அந்தக் கதையின் மூலம் சாதி மத வேறுபாடுகளைச் சாடினுர் கலிவாணர்.

அந்தக் கதாகாலட்சேபத்தைத் தெவிட்டாமல் கேட்டுச் சுவைப்பார் அண்ணு; எங்களிடம் அடிக்கடி சொல்லிச் சொல்லி ரசிப்பார்.

அந்தக் கலிவாணரின் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய பேச்சுத்தான் அண்ணுவின் கடைசிப் பேச்சு. அதற்குப் பிறகு இருபது நாட்கள் கூட அண்ணு உயிரோடு இருக்கவில்லை காலையில் ஒன்பது மணிக்குச் சிலை திறப்பு விழா. நான் அண்ணுவின் படுக்கையருகில்

உட்கார்ந்திருக்கிறேன். புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்த அண்ணு எழுகிறார். நோயின் வேதனை தாங்க முடியவில்லை என்றாலும் முகத்தில் ஒரு சிரிப்பு, ''நேரமாகி விட்டதே! விழாவுக்குப் புறப்பட லாமா?'' என்று கேட்கிறார்.

''வேண்டாம் அண்ணு; நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் போய் விழாவை முடித்து விட்டு வருகிறேன்" என்கிறேன் நான்.

''இல்லை கருணாநிதி, நான் முதலில் சிறிது நேரம் பேசி விட்டுக் காஞ்சீபுரம் போய்ப் பொங்கல் கொண்டாடப் போகிறேன். பிறகு நீ பேசலாம். வா, போகலாம்" என்கிறார் அண்ணன்.

அண்ணியார் அருகே வந்து, என்னைப் போலவே அண்ணுவைத் தடுக்கிறார்கள்.

''என்ன நிகழ்ச்சி என்று உனக்குத் தெரியுமா? என். எஸ் கிருஷ்ணன் சிலை திறப்பு விழா. அதற்குப் போகாமல் இருக்க முடியுமா?" என்று சற்றுக் கடுமையாக அண்ணியாருக்குப் பதில் சொல்கிறார்.

பிறகு அந்த அறையில் பேச்சில்லை. தூங்கும்போது அணிந்திருந்த ஆடைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு அண்ணு புறப்படுகிறார்.

விழா நடக்குமிடம். ''அண்ணு வாழ்க" என்ற முழக்கம் தன் நோயின் சங்கடத்தைக் காட்டிக் கொள்ளாமல் அண்ணு மேடைக்கு நடக்கிறார்.

வரவேற்புரை ஆற்றிய ஜெமினி எஸ். எஸ். வாசன் அவர்கள், ''பெரியவர்களின் சிலையைத் திறக்க இப்போதுதான் நல்ல வேளை வாய்த்திருக்கிறது, நாட்டில்'' என்று கூறுகிறார். அதற்கு அண்ணு சொன்ன பதில் என்ன?

''வாசன் அவர்கள் நல்ல வேளை என்று குறிப்பிட்டார்கள். அது வேறு ஒன்றுமில்லை. அவரது நண்பர்களாகிய நாங்கள் ஆள்வதற்கு வந்திருக்கிற இந்த வேளையைத்தான் அவ்விதம் குறிப்பிடுகிறார்கள்."

அண்ணுவுக்கு அந்த நோயிலும் இந்த அற்புதப் பேச்சு மறைய வில்லை. பேச்சுக் கலைக்குப் புத்துயிர் ஊட்டிய பெருமகன் அல்லவா அண்ணு!

35

மாவீரன் கே. வி. கே. சாமி

அண்ணாவின் பேருரையுடன் 1949 செப்டம்பர் 17-ம் நாள் சென்னையில் தி.மு.கழகத்தின் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது. என்றாலும், அக்டோபர் 17-ம் நாள் தான் தமிழ் நாடெங்கும் கழக அமைப்புகளின் தொடக்க விழாப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. அந்த நாளில் கோயில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் நடைபெற்ற கூட்டங்களில் நான் கலந்து கொண்டேன்.

தூத்துக்குடியென்றதும் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் நினைவு நெஞ்சில் நிழலாடுகின்றது அல்லவா? அவருக்கு நினைவுச் சின்னங்கள் அமைத்துள்ள மன நிறைவு இப்போது ஓரளவு ஏற்படுகின்றது. அவரைப் போலவே கழக மாவீரன் கே. வி. கே சாமியின் நினைவும் நெஞ்சில் பொங்கியெழும்.

தொண்டாற்றுவதற்கென்றே பிறந்த தோழன் அவன்.

கட்சியினால் தனக்கு என்ன இலாபம் என்று கணக்குப் பார்க்காமல், தன்னால் கட்சிக்கு என்ன இலாபம் என்று கணக்கிட்டு அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அரிமா நெஞ்சினன் அவன்.

எந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும் தொண்டர்களே காரண மாயிருக்கிறார்கள். அவர்களைக் கருவேப்பிலையாக்கி விடக்கூடிய தலைவர் களும் சில் இயக்கங்களில் உண்டு. அந்தத் தலைவர்கள் (ஆமாம் தங்களைத் தாங்களே தலைவர்கள் என்று கருதிக் கொள்பவர்கள்) தொண்டர்களைத் தங்களுக்கு அடிமைகள் என்று கருதிக் கொண்டு நடப் பதை நான் கண்ணாரக் கண்டுமிருக்கிறேன்.

1937-ல் இந்தி எதிர்ப்பு இயக்கம் தீவிரமாகிக் கொண்டிருந்தபோது எனக்கு அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி போன்ற தலைவர்களிடத்தில் அதிகத் தொடர்பு இருந்தது. இந்தி எதிர்ப்பில் மிகுந்த அக்கறை காட்டிய ஒரு பிரமுகர், திருவாரூருக்குப் பேச வருகிறார் என்று ஊரெல் லாம் ஒரே விளம்பரம். அவரது சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரளாகக் கூடுவர்.

அண்ணா கட்சிக்கு வருமுன்பே தனது சொல்வன்மையால் மக்களை வசீகரித்தவர் அவர்.

அவர், மாலையிலே கூட்டத்தில் பேசுகிறார். பிற்பகலிலேயே வந்து விட்டார். அவரைக் காண வேண்டுமென்று நானும் சில தொண்டர் களும் சென்றோம். அவரைப் பார்த்த மாத்திரத்தில் எனக்கு அவர் மேல் ஒரு வெறுப்புத்தான் ஏற்பட்டது. காரணம், அவ்வளவு ஆடம்பரமாக அவர் காட்சியளித்தார். கழுத்தில் தங்கச் சங்கிலி. கையில் தங்க முலாம் பூசிய கடிகாரம். ஆடம்பரமான நடையுடை பாவனைகள்.

இவர், தொண்டுள்ளம் கொண்டவரல்ல என்ற முடிவுக்கு அப்போதே வந்து விட்டேன். அவரும் விரைவில் கட்சியை விட்டுப் போய் விட்டார்.

எளிமையும், இனிய சுபாவமும் பண்பும் கொண்ட தலைமைதான் ஓர் இயக்கத்திற்குத் தேவை என்ற உணர்வு எனக்கு அப்போதே ஏற்பட்டது. அந்த எண்ணத்தை நிறைவு செய்த அண்ணாதான் எனக்கு அரசியல் தலைவர் ஆனார்

தொண்டர்களிடம் அவர் காட்டிய கனிவுதான் அவரை உயர்த் தியது. தொண்டர்களை உற்சாகப்படுத்தியது.

கூட்டத்திற்குச் செல்கிற ஒரு சில பேச்சாளர்கள் தொண்டர்களைத் தங்கள் ஏவலாளராக மதித்து நடத்துவதையும் நான் திராவிடர் கழகத்தில் இருந்தபோதே பொறுத்துக்கொண்ட தில்லை.

ஏதோ வானத்தில் இருந்து குதித்த அதிமேதாவிகளைப் போலத் தங்களை கருதிக்கொண்டு தொண்டர்களின் உள்ளங்களைப் புண்படுத்து கிறவர்களைப் பெரியாரும் ஆதரித்ததில்லை; அண்ணாவும் ஆதரித்த தில்லை.

அந்த மோதல்களில் எரிச்சலையும், "எடுத்தேன், கவிழ்த்தேன்" என்ற பேச்சுக்களையும் பொருட்படுத்தாமல் எறும்பு போலப் பணியாற்றிக் கழகத்தை வளர்த்த கண்மணிகளில் முதன்மையானவர் தோழர் கே.வி.கே. சாமி

அரிவாளுக்கும், கட்டாரிகளுக்கும் மத்தியில் அரசியல் களம் அமைத்து அண்ணாவின் வழியில் அரும் பணி புரிந்த அன்புத் தொண்டர் அவர்

பொதுக்கூட்டமா? மாநாடா? போராட்டமா? சிறைபுகுவேலையா? எதுவாயினும் புன்னகை பூத்த முகத்துடன் ஈடுபடும் இணையற்ற வீரனை, எப்படியும் தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்று கயவர்கள் சிலர் திட்டம் தீட்டினர்கள்.

கே. வி. கே. சாமியைச் சந்திக்கும் போதெல்லாம் அண்ணு அவர்கள் எச்சரிக்கை செய்வார்கள், ''இரவில் எங்கும் தனியாகப் போகாதே! எப்போது பத்துப் பேருடன் இரு'' என்று. ஆனால், ஒரு நாள் தூத்துக்குடியில் சதிகாரர்களின் திட்டம் வெற்றி பெற்று விட்டது.

கழகஅலுவலகத்தில் நண்பர்களுடன் உரையாடிவிட்டு, சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாவீரன் சாமியை, எதிரிகள் சூழ்ந்து கொண்டனர். இருட்டில் எந்தப் பக்கம் போவது என்று அறியாமல் அந்தத் தியாகச் செம்மல் திகைத்து நின்றுவிட்டார். உடலெங்கும் கத்திகளும், கட்டாரிகளும் பாய்ந்தன. இரத்த வெள்ளத்தில் வீரர் வீழ்ந்தார். பிணமானார். அவர் சிந்திய ரத்தம் வீண் போகவில்லை. தூத்துக்குடிக்கு எத்தனையோ வெற்றிகளைப் பெற்றுத் தந்தது. ஆனால் அந்த வெற்றிகளைக் கண்டு மகிழ, விதை போட்ட விவசாயி இல்லை.

விரைவில் திருமணமென்று விழிகள் விரிய அவர் என்னிடம் சொல்லித் திங்கள் ஒன்று கூட முடியவில்லை. அதற்குள் அவரைப் பிணமாக்கிப் போட்டனர் பொருமைக்காரர்கள். அந்தச் சிங்கம் நிகர் தமிழன் கொலையுண்டபோது என் நெஞ்சுவடித்த கண்ணீர்த் துளிகளை ஒரு காவியமாக்கினேன். அந்தச் சிறு கற்பனை ரூபாரத்தை என் தோழன் - தொண்டர் தலைவர்-சாமியின் இணையடிகளில் சூட்டி வணங்கினேன்.

அதுதான் இது:

''சோலையிலே தென்றலிலே இன்பம், பின்னர்-
சொந்த நாட்டைக் காப்பாற்றசுழற்றுவேன் வாளை
என்று முழங்குகின்ற காளை!
மொட்டவிழாப் பருவ மலராயிருக்கும் போதே
சுட்டெரிப்பேன் பகையை என்று
சுடர் முகந்தூக்கி நின்ற குத்துவிளக்கு! அவன்
கட்டவிழா மேனிதனைக் கரந்தொட்டுத் தழுவியாடக்
காத்திருந்தாள் பூவையெனும் பாவை!
தொழிலாளக் குலத்துக்கோர் முத்தென்பார் அவனை
எழிற்சத்து மிகும் கனியென்பார்;
பனி நனைந்த மலரென்பார் அவனை!
இருவருமே ஒருவராய் ஆவதெப்போது?
''உருவிய வாளைச் சற்று உறையிலே போடுமே அத்தான்!''

என்று முரசு உறுமுகின்ற களம் நோக்கி வாள் தூக்கிப்
பாய்கின்ற காதலனைத் தடுத்து நின்றாள்.
"விடுதலைக்குத் தாவுகின்ற என்னை உன்றன்
காதலுக்குக் காவு கொடுக்க எண்ணுதே பெண்ணே!
கெடுதலைக்கு ஆளாக்கிக் கீழோரால் சீழ் என்றுஇகழப்பட்ட
என்றன் செந்தமிழர் திரு நாட்டை வாழ்விக்க எழுந்திருக்
கும் அணிவகுப்பில் நிற்பேன். மணிமாடம்-
கனிப்பேச்சு—வேண்டேன்" என்றான்.
"முற்றிலுமே வெறுத்தீரோ?" என்றாள்.

"பற்றில்லை உன் மீது என்று உரைக்க மாட்டேன். பாம்புப் புற்றில்லை. தென் தமிழர் தோட்டத்தில் என்னும் நிலை வரும் வரையில்-

சுற்றிட முடியாதபடி காதல் படிப்பு" என்றான்! அவள் துடித்து நின்றாள்.

"இருவருமே போர்க்களத்தில் இணைந்து நிற்போம். அணைந்து விட்டாலும் அப்படியே ஆகட்டும் இருவருக்கும். இதற்கென்ன பதில் அத்தான்?"

"இஃதோர்முறை காதலர்கள் கடைப்பிடிப்பதுண்டு! ஆயின் எனக்கது சரிப்பட்டு வராது தங்கம்! களம் புகுந்து வருகின்ற பகையைச் சாடுகின்ற நேரம் என்
உளம் புகுந்த நேரிழையாளுக்கு ஏது நேர்ந்ததோ என ஒரு கணம் தயங்கும்; அதற்குள் என் படை மயங்கும்.

வேண்டாமடி பெண்ணே! விடை கொடடி என் கண்ணே!"

"மணத்திற்குத்தான் இசைய மறுக்கின்றீர்; மங்கையென்னை உண்பதற்குப் போட்டு வைத்த இலை போலப் பூப் படுக்கை உண்டே அங்கு வாரீர்!"

"பால் சோறு பானையிலே இருக்கட்டும்; பசியுண்டு இப்போது என்றாலும் உன்னைப் பாழாக்கிப் போக மாட்டேன்! அட்டியின்றி விடை தருவாய், அன்னமே!"

"மாம்பழக் கன்னத்தின் அழைப்புக்கும் தடையுண்டா?"

"தடையுண்டு; படை கொண்டு செல்கின்ற நான் பிணமாகி விட்டாலும், உனக்கு மணமாகித் தீர வேண்டும். என் அன்பே! உன்னை எச்சில்படுத்தி விட்டால் எனக்கென்ன லாபம்? உனக்குத்தான் பெரு நஷ்டம்!"

"முடியாது! ஒரு முத்தம்...!"

''வேண்டாம்...! திரும்பிய பின் மொத்தமாக!''

''அழவிட்டுப் போகாதீர்கள் அத்தான்...''

''காலமெல்லாம் மகிழ்ந்திருப்போம்! கவலை விடு!''

''நீங்கள் களவெற்றி பெற்றவுடன், நான் காதல் வெற்றி பெற்றதாய் மகிழ்வதற்கு இசைவு தாரும்;''

''அசைவொன்றில் ஆயிரம் வண்ணங்கள் காட்டுகின்ற அழகு மயிலே! பசையற்ற தென் புலத்தார் திசை கெட்டு வாடுவதை மாற்றிய பின், நாம் மாலை மாற்றிக் கொள்வதில் தடையில்லை. அறிவாய்!''

''வெற்றி பெற்று விரைவில் வாரீர், கத்துக்கடல் விளைகின்ற முத்தெடுத்து மாலை தொடுத்து வைக்கிறேன்! என்றன் தென்பாண்டித் தேவா! நீர் திரும்பும் வரை இங்கே நிற்கின்றேன். இல்லையேல் இக்கடற்கரையே எனக்கமைந்த கல்லறையாம்!''

''சிப்பியிலே விளையாத சிரிப்பு முத்துக் காட்டிடுவாய்; என் சிந்தையிலே உறவாடும் செந்தமிழின் நலம் பாடித் திரும்புகிறேன்'' எனப் பிரிந்தான்-கடற்கரையின் வெண் மணலில் காரிகையைத் தனியே விடுத்து.

அழகு சிப்பிகளால் முத்தளித்து; ஆடும் அலைகளால் உப்பளித்து உயர்வளிக்கும் பெருங்கடல் நீர்வாய்.

கொப்பளிப்பதற்குப் பயனில்லை என்பதற்காக வெறுப்பாருண்டோ? அஃதே போல் நாட்டிற்கு உழைக்கின்ற உத்தமனும் பெரு வீரன் தன்னை உடனே தழுவிடவில்லையென்று வெறுக்கவில்லை அத்த வேல் விழியாள்.

விடை பெற்றுப் போன சிங்கம், தலைவனைக் கண்டு பேசி, நிலைதனை அறிந்து தேர்ந்து, நீதிக்குத் தொடுக்கும் யுத்த தளபதியாக நின்றிருந்தான், பெருஞ்சேனை முகப்பதனில்!

நாடளிக்கும் குணக்கேடர்களைக் கூடியெதிர்ப்பதற்குக் கூவுகிருன, நல்வீரன். தெருவெல்லாம் பாசறைகள்; தென்பாண்டி மண்டலத்தில் மாடி வீடு அமையாத பகுதியில்லை.

போருக்கு நாள் பார்க்க வேண்டியதுதான் பாக்கி.

தோளுக்கு நிகரானவனில்லை வேலில்லை எனச் சொல்லித்தொகை தொகையாய்க் குவித்து விட்டார். தொல்புவியில் முதன் முதலாய்த் தோன்றி நின்ற தமிழ்க் குலத்தார்.

தென் புலத்தார் எழுந்துவிட்ட சேதி கேட்டுத் திக்கெல்லாம் திகைப்புக் காட்டும் இன எழுச்சிப் பெற்ற வெள்ளம்- இளைஞரது பட்டாளம், பாட்டாளிப் படை வரிசை இத்தனையும் அணி வகுப்பில் சேர்த்துகொண்டு ''நாள் குறிப்பீர்'' என ஓலை விடுத்தான் தலைமைத் தனபதிக்கு.

தன் வலியும் மாற்ருன் வலியும் அறிந்து செயலாற்றுதலேகுறள் வகுக்கும் இலக்கணமெனக் கொண்டிருக்கும் தலைவனவன். ''விரைவில் போர் துவங்கும், பொறுத்திருங்கள்'' எனப்பதில் இறுத்தான்.

படை கொண்டு செல்வதற்கு இன்னும் சில நாட்களே எனக்கண்டு சிந்தை மகிழ்ந்தான்... அதற்குள் கொடும் விந்தையொன்று உருவாகும் என யார் கண்டார்?... பாசறைக்குப் பக்கத்தே படை நடத்தும் விதம் பற்றித் தனிமையிலே நின்று யோசனைக்கு அடிமையானுன்.

அப்போது ஆறேழு நரிக் குணத்தார் அவன் மீது பாய்வதற்கு ஓடி வந்தார். ''ஒதிய மிலார்களே! ஒன்றுக்கும் பயனற்ற பிறவிகளே! என்ன வேண்டும்?'' எனக் கேட்டான். ''உன் உயிர் வேண்டும்'' எனச் சொன்னர். உருவத்தால் மனிதராய்த் திரிகின்ற நாய், நரிகள்.

கழுகுக்கும், பருந்துக்கும் இவ்வுடலைக் கொடுப்பதற்கே களம் செல்ல இருக்கிறேன். அதற்குள்ளே உமக்கு 'முடை' என்ருல் எடுத்துச் செல்வீர்.

ஆயின் ஒன்று; என்னெருவன் உயிர் பறித்தல் மட்டுந்தான் உம்மாலே ஆவதன்றி நான் வளர்த்த உணர்ச்சிகளை-உண்மை வீரர்களை—அழித்துப் போடல் ஆகாதென அறிவீர்'' என்ருன்.

தமிழ் கேட்கும் செவியில்லாப் பாம்பு மனிதர் 'பட பட' எனச் சுற்றிக் கொண்டார். படை வீரன் அங்கங்களை ஆலமரத்து விழுது போல் அறுத்தெறிந்தார்.

வான் தடுக்க எழுந்த கரத்தினிலே விரல்களெல்லாம் 'பொல பொல' வென உதிர்ந்தன தரையில்.

மலை பிளக்க வெடி வைத்தது போல் மாவீரன் மண்டையைப் பிளப்பதற்கும் துணிந்து விட்டான்.

தலை தொறுங்கித் தரையில் சாய்ந்தான். அத்தை மகள் முத்தமிடத் துடித்த இதழில் அரிவாள் வீச்சு... மலர் முகம் புதைத்திருக்க அவள் தேர்ந்தெடுத்த மணி மார்பில் உதிர வெள்ளம்.

ஒடி விட்டார் உயிர் எடுக்க வந்த கொடியோர், உத்தமனும் கடைசி மூச்சை நாட்டுக்கே அளித்து விட்டுத் துயில் நீங்காத் தொட்டிலில் படுத்துக் கொண்டான்.

சித்திரம் சிதைந்தது எனக் கேள்வியுற்ருள்: முத்து மாலைகட்டிக் கொண்டு கடல் அலையின் ஓரம் நின்ற கட்டழகி.

மாலைதனை அறுத்து விட்டார் மாபாவிகள். சேனைதனை நடத்திச் செல்லும் சிங்கம் - அங்கம் அறுபட்டுத் துரோகிகளால் துடித்து வீழ்ந்த காட்சி - அம்மவோ! ''கேட்பதற்கு இத்தனை நாள் வாழ்ந்தேனே?''

''வெண் மணலில் நின்றிருப்பாய் பெண்ணே! விரைந்து வந்து மணந்திடுவேன் உன்னை'' எனச் சொன்ன வாய் மூடிற்ருமே? கம்பீர நடை போடும் கால்கள் சோர்ந்து விட்டனவோ? கனல் பொழியும் கண்களிலே எனை மணக்கும் போது குளிர் பொழியும் எனச் சொல்லி வாழ்ந்தேனே, என் நறுந்தேனே! உன்னைச் சாவுச் சகதியில் ஊற்றி விட்டார்களாமே சண்டாளப் பிறவிகள்! இனி எனக்கேன் வாழ்வு?'' என்ருள். முத்து மாலையைக் கடலில் வீசி எறிந்தாள். அதைத் தொடர்ந்து தானும் அத்தானை நினைத்தவாறு ஆழ்கடலின் அடியிற் சென்ருள்.

இப்படித் தொண்டர்களுக்கும், தொண்டுள்ளம் படைத்த தலைவர்களுக்கும் காவியம் இயற்றுவதென்ருல் தடைபடாக் கற்பனை யோட்டம் தன்னுலே பெருகுகிறதல்லவா?

சாமி போன்ற 'சாமானியர்கள்' வடித்த கண்ணீரும் செந்நீரும் தான் இந்தக் கழகம் என்ற நினைப்பைக் கொண்டவர்கள் தான் கழகத்தின் எதிர்காலத்தை மேலும் வலிவுள்ளதாக ஆக்க முடியும் என்பது என் அசையாத நம்பிக்கை.

வாய்ச் சொல் வீரர்கள்; எரிச்சல் கக்கிகள்; மேனு மினுக்கிகள்; எந்த இயக்கத்தையும் வளர்த்திட இயலாதவர்கள் மட்டுமல்ல, இந்த இயக்கத் தொண்டர்களின் பாதையிலும் நெருஞ்சி முட்களாக இருப்பார்கள்.

இந்த உண்மையினை இன்றைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாமே!

36

இந்தி எதிர்ப்பில் தந்தையும் நானும்

முன்னேற்றக் கழகத்தின் பிரச்சார சக்தி தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் பயனளிக்கத் தொடங்கியது கண்டு, திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் அவர்களும் தமது இயக்கத்தை முடுக்கிவிட முயன்றார். இன்னமும் தன்னைப் பின்பற்றுவோரையும் முன்னேற்றக் கழகம் ஈர்த்துவிடக்கூடாது என்பதில் அவர் அதிக அக்கறை காட்டினார்.

திராவிடர் கழகத்தில் பிளவு ஏற்பட்டு, தி.மு. கழகம் தோன்றிய போது, ஒரு பகுதியினர் பெரியாருடன் இருந்துவிட்டார்கள் என்றால், அதற்கு அவர்களது கொள்கைப் பிடிப்புத்தான் காரணம் என்று கூறுவதை விட, அவர்களுக்கும் பெரியாருக்கும் இடையே ஏற்பட்ட பாசப் பிணைப்புத்தான் முழு முதற் காரணம் என்றால் அது மிகையாகாது.

அங்ஙனமாயின், அண்ணா போன்றவர்கள் பெரியாரிடம் வைத்திருந்த பாசமும் பற்றும் குறைவானவை என்றும் பொருளல்ல. அண்ணாவும், அவர் தம்பிமார்களும் நாட்டின் எதிர் காலத்தைப் பற்றியும், அரசியல் சூழ்ச்சிகள் பற்றியும் தங்கள் சிந்தனையைத் திருப்பினார்கள்.

தூத்துக்குடி சாமி போன்றவர்கள் பெரியாரின் அன்பு அரவணைப்புக்கு ஆளானவர்கள். திராவிட நாட்டின் கவர்னர் ஜெனரலாக வரவேண்டியவர் கே.வி.கே. சாமி என்று பெரியார் அவர்கள் மன நிறைவோடு பாராட்டியதையும் மறந்துவிட்டு, தோழர் சாமி, முன்னேற்றக் கழகத்தில் ஈடுபட்டுத் தன் உயிரையும் ஈந்தார் என்றால் அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய கழகத்தின் கவர்ந்திழுக்கும் கொள்கையின் மேன்மையை விளக்கவும் வேண்டுமோ?

தி. மு. க. வின் வேகமான வளர்ச்சி கண்டு பெரியார் சோர்ந்து போய்விடவில்லை. நாட்டின் கவனத்தை ஈர்க்கத் தக்க போர்க்களங்கள் சிலவற்றை அமைத்தார். அவைகளில் முக்கியமானது வடநாட்டுக் கடை மறியல்! அடுத்தது சாதிப் பெயர் தாங்கிய உணவு விடுதிகளின் முன் மறியல்! ஏற்கெனவே பெரியார் துவக்கிய கிளர்ச்சியின் காரணமாகப் புகை வண்டி நிலைய உணவு விடுதிகளில் சாதிப் பெயர் எழுதப்பட்ட பலகைகள் அகற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து சாதி ஒழிப்புக்கு அவர் நடத்திய அடுத்த கிளர்ச்சியிலும் அவர் வெற்றி பெற்றார்.

வடநாட்டுக் கடை மறியல் சில மாதங்கள் தொடர்ந்து நடை பெற்றுப் பிறகு நிறுத்தப்பட்டது. புகை வண்டி நிலையப் பெயர்ப் பலகைகளில் ஊரின் பெயர் இந்தியில் முதல் வரிசையில் எழுதப்பட்டி ருப்பதை எதிர்த்துப் பெரியாரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் தனித் தனியே போர்க்கொடி உயர்த்தினர். நாடெங்கும் உள்ள புகை வண்டி நிலையங்களில் முதல் வரிசையில் உள்ள இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழிப்பது என்ற இயக்கம் தொடங்கப் பெற்றது. பெரியாரும் அவரது தொண்டர்களும், அதேபோல் அண்ணாவும் அவரது தம்பிமார்களும் ஒரே நாளில் அந்தப் போரில் குதிக்கும் நிலை உருவாயிற்று என்றாலும், அணிகள் தனித் தனியாகவே செயல்பட்டன.

அறிஞர் அண்ணா, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, நண்பர் ஈ.வே.கி. சம்பத் ஆகியோர் கோவை ரயிலடியில் இந்தி எழுத்துக்களை அழித்தனர். எனக்கு அந்தப் போராட்டத்தில் ஒரு பெரும் நல்வாய்ப்பே கிடைத்தது. திருச்சி ரயிலடியில் பெரியாரும், நானும் இந்தி எழுத்துக்களை அழித்தோம். ரயிலடிக்களம் முடிந்து நானும் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும் கொடி ஏந்தியவாறு திருச்சி நகர வீதிகள் அனைத்திலும் நடந்து சென்றே ஊர்வலம் நடத்தினோம். தெப்பக்குளம் வழியாக ஊர்வலம் வந்தபோது, காரில் சென்று கொண் டிருந்த பெரியார் அவர்கள் இறங்கி, எங்களை வாழ்த்தி வழி அனுப் பினர். இரு வேறுபட்ட கட்சிகளாகப் பிரிந்த பிறகு ஏற்பட்ட இந்தத் திடீர்ச் சந்திப்பில் பாசமும் பற்றும் பட்டுப் போகவில்லை என்ற உண்மை ஒளிவிடலாயிற்று.

பெரியாரின் காரைக் கடந்து எங்கள் ஊர்வலம் நகர்ந்தபோது என் கண்களில் தெப்பக் குளத்துக்கு அருகே உள்ள அஞ்சல் நிலையம் தென் பட்டது. அத்துடன் முதல் வரிசையில் மின்னிய இந்தி எழுத்துக்களையும் ஆத்திரத்துடன் நோக்கினேன். ஆனால் அந்தப் பலகை சுலபமாக அழிக்கக்கூடிய எட்டும் தொலைவில் இல்லை. கட்டடத்தின் உச்சியில் இருந்தது. ஏறுவதற்கும் வசதியில்லை. ஏறினாலும் பலகையிடம் செல்வதற்கு இயலாத நிலையில், சறுக்கலான கூரை வேறு! எப்படியும் அதனை அழித்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்தேன்.

இரண்டு தோழர்களின் தோளிலே ஏறி, கட்டடத்தின்மீது தாவி ஏறினேன். சறுக்கலான பகுதியில் படுத்தவாறு முன்னேறி அஞ்சல் நிலையத்தின் இந்திப் பலகையை அணுகினேன். 'டென் சிங்' இமயலயச் சிகரத்தில் ஏறியபோதுகூட அவ்வளவு மகிழ்ந்திருக்க மாட்டான். அதையேன் சொல்ல வேண்டும்? முதன் முதலில் 'ஆம்ஸ்ட்ராங்' சந்திரனில் காலடி எடுத்து வைத்தபோதுகூட என்னைப் போல மகிழ்ந் திருக்க மாட்டான். அந்தச் சிறிய கட்டடத்தின் சறுக்குப் பகுதியில் ஏறி, இந்தி எழுத்துக்களை அழித்ததை நான் அவ்வளவு மகிழ்ச்சியோடும், உணர்ச்சியோடும் கொண்டாடினேன்.

என்னதான் கூட்டங்கள், போராட்டங்கள், வழக்குகள் நடத்தினாலும் திருச்சி நகரில் தி.மு. கழகத்தின் வளர்ச்சி, திராவிடர் கழகத்தின் வளர்ச்சியை வெற்றி காண முடியவில்லை. இரண்டுக்கும் மேலாகக் காங்கிரஸ் கட்சியின் கோட்டையாகவும் திருச்சி விளங்கிற்று.

இதற்கிடையே திருச்சியில் கழகத் தோழர்களிடம் உள்ளூர வளர்ந்த கசப்பு உணர்ச்சி வெளிப்படையாகவும் பரவத் தொடங்கியது. தோழர் சாம்பு, சம்பத்தின் நண்பர். அதனால் திருச்சியில் சாம்புவின் வீடு அண்ணா அடிக்கடி வந்து தங்கும் வீடாயிற்று. அதன் தொடர்பாகச் சாம்பு வீட்டுப் பையன் ஒருவன் அண்ணா வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டு சென்னையில் படித்துக்கொண்டிருந்தான். பிறகு அவன் காங்கிரசுக்குப் போய் அண்ணாவிற்குச் செலுத்த வேண்டிய நன்றியை, அவரைத் தரக்குறைவாகப் பேசுவதன் மூலம் செலுத்தத் தொடங்கினான். இப்படிப்பட்ட நன்றியுள்ள மனிதர் பலரை அண்ணாவும், நானும் எங்கள் வாழ்வில் அதிகமாகச் சந்தித்திருக்கிறோம். (நான் இன்னும் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்!)

சாம்பு வீட்டுக் குடும்ப நண்பராக அண்ணா இருந்தபோது திருச்சியில் உள்ள கழகத் தோழர்களுக்கும், சாம்புவின் நண்பர்களான கழகத் தோழர்களுக்கும் மாற்சரியங்கள் பெருமளவில் வளர்ந்தன.

'நண்பர் வேறு-கட்சி வேறு' என்ற கொள்கையில் அண்ணா அவர்கள் திருச்சியில் பிரச்னைகளை அணுகினார்கள். இருதரப்பாரிடமும் ஒற்றுமையை ஏற்படுத்த அண்ணா அவர்கள் எவ்வளவோ முயன்றும் பலனில்லாமல் போயிற்று.

திருச்சியைத் திருத்த அண்ணா கடைசியாக ஒரு வழியைக் கையாண்டார். அதுதான் அண்ணா அவர்கள் திருச்சிக்கு வருவதில்லை என்பது! எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு அவரை அழைத்தபோதெல்லாம்

அவர் மறுத்து விட்டார். இரு குழுவினரின் சசரவில் கழக வளர்ச்சி குறைந்துவிட்டது என்பது அவருக்குள்ள அளவு கடந்த வேதனை. திருச்சியில், காங்கிரசும், கம்யூனிஸ்டுக் கட்சியும், திராவிடர் கழகமும் வேகமாக வளர்ந்தன. தி.மு.க. சரியத் தொடங்கியது.

திருச்சியைப் பற்றிக் கவலை கொண்ட நண்பர்கள் அன்பில் தர்மலிங்கம், பொன்மலை பராங்குசம், எம்.எஸ். மணி, புள்ளம்பாடி முத்துகிருஷ்ணன் ஆகியோர், எப்படியும் அண்ணாவை அழைத்துத் திருச்சியில் ஒரு கூட்டம் நடத்திவிடத் துடித்தனர். அதற்கான தூதுவராகத் தோழர் பராங்குசத்தைச் சென்னைக்கு அனுப்பினர்.

சென்னையிலிருந்து நானும், பராங்குசமும், செழியன், வாணனி ஆகியோரும் காஞ்சிக்குச் சென்றோம். பராங்குசம், அண்ணாவிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். நாங்களும் அவருக்காக அண்ணாவிடம் நீண்ட நேரம் பரிந்து பேசினோம். பயனில்லை. அண்ணா கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

''திருச்சியில் உள்ள உள்சண்டையின் காரணமாகக் கழகத்தையே குலைத்துவிட்டீர்கள். அதைச் சரி செய்து என்னிடம் காட்டும் வரையில் நான் திருச்சி நகரக் கூட்டத்தில் பேசமாட்டேன்.''

இது அண்ணாவின் பதில்

''நீங்கள் வந்து பேசினால்தானே அண்ணா, எல்லாம் சரியாகும்?''

இது பராங்குசத்தின் வேண்டுகோள்.

''முதலில் கருணாநிதியை வைத்து நகரில் கழகக் கூட்டங்களை நடத்து! கழகத்திற்கு உயிர் இருக்கிறது என்று தெரிந்தால் நான் வருகிறேன்!''

இது, அண்ணாவின் முடிவான வார்த்தை. பராங்குசம் அழுது கொண்டே புறப்பட்டு விட்டார்.

''என்ன அண்ணா, இப்படிச் சொல்லிவிட்டீர்களே?'' என்று நாங்கள் கேட்டதற்கு, ''இதுதான் நல்ல விளைவைக் கொடுக்கும்'' என்று அண்ணா விடையிறுத்தார்.

அண்ணாவின் திட்டவட்டமான கண்டிப்பு நிறைந்த பதிலைக் கேட்ட திருச்சித் தோழர்கள் மிகவும் நொந்து கழகத்திலிருந்தே ஒதுங்கி விடலாமென முடிவு செய்திருப்பதாக எனக்குச் செய்தி வந்து, உடனே நான் திருச்சிக்கு ஓடினேன். கழகத் தோழர்கள் அனைவரையும் கூட்டி வைத்துப் புறப்பட்டுப் போயிருக்கிற அண்ணாவின் உள்ள உணர்ச்சிகளை அவர்களுக்கு விளக்கினேன். ''நீங்கள் கட்டிக் காக்கிற ஒற்றுமையும்,

வளர்ததுக் காட்டுகிற கழக வளர்ச்சியும், அண்ணாவைத் தாங்களே கூப்பிட்டு வரச் செய்யும்" என்று உறுதியளித்தேன்.

ஒரு சில நண்பர்கள் தங்களோடும், கழக அமைப்போடும் ஒத்துப் போக மறுப்பதையும் முரண்பட்டு நடப்பதையும் சுட்டிக்காட்டி, அதற்கு என்ன செய்வது என்று அமைப்பினர் அங்கலாய்த்தனர்.

"நீங்கள் அமைப்பு ரீதியாகக் கழகப் பணிகளைத் தொடர்ந்து செய்தால் இறுதியில் அண்ணாவின் தீர்ப்பு, நியாயவாதிகளின் பக்கம் தான் இருக்கும்" அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன்.

சோர்ந்துபோன தோழர்களிடம் புதிய சுறுசுறுப்புத் தோன்றியது. "அண்ணா வாழ்க! என்று ஆர்ப்பரித்தனர். அடுத்த வாரமே திருச்சி நகரில் ஐம்பது இடங்களில் நான் கொடிகளை ஏற்றி வைப்பது என்றும், ஐந்தாறு கூட்டங்களில் பேசுவது என்றும் திட்டம் தீட்டப் பெற்றது. தொடர்ந்து சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நகர் எங்கும் தோரணங்கள்! ஐம்பது இடங்களில் கொடியேற்று விழாக்கள்! ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் என்னை உட்கார வைத்து ஐம்பது இடங்களுக்கு ஊர்வலம் விட்டனர்.

திருச்சியில் ஏற்பட்ட அந்த உற்சாகமும், பரபரப்பும் எல்லா ஊர்களுக்கும் பரவின! சேலத்தில் அறுபது கொடி! கோவையில் எழுபது கொடி! இப்படி எனக்கு நிகழ்ச்சிகள் ஏற்பாடாயின. கொடியேற்று விழாக்கள் ஒரு புதுமையான பிரச்சார சாதனமாக விளங்கத் தொடங்கின! திருச்சி மாவட்டம் எங்கும் சூறாவளி வேகத்தில் கழகத் தோழர்களின் சுற்றுப் பயணங்கள்! ஓராண்டு காலத்தில் திருச்சி நகரம் ஒப்பற்ற வளர்ச்சி கண்டது. அண்ணா மகிழ்ந்தார். தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை விற்பதற்காக தி.மு.க. ஒரு நாள் குறித்தது. திருச்சியில் யார் விற்பது என்ற கேள்வி எழுந்தபோது, "நான் விற்கப் போகிறேன்!" என்று ஒரு குரல் ஒலித்தது. ஆம்! அது அண்ணாவின் குரல்தான்!

கனிவு ததும்பப் பேசியே பல வெற்றிகளைக் கண்ட அண்ணன். கண்டிப்புக் காட்டியதன் மூலம் திருச்சி நகரில் கழகத்திற்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தார்.

• எங்கே தனது மனத்தைச் சிரமப்பட்டுக் கல்லாக்கிக்கொண்டு கழகக் காவலர்களிடம் அண்ணா அவர்கள் கடுமையாக நடந்து கொண்டாரோ, அதே திருச்சியிலேதான் 1956-ஆம் ஆண்டு கழகத்தின் முதல் மாநில மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அண்ணாவின் சோதனைகளுக்கு ஆளானவர்களோ, அல்லது ஆளான அமைப்புக்களோ, வெகு விரைவில் அவரது அன்புக்கும் அரவணைப்புக்கும் உரித்தாகி விடும் என்ற நிகழ்ச்சிக்கு இது ஒன்றே தக்க எடுத்துக்காட்டாகும்.

திருச்சி நகரவீதிகளிலே அண்ணா அவர்கள் கைத்தறி ஆடைகளை விற்றதுபோல், கழக முன்னணியினர் அனைவரும் தமிழகத்தில் பல்வேறு நகரங்களிலும், சிற்றூர்களிலும் கைத்தறி மூட்டைகளைத் தலையிலும், தோளிலும், முதுகிலும் சுமந்து தெருத் தெருவாக விற்றனர்.

''செந்தமிழ் நாட்டுக் கைத்தறி நெசவுச் சேலைகள், வேட்டிகள் வாங்குவீர்; நம் திராவிட நாட்டினர் சேமம் வேண்டிச் சிங்கார ஆடைகள் வாங்குவீர்!'' என்ற உடுமலை நாராயணக் கவியின் பாடலை முழக்கியவாறு கழகத்தினர் ஒரு நாள் அடையாள பூர்வமாகக் கைத்தறி ஆடைகளை விற்றனர்.

அப்படி விற்ற மொத்தத் தொகை ஒரே நாளில் ஒருலட்சம் ரூபாய்! சென்னையில் நான் விற்பனையை மேற்கொண்டேன். இருபதாயிரம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. சந்தை இல்லாமல் தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகள், அந்த ஒரு நாள், கழகத்தினர் செய்த பிரச்சார முயற்சியின் காரணமாக சுறுசுறுப்புடன் சந்தையைப் பிடித்துக்கொண்டன. நெசவாளர்களின் கண்ணீர் துடைக்கப்பட்டது.

கழகத்தினர் அனைவரும் கைத்தறித் துணிகள்தான் அணிய வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவுக்குப் பிறகு கைத்தறிக்குப் புதிய செல்வாக்கே உதயமாயிற்று. கழகத்தின் இரு வண்ணக் கொடி போட்ட வேட்டிகளும், சேலைகளும் இன்று ஆயிரக் கணக்கில் விற்பனையாவதற்கும், நாடெங்கும் கைத்தறியின்மீது புது மோகம் ஏற்படுவதற்கும் கழகத்தினர் செயல்தான் காரணம் என்பதை நெசவாளர்கள் மறக்கவே மாட்டார்கள்.

நெசவாளர்களின் நூயர் நுடைத்ததைத் தஞ்சையில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துயர் துடைக்கும் பணியைத் தி.மு. கழகம் ஏற்றுக் கொண்டது. தஞ்சையில் வீசிய புயல், கடற்கரை யோரத்தில் நாகை, வேதாரண்யம் போன்ற இடங்களில் பெரும் சேதத்தை விளைவித்து இருந்தது. மீளவப் பெருமக்கள் பெருத்த இழப்புக்கு ஆளாகியிருந்தனர். உடுப்பதற்கு உடையுமின்றித்

தவியாய்த் தவித்தனர். அப்படிப் பட்டவர்களுக்கு உடை வழங்கு வதற்காகத் தஞ்சை அல்லாத வேறு மாவட்டங்களில் நிதி வசூலிப்பது என்று கழகச் செயற் குழுவில் முடிவெடுக்கப்பட்டது. அந்த நிதிக் குழுவின் தலைமைப் பொறுப்பைக் கழகம் எனக்குத் தந்தது, பணியினை விரைவிலேயே முடிக்குமாறு கட்டளையிட்டது.

25,000 ரூபாய் வசூலிக்க வேண்டும் என்று செயற்குழு முடிவெடுத் திருந்த போதிலும் 35 000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகை வசூலிக்கப் பட்டது. அந்தத் தொகைக்குத் கைத்தறித் துணிகள் வாங்கப் பெற்று, அவைகளை, அரசாங்கச் சார்பில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கு மாறு தரப்பட்டது. இந்தத் தொகையினைத் திரட்டிட உண்டியல் ஏந்தியும், நாடகங்கள் ஆடியும் கழகம் எடுத்துக் கொண்ட முயற்சி சாதாரணமானதல்ல.

37

கறுப்புக் கொடி

மத்திய அரசுப் பொறுப்பிலே இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் உயர் பதவிகளிலே உள்ளவர்கள் அனைவருக்கும் கறுப்புக் கொடி காட்டுவது என்று கழகம் எடுத்த முடிவிற்கிணங்க, 1950-ஆம் ஆண்டு மத்திய மந்திரி திவாகர் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது, சென்னை, காஞ்சி ஆகிய இடங்களில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. கழகத்தினர் பலர் கைது செய்யப்பட்டார்கள். 1951-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில், சென்னை, கோவை, திருச்சி மதுரை ஆகிய இடங்களுக்கு வருகை தந்த அரிகிருஷ்ண மகதாபிற்கு ஆயிரக் கணக்கில் கறுப்புக்கொடிகள் காட்டப்பட்டன. ஏராளமான தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாற்றுக்கு, அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் வருகை தர இருந்தார்கள். அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று அண்ணு அவர்களிடம் நானும், நண்பர்களும் விவாதித்தோம்!

பேரறிஞர் அண்ணு அவர்கள் அன்றையத் தஞ்சை மாவட்டச் செயலாளரான குடந்தை கே. கே. நீலமேகம் அவர்களைக் கலந்து கொண்டு முடிவிற்கு வாருங்கள் என்று எங்களை அனுப்பி விட்டார்கள். நானும் மன்னை நாராயணசாமி அவர்களும், குடந்தை கே. கே. நீலமேகம் அவர்களின் இல்லத்திற்குச் சென்றோம்.

நீலமேகம் அவர்கள் எதையும் அமைதியாகச் சிந்திக்கும் பெரியவர். தஞ்சை மாவட்டத்தில் போதிய அளவிற்கு முன்னேற்றக் கழகம் வளரவில்லை என்பது அவரது வாதம். ஆகவே கறுப்புக் கொடி நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைய முடியாது என்று எங்களுக்கு முடிவு கூறினார். முடிவை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும், தஞ்சை மாவட்டத்தில் பரவலாகக் கழக நண்பர்கள் ஆயிரக்கணக்கில் சிதறிக் கிடக்கிறார்கள் என்றும், அவர்களை எல்லாம் திரட்ட வேண்டுமென்றும் நாங்கள் அவரிடம் வலியுறுத்தினோம்.

பெரியாருக்கு மிகுந்த ஆதரவுள்ள மாவட்டம் தஞ்சை மாவட்ட மாகும். அங்கேதான் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தைக் கட்டிக் காப்பதற்கு மனவலி படைத்த மாயவரம் நடராசனும், நாகை மணியும், பட்டுக்கோட்டை அண்ணன் அழகிரிசாமியும், திருவாரூர் ரெங்கராசனும், நாகை காளியப்பனும் தூண்களாக விளங்கினார்கள்.

முன்னேற்றக் கழகம் உருவான பிறகும், தஞ்சை மாவட்டம் பெரியாரின் திராவிடர் கழகக் கோட்டையாகவும், அதே நேரத்தில் மிட்டா மிராசுகளின் ஆதிக்கம் நிறைந்த காங்கிரஸ் கட்சியின் அரணாகவும் விளங்கி வந்தது. அங்கே நாங்கள் ஊடுருவிக் கழகப் பணிகளை மேலோங்கச் செய்வதற்கு எடுத்த முயற்சிகள் ஏராளம்.

அந்த முயற்சிகள் உடனடியாகப் பலனளிக்கா விட்டாலும் மெல்ல மெல்ல- ஆனால் உறுதியாகப் பலனளிக்கும் என்ற நம்பிக்கை எங்களுக் கெல்லாம் இருந்தது. அதனால்தான் பெரியவர் நீலமேகத்திடம் எப்படியும் கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்கு அனுமதி தர வேண்டுமென்று பிடிவாதம் செய்தோம்.

இறுதியாக அவர் சம்மதித்து, நிகழ்ச்சிக்கு முன்பு ஒரு மாதம் தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தினால்தான் கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்கான எழுச்சியை உருவாக்க முடியுமென்றும், பல்வேறு பகுதிகளிலிருந்து கழகத் தொண்டர்களைத் திரட்ட முடியு மென்றும் கூறினார். அதற்கு ஒத்துக் கொண்டு நாங்கள் புறப்பட்டோம்.

மறுநாள் முதல் தஞ்சை மாவட்டத்தில் என்னுடைய சுற்றுப் பயணம் தொடர்ந்தது. 26 நாட்கள் மாவட்டம் முழுமையும் இரவு பகலென்று இல்லாமல் நூற்றுக்கணக்கான கூட்டங்கள்; கறுப்புக் கொடி நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெறும் என்பதற்கான முழு நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. தொடர்ந்து பல நாட்கள் தஞ்சை மாவட்டத்தில் அல்லும் பகலும் சுற்றியதால் எனக்கு உடல் நலிவு ஏற்பட்ட போதிலும், என் தலைமையில் கறுப்புக் கொடி நிகழ்ச்சி நடை பெறுவதற்கு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன. நிகழ்ச்சிக்கு முதல் நாளே எங்களையெல்லாம் கைது செய்துவிடப் போலீசார் முயன்றார்கள்.

நான் திருவாரூரிலிருந்து தஞ்சைக்கு ரெயில் மூலம் முதல் நாள் இரவே புறப்பட்டேன். தஞ்சையில் ரெயில் நின்றதும், கீழே இறங்கிய தான் உடனடியாகக் கைது செய்யப்படுவேன் என்பதைப் புரிந்து கொண்டு, கூட்டத்தோடு கூட்டமாக வேறு பக்கமாக வெளியேறி, ட்டையைக் கழற்றிவிட்டுத் தலையில் ஒரு முண்டாசு கட்டிக் கொண்டு,

ரெயில் தண்டவாளத்தின் மீதே நடந்து ஒரு மைல் தூரம் அப்பால் சென்று, மாட்டு வண்டி பிடித்துக் கொண்டு, கரந்தையிலுள்ள நண்பர் வீட்டிற்குச் சென்று விட்டேன்.

ரெயிலடியில் என்னைக் காணுது திகைத்த போலீசார் என்னுடன் வந்த மன்னை நாராயணசாமி, மற்றும் பல தோழர்களைக் கைது செய்து அழைத்துப் போயினர். எப்படியும் முன்கூட்டிக் கைதாகாமல் கறுப்புக் கொடி பிடிக்கப்படும் இடத்திற்குச் சென்று விட வேண்டு என்பதிலேயே என் கவனம் எல்லாம் இருந்தது. அற்குள் போலீசார் கரந்தையிலுள்ள புலவர் ஏ. கே. வேலனை தங்கள் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு, "கருணைநிதி இருக்குமிடத்தைக் காட்டு" என்று வற்புறுத்தி யிருக்கிறார்கள். அவரும் ஜீப்பில் பல இடங்கள் சுற்றி, 'அவர் இருக்கு மிடம் எனக்குத் தெரியாது" என்று கைவிரித்து விட்டார்.

மறுநாள் காலை ராஜாஜி தஞ்சையிலிருந்து வெண்ணாற்றின் கரையிலுள்ள பள்ளி அக்ரகாரம் என்ற ஊரின் வழியாகத் திருவையாறு செல்கிறார் என்று கேள்விப்பட்டதும், கறுப்புக் கொடி பிடிக்க வந்த தொண்டர்களை எல்லாம் ராஜாஜி செல்லும் வழியான பள்ளி அக்ரகாரத்தில் அணிவகுக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

இரவு வரையில் போலீசார் கண்ணில் படாமல் மறைந்திருந்த நான், மறுநாள் காலை வண்டி வாகனங்களில் சென்ருல் இடையிலேயே கைது செய்து விடுவார்கள் என்ற அச்சத்தில், தங்கியிருந்த இடத்திலிருந்து குறுக்குப் பாதை வழியாக நடந்தே சென்று கறுப்புக் கொடி காட்டும் தொண்டர்களின் அணி வகுப்பிலே திடீரென நுழைந் தேன். என்னைக் கண்டதும் போலீசார் திடுக்கிட்டு விட்டார்கள்.

அந்த இடத்தில் என்னைக் கைது செய்தால் பரபரப்பான சூழ்நிலை ஏற்படும் எனக் கருதி, அந்த நடவடிக்கையைக் கைவிட்டு விட்டார்கள். வெற்றிகரமாக நடக்குமோ என்று ஐயப்பட்டுக் கொண்டிருந்த குடந்தை கே. கே. நீலமேகம் அவர்கள் மகிழ்ச்சியடையத் தக்க வண்ணம், கறுப்புக் கொடி நிகழ்ச்சி அமைதியாகவும் அருமையான வெற்றியோடும் முடிவுற்றது.

பள்ளி அக்ரகாரத்திலிருந்து தொண்டர்களின் அணிவகுப்பு ஊர்வலமாகவே தஞ்சை ரெயிலடி வரையில் சென்றது. அந்த ஊர்வலத் திற்கு நானே தலைமை வகித்து நடந்து சென்றேன். ஊர்வல முடிவில், தஞ்சை ரெயிலடிக்கு அருகில் அனைவருக்கும் நன்றி கூறி உரையாற்றினேனி.

டி.கே. சீனிவாசன் போன்ற நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு திருவாரூர் செல்ல ரெயில் ஏறும்போதே கடுமையான காய்ச்சலால், உடலெல்லாம் கொதித்தது. இரண்டு விலாப்புறங்களிலும்

பொறுக்க முடியாத வலி வேறு. அத்துடன் திருவாரூர் சென்று படுத்தவன்தான்; ஆறு மாதம் படுக்கையை விட்டு எழவில்லை.

விலாவின் இரு புறங்களிலும் 'புளூரசி' வியாதி தாக்கிப் பிழைப்பதே கடினம் என்ற அளவிற்கு நிலைமை முற்றிவிட்டது.

என் உடல் நலம் விசாரிக்க அண்ணா அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அவர்களும், அன்பில் தர்மலிங்கம் அவர்களும் திருவாரூரில் வந்து என்னைப்பார்த்ததும் நெஞ்சுருகிப்போயினர். அருகாமையிலேயே அண்ணா அவர்கள் நீண்ட நேரம் உட்கார்ந்து எனக்குத் தைரியமும் ஆறுதலும் கூறினார். அத்துடன், ''ஏன் இப்படி ஒரு மாதம் தொடர்ந்து கூட்டங்களில் பேசுகிறாய்?'' என்றும் கண்டித்தார். என் நினைவைவிட்டு அகலாத காட்சிகளில் என்றுமே அதுவும் ஒன்று.

38

முதலாவது மாநில மாநாடு

1952-ம் ஆண்டு இந்தியாவில் முதல் பொதுத் தேர்தலுக்கான தீவிர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பொதுத் தேர்தலைப் பற்றி யோசிக்கவும் கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் செயல் முறைகள் பற்றி விவாதிக்கவும், 1951-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் காலை மதுரையில் தி. மு. க பொதுக் குழு உறுப்பினர் கூட்டம் அண்ணா அவர்கள் தலைமையில் கூடியது.

காலையில் கூடிய பொதுக் குழு மறுநாள் காலையிலேதான் முடிவுற்றது. இடைவேளையே இல்லாமல் தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்றன. சென்னையில் நடைபெறும் மாநில மாநாட்டிற்குத் தலைவர், திறப்பாளர் ஆகியவர்களின் பெயர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன. கே. கே நீலமேகம் அவர்கள் மாநாட்டுத் திறப்பாளருக்குத் தோழர் ஈ. வி. கே. சம்பத்தின் பெயரை முன் மொழிந்தார். நான் மாநாட்டுத் திறப்பாளருக்கு நாவலர் நெடுஞ் செழியன் பெயரை முன் மொழிந்தேன். அதற்கிடையே அண்ணா அவர்கள் மாநாட்டுத் திறப்பாளராக கே. கே. நீலமேகம் அவர்களே இருக்கட்டும் என்று முடிவு கூறினார்கள். ஆகவே சென்னை மாநாட்டுத் தலைவராக அண்ணா அவர்களும், திறப்பாளராகப் பெரியவர் நீலமேகம் அவர்களும், கண்காட்சித் திறப்பாளராக அண்ணன் சி. பி. சிற்றரசு அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

முதல் பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதைப் பற்றி நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது:

"திராவிடர்களின் கருத்தையறியாமலும், திராவிடர்களின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் வகையிலும், ஒரே கட்சியாரின் எதேச்சாதிகார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தைத் தி. மு. கழகம் கண்டிப்பதன் அறிகுறியாக 1952-ல் நடைபெறும் முதல் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்துவதில்லை.

"தி. மு. கழகம் இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளையும், காங்கிரஸ் அல்லாத நாணயமுள்ள திறமைசாலிகளான முற்போக்குக் கருத்தினரையும் ஆதரிப்பது; இந்த ஆதரவு கோரி தலைமை நிலையத்திற்கு வேட்பாளர் மனுக்களை அனுப்பி, தி. மு. க. தலைமை நிலையம் குறிப்பிடும் ஒப்பந்தத்தில் கையொப்பம்

இடுகின்ற – பொதுச் செயலாளர் அங்கீகாரம் பெற்றுள்ள -வேட் பாளரை ஆதரிப்பது" என்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் கம்யூனிஸ்டுகள் மறுத்துவிட்டனர். காங்கிரசும், கம்யூனிஸ்டும், தி. மு. க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வேட்பாளரும் போட்டி போட்ட இடங்களில் கழகம், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களை ஆதரித்தது.

காங்கிரசும் கம்யூனிஸ்டும் மட்டும் நேரடியாகப் போட்டி இட்ட இடங்களில், கழகம் கம்யூனிஸ்டை ஆதரித்தது.

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் அவர்களும், முதல் பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து, கம்யூனிஸ்டுக்கும், முற்போக்குச் சுயேச்சைக்கும் தம்முடைய ஆதரவை நல்கினார்.

மதுரைப் பொதுக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் 1951-ஆம் டிசம்பர் திங்கள், 13, 14, 15, 16, ஆகிய நாட்களில் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் முதல் மாநில மாநாடு நடைபெற்றது. தமிழகத்தின் வளம் அனைத்தையும் காட்டக்கூடிய ஓவியக் கண்காட்சி ஒன்று மாநாட்டிற்குத் தனிச் சிறப்பை அளித்தது. டிசம்பர் 13-ஆம் நாள் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகச் சென்னை அறிவகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது. பல்வேறு வாத்தியக் கருவிகள் முழங்கக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்தார்கள்.

மறுநாள் நீலமேகம் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துச் சொற்பொழிவு ஆற்றிய பின்னர் மாநாட்டைத் தலைமையேற்று நடத்தித் தருமாறு அண்ணா அவர்களைத் திரு என். வி. என். அவர்கள் முன் மொழிந்தார்கள்.

அதனை வழிமொழிந்து பேசியவர் பட்டியலில் நாவலர் நெடுஞ் செழியன், சம்பத், சிற்றரசு, டாக்டர் தர்மாம்பாள், மதியழகன், தில்லை வில்லாளன், பராங்குசம், சத்தியவாணிமுத்து, அன்பில் தர்மலிங்கம், சிவசாமி, பழனிச்சாமி, ராசமாணிக்கம், கே. ஆர். ராமசாமி. முல்லை வடிவேலு, நாஞ்சில்மனோகரன், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் பெயர்களும் என் பெயரும் இருந்தன.

அண்ணா அவர்களே வழி மொழிந்து நான் பேசியது இது தான் :

''வாழ்வு மூன்று எழுத்து;

வாழ்விற்குத் தேவையான பண்பு மூன்று எழுத்து;

பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து;

அன்பிலே சுரக்கும் காதல் மூன்று எழுத்து;

காதல் விளைவிக்கும் வீரம் மூன்று எழுத்து;

வீரர் செல்லும் களம் மூன்று எழுத்து;

களத்திலே பெறும் வெற்றி மூன்று எழுத்து;

அந்த வெற்றிப் பாதைக்கு தம்மை அழைத்துச் செல்லும் அண்ணா மூன்று எழுத்து.

அந்த அண்ணனைத் தலைமையேற்க வழிமொழிகிறேன்.''

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணனைத் தலைமை ஏற்க வழிமொழிந்து பேசியதை நானும் மறக்கவில்லை; யாரும் மறக்க வில்லை.

அந்த அண்ணன் எங்களைத் தலைமையேற்கச் சொல்லாமல் சொல்லிவிட்டு, இன்று எங்கோ மறைந்துவிட்டார்.

இல்லையில்லை; எங்கும் மறையவில்லை; இங்குதான் இருக்கிறார்; நம் இதயத்தின் துடிப்பே அவர்தானே?

நடந்து முடிந்த 1952 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெருவாரியானவெற்றியைப் பெற முடியாமல் ஆட்சி அமைப்பதற்கு இழுபறியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அப்போது சென்னை மாநிலத்தின் எல்லை இன்றையத் தமிழ் நாட்டின் அளவை விடப் பெரியது. ஆந்திரா தமிழகத்துடன் இணைந்திருந்தது. தேர்தலில் இழுபறிநிலை ஏற்படவே அரசியலில் சற்று ஒதுங்கியிருந்த ராஜாஜி யிடம் சென்று காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க வேண்டுமென்று காங்கிரசார் முறையிட்டனர்.

அந்தத் தூதுக் குழுவில் காமராசரும் இருந்தார். ராஜாஜிக்கும், காமராஜருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் வெடித்துக் கிளம்பிக் கொண்டிருந்த நேரம் அது. ராஜாஜி இல்லையேல் காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க முடியாது என்ற ஒரு நெருக்கடியான கட்டம் உரு வாகிவிட்டது. முதலமைச்சர் பொறுப்பிற்கு ராஜாஜியும் ஒத்துக் கொண்டார். உழைப்பாளிக் கட்சி, காமன்வீல் கட்சி என்ற இரு கட்சிகளைக் காங்கிரசோடு இணைத்துக்கொண்டு அந்தக் கட்சிகளின் தலைவர்களான திரு. வீஸ். ராமசாமி படையாச்சி, திரு. எம். ஏ. மாணிக்கவேலர் இருவருக்கும் தமது மந்திரி சபையில் இடம் அளித்தனர்

39

மும்முனைப் போராட்டம்

ராஜாஜியினுடைய ஆட்சிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரும் போராட்டங்களில் ஈடுபட நேர்ந்தது. 'முன்னேற்றக் கழகத்தை மூட்டைப் பூச்சி நசுக்குவது போல் நசுக்கிவிடுவேன்' என்று அன்றைய முதலமைச்சர் ராஜாஜி முழக்கமிட்டார். அவர் கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்திற்குத் தமிழ்நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டது. ராஜாஜியின் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஒரு முனையிலும், பண்டித நேரு தமிழர்களை 'நான்சென்ஸ்' என்று கூறி விட்டார் என்பதைக் கண்டித்து இரண்டாவது முனையிலும், டால்மியாபுரம் புகை வண்டி நிலையத்தின் பெயரை மாற்றிக் 'கல்லக்குடி' எனத் தமிழ்ப் பெயரிடவேண்டும் என்று மூன்றாவது முனையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் போர்க்களங்களை அமைத்தது.

அந்த அறப் போரில் கல்லக்குடிக் களத்திற்கு நான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 1953, ஜூலை 14-ஆம் நாள் குலக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் போராட்டம்; ஜூலை 15-ஆம் நாள் கல்லக்குடிப் போராட்டம் என்று நாட்கள் குறிப்பிடப்பட்டன. கல்லக்குடிப் போராட்டம் என் பொது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவம் ஆகும்.

ஜூன் 15-ஆம் நாள் காலையில் சென்னையிலிருந்து திருச்சி நோக்கிப் புறப்பட்ட ஆகாய விமானம் என்னையும் தோழர் முல்லை சத்தியையும் தூக்கிக் கொண்டு பறந்தது. தேவையான, வழக்கமான வேகத்தில் விமானம் பறந்து சென்றாலும்கூடக் காற்றையும் முகில்களையும் அளவுக்கு மீறிய வேகத்துடன் அது கிழித்துச் செல்வதாகவே நாங்கள் எண்ணினோம். உண்மையில் அந்தப் பறக்கும் இயந்திரத்தில் அவ்வளவு வேகமில்லை. எங்களின் மனவேகம்தான் அப்படியிருந்தது. என்றுமில்லாத புத்துணர்ச்சி; தோளிலே தினவு; உள்ளமெல்லாம் உவகைக் கூத்து.

காரணம் என்ன?

40

விண்ணிலே மிதந்தோம்

கீல்லக்குடியிலே களம். அதற்கு நான் படைத் தலைவன். அந்த இன்பச் சேதி கேட்டு என்னுடன் தொடர்ந்த முல்லை சத்தி, இருவர் இருதயமும் அந்நிலையை அடைய இதை விட வேறு காரணம் என்ன தேவை?

வீதிக்கு வீதி பல வீட்டுப் புலித் தமிழர் வில்லேந்தி வாழ்ந்தனர் என்று நமது புறநானூறு பேசுகிறது. மலர் தூவிய மஞ்சத்திலே இருப் பார்களாம். போர் முரசின் ஒலி கிளம்புமாம். கடைசி முத்தமாயிருப் பினும் இருக்கும் எனக் களிப்புடன் கூறிக் கண்ணீர் நிறைந்த காதலி யரின் கன்னங்களிலே அன்பைப் பதித்து விட்டு மறவர்கள் தோள் தட்டி ஓடுவார்களாம். எஞ்சியுள்ள தமிழரின் வீரக் கவிதைகள் அந்தத் தித்திப்பான செய்திகளை நமக்குச் சொல்லித்தான் வைத்திருக்கின்றன.

அவ்வழி வந்தோர், போர் தவிர, புனிதமான முறை எதையும் கண்டு வழிக்கு வர மறுக்கும் பொல்லாதவர்களை எதிர்த்து முரசு கொட்டுக எனத் தலைவரிடமிருந்து உத்தரவு கிடைத்து விட்டது எனப் கேட்டு, அந்த உத்தரவை முத்தமிட்டுக் களம் நோக்கி முரசு கொட்டச் செல்கிறார்கள் என்றால், ஏன் உவகை கிளம்பாது? உற்காசம் மோதாது? உல்லாசப் பண் எழும்பாது?

"சூடேறிச் சுழன்றோடும் ரத்த ஓட்டத்திலே-முறுக்கேறி நிற்கும் நரம்புகளிலே-வீங்கிய மலைத் தோள்களிலே தம்பிமார்களின் ஆற்றல் நிறைந்த யுத்த முறைகளிலே தங்களுக்கு நம்பிக்கையில்லையா அண்ணா?" என்று கேட்டுப் பெற்ற 'வரம்' அல்லவா அது? புதிய உரம் பெற்றோம், போர் முனை நோக்கிப் பறந்தோம்.

இறக்கைகள் ஆகாயக் கப்பலுக்கா அல்லது, எங்களுக்கா என்றே புரியவில்லை. அவ்வளவு மிகுதியான வேகத்தை உணர்ந்தோம். போராட்டம் தொடங்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதைத் திருச்சி மாவட்டத்திலே உள்ள பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்வதற் காக மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஜூன் 14-ஆம் நாள் சென்னையிலே ஒரு கல்லூரியின் நிதி விழா நாடகத்திலே நடிக்க வேண்டிய பொறுப்பு இருந்தது தமிழ்ச் சமுதாயத்தின் விழிப்புக்கும் புதிய பாதை காணும்

எழுச்சிக்கும் வித்திட்ட வீரர் மணிவிளக்காம் தியாகராயப் பெரியாரின் பெயரால் அமைந்த தியாகராயர் கல்லூரியின் நிதிக்காகத்தான் நாடகம். 'பரப்பிரம்மம்' நாடகம் பிரளயமான வெகுள். நானும் சிவாஜி கணேசன் அவர்களும் நடித்தோம். இரவு நாடகத்தை முடித்து விட்டு மறு நாள் திருச்சி சுற்றுப் பயணத்தைத் துவக்க வேண்டிய முக்கியத்துவம் கருதி ஆகாய வழியைத் தேர்ந்தெடுத்தோம்.

விமானப் பிரயாணிகள் எதை எதை எண்ணிக்கொண்டிருந்தார்களோ தெரியாது; நானும் சத்தியும் மேலிருந்தபடியே பூமியை நோக்கினேம். பச்சைப் பசேலென்று உடுத்திய தமிழகத் திருமாதா, தன் நதிக் கரங்களால் உழவர் பெருமக்களைச் சீராட்டிப் பாராட்டிக் கொண்டிருந்தாள். கம்பீரமான தோற்றம்; கனிவு நிறைந்த கண்கள்; கருணை பொழியும் வதனம்; எழிலாடும் எங்கள் தாய்க்கு அணிகலன்களாக இருந்தன

பக்கத்திலே ஒரு பாவையும், அகம் அழுவதை முகத்தால் காட்டிக் கொண்டிருந்தாள். விமானப் பிரயாணிகளை உபசரிக்கும் பொறுப்பு வாய்ந்த அலுவலில் ஈடுபட்டிருக்கும் அந்த இள நங்கை ஏனிப்படி வாட்டமாயிருக்கிறாள் என்பது முதலில் புரியத்தானில்லை. விபத்துக்களைப் பற்றி எண்ணம் வராமல் கண்ணியமான புன்னகை காட்டி, பவ்யமாகப் பத்திரிகைகளை நீட்டி, பழரசம் தந்து, பணி சில புரிந்து பாதுகாத்திட வேண்டிய பதவியிலுள்ள அந்தப் பாவை ஏனிப்படித் துன்பக் கேணியில் தள்ளப்பட்டிருக்கிறாள் என்ற கேள்விக் கணைகள் என்னை விட அதிகமாக என் நண்பர் சத்தியையே துளைத்தெடுத்தன

"என்ன சார் விஷயம்?" என்று அவருக்கே இயல்பான துடிப்பு நிறைந்த சொற்களால் என்னைக் கேட்டார். கேட்டுக் கொண்டேயிருந்தார். பிறகு அவரே காரணத்தை எனக்கு விளக்கிடும் அளவுக்குத் தெளிவும் பெற்றார்.

அவளது சிவந்த கரங்களிலே சில கடிதங்கள் இருந்தன. நான் கடிதமென்று சொல்லுகிறேன். அதை அவள் பொற் சுரங்கமென்பாளோ; புதையல் எடுத்த தனமென்பாளோ; நானறியேன். ஏனெனில், அவைகள் அவள் காதலனின் கடிதங்கள். எங்கேயோ தூரத்தில் இருக்க வேண்டும் அந்தத் துடியிடையாளைத் துணைவியாகப் பெற்றிடத் துடித்தவன். அவன்தான் இப்போது அவளிடம் அந்தப் பழைய ஓலைகளின் மூலம் பேசிக் கொண்டிருக்கிறான்.

நினைவு எத்தனை இன்பமான வேதனை அளிக்கக்கூடியது! அதற்கு அவள் மட்டும் விதி விலக்கா? அவள் கையிலே பழைய கடிதங்கள் நெஞ்சிலே புதிய புதையல்கள்.

அது போலத்தான்—

எங்கள் நினைவினிலே தமிழரின் பழைய வரலாறுகள். நிலைமையோ படுகம்பம் - எரிமலை - பிரளயம்! மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு ரத்தினமே, கருப்பே, தேனே என்ற விதத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கும் காதலனின் கடிதத்தில்...

பொன்னும் முத்தும் பொதிகைச் சந்தனமும் எகிப்துக்கும் ஏதென்சுக்கும் ஏற்றிச் செல்லப்பட்டன என்ற கதையைச் சொல்லும் கடிதமாகக் கூட ஆகும் பாக்கியம் பெற்ற தமிழர் முன்னுள் பெருமை.

"மலையிடைப் பிறவா மணியே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ"

என்ற கருத்திலே பண்பாடியிருப்பான். கடிதம் தீட்டிய அவள் காதலன்.

"அக்பர் நுழையா அவனியே யென்கோ
கனிஷ்கர் நுழையாத் தரணியே யென்கோ"

என்ற புகழ்ச் சிந்தை ஆயாசத்தோடு பாடினேம் நாங்கள்.

ஆகா! நாங்கள் என்று சொல்லிக் கொள்வதிலே இப்போது எவ்வளவு பெருமையிருக்கிறது! மொழி காத்திடும் அணிவகுப்பில் நாங்களும் பெயர் தந்தோம். நாங்களும் என்பது எத்தகைய உணர்ச்சியோடு சொல்லப்படுகிறது தெரியுமா?... விளக்க முடியாத உணர்ச்சி சோக நிலையிலுங்கூட, அந்தப் பெண்மணி தன் அலுவலை, கடமையைச் சரிவரத்தான் செய்தாள். அது போலவே நாங்களும் கடமையைச் செய்யச் சிறகடிக்கும் புருக்களாகப் பறந்து கொண்டிருந்தோம்.

மேகங்களை மிரண்டோடச் செய்தபடி பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென்று - பயந்து விடாதீர்கள் - விபத்து ஒன்றுமில்லை! - திருச்சி எல்லையைத் தொட்டு விட்டது. திருச்சியிலே மத்திய சிறைச் சாலை இருக்குமிடத்திற்கு அருகிலேயேதான் விமான நிலையமும் இருக்கிறது. போராட்டத்திலே ஒரு வேளை நாம் கைது செய்யப் பட்டால், நாம் வரவேண்டிய இடம் அருகிலேதான் இருக்கிறது என்று பேசிக் கொண்டே இறங்கினேம். இருவர் எங்களை இன்முகம் காட்டி எதிர்கொண்டழைத்தனர் - திராவிடப் பண்ணை முத்துக் கிருஷ்ணனின், திருச்சி செயலாளர் மணி இருவரும்.

எம். எஸ். மணியை முன்பெல்லாம் எனக்கு அவ்வளவாகப் பிடிக்காது. காரணம் நான் எப்போது திருச்சி சென்றாலும் முத்துக் கிருஷ்ணரின் திராவிடப் பண்ணையின் மாடியிலிருந்த கழக அலுவலகத்தில் அமர்ந்து கணக்குப் பார்ப்பதும், கடிதங்கள் எழுதுவதும் ஆகிய இந்த வேலைகளை அவருக்கே உரித்தான சுறுசுறுப்போடு செய்து கொண்டிருப்பாரே தவிர, என்னோடு சரியாகப் பேசக்கூட மாட்டார்.

பிறகு திருச்சி கழகத்திலே எனக்குத் தொடர்பு அதிகம் வலுப்பட, தோழர் மணி எனக்கு மிகவும் பிடித்தமானவராகி விட்டார். கடமையிலே அவருக்கிருந்த கருத்தும், அதற்காக அவர் எடுத்துக் கொண்ட சிரமங்களும் என் அனுதாபத்தை என்னை அறியாமலேயே பெற்றுக் கொண்டு போய் மணியின் கழுத்தில் மாலையாக்கிப் போட்டன. பத்து நாளோ, இருபது நாளோ குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கட்சிப் பணிகள் புரிந்தபடி இருப்பார். திராவிடப் பண்ணையின் மாடியிலே தலையணைகூட இல்லாத நிலையில் சுருண்டு படுத்திருப் பார்.

அவரது மகன்—பெயர் மறந்து விட்டேன். (இப்போது அவனுக்குத் திருமணம் கூட நடந்து விட்டது. என் தலைமையில்) நான் 'மங்கிணி' என்று கூப்பிடுவேன். அவன் வந்து நிற்பான். ''அம்மா கூப்பிட்டார்கள்'' என்று கூறியபடி, ''மாலையில் வருகிறேன்'' என்று கூறி அனுப்புவார். மாலை வரும். ஆனால், கழகப் பணி புரியக் கிளம்பி விடுவார் வேறு ஊருக்கு. இப்படி ஓர் இளம் இயந்திரம் திருச்சிக் கழகத்திற்குக் கிடைத்திருந்தது.

முத்துவும் மணியும் வரவேற்றிட, நாங்கள் விமான நிலையத்தி லிருந்து புறப்பட்டோம். கார் போய்க் கொண்டிருந்தது. வழியிலே பராங்குசத்தைச் சந்தித்துப் போக முடிவு செய்தோம்.

'பராங்குசத்தைச் சந்திப்பதா? அவர் என்ன, விமான நிலையத் துக்கு வரவில்லையா?'' என்று திடீரெனக் கேட்கத் தோன்றுகிறதல்லவா அவருடன் பழகிய தோழர்களுக்கு? ஆமாம், எங்கள் விமானம் இறங்கு வதற்குள்ளாகவே, வானத்தில் கொஞ்ச தூரம் பறந்து வந்து, கொஞ்சும் குரலில் ''வாங்கே, வாங்கே'' என்று ஏகாரத்தை இழுத்தாற் போலக் கூவியழைத்திடும் ஆர்வமும், அன்பும் பெற்ற அந்த நண்பரை நாங்கள் சந்திக்கப் போனதற்குக் காரணம் இல்லாமலில்லை. மாவட்ட மாநாட்டின் ஓயா உழைப்பின் காரணமாக உடற் கூறுகள் நலிவடைந்து கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டு 'பிழைப்பாரா?' என்ற சந்தேகத்திற்கிடையே மருத்துவ மனையில் படுத்திருந்தார் பராங்குசம்.

மருத்துவ மனையில் என்னைக் கண்டதும் கண்ணீர் வடித் தார். தன் உடல் நிலை பற்றிய கவலையால் அல்ல; தானும் போர் முரசு தட்ட வர முடியவில்லையே என்று. ஆறுதல் படலம் முடிந்தது. பிறகு விடை பெற்று எங்கள் பிரயாணத் திட்டத்தை நிறைவேற்றத் துவங்கினோம்.

41

திருச்சி மாவட்ட எழுச்சி

ஜூன் 15-ஆம் நாள் கழகத்தின் நாள் ஏடு 'நம் நாடு' திரு பொன்னம்பலனார் அவர்கள் நிர்வாகத்தின் கீழ் துவங்கப்பட்டது. அந்நாள் முதலேதான் ''டால்மியாபுரம்'' பெயர் அகற்றும் போராட்ட விளக்கக் கூட்டங்கள் நடைபெறத் துவங்கின. முதல் நாள் முரசம், மணல்மேட்டில் அதிர்ந்தது. மணல்மேடு, அழகான சிறு கிராமம். கண்கவரும் தோப்புகள். அங்கே பண்பாடும் சிறுவர்கள். அரசியல் கொந்தளிப்புகளைத் தொட்டுப்பார்க்கும் வாய்ப்புள்ளவாறு சேலம் திருச்சி சாலையோரத்திலே அந்தச் சிற்றூர் அமைந்திருந்தது. மாலை ஆறு மணிக்கெல்லாம் நான், மணி, முத்து, சத்தி எல்லோரும் அந்த ஊருக்குச் சென்று விட்டோம்.

அந்தச் சிறிய ஊராம் மணல்மேடு சரிந்து விடுமோ என்கிற அளவுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமினர்; கண்டனர்-கேட்டனர்-பயன் பெற்றனர். பலமும் தந்தனர். இரவு உணவை முடித்து விட்டு, முசிறி வழியே வந்து, அங்கு தோழர்களைச் சந்தித்துப் பேசி விட்டுச் சரியாக 1-30 மணிக்குத் திருச்சி மீண்டோம்.

அடுத்த நாள் மணப்பாறையிலே கூட்டம். அதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போது மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் வந்து சேர்ந்தார். அன்பில் என்பது திருச்சி மாவட்டத்திலே உள்ள சிற்றூர். மைனர் பஞ்சாயத்து. அங்கே ஓர் உயர்நிலைப் பள்ளியும் உண்டு.

அன்பில் என்று சொன்னால் நமது இயக்கத்தினருக்கு அந்த ஊரின் பெயர் ஞாபகம் வராது. தர்மலிங்கத்தின் பெயர்தான் எதிர் வந்து நிற்கும். அன்பில் வந்தார்-போனார்-என்றே எல்லோரும் பேசுவார்கள். வந்தார்-போனார்-என்கிறேனே, அதிலே கூட அர்த்தம் இருக்கிறது. ஓர் இடத்தில் சில மணி நேரங்கள் அவர் இருப்பது கஷ்டமான காரியம். அவ்வளவு வேலை அவருக்கு. நான் அவரைத் தேடிக் கொண்டிருப்பேன்; என்னிடத்தில் வந்து, ''அவரைக் கண்டீர்களா?'' என்று கேட்பார்கள். இயக்கக் காரியங்கள் மட்டுமல்ல; மற்றவர் களுக்கும் நலம் பயக்கும் ஒத்தாசைகள் புரிய வேண்டுமென்பதிலும், அதற்காக அலைவதிலும், முயற்சி எடுப்பதிலும் அலாதியான சுவை அவருக்கு.

யாராவது தேர்தலிலே ஜெயிக்க வேண்டுமா? அங்கே அன்பில் இருப்பார். ஊதியமில்லாமல், கொள்கைக்கு முரண் ஏற்படாமல் யாரையும் எளிதில் நம்பிவிடுவார். அதன் காரணமாக நம்பிக்கை மோசத்திற்கு ஆளாகிப் பிறகு தன்னையே நொந்து கொள்கிற காட்சி நமக்கே பரிதாபமாயிருக்கும். லால்குடி மாநாட்டிலே ஏறத்தாழ ஏழாயிரம் ரூபாய் மிச்சப்படுத்தி அந்த மாநாடு ஓர் எழுச்சி ஏடு என்ற மதிப்புரையை மாவட்டத்திற்குத் தந்த பெருமை தோழர் அன்பிலைத் தலைவராகப் பெற்ற வரவேற்புக் குழுவிற்குத்தான் சாரும்.

அவர், நான், மணி, சத்தி, முத்து ஆகியோர் மணப்பாறைக் கூட்டத்திற்குப் புறப்பட்டோம்.

எங்களை இளமுருகனும் பொற்செல்வி அம்மையாரும் கழகத் தோழர்களும் வரவேற்றனர்.

பொற்செல்வியும் இளமுருகும் காதற் கலப்பு மணம் புரிந்தவர்கள் எனிபதும், ''காதலிலே, கவிதையிலே களம் போகும் பேச்சு கணவனுக்கும் மனைவிக்கும் தாயகமே மூச்சு'' என்ற கவிதைக்கு இலக்கணமானவர்கள் என்பதும் நாடறிந்த ஒன்று. ஊரிலே பல இடங்களில் கொடியேற்று விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒரு மாடி வீட்டிலே-மாடியின் உச்சியிலே—கழகக் கொடியை ஏற்றி வைக்க என்னை அழைத்தார்கள். கொஞ்சம் ஆச்சரியத்தோடு நான் தோழர் இளமுருகைப் பார்த்தேன். அவர் சொன்னார், ''இந்த வீட்டுக்காரர் புதிதாகக் கட்சிக்கு வந்துள்ள வாலிபர். பிரபல காங்கிரஸ் வாதியான பொன்னம்பலக் கவுண்டர் இவருக்குச் சித்தப்பா; லால்குடி மாநாட்டிற்குப் பிறகுதான் இவருக்குக் கட்சிப் பற்றே ஆரம்பம்'' என்றெல்லாம்.

பிறகு கொடியேற்று விழாக்கள், ஊர்வலம், ஒரு முஸ்லிம் நண்பர் தலைமையிலே மாபெரும் பொதுக்கூட்டம் எல்லாம் இனிது நடைபெற்றன. பின்னர் அந்தக் கட்சிக்குப் புதியவர் வீட்டிலே சாப்பாடு. கட்சிக்குப் புதியவர் எங்களோடு பேசவே நாணமடைந்தார். நானும் நண்பர் சத்தியும் அவரைப் பார்த்த போது ஒருவருக்கொருவர் ஆச்சரியப்பட்டுக் கொண்டோம். அதை விட ஒரு பெரிய ஆச்சரியத்தை அவர் எங்களுக்கு உண்டாக்கிவிட்டார்!

லால்குடி மாநாட்டுக்குப் பிறகு கட்சிக்கு வந்த அந்த இளந் தோழர் கல்லக்குடிப் போராட்டத்துக்கு முதல் நாள் இரவு இரண்டரை மணிக்குத் தொண்டர் முகாமில் தன்னையும் படை வரிசையில், அதுவும் முதல் படையில், சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். வயதான தாய், இளம் மனைவி, தன்னைத் தவிர வேறு யாரும் துணையில்லாத வீடு எதைப் பற்றியும் கவலைப்படாமல், ''எழுந்திக்

கொள்ளுங்கள் என் பெயரையும் அணிவகுப்பில்'' எனக் கர்ஜித்தார். கட்சிக்குப் புதிய அந்த மனிதர் கறுத்த மேனியும், சிரித்த முகமும் படைத்தவர். கழகத்தின் உயிரான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றையும் பெற்றவர்; படையில் இடம் பெற்றார். சிறையில் ஆறு மாதம் பரிசும் பெற்றார்.

எங்கள் ஐவரில் ஒருவர் கஸ்தூரி ராஜ் என்னும் கட்சிக்குப் புதிய காளை. அவருடைய விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இரவு திருச்சிக்கு இரண்டு மணிக்கு வந்தோம். தூக்கத்தையும் வருந்தி அழைத்தோம்.

மூன்றும் நாள் அன்பிலில் ஒரு நாடகம் நடைபெற்றது. அதற்குத் தலைமையேற்றதோடு, கல்லக்குடி போர் பற்றிய விளக்க வுரையாற்றிப் போராட்டத்திற்கு ஆதரவு தருகிறோம் என்று வாக்களித்த பொதுமக்களைப் பாராட்டி, இரவே திருச்சி திரும்பினோம்.

மறுநாள், ஜூன் மாதம் 18-ம் நாள் குளித்தலையிலே கூட்டம். கூட்டம் மாத்திரமல்ல; டால்மியாபுரம் போராட்டச் செயற்குழுவும் அங்கு கூடுவதாயிருந்தது. அந்தச் செயற்குழுவின் முடிவைத் திருச்சி மாவட்டம் மட்டுமல்ல; தமிழகமே எதிர்பார்த்தபடி இருந்தது. அதிலே தான் போராட்டத் தேதி குறிக்கப்படும் என்ற செய்தி பரவிற்று. மாலை நான்கு மணிக்குச் செயற்குழு உறுப்பினர்கள், நான், அன்பில், மணி, இளமுருகு, தம்புசாமி, மாணிக்கம், குளித்தலை ராசா, ஆகிய ஏழு பேர் கூடி இரண்டு மணி நேரத்திற்கு மேலாகப் போராட்டச் சூழ்நிலைகளைப் பற்றி யோசித்தோம்.

வெளியிலே ஏராளமான தோழர்கள் குழுவின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். பொதுக் கூட்டத்தில் வெள்ள மெனத் திரண்டிருந்த பல்லாயிரவரும் குழுவின் முடிவைச் சொல்ல எப்போது வெளியே வருவோம் என்று வழிமேல் விழி வைத்துக் காத்துக் கிடந்தனர். நம் கோரிக்கை கவனிக்கப்படா விட்டால் ஜூலை மாதம் 15-ஆம் நாள் போராட்டத்தைத் துவங்குவதாகவும், அதற்குப் பொதுச் செயலாளர் அண்ணாவின் அனுமதியைக் கோருவ தாகவும் தீர்மானிக்கப்பட்டது. செயற்குழுவில் முடிவான செய்தியைச் சொன்னதும் கூடியிருந்தோர் ஆடியதும், பாடியதும்- அடடா! நேரில்தான் காண வேண்டும்! வார்த்தையேது வர்ணிக்க ''போர்'' என்றேன்; ''புறப்பட்டோம்'' என்றார்கள் விழியால்.

''ஜூலை 15'' என்றேன்;

''அவ்வளவு நாளா!'' என்றார்கள் பெருமூச்சால்.

கழகப் பெரும்படையின் முதற்களம் அமையும் வாய்ப்பைக் கல்லக்குடி பெற்றது என்றாலும், நாள் குறித்த இடம் என்ற பெருமையைக் குளித்தலை பெற்று விட்டது.

குளித்தலை இன்பம் கொஞ்சும் பேரூர். சிந்து பாடும் காவிரியின் ஓரத்திலே செழிப்பைச் சுமக்க முடியாமல், சேரன் ஏற்றிய கல்லைத் தூக்க முடியாமல் தலைகுனிந்த கனக விசயர்களைப் போல வணங்கி நிற்கும் வாழை மரச் சோலைகளை, வளம் நிறைந்த பூமிகள். வாட்கண்ணும் வற்றுத வீரமும் படைத்த மறவர்கள் உலவும் வீதிகள்.

குளிரை இன்பம் என்று கூறுவர். குளிர் தழைத்த இடம் தான் குளிர்த் தழையாகி குளித்தலையாகி விட்டதோ என்னவோ என்று ஐயுறும் வகையில் அமைந்த நல்லூர். தமிழகத்தில் எத்தனையோ குளித்தலைகள் இருக்கின்றன.

இயக்கத்தின் வளர்ச்சிக்காகத் தக்கது ஏதாவது செய்ய வேண்டும் என்று எப்போதும், எந்நேரமும் எண்ணிடும் சீலங் கொண்டவர் தோழர் முத்துக்கிருஷ்ணன். இவர் மட்டுமின்றி எண்ணிறந்த தோழர்களை வீரர்களாகப் பெற்றிருக்கிறது குளித்தலை.

குளித்தலை போன்ற பல ஊர்கள் இருக்கின்றன. உழைத்திடும் உத்தமர்களும், உரம் வாய்ந்த உள்ளங்கொண்டோரும் நிறைந்து கிடக்கும் பட்டி, தொட்டிகள் பல உண்டு. அவைகள் எல்லாம் நமது பாசறை ஆக வேண்டும். சில பாசறைகளில் போர்க்கருவி அதிகமிருக்கும். அதைக் கையாள வீரர்கள் குறைவாயிருப்பார்கள். வீரர்கள் அதிகமாகவும், போர்க் கருவிகள் குறைவாகவும் உள்ள பாசறைகளும் உண்டு.

கருவிகளை அதிகமாக்கவும், கருவிக்கேற்றபடி வீரர்கள் தொகையைப் பெருக்கவும், அந்தந்த ஊர் முன்னணி வீரர்கள் முன் வரவேண்டும். போர்க் கருவிகள் என்று கழக உறுப்பினர்களையும், வீரர்கள் என்று செயற்குழு உறுப்பினர்களையும்தான் குறிப்பிடுகிறேன். அச்சத்தால் அல்ல; அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியத்தால்.

வெஞ்சமர் வராத நேரத்திலும் வீரர்களுக்குப் பாசறைகளில் வேலையுண்டு. வேலின் கூர்மையை மழுங்காமல் பார்ப்பதும், வாளின் வலிமையைச் சோதித்துப் பார்ப்பதும், பயிற்சி பெறுவதும், படையைப் பெருக்குவதும்-இன்னோரன்ன பல கடமைகளில் கழகப் பாசறைகளும் ஈடுபட வேண்டும்.

அறப்போர்களில் கலந்து கொள்ள மட்டும் வீரர்களின் பட்டியல் பெருக வேண்டுமென்பதில்லை. ஆக்க வேலைகள் பல இருக்கின்றன. அவர்களுக்குக் கழகத்தின் பெயரால் நடத்தப்படும் அல்லது கழகத்தின் தலைமையிலிருந்து அறிவிக்கப்படும் ஆக்க வேலைகளில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டுமென்பது அல்ல. நகரத்து மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளில் கூடப் பொது நலத் தொண்டு புரியும் பண்பு, கழக வீரர்களுக்கு ஏற்பட வேண்டும்.

அத்தகைய படைகள் பட்டினங்களிலும், குக்கிராமங்களிலும் பெருகிட வேண்டும். கழகக் கொள்கைகட்குக் குந்தகம் விளையாத முறையிலே கழக வீரர்களிடத்திலும், கழகத்திடத்திலும், மக்கட்கு அன்பு வளர்கின்ற அளவிலே, அந்தத் தொண்டு செய்யும் நன்மை தொடர்ந்திட வேண்டும்.

சுற்றுப் பயணத்தின் பொழுது தோழர்கள் உடனிருந்தால் அலுப்பே தெரிவதில்லை. திடீரென வெடிக்கும் வேடிக்கை நிகழ்ச்சிகள் அதன் விளைவாக விழும் கிண்டல்கள், கேலிகள் வயிறு வலிக்கப் பேசவும் பயன்பட்டுப் பயணம் உற்சாகம் குலையாமல் அமைந்திட வழியும் ஏற்படும்.

ஒருமுறை வடஆர்க்காடு மாவட்டத்தில் என் சுற்றுப் பயணம் நடைபெற்றது. மாவட்டச் சார்பில் அமைக்கப்பட்ட வாடகைக் கார் ஒன்றில் நான், கவிஞர் கண்ணதாசன், முல்லை சத்தி, மற்றும் சிலர் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். எங்களுக்காக அமர்த்தப்பட்ட கார் மிகவும் பழைமையானது. 'டட்ட' என்ற ஒலியுடன் புறப்பட்ட தேயாஞல், மாதம் போம் காத வழி! அதுவும் 'டயர்' பொத்துக் கொள்ளாமல், எண்ணெய் அடைத்துக் கொள்ளாமல், எஞ்சினுக்கு வலிப்பு நோய் வராமல் இருந்தால் தான்! ''இந்தக் கார் எத்தனை ஹார்ஸ் பவர்?'' என்று கேட்டார் கண்ணதாசன்; ''ஒரே 'ஹார்ஸ் பவர்' தான்; அதுவும் தெஞலிராமன் ஹார்ஸ் பவர்!'' என்றேன் நான்.

வயதான காலத்திலும் இப்படித் துன்பப்படுத்துகிறார்களே என்று பெருமூச்சு விட்டபடி, புகைச்சலைக் கக்கிக் கொண்டு, கார் போய்க் கொண்டிருந்தது. வழியிலே ஒரு திருப்பம். எதிரெதிரே வரும் வண்டிகள் தவருமல் ஒலி முழங்கினுல்தான் பத்திரமாக அந்தத் திருப்பத்தைக் கடந்து செல்ல முடியும்.

எதிரே ஒரு பஸ் வந்தது. எங்கள் காரும் சென்றது. இரண்டும் பெரிய விபத்துக்குள்ளாகி தொறுங்கிப் போய்விட வேண்டிய பெரிய ஆபத்திலிருந்து ஒரு நூல் இழையில் நாங்கள் தப்பித்துக் கொண்டோம். காரணம், எதிரே வந்த பஸ் டிரைவர் 'ஹாரன்' செய்யாமல் வந்து

விட்டார். அதனால் வந்த பயங்கரம். அந்த பஸ்ஸில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் சில போலீசாரும் இருந்தார்கள். எங்கள் கண்டிரைவர் கோபமாகக் கீழே இறங்கினார். பஸ் டிரைவரைப் பார்த்தார்.

"ஏனய்யா ஹாரன் பண்ணுமவர்றே? நான் வேறே பிரேக் இல்லாம வர்றேன்!" என்று கத்தினார் ஆத்திரமாக! பஸ் போய் விட்டது. ஆனால் எங்களுக்குச் சிரிப்பால் ஏற்பட்ட வயிற்றுவலி போகவில்லை.

கல்லக்குடிப் போராட்டத்திற்காக நடைபெற்ற சுற்றுப் பயணத் திலும் இது போன்ற பல்வேறு நகைச்சுவை நிகழ்ச்சிகள் எங்களின் களைப்பைப் போக்கிட உதவின.

ஜூன் 21-ஆம் நாள், தமிழகம் எங்கும் ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கழகத்தின் சார்பில் கண்டன நாள் கூட்டங்கள் நடத்துமாறு அறிவிக்கப்பட்டது. மூன்று மணி நேரம் சிறுவர்கள் படித்தால் போதும். மீதி நேரத்தில் அவரவர் களின் தகப்பனார் தொழில்களைக் கற்றுக் கொண்டால் போதுமானது என்பதே அந்தக் கல்வித் திட்டமாகும். சிறுவர்கள் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை. எந்த வயதுச் சிறுவர்கள், எப்படித் தொழில் கற்றுக் கொள்வது என்ற கேள்வி களுக்குக் கிடைத்த பதில்தான் விமரிசனத்திற்கு உரியது.

42

முரசு அதிர்ந்தது

பதினெரு வயதிற்கு உட்பட்டவர்கள் பள்ளியில் மூன்று மணி நேரம் படித்தது போக, மீதி நேரத்தில் வீட்டிற்குச் சென்று தந்தையின் தொழிலைப் பயில வேண்டும், பள்ளியிலேயே தொழில் கல்வி போதிக்கப் படுகிறது என்று சொன்னாலும், அதிலே அர்த்தம் இருக்கிறது. தொழில் கல்விகூட மேல்நாடுகளில் எப்படிப் போதிக்கப்படுகிறது? சிறுவர்களுக்கு எந்த வேலையின் மீது ஆசை விழுகிறது என்பதை ஆராய்ந்தறிந்து, அந்தத் துறையிலேயே அவர்களைப் பழக்கிடும் தொழிற் கல்வி முறை தான் சிறந்தது என்று கொள்ளப்பட்டு, அவ்வழியிலே மேல்நாடுகள் சென்று மேன்மையுறுகின்றன.

ஆளும் வர்க்கம்- பாதுகாக்கும் வர்க்கம்- தொழில் வாணிபம் முதலிய வர்க்கம்- என அரசியலிலே மூன்று முக்கியமான பிரிவுகளைப் பிரித்துக் காட்டிப் பிறப்பின் காரணமாக இல்லாமல், சிறப்பின் காரண மாக அந்தந்த வர்க்கத்தில் இடம் பெற எந்த மனிதனுக்கும் உரிமை யுண்டு என்பதையும் எடுத்துக் காட்டி, அத்தகைய மூன்று பிரிவிற்கும் தேவையான கல்வியை அவர்களுக்கு இளமையில் போதிக்க வேண்டு மென்றும்—யார் எந்தப் பிரிவுக் கல்வியை விரும்புகிறார்கள் என்று பார்த்து அந்தத் துறைக் கல்வியை அவர்களுக்கு வழங்க வேண்டு மென்றும் உலகக் கல்வித் திட்டத்திற்குக் கைகாட்டியாக இருந்த பேரறிஞன் பிளாட்டோ எழுதி வைத்திருக்கிறான்.

அதற்கு மாறுகக் காங்கிரஸ் அரசு, ராஜாஜியின் தலைமையில் கொண்டு வந்த புதிய கல்வித் திட்டத்தினால், பூத்து வரும் புதிய சமுதாயம் பொட்டல் காடாகி விடும் என்று நாடு எச்சரித்தது. நல்லோர் எச்சரித்தனர். திட்டம் தந்தவரின் கட்சிக்காரர்களே கூட எதிர்த்தனர்

எதிர்ப்பை அலட்சியப்படுத்தியதன் காரணமாக ஜூன் திங்கள் 21-ஆம் நாள், நாடு முழுவதும் புதிய கல்வித் திட்டத்திற்கெதிராகக் கழகத்தின் சார்பில் கண்டனக் குரல் எழுப்பப் பட்டது. கண்டனக் கூட்டங்கள் முடிவுற்ற பிறகு, கல்லக்குடிப் போராட்டத்திற்கும், புதிய கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத்திற்கும், தமிழ்த் தலைவர்களை 'தான்சென்ஸ்' என்று நேரு கூறியதைக் கண்டிப்பதற்கான போராட் டத்திற்கும் முரசறைவதற்காக ஜூன் 4, 5 ஆகிய இரு நாட்களில் சிதம்பரத்தில் தி.மு.க. மாநாடு கூடிற்று. புதுக் கல்வித் திட்ட எதிர்ப்புப்

போராட்டத்திற்குத் தோழர் ஈ. வி. கே. சம்பத் தலைவராஞர், கல்லக் குடிப் போராட்டத் தலைவஞகிய நானும் அவரும் மாநாட்டில் பேசிக் பிறகு மாநாட்டில் பேரறிஞர் அண்ணு முழங்கினர்.

"ஒரு தம்பியைக் கல்வித் திட்டப் போருக்கு அனுப்புகிறேன். மற்ருெரு தம்பியைக் கல்லக்குடித் தளத்திற்கு அனுப்புகிறேன். களம் இரண்டோடு முடிவதில்லே. நண்பர்களே! ஜூலே 15-ஆம் நாள் கல்லக்குடிக் களத்திலே கருணுநிதி நிற்கும் போது அந்தப் போராட்டத்தின் அறிகுறியாகவும், தென்ஞட்டுத் தலைவர்களே 'தான்சென்ஸ்' என்று இகழ்ந்து பேசிய நேருவைக் கண்டிப்பதற்கு அறிகுறியாகவும், தமிழகமெங்கும் உள்ள தமிழர்கள் புகை வண்டிகளே நிறுத்தப் போகிருர்கள்" என்று அண்ணு சொன்னதுதான் தாமதம், மாநாட்டுப் பந்தலாகவா இருந்தது அது?

வேலோடு வேல் உராய்ந்ததோ, வாளோடு வாள் மோதியதோ என்னும் விதத்தில் கையொலியும் அதை மிஞ்சும் நாவொலியும் எழுந்தன. பேனவை ஒரு போர் வாளாக்கிய அந்தத் தமிழ்த் தளபதியின் கரம் உயர்ந்தது; நாவோ வீர முரசம் கொட்டியது. கனல் கிளம்பியது அவர் கண்களில். "போர் முனேக்குச் செல்க!" என்ருர் பொதுச் செயலாளர் அண்ணு. எடுத்துச் செல்ல வேண்டிய கருவிகளேயும் குறிப்பிட்டார்.

"கடமையெனும் வாள்—கண்ணியமெனும் கேடயம்—கட்டுப் பாடெனும் கவசம்—மூன்றும் எடுத்துச் செல்க!" என்ருர், அம் மூன்றெழுத்துச் செல்வர் அண்ணு.

முரசு அதிர்ந்தது!

"கல்லக்குடி எனும் பெயரிருக்க வேண்டிய இடத்தில் டால்மியா புரம் எனும் பெயரா? தமிழுக்குச் செய்யப்படும் துரோகம்!" என்று முரசு அதிர்ந்தது.

"முத்தமிழ்ப் படைகெட-முன்னேற்றம் தடைபட—இனி விடோம் விடோம்!" என முரசு அதிர்ந்தது.

"எதிரிகள் கோடி இட்ட்ழைப்பினும்-தொடோம்! தொடோம்!" என முரசு அதிர்ந்தது.

"ரத்தக் கடல்கள்-கொத்தும் இடர்கள்-எதையும் தாங்கும் இதயம் கொண்டோர்-எழுந்தார்!" என முரசு அதிர்ந்தது.

ஜூலே 15-ஆம் தேதி மும்முனேப் போராட்டத்திற்காக நாள் குறிப் பிடப்பட்டுவிட்டது. அதற்கிடையிலே சென்னேயில் ஜூலே 11, 12 தேதிகளில் மாவட்ட மாநாடு நடைபெற்றது. 11-ஆம் தேதி இரவு மாநாட்டில் நான் நடித்த 'பரப்பிரம்மம்' நாடகம்; 'பரப்பிரம்மம்' என்ற பெயர் புதிராகத் தோன்றுகிறதல்லவா?

43

பரப்பிரம்மம்

நான் எழுதிய 'பராசக்தி' படம் தமிழ் நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி நூறு நாட்களுக்கு மேல் ஓடிக் கொண்டிருந்த போது 'தினமணி கதிர்' இதழில் 'பராசக்தி' படத்தின் கருத்துக் களையும், வசனங்களையும் கடுமையாகத் தாக்கி மிக நீண்டதொரு விமரிசனம் எழுதப்பட்டிருந்தது. பத்துப் பக்கத்திற்குக் குறையாமல் எழுதப்பட்ட அந்த விமரிசனத்தில் வரிக்கு வரி நான் தாக்கப் பட்டிருந்தேன்.

என்னையும் 'பராசக்தி' படத்தையும் கண்டித்து, காங்கிரஸ் கட்சி கண்டனக் கூட்டங்கள் பலவற்றை நடத்தியது. கண்டன விமரிசனம் வந்திருந்த 'தினமணி கதி'ரின் அட்டையில் பராசக்தியைக் கிண்டல் செய்வது போல் ஒரு கேலிச் சித்திரமும் வரையப்பட்டிருந்தது. ஆடை குலைந்த நிலையில் ஒரு பெண்ணின் ஓவியம் வரைந்த விளம்பரம்! அந்த விளம்பரத்தின் தலைப்பு 'பரப்பிரம்மம்' என்பதாகும். அதன் கீழே "கதை-வசவு தயாநிதி என்றும் எழுதப்பட்டிருந்தது. இதுதான் அந்தப் பத்திரிகையின் அட்டைப் படக் கேலிச் சித்திரமாகும். (இதே நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த 'தினமணி கதிர்' தான். ஆனால் ஆசிரியர் குழு முழுவதும் வேறு!)

அதைப் பார்த்து நான் ஆத்திரப்படவில்லை. என்னைக் கிண்டல் செய்து அவர்கள் போட்டிருந்த அதே 'பரப்பிரம்மம்' என்ற தலைப்பை வைத்து ஒரு நாடகம் எழுதினேன். முழுக்க முழுக்கக் கட்சிப் பிரசாரம் நிறைந்த இந்த நாடகத்தைப் பல ஊர்களில் நடித்துக் காட்டினேன்.

சென்னையில் 'பரப்பிரம்மம்' நாடகத்தினை முடித்து விட்டு ஜூலை 12-ஆம் தேதி காலை சென்னையில் தாயிடமும், துணைவியிடமும், குழந்தைகளிடமும் விடைபெற்றுக் கல்லக்குடிக் களம் செல்லத் திருச்சிக்குப் புறப்பட்டேன்.

ஜூலை 13-ஆம் நாள் நான் எங்கிருந்தேன் என்று போலீசாரால் கண்டு பிடிக்க முடியவில்லை. கல்லக்குடியிலேதான் போலீசாரிடம் சிக்க வேண்டும் என்பதற்காக 13-ஆம் தேதி முழுவதும் யார் கண்ணிலும் படாமல் இருந்துவிட்டு, 14-ஆம் நாள் காலையில் திருவாரூர் சென்று, அங்கிருந்து புறப்பட்டு, அன்றிரவு லால்குடியில் நடை பெறும் பொதுக் கூட்டத்திற்குச் சென்றேன். செல்லும் வழியிலேயே பொதுச்

செயலாளர் அண்ணா அவர்களும், நாவலர் நெடுஞ்செழியன், எஸ். வி. நடராசன் முதலியோரும் செயற் குழுக் கூட்டத்தில் பேரவீசாரால் கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது.

ஜூலை 15 :

போர் நான் பற்றிய கடைசிக் கூட்டம் ஜூலை 14, இரவு லால்குடியில் நடைபெற்றது. அதற்குச் சில மாதங்களுக்கு முன்பு அதே லால்குடியில் நடைபெற்ற மாநாட்டில்தான் டால்மியா புரத்தைக் கல்லக்குடி என்று மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேறியது.

அந்த லால்குடிதான் கல்லக்குடிக் களத்திலே பிணமாகிப் போன நடராசனைப் பெற்றெடுத்த பெருமை படைத்த பூமியாகும். பொதுக் கூட்டத்திற்கு திரு. பழனியாண்டி எம். எல். ஏ. தலைமை தாங்கினர். அவர் டால்மியா தொழிலாளர் சங்கத்தின் தலைவர். கல்லக்குடிப் போராட்டம் ஏவ்வளவு அவசியமானது என்பதை அவர் விளக்கினர். கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே கவிஞர் கண்ணதாசனும், காரைக்குடி இரசம. சுப்பையாவும் மேடைக்கு வந்தார்கள். இரு வரும் என்னுடன் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருப்ப தாகக் கூட்டத்தில் முழங்கினர்கள்.

கூட்டம் முடிந்து இரவு இரண்டு மணிக்கு, மறு நாள் போராட் டத்திற்கான தொண்டர்களின் அணிவகுப்பைப் பார்வையிட்டோம். போராட்டத்தில் எப்படியெப்படி அமைதியோடும், கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் நடந்து கொள்ள வேண்டுமென்று தொண்டர்க ளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஜூலை 15! விடிவெள்ளி முளைத்தது! சேவல் "கொக்கரக்கோ" எனக் கூவிற்று!

அது எல்லோரும் 'புறப்படுங்கோ!' என்பது போல் கூவிற்று.

செங்கதிரோன் எழுந்தான். வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சோடு தமிழகமே எழுந்தது.

கடலின் கொந்தளிப்பு உள்ளத்திலே! காலைக் கதிரவனின் நிறம் கண்களிலே! சேவலின் மிடுக்கு நடையிலே!

தமிழர் பட்டாளம் எழுந்தது; எவரும் எமக்கு இணையில்லை எனக் கூறி எழுந்தது.

கண்ணீரும் கனலும் சேர்ந்து கிளம்பும் விழியுடை வீரர்கள் எழுந்தனர்.

பறந்தனர் படை முகாம்களுக்கு.

வீரர்களின் அடிச்சுவடுகளை வீணர்கள் அழித்து விட்டிருக்கலாம்! ஆனால் காலம் அவைகளைக் காப்பாற்றித்தான் வைத்திருக்கிறது. அதையும் ஒழித்துக் கட்ட முயலும் தமிழ்நாட்டு ஒதியமிலார்கள் ஒழிந்திடுக என உயர்ந்திட்டது போராட்டக்கொடி

கறுப்பும் சிவப்பும் கலந்த கொடி, தமிழ் நாட்டுத் தெருவெல்லாம் நிறைந்தது.

கல்லக்குடியிலே—டால்மியா தொழிற்சாலையிலே புகை கிளம்பிற்று

புரட்சி எரிமலையிலும் புகை எழும்பிற்று.

சூலை 15:

அன்றைய ஆட்சிக்காரரின் நெஞ்சிலே எஞ்சியிருந்த இரக்கமும் உலர்ந்த நாள்: ஆனால் ஆணவத்தின் தலையிலே இடி விழுந்த நாள்.

44

களம் புகுந்தேன்!

ஆயிரக்கணக்கான மக்கள் களம் காண வந்து விட்டனர், கல்லக்குடிக்கு. பாசறையிலிருந்து முதல் படை கிளம்பியது.

நான் முன்னே-என் பின்னே 24 பேர்கள்-எம்மைச் சுற்றி ஆயிரமாயிரம் தோழர்கள்.

தமிழ்த் தாயின் தலையிலே சூட்டப்பட்ட அவமானக் கிரீடத்தைக் கழற்றி எறியக் 'கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக்கூட்டம்! கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!'

என்றிடும் வண்ணம் நடந்தனர் வீரர்கள்; பல தெருக்களைக் கடந்தனர் தீரர்கள்!

குருடர்களும் பார்த்தனர்!

ஊனர்களும் நிமிர்ந்தனர்!

செவிடர்களும் கேட்டனர்!

ஊமைகளும் வாழ்த்தினர்!

களம் வந்தது. செந்தமிழ் அன்னை புறக்கணிக்கப்பட்ட இடம் வந்தது. பெருமைக்குரிய தாய், புலம்பிக் கொண்டிருந்த இடம் வந்தது.

எங்களைச் சீராட்டிப் பாராட்டிச் செந்தமிழ் ஊட்டிய சிலம்பணிந்த செல்வி-மணிமேகலா தேவி - மாணிக்கக் குறள் ஒலிக்கும் மாதா - வளையாபதியுடைய குண்டலகேசி! வஞ்சகர் பூட்டிய விலங்கால் வாட்டமுற்றுக் கிடந்தாள்!

நாங்கள் விலக்க வந்த விலங்கிற்குத் துப்பாக்கி வேலி போட்டனர்-

துடித்தழும் மாதாவைத் தூரத்திலேயிருந்து பார்! தொடாதே! அவள் தொல்லையுறுவதை ரசி என்றது அரசாங்கம்.

கோழைகள் கேட்பர் கோழைகள் பின்னடைவர் நாங்கள் வாழைக்குக் கன்றல்ல-ஆலுக்கு விழுதுகள்-அன்னைத் தமிழுக்கு மக்கள்· இப்படிப் பதில் தந்தோம்! ஒடினோம் அன்னையிடம். 'டால்மியாபுரம்' என்ற பெயரை மறைத்தோம். 'கல்லக்குடி' என்ற பெயரை அந்தப் பலகை மீது ஒட்டினோம்.

அலறியவாறு புகை வண்டியும் வந்தது!

வந்த புகை வண்டி புறப்பட ஆயத்தமானது.

என் படையில் இருந்த 25 பேரை ஐந்து பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியினரும் புகை வண்டியின் முன்னே படுப்பது என்று; தலைவன் என்ற முறையில் கட்டளையிட்டேன்.

முதலில் ஐவர்!

நான், சத்தி, கஸ்தூரி, குமாரவேல், குழந்தைவேல்-தண்ட வாளத்தைத் தலையணையாக்கிக் கொண்டு இருப்புப் பாதையைப் பஞ்சு மெத்தையாக்கிப் புகை வண்டிக்குப் பக்கத்திலே சாய்ந்தோம்.

கூடி நின்ற ஆயிரமாயிரம் உள்ளங்களும் துடித்தன. ஒரே அமைதி! என்ன நடக்கப் போகிறதோ என்று மக்கள் வெள்ளம் அலையடங்கிக் கிடந்தது. துப்பாக்கி ஏந்திய ரிசர்வ் போலீசார் வளையம் வளர்த்தது. கலெக்டர், டி. எஸ். பி., சர்க்கிள், சப் இன்ஸ்பெக்டர்கள், மாஜிஸ்டிரேட், சார்ஜண்ட் எல்லாரும் எங்கள் பக்கம் வந்தனர்.

"ஏன் இப்படிப் படுத்திருக்கிறீர்கள்?" என்றனர்.

"எங்கள் இலட்சியத்தை எடுத்துச் சொல்வதற்காக!" என்றேன்.

"இது பொதுஜனங்களுக்கும், பிரயாணிகளுக்கும் இடையூறான காரியம் அல்லவா?"

"அப்படி நீங்கள் கருதினால் வருந்துகிறேம். ஆனால் இத்தப் பொது ஜனங்களைக் கேளுங்கள். அல்லது வண்டியிலுள்ள பிரயாணிகளைக் கேளுங்கள். அவர்கள் சொல்லட்டும், "டால்மியாபுரமே இருக்க வேண்டும், இந்தப் போராட்டம் கூடாது' என்று. நாங்கள் உடனே எழுந்துவிடுகிறேம்" என்று படுத்துக்கொண்டே பதில் சொன்னேம். பக்கத்தில் ரயில் எஞ்சின் கொதித்துக் கொண்டிருந்தது. நாங்களும் தான்! எங்களைச் சுற்றி நின்ற மக்களுந்தான்!

''டால்மியாபுரம் வேண்டாம் என்ருல், அதற்கு மேலிடத்திற்கு எழுதுங்களேன்!"

''எல்லா முயற்சிகளும் முடிந்துவிட்டன. தீட்டிய கடிதங்கள் எவ்வளவு! தீர்மானங்கள் எத்தனை! தில்லியின் திருநோக்குப் படவில்லை எம்மீது! ஆகவே அவர்கள் கவனத்தை இழுக்க இம்முறையைக் கையாள்கிறேம்.''

''இப்படிச் செய்வதால் வெற்றி கிடைத்துவிடுமா?"

'எங்களுக்கு முன்னே நிற்க வைக்கப்படும்-இந்த ரயிலின் 'கிரீச்' என்ற சப்தமோ-அல்லது ரயில் எம்மீது ஏறி எமது எலும்புகள் 'மளுக் மளுக்' என்று முறியும் சப்தமோ-தில்லி ஆட்சி பீடத்தின் காதில் எட்டுமோ எட்டாதோ? மக்கள் மன்றத்துக்கு எட்டும். நிச்சயமாக எட்டும். அது இந்த ஆதிபத்தியக்காரரை ஆயிரம் தேள்போலக் கொட்டும். அது போதும், எங்களுக்கு!"

''சொல்கிறேம்-கேளுங்கள், உடனே எழுந்து விடுங்கள்!"

'நிபந்தனை வேண்டும்---டால்மியாபுரத்தை மாற்றி விடுகிறேமென்று!"

''அதுதான் 'கல்லக்குடி' என்று ஒட்டிவிட்டீர்களே?"

''ஒட்டுவதென்ன, எங்கள் ஓவியர்களே விட்டு எழுதியே தருகிறேம், கல்லக்குடி என்ற பலகையை! ஆனல் ஆட்சி, அதிகார பூர்வமாகச் சொல்ல வேண்டும்!"

அதிகாரிகளின் கேள்விகளும், என் பதில்களும் அதோடு முடிந்து விட்டன. ''All right" என்று கூறிவிட்டு அதிகாரிகள் அப்பால் நகர்ந்தார்கள்.

புகை வண்டி 'கூ' என்று ஊளையிட்டது. எஞ்சினில் ஒலி கிளம்பியது. சக்கரங்கள் சுழன்றன. ஓரத்திலே நின்றிருந்த மக்கள் கண்களே மூடிக் கொண்டனர். படுத்திருந்த நாங்களும் எங்களேத் தயார் படுத்திக் கொண்டோம். தேசத் தொண்டர்கள் நடத்தும் தியாக யாத்திரைக்குத் தயாராகிவிட்டோம்.

கடைசியாக ஒரு முறை கதிரவனேப் பார்த்தேன். கல்லக்குடியைப் பார்த்துக்கொண்டேன். என்னேச் சீராட்டிய தமிழ் மாதாவை ஆசை நீரப் பார்த்துக்கொண்டேன். எதிரே நின்றவர்களேயும் பார்த்துக் கொண்டேன். எல்லாம் நொடியில் முடிந்தது. கண்ணே மூடிக் கொண்டேன். சாவின் இன்ப முத்தத்திற்குக் கன்னத்தைத் தயார் படுத்திக் கொண்டோம் எல்லோரும்-ஆம்-ஐவரும். கடகட வெனக் கிளம்பிய புகை வண்டி நகர்ந்ததை உணர்ந்தேன்.

'தமிழ் வாழ்க!' என இருதயம் உச்சரித்தது. ஒரு சப்தம் மீண்டும். கண்ணைத் திறந்தேன். உயிரோடிருந்தேன். அதை உணர்ந்தேன். சிறிது தூரத்திலிருந்து புகை வண்டி என் உடலை ஒட்டினாற்போல் நின்றுகொண்டிருந்தது.

மீண்டும் அதிகாரிகள் வந்தனர்.

''முடிவென்ன?'' என்றனர்.

''முடிவைத்தான் எதிர்பார்க்கிறோம்!'' என்றேன்.

''சரி, எல்லோரும் கைது செய்யப்படுகிறீர்கள்'' என்றார்கள். எழுந்தோம். உடனே மிச்சமுள்ள நண்பர்கள்—என் படை வரிசையினர் படுத்தனர். அவர்களும் கைது செய்யப்பட்டனர். இருபத்தைந்து பேரும் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டோம். பொது மக்கள் பொங்கும் எரிமலை போல் ஆயினர்.

'அணையுடைத்தெழும் நீத்தம்' போலக் காட்சி தந்தனர். மாணவர்-தொழிலாளர் - இளைஞர் - பெரியோர் - மங்கை நல்லார் அனைவரும் கனலும் கண்ணீரும் சிந்தினர். ''கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு'' என்று உரக்கக் கூவினேன். ''காப்போம் அதை!'' என்று மக்கள் சமுத்திரம் எதிரொலித்தது.

நகரும் கிளிக் கூண்டு நகர்ந்தது. பொது மக்களிடமிருந்து—அழகு மிகும் தமிழகத்து வீதிகளிலிருந்து - பிரிக்கப்பட்டோம். பின்னர் கல்லக்குடிப் பாதுகாப்பு நிலையத்தில் அடைக்கப்பட்டோம்.

மணி பத்து அடித்தது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவசரமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குள் வந்தார். எங்களைத் தவிர, பதினாலு பேரை எழுந்து நிற்கச் சொன்னார். எழுந்தனர். "நீங்கள் கைது செய்யப்பட வில்லை. வெளியே போங்கள்" என்றார். போய்விட்டனர்.

அடுத்த வண்டி வரும் நேரமாகிவிட்டது. இந்த முறை என்ன நடைபெறுமோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இரண்டாவது படை புறப்பட்டுக் களத்தை நோக்கித் தெருவிலே செல்லும் பேரொலி எங்களுக்குக் கேட்டது. இனி வெளியுலகச் செய்திகளை எப்போதாவது கேட்கத்தானே முடியும்? பார்க்கத்தான் முடியாதே?

இரண்டாம் படையின் தலைவர் இராம சுப்பையா. அவர் தலைமையிலே படை போகிறது. உழைப்பு —ஓர் உருவம் பெற்று அது ஓடியாடி வேலை செய்துகொண்டிருக்கும் அதிசயத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பார்க்கவில்லையானால் இராம சுப்பையாவைப் பாருங்கள். அந்த

உழைப்புப் பெற்ற உருவம்தான் அவர். தொண்டருக்குத் தொண்டர் என்று யார் யாரோ எவ்வெப்போதோ வர்ணிக்கக் கேட்டிருக்கிறேம், யார் யாரையோ பற்றி; அது உண்மையோ பொய்யோ தெரியாது. இதோ உண்மையின் ஒளி காரைக்குடி இராம சுப்பையாவை நம்முன், காட்டுகிறது. அவர் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தரு—தருநிழல்—நிழல் தந்த சுகம்.

திருச்சி சிறைச்சாலையிலே நாங்கள் நானூற்றுக்கு மேற்பட்டோர் அமைத்த ராஜ்யத்திற்கு அவர்தான் உணவு மந்திரி.

தாயுள்ளம் படைத்தவர். பேயுள்ளமும் இரங்கும்படி பேசுபவர். இன்று நேற்றல்ல, என்றைக்கோ, என்னை மட்டுமல்ல; இயக்கத்தின் முன்னணி வீரர்கள் அனைவரையும் கவர்ந்தவர். அவருடைய தலைமையிலே சென்ற படை, களத்திலே எங்களைப் போலவே அறப்போர் புரிந்து அதிகார வர்க்கத்தினரால் பிடிக்கப்பட்டது.

அவர்கள் எங்களுடன் வந்து கலந்தனர். அந்த இருபத்தைந்து பேரிலே முதலில் எங்களிடமிருந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் பிரிக்கப் பட்ட பதினைது தோழர்களும் இருந்தனர். போலீஸ் ஸ்டேஷனில் நாங்கள் ஐவரும் (கருணாநிதி - சத்தி - கஸ்தூரி-குமாரவேல்-குழந்தை வேல்) தனியாகப் பிரிக்கப்பட்டு, உட்கார வைக்கப்பட்டோம்; மற்ற 31 பேர்களும் இராம சுப்பையா உட்படத் தனியாகப் பிரிக்கப் பட்டனர்.

அவர்கள் வருமாறு: இராம சுப்பையா, ஜெயங்கொண்டம் வேணு கோபால், மலைக்கோட்டை ரத்தினம், அரியலூர் எத்திராஜ், தமிழ் முத்து, முனுசாமி, மருதமுத்து, பாண்டியன், கலைமணி, முருகேசன், டி. எ. கமலம், பரமானந்தம், முருகேசன், ராமு, தங்கவேல், சின்னையா, சத்தி, அனீப், இராவணன், நல்ல மணியன், காளிதாஸ், சக்ரபாணி, சோமசுந்தரம், மருதநாயகம், வளர்மதி, முகமதலி கிருஷ்ணமூர்த்தி, பாண்டு, ராமன், சின்னதுரை, நடராசன் ஆகியோர்.

போலீஸ் கூடத்திலே, அனைவரும் அமர்ந்திருந்தோம். அந்த ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் எங்களைப் பாதுகாத்தபடி, எங்கும் போகாமல், அங்கேயே அமர்ந்து விட்டார்.

முப்பத்து ஒன்று என அவர்களை எண்ணி முடிப்பார். பிறகு எங்களை எண்ணுவார். மீண்டும் சந்தேகம் வரும், மீண்டும் எண்ணுவார். ''ஒன்-டு-த்ரீ சொல்லுங்கள்'' என்பார். சொல்லுவோம். முப்பத்து ஆறு முடியும். ''யாராவது இரண்டு முறை சொல்லியிருந்தால் என்ன செய்வது?'' என்பார். ''சரி, எல்லோரும் கை தூக்குங்கள்'' என்று கைகளை எண்ணுவார். யாராவது இரண்டு கையையும் தூக்கியிருந்தால் என்ன ஆவது?'' என்பார். மீண்டும் எண்ண ஆரம்பிப்பார். அவரும் இப்படி எண்ணிக்கொண்டேயிருந்தார். நாங்களும் எண்ணிக் கொண்டேயிருந்தோம்; ஆட்களை அல்ல, ஆதிக்கக்காரர்கள் அரசோச்சும் நாட்களை!

மூன்றாவது படை, நடுப் பகலில் கவிஞர் கண்ணதாசன் தலைமையில் புறப்பட்டுச் செல்லும் ஒலி கேட்டது. போலீசாரின் பாதுகாப்பில் (காவலில்) தான் இருந்தோமென்றாலும் கூடப் பிற்பகல் உணவைத் தோழர் அம்பிலும் மற்ற தோழர்களும் கொண்டு வந்துதான் எங்களுக்கு அளித்தார்கள். உணவருந்திக் கொண்டிருந்தோம்.

சப்-இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டு எங்களைச் சரி பார்த்தபடி இருந்தார். பந்தியில் உட்கார்ந்திருந்தபோதும், எங்களை ஒரு முறை எண்ணிட அவர் தவறவில்லை. அரசாங்கக் கடமையை அவர் அவ்வளவு ஒழுங்காகவும் ஜாக்கிரதையாகவும் செய்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதே யாரோ ஒருவர் ஓடி வந்து சப்-இன்ஸ்பெக்டரிடம் ஏதோ மெல்லிய குரலில் சொன்னார்.

எங்களுக்குப் புரிந்துவிட்டது. அடுத்த விநாடியே, களத்திலே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுகிறது என்று! உணவு பரிமாறிக் கொண்டிருந்த அம்பில் முதலியோரை, உடனே போகும்படி அனுப்பினேன். பிறகு சாப்பிட முடியுமா எங்களால்? சர்க்காரின் துப்பாக்கி ரவைகளுக்குத் தோழர்களின் சதைகளை—இரத்தத்தை—எலும்பை—இருதயத்தை—மண்டை ஓடுகளைத் தீனியாகத் தருகிறது ''டால்மியாபுரம்'' என்று கேள்விப்பட்ட பிறகு சாப்பாடு என்ன சாப்பாடு?

அடுத்த மாதம் திருமணம். பெண்ணெல்லாம் பார்த்து வைத்து விட்டாள் பெற்றவள். வருங்காலத்தை எண்ணியபடி பிரயாணம் செய்து கொண்டிருக்கிறான் வாலிபன்.

''வாழ்க்கைக்குத் துணையாகப் போகும் வனிதாமணி எப்படியோ? எப்படிப்பட்டவளோ? நான் கனவு காணும் கட்டழகியாகவே வாய்த்து

விடுவாளோ?' அம்மா போய்ப் பெண பார்த்தால மகனுக்குப பிடிக்காத பெண்ணைகவா பார்ப்பார்கள்?

திருமணம்-ஆகா, எவ்வளவு இன்பமான சொல்! எத்தனை தித்திப்பு அந்த வார்த்தையிலே! வாழ்விலோர் திருநாள் வாழ்வுக்குத் துணையமையும் நாள்தான்! திருமண் தினத்தன்று என் சுந்தராங்கியின் சுண்டு விரலைத்தான் தொட முடியும்-பிறகு...நினைக்கவே இனிக்கிறதே!

முதல் இரவு வரும். வாழ்விலே என்றைக்கும் திரும்பப் பெற முடியாத இரவு. காராக்கிரகத்துக் கைதிக்குக் கடைசி இரவும் கலியாணமான ஜோடிக்கு முதல் இரவும், ஆகா! அனுபவிக்காமலேயே அதைப்பற்றி எவ்வளவு கற்பனையூறுகிறது எனக்கு. 'வருவார், வருவார்...என்று பஞ்சணை தேடும்; வந்து வரைவார், இன்ப இலக்கிய ஏடும்' என்ற புரட்சிக் கவிஞரின் பொன்னெழுத்துக்களை நினைப்பேனே? 'கலவி நடுப் பாதையிலே காதல் பேசி' என்று வர்ணித்த பாரதியைப் பாராட்டுவேனே?"

அடுத்த மாதம் நடக்கப் போகும் திருமணத்தைப் பற்றி இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டு ரயில் வண்டியினுள் மேல் பலகையில் படுத்திருக்கிறான் அந்த வாலிபன். அவன் பெயர் கேசவன்.

"அடுத்த நாள் திரும்பி வந்து விடுகிறேன்" என்று அம்மாவிடம் சொல்லிவிட்டுப் போனவன். அம்மா வீட்டிலே காத்திருக்கிறாள். வியாபாரத்துக்குப் போன மகனை இன்னும் காணோமே என்று!

ஆளொருவன் ஓடி வருகிறான் தாயிடம். கேசவன் இறந்து விட்டான் என்று சொல்லுகிறான். எந்தக் கேசவன்? அடுத்த மாதம் திருமணம் என்பதைப் பற்றி எண்ணிக் கோட்டைகள் பல கட்டிக் கொண்டு போனானே, அந்தக் கேசவன்! தாய் அழுதாள்; துடித்தாள்; "ஐயோ மகனே!" என அலறி விழுந்தாள். இதையெல்லாம் சொல்லவும் வேண்டுமா?

"என் மகனுக்குக் கலியாணம் பண்ணப் பெண்ணெல்லாம் பார்த்தேனய்யா. அதற்குள் இப்படிப் 'போக்காளி' போய் விட்டானய்யா!" என்று ஒரு தாய்-பெற்ற தாய்-அடிவயிறு எரிய எரிய-இருதயம் குமுறக் குமுறத்—தலை சுழலச்—சுழலக் கண்ணீர் வழிய வழிய-வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தாளென்றால் யாரால்தான் அதைச் சகிக்க முடியும்.

எதிர்காலத்தை எண்ணியபடி படுத்திருந்தான். அவன் மண்டையிலே ஒரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது, புகை வண்டியைப் பொத்துக் கொண்டு!

பஞ்சணையிலே வாலிபன் படுத்திருப்பான். தலையிலே விரலால் ஒரு 'தட்டு' விழும். திரும்பினால் காதலி நிற்பாள். இப்படி வாழ்வின் சுகத்தைப் பற்றி எண்ணிக் கொண்டு படுத்திருந்த இளைஞனின் தலையிலே மென்மையான ஒரு 'தட்டு' விழவில்லை. துப்பாக்கிக் குண்டு விழுந்தது! மண்டை பிளந்தது. தலை சிதறிப் போய்விட்டது. 'வரப்போகும் இல்லாள் மெல்லிய விரல்களால் வருடுவாள் இந்தத் தலையை' என்று நினைத்துக் கிடந்தானே; அந்தத் தலையைத் துப்பாக்கிக் குண்டு சுக்கல் சுக்கலாக்கிவிட்டது. அவனால் இனி நினைக்க முடியாது! மூளை சக்கை சக்கையாகிவிட்டது! வாயை மாத்திரம் 'ஆவ் ஆவ்' என்று பிளந்தானும் ஆயிரம் முறை! என்ன சொல்வதற்காகப் பிளந்தானோ?

எப்படி வேதனையிருந்ததோ! அம்மாவுக்குக் கடைசிச் செய்தி சொன்னானோ, அல்லது 'அடப் பாவிகளே! என்னையேன் என் தாயிட மிருந்து பிரித்தீர்கள்?' என்று கதறுவதற்காக வாயைப் பிளந்தானோ தெரியவில்லை. சாவைத் தழுவி விட்டான்; கோமள வல்லியைத் தழுவப் போவதை நினைத்து மகிழ்ந்தவன்-கொடியோர் வீசியெறிந்த சாவைத் தழுவி விட்டான். கல்லக்குடிக் களத்திலே, பிணக்கோலம் பூண்டான், மணக்கோலம் பூண வேண்டியவன்!

ஒரு பிணம் வீழ்ந்தது! ஆனால் பிண வரிசை முடியவில்லை! இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே 1938-ல் தாளமுத்துவுடன் நடராசன் என்ற ஒரு தோழனைப் பறிகொடுத்தோம் சிறைச் சாலையிலே! இதோ இன்னொரு நடராசன் லால்குடி வீரன்-கழகத்தீரன்- களப் பலியானான், கல்லக்குடி அறப் போர் முனையிலே! போராட்டத்திலே படை வரிசையிலே சேர்ந்து கொள்ள ஓடோடி வந்தானும். ஐநூறுக்கு மேற்பட்ட தொண்டர்கள் பதிவு செய்யப்பட்டுக் களத்திற்கு வர வேண்டிய நாளும் குறிக்கப்பட்டு விட்டதால், அந்தப் பட்டியல் முடிந்த பிறகுதான் நடராசனுக்கு இடம் கிடைக்குமென்று சொல்லப் பட்டதாம்.

மனம் நொந்து திரும்பியிருக்கிறான் ஊருக்கு. போகும் வழியிலே புகை வண்டியிலே பிணமானான்! கையிலே 'நம்நாடு' இதழ். படித்தானோ படிக்கவில்லையோ? இதழிலே 'நம்நாடு' என உச்சரித்த படியே இறந்து விட்டான்! ஐயோ! இல்லையில்லை, சாகடிக்கப் பட்டான்!

தையல் தொழிலாளி. தாறுமாறுகக் கிழிக்கப்பட்டு விட்டது அவன் கழுத்து! பாய்ந்து வந்த குண்டு அந்தப் பருவ இளைஞனின் கழுத்துச் சதையைக் கொத்திக் கொண்டு போய் விட்டதாம்!

"யார் பெற்ற பிள்ளையோ?" என்று ரயிலிலிருந்தவர்கள் பதறியிருப்பார்கள். அந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள் என்ன பாடு பட்டிருப்பார்கள்.

அம்மா! தமிழ்த் தாயே! இதோ நீ பெற்றெடுத்த நடராசன்! பொன்னையும் மணியையும் வாரி வழங்கும் அன்னையே! நீ சாவின் கோரக்கரங்களிலே நடராசன் போன்ற தியாகச் செல்வங்களையும் வாரி வழங்குகிறுயே; நியாயந்தானா? உன் மடியை ரத்தத்தால் நனைத்திருக்கும் இந்தப் பிணத்தைப் பாரம்மா! தொண்டர் நடராசனைப் பாரம்மா! கோடிக் கணக்கிலே பிள்ளைகளைப் பெற்றாய்! அவர்களுக்கு அரைகுறை வயதிலே கொள்ளி வைக்க ஏனம்மா விட்டாய்? ஒடியாடி உழைத்த உத்தமன்- தரணி செழிக்க பரணி பாடிய வாலிபன்- சாய்ந்து கிடக்கிறான் பார்! தாயே, அழு! அழு! நன்றாக அழு! நீ அழுதால் தான், கண்ணீர் விட்டால்தான் இந்தக் கயவர் ஆட்சியை ஒழித்துக்கட்டப் படை தயாராகும். அம்மா! உன் மடியிலே கிடக்கும் நடராசனைப் பார்! அவன் ஒளி தங்கிய விழி எங்கே? உணர்ச்சி தங்கிய மொழி எங்கே? அசையாத உன் மைந்தனின் கரம் ஆடாதம்மா! அவன் ஆணிப்பொன் மேனி புது மழலை பேசிய உன் புத்திரனுக்குப் புதை குழி தயாராகி விட்டது.

யாரால்? யாரால்? யாரால்?

தாயே; யாரால்?

பிணவரிசை முடியவில்லை.

குடி! குடி! ரத்தம் குடி! வயிறு நிரம்பி வழிகிற வரையில் குடி! இரைப்பை புடைக்க எலும்புகளை மென்று தின்று விழுங்கு நரம்புகளை! வயதானால் என்ன- வாலிபமென்றால் என்ன- சரியான மாமிசத் தீனி- மனித மாமிசம் சாதாரணமானதா?- அதுவும் போர்க்களத்திலே திடீரெனச் சாயும் பிணம், ருசி தெரியாது!

புசி! புசி! அது ஜீரணமாக ரத்தம் குடி! குடி!

இப்படி அடக்குமுறை வேங்கைக் குரலெடுத்து, வெறி பிடித்து ஆடி, அகலமான வாயைத் திறந்து, குடி குடி குருதியைக் குடி என்ற வண்ணம் கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் குதியாட்டம் போட்டது. இரண்டு குடி இந்நாட்டுத் தமிழர் குடி! இரண்டு குடியிலும் இரும்பு நெஞ்சு அடக்கு முறைக்குச் சரியான உதிரக் குடி!

டால்மியாபுரம் போரின் எதிரொலியாக, டெல்லி மூலவர் எம்மை இழித்து சுடுச்சொல் வீசியதைக் கண்டிப்பதற்காக, இதோ ரயில் நிறுத்தம் என்றது தமிழகம்-ஜூலை 15-ல்!

தூத்துக்குடியிலும் ரயில் நிறுத்தப்பட்டது. வயதேறிய இருவர்-வாலிபர் இருவர் அடக்குமுறை வேங்கையின் சொர சொரப்பான நாக்கிற்குக் கூர்மையான கோரப்பல்லுக்கு இரையாக்கப்பட்டார்கள். உச்சி மாகாளி என்ற இளைஞனின் உடலைக் கிழித்துக் குடலை மாலை போட்டுக் கொண்டது உதிரப்பசி எடுத்த அடக்குமுறை வேங்கை!

கணபதி என்ற இளைஞன்-அவனை நரநரவென்று மென்று தின்று நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு "நாலு பிணம் போதாது இன்னும் தேவை" என்று சீறிப் பாய்ந்தது சீனுவாச பிள்ளை என்ற கிழவர் மீது. அவரை வளைத்து வாயில் போட்டுக் கொண்டு மந்திர நாடாரின் உயிரையும் துளைத்தது. ஆறு பிணம்- ஆறறிவில்லை பசி, அடக்கு முறைகளுக்கு; தமிழ்த் தாயே! பாடைகள் ஆறு உன் பாலகர்களுக்கு. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு! ஒரே நாளில் ஆறு பிணம்-ஆறு மக்களைக் காட்டுக்கு அனுப்புகிறாய்.

அழு: தாயே அழு! ஒரு காலத்தில் சிரித்துச் செழித்த என் செந் தமிழ்த் தாயே! அழு! கண்ணீர் சிந்து! ரத்தக் கண்ணீர் சிந்து! ஆனால், இந்தக் கண்ணீர் வீண் போகாதம்மா!

தூக்கிக் கொடு ஆறு மைந்தர்களை; கண்ணீரால் குளிப்பாட்டிக் கொடு உன் கண்மணிகளை; அவர்களைச் செந்நீரால் குளிப்பாட்டிய வர்கள் செல்லட்டும் சிரிப்போடு!

ஆனால் தாயே! அந்தச் சிரிப்பு நீடிக்காது.

நீடிக்க விட மாட்டோம். மிஞ்சியுள்ள உன் கொஞ்சு மொழி மைந்தர்.

உயிரோடு ஆறு பேரை விழுங்கிய உதிரவாய்க் "காளி"க்கு வயிற்றிலே கொஞ்சம் இடம் காலி. அதற்காகக் கல்லக்குடியிலே சந்தனம் ஜோசப்பின் இடது கை முழுவதையும் முறித்துப் போட்டுக் கொண்டது. அப்போதும் கொஞ்சம் இடம் காலி. தூத்துக்குடி ஆசிரியர் குருசாமியின் இடது காலை, வாழைப் பழம் போல் எடுத்து வயிற்றுக்குள் போட்டுக் கொண்டது.

ரத்த விருந்து முடியவில்லை. பதினாறு வயது இளைஞன் ராமச்சந்திரன் பச்சைத் தொடைக் கறி- வாலிபன் சண்முகத்தின் கணுக்கால் சதை- ரங்கநாதன் குடல், கறி கோம்பன், கிருஷ்ணன், செல்லையா, சேர்மன், வேணு, லிங்கம், சுடலை, முனுசாமி, ரத்தினம், ஈசுவரன், சதாசிவம், அண்ணாமலை, முனுசாமி, நாராயணன், செபாஸ்டியன் ஆகியோரிடம் ஆளுக்குக் கொஞ்சம் எலும்பு, ரத்தம், சதை இவ்வளவும் சாப்பிட்டான பிறகு தான் ஆறு பேரை அகிம்சாப்

"பிடாரி" விட்டாள். குதித்தாள். சித்தம் கலங்கிச் சிரித்தாள். ஆறு உயிரோடு விட்டாளா? அநேகர் குருதியோடு நின்றுளா? அகப்பட்ட போதே இரையைத் தேடிக் கொள்வோமென்று ஐயாயிரம் தோழரை அகிம்சாக் குகைக்குள் அள்ளிப் போட்டாள்.

ஒரே நாள்- ஜூலை -15.

ஆறு உயிர்.

அநேகர் சித்திரவதை.

ஐயாயிரம் பேர் சிறைகளில்.....!

தான் படைக்கும் அந்தி வானத்தையும் வெற்றி கொள்ளும் சிவப்பு நிறத்தைப் பூமியிலே கண்ட சூரியன் வெட்கித் தலைகுனிந்து மறைந்தான். போலீசாரின் பாதுகாப்பு வளையத்துக்குள்ளே— கல்லக்குடியில் நாங்கள் கிடந்தோம்— இந்தச் சோகச் செய்திகளைக் காதில் வாங்கியபடி!

இரவு 12 மணிக்கு மேலிருக்கும். அரை மசால் வடைத்துண்டும் கால் கோப்பைத் தேநீரும் கொண்டு வந்து தந்தனர் மணியும், முத்துவும், மற்ற நண்பர்களும்! அதுதான் எங்களுக்குச் சரியாக காலத்தில் கிடைத்த அருமையான இரவு உணவு.

ஒருவர் காலை ஒருவருக்குத் தலையணையாக அமைத்துக் கொண்டு முப்பத்தாறு பேரும் தூங்கினோம். கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி சகிதம் ரிசர்வ் போலீஸ் காவல் நின்று கொண்டிருந்தது. எங்களுடனேயே இருந்த சப் இன்ஸ்பெக்டர் அந்த நடு நிசியில் திடீரென எங்களை எண்ணிட ஆரம்பித்தார். என்ன ஆச்சரியம்! முப்பத்தாறு பேரும் சரியாக இருந்தோம். வழக்கம்போல் இரண்டு மூன்று முறை எண்ணிய பிறகு அவருடைய கணக்கு முடிவு பெற்றது.

புயலுக்குப் பின்னுள்ள அமைதியோடு மறுநாள் பொழுது புலர்ந்தது!

கவிஞர் கண்ணதாசன் முதலிய நண்பர்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி கிடைத்தது. திருச்சி கலெக்டர் பிரஸ் தோழர் ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். அவர் என்ன ஆனார் என்று பார்க்கச் சென்ற தோழர் ஐ. எம். ஷரீபும் காவலில் வைக்கப்பட்டார்.

தூத்துக்குடி செயல்மணிகளும்— எதையும் தாங்கும் இதயங் கொண்ட சிங்க ஏறுகளும், கண்ணியம்- கட்டுப்பாடு- கடமையுணர்ச்சி களில் கடுகளவும் வழுவாத கழகத்தின் கண்மணிகளுமான தோழர்கள்

எம். எஸ். சிவசாமி, கே. வி. கே. சாமி முதலிய எண்பதுக்கு மேற்பட்ட தோழர்களும் சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும் என்ற திட்டத்தோடு கைது செய்யப்பட்டார்கள்.

சென்னையிலே மறியல் நடத்துவதற்காகச் சென்ற ஐம்பதுக்கு மேற்பட்ட தோழர்களும், அந்த அணிவகுப்புக்குத் தலைமையேற்று நடத்திய திருமதி சத்தியவாணிமுத்து அம்மையாரும், காஞ்சி ராசகோபாலும் ஜூலை 14ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டார்கள். 15ஆம் தேதி மறியல் போராட்டத்திற்குத் தலைமை வகித்த வேதாசலம் முதலிய ஐம்பதுக்கு மேற்பட்ட தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள் சென்னையிலே!

16ஆம் நாள்- ஆயிரம் இடர் அடுக்கிவரினும் அசையாத மன உறுதி படைத்தவரும்- வடாற்காடு மாவட்டத்தில் கட்சிக்கோர் படை போன்றவருமான போளூர் சுப்பிரமணியம் தலைமையில் ஐம்பதுக்கு மேற்பட்ட நண்பர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிறை நிரம்புகிறது- நிரம்பி வழிகிறது என்ற செய்திகள் செவி நிரம்ப- சிந்தையிலே துடிப்பு நிரம்ப—நாங்கள் காவலுக்கிடையே அமர்ந்திருந்தோம்.

16ஆம் தேதி - காலை 10 மணிக்கு டி. எஸ்.பி. வந்தார். எங்களை யெல்லாம் உடனே அரியலூருக்கு அனுப்பும்படி சொல்லிவிட்டுப் போனார்.

பிற்பகல் 12 மணிக்குப் போலீசார் செலவில் சாப்பாடு போடப்பட்டது. நாங்கள் கடைசியாக இலை போட்டுச் சாப்பிட்ட சாப்பாடு அது தான்! சாப்பாடு முடிந்தது—போலீஸ் வண்டி வந்து நின்றது. எல்லோரும் அதில் ஏறி அமர்ந்தோம். வண்டி அரியலூர் நோக்கிப் புறப்பட்டது.

ஆம். எங்களுடைய சிறை யாத்திரை துவங்கிவிட்டது.

45

அரியலூரில் விசாரணை

எங்கள் வண்டிக்குப் பின்னால் ஒரு மோட்டார் கார். அது சிறிது தூரம் எங்களைத் தொடர்ந்து வந்தது. உள்ளிருந்து இரண்டு மூன்று பேர் வணக்கம் தெரிவித்தனர். அந்தக் காரில் சகோதரர் அரங்கண்ணலும் இருந்தார். அவர் தன் அன்புக் கரத்தை நீட்டிச் 'சென்று வருக!' என்று அறிவித்தார். அவர் பற்றிய நினைவு என்னை எங்கேயோ அழைத்துச் சென்றது.

—நீண்ட சிந்தனை. போலீஸ் வண்டி புழுதியை இறைத்தபடி போகிறது. பின்னால் வந்த மோட்டார் புழுதியில் மறைந்து வேறு பக்கம் திரும்பி விட்டது. ஆனால் 'அரங்கு' என் மனத்தை விட்டு மறையவில்லை.

1940-ஆம் ஆண்டு-திருவாரூர் பள்ளியிலே படித்துக்கொண்டிருக்கிறேன். அப்போது படிப்பிலே கவனம் சென்றதை விட அதிகமாக இயக்கத்திலேதான் சென்றது. என்னுடைய துணையாக இருந்தும் இணையாக இருந்தும் இயக்கத் தொண்டு புரிந்தவர் வ. கோ. சண்முகம் என்ற 'மாவெண்கோ.'

பள்ளிப் பருவத்தில் எனக்குப் பரம விரோதியாக இருந்தவர் ஒருவர்! பெயர் ரங்கசாமி. என்னைக் கண்டாரல் அவருக்கு வேப்பங் காய் போலத்தானே! அழுத்தமான கதர்ச் சட்டையும்-சட்டையிலே காங்கிரஸ் சின்னமும் அணிந்து கொண்டிருந்த அந்த இளம் நண்பர் —பள்ளித் தாழ்வாரத்திலே நடந்து செல்வதைப் பார்த்தாலே போதும் —அவரது குழுவினரோடு சேர்ந்து கொண்டு பரிகாச வார்த்தைகளைக் கொட்டிக் கும்மாளம் போடுவார். சில நேரங்களில் சிறு கல்லும் வீசுவார்.

ஏன் தான் இந்த ரங்கசாமிக்கு என் மீது இவ்வளவு காய்ச்சலோ தெரியவில்லையென்று எனக்கு நானே ஆச்சரியப்படுவேன்-வருத்தப் படுவேன். ஆனால் ஆத்திரப்படமாட்டேன். அதன் காரணமாகத்தான் ரங்கசாமி அவ்வளவு விரைவில் அரங்கண்ணலாக மாறிட முடிந்தது.

நாங்கள் தமிழ் மாணவர் மன்ற நிதிக்காக முதன் முதல் நடித்த 'பழனியப்பன்' என்ற நாடகத்தில் தோழர் ரங்கசாமி-இல்லை-சகோதரர் அரங்கண்ணல்-டாக்டர் வேடம் தாங்கி நடித்தார். ரங்கசாமி

அரங்கண்ணலாரை. அரங்கண்ணல் நாடக டாக்டராஞர்-இப்போது குடிசை மாற்றுவாரியத்தின் சார்பில் குடிசைப் பகுதி மக்களின் நலிவு போக்கும் டாக்டர்களில் ஒருவராகி விட்டார்.

அரங்குவைப் பற்றிய என் ஆழ்ந்த சிந்தனையோட்டத்தை ''அரியலூர் வந்து விட்டோம்'' என்ற குரல் தடுத்து நிறுத்தியது. அரியலூர் சப் ஜெயில் வாசலில் ஒரே கூட்டம். நாங்கள் வரப் போகிறோம் என்பதைத் தெரிந்து மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். வண்டியிலிருந்து இறங்கினோம். குழுமியிருந்தோரை வணங்கினோம் வாழ்த்தினோம். உள்ளே அழைத்துச் செல்லப்பட்டோம்

அரியலூர் சப் ஜெயிலில் இருபதுக்குட்பட்ட கைதிகளையே வைக்க முடியுமாம். அங்கு எங்களுக்கு முன்பே வேறு வகைக் கைதிகள் பலர் இருந்தனர். நாங்களும் போன பிறகு மொத்தம் அறுபதுக்கு மேற்பட்டவராஞோம். எங்கள் முப்பத்தாறு பேருக்குப் நாலிலந்து கூண்டுகளை ஒதுக்கிக் கொடுத்தார்கள் ஒரு கூண்டில் இரண்டு பேர் தான் சௌகரியமாக இருக்க முடியும். எழு பேர் எட்டுப் பேரை ஒவ்வொரு கூண்டிலும் போட்டு அடைத்தார்கள்

நான் - சத்தி - கஸ்தூரி ராம சுப்பையா வேணுகோபால் - மலைக்கோட்டை ரத்தினம் அரியலூர் எத்திராசு மற்று மொரு நண்பர் ஆகிய எட்டுப் பேர் அடைக்கப்பட்டோம். காலடியால் சுமார் பத்து அடி நீளமும் எட்டு அடி அகலமும் உள்ள அந்தக் கொட்டடியில் எட்டுப் பேர்!

அதிலும் பாதிக்கு மேல் பயன்படுத்த முடியாத இடம். பெண்கள் அடைபட்டிருந்த கூண்டு. நாங்கள் சென்றதும் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்த இடத்தை எங்களுக்கு அளித்தார்கள் சிறுநீர் கழிக்கப்பட்டு - எங்கள் மூக்குகளை எல்லாம் கம்பிக்கு வெளியே தான் நீட்டிச் சுவாசிக்க வேண்டும் என்ற நிலைமையிலே-அங்கு தூர் நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணிக்கு எங்களைத் திறந்து விட்டார்கள், மலஜலம் கழிப்பவர்கள் போகலாம் என்று. 'கக்கூஸ்' என்று சொல்லப்படும் ஓர் இடத்தைக் காண்பித்தார்கள். 'லாங் ஜம்ப்' தெரிந்தவர்கள் தான் உள்ளே சென்று அமர முடியும்.

காரணம் கால் வைப்பதற்காகப் போட்டிருந்த அந்தக் கற்கள் ஒன்றுக் கொன்று இடையே அவ்வளவு தூரத்திலிருந்தன.

பிறகு சாப்பிடுவதற்குக் கூப்பிட்டார்கள். குப்பையும் கூளமும் சேர்ந்த ஒரு தரையிலே-ஆமாம் புழுதி மண்ணிலே-உட்காருங்கள் என்றார்கள். உட்கார்ந்தோம். உணவு வந்தது. இல்லை-இல்லை ஆளுக்கொரு சட்டி வந்தது. மண் சட்டி! பிறகுதான் உணவு வந்தது.

அறுசுவை உணவு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அறுசுவை உணவு என்றால் அறுவகை ருசி நிறைந்த சாப்பாடு என்று தான் அர்த்தம். சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அரியலூரிலே எங்களுக்குத் தந்த அறுசுவை உணவுக்கு ஒரு புது அர்த்தமுண்டு.

அறுசுவை = சுவை அறுந்த; உணவு = சாப்பாடு எனப்படும் கொடுமை!

சுவை அறுந்து போன கொடுமையை மண் சட்டிகளில் கொட்டினார்கள். மஞ்சள் வண்ணச் சோறு! பஞ்ச வண்ணக் குழம்பு! உப்பிலும்- புளியிலும்-காரத்திலும் சேராமல் சுயேச்சையாக வந்து விழுந்த பரங்கிக்காய்த் துண்டை எடுத்து வாயில் வைத்தோம்! எப்படியோ எதிர் நீச்சல் போட்டு அது வயிற்றுக்குள் போய்விட்டது.

எல்லாத் தோழர்களும் சோற்றைத் தொடாமலே எண்ணையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உம், சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு நான் சோற்றைக் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டேன். "அண்ட சராசரங்களும் சுழலு

தண்ணே; அடிவயிற்றிலிருந்து குமட்டுதண்ணே" என்று தாங்கள் பாடவில்லே. அகத்தின் அழகை முகத்தில் காட்டாமல் இருக்க முடியவில்லே.

சோற்று உருண்டைகளேக் கீழே கொட்டிவிட்டுச் சட்டிகளேக் கழுவி வைத்து விட்டு-முப்பத்தாறு பேரும் அணி வகுத்தோம்; நாலு நாலு பேராக!

பிறகு பழையபடி கூண்டுகளில் அடைக்கப்பட்டோம்.

எங்கள் 'கல்கத்தா இருட்டறை'யில் எட்டுப் பேர்! இரவு வந்தது. இரண்டு நாள் சரியான உணவு இல்லாத எங்களுக்குத் தூக்கமாவது வந்ததா? அதுவுமில்லே! வந்தால் தான் படுப்பதற்கு இடமேது! பூச்சிகள் வந்தன. கொசுக்கள் வந்தன. வராதவைகளில் முக்கியமான ஒன்று காற்று-எட்டுப் பேர்-லியர்வையோ கொட்டுகிறது-சட்டையைக் கழற்றினுல் கொசுவோ துளேக்கிறது! மூலேயில் உட்கார்ந்து தூங்கினர் மூவர்! வேணு, ரத்தினம், எத்திராஜ்!

ஆபாசமாயிருந்த பகுதியில் காலே மட்டும் நீட்டிக்கொண்டு உடலேப் புழுப்போல் சுருட்டிக் கொண்டார் சத்தி. அவர் கால் புறத்திலே தலேயை வைத்து வளேந்து கிடந்தார் கஸ்தூரி. கலங்கிய கண்களுடனே இராம சுப்பையா என்னேப் பார்த்து, "என் மடியில் சாய்ந்து கொள்ளுங்கள்" என்ருர் முயன்றேன், முடியவில்லே. பிறகு ஒரு வழி கண்டு பிடித்தேன். காற்றும் லேசாக வரும். உடம்பையும் உருட்டாமல் இருக்கலாம் என்ற எண்ணத்துடன் சிறைக் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றுகொண்டே சிறிது நேரம் தூங்கினேன்.

இரவு இரண்டு மணி இருக்கலாம். சரியாகத்தான் நேரம் தெரிய முடியாதே! டிப்டி சூப்பரின்டெண்டெண்ட் வந்தார். "ஏன் நிற்கிறீர்கள்! தூங்க வில்லேயா?" என்ருர். "பரவாயில்லே" என்றேன். போய் விட்டார்.

எப்படியோ வாழ்க்கையிலே அதுவரையில் தொட்டறியாத கஷ்டத்தை அந்த இரவு வேளேயில் அரியலூர் சிறையில் அனுபவித்தோம். படாத பாடுபட்டு இரவை நகர்த்தினேம்.

காலேயிலே அரிசிக் கஞ்சி கொடுத்தார்கள். குடலேக் காய விடாமல் பார்த்துக் கொண்டோம்; மறுபடியும் அடைத்து விட்டார்கள். அன்றைய தினம் ஜூலே 17-ஆம் தேதி! சென்னே மறியலிலே அருப்புக் கோட்டை தந்த வீரர் கவிஞர் எம். எஸ். ராமசாமி அவர்கள் தலேமையில் மூப்பதுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டார்கள். கல்லக்குடியிலே தாக்குண்டு வைத்தியசாலேயிலிருந்த கவிஞர் கண்ணதாசனும் கைது செய்யப்பட்டார்.

வெளியிலே என்ன நடக்கிறதோ தெரியவில்லையே என்ற ஆவலுடன் அடைந்து கிடந்தோம் கூண்டுக்குள்.

பிற்பகல் உணவுக்காகத் திறந்து விட்டார்கள். எங்களைத் திறப்பதற்காக வார்டர் கொஞ்ச தூரத்தில் வருவது எங்களுக்கு முன்பே தெரிந்துவிடும். அவர் கையிலுள்ள சாவிக் கொத்திலிருந்து எழும்பும் ஒலியைக் கேட்டதும் இராம சுப்பையா சொல்லுவார், திறக்கப் போகிறார்கள் என்று! பிற்பகல் அங்குள்ள மற்றக் கைதிகளை நாங்கள் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது.

வயதான நாலைந்து தாய்மார்கள் சிறையிலிருந்தார்கள். சாராய வழக்கிலே கைது செய்யப்பட்டவர்கள். சுமார் இருபத்தைந்து வயதுள்ள வாலிபனைக் கண்டோம். கள்ளக் காதலின் காரணமாகக் காதலியின் கணவனைக் கொன்று விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவன். கட்டுமஸ்தான தேகம் படைத்த இளைஞன். அவனுடைய காதலியும் அங்கே வேறு கூண்டில் அடைபட்டிருந்தாள். அவள் மீது அவன் கொண்ட பாசமும் அவன் மீது அவள் கொண்ட பாசமும்-கணவனைக் கொல்வது என்ற மோசத்திலே கொண்டு போய் விட்டதாக வழக்கு!

அந்த இளைஞன் சொன்னான், ''நானும் அவளும் ஆசைக் காதலர்கள்'' என்று! அவனுக்கோ வயது இருபத்தைந்து இருக்கும். அவன் ஆசை ஜோடிக்கோ - அறுபதுக்குள் தான் இருக்கும். புனிதமான காதல்! பொருத்தமான காதல்! 'காதலுக்குக் கண்ணில்லை' என்கிற போது வயது மாத்திரம் எதற்காக?' என்ற கேள்வியின் சரியான பதிலாக நின்றார்கள் அந்த இளம் காதலர்கள் - இல்லை கிழக் காதலர்கள். அதுவுமில்லை — பழுப்புத் தளிர்க் காதலர்கள்.

சாராயத் தொழிலைக் குடிசைத் தொழிலாகக் கொண்ட இன்னும் சில ஆண் மக்களும் அங்கே கைதிகளாக இருந்தனர். அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே பிற்பகலில் உணவு வந்துவிட்டது.

அருமையான சோளக்களி. சோளத்தின் மாவிலே செய்யப்பட்ட சுவையான உணவு(?); அதன் தலையிலே கொஞ்சம் குழம்பு என்று சொல்லப்பட்ட ஏற்பாட்டையும் ஊற்றித் தொலைத்தார்கள். எண்ணெய் அபிஷேகம் செய்யப்பட்ட லிங்கப் பெருமான் போல சோளக்களி நின்று கொண்டிருந்தது சட்டியிலே!

''சோறு எதுவும் கிடையாதோ?'' என்றோம். ''மாலையிலே தான் மஞ்சள் சோறு'' என்றார்கள். ''மோர் உண்டு இப்போது'' என்றார்கள்

''கொடுங்கள், கொடுங்கள்'' என்று குவளையை நீட்டினோம். மோர் சாப்பிட்டதோடு பிற்பகல் உணவு முடிந்தது சோளக் களியை யார் தொட முடியும்? அது தான் தொட்டாலும் அசையாத நிலையில் இருந்ததே!

மீண்டும் பூட்டினார்கள். மாலை மூன்று மணிக்குக் கொஞ்சம் மணிலாக் கொட்டையைக் கொடுத்து எல்லோரும் சாப்பிடுங்கள் என்று அன்பு பொழிந்தார்கள். பிறகு மாஜிஸ்டிரேட் வந்தார். ''இன்றைய தினமே உங்கள் விசாரணை இருக்கிறது'' என்று கூறிவிட்டுப் போனார்.

சிறிது நேரத்தில் எங்களை அழைத்தார்கள். சென்றோம்.

நீதி மன்றம்; அங்கே நாங்கள் ஐவர் முதலில் விசாரிக்கப் பட்டோம். பின்னர் இராம சுப்பையாவும் முப்பது தோழர்களும் விசாரிக்கப்பட்டனர்.

டால்மியாபுரம் பெயரை மாற்ற வேண்டுமென்று வரி கொடுக்கும் பிரஜைகளின் சார்பாகக் கிளர்ச்சி நடத்தியது குற்றமாம்!

கல்லக்குடி எனும் தமிழ்ப் பெயரை விரும்பியது தகாத செயலாம்!

ஆகவேதான் நாங்கள் ஈடுபட்ட அறப் போருக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டது.

''நீங்கள் குற்றம் செய்திருக்கிறீர்கள் அல்லவா?''

''குற்றமல்ல-குறிக்கோளை நிறைவேற்றக் கையாண்ட அமைதியான முறைதானிது!''

''உங்கள் செயல் குற்றமாகத்தான் கருதப்படுகிறது.''

''சட்டப்படி இருக்கலாம்-நியாயப்படி அல்ல.''

நீதி மன்றம் தீர்ப்பு வழங்கத் தயாராகிவிட்டது. வெளியிலே நூற்றுக்கணக்கான மக்கள் தீர்ப்பை எதிர்பார்த்து நின்றனர், மழைக்கிடையிலேயுங்கூட!

இராம சுப்பையாவும் முப்பது தோழர்களும் இரண்டு மாதம் கடுங் காவல் அனுபவிக்க வேண்டும். முப்பத்து ஐந்து ரூபாய் அபராதம். கட்டத் தவறினால் ஒரு மாதம் சிறை! மொத்தம் மூன்று மாதத் தண்டனை!

சட்டம் கொட்டிவிட்டது அவர்களை!

எங்கள் பக்கம் திரும்பியது சட்டம்! ஆறு மாதத் தண்டனை! கடுங் காவல் தண்டனை!

ஒரே குற்றம் - இரண்டு விதத் தண்டனை!

போராட்டத் தலைவன் என்ற முறையில் எனக்கும் எனதுடன் சேர்ந்த தால்வருக்கும் ஆறு மாதம்.

அடுத்த படை வரிசையென்ற முறையில் மற்றவர்களுக்கு மூன்று மாதம்.

அதுவும் தவறு-அவர்களில் ஆறு பேர் முதல் படை வரிசையிலே கைது செய்யப்பட்டவர்கள்.

எப்படியோ; சட்டம் ஆறு மாதம், மூன்று மாதம் என்று பரிசுகளை அளித்து மகிழ்ந்தது!

17-ஆம் நாள் மாலை 6-30 மணி சுமாருக்குத் தண்டனை பெற்றோம். தமிழர் மானத்துக்காகப் போராடியதற்குப் பரிசு பெற்றோம்.

''என்ன சார், அவர்களுக்கு மூணு மாதம், நமக்கு ஆறு மாதம்?' என்று சிரித்துக்கொண்டே கேட்டார் முல்லை சத்தி.

''ஆமாம், நமக்கு ஆறு மாதம் தான்'' என்றேன்.

''ஏன் அப்படி?'' என்றார் வேணுகோபால்.

''அதற்கு மேல் தண்டனை தர அரியலூர் கோர்ட்டுக்கு அதிகார மில்லை'' என்றேன்.

தீர்ப்பைக் கேள்வியுற்ற அரியலூர் மக்கள் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு முன்பு திரளாக நின்றிருந்தனர். கூட்டம் கலைந்த பிறகு எங்களை அனுப்ப வேண்டும் என்ற திட்டத்துடனே என்னவோ கோர்ட் வாசலிலேயே நல்ல இருட்டில் எங்களை உட்கார வைத்துவிட்டனர்.

ஆகாகா! ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேனே? மாலையில் எங்களுக்கு மஞ்சள் சோறு போட்டுத்தான் பிறகு தீர்ப்புக் கூறினார்கள்.

ஆறு மாதமென்ன - ஆறு வருடமே போடட்டும்; அரியலூர் நரகத்திலிருந்து மன்னிக்கவும், நகரத்திலிருந்து வேறு சிறைச் சாலைக்கு அனுப்பப் போகிறார்களே என்ற மகிழ்ச்சி எங்கள் எல்லோருக்கும். மூன்று மாதத் தண்டனை பெற்றவர்களுக்கெல்லாம் முகம் சுருங்கி விட்டது. வாடிவிட்டது. வதங்கி விட்டது! காரணம், எங்களுக்கு ஆறு மாதம் கிடைத்து விட்டதாம். அந்தப் பொருமையால் தான் - வேறென்ன?

இரவு எட்டு மணி சுமாருக்கு எங்களில் இருபத்தைந்து பேரை ஏற்றிக் கொண்டு போலீஸ் வண்டி புறப்பட்டது. மிச்சம் பதினெரு தோழர்களுக்கு வண்டியில்லாததால், ''பிடியுங்கள் சாபம்! இன்னும் ஐந்தாறு நாட்கள் அரியலூர் ஜெயிலில் இருங்கள்'' என்று அங்கேயே அவர்களை மட்டும் வைத்துக் கொண்டனர்.

நாங்கள் இருந்த வண்டி இருட்டையும், இடையிடையே தோன்றிய மின்னலையும், மழையையும் கிழித்துக் கொண்டு திருச்சி நோக்கிப் புறப்பட்டது.

வெளியிலே எவ்வளவு மழை பொழிகிறது என்பதை எங்களால் கணக்கிட முடிந்தது. எப்படியென்கிறீர்களா? பெய்த மழை முழுதும் எங்கள் தலையிலேதான் பெய்தது.



அரியலூருக்கும் திருச்சிக்கும் இடையே உள்ள சாலை இருக்கிறதே, அடடா, தார் ரோடுதான். (20 ஆண்டுகளுக்கு முந்திய நிலை).

(தார் என்ஜின் வண்டிக்காரர்கள் மாடுகளைக் குத்த உபயோகிப் பார்களே அந்தத் தார் எனப் பொருள் கொள்க. வாழைத் தார் எனக் கொள்ளினும் கொள்க.)

மேலே வானத்திலே இடி! கார் போகும் வேகத்திலே இங்கே ஒருவர் மேல் ஒருவர் இடி!

ஒரு தோழர் பாடினார், அவரையறியாமலே 'பிர்க்காக்கள்' உருண்டன. அவ்வளவு அசைவற்ற நிம்மதியான கார் சவாரி!

எவ்வளவு தொல்லைகள் இருந்தால் என்ன, அந்த அரியலூர் காராக்கிரகத்தையும் கக்கூசையும் விட்டு வந்தோமே என்ற ஆறுதல் எல்லாத் தோழர்களுக்கும் ஏற்பட்டது.

வானம் உறுமிக் கொண்டேயிருந்தது. சூடேறியிருந்த எங்கள் உடலிலே மழைத் துளி பன்னீர் போலக் கொட்டிக் கொண் டேயிருந்தது.

மழை-தமிழகத்தின் வளப்பத்தைச் சொல்லிற்று!

இடி-தமிழரின் மனக் குமுறலுக்கு அடையாளமாயிருந்தது!

இரவு ஒரு மணிக்குத் திருச்சி வந்து சேர்ந்தோம். மழை நின்ற பாடில்லை. திருச்சியில் தெருவெல்லாம் மழை நீர் ஓடிக் கொண்டி ருந்தது. மலைக்கோட்டையின் உச்சியிலே பச்சை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நகர் முழுவதும் பூரண அமைதி நிலவிக் கொண்டிருந்தது.

நடுநிசியிலே, நகர் அடங்கிய நேரத்திலே-நாங்கள் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்ட அந்தக் காட்சியைச் சித்திரிக்க இயலாதுதான். நனைந்து போன ஆடை; நடுங்கும் உடல்; ஆனால் தெளிந்த உள்ளம்- இவைகளோடு எங்கள் பயணத்தின் கடைசிப் பகுதியை முடித்தோம்.

ஈரத்தின் கனத்தையும் தூக்கிக் கொண்டு அதோ எங்கள் இலட்சியக் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. அவை காட்டிய வழியிலே நாங்களும் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மலைக் கோட்டையின் பச்சை விளக்கு மறைந்து விட்டது.

46

மத்திய சிறை நுழைவு

சேர வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தோம். உயர்ந்த பலமான மதில்களையும் கோட்டை போன்ற முகப்பையும் உடைய திருச்சி மத்திய சிறையின் வாயிலிலே போலீஸ் வண்டி நின்றது. நாங்கள் இறங்கினோம்.

அகாலமாகி விட்டதால், மறுநாள் காலையில் தான் எங்களை விழுங்க முடியும் என்று கூறி விட்டது சிறை!

"சரி, ஏதோ ஓர் இடத்தில் படுங்கள்" என்று சிறைக்கு வெளியே உள்ள ஒரு மண்டபத்தைக் காட்டினர். அதில் யோகாசனங்களும்-கராத்தே வித்தைகளும் கற்றவர்கள் தான் படுக்கலாம். மழை நீர் கணுக்கால் அளவு தேங்கி இருந்தது. நீர் மேல் படுக்கும் பயிற்சி எங்களுக்குக் கிடையாது. ஆகையால் தயங்கி நின்றோம்; கால் வலி எடுக்கும் வரையில் நின்றோம்.

பிறகு கருணை பிறந்தது. "சரி இங்கே படுங்கள்" என்று 'இண்டர்வியூ' பார்க்குமிடத்திற்கு வெளியே உள்ள தாழ்வாரத்தைக் காட்டினார்கள். அங்கு போய் உட்கார்ந்தோம். மழைச் சாரல் நிற்கவில்லை.

குளிரும் கோடி கோடித் தேளென மாறிக் கொட்டியது. கண்ணைத் திறக்க முடியாத மின்னல்; 'புளூரசி' நோயினால் பீடிக்கப்பட்டவன் நான். அதற்குக் குளிர் ஆகாது. தொலைந்து போன நோய் மீண்டும் தொடர்ந்து விடுமோ இந்தக் குளிரால் என்ப் பயந்தேன். அவ்வளவு குளிர். நண்பர் முல்லை சத்தி என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். அந்தக் கதகதப்பில் கொஞ்சம் கண்ணயர்ந்தேன். கைகளைத் தேய்த்துக் கொண்டு சூடு உண்டாக்கியபடியும் முழங்கால்களுக்கிடையே கைகளைப் போர்த்திக் கொண்டு சுருண்ட நிலையிலும், எல்லாத் தோழர்களும் அந்த பயங்கர இரவை கஷ்டப் பட்டுத் துரத்திக் கொண்டிருந்தனர்.

"வா! வா!" என்று வாழ்த்துப் பாடி அழைத்த கதிரவன் வந்தான் ஜூலை 18ம்-ஆம் நாள் பிறந்தது. சிறைச் சாலையின் முன்னாலுள்ள சிறிய கதவு திறந்தது.

இரவெல்லாம் குளிரால் வாடிய எங்களுக்கு ஒரு சிறு கோப்பையில் அரைக் கோப்பை தேநீர் யாராவது தரமாட்டார்களா என்ற ஆசை

பிறந்தது. ஆவல் துடித்தது. 15ஆம் நாள் காலையிலே அதுவும் அவசரத்திலே, நல்ல சாப்பாடு சாப்பிட்டவர்கள். மூன்று நாட்களாக வயிறு காலி! பசியோ கொல்லுகிறது. நாவோ காய்ந்து விட்டது.

"ம்! உள்ளே செல்க!" என்ற உத்தரவும் பிறந்துவிட்டது. ஒவ்வொருவராக உள்ளே போய்க் கொண்டிருக்கிறார்கள். நாலைந்து பேர் வெளியே மிச்சம். அந்த நேரத்தில் ஒரு புதையல் கண்டெடுத்தோம்.

"சார்...சார்... கொஞ்சம் நில்லுங்கள்" என்றபடி ஒரு தோழர் எங்களை நோக்கி ஓடி வந்தார். பார்த்தோம். ஒரு கோப்பை தேநீர்! ஆமாம், பாலைவனத்திலே பசுந்தரை! ஆளுக்குக் கொஞ்சம் சுடச்சுடச் சாப்பிட்டோம். நாக்கு வெந்து போனது கூட பிறகுதான் தெரிந்தது. அந்தத் தேநீர் தந்த தோழருக்கு எப்படித்தான் வாழ்த்துக் கூறுவது என்று புரியவில்லை.

சிறைவாயில் எங்களை அழைத்தது. வெளியுலகை எங்களால் இனி ஆறு மாதத்திற்குப் பிறகு தான் பார்க்க முடியும் என்பதால் ஆசை தீர ஒருமுறை பார்த்தோம். பிறகு அடியெடுத்து வைத்தோம் உள்ளே. எங்களை உள்ளே தள்ளியவுடன் அந்தச் சிறிய உதடுகள் மூடிக் கொண்டன.

எங்கள் ஒவ்வொருவருக்கும் அடையாள எண்கள் தரப்பட்டன. ஆமாம், எங்கள் வேட்டிகளில் எழுதப்பட்டன.

வீட்டிலே என்னுடைய எண் மூன்று!

மூன்றாவது பிள்ளை நான்.

"தவமிருந்து பெற்ற பிள்ளை இப்படிச் சூனமானவாகி விட்டதே?" என்று சுற்றத்தார் சொல்வார்கள் முன்பெல்லாம்.

பள்ளிக்கூடத்திலே என்னுடைய எண்—மறந்து விட்டேன்.

எஸ் எஸ்.எல்.சி. தேர்விலே என்னுடைய எண்—சொன்னால் அந்த எண்ணுக்கு அவமானம், ஆகையால் சொல்ல வேண்டாம்!

சிறைச்சாலையிலே எனக்கு மாட்டி விடப்பட்ட சிங்காரப் பதக்கத்தில் எண்: 5779.

இன்னும் எத்தனை எண்களைச் சந்திக்க வண்டுமோ; ஆனாலும் அந்த முதல் முறையாகப் பெற்ற எண்ணை மறந்துவிடமுடியாது.

C.P. என்று சொல்லப்படும் (Close Prison) என்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டோம். முன்னூற்றுக்கு மேற்பட்ட நமது தோழர்கள், "வருக! வருக" என அழைத்தார்கள். 1865-ம் ஆண்டு

கட்டப்பட்ட அந்தச் சிறைச்சாலையில் அப்போது மூட்டி விடப்பட்ட அடுப்பு இன்னும் அணையவில்லையாம். தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கிறது.

ஒரு சிறு கிராமத்துக்குள் நுழைந்தது போலவேயிருந்தது எங்களுக்கு. சலவை செய்யப்படும் இடம் உண்டு. தலையலங்காரம் முக அலங்காரம் செய்வோர் உண்டு. வைத்திய சாலை உண்டு. பள்ளிக் கூடம் உண்டு. வாசகசாலை உண்டு. பள்ளிக்கூடம்—மருத்துவமனை இரண்டைத்தவிர, பிற எல்லாத் தொழில்களையும் அங்குள்ள கைதிகளே நடத்துகிறார்கள், கைதிகளுக்காகக் கைதிகளால் நடத்தப்படும் ஒரு சின்னஞ்சிறு ராஜ்யத்திற்குள் பிரவேசித்திருப்பதாகவே நாங்கள் உணர்ந்தோம்.

உள்ளேயிருந்து அண்ணாந்து பார்த்தோம், நீலக் கண்ணாடி கவிழ்த்தது போல வானம். சுற்றிலும் பெரிய மதிற் சுவர்கள், ஜாக்கிரதை என்பதைச் சுட்டிக் காட்ட!

உள்ளே வேப்ப மரங்கள், சிறை வாழ்வின் சுவையை உணர்த்திட!

மதிற்சுவருக்கு வெளியே பொன்மலை — பொறுப்புகள் உனக்கு அது போலத்தூண் காத்திருக்கின்றன வெளியுலகத்தில் என்பதை எடுத்துச் சொல்ல!

மொழி உணர்வுப் போரில் சிவப்பாக்கப்பட்ட இலட்சியச்சாலையில் எங்கள் கால்களும் பதிந்திடுகின்றன என்ற அடங்காத பூரிப்போடு உள்ளிருந்து அழைத்த தோழர்களுடன் ஐக்கியமானேம்.

உள்ளே வந்ததும் நாங்கள் கண்ட முதல் காட்சி என்ன தெரியுமா? நமது தோழர்கள் ''கஞ்சிப் போர்'' நடத்திக் கொண்டிருந்தார்கள்! ஜெயிலர் நிற்கிறார். அவரைச் சுற்றித் தோழர்கள் நிற்கிறார்கள்.

மன்னை நாராயணசாமி கழகத்தின் பலமான அரணை இருப்பவர்—தஞ்சை மாவட்டப் பகுதியில் உடல் வளத்திற்கேற்ற உள்ள வளமும் பெற்றவர். அமைதியெனும பண்பிலிருந்து அணுவும் நழுவாதவர். அவருடைய தலைமையிலேதான் ஜெயிலரைச் சுற்றித் தோழர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். ஜெயிலர், அவர்களுக்குச் சமாதானம் கூறுகிறார்.

'அர்சாங்க உத்தரவை எம்மால் மாற்ற முடியாது. காலையில் கஞ்சி தரும்படியாகத்தான் எங்களுக்குச் சட்டமிருக்கிறது. நானென்ன செய்வது?''

இது ஜெயிலர்!

''அதற்காக இவ்வளவு மோசமான கஞ்சியா?''

இது தோழர்கள்!

ஜெயிலர் சிரிப்பைத்தான் பதிலாகத் தர முடிந்தது.

நான் குறுக்கிட்டேன். மன்னே நாராயணசாமியும் என்னுடன் ஒத்துழைத்தார்.

''அரசாங்கத்திடம் நேர்மையை எதிர்பார்க்க முடியவில்லே என்றுதானே அறப்போர் துவங்கியிருக்கிறோம். ஆலகால மரத்தையே ஆணி வேரோடு பிடுங்கும் ஆரம்பப் போராட்டத்தில் குதித்திருக்கிற நாம், இந்தச் சிறுசிறு கிளைகளைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. கஞ்சியை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றேன்.

தோழர்கள் உடனே பறந்தனர், கையினில் தட்டுடன்! அந்தக் கண்ணியம் நிறைந்த கட்டுப்பாடு கண்டு ஜெயிலர் அதிர்ச்சி அடைந்து விட்டார்.

புதிதாகப் போன எங்களுக்கு 'எங்கே தட்டு?' எனறு கேட்டோம்!

'உங்களுக்குக் கஞ்சி தட்டு' என்றார்கள்.

புரியவில்லை முதலில்!

நாங்கள் வருவது முன்பே தெரிவிக்கப்படாததால் காலை ஆகாரம் எங்களுக்குத் தயார் செய்யப்படவில்லையாம்! 'அரியலூர்' எங்களுக்குக் கடைசியாகப் பொழிந்த கருணை அதுபோலும்!

15-ஆம் நாள் காலையிலே சாப்பிட்டவர்கள். 18-ஆம் நாள் பிற்பகல்தான் ஒரு பட்டை வெள்ளைச் சோற்றைக் கண்டோம்.

''அச்சடித்த சோறே!

அவுன்ஸ் குழம்பே!

வேப்ப மரத்து நிழலே!

வெல்லம் போட்ட கடலையே!

வெண்ணெய் எடுக்கா மோரே!''

இது அந்த ராஜ்யத்தின் நாட்டுப் பாடல்! அங்கே நாங்களும் பிரஜைகளானோம். முன்னூறு பேராயிருந்தவர்கள் இரண்டொரு நாட்களில் ஐநூற்றைத் தொடுமளவுக்கு— நானூற்றைத் தாண்டிய தொகையினரானோம்.

47

புதிய ராஜ்யம

நாங்கள் அங்கே ஒரு புதிய ராஜ்யத்தை அமைத்து விட்டோம். அந்த ராஜ்யம் இரண்டு மாத காலம் மிக அற்புதமாக நடை பெற்றது. அதற்குப் பிறகு நூருகி-ஐம்பதாகி-ஐந்தாக மாறி விட்டோம்.

இரண்டு மாதம் நடைபெற்ற எமது ராஜ்ய நிர்வாகத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. முதலில் ராஜ்ய அமைப்பைக் கூறுகிறேன்.

சி. பி. பிளாக் எனப்படும் - நாங்கள் அடைக்கப்பட்டிருந்த இடம் நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் நூறு பேருக்கு மேல் அடைக்கப்பட்டிருந்தோம்.

ஒவ்வொரு பிளாக்குக்கும், அதாவது சராசரி நூறு பேருக்கு ஒரு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நானூறு பேரும் வசதியாகக் குளிப்பதற்கும், குடிப்பதற்குமான தண்ணீரைப் பெற 'ஜல ஸ்தாபன மந்திரி' ஒருவர் நியமிக்கப்பட்டார்.

உணவு மந்திரி ஒருவர். கடிதப் போக்குவரத்து, உள்நாட்டு விவகாரங்களைக் கவனித்து ஜெயில் அதிகாரிகளிடம் தொடர்பு வைத்துக் கொள்ள ஓர் உள்நாட்டிலாகா மந்திரியும் உண்டு. மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுதல், தனி உணவுகளை நோயுள்ளவர்களுக்குப் பெற்றுத் தருதல் போன்றவைகளுக்குச் சுகாதார மந்திரி ஒருவர்; மக்கள் மன்றம் அமைத்தல்-கூட்டுதல் - கலைத்தல் - தலைமை நிலையத்திலிருந்து இல்லை-ஆட்சி பீடத்திலிருந்து -வெளியாகும் அறிக்கைகளை உடனுக்குடன் அறிவித்தல்-முதல்வர் எனப்படும் தலைவருக்கு ராஜ்ய நிலைமையை எடுத்துரைத்தல் - ஆகிய காரியங்களுக்காக ஒரு பிரதமச் செயலாளர் உண்டு.

ஒவ்வொரு பிளாக் தலைவருக்கும் ஒரு துணைத் தலைவர் உண்டு. பிளாக் தலைவர்கள் ஒவ்வொருவரும் நூறு பேரைக் கட்டிக்காத்தல், அவர்களுக்கு ஆவன செய்தல், இது போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டும். மக்கள் மன்றம்-பேச்சு மன்றம் என்றும் அழைக்கப்படும். அது நாள் தோறும் கூடும். மன்றத்தின் ஒவ்வொரு அலுவலரும் தேர்தலில் வெற்றி பெற்றவர்களே தான்! மன்றத்தின் அனுமதி யோடு பொறுப்பேற்றுப் பணியாற்றுகிறவர்கள்.

அவர்கள் வருமாறு :
தலைவர் : மு. கருணாநிதி
துணைத் தலைவர் : மன்னை நாராயணசாமி
முதல் பிளாக் தலைவர் : பேராவூரணி அடைக்கலம்
துணை : வடிவேலு
இரண்டாம் பிளாக் தலைவர் : தஞ்சை பட்டு
துணை : பக்கிரிசாமி, கிருஷ்ணன்
மூன்றும் பிளாக் தலைவர் . மாயவரம் கிட்டப்பா
துணை : வள்ளுவதாசன்
நாலாம் பிளாக் தலைவர் : ராம சுப்பையா
துணை கோபால்சாமி
உணவு மந்திரி : ராம சுப்பையா
உள்நாட்டு இலாகா : முல்லை சத்தி
சுகாதார மந்திரி : புகாரி சாகிப்
ஜல ஸ்தாபன மந்திரி : அய்வநல்லூர் வேலு
பிரதமச் செயலாளர் : வேணுகோபால்

மேற்கண்டவாறு இலாகாக்கள் பிரிக்கப்பட்டு எல்லோரும் பதவி யேற்றனர்.

உணவு பாமாறுதல-தேவைகளைக் கேட்டல்-சிகிச்சைக்கு அனுப்புதல் முதலிய எல்லாக் காரியங்களையும் சிறைச்சாலை வார்டர்கள் கவனித்து வந்தார்கள். எங்கள் ராஜ்யத்தில் மட்டும் மேற்கண்ட எல்லாப் பொறுப்புக்களையும் எமது மந்திரி சபையும், மக்கள் மன்றமும் ஏற்றுக் கொண்டன.

எமது ராஜ்யத்தின் ஒரு நாள் நடவடிக்கைகளை முதலில் விளக்கு கிறேன். சிறப்பான நிகழ்ச்சிகளைத் தனித்தனித் தலைப்புகளின் மூலம் பிறகு விவரிக்கிறேன். காலை ஆறு மணிக்கு எங்கள் கூண்டுகளின் கதவுகள் திறக்கப்படும். காலைக் கடன்களை முடித்து விட்டுக் கஞ்சி உணவுக்குப் பிரஜைகள் தயாராகி விடுவார்கள்.

நான்கு பிளாக் தலைவர்களும் வேப்ப மரத்தடியில் கூடி, இன்றைய தினம் யார் யார் கஞ்சி பரிமாறுவது, எந்த பிளாக்கிலிருந்து ஆரம் பிப்பது என்பது போன்ற அலுவல்களை ஆலோசிப்பார்கள். அதற்குள் கஞ்சி அண்டாக்கள் வந்துவிடும்.

அந்தப் பெரிய அண்டாக்களை அங்குள்ள கிரிமினல் கைதித் தோழர்கள் தான் தூக்கி வருவார்கள். ஒவ்வொரு பிளாக் பிரஜை களும் 'க்யூ' வரிசையில் நின்று கஞ்சியை வாங்கிக் கொண்டு போவார்கள்

கஞ்சி ஒரு நாளைக்குக் கெட்டுப் போயிருந்தால் உடனே தலைவரிடம் நாலு பிளாக் தலைவர்களும் அறிக்கை சமர்ப்பிப்பர். தலைவர் அதை வார்டரின் கவனத்திற்குக் கொண்டு போவார். ஜெயில் அதிகாரம் உடனடியாகக் குறையைக் கவனிக்க முயற்சி எடுத்துக் கொள்ளும்

கஞ்சி முடிந்த பிறகு, குளிக்கும் இடத்தில் பிரஜைகள் கூடுவர். ஐம்பது பேர் ஒரே காலத்தில் குளிக்க வசதியுடைய தண்ணீர்த் தொட்டி. அதில் நானூறுக்கு மேற்பட்டோரைச் சௌகரியமாகவும் எல்லோரும் குளிக்கக் கூடிய அளவுக்குத் தண்ணீரைச் சேதப்படுத்தி விடாமலும் குளிக்க வைத்திடும் பொறுப்பை 'ஜல ஸ்தாபன மந்திரி' தானே நேரில் நின்று கவனிப்பார்.

ஒவ்வொருவரும் எத்தனை குவளைகள் ஊற்றிக் கொண்டார்கள் என்ற கணக்குப் பார்த்து, அளவுக்கு மேலாகிவிடாத நிலையில் அங்கு மிங்கும் ஆடியோடி, கட்டுப்படுத்தித் தண்ணீர் தட்டுப்பாடில்லாமல் பார்த்துக் கொள்வார்.

"நீர் மேல் நடக்கலாம்" என்று தாயுமானவர் பாட்டுப் படித்திருக்கிறோம். அப்படி நடந்து காண்பித்தவர் தோழர் வேலு. ஆமாம்! ஜல ஸ்தாபன மந்திரி! தண்ணீர்த் தொட்டியின் மேலேயே காலை முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலே நடை பழகுவார். அவர் போட்டிருந்த பனியனுக்குட்பட்ட பாகமெல்லாம் சிவப்பாகவும் மற்ற இடமெல்லாம் கறுப்பாகவும் மாறி ஆளே இரு வண்ண மனிதனாகத் தோன்றினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன், அவர் பட்ட கஷ்டத்தை!

கஞ்சிக்கும் குளியலுக்குமிடையிலே, பிளாக் வாசல்களில் ஒரு ஒலி கிளம்பும். "ஆஸ்பத்திரி! ஆஸ்பத்திரி!" என்ற ஒலி. அது போன்ற சத்தம் நமது ஊர்த் தெருக்களிலே கிளம்பினால் 'சரிதான், சான்ஸ் ஏதுவும் கிடைக்காமல் யாரோ ஒரு டாக்டர், ஆஸ்பத்திரியை விலை கூறுகிறாராக்கும்!' என்று நினைப்போம்.

சிறை ராஜ்யத்திலே வரும் இந்த ஒலி வேறு. சுகாதார மந்திரி புகாரி சாகிப் தன்னுடைய தேன் கூடு வடிவமுள்ள தாடியைத் தடவியபடி, "ஆஸ்பத்திரிக்கு யாராவது வருகிறீர்களா?" என்று கூவுவார். அவர் ஓர் ஐம்பது பேரையாவது தினந்தோறும் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று திரும்புவார்.

வந்த பத்திரிகையை எடுத்துக்கொண்டு பிரதமச் செயலாளர் வேணு ஓடுவார். நான்கு பிளாக்குகளுக்கும் பத்திரிகைகளை அனுப்பி அவற்றை பத்திரமாக எடுத்து வரும் வேலையை அவர் விரிவாகக் கவனிப்பார்.

பிற்பகல் ஒரு மணிக்குள்ளாகவே அநேகமாக உணவு வந்து விடும். வெள்ளைத் துணியால் மூடப்பட்டு நீண்ட கட்டில் எனப்படும் ஒன்றை நாலு பேர் தூக்கி வருவார்கள். முன்னே சட்டி வரும். அதிலே குழம்பு வரும். இப்படி நாலைந்து பெரும் சட்டிகளும், நாலைந்து கட்டில்களும், ஓர் அண்டாவில் மோருமாக எங்கள் ராஜ்யத்து உயிர் வாழும் பொருள்-உணவு என்னும் தண்டனை-வந்து சேரும். சிறையிலே தரப்படும் பெரிய தண்டனை உணவு தான்!

சிறையிலே பெருங்குற்றம் எனக் கருதப்படுவது அதைச் சாப்பிட மறுப்பதுதான்!

சாப்பாடு முடிந்ததும் சிறிது நேரம் களைப்பாறும் படலம். உடனே உள்நாட்டு இலாகா மந்திரி சத்தியின் வேலை துவங்கும். மாதம் இரண்டு முறை தபால் கார்டு கொடுப்பார்கள். அவைகளைக் கணக்குப் பார்த்து, எழுதியவைகளை வாங்கி அதிகாரிகளிடம் அனுப்பி, எழுதாதவைகளை எழுதச் சொல்லி, கார்டு வராதவர்களுக்குக் கார்டு வாங்கிக் கொடுத்து அந்த அலுவல்களைக் கவனிப்பார்.

புத்தகம் வேண்டுமென்பவர்களுக்குப் புத்தகமளித்துப் படித்த வைகளை வாங்கிக் கணக்குச் சரிபார்த்து, வாசகசாலையில் ஒப்படைக்க முயற்சி எடுத்துக் கொள்வார்.

இதற்குள் 'இண்டர்வியூ' வரும். சிறையில் உள்ள தோழர் களைச் சந்திக்க நண்பர்களோ, உறவினர்களோ வருவர்.

அந்தத் தகவலை எடுத்துக் கொண்டு வேணுகோபால் ஓடுவார். நாலாறு பேரில் அவர்களைச் சிரமப்பட்டுக் கண்டு பிடித்து 'இண்டர்வியூ' வுக்கு அனுப்பிவைப்பார். புகாரி சாகிபின் 'ஆஸ்பத்திரி'க் கூவல் மீண்டும் கிளம்பும். மாலை நான்கு மணிக்கு மக்கள் மன்றத்தை கூட்டும் பொறுப்பை வேணுகோபால் சரிவரச் செய்து முடிப்பார். அத்தனந்த பிளாக் தலைவர்களும், தங்கள் தோழர்களுடன் மக்கள் மன்றத்திற்கு வந்து சேருவார்கள்.



மக்கள் மன்றம் நாள் தோறும் தலைவரின் தலைமையிலே தொடங்கும். சிறைச்சாலையில் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் கழகத்தின் கடமை கட்டுப்பாடு பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். தினம் ஒரு பொருளின் மீது பல தோழர்கள் உரையாற்றுவார்கள். இறுதியில் தலைவரின் முடிவுரை யுடன் மன்றம் கலையும். சிறு குற்றம் செய்தவர்களும் மன்றத்தில் விசாரிக்கப்பட்டுப் பெரும்பான்மையோர் எண்ணத்திற்கு இணங்க மன்றத்தின் முன்பு மன்னிப்புக் கேட்டுக்கொள்வார்கள்.

மாலை 5-30 மணிக்கெல்லாம் இரவு உணவு வந்துவிடும். அப்போது சோளக்களி வராது. அரிசிச் சோறு அளவில் கொஞ்சம் பெரியதாய் விடும். மோர் வராது. கடலை உருண்டை வரும். குழம்பு உண்டு.

சாப்பாடு முடியும்.

மாலை ஆறு மணிக்கெல்லாம் மூன்று மூன்று பேராகக் கூண்டுகளில் அடைக்கப்படுவார்கள். நாங்கள் 'பி' வகுப்புக்காரர்கள். தனித் தனியே ஒவ்வொருவராகத்தான் அடைக்கப்படுவோம்.

சில கூண்டுகளிலேயுள்ள ஆண் குயில்கள் பாட ஆரம்பிக்கும். அந்த மகுடித் தொனி கேட்டுப் பாம்புகள் வந்துவிடும். பாம்புகளுக்கு வேறு 'டூட்டி' (Duty) இருந்தால் தேள்களோயாவது அனுப்பி வைக்கும்.

அந்தத் தேள்கள் நமது தோழர்கள் பலரை முத்தமிட்டிருக்கின்றன. இரவு பத்து மணிக்கு அநேகமாக எமது ராஜ்யம் அடங்கிவிடும்.

ஆறு மணிக்குத் தோழர்கள் அடைக்கப்பட்டதும், கைதிகளின் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று பார்க்க'ஹெட் வார்டர்' எல்லா பிளாக்கிற்கும் சென்று சுற்றிப் பார்த்து வருவார். கடைசியாக

எங்கள் நாலாம் பிளாக்கிற்கு வருவார். 'உம்.கணக்கு வந்து விட்டது' எனிபோம் நாங்கள்.

சிறைச்சாலை முழுதும் பல இடங்களிலே சுவர்களில் ஒரு வகையான சாவி பொருத்தப்பட்டு, அத்த இடங்களுக்கு ஒரு மணிக்கு ஒரு தரம் வார்டர் சென்று, தன்னிடமுள்ள கெடிகாரத்திற்கு அந்தச் சாவியைப் போட்டுவிட்டு வரவேண்டும். வார்டர் எங்கும் நிற்கமுடியாது. சுற்றியபடியே காவல் காக்க வேண்டும். நின்றால், அவரிடமுள்ள கடிகாரம் கரட்டிக் கொடுத்துவிடும். அவர் இரவு நேரத்தில் கையில் ஒரு விளக்குடன் போய்க்கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியும். அவரைப் பார்த்து நாங்கள் மணி தெரிந்து கொள்ளுவோம். அதற்காகத் தானே என்னவோ, சிறையில் அவர் போனால், ''கடிகாரம் போகுது'' என்கிறார்கள்! நாங்களும், ''கணக்கு வருது! கடிகாரம் போகுது!'' என்றுதான் சொல்லுவோம்.

இப்படி எங்கள் ராஜ்யம் நடந்து கொண்டிருக்கும்போதுதான் சென்னையில் ராஜாஜி வீட்டு முன் மறியல் அறப்போரில் தலைமை வகித்த தோழர்களான முனிசாமி, வி. டி. அண்ணாமலை, எஸ். அப்பாவு, சி. வி. எம். அண்ணாமலை, எ. கே. சாமி, அப்போதைய வடார்க்காடு மாவட்டச் செயலாளர் எ. எல். சி. கிருஷ்ணசாமி, சம்பந்தம், இன்மொழியன், நடராசன், அசுரு ஆகியோரும் முன்னூருக்கும் மேற்பட்ட தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

பொதுச் செயலாளர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், சம்பத், மதி, என். வி. என். ஆகிய ஐவரும் நிபந்தனையின்றிச் சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கும் தொடரப் பட்டது.

டால்மியாபுரப் போராட்டம், புதுக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம், ரயில் நிறுத்தப் போராட்டம் முதலியவற்றைத் தூண்டிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெறத் துவங்கியது. அந்த வழக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைத் தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நடைபெற்றாலும் கூடப் பெரிதும் நமக்குப் பயன்பட்ட வழக்காகவே இருந்தது. நம்மைப் பற்றிய முழு விவரங்களைப் பொது மக்களும் மாற்றுக் கட்சிகளும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலேயே வழக்கு அமைந்தது.

இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதும், கட்டுப்பாடு, கண்ணியம், அமைதி முதலியவை தி. மு. க. வின் இலட்சியம் என்பதும், ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகளையுடைய பெரும் இயக்கம் என்பதும், தமிழகத்தில் காங்கிரசுக்கு எதிராக நிற்கும் மாபெரும் தேசியக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதும் அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரி

களின் சாட்சியங்களின் வாயிலாகவே நாட்டுக்குத் தெரிவிக்கப் பட்டன.

ஜவர் மீது தொடரப்பட்ட வழக்கு இத்தகைய கணிசமான புள்ளி விவரத்தை மக்கள் மன்றத்திற்குத் தந்திட உதவியது.

கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு ஜவரும் முன்று மாத வெறுங்காவல் தண்டனை பெற்றார்கள்.

சிறை சென்றவர் செங்கோலோச்சுவதும், செங்கோலேந்திகள் சிறை செல்வதும் சகஜமாகிவிட்ட நாட்களிலே நாம் வாழ்கிறோம்.

சிறையிலேயிருக்கும் போதுதான் அந்தச் செய்திகளும் நமக்குக் கிடைத்தன.

'ஈரான் பூமியிலே ஷா ஓட்டம், முசாதிக் வெற்றி' என்ற செய்தி முதல் நாள் வந்தது. 'மூன்றும் நாள் முசாதிக்-கைது. ஷா ஆட்டம்' என்று செய்தி கிடைத்தது.

கர்ச்சித்துக் கொண்டிருந்த காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக்அப்துல்லா முதல் நாள் பிரதமர், மறுநாள் கைதி. சிக்கலைத் தவிர்க்க முடியாத சிலோன் பிரதமர் சேனநாயகா, சிகிச்சையும் ஓய்வும் தேவையென்று அரசு கட்டிலை விட்டு இறங்கி விட்டார்.

இப்படிச் சுற்றியுள்ள நாடுகளிலே சூறாவளி அடித்தது கண்டோம் நாம். ஆனால் இங்கே சூதர்கள் சிலர் அந்தச் சூட்ச மத்தை உணராமல், அந்தச் சாம்ராஜ்ய அதிகாரம் சதமென எண்ணியிருந்தார்கள்.

நல்ல மரங்களிலேயே புல்லுருவி பாயும்போது, இந்தக் கள்ளிக்காடுகளா இருந்து வாழப் போகின்றன? அந்த நம்பிக்கை நிறைந்த ஆறுதலோடுதான் அண்ணாவும் ஐயாயிரவரும் சிறைப் பட்டிருந்த கொடுமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டோம், சிறையிலிருந்தபடியே.

இனி எமது ராஜ்யத்தின் நிலைமைகளைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம்.

48

சிறைச்சாலை விதிகள்

சிறைச்சாலை ஒரு கிராமம் போலவே எல்லா வசதிகளும் உடையது என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

சலவைச்சாலை உண்டு; தொழிற்சாலை உண்டு; பள்ளிக்கூடம் உண்டு; தோட்டங்கள் உண்டு என்றெல்லாம் படித்தீர்கள் அல்லவா? அவைகளைப் பற்றி முதலில் விளக்குகிறேன்.

சலவைச்சாலை இருக்கிறது என்பது உண்மைதான்.

சலவைச்சாலை என்றதும் எல்லாக் கைதிகளும் தங்கள் உடைகளைப் போட்டு அடிக்கடி சலவை செய்து கொள்ளலாம் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் தப்பு!

சினிமாப் படத்திலே சலவைசாலையொன்றைக் காட்டி, அதிலே ஏராளமான துணிகளையும் வெளுக்கிறார்கள் என்பதைக் காட்டும் போது, எப்படி நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமோ அதுபோலத் தான் சிறையிலுள்ள சலவைச் சாலையையும் பார்த்து ரசிக்கலாம். அங்கே எல்லாக் கைதிகளின் ஆடைகளையும் சலவை செய்ய மாட்டார்கள். கான்விக்ட் வார்டர்களின் உடைகள், மருத்துவ மனைத் துணிகள், 'பி' வகுப்புக் கைதிகளின் உடைகள் ஆகியவற்றைத்தான் சலவை செய்து கொடுப்பார்கள். இந்தக் குறையைக் களைய ஏற்பாடு நடைபெறுகிறது இப்போது!

தொழிற்சாலையிருக்கிறது. திருச்சி சிறையைப் பொறுத்த வரையிலே நெசவுத் தொழில் முக்கியமானது. ஒவ்வொரு கைதியும் நாளொன்றுக்கு இத்தனை கஜம் தர வேண்டுமென்று உத்தரவு போடப்படுகிறது. திருச்சியில் தயாராகும் மருத்துவமனைக்குத் தேவையான 'பேண்டேஜ்' துணிகள் பெரும்பாலும் திருச்சி சிறைக்கு மட்டுமின்றி, மாகாணமெங்குமுள்ள சிறைகளுக்கும் அரசாங்க மருத்துவ மனைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இது போலவே மாகாணமெங்கும் உள்ள சிறைகளில் முக்கியமான பொருள்கள் கைதிகளின் உழைப்பைக் கொண்டே தயாரிக்கப்படு கின்றன.

சேலம் சிறைச்சாலையில் தயாரிக்கப்படும் இரும்புச் சாமான் களும், பெரிய பாத்திரங்களும், அலுமினியம் தட்டு – குவளை களும் மாநிலத்தில் உள்ள எல்லாச் சிறைகளுக்கும் உபயோக

மாகின்றன. அதுபோக மீதியை அரசுத் துறை சம்பந்தப்பட்ட மற்ற நிறுவனங்களும் பயன்படுத்துகின்றன.

கோவையில் உள்ள சிறையில் பெட்ஷீட்டுகளும், வார்டர்கள், காவல் துறையினர் முதலியவர்களுக்கு உடுப்புத் துணிகளும் தயார் செய்யப்பட்டு, எல்லாச் சிறைச்சாலைகளுக்கும், மீதி அரசாங்க அலுவலர்களுக்கும் உபயோகமாகின்றன. வேலூரில் தயாரிக்கப்படும் செருப்புகள், பூட்ஸ்களும் அரசாங்க அலுவலர்களுக்கும் எல்லாச் சிறைச்சாலைகட்கும் உபயோகமாகின்றன. ராஜமகேந்திரபுரம் சிறைச் சாலையில் நல்ல கம்பளிகள் தயாரிக்கப்படுகின்றன.

இப்படி முக்கியத் தொழில்களும், சில்லறைத் தொழில்களும் சிறைக் கைதிகளாலேயே செய்யப்படுகின்றன. சர்க்கார் அலுவலகங் களில் இருக்கின்ற மரச் சாமான்கள் பல, கைதிகள் சிறைகளில் தயாரித்தவை.

சென்னைச் சிறையில் அச்சகம் அமைக்கப்பட்டு—எல்லாச் சிறைகளுக்கும் தேவையான அச்சு வசதிகள் கவனிக்கப்படுகின்றன.

தண்டனை பெற்று வந்துள்ள கைதிகள் உழைக்காமல் இருக்கவே முடியாது. தோட்டி வேலைகளையும் அவர்களில் சிலரே செய்ய வேண்டும். 'கூட்டும் கேங்' என்ற குழு, கைதிகள் நிறைந்ததாயிருக்கும். அவர்கள் சிறைச்சாலை முழுவதையும் சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

குப்பையில்லாவிட்டாலும், கூட்ட வேண்டும்!

அதற்குத்தான் 'ஜெயில் வேலை' என்று பெயர்.

பாதைகளில் முளைத்திருக்கும் புற்களையெல்லாம் அகற்றும்படி உத்தரவிடுவார்கள். மண்வெட்டி கொண்டு விரைவில் செதுக்கியும் விடலாம். செதுக்கிவிட்டால்-பிறகு வேலையிருக்காதே? அதற்காகப் புல்லைப் பிடுங்கச் சொல்வார்கள். அவர்களும் மிகவும் சுறுசுறுப்பாக(!) ஆளுக்கொரு நுனிப் புல்லாகப் பிடுங்குவார்கள். அந்தப் புல் வளரும்— அவர்கட்கும் வேலையிருக்கும்! இதற்கும் 'ஜெயில் வேலை' என்று தான் பெயர். சிறை நிர்வாகத்தை நடத்துவதற்காக முக்கிய அதிகாரிகளும், கைதிகளைக் கண்காணிப்பதற்காக வார்டர்களும் இருக்கிறார்கள். மற்ற எல்லா வேலைகளையும் கைதிகளே செய்கிறார்கள்.

சிறையில் குற்றம் செய்யும் கைதிகள், சிறை அதிகாரிகளால் தண்டிக்கப்படுகிறார்கள். கால்விலங்கு பூட்டுதல், கைவிலங்கு பூட்டுதல், நிலவிலங்கு மாட்டி வெயிலில் நிற்க வைத்தல் போன்ற கொடிய தண்டனைகளும் கைதிகளுக்கு அளிக்கப்படுமாம்.' -முன்பு!



சிறைக்குள்ளேயே திருடுபவர்கள், வேலைக்குப் பயந்து ஒளிந்து கொள்பவர்கள், சிறைச் சட்டங்களை மீறி நடப்பவர்கள் உடனடியாகத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள், மாடு போல ஏற்றங்களை இழுத்துத் தண்ணீர் பாய்ச்சுகிற வேலைகளையும் அவர்கள் தான் செய்ய வேண்டும். எவ்வளவு குளிர் அடித்தாலும் சரி; ஒரு கால் சட்டை, ஓர் அரைக்கைச் சட்டை, ஒரு குல்லாய் இவைகளால் தடுத்துக் கொண்டுதான் படுத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் சிலர் 'பி' வகுப்புக் கைதிகளாயிருந்தாலும் கூடக் கடுங்காவல் தண்டனை பெற்றவர்களாதலால் நாங்களும் குல்லாய் அணிந்து கொள்ள வேண்டும்.

காலையில் எழுந்ததும், நாலு நாலு பேராய் File-ல் உட்கார வேண்டும். சாப்பிடப் போனாலும், குளிக்கப் போனாலும், வேலை செய்யப் போனாலும், காலை முதல் மாலை வரையில் பல தடவை File-ல் உட்கார்ந்த பிறகுதான் போக வேண்டும். அப்படி File-உட்காரத் தவறுவது பெருங்குற்றம் ஏன்; தப்பித்து ஓடுவதற்கு எத்தனித்த குற்றமாகக்கூட ஆகிவிடலாம், அதற்கெல்லாம் பெருந்தண்டனைகள் கிடைக்கும்.

தினந்தோறும் குளிப்பதற்கு அனுமதியுண்டு. ஆனால் அவர்களுக்குத் தரப்பட்ட உடைகளை வாரம் ஒரு முறைதான் அவர்கள் துவைத்து உடுத்துகிறார்கள். அது இவர்களின் சோம்பேறித்தனமோ அல்லது சிறையின் உத்தரவு அப்படியோ தெரியவில்லை. சிறை அதிகாரிகள் நல்லவர்கள். ஆகவே சிறை உத்தரவாயிருக்க முடியாது. மாதா மாதம் ஒரு முறை எண்ணெய் தேய்த்து முழுகலாம். அதற்கு அளவு எண்ணெய் கொடுக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை உண்டு. அன்றைய தினம் வேலை கிடையாது. அதற்காக இஷ்டம் போல் சுற்றவும் முடியாது. அவரவர்களின் இருப்பிடத்தில் இருக்க வேண்டியதுதான்.

நான் முதலில் சிறைச்சாலை ஒரு கிராமம் போலிருக்கிறது என்று சொன்னதும் "பூ! இவ்வளவுதானு?" என்று நினைத்தவர்களுக் கெல்லாம் இப்போது கொஞ்சம் நடுக்கம் ஏற்படுகிறதல்லவா?

ஆனால் இத்தகைய சிறைச்சாலையைத் தங்கள் ஜீவிய பூமியாக்கிக் கொண்டிருப்பவர்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

முதன்முறை சிறைக்கு வந்தவனுக்கு 'வெள்ளைக் குல்லாய்' என்று பெயர்.

பல முறை வந்தவனுக்குக் "கறுப்புக் குல்லாய்" என்று பெயர்.

சிறையில் கறுப்புக் குல்லாய்களுக்குக் குறைவேயில்லை. நிறைய இருக்கிறார்கள். குழந்தைப் பருவம் முதல் சிறையிலேயே இருக்கிற கைதியையும் திருச்சியில் கண்டேன். எங்கள் பிளாக் 'ஹெட் வார்டர்' அவனைத் தஞ்சை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியில் (Borstal School) சிறு பையனாக இருக்கும் போது பார்த்தாராம்.

அவனுக்கு இப்போது ஐம்பது வயது இருக்கலாம். கண்டமாலை நோய் ஏற்பட்டுக் குணமடைந்தவனைபடியால் அவனுக்குக் 'கண்ட' மாலை' என்று பெயர் சூட்டி அழைத்தார்கள்.

அவனுடைய தாயார் அவனைச் சிறையிலே பெற்றெடுத்த தாகவும் சொல்கிறார்கள். சுமார் ஐம்பதாண்டு காலத்திலே அவன் ஐந்து ஆண்டுகள் கூட வெளியுலகத்திலே இருந்திருக்க முடியாதென்று அங்குள்ள கைதிகள் சொன்னார்கள். அவனைப் பற்றி அவ்வளவு விவரம் தெரிந்த கைதிகள் எவ்வளவு சிறை அனுபவஸ்தர்களாயிருக்க வேண்டுமென்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்!

சிறையில் கறுப்புக் குல்லாய்க்காரர்கள் காலத்தைச் சுலபமாகக் கழித்துவிடுகிறார்கள், பழைய அனுபவத்தை வைத்துக் கொண்டு. வெள்ளைக் குல்லாய்கள்தான் மிகவும் வேதனைப்படுகிறார்கள்.

சிறையிலே வேதனையில்லாமல் ராஜபோகமாக இருக்குமா என்று கேட்கலாம். வேதனை இருக்க வேண்டியதுதான். முதலில் வந்த கைதிகள் எச்சரிக்கப்பட வேண்டியவர்கள். ஆகவே அவர்களின் கஷ்டத்தைக் கொஞ்சம் குறைத்து, உணவு முதலியவற்றில் சலுகை காட்டும் முயற்சியில் உடனடியாகக் கவலை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிறைக்கு வந்த மூன்று நாட்களுக்கெல்லாம் ஜெயிலர் என்னைக் கூபபிட்டனுப்பினார். ஆங்கிலத்தில் 'டைப்' செய்யப் பட்ட சில காகிதங்களைக் கொடுத்து, அதைத் தமிழில், "உங்கள் நடையில் மொழி பெயர்த்துக் கொடுங்கள்' என்றார். அவைகளை நான் தமிழில் எழுதிக் கொடுத்தேன். கடுங்காவல் தண்டனை பெற்ற கைதி

யாயிற்ற; மறுக்கக் கூடாது. நான் எழுதியதை மாயவரம் ஓவிய நண்பர் பி. டி. ராசன் சிறையிலுள்ள "குவாரண்டைன்" என்னுமிடத்தில் அழகிய முறையில் வர்ணத்தால் சுவரில் தீட்டிக் கொடுத்திருக்கிறார். அவைகளைப் படித்துப் பார்த்தால் சிறையில் உள்ள வசதிகள், சட்டதிட்டங்கள் எல்லாமே தெளிவாகும் என்று நம்புகிறேன்.

சிறையில் வார்டர்களுக்கு அடுத்தபடியாகப் பதவி வகிப்பவர்கள் காணிக்கை வார்டர்கள் தான். இவர்களுக்கு சம்பளம் கிடையாது; வெள்ளை உடையும் வெள்ளைத் தொப்பியும் உண்டு. வார்டர்கள் வேலை முடிந்ததும் வெளியிலே செல்வது போல் இவர்கள் செல்ல முடியாது. காரணம் இவர்களுக்கு வேலை முடிவதேயில்லை. காணிக்கை வார்டர் என்பது உங்களுக்குப் புதிராக இருக்கிறதல்லவா?

கான்விக்ட் வார்டர் (Convict Warder) என்பதுதான் இப்படித் திரிந்து, தேய்ந்து, காணிக்கை வார்டராகியிருக்கிறது. மூன்று, நான்கு வருடங்களுக்கு மேல் தண்டனை பெற்ற கைதிகள் தங்களின் நன்னடத்தையால் சிறைச்சாலையில் பெறுகிற உத்தியோகமிது!

நீண்ட நாள் தண்டனை பெற்ற ஒரு கைதி, மெல்ல மெல்ல ஒரு மேற்பார்வையாளனுக்குப் பதவி பெற முடியும். 'ஓவர்சீயர்' என்று அந்த உத்தியோகத்துக்குப் பெயர். வெள்ளைத் தொப்பியும், கால சட்டையும், அரைக்கைச் சட்டையும் அவனது உடுப்புகள். அவனது பார்வையிலே பல கைதிகள் கண்காணிக்கப் படுவார்கள்.

சிறுகச் சிறுக ஓவர்சீயருக்குப் பதவி உயர்ந்து, அழகான வெள்ளைத் தொப்பியும், வெள்ளைக் கோட்டும், நீண்ட வெள்ளைக் காலுறையும் தரப்பட்டு கான்விக்ட் வார்டராக மாறிவிடுகிறார். ஓவர்சீயர், இரவு நேரத்தில் கூண்டிலே அடைபட வேண்டும். கான்விக்ட் வார்டர்— அதாவது கைதி வார்டர் கூண்டிலே அடைபடத் தேவையில்லை. ஆனால் இரவு நேரங்களில் மாறி மாறிக் குறிக்கப்பட்ட கால அட்டவணைப்படி பிளாக்குகளில் காவல் புரிய வேண்டும்.

திருச்சி சிறையிலுள்ள கான்விக்ட் வார்டர்கள் பெரும்பாலும் ஆயுள் தண்டனை பெற்றவர்கள்தான். ஆயுள் தண்டனை என்பது இருபது ஆண்டுகள்.

ஆனால் அவர்கள் நடந்து கொள்ளும் முறை-திருந்திய நடவடிக்கை-அயராத உழைப்பு—இவைகளின் காரணமாக அவர்களுக்கு 'நாட் கழிவு' தரப்பட்டு, இருபதாண்டுகட்குள்ளாகவே விடுதலையாகி விடும் வாய்ப்பு இருக்கிறது.

ஆயுள் தண்டனை பெற்றவர்களும் பெரும்பாலும் தூக்கு மேடையிலிருந்து திரும்பியவர்கள் தானே! தூக்கு மேடைக்குச் செல்லும் கைதிகளுக்காக ஒரு தனி இடம் இருக்கிறது. அதற்குப் பெயர். 'கண்டம்' என்கிறார்கள். அதுவும் திரிந்து தெளிந்த பெயர்தான் Condemned Prison என்பதுதான் 'கண்டம்' என்று மாறியிருக்கிறது.

அங்கு வந்த மனிதனுக்கு ஒரு கண்டம் இருக்கிறது என்பதை அது குறிப்பதால், திரிந்த பெயரும் ஒருவாறு பொருந்தும். அந்தக் கண்டத்தில்தான் ஒரு காலத்தில் அண்ணலும் பெரியாரும் வேறு இடமில்லாத காரணத்தால் பத்து நாட்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். கண்டத்திலேயிருக்கும் கைதிகள் தனித் தனியேதான் வைக்கப்படுவார்கள். ஒவ்வொரு ஆளுக்கும் ஒரு காவல் உண்டு! அதற்குப் பக்கத்திலேயே சிறிது தூரத்தில் தூக்கு மேடையுமிருக்கிறது.

நாங்கள் சென்ற பிறகு எட்டுக் குற்றவாளிகள் அந்த மேடை மூலம் உலக விடுதலை பெற்றிருக்கிறார்கள். மிகவும் சோகமான செய்தியொன்று; ஒரு குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை கிடைத்திருந்தது. அவன் அதையும் மறுத்து அப்பீல் செய்தான். அப்பீலில் அவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. அவன் நிலைமை எப்படியிருக்குமென்பதை நீங்களே யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். அக்டோபர்மாதம் 15ஆம் தேதி சூரியனைக் காணுமலே அவன் தூக்குக் கயிற்றை முத்தமிட்டுவிட்

கொலைக் குற்றத்தில் ஈடுபட்டு ஆயுள் தண்டனை பெற்ற கான்விக்ட் வார்டர்கள் சிறைச்சாலைக்குள்ளேயே மற்றவர்க[illegible] மிகவும் நன்முகப் பழகுகிறார்கள். திருந்தி நடக்க வேண்டும் என்ற ஆசையோடு காலத்தைக் கழிக்கிறார்கள்.

குடிவெறியில் கொலை செய்தவர்கள் - கற்பு தவறிய மனைவியைக் கொலை செய்தவர்கள் - பங்காளிகளைக் கொலை செய்தவர்கள் - நிலத் தகராறுகளால் கொலைச் செயலில் ஈடுபட்டவர்கள்-எதிரிகள் கொடுத்த தொல்லையால் கொலை வெறிக்குத் தூண்டிவிடப்பட்டவர்கள்- ஆகியவர்களைத்தான் அதிகமாகக் காண முடிகிறது சிறைச்சாலைகளில்.

இருபது ஆண்டு சாதாரணமானதா? இளைஞனாக இருந்தால் வனப்பும் வசீகரமும் நிரைந்த வாலிபம் சிறைச்சாலையிலேயே முடிந்து விடுகிறது. நாற்பது வயதிற்கு மேற்பட்ட மனிதனாகத்தான் அவனை வெளியே பிரசவிக்கிறது சிறைச்சாலை.

வாலிபத்தைக் கடந்த நிலையிலே உள்ளவன், ஆயுள் தண்டனை பெற்றால், வாழ்வின் சுகத்தை இனிமேல் அனுபவிக்க முடியாது என்ற பருவத்திலே சக்கை மனிதனாக அவனைச் சிறைச்சாலை வெளியே உமிழ்கிறது! ஆயுள் தண்டனையை விட மரணதண்டனை எவ்வளவோ மேல்தான்!

ஆனால் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் வெளியில் வந்த பிறகு புதிய மனிதர்களாக மாறிக் கொலை வெறியைத் தடுக்கும் கொள்கைக் காகப் பாடுபட்டார்களேயானால், ஒரு கொலையால் வந்த பழியைப் பல உயிர்களைக் காப்பாற்றுவதன் மூலம் போக்கிக் கொள்ளலாம். அதை விட்டு வெளியில் வந்ததும், "என்னிடம் யாரும் வாலாட்டக் கூடாது. நான் கொலை கேசில் ஜெயிலுக்குப் போனவனுக்கும்!" என்று மீசையை முறுக்கித் தோளைத் தட்டிக்கொண்டு நின்றால், அது வீரமுமாகாது; விவேகமுமாகாது. கோழைத்தனத்தின் கூக்குரலாகவே கருதப்படும்.

49

சிறையில் போட்டி மன்றம்

எங்கள் ராஜ்யம் குறையின்றி நடந்து கொண்டிருக்கும் போது சென்னையில் அடைபட்ட அறப்போர்த் தலைவர்களும், தொண்டர்களும், வரிசை வரிசையாக விடுதலை பெற்றுக் கொண்டேயிருந்தார்கள்.

அண்ணாவும் அன்றையத் துணைச் செயலாளர்கள், நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன் இருவரும் சிறையிலேயிருந்த காரணத்தால், கழகத்தின் காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பாளர் பதவியைத் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இது நமது கழக வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம் எனலாம் கூறலாம். தோழர் கோவிந்தசாமி பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பந்தக் கையெழுத்திலே கையெழுத்திட்டு அதன் ஆதரவு பெற்று வெற்றி மாலை சூடியவர். ஜெயபோதையிலே மக்களை மறந்து விட்டுப் பதவி வெறியிலே அறிவாளர்களாக மாறிவிடும் ஒரு சில அரசியல் மோசடிக் காரர்கள் உலவும் தமிழகத்திலே, அவர்களுக்கும் தன் பொன்னான செயல் மூலம் சாடையடி கொடுத்தவர் கோவிந்தசாமி. கழகத்தின் முக்கியமானவர்கள் எல்லாம் சிறைக் கூண்டுகளிலே! வெளியிலேயிருந்த ஒரு சில தலைவர்களும் நாடெங்கும் மின்னல் வேகத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைமைக் கழகப் பொறுப்புகளைத் தாங்கி நடத்திட, கோவிந்தசாமி போன்ற தகுதி மிக்கவர் தான் தேவை. பொறுப்பேற்ற கோவிந்தசாமி கழகத்திலே பல ஆண்டு காலம் இருந்து பழக்கப்பட்ட ஒருவரைப் போலவே கழக வேலைகளை மும்முரமாகக கவனித்திடவும் துவங்கினார். கழகத்திற்கு அவர் ஒரு தூணாக மாறியதுமல்லாமல், தி. மு. க. வின் தேர்தல் கொள்கையை நையாண்டி செய்து வந்த கம்யூனிஸ்டு, காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கு அசைக்க முடியாத பதிலாகவும் தன்னையாக்கிக் கொண்டார்.

கழகம் மக்கள் மனத்திலே விசாலமான இடத்தையும், சரித்திரத்திலே நிலையான இடத்தையும் பெற்றுக்கொண்டு, தென்னகத்தின் வீதிதோறும் புது நடை போட்டு வளர்கிறது என்ற

இன்பம் தேனூறும் செய்திகளாக உருவெடுத்திடுவது கேட்டுப் புளகாங்கிதமுற்றிருந்தது எமது சிறை ராஜ்யம்! நான் முன்பே கூறியிருக்கிறேன், எங்கள் ராஜ்யம் இரண்டு மாத காலம் தான் பரந்து கிடந்தது என்றும், அதன் பிறகு சிறுகச் சிறுகத் தேய்ந்து விட்டது என்றும்! அந்தத் தேயும் நிலை ஆரம்பமாகி விட்டது.

ஆகஸ்ட் 24-ஆம் நாளி முதன் முறையாக எங்கள் ராஜ்யம் குறையத் தொடங்கிவிட்டது. முதலில் இருபதுக்கு மேற்பட்டோர் எம்மைப் பிரிந்து சென்றுர்கள். அடுத்த இரண்டு நாட்களில் பொறையாறு அபூபக்கர் முதலிய பல தோழர்கள் ராஜ்யத்தை விட்டு வெளியேறினுர்கள். எஞ்சியுள்ள தோழர்களுக்கு விடுதலை உணர்ச்சியைக் கிளப்பிவிடக் கூடிய அந்தப் பிரிவுகளால் ராஜ்யம் சோபையிழந்து விடக்கூடாதென்பதற்காகப் பேச்சு மன்றம் முன்னிலும் வேகமாகப் பணியாற்றியது. அந்த ஒன்றரை மாதத்திற்குள்ளாகவே சில நல்ல பேச்சாளர்கள் தயாராஞர்கள். பல தரப்பட்ட பொருள்களின் மீது விவாதம் நடத்திப் பேச்சாற்றலை விளக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது..

பேச்சு மன்றம் புதிய புதிய கருத்துக்கள் பற்றி விவாதிக்கவும், விளக்கம் பெறவும், விரிவுரை நிகழ்த்தவும் தன்னைத் தயாராக்கிக் கொண்டது. ''குறளோவியம்'' பற்றி இரண்டு மூன்று நாட்கள் தோழர்கள் உரையாற்றிய பின் நான் முடிவுரை கூறினேன்.

குறளின் காமத்துப் பாலின் சுவையைத் தோழர்களிடம் கூறும் போது சிறையிலிருக்கிறேம் என்ற எண்ணத்தையும் சில நிமிடங்கள் மறந்து குறளாசிரியரின் வர்ணனையிலே ஆழ்ந்தார்கள். ஒரு தோழர் பேசும்போது குறிப்பிட்டார்: ''குறளுக்குச் சிறப்புச் சொல்ல வந்த யாரோ ஒருவர் வாமனுவதாரன் உலகை இரண்டடியால் அளந்தான். வள்ளுவனும் இரண்டடியாக அளந்தான் என்பதாகப் பாராட்டியிருக்கிறர்'' என்று! அது பற்றி நான்குறிப்பிட்டேன் :

''வாமனன் இரண்டடியால் உலகை அளந்து விட்டு, மூன்றாவது அடியை மாபலி என்ற மனிதன் தலையிலே வைத்து அழுத்தினான். ஆனால் வள்ளுவன் மனிதன் தலையிலே ஏறிக் கொள்ளவில்லை. மனிதனுக்காக நீதி வகுத்தான்'' என்று விளக்கிச் சொன்னேன்.

'நசற்காலி' என்னும் பொருள் பற்றி ஒரு நாள் உரையாறினேம். இப்படி எத்தனையோ சொற்பொழிவுகள்! சிறைக்குச் சென்றாலும் அது விடுகிறதா என்ன!

நாமெல்லாம் மொழிப் பித்துக் கொண்டு அலைகிறோம் என்று அரசியல் எதிரிகள் குற்றம் சாட்டுகிறார்களே; அது எவ்வளவு தூரம் உண்மையென்று ஒரு நாள் விவாதித்தோம், ''மொழிப்பற்றா? பித்தா?'' என்ற தலைப்பின் கீழ். 'மொழியிலே பற்றா? அல்லது பித்தா?' என்று ஆராய்வதற்கு முன்பு பற்று என்பதற்கும் பித்து என்பதற்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். பற்றின் உச்சநிலைதான் பித்து. அந்தப் பித்து தானே உண்டாவதில்லை.

பற்று வைக்கப்பட்ட பொருளுக்கு ஆபத்து வரும்போது அப் பொருளின் மீது பித்து ஏற்படுகிறது. குழந்தையின் மீது தாய்க்கு அளவற்ற பற்று. குழந்தை திடீரென நோய்வாய்ப்படுகிறது. இறந்து விடுமென மருத்துவர்கள் கூறுகிறார்கள். தாய்க்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. அதை யாராவது தடுக்க முடியுமா? பற்று பித்தாக மாறுகிறது.

தாய்க்குக் குழந்தையை விட ஒரு சமுதாயத்துக்கு மொழி மிகவும் உயர்ந்தது. அந்த மொழி மீது பற்று வைக்காதவர் யாரே உளர்! பறறுக் கொண்டோர் பித்தர்களாக மாறுவது தவறு! அந்தப் பித்து ஏறபட அடிப்படை எது? பற்றை அறுக்க முனைவது தானே? அந்த வேலையைச் செய்வது யார்?

மொழியிலே நாம் பற்று வைக்கிறோம். அதை அறுத்து நம்மைப் பித்தர்களாக்குகிறார்கள். ஆகவே பித்துப் பிடிப்பது நம் தவறல்ல! இந்த முடிவுக்குப் பேச்சு மன்றத்தினர் வந்தோம். மொழிக்காக உயிர் கொடுத்த தாளமுத்து, நடராசன் இருவரின் கல்லறையிருக்கும் திசையைப் பார்த்து வீர வணக்கம் செலுத்தினோம்.

லத்தீன் மொழியின் ஆதிக்கம் ஐரோப்பாவெங்கும். பரவி வேறு நாட்டுத் தாய் மொழிகள் எல்லாம் தலையெடுக்காமல் அழுத்தியிருந்த காலத்தில் தாய் மொழிப் பித்துக் கொண்டு, ''இனி லத்தீனில் எழுதுவதில்லை. எமது பிரஞ்சு மொழியிலே தான் எழுதுவோம்'' என்று சபதம் எடுத்துக் கொண்டு கிளம்பிய பிரஞ்சு நாட்டு இளம் எழுத்

தாளர்களோ, 16-ஆம் நூற்றாண்டின் மொழிக் காவலர்களோப் பெருமை யோடு நினைத்துக்கொண்டோம். அந்தச் சரித்திரத்தையும் படித்து விட்டு இப்போது தாய் மொழியை மறந்து ஆதிக்கக்காரர்களின் மொழியாம் இந்திக்கு ஆலவட்டம் சுழற்றும் ஆஷாடபூதிகளின் வரலாற்றையும் பார்க்கின்றபோது எவ்வளவு வேதனையாயிருக்கிறது என்று கண்ணீரும் விட்டோம்.

எம்மை அறியாமலே மொழிப் பித்து ஏற்பட்டுவிட்டது.
''தமிழென்று தோள்தட்டி ஆடு! அந்தத்
தமிழ் வெல்க! வெல்க என்றே தினம் பாடு!"

—என்று பேரொலி எழுப்பினோம்.

''கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை"

—என்று சூளுரைத்தோம்.

சிறைச்சாலையில் ஒரு நாள் பேச்சு மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மன்றத்து மத்தியிலே நான் அமர்ந்திருக்கிறேன். வெள்ளுடை அணிந்த ஒரு நர்ஸ் அங்கு வந்தாள். தான் கல்லக் குடிக்குப் பக்கமுள்ள ஆஸ்பத்திரியில் வேலை பார்த்ததாகவும், போராட்டத்தில் காயம் பட்டவர்களுக்கெல்லாம் தானே சிகிச்சை செய்ததாகவும் கூறினாள். அவள் பேச்சிலிருந்து நமது இயக்க அனுதாப முடையவள் என்று புரிந்தது. நல்ல சிவப்பு! குறுகுறுப்பான பார்வை! கவரும் சக்தி படைத்தவள்! ''கருணாநிதி எங்கே?" என்று என்னையே கேட்டாள்.

''நான்தான்" என்றேன். ''ஓகோ, அரும்பு மீசை புதிதாகையால் அடையாளமே புரியவில்லை" என்றாள். போய் விடுவாளாக்கும் என்று எதிர்பார்த்தேன். போகவில்லை. நின்று கொண்டேயிருந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு கிழவரும் வந்தார் அவர் அவளுடைய தந்தையாம். ''அப்பா! இவர் தான் கருணாநிதி!" என்று அவருக்கு என்னை அறிமுகப்படுத்தினாள். ஏன் இருவரும் அங்கு வந்தார்கள் தெரியுமா? அந்த 'நர்ஸ்' என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம்!

திடீரென்று என்னைப் பார்த்துச் சொன்னாள்: ''நான் உங்களைக் காதலிக்கிறேன்!" நான் திடுக்கிட்டுப் போனேன்! பேச்சு மன்றம் கொல்லென்று சிரித்துவிட்டது. நர்சுக்கு அப்போதுதான் நாணம் பிறந்தது. தந்தையை அழைத்துக்கொண்டு போய்விட்டாள். நான் வெட்கத்தால் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தேன்.

இத்தோடா முடிந்தது? ஒரு தயிர்க்காரிக்கும் தோழர் சத்திக்கும் தகராறு! தயிர்க்காரி தன் கணவனிடத்திலே சத்தியின் விஷமத்தைப் பற்றிக் கூறிவிட்டாள். அவள் கொஞ்சம் இள வயதுக்காரி. சத்தியும் மணமாகாத பிள்ளை! ஏதோ தவறு நடந்துவிட்டது! அதைப் பேச்சு மன்றத்திலே சிரிப்பாய்ச் சிரிக்க வைத்துவிட்டாள் அந்தப் பொல்லாத தயிர்க்காரி. தோழர் ராம சுப்பையா, அவளிடம் மோர் வாங்கிக் கொண்டு கடன் சொல்லி ஏமாற்றி விட்டாராம். சிறையிலே அவர் காசுக்கு எங்கே போவார்? அதையும் பெரிய குற்றச்சாட்டாக்கி காரைக்குடியாரின் நாணயத்தைப் பற்றி வெளுத்து வாங்கிவிட்டாள்.

என்ன, மூக்கிலே விரலை வைக்கிறீர்கள்? சிறைச்சாலையிலே பெண்கள் எப்படி வந்தார்கள் என்றுதானே ஆச்சரியப்படுகிறீர்கள்?

பேச்சு மன்றத்திலே நடந்த (Fancy Dress Competition) மாறு வேடப் போட்டியின் போது கூடப் பெண்கள் வராமலிருந்தால் சுவைக்குமா என்ன? பெண்கள் மட்டுமா வந்தார்கள்? ஒரு குடு குடுப்பைக்காரனை கூட வந்தான்.

"குடு குடு குடு குடு! நல்ல காலம் பிறக்குது; தமிழ்நாட்டுக்கு நல்ல காலம் பிறக்குது! அந்த மூலையிலே ஒருத்தன் அய்யோன்னு போருன்! துரோகம் பண்ணினவன் தொலையப் போருன்! காலையிலே கூடச் சொன்னேன், சுரண்டிப் பிழைக்கிறவன் சுருக்குன்னு போருன். குடு குடு குடு! ஒரு பழைய துணி இருந்தால் குடு குடு குடு!"

நரிக் குறவனும் குறத்தியும் தோன்றினார்கள், "ஆயாலக் குறி-ஆயாலக்குறி" என்று பாடியபடியே. வயிறு புடைத்த ஒருவரும் வறுமையிலடிபட்ட நெசவாளியும் வந்தார்கள். குமரர்கள் கிழவர்களாக மாறி வந்தார்கள். ஆண்கள் பெண்களாக மாறி வந்தார்கள், அழகிகளாகக்கூட!

சிறைச்சாலையிலே ஏதோ ஒரு பெரிய மைதானத்தை ஒதுக்கிக் கொடுத்து அதிலே மாறு வேட விழா நடத்துங்கள் என்று யாரும் அனுமதி தரவில்லை. வேலையில்லாத ஒரு ஞாயிற்றுக் கிழமையில் தோழர்களின் சொந்த முயற்சியிலேயே பல வேடங்களில் தோன்றிப் பாடி மகிழ்வித்தார்கள். சிறைச்சாலையிலே பூத்திடும் மலர்கள்; நான் மேலே போட்டிருந்த பச்சைத் துண்டு போன்ற ஆடைகள்; முடி வெட்டும்போது கத்தரித்த ரோமங்கள்; அடுப்பின் கரிகள் ஆகிய பொருள்களைக் கொண்டு அலங்கார அணிகளும், ஆடைகளும், மீசை களும், தாடிகளும் தயார் செய்து, யாரும் எதிர்பார்க்காத அளவுக்குப் பிரமாத வெற்றியுடன் நடத்தப்பட்ட அந்தப் போட்டியிருக்கிறதே அது, "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பதைத்தான் நினை ஊட்டியது.

போட்டியின் நீதிபதிகளாக முன்னை நாராயணசாமி, ராச மாணிக்கம், பேராவூரணி வடிவேல், வைத்தீசுவரன் கோயில் முருகையன், கலைமணி ஆகியோர் தீர்ப்பு வழங்கினர்.

திருச்சி கமலன் முதற் பரிசும், நாராயணசாமி இரண்டாம் பரிசும், கம்பர்நத்தம் கடல்வண்ணன் மூன்றும் பரிசும், பெரியசாமி நான்காவது விசேடப் பரிசும் பெற்றார்கள். அவர்களுக்குக் "கல்லக்குடிப் பதக்கம்" பரிசளிக்கப்படும் என்றும், அந்தப் பரிசளிப்பு விழாவினை மணப்பாறையில் தோழர்கள் நடத்துவதென்று விரும்பியதன் பேரில், அங்கு விழா நடக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

இன்னொரு ஞாயிற்றுக்கிழமை. ஒப்பித்தல் போட்டி, முல்லை சத்தி, திருவையாறு மணி மாயூரம் கிட்டப்பா, திருவாரூர் விசயராகவன், கரூர் முருகேசனார் ஆகியோரை நீதிபதிகளாகக் கொண்டு நடை பெற்றது. அதில் பாரதிதாசன் கவிதைகளும், திரு. வி. க. வின் உரை நடைகளும், அண்ணாவின் பொன்மொழிகளும், நமது திரைப் படங் களின் உரையாடல்களும், புறநானூற்றுச் செய்யுட்களும், போர்வாள் முதலிய நாடக வசனங்களும் பல தோழர்களால் ஒப்பிக்கப்பட்டன.

அதில் முதல் பரிசு பெரியசாமிக்கும், இரண்டாம் பரிசு அடைக் கலத்திற்கும், மூன்றும் பரிசு எஸ். எம். வைத்தியலிங்கத்திற்கும், நான்காவது சிறப்புப் பரிசு நாராயணசாமிக்கும் கிடைத்தது. அந்தப் பரிசளிப்பு விழாவை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நடத்துவதாகத் தோழர் வேணுகோபால் அனுமதி வாங்கிக் கொண்டார்.

ஒரு நாள் இசைப் போட்டியும் நிகழ்வுற்றது. தோழர்கள் உள்ளிக் கோட்டை சிங்காரவேலு, திருவாரூர் தென்னன், கரூர் நாராயணன் ஆகியோர் நீதிபதிகளாய் அமர்ந்தனர்.

மாயவரம் செபாஸ்டின் முதற்பரிசும், நன்னிலம் நடராசன் இரண்டாம் பரிசும், அறந்தாங்கி ஓவியர் கருணை மூன்றும் பரிசும் சக்கரசாமம் அப்பாசாமி நான்காவது தனிப் பரிசும் பெற்றார்கள்.

இவர்களுக்குப் பரிசளிப்பு விழாவை மன்னை நாராயணசாமி நடத்துவதாகக் கேட்டுக்கொண்டார். மன்றமும் இணங்கியது.

கடைசியாக ஒரு ஞாயிறன்று பேச்சு மன்றத்தின் அறுவடையைக் கணக்குப் பார்க்கும் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அதுதான் பேச்சுப் போட்டி.

திருவையாறு ஆர். எஸ். மணி அழகான கருத்துக்களை அள்ளிச் சொரிந்து முதற் பரிசை அடைந்தார். ராமசாமி பெருமிதமான வார்த்தையோட்டத்தால் இரண்டாம் பரிசைத் தட்டிவிட்டார். உள்ளிக்

கோட்டை சிங்காரவேல் எடுத்துக் கொண்ட பொருளை எழில் ததும்பச் சொல்லி முன்னும் பரிசுக்குரியவரானார். பேராவூரணி வடிவேல் நகைச் சுவை வழியப் பேசி சிறப்புப் பரிசை ஏற்றார்.

அந்தப் போட்டிக்கு நீதிபதிகளாக நானும், தோழர்கள் ராம சுப்பையா, அடைக்கலம், நாகை பாப்பையன், பி. சாமிநாதன் ஆகிய நால்வரும் அமர்ந்து தீர்ப்பு வழங்கினோம். அவர்களுக்குப் பரிசளிக்கும் விழாவை மாயவரத்தில் நடத்துவதற்குத் தோழர் கிட்டப்பா கேட்டுக் கொண்டு, மன்றத்தின் இணக்கம் பெற்றார்.

''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை''

என்ற கவிஞரின் பாடலை உரக்கப் பாடினோம். உற்சாகம் கொப்பளிக்கப் பாடினோம்.

நானூற்றுக்கு மேற்பட்டோரின் மொத்த வாழ்க்கை சிறையில் எப்படி நடைபெற்றது என்பதை விவரித்து விட்டேன். என் வாழ்வு எப்படி ஓடியது என்பதைக் கூறாமலிருக்க முடியுமா?

50

எனது சிறைப் பொழுதுபோக்கு

சிறைச் சாலைக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் எனதருமைத் திருவாரூர் தோழர்கள் வந்து சேர்ந்தார்கள். எனது மைத்துனர் தெட்சணமூர்த்தியும் வந்தார். எனக்குப் பக்கத்து அறைகளிலேயே அவர்களும் இடம் பிடித்துக்கொண்டனர். ராம சுப்பையா அவர்களுக்குச் சரியான ஜோடியாக திருவாரூர் நாகப்பன் இருந்தார். அவர்களிரு வரையும் பார்த்து நாங்கள் ''கிழவர்களே!" என்று கூப்பிடுவோம். ராம சுப்பையாவுக்கு உள்ளபடியே அதில் கொஞ்சம் வருத்தம்தான். திருவாரூர்தென்னன்— அவரைப் பற்றி நான் ஒன்றும் அதிகமாகச் சொல்லவேண்டாம்.

நான் சிறையிலிருக்கும் போது அவர் வெளியே இருக்க முடியாது. ஒருவர்தான் தப்பித் தவறி வெளியே இருந்து விட்டார். சி.டி.மூர்த்தி என்பார்— தென்னன் பெயரும் தட்சிணமூர்த்திதான்! இவரும் தட்சிண மூர்த்தி, இரண்டுதட்சிணமூர்த்திகளும் இரண்டு கண்கள் போல நட்புக்கு.

அந்தத் தென்னன்தான் எமது சாப்பாட்டு விவகாரங்களைச் சரி பார்த்துக் கண்காணித்து வந்தார். குளிப்பதற்குச் செல்வோம். வேணு ஓடி வருவார், தண்ணீர் மொண்டு ஊற்ற. அவர் தான் என்னைக் குளிப்பாட்டி விடுவார் என்றே வைத்துக் கொள்ளுவோமே! எண்ணெய் தேய்த்து முழுகப் போகிறோம் என்று தெரிந்தால் போதும். எப்படித் தான் தெரியுமோ ராம சுப்பையாவுக்கு? அவர் எண்ணெய் தேய்த்து விடாமல் குளிக்க முடியாது. முடியாதென்ன? கூடாது.

அவருடைய திருக்கரங்களால் எண்ணெய் தேய்த்துச் சிகைக்காய் தேய்த்துக் குளிப்பாட்டும் போது என் அன்னையின் பொற்கரங்களின் ஸ்பரிச உணர்ச்சியையே கண்டேன் நான். குளித்து விட்டு அறைக்கு வருவோம். வீட்டிலே மனைவி கூட அவ்வளவு ஒழுங்காக உடைகளை எடுத்துத் தந்து உபசரிக்க முடியாது. அத்துணை அழகாக உடைகளை எடுத்து வழங்குவார் தோழர் கஸ்தூரி. உடை இலாகாவை அவரிடம் தான் ஒப்படைத்திருந்தோம். உடனே தென்னன் காலை உணவுடன் எங்கள் அறையில் நுழைவார்.

சிறைச் சாப்பாட்டுக்கும் ஓர் இலக்கணம் வகுத்துக் கொண்டு நம்மோடு ஒட்டி வராவிட்டால் அதோடு நாம்

ஒட்டிப் போவோம் என்ற தத்துவார்த்தச் சிகரமாக எம்முடன் ஒருவர் இருந்தார். அவர் தான் திருவாரூர் டாக்டர் விசயராகவன். சிறையிலே தரப்படும் கடலை உருண்டை என்ருல் அவருக்கு எவ்வளவு பிரியம் தெரியுமா? ஒருநாள் அவர் கடலை உருண்டைக்காக இன்னொரு தோழருடன் பந்தயம் கட்டி நூறு 'பஸ்கி' போட முனைந்தார். பந்தயத்தில் தோற்றதால் கடலை உருண்டை கிடைக்கவில்லை. தொடை முழுதும் கடலை உருண்டைபோல் வீங்கிவிட்டது. இரண்டு, மூன்று நாள் மருத்துவ மனையில் இருந்தார். ஜெயில் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு 'ஜாம்பவான்' வேலைக்கெல்லாம் போகலாமா?

இப்படி வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் சிறைச்சாலையின் கொடுமைகளை விரட்டிக் கொண்டிருக்க உதவி புரிந்த அருமைத் தோழர்கள் எல்லாம் எங்களை விட்டுப் பிரியும் காலம் வெகு விரைவில் வந்து விட்டது. காங்கிரஸ் ஆட்சி எனக்கு ஆறு மாதத் தண்டனை கொடுத்தது பெரிதல்ல. என் அன்புத் தோழர்களை என்னோடு சேர்த்து வைத்து, அவர்கள் பிரிந்து செல்லும் வேதனையை அடிக்கடி உண்டாக்கியதே, அதுதான் பெரிய தண்டனையாக இருந்தது.

தோழர் என்.வி.என். அடக்குமுறையின் கோரப் பற்றி யில் அகப்படுவதற்கு முன்பு, எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ''வெளியில் என்ன நடக்கிறதோ என்று கவலைப்படுவீர்கள். வளர்கிறோம், வளர்கிறோம், மகிழ்ச்சியடையுங்கள்'' என்று! சிறைச்சாலை யில் என்னைச் சந்திக்க வந்த அண்ணு அவர்களும் சொன்னார்கள்: ''வெளியுலகைப் பற்றி நினைத்து மனத்தை அலட்டிக் கொள்ளக் கூடாது'' என்பதாக.

இருந்தாலும் முடிகிறதா? நாங்கள் பிரிந்து வரும்போதே தமிழகம் இரத்தக் காடாகவல்லவா இருந்தது? ''என்ன ஆயிற்றோ?'' என்று ஏங்கிக் கொண்டுதான் கிடந்தோம்.

கல்லக்குடியிலே போராட்டம், அண்ணன் சிற்றரசு அவர்களின் தலைமையிலும், திருச்சி தீரர்களின் மேற்பார்வையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அண்ணுவும் மற்றவர்களும் சிறைக்குள்ளே அனுப்பப்பட்டு விட்டார்கள். ''தலைவர்களை விடுதலை செய்'' என்ற முழக்கம் நாடெங்கும் கேட்கிறது.

அக்டோபர் முதல் நாள் ஆந்திர அரசு அமைகிறது. அதைத் துவக்கி வைக்கப் பண்டித நேரு அழைக்கப்பட்டிருக்கிறார். மொழி வழி மாகாணத்திற்காக ஆந்திராவில் கிளம்பிய நாற்பது வருடக் கிளர்ச்சிக்கு ஒரு முடிவு (?) ஏற்படுகிறது. கட்சி மாறிய பிரகாசம் காங்கிரசில் சேர்க்கப்படுகிறார். ஆந்திராவின் முதல் பிரதமராகிறார்.

ஆந்திர அரசு துவக்க நாளிலே மகிழ்ச்சி ஆரவாரத்துடனே தலைவர்கள் பேசுகிறார்கள். பிரதமர் நேரு பண்டிதர் பேசுகிறார். சென்னை முதல்வர் ராஜாஜி பேசுகிறார். ஆந்திரப் பிரகாசம் பேசுகிறார்.

ஆந்திர ராஜ்யத்தைத் துவக்கி வைத்துவிட்டுச் சென்னை, கோவை மதுரை, மாமல்லபுரம், பவானி முதலிய இடங்களிலே சுற்றுப் பயணம் நடத்தினார் பண்டித நேரு. தமிழகத்தின் தலைவர்கள் சிறையிலே! ஐயாயிரவர் அடக்குமுறைக்கு ஆளாயினர்! பிணங்கள் வீழ்ந்தன! சதி வழக்குகள் கிளம்பின! இந்த நிலைமையிலே கொதித்துப் போயிருந்த மக்கள், தங்கள் அதிருப்தியைக் காட்ட நேருவுக்கு எல்லா இடங்களிலும் கறுப்புக்கொடி காட்டினர். அவரது பொதுவாழ்விலே அதுவரையில் காணாத எதிர்ப்பை அவர் கண்டார். கறுப்புக் கொடி காட்டுவது ஒரு வகை; நேருவுக்கும் தெரியாததல்ல. தமிழரை 'நான் சென்ஸ்' என்று இருமுறை இகழ்ந்தார். ஒரு முறை மன்னித்தோம் பெரிய மனிதர் என்பதற்காக; மீண்டும் சொன்னார்.

மதுரையிலே நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டிய கிளர்ச்சியில் தோழர் முத்து, மற்றும் பல தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். சென்னையிலும் முப்பது பேருக்கு மேல் கைதாயினர். சென்னையிலே கண்ணபிரான், பார்த்தசாரதி மற்றும் பலர் தடியடிக்காளாயினர். செங்கற்பட்டிலே அண்ணாமலை தலைமையிலே கருங்கொடி நிகழ்ச்சி வெற்றி கண்டது.

நாள்தோறும் நமது தோழர்கள் சிறைச்சாலைக்குச் சென்று கொண்டிருப்பதும், நாடெங்கும் கிளர்ச்சித் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருப்பதும் தேனினுமினிய செய்திகளாக எங்களுக்குக் கிடைத்துக் கொண்டேயிருந்தன.

எல்லோரும் போய்விட்ட காரணத்தால், மிச்சமிருந்த ஐம்பதுக்குட் பட்ட தோழர்களை ராம சுப்பையா அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு நான் சிறிது ஓய்வு பெற்றேன். பேச்சு மன்றமும் கிடையாது.



எதையாவது படிப்பது, எதையாவது எழுதுவது. மீதி நேரங்களில் வேப்ப மரத்தடி! அங்கே சத்தியும் நானும்! எத்தனையோ இன்பக் கதைகளை அந்த வேப்ப மரம் கேட்டிருக்கிறது. பேச்சின் ஒலிக்கு மாத்திரம் சக்தியிருக்குமானால் அந்த வேப்ப மரம், இனிப்பு மரமாக மாறியிருக்கும். அவ்வளவு தித்திப்பான கதைகள்.

ஒரு நாள் நீண்டு உயர்ந்த மதிலுக்கு உள்ளே ஒரு சிறிய பந்து வந்து விழுந்தது. வெளியே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் கையிலிருந்து தப்பி, அது எங்கள் வசமில் சிக்கியது.

உடனே ஒரு திட்டம் போட்டோம். ஒரு பழைய வேட்டியைக் கிழித்து வலைபோலக் கட்டினோம். எங்கள் கைகளைப் பந்தடிக்கும் மட்டை ஆக ஆக்கிக்கொண்டு தினந்தோறும் விளையாட ஆரம்பித்தோம். அந்த விளையாட்டுக்குப் பந்தயம் எல்லாம் கட்டுவதுண்டு.

தோழர் வேணு, தனக்கு வந்த கடலை உருண்டைகளையெல்லாம் பந்தயத்தில் இழந்து, துவரையை இழந்து, சோற்றையும் ஒரு நாள் இழந்து, தரும மகாராஜன் போல நின்று கொண்டிருந்தார். தோழர் ராம சுப்பையா பந்து விளையாட்டில் என்னுடைய கட்சி. வருகிற பந்தையெல்லாம் சாமர்த்தியமாக அடித்துவிடுவார். ஆனால் ஒரு குறை; பந்து வலையைத் தாண்டி அப்புறம் போகாது! அவ்வளவுதான். கஸ்தூரி, சத்தியின் கட்சியிலேயிருந்து விளையாடுவார். பந்து தானாகவே போய் அவரது கையில் மோதி எங்களிடம் திரும்பி வரும் காட்சி அற்புதமாக இருக்கும்; அவ்வளவு கஷ்டப்பட்டு விளையாடுவார்.

அந்த விளையாட்டிலும், இடையே தொய்வு ஏற்பட்டு விட்டது. ஜெயில் ஆகாரத்தைச் சாப்பிட்டு விட்டு இம்மாதிரி வேலைகளை யெல்லாம் எங்களைப் போன்ற பலசாலிகள் செய்யலாமா? எல்லாருக்கும் உடம்பு வலி. உட்கார முடியாது. நிற்க முடியாது; நான் ஊசியும் போட்டுக்கொண்டேன். பிறகு, மீண்டும் ஆசை பிறந்தது விளையாட ஆனால் விளையாட்டுக்கு விரைவில் முடிவு ஏற்பட்டு விட்டது.

காரணம், கல்லக்குடிப் பட்டாளத்தை நோக்கி விடுதலை சென்று விட்டது. விடுதலைக்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே ராம சுப்பையா கண்ணீர் விட ஆரம்பித்து விட்டார். விடுதலை நாளும் வந்தது. அக்டோபர் 15-ஆம் நாள் காலையிலே அவர்களும் எம்மைவிட்டுப் பிரிந்தார்கள். சிறைச்சாலையிலே அகப்படும் பூக்களைக் கொண்டு ஒரு மாலை சூட்டினார்கள். பிரிவுரை கூறினார்கள். கோவெனக் கதறி அழுதார்கள். அவர்கள் வாய்விட்டுக் குழந்தை போல அழுத காட்சியை இப்போது நினைத்தாலும் கண் கலங்குகிறது.

''வேணு போலப் பறந்து பணியாற்றிட யாரால் முடியும்?''

''இனிமேல் ராம சுப்பையா போல் எண்ணெய் தேய்த்து விட யார் ஓடி வருவார்கள்?''

''கட்சிச் செய்திகளைக் கேட்டிட ஆர்வமுடன் அடிக்கடி வந்திட மலைக்கோட்டை ரத்தினம் போல யாருளர் இங்கே?''

''எது கேட்டாலும் சிரித்துக் கொள்ளும் எத்திராஜ்!''

இப்படி ஒவ்வொருவரையும் பற்றி எண்ணினேன். என் பின்னே அணி வகுத்து வந்த கல்லக்குடிப் படை வரிசை கண்ணீரைக் கொட்டியபடி நிற்பதையும் கண்டேன்.

''நேசமுள்ள நண்பர்களே; பாசம் நிறைந்த தோழர்களே! என் ஆசைக் கண்மணிகளே!'' என்றேன். அதற்கு மேல் பேச முடியவில்லை. ''போய் வருக'' என்று கையால் ஜாடை காட்டினேன். ராம சுப்பையா கட்டிக்கொண்டு கதறிவிட்டார். பிரிவு, பிரிவு, கட்டிக் காத்த குடும்பப் பாசத்தில் குறுக்கிட்ட பிரிவு, அவர்களை எங்களிடமிருந்து விடுதலை என்னும் சொல் பிரித்துக் கொண்டு போய் விட்டது!

51

சிறைச் சீர்திருத்தம் செய்தோம்

சிறையிலேயே கைதிகளின் அவல நிலைமைகளை எண்ணிடும் போதில், எப்போதாவது அவர்களுக்குச் சில நலன்களைப் புரிந்திட நம்மால் இயலுமா என நான் சிந்திப்பதுண்டு. ஆனால் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிடும் நன்னாள் ஒரு நாள் வரும் என்றே, பேரறிஞர் அண்ணா அவர்களோ அல்லது நானோ முதலமைச்சர் பொறுப்பிலே அமர்வோம் என்றே நான் அப்போது எண்ணிப் பார்த்ததில்லை.

1967-ஆம் ஆண்டு கழகம் மக்களின் பேராதரவோடு ஆட்சிக் கட்டிலில் அமர்த்தப்பட்டவுடன் முன்னாள் கைதிகளான எங்கள் மனத்தில் நம்மால் முடிந்த அளவு சிறைச்சாலைகளைச் சீர்திருத்திட வேண்டுமென்று பேரார்வம் மூண்டெழுந்தது.

இந்த ஐந்தாறு ஆண்டுகளில் சில குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்துள்ளோம்.

'சி' வகுப்புக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, எண்ணெய், பற்பசை, பல்துலக்கும் தூரிகை, பவுடர் ஆகியவைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். ஏ' வகுப்பு, 'பி' வகுப்புக் கைதிகளைப் போல் 'சி' வகுப்புக் கைதிகளும் கடிதத் தொடர்பு கொள்ளவும், வெளியிலிருந்து வருபவர்களை நேரில் பார்க்கவும் அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாகக் கைதிகளிடையே இருந்த ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட்டன.

சிறைச்சாலையின் கண்காணிப்பாளரால் அனுமதிக்கப்பட்ட செய்திப் பத்திரிக்கைகளையும், வார, மாத, இதழ்களையும் படித்திட 'ஏ' வகுப்பு 'பி' வகுப்புக் கைதிகள் அனுமதிக்கப்பட்டனர். மத்திய சிறைச் சாலையில் உள்ள கைதிகளுக்கும், பார்ஸ்டல் பள்ளிக் கூடத்தில் உள்ளவர்களுக்கும் பொங்கல் நாளன்று அதிக உணவு அளிக்கப்பட்டது.

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டையொட்டிக் கைதிகளின், தண்டனைக் காலங்கள் வெவ்வேறு தர அளவில் குறைக்கப்பட்டன. இதனால் 2,784 கைதிகள் விடுதலையடைந்ததுடன், 11,488 கைதிகள் பயனடைந்தனர். சிறை கைதிகள் எழுதிய கவிதைகளைத் தொகுத்து 'சிறை தரும் தேன் கவிதை' என்ற நூல் வெளியிடப்பட்டது.

பெண் கைதிகளின் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக வேலூரில் ஒரு குழந்தை வளர்க்குமிடமும் ஒரு குழந்தை காப்பிடமும் கட்டப்பட்டன.

கோடைக் காலத்தில் வெம்மையைத் தணித்துக் கொள்வதற்காகப் பனை மட்டை விசிறிகள் கைதிகளுக்கு வழங்கப்பட்டன.

கைதிகள் ஓய்வு நேரங்களில் கேரம், செஸ் விளையாட அனுமதிக்கப்பட்டனர்.

அரசின் செலவிலேயே அரசாங்கத் தேர்வுகளுக்குச் செல்ல கைதிகள் அனுமதிக்கப்பட்டனர். பார்ஸ்டல் பள்ளிக்கூடத்திலுள்ள வர்கள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

எல்லா வகுப்புக் கைதிகளும் விரும்பும் வரை, மாத இதழ்களை வாங்கிப் படிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவ்விதழ்கள் மதிப்பிற்குரியவைகளாக இருக்க வேண்டும். அரசாங்கச் செலவில் 100 கைதிகளுக்கு ஒரு பத்திரிகை வீதம் தினமணி, சுதேசமித்திரன், நவமணி ஆகிய பத்திரிகைகள் வழங்கப்பட்டன. இவ்வசதிகள் தூரச் சிறைச்சாலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டன.

கைதிகள் பரிசுச் சீட்டுகள் வாங்க அனுமதிக்கப்பட்டனர். மூன்று கைதிகள் பரிசும் பெற்றுள்ளனர்.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டிக் கைதிகளின் தண்டனைக் காலங்கள் பல்வேறு தர அளவில் குறைக்கப்பட்டன. இதனால் 2,687 கைதிகள் விடுதலை செய்யப்பட்டதுடன், 9,561 கைதிகள் பயன் அடைந்தனர். 12-11-68-க்கு முன்பு மரண தண்டனை பெற்றவர்கள் அனைவருக்கும் இந்திய அரசு முடிவின்படி மரண தண்டனை நீக்கப் பட்டு, வாழ்நாள் தண்டனை அளிக்கப்பட்டது. இதனால் 111 கைதிகள் தூக்கு மரத்தில் ஏற்றப்படுவதிலிருந்து தப்பினர்.

தஞ்சாவூருக்கு அருகில் நீலகிரி என்ற இடத்தில் 114 ஏக்கர் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கப்பட்டது. திறந்த வெளிச் சிறைச்சாலையில் குறைந்த அளவு கண்காணிப்பே இருந்தாலும், இதுவரை யாரும் தப்பித்துச் செல்லவில்லை. அங்கு கைதிகள் கிணறு வெட்டுதல், நிலம் திருத்துதல், உழுதல், பயிரிடுதல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அங்குள்ள கைதிகளுக்கு நாளொன்றுக்கு 50 கிராம் அரிசி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு நாளொன்றுக்கு 25 பைசா கூலியும் கொடுக்கப்படுகிறது. ஆறு நாள் வேலை செய்தால் ஒரு நாள் தண்டனைக் காலம் குறைகிறது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு மாதமொன்றுக்கு 90 கிராம நல்லெண்ணெயும் 45 கிராம் சிகைக்காய்த் தூளும் கொடுக்கப் படுகின்றன.

நான் முதலமைச்சரான பின்னர் கல்வி சம்பந்தமான ஒலி பரப்புகளைக் கேட்டுக் கைதிகளும் பயனடைய வேண்டும் என்பதற்காகக் கோயமுத்தூர், சேலம், சென்னை மத்திய சிறைகளுக்குப் புதிய வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

சிறைச்சாலைகளில் செய்யப்படும் மனைத் துணைப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டு மரங்களை வளமாக்கும் நிலையமொன்று வாங்கப்பட்டது. நாட்டு மரங்களைத் தேக்கு மரங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தியதால், திருச்சி மத்திய சிறையில் குறிப்பிடத் தகுந்த அளவு செலவு குறைந்தது.

புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளிக்கூடத்திற்குப் புதிய தச்சுப் பட்டறை வாங்க ரூபாய் 36,000 அனுமதிக்கப்பட்டது.

சேலம் மத்திய சிறைச்சாலையில் உள்ள அலுமினியத் தொழிற் சாலைக்குச் சுழலும் கடைசல் பொறி வாங்கப்பட்டதால், அலுமினியப் பொருள்களின் உற்பத்தி விலை குறைந்ததுடன், உற்பத்தியும் பெருகியது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 61-ஆவது பிறந்த நாள் விழாவை யொட்டி 15-9-69 அன்று 15 ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தண்டனை அனுபவித்தவர்கள் இரக்கம் காட்டும் குறிப்பாக விடுதலை செய்யப்பட்டனர். இதனால் 21 கைதிகள் பயனடைந்தனர்.

புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக் கூடத்தில் உள்ளவர்களில் சிலர், புதுக்கோட்டையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நாள் தோறும் சென்று பயிற்சி பெற்றுத் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்குப் புத்தகம் வாங்க ரூபாய் 54 அனுமதிக்கப்பட்டது.

புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கூடம், சேலம், திருச்சி மத்திய சிறைச்சாலைகள் மற்றும், சில துணை சிறைச்சாலைகளில் நீரால் எளிதில் தூய்மைப் படுத்தப்படுகிற கழிப்பிடம் கட்டுவதற்காக ரூ. 2,69,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. அவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மூன்று திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் பண்ணை வேலை செய்து வரும் கைதிகளுக்கும், மாதவரம் பால் பண்ணையில் கிணறு தோண்டும் வேலையில் ஈடுபடும் கைதிகளுக்கும் தண்டனைக் குறைப்பு, கூலி, பீடிகள், எண்ணெய், சிகைக்காய்த்தூள் முதலியன வழங்கப்பட்டன.

துணைச் சிறைச்சாலைகளில் உள்ள எல்லாக் கைதிகளுக்கும் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, எண்ணெய், சிகரெட், பீடிகள், புகையிலை முதலியவைகள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

துணைச் சிறைச் சாலைகளில் உள்ள கைதிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குத் தலைக்கு 28 கிராம் நல்லெண்ணெய், 28 கிராம் சிகைக்காய்த் தூள் வீதம் மாதந்தோறும் அளிக்கப் படுகிறது.

எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் உள்ள குற்றவாளிக் காவலர்களுக்கு (Convict Warders) தனிச் சமையற்கூடமும், சாப்பிடும் இடமும் அளிக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து நிரந்தரமாகவும் ஆக்கப்பட்டன.

மத்திய சிறை, துணைச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் தங்கள் துணிகளைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு அரை பார் துணி சோப்பு வழங்கப்பட்டது.

சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு விலங்கிடுவதை மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டதாகக் கருதி, அம்முறை விலக்கப்பட்டது.

நீரினால் எளிதில் தூய்மைப்படுத்தப்படுகிற கழிப்பிடங்களை வேலூர், பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும், சேலம், கொக்கிரக்குளம் ஆகிய இடங்களில் ஆண்களுக்காக உள்ள தனித் துணைச் சிறைச்சாலைகளிலும், மூன்று ஆண்டுகளில் படிப் படியாகக் கட்டி முடிக்க 2,28,200 ரூபாயும், சென்னை மத்திய சிறையில் மூன்று ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்க 3,20,000 ரூபாயும் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. கடலூர் மத்திய சிறைச்சாலையில் ரூ. 60,000 செலவில் இவ்வகைக் கழிப்பிடங்களைக் கட்டும் திட்டம் அரசின் கவனிப்பில் உள்ளது.

வேலூர் மத்திய சிறையில் தொழு நோயால் பாதிக்கப்பட்ட கைதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், எல்லாச் சிறைச்சாலைகளிலும் உள்ள தொழுநோய்க் கைதிகளையும் வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்திய சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளிக்கூடங்களுக்குச் சமையலாளர் நியமிக்க அனுமதிக்கப்பட்டனர்.

கைதிகளுக்குக் கல்வி வாய்ப்பினை ஏற்படுத்த வேலூர் மத்திய சிறையில் முதல் முதலாக இரவுப் பள்ளிக்கூடம் துவக்கப்பட்டது. படித்த குற்றவாளிகளை ஆசிரியர்களாக்கி இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின்படி மாலை 7 மணி முதல் 9 மணி வரை இரவுப் பள்ளிக்கூடம் நடத்தப் படுகிறது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தேர்வு நடத்தி முடிவும் ஆய்வும் செய்யப்படுகின்றன.

சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை அடைந்த முன்னாள் குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடாது என்று இருந்த தடையை அகற்றி அவர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கி மறு வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக, முன்னாள் குற்றவாளிகள் எந்தச் சூழ்நிலையில் குற்றம் செய்தார்கள் என்ற உண்மையின் அடிப்படையில் ஆய்ந்து, தகுந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க விதியைத் தளர்த்தலாம் என்று அரசு உத்தர விட்டுள்ளது. இதனால் முன்னாள் குற்றவாளிகள் அரசாங்க வேலைகளில் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

52

காத்திருந்து பெற்ற வெற்றிக் கனி

இவ்வளவுக என் வாழ்க்கைக் குறிப்புகளில் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்ட நிகழ்ச்சிகளில் முக்கியமானவைகளான கல்லக்குடிப் போராட்டம், சிறை வாழ்க்கை ஆகியவை பற்றி நான் தொடர்ந்து இதழ்களில் எழுதிக் கொண்டு வர நேரிட்டது. டால்மியாபுரம் பெயரைக் கல்லக்குடியென மாற்றும் உத்தரவை மத்திய அரசு பிறப் பித்து அதன் காரணமாகத் தமிழகமெங்கும் கல்லக்குடி 'வெற்றி விழா' நடைபெற்றுக் கொண்டாடப்பட்டது. பல ஆண்டுகட்கு முன்னர் தொடங்கிய தமிழனின் தன்மானப் போருக்கு வெற்றி கிடைத்து விட்டது. கழகத்தினரைப் பார்த்து அண்ணு அடிக்கடி கூறுவதுண்டு:

"என் முன்னுல் லட்சக்கணக்கான மக்களைக் காட்டுகிறீர்கள், உயர உயரக் கொடிகளை ஏற்றிக் கட்டுகிறீர்கள். வான்முட்ட வாழ்த்து முழக்குகிறீர்கள். கோபுர உயரம் மாலைகள் குவிக்கிறீர்கள். இவைகளை மட்டும் நான் டில்லிக்காரர்களிடம் காட்டினுல் அவர்கள் இறங்கி வருவார்கள் என்று எண்ணுகிறீர்களா? என் பின்னுல் எத்தனை சட்ட மன்ற உறுப்பினர்கள்? எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள்? எத்தனை நகராட்சித்தலைவர்கள்? என்ற கணக்கல்லவா ஜனநாயகத்தில் தேவை என்கிறார்கள்!"

—இப்படி அண்ணு குறிப்பிட்டது எவ்வளவு உண்மை என்ப தற்குக் கழகம் ஆட்சி பீடம் ஏறிய பிறகு பெற்ற வெற்றிகளே தக்க சான்றுகளாகும். 1953-ல் கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயருக்காகப் போராடிப் பலர் சிறை புகுந்து, பலர் அடக்கு முறைகளை ஏற்று, சிலர் உயிர் இழந்து, அதன் பிறகு 1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று ஆண்டு காலம் டில்லியை இடைவிடாமல் வற்புறுத்தி இறுதியில் வெற்றிக்கனியைப் பெற்றிருக்கிறோம்.

முதலில் தொடங்குவது தெற்கு; இறுதி வரை பிடித்துக் கொள்வதும் அதுதான்!"

-என்பது வியட்நாம் நாட்டின் பிரபலமான பழமொழி. இதனை அந்நாட்டுப் புரட்சி வீரன் 'ஹோசிமின்' அடிக்கடி சொல்லத் தவறுவதே இல்லை. அவர் கருத்துப்படி தெற்குப் பகுதி விடுதலை பெறவில்லையாதலால், இறுதிவரை அந்தப் பழமொழியை நினைவூட்ட அவர் மறக்கவே இல்லை. எதனையும் தொடங்குவதில் தெற்குத் திசைக்கு இருக்கும் உயிர்ப்புச் சக்தி பற்றி வியட்நாம் பழமொழி கூறும் பொருள் இருக்கட்டும்; நமது தென்னகத்தில் 1953 ஜூலை மும்முனைப் போராட்டத்திலிருந்து "முதலில் தொடங்குவது தெற்கு; தொடங்கியதைத் தொடர்ந்து முடிப்பதும் அதுதான்"

—என்பது உறுதியாகிவிட்டது. கட்டுப்பாடான போராட்ட முறையும், தட்டுத் தடங்கலில்லாத மக்கள் ஆதரவும், நெடிதுயர்ந்த தலைமையும் எத்தகு அற்புதங்களைச் சாதிக்கும் என்பது தெளிவாக உணரப்பட்ட முதல் சம்பவமே தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்டந்தான்!

காங்கிரசின் விடுதலைப் போராட்ட நாட்களில் தென்னகதைப் பொறுத்த வரையில் களங்களுக்கான தளபதிகள் உருவாக்கப் பட்டார்களே தவிர, மக்கள் தலைவர்கள் யாரும் உருவாகவில்லை. அறிவார்ந்த திறமையாளர்கள் இருந்தனர். மக்களின் இதயத்தோடு பேசும் தலைவர்கள் இல்லை. எதிரியிடம் வாதிட்டுப் போர் புரிவதில் வல்லவர்கள் இருந்தனர். மக்களை வயப்படுத்தும் மாமனிதர்கள் அப்போது இல்லை.

தெற்குக்கு இருந்த அந்தக் குறை பெரியார் பாசறையில் தயாரான அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நுழைவால் நீங்கி, மும்முனைப் போராட்ட நாட்களில் நிறைவு கண்டது.

மும்முனைப் போராட்டத்தின்போது நாட்டின் அரசியல் நிலையும் மக்களின் மன நிலையும், அதிகாரம் வகித்தோரின் அலட்சிய மனப் பான்மையும், ஜனநாயகத்திற்கு இருந்த அவக்கேடும் யாராலும் சரியாக உணரப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பொதுவாக நமது ஜனநாயக அரசியல் சட்டம் 1933-க்கு முன்பு ஜெர்மனியில் வீமார் குடியரசின் அரசியல் சட்டத்தைப் போலவே மதிப்புப் பெற்றிருந்தது. அரசியல் சட்டத்தைக் காட்டிலும் காங்கிரஸ் கட்சியின் விதி முறைகள் கவனமாக நாட்டில் படிக்கப்பட்டன.

இந்தோனேசியாவில் சுகர்னோ செய்ததைப் போல் இந்தியாவிலும் ஜனநாயகத்திற்குக் கட்டுப்பாடும், காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்

புகளுக்கேற்ப அரசியல் சட்டங்களும் உருவாக்கப்படும் சூழ்நிலையும் நிலவிற்று. சமுதாயத்தின் முற்போக்குக் கருத்துக்களைப் பண்டித நேரு பரப்பிக் கொண்டிருந்தாலும், மற்ற காங்கிரஸ்காரர்கள் 'மனு மாந்தாதா காலம் திருமபாதா, என்று பேராசை பிடித்து அலைந்தனர். இந்தியா என்பது புது டில்லியின் அரசியல் புழுதியில் மூடி மறையக் கூடிய நிலப் பகுதியாகவே கருதப்பட்டது.

காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் வெற்றி என்பவைகளைத் தவிர, நாடு மற்ற தலைவர்களையோ மற்ற கட்சி களையோ, மற்ற கருத்துக் கொண்ட மக்களையோ கொண்டிருப்பதாக அரசியல் அதிகாரம் பெற்றோர் அப்போது கருதவில்லை.

இந்நிலையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் சமுதாயம்-தமிழ்ப் பற்று ஆகியவைகளை உள்ளடக்கிய நாடு தழுவிய பெரும் போர் முனைகளை, ஒரே நாளில் நடைபெறுவதாக அறிவித்து உருவாக்கினார்கள். போராட்ட முடிவுகளைப் பற்றி யாருக்கும் ஐயப்பாடு இல்லை. ஆனால் விளைவுகள் மிகப பயங்கரமாக இருக்கும் என்று எதிர்பார்த்தே பல்லாயிரக்கணக்கானவர் களம் புகுந்தனர்.

"ஈண்டுச் செல்லும் மக்காள், நீவிர் ஸ்பார்ட்டா சென்று பகர்வீர். நாங்கள் பணியை முடித்துப் படுத்தோம்!"

-என்று ஸ்பார்ட்டானிய மாவீரன் ஒருவன் கூறிக் கொண்டே களத்தில் மடிந்ததாக அவன் மாண்ட இடத்தில் நடப்பட்டுள்ள கல் வெட்டின் வீர வரிகளை எண்ணிக் கொண்டே நாங்கள் போர்க்களம் சென்றோம். அந்த வரலாறு தன் பணியை முடித்துப் படுத்ததாக நடுகல் லில்லை எழுதப்பட்டதாக வரலாறு முழங்குகிறது. ஆனால் கல்லக்குடிப் போராட்டத்திலே நாங்கள் படுத்துப் 'பணி' முடிக்கச் சென்றோம். கல்லக்குடி வெற்றி வாழ்வின் போது நான் தலை வைத்துப் படுத்திருந்த அந்தத் தண்டவாளத்தைச் சென்று பார்த்தேன். அன்று படையின முதல்வனாகச் சென்றேன், போலீசார் புடைசூழ. இன்று தமிழக முதல வனாகச் சென்றேன்; அதே போலீசார் புடைசூழ!

அன்றிருந்த மகிழ்ச்சி இன்றில்லை. ஆனால் வெற்றிப் பூரிப்பு சாதாரணமானதல்லவே! முமமுனைப் போர் நடந்த அந்த 1953-ஆம் ஆண்டில் உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள்! எகிப்து மன்னன் பரூக் விரட்டப்பட்டுப் பிரதமராகப் பொறுப்பேற்ற நகீபுக்குத் துணைப் பிரத மராக நாசர் பொறுப்பேற்றுக் கொண்டது 1953-ல்தான். அந்த ஆண்டு மார்ச் திங்களில் ரஷ்யாவில் ஸ்டாலின் காலமானார். தொடர்ந்து டிசம்பர் 23-ஆம் நாள் ரஷ்யாவில் பெரியார் சுட்டுக் கொல்லப்பட்டார். ஹில்லாரி, டென்சிங் நார்கே ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலாக மனிதர்களின் காலடியைப் பதித்த ஆண்டும் அதுதான்!

அந்த ஆண்டு நவம்பர் 21-ஆம் நாள் திருச்சி சிறையிலிருந்து நானும் முல்லை சத்தி, கஸ்தூரி, குமாரவேல், குழந்தைவேல் ஆகியோரும் விடுதலை பெற்றோம். சிறை வாசலில் தலைமைக் கழகப் பொறுப்பாளர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் மாலை யணிவித்து வரவேற்றார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் என்னைக் கட்டித் தழுவி, கண்ணீர் மல்கிட வரவேற்றார். அன்று எங்களுக்குப் பாராட்டு விழாக் கூட்டம் நடத்தத் திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. தென்னூர்ப் பகுதியில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மறுநாள் திருவாரூரில் பாராட்டு விழாக் கூட்டம் நடைபெற்றது. நவம்பர் 29-ஆம் நாள் சென்னையில் வரவேற்பு. அப்போது சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் கண்ணபிரான் எங்களை வரவேற்க மகத்தான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். எழும்பூர் ரயில் நிலையத்தில் ரயிலில் இருந்து இறங்க முடியாத அளவுக்கு மக்கள் குழுமியிருந்தனர். வண்டியிலிருந்து கீழே இறங்கியதுதான் தெரியும்; எத்தனையோ பேரின் தோள் மீது பந்து போல் உருண்டு கொண்டேயிருந்தேன்.

வாழ்த்து முழங்கியவாறு என்னைக் கசக்கியெறியும் கூட்டத்திலிருந்து விடுவிப்பதற்காக மதுரை முத்து பட்டபாடு கொஞ்சமல்ல! பிறகு அங்கிருந்து பெரியதோர் ஊர்வலம் புறப்பட்டது.

மவுண்ட் ரோடு வழியாக அந்த ஊர்வலம் வந்தபோது, போக வழியில்லாமல் ஒரு பிரபல அமெரிக்கரின் கார் தடைப்பட்டு நின்று விட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்பு என் ஊர்வலத்தைக் கண்டு அது பற்றி விசாரித்தறிந்தவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார். அவர்தான் நிக்சன்.

இருபது ஆண்டுகட்கு முன் கல்லக்குடி களம் சென்று சிறை மீண்டு வந்த நான், இன்று கல்லக்குடி வெற்றி கண்டு மகிழும் வகையில் தமிழகத்தின் முதல்வனைப் பொறுப்பேற்றிருக்கிறேன்.

தமிழகத்தின் இந்த ஜனநாயக ஒளியை வழங்கியவர் அண்ணா என்பதில் ஐயமுண்டோ? அந்த மக்கள் தலைவன் தெற்குப் பகுதியில் தொடங்கிய அமைதியான புரட்சியை யார்தான் மறக்க இயலும்?

என்னுடன் சிறையிலிருந்த குமாரவேலன் சிறையிலேயே நோய்வாய்ப்பட்டிருந்து, விடுதலை பெற்ற சில நாட்களுக்கெல்லாம் உயிர் இழந்ததையும், அடுத்து சில மாதங்களுக்குப் பிறகு குழந்தைவேலன் உயிர் இழந்ததையும் என்னால் மறக்கவே இயலாது.

சிறைப்பட்ட சிங்கங்கள், உயிர் நீத்த தங்கங்கள் அனைவரும் ஈட்டித் தந்ததன்றோ இந்த இணையற்ற வெற்றி என எண்ணும் போதெல்லாம் நெஞ்சம் நெக்குருகுகிறது.

1953-ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டங்கள் முடிவுற்று சிறைப்பட்ட தலைவர்களும், தொண்டர்களும் விடுதலை பெற்ற பிறகு, கழகப் பணி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் அமைந்தது. பிரச்சாரப் பணியில் சிலர்; கழகத்திற்குப் பொருளீட்டும் பணியில் சிலர்; கழகத்தின் மீது போடப்பட்டிருந்த வழக்குகளை நடத்துகின்ற பணியில் சிலர்- இவ்விதம் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர் கழகத்தினர்.

53

அண்ணாவுக்கும் கோபம் வரும்.

அண்ணா சில நேரங்களில் என்னிடம் கோபித்துக் கொண்டிருக்கிறார். அந்தக் கோபத்தின் காரணமாக வாரக் கணக்கில், ஏன் மாதக் கணக்கிலே கூட என்னிடம் சரியாகப் பேசாமல் இருந்திருக்கிறார்.

அந்தக் கோபமும் வருத்தமும் நான் கட்சி வேலைகளைச் சரியாகக் கவனிக்கவில்லை என்பதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ அல்ல; கழகம் நடத்துகிற போராட்டங்களில் தீவிரம் காட்டப்பட வேண்டும் என்பதிலும், போர்முறைகளை எந்த வகையில் வகுக்கப்பட வேண்டும் என்பதிலும் அண்ணா அவர்களின் கருத்துக்கு எதிரான கருத்துக்களை நான் சொல்ல நேரிடுவதை ஒட்டித்தான் அவருடைய செல்லக் கோபத்திற்கு நான் ஆளாகிவிடுவேன். அவர் என் மேல் ஆத்திரமுறுகிற எந்த நேரத்திலும் என்னிடம் வைத்திருந்த அன்பில் அ[illegible]ய அளவையும் அவர் குறைத்துக் கொண்டது கிடையாது.

கல்லக்குடிப் போராட்டத்தில் டால்மியாபுரம் பெயர்ப் பலகையின் மீது கல்லக்குடி என்று அச்சடிக்கப்பட்ட தாளை ஒட்டி விட்டுத் திரும்ப வேண்டுமென்றும், ரெயில் நிறுத்தப் போராட்டத்தில் அபாயச் சங்கிலியை இழுத்து ரெயிலை நிறுத்த வேண்டுமென்றும்தான் அண்ணா அவர்கள் திட்டம் தீட்டித் தந்தார்கள். ஆனால் கல்லக்குடி என்ற தாளை நான் ஒட்டியதும் போலீசார் என்னைக் கைது செய்யாமல் அலட்சியப் படுத்தியதை நான் உணர்ந்தவுடன், புகைவண்டியின் முன்னால் படுப்பது என்ற திட்டத்தினை அந்த இடத்திலேயே நான் வகுத்தேன் அதற்கு ஏற்பத் தொண்டர்களும் என்னைப் பின்பற்றினார்கள்.

அதன் காரணமாக நடந்த துப்பாக்கிப்பிரயோகம், அதிலே இழந்த இரண்டு உயிர்கள் தொடர்பாக எனக்கும் தோழர்களுக்கும் கிடைத்த ஆறுமாதச் சிறைவாசம் இவைகள் எல்லாம் அண்ணு அவர்களின் உள்ளத்தை உருக்கின என்றாலும், நான் திடீரென்று கல்லக்குடிக் களத்தில் தீவிரமான ஒரு திட்டத்தினை வகுத்துக் கொண்டு அறப் போர் நடத்தியதை அவர் விரும்பவில்லை என்பதை வெளிப்படையாகவே சொல்லி என்னிடம் கோபித்துக் கொண்டிருந்தார். ஆனால் அண்ணுவின் கோபத்தைப் பயன்படுத்தி அண்ணுவிடமிருந்து என்னைப் பிரித்து விடுவதற்குக் கழகத்திலே சில முக்கியமானவர்கள் இதுதான் சமயம் என்று முயன்று பார்த்தார்கள்.

அண்ணு என்னைக் கோபித்துக் கொண்டது இதற்கு மேலும் நான் தீவிரமாகப் போய் விடக் கூடாது என்று தடுப்பதற்காகத்தானே தவிர, அப்பொழுது தீவிரமாகப் போனதற்காக அல்ல என்பதையும், கழகத்தில் தீவிர வாதிகள் மீது அவர் உள்ளூர எந்த அளவிற்கு அன்பு வைத்திருந்தார் என்பதையும் அறிய மாட்டாதவர்கள் அண்ணுவிற்கும் எனக்கும் இடையே பகை வளர்க்கும் ஏற்பாட்டில் சில நாட்கள் வெற்றி வீரர்களாகத் திகழ்ந்து, நாளா வட்டத்தில் அவர்களாகவே வீழ்ந்து விட்டார்கள்.

1942-ல் வார்தாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் காந்தியடிகள் நேருவைத் தனது வாரிசு என்று குறிப்பிட்டுப் பேசிய முக்கியமான சொற்பொழிவில் ஒன்றைக் குறிப்பிட்டார்.

"நானும் ஜவஹர்லாலும் எதிரிகளாகிவிட்டதாகச் சிலர்சொல்கிறார்கள். அப்பிராய பேதம் மாத்திரம் எங்களுக்கிடையே வருத்தத்தை வளர்க்கப் போதுமானதல்ல. என் பாஷை ஜவஹர்லாலுக்கும், அவர் பாஷை எனக்கும் புரியவில்லை எனிகிறார்கள்.ஆனால் உள்ளங்கள் ஒன்று பட்டுவிட்டால் பாஷை வித்தியாசம் என்ன செய்யும்? நான் போன பிறகு அவரே என் பாஷையைப் பேசுவார் என்பது எனக்குத் தெரியும்."

இதுபோல் காந்தியடிகள் பேசினார். காந்திஜியின் இடத்திலே அண்ணுவை வைத்துப் பார்க்கிறேன். ஆனால் நேருவின் இடத்தில் நான் இருப்பதாக என்னால் கற்பனை கூடச் செய்ய முடிய வில்லை. ஆயினும் ஒரு தலைவனுக்கும், அந்தத் தலைவனது ஆருயிர்த் தொண்டனுக்கும் இடையில் கருத்து வித்தியாசங்கள் இருக்கலாம். எங்கள் உள்ளங்கள் ஒன்றுபட்டு விட்டால் அந்த வித்தியாசங்களைப் பயன்படுத்தி எங்களுடைய விரோதத்தை வளர்க்க எந்த வித்தகர்

களாலும் முடியாது என்பதற்கான எடுத்துக்காட்டுதான் காந்தியடிகளின் வார்தாப் பேச்சு என்பதை நான் அடிக்கடி எண்ணிக் கொள்கிறேன்.

கருத்து மாறுபாடுகள் ஒரு கட்சியின் நலனை முன்னிட்டு இருந்திட வேண்டும். அந்தக் கட்சியை வளர்ப்பது எப்படி என்ற பொது நலத்தின் அடிப்படையில் அமைந்திட வேண்டும். கட்சிக்கு நாம் என்ன செய்தோம்; இன்னும் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியின் அடிப்படையில் கருத்து வேறுபாடுகள் எழுதுவது இயற்கை; அனுமதிக்கக் கூடியது; அதன் காரணமாகப் பிளவுகள் என்றுமே எழாது.

ஆனால் கட்சி தனக்கு என்ன செய்தது; தனக்குக் கட்சி என்னென்ன செய்ய வேண்டும் என்ற தன்னல அடிப்படையில் எழுகின்ற கருத்து வேறுபாடு அனுமதிக்கத் தக்கதும் அல்ல; அது கட்சியை வளர்ப்பதற்குப் பயன்படக் கூடியதும் அல்ல.

காந்தியடிகள் தொடங்கிய தனி நபர் சத்தியாக்கிரகம் ஆங்கிலேய அரசாங்கத்தைச் சற்றும் அசைக்கவில்லை என்ற விமரிசனத்திற்குக் காந்தியடிகள் பதில் கூறும்போது குறிப்பிட்டார்: "இயக்கத்தின் இந்த வேகமும், நடையும், போக்கும் எனக்குத் திருப்தி தருவதாக இருக்கின்றன. அதன் வேகத்தை அதிகரிக்கச் செய்ய நான் விரும்பவில்லை. அகிம்சை வழியிலேயே அது தானாகவே வேகம் பெறும். அதிசயம் நிகழ வேண்டும் என்று மக்கள் விரும்புவதற்காகவே அது நிகழ்ந்து விடாது."

இதே கருத்தினைத்தான் அண்ணாவும் அறப் போராட்டக் காலங்களில் வலியுறுத்தினார். அதனைத் தொடக்கத்தில் ஏற்றுக் கொள்வது என்னைப் போன்றவர்களுக்குக் கொஞ்சம் கசப்பாக இருந்தாலும் பிறகு மெல்ல மெல்ல அண்ணாவின் கருத்திற்கே ஆக்கம் அளிக்கத் தொடங்கினேன்.

1961-ஆம் ஆண்டு கழகத்தையும், அண்ணா அவர்களையும் தாக்குகின்ற அளவிற்கு எதிர்முகாம் அமைத்துவிட்ட புல்லுருவிகள் திடீரென்று தங்கள் உருவத்தைக் காட்டினார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. அவர்களுடைய உருவம் வெளியாவதற்கான கால கட்டத்தைக் கணக்கிட வேண்டுமானால், 1960-க்குப் பத்து ஆண்டுகள் பின்னேக்கிச் செல்ல வேண்டும்.

54

கோவில்பட்டி மாநாடு

கழகம் தொடங்கியவுடன் நடந்த மாவட்ட மாநாடுகளில் கோவில்பட்டியில் நிகழ்ந்த நெல்லை மாவட்ட மாநாடு குறிப்பிடத்தக்க ஒரு மாநாடு ஆகும். அந்த மாநாட்டில் தலைமை ஏற்கும் பணி எனக்கு அளிக்கப்பட்டிருந்தது.

மாநாட்டுத் தலைவன் என்ற முறையில் கழகத்தின் அமைப்புகள், சிற்றூர்க் கிளை, நகரக் கிளை, வட்டக் கிளை, மாவட்டக் கிளை, தலைமைக் கழகம் என்கின்ற அளவில் பரவலாக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு அமைப்புக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென்றும், தலைமைக் கழகத்தின் தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அவைகள் சிற்றூர்க் கிளைகளுக்குச் சென்றடைகிற அளவிற்கு எல்லா மட்டத்திலும் உள்ள அமைப்புகளுக்கு இடையே ஒரு சங்கிலித் தொடர்பு இருக்க வேண்டுமென்றும், அத்தகைய நிலையை இன்னும் நாம் உருவாக்காமல் இருப்பது வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டேன். அத்துடன் தமிழகம் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக் காட்டி, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதன் அடையாளமாகக் கழகம் போராட்டங்கள் வகுக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொன்னேன்.

என்னுடைய தலைமை உரையைக் கண்டித்துத் தோழர் ஈ. வி. கே. சம்பத் அந்த மாநாட்டிலேயே வெளிப்படையாகப் பேசினார். ''நேற்று வந்தவர்கள், இன்று வந்தவர்கள் எல்லாம் கழகத்திற்குத் திட்டங்கள் சொல்லுகிறார்கள். நாம் வளர்ந்து இருக்கின்ற ஒழுங்கிற்கு இப்போது உள்ளதே போதும்'' என்று குறிப்பிட்டார்.

மாநாட்டினர் அவரது சுடுமொழிகளை ஏற்கவில்லை. மாநாட்டில் இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள் என்னுடைய தலைமை உரையில் குறிப்பிட்ட குறைபாடுகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு, நான் கேட்டுக் கொண்டவாறு போராட்டத் திட்டங்களை அந்த மாநாட்டிலேயே வெளியிட்டார். அண்ணா பேசி முடித்த பிறகு யாரும் பேசுவது இல்லை. என்றாலும் மாநாட்டினரிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அண்ணாவின் உரைக்குப் பிறகு சில நிமிடங்கள் தலைமை முடிவுரையைப் பேசினேன். அப்போது நான் குறிப்பிட்டது இன்றும் எனக்கு நினைவில் இருக்கிறது பசுமையாக.

''சர்வாதிகாரத் தலைவன் ஒருவனின் தலைமையிலே நான் இருந்திருந்தால், 'தலைவரே திட்டம் கொடுங்கள்' என்று கேட்கும்போது. 'நேற்று வந்தவன், இன்று வந்தவன் எல்லாம் திட்டம் கேட்பதா? என்று அந்தச் சர்வாதிகாரத் தலைவர் கேட்டிருப்பார். ஆனால் நமது அண்ணா ஜனநாயகத்தின் காவலர். ஆகவேதான் நான் கேட்ட போராட்டத் திட்டத்தினை ஏற்றுக்கொண்டார்.''

இதை நான் பேசி முடித்ததும் மாநாட்டினர் பெருத்த கையொலி செய்து எனக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். அப்போது நமக்குள்ள கருத்துப் பத்திரிகையும் செய்திப் பத்திரிகையும் 'திராவிட நாடு' இதழ்தான். அந்த இதழ் தடத்தும் பொறுப்பினைத் துணை ஆசிரியராக இருந்த சகோதரர் அரங்கண்ணல் கவனித்து வந்தார். அண்ணா அவரை அழைத்து, ''அரங்கண்ணல்! சம்பத்தின் பேச்சையும் மாநாட்டில் கருணாநிதியின் தலைவர் முடிவுரையையும் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம்'' என்று ஆணையிட்டார்.

55

எரிச்சலாளர் ஏமாற்றம்

அதற்குப் பிறகு சென்னையிலே நடந்த முதல் மாநில மாநாட்டிற்காக மதுரையிலே நடந்த பொதுக்குழுவில் மாநாட்டுத் திறப்பாளர் யார் என்ற பிரச்னை வந்தபோது, குடந்தைப் பெரியவர் கே. கே. நீலமேகம் அவர்கள் மாநாட்டுத் திறப்பாளராகச் சம்பத்தின் பெயரை முன் மொழிந்தார். நானும் அரங்கண்ணல் அவர்களும் மாநாட்டுத் திறப்பாளராக நாவலர் நெடுஞ்செழியன் பெயரை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் சொன்னோம். நீலமேகம் அவர்கள் வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணிடக் கூடியவர்.

உடனே அண்ணா அவர்கள் குறுக்கிட்டு, "இரண்டு பேரும் வேண்டாம். மாநாட்டுத் திறப்பாளராகக் கே. கே. நீலமேகம் அவர்களே இருக்கட்டும்" என்று கூறினார்கள். முதல் மாநில மாநாட்டை அண்ணாவின் கருத்துப்படி கே. கே. நீலமேகம் தான் திறந்து வைத்தார்.

இதற்கு முன்பு நாகர்கோவிலில் நடைபெற்ற குமரிமாவட்ட மாநாட்டில் அந்த மாநாட்டை நடத்தியவர்களில் சிலர் தோழர் சம்பத்தின் நெருங்கிய நண்பர்கள் என்ற காரணத்தினால் அப்பொழுது கழகத்தின் கலைமணியாய் இருந்த கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைவதற்கே அனுமதி தர மறுத்து விட்டார்கள்.

தான் பிறந்த நாகர்கோவிலில் நடைபெறும் மாநாட்டிற்குத் தனக்கே அனுமதி இல்லையா என்று ஏங்கிய கலைவாணர் என்னிடமும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடமும் கண்ணீர் விட்டு அழுதார். அப்படிக் கலைவாணரைத் தடுக்கின்ற துணிவு அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது? அண்ணாவுக்கும் கலைவாணருக்கும் இடையே கடுமையான அபிப்பிராய பேதம் இருப்பதாகக் கழகப் புல்லுருவிகளின் தலைவர் ஒரு கதை கட்டி விட்டார். இருவருக்குமிடையே அவர் கலகம் செய்யவும் முயற்சி செய்தார். அந்தக் காலத்தில் கலைவாணர் சற்று மயங்கினாலும், அண்ணா அவர்கள் மிக விழிப்புடன் இருந்து கலைவாணருக்கும் தமக்கும் பகை ஏதும் வராமல் தடுத்துக் கொண்டார்.

சென்னையில் மாநில மாநாட்டிற்கான வேலைகள் இரவும் பகலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்ணாவும் நாங்

களும் இரவு பகல் எல்லாம் மாநாட்டுப் பந்தலிலேயே அமர்ந்து மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். இரவு பதினேரு மணி இருக்கும்; பந்தலில் பரப்புவதற்காகக் கொட்டப் பட்டிருந்த மணல் மேட்டில் அண்ணு அவர்களும் நானும் வேறு சில நண்பர்களும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது நான் கலிவாணரின் நிலையையும், நினைப்பையும் அண்ணுவிடத்திலே எடுத்துக் கூறி, அவர் சில தோழர்களின் நடவடிக் கைகளால் மனம் புண் அடைந்து ஒதுங்கியிருப்பதையும் குறிப்பிட்டு, அவரைச் சென்னை மாநில மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்ற கருத்தினை அறிவித்தேன். உடனடியாக அண்ணு அவர்கள் என்னைப் பார்த்து, "நீ இப்போதே சென்று அவரை இங்கு அழைத்து வா" என்றார்கள். நான் உடனடியாகக் கலிவாணர் இல்லம் வந்து அண்ணு அழைப்பதாகச் சொன்னதுதான் தாமதம்; கலிவாணர் அருவி போல் கண்களில் நீரைப் பொழிந்து கொண்டு காரிலே ஏறி உட்கார்ந்தார். எஸ். ஐ. ஏ.ஏ. திடலில் மாநாட்டுப் பந்தலுக்கருகே அண்ணு அமர்ந்திருந்த மணல் மேட்டில் கலிவாணர் ஏறி வந்து அண்ணுவைக் கட்டிக்கொண்ட காட்சியும், அண்ணு தழுதழுத்த குரலில் அவரை வரவேற்ற காட்சியும் என்றும் மறக்க முடியாததாகும்.

"என்ன அண்ணு! இந்த மாநாட்டில் நான் கிடையாதா?'

இது கலிவாணரின் கேள்வி.

"மாநாடு உங்கள் வில்லுப் பாட்டோடுதானே துவங்குகிறது?"

—இது அண்ணுவின் பதில்.

கலிவாணரும் அண்ணுவும் கட்டித் தழுவியதைக் காணச் சகிக்காத கலகக்காரர்கள் அதை விட்டு மெல்ல நகர்ந்தனர். ஏற்கெனவே அவர்களுக்கு என் மீது இருந்த எரிச்சல் மேலும் ஆயிரம் மடங்கு அதிகமாயிற்று. எரிச்சல்காரர்கள், நொந்து போனவர்கள் எதையும் கட்சிக்கு என்று செய்யாமல் தமக்கு எந்த இடம் என்பதில் மட்டும் அக்கறை காட்டுபவர்கள். எந்தப் பெரிய கட்சியினுடைய பலத்தையும் குலைக்கிற அளவுக்கு அதன் தலைவர்களிடையே பிளவு உண்டாக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அதைப் புரிந்து கொண்டு கட்சியின் வளர்ச்சியைப் பெரிதாக எண்ணுபவர்கள் இடையிலே இருந்து, அந்தத் தலைவர்களுக்கிடையே ஒற்றுமையை உருவாக்குவதில் விழிப்போடு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாகத் தான் அரசியல் தலைவர் அண்ணு அவர்களுக்கும், கலைத் தலைவர் கலிவாணர் அவர்களுக்கும் இடையே பகை மூட்ட எண்ணியவர்களின் வஞ்சகக் கோட்டை தூள் தூளாக ஆயிற்று.

அண்ணா ஒரு முறை ஓர் எழுத்தாளர் நண்பரைப் பார்த்துச் சொன்னார்: "மாற்றாருக்கு எரிச்சல் உண்டாகும் என்று எண்ணிக் கொண்டு நீ எழுதுகிறாய். அவர்களுக்கு எரிச்சல் வருகிறதோ இல்லையோ, நீ எரிச்சலை வரவழைத்துக் கொண்டு எழுதுகிறாய். இந்த எரிச்சல் மாற்றாரை அழிப்பதற்குப் பதிலாக உன்னையே வீழ்த்திவிடும்!" இந்தப் பொன்மொழியை உணராத சில எரிச்சல்காரர்கள் ஏடுகளில் ஏதேதோ எழுதினார்கள்; மேடைகளில் ஜாடைமாடையாகப் பேசினார்கள்!

1960-ல் உச்ச கட்டமாக "அண்ணாவின் மன்னன்" என்ற எரிச்சல் மிகு கட்டுரையை எழுதுகிற அளவிற்கு இடைக்காலமான ஏழு, எட்டு ஆண்டுகளில் விட்டு விட்டும், தொடர்ந்தும், அண்ணாவையும், பிறரையும் மறைமுகமாகத் தாக்குகிற பாணியில் ஏதேதோ எழுதிக் கொண்டு வந்தார்கள். அதைத்தான் அவர்கள் தங்களது கழகப் பணியாகக் கருதினார்கள். கட்டுகிற வீட்டிற்கு ஒரு செங்கல்லும் எடுத்து வைக்க முயலாதவர்கள், கட்டப்பட்ட வீடுகளுக்குப் பழுது சொல்ல முன் வந்த கதையைப் பார்த்த கழகத் தொண்டர்கள் எல்லாம் அவர்களை ஒதுக்கி வைக்கத் தொடங்கினார்கள்.

அண்ணா எதை எழுதினாலும், எதைப் பேசினாலும் அது கழகத்தில் உள்ள புல்லுருவிகளான தங்களையே குறிப்பிடுவதாக அவர்கள் பறை சாற்றித் திரிந்தனர். கழகத்தில் கலைஞருக்கு இடம் தரலாகாது என்பதைத் தங்களுடைய கோஷங்களில் ஒன்றாக ஆக்கினார்கள்.

காஞ்சிபுரத்தில் நடந்த பொதுக் குழுவில் நாவலர் நெடுஞ் செழியன் மீது தோழர் சம்பத் கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். அது நாவலரை மட்டுமல்ல; அண்ணாவையும் கூட மறை முகமாகக் கண்டித்திடும் வகையில் அமைந்த தீர்மானமாகும். 1951-ல் நடைபெற்ற அந்தக் காஞ்சிபுரம் பொதுக் குழுவின் முடிவினைக் கழகத்தினர் ஆவலோடு எதிர்பார்த்தனர். கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தவரைப் பொதுக் குழு உறுப்பினர்களுடைய கேள்விகளி லிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அண்ணாவுக்கு ஏற்பட்டது. கண்டனங்களுக்கெல்லாம் அமைதியான முறையில் தகுந்த பதில் அளித்து; அந்தத் தீர்மானத்தை அண்ணா அவர்கள் திரும்பப் பெறச் செய்தார். இப்படி எரிச்சல்காரர்களின் கழகப் பணி இந்த விதமாக ஒருபுறத்தில் நடந்து கொண்டிருந்த போது, கழகத்தினைக் கட்டிக் காக்க வேண்டும் என்று எண்ணிய கடமை வீரர்களின் பணி இன்னொரு பக்கத்தில் கண்ணியம் தவறாமல், கட்டுப்பாடு குலையாமல் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

கழகப்பணி புரியக் கடும் பயணம் மேற்கொண்டோம் என்று கூறுகிற நேரத்தில், அந்தப் பயணம் என்ற சொல் பயணத்தின் கடுமையை மாத்திரம் விமரிசிக்கின்ற சொல் அல்ல. கால் நடை யாகவும், வண்டியிலும், காரிலும், ரயிலிலும் மேற்கொண்ட நமது கழகத்தினரின் பயணங்களையும் குறிப்பிடுவதாகும்.

56

முதல் விபத்து

'எனது பயணங்கள்' என்று ஒரு தனிப் புத்தகமே எழுத வேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆசை. ஆனால் அதற்குரிய ஒய்வும் நேரமும்தான் கிடைக்கவில்லை. இந்த வாழ்க்கைக் குறிப்பின் தொகுப்பினூடே இடையிடையே அந்தப் பயண அனுபவங்களை எடுத்துச் சொல்ல முற்படுகிறேன்.

முகவை மாவட்டத்தைச் சேர்ந்த பரமக்குடியில் எனக்கு ஒரு பாராட்டு விழாப் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்தார்கள். சென்னையில் எனக்கு இருந்த அவசரப் பணிகளை முடித்துவிட்டு மாலை மூன்று மணிக்குத்தான் சென்னையிலிருந்து கார் மூலம் பரமக்குடிக்குப் புறப் பட்டேன்.

இது 1953-ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவமாகும். பரம குடியில் மாலை ஆறு மணிக்கு நான் கலந்து கொள்ள வேண்டிய பொதுக் கூட்டத்துக்குச் சென்னையில் மாலை மூன்று மணிக்குக் காரில் புறப்பட்டால் குறித்த நேரத்தில் எப்படிப் போய்ச் சேர முடியும்? சென்னைக்கும் பரமக்குடிக்கும் முந்நூறு மைலுக்குக் குறையாது. கார் திருச்சியை நோக்கி வெகு வேகமாக விரைந்து கொண்டிருந்தது.

மாலை 7-30 மணிக்குத் திருச்சிக்கு அருகில் எட்டுக்கல் தொலைவில் உள்ள சமயபுரத்தின் பக்கம் கார் வரும்போது கொம்பு நீளமாயுள்ள ஒரு கொடி ஆடு காரின் ரேடியேட்டரில் பாய்ந்ததால் ரேடியேட்டர் ஓட்டையாகிவிட்டது. பிறகு அங்கிருந்து திருச்சிக்கு வந்து காரை உடனே பழுது பார்க்க முடியாத காரணத்தால் திருச்சியில் ஒரு வாடகைக் கார் எடுத்துக் கொண்டு பரமக்குடிக்குப் புறப்பட்டேன்.

என்னுடன் அன்பில் தர்மலிங்கம், பராங்குசம், தென்னன் ஆகியோர் வந்தார்கள். பரமக்குடி போய்ச் சேர இரவு மணி பன்னிரண்டு ஆயிற்று. எனக்காகக் கூட்டம் காத்துக்கொண்டிருந்தது. கூட்டத்தைக் கலைய விடாமல் மதுரை முத்து அது வரையில் பேசிக் கொண்டே இருந்தார்.

நான் போனதும் பேசத் தொடங்கினேன். இரவு ஒரு மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. அதன் பிறகு இரவு உணவை முடித்துக் கொண்டு திருச்சி நோக்கிப் புறப்பட்டோம்.

ஏனெனில் மறுநாள் காலை திருச்சி தேவர் மண்றத்தில் ஒரு சிறப்புக் கூட்டத்தில் நான் பேசுவதாக இருந்தது. வாடகை வண்டியோட்டி மிக வேகமாகக் காரைச் செலுத்திய நேரத்தில் எல்லாம் நான் எச்சரித்துக் கொண்டே வந்தேன். ஆனால் நானும் சற்று கண்ணயர்ந்து விட்டேன். என் கூட இருந்த நண்பர்களும் கண்ண யர்ந்து விட்டார்கள். திருச்சி வரும் வழியில் திருப்பத்தூரில் பயணிகள் விடுதிக்கு அருகில் திரும்ப வேண்டிய ஒரு சாலையில் காரைத் திருப்பா மல் காரோட்டிய தோழர் கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டதன் காரணத் தினால் நேராக விட்டு விட்டார். அது சாலை ஓரத்தில் இருந்த மைல் கல்லில் மோதி, அந்தக் கல்லும் உடைந்து, பயணிகள் விடுதியின் முன்புற வாயில் கதவில் போய் மோதிக்கொண்டு நின்றது. இதற் கிடையே காருக்குள் இருந்த நாங்கள் உருண்டு விட்டோம்.

நண்பர்களுக்குக் காயம் எதுவுமில்லை. ஆனால் என் மூக்குக் குள்ளேயிருந்து ரத்தம் குபுகுபுவென்று வந்தது. மயக்கமுற்று விட்டேன். உடனடியாக முதல் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுக் காலை ஒன்பது மணிக்கெல்லாம் திருச்சி வந்து சேர்ந்தேன். மூக்கில் இரத்தப் பெருக்கு நின்று விட்டது.

'அறிவிக்கப்பட்டிருந்த சிறப்புக் கூட்டத்தில் பேச வேண்டிய தேவையில்லை. முகத்தை மாத்திரம் காட்டிவிட்டு வந்தால் போது மானது' என்று நண்பர்கள் வற்புறுத்தவே, அங்கு சென்று சிறிது நேரம் பேசிவிட்டு, ஒரு மணி நேரம் திருச்சி திராவிடப் பண்ணையில் ஓய்வு எடுத்துக் கொண்டேன். அதன் பிறகு கன்யாகுமரி மாவட்டச் சுற்றுப் பயணத்திற்கு நான் புறப்படுவதற்குப் பழுதடைந்திருந்த என்னுடைய கார் தயாராகி விட்டது என அறிவிக்கப்பட்டது. அன்றே திருச்சியிலிருந்து நாகர்கோவில் புறப்பட்டேன். நாகர்கோவில் பகுதி களில் இரண்டு நாள் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு நண்பர் ஒருவர் வீட்டில் தங்கினேன்.

அப்போது தான் என்னுடைய மூக்கின் ஓரத்தில் சிறு வீக்கம் ஏற்படுவதை உணர்ந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் முகமே வீங்கி விட்டது. என்னுடைய இடது கண்ணிலும் லேசாக வலி தெரிந்தது. திருப்பத்தூரில ஏற்பட்ட கார் விபத்தை நான் அலட்சியப்படுத்தி விட்டுத் திருச்சி நிகழ்ச்சியிலும், கன்யாகுமரி மாவட்ட நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டதன் விளைவை அப்போதுதான் உணர்ந்தேன்.

நாகர்கோவில் நண்பர் ஜான் அவர்கள், முகத்தில் ஏற்பட்ட வீக்கம் வடிவதற்கு ஏதேதோ மருந்துகள் போட்டார். ஆனால் விபத்தினால் ஏற்பட்ட காயம் மூக்கின் உள்ளேயும் கண்ணிலும் இருந்ததை அறிந்து கொள்ள அப்போது இயலவில்லை.

வரவர வலி அதிகமான காரணத்தினால் உடனடியாகச் சென்னைக்குத் திரும்ப வேண்டுமென்று முடிவு செய்து புறப்பட்டோம். சென்னையில் மூக்கு வீக்கத்திற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டன. மூக்கிற்கு உள்ளே சீழ் பழுத்து இருந்தது. அது அகற்றப் பட்டது. கண்வலி நின்று விட்டபோதிலும், கண்ணில் அடிக்கடி சிவப்பு நிறம் பரவுவதும், உறுத்தல் உணர்ச்சி ஏற்படுவதும் இருந்து கொண்டே இருந்தன. அப்படி ஒரு மாதம் போக்கி விட்டேன்.

அதன் பிறகு என்னுடைய நண்பர் முல்லை சத்தியினுடைய பிடிவாதத்தால் வேலூர் மருத்துவமனைக்குச் சென்று என் கண்ணைப் பரிசோதித்துக் கொண்டேன்: நீண்ட நேரப் பரிசோதனைக்குப் பிறகு, டாக்டர் என்னைப் பார்த்து, ''சில நாட்களுக்கு முன் ஏதாவது விபத்து ஏற்பட்டு, கண் பக்கம் அடிபட்டதா?'' என்று கேட்டார்.

நான் விவரத்தைச் சொன்னேன். கண்ணிற்குள் ஒரு சிறு நரம்பில் நுண்ணிய கீறல் ஒன்று ஏற்பட்டு இருப்பதாகவும், குறைந்தது ஆறு மாத காலத்திற்காவது எழுதவோ, கூட்டங்களில் பேசவோ, படிக்கவோ கூடாது என்றும், டாக்டர், கண்டிப்பாக வலியுறுத்திக் கூறினார். அப்போது அவரிடத்தில் நான் சரி என்று ஒத்துக்கொண்டதற்கிணங்க இரண்டொரு மாதங்கள் அவ்வாறே கடைப்பிடித்து வந்தேன். ஆனால் எனது வாழ்க்கையில் அப்படிப்பட்ட பத்தியங்களை உறுதியாகப் பின் பற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பொது வாழ்வில் வெளிப்படக்கட்டு இல்லாமல் உண்மையாக ஈடுபடுபவர்களுக்கு இக்கருத்து விளங்காமல் போகாது.

டாக்டர் சொன்ன தவணைக்கு முன்பாகவே கூட்டங்களில் கலந்து கொள்வதும், எழுதுவதும் என்னால் தவிர்க்க முடியாததாகி விட்டன. அரசியலிலும் கலை உலகிலும் எனக்கு மிக நெருங்கிய நண்பர்களான இலட்சிய நடிகர் இராசேந்திரன், நடிகமணி நாராயணசாமி ஆகிய இருவரின் விருப்பத்தை நிறைவேற்ற அவர்களுடைய நாடகக் குழுவிற்கு எப்படியும் நான் ஒரு மாதத்திற்குள்ளாக ஒரு நாடகத்தை எழுதித் தர வேண்டுமென்ற நெருக்கடிக்கு ஆளானேன்.

சென்னையில் ஓட்டல் ஒன்றில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அந்த நாடகத்தை இடைவிடாது எழுதிக் கொண்டிருந்தேன். அதுதான் 'மணிமகுடம்'. நாடகத்தின் கடைசிக் காட்சிகளை எழுதிக் கொண்டிருக்கும்போது திடீரென்று என் இடது கண்ணில் ஒரு ஈட்டி பாய்ந்தது போன்ற வேதனை! கையில் இருந்த பேனாவையும், தாளையும் வீசி எறிந்து விட்டு, ''ஐயோ!'' என்று அலறினேன்.

அறையின் வாசலில் உட்கார்ந்திருந்த என்னுடைய காரோட்டி ரெங்கன், உள்ளே ஓடிவந்து என்னைப் பிடித்துக் கொண்டு, உடனடியாகக் காரிலேற்றி, என்னை வீட்டிற்கு அழை வந்தபோது, நடு வழியில் பெட்ரோல் இல்லாமல் அந்தக் காரும் நவ்வுவிட்டது!

நல்லவேளை, ஒரு சந்து முனை திரும்பினால் என் வீட்டிற்குப் போய் விடலாம். அப்போது நான் குடியிருந்த வீடு ராயப்பேட்டை பாலாஜி நகர் பகுதியில் இருந்தது. கண் வலி தாங்க முடியாமல் அலறிக் கொண்டிருந்த என்னைத் தன் முதுகிலே தூக்கிக் கொண்டு, ரெங்கன் வீடு நோக்கி நடந்தான்.

என் நிலையைக் கண்டு என் வீட்டார், 'ஓ' என்று கதறினார்கள். உடனடியாகக் கண் மருத்துவர் அழைக்கப்பட்டார். வீட்டிலேயே பத்து நாட்கள் வரையில் படுக்கையில் இருந்து கண் சிகிச்சை செய்து கொண்டேன். எந்தப் பயனும் தெரியவில்லை. இடது கண் பெரிதாக வீங்கிவிட்டன. குத்தல் வலி உயிரைப் பிளந்தது. 'தற்கொலை செய்து கொள்ளலாமா?' என்று எண்ணுகிற அளவிற்குத் தாங்க முடியாத வேதனை. அதற்குப் பிறகு சென்னையில் மிகத் திறமையான கண் வைத்தியர் என்று பெயர் பெற்ற டாக்டர் முத்தையா அவர்களை அழைத்து வந்தார்கள்.

அவர் என் கண்ணைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு உடனடியாகக் கண் மருத்துவ மனையில் என்னைச் சேர்த்து சிசிச்சைகளைத் தொடங்கா விட்டால் நன்றாக இருக்கிற வலது கண்ணும் பாதிக்கப்பட்டு விடும் என்று எச்சரித்தார். அதுவரையில் பழைய முறையில் என் கண்ணுக்கு வைத்தியம் செய்து மேலும் கொஞ்சம் கெடுத்துவிட்டதாக, முதலில் வைத்தியம் பார்த்த டாக்டரைக் கண் மருத்துவர்கள் அனைவருமே குற்றம் சாட்டினார்கள்.

மறு நாள் காலையில் கண் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டேன். உடனடியாக அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. ஒன்றல்ல, இரண்டல்ல; பன்னிரண்டு முறை என்னுடைய கண்ணில் டாக்டர் முத்தையா அறுவைச் சிகிச்சை நடத்தினார். அதில் நான்கு அறுவைச் சிகிச்சைகள் பெரிய அளவில் நடைபெற்றன.

ஏட்டு அறுவைச் சிகிச்சைகள் கண்ணிற்குள் கீறல் விழுந்திருந்த நரம்பில் தேங்கியிருந்த சீழை வெளிப்படுத்துவதற்காக நடைபெற்ற சிறிய அளவு அறுவைச் சிகிச்சைகளாகும்.

ஒவ்வொரு முறையும் அறுவைச் சிகிச்சை அறைக்குச் செல்வதற்கு முன்பு, கண் இமைகளை அசையாமல் செய்வதற்காகக் கன்னத்திலே ஒரு நெடிய ஊசியும், கண்ணின் இமைக்குக் கீழே ஓர் ஊசியும் போட்டு அத்தப் பகுதியை உணர்ச்சியில்லாமல் ஆக்குவார்கள். அறுவைச் சிகிச்சையைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஐயோ! அந்த ஊசிகளை இப்போது நினைத்தாலும் எனக்கு நடுக்கம் எடுக்கிறது! இப்படிப் பன்னிரண்டு முறை ஊசிகளைப் போட்டுக் கொள்வது என்ன்ரல் சாதாரண வேதனையா?

அன்று கண்ணில் ஊசி குத்திய வேதனை எனக்கு எப்போது குறைவாகத் தெரிகிறது தெரியுமா?

என் மனப் புண்ணில் சில பேர் ஊசி குத்துகிறார்களே, அப்போது தான் அன்று கண்ணில் குத்தப்பட்ட ஊசியின வேதனை எனக்குக் குறைவாகத் தென்படுகிறது.

இந்தச் சிகிச்சையின்பொழுது ஒரு நாள் ஒரு வேதனையான வேடிக்கையும் நடந்துவிட்டது. அறுவைச் சிகிச்சை அறைக்கு முன்பு பல கண் நோயாளிகள் அமர்ந்திருப்பார்கள். என்னைப் பரிசோதிப்பதற்கு டாக்டர் முத்தையா அழைத்து வரச் சொல்லியிருக்கிறார். நான் அந்த நோயாளியோடு உட்கார்ந்திருந்த பொழுது உதவி டாக்டர் ஒருவர் என அருகே வந்து என கன்னத்திலும், கண்ணிலும் இரண்டு ஊசிகளைப் போட்டுவிட்டார். அதற்குப் பிறகு என்னை அறுவைச் சிகிச்சை அறைக்கு உள்ளே அழைத்துப் போனார்கள். அறுவை நடை பெறும் பலகையில படுக்க வைத்தார்கள்.

டாக்டர் முத்தையா என் அருகே வந்தார். "இவரை ஏன் கொண்டு வந்தீர்கள்? இவருக்கு இன்று அறுவைச் சிசிச்சை கிடையாதே!" என்று அவர் சொன்ன பிறகுதான் உதவி டாக்டர் செய்து விட்ட தவறு அனைவருக்கும் தொந்தது. எனக்கு இருந்த வேதனையில் அது ஒரு நல்ல துணை வேதனை!

இவ்வாறு என்னுடைய கண் மருத்துவ மனை வாழ்வு ஆறு மாத காலம தொடர்ந்தது. அந்த ஆறு மாதமும், எழும்பூர் கண் மருத்துவ மனையில, சிறப்பு அறையில் வலி தாங்க முடியாமல் துடித்துக்கொண்டு படுக்கையிலே இருந்தேன்

கல்லக்குடிக்காகச் சிறைச்சாலையிலே ஆறு மாதம்! கண் சிகிச்சைக் காக மருத்துவமனையிலும் ஆறு மாதம்!

டாக்டர் முத்தையாவினுடைய திறமையினால் என் கண் பிழைத்தது தாங்க முடியாத வேதனையில் இருந்து தப்பித்துக் கொண்டேன். கொஞ்சம விஷம் கிடைக்காதா? நண்பர்களும், வீட்டாரும் என் பக்கத் திலே இல்லாத ஒரு நேரம் கிடைக்காதா? இந்த வலியிலிருந்து நாமே விடுபட்டுக்கொள்ளலாம என்று நான் பல தடவை நினைத்தது உண்டு. எனக்கு ஆறுதல் கூறி, ஒரு சகோதர உணர்வோடு என் பிணி போக்கிய அந்த நல்லவர் முத்தையாவை என் குடும்பத்தார் வாழ்த்தாத நாளே. இல்லை.

என் அருகே இருந்து, வீட்டார் என்னைக் கவனித்துக் கொண்டதற்கு மேலாக, தோழர் கருணானந்தம் என்னை விட்டு ஒரு விநாடியும் பிரியாமல் அந்த ஆறு மாத காலமும் தன் விழிகளுக்குத் தூக்கம் என்கிற ஒன்றையே மறந்துவிடுகிற பயிற்சியை அளித்து, அலலும் பகலும் பாடுபட்டார். அந்த ஆறு மாதமும் அவர் எனக்காகக் கண விழித்ததையெலலாம் சரிக்கட்டுவதற கீடாக இப்போது தூங்கிக் கொண்டிருக்கிறார் என்றல் இது கறபனை அலல. நெருங்கியவர்களுக்குத் தெரிந்த முழு உணமை. தெனனன், மூர்த்தி ஆகியோரும் அவருடன் இருந்தனர்.

ஆறு மாத காலம் எத்தனையோ வேலைகள் கெட்டன. எவ்வளவோ பணம் செலவாயிற்று.

கடமை தவறாமல் உழைக்க வேண்டிய மருத்துவத் துறையினரில் ஒரு சிலர் எவ்வளவு கடமை உணர்ச்சி அறறவர்களாகவும், கடிய மனம படைத்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நான் அந்தச் சமிக்க முடியாத சங்கடத்திலும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

டாக்டர் முத்தையா எனக்கு அறுவைச் சிகிச்சை முடித்துவிட்டு, கண்ணில கட்டுப் போடுமாறு உதவி டாகடரிடத்தில சொல்லிவிட்டுப் போய்விடுவார்.

அந்த உதவி டாக்டர் என் கண்ணில் பஞ்சும், துணியும் வைத்துக் கட்டுமபோது வேண்டுமென்றே கண்ணில ஓர் அழுத்து அழுத்துவார். இப்படி இரண்டு தடலைகள் நலடைபறறன.

'இப்படிக கொஞ்சம வசதி உளளவர்களுக்கே இந்தக் கஷ்டம் என்றல், ஏழை, எளிய நோயாளிகள், இந்த இரக்கமறற சிலரிடம் அகப்பட்டுக்கொண்டு என்ன பாடு படுவார்களோ?' என்றுதான் நான் கவலைப்பட்டேன். அந்த மருத்துவ மனையின் ஆர். எம். ஒ.வாக இருந்த ஆப்ரகாம் பிறகு அதே மருத்துவமனையில் சூப்பரின்டெண்டாக இருந்தார். அவர் அன்றைக்கே என்னிடத்தில் மிகுந்த அன்பு கொண்டு அடிக்கடி அக்கறையோடு கவனித்து வந்தார். முத்தை யாவைப் போன்ற, ஆப்ரகாமைப் போன்ற நல்ல உள்ளங்கள் மருத்துவத் துறைக்குத் தேவை என்பதை நான் அன்றைக்கே உணர்ந்தேன். கழக ஆட்சியில் கண் சிகிச்சை முகாம்களில் டாக்டர் வெங்கடசாமியும், டாக்டர் ஆப்ரகாமும் ஆறறிய அரும்பணி அளவிடக்கூடியதா?

★

57

கொள்ளிடத்து வெள்ளத்திடையே

ஒரு முறை தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருக்காட்டுப் பள்ளியில் காலேயிலே ஒரு திருமணத்தில் கலந்துகொண்டு அனிறு மாலே திருச்சி மாவட்டத்தில் அன்பிலுக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் பொதுக் கூட்டத்தில் பேசுவதாக ஒத்துக் கொண் டிருந்தேன்.

அந்தச் சுற்றுப்பயணத்தில் என்னுடன் மாறனும் வர ஆசைப் பட்டதால் அழைத்துக் கொண்டு போனேன். காலே திருக்காட்டுப் பள்ளித் திருமணத்திற்காக நான், மாறன், அன்பில் தர்மலிங்கம், பராங்குசம், பண்ணே முத்துகிருஷ்ணன் ஆகியோர் காரில் போய்க் கொண்டிருந்தோம். அந்தத் திருமணத்தில் கலந்து கொள்ள வேண்டு மென்று நடந்தே வந்து கொண்டிருந்த சில நண்பர்கள் என் காரைப் பார்த்ததும் எனக்கு முன்பே எப்படியாவது திருமணப் பந்தலுக்குச் சென்றிட வேண்டுமென்று பரபரப்படைந்தார்கள்.

எங்கள் கார் போவதும், அவர்கள் நடந்து செல்வதும் ஆற்றங் கரைப் பாதையாகும். நாங்கள் அதே கரையில் இரண்டொரு மைல் தூரம் சென்று, அதற்குப் பிறகு ஒரு பாலத்தைக் கடந்து, அடுத்த கரையிலுள்ள திருமண வீட்டிற்கு வந்தாக வேண்டும். அவர்கள் ஆற்றில் இறங்கிக குறுக்கே சென்ருல், நான் திருமண வீட்டிற்குச் செல்வதற்கு முன் சென்று விட முடியும். ஆற்றிலும் தண்ணீர் அதிக மாக இல்லே.

ஆகவே, அவர்கள் ஆற்றைக் கடப்பதற்கு வேகமாக இறங்கி விட்டார்கள். எங்கள் கார் பாலத்தைச் சுற்றிக்கொண்டு ஆற்றின் அடுத்த கரையில் புகுந்து சிறிது தூரம் சென்றதும், ஆற்றின் கரையில் ஏராளமான கூட்டம் இருந்ததை எங்களால் காணவும் முடிந்தது. காரை நிறுத்திவிட்டு, அன்பில் தர்மலிங்கம் கீழே இறங்கி என்னவென்று விசாரித்தார்.

ஆற்றின் குறுக்கே இறங்கி நடந்து வந்த வாலிபர்களில் ஒருவனைக் காணவில்லே எனறும், தண்ணீரில் மூழ்கி விட்டதாகவும், அவனைத் தேடுவதாகவும் சொன்னர்கள். நாங்களு அனைவரும் பதறிப்போய்க் கீழே இறங்கினேம். ஒரு மணி நேரத்திற்கு மேலாகத் தண்ணீரில்

மூழ்கிய அந்த வாலிபனைத் தேடும் வேலை நடைபெற்றது. இறுதியாக அந்த வாலிபனைத் தண்ணீரிலிருந்து சிலர் கரைக்குத் தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

இருபத்தைந்து வயதுகூட நிரம்பாத அந்தக் கட்டிளங்காளை பிணமாக இருந்தான். அவனைப் பிழைக்க வைத்துவிடலாம் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. உடனே காரில் தூக்கி வைத்துக் கொண்டு மருத்துவ மனைக்குச் சென்றோம். மருத்துவர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தும் முயற்சி பயனளிக்கவில்லை. அந்த வாலிபனுக்குத் திருமணமாகி ஒன்றரை ஆண்டுகள் தானாகிறது. கைக் குழந்தையுடன் அவன் மனைவி தாயார் வீட்டிற்குப் போயிருந்தாள். இவன் திருக் காட்டுப்பள்ளித் திருமணத்திற்கு வந்தவன்.

அவனது உயிரற்ற உடலை அவன் வீட்டிற்கு அனுப்புகிற ஏற்பாடுகளைச் செய்து விட்டுத் திரும்பினோம். அவன் உடலைக் கொண்டு போய் வீட்டிலே இறக்குவதற்கும், தாயார் வீடு சென்றிருந்த அவன் மனைவி திரும்பி வருவதற்கும் நேரம் சரியாக இருந்ததாம். அந்தச் சோக நிகழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல், திருமண வீட்டிற்குச் சென்று மணவிழாவிலும் கலந்து கொண்டு, வாழ்த்துரை எதுவும் கூறாமல், நானும் நண்பர்களும் கல்லணைக்குத் திரும்பி விட்டோம்.

மாலையில் கொள்ளிடம் ஆற்றைக் கடந்து அடுத்த கரையில் உள்ள கிராமத்தில் கழகக் கூட்டத்தில் பேசவேண்டும். கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் இல்லை. ஓரத்தில் மாத்திரம் முழங்கால் அளவு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காரைக் கல்லணையிலேயே விட்டுவிட்டு இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் ஆற்றின் குறுக்கே சென்று, குறிப்பிட்ட கிராமத்தை அடைவது என்று திட்டமிடப்பட்டது. அவ்வாறு மாலை ஆறு மணிக்குப் புறப்பட்டு, அந்த கிராமத்தை ஏழு மணிக்கெல்லாம் சென்று அடைந்தோம். இரவு கூட்டம் முடிய பத்தரை மணியாயிற்று. அதற்கு மேல் உணவு அருந்திவிட்டுப் பதினொன்றரை மணி சுமாருக்குக் கல்லணைக்குப் புறப்பட்டோம்.

அங்கிருந்தவர்கள், "மறுபடியும் இரட்டை மாட்டு வண்டியில் சென்றால் மூன்று மைல் சுற்றிக்கொண்டு போகவேண்டும். இந்தக் கிராமத்தில் இருந்தவாறே நேரே கொள்ளிடம் ஆற்றில் இறங்கினால் கல்லணை அதோ எதிரே தான் இருக்கிறது. விரைவில் போய்ச் சேர்ந்து விடலாம்" என்று குறிப்பிட்டார்கள். கூட இருந்த நண்பர்களும் அந்த யோசனையை ஒப்புக்கொள்ளவே, நானும் தலையை அசைத்து விட்டேன்.

கொள்ளிடத்தின் குறுக்கே இறங்கிக் கொஞ்ச தூரம் நடந்திருப்போம். திடீரென வானத்தில் இடி முழக்கம்; மின்னல் வெட்டுகள்; வேகமான காற்று; மழைத் துளிகள்; பாதி ஆற்றைக் கடந்திருப்போம். நாங்கள் சற்றும் எதிர்பாராத வண்ணம் இயற்கையின் உறுமலைக் கண்டு திடுக்கிட்டுப்போனோம். அதைவிடப் பயங்கரம் ஆற்றில் வெகு வேகமாகத் தண்ணீர் பெருக ஆரம்பித்துவிட்டது. ஒரே இருள். மழை. ஓரத்தில் முழங்கால் அளவு ஓடிக் கொண்டிருந்த தண்ணீர் இடுப்பளவு என்று ஆறு முழுவதும் பெருகியது. சற்று நேரத்திற்கெல்லாம் மார்பளவு தண்ணீராகி விட்டது. பண்ணை முத்துகிருஷ்ணன் மிகவும் குள்ளமானவர். அவருக்கு உதட்டளவு தண்ணீர்.

உடனே அவரைப் பக்கத்தில் இருந்த ஒருவர் தூக்கிக் கொண்டார். மாறனை அன்பில் தர்மலிங்கம் தூக்கிக் கொண்டார். இரத்தினம் என்ற ஒரு தோழர் என்னைத் தூக்கிக் கொண்டார். நாங்கள் எங்கு போகிறோம் என்றே தெரியவில்லை. ஆற்றுப் பிரவாகம் திடீரென்று ஏற்படும்பொழுது அதைச் சமாளிக்க முடியாமல் மனிதன் எப்படி மூழ்கிவிடுகிறான் எனபதை அன்று தான் நான் அனுபவ ரீதியாக உணர்ந்தேன்.

காலை அழுத்தமாக மணலில் ஊன்றினால் காலுக்கடியில் இருக்கும் மணலைத் தண்ணீர் பறித்துக்கொண்டு போய்விடுகிறது. காலுக்குக் கீழே ஒரு சிறு குழி ஏற்படுகிறது. உடல் ஒரு நிலையில் நிற்கமுடியாமல் ஆகிவிடுகிறது. அந்தச் சூட்சுமத்தை உணர்ந்து நண்பர்கள் உடனடியாக எங்களைத் தூக்கிக் கொண்டு ஆற்றில் வெள்ளத்தை எதிர்த்துப் பயங்கரமான போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்றாலும், எனக் கென்னவோ கரைபோய்ச் சேருவோம் என்ற நம்பிக்கையே இல்லை. மாறனை வேறு அழைத்து வந்துவிட்டோமே என்ற கவலை என்னை உலுக்கியது. நீண்ட நேரம் ஆற்று வெள்ளத்தோடு போராடி நண்பர்கள் எங்களையும் காப்பாற்றித் தங்களையும் காப்பாற்றிக் கொண்டார்கள். நாங்கள் அடுத்த கரை வந்து சேர்ந்தபோது இரவு ஒரு மணிக்கு மேலிருக்கும். அதன் பிறகு நனைந்த உடை களையெல்லாம் மாற்றிக் கொண்டு கல்லணையில் ஓய்வு எடுத்துக் கொண்டோம். கொஞ்சம் தவறியிருந்தால், எங்கள் அனைவருக்கும் நிரந்தரமான ஓய்வே கிடைத்திருக்கும்.

58

விபத்துத் துணுக்குகள்

ஒரு முறை நானும், நண்பர்களும் காஞ்சிபுரம் சென்று விட்டு இரவு காரில் திரும்பிக் கொண்டிருந்தோம். திருப்பெரும்புதூருக்கு அருகாமையில் ஒரு மாட்டு வண்டி கீழே சாய்ந்து கிடந்தது. ஒரு பையன் உடம்பெல்லாம் காயத்தோடு உருண்டு கிடந்தான். வண்டி மாடுகளில் ஒன்று இறந்து கிடந்தது. வண்டியை ஓட்டி வந்தவன் அந்த இருளில், 'ஐயோ, ஐயோ' என்று அலறிக் கொண்டிருந்தான். அந்த வண்டியை மோதிக் கீழே தள்ளிவிட்ட லாரி ஒன்று பக்கத்தில் நின்று கொண்டிருந்தது.

நாங்கள் கீழே இறங்கி அந்தக் காட்சியைக் கண்டபோது திகைப்பும், அதிர்ச்சியும் தாங்க முடியவில்லை. அந்த வழியாக வந்த இன்னொரு காரில் நாங்கள் ஏறிக்கொண்டு எங்கள் காரில் காயம் பட்ட பையனை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல உதவி செய்தோம். ஆனால் அதே போல் ஒரு காட்சியை மறுமுறையும் நான் காண நேரிட்டது.

சென்னையில் இரவு பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டுக் கார் மூலம், நானும், செல்லமுத்துவும் சென்று கொண்டிருந்தோம். நான் காரில் பின்னால் படுத்து நன்றாக உறங்கிக்கொண்டிருக்கிறேன். கார் விழுப்புரத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. திடீரென்று ஒரு பெரும் சப்தம். நான் காரின் பின்சீட்டிலிருந்து கீழே விழுந்து கிடக்கிறேன்.

லேசாகக் கண்ணை விழித்துப் பார்க்கிறேன். எனக்கு எந்த அடியும் இல்லை. ஆனால் அந்த இருளில் 'ஐயோ, ஐயோ' என்று ஒரு சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. செல்லமுத்து என் அருகே வந்து என்னைத் தூக்குகிறார். எனக்கோ அவருக்கோ என் கார் டிரைவருக்கோ எந்த காயமும் இல்லை.

எதிரே ஒரு வண்டி கவிழ்ந்து கிடக்கிறது. ஒரு பையன் லேசாகக் காயம்பட்டுக் கிடக்கிறான். வண்டிக்காரன் அலறிக் கொண்டிருக்கிறான். சில மாதங்களுக்கு முன்பு காஞ்சிபுரம் சாலையில் நான் பார்த்த அதே சம்பவம் என் கார் மோதியதால் இப்போது ஏற்பட்டிருப்பதை நான் பார்த்தபோது தூக்கக் கலக்கத்தில் இன்னும்

அந்தக் காஞ்சிபுரம் சாலை நிகழ்ச்சியைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம் நாம் என்றுதான் ஒரு கணம் தோன்றியது. பிறகு அடிபட்ட பையனை விழுப்புரம் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றோம் தேவையான சிகிச்சைகள் அளித்து அவனைக் காப்பாற்றிவிட்டோம். வண்டிக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் ஈடு செய்தோம்.

விழுப்புரத்தில் உள்ள டாக்டர் தியாகராஜன் அந்தச் சம்பவத்தில் எனக்கு நிறைய உதவி செய்தார். ஏற்கெனவே அவரை எனக்கு நன்றாகத் தெரியும். விழுப்புரத்திற்கு அருகிலேயே தான் விபத்து ஏற்பட்டதால் பையனைத் தூக்கிக் கொண்டு வந்து, மருத்துவ மனையில் சேர்த்து விட்டு அவனுக்குக் காவலாகச் செல்லமுத்துவை வைத்துவிட்டு நான் டாக்டர் தியாகராஜன் வீட்டைத் தேடிக் கொண்டு சென்றேன். அவர் முன்பிருந்த வீட்டில் இல்லையென்றும், வேறு எங்கேயோ குடி போய்விட்டதாகவும் சொன்னார்கள். என்னுடைய உடைகளடங்கிய பெட்டி மாத்திரம் என் கையில் இருந்தது. ஒரு வண்டி பிடித்துக் கொண்டு அவர் வீட்டிற்குப் போகலாமென்றால், அந்த நேரத்தில் எந்த வண்டியும் கிடைக்கவில்லை. பெட்டியைத் தலையிலே வைத்துக் கொண்டு நடந்தே விழுப்புரத்தில் பல தெருக்களைச் சுற்றிக் கடைசியாக டாக்டர் தியாகராஜன் வீட்டைக் கண்டுபிடித்தேன். அதற்குப் பிறகு அவர் சிரமம் எடுத்துக்கொண்டு நான் சேலம் போவதற்கு வசதிகள் செய்து கொடுத்தார்.

இன்னொரு முறை நானும், கருணானந்தமும், சிவாஜிகணேசனும் காஞ்சிபுரம் சென்று அண்ணாவைப் பார்த்துவிட்டுச் சென்னை திரும்பிக் கொண்டிருக்கிறோம். அப்பொழுதுதான் 'பராசக்தி' படம் எடுக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. காஞ்சிபுரத்திலிருந்து சென்னை வரும் வழியில் நல்ல மழை பெய்யத் தொடங்கியது. காரின் வெளிச்சம் வேறு மங்கலாகி விட்டது. செம்பரம்பாக்கம் ஏரிக்கு அருகே வந்து கொண்டிருக்கும் பொழுது அந்தப் பகுதியில் ஒரு பாலம்வேலை நடை பெற்றுக் கொண்டிருந்ததால், மாற்று வழிக்குக் குறிப்புப் பலகை வைத்து சிவப்புத் துணி கட்டியிருந்தார்கள். விளக்கு வெளிச்சம் போதாததால் கார் டிரைவர் அதைக் கவனிக்காமல் மாற்று வழியில் செல்வதற்குப் பதிலாக நேராகச் சென்று விட்டார். உடனே நண்பர் கணேசன் கூச்சல் போடவே கார் டிரைவர் திடீரென்று பிரேக்கை அழுத்திவிட்டார். பிரேக் போடப்பட்ட வேகத்தில் மழைத் தண்ணீர் தேங்கியிருந்த சாலையில் காரின் சக்கரங்கள் வழுக்கி, ஒரு சுற்றுச் சுற்றி நின்றது.

கார் எப்படியிருக்கிறது என்பதைக் காருக்குள்ளிருந்த நாங்கள் கவனித்தோம். கார் சக்கரம் ஓர் அங்குலம் நகர்ந்தால், நாங்கள்

ஒரு செங்குத்தான பள்ளத்தாக்கில் காரோடு விழுந்து நொறுங்கிப் போய்விடுவோம். அப்படிப்பட்ட ஆபத்தான விளிம்பில் கார் நின்று கொண்டிருந்தது. காரில் இருந்த மூவரும் மெதுவாகக் காரை விட்டு இறங்கினோம். நாங்கள் இறங்குகிற நேரத்தில் கார் கொஞ்சம் அசைந்திருந்தாலும் படுபாதாளத்தில் நாங்கள் விழுந்திருக்க நேரிடும். மிக மெதுவாகக் காரை முன்னுக்குத் தள்ளி மாற்றுப் பாதை வழியாகச் சென்னை நோக்கிப் புறப்பட்டோம்.

மழை பொழிந்து கொண்டே யிருந்தது. சென்னைக்கு அருகில் 4, 5 மைல் தொலைவில் நாங்கள் வந்ததும் காரும் பழுதாகிவிட்டது. அந்தக் கார் நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளர் திரு பி. ஏ. பெருமாளுக்குச் சொந்தமானது. காரைத் தள்ளிக் கொண்டே போய் விடலாம்என்று என்னைக்காரிலேயே உட்காரவைத்துவிட்டு சிவாஜியும், கருணானந்தமும் காரைத் தள்ளத் தொடங்கினார்கள். நான் எவ்வளவோ சொல்லியும் என்னைக் கீழே இறங்க விடாமல் தடுத்து விட்டார்கள். 4, மைல்கள் அந்த மழையில் அந்தக் காரைத் தள்ளிக்கொண்டே வந்த நிகழ்ச்சியையும், அதுவும் என்னைக் காரில் உட்காரவைத்தே தள்ளிக்கொண்டு வந்த நிகழ்ச்சியையும், இப்போது கூட, நண்பர் கணேசன் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் வேடிக்கையாகச் சொல்லாமல் இருப்பதில்லை.



59

வெட்ட வெளியும் சட்ட சபையும்

கழகப் பிரசாரம் பல முனைகளிலும் தீவிரமாக்கப்பட்டு, கழகத் தலைவர்கள் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் பல்லாயிரக்கணக்கிலே மக்கள் குழுமியிருந்து கருத்துரைகளைக் கேட்கும் நிலை நாடெங்கும் உருவாயிற்று. பட்டி தொட்டிகளில் எல்லாம் புதிய கிளைகள் உருவாயின. உறுப்பினர்களின் எண்ணிக்கை இலட்சத்தைத் தாண்டியது. ஏடுகள் வாயிலாகவும், மேடைகள் வாயிலாகவும் எழுச்சி மிகுந்த நாடகங்கள் வாயிலாகவும், சுவை மிக்க கலை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் கழகப் பிரசாரம் தீவிரமாக நடைபெற்றது.

சுதந்திரத்திற்குப் பிறகு ஏழை எளிய மக்களுக்குச் சுகவாழ்வு அளிப்பதாகப் பறை சாற்றிக்கொண்டு, ஆட்சி பீடமேறிய காங்கிரசார் அந்த வாக்குறுதியை மறந்துவிட்டு, அந்தஸ்து படைத்த சீமான்களின் அரவணைப்புப் பிள்ளைகளாக மாறி ஏழை எளிய மக்களிடம் எதேச்சாதிகார தர்பார் நடத்தியதை நாட்டு மக்கள் காட்சிபூர்வமாகக் கண்டு, தங்கள் கஷ்டங்களையே கழகத்தினரும் எடுத்து விளக்குகிறார்கள் என்பதை உணர்ந்து, கழகத்தினர்மீது பற்றும் பாசமும் கொண்டிடத் தொடங்கினர்.

அண்ணா அவர்களும், கழகத் தலைவர்களும் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணங்களை நிகழ்த்தினர். காங்கிரஸ் கட்சியின் முழு வடிவம் கழகத்தின் பிரசாரத்தால் மூளியாகியது என்பதைப் புரிந்துகொண்டு, அதைச் சகிக்க முடியாத காங்கிரஸ் தலைவர் காமராசர், கழகத்திற்கு ஒரு பெரிய அறைகூவலை விட்டார்.

"வெட்டவெளியிலே நின்றுகொண்டு எங்களைப் பற்றிப் பேசுகிற கழகத்திற்கு மக்கள் செல்வாக்கு இல்லை. அப்படி மக்கள் இருந்தால் சட்டசபைக்கு வந்து கழகத்தினர் பேசத் தயாரா?"

இந்த அறைகூவலைக் காமராசர் பல கூட்டங்களில் கழகத்தை நோக்கி விடுத்தார். அதற்கு அண்ணா அவர்கள் சொன்ன பதில் வேடிக்கையானது; சுவை நிறைந்தது; ஆனால் ஆழ்ந்த பொருளுடையது.

"கோவில் வாசலில் ஒருத்தி பூ விற்றுக்கொண்டிருந்தாள். அவள் அந்த வழியாகப் போகிற சாமியாரைப் பார்த்து, 'என்ன சாமியாரே? உமக்கு எப்போது கலியாணம்?' என்று கேட்

டாள். சாமியார் முதலில் மௌனமாகப் போய்விட்டார். சாமியாரின் மௌனத்தைக் கண்ட பூக்காரி தினந்தோறும் சாமியார் அந்த வழியாகப் போகும்பொழுதெல்லாம், பூ விற்கிற வேலையைக் கூடக் கவனிக்காமல், 'என்ன சாமியாரே, எப்போது கலியாணம்?' என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். ஒரு பெண் இப்படி அடிக்கடி கேட்டால் என்னதான் சாமியாராக இருந்தாலும் வீம்பு வந்துவிடாதா?

''ஒரு நாள் அந்தப் பெண்ணைப் பார்த்து, 'கலியாணமா? நான் தயார்! நீ தயாரா?' என்று திருப்பிக் கேட்டுவிட்டார். அந்தக் கதையைப் போலத்தான் காமராசரும் நம்மைப் பார்த்து ''சட்ட சபைக்கு வருகிறாயா, வர முடியுமா?' என்று அறை கூவல் விடுகிறார். சாமியார் பூக்காரிக்குச் சொன்ன பதிலைக் கழகமும் ஒரு நாள் காமராசருக்குச் சொல்ல நேரிடும்'' என்று அண்ணா கூறினார்.

1957 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் காங்கிரஸ் கட்சி தீவிரமாக ஈடுபட்டது. இதற்கிடையே 1956-ல் தி.மு.கழகம் திருச்சியில் தன்னுடைய மாநில மாநாட்டை நடத்தியது. இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடிய அந்த மாநாடு கழக வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது. கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நாவலர் நெடுஞ்செழியன் அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். தலைவரை வழிமொழிந்து பலர் பேசினர். அண்ணா வழிமொழிந்து பேசும் பொழுது நீண்ட உரை எதுவும் ஆற்றவில்லை.

''தம்பி, வா! தலைமையேற்க வா. உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேம்! வா!''

இதுதான் அண்ணா நாவலரை வழிமொழிந்து பேசிய பேச்சாகும். இதற்குப் பிறகு அந்தப் பேச்சுக்கான விளக்கத்தை மாநாட்டு இறுதி உரையில் அண்ணா தந்தார். ''எனக்குத் தம்பியாக இருந்தாலும், நாமெல்லாம் பார்த்து ஒருவரைப் பொதுச் செயலாளராக ஆக்கிவிட்டுப்

பிறகு அவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பதும், அந்தத் தலைமையை மதிப்பதும்தான் கட்சிக் கட்டுப்பாட்டை வளர்க்கும். அப்படித் தலைமைக்கு மதிப்பளித்து நடக்கும் பழக்கத்தை நான் என் அரசியல் வாழ்க்கையில் பல ஆண்டுகளாக மேற்கொண்டிருக்கிறேன்!" என்று அண்ணு பெருந்தன்மையுடன் குறிப்பிட்டது, உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது.

அந்த மாநாட்டில் அண்ணு அவர்கள் நாட்டு மக்களைப் பார்த்து ஒரு புதிய கேள்வியை எழுப்பினர். ஏழு ஆண்டு காலக் குழந்தையாக இருக்கிற இந்தக் கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா? என்று பொதுமக்களே தீர்ப்பளிக்க வேண்டுமென்று கூறிப் போட்டியிடலாம், அல்லது போட்டியிட வேண்டாம் என்ற தீர்ப்பை வாக்குச் சீட்டுகளின் மூலம் மாநாட்டிற்கு வந்த பொதுமக்கள் அளிக்க வேண்டும் என்பது அண்ணுவின் கருத்தாகும்.

அந்தக் கருத்தின் அடிப்படையில் மாநாட்டுப் பந்தலைச் சுற்றி பல்வேறு வாக்குச் சாவடிகள் திறக்கப்பட்டன. இரண்டு பெட்டிகள் நுழை வாயிலருகே வைக்கப்பட்டன. தேர்தலில் போட்டியிடலாம் என்பதற்கு ஒரு பெட்டியும், தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்பதற்கு ஒரு பெட்டியும் இடம் பெற்றன. மாநாட்டிற்கு வந்திருந்த பொதுமக்கள் தங்கள் எண்ணங்களை வாக்குச் சீட்டின் மூலம் தெரிவித்தனர். குறிப்பிட்ட நாளில் மாநாட்டு மேடையில் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன. சில ஆயிரம் பேர்கள் கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டாம் என்று வலியுறுத்தி வாக்களித்திருந்தனர். இலட்சத்திற்கு மேற்பட்டோர் கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டும் என்று வாக்களித்திருந்தனர்.

ஜனநாயகத் தேர்தலில் ஈடுபடுவதா வேண்டாமா என்று கருத்தறிய ஒரு ஜனநாயகத் தேர்தலை நடத்திய அண்ணு அவர்கள், அந்த மாநாட்டில் 1957 பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துக் கழகம் போட்டியிடும் என்று வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை அறிவித்தார்கள். புதிய முறுக்கோடு கழகத் தலைவர்களும், செயல் வீரர்களும், தொண்டர்களும், மாநாட்டிலிருந்து கலைந்து சென்றார்கள்.

மலைமுகட்டில் பெய்த பெருமழை பேராறுகளாக ஆகி, அந்தப் பேராறுகள் சிற்றாறுகள் ஆகி, சிற்றாறுகள் வாய்க்கால்கள் வழியோடி, வயல் வெளிகளில் நீர்வளம் ஏற்படுத்தி, பயிர் செழிக்கச் செய்வது போல், மாநாட்டு மக்கள் பெருவெள்ளம், மாநாடு முடிந்து பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று திருச்சி மாநாடு தந்த உணர்வினை மற்றவர்களுக்கு எடுத்துரைத்துக் கழகத்திற்குப் புதிய வலிவினைச் சேர்க்கத் தொடங்கியது.

1957-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் யார் யார் எங்கெங்கே போட்டியிடுவது என்ற கேள்வி எழுந்தது. நான் தஞ்சை மாவட்டத்தில் நாகைத்தொகுதியில் போட்டியிட வேண்டுமென்ற விருப்பத்தை அண்ணு அவர்களிடம் தெரிவித்தேன். ''முதலில் தொகுதியைப் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வா!'' என்று அண்ணு அவர்கள் என்னை அனுப்பினார்கள்

கழக வேட்பாளர்கள் பட்டியலை அறிவிப்பதற்கு ஒரு வாரகாலமே மிச்சமிருந்தது. அதற்குள் நான் நாகைத் தொகுதியைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரப் புறப்பட்டேன். எல்லா இடங்களிலும் கழகத் தோழர்களும், பொது மக்களும் நான் அந்தத் தொகுதியில் போட்டியிட வேண்டுமென்ற கருத்தை மிகுந்த ஆவலோடு தெரிவித்தார்கள். ஒரு சிறு கிராமம்கூட விடாமல், அனைத்துப் பகுதிகளுக்கும் அத் தொகுதியில் சென்று, இறுதியாக நாகையில் நடைபெற்ற கழகத் தொண்டர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு நான் பேசினேன். இரவு மணி பன்னிரண்டு இருக்கும். தொண்டர்கள் மத்தியில், பெருத்த ஆரவாரத்திற்கிடையே, நான் நாகைத் தொகுதியில் போட்டியிடப் போவதாக உறுதி செய்து அறிவித்தேன். அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு என்னைச் சென்னைக்கு வழியனுப்பி வைத்தனர்.

நாகையிலிருந்து சென்னை வரும் வழியில் அந்த இரவு முழுவதும் எனக்குக் காரிலே தூக்கமில்லை. நாகைத் தொகுதியில் நடைபெறப் போகும் தேர்தல், நான் போட்டியிட்டுக் காங்கிரசை எதிர்ப்பதற்கு உள்ள சாத்தியக் கூறுகள், இவைகளைப் பற்றியே எண்ணிக்கொண்டு வந்தேன். காலை ஒன்பது மணிக்கெல்லாம் சென்னை வந்து சேர்ந்தேன். அண்ணு அவர்களைக் காண நேராக அறிவகம் சென்றேன்.

அண்ணு அவர்கள் அறிவகத்தில் உறங்கிக் கொண்டிருந்தார்கள் நாவலரும், என். வி. என். அவர்களும் அறிவகத்தில் இருந்தார்கள். 'நம்நாடு' பத்திரிகை அச்சாகி வெளியூர்களுக்குப் போய்க் கொண்டிருந்தது. அதில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் பட்டியல் அச்சேற்றப்பட்டிருந்தது. நான் அதைப் பரபரப்

போடு எடுத்துப் படித்தேன். நான் குளித்தலைத் தொகுதியில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆச்சரியத்தோடு அருகில் இருந்தவர்களைப் பார்த்து, ''நாகைத் தொகுதியில் போட்டியிடுவதாகச் சொல்லிவிட்டு வந்துவிட்டேனே. அவர்கள் இப்படி அறிவித்து விட்டார்களே!'' எனறு கேட்டேன். ''அண்ணா அவர்கள் இரவு நீண்ட நேரம் ஆழ்ந்து சிந்தித்த பிறகு, அவர்களே எடுத்த முடிவு இது'' என்று என். வி. என். என்னிடம் விளக்கம் கூறினார். அண்ணா எடுத்த முடிவுக்கு அப்பீல் ஏது?

நான் குளித்தலையில் நிற்பதாக அண்ணா அவர்களே அறிவித்த படியால், நாகைத் தொகுதித் தோழர்களுக்குச் செய்தியை உடனடியாக அறிவித்து விட்டுக் குளித்தலைத் தொகுதியில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினேன். அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் போட்டியிட்டார்கள். நாவலர் நெடுஞ்செழியன் சேலத்தில் போட்டியிட்டார். என். வி. என். பேசின் பிரிட்ஜ் தொகுதியில் போட்டியிட்டார். பெரம்பூர்த் தொகுதியில் சத்தியவாணிமுத்து, எழும்பூரில் பேராசிரியர் அன்பழகன், ஆயிரம் விளக்கில் ஆசைத்தம்பி, திருவண்ணாமலையில் ப. உ ச., வளவனூரில் ஏ. கோவிந்தசாமி- இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் கழகத் தலைவர்களும், கழகச் செயல் வீரர்களும் பொதுத் தேர்தலில் குதித்தார்கள்.

நான் போட்டியிடுவதாகத திடீரென்று அறிவிக்கப்பட்ட குளித்தலைத் தொகுதியைக் காணபதறகாகச் சென்றேன். அந்தத் தொகுதியை ஒரு கரும்புக்குச் சமமாகச் சொல்லலாம். குளித்தலை பிர்க்கா அடிக்கரும்பைப் போல் வளமானது. அடுத்தது, மாயனூர் பிர்க்கா நடுக்கரும்பைப போல் வளம சற்றுக்குறைந்தது. மூன்றுவது, வெள்ளியணை பிர்க்கா நுனிக் கரும்பில் உள்ள தழைகளைப் போன்றது. தேர்தலில் அடிக்கரும்பை மாத்திரம் சுவைக்க முடியுமா? முழுக்கரும்பையும் சுவைத்தால்தானே தேர்தலில வெற்றி நோக்கி செல்ல முடியும்?

மொத்தக் கரும்பையும் கடித்துப் பார்த்து முழுச் சுவையையும் உணர்வதென்பது, சங்கடமான, பொறுமையைச் சோதிக்கும் வேலை தான். எனறாலும், அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளைக்கேற்ப நான் குளிததலைத் தொகுதி முழுவதையும் ஆராய்ந்து தெளிந்து தேர்தல் பணியாறறத் தொடங்கினேன். அது எனனுடைய முப்பத்து மூன்றுவது வயதுப் பருவமாகும்.

அரசியல் ரீதியாக நான்எனனுடைய இயக்கத்திறகும் நாட்டிறகும் எனனாலான தொண்டுகளைச் செய்வதற்கு 1957 தேர்தல் பணிகளின் தொடக்கம்தான் துவங்கி வைத்தது எனறு கொள்ளலாம்.

குளித்தலைத் தொகுதியில் அண்ணு அவர்களின் கட்டளைக் கேற்பவும், ஜனநாயகக் கடமையாற்றவும், நான் போட்டியிட ஆயத்தமானபோது, என்னுடைய வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்ததாகவே கருதினேன். அதுவரையில் நான் அரசியல் விழிப்பு உணர்வினைப் பரப்புகின்ற தொண்டனாகவே கருதிக்கொண்டிருந்த நிலை மாறி, ஆட்சி மன்ற அரசியல் வாதியாக உருவெடுக்கத் தொடங்கினேன் என்பது முக்கியமான கட்டமல்லவா? அந்த கட்டம் எனக்கும் என் போன்ற மற்றக் கழகத் தோழர்களுக்கும் எத்தகைய சங்கடத்தைக் கொடுத்தது என்பதை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது!

''என் தாய்த் தமிழைக் காப்பாற்ற என்னோடு தோள் கொடுத்துக் கஷ்ட நஷ்டமேற்க முன் வாருங்கள்".

''ஏமாந்த காலத்தில் ஏற்றங்கண்டு விட்ட ஒரு பகுதியின் ஆளவ ஆதிக்கத்தை முறியடிக்க எனக்கும், என் இயக்கத்திற்கும் ஆதரவு தாருங்கள்."

''இல்லாமை-போதாமை-வறுமைகளை இல்லாதொழிக்க என் பின்னால் அணிவகுத்து நில்லுங்கள்."

''சாதியின் பேரால், சமயத்தின் பேரால் நாம் சாய்ந்து போன நிலையை எண்ணி ஒவ்வொருவரும் வெட்கப்படுங்கள். துக்கப்படுங்கள்."

—என்றெல்லாம் நாள்தோறும் பல மணி நேரம் ஆயிரக்கணக்கான மக்களிடையே அறிஞர் அண்ணு அவர்களின் அரவணைப்பின் உறுதியோடு கொட்டி முழங்கியே இயக்கப் பணியாற்றிக் கொண்டிருந்த என் போன்ற கழகத் தோழர்களுக்கு ஒவ்வொரு வாக்காளரிடமும், ''நான் தேர்தலில் நிற்கிறேன், உங்கள் வாக்கை எனக்கே அளியுங்கள்" என்று கேட்டுக்கொண்டு தேர்தல் பணியாற்றியது, ஒரு வகைச் சங்கடமாகவும் புது வகை அனுபவமாகவும் இருந்தது!

அறிஞர் அண்ணு அவர்கள் நாள்தோறும் முழக்கி வந்த சொற் பொழிவுகளும், தாம் தேர்தலில் போட்டியிடுவது ஏன்? எதற்காக? என்கின்றவைகளுக்கு அளித்த விளக்கங்களும் நாளடைவில் என்சங்கட உணர்வுக்குச் சற்று ஆறுதல் அளித்தன. சுருங்கச் சொல்லப் போனால், காமராசரின் அறைகூவல் அரசியலும், அதன் காரணமாக அண்ணு அவர்களுக்கு ஏற்பட்ட சலிப்புமே எங்களைத் தேர்தல் களத்தில் நிறுத்தின.

தேர்தலில் வெற்றி பெற்று எதைச் சாதிக்கப் போகிறோம் என்பது எங்களில் பலருக்கு வியப்புக் குறியாகவே இருந்தது. ஏனென்றால், தமிழ்நாட்டு அரசியல் பீடம் டெல்லிக்குத் தபால் பெட்டி அந்தஸ்துடன்

தான் நடத்தப்பட்டது. எதற்கெடுத்தாலும் ஆணையிடுகின்ற உரிமை ஆயிரம் மைலுக்கு அப்பாலிலுள்ள டெல்லிப் பட்டணத்தில் தான் தேங்கி வழிந்தது. இங்கு காமராசரின் அரசியலும் காங்கிரஸ் ஆட்சியின் பிடிவாதங்களும் நினைத்தாலே நெஞ்சத்திற்குச் சோர்வை அளித்துக் கொண்டிருந்த நேரம் அது.

'மாற்றுந்தாய்ப் போக்கு' என்பதற்கு முழு இலக்கணம் தமிழகத்தின் அரசியலைப் பொறுத்து டெல்லிப் பட்டணம் காண்பித்த மனப்பான்மையில் தெளிவாகத் தெரிந்த நேரம் அது. பண்டித நேருவை எதிர்த்து ஒரு பார்வை பார்ப்பது கூடத் தேசத் துரோகம் என்று திட்டவட்டமாக ஆணையிட்டுக் கொண்டிருந்த நேரம் அது. மிகத் தீவிரமான கழகத் தோழர்களில் பலரும் திருச்சி மாநில மாநாட்டிலே கழகம் தேர்தலில் நிற்கக் கூடாது என்று வாக்களித்த கழக தோழர்களும், நாங்கள் அனைவரும் 'கடலில் உழுது கொண்டிருப்பதாகவே' அப்பட்டமாக நம்பினர்கள். பார்க்கப் போனால், இப்படிப் பேசியவர்களுக்கு அனுசரணையாகவே அப்போதிருந்த நிலவரம் துணை போயிற்று.

"இந்தியாவின் தென் பகுதி (தென்னாடு) தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது. எனவே எங்கள் உதவி பெறுவதில் அப்பகுதியே முதலிடம் பெறவேண்டும். சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவக் கடனும் உதவியும் தருகிறோம்" என்று 1955-ல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த ருஷ்யத் தலைவர்கள் புல்கானினும், குருஷ்சேவும் ருஷ்யாவுக்குத் திரும்பியதும் டெல்லி சர்க்காருக்குத் தெரிவித்த உதவித் திட்டத்தில் குறிப்பிட்டவை பற்றி டெல்லி அரசு எத்தகைய நடவடிக்கை எடுத்தது என்பது அப்போது மூடுமந்திரமாகவே இருந்தது.

"இந்தியா முழுவதிலுமாகத் தொழிலபிவிருத்திக்குச் செலவிடப் பட்டுள்ள பணம் நபர் ஒன்றுக்கு ரூ. 27 ஆகும். ஆனால் சென்னை மாநிலத்தில் செலவிடப்பட்டுள்ளதோ ரூ. 19 தான். தேசிய விகிதத்தைப் போல ஐந்தாறு மடங்கு வடபுலத்தில் செலவிடப்பட்டுள்ளது" என்று 1956 ஜூலையில் உதகைக்கு வந்த போது, பெரும் பொருளாதார நிபுணராகக் கருதப்பட்ட சி. டி. தேஷ்முக் குறைப்பட்டுக் கொண்டார்.

"பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வேலைத் திட்டங்களும் உருவாவதில் இந்த மாநிலத்திற்குரிய பங்கு தரப்படவில்லை என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்" என்று 1955 ஜனவரியிலேயே பெரும் விளம்பரத் தடபுடலோடு கூட்டப்பட்ட ஆவடி காங்கிரசில் திருமதி அம்புஜம்மாள் அவர்கள் வரவேற்புரையிலேயே மனம் நொந்து குறிப்பிட்டதை எங்களால் மறக்க முடியவில்லை!

''தொழில் அபிவிருத்தித் துறையில் தென்னாடு படுமோசமாகப் புறக்கணிக் கப்பட்டிருக்கிறது'' என்று நான் போட்டியிட்ட குளித்தலைத் தொகுதிக்கு அருகில்-திருச்சி நகரில் பிரபல தொழிலதிபர் அனந்த ராமகிருஷ்ணன் சில நாட்களுக்கு முன்னர் தான் பேசிவிட்டுப் போனார் என்று என் தொகுதி மக்களே என்னிடம் தெரிவித்தனர்.

''சென்னை மாநிலத்தில் என்ன செய்ய வேண்டும்-என்ன செய்யக் கூடாது? என்று மத்திய சர்க்கார் வர்த்தகத் தொழில் இலாகா கட்டளை யிடுகிறது. சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரின் பாவாடை நாடாவில் கட்டுண்டு கிடக்கிறது'' என்று அனல் தெறிக்கும் வாசகங் கள் கொண்ட துண்டறிக்கை ஒன்றினைக் காங்கிரஸ் சர்க்காரில் உணவு அமைச்சராகவும், தமிழகத்தின் முக்கியக் காங்கிரஸ் தலைவராகவும் அப்போது விளங்கிய தூத்துக்குடி ரோச் விக்டோரியா அவர்கள் 1956 செப்டம்பர் முதல் தேதியிட்டுத் தமிழகத்து அரசியல்வாதிகள் அத்தனை பேருக்கும் அனுப்பி வைத்தார்.

1957 தேர்தலில் இந்தத் துண்டுப் பிரசுரம் சற்றுச் சலசலப்பை உண்டாக்கிற்று. அறிஞர் அண்ணா அவர்கள் கூட இந்தத் துண்டுப் பிரசுரத்தைக் குறிப்பிட்டு, ரோச் விக்டோரியா அவர்கள், இல்லத்துப் பெயராலேயே சுகஸ்தான்வாசி'' என்ற தலைப்பில் தம்பிக்கு முடங்கல் பகுதியில் ''திராவிட நாடு'' இதழில் கருத்துரை தீட்டினார்கள்.

''இந்தச் சூழ்நிலையில் நாம் சட்டமன்றம் நுழைந்து செய்யப் போவதென்ன?'' என்று 'தீவிரவாதிகள்' மட்டுமல்ல, எங்களை நாங்களே கூடச் சில சமயம் கேட்டுக் கொண்டதுண்டு.

ஆனால், இன்று நினைத்துப் பார்க்கிறேன். அரசியல் நுழைவால் எங்கள் இயக்கம் எதைச் சாதிக்கவில்லை? அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் தூய்மையும் தொலைநோக்கும் எங்கு, எப்போது, பழுதாகப் போயிற்று?

கழகம் அரசியலில் ஈடுபட்டுப் பதினாறு ஆண்டுக் காலமும், கழகம் அரசினைக் கைப்பற்றி ஆறாண்டுக் காலமும் ஆகிவிட்ட இன்றைய நிலை யிலும் மாறுபடாமல் இருக்கும் பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் தலையானது மத்திய மாநில அதிகாரங்களின் தாரதம்மியம் இன்றளவும் தீர்க்கப் படாமலும், சர்ச்சைக்குரியதுமாகவே இருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் எனக்கு ஊட்டிய அரசியல் அடிப்படை யிலும், என் இயக்கத் தோழர்களும் நாட்டு மக்களும் என் பக்கத்தில் நிற்கிறார்கள் என்ற திருப்தியிலும் விரைவில் இந்தப் பிரச்னைகளுக்கும் ஓர் முடிவு கட்ட வேண்டும் என்று துணிந்து சில முயற்சிகளை மேற் கொண்டுள்ளேன். என் நாட்டு மக்களின் தளராத ஆதரவும் ஓடிக் கொண்டிருக்கும் காலமுமே இதற்கு உற்ற பதில் சொல்ல வேண்டி யவை.

60

1956-ம் 1957-ம்

பார்க்கப் போனால் 1956-57-ல் கழகம் தேர்தல் காலத்தில் பேரட்டியிட்டு ஜனநாயகக் கடமையாற்றத் துணிந்த நேரம். இயற்கையாகவே உலகம் ஒரு முன்னேற்றத்துக்குரிய கட்டத்தைக் கடந்து போகக் குறிப்பிட்டுக் கொண்ட காலமாகவே நாம் கொள்ளவேண்டும்.

இந்தியாவின் ஜனநாயகப் பாதுகாப்புக்கும் அதன் வளர்ச்சிக்கும், 1957 தேர்தலில் கழகம் ஈடுபட்டதன் மூலம் எத்தகு பலமும் வாழ்வும் கிடைத்தன என்பதை நான் சொல்வதைக் காட்டிலும் வருங்கால வரலாறு துல்லியமாகவும் சுவைபடவும் சொல்லும்.

1956-57-ல் உலகத்தில் எத்தனையோ பெரும் விளைவுகளும் விபத்துக்களும் நிகழ்ந்தன.

அதேபோல், கழகத்தின் வரலாற்றிலும் விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன.

தேர்தலில் கழகம் ஈடுபட்டதன் காரணமாகத் தமிழகத்தின் அரசியலுக்குக் குறிப்பாகவும், இந்திய அரசியலுக்குப் பொதுவாகவும், பெருஞ்சிறப்பு ஏற்பட்டது என்பதுடன், கழகத்திற்கும் தமிழகத்துக்கும் அப்போது நேர்ந்த விபத்துக்களையும் என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

1956 அக்டோபர் திங்களில் விருதை சங்கரலிங்கனார் தமிழ்நாடு என்று இந்த மாநிலத்திற்குப் பெயர் வைக்கவேண்டுமென்று கோரி உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தார். நாங்கள் அழுதோம்; தமிழகம் அழுதது; தமிழ்நாட்டு அரசியல் பீடத்தை அலங்கரித்த காமராசரும், அவரது சீடகோடிகளும் கேலி பேசினர்.

''சங்கரலிங்கனாரைச் சாகடித்து விட்டீர்கள், உங்கள் அலட்சியப் போக்கினால், அவருடைய உள்ளத்தில் ததும்பிக் கொண்டிருந்த ஆசையில் ஒன்றே ஒன்றையாவது, தமிழ்நாடு என்று பெயர் தரும் காரியத்தையாவது செய்யக்கூடாதா என்று காங்கிரஸ் ஆட்சியைக் கேட்கும் அளவுக்காவது தமிழகம் செயல்படலாகாதா?'' என்று அண்ணா அவர்கள், 21-10-56 "திராவிட நாடு" இதழில் "தம்பிக்கு மடல்" குறிப்பிட்டு ஏங்கினார்கள்.

அவருடைய ஏக்கம், 1967-ல் கனியாகி, அ[illegible]டைய திருக்கரங்களாலேயே இந்த மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டும் உத்தரவில் கையொப்பமிட்டார்கள். "தமிழ்நாடு" பெயர் சூட்டு விழாவில் தான் என் அருமை அண்ணு அவர்கள், கடைசியாக அரசியல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் என்பதை எண்ணுந்தோறும், தியாகி சங்கரலிங்கனாரின் நினைவும் எனக்குக் கூடவே தோன்றுவது வாடிக்கையாகி விட்டிருக்கிறது.

அதே போல், தூத்துக்குடித் தங்கம்- கொள்கை வீரன் கே.வி.கே. சாமி 1956 செப்டம்பர் திங்களில் கொடியவர்களால் மிருகத்தனமாகத் தாக்கிக் கொலை செய்யப்பட்டார். இது தமிழகத்தின் துடிப்பான இளைஞர்களுக்குக் கொடியவர்கள் விடுத்த அறைகூவலாகவும் இயக்கத்திற்குப் பேரிடியாகவும் வாய்த்தது.

அதே போல், இந்திய அரசியல் சட்டத்தின் சிற்பிகளில் ஒருவரும் காலமெல்லாம் தாழ்த்தப்பட்ட பெருஞ்சமுதாயத்திற்குப் போராடுவதிலேயே வாழ்வைக் கழித்தவரும், பெருஞ் சூறைக்குப் பின், குளிர்ந்த தென்றல் வீசுவதற்கொப்ப, இந்த நாட்டின் சனாதன தர்மத்துக் கொடுமைகளிலிருந்து பெரும் பகுதி மக்களைக் காப்பாற்றப் பிறந்தவர் எனப் போற்றப்பட்டவருமான அம்பேத்கார் அவர்கள் 1956 டிசம்பரில் மறைந்தார்.

சாதாரணக் காற்றையே மரக்குழாயில் இறக்கியும் ஏற்றியும், அற்புத நாதம் எழுப்பித் தமிழகத்தை இசை மழையில் நனைய வைத்த நாதசுரப் பேரரசர் இராசரத்தினம் அவர்களின் மறைவு தமிழ் இயக்கத்திற்குப்பெரும் இழப்பு என்று எல்லாராலும் ஒருமுகமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அவர் பிரிவும் 1956 டிசம்பரில் நேர்ந்தது.

குறிப்பான இவற்றை விடுத்து, அகில உலக அரசியலுக்குப் போனாலும், 1956-57-ல் பெரும் விளைவுகளை- மாறுதல்கள் நேர்ந்திருக்கின்றன!

1956 ஏப்ரலில் தான் கிழக்கு ஐரோப்பாவில்- குறிப்பாக ஸ்டாலின் வேய்ந்து வைத்திருந்த பலமான இரும்புத்திரை கிழிக்கப்பட்டது. உலகமே அதிர்ச்சியும் பயமும் கணந்தோறும் கொள்ளத் தக்க வகையில், வல்லரசுகளின் கெடுபிடிப் போரின் நடுநாயகமாக விளங்கிய இரும்புத்திரை 1956-ல் யூகோ அதிபர் டிட்டோவின் உறுதியால் கிழிபட்டது. அந்த நாளில் ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் பிறவி எதிரியாகக் கருதப்பட்ட யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் டிட்டோ தாராள மனத்தோடும் கோலாகலமான வைபவங்களோடும் ருஷ்யாவுக்கு வரவழைக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியைப் போப்பாண்டவருக்குப் பெரும் எதிரியாக விளங்கிய எட்டாம் ஹென்றி, போப் ஆண்டவரைத் தனயனுக்குரிய

மரியாதையோடு சென்று தரிசித்தால் எப்படி இருந்திருக்குமோ, அப்படி இருந்ததாக வரலாற்றுசிரியன் ஒருவன் வர்ணிக்கிறான்.

டிட்டோவினுல் கிழிக்கப்பட்ட இரும்புத் திரை ஒழிந்ததற்குப் பின்னுல், சர்வ தேச அரசியலில் வசந்த காலத் தென்றல் வீசும் என்று எதிர்பார்த்ததற்கு மாருக, 1956 பிற்பகுதி அக்டோபரில் அங்கேரியை ருஷ்யா ஆக்ரமித்த செயலைக் கண்டு உலகம் மேலும் ஒருமுறை விம்மிக் குலுங்கிற்று.

அதே போல், 1956-ல் தான், செஞ்சீனு, திபேத், நாட்டுச் சுதந்திரத்தில் ஆதிக்கம் செலுத்த துவங்கிற்று.

1956 ஜூலையில் தான் சூயஸ் கால்வாயை அதிபர் நாசர் சர்வ தேச அரசியல் கொந்தளிப்புகளுக்கிடையில் தேசியமயமாக்கினுர்.

அதற்கடுத்து, நவம்பர் திங்களில் அதே எகிப்தை, இஸ்ரேல் நாடு போர்க்களத்தில் தோற்கடித்தது.

உலகில் பெரும் பரபரப்பையும், குருஷ்சேவுக்கு விளம்பரத்தையும் தேடித்தந்த 20-வது (ருஷ்ய சோவியத் கட்சியின்) காங்கிரஸ் 1956-ல் தான் நடைபெற்றது. இந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் தான் ஸ்டாலின் தன் பெருமைக்குரிய இடத்திலிருந்து மிகக் கீழ்த் தரத்திற்கு எறியப்பட்டார். செத்துப் போனவர்களையும் விடாமல் கம்யூனிசம் எப்படிப் பழிக்கும் ஏசும்-என்பதை 1956 திரையைக் கிழித்துக் காட்டிற்று.

1956 தான், இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அறிவிக்கப்பட்ட நேரம். அந்தத் திட்டத்தில் தென்னகம் பாதிக்கப் பட்டதைக் கதைகதையாக பலரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். கழகத்தின் சங்கநாதம், மாற்றுக் கருத்துக் கொண்டோராலேயே முழக்கமிடப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் தான் நான் குளித்தலைத் தொகுதியில் ஒவ்வொரு கிராமமாகச் சென்று தேர்தல் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

1957 பொதுத் தேர்தலையொட்டி 10-2-57 அன்று சென்னையில் தேர்தல்சிறப்புமாநாடு நடைபெற்றது. அதில்அறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரை எங்களுக்கெல்லாம் புதிய தெம்பையும் ஆர்வத்தையும் ஊட்டிற்று. கழகத்தின் முதன் முதலான தேர்தல் அறிக்கை அந்த மாநாட்டில் தான் பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த மாநாட்டில நான் மிகக் குறைவாகவே பேசினேன்! அந்தப் பேச்சில்—

''கண்ணீர்த் துளிகள் ஒழிய வேண்டும் என்கிறார் பெரியார். நாமும் அதைத்தான் சொல்கிறோம். நாட்டு மக்களின் முகத்தில் வழிந்தோடும் கண்ணீர்த் துளிகள் ஒழிய வேண்டும். மக்கள் முகத்தில் மகிழ்ச்சி பிறக்க வேண்டும் என்கிறோம் நாம்" என்ற பகுதி மட்டுமே அறிஞர் அண்ணா அவர்களின் மேற்பார்வையில் 'நம்நாடு' இதழில் வெளியிடப் பட்டது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்னும் இன்றைய நமது அரசின் குறிக்கோள் எவ்வளவு பொருத்தமானது!

சிறப்பு மாநாட்டை அடுத்து, தேர்தல் பிரச்சாரம் தமிழகத்தில் கழகத்தாராலும், குறிப்பாக அறிஞர் அண்ணா அவர்களாலும், பெருஞ் சூடும் சுவையும் நிரம்பியதாக ஆயிற்று.

''காமராசரை விடத் தமிழகம் பெரிது என்பதை வாக்காளர் உணர வேண்டும்" என்பதைத் தான் அறிஞர் அண்ணா அவர்கள் அப்போதைய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் வலியுறுத்திச் சொல்வார்கள்.

காமராசரின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று அப்போது பெரியார் உட்படப் பலரும் வற்புறுத்திக் கொண்டிருந்த நேரம்! அதற்கு அண்ணா அவர்கள்,

'அந்தக் கரம் வலுப்பெற்றால், தமிழரின் குரல் வளையை நெறிக்கும், அந்தக் கரம் வலுப்பெற்றால் கழகத் தலைவரையே தலையில் குட்டும், அந்தக் கரம் வடநாட்டவருக்குக் காவடி தூக்கும் கரம்: எனவே அந்தக் கரத்திற்கு வலுவூட்டாதீர்கள்" என்றும்,

''காமராசர் எதில் வல்லவர்? தமிழ் மொழியைக் காப்பதில், வளர்ப்பதில்-வல்லவரா? தமிழர் தம் உரிமைகளைக் காப்பதில் வல்ல வரா காமராசர்? தமிழ் நாட்டின் எல்லைகளை காப்பதில் வல்லவராக இருந்தாரா காமராசர்? இல்லையே!" என்றும், 1957 பிப்ரவரி இறுதி வாரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் தொடர்ந்து அடுக்கிய வாதம் மக்களிடையில் விழிப் பூட்டியது.

பிப்ரவரி இறுதியில் சென்னையிலும், காஞ்சியிலும் அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்துக்களைக் கேட்டு மேலும், மேலும் நாள் தோறும் நான் குளித்தலையில் எனக்கிட்ட ஜனநாயகப் பணியைச் சிறப்பாக ஆற்ற வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டிருந்தேன். காம ராசரின் கரம் அவருக்குப் பின் கட்சியிலிருந்த பக்தவத்சலத்தின் கரம்-எத்தனை பேருடைய கழுத்தை நெறித்தது என்பதை 1965-66-ல் நாடே கண்டதல்லவா, இந்தி எதிர்ப்புப் போரில்!

1957-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நமது ஆதரவினை நாடியவர்களுக்காக வாக்கு கேட்டோம். ஆனால் நாமே தேர்தலில் ஈடுபடுவதும், நமக்காகப் பொது மக்களிடம் வாக்குக் கேட் பதும் புதுமையான அனுபவமாக இருந்தது.

61

குளித்தலையில் தேர்தல் பணி

கழகத்தின் ஆணையினைச் சிரமேல் ஏற்றுத் தேர்தல் பணி தொடங்கிட என் குழுவினருடன் குளித்தலை புறப்பட்டேன். என்னிடமிருந்த 1335 என்னுள்ள பியட் கார், 'முரசொலி' அலுவலகத்திலிருந்து ஒரு பழைய வேன், அச்சடிக்கப்பட்ட வேண்டுகோள் அடங்கிய துண்டுத் தாள், ஒரு டேப்ரிக்கார்டர் இவைதான் சாதனங்கள்.

திருச்சியிலிருந்து கரூர் செல்லும் வழியில் குளித்தலை, லாலாப் பேட்டை, கிருஷ்ணராயபுரம், மாயனூர் போன்ற ஊர்களைக் காரிலோ, ரயிலிலோ, பயணம் செய்தவாறு பார்த்தவர்கள் காவிரியின் கவின் மிகுந்த காட்சியினையும், பசுமை கொஞ்சும் செந்நெற் கழனிகளையும் கண்டு, எவ்வளவு வளமான தொகுதி கருணாநிதிக்குக் கிடைத்தது என்று தான் கருதினார்கள். ஆனால், குளித்தலை தொகுதியில் வெள்ளியணை என்ற பகுதியும் சேர்க்கப்பட்டிருந்ததும், அது எவ்வளவு பிற்போக்கான நிலையில் அதுவரை ஆண்டவர்களால் வைக்கப்பட்டிருந்தது என்பதும் அங்கு போய் நேரடியாகப் பார்த்தவர்களுக்கே புரியும்.

மிகக் குறைவான கழகக் கிளைகள்; கழகக் கருத்துக்கள் பரவிட இயலாத பல சிற்றூர்கள்; கழகக் கொடி பறக்கக் காண முடியாத இடங்களே அதிகம். சிற்சில ஊர்களில் இருந்த திராவிடர் கழகத்தாரும் ஆதரிக்க முடியாத நிலை. துணிச்சலோடு தான் குளித்தலைத் தொகுதியில் நுழைந்தேன்.

பராங்குசமும், பண்ணையும், கவிஞர் ஆனந்தமும், தென்னனும் அலுவலகப் பணிகளைக் கவனித்தனர். நிழல் போல் நீங்காமலிருந்து வாக்குச் சேகரிக்க உதவியவர்கள் முத்துக்கிருஷ்ணன், இளமுருகு, பொற் செல்வி, மற்றும் முத்து, முத்துசாமி, கிருஷ்ணன், சிவராஜ் ஆகியோர். நான் காலைச் சிற்றுண்டி முடித்ததும் குளித்தலையை விட்டு, சண்முக வடிவேல் ஓட்டிட என் பியட் கார் புறப்படும். மதிய உணவு ஏதாவது மசால் வடை, ரொட்டி, தேநீர்! இரவு பொதுக் கூட்டமெல்லாம் முடிவு பெற்றுக் குளித்தலை திரும்பிட அதிகாலை இரண்டு மணிக்கு மேல் ஆகிவிடும்.

வெள்ளியணையில் இரண்டு முறை மேடை போட்டு, விளக்குகள் அமைத்து, ஒலிபெருக்கியும் ஏற்பாடு செய்து பார்த்

தோம். கூட்டம் நடத்த இயலவில்லை. மக்களுக்குத் தி. மு. க என்றால் என்னவென்பதே தெரியவில்லை. இதில் ஒன்றும் வியப்பில்லை. எனென்றால், 1948-ஆம் ஆண்டு காந்தியடிகள் மறைந்த செய்தியை, 1957 வரை அறியாமலிருந்த மக்களும் சிலர் அப்பகுதியில் இருந்தனர். போக்குவரத்து வசதிகளே இல்லாத கிராமங்கள்.

விடாமுயற்சியுடன் மூன்றாவது முறையாக வெள்ளியணையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடத்தினோம். மக்கள் திரண்டனர். சில திராவிடர் கழகத் தோழர்களும் என் பக்கம் வந்தனர். என் பிரச்சார முறைக்குப் பிடிப்பும் ஏற்பட்டது. வாக்குகளே பெறமுடியாது என்று கருதியிருந்த அந்தப் பகுதியில் சரிபாதிக்கு மேல் வாக்குகள் கிடைத்தன இறுதியில்!

'நாடு பாதி, நங்கவரம் பாதி' என்ற பழமொழிக்கு இலக்காயிருந்த நங்கவரம் பண்ணை சூளித்தலைத் தொகுதியில் தான் சேர்ந்திருந்தது. அங்கிருந்த உழவர் பெருமக்கள் காலமெல்லாம் கையேர் வரரம், மாட்டேர் வாரம் போன்ற பிரச்சினைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்தனர்.

நங்கவரம், நெய்தலூர், கவுண்டன்பட்டி போன்ற ஊர்களில் தேர்தல் பிரச்சாரத்துக்காக நான் சென்ற போது உழவர் பெருமக்கள் மனமுவந்து என்னை வரவேற்றனர். அவர்கள் கோரிக்கைகளின் நியாயத்தை நன்றாகப் புரிந்துகொண்டேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக போராடி அவர்களுக்கு வெற்றியினை ஈட்டித் தருவேன் என்று சூளுரைத்தேன்.

நான் குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆன பிறகு, நங்கவரம் தொகுதி விவசாயிகளுக்காக அமைச்சர்களுடன் வாதாடியதும், அரசினரும், பண்ணையார்களும் இணங்கி வராத காரணத்தால் நங்கவரம் பெரிய விவசாயப் போராட்டக் களமாக உருவெடுத்ததும், நானே வயலில் இறங்கிக் கலப்பை பிடித்து ஏர் உழ முனைந்ததும்,

இறுதியில் பயங்கர நிலைக்குப் போராட்டம் வந்துவிட்டது கண்டு அஞ்சிய அரசும், பண்ணையும் விவசாயிகளின் உரிமைக் குரலுக்குப் பணிந்து வந்ததும், தமிழ் நாடே நன்கறிந்த வரலாறுகும்.

தேர்தலுக்கு நாம் புதியவர்களானலும் நமது தேர்தல் பிரச்சார முறைகள் புதுமையும், கவர்ச்சியும் பொதிந்து விளங்கின. அச்சிடப் பட்ட எனது வேண்டுகோளும், டேப் ரிகார்டரில் பதிவு செய்யப்பட்ட எனது சொற்பொழிவும், சுவர்களிலும், தட்டிகளிலும் மாயூரம் பி. டி. ராஜன் தீட்டிய வண்ணம் பொலியும் வாசகங்களும், 'எங்கள் வீட்டுப் பிள்ளை மு. கருணாநிதி' என்று நண்பர்களால் தயாரிக்கப்பட்ட காலண்டரும், அனைத்துக்கும் மேலாக நாள்தோறும் ஒரு சிற்றூர் சென்று வீடுவீடாக நான் வாக்குக் கேட்ட முறையும், கழகக் கொள்கை களை விளக்கிப் பேசியதால் மக்களுக்குப் புதிதாக மலர்ந்த ஆர்வமும், கழகத் தலைவராம் அண்ணாவிடமும் பிற முன்னணித் தலைவர்களிடமும் ஏற்பட்ட நம்பிக்கையும் நான் குளித்தலையில் வெற்றி பெறத் துணை செய்தன.

வெள்ளியணைப் பகுதியில் நான் துவக்கத்தில் கண்ட அசிரத்தை யான போக்கு நாளடைவில் நமது பணியால் மாறி வந்தது. அரசி யலில் பற்றின்றித் தேநீர்க் கடைகளில் வேகவைத்த வாத்து முட்டை யில் மிளகாய்ப் பொடியைத் தூவிச் சிற்றுண்டியாக உண்பதும், உற்சாக மின்றி வாழ்வதுமாக இருந்த மக்கள், நல்ல விழிப்பும் தெளிவும் பெற்றனர். அவர்களது வளத்துக்காகக் குடகனாறு திட்டத்தை மேற் கொள்ள வேண்டுமென்று சட்டமன்றத்தில் நான் இடையருது போராடி யிருக்கிறேன். (இப்போது மேற்கொள்ளப்பட்டு விட்டது.) அப்போர்ப் பட்ட பின்னடைந்து கிடந்த பகுதியினை முன்னேற்றுவதில் என் பங்கும் பெருமளவில் இருந்ததை எண்ணி எண்ணி இப்போதும் நான்பெருமிதம் கொள்கிறேன்.

குளித்தலைக்கு அருகிலுள்ள தண்ணீர்ப்பள்ளி என்ற ஊரில் பெண் களுக்காக வைக்கப்பட்டிருந்த வாக்குப் பெட்டியில் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு வாக்குக்கூட விழவில்லை. தாய்மார்களுக்கென நான் விடுக்கும் தனியான கனிவு மிக்க வேண்டுகோள் நல்ல பலனை அளித்து வந்தது. உதயசூரியன் சின்னத்தைக் கோலமாக அமைத்திட நான் ஒரு சொற் பொழிவில் கேட்டுக் கொண்டேன். அதன் பின்னர் நான் வாக்குக் கேட்கச் சென்ற இடமெங்கும் தாய்மார்கள் தமது வீட்டு வாசலில் நீர் தெளித்து, உதயசூரியன் கோலமிட்டு, என்னை வரவேற்பது வாடிக்கை யாகிவிட்டது.

என்னோடு குளித்தலையில் தேர்தல் பணியாற்றிய நண்பர்களெல் லாம் என் மீது கோபம் கொள்ளுமாறு நான் ஒரு விஷயத்தில் நடந்து கொண்டேன். தவறு என்னுடையதும் ஆகாது. நான் குளித்தலைத்

தொகுதி வேட்பாளனாக நடந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆனால் நானே கழகத் தொண்டனாகவும் நடந்து தீர வேண்டியவனாக இருந்தேன்.

புரியவில்லையா? அருமை நண்பர்கள் நான் குளித்தலைத் தொகுதியி லேயே எப்போதும் தங்கியிருந்து தேர்தல் பணி ஆற்றிட வேண்டும் என்றார்கள். என்னால் அது முடியுமா? தமிழ்நாடு முழுவதும் நமது கழகத் தலைவர்களும் தொண்டர்களும் பல்வேறு தொகுதிகளில் போட்டி யிட்டனர்.

அண்ணா காஞ்சியிலும், நாவலர் சேலத்திலும், பேராசிரியர் அன்பழகன் எழும்பூரிலும், ஆசைத்தம்பி ஆயிரம் விளக்கிலும், சத்தியவாணிமுத்து பெரம்பூரிலும், ப. உ. ச. திருவண்ணாமலையிலும், என். வி. என். பேசின் பிரிட்ஜிலும், இலட்சிய நடிகர் தேனீயிலும், கவிஞர் கண்ணதாசன் திருக்கோட்டியூரிலும், அன்பில் தர்மலிங்கம் லால்குடியிலும் கழகச் சார்பில் போட்டியிடும்போது, நான் சுயநலத் தோடு குளித்தலையை மட்டும் பார்த்துக் கொண்டால் போதுமா?

இந்தத் தொகுதிகள் அனைத்திற்கும் சென்று ஏராளமான கூட்டங் களில் கலந்து கொண்டேன். என் கடமையினைச் சரிவர ஆற்றிய திருப்தியும் பெற்றேன். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பதுபோல, என் தொகுதியிலும் தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். ஆகியோர் எனக்காக ஒருநாள் வாக்குக் கேட்க வந்து சிறப்பித்தனர்.

தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கின. நாவலர், கண்ண தாசன், அன்பில், ராஜேந்திரன் ஆகியோரின் தோல்விகள் எனக்கு மிகுந்த அதிர்ச்சியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தின. என்றாலும் அண்ணா, அன்பழகன், ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து, ப. உ. ச. போன்றோர் வெற்றி பெற்று நாங்கள் சட்டமன்றத்தில் பதினைந்து பேரும், பாராளுமன்றத்தில் இரண்டு பேரும் முதன் முறையாகக் கழகத்தின் சார்பில் இடம் பெற்று அமர்ந்ததும், அடுத்த பத்தே ஆண்டு களில் நமது ஈடு இணையற்ற தியாகம், தொண்டுகளின் மேன்மையால் ஆட்சிபீடத்தில் இடம் பெற்று அமர்ந்ததும், 1956-57-ஆம் ஆண்டுகளில் உலக வரலாற்று ஏடுகளில் சிறப்பான இடத்தை நிரப்பிடத் தக்கவை அல்லவா?

அண்மையில்கூட நான் குளித்தலை சென்றிருந்தேன். குடும்பப் பாசத்தினைப் பொழிந்து, தமக்குள் பற்பல கருத்து வேறுபாடுகள் காணப்படினும், என்னைக் காணும்போது அவற்றினை மறந்து, ஒன்று பட்டு நின்று, அப்போது என்னோடு உறுதுணையாக

இருந்து பணியாற்றியவர்கள் இன்று என்னருகேயிருந்து, ஊர் ஊராக நான் சென்று கண்டவர்கள், என்னை மறவாமல் காண வந்து, என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்தினர்கள். நான் அதற்கு பிறகும் மூன்று முறை இரண்டு தொகுதிகளுக்குச் சொந்தக்காரனாகி விட்டாலும், குளித்தலைப் பகுதி மக்களுடன் நான் கொண்ட உறவு வெறும் தேர்தல் கால உறவாகவா இருந்தது? இல்லையே! இந்தக் குடும்பப் பாசந்தானே நமது கழகத்தின் உயிர்ப்புச் சக்தியாக விளங்கி நம்மைக் காத்து வருகின்றது!

1857-ஆம் ஆண்டுதான் இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் வடக்கிலும்-தெற்கிலும் ஒருமுகமாகவும், தெளிவாகவும் தங்கள் அடிமை நிலையை உணர்ந்து, அந்நிய ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்கு ஒன்றுபட்டுப் போராடினர்கள் என்று சொல்லப்படுகிறது. அதேபோல, அதற்குச் சரியாக ஒரு நூற்றாண்டுக்குப் பின்னால், 1957-ல் தான் இந்தநாட்டு மக்கள் தங்களுடைய முழு உரிமையையும், நாட்டின் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு தேர்தல் களத்தில் தங்கள் உணர்வுகளைக் காட்டிக்கொண்டனர் என்று சொல்லலாம்.

1857-ல் 'முதலாவது சுதந்திரப் போர்' என்றால்,

1957-ல்'இரண்டாவது சுதந்திரப் போர்' நடந்த ஆண்டாகவே கொள்ள வேண்டும்.

1857-ல் அப்போதிருந்த நிலைமைக்கேற்ப, அந்நியர்களை விரட்ட சில முடியரசுவாதிகளுக்கு ஆதரவாகவும், அரண்மனைச் சதிகாரர்களின் கைப்பாவையாகவும், சுதந்திரப் போர் வீரர்கள் துப்பாக்கியும் வாளுமேந்திக் களம் புகுந்தார்கள்.

1957-ல் புத்துலக விழிப்புணர்வுகளுக்கேற்ப, ஜனநாயகத்தின் சார்பிலும், எதேச்சாதிகாரத்துக்கு எதிராகவும், வாக்குச் சீட்டை ஏந்திய கரத்தோடு தேர்தல் களத்தில் தங்கள் கருத்துக்களை நிலைநாட்டத் தலைப்பட்டார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஜனநாயகப் பாரம்பரியமே 1957 இரண்டாவது பொதுத் தேர்தலிலிருந்துதான் முளைவிடத் தொடங்கிற்று என்றால், அது மிகைப்படச் சொல்வதாகாது.

காங்கிரஸ் கட்சியின் எதேச்சாதிகாரத்திற்கு எதிர்க் குரல் கொடுத்து இந்த நாடு ஒரு கட்சிக்கு அல்ல; அதில் வாழும் அத்தனை கோடி மக்களுக்கும் சொந்தமானது என்பதை மெய்ப்பிப்பதற்குத் துடித்த தூயவர்கள் எல்லாம், அப்போதிருந்த அரசியல் விழிப்பற்ற மக்களால் சில சமயம் கேலி பேசப்பட்டார்கள். தூற்றப்பட்டார்கள்.

காங்கிரசை எதிர்த்து நிற்பதே நாட்டுக்குத் துரோகம் என்றுகூடப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

என்ருலும், நாட்டு நலனில் அக்கறை கொண்ட நல்லறிவாளர் கள், எதிர்காலத் தலைமுறையினரின் ஜனநாயக வாழ்வையும், நாட்டின் முன்னேற்றத்தையும் கருதித் தங்களே ஜனநாயகப் பணிகளில் ஈடு படுத்திக் கொண்டார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் மேகம்போல் கப்ப முனைந்த ஏதேச் சாதிகாரத்தைக் கதிரவன் ஒளிபாய்ச்சி ஒழித்துக் கட்ட முனைந்த உத்த மர்களில் முதன்மையானவராக அறிஞர் அண்ணு விளங்கினர்.

இன்று, இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்படும் உரிமை உணர்வுகளுக்கும் ஜனநாயகப் பெருமைகளுக்கும் முன்னோடியாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் அறிஞர் அண்ணு அவர்கள் தாம் என்பதை இனி வருங்காலம் தெளிவாக உணர்த்தவே செய்யும்.

1957-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலில், முதன்முறையாக வேட்பாளர்களாகப் போட்டியிட்ட தி. மு. கழத்தினர், தாங்கள் எப்படியும் வெற்றி அடைந்தாக வேண்டும்; பதவியிலே சென்று அமர வேண்டும்; எம். எல். ஏ. என்கிற பட்டத்தினைத் தங்கள் பெயரோடு ஒட்டிக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தின் காரண மாக அந்தப் போட்டியிலே ஈடுபடவில்லை.

தங்களே யாரும் அசைக்க முடியாது என்று ஆணவ முரசம் கொட்டிக்கொண்டிருந்த காங்கிரசின்கோட்டைக்கதவில் சில கீறல்களே ஏற்படுத்தியாக வேண்டும்; இப்போது உண்டாக்குகிற அந்தக் கீறல், அடுத்தடுத்து நடைபெறும் மோதுதல்களில் கதவு தகர்ந்து கோட்டை பிடிபடும் சூழ்நிலையை உருவாக்கும் என்ற காலக் கணிப்போடுதான் அந்தப் போட்டியிலே கழகத்தினர் ஈடுபட்டார்கள். ஆகவே அவர்கள் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படவில்லை. பணம், பரம்பரைக் கௌரவம். அதிகாரம் இவையெல்லாம் பயன்படுத்தப்பட்ட அந்தத் தேர்தலில், காசற்றவர்களாய், ஆனல் மனத்திலே மாசற்றவர்களாய் உறுதியோடு தேர்தல் களத்தில் நின்று காங்கிரஸ் கட்சியின் மூர்க்க மான பலத்திற்கு ஈடு கொடுத்தார்கள்.

பழங்காலத்தில் பாரசீகர்களே எதிர்த்து நின்ற கிரேக்கர்களைப் போல, ரோமானியர்களே எதிர்த்து நின்ற கீழ்த்திசை நாட்டவர்களைப் போல, வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல், காங்கிரசை எதிர்ப்பதையும் அதன் ஆணவத்தைக் குறைப்பதையும் தமது பிறவிக் கடன்களில் ஒன்ருக எண்ணியே கழகத் தோழரும் அந்தத் தேர்தலில் பணியாற்றினர்கள்.

"தேர்தலில் ஈடுபட்டுத்தான் அந்தஸ்து தேடிக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் அறிமுகம் இல்லாதவர்களல்ல தி. மு. கழகத்தில்

இருப்பவர்கள். நாட்டிற்குப் புதியதோர் அந்தஸ்து தேடித் தருவதற் காகவே தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகின்றது'' என்று அறிஞர் அண்ணு அவர்கள் 10-2-57-ல் நடைபெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டில் கூறியதற்கேற்ப, நாட்டுக்குப் புதிய அந்தஸ்தைத் தேடித் தரும் தூதுவர்களாகவே ஒவ்வொரு கழகத் தோழரும் பம்பரமெனச் சுற்றிப் பணியாற்றினர்கள்.

1957 தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடும்போது அதற்கிருந்த வசதிகள் குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. பணம்! அது பற்றி வாழ்க்கையிலேயே கவலைப்படாத தி. மு. கழகத் தோழர்கள் தேர்தலிலும் கவலைப்படவே இல்லை! மற்றவை பிரச்சார வசதிகள் அது அவரவர்களுக்கு அண்ணன் கற்றுத் தந்த அரசியல் பாடமும். வாழ்க்கையில் கண்டு தேர்ந்த அனுபவப் படிப்புமே ஆகும்.

சிறப்பு மாநாட்டில் பேசிய தோழர்களில் சிலர் காங்கிரசுக்கு இருந்த பல்வேறு பலங்களை வருணித்து, அதற்குள்ள பண பலத்தையும் கூறி, அது நமக்கு இல்லையே என்று ஏங்கினர்கள். அவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில், ''எதிர்த்துப் போட்டி இடுபவர்களின் பண பலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பணியாற்றுங்கள். வீட்டி லுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை விற்றேனும் அவசியமான செலவு களைச் சரிக்கட்டித் தேர்தல் பணியாற்றுங்கள்'' என்பது அறிஞர் அண்ணு இட்ட கட்டளை.

வாழ்க்கைப் பிரச்சினைக்கே பணத்திற்காகத் தினறிக் கொண்டி ருந்த கழகத் தோழர்கள், தேர்தல் பணிக்காகவும், பணத்திற்கு அலைந்ததை என்னால் மறக்க முடியாது. இவை அனைத்தும் எதற்காக?

அறிஞர் அண்ணுவும், கழகமும் இட்ட கட்டளை என்பது ஒன்று.

நாட்டில் ஜனநாயகம் தழைக்கவும், காங்கிரஸ் கட்சியின் சர்வாதி காரம் சாயவும் எந்த விலையாவது கொடுத்துத் தீர வேண்டும் என்பது மற்றொன்று.

இந்த இரண்டு கடமைகளுக்கும் இடையில் கழகத் தோழர்களுக்கு அன்றிருந்த வேறு பல இடைஞ்சல்களும் நெருக்கடிகளும் ஏராளம்.

கழகத்தை ஓர் அரசியல் இயக்கமாக ஒப்புக்கொள்வதற்கே மற்றவர்கள் அப்போது அஞ்சினர்கள்.

கழகம் அவ்வப்போது ஈடுபடும் பல்வேறு போராட்டங்களைப் போலவே, 1957 தேர்தலையும் ஒரு போராட்டக் களமாக நினைத்துப் பணியாற்றிய கழகத் தோழர்கள் தங்களுக்கிருந்த தடங்கல்களைப் பற்றி அவ்வளவாகச் சிந்திக்கவே இல்லை.

கழகம் அப்போதுதான் முதன் முறையாகத் தேர்தலில் ஈடுபடுவ தால், அதற்கெனத் தனியாகத் தேர்தல் சின்னம் ஏதும் இல்லை. இப்போது கழகத்தின் சின்னமாக உள்ள உதய சூரியன் சின்னம் அப்போது சுயேச்சைச் சின்னம்.

''கூடுமானவரை உங்கள் தோழர்களுக்கு உதயசூரியன் சின்னம் ஒதுக்குவதற்கு முயற்சி செய்கிறோம்'' என்பதுதான் தேர்தல் அதிகாரி கள் கழகத்திற்கு அப்போது தெரிவித்த ஆறுதல் மொழி.

கழகத்தின் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர் களுக்கு உதயசூரியன் சின்னம் கிடைக்கவில்லை. அவருக்கு ஒதுக்கப் பட்டது கோழிச் சின்னம்.

காஞ்சியிலும், குளித்தலையிலும் 'உதய சூரியனுக்கே வாக்களி யுங்கள்' என்று ஓயாமல் பிரச்சாரம் செய்துவிட்டு, சேலத்திற்குச் சென்றதும் 'உதய சூரியனுக்கு வேண்டாம் (சேலத்தில் ஒரு சுயேச்சை யாளருக்கு உதய சூரியன் சின்னம் வழங்கப்பட்டு விட்டது.) கோழிக்கே உங்கள் ஆதரவைத் தாருங்கள்' என்று பிரச்சாரம் செய்த சங்கட நிலைமையை அப்போது சந்தித்தோம்.

அது மட்டுமா?

தேர்தல் பணிகளின் அரிச்சுவடி கூட எங்களுக்குத் தெரியாத நேரம் அது.

''நமக்குத் தொகுதிகள் எப்படி இருக்கின்றன என்பது தெரியாது. மாநாட்டுக்குத் திடல்களைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், அசட்டையுடன்தான் நாம் தொகுதிகளைத் தேர்ந்தெடுத்தோம். ஏனென்றால், தேர்தல் பணியில் நமது அனுபவம் அவ்வளவே'' என்று அறிஞர் அண்ணா அவர்களே சொன்னதைக் காட்டிலும், அதிகமாக. 1957-ல் கழகத்தவர்கட்கு இருந்த தேர்தல் பணித் திறமைகளைப் பற்றிச் சொல்வதற்கில்லை.

இதுபோன்ற எண்ணற்ற சங்கடங்களினூடே நாங்கள் 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டோம். கழகப் பொதுச் செயலாளர் நாவலர்

நெடுஞ்செழியன அவாகள், சேலத்தில் சிறு அளவு வரக்குகள வித்தி யாசத்தில் வெற்றிக்கான வாய்ப்பினை இழந்தார்.

இது எங்கள் அனைவருக்கும் ஆருத் துயரளித்தது. தோற்றுப் போன தோழர்கள்கூட, நாவலர் வெற்றியுருததை நினைத்து வருந்தினர்.

''நாவலர் வெற்றி பெறவில்லையே" என்ற துக்கம் எங்களுக்கெல் லாம் இருந்தது.

"நாங்கள் 15 பேர் சட்டசபைக்குச் செல்லும்போது ஈட்டி பாய்ந்த இதயத்துடன்தான் சென்ரேம். நமது நாவலரையும் என்றைக்கு நாம் சட்டமன்றத்தில் அழைத்துக் கொள்கிரேமோ அன்றுதான் நாம் மன நிம்மதி பெற முடியும்''

—என்று, வெற்றி பெற்றதும் முதன் முதலாகச் சென்னைக் கடற் கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசினர்கள். இந்தப் பேச்சு எங்கள் அனைவருடைய உணர்ச் சியையும் எதிரொலிப்பதாக இருந்தது.

கழகச் சார்பில் 112 இடங்களில் போட்டியிட்டு 15 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டோம்.

''சுதந்திரத்தின் புதிய ஜோதி அணையாமலும், குடியரசு ஆட்சி முறையின் எதிர்காலத்தையும் பாதுகாக்க வேண்டும். இவற்றைப் பாதுகாப்பது நமது மக்கள் இடையருத சோதனையின் வெற்றியையே பொறுத்திருக்கிறது" என்று 1757-ல் ஜார்ஜ் வாஷிங்டன் ஜனுதிபதி யானதும் முதல் பேச்சில் குறிப்பிட்டார். இதே பாணியில் இதற்குச் சரியாக 150 ஆண்டுகள் கழித்துத் தென்னகத்தின் பெருந்தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் 1957 பொதுத் தேர்தலில் கழகம் செய்து பார்க்கும் சோதனையின் வெற்றியில் எதிர்கால நல்வாழ்வையும், குடியரசு ஆட்சி முறையின் சிறப்பையும் காப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார்.

அன்றையத் தேர்தல், அறிஞர் அண்ணு அவர்களின் ஜனநாயகப பற்றுக்கும் எதிர்கால நல்வாழ்வுக்கும் அடித்தளம் அமைப்பதில் அவருக்கிருந்த ஆர்வத்துக்கும் ஒரு பரிசோதனைக் களமாகவே அமைந்தது. ''யுத்தம் பூரணத்தின் ஒரு பகுதி; பூரணம் என்பது அரசியல்" என்று மாவீரன் லெனின் கூறியது போல, அறிஞர் அண்ணு அவர்களின் கணிப்பீட்டில் தேர்தல் என்பது பூரணத்தின் ஒரு பகுதி பூரணம் என்பது தென்னகத்தின் நல்வாழ்வு - தமிழ் மொழியின் பாதுகாப்பு - ஜனநாயகத்தின் வளர்ச்சி - மக்கள் அனைவரின் முகத் திலும் தோன்றும் புன்னகை என்பவைகளாகவே இருந்தன.

1957 பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபாடு கொண்டது. தேர்தல் களத்தில் கழகத் தோழர்கள் ஆற்றிய பணிகளையும், ஜனநாயகத்திற்குப் பாமர மக்களிடையும் கிடைத்த செல்வாக்கையும் இப்போது நினைத்துப் பார்க்கும்போது யாருக்கும் ஒரு பணிவு உணர்ச்சி வராமற் போகாது.

பிற்காலச் சோழர்கள் ஆட்சிமுறை தமிழகத்தில் ஒரு பொற் காலத்தைத் தோற்றுவித்ததாகத் துல்லியமாக வரலாறு குறிப் பிடுவதைப் போல, 1957 பொதுத் தேர்தலைத் தொடர்ந்தும் தமிழகத்தில் ஒரு பொற்காலம் தோற்றுவிக்கப்பட்டது என்பது முற்றும் உண்மை.

நெடுந்தொலைவு பாலைவனத்தில் பிரயாணம் செய்துவிட்டு ஓரிடத்தில் குளிர்ந்த நீரோடையைக் காணும் பிரயாணியின் மகிழ்ச்சி ஒவ்வொருவரின் செயலிலும் ஆர்வத்திலும் அப்போது பிரதிபலித்ததை அரசியலைக் கூர்ந்து கவனித்தோர் உணரவே செய்தனர்.

நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்றம் கொடுக்கத் திரண்டெழுந்த சக்திக்கும், அதனை எதிர்க்கும் எதேச்சாதிகாரத்துக்கும் ஏற்படும மோதுதலைகளின் தன்மையை 1957 பொதுத் தேர்தலின் வாக்குப் பதிவு நாட்களிலும், வாக்குகள் எண்ணப் பட்ட நாட்களிலும் தமிழகம சரியாகக் கண்டது.

ஜனநாயகத்துக்குள்ள பலவீனமான பகுதிகள் அனைத்தும் அப்போது காங்கிரஸ் கட்சியின் மொதத உடைமைகளாக இருந்தன. ஜனநாயகத்திறகு உள்ள சிறப்புக்கள் அனைத்தும் அறிஞர் அண்ணாவின் நம்பிக்கைக் கருவூலங்களாகத திகழ்ந்தன.

ஏழ்மை, வறுமை, படிப்பின்மை, சாதிப் பாகுபாடு ஆகிய அனைத்தும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் காலத்து வாக்குகள காய்த்துத் தொங்கும் மரங்களாக வேரூன்றி வளர்ந்து கிடப்பதைக கழகத் தோழர்கள் கண்ணுறக் காணும் நாட்களாக அவை இருந்தன.

காஞ்சியில், சேலத்தில், குளித்தலையில், சென்னையில் கழகத் தோழர்கள் போட்டியிட்ட தொகுதிகளிலெல்லாம் நடைபெற்ற வன் முறைகளும், ஜனநாயக விரோதச் செயல்களும் சொல்லுய தரமன்று! நண்பர் கண்ணதாசன் போட்டியிட்ட திருக்கோடி யூர்த் தொகுதியில் சில வாக்குச் சாவடிகளில் வாக்குகள் எண்ணத தலைப்பட்டபோது வாக்குப் பெட்டிகள் திறந்தே கிடந்தன. வைகைப பட்ட சீல்கள் என்னவாயின என்று நண்பர் கண்ணதாசனும், மற்ற வேட்பாளர்களும் கேட்ட கேள்விக்குப் பதிலே கிடைக்கவில்லை. சிங்கம புணரியில் காங்கிரசார் ஓட்டுக்குப் பணம் கொடுத்தபோது கழகத் தோழர்கள் கையும் மெய்யுமாகவே பிடித்துக் காட்டினர்கள்.

கழக வேட்பாளர்கள் வெற்றிபெற்ற இடங்களில் முடிவுகளை அறிவிப்பதில் அசாதாரணத் தயக்கம் காட்டப்பட்டது. அது ஏன் என்பதற்கு விடை கிடைக்கவே இல்லை. 1957 தேர்தலில் நடைபெற்ற மற்றொரு விசேஷம் கம்யூனிஸ்டுகள் நடந்து கொண்ட முறையாகும். "காங்கிரசுக்கே வாக்களியுங்கள்; ஆனால் கழகம் வெற்றி பெற வழி விடாதீர்" என்பதுதான் அவர்களுடைய லட்சியமாக இருந்தது.

காஞ்சியிலும், சேலத்திலும் கம்யூனிஸ்டுகள் நடந்து கொண்ட முறை அவர்கள் போற்றும் கொள்கைகளுக்கே உகந்ததுதானா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்கும் நிலையில் அப்போது அவர்கள் இல்லை. இந்த இரு இடங்களில் கம்யூனிஸ்டுகள் ஜாமீன் தொகை கூட இழந்தார்கள் என்பதும் முக்கியமானதாகும்.

நான் போட்டியிட்ட 1957-ஆம் ஆண்டுத் தேர்தலில் குளித்தலையில் மொத்தம் ஏழு வேட்பாளர்கள் போட்டியிட்டோம். நான் 22, 785 வாக்குகளும், என்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் திரு கே. தர்மலிங்கம் 14, 489 வாக்குகளும் பெற்றோம்.

குளித்தலையில் செல்லாத வாக்குகள் நான்குதான்; இதிலிருந்தே தேர்தல் பணிகளைக் கழகத் தோழர்களும் மற்றக் கட்சியினரும் எப்படிச் செய்திருக்கிறார்கள் என்பது புலனாகும். பின்தங்கிய பகுதியான குளித்தலைத் தொகுதியில் மொத்தம் பதிவான 48, 163 வாக்குகளில் செல்லாதவை நானகுதான் என்றால், ஒவ்வொரு வாக்கும் எத்தகைய பொறுப்புணர்வோடும் பெருமதிப்போடும் சேகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதும், தோழர்களின் செயலாற்றலும் நன்கு வெளிப்பட்டன.

என் தொகுதியிலும் அப்போது கம்யூனிஸ்டுகள் தமது கைவரிசையைக் காட்டாமலில்லை. திரு எஸ். சண்முகம் என்ற சுயேச்சையை ஆதரித்துக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் மீதும், என்மீதும் சுமத்திய அபாண்டங்கள் கொஞ்சமல்ல.

ஆயினும், காஞ்சி, சேலம் போலவே குளித்தலையிலும் கம்யூனிஸ்ட் சார்பு வேட்பாளர் ஜாமீன் பறிகொடுத்தார். குளித்தலைத் தொகுதியில் மற்றுமோர் அதிசயம் நிகழ்ந்தது. தண்ணீர்பள்ளி என்ற கிராமத்தின் வாக்குச் சாவடியில் உதயசூரியனுக்குத் தவிர, மற்ற எந்தச் சின்னத்திற்கும் ஒரு வாக்குகூடப் போடப்படவில்லை! இது ஓர் அகில இந்திய 'ரிக்கார்ட்' என்று பேசப்பட்டது. மேலும் எனக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் 22,785-ல் ஏறக்குறைய 12,580 வாக்குகள் தாய்க்குலம் வழங்கிய வாக்குகள்தாம். இது ஒரு தனிச் சிறப்பு என்பதாக அப்போது பேசப்பட்டது.

இது போன்று பல்வேறு சங்கடங்கள். சிறப்புகளுக்கிடையே கழகச் சார்பாக 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

மாவட்ட வாரியான கணக்குப்படி பார்த்தால் சென்னை-3; செங்கற்பட்டு-1; வடாற்காடு-4; தென் ஆற்காடு-4; சேலம்-2; திருச்சி-1 என்ற கணக்குப்படி 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், சரித்திரத்தில் மும்முடிச் சோழன் என்று சொல்லப்படுவதைப் போல, சேர-சோழ-பாண்டிய மண்டலங்களுக்கு நான் ஒருவனே பிரதிநிதி என்பதுபோல், தொண்டை நாடு, கொங்கு நாடு தவிர்த்த மற்றப் பகுதிகளில் நான் ஒருவன் மட்டுமே கழகச்சார்பாகத் தேர்தெடுக்கப்பட்டேன்.

இதுபற்றிச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள்கூட வேடிக்கையாக, 'கழகம் தொண்டை நாட்டில்தான் வெற்றி பெற்றுள்ளது. மற்றப் பகுதிகளில் எங்கே காணோம்?' என்று அப்போது கூறினார். அதற்குப் பதில் சொல்லும் வகையில் அண்ணா அவர்களும், ''உண்மைதான். அவருக்கு நான் ஒன்று கூறுவேன். தொண்டை நன்னாடு சான்றோருடைத்து என்ற பழ மொழியை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். சான்றோருடைய தொண்டை நாட்டில் கழகத்திற்கு வெற்றி கிட்டியுள்ளது. இந்தச் சான்றோர் இதர நாடுகளிலும் வெற்றியைத் தேடித்தருவார்கள்'' என்று கூறினார்.

62

முதல் சட்டமன்ற நுழைவு

பதினைந்து பேர் வெற்றி பெற்றனர் என்றாலும், காமராசரும், கம்யூனிஸ்டுகளும் தங்கள் குரலையும், பிரச்சாரத்தையும் தலைகீழாக மாற்றிக் கொண்டனர். '15 பேர் தானே இவர்கள். நாங்கள் 150 பேர் இருக்கிறோமே! இவர்கள் என்ன செய்ய முடியும்?' என்று திசை திருப்பினர். அப்போது நிதியமைச்சராக இருந்த சி. சுப்ரமணியம் அவர்கள் கூட கேலி பேசினார். "இவர்கள் 15 பேரையும் எங்களிடம் உளள பெண் உறுப்பினர்களே கவனித்துக் கொள்வார்கள்" என்றார் அவர். ஆனால், அறிஞர் அண்ணா அவர்களின் கணிப்பே வேறு விதமாக இருந்தது.

"15 பேர் தானே வெற்றி பெற்றனர் என்று கேலி பேசுகின்றனர். ஏளனம் செய்கின்றனர். தி.மு. கழகம் பெற்ற வெற்றி அதிகமா, குறைவா என்ற சர்ச்சையில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன். நாங்கள் பெற்ற வெற்றி குறைவானது தான் என்றாலும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும்" என்று முதன் முதலாக வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டு வழங்கிய சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா முழங்கினார்கள்.

"15 பேர்தானே வெற்றி பெற்றோம் என்று கேலி பேசாதீர்கள். சிறந்த எதிர்க்கட்சி என்றாலே எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நாங்கள் அகில இந்தியாவுக்கும் உதாரணமாக விளங்குவோம்" என்ற முறையில், கேலி பேசிய வாய்களுக்குக் கடிவாளம் பூட்டினார், அறிஞர் அண்ணா. "கல்லடியும் சொல்லடியும் தாங்கிப் பழக்கப்பட்டுள்ள நமது கழகத்தவரை விட, எதிர்க் கட்சியாக பணியாற்ற வேறு யாரால் முடியும்?" என்று அன்று கடற்கரையில் கூடியிருந்த லட்சோப லட்சம் மக்களைப் பார்த்துக் கேட்டார் அவர்.

அது மட்டுமா? 1905-ல் ஜார் மன்னனுக்கு எதிராகப் புரட்சி தோல்வியுற்ற போது, லெனின் எழுதிய ஆவேச எழுத்துக்களின் பாணியில் அறிஞர் அண்ணா அவர்கள் கேலி பேசுவோரை நோக்கிச் சொன்னார். "கேலி பேசுகிறவர்கள் தயவு செய்து நாங்கள் வெட்கப் படும் அளவுக்குக் கேலி பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'நாற்பது இடங்களில் டெபாசிட் இழந்தவர்களே!' என்று பேசுங்கள்.

அப்போது தான் எங்களின் ஆர்வம் மேலும் பெருகும்; திராணி மேலும் வளரும்"

தோல்விகளையும் தன் கட்சிக்காரர்களுக்கு உரமூட்டுவதற்கேற்ற சாதனமாக எடுத்து கொள்ளும் அறிஞர் அண்ணு எனும் பிறவித் தலைவரிடம் கேலி பேசிய வாய்கள் இதற்கு மேலும் என்ன சொல்ல முடியும்.

''சட்டசபையில் நாங்கள் 15பேர்தான் அமர்ந்திருக்கிறோம் என்றால், எங்களுக்குப் பின்னால் 17 இலட்சம் மக்களின் இதயம் இருக்கிறது என்பதை ஆட்சியாளருக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். அதே போல், கழகத் தோழர்களுக்கும் நான் கூறுவேன். நமது வெற்றி சாதாரணச் சம்பவம் அல்ல; நாம் பெரியதோர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்மை இன்று மற்றவர்கள் ஆராய்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது'

15 பேர் தானே என்று கேலி பேசுவோர்களுக்கும், 15 பேர் தான் என்று சலித்து போயுள்ள கழகத் தோழர்களுக்கும் ஒரு சேரப் பதிலளித்துப் பேச்சாலே வழி நடத்திய அந்தப் பெருந்தலைவர் அறிஞர் அண்ணுவின் பாங்கு யாருக்குத் தான் வரும்?

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து கழகம் பெற்ற வெற்றிகளைப் பற்றிய பல்வேறு முனைகளிலிருந்தும் விமரிசனங்கள் கிளம்பின. அவற்றில் பல நல்ல எண்ணத்தோடும் உண்மையான ஆதங்கத்தோடும் வெளியிடப்பட்டன.

''அவர்கள் (தி.மு. கழகத்தினர்) நடத்திய தேர்தல் கூட்டங்களிலே எல்லாம் கண்ணியமான முறை கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. பேசிய தலைவர்கள் யாரும் வசை மொழிகளில் இறங்கவில்லை. தங்களை இடைவிடாமல் தாக்கும் பெரியாரைக் கூட அவர்கள் மரியாதை குறையாமல் தான் மறுத்துப்பேசி வந்தனர். இதைப் பார்த்து மக்கள் வியந்தார்கள். சட்டசபையிலும் இனி ஒரு புது விழிப்பு ஏறபடும். கேள்விகளும், மந்திரிகளின் பதில்களும் காரசாரமாக இருக்கும். அண்ணுதுரை என்ன சொல்கிறார் என்பதைப் பொதுமக்கள் அக்கறையுடன் கவனிப்பார்கள். தமிழர் நலத்துக்கான காரியங்கள் போட்டி போட்டுக் கொண்டு செய்யப்படும். அம்முறையில் நமது அண்ணுதுரையின் வெற்றியை வரவேற்கிறோம். ஆளும் கட்சியினரும் நன்றாக வரிந்து கட்டிக் கொண்டு இவரை வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்" என்று 17-3-57 'ஆனந்த விகடன்' இதழ் பாராட்டுத் தெரிவித்தது.

மற்றும் 'தமிழ்நாடு'' 'கல்கி' முதலிய மாற்றுக் கருத்து கொண்ட பிரபல ஏடுகளும், பல்வேறு தலைவர்களும் கழக வெற்றியைப் பாராட்

டினர். இந்த பாராட்டுதல்களின் மூலம், '15 பேர் தான் வெற்றி பெற்றிருந்தாலும், ஒன்றும் மோசமாகி விடவில்லை' என்று கழகத் தோழர்கள் சமாதானமடைந்தனர்.

'ஆனந்த விகடன்' தெரிவித்ததைப் போல், கழகத்தினரின் சட்ட மன்ற நுழைவினையொட்டி, ஆளும் கட்சியினர் வரிந்து கட்டி வரவேற் ருர்களா என்பது பின்னுல் நடந்த பல நிகழ்ச்சிகளின் மூலம் நாட்டுக் குத் தெரிந்தது என்ருலும், மக்களாட்சி முறையும் ஜனநாயக பண் பாம்டும்புதுப்பிறவி எடுத்தன என்பது உண்மை.

தேர்தல்கள் அனைத்தும் முடிந்து 31-3-57 அன்று முதன்முதலாக அறிவகத்தில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடை பெற்றது.

அறிஞர் அண்ணு அவர்கள் கட்சித் தலைவராகவும், பேராசிரியர் அன்பழகன் துணைத் தலைவராகவும், நான் கட்சிக் கொறடாவாகவும் ஏ. கோவிந்தசாமி அவர்களும், எம்.பி. சுப்பிரமணியம் என்ற தோழரும் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். சட்டமன்றக் கட்சியின் பொருளாளராகத் திருமதி சத்தியவாணி முத்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்று மாலை, சென்னைக் கடற்கரையில் எங்களுக்கெல்லாம் நாவலர் தலைமையில் பாராட்டு; பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் மகிழ்ச்சி வெள்ளம் வங்கக் கடற்கரையில் வழிந்தோடிற்று. மக்களின் மகிழ்ச்சியும், அவர்கள் முகத்தில் காணப்பட்ட நம்பிக்கை ஆகிய அனைத்தும் எங்களுடைய பொறுப்பை யும், தொண்டுகளையும் நினைவூட்டிப் பயமுறுத்தின. அடுத்தடுத்துத் தமிழகத்தின மூலை முடுக்குகளிலும் வெற்றி பெற்ற தோழர்களுக்கான வரவேற்புமம, பாராடடும் சங்கிலிக் கோவை போல் நடத்தப்பட்டன. வெறறி பெறற தோழர்களைத் தமிழகத்து மக்கள் அதிசயதீதோடும் ஆர்வததோடும் பார்க்க ஆங்காங்கு இலடசக்கணக்கில் கூடினர்.

காங்கிரசைப பலமாக எதிர்தவர்கள் என்பது ஒன்று; காங்கிரசை எதிர்த்து வெற்றி கண்டவர்கள் என்பது மற்ருென்று. அந்த அளவுக்கு காங்கிரசின் பலமும், தேர்தல் திருவிளையாடல களும் மக்கள் உள்ளத்தில் ஒருவித மருட்சியை அதுவரையில் ஏற்படுத்தி யிருந்தன. பாராடடுக கூட்டங்கள்தோறும் நாங்கள காங்கிரசின் ஆணவத்தையும், கம்யூனிஸ்டுகளின் ஜனநாயக விசுவாசப் போக்கை யும், காங்கிரசுக்கு எதிர்ப்பான சக்திகள் ஒன்றுபட வேண்டிய அவசியத் தையும் வற்புறுத்திச் சொன்னேம். அந்த நாளில் கட்சியைக் காட்டிலும் கம்யூனிஸ்டுக் கட்சியினரின் போக்குத்தான் எங்களை வியப்புக்குள்ளாக்கிற்று.

கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கியத் தலைவரும், நமது மதிப்புக்குப் பாத்திரமானவருமான தோழர் இராமமூர்த்தி அவர்களேகூட, அப் போதும் கழகத்தைப்பற்றி அபாண்டமான கற்பனைப் பழிகளைச் சுமத்திப் பேசி வந்தார்.

தி.மு.கழகம் பாகிஸ்தானிடம் லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு தேர்தலில் ஈடுபடுவதாகக்கூட மனமறிந்த பொய் சொல்லி வந்தார். இந்திய இராணுவச் செலவுகளைக் குறைத்து, அந்தப் பணத்தை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கழகம் தெரிவித்த கருத்தையொட்டி அவர் இவ்வாறு ஊர்தோறும் பேசி வந்தார் அது மட்டுமல்ல; கழகம் தேர்தலில் ஈடுபடுவதையே ஓடுகிற பஸ் வண்டியில் ஏற முயலும் செயலாக அவர் வர்ணித்து வந்தார்.

காங்கிரசின் ஆணவம் அடங்குவதற்கு அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவதை விடுத்து, எதிர்க் கட்சிகளுக்குள்ளாகவே ஒருவருக் கொருவர் அபாண்டப் பழிகளைச் சுமத்திப் பேசி வருவது அண்ணு அவர் களுக்கும் எங்களுக்கும் பெரும் வருத்தத்தைக் கொடுத்தது. தமிழகத்தில் கம்யூனிஸ்டுகளின் போக்கு இப்படி இருக்கையில்தான் கேரளத்தில் காங்கிரஸ் அல்லாத முதல் அரசாங்கம்-கம்யூனிஸ்டு கட்சி-அரசாங்கம் அமைந்தது. இதுபற்றி முதன் முதலில் மகிழ்ந்தவர்கள் தி மு. கழகத் தினர்தாம்.

காங்கிரஸ் ஆட்சியின் ஏகபோகத்தை உடைத்து, அதன் கோட்டையில் ஒரு விரிசலை ஏற்படுத்திவிட்ட கேரளத்து மக்களைக் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் கழகத்தவர்களே அப்போது பெருமளவு வாழ்த்தினர். 10 இலட்சம் வாக்குகளைக் கேரளத்தில் மொத்தமாகப் பெற்ற கம்யூனிஸ்டுகள், ஆட்சி அமைக்கும் நிலைமை ஏற்பட்டு, அதே நேரத்தில் 15 இலட்சம் வாக்குகளைத் தமிழகத்தில் பெற்ற தி.மு. கழகம் 15 இடங்களை மட்டுமே பெற்ற நிலைமையை விளக்கிச் சொன்ன பிறகும். கம்யூனிஸ்டுகள் தி மு. கழக எதிர்ப்பிலேயே காலங் கழித்தது

வேதனையாக இருந்தது. அறிஞர் அண்ணா அவர்களே கூடச் சில நேரங்களில் கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் கடுமையாகப் பேசியிருக்கிறார் என்றால், அப்போதைய கம்யூனிஸ்டுகள் தமிழகத்தைப் பற்றிச் செய்த பிரச்சாரத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

"கம்யூனிஸ்டுகளின் தாறுமாறான பிரச்சாரத்திற்குத் தி.மு.கழகத் தோழர்கள் பதிலளிப்பதோ, எழுதுவதோ தேவையில்லை. மாலங்கோவ் பிரதமராக இருந்தபோது சொன்னேன். தி.மு. கழகந்தான் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி என்று; நம்முடைய கொள்கைகளுக்கு விரைவிலேயே கம்யூனிஸ்டுகள் வரவிருக்கிறார்கள். கேரளத்தில் பதவி ஏற்றுக்கொண்ட காரணத்தால்.

"துவக்கத்திலேயே அங்கு (கேரளத்தில்) மத்திய யதேச்சாதிகாரம் குறுக்கிடுகிறது. நிலைமை நீடிக்க-நெருக்கடி முற்றி-அமைச்சர் பதவியை விட்டு வெளியேறி-இந்திய அரசியல் சட்டத்தை அவர்கள் எதிர்க்கத்தான் போகிறார்கள்.

"கம்யூனிஸ்டுகள் தப்புக் கணக்குப் போட்டுப் போட்டுப் பின்னர் திருந்திக் கொள்வது அவர்களின் தலைசிறந்த கொள்கைகளிலே ஒன்றாக இருப்பதால், சீக்கிரத்தில் உண்மை நிலை உணர்ந்து திருந்துமாறு அவர்களை வேண்டுகிறேன்" என்று 24-4-57 அன்று பொன்மலையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தெரிவித்தார் அண்ணா.

அறிஞர் அண்ணா அவர்களின் கணிப்பைப் போலவே, கேரளத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவையின் நிர்வாகத்தில் மத்திய சர்க்கார் நடந்து கொண்ட முறையும், கம்யூனிஸ்டுகள் அமைச்சரவை கவிழ்ந்ததும், கம்யூனிஸ்டுகள் அவசியமற்ற மாயையிலிருந்து விடுபட்டதும் அனைவரும் அறிந்த உண்மை.

இதனை இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம், சமீப நாட்களாகத் தமிழகத்துக் கம்யூனிஸ்டுகளின் சிந்தனையும் 1957-க்குத் தாவியிருப்பது போல், அவர்களுடைய பேச்சும் கொஞ்சம் மாறியிருப்பதுவே காரணமாகும்.

கழகத்தைக் கேலி பேசிய காங்கிரசாரும், கம்யூனிஸ்டுகளும் பின்னர் அதற்காக வருத்தப்படும் அளவுக்குத் தமிழகத்தின் சட்ட மன்றப் பணிகள் சிறப்பாக அமைந்தன. கழகம் எதிர்க்கட்சியாகப் பொறுப்பேற்றதும், சட்ட மன்றத்தில் எத்தனை பண்புகள், மரபுகள் உருவாகும் என்பது முதன் முதலாக அவைத்தலைவர் டாக்டர் கிருஷ்ணராவ் அவர்களைப் பாராட்டி 30-4-57-ல் அறிஞர் அண்ணா உதிர்த்த பொன் மொழிகளிலிருந்து வெளிப்பட்டது. ஆம்; அன்று அண்ணா அவர்கள் பேசிய பேச்சின் ஒவ்வொரு வார்த்தையும் விலை

மதிக்கவொண்ணா வைரக் கற்களாகும். பாராளுமன்ற வரலாற்றிலேயே அனைவரும் நெடுங்காலத்துக்குப் பாடம் செய்யப்பட வேண்டிய வாக்கியங்களாகும்.

அண்ணா பேச்சில் கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு-மனிதப் பண்பு ஜனநாயக ஆர்வம்-உறுதி அத்தனையும் ஒருசேரக் கலவையிட்டுக் கொப்பளித்தன.

''நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. நாங்கள் இதுபோன்ற பாராளுமன்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள். தங்களுடைய புன்சிரிப்போடு கூடிய கட்டளையினால் எங்களைத் திருத்த வேண்டும்; பண்படுத்தப்பட்ட ஜனநாயகவாதிகளாக ஆக்க வேண்டும். இன்று இந்த நாட்டில் அரசியலில் பெருந்தன்மை மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது. அரசியல் பெருந்தன்மை என்பது கொடுத்து வாங்கப்பட வேண்டிய ஒன்றே தவிர, ஒரு வழி வியாபாரம் அல்ல.

''நம் நாட்டில் சாதாரணமாக இரயில் வண்டியில் முன்னதாக இடம் பிடித்துக் கொண்டவர்கள், பின்னால் வருபவர்களுக்கு இடமில்லை என்று கூறுவதைக் காண்கிறோம். அதைப்போலவே அரசியலிலும் நிலைமைகள் இருக்கின்றன. நாங்கள் எப்படியோ தட்டுத்தடுமாறி சட்ட சபை என்ற இந்த இரயிலில் ஏறிவிட்டோம்.

''காலையும், கையையும் நீட்டிப் படுத்து, ஆதிக்கம் செலுத்துகிறவர்களை நாங்கள், 'எழுந்துகொண்டு எங்களுக்கு இடந்தாருங்கள்" என்று கேட்பதற்கு முன்னால், தாங்களே கையையும் காலையும் மடக்கிக் கொண்டு, 'இவர்களும் பிரயாணத்திற்குத் தகுதி படைத்தவர்கள்தானே' என்று கூறி எங்களுக்கு இடம் கிடைக்கச் செய்ய வேண்டுகிறேன்."

இந்தப் பேச்சின்படி கழகத்திற்குப் பின்னாளில் யார் இடம் கொடுத்தார்கள் என்பது வேறு விஷயம். ஆனால், அறிஞர் அண்ணா அவர்களின் முதல் சட்டமன்றப் பேச்சிலேயே வெளிப்பட்ட அடக்கமும்; கூரிமை உணர்வும், அழுத்தமும் நாங்கள் அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் எதிர்க்கட்சியாக ஆற்றிய பணிகளுக்கு அடித்தளமாக அமைந்தன.

''ஆங்கிலேயனுக்கு ஒரே ஒரு விஷயந்தான் விளங்கும். அவனை எதிர்த்து நில்!" 1880-ல் மக்கனோப் பார்த்து அந்நாட்டுப் புரட்சி வீரனே பார்னெல் இப்படிக் கூறினானே. காங்கிரஸ் கட்சியைப் பற்றி அறிஞர் அண்ணா கொண்டிருந்த திடமான முடிவும் இதுதான். பார்னெல் ஆயுதமேந்தி எதிர்க்கத் துணிந்தவனே; அறிஞர் அண்ணா அறிவுப் படை கொண்டு மடக்க முனைந்தவர்.

எதிர்த்து நிற்பது ஒன்றைத்தான் புரிந்துகொள்ளக்கூடிய ஆங்கிலேயனே எதிர்த்து நின்ற காங்கிரஸ் கட்சிக்கு நாளாக நாளாக ஆங்கிலேயனுக்கிருந்த அத்தனைக் குணங்களும் உதிரத்தில் உறைந்து போய்விட்டிருக்கும் உண்மையை முதன் முதலில் புரிந்துகொண்ட பெருமை அரசியல் ரீதியில் அறிஞர் அண்ணா அவர்களுக்குத்தான் உண்டு.

வரலாற்றுப் பாடங்களை வரிசைப் படுத்திச் சுட்டிக் காட்டுவதோ, ஜனநாயக மரபுகளை உணர்த்தி நியாயம் கேட்பதோ, சராசரி மனித அறிவுக்கு எட்டக்கூடியதை எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பதோ, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் தொடர்ந்து தோல்வியைத் தான் கொடுத்து வந்திருக்கிறது. ஆகவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் 1957-ல் பார்னெல் பாணியைக் கையாண்டு, காங்கிரசின் ஆணவம் அத்தனைக்கும் ஊற்றுக்கால் எதுவோ, அதனுடைய கண் மூடித்தனமான காரியங்களுக்கு 'ஒப்புதல் முத்திரை' குத்தப்படும் இடம் எதுவோ, அதனுடைய எதேச்சாதிகாரப் பசிக்கு 'இரை' கொடுத்துக் கொண்டிருக்கும் அதிகாரப் பண்ணை எதுவோ அதனைக் குறிவைத்து மக்களின் பேராதரவோடு எதிர்த்தார்.

அந்த எதிர்ப்புத்தான் காங்கிரஸ் கட்சியும், காமராசரும் மிகச் சரியாக உணர்ந்துகொள்ளும் நிலைமையை ஏற்படுத்தியது. நாங்கள் 15 பேர் சட்ட மன்றத்திற்குள் நுழைந்து அதுவரையில் எடுப்பார் பிடிப்பார் இல்லாத அதிகாரக் குவியலில் மிதந்து கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியைக் குத்திக் கிளறிக் கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுக்க முனைந்ததைச் சாதாரணமாகக் கருமராசராலும், காங்கிரஸ் கட்சியாலும் சகித்துக்கொள்ள முடியவில்லை. நாங்கள் சட்ட மன்றத்தில் பொறுப்பேற்று அறிஞர் அண்ணா பேசிய பேச்சுக்கு அடுத்த நாளே,

"யார் நீங்கள்?"

"உங்கள் கட்சிப் பெயரென்ன?"

"அந்தப் பெயரை மாற்றிக்கொண்டு அகில இந்திய அரசியல் பற்றியும். அரசியல் சட்ட நுணுக்கம் பற்றியும் பேசுங்கள். ஏனென்றால், ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக ஒரு தனிநாட்டுப் பெயராக உங்கள் கட்சிப் பெயர் துவங்குகிறது" என்கிற ரீதியில் பொதுவாகக் காமராசரும், குறிப்பாக சுப்பிரமணியம் அவர்களும் விதண்டாவாதம் பேசத் துவங்கிவிட்டார்கள்.

"பெயரில் என்ன இருக்கிறது?" என்று, கல்லக்குடிபெயர் மாற்றத் திற்காகவும், 'தமிழ் நாடு' எனப் பெயரிடக் கோரியும் கழகம் குரல் கொடுத்த போதெல்லாம் 'தத்துவம்' பேசித் திரிந்தவர்கள், கழகம்

சட்டமன்றத்தில் தனது பணியைத் துவக்கியவுடன், 'கட்சிப் பெயர் சரியில்லையே?' என்ற வேதாந்தக் குரல் எழுப்பினர்.

கழகத்திற்கு இருக்கும் 'திராவிட' என்ற முதல் வார்த்தையைச் சுட்டிக் காட்டிக் காட்டியே சட்டமன்றத்தில் காங்கிரஸ்காரர்கள் பேசத் துவங்கிய பேச்சுக்களில் தோய்ந்திருந்த நச்சுத் தன்மையை நாங்கள் இரண்டொரு நாட்களிலேயே சரியாக உணர்ந்து கொண்டோம்.

ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழினத்தைத் தற்காத்து வரும் நாகரிகங்கள் அத்தனைக்கும் பொதுவாக அமைந்த அந்தப் பெயரின் பெருமையிலேயே எங்களுடைய அரசியல் வாழ்வின் நீண்ட நாட்கள் இனிமையாக கடந்திருக்கின்றன. கழகத்தின் முழுப் பெயரையும் உச்சரிக்கும் போதே இனம் சொல்ல முடியாத குதூகலம் எங்களுக்கும் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்படுவது வாடிக்கையாகப் போய் விட்டதைக் காங்கிரஸ்காரர்கள் உணர வாய்ப்பில்லையே என்பதை நினைத்து வருந்தினோம்.

"நாங்கள் சாமானியர்கள். எங்கள் கட்சியும் சாமான்யக் கட்சி அதன் பெயரும் அப்படித்தான்" என்று பதில் சொல்வதைத் தவிர அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கட்சி பெயர் பற்றிய சர்ச்சையில் அதிகம் ஈடுபடுவதில்லை. ஏனென்றால் அந்தப் பெயரை மாற்றச் சொல்லிக் காங்கிரஸ்காரர்கள் சொல்வதற்கு கூச்சப்படவில்லையே தவிர, அவர்கள் சொற்கள் 'நாராசமாக'க் காதில் விழுவதாகவே நாடு எடுத்துக் கொள்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். இயக்கத்தின் அந்தச் 'சாதாரணப்' பெயர் இந்த நாட்டில் செய்திருக்கும் அற்புதங்கள் கொஞ்சமா? அது தோற்றுவித்துள்ள உரிமை உணர்வுகளும், அது செப்பனிட்டுக் கொடுத்துள்ள அரசியல் முறைகளும் எத்தகு சிறப்பு வாய்ந்தவை?

1957-ல் கழகம் முதன் முதலாகச் சட்டமன்றத்தில் நுழைந்த போது தெரிவிக்கப்பட்ட இதே கட்சிப் பெயர் மாற்றப் பிரச்சினை தான்,

1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் சிலரால் கிளப்பப் பட்டது என்பதை நினைக்கும் போது, கழகத்தைக் காட்டிலும் அதன் பெயரை மறையச் செய்வதில் பலருக்குப் பெரு விருப்பு இருப்பது புலனையிற்று.

இந்தப் பெயர் மாற்றப் பேச்சுக்கள் அடிபடும் போதெல் லாம், எனக்கு அந்தக் காலத்துச் சமுதாய சீர்திருத்த மாநாடுகளின் பேச்சுக்களும், அந்தப் பேச்சுக்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட மாவீரர்களின் பெயர் வரிசையும் நினைவுக்கு வரும்.

பிரான்ஸ் நாட்டுப் பெரும் பிரபு ரோஹன் என்பவர் கொடுத்த விருந்தொன்றில் எப்படியோ இடம் கிடைத்துக் கலந்து கொண்ட இளைஞன் வால்டேர், சுற்றியிருந்தோரிடம் சளசளத்துக் கொண்டிருந் தானும். இதைக் கவனித்த ரோஹன் பிரபு, 'யார் இந்த இளைஞன்? இப்படிக் கூவிக் கொண்டிருக்கிறான்?" என்று கேட்டாராம். அதற்கு வால்டேர் தானே முன் வந்து சுடச் சுடப் பதிலளித்தானும். 'பெரும் பட்டமோ, பரம்பரைப் பெருமைப் பின்னணியோ கொண்டவனல்ல நான். ஆனால் எனக்கிருக்கும் சாதாரணப் பெயரே எல்லா விதப்பெருமை களையும் உணர்ந்த மரியாதைகளையும் எனக்குக் கொண்டு வந்து சேர்க்கும் என்று நம்புகிறவன் நான். என்னுடைய பெயர் வால்டேர்."

பிரான்ஸ் நாட்டுப் பெரும் பிரபுவை நோக்கிச் சாதாரண வால்டேர் இப்படிச் சொன்னது இராஜ துரோகத்துக்கு ஈடானதாக எடுத்துக் கொள்ளப் பட்டதாம். தன் பெயரை வால்டேர் தெரிவித்த முறை அங்கு இராஜத் துரோகமாக அதிகார ஆணவம் கருதியது போல், இங்கு கழகத்தின் பெயரே தேச துரோகமானது என்று ஆணவ அரசியல்வாதிகள் புலம்பிக் கொண்டிருந்தனர். தனது சாதாரணப் பெயரினாலேயே உலகத்தார் பெருமைகளை ஒருசேர சம்பாதித்துக் கொள்ளும் தன்னம்பிக்கை படைத்திருந்த வால்டேரைப் போல், தன் இயக்கத்தின் சாதாரணப் பெயரிலேயே இந்நாட்டு ஜன நாயகத்தில் தன்னுடைய மகோன்னத முத்திரையைப் பதித்து விடும் தன்னம்பிக்கையோடு நாங்கள் சட்ட மன்றத்தில் ஈடு கொடுத்தோம். மக்கள் மன்றத்தில் சுழன்று பணியாற்றினோம்.

63

கன்னிப் பேச்சு

சட்ட மன்றத்தில் நுழைந்து முதன் முதலாக நான் 4-5-57 அன்று கவர்னர் ஜான் அவர்கள் உரைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசினேன். அதுதான் என்னுடைய முதல் சட்டமன்றக் கன்னிப் பேச்சு. அன்று, விவாதத்தில் நான் கலந்து கொண்டபோது, என்னுடைய சிந்தனையை, கவனத்தை, அவசிய உணர்வை, ஆட்கொண்டிருந்தது கவர்னர் உரையோ சட்டமன்றக் கட்டுத் திட்டங்களோ, 'கன்னிப் பேச்சு' ஆனதால் கவனமாகப் பேச வேண்டுமே என்பதோ அல்ல.

என்னுடைய தொகுதியில் அப்போது நடைபெற்றுவந்த விவசாயிகள் பிரச்னை ஒன்றுதான் என் கவனத்தை ஆட்கொண் டிருந்தது. அந்தப் பிரச்சினைக்கு எப்படியாவது, 'சட்டமன்ற விவாத' அந்தஸ்து வாங்கிக் கொடுத்துவிட வேண்டுமென்ற துடிப்புத் தான் மேலோங்கியிருந்தது. ஆம்; நான் முதலமைச்சராகப் பொறுப் பேற்றுள்ள இந்த நாளில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்று வதில் காட்டும் அக்கறையும் ஆர்வமும் நான் முதன் முதலாக சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, என் குளித்தலைத் தொகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள்- அத்தனை பேரும் ஆதித்திராவிடப் பெருங்குடி மக்கள்-பெரு நிலச்சுவான்தாரர்களிடம் பட்ட பாட்டினையும், அனுபவித்த பசி-பட்டினிக் கொடுமைகளையும் கண்ணுரக் காண்பதற்குக் கிடைத்த அனுபவமே காரணமாகும்.

குளித்தலைத் தொகுதி பொதுவாகப் பிற்பட்ட பகுதியாக இருந் தாலும், அங்கு 'நிலச்சுவான்'தார்களுக்குப் பஞ்சமே இல்லை. அந்த நிலச்சுவான்தார்களுக்கு, விவசாயிகள்-விவசாயக் கூலிகள் என்பவர்கள் பேரில் இருந்த துவேஷத்துக்கும் அலட்சியத்துக்கும் அப்போது பஞ்சமே இல்லை.

நங்கவரம் பண்ணை என்ற பெரு நிலக்கிழார் ஒருவருக்கு ஏராள மான நிலங்கள் உண்டு. அதிலும், மற்ற விவசாயப் பகுதிகளில் இல்லாத விசித்திரமான முறையாகக் கையேர் வாரம், மாட்டேர் வாரம் என்று சாகுபடியில் பங்கு பிரிக்கும் வார முறையும் அங்கு உண்டு. நங்கவரம், திம்மாச்சிபுரம் நிலச்சுவான்தாரர்கள் தங்களிட மிருந்த விவசாயக் கூலிகளிடமும், பரம்பரையாக ஒரே நிலத்தில் பாடுபட்டு வயிறு வளர்த்தும் வந்த குத்தகைதாரர்களிடமும் தகராறும்

பிணக்கும் செய்துகொண்டிருந்தனர். இது அந்தத் தொகுதியில் நான் தேர்தலுக்கு நிற்பதற்கு முன்பிருந்தே புகைந்துகொண்டிருந்தது.

ராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில், ஆலோசிக்கப்பட்டு, காமராசர் காலத்தில் முதன் முதலாக முதலமைச்சராக விளங்கிய காலத்தில் நிறைவேற்றப்பட்ட 'நியாய வாரி' சட்டத்தில் காணப்பட்ட சில ஓட்டைகளைப் பயன்படுத்தி நிலச்சுவான்தாரர்கள் ஆட்டம் போட்டனர். பாம்பரையாகத் தங்களிடத்தில் குத்தகைதாரர்களாகவும் கூலிகளாகவும் இருந்துவந்தவர்களை நிலத்தில் அடி வைக்காமல் செய்தும், வேறு ஊர்களிலிருந்து குறைந்த கூலிக்கு ஆட்களைக் கொணர்ந்து நேரடியாகச் சாகுபடி செய்தும் தகராறுக்கு வித்திட்டனர்.

அதற்கேற்றாற்போல் நான் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் அங்குள்ள நிலச்சுவான்தாரர்கள் செய்தது சரியென்ற மாதிரியிலும் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. அறுவடையான நெல் மணிக் கதிர்கள் களத்து மேட்டிலேயே குவிந்து கிடந்தன. நிலச்சுவான்தாரர்கள் சட்டத்தின் மூலமாகவே தாங்கள் செய்தது நியாயம் என்பது உறுதிப்பட்டுவிட்ட திருப்தியில் உறுமிக் கொண்டிருந்தனர். களத்துமேட்டில் நெல் மணிக்குவியல்களையும், தங்கள் வீட்டில் புகையாத அடுப்புகளையும், தங்கள் மனைவி, மக்களுடைய ஒட்டிப் போன வயிறுகளையும் பார்த்துப் பார்த்து விவசாயப் பாட்டாளி மக்கள் குமுறிக்கொண்டிருந்தனர்.

அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இதனைத் தீர்த்து வைப்பது என்னுடைய பொறுப்பாக இருந்தது. அதுவரையில் அமைச்சர்களிடமும் அதிகாரிகளிடமும் நான் செய்த முயற்சி எதுவும் பலனளிக்காமல் போயின.

அன்று கவர்னர் உரையின் பேரில் நான் விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தபோது, மற்ற எல்லாவற்றையும் விட நங்கவரம் விவசாயிகள் பிரச்சினைதான் எனக்கு நினைவில் நின்றது. அன்று நான் முதன் முதலில் பேசிய பேச்சு விவசாயிகளின் அவல நிலையையும், நிலம் படைத்தோரின் மனிதாபிமானமற்ற போக்கு களையும் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்தது. இது பின்னர், நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் தீவிரமாகச் செய்து முடிக்கும் நிலச் சீர்திருத்தப் பிரச்சினைக்கு முன்னுரையாம். வரலாற்றுப் போக்குப்படி தொடக்கப் பணியாய் அமைந்திருப்பதை இப்போது நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது.

மாவீரன் லெனின், தனது அண்ணன் அலெக்சாண்டர் 1887-ல் ஜார் மன்னன் ஆணைப்படி தூக்கிலிடப்பட்டபோது, பதினேழு வயதான லெனின், "இதற்குப் பதிலாக ஜார் மன்னனைப் பழிவாங்கியே

தீருவேன்" என்று உரத்துக் கூறி சபதமேற்றுணும். "எப்படி உனுனுல் பழிவாங்க முடியும்?" என்று அருகிலிருந்தவர்கள் கேட்டதற்கு, 'முடியும்; பொறுத்துப் பாருங்கள்" என்றுணும்.

நான் லெனின் அளவுக்கு உயரவில்லை. அதேபோல் நங்கவரம் பண்ணையும் ஜார் அளவுக்கு இருக்கவில்லை. ஆனால் 1957-ல் நான் இந்த விவசாயிகளுக்கு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும் என்று நினைத்தேன். நிலச் சொந்தக்காரர்கள் மீது எத்தகைய கோபமோ, தாபமோ எனக்கு அப்போதும் சரி, இப்போதும் சரி, இருந்ததே இல்லை. எனக்கு இருந்த கவலைகளெல்லாம் பாடுபடும் விவசாயிகளுக்குப் பலன் மொத்தமாகக் கிடைக்கவேண்டும் என்பதும், அதற்கேற்றாற் போல் சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதும் தான். இதன்படி நான் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இப்போது நிறை வேற்றியுள்ள சட்டத்தால் ஏதாவது நன்மை கிட்டியதாக உணரப்படு மானால், 1959-ல் நங்கவரம் உழவர் பெருங்குடி மக்கள் அனுபவித்த பாடு, பட்டினிக் கொடுமைகளுக்குப் பரிகாரம் தேடிவிட்ட திருப்தி கொண்டவனுவேன்.

அன்று நான் பேசியது இன்னமும் எனக்கு நினைவிருக்கிறது. பின்னர் ஒரு முறை சட்டமன்றத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் விவாதிக்கபபட்ட போதும் என் நினைவில் சுழன்று கொண்டிருந்தது.

"இந்தப் பகுதிகளில் 'கையேர் வாரம்', 'மாட்டேர் வாரம்' என்று இரு வகையான விவசாயம் உண்டு. இந்த இருவகை விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள், பாட்டாளி வர்க்கத்தினர், சட்டங்களின் மூலம் பலனடையவில்லை என்பது மட்டுமல்ல, பெருமளவு பாதிக்கப் பட்டிருந்தார்கள். இவர்களுக்கு நியாய வாரம் கிடையாது. அவர்கள் சட்டப்படி நியாய வாரம் பெற முடியாது... இந்தப் பெருமக்கள் வயிறறிலோ பசிப் புயல் குமுறிக்கொண்டிருக்கிறது... சர்க்கார் எந்த வகையில் இவர்களுக்கு வாழ்வளிக்கப் போகிறது?"

என்று நான் பேசிக்கொண்டே போனேன். எதிரே இருந்த சபாநாயகரோ அமைச்சர்களோ எனக்குத் தெரியவில்லை. நங்கவரம் களத்துமேடு, அங்கு யாருக்கும் பயன்படாமல் குவிந்திருக்கும் கதிர் மணிகள், அதனையே ஏக்கத்தோடு பார்த்துப் பசித்த வயிற்றைத் தடவிக் கொடுத்துக் கொள்ளும் விவசாயப் பாட்டாளிகள், அவர் களுகும் நெற் கதிர்களுக்கும் இடையே வேலிபோல் காவல் காக்கும் காவல் துறையினர், வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே பெருமிதம் பொங்கவிஷமச்சிரிப்புச் சிரிக்கும் நிலச்சுவான்தாரர்கள்—என் கண்முன் அப்போது தெரிந்தனர்; தெரிந்தனர்.

என்னுடைய கன்னிப் சேச்சு என் கண்ணீர்ப் பேச்சாக அமைந்தது. ஆனால், பின்னல் என் இரத்தத்தையே குடிக்கத் தயாராக இருந்த

காங்கிரஸ்காரர்கள் அப்போது என் கண்ணீர்ப் பேச்சைப் பொருட் படுத்தவில்லை.

ஆனால் எனக்கு அடுத்து, இரண்டொரு நாட்களுக்குப் பிறகு, 6-5-57 அன்று முதன் முதலாகச் சட்டமன்றத்தில் பேசுவதற்கு எழுந்த அறிஞர் அண்ணா அவர்கள், தான் பேசியதைத் தொடர்ந்து, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிய கருத்துக்களை மழை போல் பொழிந்தார்.

"உண்மையில் நிலச் சீர்திருத்தத்தில் சர்க்காருக்கு நம்பிக்கை இருக்குமானால், அவற்றை உடனடியாகச் சட்டமாக்குவதற்குத் தயங்குவானேன்? யாருக்காக இந்தச் சர்க்கார் பயப்படுகிறது? சர்க்கார், 'நிலச் சீர்திருத்தம் செய்யப் போகிறோம்' என்று பேசிக்கொண்டே காலம் தாழ்த்தி வருகிறது. இதனை மறைப்பதற்கு ஒரு திரையாகவே சர்க்கார் வினோபாவையும், அவருடைய பூதான இயக்கத்தின் பெயரையும் பயன்படுத்துகிறது." அறிஞர் அண்ணா இப்படிப் பேசியது இரண்டு நாட்களுக்கு முன்பு நான் பேசியதை உறுதிப்படுத்துவ தாகவும், விரிவுடன் எடுத்துச் சொல்வதாகவும் அமைந்தது. நான் பெருமையால் பூரித்துப் போனேன்.

அறிஞர் அண்ணா குறிப்பிட்டபடி வினோபாவின் புனிதப்பணிகளைக் காங்கிரஸ் அரசாங்கம் தனக்குத் தேவையான பிரச்சாரச் சாதன மாகவே பயன்படுத்தி வந்தது. காந்தியாரின் படமும், நேருவின் பெருமைகளும், வினோபாவின் இலட்சியப்பணிகளைப் பற்றிய அரசாங்கத் தரப்பான பிரச்சாரமும் காங்கிரஸ்காரர்களுக்கு நெடு நாட்களுக்குக் கைகொடுத்தன. பல்வேறு அநியாயங்களின் திரையாகப் பயன்பட்டது.

தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்த வினோபா அவர்களைப் கும்பராசபுரம் என்னும் சிற்றூரில் அறிஞர் அண்ணா சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, நிலச் சீர்திருத்தம் பற்றி வினோபா அவர்களின் பேச்சில் காங்கிரஸ்காரர்களின் குட்டை உடைப்பதாகவே கருத்துக்கள் வெளிவந்தன. சிறுநல்லூர் என்ற இடத்தில் வினோபா பேசும் போது, "நிலச் சட்டம் பற்றி இந்தச் சர்க்கார் பேசியே காலம் கடத்துகிறது. இதனால், நிலப் பிரபுக்களை ஊக்குவித்து அவர்கள் தங்களுக்கிடையே நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளவோ, அல்லது விற்றுவிடவோ வழி செய்து தருகிறது சர்க்கார்" என்று குறிப்பிட்டார்.

இந்தக் குறிப்பையும் அறிஞர் அண்ணா அவர்கள் தமது முதல் உரையில், நிலச் சீர்திருத்தத்தை வலியுறுத்திப் பேசிய பகுதிகளின் போது பயன்படுத்திக் காமராசரையும், சி. சுப்பிரமணியம் அவர்களையும் திக்குமுக்காடச் செய்தார்.

64

இணையற்ற நங்கவரம் போராட்டம்

இப்போது நங்கவரம் பண்ணை குறித்தும், நிலச்சட்டம் குறித்தும் இவ்வளவு குறிப்பிடுவதற்குக் காரணம், கழக அரசு நிறைவேற்றியிருக்கும் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பற்றி வெளியிடப்படும் விமரிசனங்களின் தன்மையே ஆகும்.

காங்கிரஸ்காரர்கள் விமரிசனம் செய்வதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால், கம்யூனிஸ்டுகள் போக்குத்தான் முரணாகத் தெரிகிறது.

பிறக்கும்போதே அறிவாளிகளாகப் பிறப்பதாக யாரும் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால், கம்யூனிஸ்டுகள் தாங்கள் புரட்சி வீரர்களாகவே பிறந்ததாகக் கருதிக் கொள்வது சகஜமாகப் போய் விட்டிருக்கிறது. தொழிலாளர் நலனுக்கும், விவசாயிகள் பிரச்சினைக்கும், நிலச்சீர்திருத்தம் போன்று சொத்துப் பாத்திய தைகளுக்கு வரம்பு கட்டுவதிலும் தாங்கள்தாம் மெத்தத் தெரிந்தவர்கள் என அவர்கள் உருகிக்கொண்டிருக்கிறார்கள். இது தவறு என்று அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வதற்குப் பல சந்தர்ப்பங்களை உபயோகித்துக் கொண்டுள்ளேன்.

விவசாயத் தொழிலாளர்கள் சார்பாகக் கம்யூனிஸ்டுகள் நடத்திய எந்தவிதமான கிளர்ச்சிகளைக் காட்டிலும், நங்கவரம் உழவர்கள் அறப் போர் குறைந்த பெருமை உடையதல்ல. உழவர்கள் போராட்ட சரித்திரத்திலேயே பெரும் வெற்றியையும் அதனால் உழவர் பெருங் குடி மக்களுக்குப் பெரும் நம்பிக்கையையும் உருவாக்கிக் கொடுத்த போராட்டம் அது.

அரிவாளைக் கையிலேந்தி வேலை செய்யும் உழவர்களும், அறப் போர் முறையிலேயே தங்கள் கோரிக்கைகளை, உரிமைகளை நிலைநாட்டி வெற்றி கொள்ள முடியும் என்பதற்கு, நங்கவரம் உழவர் அறப் போராட்டம் இன்றளவும் முன்மாதிரியாகவே திகழ்கிறது. அந்தப் போராட்டத்தில், மிராசுதாரர் எவருக்கும் கை வெட்டுப்படவில்லை, கால் பழுதடையவில்லை. ஊர் மக்கள் வெளிவரப் பயந்து அஞ்சவில்லை பெண்கள் கேலி செய்யப்படவில்லை. அவர்கள் பெருமைக்கும் மானத்திற்கும் இழுக்கு நேரும் தோதுக்கள் ஏற்பட்டே இல்லை இங்கு உழுவர் பெருமக்கள் பட்டினி கிடந்தார்கள்: குழந்தைகள்

பசியால் அலறியதைக் கண்களில் நீர் கலங்கப் பார்த்துப் பத்திரிஞர்கள். ஆனால், யாருக்கெதிராகவும் அவர்கள் கைகள் ஒங்கவில்லை.

''ஒற்றுமை ஒங்குக!" "கட்டுப்பாடு ஒங்குக!'' என்று சில நேரங்களில் தங்கள் வயிற்றுப் பசியையும் மறந்து முழக்கமிட்டார்களே தவிர, அவர்கள் கையிலிருந்து அரிவாளோ, கடப்பாறையோ, கைத் தடியோ ஒங்கவில்லை; ஒங்கவே இல்லை. அத்தகு போராட்டம் காந்தியார் கண்ணெதிரில் நடந்திருந்தால், பூரித்துப் போவார். அவருக்குப் பதிலாக, அண்ணு அவர்களின் மகிழ்ச்சியை அறிந்து நான் பெருமைப்பட்டேன். அத்தகு போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவன் நான் என்பது கம்யூனிஸ்டுகளுக்கு மறந்து போயிருந்தாலும், உழவர் பெருமக்களின் போராட்ட வரலாறு மறக்காது.

அந்தப் போராட்டம் காலையில் துவங்கி, மதியத்திற்குள் இரண்டொருவரைப் பலிவாங்கி, அதற்குப் பதிலாக மாலைக்குள் மேலும் சிலரைப் பழிவாங்கி, இரவுக்குள் இருளோடு இருளாக மறைந்துவிட்ட போராட்டம் அல்ல. 23-8-57-ல் தொடங்கி, 9-9-57 வரை சுமார் இருபது நாட்கள் நடைபெற்றது.

விவசாயிகள் போராட்ட வரலாற்றில், உழவர்கள் உரிமைப் போர் வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட பகுதியில், குறிப்பிட்ட உழவர்களால் இத்தனை நாட்கள் ஒரு சிறு அசம்பாவிதமும் இன்றி ஆட்சியாளரின் அடக்குமுறைக்கும், மிராசுதாரர்களின் ஏளனத்துக்கும் ஈடு கொடுத்து வெற்றிகரமாகவும், கோரிய பலன்களைப் பெற்றதாகவும், வேறு ஒரு போராட்டம் பற்றிக் கம்யூனிஸ்டுகளால் கணக்குத் தரமுடியாது என்றே நான் கருதுகிறேன்.

''யாருக்கும் போராட்டத்தை வைத்துக் கட்சிக்குப் புகழ் தேட வேண்டுமென்று விழைவு இல்லை. உழவனின் கண்ணீர் துடைக்கப் பட்டால் போதும் என்பதே நோக்கமாக இருந்தது" என்று நங்கவரம் உழவர் போராட்டம் வெற்றிகரமாக முடிவடைந்ததையொட்டி, போராட்டத் தலைவர் என்ற முறையில் வெளியிட்ட அறிக்கையில் நான்

குறிப்பிட்டேன். கழகமும், அதன் சார்பாக என் போன்றவர்களும் ஈடுபடும் எல்லா வகையான புனிதப் பணிகளிலும் காணப்படும் நோக்கம் ஒன்றுதான்.

ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். யாருடைய கண்ணிலும் நீரை வரவழைத்துப் பிறகு துடைப்பது அல்ல கழகத்தின் வேலை எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அதனை எங்களுக்குக் கற்றுத் தரவே இல்லை.

'சரித்திரம் என்பது என்ன? மன்னர்களின் எதேச்சாதிகார விளையாட்டுக்களையும், பெரும் போரையும், பூசலையும் விவரிப்பதுதானே அது? நான் எழுத விரும்பும் வரலாற்றில் மன்னர்களின்-பிரபுக்களின் போராட்டங்கள் தவிர்த்த மக்களின் அன்றாட வாழ்க்கைக் கொடுமைகளையும், அழகுகளையும் விவரிக்கும் குறிப்புகளை எழுதவே பெரிதும் விரும்புகிறேன். சமுதாயத்தின் வளர்வு நெளிவுகள், குழந்தை குட்டிகளோடு குடும்ப வாழ்வில் குமையும் சாதாரண மக்களின் சிந்தனை ஓட்டங்களை, நெக்குருகும் எத்தகு சூழ்நிலையிலும், அந்த மக்கள் சாதிக்க விரும்பும் பண்பாடுகள் மட்டுமே எனக்குச் சரித்திரத்துக் குரிய கருவாகத் தெரிகின்றன.

''சரித்திரத்தின் வழக்கமான அம்சங்களை விடுத்து, நான் கேட்க விரும்புவதெல்லாம், காட்டுமிராண்டித்தனத்திலிருந்து நாகரிகப் பண்பாட்டுக்குச் சிறுகச் சிறுக இந்த உலகை இழுத்து வந்த சாதாரண மக்களின் சிந்தனைக் கருவூலத்தை எந்த வரலாற்று ஆசிரியனாவது விளக்கமாகச் சொல்கிறானா?'' என்று-அன்று கோபமாகக் கேட்ட மாமனிதன் வால்டேரிடம் ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்கள் என்ன பதில் சொன்னார்களோ?

ஆனால், அறிஞர் அண்ணா அவர்களும், அவருடன் முதன் முதலாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினான்கு பேரும் வால்டேரின் இந்தக் கேள்வியில் காணப்படும் ஒவ்வொரு வாசகத்துக்கும் விளக்கமான பதிலைச் சட்டமன்றத்தில் சாதாரண மக்களின் சார்பாகத் தெரிவித்தோம்.

65

அதிகார அரசியலில் அண்ணன்

1957 -ஆம் ஆண்டு மே திங்கள் துவக்கத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுவதில் தனது சட்டமன்றப் பணியைத் துவக்கிய கழகம், இந்த நாட்டுப் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு இன்றளவும் மேலும் மேலும் பொன்னேடுகளைச் சேர்த்து வருகிறது.

"திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன்" என்றுதான் அறிஞர் அண்ணா அவர்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பேச்சைச் சட்டமன்றத்தில் தமது முதல் பேச்சாகத் துவக்கினார்.

அந்தப் பேச்சில்-வால்டேர் வரலாறு எப்படி எழுதப்பட வேண்டுமென்று விரும்பினாரோ, அந்த விருப்பங்கள் அத்தனையும் பிரதிபலித்தன. மக்களின் அன்றாட வாழ்க்கைக் கொடுமைகள்-அவர்களுடைய ஆசாபாசங்கள்-சமுதாயத்தின் நெளிவு சுளிவுகள்-காங்கிரஸ் ஆட்சியாளரைப் பற்றி மக்களின் சிந்தனையோட்டம் ஆகிய அத்தனையும் அண்ணா அவர்கள் பேச்சில் அழகுறப் படம் பிடித்துக் காட்டப்பட்டன.

சாதாரண மக்களின் நெடுநாள் கொந்தளிப்பு அவர் பேச்சில் நிழலாடிற்று; நிலப் பிரபுக்களின் கெடுபிடி அவர் பேச்சில் விளக்கமாக விமரிசிக்கப்பட்டது. அனைத்துக்கும் மேலாகக் காங்கிரஸ் கட்சியினரின் பல்வேறு 'மாய்மால' முகமூடிகள் சுக்கு நூறாக உடைக்கப்பட்டன.

அதுவரையில் ஒவ்வொரு நாள் மாலையும் ஓராயிரம் மேடைகள் போட்டு இலட்சோப இலட்சம் மக்களிடம் நாங்கள் பேசி வந்த பேச்சுக்கள்-துவக்கிவைத்த வாதங்கள் - அத்தனையும் புதுப்பிரவாகத் தோடு நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒருசேரச் சென்று அடைவதைக் கண்டு பிரமித்தோம். ஆபிரகாம் லிங்கன், லெனின, மாஜினி போன்ற மா மனிதர்கள் தங்கள் கொள்கைகளுக்கு வலிவு அப்போது தேடி அதிகார அரசியலையே குறி வைத்தது எதற்காக என்பதும் எங்களுக்குத் தெளிவாகப் புரிந்தது.

நாட்டின் நலிவையும், மக்களின் கண்ணீரையும் தினமும் கண்டு கலங்கிப் பழக்கப்பட்டுப் போயிருந்த நாங்கள் அவைகளை ஒழிப்பதற்கு



உரிய இடத்தைக் கண்டு பிடித்த திருப்தியில், அறிஞர் அண்ணா அவர்களின் அன்றையப் பேச்சை மிக ஆவலோடு கேட்டோம். ஆயிரம் முறை அறிஞர் அண்ணா அவர்கள் பேசுவதைக் கேட்டிருக்கும் எனக்கு, அன்றையப் பேச்சு புது வேகத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது. ஏனென்றால், அவர் அன்று பேசிய பேச்சு அப்படிப்பட்டது; அவர் பேசிய இடம் அப்படிப்பட்டது.

"செஞ்சிக் கோட்டைமீது ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜாக்களா?" என்று முதன் முதலாகக் காங்கிரஸ் அமைச்சர்களின் முகத்துக்கு நேராகக் கேட்டார். அவர் தொடர்ந்தார் :

"அதேபோலக் காங்கிரசில் இருப்பவர்கள் எல்லாரும் பெரும் தியாகிகள் அல்ல. இதனை மறந்து எங்களை, 'இவர்களெல்லாம் ஏகாதிபத்திய தாசர்கள்' என்று பேசுவதனால், எங்களுடைய முகம் அல்ல-அந்தப் பக்கத்தில் (காங்கிரஸ் பக்கம்) உட்கார்ந்திருக்கிற பலருடைய முகம் சுருங்குவதை நான் காண்கிறேன்.

இவ்வாறு கூறியதும் நான் சட்டமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் பக்கம் பார்த்தேன். அறிஞர் அண்ணா அவர்கள் பேச்சுக்களை அருகிலிருந்து அவர்கள் கேட்பதும், அந்தப் பேரறிஞருடைய 'தாக்குதல்'களை நேருக்கு நேராக அனுபவிப்பதும் எனக்குப் புது அனுபவமாகத் தோன்றியது.

காமராசர் அவர்கள் சிலைபோல் இருந்தார். சுப்பிரமணியம் அவர்கள் லேசாகச் சிரித்துக்கொண்டார்.

பக்தவத்சலம் அவர்கள் முகத்தில் கோபம் பொங்கிற்று.

மற்ற அமைச்சர்களின் முகங்களைப் பார்க்க எனக்குத் தோன்றவில்லை.

"காங்கிரஸ்காரர்கள் தங்களின் பழம் பெருமைகளைப் பேசிப் பயனில்லை. ஜமீந்தார்கள், சிற்றரசுகள் காலம் வேகமாக ஓடி

மறைந்துகொண்டிருக்கும் இந்த நாளில், அரசியலிலும் ஜமீந்தாரி முறையைக் கையாள விரும்பினால் சீக்கிரமே அதற்கு முடிவு கட்டப்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

அண்ணு தொடர்ந்து பேசிக்கொண்டே போனார். அன்று அவர் எச்சரிக்கையைக் காங்கிரசார் எடுத்துக்கொள்ளவில்லை. தங்கள் வழியே தொடர்ந்து நடந்தார்கள். அறிஞர் அண்ணு அவர்களும் அன்று விடுத்த எச்சரிக்கையைத் திரும்பப் பெறவே இல்லை. அதனைச் செயல்படுத்தியே கண் மூடினார்.

அறிஞர் அண்ணு அவர்கள் பேசியதை அடுத்து, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறுவதற்குத் தயாரானது. இந்தத் தீர்மானத்திற்குப் பலரும் பல திருத்தங்களைக் கொடுத்தனர்.

"இந்த மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடாததற்கு வருந்துகிறேம்" என்ற திருத்தத்தை அறிஞர் அண்ணு அவர்கள் கழகத்தின் சார்பாகக் கொடுத்திருந்தார்கள். மற்ற திருத்தங்கள் அவரவர்களால் இறுதியில் திரும்பப் பெறப்பட்டன என்றாலும், இந்தத் திருத்தம் மட்டும் அறிஞர் அண்ணு அவர்களால் வற்புறுத்தப்பட்டது

கழகம் முதன் முதலாகச் சட்டமன்றத்தில் நுழைந்து பணியாற்றத் தலைப்பட்டதும், முதல் தீர்மானமாகக் கொடுத்தது, நம் தாயகம் தனது இயற்பெயரால் அனைவராலும் அழைக்கப்பட வேண்டும் என்பதுதான். 'சென்னை மாநிலம்' என்பது 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றப்பட வேண்டும் என்று 7-5-57 அன்று சட்டமன்றத்தில் வாக்கெடுப்புக்கு உள்ளான தீர்மானத்திற்கு ஆதரவாக 42 வாக்குகளும், எதிர்ப்பாக 127 வாக்குகளும் கிடைத்தன. தீர்மானம் தோல்வியுற்றது. 'தமிழ்நாடு' என்று நம் தாயகத்திற்குப் பெயர் சூட்டவேண்டும் என்றுகூட அல்ல; அதுபற்றிக் கவர்னர் உரையில் குறிப்பிடாததற்கு வருத்தம் தெரிவித்தால் போதும் என்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்குக் கூடக் காங்கிரஸ் கட்சியினர், தமக்கிருந்த பலத்தின் எண்ணிக்கையில் இறுமாந்து, துரோகத்தனமாக நடந்து கொண்டனர்.

அறிஞர் அண்ணு அவர்கள் சட்டமன்ற நுழைவைத் தொடர்ந்து முதன் முதலில் கொடுத்த தீர்மானம் எதுவோ, அதுவே, பேரறிஞர் அண்ணுவின் கைக்கு அரசியல் அதிகாரம் மாறி நிறைவேற்றப்பட்டுச் செயலாக்கப்பட்ட நாளில் கலந்து கொண்டதுதான் அவருடைய இறுதி அரசியல் நிகழ்ச்சி என்பதை நினைக்கிறேன்.

கண்களில் நீர் தளும்புகிறது. 20-12-68 அன்று சிறுவர் அரங்கத்தில் ('இன்றைய கலைவாணர் அரங்கத்தில்) 'தமிழ்நாடு' பெயர்சூட்டு விழாவில் அவர் ஆற்றிய உரையையும், 1957 மே 7-ல் அண்ணு தீர்மானம் தோல்வியுற்றதையும் இணைத்துப்பார்த்தால்

'வால்டேரின் வரலாறு' குறித்த விளக்கத்தை அறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு துல்லியமாகப் பிரதிபலிக்கிறார் என்பது தெரிகிறது.

அதிகார அரசியலில் அடி எடுத்து வைத்து, அரசியல் அதிகாரத்தை மேற்கொண்ட 10 ஆண்டு காலத்தில் கழகமும் அதற்குத் தலைமை தாங்கிய அறிஞர் அண்ணா அவர்களும் 'எழுதி'யிருக்கும் சரித்திரம் வால்டேர் போன்ற மாமனிதர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவே இருக்கிறது. இந்த நாட்டைப் பற்றிய வரலாறுகள் எவையும் 1957-67-க்குள் அடங்கிய பத்தாண்டு கால மாறுதல்களையும், அந்தப் பெரும் மாறுதல்களுக்கு அத்தாட்சியாக இருந்த அண்ணா அவர்களையும் கழகத்தையும் விடுத்து எழுதப்படவே முடியாது

தமிழ்நாடு உள்ள வரையில் தமிழர்கள் வாழ்வார்கள். 'தமிழ்நாடு' என்ற பெயர் பொலிவுற்றுத் திகழும் வரையில் அறிஞர் அண்ணா பெயரும், கழகமும் நினைவு கூரப்படும்.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டார்.

''தொழில் துறை முன்னேற்றத்தில் தமிழ்நாடு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்படுகிறது. இதனைப் பொறுத்து நாங்கள் கூறுவது பற்றிக்கூட ஆட்சியாளர் கவலைப்பட வேண்டாம். ஆனால் இப்படி ஒரு கூட்டம் இருப்பதாகச் சொல்லி மத்திய சர்க்காரிடம் தமிழ்நாட்டுக்கு நியாயம் கிடைப்பதற்காகப் போராடலாமே?'' என்று குறிப்பிட்டு, காங்கிரஸ் அமைச்சராக இருந்த ரோச் விக்டோரியா அவர்கள் 1957 தேர்தல் காலத்தில் வெளியிட்டிருந்த துண்டு அறிக்கை பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டார்.

சட்ட மன்றத்தில் ஏற்பட்ட புதிய அனுபவம் எங்களுக்குப் பல விவரங்களைத் தெளிவாகத் தெரிவித்தது. அதுவரையில், கழகம் மக்களைத் திருத்துவதற்கும், உலகத்தோடு சரிசமமாக இந்தச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதற்கும் பாடுபட்டு வந்தது. மக்களின் கருத்தில் மகத்தான புரட்சியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நாங்கள் எங்கள் கருத்துக்கும் செயல் திட்டங்களுக்கும் மக்களைத் திருப்ப வேண்டும் என்பதில் முழுக் கவனம் செலுத்தத் தொடங்கினோம்.

சில சந்தர்ப்பங்களில் பெர்னார்ட் ஷா பாணியில் கடிந்து கொண்டு மக்களைத் திருத்த வேண்டும் என்ற போக்கில் நாங்கள் போய்க் கொண்

டிருந்தது போய், லிங்கன்பாணி மில் அவர்களே வழி நடத்திச் செல்ல, அதுவரையில் நான் கூட நெருப்புக் குழம்பாக, புரட்சித்தனம் படைத்த வாலிபனாக இருந்தேன். மக்கள் திருத்தப்பட வேண்டும் என்று நினைத் திருந்த காலம் அது.

மக்களைத் திருத்தி வழி நடத்திச் செல்ல வேண்டும் என்பது இரண்டாம் பட்சமாகவே அப்போது எங்களுக்குத் தோன்றிற்று. சட்ட மன்றத்துக்குள் நுழைந்து, அங்கு ஆதிக்கம் செலுத்திய ஆணவத் தையும், அதிகார பலத்தையும் கண்கூடாகக் கண்ட பிறகு கழகப் பிரச் சாரத்தின் போக்கே குறிப்பிடத்தக்க மாறுதல் அடையத் தொடங்கியது.

''மக்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்கள் சரியாக, திறமையாக வழி நடத்தப்பட வேண்டியவர்கள்'' என்பதை என் போன்ற துடிக்கும் மனப்பான்மை கொண்ட வாலிபர்கள் புரிந்து கொண்டோம். அதுவரையில் நலிவுகளுக்குக் காரணம் என்ன என்பதையே அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த நிலை மாறி, நலிவு களைப் போக்குவது எப்படி என்பதைக் கழகம் திட்டம் போட்டு விளக்கு வதில் முனைந்தது.

இருபதாம் நூற்றாண்டில் அரசியல் அதிகாரம்தான் அனைத்துப் பிடைகளையும் ஒரே நொடியில் ஒரே வரியில் ஒழித்துக்கட்ட முடியும் என்பது உறுதியாக்கப்பட்டு விட்டிருப்பதைச் சட்ட மன்ற நுழைவுக்குப் பிறகே சரியாகத் தெரிந்து கொள்ள முடிந்தது என்பது முற்றிலும் உண்மை.

ஆகவே, அறிஞர் அண்ணா அவர்களும், அவர் அடியொற்றி நாங் களும், முதல் சட்ட மன்றக் கூட்டம் முடிவடைந்ததும், நாட்டு மக்களை நோக்கிப் புறப்பட்டோம். அரசியல் அதிகாரத்துக்கு ஊற்றுக்காலான சாதாரண மக்களின் ஆதரவு திரட்டும் பணிதான் முக்கியமெனக் கருதிப் பணியாற்றினோம்.

தொழில் துறை வளர்ச்சி பற்றி மத்திய அரசு காட்டும் அலட் சியத்தைச் சட்ட மன்ற நிகழ்ச்சிகள் மூலமும், அமைச்சர்கள் அளித்த பதில்களாலும் சரியாகத் தெரிந்து கொண்ட நாங்கள் அது பற்றியும் மக்களின் சிந்தனைக்கு விவரங்களை எடுத்து வைத்து முடிந்த அளவு துறைகள் தோறும் போராடுவது என்று தீர்மானித்தோம்.

1957 மே முதல் வாரத்தில் சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில் கழக உறுப்பினர் ஒருவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானம் அடுத்த 13 ஆண்டுக் காலத்திற்கு நாட்டில் பெரும் வாதப்

பிரதிவாதத்தை உருவாக்கும் தீர்மானமாக அமைந்தது. அப்போது சேலம் மாவட்ட ஆட்சிக் கழகம் (ஜில்லாபோர்டு) காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்தது. இருந்தும் கழக உறுப்பினரின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் இன்று செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால் இப்போது இதனைக் குறிப்பிடுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியைத் தனிப்பட்டோர் வெட்டி எடுக்கக் கூடாது. அதை வெட்டி எடுப்பதற்கு அரசியலார் முன்வர வற்புறுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானமும் 'சேலத்தில் இரும்பு எஃகுத் தொழிற்சாலையொன்றை அரசியலார் ஏற்படுத்த வேண்டும்' என்று வற்புறுத்தி ஒரு தீர்மானமும் அப்போது கழக உறுப்பினராக இருந்த தாண்டவன் என்பவரால் கொண்டுவரப்பட்டது.

இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், வாய்ப்புக்கிடைக்கும் இடங்களிலெல்லாம் காங்கிரஸ் ஆட்சியின் அலட்சியத்தை— ஆணவத்தை எதிர்த்துப் போராடிக் காங்கிரஸ்காரர் வாங்கியதாகச் சொல்லிக் கொள்ளும் 'சுதந்திரம்' உண்மையான நல்வாழ்வைத் தேடித் தரவில்லை என்பதை மக்களிடம் விளக்க வேண்டும் என்கிற ஆர்வம் எங்களுக்கு மேலோங்கி இருந்த தன்மையை வெளிப்படுத்தவே ஆகும். இந்த நாட்களில் அண்ணா அவர்கள் நாள்தோறும் பேசி வந்த பேச்சுக்களும் என் போன்றவர்களின் வேகத்தை மட்டுப்படுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெறுவது தான் சிறந்த வழி என்ற முடிவுக்கு வரச் செய்தன.

''இன்று நம் மீது வெறுப்புக் காட்டுகிறவர்கள் நம்மிடம் வரவேண்டியவர்கள். அவர்கள் நம்மோடு வருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

''நம்மிடத்தில் இந்தக் கட்டத்தில் இரண்டு சுபாவங்கள் கட்டாயமாக இருந்தாக வேண்டும். ஒன்று, எவரிடத்திலும் நமக்கு விரோதம் கூடாது. மற்றொன்று, நம்மீது வெறுப்புக் காட்டுபவர்களிடம் கூடக் கழகத் தோழர்கள் அன்பு காட்ட வேண்டும். வெறுப்பு என்பது என்ன? தலைகீழான அன்பைத்தான் அப்படிச் சொல்கிறார்கள். அவர்கள் அப்படி, வெறுப்பதற்குக் காரணம், நாம் அவர்களிடம் இல்லையே என்பதைத் தவிர வேறென்ன காரணத்தால வெறுப்புக் காட்டுகிறார்கள்? நம்மை வெறுப்பதன் மூலம் அவர்கள் தங்கள் மனத்திற்குச் சாந்தி தேடிக் கொள்கிறார்கள். அவ்வளவு தான். அதனால்தான் நம் கழகத் தோழர்கள் எந்த அரசியல் கட்சிக்காரர்களிடத்திலும் விரோதம் காட்டக் கூடாது.''

அரசியல் அமைதிக்குக் கழகத்தில் காரணம் கண்டுபிடிக்கப் பாடு பட்டுக் கொண்டிருப்பவர்கள் அனைவருக்கும் அறிஞர் அண்ணு அவர் களின் இந்தப் பேச்சைக் காணிக்கையாக்குகிறேன். பெரும் பலம் படைத்த கட்சித் தலைவர் ஒருவர் தம் கட்சிக்காரர்களுக்கு இத்தகைய அறிவுரைகளைச் சொல்வது ஜனநாயக அரசியலில் புதுமையல்லவா? காந்தியார் கூட, வன்முறையில் இறங்குவதைக் கண்டித்தாரே தவிர, வெறுப்பதற்கும் வெறுக்கக் கற்றுக் கொள்ளுவதற்கும் இதுபோல் கண் டிப்பான கட்டுப்பாடு விதிக்கவில்லை. தென்னாட்டுக் காந்தி என்று அறிஞர் அண்ணு அவர்களைக் கழகத் தோழர்கள் பெருமை பொங்கக் குறிப்பிடுவதைக் கேலி பேசும் மாற்றுக் கட்சித் தோழர்கள் 1957-ல் தமி ழகத்தில் கழகத்தைக் காட்டிலும் பெரிய அரசியல் சக்தி வேறு இல்லை என்ற நிலைமை இருந்த போது, இப்படிப் பேசி, அமைதிகாத்து, அதன் காரணமாக உறுதியான பலன்களைக் கொண்டு சேர்க்கப் பாடு பட்ட தலைவரை வேறு எப்படி அழைப்பது என்பதைத் தயவு செய்து தெரிவிக்க வேண்டும்.

கழகத்தின் தீவிரவாதிகளை அண்ணு அவர்களின் இது போன்ற யோசனைகள் வெகுவாகக் கட்டுப்படுத்தின. அது மட்டுமல்ல; "வெறுக்கக் கற்றுக் கொள் வெற்றி பெறுவாய்" என்று அறை கூவல் விடும் கம்யூனிஸ்டுகளும், அறிஞர் அண்ணு அவர்களிடத்தில் இங்குதான் பின் பாங்கினர்கள். விவசாயிகள் பிரச்சினையையும் உள்ளடக்கி, மார்க்சிசத் துக்கு லெனின் புதிய மெருகையும் பொலிவையும் ஊட்டியதைப் போல், இந்த நாட்டுக்கு ஏற்ற வகையில், தமது அன்பு வழி- அற வழி- ஜனநாயக வழியின் மூலம் உண்மையான கம்யூனிசத்தைப் பரப்ப அறிஞர் அண்ணு விரும்பினர்.

இந்த நாட்டில் ஏற்படப் போகும் சமதர்மச் சமுதாயம் வெடி குண்டு வழியிலா? அறிஞர் அண்ணு காட்டிய அன்பு வழியிலா? என்பதற்கு நாட்டில் நாள்தோறும் நடைபெற்று வரும் சம்பவங்கள் நன்முக விடை அளித்து வருகின்றன. கம்யூனிசம்

தோற்று விடும் என்பதாக ஏகாதிபத்திய வாதிகளும் முதலாளித்துவப் பேதைகளும் சொல்லி வருகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகள் இந்த நாட்டில் தோற்றால் அது அறிஞர் அண்ணா அவர்கள் காட்டியுள்ள அற வழியைப் பின்பற்றாத காரணந்தான் என்பதை வருங்காலம் மெய்ப் பிக்கத்தான் போகிறது.

"நீர்த்துளியிலும் நெருப்புப் பொறி பறப்பதுண்டு" என்ற இக்பாலின் கவிதையை நாங்கள் மேடைகளில் அப்போது அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. ஆனாலும் நெருப்புப் பொறி பறந்த எங்கள் நெஞ்சங்களில் நீர்த்துளி கசிந்த சம்பவங்களும் 1957-ல் நிரம்ப நடை பெற்றன.

முதல் சட்ட மன்றக் கூட்டம் முடிவுற்றது. அதில் நாங்கள் அறிந்த 'படிப்பினை'களிலிருந்து நாட்டு மக்களிடையில் இனி எங்கள் பிரச்சாரம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்ற திருப்பு முனையும் உருவாயிற்று. எங்களில் ஒவ்வொருவரும் ஒரு மூலைக்குச் சென்று சூருவளியாகச் சுற்றிக் கொண்டிருந்தோம். காங்கிரஸ் ஆட்சியாளரின் அடக்கு முறைகளுக்கும் ஆணவத்திற்கும் நாங்கள் எங்களுடைய பேச்சையும் எழுத்தையுமே மாற்று ஆயுதங்களாகப் பயன்படுத்தி வந்த நிலையில் மேலும் பெருஞ்சூடு பிடித்தது.

வாள் வலிமையைக் காட்டிலும் பேனு வலிமை பெரிது; அதை விடப்பெரிது நாவின் வன்மை என்பதில் எங்களுக்கேற்பட்டிருந்த உறுதி மேலும் இறுகிக் கெட்டித்துக் கொண்டு வந்தகாலம் அது. சந்திரனுக்குச் சென்று வந்தவர்கள் அங்கு கண்ட காட்சிகளையும் பொருட்களையும் புது வகை உத்வேகத்தோடு சொல்வது போல், நான் சட்டமன்றத்தில் சந்தித்த சம்பவங்களை, பேச்சுக்களை, மக்களின் நலத்தில் ஒரு துளியும் அக்கறையில்லாத காங்கிரசாரின் கபட நாடகத்தை நேருக்கு நேராகக் கண்டு வந்த புது அனுபவங்களை- நாளொன்றுக்கு எட்டுக் கூட்டம், பத்துக் கூட்டம் என்கிற அளவிலும் பேசினேன்.

தமிழகம் என் கண்களுக்கு எப்போதுமில்லாத அளவுக்கு பரிதாபகரமானதாகத் தெரிந்தது. வயற்புற உழவர்கள், நகர்ப்புறத் தொழிலாளர்கள், கல்லூரிக் காளைகள், துவக்கப்பள்ளித் துளிர்கள் நுன்பங்களின் சுமைகள் எவ்வளவு தாம் அழுத்தினாலும் ஒடிந்து விழாமல் வளைந்து கொடுத்தே வாழ்க்கையை ஓட்டி வரும் தாய்மார்கள் ஆகிய அனைவருமே என்கண்களுக்குப் புது மாதிரியாகத் தெரிந்தார்கள்.

அது வரையில் என்னைப் பொறுத்த வரை இவர்கள் உலகத்தோடு ஒட்டி ஒழுகத் தெரிந்து கொள்ளாத, தெளிவு பெறுத மக்களாகவே எனக்கிருந்த சமுதாயச் சீர்திருத்த நோக்கத்தோடு பார்த்து வந்தேன். ஆனால் 1957-ல் இவர்கள் அனைவரும் எனக்கு வேறு விதமாகத்

தெரியத் தொடங்கினர். அரசியல் ரீதியில் அவர்கள எவவாறு வஞ்சிக்கப்படுகின்ருர்கள்? சட்ட ரீதியாக அவர்கள் எத்தகு கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்ருர்கள்? இவர்களுக்கு எதிர் காலத்தில் எவ்வாறு பணியாற்றி மகிழ்ச்சியைச் சேர்க்கமுடியும் என்பதிலேயே என் எண்ணங்கள் செல்லத் தொடங்கின.

என் முயற்சியில் துவளாத ஊக்கத்தோடும், கழகத்திற்கு வெற்றி கிடைக்கும் என்பதில் நிறைவான உறுதியோடும் சுழன்று பணியாற்றிக் கொண்டிருந்த போது, ஒருநாள் பேரிடியான செய்தி கிடைத்தது.

1957 ஆகஸ்டு 30-ல் கலைவாணர் என். எஸ். கே. காலமானர் என்ற செய்தி கேட்டு ஒவ்வொருவரும் கலங்கினேம். கண்ணீர் சிந்தினேம். கலைவாணர் மறைவோடு தமிழகத்தின் பல்வேறு துறைகளிலும் ஒரு சகாப்தம் முடிவுற்றதாகவே அப்போது கருதப்பட்டது. என்னேப் பொறுத்த வரை தனிப்பட்ட இழப்பாகவே அதனைக் கருதினேன். எத்தகைய அற்புத மனிதர் அவர்! ''சிந்திக்கக்கற்றுக் கொள் — சீர் பெறுவாய்'' என்று நாங்கள் செய்து வந்த பிரச்சாரத்திற்கு உற்ற துணையாகச் ''சிரிக்கக் கற்றுக் கொள்— விரோதமும் குரோதமும் உன்னே விட்டு விலகி நிற்கும்'' என்று கலைத்துறையில் அவர் ஆற்றிய தொண்டு இந்தச் சமுதாயத்தால் மறக்கக் கூடியதா?

''சிரிக்கத் தெரிந்து கொள்ளாத காரணத்தால் தான் ஒரு சாம்ராஜ்யத்தையே இழக்குமாறு நேர்ந்தது'' என்று ஜெர்மனியச் சக்கரவர்த்தி கெய்சர் வில்லியம் குறித்து வரலாற்று ஆசிரியர்கள் கேலியாகக் குறிப்பிடுவதுண்டு. பெர்னர்ட் ஷா கூட அவரைச் சிரிக்க வைப்பதில் வெற்றி பெறவில்லே என்று சொல்லப்பட்டது.

கடுகடுத்த முகத்திற்கும், அசுரத்தனமான நினேவுகள்—பழக்கங்களுக்கும் அநேகமாக நெருங்கிய தொடர்பிருப்பதாகச் சொல்கிறர்கள். சர்வாதிகாரிகள் சிரிப்பதில்லே; அப்படிச் சிரித்தாலும் வெளிப்படையாக மக்கள் பார்க்குமாறு நடந்து கொள்வதில்லே. சிரிக்கத் தெரிந்த மனிதன் தான் உலகத்தின் மனிதத் தன்மைகளே உணர்ந்தவன் என்பது முழுவதும் உண்மையானல், அத்தகு மனிதர்களே உருவாக்கி, ஒரு சமுதாயத்தையே ஒரு தலைமுறைக்கும் மேலாகக் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க வைத்த கலைவாணர் மறுமலர்ச்சிச் சிற்பி என்பதில் யாருக்கும் மாறுபாடு இருக்க முடியாது.

தமிழகத்தில் பெரியார் ராமசாமி, சாக்ரடீஸ் போன்று வலம் வந்தார்; அறிஞர் அண்ணு, பிளாட்டோ போன்று அறிவுலக மேதையாகத் திகழ்ந்தார். கலைவாணர் இவர்களுக்குச் சமகாலத் தலைவரான அரிஸ்டோபேன்ஸ் என்று தாராளமாகச் சொல்லலாம்.

66

இந்திச் சக்கரம் சுழன்றது

எங்களுக்குக் கலிவாணரின் மறைவால் நேர்ந்த பேரிழப்பின் காரணமாகக் குமுறிக் கொண்டிருந்த போதும், கலங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஏறக் குறைய இருபதாண்டு காலத்திற்கு முன்னால் 1938-39-ல் இந்த நாட்டு மக்களின் பேரெதிர்ப்பின் காரண மாக அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிய இந்தி மொழி மீண்டும் முறுக் கோடு—வெகு மிடுக்கோடு தமிழகத்தில் நுழையப் பார்த்ததைத் தடுத்து நிறுத்தும் பணியைக் கவனிக்கத் தொடங்கினேம்.

1950-ல் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தில் 15 ஆண்டுகளுக்குள் அதாவது 1965-ஆம் ஆண்டுக்குள் ஆங்கிலம் இருந்த அத்தனை இடத்திலும் இந்தி மொழியே இருக்கும் என்கிற வகையில் ஏமாற்றுத்தனமாக—ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் சட்டம் இயற்றப் பட்டு விட்டதும், அதுபற்றி அவ்வப்போது இந்தி பேசாத மாநில மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததும் அனைவருக்கும் தெரிந்தவை தான்.

1965-க்குள் நாட்டில் அரசாங்கத் துறைகள், கல்விக் கூடங்கள் அனைத்திலும் முழுவதுமாகத் திணிக்கப்பட்டு விட வேண்டிய இந்தி மொழியின் 'விஸ்தரிப்பு' இலட்சணம் எப்படி இருக்கிறது? எந்தெந்த முறையில் இந்தித் திணிப்பை வேகமாக்கலாம்? எந்தெந்தத் துறையில் மின் வேகத்தில் அதனைப் புகுத்தலாம் என்றெல்லாம் ஆராய்ந்து அறிக்கை தருவதற்கு மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட 'கேர் குழு' தனது திட்டத்தைத் தாக்கல் செய்தது. இந்த அறிக்கை பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்த திட்டங்கள் பற்றி யும் கழகம் தனது கண்டனத்தைப் பலமாகத் தெரிவித்தது. ஆனாலும் மத்திய ஆட்சியிலுள்ள இந்தி வெறியர்கள் தங்கள் திட்டத்தை வெகு வேகமாக நிறைவேற்றத் தலைப்பட்டதைக் கண்டதும் அதனை நாடு முழுவதும் எடுத்துரைத்து மக்களின் ஆதரவினைத் திரட்டி எதிர்த் தொழிப்பதற்குக் கழகம் ஆயத்தமானது.

''சரித்திரம் சக்கரம் போன்றது. அது திரும்பும்-சுழலும்'' என்பது ஹெகல் தத்துவத்தின் முக்கியப் பகுதி என்கிறார்கள். இது எப்படி இருந்தாலும் 1937-ஆம் ஆண்டின் இந்தி எதிர்ப்புச் சரித்திரம் 1957-ஆம் ஆண்டில் தமிழகத்தில் மீண்டும் சுழன்றது. அடுத்தடுத்துப் படையெடுத்து வந்த பாரசீகர்களின் பேரில் ஒவ்வொரு

போராட்டத்திலும் கூடுதலான பலத்தோடு மோதிப் பொருதிய கிரேக்க மக்களைப் போல் 1937-ஆம் ஆண்டைக் காட்டிலும் அதிகப்படியான பலத்தோடும் - உறுதியோடும் இந்தியை இந்தத் தமிழகத்தில் நுழைய விடாமல் எதிர்ப்பதற்குக் கழகம் உறுதி எடுத்துக் கொண்டது.

அதன் காரணமாக 1957 செப்டம்பர் 21 - ஆம் நாள் அன்று திருவண்ணாமலையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தப்பட்டது. 1776 ஜூலை 4 - ஆம் நாளன்று பில்டெல்பியாவில் வெளியிடப்பட்ட அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் இன்றளவும் உலகத்தில் ஜனநாயக வாதிகளுக்கு உற்சாகமூட்டி வருவதைப் போல — 1917 நவம்பர் 7-ஆம் நாளன்று பெட்ரோகிராட் நகரில் வெளியிடப்பட்ட லெனினின் பிரகடனம், ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களுக்கு இன்றளவும் எழுச் சியைத் தருவதைப்போல்— திருவண்ணாமலையில் 1957 செப்டம்பர் 21-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டின் நடவடிக்கைகளும் முடிவுகளும்தான் இன்றளவும் இந்தியை எதிர்த்து போராடிக கொண்டிருக்கும் எங்களுக்கெல்லாம் உற்சாகத்தையும் பலத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. முத்தமிழ்ச் சங்கங்களிலும் முழக்கப் படாத அளவுக்குத் தமிழ் மொழியின் சிறப்பும் மாண்பும் அன்று முழங்கப்பட்டன.

மூவேந்தர் காலத்திலும் இல்லாத அளவுக்கு அன்று தமிழகத்தின் அரசியல் வழி முறை பேசப்பட்டது.

இந்தியை எதிர்ப்பதற்குக் கழகத்திற்குக் கிடைத்த திட்டங்களையும், வழி முறைகளையும், நியாயங்களையும் உருவாக்கித் தந்தது 1957 செப்டம்பரில் நடந்த திருவண்ணாமலை மாநாடுதான் என்றால் மிகையல்ல.

மாநாட்டுக்குத் துறவி அருணகிரி அடிகள் தலைமை தாங்கினார். கவிஞர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் வரவேற்புக் குழு செயலாளராக இருந்தார். அந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய பேச்சு, இன்றளவும் இந்தியை எதிர்த்து நிற்பவர் களுக்கு 'பைபிள்!'

என்னைப் பொறுத்தவரை அறிஞர் அண்ணா அன்று பேசுவதற்கு எடுத்துக்கொண்ட நேரத்தைப் போல வேறு எந்த மாநாட்டிலும், நிகழ்ச்சிகளிலும் எடுத்துக்கொண்டதில்லை.கட்டுப்பாட்டோடும் தெளிந்த சிந்தனையோடும் காட்டப்படும் எதிர்ப்பில் வழிந்தோடும் உணர்ச்சி வெள்ளம் எத்தகு 'விளைச்சலை'ப் பெருக்கும் என்பதற்கு இன்றளவும் நான் திருவண்ணாமலை மாநாட்டை நினைத்துப் பார்க்கிறேன். அதில் பேசிய அனைவரும் ஒளிப் பிழம்பாக நின்றார்கள். யாரையும் பொசுக்கிப்

போடும் வெப்பம் வெளியாக்கப்படவில்லை. எதிரில் உயர்ந்து நின்ற. மலையே குலைந்தாலும் மனங்குலையாத அழுத்தம் அங்கு நிலவிற்று. அந்த அழுத்தத்தில் எதனையும் போட்டு மிதிக்காத பண்பாடும் அங்கு காணப்பட்டது.

''வீட்டைத்தான் துறந்து சென்றேன். என் தாய்நாட்டை மொழியை, என்னுடைய இனத்தைத் துறந்து சென்றுவிடவில்லை. என்னுடைய இனந்தானே இன்றைக்கு, எனக்குச் சோறு போடுகிறது?'' என்று கேட்டார் மாநாட்டுத் தலைவர் துறவி அருணகிரி அடிகள்'' ''துறவிக்கு வேந்தனும் துரும்பு என்று சொல்வார்கள். ஆனால் அந்தத் துறவிகளும் என் தாய்மொழி - தமிழ் மொழிக்கு அடிமைகள்தாம், என்று அவர் சொல்லக் கேட்டபோது, துறவிகளின் உண்மை இலக்கணமே அதுதானே அல்லது தமிழ் மொழியின் சிறப்பு அத்தகையதா என்பதை நினைத்துப் பெருமிதம் அடைந்தேன்

மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களும் நாங்களும் பேசிய பேச்சுக்களைத் தமிழகம் நினைவில் வைத்துக் கொண்டிருக்கும் என்றே கருதுகிறேன். அந்த மாநாட்டில்தான் அண்ணா அவர்கள் அழுத்தந் திருத்தமாகக் கூறினார்கள்.

''எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள் தாம் உண்டு. ஒன்று எங்கள் மனச்சாட்சி. மற்றது இந்த நாட்டு மக்கள்.'' அறிஞர் அண்ணா சுட்டிக் காட்டிய இரண்டும்தாம் இன்றைக்கு எனக்கும் கழகத் தோழர்களுக்கும் எஜமானர் அந்தஸ்தில் அதிகாரம் செய்துகொண்டிருக்கின்றன. இவற்றைத்தவிர, நாங்கள் அஞ்சும் பொருள் வேறு இல்லை.

அக்டோபர் 13-ஆம் நாளன்று நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்பி மக்களின் ஆதரவை இந்திக்கு எதிராகத் திரட்டுவது என்று மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அன்று இந்த நாட்டில் துவக்கப் பட்ட இந்தி எதிர்ப்புப் போர் எத்தகு வெற்றிகளையும், அதே போல்

கழகத்திற்கு எத்தனை துன்ப நுயரங்களையும் ஏற்படுத்திற்று என்பதை நாடு அறியும். அன்று தூக்கிப் பிடித்த இந்தி எதிர்ப்புப் போராட்டக் கொடி இன்றளவும் எங்கள் கரத்திலிருந்து விழவில்லை; இந்தியை எதிர்த்து என்றும் போராடியே தீருவோம். அண்மையில் நிலவுக்குச் சென்ற அப்போலோ வீரர்களும் பழங்கால மூட நம்பிக்கைகளுக் கேற்பவே 13 என்பதற்கு மெருகேற்றினர்கள் என்று சொல்லப் படுகிறது. ஆனால் 13-ஆம் நாளன்று கழகம் நுவங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இதுவரை பெற்ற வெற்றிகளையும், இனி பெறப் போகிற இறுதி வெற்றியையும் காணிக்கையாக்கி அந்த மூடநம்பிக் கையைத் தகர்த்துக் காட்டத்தான் போகிறோம்!

வடக்குப் பகுதியிலிருந்து ஆதிக்கம் தேடி நாய் போல் அலைந்து வரும் இந்திப் பீடையை எதிர்த்தொழிக்க நாங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, தெற்குப் பகுதியிலிருந்து அழிவைக் கொணரும் பேய்போல் வெறியாட்டம் போட்ட சாதிச் சனியன் எங்களைத் திகைக்க வைத்துவிட்டது. தமிழகத்தின் தென்பாண்டி மண்டலம் வரலாற்றில் சேர்த்துள்ள புகழும் பீடும் கொஞ்சமல்ல.

67

இங்குமா வகுப்புக் கலவரம்?

1957இல் அந்தப் பகுதி சேர்த்த இழுக்கும் நெடுங்காலத்திற்கு மறக்கக் கூடியதல்ல. மனிதன் தன்னுடைய ஆழமான துன்ப துயரங்களை மோசமான சில்லறை இன்பங்களால் மறைக்க முயலுவதைப் போல, அந்தப் பகுதியில் இரு பெரும் சமுதாயங்கள் தங்களுக்கிடையே ஆழப் பதிந்து போயிருந்த வெறுப்பைக் கொலை, கொள்ளைகளால் காட்டிக்கொள்ள அப்போது பகிரங்கமாக முனைந்து விட்டன.

இளநீர் சீவப்படுவது போல் மனிதத் தலைகள் சீவிச் சாய்க்கப் பட்டன. சிறுவர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்வதைப்போல் மனிதர்களோடு வீடுகளைக் கொளுத்தி, அந்தத் தீயில் கோழிக் குஞ்சுகளை வதக்கிக் கொஞ்சமும் இரக்கமில்லாமல் விருந்து சாப்பிட்டனர். கன்னிப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். தாய்மார்கள் மானபங்கப்படுத்தப் பட்டனர். தாயின் கண்களுக்கு முன்னாலேயே குழந்தைகள் நார் போல் கிழிக்கப்பட்டும், கை கால்கள் துண்டிக்கப்பட்டும் சாகடிக்கப் பட்டனர். கணவனின் கண்ணெதிரிலேயே மனைவிகள் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணக் கோலத்தில் சித்திரவதை செய்யப்பட்டது. தைமூர், தாமர்லேன், செங்கிஸ்கான் போன்ற கொள்ளைக் கூட்டத் தார் செய்ததாக நாம் படித்த அத்தனை அநியாயங்களும், மிருகச் செயல்களும், இந்த நாளில் — அதுவும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த காமராசர் முதலமைச்சராகக் கொலு வீற்றிருந்தபோது நடை பெற்றன. சாதியின் பேரால், தேர்தலின் காரணமாக நடைபெற்ற கோரங்களைக் காங்கிரஸ் ஆட்சி இருபது நாட்களாக கட்சி லாபத்தையே

கருதி, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. கலவரத்தையும், அதில் காணப்பட்ட பிரிருகத்தனங்களையும் அடக்குவதற்குப் பதிலாக, ஒருதலைப் பட்சமாகவே அன்றையக் காங்கிரஸ் ஆட்சி போலீஸ் படையைப் பயன்படுத்தியதாகச் சொல்லப்பட்டது. தங்கள் கட்சி வெறியைக் காட்டிக் கொள்வதற்கு இரு சமூகங்களின் இடையே 'குருட்சேத்திரப் போரை' உருவாக்கி, இறுதியில் சிலரைப் பழிவாங்கிக்கொண்டது காங்கிரஸ் ஆட்சி.

கலவரத்தில் ஈடுபட்ட ஒரு பிரிவினரைச் சார்ந்தவர்கள் ஐந்து பேர் கூலக் கைகளைக் கட்டி நிற்க வைத்து சுட்டுச் சாகடித்தனர். காங்கிரசாட்சியினர் இப்படிப் பல சம்பவங்களை நடத்தியதாகச் சொல்லப்பட்டாலும், இந்த ஒரு சம்பவம் அம்பலத்திற்கு வந்தது. அதனை மறைப்பதற்கு காமராசரும் அப்போதிருந்த காங்கிரஸ் அமைச்சர்களும் கோழைத்தனமான சமாதானம் சொல்லத் தலைப்பட்டார்கள்.

உத்திரப் பிரதேசத்திலும், வங்காளத்திலும், பஞ்சாபிலும் பிரிவினையின்போது நடைபெற்ற கொடூரங்கள் நமது மாநிலத்திலேயே நடக்கத் தலைப்பட்டு விட்டதையும், அதைக் காமராசர் ஆட்சி வெகு வாக ரசித்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததையும் நினைத்து நாங்கள் குமுறினோம்.

பரமக்குடி, முதுகளத்தூர், சிவகங்கை, அருப்புக்கோட்டை ஆகிய நான்கு வட்டங்கள் (கிழக்கு ராமநாதபுரம்) முழுவதும் இந்த அவலம்-பிருகத்தனம்- தொடர்ந்து ஒரு மாதத்திற்குமேல் தாண்டவமாடிற்று. அரசாங்கம் இருக்கிறதா என்பதே அந்தப் பகுதி மக்களுக்கு ஐயத்தைக் கிளறும் அளவுக்குக் காங்கிரஸ் ஆட்சி தூங்கி வழிந்தது.

கலவரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகளும், தேவர் சாதியினர் வீடுகளும் சாம்பலாக்கப்பட்டன.

தமிழகம் கொடூரமான சாதிச் சண்டையைக் கண்டது. 1957-ல் முதுகளத்தூர் பகுதியில் அப்போது கழகம் வளரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கழகக் கிளைகளோ கழக உறுப்பினர்களோ இல்லாத அந்தப் பகுதிதான் சாதிச் சண்டையின் களமாக அமைந்திருக்கிறது என்பதைக் கவனித்த எங்களுக்கு, தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும் கழகக் கிளை அமைய வேண்டிய அவசியம் தெளிவாகப் புரிந்தது.

இது சம்பந்தமாக அந்தப் பகுதியில் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டும், கிளைகளை அமைக்கத் தோது பார்க்குமாறும் அறிஞர் அண்ணா அவர்கள் என்னைப் பணித்தார்கள்.

கலவரம் ஒருவாறு தணிந்த 10, 15 நாட்களில் தான் சிவகங்கை, பரமக்குடி முதலிய ஊர்களில் சென்று தங்கி நிலைமைகளைக் கண்டறிந்தேன். தோழர் செ. மாதவன், தென்னரசு, பாண்டியன், சவுந்தர பாண்டியன் ஆகியோரிடம் பேசினேன். கழகவளர்ச்சிக்கான ஆலோசனைகளைத் தெரிவித்ததுடன், அறிஞர் அண்ணா அவர்களிடமும், இதைப் பற்றி விளக்கினேன். இந்த ஆலோசனை விளக்க அடிப்படையில்தான், தோழர் தென்னரசு மாவட்டச் செயலாளராக ஆகவேண்டும் என்று விரும்பப்பட்டது. 1957 கலவரத்திற்குப் பிறகு, அங்கு மீண்டும் சாதிச் சண்டை தலையெடுக்காது போனதற்கான பல்வேறு காரணங்களில் கழகக் கிளைகளைத் துவக்கி, கழகப் பிரச்சாரத்தை அதிகப்படுத்தியதும் முக்கியமான காரணமாகும். கழகப் பிரச்சாரம் ஆழமாகவும், அதிகமாகவும் நடைபெறும் பகுதிகளில் சாதிப் பாகுபாடும், அரசியல் குரோதங்களும் அவ்வளவாகத் தலைதூக்க முடியாது என்பதற்கு இதை விட வேறு சான்று எங்களுக்குத் தேவைப்படவில்லை.

முதுகளத்தூர் கலவரம் குறித்து அக்டோபர் இறுதியில் கூட்டப்பட்ட சட்டமன்றத்தில் நாங்கள் அலசி ஆராய்ந்து கேள்விக் கணைகளைத் தொடுத்தோம். நாட்டில் இன்னமும் வேரூன்றி நிற்கும் சாதிப் பாகுபாடுகளைக் காங்கிரஸ் ஆட்சி எவ்வாறு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதிலேயே குறியாக இருக்கிறது என்பதும், மனித உயிர்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு அற்பமாகத் தெரிகின்றன என்பதும் சட்டமன்றத்தில் நாங்கள் எடுத்த நடவடிக்கைகள் மூலம் நன்கு வெளிப்பட்டன.

விவாத முடிவில் எதிர்க் கட்சிகளால் கொடுக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் அண்ணா பேசினார். அதனைத் தொடர்ந்து கழக உறுப்பினர்கள், அனைவரும் வெளிநடப்புச் செய்தோம். இதன் பேரில், கழக உறுப்பினர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் சட்டமன்றத்தில் பேசிய பேச்சுக்கள் சாதிப் பிரச்சினை ஒழிவதற்குச் சரியான பார்த்தாலும் இலக்கணம் வகுப்பதாக இருந்தன. அவைகளை இப்போது படித்துப் புத்துணர்ச்சி தருவதாக இருக்கும். நாங்கள் என்ன பேசினோம் என்பதைக் காட்டிலும், நாங்கள் பேசியதற்கு அப்போதைய போலீஸ் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் அளித்த விளக்கமும் பதிலும் சுவையானவை.

தி. மு. கழக ஆட்சியில் எந்த ஓர் அசம்பாவிதம் நடந்தாலும் 'சடடம் போச்சு, அமைதி போச்சு' என்று வெறும் கூச்சல் போடுகிறார்களே, காங்கிரசார் காங்கிரஸ் கட்சியின் அமைச்சராகப் பன்னெடுங்காலம் பதவி வகித்த பக்தவத்சலம் அவர்கள் 25-10-57-ல் சட்டமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கை இது.

''1957 ஜூலை 4-ந் தேதி முடிவுற்ற உபதேர்தலின் காரணமாக அந்தப் பிரதேசத்தில் பகை எழுந்தது. தேவர் மக்களி. அரிசன மக்களில் ஒரு பகுதியினர், காங்கிரஸ் கட்சியை ஆதரித்துத் தேவர் மக்களைத் தோற்கடித்துவிட்டனர் என்ற எண்ணத்தில் பகை ஏற்பட்டது. இதன் காரணமாகத் தேவர்களில் பலர் அரிசன மக்களைத் தாக்கினர். இதிலிருந்து செப்டம்பர் மாதம் 10-ந் தேதிவரை அப் பகுதியில் கொள்ளையடித்தல், சட்டவிரோதமான முறையில் அடைத்து வைத்தல், களவு, சொத்துக்களைக் கவர்ந்துகொள்ளுதல் போன்ற பல வழக்குகள் நடந்துகொண்டிருந்தன.

''செப்டம்பர் 10-ந் தேதியன்று மாவட்டக் கலெக்டர் அப்பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருந்த சம்பவங்களினால் ஏற்பட்ட நிலைமைகளைச் சரிப்படுத்துவதற்காக நடத்திய 'சமாதான மாநாட்டில்தான்' சட்டத்திற்கு முரண்பட்ட நிலைமை (அமளி) ஏற்பட்டது. இதற்கு அடுத்த நாள் இம்மானுவேல் என்பவர் பரமக்குடியில் கொலை செய்யப்பட்டார். செப்டம்பர் 13-ந் தேதி பகல் 11 மணிக்கு ஒரு கூட்டம் வேல், கம்பு, அரிவாள் இவைகளுடன் அருங்குளத்திலுள்ள அரிசனங்களைத் தாக்கியது. ஐந்து பேர்களைக் கொலை செய்தது. இந்த ஐந்து பேரில் ஒருவர் பெண். மேலும் 24 அரிசன வீடுகளுக்குத் தீ வைத்தது. நான்கு பிணங்களை அந்தத் தீயில் விட்டெறிந்தது.

''இந்தச் சம்பவங்களினால் அரிசன மக்கள் திரண்டெழுந்து தேவர்களைத் தாக்கினார்கள். மூன்று பேர்களைக் கொலை செய்தார்கள். அவர்களில் இரண்டு பேர் பெண்கள். அவர்களுடைய வீட்டுக்குத் தீ வைத்தார்கள். பிணங்களை அந்தத் தீயில் விட்டெறிந்தார்கள். செப்டம்பர் 14-ந் தேதி காலையில் ஒரக்குடி கிராமத்தில் தேவர்களுக்கும் அரிசன மக்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதில் நான்கு பேர்கள் (அரிசனங்கள்) காயமுற்றனர். அதே நாளில் கீழத்தூவல் என்ற கிராமத்துக்கு இம்மானுவேல் கொலை வழக்கு சம்பந்தமாக

குற்றவாளிகளைத் தேடுவதற்குப் போலீஸ் பார்ட்டி சென்றபோது, நூற்றுக்கணக்கானோர் அடங்கிய ஒரு கூட்டம் போலீசைத் தாக்கியது.

''போலீஸ் பார்ட்டி தப்பித்துக் கொள்வதற்காகச் சுட்டார்கள். அதில் ஐந்து மறவர்கள் கொல்லப்பட்டனர். அரிசனங்களும், இரண்டு தேவர்களும் காயமடைந்தனர். அதே நாளில் தேவர்கள் கூட்டம் ஒன்று இருளாண்டிப்பட்டி, சேந்தக்கோட்டை முதலிய கிராமங்களில் உள்ள சுமார் அறுபது வீடுகளைக் கொளுத்தினர். இதில் மூன்று அரிசனங்கள் கொல்லப்பட்டனர். ஓர் அரிசனப் பெண் அபாயகரமான காயம் அடைந்தார்.

''செப்டம்பர் 18-ந் தேதி மாலை நாலுமணிக்குப் பெரும் கூட்டம் ஒன்று அரிசனங்கள் வீடுகளுக்குத் தீயிட்டது. அதே நாளில் ஆங்காங்கே பல இடங்களில் தீ வைத்ததாகத் திருப்பச்சேரி, நல்லூர், திருப்புவனம், வாடி, பிரமனூர் முதலிய கிராமங்களிலிருந்து போலீசுக்குத் தகவல் வந்தது.

''உனித்தம்பாடி என்ற கிராமத்தில் கூட்டம் ஒன்று போலீசுடன் மோதியது. அந்தக் கூட்டம் ஆயுதங்களால் போலீசைத் தாக்கத் துவங்கியதால், போலீஸ் சுட்டது. அதில் நான்கு பேர் கொல்லப் பட்டனர். அதே நாளில் வீராம்பாளி என்னும் இடத்தில் ஒரு கொடுமை யான சம்பவம் நடந்தது. இளஞ்சாம்பூர் என்ற கிராமத்திலிருந்தும் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் இருநூறுபேர் அரிவாள் கத்திகளுடன் வீராம்பாள் என்ற இடத்தில் உள்ள அரிசன மக்களைத் தாக்கினர் இதைக் கண்டு பயந்துபோன அரிசன மக்கள் அங்குள்ள சர்ச்சுக்குள் சென்று கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளே இருந்தனர். ஆனால், கூட்டத்தினர் விடாமல் சன்னல்களை உடைத்து, கதவுகளை எரித்து உள்ளே இருந்த அரிசன மக்களைச் சுட்டனர். இதில் இருவர் இறந் தனர். முப்பத்திரண்டு பேர் காயமுற்றனர். காயமுற்றோரில் பிறகு ஒருவர் மாண்டு போனார்.

''இரண்டு பிரிவினருக்கும் நேரிடையாக ஏற்பட்ட தாக்குதல்களின் காரணமாகப் பதினெட்டு அரிசன மக்களும், ஐந்து தேவர்களும் கொல்லப்பட்டனர்.

''போலீசார் மீது ஏற்பட்ட தாக்குதல் காரணமாகவும், அதன் விளைவாக ஏற்பட்ட போலீசார் துப்பாக்கிச் சூட்டிலும் பதிமூன்று பேர் கொல்லப்பட்டனர்; அந்தப் பதிமூன்று பேரும் தேவர்கள்.''

கட்சிக் கண்ணோட்டத்தோடு கலவரத்தை அணுகிய காங்கிரஸ் அமைச்சர் தந்த அறிக்கை இது.

சட்டம்-ஒழுங்கு பற்றியே கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கும் இன்றைய காங்கிரஸ்வாதிகள் இந்தக் கலவரத்தின்போது எவ்வளவு

கேவலமாக நடந்துகொண்டார்கள்? 1968 மார்ச் திங்களில் சென்னை நகர பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்ட ஒரு நாள் மோதல் பற்றி வாய் கிழியப் பொய்ப் பறை சாற்றிய காங்கிரஸ்காரர்களுக்கு இதனையே 21-4-68-ல் சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் எடுத்துக் கூறிக் கவனப்படுத்தினேன். இப்போதும் இது கவனப்படுத்துவதற்குரிய கடந்த கால 'சட்டம்-ஒழுங்கு' வரலாறு என்பதால் குறிப்பிடுகிறேன்.

68

கேருவுக்குக் கறுப்புக் கொடி

ஆதிக்கந் தேடித் தென்னகத்தில் பெரும் பலத்துடன் நுழையும் இந்தியை எந்த விலை கொடுத்தாகிலும் ஒழித்தே தீருவோம் என்று சூளுரைத்து, உறுதி தெரிவித்துத் திருவண்ணாமலையில் நடைபெற்ற மாநாட்டில் முடிவெடுத்த பிறகு தமிழ்நாடு முழுமும் எரிமலையாகக் காட்சியளித்தது.

அக்டோபர் 13-ல் நடைபெற்ற 'இந்தித் திணிப்புக் கண்டனநாள்' கூட்டங்கள் கழகத்தின் உறுதியை மட்டுமல்ல, தமிழகத்தின் விருப்பத்தையும் தெளிவாகப் பிரதிபலிப்பதாக அமைந்தன.

''இன்று நாம் இந்தியை எதிர்த்திட எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுக்கிறோம். வெறும் பட்டியல் காட்ட அல்ல. பட்டியலைக் காட்டி விட்டு, அர்த்தராத்திரியிலே போராட்ட நிறுத்த அறிக்கை கொடுத்து விட அல்ல. அத்தனை பேரும் உறுதியோடு நின்று இந்தியை எதிர்க்க வேண்டும். இன்று இல்லையேல் இன்னொரு நாள் இந்திப் படை எடுப்பு நம்மைத் தாக்கியே தீரும். எனவே, இன்றைக்கே நம்மை நாம் 'இந்தியை எதிர்க்கத் தயாரா?' என்று கேட்டுக் கொள்ள வேண்டும்'' என்று நான், இந்தித் திணிப்புக் கண்டன நாளையொட்டிய பெத்துநாய்க்கன் பேட்டைப் பொதுக் கூட்டத்தில் பேச்சைத் துவக்கினேன்.

ஆயிரமாயிரமாண்டுகளாக எத்தனை படையெடுப்புக்களையும் எதிர்த்துச் சமாளித்துச் சீரிளமைத் திறம் பொங்க வாழும் என் தமிழ் மொழிக்குத் தீமை வருமோ என்று எண்ணுந்தோறும் எனக்கு இயல்பாகவே எழும் உணர்ச்சியும் முழுமுதலும் அன்றையக் கூட்டத்திலும் பிரதிபலித்தது. நான் மட்டுமல்ல, கழகத் தலைவர்கள் அத்தனை பேரும் அக்டோபர் 13-ஆம் நாள் கூட்டத்தில் அப்படித்தான் பேசினோம். இருபதாண்டுகளுக்குப் பிறகு, இந்தியை மீண்டும் எதிர்க்கும் பலத்த 'ஆவேசம்' அன்று தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் கரை புரண்டது. கட்டுப்பாடு-கண்ணியத்தை மீறிடாமல்.

கழகத்தின் இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குப் பிறகு, குறிப்பாக அக்டோபர் 13-ஆம் நாள் கூட்டங்களுக்குப் பிறகு தமிழகமே முழுமும் எரிமலையாகக் காட்சியளிக்கத் தொடங்கிற்று. தமிழுக்கு அழிவைச் சேர்க்க வரும் இந்தி மட்டுமல்ல; நாட்டைப் பீடிக்கும் அத்தனை தீய சக்திகளும் பட்டியல் போட்டுப் படம் பிடித்துக் காட்டப்பட்டன.

இந்தியை எதிர்ப்பதற்காகத் தி.மு. கழகம் தனது போராட்டக் கொடியைப் பட்டி தொட்டிகள்தோறும் உயர்த்திடத் தொடங்கிற்று. 'தமிழகத்தின் வடவெல்லையை மீட்போம்' என்று சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் கட்சி வடக்குப் பகுதியில் பாடி வீடமைத்துக் கொண்டு, போர்ப் பயிற்சி செய்து கொண்டிருந்தது. தென்பாண்டி மண்டலத்தில் மூண்ட பெரும் அவமானத்தைச் சேர்த்த சாதிச் சண்டையைக் கணக்குப் போட்டுப் பார்த்துப் பெரியார் அவர்களின் தலைமையிலான திராவிடர் கழகம் சாதி ஒழிப்புப் போராட்டத்திற்கான நாளையும் முறைகளையும் பிரகடனப்படுத்திற்று. கம்யூனிஸ்டுகள் கூடத் திபெத்தில் கம்யூனிஸ்டுச் சீனு கையாளும் அடக்குமுறைகளைக் கண்டு தங்கள் கட்சிக்குள்ளாகவே ஒரு வகை 'மனப் போராட்டம்' நடத்திக் கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சிகூட, இருக்கும் பீனல்கோடு சட்டங்கள் போதுமா, மேலும் அடுக்கலாமா என்று சிந்தனைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

இவை அனைத்துக்கும் மேலாக மக்களும், பதினைந்து பேருக்குப் பதிலாக ஐம்பது பேர், அறுபது பேர் கழகச் சார்பாக சட்டமன்றம் சென்றிருந்தால் ஏற்படும் சூழ்நிலைகளில் எவ்வகையான பாதுகாப்புத் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்று ஒப்புவமைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர்.

ஏலென்ருல் நாங்கள் போகும் இடந்தோறும் மக்களின் மனப் போக்கு இதை நன்கு வெளிப்படுத்திற்று. 'இந்திக்கு எதிரான போராட்டத்தை நாம் கைவிட்டு விடக் கூடாது என்று வற்புறுத்த வரும்புகிறேன்' என்று ராஜாஜி அவர்கள் கூடப் போராட்ட முரசு கொட்ட முன் வந்த அற்புதம் அப்போது தமிழகத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. 1957-58-ல் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த போராட்ட நிலைமைகளுக் சமாகச 1957-58-ஆம் ஆண்டுகளிலும் இருந்தது.

திருவண்ணுமலை மாநாட்டை அடுத்துத் தென் கோடி நாகர் கோவிலில் கழகத்தின் இரண்டாவது மாநாடு 1957 டிசம்பர் 27-28 ஆம் நாட்களில் நடைபெற்றது. இந்த மாநாட்டையொட்டி 29-ஆம் நாளன்று கழகப் பொதுக குழுக் கூட்டமும் நாகர்கோவில் நகரிலே நடந்தது.

கழகத்தின்பால் தமிழர்களின் ஆசையும்-ஆசியும் எவ்வாறு பரிபூரணமாக நிரம்பி இருக்கின்றன என்று நாகர்கோவில் மாநாட்டில் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். கொட்டும் மழை வீதிகளில் வழிந்தோடும் தண்ணீர்—வழுக்கும் சக்தி—நடுங்கும் குளிர்—ஊசியைப் போல் உடலைத் துளைக்கும் ஊதல் காற்று ஆகியவைகளையும் பொருட்

படுத்தாமல், குமரி மக்களுக்கே உரிய வியப்புக் குறிகள் மின்னித் தெளிக்கும் முக'பாவத்'தோடும், கைகளில் குடைகளோடும், முழங் காலுக்கு மேல் வேட்டியை மடித்துக் கட்டிச் செம்மாந்து நின்று மாநாட்டில் எங்கள் பேச்சுக்களைக் கேட்ட சிறப்பை என்னால் மறக்க முடியாது'

கழகத்தின் மாவட்ட மாநாடுகள் தொடர் வரிசையிலேயே அது வரை நான் காணுத அளவுக்குத் தாய்மார்கள் பெருவாரியாகக் குழுமியிருந்தது அந்த மாநாட்டில் தான். மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அங்கு பேசிய பேச்சுக்களை, அடுத்த சில மாதங்கள் கழித்து, அவர் முற்றிலும் மாறுபட்ட மனிதராகி உதிர்த்த வாசகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அதிகாரப் பசிக்கு ஆளான மனிதர்களின் முரண்பாடுகள் அனைத்தும் பளிச்சிடுவதைக் காணலாம். வடகோடியிலுள்ள டெல்லிப் பட்டணத்தை அன்றே 'முற்றுகை' இட வேண்டும் என்பதைப் போல் தென்கோடி நாகர்கோவிலில் ஆவேசமாகத் தலைமையுரை நிகழ்த்தினார்.

''நேருவை இந்த நாட்டில் நடமாட நாம் அனுமதிக்கின்ற ஒரே தாராள குணத்தைப் பலவீனமாகக் கொண்டுதான் நேரு பேசுகிறார்'' என்றெல்லாம் தோழர் சம்பத் தனது பேச்சில் குறிப்பிட்டார். தமிழகம் வந்து சென்ற நேரு தமிழகத்தின் தலைவர்களைக் குறிப்பிட்டு நாத்துடுக் காகச் சில வார்த்தைகள் பேசினார்.

ரோமானியச் சக்கரவர்த்திகள் தமது கீழ்த்திசை நாட்டுப் பிரஜைகளைச் சரடியதைப் போல் நேரு நடந்து கொண்டார். சாதி ஒழிப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த பெரியார் அவர்களை 'பைத்தியக்காரர்' என்று இழிவு தொனிக்கக் குறிப்பிட்டார். கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைச் 'சிறுபிள்ளைத்தனமானது' என்று வர்ணித்தார். வடக்கெல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டு ரயில் நிறுத்தக் கிளர்ச்சி செய்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் செயலை 'அறிவிலித்தனம்' என்று ஏசினார்.

தனது தகுதிக்கும் மரியாதைக்கும் மீறி இப்படியெல்லாம் பேசிய நேரு அவர்களின் போக்கு பற்றித் தான் முழுக்க முழுக்க நாகர்கோவில் மாநாட்டில் சிந்திக்கப்பட்டது. தமிழகமே அவருடைய பேச்சுக்களால் புண்பட்டுப் போயிருக்கிறது என்பது அங்கு தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பரிகாரம் அடுத்த நாள் 29-12-57-ல் நடைபெற்ற கழகப் பொதுக் குழு தனது முக்கியமான தீர்மான மொன்றின் மூலம் நாட்டுக்கு அறிவித்தது.

''நேரு பண்டிதர் தமிழர்களையும் தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தலைவர்களையும் கேவலமாகப் பேசி

வருவதைக் கண்டிக்கும் வகையில் தமிழ் மக்களின் அருவருப்பைக் காட்டிட, வரும் ஜனவரி முதல் வாரம், நேரு பண்டிதர் சென்னை வரும் போது, அவருக்குக் கறுப்புக்கொடி காட்டுவது என்றும், அந்நிகழ்ச்சி யினைச் சென்னைச் சட்ட மன்றத்தில் உள்ள தி.மு.க. உறுப்பினர் பதினைந்து பேரும் பாராளுமன்ற உறுப்பினர் இருவரும் முன்னின்று நடத்துவதென்றும் தீர்மானிக்கிறது" என்பது. 'தமிழகத்தின் தன்மானத்தில் அக்கறை கொண்ட அனைவரையும்' அந்தத் தீர்மானம் அன்போடு அழைத்தது.

தமிழகத்துக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துத் திருவண்ணா மலை மாநாடு குரல் கொடுத்தது. அதற்கடுத்து நாகர் கோவில் மாநாடு, தமிழகத்திற்கு நேர்ந்த அவமதிப்பைத் துடைத்தெறிய முடிவு எடுத்தது. தமிழகம் அநீதியைக் காட்டிலும் அவமதிப்பைத் தாங்கிக் கொள்வதில் கொஞ்சம் கூட விட்டுக் கொடுத்ததில்லை. சேரன் செங்குட்டுவன் வீரப்படையெடுப்பிலிருந்து, நேருவின் ஏளனப் பேச்சை எதிர்த்துக் கண்டிக்கக் கழகம் முடிவெடுத்தது வரை தமிழகத்தின் போராட்டங்களில் அவமதிப்பை எதிர்ப்பதுதான் அதிகமானதாக இருக்கும் என்பது வரலாறு. அடிமைத்தனத்தைக் கூடத் தமிழகம் பொறுமையோடு சகித்ததுண்டு. அவமானத்தை அது சகித்துக் கொண்டது என்பதற்குச் சான்றுகளே கிடையாது. வீரபாண்டியக் கட்டபொம்மன் கூட, அடிமைத்தனத்தால் அவ்வளவு விரைவாகச் சூடேறிப் பொருதவில்லை! அவமானப்படுத்தப் பட்டது தான் அவன் பீரிட்டுக் கிளம்பியதற்கு முக்கியக் காரணம்.

கனகவிசயன் அவமானப்படுத்திய காரணத்திற்காக இமயம் வரை தமிழன் படை கொண்டு சென்றான். நேரு ஏற்படுத்திய அவமானத் திற்குப் பரிகாரம் சென்னையிலேயே தேடிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது; எனென்றால், ஜனவரி 6-ஆம் நாளன்று பண்டித நேரு அவர்கள் சென்னைக்கு வருவதாகப் பயணத் திட்டம் போடப்பட்டிருந்தது. ஜனவரி 6-ல் சென்னை வரும் நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதன்

மூலம், தான் பட்ட அவமானத்துக்கு அமைதி தேடிக் கொள்ளத் தமிழகம் தயாரானது.

''பண்டித நேரு நாராச நடையில், நாட்டினரின் நன் மதிப்பைப் பெற்ற எவரையும் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று ஏசிடும் போக்கைக் காட்டி வருகிறார். அவரிடம் ஏசல் கேளாதவர்கள் அவர் அடி பணிந்து இட்ட கட்டளையை நிறைவேற்றும் மந்திரிகள் மட்டும் தாம். மற்ற எவரும், அவர்கள் எத்துணைப் பெரிய அறிவாளர்கள்-அனுபவமிக்கவர்கள் ஆக இருப்பினும் துச்சமென்று எண்ணித் தூற்றித் திரிகின்றார். இம்முறை, இதுவரை நாம் நடத்தியிராத அளவில், ஆளுல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குலையாத முறையில் பண்டித நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும்'' என்று பொதுக் குழுத் தீர்மானத்தையொட்டி அறிஞர் அண்ணு தமது வேண்டுகோளில் குறிப் பிட்டார்.

''கறுப்புக் கொடி காட்டுவது என்பது பண்டித நேருவின் போக்கில் நாம் கொண்டிருக்கும் அருவருப்பை, வெறுப்பை. எதிர்ப்பை அவருக்கும் உலகுக்கும் காண்பித்துக் கொள்ளும் ஜனநாயக வழிப்படி அமைந்த அமைதியானதொரு முறையாகும். எனவே யாதொரு விதமான வன்செயலுக்கும் இடமளிக்காத வகையில், கட்டுப் பாடு குலையாமல் கடமை தவருமல் கறுப்புக் கொடி காட்டவும், கறுப்புழ கொடி ஊர்வலம் நடத்தவும் முயலுமாறு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

இந்த இரண்டையும் எழுத்துக்கு எழுத்து அப்படியே நான் குறிப் பிடுவதற்குக் காரணம் தமிழர்தம் வழி மரபான போராட்டத்தில் ஒரு புதுமையான திருப்பத்தைக் கழகம் முதன் முதலாக உருவாக்குவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியில் உள்ள சிறப்பினை எடுத்துக் காட்டவேயாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தின் மிக உச்சாணிக் கொம்பில் இருந் தவர் பண்டித நேரு. 'அவர் விரலசைத்தால், இமய்மலை கூட இடம் பெயரும்' என்று வர்ணிக்கப்பட்ட பிரதமர் அவர். அதே போல் தமிழர்கள் தங்களால் தாங்கிக் கொள்ள முடியாத அவமான உணர்ச்சி காரணமாக அவரை எதிர்ப்பதில் எத்தகைய நாகரிகம், ஜனநாயகப் பண்பாடு காணப்பட வேண்டும் என்பதில் கழகம் நிரம்பவும் கவலை எடுத்துக் கொண்டது. ஆயிரம் கொடுங்கைகள் அமைதியாகச் சகித்துக் கொண்டாலும் அவமானப்படுத்தப்பட்டதை 'ஆயுதந்தாங்கித்தான் தீர்த்துக் கொள்வது' என்ற பண்பாட்டில் ஊறிப் போன இந்தச் சமு தாயத்தை, அவமதிக்கப்பட்டதற்கும் அமைதி முறையிலேயே

தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை உலகிற்குக் காட்டுவதற்குக் கழகம் பெரு முயற்சி எடுத்துக் கொண்டது. ஆனால், அவமதிக்கப்பட்ட சமுதாயம் தான் அமைதி காத்தது. அவமதித்தவரின் 'ஏஜண்டு' களான காங்கிரஸ் அமைச்சர்கள் நாட்டில் ரத்தக்களறியை உருவாக்கினர்.

இந்தக் கறுப்புக் கொடிப் போராட்டம் என் நெஞ்சில் என்றும் நீங்காத நினைவாக இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. அதுவரை கழகம் அநேகவிதமான எதிர் நடவடிக்கைகளில்-கறுப்புக் கொடிப் போராட்டங்களில்—ஈடுபட்டிருக்கிறது. ஆனால், இது தனது கட்சி நலனை முன்னிட்டோ, அல்லது கட்சிக் குறிக்கோளையொட்டியோ நடத்தப்படவில்லை. பாண்டியனை இகழ்ந்த கனக விசயர்களைச் சேரன் செங்குட்டுவன் சென்று அடக்கியதைப் போல் தமிழகத்தின் பல்வேறு தலைவர்களை இகழ்ந்த பண்டித நேரு அவர்களுக்குக் கழகம் 'படிப்பினை' போதிக்க முனைந்த சம்பவம் அது. இதே போல் கறுப்புக் கொடிப் போராட்டத்தைச் சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களே முன்னின்று நடத்துவர் என்று வகுக்கப்பட்டதற்குக் காரணம், போராட்டத்தில் உள்ளத்தின் உணர்வும், தமிழர்கள் நெடுநாள் பழகிப் போன மானத்தின் உணர்வும் சாதாரணமானவை அல்ல என்பது நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

முதுகில் வேல் பாய்ந்து தன் மகன் இறந்தான் என்று கேள்விப் பட்ட தமிழ்க் கிழவி ''இவனுக்கா என் வீரப் பாலைப் புகட்டினேன்?'' என்று சினம் பொங்கக் கேட்டு, மான உணர்வு விம்மிப் புடைக்க, தன் ஒட்டிப் போன மார்பகத்தை அறுத்தெறிய ஆயத்தமான கதையை வழிவழியாகக் கேட்டு வரும் சமுதாயத்தின் அதே மானுபிமான சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு-அதுவும் நாட்டிலேயே ஒப்பாரும் மிக்காரும் இன்றி உலா வரும் நேருவுக்கு எதிர்ப்புக் காட்டுவதில், மக்களுடைய மன உணர்ச்சி மாறுபட்டு விடக்கூடாது என்பதில், அறிஞர் அண்ணா பெருங்கவனம் செலுத்தினார். தங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி விதிக்கப்பட்டதைத் தங்களுக்கு நேர்ந்த அவமானமாக அமெரிக்கர்கள் நினைத்துக் கிளர்ந்தெழுந்து 'பாஸ்டன் டீ பார்ட்டி' நடத்திய செயலுக்கு ஒப்பாகவே 1957 ஜனவரி 6-ல் கழகம் நடத்திய கறுப்புக் கொடிப் போராட்டத்தை நான் இப்போதும் கருதுகிறேன்.

ஜனவரி 6-ல் கறுப்புக் கொடி காட்டித் தனது எதிர்ப்பை நேருவுக்குத் தெரிவிக்கத் தமிழகம் தயாராகி வருவதை நாங்கள் கண்டோம். வெளியூர்களிலிருந்து படை படையாகச் சென்னை நகருக்கு நாள் தோறும் தோழர்கள் வந்தவண்ணமிருந்தனர். அன்று காலையிலிருந்து மாலை வரை நேரு சென்னையில் கலந்து கொள்ளவிருந்த நிகழ்ச்சிகளும் வழக்கத்துக்கு மாறுக அதிகமாகவே இருந்தன. அதே போல்

போராட்டத்தைச் சாக்காக வைத்துத் தமிழகத் தோழர்களை ஒடுக்கி விடலாம்: அடக்கலாம் என்ற போக்கில் காங்கிரஸ் ஆட்சி ஆயத்தமாகி வருவதும், அது காண்பித்த பல்வேறு கெடுபிடிகள் மூலம் தெரிந்தன.

இவற்றைக் கவனித்த நாளும், மற்றத் தலைவர்களும் போராட்டத் திற்கு இரண்டொரு நாள் முன்னதாகப் பொதுக் கூட்டத்தில் போராட்ட முறைகளையும், போராட்டத்தில் கழகத் தோழர்கள் கடைப் பிடிக்க வேண்டிய அமைதி, கண்ணிய முறைகளையும் தெளிவாக வரை யறுத்து அறிஞர் அண்ணா அவர்கள் கண்டிப்பாகச் சொல்ல வேண்டும் என்றும் அண்ணா அவர்களைக் கேட்டுக் கொண்டோம். தோழர்களும் இதனையே விரும்பினர்.

இதற்கேற்ப ஜனவரி 3-ஆம் நாள் கடற்கரையில் கூட்டம் நடத்துவ தென்றும், அதில் அறிஞர் அண்ணா அவர்கள் மட்டுமே 'நேருவுக்குக் கறுப்புக் கொடி' என்கிற தலைப்பில் பேசுவதென்றும் முடிவு செய்யப் பட்டது. இந்தக் கூட்டம் நடைபெற்றிருந்தால், ஜனவரி 6-ல் நடை பெற்ற பல்வேறு அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்தக் கூட்டம் நடத்தப் போலீசாரால் தடை விதிக்கப்பட்டு விட்டது. அன்று கூட்டம் நடைபெற்றிருந்தால் எங்களுக்கு அறப் போர் முறை கள் குறித்து அறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து மேலும் அருமையான கருத்துக்கள் கிடைத்திருக்கும். 3-ஆம் தேதி கூட்ட அனுமதி மறுக்கப் பட்டதால், கழகத் தோழர்களின் ஆத்திர உணர்வு அதிகப்பட்டது. மானுபிமானப் பிரச்சினையுடன் கூடவே, பேச்சுரிமைப் பிரச்சினையும் தோழர்களின் உள்ளங்களில் தீப்பிழம்பாகச் கனன்றது.

''கறுப்புக் கொடி நிகழ்ச்சி மிக அமைதியான, கண்ணியமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் மக்களிடம் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத் தடுப்பதைச் சகிக்க முடியாத சர்வாதிகாரப் போக்கு என்று நான் கருதுகிறேன். எனவே போலீஸ் அனுமதி கிடைக்காவிட்டாலும், ஜனவரி 3 மாலை 5-30 மணிக்குத் திருவல்லிக்கேணி கடற்கரையில் பொதுக் கூட்டத்தில் பேசுவது என்று நான் முடிவு செய்து விட்டேன். பொதுக் குழுவினரின் ஒப்பமும் பெற்று விட்டேன். என்ன நேரிடுவ தாக இருப்பினும் அன்றையக் கூட்டம் மிக மிக அமைதியான முறை யில், துளியும் பலாத்காரம், அருவருக்கத் தக்க செயல் இன்றி நடை பெற வேண்டும். எந்தவித அடக்கு முறை நடவடிக்கை எடுக்கப்பட்டா லும் தமிழகத் தோழர்கள் மனம் பதருமலும், கொதிப்படையாமலும், அமைதியும் ஒழுங்கும் பாதிக்கப்படாமலும் நடந்து கொள்ள வேண்டும். பண்டித நேரு பண்பிழந்து பேசுகிறார் என்று கண்டனம் காட்டும் நாம், பண்புடன் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழகத்தின் தனிச் சிறப்புத் திகழும்'' என்று அறிக்கை விடுத்து வேண்டிக் கொண்டார் அண்ணா.

69

காரைக் கைது செய்த காவலர்கள்

எது எப்படியானாலும் தடை செய்யப்பட்ட கூட்டத்தில் 3-ஆம் தேதி கலந்துகொண்டு பேசுவது என்று அறிஞர் அண்ணா அவர்களே தீர்மானித்ததைக் கேட்டுத் தமிழகமே சிலிர்த்து எழுந்தது. 'அண்ணா பேசும் கூட்டத்திற்கா தடை! அமைதி காக்கப்படுவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கா தடை?' என்று தமிழகத்தின் ஒவ்வொரு உள்ள மும் தனக்குத் தானே கேட்டுக் கொண்டது.

அண்ணா அவர்கள் மட்டுமே பேசுவதாக இருந்த அந்தக் கூட்டத் தில் தடை விதிக்கப்பட்ட நிலைமையின் காரணமாகத் தோழர்கள் சம்பத், ஆசைத்தம்பி, இரா. செழியன் ஆகியோர் தம்முடன் பேசட்டும் என்று அண்ணா அவர்கள் முடிவு செய்து, அதற்கேற்ப அறிக்கையும் விடுத்தார்கள். ஒருக்கால் இவர்கள் கைது செய்யப்பட்டால், அடுத்து நான் கூட்டத்தில் பேசுவதாகவும் ஏற்பாடாயிற்று.

3-ஆம் தேதி காலை முதலே கடற்கரையில் மக்கள் அனுமதிக்கப் படாமல், வெறும் போலீஸ் மயமாகக் காட்சியளித்தது. பிற்பகலில் கடற்கரைக்குச் செல்லும் பாதைகளும் அடைக்கப்பட்டன. பிற்பகலி லிருந்தே கடற்கரை நோக்கிப் போகத் துடித்த மக்களுக்கும் போலீசா ருக்கும் ஆங்காங்கு தகராறுகள் மூண்டன. பைகிராப்ட்ஸ் சாலையில் ஒரிரு முறை கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் கடற்கரைக்குப் போக விருந்த மக்களைக் கலைக்க வேண்டிய கட்டாயத்திற்குப் போலீஸ் ஆளாயிற்று.

சரியாக 5.30 மணிக்கு அறிஞர் அண்ணா அவர்களும், அவருடன் பேசுவதாக இருந்த மற்ற மூவரும் கழகக் கொடி பறக்க விடப்பட்ட காரில் கடற்கரை நோக்கிச் சென்றனர். அந்தக் காருக்குப் பின்னால் நான் தனிக் காரிலும், நாவலர், என். வி.என்., பேராசிரியர் அன்பழகன், மதியழகன், அண்ணன் சி. பி. சி., மதுரை முத்து, அன்பில் ஆகியோர் தனித் தனிக் கார்களிலும் பின்தொடர்ந்தோம்.

ஜெனரல் ஆஸ்பத்திரி சந்திப்பில் அண்ணா அவர்களும், அவருடன் சென்ற மூவரும் போலீசாரால் கைது செய்யப் பட்டனர். அதற்கு அடுத்துச் சென்ற காரிலிருந்த நானும், என் னுடன் வந்த தோழர்கள் இரா. தருமலிங்கம், பண்ணை முத்துக் கிருஷ்ணன், அரங்கண்ணல், அன்பில் தருமலிங்கம், சண்முக வடிவேல் ஆகியோரும், காரோட்டி ரங்கசாமியும், காரோடு கைது செய்யப்

பட்டதாலே போலீசாருடன் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய தாயிற்று.

நாங்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டோம் என்பதே கழகத் தோழர்களுக்கு இரவு நெடுநேரம் வரை புரியாத புதிராகவும், தெரியாத இடமாகவும் இருந்தது. 'அண்ணு அவர்கள் எங்கு கொண்டு போகப் பட்டார்?' என்று சென்னை நகரமே சில மணி நேரம் திகைத்துப் பின்னால் எங்களுக்குத் தெரிந்தது. அடையாறு போலீஸ் நிலையத்தில் அன்றிரவு நாங்கள் காவலில் வைக்கப்பட்டோம்.

அடுத்த நாள் பகல் ஒரு மணிக்கு அறிவகத்தில் நாவலர் கைது செய்யப்பட்டார். அவருடன் தோழர்கள் என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி, எம். பி. சுப்ரமணியம், சி. நடராசன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அதே போல் அன்றிலிருந்து இரண்டு மூன்று நாட்கள் அறிவகத்திற்குள் நுழையும் அத்தனை பேரும் கைது செய்யப் பட்டனர்.

கடற்கரைக் கூட்டம் தடைப்பட்டதால், 4-1-58-ல் பெரம்பூர் ஏரிக் கரையில் நண்பர் ப.உ.ச., திருமதி சத்தியவாணிமுத்து, எஸ். சந்தானம் ஆகியோர் தடை மீறிப் பேசுவதென்றும், 5-1-58-ல் ராய புரத்தில் நண்பர் மதியழகன், எம்.பி. சுப்பிரமணியம், இருசப்பன் ஆகியோர் பேசுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. அனைவருமே கைது செய்யப்பட்டு விட்டதால் அந்தக் கூட்டங்களும் நடைபெறாமற் போயின.

ஜனவரி 6-ல் கழகத்தின் முக்கியத் தலைவர்களோ, முன்னணித் தோழர்களோ, சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களோ வெளி யில் விட்டு வைக்கப்படவில்லை. கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க முடிவு செய்யப்பட்டிருந்த உறுப்பினர்களில் தோழர் எம். ஆனந்தன் அவர்கள் மட்டுமே, 6-ந் தேதி காலை மீனம்பாக்கத்தில் கறுப்புக் கொடி காட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் என்றும், வெற்றிச் செல்வி, அன்பழகன், அ. பொ. அரசு, செங்குட்டுவன் ஆகியோரும் வழி நடத்தினர் என்றும் பின்னர் தெரிந்தது.

தலைவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டதால், கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சி 6-ஆம் தேதி தடம் புரளுமோ என்று அனைவரும் அஞ்சினோம். ஏனென்றால் நாங்கள் வெளியில் இருக்கும்போதே தோழர்களின் உணர்ச்சி கட்டுப்படாமல தத்தளித்தது. கவிஞர் கண்ணதாசன் அவர்கள், தமது 'தென்றல்' இதழில் கறுப்புக் கொடி நிகழ்ச்சி பற்றி வெளியிட்ட கவிதை, தமிழ் நயம் சொட்டுவதாகவும், அதே சமயம் வன்முறை தூண்டுவதாகவும் இருந்தது. அதனைக் கண்ணுற்ற அறிஞர் அண்ணு அவர்கள், அந்த இதழ் வெளியில் வரக்

கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அச்சான அத்தனை இதழ்களும் கவிஞர் கண்ணதாசன் அவர்களால் எரிக்கப்பட்டு, வேறு கவிதையைத் தாங்கி அவ்வார இதழ் வெளிவந்தது.

ஜனவரி 6-ல் புலர்ந்தபொழுது, தமிழகத்தின் மானம் காப்பதாகவும், வன்முறைக்கு வழி வகுக்காததாகவும்இருக்கவேண்டும் என்று நாங்கள் அனைவரும் விரும்பினோம். 6-ஆம் தேதி காலை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சுமார் இருபதாயிரம் பேர் திரண்டு கறுப்புக் கொடி காட்டினர். போலீசாரின் அடக்கு முறையும் அதிகமாக நடைபெற்றது.

'கண்டதும் அடி' என்ற போக்கில் மக்களைப் போலீஸ் வதைத்தது. காலையிலிருந்து இரவு வரை நேரு செல்லும் இடமெல்லாம் கறுப்புக் கொடி மயமாகவும், கையுடைந்தோர், கால் உடைந்தோர் மயமாகவும் இருந்தன. சென்னை நகரின் ஒரு பகுதி அன்று ரத்தத்தில் திளைத்தது. கண்ணீர்ப் புகைக் குண்டும் தடியடியும் தன்னிச்சையாகப் பிரயோகிக்கப் பட்டன.

கறுப்புக் கொடி காண்பிக்க வந்த கழகத் தோழர்களும் பொது மக்களும் அறிஞர் அண்ணு விடுத்த ஆணைக்கிணங்கவே அமைதியைக் கடைப்பிடித்தனர். அன்று கூடிய மக்கட் கூட்டத்திற்கும் அரசாங்கத் தரப்பில் கையாளப்பட்ட வன்முறைச் சம்பவத்திற்கும் இடையில் கணக்குப் பார்த்தால், தமிழகம் அவமானப்படுத்தப்பட்டதை முதல் முறையாக அமைதியோடு எதிர்த்து நின்றது என்று பெருமையாகச் சொல்லலாம். எனினும் தடியடியின் காரணமாகவும், கூட்ட நெரிசலில் சிக்கியும் கழக அனுதாபி மொய்தீன் பிச்சை என்பவரும் தையற்கடைத் தொழிலாளி கோவிந்த ராவ் என்பவரும் இறந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இவைகளின் காரணமாகச் சிறையிலிருந்த நாங்கள் வருந்தினாலும் மொத்தத்தில் அறிஞர் அண்ணு அவர்களின் திருப்தியடைந்ததாகவே பிறகு தெரிவித்தார்.

கழகத் தோழர்கள் தாம் கைது செய்யப்பட்டும், காயப்பட்டும் அவதியுற்றனரே தவிர, எதிர்தரப்பில் - அதாவது அடக்கு முறையைப் பிரயோகித்த அரசாங்கத் தரப்பில் எந்தவிதமான சேதமோ வன்முறையால் உண்டாகக் கூடிய இழப்போ ஏற்படவில்லை என்பதை நினைத்து எல்லாரும் திருப்தியுற்றோம். எங்களுக்குத் தேவைப்பட்டது இதுதான். எங்களில் பலர் மாண்டாலும் பாதகமில்லை; அரசாங்கத்தின் ஆட்களுக்கோ சொத்துக்கோ அபாயம் நேருவதாக அமையக் கூடாது என்று விரும்பினோம்.

அந்த விருப்பம் 6-ஆம் தேதி கறுப்புக் கொடி நிகழ்ச்சியைப் பொறுத்தவரை நிறைவேறியதாகவே கொள்ளலாம். பல ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது அந்த ஜனவரி 6-ஐப் பற்றிச் சொல்வதும்,

கேட்பதும் சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் அன்று கழகம் ஒரு பெரிய பரிசோதனையில் பெரு வெற்றி பெற்றதாகவே சொல்ல வேண்டும்.

காந்தியடிகள் (1930) தண்டி யாத்திரையின்போது அடக்கு முறைகளுக்கிடையில் காங்கிரஸ் தொண்டர்கள் காண்பித்த அமைதியும் கட்டுப்பாடும் எத்தகையதென்று நான் படித்திருக்கிறேன். சுமார் அறுபதாயிரம் பேர் ஈடுபட்ட அந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டாலும், போலீசாருக்கு எத்தகு சேதமும் ஏற்படவில்லை என்றும் சொல்கிறார்கள். காந்தியடிகளுக்கே முழு மன நிறைவு அளித்தது அந்த ஒரு போராட்டம் தான் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

1958 ஜனவரி 6-ல் சென்னையில் கழகச் சார்பாக இருபதாயிரம் பேர் கலந்துகொண்ட கறுப்புக் கொடிப் போராட்டமும் அதற்குச் சம மானதே. தண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது காங்கிரஸ் தொண்டர்கள் நடந்து கொண்ட கட்டுப்பாட்டைக் கவனித்த காந்தி யடிகள், நாடு அறப் போராட்டத்திற்குத் தன்னைத் தயாராக்கிக் கொண்டதாக நம்பிக்கை தெரிவித்தாராம். நாங்களும் ஜனவரி 6— கறுப்புக் கொடிப் போராட்டத்திற்கும் ஈடு கொடுக்கக் கூடியதுதான் என்று முடிவு செய்தோம். உப்புக்கும் உறைப்பு சொரணைக்கும் சம்பந்த மிருக்கிறது. அதேபோல், உப்புச் சத்தியாக்கிரகத்திற்கும் தமிழர்களின் 'உறைப்பு' உணர்வைக் காட்டிக்கொள்ள நடைபெற்ற கறுப்புக் கொடிப் போராட்டத்திற்கும் அநேக ஒற்றுமைகள் எனக்குத் தெரிந்தன.

அறிஞர் அண்ணா அவர்களின் அன்பு வேண்டுகோள்—நாங்கள் வளர்த்த கழகக் கட்டுப்பாடு வீண் போகவில்லை; உயிர்ப்புச் சக்தியோடு விளங்கும் என்று நாங்கள் ஜனவரி 6 இரவு நிம்மதியடைந்தோம். பதினைந்து நாட்கள் ரிமாண்டில் நாங்கள் வைக்கப்பட்டிருந்தும், ஐந்து நாட்களுக்குப் பிறகு 8-1-58 அன்று அறிஞர் அண்ணா, நான் மற்றும் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டோம். விடுதலையாகிச் சிறையிலிருந்து வெளி வந்ததும் முதல் வேலையாக ஜனவரி 6-ல் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தோழர்களைப் போய்ப் பார்த்து வருமாறு அறிஞர் அண்ணா என்னைப் பணித்தார்.

அதன்படி தோழர்கள் ஆசைத்தம்பி, முரசொலி மாறன், கவிஞர் ஆனந்தம், பாண்டியன் ஆகியோருடன் நான் மருத்துவ மனைகளுக்கும், தோழர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்த இடங்களுக்கும் சென்று பார்த்து ஆறுதல் கூறினேன். காயம்பட்ட தோழர்களில் உடம்பெல்லாம் இரத்த மயமாக இருந்தது. உடைகளெல்லாம் இரத்தத்தில் தோய்ந்து செந்நிறமாக மாறிவிட்டிருந்தன. 'இரத்தக் கவுல்' என்பார்களே அது நாங்கள் போன இடமெல்லாம் நீக்கமற

வீசிக்கொண்டிருந்தது. அடிபட்டுப் படுத்துக் கிடந்த தோழர்களைப் பார்க்குந்தோறும், அறிஞர் அண்ணா போராட்டம் நடந்ததிய் திருப்தி தெரிவித்ததில் இருந்த உண்மை எனக்கு விளங்கிற்று.

'எவ்வளவு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்? இருந்தும் எவ்வளவு பொறுமையைக் கடைப்பிடித்திருக்கிறார்கள்?" என்று வியந்தேன். நம் தோழர்கள் இன்னல்களையும் துன்ப துயரங்களையும் நாட்டுக்காகத் தாங்கிக் கொள்வதில் எவ்வளவு கட்டுப்பாடான பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று மகிழ்ந்தேன். ஏனென்றால் நானும் அவர்களில் ஒருவன்; அறிஞர் அண்ணாவிடம் பயிற்சி பெற்றுள்ள கழகத் தொண்டன்.

கறுப்புக் கொடி நிகழ்ச்சியில் ஈடுபட்டதற்காகவும், ஈடுபட்டனர் என்று சந்தேகப்பட்டும், கழகத் தோழர்களையும், பொது மக்களையும் காங்கிரஸ் ஆட்சி எத்தகு கொடுமைகளுக்கு ஆளாக்கியது என்பதை நான் விடுதலை செய்யப்பட்டு வெளி வந்ததும் ஆங்காங்கு மருத்துவ மனைகளில் போய்த் தோழர்களைச் சந்தித்தபோது அறிந்து பெரிதும் கலங்கினேன்.

மனிதனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உயர்ந்த பட்ச உறுதியையும் சகிப்புத்தன்மையையும் கழகத் தோழர்கள் வெளிக் காட்டியிருந்தார்கள். அதேபோல் மனிதனால் எவ்வளவு கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவையும் தாங்கி, தம்மால் முடிக்கப்பட்ட பெருமையான பணியைப்பற்றிய பெருமிதமான நினைவில் தோழர்கள் மருத்துவ மனைகளில் படுத்துக் கிடந்தார்கள். அவர்களில் யாரும் எந்தவித வன்முறைக் கிளர்ச்சியிலும் ஈடுபடாமல் இப்படிப்பட்ட தாக்குதலுக்கு ஆளானார்களே என்று நாடே கண்ணீர் வடித்தது.

1921 டிசம்பரில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய இளவரசர் (எட்டாம் எட்வர்ட்) இந்தியா வந்தபோது, எதிர்ப்புத் தெரிவித்த காங்கிரஸ் தொண்டர்கள் மாதிரியிலேயே 1958 ஜனவரியில் நேருவுக்குக் கறுப்புக் கொடி காண்பித்த கழகத் தோழர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். கல்கத்தாவுக்கு இளவரசர் போகிறார் என்பதற்காக, பம்பாயிலும், பாட்னாவிலும், அமிர்தசரசிலும் காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப் பட்டுக் காராக்கிரகத்தில் பூட்டப்பட்டதைப் போலவே, நேரு சென்னை வரும் போது கறுப்புக் கொடி காட்டப்படும் என்று கழகம் எடுத்த முடிவுக்காக, கன்னியாகுமரியிலும் திருச்சியிலும், சேலத்திலும், சென்னையிலும் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

போலீசாரின் கொடுமைகளுக்கெல்லாம் ''வேல்ஸ் இளவரசர் மீது பொறுப்பைச் சுமத்துவதற்கில்லை. அவர்மீது குற்றஞ் சொல்லவும் முடியாது.. ஆனால் நாளும் இழந்து வரும் செல்வாக்கை எப்படியாவது

மீண்டும் நிலைநாட்டிக் கொள்வதற்காக, வேல்ஸ் இளவரசரின் உருவத்தைப் பயன்படுத்திக் கொள்ளச் செய்த முயற்சிதான் அது" என்று 1921 டிசம்பரில் இந்திய அரசாங்கப் போலீஸ் நடவடிக்கைகள் பற்றி நேரு எழுதியிருக்கிறார்.

அதே நேருவின் உருவத்தைப் பயன்படுத்தி 1958-ல் இந்த மாநிலத்தின் காங்கிரஸ் அரசாங்கம் நாளும் இழந்து வந்த தனது செல்வாக்கைப் பயன்படுத்தத் தலைப்பட்டது சரித்திரத்தின் விசித்திரமே ஆகும்.

70

கட்டுப்பாட்டின் எடுத்துக்காட்டு

நாடெங்கும் தோழர்கள் கைது செய்யப்பட்டதைப் போலவே, நாடெங்கும் கழகத் தோழர்கள் பேரில் பல்வேறு பிரிவு களின்படி வழக்குகளும் தொடுக்கப்பட்டன. அனைருடம் தங்கள் வீடுகளில் அடுப்புப் புகைவதற்காகவே பெரும்பாடு பட்டுக்கொண்டி ருக்கும் பெருவாரியான கழகத் தோழர்களின் பேரில் தொடுக்கப்பட்ட வழக்குகள் பெருந்தொகை செலவிட்ட பிறகே நீதிமன்றங்களில் நியாயத்தைப் பெறக்கூடியனவாக இருந்தன!

இந்த வழக்குகளின் காரணமாகத் தோழர்கள் செலவுக்குப் பணந் தேடி அலைந்ததைப் பார்த்த பிறகு, கழகத்தின் பொருளாதார நிலை எவ்வாறு வலிமையானதாக இருக்க வேண்டும் என்பதையே பெரிதும் சிந்திக்கத் துவங்கினேம். வழக்குத் தொடுக்கப்பட்ட தோழர்களுக் கெல்லாம் கழகமே பொருளாதார உதவி புரியக்கூடிய நிலையில் அப்போது இல்லை. தோழர்கள் படுகின்ற சங்கடங்களும் பெரியவை யாக இருந்தன. இந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட தோழர்கள் காண்பித்த உறுதி பாராட்டத் தக்கது.

தோழர்களின் உறுதி மட்டுமல்ல; அந்த உறுதிக்குப் பின்னால் இருந்த தியாக உணர்வையும் அறிஞர் அண்ணா அவர்கள், கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்குப் பிறகு கடற்கரையில் கூட்டப்பட்ட மாபெரும் பொதுக் கூட்டத்தில் தெளிவாகத் தெரிவித்தார்.

"எத்தனையோ அடக்குமுறைகளை நாம் பார்த்திருக்கிறேம். இந்த அடக்குமுறைகளையெல்லாம் கண்டு உள்ளம் வெதும்பிட மாட்டோம். ஆனால் 'பஸ் வண்டியைக் கொளுத்தினர்கள்; கல் வீசினர்கள்' என்று ஆட்சியாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அப்படி யாராவது செய்திருந்தால் அவர்கள் கழகத் தோழர்களாகவும் ஆகமாட் டார்கள். அவர்களை என் தம்பிகளாகவும் மதிக்க மாட்டேன். நம்மிலே பத்துப் பேர் செத்தார்கள் என்பதைக் கேட்டால் என் இதயம் வெடித்து விடாது; சாகத்தான் அழைக்கிறேன் உன்னை! பத்துப்பேர் அடக்கு முறைக்கு ஆளாகித் தாக்கப்பட்டு இறந்தால் அதனால் தமிழ்நாட்டுக்கு இழப்பு ஒன்றுமில்லை. இரத்தம் சிந்தத்தான் நான் உங்களை அழைக் கிறேன். திருப்பித் தாக்குவதற்கில்லை. வன்முறையில் ஈடுபடுவதற்கு அல்ல," ஒத்துழையாமை இயக்கத்தின்போது நடைபெற்ற சௌரி சௌரா' நிகழ்ச்சியைத் தொடர்ந்து காந்தியடிகள் அறிக்கை

விட்டதைப்போல், இத்தாலியப் புரட்சி வீரன் அவலத்திற்கு ஆட்பட்டுக் கந்தையும் அழுக்கும் எலும்பும் தோலுமாகத் தன்முன் நின்ற புரட்சிப் படை வீரர்களைப் பார்த்துச் சொன்னதைப்போல், 14-1-58 அன்று பல இலட்சம் மக்களைப் பார்த்து அறிஞர் அண்ணா பேசினார்.

அதற்குப் பின்னர் நடைபெற்ற போராட்டங்களின்போது கழகத் தோழர்கள் நடந்துகொண்ட கண்ணியமான நடவடிக்கைகளில் அறிஞர் அண்ணா அவர்கள் அன்று பேசிய கண்டிப்பின் பின் விளைவு நன்குகத் தெரிந்தது.

14-1-58ல் நடைபெற்ற சென்னைக் கடற்கரைக் கூட்டம் மறக்க முடியாத கூட்டமாகும். நியாயத்தின் சார்பாகப் பெரியதொரு புரட்சியில் ஈடுபட்டு, அதன் இலாப நஷ்டங்களைக் கணக்குப்போட்டுப் பார்க்கும் கூட்டமாகவே அது இருந்தது. அன்று அறிஞர் அண்ணா பேசிய பேச்சில் தொனித்த கண்டிப்பும், உறுதியும் நெடுங்காலத்திற்குக் கழகத் தோழர்கள் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டிருந்தன

தனக்குள்ள பிரச்சினையைப்பற்றி எதிரிலிருக்கும் மக்களிடம் நேரடியாகவே நியாயம் கேட்டு ஒப்புதல் பெறுவதென்பது அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பழக்கமானதே. ஆனால். 14-1-58 கூட்டத்தில் தான் முதன் முதலாகத் தனக்கு மக்களிடம் எவ்வளவு பிடிப்பும் மரியாதையும் இருக்கின்றன என்பதை ஆட்சியாளருக்குத் தெளிவாகவே உணர்த்தும் செய்கையை மேற்கொண்டார்.

''அண்ணாதுரைக்கென்ன, அவர் நாட்டிலே ஒரு பெரிய சக்தியை வளர்க்க மட்டும் கற்றுக் கொண்டிருக்கிறாரே தவிர, அதனைக் கட்டிக் காக்கவும் கட்டுப்படுத்தவும் அவரால் ஆகுமா?'' என நாட்டில் சிலக் கேட்கிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் அண்ணாதுரைக்குச் சக்தியை வளர்க்க மட்டுமல்ல; அதனைக் கட்டிக் காக்கவும் கட்டுப்படுத்தவும் தெரியும் என்பதைக்கூறும் வகையில் நான் 'எழுந்திருங்கள்' என்பேன்; நீங்கள் அனைவரும் எழுந்திருக்கவேண்டும். உட்காருங்கள்' என்பேன்; அனைவரும் உட்கார வேண்டும்" என்று கூறி அண்ணா அவர்கள், ''எழுந்திருங்கள்" என்றார். உடனே கடற்கரையில் திரண்டிருந்த அத்தனை லட்சம் மக்களும் எழுந்து நின்றனர். அதே போல் அண்ணா சொன்னதும் உட்காரவும் செய்தனர்.

அங்கிருந்த என் கண்கள் பனித்து விட்டன. மக்கள் அனைவருக்கும் ராணுவக் கட்டுப்பாடு பழக்கமாகி விடவில்லை. ஆனால் அண்ணா அவர்களைத் தங்கள் பெரும் தலைவராக மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதை இந்த நிகழ்ச்சி நிரூபித்து விட்டது. அதற்குப் பிறகு அண்ணா அவர்களின் ஒவ்வொரு செய்கையிலும் பொறுப்பும், அதே சேரத்தில் பலமான உறுதியும் காணத் தொடங்கின.

1967-ல் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று கழகம் உறுதியான நம்பிக்கையை அவ்வப்போது தெரிவித்து வந்ததற்கும் முன் மாதிரியாக இந்தக் கடற்கரைக் கூட்ட நிகழ்ச்சிதான் அமைந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. அந்தக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் என்னைப் பற்றித் தனியாகவே பல முறை குறிப்பிட்டார்கள்.

"3-ஆம் தேதியன்று என்னைப் பின் தொடர்ந்து வந்த காரிலிருந்த கருணாநிதியைக் கைது செய்தார்கள். அந்தக் காரை ஓட்டி வந்த ரங்கன் என்ற டிரைவரையும் கைது செய்தார்கள். இந்த சர்க்கார் எவ்வளவு கேலிக்குரியதாக நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்பார்களே அதைப் போல கருணாநிதி வீட்டுக் கார் டிரைவரும் சர்க்காருக்கு எதிரியாக அச்சமூட்டக் கூடியவராகக் காணப்படுகிறார்! இவ்வளவு அச்சம் எதற்காக? இப்படி அஞ்சி அஞ்சிச் சாவதைவிட ஒரு முழுக் கயிறு கிடைக்க வில்லையா?"

இவ்வளவு கோபக் குரலோடு எப்போதாவது அபூர்வமாகத் தான் பேசுவார். அந்தக் கோப உணர்விலும் என்னைப்பற்றி நெக்குருகக் கூறியதைக் கேட்ட எனக்கு மகிழ்ச்சி கரைபுரண்டது.

"ஒரு முழக் கயிறு கிடைக்கவில்லையா?" என்று அண்ணா கேட்ட தற்காக நாடு முழுவதும் காங்கிரஸ் வீழ்ச்சிக்கு வலுபின்னிக் காட்டி அண்ணாவை மகிழ்விக்க வேண்டும்; மேலும் கடுமையாகப் பணியாற்ற வேண்டும் என்று அப்போது நான் பெரும் உறுதி எடுத்துக் கொண்டேன்.

அதிலிருந்து காங்கிரஸ் ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சியில் தான் கழகத் தோழர்களின் பணிகள் அமைந்தன. கலையுலகத்தில் எனக்கிருந்த தொடர்புகளையும் அதிலிருந்து கொஞ்சம் குறைத்துக் கொண்டு, முழுக்க முழுக்க அரசியலில்—அது என் சொந்த வாழ்க்கையை, குடும்பத்தின் தேவைகளைப் பெருமளவு பாதித்தாலும் —ஈடுபடத் துவங்கி விட்டேன்.

கழகத்தின் பணிகளில் அப்போது நான் முன்னணியில் இருந்தாலும் எனக்கிருந்த வேறு பல பொறுப்புகளும் கடமைகளும் சில நேரங்களில் குறுக்கிடுவதாக இருந்தன. இந்தக் 'குறுக்கீடு'களைக் குறைத்துக் கொண்டதும் முழு நேரக் கழகத் தொண்டனாக, அறிஞர் அண்ணா அவர்களின் அருகிலிருந்தே அவர் ஆணையை நிறைவேற்றும் முன்னணித் தொண்டனாக, அதிலிருந்து நான் பணியாற்றத் தொடங்கினேன்.

அடுத்து 1958 பிப்ரவரி 15, 16 நாட்களில் நடைபெற்ற சேலம் மாவட்ட 3-வது மாநாட்டிற்கு நான் தலைவராகப் பொறுப்பேற்றேன். சேலம் மாவட்டத்தில் ஒரு மூலைப்பகுதியில் வசதிகள் அவ்வளவாக இல்லாத சிறு நகரமான வேலூரில் அந்த மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் நாங்கள் யாருமே எதிர்பார்க்காத அளவு கூட்டம் திரண்டது. சேலம் மாவட்டத்தில் பொதுவாகக் கழகத்திற்கு அப்போது ஆதரவு இருந்தது என்றாலும், வேலூர்- சேலம் மாநாடு, அதற்கு மேலும் கழகத்திற்குப் பெருகியுள்ள புதிய சக்தியைப் புலப்படுத்துவ தாக அமைந்தது.

71

உதய சூரியன்–நாடகமும், சின்னமும்

இதற்கிடையில் கலையுலகத் தொடர்பை அரசியல் பணிகள் காரணமாகக் குறைத்துக் கொண்டாலும், அந்தத் துறையின் பிடிப்பு என்னை விடவில்லை! 'உதய சூரியன்' நாடகம் அப்போது ஒரு வார காலத்தில் என்னால் எழுதப்பட்டு, கழகப் பிரச்சாரத்தின் ஓர் அங்கமாக அது ஆங்காங்கு நடத்தப்பட வேண்டும் என்பதும் முடிவாயிற்று.

அண்ணா அவர்கள் தமக்கு அந்த நாடகம் மிகவும் பிடித்ததாகத் தெரிவித்தார். கறுப்புக் கொடி நிகழ்ச்சிக்குப் பிறகு முதன் முதலாக நடைபெற்ற வேலூர்-சேலம் மாநாட்டிலே யே 'உதய சூரியன்' நாடகம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. எனில் அந்த மாநாட்டிற்குத் தலைவராக நான் இருந்ததால் நான் நடிப்பது அவ்வளவு நன்றாக இராது என்பதால் அடுத்த மாநாடுகளிலிருந்து அது நடத்துவதற்கு ஏறபாடு செய்யப்பட்டது. 'உதய சூரியன்' நாடகம், கழகப் பிரச சாரத்தில் கலையின் வாயிலாக ஒரு திருப்பத்தை உருவாக்கி இருப்ப தாக அண்ணா அவர்களே கருததறிவித்தார்கள். அடுத்து வந்த தேர்தல்களில் காங்கிரஸ் பலத்தை வீழ்த்துவதறகு அந்த நாடகமும் பெருங்காரணமாக அமைந்திருந்தது என்பது கழகத் தோழர்களின் கருதது.

நான் தலைமை வகித்த அந்த மாநாட்டில்தான், கழகச் சார்பாக முதல் முதலாகப் 'பஞ்சாயத்துத் தேர்தல்களில் பஞ்சாயத்துத் தலைவர் களை நேரடியாக மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும்' எனறு தீர்மானம் நிறைவேறறப்பட்டு அரசாங்கதது்கு அனுப்பப்பட்டது, நடைபெறற மாநாட்டில் முதன்முதலாக நிறைவேறறப்பட்டஅந்தத் தீர்மானம் நான முதலமைச்சராக வந்த பிறகு முதன் முதலாக அமுலுக்கு வருவதும் சரிதிரத்தின் மற்றொரு விசிதிரம் போலும்!

''தமிழை ஆட்சி மொழியாக வைத்திருக்கிறோம் என்று தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனால அவர்கள் எகாடுதத நாட்குறிப்பு ஏட்டில் பாரத்தால், சகம்', 'மாகம்' 'பரல்குணம்,' 'சைத்ரம்', இப்படி வாயில நுழைய முடியாத சொற்கள் வருடங்களாகவும் மாதங்களாகவும் ஆக்கப் பட்டு அதிலே காணபபடுகின்றன'' என்று வேலூர்-சேலம் மாநாடடில் என் தலைமையுரையில் குறிப்பிட்டது எனக்கு நினைவிருக்கிறது.

இந்த நினைவுதான் பின்னர் இவை போன்ற பெயர்கள் அரசாங்க முடங்கல்களில் இருக்கத் தேவையில்லை என்ற அரசாங்க உத்தரவு



பிறப்பிக்கப்படுவதற்கு க் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதி பெருமைப்படுகிறேன்.

வேலூர், சேலம் மாநாடு சிறப்பிலும் மக்கள் ஆதரவிலும் சொல்லப் பட்ட கருத்துக்களிலும் பெருமைப்படத்தக்கதாக இருந்தது. என்ருலும் கழகத்திற்கான நிதி வருவாயில் தளர்ந்து காணப்பட்டது. இதுநான் கழகத்தின் பொருளாதார நிலைமையைப் பற்றித் தீவிரமாகச், சிந்தித்துக் கொண்டிருந்த அப்போதையச் சூழ்நிலையில் எனக்குச் சற்று குறையைக் கொடுத்தது.

அடுத்து தேவகோட்டையில் இராமநாதபுரம் மாவட்ட மாநாடு அதே பிப்ரவரி 22, 23 நாட்களில் நடைபெற்றது. தலைவர் பேராசிரியர் அன்பழகன்; திறப்பாளர் இலட்சிய நடிகர் இராசேந்திரன், இந்த மாநாட்டில்தான் நான் எழுதி நடித்த 'உதய சூரியன்' நாடகம் நடத்தப்பட்டது. செட்டி நாட்டில் கழகத்தின் கொள்கைகளை வலி யுறுத்தும் மாநாடு சிறப்புற நடைபெற்றது என்பதில் இந்த மா நாட்டைத் தொடர்ந்து நாங்கள் திருப்தியுற்றோம்.

அதைத் தொடர்ந்து நிதி திரட்டும் பணிகளில் 'உதய சூரியன்' நாடகமும் ஒரு சிறந்த கருவியாகப் பயன் பட்டது. அடுத்தடுத்துக் கழகத் தோழர்கள் பேரில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் செலவுக்காக 'உதய சூரியன்' நாடகம் நடத்தி வசூலித்துக் கொடுத்து என் மனத திற்குத் திருப்தியைத் தேடிக்கொண்டேன் நான். 'உதய சூரியன்' நாடகத்தை அதிகமாக நடத்தத் தொடங்கியதை அடுத்து 1.3-58-ல் கழகத்தின் தேர்தல் சின்னமாக 'உதய சூரியன்' அதிகாரப்பூர்வமாக ஒதுக்கப்பட்டதாக டெல்லியிலிருந்து தகவல் கிடைத்தது.

'உதய சூரியன்' நாடகம் கொடுக்கும வெற்றியைக காட்டிலும் 'உதய சூரியன்' சின்னம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது எனக்குப் பெரும்மகிழ்ச்சியை அந்நேரத்தில் ஏற்படுத்தியது.ஏனென்றால்,

அந்தக் குறிப்பிட்ட சின்னமே கிடைக்க வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் விருப்பம்: எங்களுடைய விழைவு.

'உதய சூரியன்' நாடகத்தில் செய்யப்பட்ட கழகப் பிரச்சாரம் ஒருபுறமிருந்தாலும் அதன் பெயரே பிரச்சாரமாக அமைந்துவிட்டது. நான் முதலில் மாநாட்டில் 'உதய சூரியன்' நாடகம் நடத்தியது தேவகோட்டையில். அந்த மாநாடு நடைபெற்ற ஒரு வாரத்தில் 'உதய சூரியன்' கழகத் தேர்தல் சின்னமாயிற்று.

அதே போல் முதன் முதலாகக் கழகத்தின் அதிகாரப் பூர்வமான சின்னமாகிய 'உதய சூரியன்' சின்னத்தில் கழகம் போட்டியிட்டதும் தேவகோட்டைத் தொகுதி இடைத் தேர்தலில் தான். ஏப்ரல் 5-ல் நடைபெற்றது இந்தத் தேர்தல். அடுத்து பழனியில் மதுரை மாவட்ட தி. மு. க. மாநாடு (மார்ச் 8, 9), கருநாடக மாநாடு (ஏப்ரல் 26, 27) நடைபெற்று, அடுத்து மே 10, 11 நாட்களில் தஞ்சை மாவட்ட மாநாடு திருவாரூரில நடைபெற்றது.

திருவாரூர் மாநாட்டுக்கு நான் பொருளாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினேன். கழகத்தின் பொருளாதார வளத்தையே அதிக மாகச் சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு, அந்த மாநாட்டின் பொரு ளாளர் பொறுப்பு, 'பரிசோதனைத் தளமாக'ப் பயன்பட்டது. மாநாடு போன்ற பொது நிகழ்ச்சியை எவ்வளவு சிக்கனமாகவும், அதே நேரத்தில் சிறப்பாகவும் நடத்த முடியும் என்பதை திருபித்துக் காண் பித்தது அந்த மாநாட்டில்தான்.

எதை எதைச் சிக்கனப்படுத்த முடியும், சிக்கனப்படுத்த வேண்டும் என்பதில் அந்த மாநாட்டில் பெற்ற பயிற்சிதான், பின்னர் கழகப் பொருளாளராகப் பொறுப்பேற்று, அண்ணு அவர்களின் பாராட்டையும் கழகத் தோழர்களிடம் சில நேரங்களில் 'கடுமை யானவர்' என்ற பெயரையும் கழகத்திற்கு நிறைவான பொருளாதார பலத்தையும் சேர்க்கும் வகையில் பணியாற்றுவதற்கு உறுதுணையாக அமைந்தது.

திருவாரூர் மாநாட்டில் நான் பொருளாளராகப் பொறுப்பேற்று மிச்சப்பட்ட தொகை ரூபாய் இருபது ஆயிரம். அதுவரையில் கழக வரலாற்றிலேயே மாவட்ட மாநாட்டில் இவ்வளவு பெருந்தொகை மிச்சப்பட்டதில்லை.

1959-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்களில் தேர்தல் வந்தது. நகராட்சிகள், ஊராட்சிகளுக்கு நடைபெறும் தேர்தல்களில் கட்சிச் சார்பற்ற முறையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மற்றக்கட்சிகளுக்குக்— குறிப்பாகக காங்கிரஸ் கட்சிக்கு வேண்டுகோள் விடுக்கபபட்டது.

அதனை மற்றக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், கழகமும நகராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சிச் சார்பில் வேட்பாளர்களை நிறுத்துவது எனறு முடிவு செய்தது. மாவட்டந்தோறும் வேட்பாளர் களைத் தேர்ந்தெடுக்கத தேர்வுக் குழுக்கள் சென்றன.

திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் நகராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க என் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில தலைமைக் கழகப் பிரதிநிதியாகவும், வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவின் தலைவராகவும் நான் நியமிக்கப பட்டேன.

இதற்கிடையே அந்த ஆண்டு பிப்ரவரி 7, 9 நாட்களில் புதுக் கோட்டையில் கழகத்தின் பொதுக்குழு நடைபெற்றது. 6-ஆம் நாள் நடைபெற்ற தலைமைச் செயறகுழுக் கூட்டத்தில் தான் முதல முதலாகத் தோழர் சம்பத் தன் சுய உருவத்தைக் காண்பித்தார்.

தமிழ்நாடு தவிர்த்த மற்ற மாநிலங்களில் கழகம் பரவுவதறகுச் சரியான முயற்சி எடுக்கவில்லையென்றும், அந்த முயற்சி எடுக்காததறகு அண்ணு அவர்களும் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களுமே காரணம் என்றும் கற்பனையான குறறச்சாட்டுகளை வாரியிறைத்துச் சற்று வழி தவறிப் பேசத் தொடங்கினர்.

அதற்குப் பதிலளித்த அண்ணு அவர்கள் தமிழகத்திலிருந்து நாம் கொளகைகளையும் திட்டங்களையும் தரலாமேயல்லாமல், ஆந்திர,கேரள, கனனடிய மக்களுக்காகவே ஏறபடக் கூடிய அரசியல விழிப்பில் தான் அங்கு கழகம் வளருவது நியாயமானதாகவும், நிலையானதாகவும் இருககும் என்று குறிப்பிட்டார். அதறகு சம்பத் அவர்கள் மறுப் புரைத்துத் தன்னை தவிர வேறு யாரும் தொலை நோக்கோடு பிரச்னை களை அணுகுவதில்லை என்று அனைவரையும் குற்றஞ்சாட்டத தொடங்கினர்.

தமிழகத்தில் திடமாகவும், சீராகவும் நியாயத்தின் பேரிலும் வளருவதே மற்ற மாநிலங்களில் கழகக் கொள்கையை விரைவில் பரப்ப உதவும்; மற்ற மாநிலங்களில் அரசியல் பிரச்சினைகள் வேறு வேறுக இருக்கின்றன. ஆகவே அங்கு தற்போதைக்குக் கழகத்தின் சமுதாயக் கொள்கைகளையும் அரசியலில் காங்கிரசின் எதிர்ப்புக் கொள்கைகளையும் பிரச்சாரம் செய்து வருவதோடு கொஞ்ச நாட்களுக்கு இவ்வாறு செயல்படுவதில் தவறு ஏதுமில்லை. அடுத்து வரும் 1962 பொதுத் தேர்தலுக்குப் பிறகு அரசியல் நிலைமைகள் மாறுவதையொட்டியும், தமிழகத்தில் நமது கழகம வலுப்பெறுவதை யொட்டியும், மற்ற மாநிலங்கள் நமது கழகத்தின் கொள்கைகளை வலிய

வந்து அணைத்துக் கொள்கிற காலம் உதயமாகும் என்ற கருத்தினை நானும் நாவலர் அவர்களும் அந்தச் செயற்குழுவில் தெரிவித்தோம்.

சொல்லப் போனால் புதுக்கோட்டைப் பொதுக் குழுக் கூட்டத்திலி ருந்தே சம்பத் அவர்களும் அவரைச் சார்ந்து நின்ற இரண்டொருவரும் தங்களுக்கு அண்ணா மீதான வெறுப்பை மெல்ல மெல்லக் காண்பிக்கத் தொடங்கினர். ஓர் அரசியல் தலைவருக்கு அந்தக் கட்சியினுடைய தொண்டர்கள் மட்டத்திலும், அந்தக் கட்சி வளர்கின்ற நாட்டு மக்களின் உள்ளத்திலும் வலுவான இடம் உருவாகிற நேரத்தில் அந்தத் தலைவரைப் பற்றி வெளிப்படையாகப் பேசி மற்றவர்கள் வெறுப்பைத் தேடிக் கொள்ளப் பயப்படுகிறவர்கள் அந்த அரசியல் தலைவருக்கு எதிரான திண்ணைப்பேச்சிலும், சிறு சிறு குழுக்களைக் கூட்டி வைத்தும் தலைவரைப் பற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்வது அரசியல் வரலாறு கண்ட உண்மை!

அந்த உண்மைக்கு உரம் ஊட்டுவது போல் சம்பத்தும் அவரைச் சார்ந்தவர்களும் நடந்து கொண்ட விதம் அமைந்தது. அண்ணா அவர் களிடமிருந்து என்னை எப்படியாவது பிரித்துவிட வேண்டுமென்று சம்பத்தும், அவரது தோழர்களும் பெரிதும் முயன்றார்கள். கழகத்தின் அடுத்த பொதுச் செயலாளராக நானே வரவேண்டும் என்று சம்பத் அவர்கள் என்னை வலியுறுத்திக் கூறிக் கொண்டே இருந்தார். சூட்சு மத்தை உணர்ந்து கொண்ட நான் மிக விழிப்போடு இருந்தேன். அண்ணா அவர்களின் தலைமைக்கு எதிராக ஒரு சதி நடப்பதை என்னால் உணர முடிந்தது.

தமிழ் நாட்டில் பல பகுதிகளில் நண்பர் சம்பத்தும், அவரைச் சார்ந்த சிலரும் கூட்டங்களுக்குச் செல்லும்போது, கூட்டம் முடிவுற்ற தும் அந்த ஊர் செயலாளர்கள், கழக நண்பர்கள் ஆகியோரிடம் தனிமையிலே உரையாடுகிற நேரத்தில் எல்லாம் அண்ணாவைப் பற்றிப் பழிகூறத் தொடங்கினார்கள். என்னதான் அவர்கள் திரை

மறைவுக் கூட்டங்களை நடத்தியபோதிலும் அந்த ரகசியக் கூட்டங்கள் நடைபெற்ற இரண்டொரு நாட்களுக்கெல்லாம் செய்தி எனக்கு வந்து விடும். நான் அதனை அண்ணாவின் காதில போடாமல் மறைத்து வைத்திருப்பேன் என்றாலும், எனக்கு முன்பே அந்தச் செய்திகளை அண்ணா அவர்களும அறிந்து வைத்துக் கொண்டிருந்தார் என்பதைப் பிறகு நான் புரிந்து கொள்ள முடிந்தது.

தம்மைப் பற்றித் தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த தோழர்களை நேரில் காணும்பொழுது அண்ணா அவர்கள் புன்னகை தவழப் பேசுவார். தனக்கெதிராக அரசியலில் சதி வேலை பண்ணிக் கொண்டிருந்த சம்பத்திடம் ஏராளமான அன்பைப் பொழிவதைக் கண்டு எங்களுக்கெல்லாம் எரிச்சல் கூட வரும். தமக்குப் பொல்லாங்கு நினைப்பவர்களிடம் பொறுமை காட்டுவதும், புன்னகை புரிவதும் அண்ணாவின் அரசியல் நாகரிகம். தனிப் பண்பு. அந்தப் பண்பைப் பெற்றவர்களை எப்படிப் பட்ட அரசியல் பகாசூரர்களாலும் எந்தக் காலத்திலும் வென்று விட முடியாது!

72

அண்ணு அணிவித்த கணையாழி

கழகத்தில் சம்பத்தின் செயல்கள் மூலம் புகைச்சல் உருவாகிக் கொண்டிருந்த அந்த வேளையில்தான், சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் வந்தது. சென்னையில் உள்ள நூறு இடங்களுக்கும் 402 பேர் போட்டியிட்டார்கள்.

கழகம் அதுவரையில் மாநகராட்சி மன்றத்தில் கழகச் சார்பில் யாரையும் உறுப்பினராகப் பெற்றிருக்கவில்லை.

தோழர்கள் வி. முனுசாமி, அ. பொ. அரசு ஆகிய இருவரும் கழக நண்பர்களாயினும் சுயேச்சை உறுப்பினர்களாகத் தான் மாநகராட்சியில் வீற்றிருந்தனர்.

1959-ல் கழகம் முதன் முதலாகச் சென்னை மாநகராட்சி மன்றத் தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்துவது என்று தீர்மானித்தது. நூறு இடங்களுக்கும் கழகச் சார்பில் 90 வேட்பாளர் களை நிறுத்துவது என்று தேர்வுக் குழுவின் தலைவன் என்ற முறையில் நான் தீர்மானித்தேன். கம்யூனிஸ்ட் கட்சி 17 வேட்பாளர்களை நிறுத்திற்று. ஜனசங்கம் 15 பேர்களை நிறுத்திற்று. சோஷலிஸ்ட் கட்சி 18 பேர்களை நிறுத்திற்று. பி. சோ. கட்சி 5 பேர்களை நிறுத்திற்று. காங்கிரஸ் கட்சியோ நூறு இடங்களிலும் போட்டியிட்டது.

அண்ணு அவர்கள் நான் தந்த வேட்பாளர்களின் பட்டியலை வாங்கிப் படித்துப் பார்த்தார். 90 பேர் நிற்பது நல்லதல்ல; ஆரம்பத்திலேயே அகலக் கால் வைக்க வேண்டாம் என்று மறுத்துரைத்தார். நாமும் மற்ற கட்சிகளைப் போல் 20 அல்லது 30 இடங்களுக்குப் போட்டியிட்டால் போதும் என்பது அண்ணுவின் முடிவாகும். ஆனால் நான் மிகப் பிடிவாதமாக 90 வேட்பாளர்களைக் கழகச் சார்பில் நிறுத்த வேண்டும் என்று அண்ணுவிடம் வலியுறுத்திக் கூறினேன்.

என்னுடைய ஆர்வத்தை அண்ணு பாராட்டினார் என்றாலும் நான் கணக்குத் தெரியாமல் அதிக ஆர்வம் காட்டுகிறேன் என்ற கோபத்தில் நான் கொடுத்த பட்டியலை வீசியெறிந்து விட்டு, ''எப்படியாவது யாரையாவது நிறுத்திக் கொள்'' என்று கூறினார். உள்ளபடியே அவர் பொறுமை இழந்து அந்தப் பட்டியலை வீசியெறியவில்லை. அந்தக் கோப நடிப்பைப் பார்த்தாவது, நான் வேட்பாளர்களுடைய எண்ணிக்

கையைக் குறைத்துக் கொள்ள இணங்க மாட்டேனு என்பது தான் அவருடைய நோக்கமாகும்.

ஆனால் அண்ணுவை எப்படியும் சமாதானம் செய்து கொள்ளலாம் என்ற உறுதியில்தான் நான் அண்ணுவின் கோபத்தைப் பாராட்டாமல் 90 வேட்பாளர்களுடைய பெயரையும் வெளியிடுவதற்கு இரவெல்லாம் அவரோடு வாதாடி அனுமதியும் பெற்றுவிட்டேன்.

''90 பேர்களில் எத்தனை பேர்கள் வருவார்கள் என்று எண்ணுகிறாய்?'' - இது அண்ணுவின் கேள்வி.

''நிச்சயம் 40 பேருக்கு மேல் வெற்றியடைவார்கள்'' என்பது என்னுடைய பதில்.

''அப்படி 40 பேர்கள் வெற்றியடைந்தால் நான் உனக்கு என் சொந்தச் செலவில் ஒரு கணையாழி அணிவிக்கிறேன்'' என்று அண்ணு என்னிடம் ஒரு பந்தயமே கட்டினார். இறுதியாகத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கழகச் சார்பில் 45 பேர் வெற்றி பெற்றார்கள்.

இந்த வெற்றிச் செய்தி வெளிவரும்பொழுது அண்ணு அவர்களும் நானும் திருவாரூரில் இருந்தோம். திருவாரூருக்கு அருகில் ஒரு பொதுக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் பேசிவிட்டுத் திருவாரூர் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டிருந்த என்னைக் காணத், திருவாரூருக்கு வந்தார்கள். அப்பொழுது தான் சென்னை மாநகராட்சி மன்றத்தில் நமது தோழர்கள் அடுக்கடுக்காக வெற்றி பெறுகின்ற செய்திகளை நான் அவருக்கு அறிவித்தேன்.

ஆனால் அப்படி அந்த நேரம் வரையில் கழகச் சார்பில் 30 பேர் தான் வெற்றி பெற்றிருந்தார்கள். மறுநாள் அண்ணுவும், நானும் சென்னை வந்தடைந்தோம். 45 பேர் வெற்றி பெற்றார்கள் என்ற செய்தியைக் கேட்டதும் அண்ணு அவர்கள் என்னைப்பார்த்து, ''45 பேர் வெற்றி பெற்றார்கள்; ஆனால் நான் உன்னிடம் தோற்றுவிட்டேனே?'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்கள்.

காங்கிரஸ் சார்பில் 37 பேரும், கம்யூனிஸ்ட்கள் இருவரும், சுயேச்சைகள் 13 பேரும் மற்ற கட்சிகள் ஒன்றிரண்டும் என்ற அளவில் இடங்களைப் பெற்றார்கள். மாநகராட்சியில் தனிப்பெரும் கட்சியாகக் கழகம் வெற்றி பெற்றாலும் கூடப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது சந்தேகம் தான் என்று பொருள்பட அண்ணு அவர்கள் திருவாரூர்க் கூட்டத்தில் பேசியது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது.

அப்போது 'மெயில்' ஆங்கில நாளேட்டில் மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைப் பற்றி ஒரு தலையங்கம் தீட்டப்பட்டு, ''வெற்றி

பெற்ற பிறகு அண்ணாதுரை பொறுப்பை ஒப்புக்கொள்ளப் பின் வாங்கி நழுவப் பார்க்கிறார்; அது நல்லதல்ல'' என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அதற்குப் பதில் சொல்லும் வகையில் அண்ணா அவர்கள் 15-4-59 அன்று கடற்கரையில் நடைபெற்ற மாநகராட்சி மன்ற வெற்றி விழாக் கூட்டத்தில், ''சென்னை மாநகராட்சி நிர்வாகப் பொறுப்பைத் தி. மு. கழகம் ஏற்கத்தான் வேண்டுமா? வேண்டுமென்று விரும்புகிறவர்கள் மட்டும் 'ஆம்' என்று கூறிக் கைகளை உயர்த்துங்கள்'' என்று தேங்கி நின்ற லட்சக்கணக்கான மக்களைப் பார்த்துக் கேட்டார்.

''ஆம்'' என்ற குரல் விண்ணை முட்டிற்று. கூடியிருந்த ஐந்து லட்சம் மக்கள் தங்கள் கரங்களை உயர்த்திக் காட்டினார்கள். அது கண்டு அண்ணா அவர்கள், ''கழகம் மாநகராட்சி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயார். நீங்கள் தீர்ப்பு அளித்து விட்டீர்கள். உங்கள் தீர்ப்புக்கு அடிபணிய வேண்டிய பொறுப்பு காங்கிரஸ்காரர் களுடையது'' என்று பேசினார்.

காங்கிரஸ்காரர்கள் அவ்வளவு சுலபமாகக் கழகத்திடம் பொறுப்பை ஒப்படைக்கத் துணியமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே, தனிப் பெரும் கட்சியாகக் கழகத்தை மாநகராட்சியில் வெற்றி பெறச் செய்யப் பிடிவாதமாகப் பேசி அதற்கெனப் பணியாற்றிய என்னிடம் மேயர் பதவி வெற்றிக்கான பொறுப்பையும் அண்ணா அவர்கள் ஒப்படைத்தார்கள். அப்படி ஒப்படைத்த அந்தக் கூட்டத்தில் தான் அண்ணா அவர்கள் என்னிடம் கட்டிய பந்தயத்தின் அடிப் படையில் எனக்குக் கணையாழி அணிவித்தார். அப்போது அவர் பேசினார்:

''நம்முடைய கருணாநிதி இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்த காரணத்தினால் தான் பல இடங்களில் வெற்றி பெறும் என்று என்னிடம் சொன்னார். முடியாது என்றேன் நான். அவசரப்பட்டுத் தான் சொல்லிவிட்டேன். இப்போது வருத்தப்படுகிறேன். 'அப்படி வெற்றி பெற்றால் என்ன தருவீர்கள்?' என்று கருணாநிதி கேட்டார். நான் எதுவும் தரவேண்டிய அவசியம் இருக்காது என்ற எண்ணத்தில் 'ஒரு பவுனில் தங்க மோதிரம் போடுகிறேன்' என்று சொன்னேன். நான் என் மனைவிக்குக்கூட ஒரு நகை வாங்குவதற்காகக் கடைக்குப் போனது கிடையாது. ஆனால், இன்று இந்த 45 பொல்லாத தோழர்கள் பெற்ற வெற்றியினால் இந்தக் கட்டிளங்காளைக்கு நானே கடைக்குச் சென்று கணையாழி வாங்கி அளிக்க வேண்டியவனாகிவிட்டேன். இந்தத் தேர்தலில் மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றி, அதிகமான கூட்டங்களில் கலந்து கொண்டு நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்களோடு

உடன் இருந்து திறம்படப் பணியாற்றிய கருணாநிதி என் பாரரட்டுதலுக்கும் என்னுடைய பெருமதிப்பிற்கும் இலக்காகக் கூடியவர் ஆகையினால் நீங்களெல்லாம் மகிழத்தக்க அளவிலேயும் நான் கொஞ்சம்வருத்தப்படத்தக்க அளவிலேயும்இந்தமோதிரத்தை அவருக்கு அளிக்கிறேன். இந்த மோதிரம் அவரது உழைப்புக்குப் பலன் என்று அர்த்தமல்ல; மோதிரத்திற்கும் மேலான என்னுடைய உள்ளன்பை அவர் பெற்றிருக்கிறார் என்பதே அதற்குப் பொருள்.

''நண்பர்களே நான், கணையாழி கொடுத்ததைப் பார்த்தீர்கள். அது தங்கமோ அல்லவோ என்று சந்தேகம் உங்களில் சில பேருக்கு இருக்கலாம். உறுதியாகச் சொல்கிறேன். அது தங்கமே தான். நல்ல தங்கக் குணம் படைத்த கருணாநிதியிடம் அது செல்கிறது. அது அவருக்கு மேலும் மேலும் கீர்த்தியையும் அவர் பெறும் கீர்த்தியின் மூலம் நம்முடைய கழகத்திற்கு நல்ல பெருமையையும் நிச்சயம் தேடித் தரும்.''

கடற்கரையில் எனக்குக் கணையாழி அணிவித்த என் தலைவர் அந்தக் கடற்கரையில் ஓர் ஓரத்தில் இப்போது உறங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் எண்ணுந்தோறும் அவர் அளித்த கணையாழியைப் பார்த்துக் கண் கலங்குகிறேன்.

அந்தக் கணையாழி சேலத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்குழுக் கூட்டத்தின் போது காணாமல் போய்விட்டது. அதைத் தேடி எடுக்க நான் பட்டபாடு கொஞ்சமல்ல. என் உயிரையே யாரோ பறித்துக் கொண்டு விட்டது போல் உணர்ந்து கலங்கினேன்.

நான் தங்கியிருந்த ஓட்டல், அந்த ஓட்டலின் சாக்கடை, சந்து பொந்துகளில் எல்லாம் ஆட்களை விட்டுத் துழாவியும் அது கிடைக்கவில்லை. நீண்ட நேரம் கழித்து நான் பொதுக்குழுக் கூட்டத்தில் அமர்ந்திருந்த நாற்காலியிலேயே அந்தக் கணையாழி விழுந்திருந்ததாக, அதையெடுத்து வந்த திருச்சி காமாட்சி அவர்கள் என்னிடத்தில் கொடுத்த பிறகுதான் எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது.



கடற்கரையில் கணேயாழி பெற்ற களிப்போடு மேயர் தேர்தலில் ஈடுபட்டேன்.

கோவை நகராட்சியின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கழகம் ஆதரவு அளிப்பதென்றும், சென்னை மாநகராட்சியில் கழகத்திற்குக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு அளிப்பதென்றும் ஒப்பந்தம் ஆயிற்று. ஏனைய சுயேச்சை உறுப்பினர்களோடும் நானும் பொதுச் செயலாளர் நாவலரும் நண்பர் என். வி. என். அவர்களும், கலந்து பேசி அவர்களுடைய ஆதரவையும் பெற்று, 30-4-59-ல் கழகத்தின் முதல் மேயராக அ. பொ. அரசு அவர்களை அமர வைத்தோம். துணை மேயராகத் தோழர் சிவசங்கரன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வகுப்புவாரி அடிப்படையில் மேயர் தேர்தலில் மாத்திரம் அரிஜனங்களுக்கு ஒருமுறை பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்றாலும் கழகத்தின் சீரிய சமுதாயக் கொள்கையின் காரணமாகத் துணை மேயர் பதவிக்கு அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த அருமை நண்பர் சிவசங்கரன் அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கழகம் தன் தூய்மையைக் காட்டி கொண்டதைப் பலரும் பாராட்டினர்.

எளிய குடும்பத்தில் பிறந்தவர் ஒருவர் சென்னை மாநகரின் மேயராக வந்தது இதுவே முதல் தடவையாகும். இந்த மாநகராட்சி மன்றத் தேர்தலையொட்டி அண்ணை எனக்கு அளித்த கணேயாழி கழகத் தோழர்களுடைய உள்ளத்தில் எல்லாம் மகிழ்ச்சியைப் பொங்க வைத்த தென்றாலும், அணுக்கமாக இருந்த சிலருடைய உள்ளத்தில் பெரிய காயத்தை ஏற்படுத்தியது. நண்பர் சம்பத்தும், அவரைச் சார்ந்தவர்களும் என் மீது பொறுமையும் அண்ணன் மீது வெறுப்பும் காட்டிக் கொள்ளக் கணேயாழிப் பரிசும் ஒரு காரணமாயிற்று.

73

பகைமைத் தீயும் பண்புப் புனலும்

கனன்று கொண்டிருந்த கழகப் பிளவாளர்கள் உள்ளத்தில் அண்ணு எனக்குக் கணையாழி அளித்த நிகழ்ச்சி என்னைப் பற்றிய கண்டனக் கணைகளைக் கழகத் தோழர்கள் மத்தியில் எழுப்புவதற்கு எரிச்சல் களங்களை உருவாக்கிற்று. அது எதுவரையில் போய் நின்றது, என்னைப் பற்றி எந்த அளவிற்குத் தவருன பிரச்சாரங்கள் செய்தனர் என்பதையெல்லாம் இன்றைக்கு நினைத்தால்கூட என் நெஞ்சம் 'பகீர்' என்கின்றது.

விபத்தின் காரணமாக என் இடது கண்ணில் அடிபட்டு நீண்ட நாள் சிகிச்சைக்குப் பிறகு நலமுற்றிருந்தேன் என்ருலும் என்னுடைய சுற்றுப் பயணங்களின்போது சிறிய கார்களைப் பயன்படுத்துவது நல்ல தல்ல என்றும், பெரிய கார்களில் செல்வதால் பிரயாணத்தின்போது ஏற்படுகின்ற அதிர்ச்சியிலிருந்தும் விடுபடலாம் என்றும், ஆகவே கண்ணின் நலம் வேண்டி சற்றுப் பெரிய காரைப் பயன்படுத்துமாறும் டாக்டர்கள் எனக்கு எச்சரிக்கை செய்து வலியுறுத்தியிருந்தார்கள்.

அதன் காரணமாக 1960-ல் நான் ஒரு பெரிய கார் வாங்க நேரிட்டது. கலையுலகத்தில் திரைப் படத்திற்கான உரையாடல் எழுதித் தருவதன் மூலம் கிடைத்த வருமானத்தில் தான் அந்தக் காரை வாங்கினேன். கழகத்திலேயே இருந்த என்னுடைய எதிர்ப்பாளர்கள் அந்தக் காரில் நான் பிரயாணம் செய்வது பற்றித் தங்களுடைய மனிதாபிமானமற்ற விமரிசனங்களைக் கழகத்தின் தோழர்களிடத்தில் ஆங்காங்கு செய்யத் தொடங்கினர்கள்.

அதில் என்னிடம் மிக நெருங்கிப் பழகி வந்த நண்பர் சம்பத் அவர்களே முதலிடம் வகித்துப் பிரச்சாரம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனல் அவரும் அவரைப் போன்றவர்களும் என் காரைக் காட்டி நான் எளிமையாக வாழத் தெரியாதவன் என்று செய்த தவருன பிரச்சாரத்தைக் கழகத் தொண்டர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்ருல் இல்லை.

அவர்களுடைய பிரச்சாரம் எந்த அளவுக்கு மக்களையோ சகோதரத் தொண்டர்களையோ மாற்றியமைக்கக் கூடிய சக்தி பெற்றிருக்கிறது

என்பதையும் நான் உணராமல் இல்லை. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், தமிழ்நாட்டில் ஒரு காலக் கட்டத்தில் அரசியலில் எவ்வளவு கீழ்த்தரமான, மனிதாபிமானமற்ற காழ்ப்பு உணர்ச்சிகள் தலைநீட்டின என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான். (இப்போது மட்டும் என்ன என்று நீங்கள் கேட்பீர்கள்!)

அதே நேரத்தில் குடும்பப் பாசத்தோடு தி.மு. கழகம் வளர்க்கப் படுகிறது என்பதற்கும், இதற்குள் குள்ள மனம் படைத்தவர்கள் யார் இருந்தாலும் அவர்களை நல்ல மனம் படைத்தவர்கள் வென்றுவிடு கிறார்கள் என்பதற்கும் உணர்ச்சிப் பூர்வமான உதாரணங்கள் நிறைய உண்டு.

1970-ஆம் ஆண்டு மீண்டும் என் இடது கண்ணில் தொல்லை ஏற் பட்டு மருத்துவ மனைக்குச் சென்றிருந்த நேரத்தில் அதனை மன மகிழ்ச்சியோடு விமரிசித்துக் காட்டிய 'நல்ல' உள்ளங்களும் உண்டு. அதே நேரத்தில் அன்பினைக் காட்டி நான் நலம் பெற வேண்டுமென்று வாழ்த்திய உள்ளங்களும் ஏராளமாக உண்டு.

நான் மருத்துவ மனையில் இருந்தபோது எனக்கு வந்த கடிதக் குவியல்களில் ஒன்றிரண்டை வெளியிடுவதன் மூலம் நமது கழகக் குடும்பத்தில் பெருக்கெடுத்தோடும் அண்ணன்-தம்பி என்கிற பாச உணர்ச்சியை அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும் என்று நம்பு கிறேன்.

முகவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் படிப்பகம் ஒன்றின் செயலாளர் தோழர் துரைசாமி கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"நமது நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்ற மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்காக வைத்திய அறிக்கைகளைப் பார்த்து, கேட்டு, உள்ளம் ஒடிந்து இறுதியில் இழக்கக் கூடாத ஒன்றை இழந்து ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தங்களையும் மருத்துவ மனையில் வைத்துக் கொண்டு வைத்திய அறிக்கை களை அடிக்கடி கேட்கக் கூடிய நிலையினை ஏற்படுத்த வேண்டாம் எனத் தங்களை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தங்களுக்கும் ஏதாவது ஒன்று என்றால் தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியத் துணைக் கண்டமும், கடல் கடந்த நாடுகளும் கலங்கிடும். ஆகவே அண்ணா! தாங்கள் பூரண ஓய்வு பெற வேண்டுகிறேன். சிற்சில நிகழ்ச்சிகளில் தவிர்க்க முடியாமல் கலந்து கொள்வதைத் தவிர, மூன்று மாதங்களாவது வெளியூர்ப் பயணங்களை ஒத்தி வைக்க வேண்டு கிறேன். தங்கள் அருமைத் தம்பியாகிய நான் கூறும் இவற்றை அறி வுரைகளாகக் கருதாமல் கனிவான வேண்டுகோளாகக் கருதி

ஓய்வெடுக்க வேண்டுகிறேனி. பத்திரிகைகளில் தாங்கள் பல நிகழ்ச்சி களில் கலந்து கொள்வதைப் பார்க்கும்போது கண்ணீர் வடிக்கிறேன்,"

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த வட்டச் செயற்குழு உறுப்பினரும், கழகப் பேச்சாளருமான வெற்றி கொண்டான் என்னும் நண்பர் எழுதியுள்ள மடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"எங்கிருந்தாலும் இறைவன் என்னை இரட்சிப்பான் என்ற இலட்சியத்தோடு தொழுது நிற்கும் பக்தனைப் போல உள்ள நான் இக் குறிப்பை அனுப்பியுள்ளேன். சட்டப் பேரவையில் எதிர் முகாமில் இருப்போர் தங்களைப் பார்த்துக் 'குளிர் சாதனம் பொருந்திய கார் உமக்கு ஏன்?' என்று கேள்வி எழுப்புவதைக் கண்டு நான் அதிர்ச்சி யடைந்து விட்டேன். தந்தையாக அண்ணனும், தாயாக நீங்களும் எங்களுக்குக் கிடைத்தீர்கள். உங்கள் இருவரையும் உணர்ச்சி பொங்க வாழ்க, வாழ்க என முழங்கி தூரமாக நின்று கண்டு கண்டு மகிழ்ந்து கிடந்தோம். காலனுக்குப் பொறுக்கவில்லை. தந்தையை இழந்தோம், தாயின் கதகதப்பில் இன்று வாழ்கிறோம். அந்தத் தாயையும் இழந்து விட்டு அனுதைகளாய்ச் சித்தம் கலங்கிப் பித்துப் பிடித்து அலையத்தான் பிறந்தோமா? தாயின் ஆரோக்கியத்தில் ஒரு துளி பாதித்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை இனி எங்கே பெறுவோம்? தாயின் அருமை பிள்ளைக்குத் தெரியும்! இதயம் உள்ளோருக்குத் தெரியும்; பிறருக்கு என்ன தெரியும்! அவர்களும் கேள்வி கேட்கும் உரிமைக்கு உரிய அந்தக் கார் இருப்பதால் தானே கேட்கிறார்கள்? அவர்களுக்குக் கேள்வி கேட்கும் உரிமை வழங்கும் அந்தக் கார் வேண்டாம். எங்களின் தெய்வத்திற்கு நாங்கள் கோயில் கட்டிக் கொள்கிறோம். எங்களின் நெற்றி வியர்வையால் பெற்ற சொத்துக்களை விற்றாவது தருகிறோம். உங்களுக்கு உதவாத ஒன்று, ஒரு சொத்து எங்களுக்கு ஏன்? மண்டியிட்டு வேண்டுவதெல்லாம் மறுத்து விடாதீர்கள் என்பதே யாகும். எங்களின் கண்ணீரைத் துடைத்திடும் பொற்கரங்களைப் பெற்று நிற்கும் தங்களின் தம்பிமார் களின் இந்த வேண்டுகோளை இதயம் கனிந்து ஏற்றுக்கொள்ளுங்கள்."

அடுத்து கழிஞ்சூரைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர் மு. கோதண்டன் அவர்கள் தீட்டியுள்ள மடலில், "உங்களுக்குக் கண் வலி என்றால் எனக்கு நெஞ்சு வலி ஏற்படுகிறது. எனக்கு மட்டுமா? உங்கள் மீது உயிரையே வைத்திருக்கும் எண்ணற்ற கழகத் தோழர்களுக்கும் இதே நிலைதான். இனி நீங்களாகவே சில கட்டுத் திட்டங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஆறு மாதத்திற்கு ஒரு கூட்டத்தில் நீங்கள் பேசினால் போதும். எந்த நிகழ்ச்சியில் கலந்து

கொண்டாலும் 10 அல்லது 15 நிமிடத்திற்கு மேல் கண்டிப்பாகப் பேசாதீர்கள். நாட்டிற்கும் கழகத் தோழர்களுக்கும் முக்கிய விளக்கம் தேவைப்படும் போது அறிக்கை; செய்தியாளர் பேட்டி-என்ற முறையில் அவற்றைத் தாங்கள் அளித்தால் போதுமானது. ஏடுகளில் இரண்டு, மூன்று பக்கங்கள் நீங்கள் எழுதுவதைக்கூடக் குறைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உடல் நலத்துடன் இருந்தால் நாடே நலத் துடன் இருப்பதாகப் பொருள். ஈரோடு நகரத்தில் நிலவிய பெரிய கருத்து வேற்றுமை ய உங்களால் தீர்த்து வைக்க முடிந்தது என்றால், மற்ற மாவட்டங்களில் உள்ள சிறிய கருத்து வேற்றுமைகளையும் நீங்கள் நான்கு வார்த்தைகள் கூறினால் தீர்த்து வைத்து விடலாம். தாங்கள் உடல் நலத்துடன் இருந்தால் கழகம் மேலும் வளர வழி பிறக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை பழைய வண்ணைப் பகுதியைச் சேர்ந்த ஆர். திரவியம் என்கிற ஒரு நண்பர் எந்த அளவுக்குத் தன்னுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதற்கு அவரது கடிதம் சான்று:

"கழகக் காவலரே, அண்ணாவுக்குப் பின் எங்களுக்கெல்லாம் தெம்பு தந்து கழக வளர்ச்சியில் அண்ணா இருந்தால் எப்படிச் செய்வார். என்னென்ன செய்வார் என்பதைச் செயலில் செய்து காட்டி அவர் இல்லாத குறையை நீங்கள் தீர்த்து வைக்கிறீர்கள். அதனால் உங்களை இழக்க யாரும் துணிய மாட்டோம். ஆதலால், நான் எனது இடது கண்ணைத் தங்களுக்குத் தர எந்த நிமிடமும் தயாராக இருக்கிறேன், எந்த நிபந்தனையும் இல்லாமல்! நான் 25 வயது நிரம்பிய கழகக் காளை: என்னை யாரும் எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள். நான் தனிச் சுதந்திரமான இளைஞன். தாங்கள் லண்டனில் உள்ள டாக்டரிடம் கேட்டாவது என் கண்ணைப் பெற்று தங்கள் இடது கண்நோயிலிருந்து விடுபட்டு நாட்டிற்கு நல்லது செய்ய விரும்பு கிறேன். இதை எந்தக் காரணத்தைக் கொண்டும் விளம்பரப்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்த நேரத்தில் வேண்டு மானாலும் உதவக் காத்திருக்கிறேன்"

இந்தக் கடிதத்தை நான் வெளியிட்டது அவரது அன்பைக் காட்டிக் கொள்வதற்காக, விளம்பரப்படுத்துவதற்காகவல்ல. எழுதியவர் என்னை மன்னிப்பார் எனறு கருதுகிறேன்.

இதே கருத்தினை அரக்கோணத்தைச் சேர்ந்த கே. எஸ். சிவா என்ற நண்பர் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிட்டு, தன்னுடைய கண்ணைப் பெற்றுத் தனக்குப் பெருமை அளிக்க வேண்டும் என்று வெகு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார்.

சைதாப்பேட்டையைச் சேர்ந்த ஈ. ராசகோபால் என்ற நண்பரும் "என் கண்ணில் எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்று எழுதியுள்ளார்.

அப்பர் கோதையாற்றில் உள்ள சி. எஸ். மணியன் என்கிற தொழிலாள நண்பர் ஒருவர் எழுதிய கடிதத்தில் "என் அண்ணனுகிய தங்களைக் காலன் கைப்பற்றிக் கொள்ளக்கூடாதே என்கிற பயத்தில் என் உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுவும் வாழ்க பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறது. பிஞ்சு இதயங்களின் எதிர்காலம் உங்கள் கையில்!" என்பது போன்ற உணர்ச்சிகளைக் கொட்டியுள்ளார்.

இந்தக் கடிதங்கள் எல்லாம் எதை உணர்த்துகின்றன? இந்தக் கடிதங்கள் ஒவ்வொன்றையும் நான் படித்த நேரத்தில் என் உள்ளம் எவ்வளவு நெகிழ்ந்து இருக்கும்! என் கண்கள் எப்படிக் குளமாகி இருக்கும்! என்னைப் பெற்ற தாய் உயிரோடு இருந்தால் என்ன சொல்வார்களோ அதை அல்லவா எங்கோ தொலைவில் இருந்து என்னை நம்பிக் கொண்டிருக்கிற தோழர்கள் சொல்கிறார்கள்?

ஆருயிர் மனைவி, "அத்தான், என் கண்ணையெடுத்து உங்கள் கண்ணில் வைத்தால் குணமாகி விடாதா?" என்று அன்புப் பெருக்கால் கண் கலங்கக் கேட்பது போல் அல்லவா அந்தக் கழகக் கண்மணிகள் தங்கள் கண்மணியைத் தர மனநிறைவோடு கடிதம் எழுதுகிறார்கள்.

அந்தப் பாச உணர்ச்சியின் பாசறைதான் தி. மு. கழகம். அந்த உணர்ச்சிகளை இந்தக் கழகக் குடும்பத்திற்கு வழங்கியவர் தான் மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா. அவர் மீதும், என் மீதும் கழகத்தினர் காட்டிய அன்பினையும், ஆர்வத்தினையும் குலைப்பதற்காகத் தான் சம்பத் குழுவினர் திட்டமிட்டுத் தீவிரமாகப் பணியாற்றினர்.

அவர்களுடைய விபரீதப் பிரச்சாரங்கள் மேலோங்கி நின்ற நேரத்தில் மாயவரத்தில் நடைபெற்ற பொதுக் குழுவில் வைக்க சம்பத் ஒரு புதிய தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அதன்படி எம். எல். ஏ. க்கள், எம். பி. க்கள் கழகத்தின் பொறுப்பான பதவிகளில் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது என்று வலியுறுத்தப் பட்டது.

அந்தத் தீர்மானத்தை ஏன் கொண்டு வந்தார் என்பதை அண்ணா அவர்களும் நானும் பொதுக்குழு உறுப்பினர்களும் தெளிவாகப் புரிந்து கொண்டோம். நான் எம். எல். ஏ. யாக இருக்கிறேன்; நான் பொதுச் செயலாளராக வருவதற்கான சூழ்நிலைகள் உருவாகின்றன; நான் பொதுச் செயலாளராக வருவதைத் தடுக்க வேண்டும்; ஏனெனில் நான் அண்ணாவிற்கு எதிராக நண்பர் சம்பத்துடன் ஒத்துப் போக மறுத்து விட்டேன். ஆகவே நான் பொதுச் செயலாளராக வருவதற்கு முட்டுக்

கூட்டையாக அந்தத் தீர்மானத்தை அவர் கொண்டு வந்தார். அதற்கு மிகக் கஷ்டப்பட்டு ஆதரவு திரட்டத் தொடங்கினர்.

அதனைத் தோற்கடித்துவிடக் கூடிய வலிவு பொதுக்குழுவில் இருந்தது; என்ருலும் அண்ணு அவர்கள் என்னேயழைத்து, "அந்தத் தீர்மானத்தை நீயே ஆதரித்துப் பேசிவிடு" என்று ஆணேயிட்டார்கள். நானும் அண்ணு அவர்களின் சொற்படி தோழர் சம்பத்தின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி, அதனேப் பொதுக் குழுவில் ஏகமனதாக நிறைவேற்றும் நிலேயை உருவாக்கினேன்.

மாயவரம் பொதுக் குழுவிற்குச் சில நாட்களுக்கு முன்புதான் 'முரசொலி' பொங்கல் மலரில் அண்ணு அவர்கள் எழுதிய கட்டுரையில் நானும் அண்ணுவும் காட்டூர் என்ற கிராமத்தில் எடுத்துக் கொண்ட ஒரு புகைப்படத்தை அண்ணு அவர்கள் சுட்டிக் காட்டி, "தம்பியின் புன்னகைக்குப் பொருள் புரிகிறதா? மிகப் பெரும் பொறுப்புகளேத் தம்பியின் தோளில் சுமத்துவதாக இருக்கிறேன்" என்ற கருத்துப்பட நீண்ட கட்டுரையை எழுதியிருந்தார்.

அந்தக் கட்டுரையின் தலேப்பு "நகை விடு கண" என்பதாகும். அண்ணுவின் அழகு தமிழ் ஓவியம் வருமாறு: (1959 'முரசொலி' பொங்கல் மலரில் வெளி வந்தது.)

"ஆரூருக்கு அணித்தே உள்ள சிற்றூர்-சீரூர் என்று பெயரிட்டிருக்கலாம். ஆனல் யாது காரணமோ அறியேன். பெரியோர் அதனேக் காட்டூர் என்றே வைத்தனர். அங்கு நண்பர் ராமய்யா அவர்கள் இல்லத்திலே அமர்ந்திருந்த வேளே தம்பி கருணுநிதி மலர்ந்த முகத்துடன் என்னேக் கண்டு பேசிடும் காட்சியைக் காணுகின்றீர். நேர்த்தியான முறையில் அமைந்த படம் என்பீர்! விரிந்த மெத்தையில் அமர்ந்துள்ளார்கள் என்று பேசுவீர்! ஆனல் என் நகையின் பொருளும், தம்பி தன் கண்களிலே காணக் கிடக்கும் ஒளியின் பொருளும் அறிந்திடல் எளிதன்று; அறிவித்து அகமகிழவே இது.

ஆரூர் மாநாடு, கண்டோர் களிப்புறும் வகையில் வெற்றி தந்தது. வீரர் கோட்டமாகவும், புலமை மன்றமாகவும், வரலாற்று வரைகூடமாகவும், மகிழ்ந்துரையாடும் மாடமாகவும் இரு நாட்கள் மாநாடு செவ்வனே விளங்கிற்று. அதன் பிறகு சந்திக்கிறேம்.

"அண்ணு;" என்றழைத்தான் தம்பி.

"கைத்திறனேக் கண்டீரா? கண்ட மாசு ஏதேனும் உண்டோ என்று கண் பேசக் கண்டேன். நானு எளிதிலே வலேபடும் இயல்பினன்? "ஏன்? என்று சிறிதளவு அதட்டும் குரலே வருவித்துக் கேட்டேன்.

பாழும் சிரிப்பு, என் திட்டத்தை வெட்டும் திறத்ததாகி வெளிவந்தது· படம், அதைக் காட்டிவிடுகிறது. பார்த்தால் புரியும்.

''கேட்டதற்கும் மேலாகப் பணம் தந்தோமன்றே?'' என்பது தம்பியின் கேள்வி.

''தரத் தக்கது இம்மட்டோ?'' என்பது என் நகை'விடுகணை.

''மகிழ்ச்சிதானே?'' என்கிறான் தம்பி.

''மேலும் மேலும் தேடித் தரவேண்டாமா?'' என்று கேட்கிறேன் நான்.

அங்ஙனம் கேட்கிறேன் என்பதால், அவர்கள் பெற்றுத் தந்ததால் பெருங்களிப்பு பெற்றேனில்லை என்று பொருள் கொள்ளற்க. மேலும் பெற வேண்டும் எனும் விழைவும், மேலும் அவர்களால் தேடித் தர இயலும் என்ற நம்பிக்கையுமே என்னை அவ்வாறு கேட்கச் செய்கிறது.

நம்மில் எவரும், ஒருவரை ஒருவர் காணும் போது இந்தப் படத்திலே காணப்படுவது போன்றேதான் கண்கள் களிநடம் புரிகின்றன; முகம் மலர்கிறது; காரணம் அகத்திலே ஒரு மகிழ்ச்சி பெருக்கெடுக்கிறது· அதற்குக் காரணம் 'இவர்மாட்டு உள்ள திறம் மிகக் குறைவு. இவர் கொண்ட பணியோ மிகப் பெரியது. எங்ஙனம் வெற்றி காண்பர்?' என்று நாடே கேட்டிட்ட வேளையில், நாம் பணியிலே ஈடுபட்டோம்; புதியதோர் அணியாகி வெளிவரும் நிலையும் ஏற்பட்டு விட்டது.

எனினும் நம்மை ஆட்கொண்ட அருங்கொள்கை நமக்கு அளித்த உரமும், ஊக்கமும், உணர்ச்சியும், பணியாற்றும் திறனும், பகை வெல்லும் ஆற்றலும் நம்மைப் புது மனிதர்களாக்கி விட்டது.

மணற்கேணி தோண்டும்காலை, காய் கதிரோனின் கொடுமையைத் தாங்கிக் கொண்டு கடினமாக உழைக்கவேண்டி இருக்கிறது. பிறகோ! குளிர் நீர் கிடைத்திடும் நிலை. அது இளநீர் என்று இனிக்கிறது. அஃதே போன்று நாம் இனியன பல காண்கிறோம்; 'என்னகும் இவராலே?' என்று கேட்டோர் கண் முன்னால், சீர் பல பெற்றிருக்கிறோம்.

இதனைக் காண முடிந்த காரணத்தால்தான் இதனிலும் மேலானவற்றினைக் காண இயலும் என்ற நம்பிக்கை எழுகிறது. காண வேண்டும் என்ற உறுதி பிறக்கிறது. அதற்கான திறம் இவரிடத்தில் என்னென்ன முறையிலே இருக்கிறது என்று கண்டாராயத் தோன்றுகிறது. அங்ஙனம் நான் ஆராயப் புகும்போதுதான் ஆயாசப்படுவது போலவும், அலுத்துக் கொள்வது போலவும், கோபிப்பது போனறும் பலருக்குத் தோன்றும். அத்தனையும் அப்பழுக்கற்ற அன்பின் விளைவு

என்பதை அறியாதோர் மிகச் சிலரே. அறிந்ததால்தான் தம்பியின் கண்களிலே களிப்பொளி காண்கிறீர்கள். என் நகையிலும் ஒரு பொருள் தெரிந்திடக் காண்கிறீர்கள்.

ஆரூர் நமக்களித்த அருந்தம்பி உள்ளத்தில் தேங்கியும் தூங்கியும் உள்ள திறமத்தனையும் கல்லி எடுத்திட்டால் காணலாம். மேலும் பல வெற்றிகள்! படத்திலே என்னைக் காண்கிறீர்களே, பார்வையின் பொருள் அது தான்; கல்லி எடுக்க முயல்கிறேன்!

"எத்தனை பெருங்கூட்டம், ஏனண்ணா?" என்று என்னைக் கேட்டான் தம்பி. நான் இது கேட்டேன். "கூட்டம் குறையவில்லை: கூடுவதும் கூடிடுது; "ஓட்டு" வாங்க வரும் வேளையிலே என்ன நிலை?" தம்பியின் சிரிப்பிலே விடை உண்டு. கண்டறிவீர்.

திருவாரூர்த் தம்பி மட்டுமல்ல; அனைவரும் பதிலிலுக்க வேண்டிய கேள்வி அது.

விளக்கமுரைத்திடவும், உரையில் சுவை கூட்டவும், கொள்கையை விளக்கவும், மறுப்பினை மறுத்திடவும், வல்லவரான நல்லோர் பலர் நமது இயக்கத்திலே இன்று உளர். அவர்களின் அருந்நிறனால் நாட்டவர் பெறும் பயன் பெரிது. அவராற்றிய தொண்டின் விளைவாக இன்று நாம் மேற்கொண்ட பணிக்கு ஒரு நல்லிடம் கிடைத்தும் விட்டது. நரம்பு தடவினேம், நாதம் கிளம்பி விட்டது: பண்ணமைப்போம் வாரீர்—என்று அழைத்திடத் துணிவும் பிறந்து விட்டது, பண் அமைத்திட இயலும் என்பதனை அறிவிக்கும் முறையில் 'முரசொலி' இல்லமெங்கணும் இன்னிசையாகி நல்லோர் யாவரையும் ஒன்றுபடுத்தி நமது குறிக்கோள் வெற்றி பெற வழிகாண வேண்டும் — 'முரசொலி' எனும் இந்த ஏடு என்று மட்டும் கூறுகிறேன் என்றெண்ணுதீர். இதனை எழிலுள்ளதாக்கி, எனை நோக்கி, "கண்டீரோ கைத்திறனை?" என்று விழியால் கேட்டிடும் தம்பியையுந்தான்.

அதைத் தான் கூறுகிறேன். பார்வையால் தம்பி அறிந்து தான் மகிழ்கிறான்.

நாம் அனைவரும் ஒருவரை ஒருவர் காணும் பொழுது இதே நிலை தான்! அந்த இன்ப நிலையிலிருந்து எழும் வலிவுதான் நாட்டுக்கே புதிய பொலிவாகிறது. மகிழ்ச்சி பொங்குகிறது."

இந்தக் கட்டுரையின் வாயிலாக அண்ணா அறிவித்த கருத்துக்கள் கட்சிக்குள்ளே சம்பத் போன்றவர்களுக்கு எரிச்சலை உருவாக்கி, அதனால் அவர்கள் என் மீது பகை கக்கிடக் கிளம்பினர்.

எனக்குப் பொதுச் செயலாளர் பொறுப்பை அளிக்க அண்ணா எண்ணிவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டுதான் மாயூரம் பொதுக்

குழுவில் சம்பத் கோஷ்டியினர் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். அதை நானே ஆதரித்ததும் அவர்கள் தாங்கள் வெற்றி பெற்றதாக வெளியில் சொல்லிக் கொண்டாலும், வெட்கத்தாலும், வியப்பாலும் ஒருவருக்கொருவர் தங்கள் திகைப்பினைக் காட்டிக் கொண்டார்கள்.

1960-ஆம் ஆண்டு சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பல ஆண்டு காலமாக 'மதராஸ் கார்ப்பரேஷன்' என்று ஆங்கிலப் பெயர் தாங்கியிருந்த மாநகராட்சிக்கு 'சென்னை மாநகராட்சி' என்று அதிகாரப் பூர்வமாகப் பெயர் மாற்றப்பட்டது. தி. மு. கழகத்திற்குத் தமிழையும், தமிழ் உணர்வையும் நாடெல்லாம் நல்லோர் உள்ள மெல்லாம் பரப்ப வேண்டும் என்று உள்ள ஆர்வத்தின் அடையாளம் தான் அந்தப் பெயர் மாற்றமாகும்.

1961 ஜனவரித் திங்கள் 20-ஆம் நாள் அன்றுதான் அமெரிக் காவின் 35-வது ஜனாதிபதியாகக் கென்னடி பதவியேற்றுக் கொண் டார். அவருடைய பதவியேற்பு உரையில் அமெரிக்க நாட்டு மக்களைப் பார்த்து, "நாடு உனக்காக என்ன செய்தது என்று கேட்காதே; நாட்டுக்காக நீ என்ன செய்தாய் என்று கேட்டுக் கொள்" என்பதாகக் குறிப்பிட்டார்.

அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் கழகக் கூட்டங்களில் நான் பேசும்போதெல்லாம், 'கட்சி உனக்காக என்ன செய்தது என்று கேட்காதே; கட்சிக்காக நீ என்ன செய்தாய் என்று உன்னையே கேட்டுக் கொள்' என்று குறிப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

கட்சி தனக்கு இன்னும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதி லேயே கண்ணும் கருத்துமாக இருந்த தோழர் சம்பத்தும், அவரைச் சார்ந்த சிலரும் 1961 ஜனவரி 21, 22 தேதிகளில் வேலூரில் நடை பெற்ற செயற்குழுவில் தங்கள் முழு உருவத்தையும் வெளிப்படுத் தினார்கள்.

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களின் கண்டனக் கணைகளைத் தாங்க முடியாத தோழர் சம்பத், தான் வகித்துவந்த கழக அவைத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்ய முன்வர வேண்டிய நிலைமைக்கு ஆளானார். அவர் எழுதிய அந்தக் கடிதத்தில், தாம் சில காரணமாக மேற்கொண்ட முடிவுகள், பேசிய பேச்சுக்கள், எழுதிய எழுத்துக்கள் ஆகியவற்றில் கழகத் தோழர்கள் மனம் புண்பட்டு மாற்றாருக்கு இடம் கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டதை உணர்வதாகவும், அதற்காக வருந்துவதாகவும், இனி அத்தகைய முயற்சிகளில் ஈடு படாமல் கழகப் பணியாற்ற வசதியாக இருக்கும் வகையில் பொறுப்பு

களிலிருந்து விலகுவது தான் சரி என்ற கருத்தில் அவைத் தலைவர் பதவியையும் சாதாரண உறுப்பினர் பதவியைத் தவிர மற்ற கழகத்தி லுள்ள பதவிகளையும் விட்டு விடுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

வேலூரில் நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களைப் பற்றி சம்பத்தும் அவரைச் சார்ந்தவர்களும் கட்டிவிட்ட தவருன புனை கதைகளை மாற்றுக் கட்சி ஏடுகள் முக்கியத்துவம் கொடுத்து வெளி யிட்டதை மறுத்து 25-1-61 ஆம் நாள் அன்று அண்ணு அவர்கள் ஓர் விரிவான அறிக்கையை வெளியிட்டார். அந்தக் கூட்டங்களில் பொரு ளாளர் என்ற முறையில் என்னைக் குறித்து நடைபெற்ற விவாதங் களையும் சுட்டிக் காட்டியிருந்தார். ''தேர்தல் நிதி அறிக்கையைக் கொடுத்துக் கருணுநிதி பேசினர். 20-1-61 வரை தேர்தல் நிதியாகக் கிடைத்துள்ள விவரங்களை மாவட்ட வாரியாகப் படித்துக் காண்பித்து மொத்தம் ரூபாய் 61, 140 சேர்ந்திருப்பதாகவும், அந்தப் பணம் முழுவதும் ராயபுரம் இந்தியன் பாங்கில் இருக்கிறது என்றும் அறிவித்து வங்கியின் பாஸ் புத்தகத்தையும், செலான் புத்தகங்களையும் அவைத் தலைமைப் பொறுப்பேற்றிருந்த திரு ஜி. பி. சோமசுந்தரம் அவர்களிடம் கொடுத்தார்.

''அவைத் தலைவர் தொகை பற்றிய விவரத்தையும் வங்கி புத்தக விவரத்தையும் சரி பார்த்துச் செயற்குழுவின் சார்பில் ஏற்றுக் கொண்டார். தேர்தல் நிதி பற்றிய குறிப்பை கருணுநிதி படிக்கும் போது ஆந்திர மாநிலத்திலிருந்து ரூபாய் 55 மட்டுமே கிடைத்திருப் பதாகக் குறிப்பிட்டதும், ஆந்திர மாநிலத் தோழர்கள் பதறியெழுந்து, எங்கள் மாநிலத்தில் ஏகாம்பரக்குப்பத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மிச்சப்பட்ட தொகை ரூபாய் ஆயிரத்தைத் தோழர் சம்பத் அவர்களிடம் கொடுத்திருக்கிறோமே, கணக்கிலே ஏன் இல்லை என்று கேட்டார்கள். தம்மிடம் அந்தத் தொகை வந்து சேரவில்லை என்ற தகவலைக் கருணுநிதி கூறினர்.''

—இவ்வாறு அண்ணு அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டி ருந்தார். இந்தி எதிர்ப்பு நிதியாகவும், கோடம்பாக்கம் இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் மிச்சத் தொகையாகவும், அறிக்கையிலே குறிப்பிட்டுள் ளதைப் போல் தேர்தல் நிதியாகவும், தோழர் சம்பத் வசம் சேர்ப்பிக்கப் பட்ட பல ஆயிரம் ரூபாய்களுக்கு விவரமே இல்லாமல் போயிற்று!

இந்த நிலைமையிலேதான் தேர்தல் நிதியாகக் கழகத்திற்குச் சேரும் தொகையை நான் சினிமா படம் எடுக்கும் செலவிற்குப் பயன் படுத்திக் கொள்வதாக சம்பத்தும், அவரைச் சார்ந்தவர்களும் பலமான அவதூறுப் பிரச்சாரத்தில் அப்போது இறங்கியிருந்தார்கள். அந்தத் தப்புப் பிரச்சாரத்தைத் தகர்த்தெறியத் தான் பாங்க் பாஸ் புத்தகம் உட்படத் தேர்தல் நிதி விவரத்தைச் செயற்குழுவிலும் பொதுக்குழு

விலும் தான் தாக்கல் செய்தேன். மேலும் இன முழக்கம் என்ற இதழின் பொங்கல் மலரில் தோழர் சம்பத் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

அந்தக் கட்டுரையில் அறிஞர், கலைஞர், நாவலர் என்றெல்லாம் கழகத் தலைவர்களுக்கு மக்கள் ஆசையாக வழங்கிடும் சிறப்புக்களை வன்மையாகக் கண்டித்தார். ஆனால் அதே இதழில் அவரைப் பற்றி வந்த செய்திகளில் 'சொல்லின் செல்வர் சம்பத்' என்று சிறப்புப் பெயர் போடப்படுவதை அனுமதித்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஜனநாயகத்தின் சிறப்புக்களைத் தமக்கே உரிய முறையில் 'திராவிட நாடு' இதழில் தொடர்ந்து ஒரு கட்டுரை மூலம் எழுதி வந்தார். அந்தக் கட்டுரை தன்னைத் தாக்குவதற்குத்தான் எழுதப்படுவதாக சம்பத் நினைத்து, 'அண்ணாவின் மன்னன்' என்ற தலைப்பில் அண்ணாவின் கட்டுரையை மறுத்து எழுதத் தொடங்கினார். இதில் அண்ணா அவர்களை நேரடியாகவே தாக்கினார். இது கழகத்தில் பெரும் பரபரப்பை உருவாக்கிற்று.

சம்பத்தோடு ஏற்பட்ட கூடா நட்பினால் கவிஞர் கண்ணதாசனும் கழகக் கொள்கைகளுக்கு விரோதமாகவும், அண்ணாவுக்கு எதிராகவும் பொதுக் கூட்டங்களில் பேசத் தொடங்கினார். 1961 பிப்ரவரி 20-ல் திருச்சியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் அண்ணா அவர்களைத் தாக்கிப் பேசிய கண்ணதாசனை ஆத்திரம் கொண்ட ஒரு தோழர் தாக்க முனைந்ததாக வெளிவந்த செய்தியைக் கண்டு காஞ்சியில் இருந்த அண்ணா அவர்கள் பதறிப் போய் அந்தச் செயலைக் கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். தான் கொண்ட கொள்கைக்குக் கழகத் தவர்களிடத்தில் ஆதரவில்லை என்பதையும் அண்ணாவைக் குறை கூறித் தான் தலைவராகலாம் என்ற நினைப்பிற்குக் கழகத் தலைவர் ஒரு துளியும் இடம் தரமாட்டார்கள் என்பதையும் புரிந்து கொண்ட தோழர் சம்பத் அவர்கள் திடீரென்று ஒரு நாள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

அதையொட்டி பிப்ரவரி 26-ஆம் நாளன்று திருவொற்றியூரில் கழகக் காவலர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்களின் விளக்கவுரை கேட்டு, சம்பத்தின் குழுவிலே இருந்த கண்ணதாசனும் மற்றவர்களும் கண்ணீர் மல்கி அண்ணாவின் கரங்களை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு உணர்ச்சிப் பிழம்புகளாக ஆனார்கள். கழகத்தினுடைய பிளவுகள் மறைந்தன. அனைவரும் ஒன்றுபட்டனர் என்ற மகிழ்ச்சிச் செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் வகையில் பிப்ரவரி 27-ஆம் நாள் அன்று மயிலாப்பூரில் தோழர்

டி. கே. கபாலி தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அதில் அண்ணு அவர்கள் பேசும்போது, ''இனி, துளியும் கழகத் திற்குள்ளே பிளவு மனப்பான்மை வளரவிட யாரும் எண்ணுதீர்கள். நம்முடைய லட்சியத்தில் வெற்றி பெறுவதாயின் அனைவரும் சேர்ந்து நின்று வெற்றி பெறுவோம். இல்லையாயின் நாம் அனைவரும் ஒரு மண்டபத்திற்குள்ளே அடைபட்டுக்கொண்டு விஷப்புகை பிரயோகிக்கச் செய்து, ஒன்றுகவே செத்து மடிவோம்! இந்த உணர்வோடு கழகத் தோழர்களே ஒற்றுமையைக் கடைப்பிடியுங்கள்" என்று நா தழுதழுக்க, கண்களிலே நீர் துளிர்க்கக் கூடியிருந்தோர் அனைவரும் விம்மியழும் வண்ணம் குறிப்பிட்டார்கள்.

அதன் பின்னர் அதே ஆண்டு 7-ஆம் நாள் அன்று தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் தொகுத்து வெளியிட்ட 'தி. மு. க. வர்லாறு' என்ற புத்தக வெளியீட்டு விழாவிற்கு எதிர்பாராத காரணத்தினுல் அண்ணு அவர்கள் வந்து கலந்து கொள்ள முடியவில்லை. அதை ஒரு பெரும் காரணமாகச் சொல்லித் தோழர் சம்பத் அவர்கள் -4-61 அன்று கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் விலகி விட்டதாக இதழ்களில் அறிக்கை வெளியிட்டார்.

18-4-61 அன்று அண்ணு அவர்கள் கழகத்திலிருந்து விலகியவர் களுக்கு அழைப்பு விடுக்கும் வகையில் விரிவான ஓர் அறிக்கையைவெளி யிட்டார்கள். அந்த அறிக்கையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்டிருந்த கருத்துகளே நினைவூட்டுவது அவரதுஅரசியல் பண்பாட்டிற்கும், அரசியல் திரவகள் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல உணர்விற்கும் எடுத்துக்காட் டாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

74

சம்பத்துக்கு அண்ணனின் அறிக்கை

"தூய உள்ளத்தோடும் தோழமை உணர்வோடும் நீண்ட பல ஆண்டுகளாக உங்கள் அனைவருடைய விருப்பத்தை அறிந்தும் கொள்கை நாட்டம் கொண்டும், பொது மக்கள் நட்புணர்ச்சி காட்டத்தக்க விதத்திலும் கூடிப் பணியாற்றியவன் என்ற உரிமையோடும் இதை எழுதுகிறேன்" என்று அறிக்கை தொடங்கி "நான் இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் நமது கழகம் மேற்கொண்ட கொள்கை, திட்டம், போர் முறை ஆகிய எதிலாகிலும் என் இச்சைப்படி 'எவரையும் கேட்க வேண்டியதில்லை' என்ற போக்கில் எதேச்சாதிகாரமாக 'எல்லாம் எனக்குத் தெரியும்; மற்றவர் அறியார்' என்ற மமதையுடன் நடந்து கொண்டதுண்டா? என்னை உங்களிடம் ஒப்படைத்து விட்டவன். உங்கள் எண்ணங்களை என்னுடையதாக்கிக் கொண்டவன். நீங்கள் தேர்ந்தெடுக்கும் திட்டங்களை நாட்டுக்கு அறிவிப்பவன். உங்களோடு சேர்ந்து அந்தத் திட்டங்கள் வெற்றி பெற உழைப்பவன். கோபத்துக்கு இடையிலேயும், என் வார்த்தைகளை முன் தொடர்புகள் கருதியேனும், தோழர் சம்பத்தும் மற்றத் தோழர்களும் அருள் கூர்ந்து யோசித்துப் பார்த்துத் தமது முடிவுகளை மாற்றிக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன். (அவரால்) எந்த யோசனையும் தரப்பட்டு, விட்டுவிடப் படவில்லை. கொள்கையிலே மாற்றம்வேண்டும் என்று கூறப்பட்டதில்லை. பிரிந்து போக வேண்டிய காரணம் என்ன இருக்க முடியும்?

"அனைவரும் சுமுகமாக ஒன்றுபட்டு இனித்தொடர்ந்து பணியாற்று வதென உறுதி எடுத்துக் கொண்டது திருவொற்றியூர் காவலர் கூட்டத்தில் 26-2-61-ல்; தோழர் சம்பத்தும் மற்றவர்களும் கழகத்தை விட்டு வெளியேறுகிறேம் என்று அறிவித்தது 9-4-61-இல். இந்த 42 நாட்களிலா கழகம் திருத்தப்பட முடியாத அளவுக்குக் கெட்டு விட்டது? நாடு நம்பும் என்று எதிர்பார்க்கலாமா? நமது நெஞ்சமே நம்பாதே?

"தாளமுத்து நடராசனிலிருந்து கோவை ஆரோக்கிய சாமி வரையில் தியாகிகள் கொட்டிய குருதி குழைத்துக் கட்டப்பட்ட கழகத்துடன், துவக்கம் முதல் இடம் பெற்றவர்களா இப்படி மின்னல் வேக நடவடிக்கையில் ஈடுபட்டுக் கழகத்தை விட்டு வெளியே செல்வது?

"திரும்பி வாருங்கள்-திட்டவட்டமாக நமது கருத்தைப் பொதுக் குழுவுக்குக் கூறுங்கள்-பொதுக்குழு ஏற்றுக்கொண்டால் நான் குறுக்கே நிற்க மாட்டேன். ஏற்றுக் கொள்வேன். பொதுக்குழு உங்கள்

திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை என்றால், உங்கள் சீரிய பணியினால் தோழமை உணர்வால் வெகு விரைவில் பொதுக் குழுவை உங்கள் பக்கம் அழைத்துச் செல்ல முடியும்.

"நமக்குள்ள வேற்றுமைகள் மிகச் சாதாரணம்; கொள்கை சம்பந்தப்பட்டவை அல்ல என்று ஆயிரம் தடவை சொல்லியிருப்பீர்கள். அதை எண்ணிப் பாருங்கள்.

"ஒரு பெரிய அமைப்பிலே ஈடுபடும் போது நமக்கென்று தோன்றும் எண்ணங்கள் சரியானவை-நியாயமானவை-தேவையானவை என்று தோன்றினால் அந்த அமைப்பு அவைகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான முறையில் காரிய மாற்றி வெற்றி காண்பது தான் ஜனநாயகக் கடமை"—

என்றெல்லாம் உருக்கமாக ஒரு தலைசிறந்த ஜனநாயகவாதிக்குரிய பண்புக் குரலில் வேண்டுகோள் விடுத்து விட்டு,

"அப்படிப்பட்ட ஜனநாயக வாதிகள் அனைவருக்கும் ஏற்ற இடம் திராவிட முன்னேற்றக் கழகம். அதனை வலிவாக்குங்கள், புதுப்பொலிவு பெறச் செய்யுங்கள்; வாரீர்-ஒன்று சேர்ந்து உழைத்து நாட்டுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்வோம் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்" என்று முடித்தார்.

இந்தப் புனித உள்ளத்தின் அழைப்பினைச் சம்பத் ஏற்றுக் கொள்ளவில்லை. சம்பத்தோடு முதலிலே இணைந்து நின்று அண்ணாவோடு மாறுபட்டுக் காட்சியளித்த கழகக் காவலர்கள் சிலரும் சம்பத்தை விட்டுப் பிரிந்து அண்ணாவின் அன்புக் கரங்களின் தழுவலுக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டார்கள். எத்தனையோ பேர் எடுத்துச் சொல்லியும் கேளாமல், நடந்ததை எல்லாம் மறந்து விடுவோம்; நடப்பவைகளை நல்லவையாக ஆக்குவோம்' என்று நான் சம்பத் அவர்களைத் தனியே சந்தித்துக் கேட்டுக் கொண்டதையும் புறக்கணித்து, அண்ணாவின் தம்பி என்ற பட்டியலிலிருந்து தோழர்



சம்பத் தன்னை விலக்கிக்கொண்டு, கழகத்திலிருந்து வெளியேறி விட்டார். அவரோடு விலகியவர்களில் நாட்டிற்கு அறிமுகமான மற்றொருவர் என்னுடைய இனிய நண்பர் கவிஞர் கண்ணதாசன் ஆவார்கள்.

விலகிச் சென்ற வேகத்தில் தமிழ் தேசியக் கட்சி என்ற ஒரு கட்சியை உருவாக்கினார்கள். அந்தச் சமயத்தில் அவர்களுடைய தவறான பிரச்சாரங்களுக்குப் பெரும் விளம்பரங்கள் கொடுத்து வந்த பத்திரிகைகளுக்குப் பதில் அளிக்க ஏதுவாக 'முரசொலி'யை 1960 செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து நான் இதழாக வெளியிடத் தொடங்கியிருந்தேன். தமிழ் தேசியக் கட்சி தி.மு. கழகத்தைத் தாக்குவதற்காகக் காங்கிரசின் நிழலைத் தேடி ஓடியது. வெகு விரைவில் குட்டிக் காங்கிரஸ் என்கிற பட்டப் பெயரோடு தமிழ் தேசியக் கட்சி 1962-ஆம் ஆண்டிற்கான தேர்தலிலும் குதித்தது.

''சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று அதனை அடக்குகிறேன்'' என்று முழங்கியவாறு தென் சென்னைப் பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க வேட்பாளரை எதிர்த்து சம்பத் போட்டியிட்டார். அவர் பெரும் தோல்வியடைந்தது மாத்திரமல்ல; அவரது கட்சியினர் போட்டியிட்ட எல்லா இடங்களிலும் ஜாமீன் தொகை பறி போயிற்று. தனியாக நின்று தாக்குப்பிடிக்க முடியாது என்று கண்ட தமிழ் தேசியக்கட்சி தன்னைக் காங்கிரசோடு இணைத்துக் கொண்டது.

பொதுத் தேர்தலுக்கு முன்பு கழகத்திலிருந்து விலகிய சம்பத் எம்.பி.யும், இரு எம். எல். ஏ.க்களும் கழகத்தின் செல்வாக்கினால் பெற்ற தங்கள் எம்.பி., எம்.எல்.ஏ. பதவிகளை ராஜிநாமாச் செய்யாமலேயே காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். இன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் மாநாடுகளிலும் அதனுடைய தலைவர்களுடைய பேச்சுக் களிலும் வெளிப்படுகிற பொன் மொழி, ''ஒருவர் ஒரு கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்குச் சென்றால் அந்தக் கட்சியின் மூலம் பெற்ற பதவி களை ராஜினாமாச் செய்வது தான் நாணயமாகும்'' என்பதாகும். எவ்வளவு பெரிய அரசியல் பண்பாட்டில் முரண்பாடுகள் நாட்டில் நிலவுகின்றன என்பதற்கு இந்த எடுத்துக்காட்டுப் போதுமானதல்லவா?

''திருவொற்றியூர் காவலர் கூட்டத்திற்கும், 'தி.மு.க. வரலாறு, வெளியீட்டு விழாவுக்கும் இடையிலே நாற்பத்து இரண்டு நாட்கள் தானே! அதற்குள்ளாகவா கழகம் திருத்த முடியாத அளவுக்குக் கெட்டு விட்டது?'' என்று அண்ணா சம்பத்தைப் பார்த்து 1961-ஆம் ஆண்டு கேட்டாரே; அதே கேள்வியைத் தான் 1972 அக்டோபர் எட்டாம் நாளன்று கழகத்தைப் பற்றி அவதூறு கூறிய நண்பர் எம். ஜி. ஆர். கோஷ்டியினரைப் பார்த்து இப்போது நாடு கேட்கிறது.

1972 ஆகஸ்டு மாதம் முதல் வாரம் மதுரை மாநாட்டில் கழகம் ஒரு களங்கமற்ற பாசறை-கழக அரசு நாய்மையான ஆளிகை என்று யார் பேசினரோ; அதே எம். ஜி. ஆர். அறுபது நாட்கள் இடை வெளிக்குப் பிறகு கழகத்தையும் கழக அரசையும் வீழ்த்தியே நீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். ஆம், அன்று கழகத்தைக் காட்டிக்கொடுக்க சம்பத்தின் உருவிலே புறப்பட்ட துரோகம். பத்தாண்டு காலம் கழித்து எம். ஜி. ஆர். உருவிலே கிளம்பியது அவ்வளவுதான்.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு ஒரு முறை கழகத்திற்கு ஒரு சோதனை ஏற்படுவதுண்டு. 1949-ல் தோன்றிய தி. மு. கழகத்திற்கு 1960-ல் ஒரு சோதனை-அடுத்து 1972-ல் மற்றொரு சோதனை. இரு சோதனைகளும் ஒரே விதமான 'அழிவு' மனப்பான்மையுடன் தோன்றி யவைகளே! தமிழகத்தில் உருவாகி வரும் பெரும் சக்தியைப் பிளப்ப தற்கும், அதனால் பேரானந்தம் கொள்வதற்கும் யார் துடியாய்த் துடித் தார்களோ அவர்களுக்குப் பலியாவதற்குச் சில தமிழர்களும் தயாராகவே இருந்தார்கள் என்பது தமிழினத்தில் நீண்ட கால வரலாற்று உண்மைகளாகும்.

இறுதி வெற்றி தமிழர்க்குத்தான் எனினும் இடையில் எதிர்ப்படும் 'எட்டப்பர்' களையும் சந்தித்து விட்டுத்தானே, பயணத்தைத் தொடர வேண்டியிருக்கிறது? அறுபதாம் ஆண்டில் விளைவிக்கப்பட்ட துரோகப் பயிர், கழகம் என்னும் களிற்றின் கால் பட்டு, மிதிபட்டு, அழிந்து போயிற்று. விழியில் கனலையும் நெஞ்சில் அனலையும் நிறைத்துக் கொண்டு கழகத் தோழன் கச்சை கட்டிப் பணியாற்றிடத் தொடங் கினான். அவனுக்கு முன்னால் தமிழினம் தெரிந்தது, தமிழினத்திற் காக அண்ணன் உருவாக்கிய கட்சியும் அவர் கையிலேந்திய கொடியும் தெரிந்தன.

எரிச்சல் கொண்டோர், ஏமாற்றமடைந்தோர், எகத்தாளம் செய்வோர், சிண்டு முடிவோர், சீறிப்பாய்வோர், சிறுமதியாளர், பண்புகள் அற்றோர், பதவிப் பித்தர், நன்றி மறந்தோர், நரிக் குணம் கொண்டோர், மிரள விழிப்போர், மிரட்டிப்பார்ப்போர்-இத்தகை யோரின் எழுத்தும் பேச்சும் கனையும் கண்டனமும் கழகத் தோழர்களின் அலட்சியச் சிரிப்புக்கு முன்காய்ந்த புல்லின் மீது தீப்பட்டது போல் ஆயிற்று.

நெஞ்சு நிமிர்த்தி நடைபோட்டான். துரோகிகளால் கழகம் துவளவில்லை. துரோகிகள்தான் துவண்டார்கள். அதற்கு எடுத்துக் காட்டுத்தான் 1962 பொதுத் தேர்தலில் கழகம் பெற்ற பெரும் வெற்றி யாகும். கழகம் இரண்டாகி விட்டது; இனி சட்ட சபையில் பதினைந் தாக நுழைந்தவர்கள் இரண்டு, மூன்று பேர்கள் கூட வென்றிட

மாட்டார்கள் என்று அரசியல் ஆருடங்கள் கணிக்கப்பட்டன. அதற்கு மாருகக் கழகம் 1962 தேர்தலில் ஐம்பது இடங்களில் வெற்றிக் கொடி நாட்டியது. துரோகிகள் பிரிந்த அடுத்த திங்கள், இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்துத் தி. மு கழகம் 1961-ஆம் ஆண்டு மே திங்கள் ஒன்பதாம் நாள் மாபெரும் பேரணி யொன்றைச் சென்னை நகரில் நடத்திக் காட்டியது.

அதே ஊர்வலத்திற்குப் பொதுச் செயலாளர் நாவல. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அண்ணவும் கழகத் தலைவர்களும் கலந்து கொண்ட அந்தப் பேரணி, கழகத்தின் வலுவை மட்டுமின்றி, தமிழர்களைக் கொடுமைப் படுத்தும் இலங்கை அரசுக்கு எதிராகத் தமிழகம் விடுக்கும் கண்டனத்தையும், உலகிற்குத் தெளிவாக அறிவித்தது. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தி. மு. க. நிறைவேற்றிய தீர்மானம் சென்னையில் உள்ள இலங்கை அரசின் தூணைத் தூதுவரிடம் வழங்கப்பட்டது.

75

கழகம் கொட்டிய குருதி வெள்ளம்

பேரணியின் எழுச்சியும், சிறப்பும் எங்களையெல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருந்த நேரத்திலேதான், மறுநாள் இரவு மயிலாடி மாரியப்பன் என்ற கழகக் காளையை மாற்றுக்கட்சி வெறியர்கள் கொலை செய்து விட்டனர் என்ற சோகச் செய்தி வந்து சேர்ந்தது.

கழகம் வளர மயிலாடி மாரியப்பன் மட்டுமல்ல; ஆலந்தூர் சின்னன், நெல்லிக்குப்பம் மஜீது, சென்னை கோ. சு. மணி, கோவை ஆரோக்கியசாமி, குடந்தை ராமலிங்கம், உடையார்பாளையம் வேலாயுதம், தூத்துக்குடி சாமி, தாளமுத்து நடராசன், வட சென்னை பாண்டியன், ஆலங்குடி சிதம்பரம். நெடுஞ்சேரி இராமநாதன், நாகர் கோவில் கிட்டு, சென்னை மொய்தீன் பிச்சை, ராமப்பட்டணம் லத்தீப், தளபதி பிரதாபசந்திரன் — இப்படி எத்தனையோ பேர் தங்கள் இன்னுயிரைத் தத்தம் செய்திருக்கிறார்கள்.

அவர்களின் குருதி வெள்ளத்தில் நனைக்கப்பட்டதே கழகத்தின் லட்சியக் கொடியாகும். அந்தக் கொடி ஏந்திய கைகளுடன் கொள்கை வீரர்கள் 1962 தேர்தலில் கழக வெற்றிக்கு உழைத்தனர். தஞ்சையில் பரிசுத்த நாடார் என்னும் பெரும் பணக்காரரும் செல்வாக்குப் படைத்தவருமான காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்து நான் போட்டியிட வேண்டுமென்று கழகம் முடிவு செய்தது. அறிஞர் அண்ணாவை எதிர்த்துக் காஞ்சிபுரத்தில் ஒரு பெரிய பஸ் முதலாளி காங்கிரஸ் சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டார்.

அண்ணா அவர்களைத் தோற்கடிக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி தன் முழு பலத்தையும் பயன்படுத்தியது. தஞ்சைத் தேர்தலில் வாக்குப் பதிவு முடிந்து, இரண்டு நாட்களுக்குப் பிறகே காஞ்சியில் தேர்தல். காஞ்சிபுரத்தைக் காங்கிரசார் மூர்க்கத்தனமாக முற்றுகையிட்டுக் கொண்டனர். நானும் நண்பர்களும் காஞ்சித் தேர்தல் பணிகளில் கடைசி நேரத்தில்தான் கலந்துகொள்ள முடிந்தது. தமிழகமே கண்ணீர் சிந்தும் வண்ணம் காஞ்சித் தொகுதியில் அண்ணா வெற்றி வாய்ப்பை இழந்தார். ஓராயிரம் எண்ணங்களைத் தொகுத்துச் சொல்லிச் சட்டமன்றத்தில் அண்ணா உரை நிகழ்த்துவாரே; அந்தப் பெருமகனின் இடத்தில், ஒரு நாள் கூடச் சட்ட சபையில் வாய் திறக்காத ஒரு பஸ் முதலாளி வந்து உட்கார்ந்திருந்தார். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைவராகவும், நான் துணைத் தலைவராகவும்

சட்ட சபை தி. மு. க. கட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அண்ணு அவர்கள் வழியனுப்பி வைக்க, ஐம்பது பேர் சட்டப் பேரவைக்கும், எட்டுப் பேர் நாடாளு மன்றத்துக்கும் கழகத்தினர் சென்ற காட்சியைச் சென்னைக் கடற்கரையில் லட்சக் கணக்கில் கூடியிருந்த மக்கள் கண்டு, களித்தனர். அப்பொழுது அண்ணு தான் தோற்கடிக்கப்பட்டதைப் பற்றிக் கூறியவை என்றென்றும் மனத்தில் கொள்ளவேண்டிய மணி வாசகங்களாகும்.

"என்னைத் திட்டமிட்டு ஒழித்துக் கட்டுவார்கள் என்பது முன்பே தெரியும். நமது நெடுஞ்செழியனிடமும், கருணாநிதியிடமும் நான் இது பற்றிப் பேசிக்கொண்டிருந்திருக்கிறேன்.

"எப்படி எங்கள் பதினைந்து பேரையும் 'ஒழிப்போம்' என்று கூறி ஐம்பது இடங்களைக் கோட்டை விட்டார்களோ, அதேபோல அடுத்த தேர்தலில் 'இந்த ஐம்பது பேரையும் ஒழிப்போம்' என்று கூறி இன்னொரு எழுபத்தைந்து இடங்களைக் கோட்டை விடுவார்கள்.

"ஆளைத் தேள் கொட்டினால் 'ஆ' என்று அலறுகிறான். அதனால் ஆளைவிடத் தேள் பெரியது என்று யாரும் சொல்லமாட்டார்கள். அதைப்போல நான் தோற்றதால் தோல்வி என்னை அழுத்திவிடும் என்று யாரும் கருதாதீர்கள்."

தலைவனின் தோல்வி கண்டு வேதனையில் ஆழ்ந்திருந்த கழகத் தினருக்கு இந்தப் பேச்சு தெம்பு அளித்தது. தீமையிலும் ஒரு நன்மை என்பது போல் அண்ணு அவர்களைச் சட்டப் பேரவைக்குள் நுழைய விடாமல் தடுத்த காங்கிரசாருக்கு எதிராக அண்ணுவை டில்லி மாநிலங்கள் அவைக்கு அனுப்பி வைக்க நாங்கள் முடிவு எடுத்தோம். அண்ணு முதலில் அந்த வேண்டுகோளை ஏற்க மறுத்தார். எங்களின் தொடர்ந்த வற்புறுத்தலுக்குப் பிறகு ஒருவாறு இணக்கம் தெரிவித்தார்.

"தெருவோரத்து மனிதர்களின் பிரதிநிதியாக நான் வந்திருக் கிறேன்" என்று மாநிலங்களின் அவையில் அண்ணு அவர்கள்



தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டு ஆற்றிய உரை வரலாற்றுப் புகழ்மிக்க தாகும். தமிழ்நாட்டிலே உள்ள காங்கிரஸ் மட்டுமல்லாமல், டில்லியிலே உள்ள காங்கிரஸ் தலைவர்களும் தி. மு. கழகத்தை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியது அண்ணுவின் மாநிலங்கள் அவையின் உரைக்குப் பிறகுதான்.

இந்தியா முழுவதும் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் பண்டித நேரு, பிரதமர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நாடு விடுதலை பெற்ற பதினேந்து ஆண்டு காலமாக நாட்டு மக்களுக் காக அளிக்கப்பட்ட எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படாமல் ஒரு புறம் வறுமை வாட்டவும், மற்றொரு புறம் விலைவாசி ஏற்றம் தாக்கவும், மக்கள் அவதிக்காளாயினர்.

மத்திய அரசு விலைவாசிகளைக் குறைக்கத் தனக்குள்ள பொறுப் பைத் தட்டிக் கழித்தது. இங்குள்ள மாநில அரசோ அது யார் பொறுப்பு என்பதைச் சுட்டிக் காட்டத் தவறியது. ஆகவே தி. மு. கழகம் தமிழ்நாட்டு மக்களின் ஏகக் குரலைப் பிரதிபலிக்கும் கதா நாயகனாக எழுந்து நின்றது. எங்கு பார்த்தாலும் அரிசிப் பஞ்சம், காலை முதல் மாலை வரை 'க்யூ' வரிசையில் அரிசி வாங்கக் கால் கடுக்க மக்கள் காத்து நிற்கும் பரிதாபம், பட்டினிச் சாவுகள், பெற்றெடுத்த குழந்தைகளைக் கிணற்றிலே தள்ளி விட்டுத் தாங்களும் தற்கொலை செய்து கொண்ட தாய்மார்களின் கண்ணீர்க் கதைகள், நல்லதங்காள் புராணமாக இல்லாமல் நாட்டின் நடைமுறை நிகழ்ச்சிகளாகிவிட்டன.

சட்டப் பேரவையில் கழகத்தின் சார்பில் இந்தக் கொடுமைகள் பற்றி எவ்வளவுதான் எடுத்துச் சொன்ன போதிலும் முதலமைச்சராக இருந்த காமராசர் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அந்த நேரத்தில் மத்திய நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயின் தங்கக் கட்டுப் பாட்டுச் சட்டம் வேறு பிரகடனப் படுத்தப்பட்டு விட்டது. அதனால் வாழ்விழந்த பொற்கொல்லர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் தமிழ் நாட்டில் தனல் வீழ் புழுவாயினர். அவர்கள் சார்பில் கழகம் எடுத்துச் சொன்ன எந்த முறையீடுகளையும் மொரார்ஜி தேசாய் கேட்கவும் இல்லை; முதலமைச்சர் காமராசர் அதனை லட்சியம் செய்யவுமில்லை.

மத்திய சர்க்காரின் மூலம் தமிழ் நாட்டிற்குக் கிடைத்த சில திட்டங்களையும் உயர்நிலைப் பள்ளி வரையில் வழங்கிய இலவசக் கல்வி முறையையும் ராஜாஜியால் கொண்டு வரப்பட்ட கல்வித் திட்டத்தைத் தானும் எதிர்த்தார் என்ற பெருமையையும் முதலாகக் கொண்டு காமராசர் தன்னுடைய செல்வாக்கைத் தமிழ்நாட்டில் அதிக அளவில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தாரே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக நீதி காக்கப்படவும், பிற்படுத்தப்பட்ட எல்லா வகுப்பினரின்

முன்னேற்றம் முகிழ்த்திடவும் அவர் தன்னுடைய சுட்டு விரலையும் அசைத்தாரில்லை.

நாளுக்கு நாள் உணவுப் பஞ்சமும், விலைவாசி ஏற்றமும் தமிழ் நாட்டை அலைக்கழிக்கத் தொடங்கின. கோரிக்கைகளின் தன்மையையும் உண்மையையும் புரிந்து கொள்ளக்கூட முன்வராத காங்கிரஸ் அரசை எதிர்த்துக் கழகம் போர்க்கொடி தூக்கியது. நாடெங்கும் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம். இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட கழகத் தோழர்கள் சிறைப்பட்டனர்.

அண்ணா அவர்கள் வேலூர் சிறையிலும், நாவலர் அவர்கள் சென்னைச் சிறையிலும், நான் திருச்சிச் சிறையிலும் கழக முன்னணியினர் பல்வேறு சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டோம். மூன்று மாதம், நான்கு மாதம் என்று இருபதினாயிரம் பேருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த நேரத்திலேதான் சீன ஆக்கிரமிப்பு இந்தியாவின் எல்லையோரத்தில் ஆரம்பமாயிற்று. பிரதமர் பண்டித நேரு இந்தியாவின் வெற்றிக்கு எல்லாக் கட்சிகளின் துணையையும் நாடினார்.

அப்போது டாக்டர் சுப்பராயன் மராட்டிய மாநிலத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டு விட்டதால், திருச்செங்கோடு தொகுதியில் நாடாளுமன்ற இடைத் தேர்தல்; அந்த இடைத் தேர்தலில் மாநில அரசின் அமைச்சர்களும், மத்திய அரசின் அமைச்சர்களும் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்து குவிந்தனர். கழகச் சார்பில் போட்டியிட்ட நண்பர் கந்தப்பன் காங்கிரசைத் தோற்கடித்து 720 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவருடைய வெற்றிச் செய்தியை நாங்கள் சிறைச்சாலையிலிருந்து கேட்டு மகிழ்ந்தோம்.

கழகத்தின் முன்னணித் தலைவர்களில் திரு என். வி. நடராசன் அவர்கள் மட்டுமே வெளியில் இருந்து மற்ற கழகத் தோழர்களின் துணையோடு திருச்செங்கோடு தேர்தலைப் பொறுப்பேற்று நடத்தினார். அந்த வெற்றி கண்டு காமராசரும், டில்லி வட்டாரமும் திடுக்கிடும் நிலை பிறந்தது. 'திராவிட நாடு பிரிவினை வேண்டுமா, வேண்டாமா என்பதற்காக நடைபெறும் தேர்தல் திருச்செங்கோடு தேர்தல்' என்று சி. சுப்பிரமணியம் தேர்தல் பிரச்சாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

76

சீனப் படையெடுப்பை எதிர்த்துக் கழகம்

சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்தியப் பிரதமருக்கு எல்லா வகையான ஆதரவும் தரப்படும் என்று தி. மு. கழகம் அறிக்கை வெளியிட்டது. அந்த நல்ல எண்ணத்தை மதிக்கின்ற வகையில் சிறையில் இருந்த அண்ணா அவர்களோ அல்லது ஆயிரக்கணக்கான கழகத் தொண்டர்களோ விடுதலை செய்யப்படவில்லை. அனைவருடைய தண்டனைக் காலமும் முடிவுற்ற பிறகே விடுதலை செய்யப்பட்டோம். இது அன்றிருந்த காங்கிரஸ் ஆட்சியின் கொடுங்கோன்மைக்கும் பெருந் தன்மையற்ற போக்கிற்கும் ஓர் உதாரணமாகும். தண்டனைக் காலம் முடிந்து வேலூர் சிறையிலே இருந்து வெளி வந்த அண்ணா அவர்கள் சீன ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் போர் முழக்கம் செய்தார்.

முன்னேற்றக் கழகம் தன்னுடைய முழு ஆதரவையும் அந்த யுத்தத்தில் இந்திய சர்க்காருக்கு அளிக்க முன் வந்தது. கழகத்தின் சார்பில் பொன்னாடைகள் திரட்டப்பட்டு, போர் நிதியும், தங்க நகைகளும் வழங்கப் பெற்று, அவைகளை நாவலரும் நானும் முதலமைச்சர் காமராசர் இல்லம் சென்று அவரிடத்திலே அளித்தோம்.

இந்தியாவின் மீது போர் தொடுத்த நிகழ்ச்சி தமிழ் நாட்டில் அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. தி. மு. கழகம் தன்னுடையகொள்கை முழக்கமாகக் கொண்டிருந்த திராவிட நாடுப் பிரிவினையைக் கைவிட வேண்டிய சூழ்நிலைக்கு இந்தியாவின் மீது சீனர் தொடுத்த போர் ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது.

சீனப் படையெடுப்பு இந்தியாவில் ஏற்படுத்திய அதிர்ச்சி பல முனைகளிலும்—பல துறைகளிலும் எதிரொலித்தது. தமிழகத்தில் மாலிக் காபூர் படை நடத்தி வந்தபோது ஏற்பட்ட சலனமும் விளைவுகளும் எப்படிப்பட்டவை என்பதைப் படித்திருக்கிறேன். அதே போன்றதொரு சூழ்நிலை 1962 அக்டோபரில் நிலவிற்று.

சீனாவைத் 'தூங்கும் அரக்கன்' என்று வர்ணித்தான் நெப்போலியன்! 'அது விழித்தெழுந்தால் உலகமே அதிரும்' என்றும் அவன் அப்போது சொல்லிவைத்தான். சீனா தூங்கிக் கொண்டு

இருந்தபோது இந்தியா என்ன செய்துகொண்டிருந்தது என்கிற சேதி எல்லாம் ஆதிக்க வரலாறு கூறுகிற கசப்பான உண்மைகள்.

ஆனால் சீனா விழித்து எழுவதற்கு வேகமும், விசையும், வலிவும் தன்னம்பிக்கையும் ஊட்டுவதில் இந்திய அரசியலின் நெளிவு-சுளுவு களுக்கும் பெரும் பங்கு உண்டு. சீனத்து விடுதலை வீரன் சன்யாட்சன் 'சீனத்துக் காந்தி' என்று அழைக்கப்படுவதும் ஒரு மரபு. ஆகவே சீனா, சுதந்திரமாகவே இருந்ததாகப் பாவிக்கப்பட்டாலும் அடிமையாக இருப்பதன் கேவலத்தையும், அதிகாரமில்லாத தன்னரசின் சங்கடங் கள் எவை என்பதையும் சரியாக அது கற்றுக்கொண்ட இடம் இந்தியா தான்!

சீனாவின் 'ஆத்மிக பலம்' நம் நாட்டுப் புத்தரால் முழு வளர்ச் சியினைப் பெற்றதாகச் சொல்கிறார்கள். அதனுடைய அரசியல் தூக்கம்—அதன் மயக்கம்—தாழ்வு மனப்பான்மை—அத்தனையையும் உதறித் தள்ளிச் சீனா சிலிர்த்து எழுவதற்கும் நாம் முக்கிய காரணமாக இருந்திருக்கிறோம். அதனை 'அரக்கன்' என்று வருணித்த மேற்கத்திய அரசியல்வாதிகளை நாம் நிரம்பவும் கேலி பேசினோம்.

"அதனுடைய உருவம்தான் அப்படி! உள்ளமோ அதன் உருவத்தைக் காட்டிலும் பெரிது—பரந்தது" என்று பேசிப் பேசி உலகத்தின் கண் முன்னால் சீனத்தை நல்லபிள்ளை ஆக்கிக் காட்டு வதற்கு நமது பிரதமர் நேரு அவர்களும், அவருடன் சேர்ந்து நாமும் செய்த முயற்சி கொஞ்சமல்ல. உலகத்துச் சமாதான வாழ்வே சீனாவை ஐ. நா. சபையில் அங்கீகரித்திடும் செயலில்தான் அடங்கியிருப்பதாக நாம் விடாப்பிடியான உறுதி காட்டி நின்றோம்.

இந்தப் பிடிவாதத்தின் காரணமாக நமக்கு தேசிய மட்டத்தில் ஏற்பட்ட இழப்புகளும் கணிசமானவை. எது எப்படி ஆனாலும் இந்தியா—சீனா நட்புணர்வு 'சயாமிய இரட்டையர்களைப்' போல் பிரிக்க முடியாதது என்று நாம் துணிச்சலாக நம்பிய காலமும் உண்டு. அதிலும் பாண்டுங் மாநாட்டின் போது, சீனப் பிரதமர் யார்—இந்தியப் பிரதமர் யார்—என்பதில் மேற்கத்திய நாட்டவர் குழப்பம் அடைந்திடும் விதமாகவே நடவடிக்கைகள் காணப்பட்டன.

மேற்கத்தியத் தொழிலாளர்களிடத்தில் தோற்றுப்போகும் கம்யூ னிஸ்டுகள் கைவரிசை கிழக்கிந்திய விவசாயிகளிடத்தில் எப்படி வெற் றிக் கொடியினை நாட்டுகிறது பாரீர் என்று சீனாவைப் புகழ்ந்து தமிழ் நாட்டு மேடைகள் கூட அப்போது அதிர்ந்தன. பழம்பெரும் நாடுகள் இரண்டுக்கும் புத்துலகம் காண்பதில் இருக்கிற குறிக்கோள் ஒன்றே. "அதுதான் சமாதான சகவாழ்வு" என்றெல்லாம் நமது நேரு உளப்பட

அனைவரும், கேட்போர் காதுகள் அடைத்துப் போகும்படி முழங்கினோம். அது மட்டுமா?

1. போரைத் தவிர்த்து உலகத்தில் சமாதானம் நிலவிடப் பாடுபடுதல், 2. அந்தந்தநாட்டுத் தேசிய எல்லைகளை மதித்தல் 3. எந்தப் பிரச்சினையையும் கூடிப் பேசித் தீர்த்துக் கொள்ளுதல், 4. போர்த் தளவாடங்களைக் கண்மூடித்தனமாகக் குவித்துக் கொண்டிருக்கும் வல்லரசுகளின் சார்பாகச் சேர்ந்திடாமல், நடுநிலை வகிப்பது– என்பனவற்றில் இரு நாடுகளும் ஒருமித்த கருத்தோடு இருப்பதாகவே அன்றைய உலகம் நம்பிற்று!

நாமும் அதனையே நம்பிச் சீனவை ஆதரிப்பதும், அதன் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதிருப்பதும் தான் நம்முடைய அயல் நாட்டுக் கொள்கையென்று ஆக்கிக் கொண்டிருந்தோம். இந்தக் குருட்டுத்தனமான நம்பிக்கைக்கு நேரு மட்டுமே முழுப் பொறுப்பு அல்லவென்றும், அவருடைய அயல் நாட்டுக் கொள்கையின் ஒலி பெருக்கியாக இருந்த கிருஷ்ண மேனனுக்கும் முக்கியப் பங்கு இருந்ததாகவும் பின்னர் அனைவரும் உணர்ந்தோம்.

அது மட்டுமல்ல; கே. பி. எஸ். மேனன் என்பவர் இந்தியாவைப் பற்றி சோவியத் ரஷ்யா கொண்டிருப்பதாகத் தெரிவித்த கருத்துக்களும் நாம் மேற்கத்திய நாடுகளுக்கு எதிர்ப்பாகவும் கம்யூனிஸ்டு சார்பு நாடுகளுக்கு கண்மூடித்தனமாக ஆதரவினைக் கொடுத்தும் நடந்து வந்த தற்குக் காரணமாக இருந்தது.

இப்படி ஏற்பட்ட பல்வேறு கோளாறுகள் சேர்ந்து நமது மனிதாபிமானத்திற்கு அறைகூவலாய், சீனப் படையெடுப்புத் திடுமென எதிர்ப்பட்டது.

''சகோதர பாசம்.''

''சமாதானச் சக வாழ்வு.''

''தேசிய எல்லைகளின் மதிப்பு.''

''கூடிப் பேசிப் பிரச்சினைகளை தீர்க்கும் பொறுமை'' ஆகிய உபதேசம் அத்தனையும் 1962 அக்டோபர் 20-ஆம் நாளன்று உலகத்துக் கூரையாம் இமயத்தில் வெடித்திட்ட துப்பாக்கிச் சத்தத்தில் அழுந்தி விட்டன!

ரஷ்யா அது சம்பந்தமாக இந்தியாவுக்கு எதுவுமே ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்வதற்கும் கண்டிப்பாக மறுத்து விட்டது. 'கம்யூனிச அகிலத்தின்' அரசியல் வறுமை அப்போது நமக்குத் தெளிவாயிற்று.

''கொண்டவன் சரியாக இருந்தால் கூரையேறிச் சண்டை போடலாம்'' என்று தமிழகத்தில் வழங்கப்படும் கிராமியப் பழமொழி!

அப்போது நமக்குக் 'கொண்டவர்கள்' சரியில்லாததால் நமது கூரையில் சண்டை தொடங்கிற்று.

அக்டோபர் 2-ஆம் நாளன்று இந்தியாவில் வடமேற்கு லடாக் பகுதியிலும், வட கிழக்கு நேபா பகுதியிலும் திட்டமிட்ட ஆக்கிர மிப்புப் போரைத் துவக்கிவிட்டனர்.

நாடே திகைத்தது. நம்ப முடியாத கதை நடந்து கொண்டிருப்ப தாக ஒவ்வொருவரும் திடுக்கிட்டனர். தேசியத்தைப்பற்றி வாய் கிழிய அதுவரை பேசியது தவிர தேசிய எல்லைகளை பலப்படுத்திக் காப் பதற்குத் தவறிவிட்ட குற்றம் மக்களுக்கெதிரில் அம்மணமாக நின்றது.

இந்தப் பிரச்சினையில் தி. மு. கழகமும் அறிஞர் அண்ணா அவர் களும் தொடர்ந்து வற்புறுத்தி வந்த் அறிவுரைகளுக்குச் செவி மடுத் திருந்தால் சீனப் படையெடுப்பைத் தடுக்க முடியாது போயிருந்தாலும் ஆக்கிரமிப்பை எதிர்த்து நொறுக்குவதற்கு நாம் அப்போது முழுத் தயாரில் இருந்திருக்கலாம்.

அறிஞர் அண்ணா எப்போதுமே கம்யூனிசத்திற்கு ஆதரவானவர். ஆனால் கம்யூனிஸ்டுகளை நம்பாதவர்; ஜனநாயகவாதிகளைப் போற்று பவர். ஜனநாயகத்தின் குறைபாடுகளையும் குளறுபடிகளையும் நன்கு அறிந்தவர். ஜனநாயக முறையில் கம்யூனிசத்தின் உண்மை யான பலன்களைச் சேர்ப்பதில் தான் அவருக்கு ஆர்வம் அதிகம். அந்த அடிப்படையில் தான் கழகத்தின் கொள்கைகளும் எங்களுடைய நடை முறைகளும் இன்றளவும் இயங்கி வருகின்றன.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்த எல்லைத் தகராறு களின் தன்மைகளைத் தி. மு. கழகத்தைப் போல் சரியாக உணர்ந் திருந்த அரசியல் கட்சிகள் அப்போது மிகக் குறைவு. ஆதலால்தான் 1961-ல் மதுரையில் நடைபெற்ற கழக மாநாட்டிலேயே, ''ஐ. நா. மன்றத்தில் சீனாவுக்காகப் பல முறை வாதாடி வரும் இந்தியா எந்த வல்லரசுகளுடனும் கூட்டுச் சேராமல் உலக அரசியலில் நடுநிலைமை வகித்து வந்தும்—இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்குப் பேரதிர்ச் சியை உண்டாக்கும் வகையில் இந்தியாவின் வட எல்லையின் சில பகுதிகளில் சென்சீனா புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது இரு நாடுகளுக்குமிடையே உள்ள நட்புறவு கெடுவதற்குக் காரணமாக இருப்பதால் அச் செயலை இப்பொது மாநாடு வன்மையாகக் கண்டிக் கிறது என்று அந்தத் தீர்மானம் கூறிற்று.

இது அறிஞர் அண்ணா எழுதிய தீர்மானம். செஞ்சீனா ஆக்கிர மிக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கும் வகையில் அது செயல்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு கெடுவதற்குச் சீனா வழி கோலுகிறது; சீனாவின்

செய்கை வன்மையாகக் கண்டிக்கத் தக்கது என்ற கருத்துக்களை 1961-லேயே தி. மு. கழகத் தீர்மானத்தில் துணிச்சலாகப் பிரதிபலிக்கும் நாட்டுப் பற்று இழை பின்னிக் கிடப்பதை அப்போது கம்யூனிஸ்டுகள் கேலி பேசினர். காங்கிரஸ்காரர்கள் நேருவுக்கு எதிராகப் போடப்படும் தீர்மானம் என்று கூறினர்.

நெடு நாட்களுக்கு முன்பே சீனாவை ஆக்ரமிப்புப் போர் துவக்கும் நாடாகப் பிரகடனப்படுத்திய கழகத் தலைவர்களோ அக்டோபர் 20-ல் சீனா போர் துவங்கிய பின்னரும் சிறையிலிருந்து விடுதலை செய்யும் பெருந்தன்மை காங்கிரஸ் ஆட்சிக்கு ஏற்படவேயில்லை.

தி.மு.கழகம் நெடு நாட்களுக்கு முன்பு சொன்னதையே 1962 அக்டோபர் 22 அன்று வாஞ்சலியிலும் நாடாளு மன்றத்திலும் பேசுகையில், ''இதுவரை ஏற்பட்டிராத பேராபத்து சீனரின் ஆக்கிரமிப்பு மூலமாக இப்போது ஏற்பட்டிருக்கிறது. இப்போர் நீடிக்கக் கூடும். மனநிலைகளிலும் பிற முறைகளிலும் நாம் இதற்கு ஆயத்தமாக வேண்டும்'' என்று பண்டித நேரு பேசினார்.

இந்தப் பேச்சில் நேரு அவர்கள் வஞ்சிக்கப்பட்ட மனிதராக மட்டும் தோற்றமளித்திடவில்லை. புகழேணியின் உச்சியிலிருந்து பல படிகள் சடாரெனச் சரிந்து கீழே இறங்கி விட்டவராகவும் ஆகி விட்டார். போலந்தின் மீது இட்லர் படையெடுத்தவுடன் இங்கிலாந்தின் பிரதமர் சேம்பர்லேன் மதிப்பு மங்கிடத் தொடங்கி விட்டதைப் போலவே அக்டோபர் 20 அன்றே பண்டித நேரு பலவிதக் கடுமையான விமரிசனங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய பரிதாப நிலைக்கு இறங்கி விட்டார்.

அதுவரையில் அவர் கொண்டிருந்த நம்பிக்கைகள்—பயின்றிட்ட அரசியல் துறைகள்— சேர்ந்திட்டபுகழ் சேமித்த செல்வாக்கு அத்தனையும் நொறுங்கத் தலைப்பட்டன என்றே சொல்ல வேண்டும்' அக்டோபர் 22-ல் பண்டித நேரு மேலும் பேசுகையில், ''நாட்டில்

உள்ள எல்லா கட்சிகளும், குழுக்களும் இந்த நிலையில் ஒன்றுபடும் என்று நான் உண்மையாக நம்புகிறேன். அவை தங்களிடையே உள்ள தகராறுகள், வாதங்கள் ஆகியவற்றைக் கைவிட்டு, நமது சுதந்திரம், நேர்மை ஆகியவற்றை அபாயத்தில் இழுத்து விடுவோரை ஒற்றுமை யாகவும் உறுதியாகவும் சமாளிக்கும் என்று நம்புகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார். இப்படிக் குறிப்பிட்டாரே தவிர, அறிஞர் அண்ணு அவர்களின் ஒத்துழைப்பைக் கோரி நேரு அவர்கள் அண்ணு வைப் பூட்டியிருந்த சிறைச்சாலை முகவரிக்குத்தான் தந்தி கொடுத் தார்.

அந்தத் தந்திக்கு அறிஞர் அண்ணு அவர்கள், ' என்னைச் சிறை யிலிருந்து விடுவிக்க மனமில்லை. ஒத்துழைப்பைக் கோருவது என்ன நியாயம்?' என்று கேட்கவில்லை; மாறாக, ' உங்கள் தந்திக்கு நன்றி. நான் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதால் வர இயலாமைக்கு வருந்துகிறேன். நிலைமைகளை எளிதாக்கத் தகுந்த வழிமுறைகளைக் கையாளும் உங்கள் திறமையில் எனக்குள்ள நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தான் பெருந்தன்மையோடு பதில் தந்தி கொடுத்தார்.

அடுத்து, இரண்டு நாள் கழித்துத் தண்டனைக் காலம் முடிந்ததும் அறிஞர் அண்ணு 97 நாள் சிறைவாசத்திற்குப் பிறகு வேலூர் சிறை யிலிருந்து 24-10-62 அன்று விடுதலை ஆனார்.

அன்று மாலையே வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் நடை பெற்ற கூட்டத்தில் சீன ஆக்ரமிப்புப் பற்றிய பிரச்சினையில் தி.மு. கழகத்தினர் நிலை என்ன என்பதைத் திட்டவட்டமாக, வேறு வகை வியாக்கியானத்திற்கு இடமே இன்றி தெளிவாகத் தெரிவித்தார்.

''சீனர்களின் ஆக்கிரமிப்பை நாம் ஒரு போதும் சகித்துக் கொண் டிருக்க மாட்டோம். ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள சீனர்களின் காலடி திருப்பி எடுக்கப்படும் வரை திராவிட முன்னேற்றக் கழகம் நேருவின் கரத்தை வலுப்படுத்தும்... டெல்லியில் இருப்பவனையே நமக்குப் பிடிக்கவில்லை என்றால், எங்கோ-பீகிங்கில் இருப்பவனையா நமக்குப் பிடிக்கும்?

''எதிரிகளிடமிருந்து முதலில் நாட்டை மீட்ட பிறகு தான், நாட்டுப் பிரிவினையே தவிர, எல்லையில் எதிரிகளை நுழைய விட்டா, பிரிவினை வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்க முடியும்? 'வடக்கே நடக்கிற யுத்தம் பற்றி மக்களுக்கு ஒன்றும் புரியவில்லையே' என்கிறார் கள். எப்படிப் புரியும்? பேச வேண்டியவர்கள் கேட்டால் தானே புரியும்?"

ஆம்! பேச வேண்டிய அறிஞர் அண்ணுவும், தி.மு.கழகத் தலைவர் களும் பேசிய பின்னர் தான் தமிழகத்தில் மட்டுமல்ல; வடக்கிலும் —ஏன் யுத்த களத்திலும் கூட— சீனரின் ஆக்கிரமிப்பைப் பற்றி மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளத் தொடங்கினார்கள்!

77

திருச்சியிலிருந்து விடுதலை பெற்றேன்

அறிஞர் அண்ணா விடுதலை செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு அக்டோபர் 26-ல் நான் திருச்சி சிறையிலிருந்து விடுதலையானேன். சிறை வாசலில் அறிஞர் அண்ணா என்னை வரவேற்றார். நான் விடுதலையான அக்டோபர் 26-இல்தான் நாட்டில் நெருக்கடி நிலைமை குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. தண்டனைக் காலம் முழுவதும் முடிவுற்றது.

திருச்சியில் நான் சிறையிலிருந்து வெளி வந்த பின்னர் இந்தச் செய்தி அண்ணாவுக்குக் கிடைத்தது. உடனே என்னைப் பார்த்து, 'நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தித் தான் உன்னை வெளியே விடுகிறார்கள் பார்த்தாயா?" என்று அண்ணா அவர்கள் தமக்கே உரிய புன்சிரிப்போடு கேலியாகக் குறிப்பிட்ட காட்சியினை என்னால் மறக்க முடியுமா?

அதே போல் அடுத்து அக்டோபர் 28 அன்று அறிஞர் அண்ணாவுக்கும் எனக்கும் சென்னையில் நடைபெற்ற ஊர்வலத்தையும் நண்பர் என். வி. என். தலைமையில் சென்னைக் கடற்கரையில் மக்கட்கடல் திரண்டு அளித்த வரவேற்பின் மாட்சியினையும் என்னால் மறக்க முடியாது.

1962 அக்டோபர் 26-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்ட நான் நேரே சென்னை வந்து என் வருகையை எதிர்பார்த்து மனத்திற் குள்ளேயே குமைந்து கிடந்த என் அன்னையைப் பார்க்க முடியாமல் தோழர்களின் அன்புத் தொல்லை என்னைத் தடுத்துவிட்டது. விடுதலையானவுடன் திருச்சியில் என்னை வரவேற்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டேன்.

அன்று மாலை தஞ்சையிலும், மறுநாள் திருவாரூரிலும் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றேன். இடையேயுள்ள ரயில் நிலையங்கள் அனைத்திலும் ஆயிரக்கணக்கான கழக மக்கள் திரண்டிருந்து என்னைக் கண்டு வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர்.

28-ம் நாள்காலை திருவாரூரிலிருந்து புறப்பட்டுநேரே சென்னைக்குத் தான் வந்திருக்க வேண்டும். ஆனால் அண்ணா அவர்கள் காஞ்சியில் தங்கியிருந்தார்கள். "மதிய உணவுக்குக் காஞ்சிக்கு வந்துவிடு. மாலையில் இருவரும் புறப்பட்டு சென்னை சேர்ந்து ஊர்வலத்தில் கலந்து



கொள்ளலாம்" என்று ஆணை பிறப்பித்தார் அண்ணு. அவ்வாறே சென்று, சென்னை ஊர்வலமும் பொதுக்கூட்டமும் முடிந்து, நள்ளிரவில் வீட்டுக்குச் சென்றேன். என்னையின்றெடுத்த அன்புத் தெய்வம் வெளிப்புறத்துக் கூடத்தில் கண்ணுறங்காமல் வெற்றிலை உரலுடன் அமர்ந்து காத்திருந்தது.

என்னுடன் வந்த அண்ணு அவர்களைப் பார்த்து, "அண்ணு தம்பி! உங்கள் அம்மா உங்களை ஒரு நாள் பிரசவ வேதனையோடு பெற்றிருப் பார்கள். அதனால் நீங்கள் வேலூரிலிருந்து விடுதலையானவுடன் நேரே காஞ்சிபுரம் சென்று உங்கள் அம்மாவைப் பார்த்தீர்கள். ஆனால் என் பிள்ளையை நான் பல நாள் இடுப்பு வலி—பிரசவ வேதனைகளுக்குப் பிறகு பெற்றெடுத்தேன். அதனால்தான் திருச்சியில் விடுதலையான என் பிள்ளை மூன்று நாள் கழித்து அவசரமாகத் தன் அம்மாவைப் பார்க்க வந்திருக்கிறதோ?" என்று வேதனை கலந்த தனது ஆற்றுமையை வேடிக்கை போலக் குறிப்பிட்டார்கள்.

அக்டோபர் 28 கடற்கரைக் கூட்டத்தில் தான் "வீடு இருந்தால் தானே ஓடு மாற்ற முடியும்? வீட்டுக்கே அல்லவா ஆபத்து வந்திருக் கிறது?" என்ற புகழ் பெற்ற சொற்பொழிவை அறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றினார்கள். லிங்கனின் கெட்டிஸ்பர்க் உரையைப் போல, லெனின் பேசிய பெட்ரோகிராட் சொற்பொழிவைப் போல, சர்ச்சிலின் பதவியேற்புப் பேச்சினைப்போல அறிஞர் அண்ணுவின் இந்தப் பேச்சு எங்கள் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டதாகும்.

அந்தக் கூட்டத்தில் தான், "இப்போது நடப்பது ஜனநாயகத் துக்கும் சர்வாதிகாரத்துக்கும் நடைபெறும் தத்துவப் போராட்டம் ஆகும். ஜனநாயகம் சிரித்த முகத்தோடு இருக்கும். ஆரம்ப சூரத்தனம் அதனிடத்தில் இருக்காது. எனினும், அது ஆழ்ந்த ஆறு போன்ற தாகும். அதில் ஆழம் தெரியாது இறங்கினால் அழுந்திப் போவார்கள்.

"ஜனநாயகத்துக்குத் தாங்கும் சக்தியும் உண்டு; தாக்கும் சக்தியும் உண்டு. இன்றைக்கு பீக்கிங்கிலே இருப்பது ஜனநாயகம் அல்ல

சர்வாதிகாரம் தோற்தல் நடக்கும். ஆனல் ஒரே கட்சிதான் போட்டியிடும். ஒரே தலைவர்தான் இருப்பார். அவர் அறிக்கை விடுவார். அதை மக்களுக்குப் படித்துப் பொருளும் சொல்லி விடுவார்கள். அடுத்த அறிக்கை வந்தாலும் அதற்குப் பொருளும் கூடவே வரும்." சீனவின் ஆக்கிரமிப்புப் பற்றியும், அதன் விளைவு பற்றியும், ஆக்கிரமிப்பை முறியடிக்க வேண்டியதைப் பற்றியும், 'பேச வேண்டியவர்கள் பேசத் தொடங்கி விட்டார்கள்' என்பதை இந்தப் பேச்சு நூற்றுக்கு நூறு மெய்ப்பித்துக் காட்டிவிட்டது.

இமயத்தின் உச்சியில் நடைபெறும் ஜனநாயக—சர்வாதிகாரப் போராட்டத்திற்குத் தெற்கே குமரி முனையிலிருந்து தான் சரியான விளக்கமும் மக்கள் புரிந்து கொள்ளும் மகத்தான சங்கதிகளும் நாள் தோறும் வெளிவரத் தொடங்கின.

சீனரின் ஆக்கிரமிப்பு இந்தியாவை அதிர்ச்சியுறச் செய்தது என்ருல், அது சம்பந்தமாகக் கழகம் மேற்கொண்ட திட்டவட்டமான முடிவுகளும், கழகத் தலைவர்கள் பேசிய பேச்சுக்களும், அனைவரையும் வாய் பிளக்கச் செய்து வியப்பில் ஆழ்த்தின.

சீன ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் நாட்டின் ஒருமைப் பாட்டுக்கு உறு துணையாகவும் 1962-இல் முதலில் நடைமுறை சாத்தியமான குரல் கொடுத்தது தி.மு. கழகம்தான்.

அது மட்டுமல்ல; சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து நின்ற இந்திய வீரர்களில் முதல் நாளிலேயே இதில் களப்பலியானவரும் ஒரு தமிழ் மகன் தான். தூத்துக்குடியைச் சேர்ந்த வீரன் செல்வராஜ் என்பவர் தான் அந்த மாவீரன். இரண்டாவதாகப் பலியான தமிழ் மகன் தஞ்சை மாவட்டம் சீர்காழியைச் சேர்ந்த அப்துல் வகாப்.

பிரிவினைக்கு வித்தூன்றுவதாகப் பேசப்பட்ட தமிழகத்திலிருந்து தான் எல்லையைக் காப்பதற்குக் களப்பலியும், கருத்துரைகளும், நிதித் தொகையும் முதன் முதலாக வேகமாக வெள்ளம் போல் பெருக்கெடுத்து இமயத்தின் முடியைத் தொட்டன.

நாட்டிலேயே, தனியானதொரு கட்சியின் சார்பில் ஒருநாள் சில மணி நேரத்தில் பெருந்தொகையைப் பாதுகாப்பு நிதியாகத் திரட்டி அளித்திட்ட பெருமையும் தி.மு. கழகத்திற்கு மட்டுமே கிடைத்திருப்ப தாக நான் கருதுகிறேன்.

டிசம்பர் 2-இல் கழகப் பொருளாளர் என்ற முறையில் நான் பொறுப்பெடுத்து எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் ஏற்பாடு செய்த பாதுகாப்பு நிதி வசூல் கூட்டத்தில் சில மணி நேரத்திலேயே 35, 000 ரூபாய்க்கு மேல் திரண்டது. இந்திய அரசியல் கட்சிகள் திரட்டிக் கொடுத்த பாதுகாப்பு நிதி வசூலில் இது ஒரு சாதனை என்று அப்போது பேசப்பட்டது

இந்தச் சாதனை மட்டுமல்ல; தி.மு. கழகத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வேறெருரு சாதனையும் சாத்தியமாயிற்று. நெடுகிலும் இந்தித் திணிப்பை எதிர்த்து வந்திருக்கும் தி.மு.கழகத்தின் உணர்ச்சிகளையும் அது நாட்டுப் பாதுகாப்புக்கு அளிக்கும் உருப்படியான ஒத்துழைப்பையும் புரிந்து கொண்ட பண்டித நேரு அவர்கள் தமிழகத்திற்காக மட்டுமே பிரத்தியேகமாக மத்திய அரசின் சார்பான விளம்பரம் ஒன்று வெளிவர ஏற்பாடு செய்தார். அது மட்டுமல்ல, வழக்கத்திற்கு மாறுக இந்த விளம்பரம் தி.மு. கழக ஏடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுக் கட்டாயம் வெளியிட்டே ஆகவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

''பிரதம மந்திரியின் உத்தரவாதம்" என்பது அந்த விளம்பரத்தின் தலைப்பு.

''ஆங்கிலம் ஓர் இணை மொழியாக நீடித்து இருக்கும். இந்திமொழி பழக்கத்தில் இல்லாத பிராந்தியங்களின் மக்கள் விரும்பும் வரை ஆங்கில மொழியை அகற்ற மாட்டேன்—இங்ஙனம் 'ஜவஹர்லால் நேரு" என்பதுதான் அந்த விளம்பரம். இந்த விளம்பரத்தின் வாசகங்கள் தான் அடுத்து வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் போதும்—குறிப்பாக 1965-இல் கழகத்தோழர்களுக்குப் பலமான-வலிவான-கேடயமாக அமைந்தன. இவை போல் பல முனைகளிலும் ஆக்ரமிப்பாளர்களுக்குத் தோல்வியைக் கொடுக்கவும் கழகத்தின் உன்னதக் கொள்கைகளுக்கு வலிவு பிறக்கவும் கழகமும் கழகத் தலைவர்களும் பணியாற்றி வந்த நேரத்தில் தான் பரிதாபத்துக்கு உரிய முறையில் திடீர் விபத்துக்கு உள்ளாகி உருவத்தைச் சிதைத்துக் கொண்டனர் கம்யூனிஸ்டுகள்.

''சீன ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டுப் பரிதாபமாகத் தோற்ற மளிப்பது கம்யூனிசமும்—கம்யூனிஸ்டுகளுமே," என்று கிருஷ்ணமேனன் அகற்றப்பட்டதும் பாதுகாப்பு அமைச்சராக்கப்பட்ட சவான் அவர்கள் பதவியேற்றதும் முதலில் பேசிய பேச்சிலேயே கேலி பொங்கக் குறிப்பிட்டார். கம்யூனிசம் தலை குனிந்தது. கம்யூனிஸ்டுகள் 'தலை எது—கால் எது' என்று தங்கள் உடலுறுப்புகளுக்குள்ளாகவே சந்தேகப்பட்டுச் சண்டை போட்டுச் கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர்.

இந்த அவல நிலைக்கு இமயத்தின் உச்சியில் ஆக்கிரமிப்புப் போர் நடத்திய சீனர்கள் மட்டுமல்ல; அதே 1962 அக்டோபர் அட்லாண்டிக் மாகடலின் ஆழப் பகுதியான பன்றி விரிகுடா (Bay of Pigs)யில் ரஷ்யாவின் போர்த் தளவாடக் கப்பல்களை முற்றுகையிட்டு நிறுத்திய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடியின் நடவடிக்கையும் ஒரு காரணமாகும்.

கம்யூனிச உலகத்தை இரு கூறுகளாகப் பிடித்து உடைத்துப் பலமற்றுப் போகுமாறு செய்ததில் நேருவின் ஆர்வமும், கென்னடியின் துணிச்சலும் சரிபங்கு எடுத்துக்கொண்டன.

1971-இல் வங்க நாட்டு மக்களின் விடுதலைக்காக நாம் மேற் கொண்ட மனிதாபிமான மிக்க நடவடிக்கைகளைக் கண்டு பொறுத பாகிஸ்தான், டிசம்பர் 3--ஆம் தேதி வாக்கில் இந்தியா மீது போர்ப் பிரகடனம் செய்து, நேரடி ஸ்மரதலில் இறங்கியது.

78

நாமும் அமெரிக்காவும்

அன்று நான் என்னுடைய முதன் முதலான அமெரிகக் சுற்றுப் பயணத்தை முடித்து நாடு திரும்பும் வழியில் இருந்தேன். நான் சென்னைக்கு வரும் அன்றே டிசம்பர் 5-இல் எனக்கு வரவேற்பு அளிப் பதற்காக நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியைப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டமாக மாற்றுமாறு வெளிநாட்டி லிருந்தே கேட்டுக் கொண்டேன்.

பாகிஸ்தான் இந்தியா மீது நேரடிப் போரைத் துவக்கியதும் இந்தியாவிலேயே முக்கிய அரசியல் கட்சிச் சார்பாக முதன் முதலில் நடை பெற்ற கண்டனக் கூட்டம் அதுதான் என்பது என் கருத்து கலிவாணர் அரங்கில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் நான் பேசுகையில் என்னுடைய சுற்றுப் பயண அனுபவத்தைச் சுருக்கமாக விளக்கிவிட்டு, அமெரிக்காவில், நிக்சன் நிர்வாகம் மட்டுந்தான் இந்தியாவுக்கு எதிர்ப்பாகச் செயல்படுவதாகவும், அமெரிக்க மக்களும் அதன் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் இந்தியாவின் சார்பாகவே ஆதரவும் அனுதாபமும் காட்டி நிற்பதாகவும், நான் அங்கு சந்தித்த அரசியல் கட்சித்தலைவர்கள், செனட்டர்கள் ஆகியோரின் பெயரைச் சொல்லி, இந்தியா-பாகிஸ்தான் போர் பற்றி அவரவர் தெரிவித்த கருத்துக்களையும் விளக்கினேன்.

அது மட்டுமல்ல; ''சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தூங்கு கின்ற புலியை இடறியிருக்கிறார் பாகிஸ்தான் சர்வாதிகாரி. இதற் குள்ளாகவே அவர் இழந்து விட்டவை அநேகம். இந்த இழப்புக்கள் ஆரம்ப இழப்புக்கள்தாம். இழப்பின் முடிவு எதுவாக இருக்கும்? ஒரு வேளை பாகிஸ்தான் நாடு முழுவதுமாகவே இருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை'' என்று குறிப்பிட்டு என் பேச்சை முடித்தேன். கலிவாணர் அரங்கில் நான் பேசிய கருத்துக்களைத்தான் தொடர்ந்து சட்ட மன்றத்திலும் வானொலியிலும் வலியுறுத்தினேன்.

ஆனால், என் கருத்துக்களைத் திரித்துக் காங்கிரஸ் கட்சியினரும், கம்யூனிஸ்டுகளும், தி. மு. கழகத்திற்கு எதிர்ப்பான ஏடுகளும் செய்த பிரச்சாரம் என்ன?

என்னே ''அமெரிக்கதாசன்'' என்ருர்கள். ''ஆறு வாரகால விருந்தினராக அழைத்ததாலேயே நமது முதலமைச்சர் அமெரிக்காவுக்கு வால் பிடித்து நம் தேசத்துக்குத் துரோகம் செய்கிருர்'' என்ற பொருளில் காமராசர் ஏடு ஒன்று தலையங்கமே தீட்டிற்று. இதைவிட அவதூருன வார்த்தைகளால் என்னைப் பழித்துப் பேசுவதற்குக் கம்யூனிஸ்டுகள் அப்போதையப் போர் ஆதரவு மேடைகளைப் பயன் படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

இந்தப் பழிச் சொற்களை நாடு செவி சாய்த்துக் கேட்டதா என்பதற்குக் கிடைக்கும் விடை ''பூஜ்யம்'' தான். என்ருலும், இவைகளைக் கேட்டபோது, 1962-இல் சீனப் போரின் போது, அமெரிக்க அதிபராகயிருந்த கென்னடி நம் போரில் காண்பித்த அக்கறையும், நாம் கேட்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த நேரத்திலேயே போர்த் தளவாடங்களை அனுப்பிக் கொடுக்கக் காண்பித்த ஆர்வமும் என் நினைவுக்கு வரும்.

1971-இல் இந்தியாவுக்கு எதிராக—பாகிஸ்தானுக்கு ஆதரவாக—செயல்பட்ட நிக்சன் நிர்வாகத்தைக் கழகத்தைக் காட்டிலும் கண்டித்தவர்கள் வேறு இல்லை. சட்டமன்றத்திலும் வானெலியிலும் அமெரிக்க அரசாங்கம் இந்தியாவுக்குச் செய்யும் அநீதியை என்னைக் காட்டிலும் அழுத்தமாக யாரும் கண்டிக்கவில்லை. ஆனல், அமெரிக்க மக்களையே நமது பிறவிப் பகைவர்களாகப் பிரச்சாரம் செய்த கம்யூனிஸ்டுகளின் மாய்மாலத்தை நானும் கழகத் தோழர்களும் ஒப்புக் கொள்ளவில்லை.

1971-இல் நிக்சனின் நிர்வாகம் செய்கின்ற தவற்றினை மட்டும் கண்டு, 1962-இல் கென்னடி நிர்வாகம் நமக்குச் செய்த உதவிகளை மறப்பது கூடாது; ஜனநாயகத்தில் அவ்வப்போது மாறுபடும் அரசாங்கத்தின் செயல் முறைகளை வைத்து அந்த நாட்டு மக்களையே வெறுக்கும் மனப்போக்கு கூடாது என்பதுதான் ஜனநாயக மேதையான என் அண்ணனின் போதனை. இதைப் பின்பற்றித்தான் ஏன் கருத்துக்களை வலியுறுத்தினேன்.

1971-இல் ஜனநாயக அரசியல் நடத்தும் நாடுகளின் அரசாங்கத் தவறுகளைக் காட்டியே, அந்த நாடுகளின் ஒட்டு மொத்தமான மக்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்தும் முயற்சியை மேற்கொண்ட கம்யூனிஸ்டுகள் தோல்வியுற்ருர்கள் என்றே சொல்ல வேண்டும்.

என் நாட்டுப்பற்றையே திரித்துக் குறை கூறித் திசை திருப்ப முயற்சி செய்த கம்யூனிஸ்டுகள், 1962 சீனப் போரின் போது காண்பித்த நாட்டுப்பற்று என்ன? அவர்களுடைய அபிமான நாடுகள் நமக்கு அப்போது அளித்த ஆதரவுகளின் தன்மை என்ன?

சீன ஆக்கிரமிப்புப் போரின் போது ரஷ்யா நடந்துகொண்ட முறை பாராட்டத்தக்கது அல்ல. இந்தியாவுக்குக் கொடுப்பதாக ஏற்கெனவே அது வாக்களித்திருந்த விமானங்களை அனுப்புவதற்குக்கூட அது தயக்கம் காட்டிற்று. சீனா பிடித்துக் கொண்ட நிலப் பகுதிகள் சீன நாடுகளுக்குச் சொந்தமானவையே என்று கருத்தறிவிக்கும் பாவனையிலும் அது செயல்பட்டது.

திடீரெனச் சீனாவுடன் நமக்கு ஏற்பட்ட போரில் துவக்கத்தில் திகைத்துத் திணறினோம். ஏராளமான போர் வீரர்களைப் பலி கொடுத்தோம். தேஜ்பூர் வரை சீனர்களின் ஊடுருவல் நம்மைப் பயமுறுத்திற்று. "இன்றைய உலகத்தின் பிரத்தியேக நிலைமைகளை உணராமலேயே கற்பனையான- செயற்கையான மனப் போக்கில் இதுகாறும் காலங் கடத்தி வந்திருக்கிறோம்" என்று பண்டித நேரு இந்தச் சந்தர்ப்பத்தில் அடிக்கடி மனம் குமுறினார்.

இந்தக் குமுறலை மேலும் அதிகப்படுத்துவதாகவே ரஷ்யாவின் நடவடிக்கைகள் இருந்தன. ரஷ்யாவின் தூதுவராக அப்போது இந்தியாவில் இருந்த பெனடிக்டோவ் என்பவர் தமது அரசாங்கச் சார்பில் நேருவிடம் தெரிவித்த கருத்துக்கள் நமக்கு எரிச்சலைக் கொடுத்தன என்பதும் உண்மை.

சீனர்கள் ஆக்கிரமித்துள்ள இடங்களை மீட்பதற்காக (1) மேற்கத்திய ஆயுத உதவி கோரி இந்தியா முயற்சி செய்யக் கூடாது. ஏனென்றால், மேற்கத்திய அரசுகளுக்கிடையில் இருந்து வரும் கெடுபிடிப் போரில் இந்தியாவையும் சிக்கச் செய்யும் செயலாக இது முடியும். (2) எல்லையில் நடைபெற்றுள்ள ஆக்கிரமிப்பு பற்றி, இந்தியா ஐ. நா. சபையில் பிரச்சினை எழுப்பவே கூடாது; ஏனென்றால் ஐ. நா. சபையில் இதுபற்றிய விவாதம் எழுந்தால் ரஷ்யா சீனாவைத்தான் ஆதரிக்கும். (3) சீனாவுடன் இந்தியா தொடர்ந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும். இவைதான் சீனப் போரின்போது ரஷ்யா நமக்குத் தந்த 'அறிவுரைகள்.'

இந்தப் போதனைகள் அனைத்துமே ஜனநாயக நாட்டுக்கு ஒரு சர்வாதிகார நாடு விடுக்கும் அறைகூவலாக அப்போது நாம் எடுத்துக் கொண்டோம். கம்யூனிச நாடுகள் பற்றியே மக்களிடையில் பலமான மறுபரிசீலனை உணர்வு எழுந்தது. கம்யூனிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்ட் தோழர்கள் என்றாலே மக்கள் வெறுப்போடு பார்க்கும் சூழ்நிலை நிலவிற்று.

டெல்லியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அலுவலகத்தைத் தாக்கி மக்கள் தீயிடவும் முயன்றனர். இந்தச் சம்பவத்தின்போது, அந்தக் கட்டத்திற்குள் சிக்கிக் கொண்டு தினறாடியவர்களில் நமது

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர்களும் சிலர் இருந்தார்கள். செய்திகள் வெளிவந்தன. ஆக்கிரமிப்புச் செய்த நாடாகச் சீனாவைக் கருதி, அதனைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றக்கூட, கம்யூனிஸ்டுகள் கைவசம் இருந்த ஆலப்புழை நகராட்சி போன்ற அமைப்புகள் மறுத்தன. ''சீனா ஒரு போதும் தவறு செய்யாது. ஏனென்றால், அது நமக்கு சகோதரன்'' என்று சில கம்யூனிஸ்ட் தோழர்கள் வாதிட்டனர். ''என்றைக்கு இருந்தாலும் சீனர்கள் நமக்கெல்லாம் வழிகாட்டிகள் என்பதை மறந்துவிடக் கூடாது. அனைத்து நாட்டுக் கம்யூனிசத்தை மேலோங்கச் செய்வதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நமக்கு முன்மாதிரியாக விளங்குகிறது'' என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, தன் கட்சியினருக்கு ஓர் இரகசியச் சுற்றறிக்கை அனுப்பியதாகவும் அப்போது பத்திரிகைகள் அம்பலப் படுத்தின. நமது கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரம் அவர்கள், 'நம்மைத் தாக்கியது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அல்ல; சீனத் துருப்புக்களே'' என்று தனக்கே உரிய 'தீட்சண்யப் பார்வையால்' அறிந்து தமிழகக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் முழக்கினர்.

''கல்யாணசுந்தரம் போன்றவர்கள் நடவடிக்கையும் பேச்சுக்களும் 'கம்யூனிஸ்ட் கட்சியினர்' என்றுலே 'மாஸ்கோவுக்கு ஏஜண்டுகள்' என்று சொல்லப்படுவதை உறுதிப்படுத்தவில்லையா?'' என்று கேட்டு அப்போது தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளராக இருந்த பெரியவர் மணலி கந்தசாமி அவர்களும் உள்பட கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களே கடிதங்கள் எழுதினர்கள்.

ஆனால், அறிஞர் அண்ணாவோ, தி. மு. கழகமோ அன்று முதல் இன்றுவரை வேற்று நாடுகளுக்கு விசுவாசம் காட்டுவதாகவோ, வெளிநாட்டு 'இசங்' களுக்கு வியாக்கியானம் செய்வதையே கொள்கையாகக் கொண்டிருப்பதாகவோ எந்தக் கருத்துக் குருடனும் மனமாரச் சொல்ல முடியாது.

சுருக்கமாகத் தமிழில் விளக்கிச் சொல்லக் கடினமான சில ஆங்கில வார்த்தைகளில், ''Son of the Soil'' என்பது ஒன்று. இந்தப் பட்டம் எல்லாத் தலைவர்களுக்கும் எளிதாகக் கிடைப்பதில்லை. ஆனால், அறிஞர் அண்ணா அவர்களிலிருந்து தி. மு. கழகத் தோழர்கள் அனைவருக்குமே இந்தப் பட்டம் இயல்பாகப் பொருந்தும். இதைத்தான் 1962 சீன ஆக்கிரமிப்பின் போது, நாங்கள் அறிஞர் அண்ணா தலைமையில் துல்லியமாக நிரூபித்தோம்.

''கழகத்தின் உயிர் கொள்கையாக இருந்த திராவிட நாடு பிரிவினைத் திட்டத்தைப் போர் மேகம் கலைகின்றவரை கண்டிப்பாக

வலியுறுத்தப் போவதில்லை'' என அறிஞர் அண்ணா திட்டவட்டமாக அறிவித்து அதில் உறுதியோடு நின்றார்.

மூன்று மாதச் சிறைவாசத்திற்குப் பிறகு, முதன்முதலாக 1962 நவம்பர் 5-ஆம் நாளன்று அறிஞர் அண்ணா டெல்லிக்குப் போனார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளில் ஒன்றுக்குப் பதில் அளிக்கையில், ''இந்திய எல்லையில் சீன ஆக்கிரமிப்பு ஒழிக்கப்படுகின்ற வரை திராவிடநாடு பிரிவினை பற்றிப் பேசமாட்டோம். நாங்கள் நினைப்பதைச் சொல்வோம் — சொல்வதைச் செய்வோம்'' என்று சொன்னார். சொல்வதைச் செய்து காட்டுவதில் கழகமும் எடுத்துக் கொண்ட முயற்சி பெரிது.

சீன ஆக்கிரமிப்பின் கேடுபாடுகளை விளக்கும் அதே வேகத்தில், அதே வகைத் தெளிவுடன் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்தாத நிலைமைகளையும் நாங்கள் ஒவ்வொருவரும் மேடைதோறும் விளக்கிடத் தவறியதில்லை.

அறிஞர் அண்ணாவும் நானும் பிறரும் சிறையிலிருந்து வெளி வந்தவுடன் ஓய்வு ஒழிச்சலின்றிப் போர் ஆதரவு முயற்சியில் ஈடுபட்டுப் பணியாற்றி, 'உதட்டளவு தேசியவாதிகள்' வெட்கும்படி செய்து கொண்டிருந்தபோது, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் நவம்பர் 8-ல் விடுதலை செய்யப்பட்டார்.

சில நாள் முன்னதாக வெளிவந்த அண்ணாவும் நானும் பிறரும், சீன ஆக்கிரமிப்புப் பற்றியும், திராவிடநாடு பிரிவினைக் கொள்கை பற்றியும் என்ன கருதுகிறோம் என்பதைக் கலந்துபேசி அறிந்திடாத நிலையிலேயே நாவலர் அவர்கள் சிறை நீங்கி வெளிவந்ததும் விடுத்த அறிக்கையில் எங்கள் கருத்தையே எதிரொலித்தார்.

இதனைக் கண்டு அறிஞர் அண்ணா மகிழ்ந்தார். வேலூர் சிறையில் அண்ணா என்ன சிந்தித்தாரோ அதையே நான் திருச்சி சிறையில் நினைத்தேன். நாவலர் சென்னைச் சிறையில் யோசித்தார். இத்தகைய கருத்து ஒற்றுமையைத்தான் 'குடும்பப் பாசம்' 'அண்ணன் தம்பிகள் உறவு' என்று அடிக்கடி அண்ணா சொல்லி மகிழ்வார்.

79

தென் மண்டலக் குழு

இதற்கிடையில், சீனுவைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்ற மறுத்த ஆலடிபுழை நகராட்சித் தலைவரான ஒரு கம்யூனிஸ்ட் தோழரின் நடவடிக்கையைப் பீகிங் ரேடியோ பெரிதாகப் புகழ்ந்தது. தினந்தோறும் அந்த வானொலியில் ஒரு தமிழ்ப் பெண்ணின் ஒலிபரப்பு நாட்டையே பரபரப்பில் ஆழ்த்திற்று. சீனுவுக்கு ஆதரவாக மட்டுமல்ல, மத்திய அரசுக்கு எதிராக ஒரு சாதாரணக் கருத்து வெளியிடப்பட்டாலும், அதற்குப் பீகிங் வானொலியில் பிரமாத விளம்பரம் கொடுக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலை மற்றவர்களைக் காட்டிலும் அறிஞர் அண்ணாவுக்கு மிகத் தெளிவாகப் புரிந்தது. ஆகவே, சீனுவைக் கண்டிக்கும் அதே வேகத்திலேயே பண்டித நேருவின் கரத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளையும், ஆதரவாக மக்களை அணிவகுக்கச் செய்யும் பிரச்சார அமைப்பையும் உருவாக்கினார்.

தெற்கு முனையில் ஏற்படும் சிறு சலனத்தையும் மிகச் சரியாகக் கண்காணிப்பதற்குச் சீனா இலங்கையில் பலமான ஏற்பாடுகளையே செய்திருப்பதாகவும் அப்போது தகவல் கிடைத்தது. ஆகையால், இமயம் எப்படி உறுதியான அரணாக இந்தியாவுக்கு இருக்கிறதோ, அதே போலக் குமரி முனையும் அசைக்க வொண்ணாக் கோட்டையாக நம் நாட்டைக் காவல் காத்து வருவதாக, டெல்லிப் பட்டணம் அல்ல, பீகிங் பட்டணம் அறிந்திட வேண்டும் என்பதற்காகக் கழகம் எடுத்துக் கொண்ட பிரச்சார முயற்சிகள் அதிகம்.

அப்போது தமிழகத் தொழில் அமைச்சராக இருந்த திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சென்னையில் ஒரு நாடகத்திற்குத் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில், "சீனா ஏன் பின் வாங்கிவிட்டது தெரியுமா? தென்னிந்தியாவில் திராவிடஸ்தான் கேட்பவர்கள் இருக்கிறார்கள். வடக்கே நாகநாடு கேட்பவர்கள் இருக்கிறார்கள். இப்போது நாம் படை எடுத்தால் அந்த இரு கோஷ்டியினரும் உள்நாட்டுக் குழப்பம் செய்வார்கள். நமக்கு அது சாதகமாக இருக்குமென்று சீனர்கள் கருதியிருக்கலாம். ஆனால், நிலைமை அவர்கள் நினைத்தபடி நடக்கவில்லை. எங்களுக்குள் எவ்வளவு பிணக்குகள் இருந்தாலும் இந்தியாவை இழக்க மாட்டோம் என்று

இரு சாராரும் அரசுடன் ஒத்துழைப்பதைப் பார்த்ததும்தான் சீனக்காரன் பின் வாங்கிவிட்டான் என்று நினைக்கத் தோன்றுகிறது'' என்று பேசினார். திரு வெங்கட்ராமன் போன்று நுணுக்கமான அரசியல் தெரிந்தவர்களே உணர்ந்து பாராட்டும் அளவுக்குக் கழகத்தில் நாட்டுப்பற்றும் நல்ல எண்ணமும் அந்நியன் நுழையக் கூடாது என்பதற்காகத் தனது உயிர் லட்சியத்தைக் கூட விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் அப்போது வெளிப்பட்டன.

அது மட்டுமா? பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக அப்போது தி. மு. கழகம் இருந்தது. எதிர்ப்படும் எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிவாகை சூடுவது தவிர, வேறு அறியாத அமைப்பாக இந்த நாட்டு மக்களின் செல்லப் பிள்ளையாக, உலா வந்தது. இருந்தும், அப்போது நடந்து தீர வேண்டிய நகராட்சித் தேர்தலையே ஒத்திப்போட வேண்டும் என்று கழகம் வாதாடியது. ''இன்று எல்லா வகையிலும் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு உடன்பாடு காண வேண்டும். நகராட்சித் தேர்தல்களில் சுயேச்சைகளே போட்டியிடட்டும். இல்லையேல் தேர்தலையே தள்ளிப் போட வேண்டும்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசினார். இதற்கேற்ப நகராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்கும் மசோதா ஒன்று சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது எதிர்க் கட்சித் துணைத்தலைவராக இருந்த நான், மசோதாவை ஆதரித்துப் பேசுகையில்-

''இந்தியத் துணைக் கண்டத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் மீட்கப்பட வேண்டும் என்பதற்காக சாமானிய-சாதாரண மக்களாகக் கொண்ட தி. மு. கழகம் தன்னால் இயன்ற உதவியைச் செய்து வருகிறது. புராணத்திலே இராமர், இலங்கைக்கு அணை கட்டும் போது அணில் உதவி செய்தது என்றும், அந்த அணிலின் முதுகில் இராமர் தடவிக் கொடுத்தார் என்றும், அப்படித் தடவியதால் ஏற்பட்டவைதான் அணிலின் முதுகில் உள்ள மூன்று கோடுகள் என்றும் கூறப்படுகிறது. அணிலைப் போன்று உதவி புரியும் எங்கள் முதுகில் நீங்கள் தடவிக் கொடுக்காவிட்டாலும் நெற்றியிலே மூன்று கோடு போடாமல் இருந்தால் அதுவே போதும்'' என்று குறிப்பிட்டேன். மசோதா நிறைவேறியது.

மசோதா பேரில் நான் பேசியபடியே, சில நாட்களில் காங்கிரஸ் காரர்கள் கழகத்தின் முதுகில் தடவிக் கொடுக்கவில்லை. நெற்றியிலே சூட்டுக் கோலால் கோடு போடும் கொடூரத்தைச் செய்வதற்குத் துணிந்துவிட்டார்கள். போர் முயற்சிக்கு ஆதரவாகவும் மக்களின் தன்னம்பிக்கையை மேலும் வளர்ப்பதற்கு வழி காணவும், 1962

டிசம்பர் 28, 29 நாட்களில் கழகத்தின் பொதுக் குழு சேலம் நகரில் கூடிற்று.

அதில், ''படைவீரர்களுக்குப் பாராட்டும் நன்றியும்'', ''அரசுக்கு வேண்டுகோளும் உறுதி மொழியும்'' என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கையிலேயே கன்னியாகுமரியில், டிசம்பர் 29, 30 நாட்களில் கூடிய தென்மண்டலக் குழுக் கூட்டத்தில் நான்கு மாநில அமைச்சர்களும் உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் கலந்து கொண்டனர்.

''இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்று கோருவது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது'' என்று சட்டமியற்றும் ஆலோசனைக்குத் தென்மண்டலக் குழு ஒருமனதாக ஆதரவு தெரிவித்தது. ''முடிந்தால் அடுத்த பாராளுமன்றக் கூட்டத்திலேயே இது தொடர்பான மசோதா வரலாம்'' என்று லால்பகதூர் சாஸ்திரி நிருபர்களிடம் டிசம்பர் 30-ஆம் தேதி மாலை தெரிவித்தார்.

சீனா எதை நம்பிப் படை எடுத்தது என்பது அரசியல் ரீதியாக அதுவரை வரையறுத்துச் சொல்லப்படவில்லை. ஆனால் அந்தப் படையெடுப்புச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கழகத்தின் குரல் வளையை நெரிப்பதற்குத் துணிந்துவிட்டது காங்கிரசுக் கட்சி.

கழகத்தின் கண்ணும் கருத்தும் வடக்கே இமயமலை அடிவாரத்தில் இருந்தபோது, குமரிமுனையில் தென் மண்டலக் குழு என்ற பெயரால் காங்கிரஸ் முதலமைச்சர்கள் செய்த முடிவு தி. மு. கழகத்தின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே அமைந்ததாக நாடு உறுதி செய்து கொண்டது.

தேவையே இல்லாத நேரத்தில் வீணான பிரச்னைகளை விடாப் பிடியாகப் பேசிக் கொண்டிருப்பது காங்கிரஸ் கட்சியின் அரசியல் பண்பாடாகி விட்டதால், பிரிவினையைத் தடுப்பதாகக் கூறிக் கொண்டு அவர்கள் எடுத்த முடிவு அதையே எதிரொலித்தது. ஆனால் கழகம் இந்த முடிவைக் கண்டு கலங்கிடவில்லை. காங்கிரஸ் கட்சியின் போக்கினைக் கேலி செய்யும் வகையில் கழகத்தின் உணர்வுகளும், செயல்களும் பெருந்தன்மையோடு எழுந்து நின்றன.

நாடு, எல்லை, சீன ஆக்கிரமிப்பு, நேருவுக்கு ஆதரவு, போர் முயற்சியில் பெரும் பங்கு என்பதுதான் கழகத்தின் அப்போதைய சிந்தனை, சொல், செயலாக மிளிர்ந்தன. ஆத்திரமூட்டப்பட்ட நேரத்தில் எல்லாம் பொறுமைக் காட்டிக் கழகம் தன் புகழை வளர்த்ததைப் போலவே இந்த நேரத்திலும் எதிர்க் கட்சியினர் வியக்கும் படியாகக் கழகம் பொறுப்புணர்வோடு பணியாற்றியது.



தென் மண்டலக் குழுவின் முடிவை யொட்டிக் கழகம் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளு ம் என்று காங்கிரஸ் கட்சி நினைத்ததோ அதற்கு நேர்மாறுகச் செயல் பட்டு, அதனை ஏமாற செய்ய வேண்டும் என்பதுதான் கழகத்தின் திட்டம். திருவண்ணுமலையில் நடைபெற்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் ப. உ. சண்முகம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்ததைத் தொடர்ந்து கழக வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்ற சூழ்ச்சி எண்ணம் தென்மண்டலக் குழுவின் வாயிலாக வெளிப்பட்டது என்று சொன்னுல் அது மிகையாகாது.

பிரிவினையைத் தடுப்பதற்குக் காங்கிரஸ் முதல்வர்களின் குழு முடிவெடுத்த நேரத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் விடுத்த அறிக்கையில், ''மண்டலக் குழு சட்ட நிலைப்படி பிரிவினைப் பிரச்சாரத்தைத் தடை செய்ய முடிவெடுத்துள்ளது. ஆனல் உண்மை நிலைப்படி பார்த்தால் பிரிவினைப் பிரச்சாரம் நிறுத்தப்பட்டு விட்டிருக் கிறது. இவ்வாறிருக்கையில் மண்டலக் குழு இப்படி ஒரு முடிவெடுக்கத் தேவையில்லை என்று கருதுகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

80

தங்கக் கட்டுப்பாடு

தொடர்ந்து கழகம் போர் நிதி திரட்டும் காரியத்திலும், போர்ப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டது. இதற்கிடையே மத்திய அரசின் தங்கக் கட்டுப்பாடு சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. வெறும் வரட்டுச் சித்தாந்தங்களும், நடை முறைக்கு ஒவ்வாத முழக்கங்களும் அவசரப் பட்டுச் செயல்படுமேயானால் நாட்டு மக்களுக்கு எத்தகைய இன்னல்கள் வந்து சேரும் என்பதற்குத் தங்கக் கட்டுப்பாடு சட்டம் ஒரு சான்றாகும். மக்கள் மனத்தினைப் பிரச்சாரத்தால் மாற்றிப் படிப்படியாக வர வேண்டிய நிதி நியதியைத் திடுமெனச் சட்டத்தின் மூலம் சாதிக்க நினைப்பதில் உள்ள கேடுபாடுகளைத் தங்கக் கட்டுப்பாடு சட்டம் நன்கு உணர்த்தியது.

இந்தச் சட்டம் நாட்டில் உருப்படியாகச் சாதித்துக் கொடுத்தது என்ன என்பது இன்னமும் விடுவிக்கப்படாத புதிர்தான். அதே போல, இன்று அந்தச் சட்டம் என்னவாயிற்று என்பது தேடி விடை காண வேண்டிய ஒன்றாகும். ஆனால் திடீரென வந்த அந்தச் சட்டம் லட்சோப லட்சம் மக்களைத் திக்கு முக்காடித் திணறச் செய்து விட்டது. இந்தச் சட்டத்தால் வடக்கில் பெரும் பணக்காரர்களும் தங்கக் கடத்தல் பேர்வழிகளும் பாதிக்கப்பட்டார்களா என்பது ஆய்ந்து பார்க்கவேண்டிய செய்தி. ஆனால் லட்சக்கணக்கான ஏழை எளிய பொற்கொல்லர்கள் பட்டினியாலும், வறுமையாலும் வாடி தொடித்ததும், மடிந்ததும் நாடறிந்த உண்மையாகும்.

பல லட்சம் பேர் இந்த சட்டத்தால் தமிழகத்தில் பாதிக்கப் பட்டனர். மாநில நீதியான விவகாரங்களைக் கணக்கில் கொள்ளாமல் மத்திய அரசு ஒட்டு மொத்தமாகச் செய்து விடும் சில முக்கிய முடிவு களின் காரணமாக அந்தந்த மாநிலத்துச் சமுதாயப் பொருளாதார நிலைமைகளே சரிந்து விடுவதற்குத் தங்கக் கட்டுப்பாடு சட்டமும் ஓர் எடுத்துக் காட்டு. பொற்கொல்லர்கள் செய்வதறியாது தேம்பினர். குடும்பம் குடும்பமாய் வாழ்வுக்கு மன்றாடினர். பாதிக்கப்பட்ட பொற் கொல்லர்களுக்கு வழி செய்ய வேண்டுமென்று கழகம் பலமாக வாதாடிற்று.

''சிக்கனத்தின் சின்னம்'', ''நாகரிக உலகிற்கு ஏற்ற நடவடிக்கை'' என்றெல்லாம் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த மொரார்ஜி

தேசாயைக் காங்கிரஸ்காரர்கள் பாராட்டினார்கள் என்றாலும், தமிழ் நாட்டிலே உள்ள காமராசரைப் போன்ற தலைவர்கள் வெளிப்படையாக எந்தக் கருத்தும் அறிவிக்கா விட்டாலும், அந்தச் சட்டம் அப்போது தேவையில்லாத ஒன்று என்பதைத் தனிப்பட்ட முறையில் முணு முணுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால் அதை எதிர்த்து வாதாடு கின்ற வல்லமையைக் காமராசர் போன்றவர்கள் அப்போது பெற்றிருந் ததாகத் தெரியவில்லை.

அந்நாளில் முதலமைச்சர் இடத்தில் காமராசர்தான் அமர்ந் திருந்தார். திருச்சி நகரத்தில் ஒரு விழாவில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். பொற்கொல்லர்கள் தங்கள் கோரிக்கையைத் தெரி விக்கக் காமராசர் இருக்கும் இடத்திற்கு ஊர்வலமாக வந்தனர். கொளுத்தும் வெயிலில் ஊர்வலம் வந்த பொற்கொல்லர்களில் ஒருவர் வெப்பம் தாங்காது சுருண்டு விழுந்து மடிந்தார். காமராசர் இடத்தில் மனுக் கொடுத்த ஒருவர், கொடுத்த இடத்திலேயே தாக்கப்பட்டார். மனுக் கொடுத்தவர்களிடம் ஒரு முதலமைச்சர் இப்படி நடந்து கொள்ளலாமா என்று சட்ட மன்றத்தில் திருச்சி நகரத்துச் சட்ட மன்ற உறுப்பினர் தோழர் எம். எஸ். மணி கேட்டார். அதற்கும் காமராசரிட மிருந்து பொறுமையான பதில் வரவில்லை. கனல் தெறிக்கப் பதில் சொன்னார். நான் இடையில் குறுக்கிடவேண்டியதாயிற்று. எனக்கும் காமராசருக்கும் இடையே சட்டப் பேரவையில் சில நிமிடங்கள் கடுமையான வார்த்தைகள் துள்ளித் தெறித்தன.

81

அன்னையை இழந்தேன்

1963 ஜனவரித் திங்கள் என் இதயத்தில் அடுக்கடுக்காகச் சோகத்தை நிரப்பிய திங்களாகும்.

ஜனவரி 18-இல் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் ப. ஜீவானந்தம் திடீரென இயற்கை எய்தினர். தமிழகத்தின் தேசிய இழப்புகளில் ஒன்றாக அதனைக் கருதவேண்டும். டார்வின் தத்துவமான பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக மனிதன் இன்றைய உருவம் பெறறிருப்பதைப் படித்திருக்கிறோம். அதைப் போலவே படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுப் பக்குவப்பட்ட கம்யூனிஸ்ட் சிந்தனையாளரைத் தோழர் ஜீவானந்தத்திற்குப் பிறகு அதிகம் பேரை நாம் சந்தித்திருப்பதாகச் சொல்ல முடியாது.

தோழர் ஜீவா இருதயம் உள்ள மனிதர். அதுவும் சராசரி மனிதனுக்கு இருக்கவேண்டிய இடத்தில் இருதயத்தைப் பெற்றிருந்தவர். 'மதம் மக்களுக்கு அபின்' என்று சொன்ன மார்க்சின் உண்மையான உணர்வுகளைத் தமிழகத்தின் பட்டி தொட்டிகள் தோறும் பிரதிபலித்தவர் அவர். மார்க்சும், லெனினும் தமிழகத்தில் சரியாக அறிமுகமானதற்குப் பெரும் பங்கினை ஏற்ற, கம்யூனிஸ்ட் தலைவர் அவர்தான் என்று கூறலாம்.

கொள்கையின் உறுதியும், நட்பின் பெருமையும் அவரை மக்களிடத்தில் மரியாதைக்குரியவர் என்று உணர்த்தின. தமிழகத்தில் கம்யூனிசத்தைக் கொண்டு வருவதில் அவருக்கு இருந்த ஆர்வமும் பொறுப்பும் போற்றத்தக்கவை. லெனின் மறைவிற்குப் பிறகு மார்க்சியத்திற்குச் சரியான தலைமை கிடைத்ததா என்பது விவாதத்திற்கு உரிய விஷயம். ஆனால் தோழர் ஜீவாவின் மறைவிற்குப் பிறகு தமிழகத்தில் கம்யூனிஸ்ட்டுகளுக்குச் சரியான, திறமையான தலைமை இன்னமும் கிடைத்ததாகக் கூற இயலாது.

"காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக்குழைத்தேரமடா
-என் தோழனே
பசையற்றுப் போனேமடா"

—என்று தொடங்கும் அவரது பாடல் அன்று எழுப்பிய உத்வேகமும், எழுச்சியும் கொஞ்சமல்ல, ''ஜீவாவின் சம்மட்டி அடிகளைப் பெற்றுச் சரிந்த சூதுக்கோட்டைகள் பல'' என்று அண்ணா அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்தார். அதற்கு மாறுக இன்றையக் கம்யூனிஸ்டுகள் சிலர் சூதுக் கோட்டைகளின் வாயில் காப்போர்களாக அல்லவா சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்?

ஜீவா மறைந்தார் என்று செய்தி கேட்டதும் அண்ணாவும் நானும் சென்னைப் பொது மருத்துவ மனைக்கு விடியற்காலையிலேயே ஓடோடிச் சென்றோம்.

'நாமணக்கும் நல்ல தமிழ் மணக்கும்
நாஞ்சில் என்ற பேர் மணக்கும்
நாமணக்கும் பூதப்பாண்டி
எனும் ஊர் மணக்கும்
பண்பாளர் ஜீவா புகழ்பாடுகின்ற
வாய் தேன் மணக்கும்''

எனத் தொடங்கி,

''குருதி யெல்லாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப் புலியைக்
கொள்கையிலே உறுதி கொண்ட
தமிழ்க் கவியைக்
கொள்ளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு எனக் கேட்டுக்
குமுறுகின்றார் நாட்டு மக்கள்!
வாழ்க ஜீவா! வாழ்க என்றும்!''

—என முடியும் கவிதை ஒன்றை நான் அன்றைய தினம் இரங்கல் செய்தியாக வெளியிட்டேன்.



1963 ஜனவரி 6-இல் நாடு காக்கும் பணிக்காக மதுரையில் போர் நிதி திரட்டும் பணிகளில் நான் ஈடுபட்டிருந்தபோதுதான், வீடு காக்கும் என் அம்மா நோய்வாய்ப்பட்டார்கள் என்ற சேதி கிடைத்தது. வெகு விரைவிலேயே அம்மா என்னைப் பிரிந்து விடுவார்கள் என்று நான் அப்போது நினைக்கவில்லை.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சற்றுத் தேறிவந்து அந்த ஆண்டுப் பொங்கல் திருநாளை வழக்கம்போல் எங்களுடன் மகிழ்ச்சி யாகவே கொண்டாடினார்கள். பொங்கல் கழிந்த இரண்டொரு நாட்களில் ஜனவரி 17 அன்று மீண்டும் உடல் நிலை மோசமாகவே டாக்டர் வீரா ரெட்டி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அம்மாவின் உடல் நிலை விரைவில் குணமாகி வீடு திரும்ப வேண்டும் என்கிற எண்ணத்தில் டாக்டர் வீரா ரெட்டி அவர்களும் தம்மாலான முயற்சியைச் செய்தார். நண்பர்களும் தோழர்களும், ''பயப்படும்படியாக ஒன்றுமில்லை'' என்று ஆறுதல் கூறினர்கள். ஆனால் எனக்கு என்னவோ, ''ஒரு பெரிய இழப்புக்கு ஆளாகப் போகிறேம்'' என்கிற உணர்வு உறுத்திக் கொண்டே இருந்தது. அதற்கேற்றாற்போல் அம்மாவும் தன்னுடைய உடல் உபாதைகளை மறந்து, நான் எப்படி இருக்கிறேன்? என் முகம் எப்படி இருக்கிறது? அடிக்கடி வழக்கம்போல் சிரித்துப் பேசுகிறேனா? என்பதையெல்லாம் கண்காணிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள். தான் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும்போதும் தன் மக்களின் முகம் சுண்டக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் தாய்க் குணம் அல்லவா அது!

ஜனவரி 17 முதல் என்னை விட்டுப் பிரியாமலும், அம்மாவின் உடல் நிலையை டாக்டர்களை அடுத்துக் கவனித்துக் கொண்டும், பல நண்பர்களும் தோழர்களும் உறக்கமின்றி மருத்துவ மனையையே இருப்பிடமாகக் கொண்டனர். இவர்கள் என் பேரில் பற்றுதல் கொண்டோர் என்பதைவிட அம்மாவின் அன்பிலும், பண்பிலும் அரவணைப்பிலும், ஆதங்கத்திலும் திளைத்தவர்களாவர்.

நாளுக்கு நாள் அம்மாவின் உடல் நிலை தேறி வருவதாகவே வெளிக்குத் தெரிந்தது. பத்திரிகைகளும் அவ்வாறுதான் செய்திகளை நாள்தோறும் வெளியிட்டன. என் தமக்கைகளையும் குழந்தைகளையும் ஆறுதல் படுத்துவதற்காக நானும் அதை நம்புவதாகப் பாவனை செய்தேன்.

ஜனவரி 22-இல் அம்மாவின் உடல் நிலை மேலும் சீர்கெட்டது. உடனடியாகப் பெரியதோர் அறுவைச் சிகிச்சை செய்தே ஆகவேண்டும் என்று டாக்டர்கள் கருதி, ஸ்டான்லி மருத்துவ மனைக்குக் கொண்டு

போனார்கள். அங்கு கொண்டு சென்று உடனடியாக அறுவைச் சிகிச்சையும் ஆரம்பமாயிற்று.

ஜனவரி 22-இல் அறுவைச் சிகிச்சை என்ற பெயரால் என் அம்மாவின் உடம்பில் கத்தி பாய்ச்சப்படுவதை அறைக்கு வெளியில் நின்று நினைத்து நினைத்துச் சொல்லொணா வேதனையில் நான் துடித்துக் கொண்டிருந்த அதே நாளில் அதே நேரத்தில்தான் என்னுடைய மற்றொரு தாய் போன்ற கழகத்தின் முதுகில் கத்தி பாய்ச்ச நினைத்த காங்கிரஸ்காரர்கள், அரசியல் சட்டத்திருத்தம் என்ற பெயரால் டெல்லி பாராளுமன்றத்தில் முடிவு எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

தி. மு. கழகத்தின் பிரச்சாரத்தையும் வளர்ச்சியையும் கண்டு பொருத காங்கிரஸ்வாதிகள், கழகத்தின் மூல முழக்கமான திராவிட நாடு கோரிக்கையைச் சட்ட விரோதமாக்கும் வகையில் அரசியல் சட்டத்தின் 9-ஆவது பிரிவைத் திருத்தும் மசோதாவை (அரசியல் சட்டத்தின் 16-வது திருத்தம்) பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்புவதாக அன்றுதான் பாராளுமன்றத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அம்மாவின் உடல் அறுபடுவதைக் கண்டு சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் ஓர் அறைக்கு வெளியே மவுனமாக நான் குமுறிக் கொண்டிருந்த அதே நேரத்தில் கழகத்தின் குரல் வளையை நெறிக்கச் சதி செய்த காங்கிரஸ்காரர்கள் கழகத்தின் முதுகில் கத்தி பாய்ச்சும் செய்கையை, என் ஆருயிர் அண்ணா அவர்களும் பாராளுமன்றத்தின் பார்வையாளர் இருக்கையில் அமர்ந்து மவுனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஜனவரி 17-இல் என்னைப் பெற்ற தாய்க்கு அறுவைச் சிகிச்சை! மற்றொரு தாய்க்குக் கத்திக் குத்து! மறக்க முடியுமா இந்த நாளை? அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்ட அம்மாவைக் காப்பாற்றும் சக்தியோ, மருத்துவத் துறை அனுபவமோ எனக்கு இல்லை. அது முழுக்க முழுக்க டாக்டர்களின் பொறுப்பு.

ஆனால், என் மற்றொரு தாய் ஆகிய தமிழகத்திற்கு விழுந்த கத்திக் குத்திலிருந்து அதனைக் காப்பாற்றும் பெரும் பணியில் ஈடுபட என்னால் முடியும். அஞ்சுகத் தாய் என்னைப் பெற்று வளர்த்தார்கள்! கழகமோ என்னைப் போன்றவர்களால் பேணி வளர்க்கப்பட்டது. என்னைப் படைத்த தாய் படும் வேதனைக்குப் பரிகாரம் காண்பதில் நான் விவரமறியாத சிறுவனாக இருக்கலாம்! ஆனால் என் போன்றவர்கள் படைத்துக் காத்திட்ட கழகத்திற்கு நேர்ந்த ஊறுகளைக் கிள்ளி எறிய எங்களுக்குத் திறமையும், துணிச்சலும், தியாக உணர்வும் இல்லாமல் போய் விடுமா?

எனவேதான், அன்று காலை அறுவைச் சிகிச்சைக்கு ஆளாகி மரணப் படுக்கையில் போராடிக்கொண்டிருக்கும் அம்மாவின் நினைவு கண்களைக் குளமாக்கியபோதும், கழகத்திற்கு வந்துள்ள புதிய கேட்டினைக் களைவதற்குத் தோழர்கள் தயாராகித் தீரவேண்டும் என்ற உணர்வோடு அன்று மாலையே இராயபுரம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டேன். இராயபுரம் பனைமரத்தொட்டி மீனவ நண்பர்களுடன் அளவளாவி இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது எனக்கு எல்லா வகையிலும் சற்று நேரம் இதமாகத் தெரிந்தது.

அன்று காலையிலிருந்து மாலைவரை இரத்தக் கண்ணீர் வடித்த என் கண்களில் அந்தக் கூட்டத்தில் பேசும்போது தீப்பொறி பறந்ததாக நண்பர்கள் சொன்னார்கள்.

கண்களில் தீப்பொறி பறந்ததாகச் சொன்னார்களே தவிர, நான் பேசிய பேச்சுக்களில் அண்ணா போதித்த அமைதித் தன்மை நிரம்பி வழிந்தது.

துன்பம் வரும்போது ஞானம் பிறக்கும் என்கிறார்கள். ஆனால் அன்று எனக்கிருந்த அத்தனைத் துயரத்திற்கும் இடையில் மக்கள் மத்தியில் அமைதியையும், பொறுமையையும் நான் போதித்து தீரவேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. அன்று நாடு நெடுகிலும் கழகத் தோழர்கள் உணர்ச்சிப் பிழம்பாகக் காட்சியளித்தார்கள். 'யாருக்கு யார் தடை போடுவது?' 'ஜனநாயகத்தில் பாராளுமன்றத்தின் செய்கைக்கு உள்ள இலக்கணம் என்ன?' என்றெல்லாம் தோழர்கள் கேள்விக் கணைகளை அடுக்கிக் கொண்டிருந்தார்கள். அரசியல் சட்டத்தின் அடிப்படையே பலமான விவாதத்திற்கு உள்ளாகிக் கொண்டிருந்தது.

தனிப்பட்ட முறையில் எனக்கிருந்த சூழ்நிலை எதுவாயினும், நாடு இருக்கும் நிலையில் என்னைப்போன்றவர்கள் எதைப்பேசவேண்டும் என்பதைப் பயிற்றுவித்த ஆசான் என் அண்ணன்.

உள்ளுக்குள் துன்ப துயரங்கள் ஊற்றுகப் பெருக்கெடுக்கும் போது மனிதனுக்கு அமைதியான போக்கும் ஏற்பட்டு விடுவதை அன்று நான் அனுபவத்தில் உணர்ந்தேன்.

அந்தக் கூட்டத்தில் என்னைச் சந்தித்த நண்பர்கள் அனைவரும் அம்மாவின் உடல் நிலை குறித்துக் கவலை தெரிவித்தார்கள். என்னுடைய கவலை அப்போது வேறுக இருந்தது. அரசியல் சட்டத்தின் 16-ஆவது திருத்தம் பற்றிய கவலைதான் என்று சொல்லவும் வேண்டுமா? அந்தக் கூட்டத்தில்.

"இவ்வளவு ஜனநாயகப் பண்பு படைத்த, நாகரிகம் படைத்த கழகத்தை, ஜனநாயக வழியில் நாகரிகமாக மேடையிலும், எழுத்திலும் சந்திக்க முடியாதவர்கள், 'சட்டநாதனை'த் துணைக்கு அழைக்க முற்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தால் அழிந்து விடுவோமோ என்று நம்மில் யாரும் வருத்தப்படவில்லை. எல்லாப் பிரச்சினைகளையும் மறந்து விட்டு, முதுகில் சீனர் ஏறி உட்கார்ந்திருப்பதையும் மறந்து விட்டுக் கழகத்தை அழிக்கத் திட்டம் தீட்டும் இவர்களைப் பார்த்து அல்லவா உலகம் சிரிக்கப் போகிறது! மாற்றார் நினைப்பது போல் நாம் அழிவோமா இல்லையா என்பதைக் காலம்தான் தீர்மானிக்கப்போகிறது. நாம் அப்படி அழிந்துதான் தீரவேண்டும் என்றால், நாம் அழிந்தாலும், நாம் வளர்த்து விட்ட உணர்வுகளை, உள்ளத்து உணர்ச்சிகளை இவர்களால் அழிக்க முடியுமா? அவசரப்பட்டதால்தான், இலக்கியத்தில் அமராவதி பூக்களைத் தவருக எண்ணியதால்தான் அம்பிகாபதி தலை உருண்டு, அவர்கள் காதல் நிறைவு பெருமல் போயிற்று. ஆகவே, புதுச் சட்டத்தைக் கண்டு யாரும் ஆத்திரமோ, அவசரமோ கொள்ள வேண்டிய அவசியமில்லை. பொறுமையுடனும், பதட்டமில்லாமலும் பூக்களை எண்ணி வையுங்கள்."

"1962-இல் சட்டமன்றத்தில் 50 பூக்களை எண்ணி வைத்தீர்கள். 1957-இல் பதட்டம் இல்லாது பொறுமையுடன் 180 பூக்களை எண்ணி வையுங்கள். அப்படிப் பொறுமையாகச் சரியாகப் பூக்களை எண்ணி வைத்துவிட்டால், அம்பிகாபதி அழிய வேண்டியதுமில்லை; அமராவதி சாக வேண்டியதுமில்லை."

—என்று பொறுமையையும் நிதானத்தையும் பற்றிப் பேசினேன்.

இன்று கழகத்தின் முக்கியக் கொள்கையாக விளங்கும் மாநில சுயாட்சிக்கான சூசகம் அண்ணா அவர்களால் 1963 ஜனவரி 25 அன்று மாநிலங்களில் அவையில் முதன் முதலாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து மாநிலங்கள் அவையில் சுருக்கமாகப் பேசிய அண்ணா அவர்கள்:

"பிரிவினைத் தடை மசோதாவைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை நிறுவி எங்களுடன் விவாதிக்க வேண்டும். இன்றுள்ள அரசியல் அமைப்பு முறையைத்தான் தி. மு. கழகம் எதிர்க்கிறதே ஒழிய, நாட்டின் ஆதிபத்திய உரிமையை எதிர்க்கவில்லை. ஆகவே, நாட்டின் ஆதிபத்திய உரிமைக்கு நாங்கள் அபாயத்தைக் கொண்டு வரவில்லை. கூட்டு ஆட்சி செயல்படும் முறை மீதுதான் எங்களது கட்சி குறைபட்டுக்கொள்கிறது. கடந்த 13

ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் அரசியல் அமைப்பு முறை மக்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மாநிலங்களை டில்லி ஏதோ மாநகராட்சி மன்றங்கள் போலத்தான் நடத்தி வந்திருப்பதாகக் கருத வேண்டியிருக்கிறது."

—என்று பேசி, மாநிலங்களுக்கான அதிக அதிகாரங்கள் கோரிப் பின்னர் கழகம் வலியுறுத்துவதற்கான அடிப்படையைக் கோரி, அன்று தான் அதிகாரப்பூர்வமாக அறிஞர் அண்ணா உருவாக்கினார்.

அம்மா அவர்கள் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த நாட்களில்தான், இவைபோல் கழகத்தின் எதிர்கால வாழ்வைக்கணிக்கும் அடிப்படைகள் உருவாயின. இத்தகைய பரபரப்பான சூழ்நிலைகள் எனக்கும் சற்றுக் கவலைகளை மறக்கச் செய்தன என்றாலும், ஜனவரி 27-இல் எங்கள் குடும்பத்தில் பேரிடி விழுவதைத் தடுக்க முடியவில்லை. ஜனவரி 27 அன்று விடிந்தபொழுது என்னைப் பொறுத்தவரை, 'கரிநாளாகப்' புலர்ந்தது. இப்போதும் ஜனவரி 27 வரும்போதெல்லாம் என் தாயின் பக்கத்தில் அமர்ந்திருப்பதாக ஏற்படும் உணர்வினை என்னால் அடக்க முடியவில்லை. 72 வயதாகியும் அந்த என் குலதெய்வம் கடைசி மூச்சு வரையில் நான் சார்ந்துள்ள கழகத்தின் நடவடிக்கைகளையும், அவற்றில் நான் பெறும் பங்கு பற்றியும் அறிந்து மகிழ்வதற்குத் தவறுவதே இல்லை.

மிக ஆபத்தான சூழ்நிலையில் அம்மா படுத்திருந்த போதும், தம்மைக் காணவந்த அப்போதைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களிடம் அரசியல் குறித்து நகைச்சுவை பொங்கப் பேசியதைக் கண்டு அம்மையார் வியந்து போனார்கள். "இந்த நிலையிலும் இவ்வளவு நகைச்சுவையோடு பேசும் இந்தத் தாய், இன்னமும் நீண்ட நாள் நம்மிடையே இருக்க வேண்டும். இவர்களுக்கு மகனாகப் பிறந்த நீங்கள் கொடுத்து வைத்தவர்" என்று அவர்கள் உருக்கத்தோடு சொன்னார்கள்.

அடுத்த இரண்டொரு நாட்களில் "நாம் கொடுத்து வைத்தது இவ்வளவுதானா"? என்று என் வீட்டார் கதறியதைக் கண்டு நானும் கல்லாய்ச் சமைந்து நின்றேன். அம்மா இறந்த செய்தி அறிந்ததும் நாடு நெடுகிலுமுள்ள கழகத் தோழர்கள் அனைவரும் தத்தமது குடும்பத்தில் ஒரு பேரிழப்பு நேர்ந்ததாகவே கருதி எனக்கு ஆறுதல் தெரிவித்தார்கள். அம்மாவின் மறைவு நாட்டில் உணரப்பட்டதைப் பார்த்ததும் எனக்கே பெருமையும், பிரமிப்பும் ஏற்பட்டன. அந்த அளவுக்கு அம்மா கழகத் தோழர்களிடம் கனிவையும் பாசத்தையும் பொழிந்தார்கள்.

அதிலும் கழகம் என்றாலோ, அறிஞர் அண்ணா என்றாலோ, அம்மா என்னைக்கூட மறந்து விடுவார்கள். கழகத்தோடு வளர்ந்து கழகத் தோடு இணைந்து பிணைந்துவிட்ட குடும்பம் என் குடும்பம் என்று தோழர் களிடையே அசைக்கவொண்ணா நம்பிக்கை ஏற்பட்டதற்குக் காரணமே அம்மா அவர்கள்தான்.

அம்மாவின் இறுதி யாத்திரை இதனைத் தெளிவாக்கிற்று. ஒரு பெரிய அரசியல் தலைவருக்குச் சேர்க்கின்ற சிறப்பினை அம்மாவின் இறுதி யாத்திரையின்போது தமிழகம் அவருக்குச் சேர்த்தது.

அம்மா இறந்த செய்தி கேட்டதும் அண்ணா அவர்கள் டெல்லியில் தமக்கிருந்த மிக முக்கியமான அலுவல்களையும் மறந்து சென்னைக்கு விரைந்தார். அம்மாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்தது எனக்கு இதமாக இருந்தது. மோதிலால் நேரு அவர்களின் இறுதி ஊர்வலத்தின் போது காந்தி அடிகள் கலந்து கொண்டது தன்னுடைய துக்கத்தைப் பெருமளவு குறைத்ததாக நேரு சொன்னார். அதேபோல், அண்ணா அவர்களின் பரிவான அரவணைப்பும் எங்கள் குடும்பத்தினரிடையில் ஏற்பட்ட இழப்பைத் தாங்கிக் கொள் வதில் பெரும்பலத்தை அளித்தது.

அது மட்டுமல்ல; அம்மா மறைவினைக் குறித்து அறிஞர் அண்ணா தெரிவித்த கருத்துக்களையும், அளித்த ஆறுதல் மொழிகளையும் இன்னமும் என் குடும்பக் கருவூலமாகப் போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

அம்மாவைப்பற்றி அறிஞர் அண்ணா எழுதியது, என்னைப் பொதுத் தொண்டுக்கு ஆளாக்க அம்மா அவர்கள் எத்தகு காரணமாக இருந் தார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவித்தது.

...கண்டவுடன், மேயர் நம்ம கட்சிதானே வரும்? அதைவிடக் கூடாது! புதுசாச் சட்டம் வருகிறதாமே, என்ன செய்யப்போறீங்க? நம்ம கட்சியைக் கேலி பண்ணிப்படம் போட்டாங்களாமே, பார்த்தீங் களா? அதுக்கு என்ன செய்யப் போறீங்க?'' என்று இவைபோன்ற கேள்விக் கணைகளைக் கேட்டு ஆர்வத்தைப் பொழிந்த ஓர் அன்னையை நான் கண்டதில்லை. இப்படிப்பட்ட தாய்ச் செல்வம் பெற்றிருந்த கார ணத்தால்தான் தம்பி கருணாநிதிக்கு 'நிதி' என்று பெயரிட்டார்களோ போலும்!

''வயது எழுபத்திரண்டு; தோற்றம் அப்பொழுக்கற்ற கிராமிய முறை; அணிகலன் கிடையாது; அந்த வீட்டிலே மூதாட்டி அஞ்சுகம் அம்மையார் கழக மாநாட்டிற்காக வெளியூரிலிருந்து வரும் தாய்மார் களில் ஒருவர் போல இயக்கப் பேச்சு ஒன்றிலேயே தமக்குச் சுவை

தேடிக்கொண்டு உலவி வந்தார்கள் அவர்களை அறிந்த அனைவர் உள்ளத்திலும் அவர்களைப் பற்றிய நினைவு என்றும் இருக்கும்."

அம்மாவைப் பற்றி இப்படி எழுதிய அண்ணை அவர்கள், எனக்கும் அண்ணைவுக்கும் இருந்த பாசத்தை-பந்தத்தை-உறவு முறையை அம்மா எவ்வாறு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் அண்ணையே கூறுகிறார்.

"கருணாநிதி திருச்சி சிறையிலிருந்து விடுதலையானபோது நான் சென்றிருந்தேன். வரவேற்று மகிழ்ச்சி பெற அம்மா வரவில்லை. சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள், வீட்டிலே கண்டு கேட்டேன்; 'மகன் ஜெயில்லேருந்து வெளி வருவதைப் பார்க்க வரவில்லையே, ஏன்? என்று. 'நான் வேறு அல்ல, அந்தக் குடும்பத்தில் நான் ஒருவன்' என்று என்னை உணர்ந்துகொள்ளச் செய்யும் விதமாக அமைந்தது அவர்களின் பதில்!

'நீங்க போனீங்க இல்லே, அது போதாதா?' என்று கேட்டார்கள். எத்தகைய பண்பு! எத்துணைப் பரிவு!" என்று அண்ணை சொல்கிறார்;

என்னைப் பெற்ற தாயாக இருக்கலாம்; என்னை அரசியலில் ஆளாக்கிவிட்ட என் அண்ணன் இப்படிப் புகழும் ஒரு தாயை நான் பெற்றிருந்தேன் என்பதில் இன்றும் எனக்கு நினைக்குந்தோறும் பெருமைதான்!

அண்ணை மேலும் சொல்லுகிறார்:

"அஞ்சுகம் அம்மையாருக்கு இருந்த தெளிவு, திடம், ஆர்வம் மறைந்து விடவில்லை. எங்கள் மூலமாக அவை தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து இருப்பதைக் காணுங்கள் என்று கருணாநிதி, மாறன், அமிர்தம், செல்வம் ஆகியோர் கூறவேண்டும். கதறிக் கிடப்பதை, கலங்கித் தவிப்பதை, அஞ்சுகம் அம்மையார் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். எனக்கு அந்தக் குடும்பத்திடம் ஏற்பட்டுள்ள பிணைப்பு இயற்கையானது என்று எண்ணுகிறேன். எனவே கருணாநிதியும் மற்றவர்களும் தாயை இழந்த தவிப்பை, என் துணையும் பற்றும் உண்டு என்ற நினைப்பினால், அம்மையாரின் புகழினை ஒளி விடச் செய்யும் மணிகளாக விளங்கி வரவேண்டும் என்று என் அன்பு ரையைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

அண்ணைவின் இத்தகு அன்புரை, ஆதரவு, அரவணைப்புகளுக்குப் பிறகும் நான் அம்மாவின் இழப்புக்காக வருந்தியே காலங்கடத்துவது முறையாகுமா?

மக்களை இழந்த பெற்றோர்களுக்குக் கிரேக்கப் பெருமகன் பெரிகிள்ஸ் அளித்த ஆறுதலைப் போலவே தாயை இழந்த எனக்கு

அண்ணனின் ஆறுதல் மொழி புதிய வேகத்தை அளித்தது. அந்தக் கணமே என் மனநிலையை எழுத்திலே வடித்து, என்னை முழுவதும் தேற்றிக்கொண்டேன்.

"அம்மா, நீ பிரிந்ததை நான் நம்பவில்லை. நீ என்னைப் பிரியமாட்டாய்; நீ என்னோடு கலந்துவிட்டாய்."

இப்படி எழுதத் தொடங்கிய நான் கண்ணீரோடுதான் எழுதினேன். இருந்தாலும் மனத்தில் ஏறிய இழப்புச் சுமையை அந்தக் கண்ணீரில் கரைத்துப் பேனாவை ஓட்டினேன்.

எழுதும்போது ஏதேதோ எண்ணங்கள்! எப்போதோ நடந்த சிறு நிகழ்ச்சிகள் அனைத்தும் மனக் கண்ணில் நிலைகுத்தி நின்றன அப்போது நான் எழுதவில்லை. அம்மாவிடம் பேசினேன்:

"இலைமுன் உட்கார்ந்து உணவு அருந்தும்போதுகூட உன் இடுப்பில் இருந்து அம்புலி பார்க்கும் குழந்தையாகத்தானே என்னை நீ எண்ணிக்கொள்வாய்! உறங்கும்போது உன் இதயம் எனக்குத் தாலாட்டும். நான் உழைக்கும்போது உன் மூச்சு எனக்குத் தென்றல்; இத்தனையும் நிறுத்திவிட்டு நீ எப்படி அம்மா என்னைப் பிரிவாய்? நீ பிரியவில்லை! நீ என்னோடு கலந்து விட்டாய்!"

"உன்னிடம் கற்றுக்கொண்ட கனிவு, கருணை, எளிமை, இனிமை, பண்பு, பழக்கம், பகைவரிடமும் பரிவு காட்டும் தன்மை இவைகளை வளர்த்து வளர்த்து நான் முழுமை பெறுவதற்குத் துணையாக நீ என்னோடு கலந்துவிட்டாய் என்பதுதான் அம்மா உண்மை!"

இப்படி நான் எழுதியபோது, இல்லை, அம்மாவுடன் பேசியபோது, அந்த நேரத்திற்கான ஆறுதல் பெறுவதற்காக அல்ல. இவைகளை என் வாழ்க்கையின் குறிக்கோள்களாகவே கருதி உறுதிமொழி எடுத்துக்கொண்டேன் என்பதுதான் உண்மை.

"நீ கடைசி மூச்சு விடுத்தபோது நீ என்னைப் பிரிந்து விட்டாய் என்றுதான் கதறினேன். அது கடைசி மூச்சல்ல; காலியாகிவிட்ட என் சுவாசப் பைக்கு நீ அளித்த உயிர் மூச்சு. அந்த மூச்சை எனக்கு வழங்கி என்னை வாழவைக்க நீயும் என்னோடு கலந்துவிட்டாய். நான் கொண்ட இலட்சியத்திற்காக மேலும் பல கொடுமைகளைச் சந்திக்க நான் வாழ்ந்து தானே தீரவேண்டும் என்று எண்ணிவிட்டாய் போலும். அதனால்தான் எனக்கு உயிர் தந்துவிட்டாய் அம்மா! உன் கண்ணை மூடிக்கொண்டு என் கண்ணால் பார்க்கிறாய்! உன் வாயை மூடிக்கொண்டு என் வாயால் பேசுகிறாய்! 'அம்மா!' என்கிறேன். குரல் தழுதழுக்கிறது. உன் நாவுக்குள்ள நயம் முற்றிலும் எனக்குக் கிட்ட அருள் புரிவாய், அம்மா!" என்றும் அன்று வேண்டிக்கொண்டேன்.

''மற்றவர்களோ, 'அழாதீர்கள்' என்று சொல்லும் ஆற்றலைப் பெற்று விட்டேன். அந்த ஆற்றலை நீ எனக்கு அளித்து விட்டாய்! தாமதமாக நீ எனக்கு அளித்தது இது ஒன்றுதான் தாயே! நான் இனி மற்றவர்களுக்கு ஆறுதல் கூறுவேன். உன் இருதயத்தை என் இருதயத்தோடு ஒட்டி விட்டாய். இனி நான் அழமாட்டேன். நீ என்னைப் பிரியவில்லை. என் னோடு கலந்துவிட்டாய்!"

—என்று எழுதிவிட்டு, எனக்கு ஏற்பட்ட இழப்பின் துக்கச்சாயலை, வேகமான கழகப் பணிகளினால், என் குடும்பத்து மூத்த செல்வம் மாறனின் திருமணத்து வேலைகளினால் வெகுவாக மாற்றிக்கொள்ள முனைந்தேன். அந்தத் தாயின் இருதயம்தான் எனக்கு இப்போதும் உயிர்ப்புச் சக்தியாக விளங்குகிறது.

நான் முதலமைச்சர் பொறுப்பில் நாட்டுக்கு ஏதாவது நன்மை செய்கிறேன்-செய்ய முயல்கிறேன் என்றால், அது என்னை ஆளாக்கிய அண்ணனின் பயிற்சி மட்டுமல்ல, என் அன்னையின் இருதயத்துப் பண்பும் ஆகும் என்று சொல்வது மிகையல்ல.

—

82

அரசியல் சட்டப் பதினாறுவது திருத்தம்

"நான் எப்படி இருக்கிறேன் என்பதும், எப்படி இருக்க வேண்டும் என்கிற என் நம்பிக்கைகளும் என் அருமை அன்னைக்கே உரியவை ஆகும்" என்பது அடிமை விலங்கொடித்த ஆப்ரகாம் லிங்கன் அடிக்கடி சொல்லி வந்த வாசகம். அமெரிக்காவில் 16-ஆவது ஜனாதிபதியான லிங்கனின் இந்த வாசகத்தை நினைத்து என் அம்மாவின் இழப்புக்குச் சமாதானம் தேடிக் கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தின் 16-ஆவது திருத்தம் பற்றி நாட்டில் எழுந்துள்ள சர்ச்சையில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன்.

பல்வேறு இன-மொழி-கலாச்சாரங்களைக் கொண்ட இந்தியா போன்ற நாட்டின் மக்களுடைய அடிப்படை உரிமைகளை இந்த 16-ஆவது திருத்தம் எவ்வளவு தூரம் பாதித்தது என்பது இன்னமும் சரியாக உணரப்படவேயில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு இந்தத் திருத்தம் உணர்வு பூர்வமான நன்மைகளை ஏற்படுத்தவில்லை. சீன ஆக்கிரமிப்பின் காரணமாக நாடே ஒருமுகமாகத் திரண்டிருந்த நேரத்தில், இந்தச் சட்டம் அவசர அவசரமாகக் காங்கிரஸ் கட்சியினரால் நிறைவேற்றப்பட்டது.

மேலும் மற்ற எந்தத் திருத்தத்தைக் காட்டிலும், இதுதான் நாட்டில் பலமான வாதப் பிரதிவாதத்தைக் கிளப்பி விட்டதாகும். இதன் நோக்கம் எப்படிப்பட்டது என்பதைவிட இது அவசரமாக நிறைவேற்றப்பட்ட நேரம் இன்றளவும் நாகரிக அரசியல்வாதிகளின் மனத்தைக் குடைந்து கொண்டிருக்கிறது. "முடிவுகளைக் காட்டிலும் முறைகள்தாம் முக்கியம்" என்கிற காந்தீயத் தத்துவத்திற்கு இந்தத் திருத்தம் எதிரானது என்பதில் ஐயமே இல்லை.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், கட்டுக்கோப்புக்கும் இந்தத் திருத்தம் அவசியம் என்று காங்கிரஸ்வாதிகள் வாதிட்டனர். அதே நேரத்தில் ஒரு பகுதியினரின் மொழி-கலாசார ஆதிக்கத்திற்கு அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்பு தேடிடும் முயற்சியாக இந்தத் திருத்தம் தென்னக மக்களால் கருதப்பட்டது. மத்திய அரசுக்கு எதிராக, அல்லது உரிய நியாயம் கேட்டு எத்தகு குரல், எந்தப் பகுதி மக்கள் எழுப்பினாலும் அதற்குப் 'பிரிவினை வாதம்' என்று பெயர் சூட்டிவிடுவதற்கு இந்தத் திருத்தம் மத்திய ஆட்சியில் இருப்போருக்கும் அதனை நடத்திச் செல்லும் கட்சியினர்க்கும் சாதகமான வழி வகுத்துக் கொடுத்தது.

பல்வேறு மாநிலங்களுக்கு இடையிலே உள்ள வேறுபாடான சூழ்நிலைகளையும் எடுத்துச் சொல்லி வாதாடுவதற்கு இந்தச் சட்டம் "வாய்ப்பூட்டு"ப் போட்டது என்பதுதான் உண்மை. ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் அதிகப்படியான காலம் (அதாவது துவக்கம் முதல் இருந்த பகுதிகள்) அதிகமான வறுமைக்கும் செழிப்பற்ற தன்மைக்கும் உள்ளாயிற்று என்பது பண்டித நேரு அவர்களின் ஆழமான கருத்தாகும். இதனை மிகத் தெளிவாக அவர் தனது Discovery of India என்கிற நூலிலும் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கருத்துப்படி சென்னை (இப்போதைய தமிழ்நாடு), ஆந்திரம், கேரளத்தின் ஒரு பகுதி, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகள்தாம் மற்றப் பகுதிகளை விட ஆரம்பம் முதல் அதிகப்படியான காலம் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் வதங்கி வாடின.

இந்தப் பகுதிகளின் முன்னேற்றமும், நியாயமான விருப்பங்களும் மத்திய அரசினால் என்றைக்கும் தனிச் சலுகையோடு கவனிக்கப்பட வேண்டியவை ஆகும்.

இந்தச் சலுகைகளை உரத்துக் கேட்கக் கூடாது என்பதற்காகவே, அரசியல் சட்டத்தின் 16-ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவது போல், பண்டித நேருவின் தலைமையிலான மத்திய அரசு அவசரம் காட்டிற்று.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தத் திருத்தம் விவாதிக்கப்பட்டு வரும்போது, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் அதிக காலம் அவதிப்பட்ட ஆந்திரமும் வங்காளமும் உரிமைக் குரலை உரத்து எழுப்பிக் கொண்டிருந்தன.

1963 ஜனவரி 28-இல் ஆந்திர மாநிலக் காங்கிரஸ் குழுத் தலைவரான திரு. பிரமையா ஐதராபாத்தில் மத்திய அரசின் மாற்றாந் தாய் மனப்பான்மையைச் செய்தியாளர்களிடம் எடுத்துக் காட்டி வெளிப்படையாகச் சாடினார்.

"ஆந்திர மாநிலத்தை மத்திய அரசு மாற்றாந்தாய்ப் போக்கில் நடத்தி வருகிறது. இன்று நேற்று முதல் அல்ல; கடந்த பதினைந்து ஆண்டு காலமாகவே ஆந்திர மாநிலம் மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது" என்று போர்க் குரல் கொடுத்தார்.

அதேபோல் மேற்கு வங்கமும் வேறு முறையில் மத்திய அரசிடம் போராடிக் கொண்டிருந்தது.

"மாநில மக்களின் உரிமைகளில் கை வைப்பது ஒரு புறமிருக்கட்டும், மாநில அரசுக்கு சொந்தமான உடைமைகளின் மீது கை வைக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரமில்லை" என்று மேற்கு வங்க

அரசு மத்திய அரசின் பேரில் இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து விவாதித்துக் கொண்டிருந்தது.

மத்திய அரசின் மீது மேற்கு வங்கம் தொடுத்த இந்த வழக்கும்- அதில் பேசப்பட்ட வாதங்களும் இப்போது நினைவு கூறத்தக்கவை. ஏனென்றால் மத்திய அரசு மாநிலங்களுக்கான அதிகாரத்தில் கை வைப்பதே இல்லை என்றும், அப்பட்டமான கூட்டாட்சித் தத்துவம் தான் மத்திய அரசால் கடைப்பிடிக்கப்படுகிறது என்றும் சிலர், கழகம் தீவிரமாக வலியுறுத்தும் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிராகப் பேசி வருகின்றனர். அவர்கள் புரிந்துக் கொள்வதற்கு இந்த வழக்கின் நடவடிக்கைகள் உதவி செய்யும்.

நிலக்கரி சுரங்கப் பகுதிகளை மேற்கொள்ளுதல், அபிவிருத்தி செய்தல் ஆகியவை சம்பந்தமாக மத்திய அரசின் 1957-ம் ஆண்டுச் சட்டத்தை எதிர்த்து முதன் முறையாக மேற்கு வங்க அரசு, இந்திய உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

''இந்திய அரசியல் கூட்டாச்சி அமைப்பு முறையைக் கொண்டது. இந்த அமைப்பில் நாட்டின் சுயாதிபத்தியத்தை மாநிலங்கள் பங்கிட்டுக் கொண்டுள்ளன. இந்த நிலையில் சுயாதிபத்தியத்தின் ஓர் உறுப்பாக விளங்கும் மாநிலத்தின் உடைமையை மேற்கொள்வதற்கு மற்றொரு உறுப்பு (மத்திய ஆட்சி) முயல்வது பொருத்தமற்றதாகும். ஆனால் குறைந்த பட்ச ஒப்பந்தங்கள் இருந்தாலன்றி, அவசர காலச் சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலன்றி- இத்தகு முயற்சிகள் சட்டபூர்வ மற்றவை ஆகும்'' என்பது மேற்கு வங்க அரசின் வாதமாக இருந்தது.

இந்த கருத்துக்கு எதிராக ''மாநில அரசுகள் சுயாதிபத்திய உரிமை படைத்தவைகள் என்று கூறப்படுவது சரியல்ல'' என்று மத்திய அரசுதரப்பில் திட்டவட்டமாக வாதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் இந்தியத் தலைமை நீதி மன்ற நீதிபதிகள் கருத்து மாறுபட்டனர். தலைமை நீதிபதியாக இருந்த திரு. பி.பி. சின்கா பெரும்பான்மையோரின் சார்பில் தீர்ப்பளித்தார்.

அதில் அவர் குறுப்பிட்டது இன்றைக்கும் மாறுபட்டுப் போக வில்லை.

அவர் குறிப்பிட்டார்

''1858-ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் மன்னர் ஆட்சியில் மாநிலங்கள் இருந்த நிலையிலிருந்து தெளிவானது என்னவென்றால், இந்திய அரசு ஒன்றிப்பு ஆட்சி அமைப்பைக் கொண்டதாகவும், அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்பட்ட நிலையிலும் இருந்தது என்பதாகும்.''

''இந்திய அரசியல் சட்டம், 1935-ஆம் ஆண்டின் இந்தியச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, இந்திய அரசியல் சட்டமானது முறையான கூட்டாட்சி அமைப்பு முறையைக் கொண்டது அல்ல.''

''மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் சட்டம் செய்வதற்குப் பாராளுமன்றத்திற்கு உரிமை உண்டு.''

இதுதான் மேற்கு வங்கம் தொடுத்த வழக்கில் நம்முடைய அரசியல் சட்டத்தினைப் பற்றி அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட உண்மை.

1935-ஆம் ஆண்டின் இந்தியச்சட்டத்தின் அடிப்படையில் அமைந்த அரசியல் சட்டத்தைத் திருத்துமாறும், மாநிலங்களுக்கான அதிக அதிகாரம் தருமாறும் நாம் கேட்பதைத்தான் இன்று பிரிவினை வாதம் என்று திசை திருப்புகிறார்கள்.

ஆந்திரமும் வங்கமும் எப்படிக் குரல் கொடுத்த போதிலும், தி.மு. கழகத்தின் நடவடிக்கைகளை ஒடுக்கி விடலாம் என்கிற ஒரே நப்பாசையின் காரணமாகவே 16-ஆவது திருத்தம் நிறைவேற்றப் பட்டது.

இந்த அறைகூவலைத் தி.மு. கழகம் மிகத் தைரியமாக ஏற்றுக் கொண்டது. அதே நேரத்தில், ''16-ஆவது திருத்தத்தில் காண்பிக்கப் பட்ட அவசரம், இந்தித் திணிப்பினைத் தவிர்க்கும் ஆங்கில நீடிப்பு மசோதா நிறைவேற்றுவதில் காண்பிக்கத் தவறுவது ஏன்?'' என்று தி.மு. கழகம் பண்டித நேருவுக்குப் பதில் அறைகூவல் விடுத்தது.

16-ஆவது திருத்தத்தை நிறைவேற்றியதன் உண்மையான நோக்கம் பற்றிய பல்வேறு விளக்கங்களைக் காங்கிரசார் சொன்ன போதிலும், ஆங்கில நீடிப்பு மசோதாவை நிறைவேற்றுவதில் கால தாமதப்படுத்துவதற்குப் பண்டித நேருவினாலேயே சரியான சமாதானம் சொல்ல முடியவில்லை.

வழக்கம் போல, இந்தப் பிரச்சினையில் தி.மு. கழகம்தான் முன்னின்று நியாயம் கேட்க வேண்டியதாயிற்று. நாட்டின் சீன ஆக்கிரமிப்பு அபாயம் மத்திய அரசுக்கு எதிராக எத்தகு கிளர்ச்சி- அல்லது விமரிசனம் செய்யும் போக்கினைக் கையாண்டாலும், அவை எதிரிக்குச் சாதகமாகி விடுமோ என்று எல்லா அரசியல் கட்சிகளும் அஞ்சிடும் சூழ்நிலை.

இந்தச் சந்தடியில், தென்னக மக்களின் நியாயமான முறையீடுகளை ஒடுக்கும் வகையில், 16-வது திருத்தம்; ஆங்கில நீடிப்பு மசோதா நிறைவேற்றுவதில் தயக்கம்.

1963 துவக்கத்திலேயே இத்தகு நெருக்கடிகளைச் சமாளித்துக் கழகத்தை காப்பாற்றி அதன் மூலம் தமிழகத்தை காப்பாற்றும் மிகப் பெரிய பணிகளில் அண்ணா அவர்களுடன், அனைவரும் கடுமையாகப் பணியாற்ற வேண்டி ஏற்பட்டது.

பண்டித நேருவின் புகழையும் பெருமைகளையும் சீன ஆக்கிரமிப்பு கணிசமாக வெளிநாடுகளில் குறைத்து விட்டது. அதே போல், ஆங்கில நீடிப்பு மசோதாவை நிறைவேற்றுவதில் காட்டிய தயக்கம் காரணமாக உள் நாட்டிலும் அவர் செல்வாக்கு மங்கத் தொடங்கியது. அவர் கற்ற பரந்த கல்வி—பெற்ற அரசியல் திட்பம்—பயின்ற ஜனநாயக முறை—அத்தனையும் 1963-இல் இந்தி ஏகாதிபத்தியவாதிகளிடம் பின் வாங்கின.

பிப்ரவரி 17-இல் கூடிய காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில், ஆங்கில நீடிப்பு மசோதா பற்றிய பிரச்சினையை, திரு கே. அனுமந்தையா அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இது சம்பந்தமாகத் தென்னாட்டில் தி.மு. கழகம் தெரிவித்து வரும் கருத்துக்களையும் இதழ்களின் கருத்தையும் அந்தக் கூட்டத்தில் அனுமந்தையா நேருவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அத்துடன் அடுத்து கூடும் பாராளுமன்ற தொடரிலேயே மசோதா கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் அப்போது வலியுறுத்தினார். ஆனால், நேருவின் பதில், பிரச்சினையிலிருந்து நழுவுவதாக அமைந்தது. ''நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் முக்கிய அலுவல்கள் முடிந்து விட்டால், ஏப்ரல் 20-க்குப் பிறகு இந்த மசோதா கொண்டு வரப்படலாம்'' என்பது நேருவின் மழுப்பல்.

இது குறித்து வழக்கத்திற்கு மாறுக, 'இந்து' பத்திரிக்கையே சற்று ஆத்திரமாக எழுதிற்று. 20-2-63 நாளன்று 'வழக்கை முடிக்கவும்' (Close the case) என்கிற தலைப்பில், அந்த இதழ் தீட்டிய தலையங்கத்தில்,

''1965-ஆம் ஆண்டுக்குப் பிறகும், காலக்கெடுவின்றி ஆங்கிலம் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்படும் திருத்த மசோதா விரைவில் சட்டமாக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கை வலியுறுத்தப்படுகிறது. இந்தி வெறியர்களின் கரம் வலுப்பெறுவதற்கு வாய்ப்பு அளிக்காமல் தடுக்க வேண்டுமானால், ஆங்கில நீடிப்பு மசோதாவை விரைவில் சட்டமாக்குவதுதான் சிறந்த வழியாகும்.

''தேவைப்படுகின்ற இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டு காலம் (1965வரை) அவகாசம் இருக்கிறது என்று கூறப்பட்டாலும், சமீப காலத்தில் மொழிவெறியர்களின்

'விகார சொரூபம்' தலையெடுத்துள்ளதால், அச்சக்திகளோடு போராடு வதில் ஒரு நிமிடத்தைக் கூட இழந்து விடக்கூடாது" என்று அந்த இதழ் எழுதிற்று.

தி.மு. கழகம் ஒரு நிமிடத்தையும் வீணுக்காது இந்தப் போராட் டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

1953-இல் கழகம் மும்முனைப் போராட்டத்தின் மூலம் அநீதிகளை எதிர்த்தது.

1963-இல் நீதியைக் கேட்டுப் போராடிற்று.

இந்தி வெறியைப் பற்றியும், அந்த மொழி அகில இந்திய மொழி யாக அரசியல் சட்டத்தில் இடம் பெறுவதற்குக் காரணமான சக்தி களைப் பற்றியும், கழகம் தனது விளக்கங்களை நாட்டு மக்களிடம் எடுத்து வைக்க ஆயுத்தமான போது, டாக்டர் இராசேந்திரப் பிரசாத் பிப்ரவரி 28-இல் காலமானார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் என்ற முறையிலும் சரி, தேசியப் போராட்ட வீரர் என்பதிலும் சரி, இராசேந்திரப் பிரசாத் அவர்கள் ஒரு சிறந்த மனிதர். அவரது மறைவுச் சூழ்நிலையில் நாடு துக்கம் கொண்டாடும் நேரத்தில் இந்தி மொழி ஆதிக்கம் குறித்து அவ்வள வாக பேச வேண்டாம் என்று அறிஞர் அண்ணா கருத்தறிவித்தார். ஏனென்றால், இந்திதான் தேசிய மொழி என்று அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுக் கொண்டதற்கு இராசேந்திர பிரசாத் அவர்கள் முக்கியக் காரணமாக இருந்தார்.

83

'மே'யும் 'ஷெல்'லும்

சில ஆண்டுகளுக்கு முன்பு புது டெல்லியில் ஆடிட்டர் ஜெனரல் அலுவலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அந்த அடிக்கல் நாட்டுவதற்கு அப்போது குடியரசுத் தலைவராக இருந்த பாபு இராசேந்திரப் பிரசாத் ஒப்புதல் கொடுத்திருந்தார்.

ஆங்கிலம் தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடிய மொழி என்பதால் அந்த அடிக்கல்லில் பொறிக்கப்பட வேண்டிய வாசகங்கள் ஆங்கில மொழியிலேயே இருக்கவேண்டும் என்று முதலில் முடிவு செய்யப் பட்டது. இதற்கிடையில் ஆடிட்டர் ஜெனரல் அலுவலகம் குழப்பத்திற்கு உள்ளாகிவிட்டது. இராசேந்திரப் பிரசாத் அவர்களுக்கு இந்த மொழியின் பேரில் இருக்கும் பற்றுதலைக் கருதி, நாட்டப்படும் அடிக் கல்லில் இந்தியில் வாசகங்கள் பொறிக்கப்பட்டு இருந்தால் அவர் பெரிதும் மகிழ்வார் என்று யாரோ கருத்தறிவித்தனர்.

அந்த அடிக்கல்லில் பொறிக்கப்படவிருந்த ஆங்கில வாசகத்துக்கு உரித்தான இந்தி மொழி பெயர்ப்பினைத் தருவதற்குத் தன்னால் இயலாது என்று புதுடெல்லி அனைத்திந்திய வானொலி நிலையம் அறிவித்துவிட்டது. இதற்குப் பின்னர் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள இந்தி மொழிப் பண்டிதர்களின் உதவி, இது சம்பந்தமாக நாடப்பட்டது. குறிப்பிட்ட வேளையில் மூன்று இடங்களிலிருந்தும் மூன்று மொழி பெயர்ப்புகள் கிடைத்தன. அந்த மூன்று மொழி பெயர்ப்புகளும் மூன்று வகையாக, ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டிருந்தன.

இது கண்டு அலுவலக அதிகாரிகள் குழம்பினர். இறுதியாக, இராசேந்திர பிரசாத் அவர்களையே மொழிபெயர்த்துத் தருமாறு கேட்டுவிடுவது என்று முடிவு செய்து அதன்படி குடியரசுத் தலைவரையே வேண்டிக் கொண்டனர். அவரும் அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று, காலம் தாழ்த்தாது தமது இந்தி மொழி பெயர்ப்பினைத் தந்தார். அவர் தந்த இந்தி வாசகங்கள்தாம் அடிக்கல்லில் செதுக்கப்பட்டன.

ஆனால் குடியரசுத் தலைவர் தந்த இந்தி மொழிபெயர்ப்பு முன்பு பெறப்பட்ட மூன்று இந்தி மொழிபெயர்ப்புகளிலிருந்தும் மாறுபட்ட தாக இருந்தது.

இதுதான் இந்தி மொழி; இவர்தான் இராசேந்திரப்பிரசாத், டாக்டர் பிரசாத் அவர்களுடைய மறைவும், சட்ட மன்றத் தொடர் கூட்டத்தால் ஏற்பட்ட வேறுபட்ட சூழ்நிலைகளும் ஆங்கில நீடிப்பு மசோதாவை நிறைவேற்ற மறுக்கும் பண்டித நேரு அவர்களின் பாங்கினைத் தமிழகத்தில் தெளிவாக்கிவிடுவதில் தி.மு. கழகம் சற்று நிதானம் காட்டிற்று.

மசோதாவை நிறைவேற்றுவதில் தாமதம் காட்டுவதற்கான காரணங்களை நேரு அவர்கள் நாளுக்கு ஒன்றுகச் சொல்லி கொண்டிருந்தார். அவைகள் எவையும் தென்னாட்டு மக்களால் ஒப்புக் கொள்ளக்கூடியவையாக அமையவில்லை.

"தென்னக மக்கள் விரும்பும் காலம் வரை ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருந்து வரும்" என்று அடிக்கடி உறுதி மொழி கொடுத்து வந்த நேரு அவர்கள், அந்த உறுதிமொழியைச் சட்ட பூர்வமாக்கும் காலம் வரும்போது தயக்கம் காட்டினார்.

இதற்குக் காரணத்தை ஆராய்ந்து கொண்டிருந்தனர் மற்ற கட்சியினரும், கற்றுணர்ந்தவர்களாகச் சொல்லிக்கொண்டிருந்தவர் களும்.

கழகம் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. கொடுத்த வாக்குறுதி நேருவால் நிறைவேற்றப்பட்டேயாக வேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்து அதற்கான போராட்டத்தில் இறங்கிற்று.

இந்தப் போராட்டத்தின் முதல் முழக்கமாக 18-4-63 அன்று சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இந்தித் திணிப்புக் கண்டனக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் வீர உரையாற்றினார்கள்.

இந்திக்கு எவ்வளவு இடம். ஆங்கிலத்துக்கு எதுவரை இடம் என்பதை 18-4-63 கடற்கரைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக் களாம் இன்றளவும் வரையறுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையல்ல.

18-4-63 கடற்கரைக் கூட்டத்தில் இந்தியை எதிர்ப்பதற்குத் தமிழகத்தில் ஐந்தாவது போராட்டக் களம் அமைக்கப்பட்டது என்று சொல்லலாம். அன்று தொடங்கிய இந்தி எதிர்ப்புப் பணிகள்தாம் இன்றளவும் தொடர்கின்றன.

1938-40 முதற் களம்.

1948-50 இரண்டாவது களம்.

1953-56 மூன்றாவது களம்.

1959-61 நான்காவது களம்.

1963 முதல் இன்றுவரை ஐந்தாவது களம் என்றுதான் தமிழகம் தொடர்ந்து இந்தி மொழித் திணிப்பினை எதிர்த்து வரும் போராட்டங் களை வரலாறு வரிசைப்படுத்தும்.

கடற்கரைக் கூட்டத்தை அடுத்து 20-4-63 அன்று சென்னை இராயப்பேட்டை, லட்சுமிபுரம் யுவர் சங்கத்தின் சார்பாக மொழிப் பிரச்சினை பற்றிய தலைப்பில் பேசுவதற்கு ராஜாஜி அவர்களும், நானும், நண்பர் சம்பத்தும் அழைக்கப்பட்டிருந்தோம்.

சம்பத் அவர்கள் அப்போது அண்ணாவைத் 'திருவாளர் அண்ணாதுரை' என்று கூறுவதற்காகவே ஒரு கட்சியை ஆரம்பித்திருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். அந்தக் கட்சியின் பெயர் தமிழ்த் தேசியக் கட்சி. அந்தக் கட்சியின் சார்பில் அவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். மக்கள் நிரம்பி வழிந்த அந்தக் கூட்டத்தில் ராஜாஜி அவர்களும், நானும் பேசியதைவிட வெகு வேகமாகவும், ஆவேசத்தின் உச்சக்கட்டத்திலும் நண்பர் சம்பத் இந்தியை எதிர்த்துப் பேசினார்.

எப்பொழுதுமே கட்டு மீறிய உச்சக்கட்டத்தில், அது மித வாத மானாலும் சரி அல்லது பிற வாதமானாலும் சரி, பேசுகிறவர்கள் அல்லது எழுதுகிறவர்கள் அந்தக் கொள்கையில் நிலையாக இருக்க மாட்டார்கள் என்பதற்குத் தோழர் சம்பத் ஒரு நல்ல உதாரணமாவார்!

ஏனெனில் வன்மையாக இந்தியை எதிர்த்து முழங்கிய அவர் அதற்குப் பிறகு இந்திக்கு ஆலவட்டம் சுழற்றும் காங்கிரஸ் கட்சிக்கே போய்விட்டார்

இந்தித் திணிப்பினால் தமிழனுக்குத்தான் ஆபத்து, தமிழுக்கு ஆபத்தில்லை என்று மூதறிஞர் ராஜாஜி அடிக்கடி கூறி வந்தார். அவரும் நானும் கலந்துகொண்ட கோகலே மண்டபக் கூட்டத்தில் ராஜாஜியின் அந்தப் பேச்சிற்கு விளக்கம் சொன்னேன்.

"பானைக்கு ஆபத்து என்றால் பானையில் இருக்கிற பாலுக்கும்தான் ஆபத்து. அதை மனத்தில் வைத்துக்கொண்டுதான் ராஜாஜி அவர்கள்

இந்தியாவில் தமிழனுக்கு ஆபத்து என்கிறார். தமிழனுக்கு ஆபத்து என்றால் தமிழுக்கும்தான் ஆபத்து'' என்று நான் குறிப்பிட்டேன்.

இராயப்பேட்டைக் கூட்டத்துக்குப்பின் சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் அண்ணா அவர்களும், ராஜாஜி அவர்களும், காயிதே மில்லத் அவர்களும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்தியை எதிர்த்துத் தமிழகமே போர்க்கோலம் பூண்டுவிட்டது என்ற முரசு டெல்லியை நோக்கி அதிர்ந்தது. 'மே', 'ஷெல்' ஆகிய ஆங்கிலச் சொற்கள் அப்போது இந்தியாவில் படாதபாடு பட்டன அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களைக் கேட்டு, ஆங்கில மொழி ஞானசனும், ஷேக்ஸ்பியரும் கூடத் திணறிப் போயிருப்பார்கள், அவர்கள் உயிரோடிருந்தால்! 'மே' என்பது இந்திப் பகுதிக்காரர்களுக்குப் பிடித்தமான சொல்லாகவும், 'ஷெல்' என்பது இந்தி எதிர்ப்பாளர்கள் வலியுறுத்திய சொல்லாகவும் இருந்தன இந்த உணர்வின் அடிப்படையில் 1-5-63 அன்று சென்னையில் நடைபெற்ற மே தின விழாத் தொழிலாளர் கூட்டத்தில், ''இதுவரையில் மே தினத்தின் மாண்பு குறித்துப் பேசினேன். இனி 'மே' என்பதால் ஏற்பட்டுள்ள எதிர்ப்புக் குறித்துப் பேசுகிறேன். மத்திய அரசு கொண்டுவந்துள்ள மொழி பற்றிய முடிவில் ஆங்கிலம் நீடிக்கலாம் (English may continue) என்று இருக்கிறது. (English shall continue) ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று நாட்டிலுள்ள பல கட்சியினரும் கருத்து அறிவித்து வருகின்றனர்'' என்று நான் சுட்டிக்காட்டியது எனக்கு நினைவுக்கு வருகிறது.

சீன ஆக்கிரமிப்பின்போது 'மா' என்றாலே இந்தியர் அனைவரும் வெறுத்ததைப்போல, 1963 துவக்கத்தில் 'மே' என்றாலே தென்னக மக்கள் முகம் சுளித்தனர். இந்த 'மா'வும் 'மே'யும் எத்தகு விமரிசனங்களுக்கு ஆளானாலும் ஆளாகட்டும் என்று தமது காரியத்திலேயே குறியாக இருந்த காங்கிரஸ் கட்சியினர் 3-5-1963 அன்று பிரிவினைத் தடை மசோதாவை எல்லாச் சடங்குகளுடனும் இறுதியாக நிறைவேற்றினர்.

பிரிவினை உணர்வு ஏற்பட்டதற்கு ஆன காரணத்தைக் கண்டுபிடித்து அதற்கான ஜனநாயக வழி அணுகுமுறைகளைக் கைவிட்டுவிட்டுத் திடீரென ''சட்டம் கொட்டும்'' என்று டெல்லி ஆர்ப்பரித்தது கண்டு தி.மு. கழகம், தன் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் வகையில், அந்த மசோதா நிறைவேறும்போது கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.

திருச்செங்கோட்டில் நடைபெற்ற இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், ''இது கழகத்திற்கும் காங்கிரசுக்கும் நடக்கிற போராட்டியல்ல, 'திராவிட நாடு வேண்டுமா?' வேண்டாமா? என்ற கேள்விக்குக் கிடைக்கப் போகிற பதில்'' என்று ஆவேசமாக அறைகூவல் விடுத்தார். திருச்செங்கோட்டு மக்கள் கழக வேட்பாளர் நண்பர் கந்தப்பனுக்குத்தான் வெற்றியைத் தந்தனர். அந்தத் தீர்ப்பைப்பற்றி அன்றைய மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் பிறகு வாய் திறக்கவே இல்லை. சட்டம் தான், தன்னுடைய அகன்ற வாயைத் திறந்தது.

திருச்செங்கோடு தேர்தல் எப்படிப்பட்ட சூழ்நிலையில் நடந்தது? விலைவாசி உயர்வைக் கண்டித்துத் தி. மு. கழகம் ஒரு போராட்டத்தை நடத்தியது. தமிழகத்தில் அரிசிக்கு மக்கள் அவதிப்பட்டனர். பட்டினிச் சாவுகள் பல ஏற்பட்டன. ஆறு அவுன்ஸ் அரிசி கூட, அறிவித்தபடி அரசாங்கத்தால் தரமுடியவில்லை. ஒரு கல் தொலைவு மக்கள் 'கியூ' வரிசையில் நின்று அரிசி கிடைக்காமல் திரும்பினர்.

அரிசி கேட்டு ஊர்வலம் சென்ற ஒரு கூட்டத்தின் மீது கோவையில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அர்ச்சுனன் என்ற ஒருவர் பலியானார். கிணற்றில் விழுந்து மடிந்தோர், தூக்குக் கயிற்றில் தொங்கியோர் என்று பட்டினிப் பிணங்கள் குவிந்தன சுயராஜ்யம் கிடைத்தால் சுகராஜ்யம் கிடைக்கும் என்று கூவிய காங்கிரஸ் ராஜ்யத்தின் நிலை இது.

இந்தக் கொடுமைகளையெல்லாம் கண்டித்துக் கழகம் அறப் போரில் குதித்தது. மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி, ஆம், காங்கிரஸ் கட்சியின் ஆட்சி. அந்த ஆட்சியைக் கண்டித்து நடத்திய அறப் போராட்டம் ஒரே ஒரு நாள்தான். அந்த ஒரு நாள் அடையாள மறியலில் சிறைப்பட்டோர் இருபதாயிரத்துக்கு மேற்பட்டோர். அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், மற்றும் கழக முன்னணியினர் வேலூர், சென்னை, சேலம், மதுரை கோவைச் சிறைகளில் அடைக்கப் பட்டனர். ஐயாயிரம் பேருடன் நான் திருச்சி சிறையில் இருந்தேன்.

ஒரு நாள் அடையாள மறியலுக்குத் தண்டனை மூன்று மாதங்கள்! தொண்டர்களைப் போராட்டத்திற்கு அனுப்பிவிட்டுத் தலைவர்கள் வேடிக்கை பார்க்கும் போலில்லாமல், தலைவர்களே முதலில் சிறை புகுந்து காட்டுவதில் தி.மு.க.கழகம் கம்பீரமாக நெஞ்சுயர்த்தி நின்றது.

அயராது பணிகளை ஆற்றிடும் பாங்கும், அடக்கப் பண்பும் பொருந்திய என். வி. நடராசன் அவர்களும், விரல் விட்டு எண்ணக்

கூடிய கழக முன்னணியினர் சிலரும்தான் சிறைப்படாமல் வெளியில் இருந்து, திருச்செங்கோடு இடைத் தேர்தல் வேலைகளைக் கவனித்தனர்.

பிரிவினைப் பிரச்சாரம் செய்வதையும் அதற்கான முறையில் செயலாற்றுவதையும் தடுக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கவும், 'அரசியல் அமைப்பு (16 ஆவது திருத்த) சட்டம் 1963-என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் 1963-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5-ஆம் நாள் நிறைவேறியது.

இதன்படி அரசியல் சட்டத்தின் 19-ஆவது பிரிவிலும், 84-ஆவது பிரிவிலும், 173-ஆவது பிரிவிலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

நாடாளுமன்றம், சட்ட மன்றம், சட்டப் பேரவை ஆகிய தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் அடியில் கண்டவாறு உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்;

''மாநில சட்டப் பேரவையின் தொகுதி வேட்பாளராக முன் மொழியப் பெற்றுள்ள.....என்கிற நான் அரசியல் சட்டத்தில் நம்பிக்கை உள்ளவனாகவும், அதற்குக் கட்டுப்பட்டவனாகவும் இருப்பேன் என்றும், இந்தியாவின் மேலாதிக்க உரிமையையும (Sovereignty) ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பேன் என்றும் உறுதி மொழி கூறுகிறேன்.''

'இதன் தொடர்பாகத்தான், 30-12-1967 அன்று, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, 1967-ஆம் ஆண்டின் சட்ட விரோதச் செயல்கள் (தடுப்புச்) சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படியே சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஏழு ஆண்டுச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

(இந்தச் சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு உதவினால் ஐந்து ஆண்டு வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.)

16-ஆவது திருத்தச் சட்டம் மசோதாவாக மாநிலங்கள் அவையில் 1963-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாள் நிறைவேறியது.

84

கழகத்தைக் கலைத்தல் முடியுமா?

இதன் மீதான விவாதத்தில் மசோதாவைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருவர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தார்கள். மக்கள் சபை உறுப்பினர்கள் அடங்கிய குழு உருவாக்கித் தென்னக மக்களோ நேருக்கு நேராகச் சந்தித்து அம்மக்களின் உள்ளக் கிடக்கையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள். தலைமை அமைச்சர் நேரு அவர்கள் 1945-ஆம் ஆண்டில் கயூர்தலா நகரில் வெளியிட்ட கருத்தைச் சுட்டிக் காட்டிக் கூறியதாவது :

"இந்திய அமைப்பிலிருந்து பிரிந்து செல்ல ஒவ்வொரு உறுப்புக்கும் (மாநிலம்) உரிமை உண்டு எனத் தலைமை அமைச்சர் எடுத்துக்கூறியிருப்பதைக் காணுங்கள். இந்திய அரசியல் அமைப்பு போன்றதொரு ஐக்கிய அரசியல் அமைப்பானது என்றும் பிரிக்க முடியாதது என்ற வாதம் உண்மைக்கு மாறுனதாகும். எடுத்துக் காட்டாக, ஸ்காண்டினேவிய நாடுகள் (சுவீடன்-நார்வே-டென்மார்க்-ஐஸ்லாந்து) ஐக்கிய ஏற்பாட்டிலிருந்து பிரிந்து, தனித் தனி அரசுகளான வரலாற்றை நாம் சிந்திக்க வேண்டும்.

"இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன் இத்தகைய மசோதாவிற்குத் தேவையிருக்கிறதா என்பதை நூறு முறை உள்துறை அமைச்சர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் கூறியதாவது :

"பொதுவுடமை உறுப்பினர் திரு புபேஷ் குப்தா கூறியதைப் போல் இச்சிக்கல் அரசியல் அளவில் போராட வேண்டியதாகும். இப்போதுள்ள கூட்டமைப்பு ஆட்சியின் அரசியல் அமைப்பு நிலை தங்களுக்கு நன்மை அளிக்காது என்று என் பகுதியைச் சேர்ந்த மக்கள் மிக உறுதியாயும், மிக ஆழ்ந்த முறையிலும் கருதுகின்றனர். ஏதாவது தீவிரமான கருத்தை மேற்கொண்டாலன்றியும், ஏதாவது ஒரு புதியமுறை அரசியல் அமைப்பை ஏற்படுத்தினாலன்றியும், இக்கூட்டமைப்புப் பளுவையும் நெருக்கடிகளையும் தாங்க முடியாது என்று எனது கட்சி உறுப்பினர்கள் மட்டும் கருதவில்லை; கட்சியில் சேராத வேறு பலரும் இவ்வாறு கருதுகின்றனர்.

பிரிவினைப் பிரச்சாரம் அரசியல் சட்டத்திற்கு எதிரானதா என்பது பற்றிச் சட்ட நூல் அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்து நிலவுகின்றது.

''இச்சபை உறுப்பினரான வழக்குரைஞர் திரு. பி. என். சாப்ரூ பிரிவினையை எதிர்த்து எழுதியுள்ள ஒரு கட்டுரையில், அரசியல் சட்ட முன்னுரையைத் திருத்த முற்பட வேண்டும்' என்று கூறியுள்ளார்.

''நாட்டு மக்களில் ஒரு பகுதியினர், மற்றவர்கள் அனைவரையும் விட நேர் எதிரான கருத்துக்களைக் கொண்டிருக்கும் காரணம் பற்றி உறுப்பினர்கள் யோசிக்க வேண்டும். இதற்கு மனநிலை அம்சங்கள் உள்ளன. வட்டாரப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும், மொழி வேறுபாடுகளும் நிலவுவதை நாம் புறக்கணிக்கவே முடியாது. 'ஆட்சி உரிமையும் மக்களாட்சியும் அரசியல் சட்டத்தின் இரு முக்கியக் கொள்கைகள்' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

''அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் ஒரு மசோதாவைக் கொண்டு வருவது ஆட்சி உரிமையோ, மக்களாட்சி முறையோ அல்ல. ஆட்சி உரிமை என்பதற்கு அதிகாரம் ஓர் இடத்தில் மட்டுமே குவிந்திருக்க வேண்டும் என்பது பொருளல்ல" என்று விளக்கினார் அண்ணா அவர்கள்.

ஆனால், இந்த விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிய மத்திய அரசு உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஹசர்நவிஸ் பேசுகையில் ''திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக இந்த மசோதாவை அரசு கொண்டு வந்திருப்பதாக அண்ணாதுரை நினைப்பது தவறு" என்றார்.

ஆனால், பிரிவினைத் தடைச் சட்டம் பற்றிக் கழகம் என்ன செய்யப் போகிறது என்பதை விட, கழகத்திற்கு இப்படியெல்லாம் சங்கடங்களை உருவாக்குகிறார்களே என்றுதான் மக்கள் ஆயாசப்பட்டார்கள்.

கழகத்தின் செயல் முறைகளைவிடக் கழகம் இருப்பதுவே மக்களுக்குப் பெரியதொரு கருவூலமாக, பாதுகாப்பாகத் தமிழ் மக்கள் கருதுவதை அப்போது நாங்கள் தெளிவாக அறிந்தோம்.

இதனை நாங்கள் அவ்வப்போது அறிஞர் அண்ணா அவர்களிட மும் தெரிவித்துக் கருத்துப் பரிமாறிக்கொள்வோம். இதுபோன்ற விவகாரங்களில் நாங்கள் சொல்வதைச் சற்று மிகையாகவே கருதி, தாமே நேரில் அறிவதற்கு முயல்வது அண்ணாவின் வாடிக்கை.

இதன்படியே 1963 மே திங்கள் இறுதி வாரத்தில் நீண்டதொரு சுற்றுப் பயணம் வகுத்து, என்னையும் உடன் அழைத்துச் சென்றார். கழகம் சொல்லி வரும் மாறுதல்களை அதிகம் ஏற்றுக் கொள்ளாத

விவசாயிகள் நிறைந்த பகுதி என்று அப்போது கருதப்பட்ட தஞ்சை மாவட்டத்திலேயே அந்தச் சுற்றுப்பயணம் தொடங்கிற்று.

இந்தச் சுற்றுப் பயணத்தின் போது 22-5-63 அன்று குடந்தையில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசிய பேச்சைத் திரித்து ''தி. மு. கழகத்தையே கலைத்து விடுவதாக அண்ணுதுரை கூறினார்'' என்பதாகச் சென்னை இதழ்கள் சில செய்தி வெளியிட்டன.

எத்தகு கேலி கிண்டல்களையும் தாங்கிக் கொள்ளும் அண்ணு அவர்களுக்கு இந்தச் செய்தியைப் படித்ததும் ஏற்பட்ட கோபத்தை எதிரிலிருந்து பார்த்த நான் அதிர்ச்சி அடைந்தேன்.

அடுத்த நாள் இதுபற்றிக் குறிப்பிட்டுச் சென்னையில் பேசுகையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்டது இன்றைக்கும் பொருந்தும்.

''தி. மு. கழகத்தைக் கலைத்துவிட மாட்டேனு என்று ஆவலுடன் எதிர்பார்த்துச் சிலர் ஏங்குகிறார்கள். நானு கழகத்தைக் கலைத்து விடுவேன்? நான் கலைக்க நினைத்தால்தான் முடியுமா? அப்படி எதிர்பார்ப்பது ஜனநாயகம் தெரிந்தவர்களின் செயல் அல்லவே! தி. மு. கழகம் என்ன, என் வீட்டு மாட்டுக் கொட்டடியா நான் நினைத்ததும் கலைத்து விடுவதற்கு? மக்களால் கட்ட ப்பட்டதல்லவா அது!

''குறைந்தது 25 பேர்களைக் கொண்ட 4000-க்கு மேற்பட்ட (1963-ல் 4000; இப்போது சுமார் 20,000) கிளைக் கழகங்கள் சேர்ந்து அமைத்த வட்டக் கழகங்கள்; அவற்றிற்கு மேலே மாவட்டக் கழகங்கள்; அவற்றிற்கு மேல் பொதுக்குழு; செயற் குழு; தலைமைக் கழகம். இப்படி அடியிலிருந்து ஜனநாயகக் கோவையாக அமைக்கப்பட்டிருப்பது தி. மு. கழகம். இதை எப்படி ஒருவர் நினைத்தால் கலைக்க முடியும்?''

ஆம், அண்ணு அவர்களே நினைத்தாலும் கலைக்க முடியாது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட தி. மு. கழகத்தை — அவரால் உழைத்துப் போற்றி வளர்க்கப்பட்ட கழகத்தை — யாரால்தான் அழிக்க முடியும்? சிதைக்க முடியும்?

பிரிவினைப் பிரச்சாரத் தடைச் சட்டத்தின் நோக்கம் கண்டிப்பாகத் தோற்கடிக்கப்பட்டேயாக வேண்டும் என்பதில் கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும் குறியாக இருந்தார்கள் என்பதைச் சுற்றுப் பயணம் அண்ணுவுக்கே தெளிவாக நிரூபித்தது.

கழகத்தைக் கலைக்க வேண்டும்.

பிரிவினைப் பிரச்சாரத் தடைச் சட்டத்தை எதிர்க்க வேண்டும்.

கழகத்திற்கு ஊறு நேராமல் பிரிவினைப் பிரச்சாரத் தடைச் சட்டத்தையும் சமாளிக்க வேண்டும்.

என்பன போன்று மூன்று வகையான கருத்துக்களைக் கழகத்தைப் பற்றி அப்போது விமரிசனம் செய்தவர்கள் தெரிவித்தார்கள். முதல் இரண்டு வகையான கருத்துக்களைத் தெரிவிப்பதில் காங்கிரஸ் கட்சியினரும், கழகத்தை எப்படியாவது ஒழித்து அழித்து விட வேண்டும் என்று நச்சு மனப்பான்மை கொண்டவர்களும் பலமாக வலியுறுத்தினர்கள். மூன்றுவது கருத்தைப் பற்றிக் கழகத் தலைவர்களும், தமிழர் நலன் நாடும் பெருமக்களும் தீவிரமாகச் சிந்தித்து வந்தார்கள்.

இந்த நேரத்தில், தமிழகத்திற்கு வெளியிலுள்ள மாநில இதழ்கள் அனைத்தும் கழகத்தைப் பற்றிப் பரிவோடும், பாராட்டும் வகையிலும் கருத்துக்களைப் பெருவாரியாகத் தெரிவித்தன. குறிப்பாக இந்தியை எதிர்ப்பதிலும் தமிழகத்திற்கு எப்போதும் உறுதுணையாக நிற்கும் வங்காளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் சில ஏடுகள் கழகம் எப்படியும் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற கருத்தைக் கழகத்தவரே தனிகு புரிந்து கொள்ளும் வகையில் வெளியிட்டன.

''பிற்போக்குவாதிகள் என்றும், வலது சாரிகள் என்றும், தி. மு. கழகத்திற்கு கம்யூனிஸ்டுகள் சூட்டும் பட்டங்கள் சரியானவை அல்ல; இப்படிக் கம்யூனிஸ்டுகள் மாறுவதற்கு அடிப்படை, அவர்களுக்குள்ள அச்ச உணர்வேயாகும். தங்கள் 'கர்ஜனை'களுக்கு எங்கே இடமில்லாமல் போய்விடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். தி. மு. கழகப் பிரிவினைக் கொள்கை எப்படி இருந்தாலும், நடுநிலையற்ற அரசியல் பார்வையாளர்கள் அந்த இயக்கத்திலுள்ள புரட்சிகரமான எழுச்சியைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். டாக்சி டிரைவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், பெட்டிக்கடைக்காரர்கள், ஏழை எளியவர்கள், பொதுவாக வாழ்வில் வளம் காண முடியாதவர்கள் ஆகியோரின் கண்களில், தி. மு. கழகம்தான் தற்போதைய ஆட்சி அமைப்பு முறையை எதிர்த்துத் தங்களுக்காக இருக்கிற இயக்கம் என்றும், தி. மு. கழகம் தான் ஏழைமக்களின் குரல் என்றும் தெரிகிறது. 'வர்க்க பேதம்' பெற்ற தொழிலாளர்களின் (புரோலடேரியேட்) இடையே முக்கியமாக வேரோடித் தழைத்திருப்பது இந்த இயக்கந்தான்! இது கிராமப் பகுதிகளிலும் மிக வேகமாக வளர்கிறது" என்று மே இறுதி வார இதழில் பெங்களூர் 'டெக்கான் ஹெரால்ட்' கட்டுரை எழுதிற்று.

அதே போல் இந்தியாவின் பெரும் அரசியல்வாதியாகத் திகழ்ந்த திரு கே. எம். முன்ஷி போன்றவர்களும் கழகத்தின் சமுதாயக் கொள்கையில் எவ்வளவுதான் வேறுபாடு கொண்டு இருந்தாலும் பிரிவினைத் தடைச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தார்கள்.

"பிரிவினையைத் தடுக்க அரசியல் சட்டத்தைத் திருத்தியிருப்பது அடிப்படை உரிமையைப் பாதிக்கிறது. ஒவ்வொரு தடவை அரசியல் சட்டத்தைத் திருத்தும்போதும் மக்களின் உரிமை பறிக்கப்படுகிறது. அடிப்படை உரிமைகளைப் பறிப்பதன் மூலம் மெதுவாகச் சர்வாதிகார ஆட்சி புகுத்தப்படுகிறது. இதை நாம் எதிர்த்தே தீர வேண்டும்" என்று ஜூன் 3 அன்று திருச்சூரில் செய்தியாளர்களிடம் திரு கே. எம். முன்ஷி குறிப்பிட்டார்.

பிரிவினைத் தடைச் சட்டம் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கிறதா இல்லையா என்பதை முன்ஷி போன்றவர்கள் மக்களுக்குத் தெரிவிக்கட்டும் என்ற முடிவில், இப்படி அடிப்படை உரிமைகளைப் பல்வேறு முறாம் பூச்சு மூலம் பறித்து மெதுவாகச் சர்வாதிகார ஆட்சிக்கு வித்திடும் காங்கிரஸ் கட்சியின் மூலபலத்தை முறியடிப்பதில் நாங்கள் அப்போது கவனமாகப் பணியாற்றினோம்.

சர்வாதிகாரத்தைத் தடுக்க வேண்டுமானால், ஒன்று கன வேகத்தில் காரியம் ஆற்ற வேண்டும். அல்லது கடலினும் பெரிதான பொறுமையைக் கைக்கொண்டு போராட வேண்டும். இழப்பும் தியாகமும் இரண்டிலும் ஒரே மாதிரிதான் அமையும் என்றாலும், கழகத்தின் அறவழிப்படிப் பொறுமையாகத் தொண்டாற்றியே நாட்டுக்கும் கழகத்திற்கும் எதிர்நிற்கும் பீடைகளை ஒழித்துக் கட்டுவதற்காக 63 ஜூன் 8, 9, 10 ஆகிய நாட்களில் கழகத்தின் தலைமைச் செயற்குழுவும் பொதுக்குழுவும் கூட்டப்பட்டன.

85

போராட்டக் குழுத் தலைவர் நான் !

கழக வரலாற்றிலே இந்தக் கூட்டம் அதிகமான பரபரப்பினை ஏற்படுத்தியதாகும். கழகத் தோழர்களே விடக் கழகத்திற்கு எதிரிகள் இந்தக் கூட்டத்து முடிவுகளே ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

எங்களுக்கு நாங்களே மரண தண்டனை விதித்துக் கொள்ளும் கூட்டமாக இது முடியும் என்றுகூட அவர்கள் கருதினார்கள். எங்களுக்கு ஏற்படுத்திவிட்ட ஆத்திரத்திலும் அச்சத்திலும் அனைத்தையும் கண்ணை மூடிக்கொண்டு அழித்து விடுவோம் என்பது அவர்கள் முடிவு. ஆனால், அப்படிப்பட்டவர்கள் முழுதுமாக ஏமாந்தார்கள். இந்தப் பரிசோதனையிலும் வழக்கம் போல் அண்ணா அவர்களின் தொலை நோக்கும் கழகத் தோழர்களின் கட்டுப்பாட்டு உணர்வும் பிரமாத வெற்றி பெற்றன.

தங்களுக்காகத் தாங்களே உருவாக்கிய இயக்கத்தைத் தங்களுடைய தியாக உணர்வுகளின் மூலம் கட்டிக் காப்பதற்குத் தயாராகி விட்ட பொதுக் குழு உறுப்பினர்களின் ஆணித்தரமான கருத்துரைகள் அங்கு கேட்டன. கழகத்தைக் காப்புதற்கும் இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்கும் முதல் களப்பலி யார் என்பதில் எங்களுக்குள்ளாகவே ஒரு வகைப் போட்டியே அங்கு நடந்தது.

இந்தியை எதிர்த்து அதுவரை கண்டிரா அளவுக்கு— போராட்டத்தை நெடுங்காலம் நடத்திடத்தக்க அளவுக்கு—செயல் திட்டங்களே வகுப்பதற்காக அந்தப்பொதுக்குழு அமைத்த போராட்டக் குழுவுக்கு என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

1953-ல் நடைபெற்ற சிதம்பரம் மாநாட்டில் கல்லக்குடிப் போராட்டத்திற்குத் தலைவராக என்னை அண்ணா அவர்கள் அறிவித்த போது எனக்கேற்பட்ட அளவிடா மகிழ்ச்சியே பெரிதென அதுவரை நினைத்திருந்த நான், இந்தி எதிர்ப்புப் போராட்டச் செயல் திட்டக் குழுவின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்ததும் பொதுக் குழுவினருக்கு நன்றி கூறிடவும் திணறிடும் அளவுக்கு மகிழ்ச்சியில் மூழ்கிவிட்டேன்.

"...அண்மையில் நிறைவேற்றப்பட்டுவிட்ட மசோதாவின் மூலம் 1965-ல் இந்தியை ஆட்சி மொழி ஆக்கிடவும், ஆங்கிலத்தை ஒதுக்கி விடவும் செய்யப்பட்டுள்ள அக்கிரமத்தை இப்பொதுக்குழு வன்மை

யாகக் கண்டிக்கிறது. இந்நிலையில், மாநில ஆட்சி மொழியாக இருப்பதும் திராவிட மொழிகளில் தலையாயதுமான தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக ஏற்க வேண்டுமென்று வற்புறுத்துவதுடன், அதை ஒப்ப மாநில ஆட்சி மொழிகளையும் ஏற்றுக்கொள்ளும் வரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருந்து வர வேண்டும் என்று இப் பொதுக் குழு வற்புறுத்துகிறது.

''ஆட்சி மொழிகள் மசோதாவும், அரசாங்க உத்தரவுகளும் திட்டங்களும் இந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்துகின்ற காரணத்தால், நமது மொழி உரிமைகளைக் காக்கவும், இந்தி ஆதிக்க ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், நம்மை இரண்டாந்தரக் குடிமக்களாக்கும் சூழ்ச்சியை எதிர்த்து ஒழிக்கவும், தென்னக மக்கள் உரிமையை நிலை நாட்டவும், தி.மு.க.கழகம் நேரடிப் போராட்டத்தைத் துவக்கி விட வேண்டும் என இப்பொதுக்குழு முடிவெடுக்கிறது ''

''இதற்கெனத் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் தோழர் என். வி. நடராசன் அவர்களும், மாவட்டச் செயலாளர் களும், மாநில அமைப்பாளர்களும் கொண்ட ஒரு போராட் டக் குழுவை இப்பொதுக் குழு அமைக்கிறது'' என்கிற அந்தத் தீர் மானத்தை முன்மொழிந்தவர் பேராசிரியர் அன்பழகன் அவர்களாவார்

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதாக அவைத் தலைவர் நாவலர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து எழுந்த மகிழ்ச்சிக் கரகோஷத்தில் என்னையே நான் மறந்து போனேன். எப்படிப்பட்ட பொறுப்பு; எப்பேர்ப்பட்ட பேறு!

1953-ல் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது ஒரு போராட்டக் களத்தின் தலைவராகப் பொறுப்பு ஏற்கும் பேற்றினைப் பெற்றேன்.

அதேபோல், 1963-ல் தமிழகத்தின் நெடுங்கால அரசியலைச் செப்பனிடக்கூடிய வகையில் கழகச் சார்பாகத் துவக்கப்படுகின்ற இரு



போராட்டக் களங்களில் இந்தி எதிர்ப்புக் களத்திற்குத் தலைவராக என்னை ஏகமனதாக என் அண்ணனின் தலைமையிலான என் கழகம் தேர்ந்தெடுக்கிறது!

என எண்ணங்கள் எங்கெங்கோ சிறகடித்துப் பறக்கின்றன. உயர் நிலைப்பள்ளி மாணவனாக இருந்தபோது இந்தியை எதிர்ப்பதில் என் பங்கையும் செலுத்திடும் நினைவில் நான் நடத்திய சிறு சிறு கிளர்ச்சிகள் என் நினைவுத் திரையில் நிழலாடின.

என் மனத்தில் முழு நிறைவு தளும்பும்படிச் செய்த ஒரு சில சம்பவங்களில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் ஒன்றாகும்.

"அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்ட 16-ஆவது திருத்த மசோதா, எந்த ஜனநாயக ஆட்சியும் மதிப்பளித்து நிலை நாட்டித் தீரவேண்டிய அடிப்படை உரிமைகளைக் குறைத்துப் பொருளற்றதாகவும் பயனற்றதாகவும் ஆக்கிவிடுவதுடன், ஜன நாயகப் பண்பாட்டை அழித்து, ஒரு கட்சி சர்வாதிகாரத்திற்கு வழி வகுப்பதாக அமைந்துள்ளது என்பதைப் பொது மக்களுக்கு இப்பொதுக் குழு சுட்டிக் காட்டுகிறது.

ஜனநாயகப் பண்புடனும், அறநெறி நின்று பணியாற்றி மக்களின் பேராதரவினைப் பெறுவதில் தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெற்றுத் தமிழகச் சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சியாக விளங்கி, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் வல்லமையைப் பெற்றுக் கொண்டு வருவதும், திராவிடத்தின் உரிமை காத்திடும் பாசறையாக அமைந்திருப்பதுமான தி.மு. கழகத்தை அரசியல் சட்ட 16-ஆவது திருத்தத்தைக் கருவியாகக் கொண்டு அழித்து விடுவதற்குக் காங்கிரஸ் ஆட்சி முனையுமானால், தி.மு. கழகம் மூலாதாரக் கொள்கையைப் பாது காத்துக் கொள்ளவும், அமைப்பு அழிக்கப்பட்டு விடாமலிருக்கவும் அரசியல் - நீதியியல் - கிளர்ச்சியில் ஆகிய பல்வேறு முனைகளில் மேற்கொள்ள வேண்டிய வழி வகைகளை நிலைமைக்கு ஏற்ப எடுத்துச் செயல் படுத்தும் உரிமையைப் பொதுச் செயலாளருக்கு (அதாவது அண்ணா அவர்களுக்கு) அளிப்பதுடன், இந்தப் பிரச்சினை பற்றிய எல்லா முனைகளையும் ஆராய்ந்து அறிந்து, பொதுச் செயலாளருக்குக் கருத்தறிவிக்கத் தோழர் இரா. செழியன் அவர்கள் தலைமையில் தோழர்கள் மதியழகன், டி. கே. சீனிவாசன், அரங்கண்ணல், தில்லை வில்லாளன் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை அமைக்கிறது" என்பதாக அந்தத் தீர்மானம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்மானங்களின் மூலம் பொதுக் குழு, இந்தியை எதிர்ப் பதில் நீண்ட காலப் போராட்டத்திற்கான திட்டவட்ட முடிவினை மேற்

கொண்டது. பிரிவினைத் தடைச் சட்டம் பற்றி நிலைமைக்கு ஏற்பச் செயல்படுவதற்கு அண்ணு அவர்களுக்கு அதிகாரமளித்தும், மேலும் அந்தப் பிரச்சினை பற்றிப் பல்வேறு முனைகளிலும் பரிசீலனை நடத்திப் பார்க்கவும் வழி வகுத்தது.

பொதுக்குழு முடிந்ததும் ஜூன் 10ஆம் தேதி மாலை சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் பொதுக்குழுத் தீர்மான விளக்கக் கூட்டம் நடைபெற்றது. நான் அந்தக் கூட்டத்தில் பேசும்போது, ''திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தவிருக்கிற மிக முக்கியமான போராட்டம் இது. நம்முடைய நாடு மட்டுமல்ல - இந்தத் துணைக் கண்டமே - அனைத்துலகமே - மிக ஆவலோடு எதிர்பார்க்கின்ற இந்த மிகப் பிரம்மாண்டமான போராட்டத் திட்டத்தை வகுக்கவும் வகைப் படுத்தவும் ஆலோசனைகளை மேற்கொள்ளவும் உருவாகியிருக்கின்ற குழுவிலே தலைமை வகித்து நடத்துகின்ற பொறுப்புக்கு - அந்தக் குழுவின் தலைவர் பொறுப்புக்கு - நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை என் வாழ்நாளில் பெற்றுள்ள பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்'' என்று தொடங்கிக் காலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது எனக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை வெளிக்காட்டினேன்

இந்தக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசிய பேச்சு, திடீர்க் கிளர்ச்சி - திடீர்ப் புரட்சி என்று இன்றைக்குப் பசப்பித் திரிவோர் மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டியதாகும்.

''நமது போராட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்துப் புதன் கிழமை தலை தேய்த்து முழுகுவதற்கு வீட்டிற்கு வந்து விடக் கூடியதாக இருக்காது. கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை விட்டு விட்டுச் சிறை செல்பவர்கள் 'குழந்தை பிறந்து தொட்டிலில் படுத்திருக்கும்போது சிறையிலிருந்து வந்து விடலாம்' என்று கருத வேண்டாம்.

''இந்தப் போராட்டம் ஒருநித்திய நிகழ்ச்சியாக—மாதக் கணக்கில் ஆண்டுக்கணக்கில் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் ஈடுபட்டால் போதாது. ஆர்வமும் அவசரமும் கலந்தால் பயனில்லை. யாருடைய ஆர்வம் நீடித்து இருக்கிறதோ-யார் யாருடைய வீர உணர்ச்சி நிலைத்து இருக்குமோ-யார் யார் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொள்ள முடியுமோ, அப்படிப்பட்டவர்கள்தாம் போராட்டத்தில் ஈடுபடலாம்.''

அடுத்த நாளே நான் போராட்டக் குழுத் தலைவர் என்ற முறையில் முறையான பணிகளைத் தொடங்கி விட்டேன். வாலிப வயதும், வசதி வாய்ப்பும், கஷ்ட நஷ்டங்களை ஏற்றுச் சமாளிக்கும் துணிவும், தேவை யானால் தடியடிபட்டோ குண்டடிபட்டோ சாவதற்கும் தயாரான

பக்குவத்தினைப் பெற்றும் என்னுடைய போராட்டக் களத்தில் இந்தியை எதிர்த்துப் பொருதுவதற்குத் தோழர்களின் பட்டியலைத் திரட்டி உடனே அனுப்பி வைக்குமாறு கழக அமைப்புகளை வேண்டிக் கொண்டேன்.

அதற்கேற்றாற்போல், இரண்டு நாட்களில் ஜூன் 13 அன்று பண்டித நேரு வந்தார். சென்னையில் அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதும் பொதுக் கூட்டத்தில் பேசியபோதும் இந்தி பற்றிக் கழகம் எடுத்துள்ள முடிவும் அமைத்துள்ள போராட்டக் குழுவும் மட்டுமே தனது சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது போல் நடந்து கொண்டார்.

"இந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கை என்பதெல்லாம் வெறும் அரசியல் தந்திரம்" என்று அவர் ஆத்திரமாகக் குறிப்பிட்டார்.

"அந்நிய மொழியான ஆங்கிலம் பல்கலைக் கழகங்களிலும் நீதி மன்றங்களிலும் பயன்படட்டும்; பொறுத்துக் கொள்வோம். ஆனால் இந்தியாவின் ஆட்சி மொழி அது என்பதைப் பொறுக்கவே முடியாது. காரணம் அது அன்னிய மொழி. அது என்றென்றும் நீடிக்க முடியாது. அது நமக்குப் பெருமை ஆகாது" என்றெல்லாம் அவர் பொதுக் கூட்டத்தில் ஆவேசமாகப் பேசினார்.

நேருவின் வருகையும், அவர் பேசிய இத்தகு பேச்சுக்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டப் பணிகளுக்கு உறுதுணையாக அமைந்ததாகவே நான் கருதினேன்.

ஆட்சி மொழி பற்றிய நேருவின் பேச்சுக்கள் தென்னக மக்கள் மனத்திலே கசப்பையே தெளித்தன. கழகத் தோழர்களுக்கோ கொதிப்பையே கொடுத்தன.

அத்துடன் கழகச் சார்பற்ற ஏடுகள் பலவற்றின் எதிர்ப்புக் கணைகளுக்கும் அவை இலக்காகத் தவறவில்லை.

அந்த நேரத்தில் வெளியிடப்பட்ட சில தலையங்கங்கள், கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் இன்னும் என் நெஞ்சத் திரையிலே நிழலாடுகின்றன.

.....யாருடைய விருப்பத்திற்கும் மாறுக யார் மீதும் இந்தி திணிக்கப்படமாட்டாது என்று நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் யூனியன் சர்க்கார் இலாகாக்கள் அவ்வப்போது இந்தியைப் பற்றிப் பிறப்பிக்கும் உத்தரவுகளும் சுற்றறிக்கைகளும் இதற்கு நேர் விரோதமாக இருக்கின்றன. ஏற்கனவே யூனியன் சர்வீசில் இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தி கற்றுக் கொள்ள வேண்டுமென்றும், இல்லாவிடில் அவர்களுக்குச் சம்பள உயர்வு கிடைக்காதென்றும்

சுற்றறிக்கைகள் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. இந்த நயவஞ்சகத்தை ஆட்சேபிக்கும் கூக்குரல்கள்தான் ஸ்ரீ நேருவின் காதில் விழும் 'ஹு-ஹு. ஹா' சப்தங்கள்... ஆட்சி மொழி மசோதா கொண்டுவரப்புட்டதென்பது உண்மைதான். ஆனால் பிரதம மந்திரியின் வாக்குறுதி அதில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றதென்று சொல்லுவது 'வெள்ளைக் காக்கை பறக்கும்' கதையைப் போன்றது தான். பெரும் கிளர்ச்சிகளுக்குப் பிறகுதான் மொழிவாரி ராஜ்யங்கள் பிரிக்கப்பட்டன; மொழி விஷயத்திலும் அத்தகைய நிலைமை ஏற்படும்படி இருக்கக் கூடாதென்பதே நமது விருப்பம்.''

-இவ்வாறு 14-6-63 தினமணி சித்தூர் இதழ் தலையங்கம் தீட்டிற்று.

''.....(நேருவின்) முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் மக்களிடையே பேரச்சத்தையே ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த போக்கில் சென்றால் நேருவுக்குப் பின் எதிர்காலத்தில் நிலைமைகள் எப்படியிருக்குமோ என்ற பீதி அதைவிட அதிகமாக நிலவுகிறது. தலைமை அமைச்சரின் சென்னைப் பேச்சு, ஆங்கிலத்திற்கு ஆதரவான இயக்கத்தை முன்பு இருந்ததைவிடச் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் தீவிரப்படுத்த வேண்டும் என்பதையே தெளிவுபடுத்துகிறது.''

இவை, 14-6-63 'டெக்கான் ஹெரால்ட்' ஆங்கில நாளேட்டின் தலையங்கத்தில் வந்த சில வரிகள்.

''...தீவிர இந்திவாதிகள், ஆங்கிலத்தை அடியோடு அழித்து இந்தியை ஏகதேசமாகத் திணிக்கவே முயலுவார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை...இந்தி வெறியர்களின் வெற்றியாகத்தான் ஆட்சி மொழி மசோதா உருவெடுக்கும் என்பதிலும் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த வெற்றியின் கூலி மிகவும் பயங்கரமாக இருக்கும்.''

இது (இன்றைய அல்ல) அன்றைய 23-6-63 'கல்கி' இதழில் ஆங்கிலோ இந்தியரின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்திலே அங்கம் பெற்றிருந்த திரு. பிராங்க் அந்தோணி தீட்டிய கட்டுரையிலே காணப்படும் எச்சரிக்கையாகும்.

அந்த எச்சரிக்கை எத்துணை தீர்க்க தரிசனமானது, தொலை நோக்குடையது என்பதனைப் பின்னர் ஏற்பட்ட கள பலிகள் நாட்டிற்கு மெய்ப்பித்துக் காட்டின.

அவருடைய கூற்றுக்கு ஏற்பவே நான் முன்னர் குறிப்பிட்டதைப் போல, இந்திக்காரர்களின் ஆதிக்க வெறியினை எதிர்த்துப் பொருதிட—இணையற்ற 'விலை' கொடுத்திட—கழகம் கச்சை கட்டிற்று.

கழகக் காளைகள் தோள் தட்டிப் போர் முரசம் கொட்டினர்.

அறப்போருக்கான ஆயத்த வேலைகளில் 'இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவன்' என்கிற முறையில் நான் முழுமூச்சாக ஈடுபட்டேன்.

86

இடைத் தேர்தல் – திருவண்ணுமலை

இடையில், திருவண்ணுமலை இடைத் தேர்தல்! கழக வேட்பாளர் நண்பர் ப. உ. சண்முகம்! 29-6-63-ல் நடைபெற்ற இடைத் தேர்தல் பணிகள் என்னை பெரிதும் ஆட்கொண்டன.

காங்கிரஸ் அட்சியோ கட்டவிழ்த்து விட்டிருந்தது தன் அதிகார பலம் அனைத்தையும். என்ருலும் வெற்றிக்கனி கிட்டியதோ கழகத்திற்கே!

இறுமாந்து கிடந்த காங்கிரஸ் எதேச்சதிகாரத்திற்கு நண்பர் ப. உ. சண்முகத்தின் வெற்றி பலத்த அடி மட்டும் அல்ல. பின்னர் அந்தக் கட்சிக்குத் தொடர்ந்து ஏற்பட்டிருந்த தோல்வி மாளிகைக்குப் போடப்பட்ட முதல் படியும் ஆகும். கழகத்திற்கு வாய்த்திட்ட அந்தத் திருவண்ணுமலை வெற்றித் தீபத்திலே காங்கிரஸ் ஆட்சியின் எல்லாவித 'மவுசு'களும் கரைந்துருகின மெழுகாக.

ஜூன் 30-ல் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பொழுது அண்ணு மாயவரத்தில் இருந்தார். இனிப்புச் செய்தியினை நான் அவருக்கு நேரிலே சென்று வழங்கிய போது அவர் சொன்னர், ''இன்று எல்லா வகைகளிலும் நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன்'' என்று.

அண்ணுவின் வளர்ப்பு மகன்கள் பரிமளம், இளங்கோ ஆகிய இருவருக்கும் அன்றுதான் திருமணம் உறுதி செய்யப்பட்டிருந்தது. அதனையும் மனதிற்கொண்டுதான் அவர் அப்படிக் குறிப்பிட்டார்.

கழகம் வெற்றி பெற்றது குறித்துக் கருத்தினை அறிந்திட முற்றுகையிட்டனர் செய்தியாளர்கள். ''ஏதாவது அறிக்கை இருக்கிறதா?'' என்று கேட்டனர். நாங்கள் யாருமே அறிக்கையாக எந்தச் சேதியும் தந்திடவில்லை. காங்கிரஸ் காளைகளின் கழுத்திலே விழுந்து விட்ட தோல்விப் புண்ணின் ஆழத்தை நாங்கள் தெளிவாகவே அறிந்திருந்தோம். எனவே, மேலும் அதனைக் குத்திக் காட்டிக் 'காக்கை வலி' செய்து களிப்பிலே மிதக்க நாங்கள் நினைத்திடவில்லை.

திருவண்ணுமலையில் அண்ணுவும் நானும் கலந்து கொண்ட இடைத் தேர்தல் வெற்றி விழா மிக எளிமையாகக் கொண்டாடப் பட்டது. விளக்குகள் கூட அதிகம் இல்லாமல் அந்த விழா ஏற்பாடாகியிருந்தது.

நான் அங்கு பேசும்போது, ''குழந்தை பிறந்தவுடனே பத்து நாள அது அறையில் இருக்கிற வரையில் குழந்தையின் மீது பழைய கம்பளித் துணியைத்தான் போர்த்தியிருப்பார்கள். அறையை விட்டு வெளியே வந்து கொஞ்ச காலமான பிறகுதான் பட்டுச் சொக்காய் தைத்துப் போடுவார்கள். அதுபோல திருவண்ணமலை வெற்றிக் குழந்தைக்கு இன்று எளிய முறையில் விழா எடுக்கப்படுகிறது'' என்று குறிப்பிட்டேன்.

திருவண்ணமலை இடைத் தேர்தல் கழகத்தின் நெற்றியிலே வெற்றித் திலகம் இட்டதைப் போலவே, அண்ணவின் அடக்கப் பண்பிற்கு - அகிம்சை நெறிக்கு - ஒரு புதிய புகழ் முடியை நாம் புனைந்து மகிழ்ந்திடவும் வழி வகுத்தது.

எப்போதுமே காங்கிரஸ்காரர்கள், கழகத் தொண்டர்களுக்குக் கொடுக்கிற தொல்லைகள் ஏராளம். நமது கூட்டங்கள் நடைபெற முடியாதவாறு செய்திடும் கலகங்களும் கணக்கிலடங்கா. திருவண்ணமலை இடைத் தேர்தலின்போது அவை இன்னும் அதிகமாகவே தலைவிரித்தாடின. என்றாலும் அடக்கமே உருவான அண்ணவின் அறிவுரைப்படியே அமைதி காத்தனர் கழகத் தோழர்கள்.

இதைப் பற்றி ஜூலை 2-இல் கோவையில் நடைபெற்ற கூட்டத்திலும் அண்ணா குறிப்பிட்டார்.

''திருவண்ணமலை இடைத் தேர்தலின்போது, கழக மேடைகளில் காங்கிரஸ்காரர்கள் கொடியேற்றிக் கலகம் விளைவிக்க முயன்றிருக் கிறார்கள். என்றாலும், கழகத் தொண்டர்கள் பொறுமையையே கடைப்பிடித்திருக்கிறார்கள். ஆத்திரம் கொண்டிடவில்லை. அது எங்களுக்கு அதிக பலத்தைக் கொடுத்தது.''

அண்ணவின் இந்தச் சொற்களிலிருந்தே அமைதி வழியில் அவருக்கிருந்த ஈடுபாட்டை-காந்தியடிகளின் அகிம்சை நெறிக்கு அவர் அளித்த அளப்பரிய மதிப்பினை-நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

உலகிலே எந்தப் பகுதியிலாவது ஓர் அரசியல் மாற்றமோ விடுதலைப் போராட்டமோ நிகழும்போது அங்கே—

வன்முறையே கொக்கரிக்கும்!

வாள்களே வக்கணை பேசும்!

குண்டுகள் எலும்பைத் துளைக்கும்!

குருதியோ ஆருய்ப் பாயும்!

—இவைதான், வரலாற்று அத்தியாயங்கள் நமக்குக் காட்டிடும் வாடிக்கையான படங்கள்- பாடங்கள்.

ஆனால், காந்தியடிகளோ இந்திய விடுதலை இயக்கத்திற்கு ஒரு புதிய பாதையினை புதுமையான நெறியினை—வகுத்தளித்தார். அது தான் அகிம்சை நெறி; அதுவே 'இந்தியாவின் தந்தை'க்கு அகிலப் புகழை அள்ளிக்கொண்டு வந்து சேர்த்தது; அதுவே பல 'புதிய காந்திகள்' அவருடைய வழித் தோன்றல்களாக ஆங்காங்கே உருவெடுக்கவும் உதவியது. எடுத்துக்காட்டாக—

'எல்லைக் காந்தி' ஆனார் கான் அப்துல் கபார்கான்.

'தென்னப்பிரிக்கக் காந்தி' ஆனார் ஆல்பிரட் லுத்துலி.

'அமெரிக்கக் காந்தி', 'நீக்ரோ காந்தி' என்று அழைக்கப் பட்டார் மார்ட்டின் லூதர் கிங்.

'ஈழத்துக் காந்தி' ஆனார் எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

இவர்கள் எல்லாரும் எந்த அகிம்சைத் தத்துவத்தினைத் தத்தம் இயக்கத்தவருக்கு எடுத்துச் சொன்னார்களோ அதையே தான் கழகத் தோழர்களுக்கும் அறிவுறுத்தினார் அண்ணா. வன்முறை நன்முறையல்ல. அது புன்முறை, அறவே புதைக்கப்பட வேண்டிய முறை என்பதனை வற்புறுத்துவதிலே அவர் குறியாக இருந்தார்.

அதனால்தான் திருவண்ணாமலைத் தேர்தல் முடிவிற்குப் பிறகு அந்த அடக்கத்தின் பிறப்பிடத்தைத் 'தென்னாட்டுக் காந்தி' என்று நான் அடிக்கடி அழைப்பதற்குத் தலைப்பட்டேன். 'முரசொலி' ஏட்டிலும் இதனை அதிகமாகக் குறிப்பிட்டு எழுதினேன்.

திருவண்ணாமலை இடைத் தேர்தல் இன்னொரு வகையிலும் எங்கள் சிந்தனையைக் கிளறிவிட்டது.

காங்கிரஸ் கட்சியினரின் தாக்கும் சக்தியைக் கணக்கிடவும். கழகத்தவரின் தாங்கும் சக்தியைக் கணித்திடவும் அந்தத் தேர்தல் பெருமளவு துணை புரிந்தது அத்தகைய கணக்கை-கணிப்பை

-அப்போதே சரியாகச் செய்து, அதற்கேற்பத் திட்டங்களைத் தீட்டத் தவறினால் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் ஆளும் காங்கிரசை வீழ்த்துவது எவ்வளவு கடினமாகிவிடும் என்பதைப் பற்றி நான் எண்ணிடலானேன். இதிலே கழகப் பொருளாளர் என்கிற முறையிலே எனக்குரிய கடுமையான உழைப்பையும், பொறுப்பையும் நான் உணர்ந்தேன்.

எதிரியின் மூல பலம் எது, எங்கே என்றெல்லாம் புரிந்திடாமல் போருக்குப் புறப்படுவது பொருளற்ற வேலையல்லவா?

ஆகவே, ஆளும் காங்கிரஸ் கட்சியின் மூலபலம் பற்றிய ஆராய்ச்சியில் நானும் ஈடுபட வேண்டியதாயிற்று.

கழைக் கூத்தாடிகள் கயிற்றின் மேல் நடந்து காட்டிட அதன் இரு நுனிகளையும் இழுத்துக் கட்டுவதற்குக் கம்பங்களை நட்டு வைப்பார்கள் அவ்வாறு கயிற்றின் இரு நுனிகளையும் இழுத்துப் பிடிக்கும் கம்பங்களைப் போலத்தான் காங்கிரசின் மூல பலம் இரண்டு சக்திகளில் கால் கொண்டிருப்பதாக நான் உணர்ந்தேன். ஒன்று: அதனுடைய ஆட்சி அதிகாரம். மற்றது: அதனுடைய பண பலம்.

ஆட்சி அதிகாரத்தைக் தகர்ப்பதென்பது கழகத்தின் மொத்தக் குறிக்கோள்; அந்தக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளவோ தக்க பண வலிமை வேண்டும். விளம்பரத் தட்டி வைப்பது முதல் மேடைக்கு விளக்கலங்காரம் செய்வது வரை எத்தனை எத்தனை சில்லறைக் காரியங்களுக்கெல்லாம்கூடக் காசை வாரி இறைக்க வேண்டும் என்பதைப் பொது வாழ்க்கையிலே முழுமையாக ஈடுபட்டவர்கள் தான் புரிந்து கொள்ள முடியும் சரியாக.

தமிழகத்தின் எல்லாத் தொகுதிகளிலும் தனித்தோ, தோழமைக் கட்சிகளுடனோ கழகம் காங்கிரசைப் பொருத வேண்டுமெனிருல்,

தேர்தல் யந்திரம் முறையாக முடுக்கி விடப்பட வேண்டும். அதற்கு ஒவ்வொரு தொகுதியிலும் ஓடியாடி உழைக்கும் தொண்டர்களுக்குக் குறைந்த பட்சம் தேநீர் கொடுப்பதற்கேனும் கணிசமான அளவு கையிலே காசு வேண்டாமா? எனவே போதுமான அளவிற்கு நிதி திரட்டினால்தான், செல்வச் சீமான்களின் வேடிக்கைக் கூடாரமாகி விட்ட காங்கிரசை வீழ்த்திட முடியும் என்பது எனக்குத் திண்ணமாகப் பட்டது.

என் எண்ணத்திற்கு ஏற்றதொரு வடிவம் கொடுப்பதற்குரிய வாய்ப்பும் விரைவிலேயே வந்தது. அதுதான் 7-7-1963இல் சென்னைக் கடற்கரையிலே நடைபெற்ற 'திருவண்ணுமலை வெற்றிவிழாப் பொதுக் கூட்டம்'

அதிலே கலந்து கொண்டு உரையாற்றிய நான் இவ்வாறு என் கருத்தினை வெளிப்படுத்தினேன்:

.....1967-ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் தமிழகத்தினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றவும். தி.மு. கழக அரசு தமிழகத்தில் அமைந்தது என்கிற நல்ல செய்தியை அனைத்துலகத்துக்கும் அறிவிக்கின்ற சூழ்நிலை ஏற்படவும் வேண்டுமானால், நீங்கள் திருவண்ணுமலைத் தொகுதி இடைத் தேர்தலுக்குக் கழகம் திரட்டி வந்த தேர்தல் நிதிக்குச் சென்னையிலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் காணிக்கை அளித்து வந்தது போல், தொடர்ந்து தி. மு. கழகத்தின் தேர்தல் நிதிக்குக் காணிக்கை அளித்துத் தீர வேண்டும்."

"நமக்குச் சேருகின்ற பணம் எல்லாம் ஒரு காசு - இரண்டு காசாகச் சேருகின்ற பணம். இன்னும் இரண்டொரு இடைத் தேர்தலைத் தாங்கும். அந்த அளவுக்கு நாம் இந்த இரண்டு மாதங் களில் சேர்த்திருக்கிறோம்; முழுவதையும் நாம் திருவண்ணுமலையிலேயே செலவழித்து விடவில்லை. அதே போல், பொதுத் தேர்தலில் தி.மு. கழகம் வெற்றிபெற வேண்டுமானால், இருநூறு தொகுதிகளிலும் தி. மு. கழகம் போட்டியிட்டாக வேண்டும். ஒரு தொகுதிக்கு ஐயாயிரம் என்று கணக்கு வைத்தாலும் சுமார் பத்து லட்சம் ரூபாய் பொதுத் தேர்தலில் நிதியாகத் திரட்டியாக வேண்டும்.

"ஆகவே அந்தப் பத்து லட்சம் ரூபாயைத் திரட்டுகின்ற வேலையை இந்த மேடையிலே நான் - பொருளாளர் என்ற முறையில் - தொடங்கி வைக்கின்றேன்."

—நான் இப்படித் தேர்தல் நிதி திரட்டும் பணியை - அதுவும் பத்து லட்சம் ரூபாய் சேர்க்கின்ற வேலையைக் குறிப்பிட்டதும், மேடையி லிருந்த அத்தனை பேருமே அதிர்ச்சிக்கு ஆளானார்கள். அறிஞர்

அண்ணவும் திகைத்துப் போனார். மேடைக்கு எதிரிலே அமர்ந்திருந்த மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கழக முன்னணியினர் முகத்திலோ வியப்புக் குறிகள் உருவெடுத்து அவை வேதனைக் குறிகளாக மாறிக் கொண்டிருந்தன.

இப்படி அறிவிக்கப் போவதை அண்ணா அவர்களிடம் கூட நான் முன்கூட்டியே தெரிவிக்கவில்லை. ஏன் தெரியுமா? இவ்வளவு பெருந் தொகையைத் திரட்ட வேண்டிய ஓர் இமாலயத் திட்டத்தை அறிவிப்ப தற்கு அண்ணா அவர்களின் ஒப்புதல் கிடைக்காது என்பது என் உள்ளத் திற்குத் தெளிவாகத் தெரியும். மற்ற நண்பர்களிடமும் இதைப் பற்றி நான் தெரிவிக்கவில்லை. எங்கே என்னுடைய குவிக்க வேண்டும் நிதியை என்னும் குன்றாத ஆர்வத் துடிப்பிற்கு மற்றவர்களுடைய உற்சாகமில்லாத மொழிகள் — அவநம்பிக்கையான உரைகள் — அணை போட்டு விடுமோ என்கிற அச்சமே இதற்குக் காரணம். அதனால்தான் திடீரென்று பொதுக் கூட்டத்தில் அறிவித்து, அடுத்த 1967 வரை கழகத்தின் முக்கியப் பணிகளில் ஒன்றாகப் பத்து லட்சம் ரூபாய் திரட்டு வதையும் உள்ளடக்கி விட வேண்டும் என்பதே என்னுடைய திட்டம்.

தடைபெற்றதோ திருவண்ணாமலை வெற்றி விழாக் கூட்டம்.

நான் கழகத்தவரின் நெஞ்சிலே விதைத்ததோ இவ்வளவு பெருந் தொகையைத் திரட்ட முடியுமா என்கிற மேகமூட்டம்.

ஆனால் அந்த மேகமூட்டத்திலே கழக வெற்றியே நம் வாழ்க்கை இலட்சியம் என்கிற ஆர்வமும் அயரா உழைப்பும் காற்றாகப் படுமானால் கண்டிப்பாக பெய்யும் நிதி மழை என்கிற தன்னம்பிக்கை என்னுள்ளே தாராளமாக வளர்ந்து கொண்டிருந்தது.

அதே சமயம், அண்ணா என்ன சொல்லப் போகிறாரோ என்கிற அச்சமும் என் உள்ளத்திலே சுமையேற்றுவதையும் நான் உணராமல் இல்லை.

கூட்டம் முடிந்தது.

மேடையிலே இருந்தவர்கள் எல்லாரும் கீழே இறங்கி வந்தோம். உடனே என்னை நோக்கி அண்ணு தொடுத்த முதல் கேள்வி,

''பத்து லட்சம் சேர்க்க நம்மால் முடியுமா?'' — என்பதுதான்.

நாவலர், என். வி. என்., வெற்றி வீரர் என்று அந்த மேடையில் அறிமுகப்படுத்தப்பட்ட நண்பர் ப.உ. சண்முகம் முதலான அனைவருமே "முடியுமா? முடியுமா?" —என்றே என்னைக் குடைந்தெடுத்துவிட்டனர், கேள்விக் கணைகளால்.

அப்போது அவர்களுக்கு நான் என்ன விடை சொல்ல முடியும் — புன்னகையைத் தவிர?

ஆயினும், 'முடியுமா?' என்கிற அந்தச் சொல் என் செவிகளைச் சுற்றியே வளைய வளைய வந்தது, வண்டாக!

அண்ணுவும் சரி, மற்ற கழக நண்பர்களும் சரி, தேர்தல் நிதி பற்றிய என்னுடைய அறிவிப்பைக் கேட்டுத் திகைப்பிலே திணறிய தற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

பத்து லட்சம் என்பது கழகத்திற்குக் கற்பனைத் தொகையாகவே இருந்த காலம் அது. அவ்வளவு பெருந்தொகையைத் திரட்டுவது பற்றித் தினையளவுகூட நினைக்க முடியாத நேரமும் ஆகும் அது. என்றாலும், திருவண்ணாமலை இடைத் தேர்தலில் கழகம் கற்ற பாடங்கள் —சந்திக்க நேர்ந்த அனுபவங்கள் - அந்தத் தொகையாவது இருந்தால் தான் 1967 தேர்தலில் காங்கிரசின் யதேச்சாதிகாரப் போக்கினுக்குச் காற்புள்ளி அல்ல, முற்றுப் புள்ளியே வைக்க முடியும் என்கிற கணிப்பினை எனக்குக் கொடுத்தன. இதனையே பிறகு நான் மற்றவர் களிடம் விளக்கிச் சொன்னேன்.

என்னதான் நான் விளக்கங்களை எடுத்து வைத்தாலும், கழக முன்னணியினர் இந்தத் தொகையைச் சேர்த்து முடித்து விட்டால் அது ஒரு பெரிய அற்புதமே என்பதாகக் கருதினர்; பேசினர்.

அண்ணுவும், தொடக்கத்தில்தான் என் அறிவிப்பைக் கேட்டு மலைத்தாரே தவிர, என்னுடைய முனைப்பான முயற்சிக்குத் தம்முடைய முழு வாழ்த்தையும் பிறகு வழங்கினர். அவருடைய ஒத்துழைப்பும் உறுதுணையும் இறுதி வரை எனக்கு இருந்தன. என்னுடைய நிதி திரட்டும் பணியினை அவ்வப்போது நெஞ்சாரப் பாராட்டிய அவர், ''பத்து லட்சத்திற்கு இன்னும் எவ்வளவு தொகை குறைகிறது?" என்று அடிக்கடி கேட்பதையும் தமது வாடிக்கையாகக் கொண்டிருந்தார்.

அந்தக் கடற்கரைக் கூட்டத்திற்கு அடுத்த இரண்டொரு நாட் களிலோ, ஒரு வேதனையைத் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது அண்ணுவுக்கு.

இந்தித் திணிப்பு அண்ணுவின் இதயத்தில் பாய்ச்சிய கூரான ஈட்டிகள் - அவை ஏற்படுத்திய எரிச்சல் மிகுந்த புண்கள் - எண்ணுக்குள் அடங்காதவை!

நான் குறிப்பிட்டது அந்த உள்ளத்தின் வேதனையை அல்ல உடலின் வேதனை ஒன்றை.

அண்ணு அவர்களின் பின் கழுத்தில் - பிடரிப் பகுதியில் - கட்டியொன்று புறப்பட்டிருப்பதைக் கண்டதும் எங்களுக்குக் கலக்கம் கவ்விக்கொண்டது. காரிருள் சூழ்ந்து கொண்டது. அந்தக் கட்டி சிறியதே ஆயினும் அறுவைச் சிகிச்சை மூலம்தான் அதனை அகற்றிட வேண்டும் என்பதை அறிந்ததுமே எங்கள் விழிகள் குளமாக, நாங்கள் அடைந்திட்ட அதிர்ச்சியினைத் துடித்த துடிப்பினைச் - சொல்லிலே வடித்திட இயலாது

ஏனெனில், அண்ணு அவர்களை, எங்களை விட்டுத் தனித்தியங்கும் மனிதராக என்றுமே நாங்கள் எண்ணியதில்லை.

எங்களோடு இரண்டறக் கலந்து நின்ற அந்த இதயத் தெய்வத்திடம் நாங்கள் கொண்டிருந்த உள்ளப் பிணைப்பின் - ஒன்றிய - நினைப்பின் - விளைவுதான் அவருக்கு அறுவைச் சிகிச்சை என்றதுமே எங்களுக்கு ஏற்பட்ட கவலை - கண்ணீர் - கதறல் - பதறல்!

தனியார் மருத்துவமனை ஒன்றில்தான் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். 1963 ஜூலை 12-ஆம் நாள் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. கட்டி அகற்றப்பட்டது.

அண்ணு, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தது உடல் வேதனைக்காகத்தான்.

எனினும், தம்முடைய உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்த வேதனையான இந்தித் திணிப்பு பற்றியும், அதனை எப்படி எதிர்த்துத் தகர்ப்பது என்பது பற்றியும் அவர் சிந்திக்கத் தவறிடவில்லை.

87

அண்ணுவின் வீரப் பேச்சு

மருத்துவ மனையிலே அவர் அருகிலே நாங்கள் இருந்த போதெல்லாம் கலந்துரையாடினர்; கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

அந்த வேளைகளில் என் இனிய நினைவுகளோ, ஒரு திங்களுக்கு முன்னர் நடைபெற்ற பொதுக் குழுவிலும், அதனையொட்டிச் சென்னை எஸ். ஐ. ஏ.ஏ திடலில் நிகழ்ந்த சிறப்புக் கூட்டத்திலும் அவர் ஆற்றிய வீர உரைகளின் எழில் கொஞ்சும் பகுதிகளை - எழுச்சி பொங்கும் அறை கூவலையே - அசை போட்டன.

அவருடைய வைர மாணிக்கக் கருத்துக்கள் இன்றைக்கும் நமக்குப் புத்துணர்ச்சியை அளித்துப் போர்ப் பரணியாகப் பாடத்தக்கவையே; அவற்றில் சில வருமாறு:

இந்த நாட்டிலேயும், வெளி நாட்டிலேயும் இருக்கிற மொழி விற்பன்னர்களும், நிருவாகத் துறைத் தேர்ச்சி பெற்றவர்களும், நல்ல அரசியல் அனுபவம் பெற்றவர்களும், ஆற்றல் மிக்க தலைவர்களும் எச்சரிக்கை விடுத்தும்கூட இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் இந்தியைத் திணித்தே தீருவது என்று துடித்து அவர்கள் இறங்கி இருக்கிற இந்த நிலைமையில் அதை எதிர்த்து நிற்பதைத் தவிர - கடுமை யாக எதிர்த்து நிற்பதைத் தவிர - தொடர்ந்து எதிர்த்து நிற்பதைத் தவிர- இறுதி வெற்றி கிடைக்கிறவரை தொடர்ந்து எதிர்த்து நிற்பதைத் தவிர- கஷ்ட நஷ்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல் எதிர்த்து நிற் பதைத் தவிர-களபலியாவதற்குத் தோழர்கள் எத்தனை பேர்கள் கிடைக் கிறார்கள் என்ற கணக்கைக்கூடப் பார்க்காமல், இதிலே ஈடுபடுவதைத் தவிர - வேறு மார்க்கமில்லை என்ற நிலைக்குத் தி. மு. கழகம் வந்திருக் கிறது.

''நான் அந்தப் போராட்டத் தீர்மானத்தை உருவாக்கிய நேரத்தில் - மாநிலங்கள் அவையிலே (டில்லி ராஜ்ய சபா) நான் பேசு கிறபோது லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் என்னைப் பார்த்துச் சொன்னதைக் கவனத்திலே வைத்துக்கொண்டுதான் இந்தப் போராட் டத் தீர்மானத்திற்கு நான் உருவம் கொடுத்து - நண்பர்கள் கொண்டு வந்த நேரத்தில் என்னுடைய ஆதரவை இந்தத் தீர்மானத்திற்கு அளித்தேன்.''

''இந்தியைத் திணிப்பதற்காக லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் மாநிலங்கள் அவையிலே பேசிய நேரத்தில், நான் எனக்குத் தெரிந்த காரணங்களையெல்லாம் காட்டி- எனக்குத் தெரிந்த வாதத் திறமைகளையெல்லாம் அந்த இடத்திலே எடுத்துச்சொல்லி நாட்டு மக்களுடைய மன நிலையை எடுத்துக் காட்டி, 'இந்தித் திணிப்பிலே தீவிரம் காட்டாதீர்கள்; இந்தியைத் திணிக்காதீர்கள்; நாடு உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறது- திராவிட மக்கள் உங்களைக் கேட்டுக் கொள்கிறார்கள்; உங்களுடைய பழம் பெரும் தலைவரும், உங்களுடைய இயக்கத்தை நடத்தியவரும், உங்களுடைய அரசுக்கே ஒரு காலத்தில் தலைவராக இருந்தவருமான ராஜகோபாலாச்சாரியார் எடுத்துச் சொல்கிறார். இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்' என்றெல்லாம் நான் எடுத்துப் பேசினேன். எந்த வாதத்தையும், எந்த வேண்டுகோளையும் எந்தக் காரணத்தையும் அந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்த பிறகு, இந்தியைத் திணிப்பதென்று அவர்கள் துணிந்த பிறகு, லால்பகதூர் சாஸ்திரியார் எதிரே வீற்றிருக்கின்ற நேரத்தில் அவரைப் பார்த்தபடி நானே சொன்னேன், 'நீங்கள் பிடிவாதமாக யாருடைய வார்த்தைக்கும் மதிப்பளிக்காமல் இந்தியைத் திணிப்பதென்றால் கடுமையான போராட்டம்- தீவிரமான போராட்டம் -நிச்சயமாகத் தென்னகத்திலே ஏற்படும்' என்று. 'நீங்கள் ஆபத்தான விளையாட்டு விளையாடுகிறீர்கள்; இந்தியைத் திணிக்கிறீர்கள்; இதற்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பும்' என்றும் சொல்லி விட்டு வந்தேன்."

''அப்படி நான் சொல்லிவிட்டு வந்த பிறகு, எனக்கே கொஞ்சம் பயம் ஏற்பட்டது; இவ்வளவு பெரிய மாமன்றத்தில் அவ்வளவு சக்தி வாய்ந்த ஒரு நிருவாகத் தலைவர் முன்னால், நாம் சூளுரை சொல்வதைப் போல, இதற்குக் கடுமையான எதிர்ப்பு இருக்குமென்று சொல்லிவிட்டு வந்தோமே, நம்முடைய கழகத்தினர் என்னுடைய போர்க் குரலுக்கு ஏற்பவே போர்க்கோலம் கொள்வார்களா என்கிற ஐயப்பாடு எனக்கு இருந்தது. அந்த ஐயப்பாடு எனக்கு இருந்ததற்குக்

காரணம் நான் கொஞ்சம் பலவீனன்; ஆகையால் அவர்களும் பலவீனர்களாக இருப்பார்களோ என்கிற சந்தேகம் எனக்கு அடிக்கடி ஏற்படும். ஆகையினால்தான் இந்த மூன்று நாட்களும் நம்முடைய தோழர்களிடத்திலேயே நான் பேசுகின்றபோது இவைகளை எடுத்துக் கூறித் தீர்மான வடிவிலே கொண்டு வந்தேன்.

''...இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நாம் இந்த முறை துவங்குவதற்கு முன்னாலே, அதற்கென்று ஒரு குழுவை நியமித்து நம்முடைய கருணாநிதியும் நடராசனும், மாவட்டச் செயலாளர்களையும் மாவட்ட அமைப்புகளையும் கலந்து பார்த்து என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பவைகளைக் கண்டு பிடித்து வந்து, ஆகஸ்ட் திங்களிலே என்னிடம் அறிவித்த பிறகு, நான் போராட்டம் நடத்துவேன் என்று, தீர்மானம் உங்களுக்குத் தெரிவிக்கிறது. 'ஒரு காரியத்தைத் தள்ளிப் போட வேண்டுமானால், தலையிலே கல்லைப் போடு அல்லது கமிட்டியைப் போடு' என்று பேசுவதுதான் முன்னாலே வழக்கமாக இருந்தது.''

''ஆனால், இன்றைய தினம் நிறுவப்பட்டிருக்கின்ற குழு, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற குழு, இதிலே ஈடுபட்டிருக்கின்ற தோழர்களைப் பார்த்தால் உங்களுக்கே நன்றாகத் தெரியும். போராட்டங்களில் தீவிரப் பங்கெடுத்தவர்கள்.''

''கல்லக்குடிப் போராட்டத்தில் தம்பி கருணாநிதி சிறைச்சாலை செல்வதற்கு முன்னாலே எத்தனை எத்தனை சித்திரவதைக்கு ஆளானார் என்பது நமக்கெல்லாம் தெரியும்.''

''நம்முடைய நண்பர் நடராசன் இந்தி எதிர்ப்பு இயக்கம் காரணமாகவே காங்கிரசிலிருந்து நம்மோடு வந்து சேர்ந்தவர். ஆச்சாரியரால் இந்தி புகுத்தப்பட்ட நேரத்திலே சென்னை ஜில்லா காங்கிரஸ் கட்சியிலே அவர் மிக முக்கிய உறுப்பினராக இருந்து, சத்தியமூர்த்திக்கு மிக வேண்டிய நண்பராக இருந்து பணியாற்றிக் கொண்டிருந்த

நேரத்தில், அவருடைய வீடும் நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நேரத்தில் என்னுடைய வீடும் பக்கத்துப் பக்கத்திலே இருந்தாலும், நானும் அவரும் தொழிலாளர் அமைப்பிலே ஒன்றுகப பணியாற்றுகிற வாய்ப்பு இருந்தாலும், அவரிடத்திலே பேசிப் பார்த்ததில் தமிழ் மொழியிடத்திலே ஆர்வம் இருக்கிறது என்று அறிந்த நேரத்தில்-இவர் நெடுநாளைக்குக் காங்கிரசிலே இருக்கமாட்டார் என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

''ஏனென்றால், யாருக்குத் தமிழ் மொழியிடத்திலே அளவு கடந்த ஆர்வம் இருக்கிறதோ, அவர்களால் நீண்ட நாளைக்குக் காங்கிரசிலே இருக்க முடியாது.

''கருணாநிதி எப்படிப் போராட்டத்தில் நல்ல பயிற்சி பெற்றவரோ அதைப் போலவே நண்பர் நடராசன் அவர்களும் போராட்டத்திலே நல்ல பயிற்சி பெற்றவர். இந்தி எதிர்ப்புக்காக மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் அவர் ஈடுபட்டு நல்ல தியாகத் தழும்புகளைப் பெற்றிருப்பவர். இந்த இருவர் மட்டுமல்லாமல், மாவட்டங்களிலே உள்ள செயலாளர்கள் ஒவ்வொருவரும் செயலாற்றும் திறமை படைத்தவர்கள்... இவர்களையெல்லாம் கொண்ட ஒரு குழு தக்கதோர் போர்த் திட்டத்தை நிச்சயமாக வகுத்துக் கொடுக்கும் என்பதில் எனக்கு ஒரு துளியும் ஐயப்பாடு இல்லை.

''எனக்கு இந்த முறை போராட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் கூடாது. ஆர்வமும் அவசரமும் கலந்தால் அவர்கள் போராட்டத்திற்கு இந்தத் தடவை தேவையில்லை. யார் நீடித்து அந்த ஆர்வத்தைப் பெற்றுக்கொண்டிருக்க முடியுமோ, யாருடைய வீர உணர்ச்சி நிலைத்திருக்க முடியுமோ, எவராலே கஷ்ட நஷ்டங்களை எந்த அளவுக்கும் தாங்கிக் கொள்ள முடியுமோ, யாராலே நீண்ட காலச் சிறைவாசத்திற்குத் தங்களை ஒப்படைக்க முடியுமோ அப்படிப்பட்டவர்கள் மட்டும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

''...(நம்முடைய) நீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பது, மாநில ஆட்சி மொழியாக இருப்பதும், திராவிட மொழிகளில் தலையாயதுமான தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துவதுடன் அதை ஒப்ப, மாநில ஆட்சி மொழிகளாகியுள்ள மொழிகளையெல்லாம் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளும் வரையில், ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்-என்பதுதான்.

''இந்தி எங்களுக்கு எடுப்புச் சாப்பாடு; ஆங்கிலம் எங்களுக்கு, நாங்கள் சொல்கின்ற முறைப்படி சமையல் செய்து போடுகின்ற

சமையற்காரன்; தமிழ் எங்களுடைய மனையை அறிந்து-எங்களுடைய மனமறிந்து எங்கள் ஊனறிந்து-உணர் வறிந்து-எங்களுடைய ஊனை வளர்க்கத்தக்க தாய்! அப்படித்தாயின் கரத்திலே எங்களுக்கு உணவு கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடைத்துவிட்டால் எங்களுக்கு எடுப்புச் சாப்பாடு வேண்டாம்-ஆங்கில முறையிலிருக்கிற உணவும் வேண்டாம்!

''ஒரு வீட்டிலே ஒருவன், அவனுடைய மனைவி நோய் வாய்ப்பட்டிருக்கிறார் என்றால், அவன் படுகின்ற வேதனைக்கும், அவனைப் பெற்ற தாய் படுகின்ற வேதனைக்கும், பக்கத்து வீட்டுக்காரர் எதிர் வீட்டுக்காரர் படுகின்ற வேதனைக்கும் வித்தியாசங்கள் உண்டு. கணவன் படுகின்ற வேதனை எடுத்துச்சொல்லக் கூட முடியாததாக இருக்கும். தாய் படுகின்ற வேதனை வார்த்தைக்கு முன்னே கண்ணீர் 'குபுகுபு' வென்று வருவதாக இருக்கும். அதைப்போலவே அந்த வீட்டிற்குப் பழக்கமாகப் பூ விற்பவன்கூட, வேதனையாக வரக்கூடும். 'என்னப்பா உனக்கு வேதனை?' என்று கேட்டால், 'இந்த வீட்டிலே ஓர் அம்மா இருக்கிறார்கள், அவர்களுக்கு ஏதோ ரொம்ப ஆபத்தாம். அவர்கள் போய்விட்டால் பிறகு மல்லிகைப்பூ வாங்கமாட்டார்களே என்ற கவலை எனக்கு' என்று சொல்லிவிட்டுப் போவதைப் போல் முழுவருத்தம் இருக்காது. அதிலே பயனில்லை.

''எதற்கு நான் சொல்கிறேன் என்றால் இந்தி திணிக்கப்பட்டால் உத்தியோகத்திலே பங்கு கிடைக்காதே என்பது மட்டும் ஒரு வருத்தமாக இருக்குமானால், அது ஆழ்ந்த வருத்தமாகவும் இருக்காது; நீடித்த வருத்தமாகவும் இருக்காது. அந்த வருத்தம் மாலை நேரத்தில் பூ விற்கிறவன் அந்தப் பூவை வாங்கிய மங்கைக்கு ஆபத்து வந்தால் வியாபாரம் கெட்டுவிடுமே என்று வருத்தப்படுவதற்குச் சமமாகும்.

''1938-இல் ராஜாஜி முதல் மந்திரியாக இருந்துகொண்டு இந்தியைப் புகுத்திய நேரத்தில் அந்த இந்தி மொழிக்குத் தந்த பெயர் 'அஃபீஷியல் லாங்குவேஜ்.' 'இதுதான் தேசிய மொழி, இந்தத் தேசத்தின் மொழி; தேசத்தின் ஒரே மொழி. உங்கள் தமிழ் வீட்டிலே இருக்கலாம்; நாட்டிலே பேசப்படலாம்; கட்டிலருகே இருக்கலாம்; தொட்டிலருகே இருக்கலாம்; ஆனால் அரசாங்கக் கட்டிலிலே இருக்க வேண்டிய மொழியும் அலுவலகத்திலே இருக்க வேண்டிய மொழியும் இந்தி மொழிதான்' என்பதை வலியுறுத்துகின்ற விதத்தில் இந்தியை 'நேஷனல் லாங்குவேஜ்' என்று சொன்னார்கள்; 'காமன் லாங்குவேஜ்' என்று சொன்னார்கள்.

''தமிழ்நாட்டிலே நாம் எதிர்த்த காரணத்தாலே 'காமன் லாங்குவேஜ்' என்ற பொது மொழி அந்தஸ்து போய், 'நேஷனல் லாங்குவேஜ், என்றிருந்த தேசிய மொழி நிலை போய், இன்றைய தினம் 'அஃபீஷியல் லாங்குவேஜ்' என்ற நிலை பிறந்து, அதற்குக்கூட எதிர்ப்பு

இருக்கிற காரணத்தாலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 'அஃபீஷியல் லாங்குவேஜ்' என்றுகூடச் சொல்லவில்லை; 'லிங்க் லாங்குவேஜ்' (இணைப்பு மொழி, என்ற புது 'பாஷை'யைக் கண்டு பிடித்திருக்கிறார்.

''இந்தக் கட்டத்திலே நாம் ஏமாந்துவிட்டால்-நாம் தூங்கிப் போய் விட்டால்-மறுபடியும் இணைப்பு மொழி என்பது ஆட்சிமொழி ஆகி, பொதுவான தேசிய மொழி என்பது பொதுமொழி ஆகி, பொது மொழி என்பது ஒரே மொழி என்றாகி, அந்த ஒரே மொழி யின் மூலம் நாவலர் நெடுஞ்செழியன் சொன்ன 'ஓர் அரசு, பேரரசு, என் அரசு, வல்லரசு இந்திய அரசு' என்ற நிலை வந்துவிடும்.

''அதனால்தான் கதவு தாழ் போடாவிட்டால் கள்ளன் நுழைவான் என்ற அறிவு நமக்கு இருக்கவேண்டும் என்பதைப்போல, புண்ணுக்கு மருந்து தடவாவிட்டால் உடலெங்கும் பரவும் என்று நமக்குப் புரிந் திருக்க வேண்டியதைப்போல, இப்பொழுதே நாம் இந்தியைத் தடுத்து நிறுத்தாவிட்டால் அதனுடைய படையெடுப்பைப் பின்னால் நீங்கள் எந்த முனையிலும் தடுக்கமுடியாது.

''ஒட்டகத்தினுடைய மூக்களவிற்குக் கூடாரத்திலே நுழைய இடம் கொடுத்துக் கடைசியிலே ஒட்டகம் கழுத்தளவுக்குப் போய், முன்கால் இரண்டளவுக்குப் போய், அது வயிறு அளவுக்குப் போய், அது நாலு காலளவுக்குப் போய், பிறகு கூடாரத்திலே இருந்தவன் வெளியே வர நேரிட்டதே என்று சொல்லுவார்கள். அதைப்போல இந்தி ஒட்டகம் மூக்களவுக்குத்தானே இடம் கேட்கிறது; அதைக் கொடுத்தாலென்ன என்று கூடாரத்திலே இருப்பவன் கருதுவானேயானால், மூக்களவுக்கு இடம் பெற்ற இந்தி ஒட்டகம் 10-15 வருடங்களிலே கூடாரத்தை விட்டு நாமெல்லாம் வெளியேறத்தக்க விதத்திலேயும், கூடாரமே கிழித்து எறியப்படும் விதத்திலேயும் நம்மை ஆக்கிவிடும் என்பதனை நம்புவீர் களேயானால்—உணர்வீர்களேயானால்—இந்தி மொழியிலிருக்கும் ஆபத் தைத் தெரிந்துகொள்ள முடியும்.



''நான் பார்க்கிறேன், பாராளுமன்றத்தின் மேல் சபையிலும் சரி, மக்கள் சபையிலும் சரி, இந்தி மொழி ஆட்சி மொழி ஆகப்போகிறது என்ற தைரியத்தில்—என்ற ஆணவத்தில் – இந்தி மாநிலங்களிலே யிருந்து வருகிறவர்கள் எவ்வளவு ஆணவத்தோடு அங்கு நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைப் பாராளுமன்றத்துக்கு நீங்கள் ஒரு நாள் வந்தால் புரிந்து கொள்ளலாம்.

''நம்முடைய தமிழ் நாட்டிலிருந்து போயிருக்கின்ற அமைச்சர்கள் இந்தியிலே பேச முடியாதவர்கள்; இந்தி பேசுகின்ற பகுதிகளிலிருந்து வருகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமென்றே அவர்களை இந்தியிலே கேள்வி கேட்கின்றார்கள். டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கொஞ்சம் தைரியசாலி என்ற காரணத்தினால், அவர் வேண்டுமானால் நிமிர்ந்து நின்று எனக்குத் தெரியாது' என்று கையசைக்கிறாரே தவிர, மற்ற நம்முடைய மந்திரிகளெல்லாம் அங்கே படுகிற பாடும், கையைப் பிசைந்து கொள்வதும், கண்களைக் கசக்கிக் கொள்வதும், நான் எங்கே பார்த்து விடுகிறேனோ என்று மேலே பார்த்துக்கொள்வதும்—இதைப் பார்த்தாலே தெரியும், இந்தி வெறி இன்றைய தினம் பாராளுமன்றத் திலே எந்த அளவுக்கு இருக்கிறதென்று.

''இந்தி வெறி காரணமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் 'இங்கே அந்நிய மொழி—அந்நிய நாகரிகம்—அந்நிய நடையுடை பாவனைகள்—பாவமெல்லாம் சூழ்ந்திருக்கிறது. அந்தப் பாவத்தைப் போக்க ஓமம் வளர்க்கின்றேன்' என்றார். (அப்படியே பாராளுமன்ற 'சென்ட்ரல் ஹாலில்' சுள்ளிகளைப் போட்டு நெய் ஊற்றி ஓமம் வளர்த்தார்.)

''இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தாவிட்டால், நாடு பழையபடி காட்டுமிராண்டிக் காலத்துக்கு இழுத்துச் செல்லப் பட்டு விடும். ஆகையினால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழியை எதிர்க்கிறது.

''நாம் துவக்குகின்ற மொழிப் போராட்டம்—அது கலையைக் காப்பாற்றுகின்ற போராட்டமும்கூட; நாம் துவக்குகின்ற மொழிப் போராட்டம், இனத்தின் பண்பைக் காப்பாற்றுகின்ற போராட்டம்; நாம் துவக்குகின்ற மொழிப் போராட்டம் நம்முடைய நாட்டு மக்களுடைய அரசியல் உரிமையிலேயிருந்து கலை உரிமை வரையில் எல்லா உரிமைகளையும் மாற்றார்கள் பறிக்காத வகையில், பாதுகாப்பாக நடத்தப்படுகின்ற பாதுகாப்புப் போராட்டமாகும்.''

—அண்ணா அவர்கள் எழுப்பிய இந்தப் போர் முரசம் எந்த அளவுக்குக் கழகக் காளையரின் நாடி நரம்புகளிலே புத்துணர்ச்சியைப்—போராட்டத் துடிப்பை—முறுக்கேற்றி விட்டிருக்கும் என்பதை விளக்கிட வேண்டியதில்லை.

இந்தி ஏகாதிபத்தியத்தினுல் விளையக்கூடிய விபத்தினை—வேதனையை—வீழ்ச்சியினை—நம்முடைய வருங்கால வழித்தோன்றல்களும் தெளிவாக உணர்ந்து, தங்கள் சிந்தையிலே அழுத்தமாகத் தேக்கி வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே 1963—ஜூலின் திங்களில் அண்ணு ஆற்றிய அறப்போர் உரையை இங்குச் சற்று விரிவாகவே தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

அறுவைச் சிகிச்சைக்கு ஆளாகி, மருத்துவ மனையிலே சில காலம் சிறைப்பட்டிருந்த அண்ணுவிடம் அடிக்கடி ஆலோசனை கலந்து அறிவுரைகள் பெற்ற வண்ணம் இருந்தேன் நான்.

அப்போதே, 1963 ஜூலை 15-ஆம் நாளில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவினை அதன் தலைவர் என்கிற முறையிலே கூட்டினேன்.

சென்னை இராயபுரம் 'அறிவக'த்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றது. என்னுடைய தலைமையில்.

அண்ணு எடுத்துக் காட்டியதைப்போல, இந்தி ஒட்டகம் தமிழகக் கூடாரத்திலே தன் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டிடா வண்ணம்—நம் எதிர்கால வாழ்வையே கிழித்துப் போட்டிடா வண்ணம்—என்னென்ன அறப்போர்த் திட்டங்களைத் தீட்டலாம் என்பது குறித்து நான் விரிவாகவே விளக்கிப் பேசினேன்; மற்றக் குழு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்தனர். இறுதியில் சில முக்கியமான முடிவுகளை மேற்கொண்டோம்.

ஆனல், எங்களுடைய ஒரு முடிவினை அண்ணு ஏற்கவில்லை.

அறிஞர் அண்ணு அவர்களே ஏற்றுக்கொள்ள இயலாத அளவிற்கு அப்படி என்னதான் முடிவினை எடுத்தோம் என்று சிலர் வியப்பினை அடைந்திருக்கக்கூடும்.

1963—ஜூலை 15-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு மேற் கொண்ட சில முக்கிய முடிவுகளில் ஒன்று.

''செப்டம்பர் 15—ஆம் நாளன்று அறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த நாளைத் தொடர்ந்து 21-ஆம் நாள் முடிய நாடெங்கும் இந்தி எதிர்ப்பு வாரமாகக் கொண்டாடும்படிக் கழகத்தின் எல்லா அமைப்புக்களையும் இக்குழு கேட்டுக் கொள்கிறது" என்பதாகும்.

இதனைத்தான் அண்ணு ஏற்றுக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டேன்.

இந்தி ஏகாதிபத்தியத்தின் இடுப்பினை ஒடித்திட அந்தத் தானைத் தளபதி 1938 முதற்கொண்டே படைத்திட்ட சரித்திரமே தனி; தன்னி

கரற்றது. எனவேதான் அண்ணலின் பிறந்த நாளும், 'இந்தி எதிர்ப்புப் பெருநாள்'—ஆக வரலாற்றிலே இடம் பெற்றிட வேண்டும் என அந்தக் குழு கருதியது.

அந்த ஆசைக்குத்தான், அண்ணு பிறந்த செப்டம்பர் 15—முதல் செப்டம்பர் 21 வரை 'இந்தி எதிர்ப்பு வாரம்' என்று வடிவம் கொடுக்கப் பட்டது.

அதனைத்தான் அண்ணு ஏற்றிடவில்லை.

'மரியாதை வாரம்' என்று கொண்டாடிவிட்டு அதற்குப் பிறகு மரியாதைகள் மறக்கப்படுவதைப்போல, எங்கே நம்முடைய தம்பிகள் அந்த ஒரு வாரத்தில் மட்டும் இந்தி எதிர்ப்பைக் காட்டிவிட்டுப் பிறகு ஓய்ந்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சினரோ?

இல்லை, ஜூலை 15-இல் கூடிய போராட்டக் குழுவின் முடிவை நிறைவேற்றிட செப்டம்பர் 15 வரை எதற்காக இந்தியை எதிர்க்காமல், அந்த வாரத்திற்காகக் காத்திருக்கவேண்டும் என்று கருதினரோ—தெரியவில்லை.

எனினும், போராட்டக் குழுவின் மற்ற முடிவுகளை முழுமனத்துடன் வரவேற்றார் அண்ணு. அத்துடன், அந்த முடிவுகளை நிறைவேற்றிடப் பிரச்சார நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளலாம் என்கிற முழு அதிகாரத்தையும் குழுவுக்கு அவர் வழங்கினார். கழகப் பொதுச் செயலாளர் என்கிற முறையில்.

குழுவின் மற்ற முடிவுகள் இவைதான் :

போராட்டக் குழு உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து, அறப்போரில் பங்கு பெறும் தொண்டர் களின் பட்டியலைத் தயாரித்தல்;

இந்தி எதிர்ப்புப் பிரச்சாரப் பொதுக் கூட்டங்கள், ஓரங்க நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள். இன்னபிற சாதனங்கள் மூலம் நாடெங்கும் இந்தித் திணிப்பினால் விளையும் கேடுபாடுகளை விளக்கிட முனைந்து முயற்சிகளை மேற் கொள்ளுதல் :

சேலம், தஞ்சை, திருநெல்வேலி, சென்னை-ஆகிய நகரங்களில் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் நடத்துதல்; அவற்றையொட்டி, ஆங் காங்கே, அவ்வப்போது போராட்ட வீரர்களின் பாசறைக் கூட்டங் களுக்கு ஏற்பாடு செய்தல்.

இந்த முடிவுகள் அனைத்துமே புரட்சிகரமானவை-தெளிவானவை-புத்தெழுச்சியை ஊட்டக்கூடியவை என்று இந்தியால் படரக்கூடிய இருளை உணர்ந்த ஒரு சில காங்கிரஸ் நண்பர்களே தனியாகக்கூறினர்.

இவற்றைச் செயலளவில் நிறைவேற்றிட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன; முனைப்போடு-முழு நம்பிக்கையோடு.

கழுத்தில் உண்டான கட்டியினால் தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த அண்ணு, அறுவைச் சிகிச்சைக்கு ஆளாகி அவதி யுற்றார் அல்லவா? அப்போது போடப்பட்ட தையல் ஜூலை 19-இல் பிரிக்கப்பட்டது. புண் ஆறிவிட்டதால் அன்றே மருத்துவ மனையிலி ருந்து வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார் அண்ணு. பின்னர் காஞ்சிபுரம் சென்றார், ஓய்வு பெறுவதற்காக.

அவருடைய உடல் ஓய்வை நாடியது என்னவோ உண்மைதான்! அவருடைய உள்ளத்து உணர்வுகளோ ஓடிக்கொண்டேயிருந்தன தமிழகத்தின் எதிர்காலம் பற்றி; பாடிக்கொண்டேயிருந்தன தமிழின் இனிமையைப்—பழைமையை: சாடிக்கொண்டேயிருந்தன இந்தித் திணிப்புச் சதியினை-சாகசத்தை!

அந்த நேரத்தில் அமைதியாக இருந்திடவேண்டிய அவர்தம் நெஞ்சத் தடாகத்திலே நீள் அலைகள் வட்டமிடும் வண்ணம் கல்லை எறிந்து வேடிக்கை பார்த்த கனதனவான்களில் லால்பகதூர் சாஸ்திரி யும் ஒருவர்.

ஐதராபாத்தில், ஜூலை 21-இல் இந்திப் பிரச்சார சபையொன்றின் வெள்ளி விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''தி.மு. கழகத் தலைவர்கள் இந்தியை எதிர்த்து நடத்தவிருக்கும் போராட்டத்தைக் கைவிடவேண்டும். இந்தி ஆட்சி மொழி ஆவதை எதிர்த்து அவர்கள் போராட முடிவு செய்துள்ளது மிகவும் வருந்தத் தக்கது ஆகும். இந்தி...கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலத்தை அகற்றி அதன் இடத்தைப் பிடித்துக்கொள்ளும். அரசியல் சட்டத்தில் ஏற்கப்பட்டுள்ள இந்தியைத் தவிர வேறு எதுவும் இந்தியாவில் தொடர்பு மொழியாக இருக்க முடியாது; இந்தி நமக்கு அந்நிய மொழி அன்று.''

—சாஸ்திரியாரின் இந்த அழுத்தமான-இந்தி ஆதிக்கப் போக்கின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்துவதான-வாதத்தினை ஏடுகள் மூலம் அறிந்த பின்னரும் எப்படி அமைதியாக இருந்திட முடியும் அண்ணு அவர்களால்?

பொறி பறக்கும் அறிக்கை ஒன்று புறப்பட்டது அவர் கரத் திலிருந்து:

''ஆளுங்கட்சியின் இதயத்தில் இரத்தப் பசி கொண்ட ஓநாய் குடி யிருக்கிறது. அதன் பசி அடங்குவதற்கு எவ்வளவு இரத்தம் வேண்டு

மானாலும் தருவதற்குத் தி.மு. கழகம் தயாராக இருக்கிறது எங்களுடைய இரத்தத்தைச் சுவைத்த பிறகாவது அதன் வெறி அடங்கி ஒடிவிடுமோ என்பதைப் பரிசோதித்துப் பார்க்கும் விதத்திலேயே தி.மு. கழகத்தின் கிளர்ச்சி இருக்கும். இன்னல்களை ஏற்றுக்கொள்வோம்; எல்லாத் தியாகங்களையும் புரிவோம்; இது காந்திய முறை. இந்த முறை அச்சுறுத்தலுக்கு அடி பணியாது; அதுபோலவே சபலத்திற்கு இரையாகி விடாது. ஏனெனில் கொடுங் கோன்மைக்கும் அநீதிக்கும் அடிபணியவோ ஒத்துப் போகவோ கழக வீரர் எவரும் தயாராக இருக்கமாட்டார்; அநீதியைச் சகிப்பதில்லை என்பது எங்களுடைய தாரக மந்திரம் ஆகும்."

கழகக் காளையர் ஒவ்வொருவர் உணர்விலுமே உரத்து ஒலித்துக் கொண்டிருந்த அநீதிக்கு அடிபணியாத பேராண்மையைத்தான் அறிக்கை வடிவிலே இப்படி டில்லிப் பேரரசுக்கு எடுத்துரைத்தார் அண்ணு.

வாழ்க்கை ஒரு விரைவு ரயில் பயணம் என்றால், வழியிலே எத்தனையோ நாட்களும் - வாரங்களும்-மாதங்களும் வண்டியே நிற்காத ரயில் நிலையங்கள் போல வந்து போவதுண்டு. ஆனால் சில நாட்கள் கண்டிப்பாக வண்டி நிற்கும். சிறப்புச் சந்திப்புக்களாக நம் நெஞ்சத் திரையிலே நிலைத்து நிற்பதும் உண்டு.

அத்தகைய மறக்கவொண்ணாச் சிறப்பினைப் பெற்ற நாட்களில் ஒன்றுதான் 1963-ஜூலை 24-ஆம் நாள்!

அன்று எனக்கு இரண்டு பரிசுகள் கிட்டின.

ஒன்று என் கலைப் பணிக்காக; மற்றது என் அரசியல் தொண்டிற்காக.

88

கலையும் அரசியலும் இரு கண்கள்

கலை - அரசியல் - இரண்டையுமே என் இரு கண்களாகக் கருது பவன்தான் நான். இவற்றிலே எந்தக் கண் உயர்ந்தது, எந்தக் கண் தாழ்ந்தது என்ற ஆராய்ச்சிக்கே இடமில்லை.

ஆனால் ஒன்றை நான் தெளிவாகக் கூறிட இயலும். எனக்கு விவரம் தெரிந்த பிறகு நான் முதன் முதலில் ஈடுபாடு கொண்டது அரசியலில்தான். என்னுடைய பதினான்காம் வயதில் திருவாரூர்த் தெருக்களிலே என்றைக்கு நான் 'இந்தி ஒழிக' என்று முழக்கமிட முற்பட்டேனோ அன்றே என் அரசியல் தொண்டு தொடங்கிவிட்டது. பிறகுதான் நான் கலை உலகில் கால் வைத்தேன்.

அரசியல்-சமுதாய-இலட்சியங்களைப் பரப்பிடக் கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டேனேயல்லாது, சிலரைப் போலக் கலைக் கவர்ச்சியை மட்டுமே காட்டி அரசியலில் தலையெடுக்க முனைந்திடவில்லை நான்.

எனினும் இரு துறைகளிலுமே, என் இதயம் ஏற்றுக் கொண்ட உயர்ந்த கொள்கைகளுக்காக-ஒய்வு பற்றி ஒரு கணமும் எண்ணிடாமல்-உளப்பூர்வமாக உழைத்தேன், உழைக்கின்றேன் என்பது மட்டும் உண்மை.

இதனை உணர்ந்து ஒப்புக்கொண்டு மதிப்பளிக்கின்ற வகையிலே தான் ஜூலை 24-இல் எனக்கு இரு பரிசுகள் வந்தன.

கலையுலகப் பரிசினைத் திரைப்பட இயக்குநர் திரு எல்.வி. பிரசாத் அளித்தார். அவர் தயாரித்து இயக்கிய 'இருவர் உள்ளம்' படம் வெற்றிகரமாக ஓடிற்று. நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அதில் நடித்திருந்தார் நான் அதற்கு உரையாடல் தீட்டியிருந்தேன். அந்தப் படம் நூறு நாட்கள் ஓடியதை முன்னிட்டே இயக்குநர் திரு எல்.வி. பிரசாத் எனக்கு ரூபாய் பத்தாயிரம் பரிசளித்தார்.

அந்தத் தொகையினை உடனே சொந்தச் செலவுகளுக்குப் பயன் படுத்திடவில்லை நான். என்னைப் பாராட்டிச் சீராட்டி ஆளாக்க அரும் பாடு பட்ட என்னுடைய அருமைப் பெற்றோர்களான அஞ்சுகம்-முத்து வேலர் நினைவாக நான் பிறந்த மண்ணும் திருக்குவளையில் தாய்-சேய் நல மருத்துவ மனை கட்டப்படுவதற்கு அந்தப் பத்தாயிரம் ரூபாயையும் நன்கொடையாக வழங்கிவிட்டேன்.



அடுத்ததாக அன்று நான் பெற்ற பரிசு என் அரசியல் தொண்டினை மதிப்பதற்கு அமைந்ததாகும்.

மயிலாப்பூர் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது அதிலே கலந்து கொண்ட நான்—

"தி.மு. கழகம் நடத்தவிருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டம். விளம்பரத்துக்காக நடத்தப்படும் போராட்டம் அல்ல; விளக்கத்திற்காக-வீழ்ந்து கிடக்கும் உரிமைக்காக-நடத்தப்படும் போராட்டமாகும்; தமிழ் நாட்டில் விளக்கேற்றி வைக்கும் போராட்டமாகும்.

"இந்தித் திணிப்பினால் தமிழர்களின் எதிர்காலமே பாழாக்கப்படும் சதி டில்லியில் உருவாகி வருகிறது; புரண்டு வரும் இந்தி வெள்ளத்தைத் தடுக்க இப்போதே அணை போட்டாக வேண்டும்; இல்லையென்றால், தமிழ் இலக்கியம், தமிழர்கள் கலை, பண்பாடு எல்லாம் அழிந்துவிடும், இந்த அவல நிலையைப் போக்கவே தி.மு. கழகம் போராட்டம் நடத்த விருக்கிறது..."

—என்று குறிப்பிட்டேன்.

அந்தக் கூட்டத்தில், ஒரு விந்தையான பரிசினை அளித்தார் மயிலைத் தோழர் எஸ்.வி. முத்து. அது கறுப்பு-சிவப்பு இருவண்ண அட்டைப் பெட்டி வடிவில் அமைந்திருந்தது. உள்ளே மூன்று சிறிய பிளாஸ்டிக் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. முதல் பெட்டியின் மேல் 1957 என்று குறிப்பிட்டு அதனுள்ளே 15 கறுப்பு-சிவப்பு நிறமுடைய குண்டு மணிகள் போடப்பட்டிருந்தன. இரண்டாவது பெட்டியின் மேல் 1962 என்று குறிப்பிட்டு அதனுள்ளே 51 குண்டுமணிகள் போடப்பட்டிருந்தன. மூன்றாவது பெட்டியின் மேல் 1967 என்று குறிப்பிட்டு அதனுள்ளே 151 குண்டுமணிகள் போடப்பட்டிருந்தன.

பரிசினைப் பெற்றுக்கொண்ட நான் மூன்றாவது பரிசுப் பெட்டியையே கண்கொட்டாமல் பார்த்தேன். பின்னர் இவ்வாறு பேசினேன்!

''வரப் போகிற 1967 தேர்தலில் 151 இடங்களைத் தி.மு. கழகம் பெறவேண்டும் என்ற ஆர்வத்துடன் காங்கிரசை முறியடித்து விரட்ட தி.மு. கழகத்திற்குப் புதிய வலிவையும் தெம்பையும் பொது மக்கள் அளிக்க வேண்டும்.''

என்னுடைய விளக்கவுரை வேண்டுகோள் பலனற்றுப் போகவில்லை யென்பதும், காங்கிரஸ் கைவரிசைகள் யாவும் புதையுண்டு போய்விட, கழக அரசே 1967-ல் அண்ணாவின் தலைமையில் அமைந்தது என்பதும் பின் வரலாறு காடடிய காட்சிகளாகும்.

போராட்டக் குழுவின் முடிவுகளை யொட்டி 3-8-63-ல் சேலத்தில் போராட்ட வீரர்களின் பாசறைக் கூட்டத்தைக் கூட்டினேன். கருத்து விளக்கங்கள் பல அளிக்கப்பட்டன.

4-8-63-இல் சேலம்-அம்மாபேட்டையில் தாளமுத்து நடராசன் அரங்கில் இந்தி எதிர்ப்பு மாநாடு துவங்கியது. கோவை, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்கள், கருநாடக மாநிலம் ஆகிய பகுதியினருக் காக நடத்தப்பட்ட மாநாடுதான் அது என்றாலும், தமிழகம் எங்கணு மிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் பெருந்திரளாய்க் குழுமிக் கடற் பரப்பாய்க் காட்சியளித்தனர்.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என்கிற முறையில் உரை யாற்றிய நான் இவ்வாறு குறிப்பிட்டேன்:

'காரிருள் இந்தி விலக வேண்டும்; அதற்குத்தான் கழகம் களம் காணத் துடிக்கிறது! நம்முடைய அன்னையின் விலங்கொடிக்க-அவள் முகத்தில் பொலிவு பெற-தமிழ் வாழ-தமிழகம் ஓங்க-நீங்கள் எல்லாரும் இன்று காட்டுகிற உணர்ச்சியை அறிஞர் அண்ணா அவர்கள் போராட்ட நாள் குறிக்கிற அந்த நேரத்திலும் காட்டவேண்டும்.

'வேங்கையெனப் பாய்ந்து வரும் இந்தி ஆதிக்கத்தை வேகமாகச் சாடி நொறுக்கும் சக்தி தி.மு. கழகத்திற்குத்தான் இருக்கிறது; வேறு எதற்கும் அந்த வலிவு இல்லை. இந்தப் போரில் வெல்லவும், எதிர் காலச் சந்ததிக்கு நன்மை செய்யவும், இருண்ட வீட்டில் விளக்கேற்ற திராவிடப் பெருங்குடி மக்களாகிய நீங்கள்தான் உதவ வேண்டும்.

''இந்தித் திணிப்பால் ஏற்படும் கொடுமைகள் இப்போது விளங்கா; பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான் தெரியும்.''

—சேலம் இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு நாவலர் நெடுஞ்செழியன் தான் தலைமை தாங்கினர்.

அவரை முன்மொழிந்து பேசிய நான்.

...தமிழக வரலாற்றில் இரு நெடுஞ்செழியர்கள் வீரவரலாற்றைச செதுக்கியவர்கள்; அழியாப் புகழைச் செதுக்கியவர்கள்; நீதிக்காக உயிர் விட்டவர்கள். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ஒருவன்; மற்றொருவன் தலையாலங்கானத்தில் தன் போர்த் திறன் காட்டியவன். அவர்களது வழியில் வந்தவர் ஆவார் நம் நாவலர் நெடுஞ்செழியன்" என்று குறிப்பிட்டேன்.

மாநாட்டில் நாவலர் அவர்கள் தலைமையுரையினை ஆற்றிட முற்பட்டுச் சிறிது நேரமே சென்றிருக்கும்.

திடீரென்று கொட்டத் தொடங்கிற்று மழை; என்ருலும் கலையவில்லை கூட்டம்.

திறந்த வெளி அரங்கானதால், மழை வெள்ளம் கரைபுரண்டு தரையெல்லாம் விழுங்கியது. எனினும் நனைந்து கொண்டே அமர்ந்திருந்தனர் பொதுமக்கள். குறிப்பாக மழலைச் செல்வங்களை மடியினில் ஏந்திய தாய்க்குலம் உடல் நடுங்கிய போதிலும், உள்ளம் நடுங்காமல் கொள்கை வெறியோடு குந்தியிருந்த காட்சி நெஞ்சத்தை நெக்குருகச் செய்தது. ''இந்தி ஒழிக!" என்று தீர்மானத்தை ஆதரித்து, கொட்டும் மழையிலும் அவர்கள் குரலை எழுப்பியது, குருதி நாளங்களிலே புதுவீரம் பாய்ச்சியது.

சேலம் இந்தி எதிர்ப்பு மாநாட்டினைப் பற்றிச் சிந்தித்திடும் வேளையில் பொதுமக்களின் கருத்தினைக் கவர்ந்திட நாங்கள் செய்திருந்த வேருெரு ஏற்பாடும் என் விழி முன்னே இப்போதும் 'பளிச்'சென்று மின்னுகின்றது.

அங்கே ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஏற்பாட்டினையே சொல்கின்றேன்.

சேலத்தின் பெரிய பெரிய தெருக்களில் மட்டுமின்றிச் சின்னஞ்சிறு சந்துகளிலும் கூட வண்ண வண்ணச் சுவரொட்டிகளில் கண்ணைப் பறித்தன பொன்மொழிகள். எல்லாமே இந்தித் திணிப்பினைச் சாடிடும் எழுச்சிப் போர்ப்பரணி பாடிடும் புரட்சிமிக்க பொன்மொழிகள்!

'தமிழ்க்கடல்' மறைமலையடிகள், 'நாவலர்' சோமசுந்தர பாரதியார், 'தமிழ்த் தென்றல்' திரு வி. கலியாண சுந்தரனர் போன்ற அறிஞர் பெருமக்களுடைய இனிய கருத்துக்கள், ஏன், எச்சரிக்கைகளே சுவரொட்டிகளிலே சுடர் வீசின; சூடும் ஏற்றின, தாய் மொழி காத்திட வேண்டிய தன்மான உணர்வுக்கு!

'தன்மான இயக்கத்தின் தந்தை' என்னும் பெருமை பெரியாருக்கு உண்டென்றால் 'தனித் தமிழ்' இயக்கத்தின் தந்தை என்ற பெருமை மறைமலையடிகளுக்கு உண்டு.

'அபேட்சகர்' - 'வேட்பாளர்'ராக,

'அக்ராசனாதிபதி' - 'அவைத் தலைவ'ராக,

'நமஸ்காரம்' – 'வணக்க'மாக

'சந்தோஷம்' - 'மகிழ்ச்சி'யாக

மாறி மறுமலர்ச்சி பெற்றிடும் வண்ணம் இன்று நல்ல தமிழ் நறுமணம் வீசிட வித்திட்டவர்-விளக்கமளித்தவர் - சிலருடைய வெறுப்பினையும் தேடிக்கொண்டவர் மறைமலையடிகள். அவருக்கோ சைவ சமயமே மூச்சு, பேச்சு எல்லாம்!

'மாரிவாயில்' போன்ற இலக்கிய வைரங்களைத் தமிழன்னையின் முடியிலே பதித்திட்டவர் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

அந்த நாளில், தமிழ்நாட்டு மண்ணில் காங்கிரஸ் கட்சி வேர்விட்டுத் தழைத்திடத் தண்ணீர் வார்த்த முப்பெருந் தலைவர்களுள் ஒருவர் திரு. வி. க. (பெரியாரும் பி. வரதராசலு நாயுடுவும் மற்ற இருவர்) இந்தப் பெரியவர்களும்கூட இந்தித் திணிப்பு என்றதும், வந்தது பேரிடி தமிழுக்கு என்று வரிந்து கட்டினர், எதிர்ப்புக்கணை தொடுத்திட. மொழி பற்றிப்பெரியார், அண்ணா கருத்துக்களை முழுமையாக ஏற்றனர், போர் முரசமும் கொட்டினர்.

எனவேதான் அந்தத் தமிழாய்ந்த சான்றோர்களின் அரிய உரைகள் சுவரொட்டிகளில் பளிச்சிட்டால், அவை மக்களின் மனத்திலே பதிந்திடும்—சிந்தையைக் கிளறிடும்—தெளிவினைத் தந்திடும்—அதன் விளைவாகத் திண்டோள் மறவர் பலர் அறப்போர் அணியிலே சேர்ந்திடுவர் புரட்சிப் புயலாக என்று நம்பினேம்; நடவடிக்கைகள் மேற்கொண்டோம்.

இதிலே கட்சிப் பாகுபாடு எதனையுமே நாங்கள் காட்டிடவில்லை.

ஓர் இலட்சியம்-அதுவும் தாய் மொழிக்கு வரக்கூடிய ஒரு பேரிடியை, இந்தித் திணிப்பைத் தகர்க்க வேண்டிய ஒரு பொதுவான இலட்சியம்-என்று வரும்பொழுது அதனைக் கட்சிக் கண்ணோட்டத்துடன் மட்டும் அணுகுவது முறையான பொதுத் தொண்டு ஆகாது; அது நம்முடைய முதிராத மன நிலையையும் பறை சாற்றுவதாகும்.

இன்றைக்கும் கூட இந்தித் திணிப்பினால் தமிழுக்குத்-தமிழருக்குத் -தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய பெரும் விபத்தினை உணரத்தவறி, அந்த மொழி ஏகாதிபத்தியத்தினை எதிர்ப்பதை ஓர் இலட்சியமாகவே ஏற்றுக் கொள்ளாததால்தான், தி. மு. கழகத்தைத் தவிர வேறு எந்த அகில உலக கட்சிகளும் சரி, அகில இந்தியக் கட்சிகளும் சரி இந்தத் தமிழ் மண்ணில் வேர்விட முடியவில்லை. வேர்விட்ட 'பெரிய கட்சி'களும் வீழ்ச்சியையே தழுவ நேர்ந்தன என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

எனவேதான் இந்த நாட்டின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டே எந்த இலட்சியத்தையும் நாங்கள் வகுத்துக் கொள்கிறோம். அத்தகைய பொதுவான இலட்சியங்களுக்குக் குரல் கொடுப்பவர்கள் எந்த முகாமிலே இருந்திட்ட போதிலும், அவர்களுக்கு எங்கள் நன்றியுணர்வினைத் தயங்காமல் தெரிவிக்கிறோம்.

இந்த அடிப்படையிலேதான், மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், திரு. வி. க. போன்றவர்களின் ஆக்க மூட்டும் அரிய உரைகளை மக்கள் நோக்குமிடமெல்லாம் பளிச்சிடுமாறு செய்தோம்.

சேலத்தோடு இந்தச் சுவரொட்டி ஏற்பாடு சுருங்கிவிடவில்லை. தமிழகம் எங்கணும் அதனை விரிவாக்கினோம் இலட்சக் கணக்கில் சுவரொட்டிகளை அச்சடித்து. அத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட தலைவர்களின் படங்களையும், தஞ்சையிலே கரந்தைத் தமிழ்ச் சங்கம் கண்ட தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, தமிழின் மீது கொண்ட தணியாத காதலின் காரணமாக சூரியநாராயண சாஸ்திரி என்னும் தம் பெயரைத் தனித் தமிழில் மாற்றிக் கொண்ட பரிதிமாற் கலைஞர் ஆகியோரது படங்களையும் தேடிப் பிடித்துப் பரப்பிட நானும் போராட்டக் குழுவினரும் மேற்கொண்ட முயற்சிகளும் ஏராளம்.

இங்கே குறிப்பிடத்தக்கது இந்தித் திணிப்பினை எதிர்த்திட்ட அதே வேளையில், தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமளித்திட்ட சான்றோர்களையும் புறக்கணிக்காமல் அவர்தம் புகழ் பரப்பினோம்; பொன் மொழிகளைப் பரப்பினோம் என்பதுதான்.

சேலம் மாநாடு தந்திட்ட புத்துணர்ச்சி-புதிய தெம்போடு சென்னை திரும்பிய நான் மறுநாளே (1963 ஆகஸ்டு, 7-இல்) சட்ட மன்றத்திலே உணர்ச்சிப் பெருக்கோடு உரையாற்றிட வேண்டிய வாய்ப்பினைப் பெறலானேன்.

பிரிவினைக் கொள்கையை இன்று அடியோடு கைவிட்டுவிட்டது தி. மு. கழகம். அதனைப் பல தடவைகள் பல மேடைகளில் நானும் மற்றக் கழகத் தலைவர்களும் அழுத்தந்திருத்தமாக அடித்துப் பேசியிருக்கிறோம்; அறுதியிட்டுக் கூறியிருக்கிறோம்; கூறி வருகிறோம்.

என்றாலும் வஞ்சகச் சேற்றையே சந்தனமாக வாரிப் பூசிக்கொண்டு சிரிக்கும் வன்கணாளர்கள்-

திரித்துப் பேசி, திருத்தி எழுதி, 'திரிபு வேலை' செய்தே தங்கள் வயிற்றுப் பிழைப்பை வாணிபமாக நடத்திடும் சிறுமதியோர், பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு விட்ட எங்களைப் பார்த்துப் பிரிவினைவாதிகள் தான் என்று திரும்பத் திரும்பக் கிளிப்பிள்ளை மாதிரி சொல்லிச் சொல்லிக் கீழறுப்பு வேலை செய்கின்றனர்.

இத்தகைய இழிதகையோரின் போக்கு, சீனப் படையெடுப்பை யொட்டித் திராவிட நாட்டுக் கொள்கைகளைக் கைவிட்டு விட்டோம் என்று அறிஞர் அண்ணா அறிவித்த பின்னரும் 1963-ஆம் ஆண்டிலும் நிலவியது.

89

பதினைருவது விதியின் திருத்தத்தை எதிர்த்தேன்

கழகத்தைக் கருவறுப்பதற்கென்றே பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது டில்லிப் பேரரசு. அதற்குத் துணை நின்றது - தூபம் போட்டது - அன்றையச் சென்னை அரசு! 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கக்கூட மறுத்து விட்டதால்தான்-தாய் மொழிப் பற்றையே காற்றிலே பறக்க விட்டதால்தான் அன்றையக் காங்கிரசு அரசைச் சென்னை அரசு' என்று குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்!

இவ்வாறு கழகத்திற்குக் குழி தோண்டுவதையே குறிக்கோளாய்க் கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தின் 16-ஆவது விதிக்குச் செய்யப்பட்ட திருத்தத்தை ஆதரிக்கக் கோரி, சட்ட மன்றத்திலே தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதனை வெட்டிப் பேசிடும் பொழுது தான் தமிழினத்தின் வேதனைக் குரலை இவ்வாறு கொட்டித் தீர்த்தேன்.

...அயர்லாந்து நாட்டின் விடுதலை வீரன் பியர்சே சுட்டுக்கொல்லப் பட்டான். 'அவன் உடல் மறைந்தது; ஆனால் அவனுடைய புகழ் மறையவில்லை. புகழோடு வாழ்கிறான். வரலாற்றிலே மறக்க முடியாதபடி ஓர் ஏடாக மாறி விட்டான்.

''இச்சட்டம் அரசியல் சட்டத்தின் 16-ஆவது விதிக்குச் செய்யப்படுகிற திருத்தம் என்று கூறப்பட்டாலும், இத்திருத்தத்தை, 'தி. மு. கழகத் தடுப்பு மசோதா' என்றும், 'பிரிவினைத் தடுப்பு மசோதா' என்றும் பல தரப்புகளில் கூறப்படுகிறது. மசோதாவைத் தாக்கல் செய்த கனம் நிதியமைச்சர் 'தி. மு. க. வினர் நாட்டைத் துண்டாடும் கொள்கையைக் கைவிட்டு விடுவர்' என்று நம்புவதாகக் குறிப்பிட்டார்.

''அரசியல் சட்டத்தை உருவாக்கும் போது, 'துண்டாடப்பட்ட ஒரு நிலப் பகுதிக்குத்தான் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது' என்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

''ஆங்கிலேயர்களால் ஒருறுப்பு நாடாக ஆக்கப்பட்டுப் பின்னர் அவர்கள் வெளியேறும் போது பாகிஸ்தான் பிரிவினையை ஒப்புக் கொண்டு துண்டிக்கப்பட்ட நிலப் பரப்புக்குத்தான் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது.

''தேசிய ஒருமைப்பாட்டுக் குழு சிபாரிசுகளின் மீதுதான் இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது எனக் கூறப்பட்டது. இந்தக்



குழு எங்களுடைய கருத்துக்களைக் கேட்டு அறிய முடியாமல், எங்கள் தலைவர்களைச் சந்தித்துக் கருத்தறிய முயற்சி செய்யாமல் நாட்டிலே 'உலா' வந்தது.''

''விவசாயத்தைப் பற்றி ஆராயக் குழு அமைக்கிறோம் என்றால், அக்குழு, விவசாயிகளைச் சந்தித்து அவர்களுடைய கருத்தை அறிவதற்கு முயற்சி செய்யாதா?''

''தொழிலாளர்கள் நிலை பற்றி ஆராயக் குழு அமைக்கிறோம் என்றால், அக்குழு, தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசிக் கருத்தறிய வேண்டாமா?''

''பிரிவினையைப் பற்றி ஆராயக் குழு அமைக்கப்படுகிறது என்றால், அக்குழு, (அப்போது பிரிவினைக் கொள்கையை ஏற்றிருந்த) எங்களைச் சந்தித்து, எங்கள் கருத்தை அறிய வேண்டாமா?''

''சம்பந்தி வீட்டுக்குச் சொல்லாமலே நிச்சயதார்த்தம் நிகழ்த்தலாமா?''

''தி. மு. கழகம் தேர்தல் நேரத்தில் தலையிடாமல் இருக்கவே, இச்சட்டம் கொண்டுவரப்படுகிறது.

''அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது, 'அமெரிக்காவில் பிரிவினை உணர்ச்சி அடக்கப்பட்டுவிட்டது' என்று கூறினார்.''

''அமெரிக்காவில் இந்நிலை எப்படி வந்தது? அதன் பூர்வோத்திரம் என்ன?''

'அமெரிக்காவின் வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் இடையே அடிமைப் பிரச்சினை மீது (தாவா) எழுந்தது; இதன் விளைவாக அமெரிக்க சுப்ரீம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் பட்டது. 'வழக்கு நமக்குப் பாதகமாகத் முடியுமோ?' என்ற அச்சம் வட பகுதியினருக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக வடபகுதியினர் தெற்குப் பகுதியினர் மீது போர்ப் பிரகடனம் செய்தனர். எல்லா

வகையிலும் வலிமை பெற்றிருந்த வட பகுதியினர் தெற்குப் பகுதியை அடிமையாக்கிக் கொண்டனர். இவ்வாறு வடக்குப் பகுதியினர் தெற்குப் பகுதி மீது படையெடுத்து வெற்றி பெற்ற பின்னரே பிரிந்து போகும் உரிமை கிடையாது' என்று சுப்ரீம் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.''

''இந்தத் தீர்ப்பு 'போஸ்ட் பேக்டோ தீர்ப்பு' (Post Facto) என்று வரலாற்றிலே குறிக்கப்படுகிறது. பிரிந்து போகும் உரிமை இரஷ்ய அரசியல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் திரு மதியழகன் அவர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால் மன்றத்தில் பேசிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு கலியாணசுந்தரம் அவர்கள் 'பிரிந்து போக வேண்டும் என்பது தேசத் துரோகமானது' என்று கூறினர்.''

''1951-ஆம் ஆண்டில் நாங்கள் வெட்ட வெளியில் பசும்புல் தரையில் பேசிக் கொண்டிருந்தோம். 'அங்கே பேசினால் போதுமா? உள்ளே வந்து பேசுங்கள்' என்று காமராசர் அழைத்தார். 'சரி, உள்ளே சென்றுதான் பார்ப்போமே' என்று 1957-ஆம் ஆண்டுத் தேர்தலில் ஈடுபட்டோம். 15 இடங்களைப் பெற்றோம்.''

''அமைச்சர் திரு சுப்பிரமணியம், 'உங்கள் திராவிட நாட்டுப் பிரச்சினையைத் தேர்தல் பிரச்சினையாக வைக்க முடியுமா?' என்று சவால் விட்டார். 1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் அதையும் தேர்தல் பிரச்சினை ஆக்கினோம். 51 இடங்களைப் பெற்றிருக்கிறோம்.''

''எங்களை அரசியல் முனையில் சந்திக்கத் தெம்பு, திராணி, துணிவு இல்லாத காரணத்தால் சட்டம் போட்டு அழிக்க முயல்கிறீர்கள் என்பதைத் தவிர வேறு உண்மை என்ன இருக்கிறது?''

''இந்தச் சட்டத்தை அமுல் படுத்திவிட்டு, 'பேச்சு சுதந்திரம் அளித்த காங்கிரசுக்கே உங்கள் ஓட்டு' என்று இனியும் நீங்கள் பேச முடியுமா?''

''விடுதலை வீரராக விளங்கிய அன்றையப் பண்டித நேரு, 1945-ஆம் ஆண்டு ஜூலையில் காஷ்மீரில் உள்ள கபூர்தலா தோட்டத்தில் நடைபெறற கூட்டத்தில்-

'இந்தியாவின் ஒரு பகுதியை மற்றொரு பகுதி அடக்கி ஆள்வதற்காக நாங்கள் சுதந்திரம் கேட்கவில்லை. இந்தியாவின் எந்தப் பகுதியாவது பிரிந்து போக வேண்டும என்று விரும்பினால் பிரிந்து போக வேண்டாம் என்று நாங்கள் கேட்போம். பிரிந்துதான் போவோம் என்று கூறினால் நாங்கள் விட்டு விடுவோம்' என்று கூறியிருக்கிறார்.''

1963 ஆகஸ்ட் 7-ஆம் நாளில் நான் ஆற்றிய சட்டமன்ற உரையினை இங்கே நான் எடுத்துக் கொடுத்திருப்பது அந்த நாளிலேயே வாதங்களை அடுக்குவதற்கு முன்னர் எத்தகைய அக்கறையோடு வரலாற்றுப் பின்னணிகளையெல்லாம் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் திரட்டித் தந்திட முயன்றிருக்கிறேம் என்பதனை இளந்தலைமுறையினர் உணர்ந்திட வேண்டும் என்பதற்காகவே.

ஆனால் அன்றையச் சூழ்நிலையில் நான் அடுக்கிக் காட்டிய வாதங்களையே இன்றைக்கும் நான் எடுத்துப் பேசுவதாகச் சிலர் கதைக்கலாம். கற்பனைச் சரடுகளை அவிழ்த்துவிடலாம்.

"அழுக்கைப் பார்த்தே பழக்கப்பட்டவர்களுக்கு, அழுக்குக் களிற்றிலேயே புழுத்தவர்களுக்கு வெளுப்புகூடக் கறுப்பாகவே காட்சி தரும். அவர்களுடைய மனத்திலே மண்டிக் கிடக்கும் அழுக்கை அகற்றிட வெளுப்பைக் கொணர்ந்திட நாம் என்னதான் முயன்றிட்டாலும் ஏமாற்றமே மிஞ்சும். அண்ணா சொன்னதைப் போல 'வாழ்க வசவாளர்கள்!"

சட்ட மன்றத்தில் முதல் நாள் பிரிவினைத் தடை மசோதாவை எதிர்த்து உரையாற்றிய நான், அடுத்த நாள் ஆட்சிமொழி தொடர்பாகத் தோழர் கே. ஏ. மதியழகன் கொண்டு வந்த தீர்மானத்தையொட்டியும், இப்படிக் குரல் எழுப்பினேன்:

"ஜனநாயக உணர்வு படைத்த பண்டித நேரு அவர்கள் காலத்திலேயே நாம் பெற வேண்டிய உரிமைகளைப் பெறத் தவறி விட்டால், ஒரு வேளை இயற்கை சதி செய்து விட்டால் நான் தமிழின் மீது வைத்துள்ள பாசத்தால் நேசத்தால் பற்றால் கேட்கிறேன்; இதந் மண்ணுக்கு நாதி யார்?"

இவ்வாறு நான் கேள்வியெழுப்பிய வேளையில் நேருவின் உடல் நலம் சிறப்பாகவே இருந்தது.

ஆனால் ஓராண்டு முடிவதற்குள்ளேயே, 1964 மே 27-இல் அந்த விடுதலை வீரர் விடுதலை பெற்றுவிட்டார். உலக வாழ்வை விட்டு! அவருடைய மறைவு இந்திய மண்ணுக்குப் பெரும் இழப்பு!

———

90

பிரிவினை கேட்டவருக்கு உதாரணம்!

சட்டமன்றம்—நெஞ்சம் இடித்துரைக்கும் நீதியினை மறந்து விட்டுச் சொல்லம்புகளைத் தொடுத்துக் களித்திடும் வில்பயிற்சிக் கூடமல்ல, விளையாட்டரங்கமல்ல: 'எரிந்த கட்சி—எரியாத கட்சி பேசிடும் வேடிக்கை மேடையும் அல்ல.

ஆளும் கட்சியோ எதிர்க் கட்சியோ—எதனைச் சார்ந்திட்ட போதிலும், பொது மக்கள் நலனைக் காத்திடும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டவர்களால்—

பொறுப்புள்ள கருத்துக்களை—
பொருத்தமான சொற்களில்—
பொறுப்போடு பேசவேண்டிய—
பொறுப்பு மிகுந்த இடமே—
சட்ட மன்றம்.

உண்மையில் சமூக நீதிக் குழந்தையினைத் தாலாட்டிச் சீராட்டிடும் தாயகமே சட்ட மன்றம்.

அந்தக் குழந்தைக்கு ஓர் ஊறு—ஊனம்—காய்ச்சல்—கடும் வலி—ஈளை—இருமல் என்றால் அவற்றையெல்லாம் விரைந்து விரட்டிடும் மருந்துகளைச் சட்டங்களாகத் தயாரித்துத் தந்திடும் மருந்துச் சாலையும் ஆகும் சட்ட மன்றம். அந்த மருந்துகளை ஒழுங்காகப் புகட்டிடும் மருத்துவர் நிலையில் உள்ளதே அரசாங்கம்.

சில நேரங்களில் சிலருடைய வார்த்தைகள் சட்ட மன்றம் என்பதையும் மறந்துவிட்டுப் 'பொது மேடை நெடி ஏறி ச் சதிராட முனைவதுண்டு! அப்போது நிலாக் கதிர்களாய் வரவேண்டிய சொறகள் நெருப்பாகச் சுட்டெரிக்கும். பூக்களாய் மணக்க வேண்டியவை புழுதியாய அரங்கேறும்.

பிரிவினைத் தடைச் சட்டத்தைப் பற்றிய தீர்மானத்தின் மீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்த திரு பக்தவத்சலனார் கேலியாக ஒரு கருத்தினைச் சொன்னபொழுது என்னால் வாளாவிருந்திட முடியவில்லை.

1963 ஆகஸ்ட் 7-இல் அவர் இவ்வாறுதான் குறிப்பிட்டார், சட்ட மன்றத்தில்.

எங்களைக் கேட்காமல்—எங்களைச் சந்தித்துப் பேசாமல் தேசிய ஒருமைபாட்டுக் குழு (பிரிவினையைத் தடை செய்யுமாறு) சிபாரிசு செய்தது எப்படி என்று கேட்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. இருந்தாலும் ஓர் உபமானம் சொல்கிறேன். யாரும் தவருகக் கருதக்கூடாது.''

''சூதாட்டத்தைத் தடுக்கச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று வைத்துக்கொள்வோம்; 'அந்தச் சூதாட்டத்தில் பாதிக்கப்படும் சூதாடிகளைக் கேட்டுச் சட்டம் கொண்டு வந்தீர்களா?' என்று கேட்டால் அது பொருந்துமா? விபசாரத் தடைச் சட்டம் செய்திருக்கிறோம். 'பாதிக்கப் படும் விபசாரிகளைக் கேட்டீர்களா?' என்று சொல்வது பொருந்தாது.''

அமைச்சர் பக்தவத்சலஞர்—இமைகளைச் சிமிட்டிக் கொண்டு இப்படிப் பேசியதும் ஆளும் கட்சியினைச் சார்ந்திட்ட காங்கிரஸ் கட்சி நண்பர்கள் கரவொலி எழுப்பினர், எக்களிப்போடு, எங்கள் உள்ளத்தை முள்ளால் கிழிப்பதிலே அவர்களுக்கு அப்படியோர் அளவு கடந்த உற்சாகம்!

இந்தியத் துணைக் கண்டத்தை இரு கூருக்கிப் பாகிஸ்தானைப் பிரித்துச் சென்றவர் தான் ஜின்னு. அவரை யாராவது இது போன்ற சுடு மொழி கூறியிருப்பார்களா?

இங்கிலாந்தின் பிடிப்பிலிருந்து அயர்லாந்தைப் பிரித்துக் கொண்டு போனவர்தான் டி'வேலரா. அவருக்குக் கூட அத்தகைய இழிந்த பட்டங்களை யாராவது சூட்டியிருப்பார்களா?

எகிப்திலிருந்து சூடான், ஈரானிலிருந்து குவைத், மலேசியாவிலிருந்து சிங்கப்பூர், பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் என்று அவ்வப்போது தனி நாடுகள் பிரியாமல் இல்லை. ஆனால் அந்த நாட்டுத் தலைவர்களையெல்லாம் இவ்வளவு கேவலமாக யாராவது எள்ளி நகைத்து ஏகடியம் பேசியிருப்பார்களா?

இதனால் பிரிவினைவாதிகளையே கண்டிக்கக் கூடாது என்பது என் கருத்தல்ல. நான் இப்போது பிரிவினைவாதியும் அல்ல. ஆனால்

எத்தகைய கண்டிப்பிலும் ஒரு நயம்—நாகரிகம்—பக்குவம்—பண்பாடு இருந்திட வேண்டும் என்பதே என் எண்ணமாகும்.

ஒரு நாட்டிலே பிரிவினை உணர்வு அரும்பெடுக்கிறது என்றால் அதற்குரிய காரணங்களை ஆராய்ந்திட வேண்டும்; அவற்றைக் களைந்திட முனைய வேண்டும்; அதற்காகப் பிரிவினைவாதிகளும் உணரும் வகையில்—நம்பும் வகையில்—அவர்களோடு கலந்து பேசிட வேண்டும்; அதன் மூலம் ஒருமைப்பாட்டினை உருவாக்கிட வேண்டும்.

அதனை விடுத்து நோயின் மூலத்தை அறிந்திடாமல் சிகிச்சை செய்யத் தொடங்கிடும் 'அரை வேக்காடு' மருத்துவராக—நுனிப்புல் மேய்வோராகச் சிலர் அள்ளி வீசுகின்றனர் வாதங்களை.

அவர்களுடைய பட்டியலிலே நமக்கென்று ஒரு தனி இடம் பிடித்துக் கொள்ளும் தணியாத வேட்கையோடுதான் திரு பக்தவத்சலம் தரம் என்பதைத் தள்ளி வைத்துவிட்டுச் சாடினார் எங்களை.

அவர் பேச்சினைக் கேட்டதும்—

என் வழக்கமான இயல்பு என்னை இருக்கையில் அமர்ந்திருக்க விடவில்லை.

எழுந்தேன்; இப்படி எதிர்ப்புக் குரல் எழுப்பினேன்:

...நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே இது வரையில் பேசிய கனிவான மொழிகளுக்கு மாறுகச் சூதாடிகள்—விபசாரிகள்—என்று உதாரணங்களைக் காட்டியது வருந்தத்தக்கதாகும்.

"அமைச்சருக்குச் சுட்டிக் காட்டுகிறேன்: பஞ்சாபில் சீக்கிய மாநிலம் கேட்டுக் கத்தி தூக்கிய மாஸ்டர் தாராசிங்கைக் கூப்பிட்டு டில்லியிலே பேசினீர்களே அது போல் எங்களை அழைத்து பேசியிருக்கக் கூடாதா? என்று தான் நாங்கள் கேட்கிறோம்."

நான் இவ்வாறு சட்ட மன்றத்திலே எடுத்து வைத்திட்ட கருத்தினை ஏற்றுக்கொள்ளக் கூடிய இதய முதிர்ச்சி—அரசியல் நடு நிலைமை—அன்று திரு பக்தவத்சலம் அவர்களுக்கோ, அவர் சார்ந்திருந்த ஆளும் காங்கிரசுக்கோ இல்லை.

ஆனால் ஒரு பெரியவர்—தொழிலாளர்களுக்குத் தோழராகப் பணியாற்றியவர்—இலங்கையிலே இந்தியத் தூதுவராகவும் இருந்தவர்—அப்போது கேரள மாநிலத்தின் ஆளுநர் பொறுப்பினை ஏற்றிருந்தவர்—என்னுடைய வாதத்தில் உள்ள நியாயத்தின் பக்கம் தம்முடைய நேசக் கரத்தினை நீட்டினார். அதுவும் சென்னைக்கு வந்து ஆகஸ்டு 31-இல் இராயப்பேட்டை இளைஞர் சங்கக் கூட்டமொன்றில் பேசும் பொழுது இவ்வாறு குறிப்பிட்டார்.

''.....விரும்பாத ஒன்றை (இந்தியை) மக்கள் மீது திணிக்கக் கூடாது. மாநிலங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் இன்றி இந்தியா முழுவதும் தொழில் வளம் சீராக வளர்பட வேண்டும்.

''மற்றவர்கள் மீது கசப்புணர்ச்சியோ சுடு சொற்களோ வீசாமல் கண்ணியத்துடன் மற்றவர்களின் உள்ளுணர்வுகளையும் அறிந்து கொள்ள முயல வேண்டும்.

''இப்பேருண்மைகளை மறந்துவிட்டு நம்முடைய கருத்துக்களுக்கு மாறுபட்டவர்களை நாம் அழிக்க முற்படுகிறோம்.

''தி. மு. கழகத்தினரிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. ...அவர்கள் விரும்பும் பிரிவினை ஒருக்கால் ஏற்படுவதாகக் கொண்டால் நாம் இதுகாறும் அனுபவித்து வரும் பல இன்பங்களை இழக்க நேரிடும். இது பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை அவர்களுடன் உட்கார்ந்து பேசி அறிய விரும்புகிறேன்.

''உடன்பாடு காண்பதிலும் தீர்வு காண்பதிலும் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு.''

—இப்படி மனந்திறந்து அன்று பேசியவர் பிறகு இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த திரு வி. வி. கிரி அவர்கள்தான்!

எந்தச் சிக்கலாக இருந்திட்டபோதிலும் எல்லாத் தரப்பினரும் உட்கார்ந்து பேசி உடன்பாடு காணவேண்டும் என்பதிலே அன்றைக்கு மட்டுமல்ல; என்றைக்குமே திடமான உறுதியும் முழுமையான நம்பிக் கையும் கொண்டதுதான் தி. மு. கழகம்! இதைத் தான் அன்று சட்ட மன்றத்திலே திரு பக்தவத்சலனுருக்குப் பதிலாக எடுத்துச் சொன்னேன்.

இன்றைக்குப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட்ட நிலையில் — ஆனால், பிரிவினைக்குரிய காரணங்கள் தொடர்ந்து வருவதைக் களைந்தெறிய வேண்டும் என்னும் பெரு நோக்கோடு 'மாநில சுயாட்சி'க்காகக் குரல் கொடுத்திடும் வேளையில்—தி. மு. கழகம் வற்புறுத்த விழைகின்ற முறையான நெறியும், 'உட்கார்ந்து பேசி உடன்பாடு காண்போம்' என்பதுதான்.

இதனை ஏனை சிலர் உணர மறுக்கிறார்கள். சிலரோ உணர்ந்தும் உணராததுபோல் நடிக்கிறார்கள்.

தஞ்சை, திருச்சி, தென்னற்காடு மாவட்டங்கள் அடங்கிய சோழ மண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு 1963 ஆகஸ்ட் 25-இல் தஞ்சாவூரில் கோலாகலமாக நடந்தேறியது.

திருமதி சத்தியவாணிமுத்து மாநாட்டுத் தலைவர். திரு. கே. ஏ. மதியழகன் மாநாட்டுத் திறப்பாளர்.

நெல்லை, மதுரை, இராமநாதபுரம், குமரி மாவட்டங்களும் கேரளப் பகுதிகளும் அடங்கிய பாண்டிய மண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு செப்டம்பர் 22-ஆம் நாளில் திருநெல்வேலி—பேட்டையில் எழுச்சியோடு நடைபெற்றது.

மாநாட்டுத் தலைவர் திரு ஏ. கோவிந்தசாமி, மாநாட்டுத் திறப்பாளர் திரு ப. உ. சண்முகம்.

இரு மாநாடுகளிலுமே மிக நீண்ட ஊர்வலங்கள் மெத்த மகிழ்ச்சி அளித்திடும் வகையிலே—புறநானூற்றுக் காலத்துப் போர் மறவர்களின் அணி வகுப்பினை நினைவுபடுத்திடும் விதத்திலே—கண்கொள்ளாக் காட்சியாக விருந்தளித்தன.

அண்ணாவும் மற்ற கழக முன்னணியினரும் எழுச்சியுரைகள் ஆற்றினர். விளக்கம் பல தந்தனர். என்னுடைய வரவேற்பு உரையும் இருந்தது.

இரு மாநாடுகளின் முடிவிலும் என்னால் தீட்டப் பெற்ற 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' நாடகமும், தம்பி மாறனின் 'வஞ்சியும் காஞ்சியும்' ஓரங்க நாடகமும் சிவகங்கைச் சேதுராசனின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இதற்கிடையே என் இதயத்தையே குலுங்கிடச் செய்த நிகழ்ச்சி ஒன்றும் நடந்துவிட்டது.

தமிழகத்திற்கு மட்டுமின்றி இந்தியப் படவுலகுக்கே முன்னோடி என்று சொல்லத்தக்க வகையில் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் பட நிறுவனத்தைத் தோற்றுவித்துத் தமிழ்ப் படத் திரையுலகின் தந்தை என்னும் பெருமை பெற்றிருந்த திரு டி. ஆர். சுந்தரம் அவர்கள் மாரடைப்பு வந்து திடீரென்று இயற்கை எய்திவிட்டார்.

தமிழில் மட்டுமின்றித் தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சேர்ந்து அது வரை 96 படங்கள் எடுத்துத் திகைப்பூட்டும் சாதனைகள் பல புரிந்த திரையுலக மேதை அவர்.

இன்றைக்குக் கலையுலகிலே உள்ள எத்தனையோ நடிகர்கள், தொழில் நுணுக்க வல்லுநர்கள் அவருடைய படப் பாசறையிலே பயிற்சி பெற்று வெளி வந்தவர்கள்தான். பதப்படுத்தப்பட்டுத் தலையெடுப்பவர்கள்தான்.

அவருடைய ஆற்றல்—அறிவுக் கூர்மை—அஞ்சாமை—நெஞ்சத் தூய்மை பற்றி முன்பே நான் சொல்லியிருக்கிறேன்.

எல்லாவற்றையும்விட ஒருவருடைய வயதைப் பாராமல், அவருக்குள்ள வசதியைப் பாராமல்—நிறமை ஒன்றினையே பெரிதென மதித்திட்ட அவர்தம் அருங்குணத்தை என்னால் மறக்கவே இயலாது.

அதுவும் என்னைப் பொறுத்த மட்டில் அவர் பொழிந்திட்ட அன்பு மழை தந்திட்ட தனி மரியாதை இன்றைக்கும் என் இதயத்தைப் புல்லரிக்கச் செய்வனவாகும்.

91

காமராசர் திட்டம்

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது திரு காமராசர் புரிந்த தியாகத்தினை அண்ணாவோ தி. மு. கழகமோ குறைத்து மதிப்பிட்டதில்லை. தியாகிகளை மதிப்பதில்—அவர்களுக்கு ஆக்க பூர்வமான உதவிகளையெல்லாம் அளிப்பதில் கழகமோ கழக அரசோ என்றைக்குமே பின் வாங்கியதில்லை. அது மட்டுமல்ல; காங்கிரஸ் காரர்களே வியந்திடும் வண்ணம் காங்கிரஸ் கட்சியையும் மிஞ்சிடும் வகையில் தியாகச் செம்மல்களின் சிந்தையைக் குளிர்வித்த ஒரே அரசு —கழக அரசு! அதன் சீர்மிகு திட்டங்களும் எண்ணற்றவை.

இப்படி என்ன தான் கழகமும் கழக அரசும் தியாகச் சுடர்களை ஏற்றிப் போற்றினாலும் எங்களைத் தூற்றித் திரிப்பதே காமராசருக்கு வாடிக்கையான தொழிலாகும். எங்களைத் தொலைத்துக்கட்ட வேண்டுமென்பதே அவர் விடும் இலட்சிய மூச்சாகும்!

இதற்காக அவர் எந்த அரசியல் நாடகமும் ஆடுவார்; எத்தகைய பகையோடும் கூடுவார்.

இது இன்றைக்குக் காணப்படும் காட்சி மட்டும் அல்ல; பத்தாண்டுகளுக்கு முன்னரே நடத்தப்பட்ட ஒத்திகையும் ஆகும்.

அப்போது 1963 ஆகஸ்டு திங்களில் திரு காமராசர் ஒரு திட்டத்தை அளித்திட்டார். அதன்படி—

'மத்தியிலும் மாநிலங்களிலும் அமைச்சர்களாகப் பணிபுரிந்து வரக் கூடிய வயதில் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் தம்மிச்சையாக அமைச்சர் பதவிகளைத் துறந்துவிட்டு மீண்டும் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த வேண்டிய பணியினை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தைக் கண்டதும் காங்கிரஸ் கூடாரத்திற் குள்ளேயே எரிச்சல்கள் உமிழப்பட்டன. ஏளனங்கள் கொடிகட்டிப் பறந்தன. பொருமல்கள் புகை கக்கின. பொருமைகள் கொழுந்து விட்டு எரிந்தன.

இதற்காக எழுந்த விமரிசனங்களும் விளக்கங்களுமோ ஏராளமானவை.

சிலர் ''முதலமைச்சர் பதவியையே தூக்கி எறிந்துவிட்ட காமராசர் 'புதிய புத்தர்' அல்லவா?'' என்று உச்சிமேல் வைத்து மெச்சினர்.

ஆனால் ஒரு மாநில முதலமைச்சர் பதவியைவிட அன்றைக்கு அதிக மதிப்பு வாய்ந்திருந்த அகில இந்தியக் காங்கிரஸ் தலைமைப் பதவியையே அவர் அணைத்துக் கொள்ளப் போகிறார் என்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லைதான்!

வேறு சிலரோ 'இது உண்மையில் காமராசர் திட்டமல்ல; சென்னீனத்தின் வஞ்சகப் படைபெடுப்பால் நெஞ்சொடிந்து கிடக்கும் நேருவின் பலவீனத்தைப் புரிந்து கொண்டு அவருக்கு அடுத்த கட்டக் காங்கிரஸ் தலைவர்கள் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றிடத் தலைமறைவு வேலை செய்கின்றனர் அதனைத் தெரிந்து கொண்டுதான் நேருவே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார், காமராசர் வாயிலாக, என்று வாதிட்டதும் உண்டு.

இன்னும் சிலரோ 'தி. மு. கழகத்தில் பெருகி வரும் செல்வாக்கினைக் கண்டு பீதி அடைந்து விட்டார் காமராசர். ஆட்சி பீடத்திலேயே நாம் அமர்ந்திருந்தால் தம்முடைய கட்சிப் பீடம் கலகலத்துப் போய்விடும் என்று கண்டுகொண்டுவிட்டார் அவர். அதனால்தான் தி. மு. கழகத்தை ஒழிப்பதற்காகவே இந்தத் திட்டத்தைக் கொணர்ந்திருக்கிறார் காமராசர்' என்று சொன்னதும் உண்டு.

இந்தக் கூற்றிலே உண்மையில்லாமல் இல்லை என்று உணர்ந்திடும் வகையிலேதான் அந்தச் சமயம் முன்னாள் மத்திய உணவு அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குமிக்க தலைவர் களிலே ஒருவருமான திரு எஸ். கே. பாட்டீல் அவர்களுடைய பேச்சும் அமைந்திருந்தது.

1963 செப்டம்பர் 7-இல் பம்பாயில் அவர் இவ்வாறு தம் கருத்தினை வெளியிட்டிருந்தார்

''தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கு அதிகரித்து வருவதைக் குறித்துத் திரு காமராசர் கவலை அடைந்தார்

''தி. மு. கழகத்தின் கொள்கைக்கு மக்களின் ஆதரவு பெருகித் தனித் தமிழ்நாடு ஏற்படுவதில் அது வெற்றி பெறும் நாள் வந்து விடுமோ என அவர் எண்ணினார்.

''தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை முறியடிப் பதையே கருத்தில் கொண்டு திரு. காமராசர் தம்முடைய புதிய திட்டத்தை வெளியிட்டார்.

''அமைச்சரவையில் இருப்பதால் பொது மக்களுடன் நெருங்கிப் பழக முடியவில்லை என்பதை அவர் உணர்ந்தார். இதனால்தான் தமிழ் நாட்டில் காங்கிரசைப் பலப்படுத்தப் புதிய திட்டத்தை உருவாக்கினார்.

''திரு காமராசர் திட்டத்தைத் தீர்க்கமாக ஆலோசித்தோம். தமிழ் நாட்டிற்கு நன்மை பயக்கும் திட்டம் இந்தியாவுக்கும் நலம் அளிக்கும் என்று முடிவு செய்தோம்.''

—திரு. எஸ். கே. பாட்டீலின் இந்தக் கூற்றிலிருந்தே, கழகத்தை அழித்தொழித்திடக் கருவறுத்திட எந்த அளவிற்குக், கங்கணம் கட்டிக்கொண்டார் காமராசர் என்பது தெளிவாகத் தெரிகிறது அல்லவா?

மக்களாட்சி நெறி என்பது ஒரு அழகு மிக்க மலர்த்தோட்டம்; அதிலே எத்தனை விதமான கருத்துக்கள் வேண்டுமானாலும் எழில் வண்ண மலர்களாகப் பூத்துக் குலுங்கிடலாம் —புன்னகை சிந்திடலாம்

ஆனால், அங்கே ஒரே ஒரு மலர் தான்—கட்சி தான்—சிரிக்கலாம். செழிக்கலாம் என்றால் அது உண்மையான ஜனநாயக உணர்வாகுமா?

இல்லை, அது கடைந்தெடுத்த சர்வாதிகார வெறி!

அந்த வெறிப் போக்கிற்கு இரையாகிவிட்ட ஜனநாயக வேடதாரிகளே தி. மு. கழகத்தை அழித்தொழிக்கும் 'திருப்பணி'யை மேற்கொண்டனர். எப்படியெல்லாமோ திட்டங்களும் தீட்டினர்! சட்டங்களும் செய்தனர்.

கழகமோ அந்தக் 'காழ்ப்பு நெஞ்சங்கள்' பற்றிக் கவலைப் பட்டிடவில்லை கடுகளவு கூட! தன்னுடைய இந்தி எதிர்ப்பு அறப்போருக்கான ஆயத்தங்களை முடுக்கிவிட்ட வண்ணம் இருந்தது முழு மூச்சாக!

92

அண்ணு வழங்கிய வாளும் கேடயமும்

அறிஞர் அண்ணுவும் நெல்லையில் நடைபெற்ற பாண்டி மண்டல இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே—

''போராட்ட இரயில் புறப்பட்டுவிட்டது: இந்தி ஆதிக்கம் நீடிக்கிறவரை இடையிலே அது நிற்காது!'' என்று முழக்கமிட்டார்.

அத்துடன் அவர் நின்றிடவில்லை.

களம் நோக்கிச் சென்றிடும் காளைக்குப் புறநானூற்றுத் தாய் நெற்றியிலே திலகம் இட்டு விடை கொடுப்பதைப் போல—தேனி நகரில் நிகழ்ந்த சிறப்பு மிக்க விழா ஒன்றிலே போராட்டக் குழுத் தலைவனுகிய எனக்கு ஒரு வீர வாள் பரிசளித்தார்.

பாண்டி மண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு நெல்லையிலே நேர்த்தியோடு நடந்து முடிந்திட்டதற்கு மறுநாள்தான்—

1963 செப்டம்பர் 23-இல் வெள்ளி வீரவாளையும் கேடயத்தையும் பரிசுகளாக எனக்கு அளித்தது அண்ணுவின் அருமைக்கரம்.

தேனியில் நடைபெற்ற அந்தப் பரிசளிப்பு விழாவிற்கு, இலட்சிய நடிகர் இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

இரும்பு நிறம், அதே போல் நெஞ்சம், எடுப்பான தோற்றம் வரும்பகை முடித்திடும் வரிப்புலி வீரம் படைத்து மறவர் குல மாணிக்கமாய்த் திகழ்ந்திட்டவரும், மரணத்தின் மடியிலே திடீர் என்று விழுந்திட்டவருமான நண்பர் மா. இராசாங்கமும் அந்த விழாவிலே மற்றத் தோழர்களுடன் சேர்ந்து எனக்குப் பாராட்டு மலர்களைச் சொரிந்திட்டார். அந்தக் காட்சி இன்றைக்கும் என் நெஞ்சிலே சோக அலைகளை எழுப்புகின்றது.

ஓர் இலட்சியவாதிக்கு அழகு-தனக்கென்று எந்தப் பலனையும் எதிர்பார்ப்பது அல்ல; எத்தகைய பரிசுக்கும் ஏங்குவதும் அல்ல.

மழையைப் பொழிந்திடும் விண்ணகமோ, பழத்தை வழங்கிடும் பசுமரமோ, பலனைக் கருதிப் பணியாற்றுவதாகப் பகர்ந்திட முடியுமா! அப்படித்தான் ஓர் உண்மையான தொண்டனும் உழைத்திடுவான். உயிரையும் கொடுத்திடத் துணிந்திடுவான்-சூழ்நிலை அழைத்திடும்போது.

ஆயினும், ஒட்டப் பந்தயத்திலே ஓடுகிறவர்களுக்கு உறசாகமூட்டிட- உத்வேகம் தந்திட- மற்றவர்கள் 'அப்...அப்' என்று ஆங்கிலத்திலே உரக்க முழங்குவதில்லையா?- அப்படித்தான் ஓர் இயக்கத்திலே ஒரு சிலருக்கு அவர்கள் மேலும் முனைந்து செயலாற்றுவதற்காக மற்றவர்கள் பரிசினை அளிப்பதும்- பாராட்டி மகிழ்வதும்.

அந்த முறையிலே தான் எனக்கும் தேனியிலே பரிசுகள் வாளாகவும் கேடயமாகவும் வழங்கப்பட்டதாக நான் கருதினேன். அதையே தான் அந்த விழாவிலே அப்படி நான் சொன்னேன்.

...''இந்த வீர வாளும் கேடயமும் நான் செய்து முடித்த காரியங்களுக்காக அளிக்கப்பட்டதாக நான் கருதவில்லை. நான் செய்ய வேண்டிய காரியங்களுக்காக இவற்றை அச்சாரமாகக் கொடுத்ததாகவே நான் கருதுகிறேன்.

''வெள்ளி வாளை அச்சாரமாகக் கொடுத்தால், 'நீ செய்ய வேண்டிய செயல்களை முடித்த பிறகு, தங்கவாள் அல்லவா பரிசு கேட்பாய்?' என்று நீங்கள் யாரும் எண்ணிட வேண்டாம்.

'இந்தி எதிர்ப்புப் போரில் நான் களச்சாவை அடைந்து என் உடல மீது அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணீர் வடிக்கின்ற காட்சியை விடப் பெறும் பேறு எனக்கு உலகிலேயே வேறு ஒன்றும் கிடையாது.''

அந்த விழாவிலே அண்ணா என்னைப் பற்றி இயம்பியவற்றை எல்லாம் இங்கே எடுத்து வைத்தால்-நினைவு கூர்ந்தால்- அதனை தற் புகழ்ச்சி என்று சிலர் தவருகக் கருதிடக் கூடுமோ என்கிற தயக்கம்- கூச்சம்- அச்சம்- எனக்கு இப்போது ஏற்படாமல் இல்லை.

என்ருலும், இட்டுக்கட்டி எதனையும் நாம் சொல்லிடவில்லையே என்கிற உணர்வும், தொண்டர்களை மதித்துப் போற்றுவதிலே அண்ணாவுக்கிருந்த உண்மையான விரிந்து பரந்த உள்ளம் மற்றவர்களுக்கும் விளங்கட்டுமே என்கிற வேட்கையும் அவருடைய உரையிலிருந்து சிலவற்றையாவது எழுதுமாறு என்னைத் தூண்டுகின்றன.

அவர் சிந்திய சொற்களிலே சில

''...என்னைப் பொறுத்தவரையில், கருணாநிதியின் தொண்டிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி எதுவென்றால் திருவண்ணாமலை வெற்றிக்கு உழைத்தது மட்டுமல்ல: மாநகராட்சி நம் வசம் ஆக, அவர் ஆற்றிய தொண்டும் அல்ல: அவர் சிறு வாலிபராகக் கொள்கை பிரச்சாரம் நடத்திய போது, அவர் பிரச்சாரத்தால் முறுக்கேறிய காங்கிரசார் அவரை அடி அடியென அடித்து, 'ஆள் தொலைந்து விட்டான்' எனக் கருதும் அளவிற்கு உதைத்து, 'காங்கிரசுக் கொட்டத்

தை அம்பலப்படுத்தும் போக்கிரிச் சிறுவனை ஒழித்து விட்டோம்' என இரத்தம் பீரிடும் அளவிற்கும் புதுவையிலே காட்டுமிராண்டித்தனமாக வெறித்தனமாக தாக்கிய சம்பவம் தான்!

'ஒரே குடும்பத்திலுள்ள நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலும் சிறப்பானவர்கள். நல்ல தமிழ் பேச வேண்டுமா? நாவலர் இருக்கிறார்; உருக்கமாக பேச வேண்டுமா? கருணாநிதி இருக்கிறார்; சண்டமாருதம் போலப் பேச வேண்டுமா? சண்முகம் இருக்கிறார்; மாணவர்களுடைய தொடர்பு வேண்டுமா? மதியழகன் இருக்கிறார்.

''இதையேதான் கருணாநிதி, தான் வீரவாளைப் பெற்ற போது 'நான் ஒருவன் மட்டும் இந்த வாளைப் பெறத் தகுதி பெற்றவன் அல்ல; பலர் இருக்கிறார்கள்' என்றார்.

''வண்ணங்கள் பல இருந்தாலும், அந்த வண்ணங்கள் மூலம் நல்ல ஓவியத்தை உருவாக்க ஓவியப் புலவன் தேவை. அது போல ஒரு கட்சியில் பலதரப்பட்டவர்கள் இருந்தாலும், அவர்களைச் சிறப்பாகச் செயல்பட வைக்கும் திறமையுள்ளவர்கள் வேண்டும். தம்பி கருணாநிதி அந்தச் சிறப்புக்களை நன்கு பெற்றவர்களில் ஒருவர்.

''கலைத்துறையிலே கருணாநிதி பெற்ற புகழ் கொஞ்சநஞ்சமல்ல; 'பராசக்தி' மூலம் அவர் அடைந்த புகழோடு மேலும் மேலும் பல திரைபடங்களாலும் அவர் புகழடைந்தார். கருணாநிதி அந்தப் புகழை நம்பி அந்தத் துறையிலேயே சென்றிருந்தால் பணத்தோடும் வாழலாம்; பகட்டோடும் வாழலாம். ஆனால் அவர் கொண்ட இலட்சியத்தை மறந்து விட வில்லை.

''சர்க்கசுக்காரன் உயரத்திலே விளையாடினாலும் பூமியிலே தான் இறங்க வேண்டும். விளையாடும் பொழுது கூட அவன் பூமியைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பான். பூமியை பார்க்காமல் மேலே பார்த்துச் செல்பவன் பபூன் தான்! அவன் தான் தடுமாறி விழுவான். அந்த ரகத்தைப் போன்று அல்லாது கழகத்தை மறவாது- எந்தப் புகழுக்கும் மயங்காது பணியாற்றுபவர் கருணாநிதி!"

என்னைப் பாராட்டிட அண்ணா இவ்வாறு சொன்னார் என்றாலும் பின்னாலே, வெளிச்சம் போடக் கூடிய சில விந்தைப் பிறவிகளைப் பற்றி, எத்துணைத் தொலைநோக்கோடு, தீர்க்க தரிசனத்தோடு அன்றே அவர் அடையாளம் காட்டி விட்டார் என்பதை எண்ணி இப்போது எண்ணமல் இருந்திட முடியவில்லை.

ஏனெனில் பூமியைப் பார்த்திடாமல் மேலேயே அண்ணாந்து நோக்கிச் செல்லும் சர்க்கஸ் கூடாரத்தின் 'பபூன்'களாக இன்று அரசியலிலே சிலர் நாடகம் ஆடிடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோமே!

அண்ணாவின் பிறந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் மறக்க வொண்ணாத சிறப்பினையுடையது தான். எனினும் 1963-ஆம் ஆண்டு வந்த அவருடைய பிறந்த நாளோ இரண்டு வகைகளிலே குறிப்பிடத் தக்கதாகும். என்னே- எங்கள் குடும்பத்தைப் பொறுத்த மட்டில்.

ஏனெனில் அந்த செப்டம்பர் 15-ஆம் நாள் முதல் 22-ம் நாள் வரை 'இந்தி எதிர்ப்பு வாரம் நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது.

எனது தமக்கை மகன் முரசொலி மாறன், குடந்தை திரு கல்யாண சுந்தரம் அவர்களின் செல்வி மல்லிகாவை வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டதும் அதே செப்டம்பர் பதினேந்தில் தான்.

மாறனின் திருமணம் சென்னை 'ஆபட்ஸ்பரி' மாளிகையில் சிறப் பாக நடந்தேறியது. அண்ணா அவர்களே மணவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார்கள். கழக முன்னணியினர் மடடுமின்றி, மாற்றுக் கட்சிகளைச் சார்ந்திட்ட மூதறிஞர் ராஜாஜி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்ற முக்கியத் தலைவர்களும், காங்கிரஸ் அமைச்சர்கள் சிலரும் கூடத் திருமணத்திற்கு வருகை புரிந்து வாழ்த்துரை வழங்கினர்.

பொது வாழ்விலே கட்சிப் பற்றுல், கருத்து வேறுபாடுகளால் மனமாச்சிரியங்களை, காழ்ப்புணர்ச்சிகளைக் காட்டி கொள்ள நேர்ந்திட் டாலும், தனி வாழ்வில் உள்ள பிணைப்புகளை- உறவுகளை- வளர்த்துக் கொள்வதற்கு அரசியல் ஈடுபாடு ஒரு குறுக்குச் சுவராக எழுந்திடத் தேவையிலலை என்பதனை எடுத்து காட்டுவதாகவே அமைந்திருந்தது மாறனின் திருமணம்.

கழகத்தை அழித்திட வேண்டும் என்னும் உள்நோக்கததோடு அதே சமயம், அகில இந்திய அரசியலிலே தமக்கென்று ஓர் இடத்தி னைப் பிடித்திட வேண்டும் என்கிற ஏக்கத்தோடு திரு காமராசர் கொண்டு வந்த திட்டத்தினால், மத்திய-மாநில அரசுகளிலிருந்து பல அமைச்சர்கள் பதவியைத் துறந்திடும் பரிதாபத்திற்கு ஆளாயினர். சிலர் வேண்டுமென்றே பலிகடாக்களாக்கப்பட்டனர்.

அந்த அரசியல் சூழ்ச்சி தமிழகத்திலும் அமுல் செய்யப்பட்டது.

1963-செப்டம்பர் 24-இல் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சி, முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகும் திரு காமராசரின் இடத் திற்குத் திரு பக்தவச்சலத்தைத் தேர்ந்தெடுத்தது. ஏகமனதாக அல்ல: போட்டிக்கிடையேத் தான்!

''எங்களுக்குப் பதவி என்றுலே எட்டிக்காய்! அதனால் தான் அதனை எட்டி உதைக்கிறோம்'' என்று வெளியிலே வீராப்புப் பேசி வேடமிட்டுத் திரிந்திடும் பலர், நாற்காலியைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள அன்று பட்டபாட்டினைப் பார்த்து நாடே கெக்கொலி கொட்டிச் சிரித்தது.



ஆறு மாநிலங்களில் முதல்வர்கள் காமராசர் திட்டத்தின் கீழ் பதவியிலிருந்து இறங்கினர். அல்லது இறக்கப்பட்டனர். பதவியிலி ருந்து விலகியவர்களோ தங்களுக்குப் பின்னல், கட்சியினுள்ளே தங்கள் குழுவை சார்ந்தவர்களே முதலமைச்சர்களாகக் கோலோச்ச வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். அதற்காக குடுமிப்பிடிச் சண்டையும் நடத்தினர். மத்தியப் பிரதேசம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் தலைமை பதவிக்கெழுந்த போட்டிகளை தவிர்த்திடவே முடியவில்லை.

இந்தப் போட்டி முற்றுந்துறந்த முனிவராகப் போற்றப்பட்ட காமராசரால் வளர்க்கப்பட்ட தமிழகக் காங்கிரசிலும் தலையெடுக்கத் தவறிவிடவில்லை.

இத்துணைக்கும் திருமதி இந்திரா காந்தி அம்மையாரே அகில இந்தியக் காங்கிரசின் சார்பில் அங்கே வந்திருந்தார், முதலமைச்சர் தேர்தலைக் கண்காணித்திட; திரு. பக்தவத்சலனாரின் பெயரைத் திரு. காமராசரே முன் மொழிந்திடவும் செய்தார்.

என்ருலும் திடீரென்று ஏற்பட்டு விட்டது போட்டி; திரு ஆர். வீ. சாமிநாதனே பக்தவத்சலனாரை எதிர்த்துத் தோற்றவர்.

இந்தியா முழுவதிலும் காங்கிரசுக் கூடாரத்திற்குள்ளே இப்படிப் போட்டியைப்- புகைச்சலைக் கிளப்பி விட்டது தானே, 'காமராசர் திட்டம்' தந்திட்ட கைகண்ட பலனுகும்!

அப்போது 'இந்து' ஏட்டில், அதன் டெல்லி செய்தியாளர் தீட்டியிருந்த அரசியல் திறனாய்வுக் கட்டுரையொன்றில் காரை உதிர்ந்து- கூரையும் சிதைந்து கொண்டிருந்த காங்கிரஸ் வீட்டைப் பற்றிச் சுருக்கமாகப்- பொருத்தமாக ஒரே வரியில் குறிப்பிட்டிருந்தது என் நினைவிற்கு வருகிறது:

"காங்கிரசுக் குளவிக் கூட்டைக் காமராசர் திட்டம் கலைத்து விட்டது!" என்பதே அந்த வரி.

93

இரண்டாந்தரக் குடிமக்களா?

இந்தியைத் திணித்து அதன் மூலம் தமிழக மக்களை இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கிட எப்படி இங்கே இந்தி வெறியர் துடித்துக் கொண்டிருந்தார்களோ அப்படித்தான் இலங்கையில் தமிழர்களின் வாழ்வையே பாழ்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதாக - திட்டங்கள் தீட்டுவதாக அப்போது செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

இந்தியைக் கட்டாயமாகப் பயின்று அதிலே சில தேர்வுகளில் வெற்றி பெற்றுல்தான், மத்திய அரசில் வேலை பார்க்க உத்தியோக உயர்வும் உண்டு என்கிற விதிகளை இங்கே புகுத்த முற்படுவதைப் போலவே இலங்கைவாழ் தமிழர்க்கும் சோதனை பல ஏற்பட்டன ஈழ நாட்டிலும்.

சிங்களம் தெரிந்தால்தான் தமிழர்களுக்கு அரசாங்கத்திலும் மற்ற நிறுவனங்களிலும் வேலை என்கிற கட்டாய நிலைமையை அன்றைய சிரிமாவோ பண்டாரநாயகா ஆட்சி உருவாக்கிட முனைந்திருந்தது.

இலங்கை அரசியலில் தமிழுக்குக் கிடைத்திட வேண்டிய நியாயமான இடத்தினை - உரிமையினை அடியோடு பறித்தெறிந்துவிட்டு சிங்களம் ஒன்றையே ஆட்சி மொழி ஆக்கிடவேண்டும் என்பதே அங்குள்ள சிங்களவர்களின் திட்டம். அந்த மொழித் திணிப்பினை எதிர்த்து அங்கே தமிழரசுக் கட்சி அக்டோபர் முதல் நாள் போராட்டம் துவங்கிற்று.

சிங்களம் அந்த நாட்டின் ஆட்சி மொழி ஆவது குறித்து இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லைதான். அதே சமயம் குமரியாறு பாய்ந்திட்டதெனக் கூறப்படும் பன்னெடுங்காலத்திலிருந்தே திராவிட பூபாகத்தின் ஒரு பகுதியாகத் - திராவிட மொழிகளில் ஒன்றுன தமிழ் தழைத்திட்ட-தமிழினத்தால் தழைத்திட்ட இலங்கை மண்ணில் தமிழும் இன்னொரு ஆட்சிமொழியாக ஏன் ஆகக் கூடாது என்பதே நமது கேள்வி; சிறுபான்மையோர் ஆகிவிட்டாலும் சீரோடு வாழ்ந்திட்ட ஈழத் தமிழர்களின் எதிர்காலம் இந்த அளவுக்கு வேரோடு பிடுங்கப் படவேண்டுமா என்பதேநமது வேதனைக் குரல்.

ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட இன்னொரு நாட்டுக்கு உரிமையில்லைதான். ஆனால், உலகிலே எந்த நாட்டிலாவது சிறுபான்

மையினர் அநீதிக்கு ஆளாக்கப்படும் பொழுது அவர்களுக்குக் குரல் கொடுப்பதை ஐக்கிய நாடுகள் மன்றமே ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கிறது; அதற்காக ஒரு குழுவையும் வைத்திருக்கிறது.

1963 - இல் தமிழுக்கு இருந்த உரிமை அங்கே பறிக்கப்படுகிறது என்பதனை அறிந்ததும் கழகம் பதறியது- கண்டனக்கணையும் தொடுத்தது அந்த அடிப்படையில்தான்.

அதே சமயம் தமிழ்நாட்டின் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்த காங்கிரஸ்காரர்களோ ஈழத் தமிழர்களின் இடுக்கண்களைப் பற்றி எள்ளளவும் கவலைப்படவில்லை.

அவர்களுக்கென்ன? தமிழகத்தில் தமிழுக்குக் குழி வெட்டும் முயற்சிகளையே தடுக்க முனையாதவர்கள் - இந்தித் திணிப்பால் தமிழினமே இரண்டாந்தரக் குடிமக்களாகி விடுவார்களே என்பதனை எண்ணிப் பாராதவர்கள் - எடுத்துச் சொன்னாலும் கேளாதவர்கள் - ஏளனம் பேசியவர்கள் - ஈழத் தமிழர்களுக்குத்தானே தங்கள் இரக்கத்தைக் காட்டிடும் இதயத்தைப் பெறப் போகிறார்களா? அதனை நாம் எதிர் பார்க்கத்தான் முடியுமா?

நாட்டுப் பிரிவினைப் பிரச்சாரத்தைத் தடை செய்யும்வகையில் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்ட 16 - ஆவது திருத்த மசோதாவுக்குக் குடியரசுத் தலைவர் 1963 அக்டோபர் 6 - இல் ஒப்புதல் அளித்து விட்டார் என்கிற செய்தி வெளியாயிற்று.

இந்தச் சட்டத்தைப் பற்றிக் கழகத்தின் பொதுக்குழுவும் நீண்ட தொரு விவாதத்தினை நடத்தி நடைமுறைக்கொத்த ஒரு முடிவிற்கு அது வந்திருந்தது.

சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் - அப்படிக் கொண்டு வருமாறு தூண்டியவர்கள் - எத்தகைய உள் நோக்கத்தை உடையவர்கள் என்பதனைத் தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தது கழகம்.



அவர்களது நெஞ்சக் கோப்பையிலே நிரம்பி வழிந்து கொண்டிருந்த வஞ்சனையெல்லாம், ஏழை, நடுத்தர, பாட்டாளித் தமிழினத்தின் ஒரே ரட்சகனுக, பாதுகாவலனுக - ஒளியினைச் சிந்தி உயர்ந்து கொண்டிருக்கும் உதயசூரியனும் தி. மு. கழகத்தை அடியோடு அழித்தொழித்து விட்டுப் பிறகு தட்டிச் கேட்பார் யாருமில்லை என்கிற தறுக்கோடு - செருக்கோடு காலா காலத்திற்கும் கோலோச்சிக் கொண்டிருக்கலாம் என்கிற பேராசையே.

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பது பாமர மக்களும் நன்ருக அறிந்து வைத்துளள பால பாடம்.

அத்துடன், ஒருபுறம் செஞ்சீனமும் மறுபுறம் பாகிஸ்தானும் ஆக்கிரமிப்பு வெறியோடு இந்தியாவை அச்சுறுத்திக் கொண்டிருப் பதையும் கழகத்தால் அலட்சியப்படுத்திட முடியவில்லை.

அண்ணனும் தம்பியும் மனவேறுபாடு கொண்டு, பாகப் பிரிவினை செய்து கொள்ளுவது வேறு; மாற்ருனுக்கு இடம் கொடுத்து மானத்தையே இழப்பது வேறு. எனவே, இந்தியாவின் பாதுகாப் பிற்கே முதலிடம் அளித்து, செஞ்சீனம் - பாகிஸ்தான் இவற்றின் தாக்குதலைத் தகர்த்திடவும், சமதர்ம இந்தியாவைச் சமைத்திடவும் ஒருமைப்பாடு இன்றியமையாதது என்பதனையும் உணர்ந்து, மாறு பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்பக் கொள்கையை மாற்றிக் கொள்ள முன் வந்தது கழகம்.

அதுவரை பிரிவினை கோரியது என்பதற்காகவே கழகத்தைப் பழித்துப் பேசிப் பகைமை பாராட்டியவர்கள், கழகம் பிரிவினையைக் கைவிட்டு விட்டது என்றதுமே தங்களுடைய ஏச்சையும் பேச்சையும் வேறு தொனியிலே திருப்பிவிட்டுத் திருப்தி கொண்டனர்.

''தி. மு. கழகம் பிரிவினையைக் கைவிடலாமா?'' என்று, தாங்கள் என்ன கேட்கிறேம் என்பதை விளங்காமலே விஞ எழுப்பினர். ''பிரிவினையைக் கைவிடாமல் தடைச் சட்டத்தை எதிர்த்தல்லவா போராட வேண்டும்?'' என்று தூண்டியும் விட்டனர்; தூபமும் போட் டனர்.

அவர்களுக்கு எப்படியாவது கழகம் அழிந்து விடும் என்கிற ஆசைக் கனவு; அது கலையப் போகிறதே கழகத்தின் புதிய முடிவால் என்கிற மாளாக்கவலை. எனவே கணைகளைத் தொடுத்தனர், புதிய புதிய காரணங்களை - வாதங்களை - எழுப்பிக்கொண்டு.

அவர்களுக்கெல்லாம் ஆணித்தரமாக விளக்கங்களை அள்ளி வீசினர் அண்ணு:

''...கழகம் ஓர் அமைப்பாக இயங்க வேண்டுமென்ருல் இயங்கு வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்ட முறைப்படி மட்டுமே இயங்க முடியும். இல்லே என்ருல் தடைச் சட்டத்தை மீறுவதன் மூலம் கழகம் அழிக்கப்பட்டுப் போய்விட ஒருப்பட வேண்டும்.

,'...கழகத்தின் பிரச்சாரத்தை எதிர்த்து மாய்த்திட முடியாமல், கழகத்தைச் சமாளிக்க இந்திய அரசியல் சட்டத்தையே திருத்திட ஆட்சி யாளர் கூச்சத்தைவிட்டு, வெட்கத்தை விட்டுத் தயாராகி விட்டபோது- நாட்டின் நிலேமைக்கு ஏற்றபடி கழகம் தன் சட்ட திட்டத்தைத் திருத்திக் கொண்டு இயங்குவதில் தவறு என்ன இருக்க முடியும்? எனவேதான் கழகம் உடைபடாமல்—கழகத்தின் உருவம் அழிக்கப் படாமல்—கழகம் இயங்கும் வழியில் கழகச் சட்ட திட்டத்தை மாற்றிக் கொண்டு ஏதேச் சாதிகாரத்தை ஒழித்திடும் பணியில் ஈடுபட வேண்டும் என்ற முடிவு எடுக்கப் படுகிறது. 'ஏன் கழகம் தடையை மீறவில்லே?"

என்று கேட்பவர்களின் உள் எண்ணம் 'கழகத்தைச் சாகடிக்க வேண்டும்' எனபதுதான்.

''கழகத்தைக் கிணற்றிலே தள்ளிச் சாகடிக்க நான் விரும்பவில்லே பயம் அல்ல அந்தப் போக்குக்குக் காரணம், அளவற்ற பாசம்- பற்று - அந்தக் கழகத்திடம்! அது போலவே நாட்டு பாதுகாப்பிலும், ஒற்றுமையிலும்!

''தூண்டிலில் சிக்காத மீன் - வலேயில் விழாத மான் - ஆகியவை மீது அவைகளேப் பிடித்துத் தின்று விட எண்ணம் கொண்டிருந்தவர் களுக்குக் கோபம் கோபமாகத்தான் வரும்; இது இயற்கை!

''அரசியல் சட்டத் திருத்தம் காரணமாக - அதன் விளேவுகளேப் பற்றிக் கவலேப்படாமல் வீராவேச உணர்ச்சியால் மட்டும் உந்தப் பட்டுக் கழகம் செயல்படும் - உடைபடும் - அழிந்துபடும் - என்று காமராசரும் அவர் போன்ருேர் சிலரும் நம்பிக்கொண்டிருந்தார்கள். இப்போது நான் எடுக்கும் முடிவு கழகம் உருக்குலேயாமல் இருந்திட வழி செய்கிறது!''

தடைச் சட்டம் என்னும் கொடுவாளால் கழகத்தின் கழுத்தினே அறுத்து அதன் குருதிக் குளத்திலே நீச்சலடிக்கத் துடித்திட்ட 'குணுளர்' களுக்கு அண்ணு அறிவித்த கொள்கை மாற்றம் பெருத்த ஏமாற்றத்தையே கொடுத்தது.

அதனுல் அவர்களுடைய எரிச்சல் வேறு திசையில் திரும்பிற்று, எரிமலேயாக!

தாங்கள் மட்டுமே இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அத்தனை மாநிலங்களையும் ஆண்டிட வேண்டும் என்கிற அடங்காத ஆசையோடு—வேறு எந்தக் கட்சியுமே கோலோச்சிடக் கூடாது என்கிற குறிக்கோளோடு—கழகத்தைக் கருவறுத்திடச் தடைச் சட்டம் என்கிற பெயரால் சதித் திட்டம் தீட்டினார் அல்லவா காங்கிரசார்?

அந்த வஞ்சகப் போக்கினைக் கண்டு நெஞ்சங்குலைந்திடவில்லை—அஞ்சித் துவண்டிடவில்லை—கழகக் கண்மணிகள் என்பதனையே 1963 அக்டோபர் 13-இல் சென்னையில் கூடிய இந்தி எதிர்ப்புப் பொது மாநாடு தெளிவாக எடுத்துக் காட்டிற்று.

94

கோ. சு. மணி குடும்பத்திற்கு நிதியுதவி

மூன்று மண்டல மாநாடுகள் முறையே சேலம், தஞ்சை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் நடந்து முடிந்த பிறகு நான்காவது மண்டல மாநாடாகவும் நடைபெற்றது சென்னை மாநாடு.

உணர்ச்சிக் கனலோ எழுச்சிக் கடலோ என வியந்திடும் வண்ணம் இலட்சக்கணக்கில் ஆடவரும் மகளிரும் அலை அலையாகத் திரண்டு வந்திருந்தனர் அம்மாநாட்டிற்கு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கிடப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் திறப்புரை ஆற்றிட இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்துப் போர்ப் பரணி பாடிய அந்த மாநாடு சில புரட்சிகரமான முடிவுகளையும் மேங்கொண்டது.

அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது, இந்திய அரசியல் சட்டத்தில் ஆட்சி மொழி பற்றிய 17-ஆவது பிரிவினை எரித்திட வேண்டும் என்கிற தீர்மானம் ஆகும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவர் என்கிற முறையில் நானும் மற்றக் குழு உறுப்பினர்களும் நாடெங்கணும் சுற்றுப் பயணம் மேற்கொண்டும், ஆங்காங்கே பாசறைக் கூட்டங்கள் நடத்தியும் தயாரித்து அளித்திட்ட அறிக்கையினை ஒட்டி, 'களம் புகும் காளையர் பட்டியல்' ஒன்றும் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

அதன்படி, சட்டப் பிரிவை எரித்திடும் அறப் போரை 17-11-1963-இல் சென்னையிலே தொடங்குவதாக இருந்தார் அண்ணா.

நானும், மன்னை முதலான மற்றும் நான்கு நண்பர்களும் தஞ்சையில் சட்டப் பிரிவை எரித்திடும் பொறுப்பினுக்கு ஒதுக்கப்பட்டிருந்தோம்.

அந்தச் சென்னை மாநாட்டில் இதயத்தை நெகிழ வைத்திடும் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தேறியது.

கொள்கைத் தங்கமாம் தோழர் கோ. சு. மணி அகவிலைக் குறைப்பு அறப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையிலே மாண்டு விட்டார். திசையறியாத கப்பலாகத் துயரக் கடலிலே சிக்கி விட்ட அந்தத்

தியாகியின் குடும்பத்திற்குத் தலைமைக் கழகத்தின் சார்பில் மூவாயிரம் ரூபாய் உதவி நிதியாக அப்போது அளிக்கப்பட்டது.

நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காகக் கோ. சு. மணியின் தந்தையார் மாநாட்டிற்கு வந்திருந்தார். அவருடைய இடுப்பிலே பிஞ்சுச் சிறுவனை பேரன்-கோ. சு. மணியின் பிள்ளை இருந்தான். மேடையிலே அண்ணாவின் கரத்திலிருந்து நிதியினைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெரியவரோ தாமே வைத்துக் கொள்ளாமல் தம் இடுப்பிலிருந்த பேரனிடமே அதனைத்தந்திட்டார். அந்த உருக்கமான காட்சியினைக் கண்டு மாநாடே நெஞ்சம் விம்மிட நெக்குருகி நின்றது.

நிதியளிப்பு நிகழ்ச்சிக்கு முன்னர், தியாகத் தீயிலே வெந்துகருகிய தோழர்களின் திக்கற்ற குடும்பங்களைக் கைவிடாமல் எப்படியெல்லாம் காரியமாற்றி வந்திருக்கிறது கழகம் என்பதனையும், அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி முதல் பொற்செழியன் வரையுள்ள தியாகிகளின் நீண்ட பட்டியலைக் கூறி, அவர்களுடைய குடும்பங்களுக்கெல்லாம் கழகம் என்னென்ன நிதியுதவிகளை அளித்து வந்திருக்கிறது என்பதனையும் கழகப் பொருளாளர் என்கிற முறையில் அந்த மாநாட்டிலே எடுத்துரைத்தேன்.

95

எனது கலைப்பணி

1963 அக்டோபர் 26-ஆம் நாள் 'காஞ்சித் தலைவன்' படம் திரையிடப்பட்டது. அந்தப் படத்திற்குரிய கதை-உரையாடலைத் தீட்டிடும் பொறுப்பினை நான்தான் மேற்கொண்டிருந்தேன்.

அதுவரை நான் வசனம் எழுதிய படங்களைக் கணக்கிட்டால் அது எனக்கு இருபத்து மூன்றுவது படம் ஆகும்.

'காஞ்சித் தலைவன்'-இதை நினைத்திடும் பொழுது, கலையுலகில்-குறிப்பாக நாடகத் துறையிலும் திரைப்படத் துறையிலும்-எனக்கு ஏற்பட்ட ஈடுபாடுகள்-ஏற்றங்கள்-இனிப்புகள்-கசப்புகள்-எல்லாமே என் நெஞ்சிலே வந்து நிழலாடுகின்றன.

பள்ளியிலே பயின்றிடும் போதே நாடகக் கலைமீது எனக்கிருந்த பேரார்வம்'பிரேத விசாரணை' 'சாந்தா அல்லது பழனியப்பன்' ஆகிய நாடகங்களை நான் தீட்டியது—'சாந்தா' நாடகத்திலே நான் 'சிவகுரு' வாக நடித்ததைக் கண்டு வெகுண்ட காங்கிரசார் என்னை நையப் புடைத்துப் புதுச்சேரி வீதியோரத்திலே புரட்டி எடுத்துப் போட்டுவிட்டு ஓடிப்போனது முதலானவை பற்றி முன்பே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்தப் புதுச்சேரி நிகழ்ச்சிக்குப் பிறகு, நான் எழுதி நடித்திட்ட நாடகம் 'தூக்கு மேடை.'

நடிகவேள் திரு எம். ஆர். ராதா அவர்களின் தூண்டுதலின் பேரில் அவருடைய நாடக மன்றத்தினர் நடிப்பதற்கென்றே நான் எழுதியது அந்நாடகம். அதில் நானே 'பாண்டியன்' பாத்திரத்தை ஏற்று நடித்திட வேண்டும் என்றும் ஏற்பாடு ஆயிற்று.

தமிழக நாடக வரலாற்றில் நடிகவேள் எம். ஆர் ராதா அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பான இடம் உறுதியாக உண்டு. தந்தை பெரியார் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பகுத்தறிவுக் கருத்துக்களைப்-புதுமை ஒளிரும் எண்ணங்களை-புரட்சி கொழித்திடும் கொள்கைகளை-நாடகங்கள் மூலம் நாட்டிலே உலவ விட்ட பெருமை அவரைச் சாரும்.

தாழ்ந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பிட— அவர்களுக்குத் தன்மான உணர்வினை ஊட்டிடத்—தந்தை பெரியார் அவர்கள் சுயமாகவே சிந்தித்துச் சிந்திடும் ஒளிக் கதிர்களை—உன்னத இலட்சியங்களைப் பரப்புவதற்கு மேடைப் பேச்சைப் போலவே நாடகத் துறையும் பயன் படும் என்று என்னைப் போன்றவர்கள் அப்போது நம்பினேன்.

அதனால்தான், பகுத்தறிவுப் பிரச்சாரம் பற்றிய நாடகம் ஒன்றைத் தமக்கு எழுதித் தரவேண்டும் என்றும், அதில் நானே முக்கியப் பாத்திர மேற்று நடித்திடவேண்டும் என்றும் ராதா அவர்கள் கூறியதும் நான் உடனே ஒப்புக் கொரண்டு விட்டேன், மறுத்திடாமல்.

தஞ்சையில் 1946-ஆம் ஆண்டில் தான் 'தூக்கு மேடை பல வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றது.

அதன் அரங்கேற்ற விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தவர் பட்டுக்கோட்டை 'அஞ்சா நெஞ்சன்' அழகிரிசாமி அவர்கள்.

குமுறும் எரிமலையாய்க்—கொந்தளிக்கும் பெருங்கடலாய்—இடி முழக்கமிடும் அவர்தம் எழுச்சி கொப்பளித்திட்ட சொற்பொழிவுகள் தாம் என்னுடைய பிஞ்சு நெஞ்சிலே முதன் முதல் கொள்கை வித்தினைத் தூவியவையாகும். எனவே 'தூக்கு மேடை' அரங்கேற்ற விழாவுக்கு அவர் தலைமையேற்றதை எண்ணி நான் அடைந்திட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சமுதாயப் பெருமரத்தையே புரையோடி அரித்துக் கெடுத்திடும் புல்லுருவிகளைப் - போலித்தனங்களை—ஏற்றத் தாழ்வுகளை எதேச்சாதி காரங்களைத்—தோலுரித்துக் காட்டும் நோக்குடனேயே 'தூக்கு மேடை நாடகத்தினைத் தீட்டியிருந்தேன்.

ஆனால் அது அன்றையக் காங்கிரசு ஆட்சியினரின் கண்களை உறுத்துவதாக அமைந்துவிட்டது. அது எதிரொலித்த பகுத்தறிவுப் பிரச்சாரத்தைச்—சீர்திருத்தச் சிந்தனைகளை—ஆளுங் காங்கிரசால் செரித்துக்கொள்ள முடியவில்லை.

எனவே அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டது; தடைச் சட்டம் தன் கொடுங்கரத்தினை நீட்டியது.

ஆம்; 'தூக்கு மேடை'க்கே தூக்குக் கயிறு வீசப்பட்டது சுதந்திர—ஜனநாயக – நாட்டில்!

என்னுடைய திரையுலக ஈடுபாடும் 1946-ஆம் ஆண்டில்தான் தொடங்கிற்று.

கோவையில் இருந்த ஜூபிடர் பிக்சர்சார் தயாரித்திட்ட 'ராஜ குமாரி' தான் நான் முதன் முதல் உரையாடல் தீட்டிய திரைப்படம் என்பதனையும், அதற்கு வழி வகுத்துக் கொடுத்திட்டவர் அன்று செல்வாக்குமிக்க திரைப்பட இயக்குநராய்த் திகழ்ந்திட்ட திரு ஏ. எஸ். ஏ. சாமி அவர்கள்தான் என்பதனையும் முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன்.

1946-ல் வெளிவந்த 'ராஜகுமாரி' முதல் 1963-ல் வெளிவந்த 'காஞ்சித் தலைவன்' வரையுள்ள பதினேழாண்டுக் காலத்தில் திரை யிடப்பட்ட மற்றப் படங்களைப் பற்றிய விவரங்கள் வருமாறு:

அபிமன்யு – 1948; மருதநாட்டு இளவரசி – 1950; மந்திரி குமாரி – 1950; மணமகள்—1951; பராசக்தி—1952; தேவகி—1952; பணம் – 1952; திரும்பிப்பார் – 1953; நாம்—1953: மனோகரா – 1953. மலைக் கள்ளன் – 1954; அம்மையப்பன்—1954; ராஜாராணி – 1956; ரங்கோன் ராதா—1956; புதுமைப்பித்தன்—1957: புதையல்—1957; குறவஞ்சி—1960; எல்லாரும் இந்நாட்டு மன்னர்—1960; அரசிளங்குமரி – 1961; தாயில்லாப் பிள்ளை – 1961; இருவர் உள்ளம் – 1963

நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை நாடகங்களில் புகுத்திட எவ்வாறு முயற்சிகள் எடுத்துக்கொண்டேனோ அவ்வாறே மேலே குறிப்பிடப்பட்ட திரைப்படங்களுக்கும் சரி, அவைகளுக்குப் பிறகு வெளிவந்த திரைப்படங்களும் சரி, வசனங்கள் தீட்டிய போதெல்லாம் அவற்றிலே கழகத்தின் இலட்சியங்கள் 'இலைமறை காயாக' இழையோடிடுவதற்கும் அக்கறை காட்டியுள்ளேன் என்பதும் சொல்லாமலே விளங்கும்.

கலை என்பது கனி குலுங்கிடும் பெரிய தரு. அதனைத் தனியார் தோட்டத்து மரம் போலத் தங்கள் சொந்தப் புகழைப்—பொருளைக் குவித்திடப் பயன்படுத்திக் கொள்வோரும் உண்டு. அதே கலையினைக் கால்நடையாய்ச் செல்வோர்க்குக் கனியும் நிழலும் வழங்கும் சாலை மரமாய்ப் பொது நலனுக்குப்-புதிய சிந்தனை வளர்ச்சிக்குப்—பயன்படச் செய்வோரும் உண்டு.

இந்த இரண்டாவது வகையினராகவே இலட்சியங்களைப் பரப்பிட ஏற்றதொரு கருவியாகக் கலையினைப் பயன்படுத்தினர் அண்ணா. அவர்தம் வழியிலேயே நானும் மற்றக் கழக எழுத்தாளர்களும் செயல் பட முயன்றிட்டோம், திரையுலகில்—நாடகத் துறையில்.

96

மதுரைக் களம்

1963 அக்டோபர் 29-ஆம் நாள். ஓர் இடிச் செய்தியினைக் கேட்டுத் தமிழகமே அதிர்ச்சிக்கு ஆளாயிற்று.

தேவர்குல மக்களுக்கெல்லாம் திருவிளக்காய்—வழிகாட்டியாய்த்—திகழ்ந்திட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அன்று இயற்கை எய்திட்டார் என்பதே அந்தச் செய்தி.

"தேவரின் சவ அடக்கத்திற்குச் செல்லலாம் என்று நினைக்கிறேன். வருகிறுயா?" என்று கேட்டார் அண்ணு.

மறவர் இனத்தின் மாமேருவாய் விளங்கியவர் மறைந்த பின்னர், அங்கு செல்வது தவிர வேறு என்ன முக்கிய வேலை எனக்கு?

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமைமாட்ட நினைக்கும் சிறைச் சாலை!" என்று போர்ப்பரணி பாடினர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

கழகத்தவரை அந்தப் பூஞ்சோலையிலே தள்ளிப் பூட்டி மகிழ்ந்திடவே புதிய முறுக்கோடு செயல்படத் தொடங்கியது அன்றையக் காங்கிரஸ் அரசு.

நேரு பிறந்த நாளிலேயே வேகமாகத் திறந்து கொண்டன சிறைச் சாலையின் நெடிய கதவுகள். தாளமுத்து நடராசர்களை விழுங்கிக் களித்திட்ட அந்த வேள்விக் களங்கள் இன்னும் பல கழகக் கண்மணிகளைத் தழுவித் தினைத்திடத் தாகத்தோடு நீட்டிய வண்ணம் இருந்தன தங்கள் நாக நாக்குகளை!

'இந்தி ஏகாதிபத்தியச் செந்தீயால்' நம் செந்தமிழ் தீய்ந்திடுமே! நாம் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆகிவிடுவோமே!'—என்று வெந்திடும் உள்ளங்களின் வேதனையைப் புலப்படுத்திடவே வேறு வழியின்றிச் சட்டப் பிரிவினை எரித்திடும் அறப்போரினை மேற் கொண்டது கழகம். அதனைத் தகர்த்துக் குலைத்திடவே அப்போது தலைவிரித்தாடியது அடக்குமுறை.

14-11-63-இல் 'குழந்தைகள் தின'த்தைக் கொண்டாட வேண்டியவர்கள் குழந்தைகளை விட்டுப் பல தந்தைகளைத்—தாய்களைப் பிரித்துக் கொட்டடியிலே பூட்டிடும் கொடுங்கோன்மையிலே ஈடுபட்டனர்.

அனறைய தினம், அண்ணன் சி. பி. சிற்றரசு, காஞ்சி கல்யாண சுந்தரம், நீலநாராயணன் ஆகியோரும் மற்றும் நூற்றுக்கணக்கான கழகத் தோழர்களும் திடீரென்று கைது செய்யப்பட்டனர்.

சட்ட எரிப்பு அறப்போரினைத் துவக்கிடும் பொருட்டு 16-11-63-இல் காஞ்சியிலிருந்து காரில் புறப்பட்டு வந்த அண்ணு அமைந்தகரையில் நுழைந்தவுடனேயே வழி மறிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார் காவல் துறையினரால். அவரோடு பயணம் புரிந்திட்ட மற்றவர்களும் கைதாயினர்!

அன்று பிற்பகல், நுங்கம்பாக்கம் அண்ணு இல்லத்தில் என்னோடும் நாவலரோடும் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுதே என். வி. நடராசன் அவர்களும், மறைந்த மாவீரர் ஏ. கோவிந்தசாமி அவர் களும் சிறை பிடிக்கப்பட்டனர்.

இப்படித் தமிழகம் எங்கணும் கழகத்தவர்மீது ஏவி விடப்பட்டது 'இட்லர் தர்பார்'. தாய்மொழியின் விலங்கொடிக்கத் துணிந்திட்ட வீர மறவர் பலர் விலங்கிடப்பட்டனர்; வெஞ்சிறையிலே தள்ளப்பட்டனர். மறியல் போன்ற கிளர்ச்சிகளிலே ஈடுபட்டோர் மறித்து அழைத்துச் செல்லப்பட்டனர் சிறைக்கூடம் நோக்கி.

அடிப்படை உரிமைகளையே பறித்திடும் வகையில் – ஜனநாய கத்தின் குரல்வளையையே நெரித்திடும் போக்கில் — அதிகாரம் சதிராடு வதைச் சகித்திட முடியாது என்று சட்டமன்றத்திலே நானும் மற்ற கழக உறுப்பினர்களும் கண்டனக் குரல் எழுப்பினேம். ஒத்திவைப்புத் தீர்மானமும் கொண்டு சென்றோம். அது நிறைவேறுத நிலையில் வெளிநடப்பும் செய்தோம்.

ஆட்சியாளரோ கேட்டிடவில்லை நியாயத்தின் குரலை; காட்டிட வில்லை கண்ணியத்தை! பாய்ச்சிய வண்ணமே இருந்தனர் எதேச் சாதிகார ஈட்டிகளை!

அந்தச் சமயம் 21-11-63-இல் திருவள்ளுவர் பற்றிய சிந்தனை அலை களும் சட்ட மன்றத்திலே தவழ்ந்தன. விவாதத்திலே பங்கு கொண்ட நான், இந்த வையகம் உய்ந்திட வாழ்க்கை நெறி வகுத்திட்ட. அந்த செந்நாப்போதரின் திருவுருவப் படத்தினைச் சட்டமன்றத்திலே திறந்து வைத்திடத்தான் வேண்டுமென்று வலியுறுத்தினேன்.

'தூங்காமை, கல்வி, துணிவுடைமை-இம்மூன்றும்

நீங்கா நிலனாள்பவர்க்கு'

—என்னும் குறளை எடுத்துக் காட்டி இந்த மூன்று இயல்புகளுமே அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலனாரிடம் அமைந்திருக்கின்றன என்று கூறிய நான் இப்படியும் குறிப்பிட்டேன் வேடிக்கையாக:

"...துணிவைப் பொறுத்தமட்டில் தமிழகத்தின் உரிமையைக் காப்பதில்—டில்லியை மிரட்டுவதில்—அவருக்கு (பக்தவத்சலனுருக்கு) சற்றுத் துணிவு இல்லாமல் இருக்கலாம். ஆனல் எதிர்க்கட்சிகளை மிரட்டுவதில் அவர் யாருடைய துணிவுக்கும் இளைத்தவர் அல்லர்!"

—என்னுடைய இந்த வார்த்தைகள் புனைந்துரையோ பொய் யுரையோ அல்ல. நூற்றுக்கு நூறு உண்மையானவையே என்று மெய்ப்பிப்பதைப் போலவேதான் பெரியவர் பக்தவத்சலனுரின் ஆட்சியிலே கழகத் தோழர்கள் மிரட்டப்பட்டார்கள்; கடுமையாக விரட்டப்பட்டார்கள் சிறையை நோக்கி!

தமிழகமே அமளிக் காடாகி-ஜனநாயகமே சவக்குழி நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த அதே வேளையில்தான்—

உலகையே கவர்ந்திட்ட ஓர் ஒப்பற்ற ஜனநாயகவாதி சுட்டுக் கொல்லப்பட்டார் ஒரு கயவனுல்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே உரத்த குரல் எழுப்பிய உத்தமர்.

அடிமைப்பட்டுக் கிடந்த நீக்ரோக்களின் தளையை அறுத்திட ஆபிரகாம் லிங்கனின் வாரிசாகவே திகழ்ந்திட்ட வைர நெஞ்சினர்—

செல்வம் புரண்டிடும் திருநாட்டில் செல்வாக்கு மிகுந்திட்ட பெரும் குடும்பத்திலே பிறந்திட்ட போதிலும் பண்பாட்டுச் செல்வத்தினை இழந்திடாத மிகச் சிறந்த சீலர்-ஜான் ஃபிட்ஸ் ஜெரால்ட் கென்னடி அநியாயமாக இரையானுர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு. அவருடைய திடீர் மறைவினைக் கேட்டுத் திடுக்கிட்டது தேம்பித் தேம்பி-அழுதது-இந்த அகிலம் முழுவதுமே.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களிலேயே மிகக் குறைந்த வயதிலேயே - தமக்கு நாற்பத்து மூன்று வயது நடந்திடும் பொழுதே—மிக உயர்ந்த பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற பெருமையினைப் படைத்தவர் கென்னடி. இரண்டாம் உலகப் போரின்போது இளந் தளபதியாக நாட்டுப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார் அவர்; நடுக்கடலிலே சிக்கித் தவிக்க நேர்ந்திட்ட நிலையிலும், நெஞ்சங் குலைந்திடாமல் தாம் மட்டும் தப்பித்து விட்டால் போதுமென்ற தன்னலத்திற்கும் இரையாகி விடாமல், தம்மோடு உயிருக்கு மன்ருடிடும் மற்ற ஐந்தாறு வீரர்களையும் கொண்ட படகினைப் பற்களின் வலிவாலேயே கரை சேர்த்திட்ட உரம் பாய்ந்திட்ட உள்ளம் படைத் தவரும் அவரே. அந்தத் துணிகரச்செயலையே Profile in Courage என்று எழுத்திலே வடித்து அமெரிக்காவின் மிக உன்னத இலக் கியப் பரிசாகக் கருதிடும் புலிட்சர் பரிசினையே தட்டிச் சென்றிடும் புகழ் மிக்க எழுத்தாளராகவும் போற்றப்பட்டவர் அவர்.

குறுகிய காலந்தான் அவர் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்திருந்தார் என்றாலும், அவர் குவித்திட்ட வெற்றிக் கனிகளோ ஏராளம். படைத்திட்ட சாதனைப் பட்டியலோ வெகு நீளம்.

நாடு புகழ்ந்தென்ன? நானிலம் போற்றியென்ன? நயவஞ்சக நிறவெறி தன் கோரப் பசியைத் தணித்துக் கொண்டது அந்த நல்லவரின் உயிரைக் குடித்து!

தம்முடைய இல்லத்தரசி ஜாக்குவிலினோடு டல்லாஸ் நகரில் 1963 நவம்பர் 22-இல் உலாவச் சென்ற வேளையில்தான் ஆஸ்வால்ட் என்பவனின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிச் சாய்ந்தார் அந்தத் தூயவர்.

மனித உரிமைகளுக்காக உலக அமைதிக்காக ஓய்வில்லாமல் உழைத்திட்ட ஒரு மாமேதை மாய்ந்ததால்-மணிவிளக்கு அணைந்ததால்-மையிருள் படர்ந்தது மண்ணகமெங்கும்.

'கறுப்பு நிற நீக்ரோக்கள், எப்படி வெள்ளை நிற வெறியர்களின் வெறுப்பிற்கு இலக்காகி அடிமை இருளையே அணைத்துக் கிடந்திட வேண்டிய அவலப் பிழைப்பிற்கு ஆளானார்களோ அப்படித்தான் இந்தப் பரந்த மண்ணுக்குத் தொன்றுதொட்டுச் சொந்தக்காரர்களான ஆதித் திராவிட மக்கள்-பழங்குடி மக்கள் புழுக்களினும் கேவலமாகவே மதிக்கப்பட்டார்கள்; மிதிக்கப்பட்டார்கள்;

இழிந்த சாதியினராய்ச் சமுதாயத்தின் கடைசித் தட்டுக்குத் தள்ளப்பட்டுக் கிடந்த அந்த மக்களுக்குத் தன்மான உணர்வினை ஊட்டிட—அதே சமயம் சமுதாயத்தில் சம உரிமையை நிலைநாட்டிட ஒரு மாபெரும் புரட்சி தேவைப்பட்டது இந்தியத் துணைக் கண்டத்தில்.

அந்தப் புரட்சியைத் தெற்கே தோற்றுவித்தார் தந்தை பெரியார். வடக்கே உருவாக்கினார் டாக்டர் அம்பேத்கார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர்ந்திட அவர்களுக்குத் தனிச் சலுகைகள் தரப்படுவதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே வழி வகை கண்டவர் அம்பேத்கார்.

அந்தச் சீர்திருத்தச் சிற்பிக்குச் சிலையெழுப்புவதைப் பெருமையாகக் கருதிற்று தி. மு. கழகத்தவரின் நிர்வாகத்தில் இயங்கிடும் சென்னை மாநகராட்சி. பத்தொன்பதாயிரம் ரூபாய் செலவிலே உருவாக்கப்பட்ட அம்பேத்காரின் சிலை ரிப்பன் மாளிகை அருகில் உள்ள விளையாட்டுத் திடலில், ஒடுக்கப்பட்டுக் கிடந்திட்ட மக்களின் உள்ளங்களெல்லாம் குளிர்ந்திடும் வண்ணம் 28-11-63-ஆம் நாளில் திறந்து வைக்கப்பட்ட கோலாகலமான விழாவிலே நாவலர் பங்கு கொண்டு பாராட்டுரை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

எதிர்பாராத நாளில் கடுமையான, அடக்கு முறைகளைத்-தடை உத்தரவு களை-அன்றைய ஆட்சியாளர்கள் அவிழ்த்து விட்ட போதிலும், இந்தி எதிர்ப்புப் பொது மாநாட்டிலே எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்று வதில் தி. மு. கழகம் பின் வாங்கிடவே இல்லை. பேராசிரியர் அன்பழகன், மதியழகன் முதலானோர் தலைமையில் மறியல் போர் தொடர்ந்து நடந்த வண்ணம் இருந்தது; சிறை நோக்கிச் சென்ற வண்ணம் இருந்தனர் கழகத் தோழர்கள்.

ஆட்சி மொழி பற்றிய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவினை எரித்தி டுவதற்கு முதற்களமாகச் சென்னை நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது அல்லவா? அதைப் போலவே இரண்டாங்களமாக இடம் பெற்ற நகரம் மதுரை. அங்கே 16-12-63-இல் சட்டப்பிரிவினுக்குத் தீ மூட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த அறப்போர் நிகழ்ச்சிக்குப் பார்வை யாளராகத் தலைமைக் கழகத்தின் சார்பில் பொருளாளர் என்கிற முறையில் நான் போனேன்.

மதுரைக்கு ஐம்பது மைல் தொலைவுக்கு இப்பால் சென்றிடும் பொழுதே எங்களைச் சூழ்ந்து கொண்டது ஒரு சோதனை.

நாங்கள் பயணம் புரிந்து கொண்டிருந்த கார் 'படுக்காளி மாடு' போலப் படுத்துக் கொண்டு விட்டது திடீரென்று. காரணம், அதன் மூன்று சக்கரங்களுமே பழுதடைந்து விட்டன பரிதாபமாக!

காருக்கு ஏற்பட்டு விட்ட கதியினை நினைத்துக் கையைப் பிசைந்து கொண்டு செய்வதறியாது நின்றிருந்தோம் நானும், மன்னை முதலிய நண்பர்களும். தீ மூட்டும் நிகழ்ச்சிக்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு ஏகிட முடியவில்லையே என்கிற ஏக்கம் எங்களுக்கு.

அப்போது, ஒரு கார் மதுரை நோக்கி வந்து கொண்டிருந்தது என்னைக் கண்டதும் அது நின்றுவிட்டது.

''எங்கே செல்கிறீர்கள்?'' என்று காரில் இருந்தவர் கேட்டார்.

''மதுரையிலே நடைபெறும் சட்ட எரிப்பு நிகழ்ச்சியைப்பார்க்க வந்தோம்; வழியில் கார் கெட்டுவிட்டது'' என்று நிலைமையை விளக்கி னேம்.

''சரி; என் காரில் ஏறுங்கள்; நான் கொண்டு போய் மதுரையில் விட்டுவிடுகிறேன்'' என்றார் அவர்.

எங்கள் உற்சாகத்திற்குக் கேட்டிட வேண்டுமா? உடனே அவரு டைய காரில் ஏறிக் கொண்டோம். நாங்கள் மதுரை மாநகரை அடை வதற்கும் மதுரை முத்து குழுவினர் சட்டத்தை எரித்திடப் புறப்படுவ தற்கும் சரியாக இருந்தது.

நீ மூட்டும் நிகழ்ச்சியினைக் கண்டிடச் சென்ற எங்களை அவ்வாறு தமது காரிலே ஏற்றிக் கொண்டு சென்று மதுரையிலே இறக்கி விட்டவர் யார் தெரியுமா?

மதுரை மாவட்டத்திலேயே மிகுந்த செல்வாக்குப் படைத்திட்ட ஒரு தீவிரமான காங்கிரஸ்காரர்! (திரு. பெருமாள்).

மதுரை மாநகரமே அன்று இந்தி ஏகாதிபத்தியத்தின் இடுப்பினை ஒடித்திடப் போர்க்கோலம் பூண்டிருந்தது. புரட்சிக் கனலைக்கக்கியது.

அங்கே திலகர் திடல் அறப் போர்க் களமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது. அதனை நோக்கிப் போராட்ட வீரர்கள் புறப்பட்டுச் சென்றபொழுது வீதிகளின் இருமருங்கிலும் பொது மக்கள் வெள்ள மெனத் திரண்டு நின்று விண்ணதிர வாழ்த்தொலிகளை எழுப்பினர்.

முதலில் நண்பர் முத்து தலைமையில் அறப்போர் மறவர்கள் ஐவரும் செல்ல, அவர்களை அடுத்துக் காவல் துறை அதிகாரிகள் பின் தொடர்ந்து சென்றனர்.

நானும் மற்ற நண்பர்களும் சற்றுத் தள்ளியே பின்னால் நடந்து கொண்டிருந்தோம். எங்களுடன் வந்து கொண்டிருந்த மன்னை நரராயணசாமி திடீரென்று கைது செய்யப்பட்டார். அவரை அவ்வாறு கைது செய்தது முறையல்லவென்றும், அவரை விடுதலை செய்திட வேண்டும் என்றும், மாவட்டத் தலைமைப் போலீஸ் அதிகாரியை அணுகி நானும் என். வி. என். னும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பலன் ஏதும் ஏற்படவில்லை.

திலகர் திடலில் முன் அறிவித்தவாறே சட்டப் பிரிவினுக்கு எரியூட்டினர் ஐவர் அணியினர்.

காவல் துறையினரும் அதை வேடிக்கை பார்த்தவண்ணமே நின்றிருந்தனர். சட்டப் பிரிவின் சரிபாதியை எரிதழல் இரையாக்கிக் கொண்ட பின்னரே அவர்கள் அறப்போர் மறவர்களைக் கைது செய்தனர்.

நிகழ்ச்சி நடந்திட்ட பொழுது நான் தொலைவில் தான் நின்றிருந்தேன். நான் அங்கே பார்வையாளனைத்தான் சென்றிருந்தேனே அன்றித் தலைமை தாங்கிட அல்ல.

ஆனால் முதலமைச்சர் பக்தவத்சலனாரோ முழுப் பூசணிக்காயையும் சோற்றிலே மறைத்துவிட முயன்றிட்டார். நான்தான் மதுரைச் சட்ட எரிப்பு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினேன் என்று வழக்கம் போலத் தவறான தகவல்களையே அவர் பொது மக்களுக்குத் தந்திட்டார், அறிக்கை மூலம். மறுநாள் கடலூர் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டிட வந்த நான், 'தமிழ்நாடு' நாளிதழில் வெளிவந்திருந்த

அவருடைய அறிக்கையினை மறுத்துச் செய்தியாளர்களிடம் ஒரு விளக்கம் அளித்தேன்.

அந்த விளக்கத்திற்குப் பிறகும் கூட, மதுரை நிகழ்ச்சிக்கு நான் பார்வையாளனே அன்றித் தலைவன் அல்ல என்கிற உண்மையை உணர்ந்திட மனம் வந்திடவில்லை பெரியவர் பக்தவத்சலனுருக்கு. அவர் ஏன் அப்படி நடவாத ஒன்றினை நடந்ததாக இட்டுக் கட்டினர் என்பது பின்னர்தான் எனக்கு விளங்கிற்று.

ஆம்; 1963 டிசம்பர், பத்தொன்பதாம் நாள் சிறைச்சாலையின் கதவுகள் எனக்காகத் திறந்திருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது.

அன்று சென்னை கோபாலபுரத்திலுள்ள என் இல்லத்தில் நாவலர், ப.உ.ச., நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி முதலான நண்பர்களுடன் நான் உரையாடிக் கொண்டிருந்தேன்.

பகல் 12-30 மணி இருக்கும்.

மதுரையிலிருந்து வந்த காவல் துறை அதிகாரி ஒருவர் என்னிடம் வந்து, ''உங்களைக் கைது செய்திருக்கிறேன்'' என்று அறிவித்தார்.

அவரை நோக்கி ''எதற்காகக் கைது செய்கிறீர்கள்?'' என்று கேட்டார் நாவலர்.

''எங்களுக்கு ஒன்றும் தெரியாது. மேலதிகாரிகள் உத்தரவு'' என்று விடையளித்தார் அவர்.

அங்கே குழுமியிருந்த நண்பர்கள் வாழ்த்துக் கூறி வழியனுப்பிட, நான் காவல் துறை வண்டியிலே ஏறிக்கொண்டேன்.

திருவனந்தபுரம் விரைவு ரயில் வண்டி அரசாங்க விருந்தினராகி விட்ட என்னையும் அமைப்புச் செயலாளர் என்.வி. என்னையும் சுமந்து கொண்டு வெகு வேகமாகப் பறந்து சென்றது மதுரை நோக்கி.

இடை மறித்தது திண்டுக்கல்.

இறக்கப்பட்டோம் இருவரும்.

தொடர்ந்து புகை வண்டியிலேயே பயணம் புரிந்திட்டால் எங்கள் கண்களில் கரித்தூள் படிந்திடுமே என்கிற கரிசனமோ; இல்லை, மதுரைச் சந்திப்பிலே கைதி நிலையிலே எங்களைக் கண்டுவிடும் மக்களிடமிருந்து மீட்டு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்குக் கொண்டு போக நேரமாகிவிடுமே என்கிற மனக் கலக்கமோ; என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரிந்திடவில்லை.

கார் மூலமே திண்டுக்கல்லிலிருந்து மதுரைக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். பதினைந்து நாட்கள் காவலில் வைக்கப்பட்டோம், நீதி மன்ற ஆணைப்படி.

அந்தச் சிறிய சிறைவாசத்தின் போது ஒரு பெரிய மனிதரைச் சந்தித்திடும் வாய்ப்பினையும் நான் பெற்றேன்.

டாக்டர் சி.டி. தேஷ்முக் அவர்கள் தம்முடைய மனைவி துர்க்காபாய் தேஷ்முக்குடன் 23-12-63 அன்று என்னைச் சிறையிலே வந்து பார்த்தார். ரிசர்வ் பாங்கின் ஆளுநராக இருந்திட்ட அவரின் மதி நுட்பத்தினைக் கண்டு வியந்திட்ட நேரு தம்முடைய மத்திய அமைச்சரவையில் நிதியமைச்சராகவே அவரைச் சேர்த்துக் கொண்டார். ஆனால் என்னை வந்து சந்தித்தபோது அவர், 'முன்னாள் அமைச்சர்' ஆக மாறிவிட்டிருந்தார். அந்தப் பொருளாதாரப் புலி, கழகத்தின் பொருளாளனைச்சாதாரண நிலையில் இருந்த என்னை வந்து, அதுவும் சிறையிலேயே வந்து, சந்திப்பார் என்று நான் எதிர் பார்த்திடவேயில்லை.

அந்த மதுரைச் சிறைவாசம் நெடு நாட்கள் நீடித்திடவில்லை 25-12-63-இல் சில நிபந்தனைகளுடன் என்னைப் பொறுப்பில் விடுதலை செய்தது சென்னை உயர் நீதி மன்றம்.

சென்னை வந்து சேர்ந்திட்ட நான், மறுநாளே காஞ்சிக்குச் சென்றிட்டேன். அண்ணாவின் சிற்றன்னை 'தொத்தா' நோயோடு போராடிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டிடவே நான் காஞ்சிக்குப் போனேன். அரசின் அடக்குமுறைக்குப் பலியாகி ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஏழாவது முறையாகச் சிறைப் பறவையாகியிருந்த அண்ணாவும் அப்போது 'பரோலில்' வெளியே வந்திருந்தார்கள்.'

சின்ன வயதிலேயே அண்ணாவை வளர்த்து ஆளாக்கி இந்தத் தமிழ் மண்ணுக்கே அவர் தலைமகன் ஆகிடும் அளவிற்கு அவருக்கு ஊன்றுகோலாய் உழைத்திட்டவர் 'தொத்தா' என்று அன்போடு அழைக்கப்பட்ட திருமதி இராசாமணி அம்மையார் ஆவார். அவரோ உழைத்தது போதுமென்று 31-12-63-இல் ஓய்வெடுத்துக் கொண்டு விட்டார். அவருடைய மறைவு மாமேதை அண்ணாவை மனங்குமுறிட வைத்தது. கழகத்தார் கண்களோயோ பெருங்குளம் ஆக்கியது.

97

சிங்கத் தமிழன் சின்னச்சாமி

இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத்தில் ஓர் அதிர்ச்சி அளித்திடும் திருப்பு முனையைத் தோற்றுவித்து விட்டது 1964-ஆம் ஆண்டுத் தொடக்கமே.

அந்த ஆண்டின் குடியரசு நாளுக்கு முந்தின நாள்.

மற்றவர்களுக்கெல்லாம் பொழுது விடிந்து கொண்டிருந்தது மலர்ச்சியோடு

மறத்தமிழ் இளைஞனுக்கோ வாழ்க்கையே முடிந்து கொண்டு இருந்தது பரிதாபமாக! உடல் கருகிட உயிர் மடிந்து கொண்டு இருந்தது எரிதழலுக்கு உணவாகி.

திருச்சி இரயில்வே சந்திப்பிற்கு எதிரேயுள்ள திறந்த வெளியில் விடியற்காலை வேளையில், தன் மேனி முழுவதும் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு தீக்குளித்து மாண்டுவிட்டார் சின்னச்சாமி என்னும் ஒரு தி.மு. கழகச் செயல் வீரர்.

> ''சாகையிலே தமிழ் படித்துச் சாகவேண்டும்-என்
> சாம்பலுமே தமிழ்மணந்து வேகவேண்டும்"

-என்னும் வைர வரிகளுக்கு ஒரு வரலாற்றுச் சின்னமாகவே அமைந்து விட்டது அந்த இளைஞரின் வாழ்க்கைப் பயணம்.

அனல்-அவரது அழகுத் திருமேனியில் தாவிய போது...

கனல்-அவரது கண்களை அழித்த போது.....

முத்துப் பற்கள்-மூண்டுவிட்ட தீயால் 'படீர்-படீர்'என்று வெடித்தபோது...

தீ நாக்குகள்-அவரது அழகிய சுருண்ட கேசத்தைத் தின்றிட்டபோது...

அந்தத் தீந்தமிழ்ச் செம்மல் 'தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!' என்றே முழக்கமிட்டிருக்கிறார் மூச்சினைப் பிடித்துக் கொண்டு!

இருபத்தேழு வயதுகூட நிரம்பப் பெறுத நிலையில் தம்முடைய இளம் மனைவியையும், இரண்டே வயதான பெண் குழந்தையையும் கண்ணீர்க் கடலிலே கதறிடச் செய்து விட்டு, இந்தி ஏகாதிபத்திய

எதிர்ப்பினுக்குத் தம்மைக் 'களபலி' ஆக்கிக்கொண்டு விட்டார் அந்தக் கழகக் கண்மணி.

அவருடைய குறுகிய கால வாழ்க்கையே ஒரு புரட்சிக் காவியந்தான்-புதிய புறநானூறுதான்!

திருச்சி மாவட்டத்திலிருந்து 33 மைல் தொலைவில் கல்லக் குடிக்கும் அரியலூருக்கும் இடையில் உள்ள கீழப்பழுவூர்தான் சின்னச்சாமி பிறந்த ஊர். பகுத்தறிவுக் கொள்கைகளின்பால் நெஞ்சினைப் பறிகொடுத்துவிட்ட அவர் சீர்திருத்தத் திருமணமே செய்து கொண்டிருக்கிறார்; தம்முடைய மகளுக்குத் 'திராவிடச் செல்வி' என்றும் பெயரிட்டிருக்கிறார்.

1959-ஆம் ஆண்டு முதல் அவர் திராவிட முன்னேற்றக்கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தீவிரமாக உழைத்திருக்கிறார் இலட்சியப் பிடிப்போடு.

''...திரு சின்னச்சாமிக்கு எப்போதும் அண்ணு, கருணாநிதி ஆகிய தலைவர்கள் மீது அளவிட முடியாத அன்பு. அந்த அன்பை வெளிப் படுத்தும் வகையில் தன்னுடைய வீட்டுச் சுவர்களின் இருபுறங்களிலும் அந்தத் தலைவர்களுடைய படங்களை மாட்டி வைத்துள்ளார்...''

-என்று மதுரையிலிருந்து வெளிவந்த 11-2-1964-ஆம் தேதிய 'தமிழ்நாடு' நாளிதழில் அதனுடைய செய்தியாளர் சிறப்புக் கட்டுரை யொன்றிலே குறிப்பிடும் அளவுக்கு இயக்க வளர்ச்சியிலே தம்மை ஒரு பிரிக்க முடியாத அங்கமாக இணைத்துக் கொண்டிருந்தவர்தான் சின்னச்சாமி.

இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு என்னுடைய தலைமையில் இயங்கிய போது, அறப் போர் வேள்விக்குத் தங்களையே அர்ப்பணித் திடக் கூடிய பாசறை வீரர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்ட தல்லவா? அதிலே தம்முடைய பெயரும் இடம் பெற்றிடும் வண்ணம், துணிவினைக் காட்டிப் பணியாற்றியவர்தான் அந்தச் சுடரொளி.

தாம் தீக்குளிப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் அவர் திருச்சியி லிருந்து சென்னைக்குச் சென்றிருக்கிறார் புகைவண்டியில். அப்போது முதலமைச்சராக இருந்த திரு பக்தவத்சலம் அவர்களும் அதே வண்டியில் பயணம் செய்திருக்கிறார். சென்னையில் வண்டியை விட்டு இறங்கியதும் சின்னச்சாமி, திரு பக்தவத்சலனாருக்கு எதிரிலே சென்று,

''நீங்கள் தமிழைக் காப்பதற்காக இந்தித் திணிப்பைத் தடுக்கக் கூடாதா?''

-என்று கெஞ்சிக் கேட்டிருக்கிறார்.

உடனே காவல் துறையினர் அவரைக் கைது செய்து எழும்பூர் நிலையத்தில் அடைத்து வைத்திருந்து பின்னர் விட்டனர்.

அதன் பிறகு, திருச்சிக்குத் திரும்பிச் சென்று 25-1-1964 அன்று தணலில் இட்ட தங்கமாகி விட்டார் அந்தக் கொள்கைக்குன்று!

தாம் இறப்பதற்கு முந்தின நாள் தம் நண்பர் ஒருவருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் காணப்படும் சில வரிகள் நம் நெஞ்சினையே உருக்குவதாக உள்ளன :

''ஏ, தமிழே! நீ வாழவேண்டும் என்பதற்காக நான் துடியாய்த் துடித்துச் சாகப் போகிறேன். ஏ, தமிழே! என்னைச் சாகடிக்க இந்திச் சட்டம் தீட்டப்பட்டு விட்டது. பண்டிதர் (நேரு) தந்த வாக்குறுதி அழிந்து விட்டது. தமிழை அழிக்கும் இந்திச் சட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும். அதனால் சிறையிலிருக்கும் அறிஞர் அண்ணாவும், தி.மு. கழக வீரர்களும் விடுதலை செய்யப் பட வேண்டும். அதனால் தான் நான் போர் முனை செல்கிறேன். காலை 11 மணிக்குள் என் உடல் மீது பெட்ரோல் ஊற்றிக்கொண்டு செத்துவிடுவேன். இதைப் பார்த்த பிறகாவது 'ஏன் இந்தி? எதற்காக இந்தி?' என்று மக்கள் கேட்கட்டும். இதற்குப் பிறகாவது ஆளவந்தவருக்கு (இந்தித் திணிப்பைத் தடுக்கும்) துணிவு பிறக்கட்டும்...''

சின்னச்சாமியின் தீக்குளிப்பு தமிழகம் எங்கணும் ஒரு பெரும் பரபரப்பினைப்-பதற்றத்தினை-உருவாக்கிவிட்டது. வெளி மாநிலங்களிலும் அது விவாதத்திற்குரிய வினாக்குறிகளை எழுப்பலாயிற்று.

''பெங்களூரிலிருந்து வெளிவரும் 'டெக்கான் ஹெரால்ட்' என்னும் ஆங்கில ஏடு தன்னுடைய முதல் பக்கத்திலேயே சின்னச்சாமியின் மறைவுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்தியினை வெளியிட்டது.

அத்துடன் ஆழ்ந்த சிந்தனைக்குரிய ஒரு கட்டுரையும் அதில் வெளியாயிற்று. அதன் குறிப்பிடத்தக்க பகுதி வருமாறு:

''...நமது நாட்டில் நிலவக் கூடிய கட்சி அரசின் காரணமாக இந்திக்குக் கிடைக்கக்கூடாத முதலிடமும் முக்கியத்துவமும் கிடைத்திருக்கின்றன. இதைப் பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை என்பார்கள். இதற்கு ஜனநாயகத்தில் மாற்றே இல்லை என்று எட்மண்ட் பர்க் கூறியிருக்கிறார். இந்தி பேசாத பகுதிகளில் இந்தியைத் திணிப்பது இத்தகைய பெரும்பான்மையினர் நடத்தும் கொடுங்கோன்மைக்கேற்ற உதாரணமாகும்.

''இந்தப் பின்னணியில் தான் தாய்லாந்தில் தங்களையே சர்வபரித்தியாகம் செய்து கொண்டனர் புத்தத் துறவிகள். இவர்களை பின்பற்றியே

உயிர்த் தியாகம் செய்து கொண்டுள்ளார் சின்னச்சாமி. அது பற்றிச் சிந்திக்க வேண்டும். தி.மு.க. உறுப்பினர் சின்னச்சாமி இந்தி எதிர்ப்பின் சின்னமாகவும், இந்தி வெறியர்களுக்கு எச்சரிக்கை யாகவும் ஆகிவிட்டார்."

'டெக்கான் ஹெரால்ட்' குறிப்பிட்டதைப் போலத் தாய்லாந்தில் மட்டுமின்றித் தெற்கு வியெட்நாமிலும் அத்தகைய தியாகங்கள் அந்த நாளில் நிகழ்ந்தேறிய வண்ணம் இருந்தன. அங்கே உரிமைகள் மறுக்கப்பட்டு-உணர்வுகள் பொசுக்கப்பட்டு மாளாத் துயருக்கு ஆளான புத்த பிட்சுக்கள் மீளாத் துயில் கொண்டனர் தீக்குளித்து. அவர்களைப் பற்றிய செய்திகளைப் படித்துப் படித்துத்தான் தாமும் ஏன் அத்தகைய தியாகங்களைச் செய்திடக்—கூடாது என்கிற உணர்ச்சித் துடிப் பினுக்கு இடந்தந்து உயிரையே மடித்துக் கொண்டு விட்டார் சின்னச் சாமி.

28-1-64-இல் அந்த மாவீரனின் கல்லறைக்குச் சென்று, என் இறுதி அஞ்சலியைச் செலுத்தினேன்.

கரூர் நகராட்சி மன்றத் தேர்தல் நிதிக்காக 2-2-64-இல் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய நான், இறுதியாக, "...அவனது எழிலார் முகம் செந்தீயால் வெந்த போதும், தன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பீரிட்டு வந்த தாய்மொழி உணர்ச்சியால் 'தமிழ்த் தாய் வாழ்க! இந்தி ஒழிக!' என்று முழங்கியவாறே தன் உயிரைத துறந்திருக்கிறான் அந்த மாவீரன் இன்று முதல் 'சிங்கத் தமிழன் சின்னசாமி' என்றே அழைப்போமாக!" என்று குறிப்பிட்டேன்.

அந்தத் தியாகச் சுடரின் திரு உருவப் படத்தைத் திருச்சி தேவர் மன்றத்தில் 6-12-64-இல்திறந்து வைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

98

அடக்குமுறைக்கு இடையே நகராட்சித் தேர்தல்

தமிழகம் எங்கணுமுள்ள நகராட்சிகளுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் 1964-பிப்ரவரித் திங்களில் தேர்தல்கள் நடைபெற்றன.

திரு காமராசர் அவர்கள் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகவே செல்வாக்கின் உச்சக் கட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த காலம் அது. என்ருலும் தமிழகத்திலுள்ள சாதாரண நகராட்சிகளையும், மாநகராட்சியினையும் மறந்திட முடியவில்லை, அந்த மாமனிதரால், தேர்தல் வேலைகளிலே அவரே தீவிரமாக இறங்கி விட்டார் நேரடியாக.

முதலமைச்சர் பக்தவத்சலமோ தம்முடைய பங்கிற்கு,அடக்குமுறைகளை அவிழ்த்து விடுவதில் அஞ்சாமல் காரியமாற்றினர். தேர்தல் களத்திலே தேனீக்கள் போல் பணியாற்றிடும் கழகச் செயல் வீரர்களையெல்லாம் கொட்டடியிலே தள்ளுவதிலேயே குறியாயிருந்தார் அவர். 'சீப்பை ஒளித்து விட்டால் திருமணமே நின்றுவிடும்'- என்ற அழுகிப் போன நம்பிக்கையிலே அசைக்க முடியாத பிடிப்பு வைத்துக் காவல் துறையினரை ஏவிவிட்டார் கழகத்தின் மீது.

குறிப்பாக, 22-2-64-இல் சென்னை மாநகராட்சித் தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற அந்த அடக்குமுறைத் தாண்டவங்களைப் பொறுக்க முடியாத நான் ஒரு கண்டன அறிக்கையினை வெளியிட்டேன் அடியிற்கண்டவாறு

.காங்கிரசாரின் தூண்டுதலின் பேரில் ஏராளமான கழகத் தோழர்கள் இன்று காலை முதல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டத்திலும் இந்த அக்கிரமம் நடைபெறுகிறது. இப்படிப் போலீசாரை வைத்துக் கொண்டு மிரட்டி, காங்கிரஸ் வெற்றி பெற முயல்வதைக் காட்டிலும் வெட்கக்கேடான விஷயம் வேருென்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 'உங்கள் நண்பன்' என்று (போலீசாருக்காகப்) படம் எடுத்துவிட்டால் மட்டும் போதாது. போலீசார் உண்மையில் 'நண்பனுக' வும் இருக்க வேண்டும். காங்கிரசைப் பார்த்து 'உங்கள் நண்பன்' என்று கூறிக் கொண்டு இருக்கக் கூடாது. இந்தக் கொடுமை இன்று இரவும் தொடருமேயானால் தலைமைக் கழக அனுமதி பெற்று நானும் மற்றும் சில முக்கியமானவர்களும் நாளைக் காலையில் அக்கிரமத்தைக கண்டித்து அமைதியான முறையில் எங்களை அடக்குமுறைக்கும் பலியாக்கிக் கொள்வது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேம்."

இவ்வாறு அறிக்கை விடும் அளவுக்கு அன்று கோலோச்சிய ஆளும் காங்கிரசார் கொடுமைகளைப் புரிந்திட்ட போதிலும், அண்ணாவும், மற்ற கழக முன்னணியினரும், காராக்கிரகத்தில் அடைபட்டுக் கிடந்த நிலையிலும், எதிர்பார்த்ததற்கு மேல் வெற்றிக் கனிகளையே கொய்தது கழகம். அதற்கு முன்னர் இருந்ததை விட அதிகமான எண்ணிக்கை யில் நகராட்சி மன்றங்களையும் சென்னை மாநகராட்சியையும் கழகமே கைப்பற்றியது.

அந்தத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளைச் சீரணித்துக் கொள்ள முடியாத காங்கிரசார், அப்போது நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் திலும் தங்கள் ஆற்ருமையைக் காட்டினர். வயிற்றெரிச்சலைக் கொட்டி வசைமாரி பொழிந்தனர். தேர்தலின்போது தீக்குளித்த சின்னச்சாமி யின் படம் வெளியிடப் பட்டதைப் பற்றி ஏளனமாகவும் பேசினர்.

நிதி நிலை அறிக்கை பற்றிய விவாதத்தில் அப்போது கலந்து கொண்ட நான் அந்தப் படம் வெளியிட்டது பற்றி இவ்வாறு குறிப்பிட் டேன்:

''தேர்தலின்போது சின்னச்சாமியின் படம் வெளியிட்டதைப் பற்றி இங்கே பேசப்பட்டது. எனது நண்பர் அன்பில் தர்மலிங்கம் இது பற்றி, 'இறந்தவர்களுக்கு ஒரு மரியாதை கூடக் கொடுக்கக் கூடாதா?' என்ருர்.

''அதற்கு முதலமைச்சர் (பக்தவத்சலம்) 'மரியாதை செலுத்தலாம்; ஆனல், படமாக வெளியிடக் கூடாது' என்ருர். எங்களைப் படம் போடக்கூடாது என்று கூறிவிட்டு, மாநகராட்சித் தேர்தலில் திருப்பதி வெங்கடேசுவரர் படத்தையும் போட்டு, காளை மாட்டுச் சின்னத்தைப் போட்டு வெளியிடுவது பண்பா என்று முதலமைச்சரைப் பணிவோடு கேட்கிறேன். மதத்தின் பெயரால் – மதப்பிரச்சாரத்தால் – கடவுள் படங்களைப் போட்டுத் தேர்தல் பிரச்சாரம் செய்யக் கூடாது என்று தேர்தல் சட்டம் இருப்பதாக எனக்குக் கவனம். நீங்கள் மாத்திரம் பெரியசாமியின் படத்தைப் போடும்போது சின்னச்சாமியின் படத்தை நாங்கள் போட்டது தவரு?''

-இந்த என் வினவிற்கு எந்த விடையும் பகர்ந்திடவில்லை. அப்போதைய முதலமைச்சர்!

தமிழகச் சட்ட மன்றத்திலே திருவள்ளுவர் படத்தினைத் திறந்து வைத்திட வேண்டும் என்று நான் வற்புறுத்தி வந்ததைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். 1959-லேயே நான் எழுப்பிய கோரிக்கை ஐந்து ஆண்டுகள் கழித்து 1964 பிப்ரவரி 23-ல் தான் கோலாகலமாகத் தமிழர் களின் உள்ளமெல்லாம் குளிர்ந்திடும் வண்ணம் நிறைவேறிற்று.

அன்று மாலை; அப்போது இந்தியக் குடியரசின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் தமிழகச் சட்ட மன்றத்தில் திருவள்ளுவர் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்திட்டார்.

அந்த விழாவினைப் பொறுத்த மட்டில் நண்பர் ப. உ. சண்முகத்திற்கு மட்டும் ஒரு வருத்தம் உண்டு. அதனைச் சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலேயே கொட்டி விட்டார் இப்படி:

"1959-ஆம் ஆண்டு சட்ட மன்றத்தில் திருவள்ளுவர் படத்தை மாட்ட வேண்டும் என்று கூறினார் கலைஞர் கருணாநிதி. அப்போதிருந்த அமைச்சர் சுப்பிரமணியம், திருவள்ளுவர் படத்தைக் கருணாநிதி தரட்டும்; ஆனால் அதைச் சட்டமன்றத்தில் மாட்டமுடியாது. வெளியே தாழ்வாரத்தில் மாட்டுவோம்" என்றார். அதற்குப் பிறகு அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. இப்போது மீண்டும் கலைஞர் கருணாநிதி, திருவள்ளுவர் படத்தைப் பற்றி வலியுறுத்தினார்...ஆனால் படத் திறப்பு விழாவின்போது யார் இந்தப் படத்தைப் பற்றி ஏதாவது பேராடினாரோ-யார் இந்தப் படத்தை வைக்கப் பிடிவாதமாக வற்புறுத்தினாரோ-அந்த ஜீவனைப் பற்றி—கலைஞர் கருணாநிதியைப் பற்றி—ஒரு வார்த்தைக் கூடக் கூறவில்லை..."

—நண்பர் ப.உ.ச.வின் அந்தப் பேச்சை இங்கு நான் எடுத்துக் காட்டிட விரும்பியது. வள்ளுவரிடம் எந்த அளவிற்கு காங்கிரசுத் தலைவர்கள் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைப் பொதுமக்களும் அறிந்திட வேண்டும் என்பதற்காகத்தான்.

மற்றபடி நண்பர் ப.உ.ச.வுக்கு உண்டான வருத்தம் எனக்கு அறவே ஏற்பட்டிடவில்லை. எப்படியாவது தமிழகச் சட்ட மன்றத்திற்கு வாழ்க்கையின் வழிகாட்டி- வாய்மை மொழியின் சொந்தக்காரர்-வள்ளுவப் பெருந்தகை-வந்து சேர்ந்தாரே என்கிற எல்லையற்ற மகிழ்ச்சிதான் எனக்கு!

அன்றிருந்த அரசியல் மேக மூட்டங்களுக்கிடையில்— அடக்கு முறைக் கொடுமைகளுக்கு மத்தியில் ஆளுங்காங்கிரசாராலும் அவர்களுக்குத் தாளம் போடுவோராலும் அவதூறுகள் அள்ளி வீசப்பட்ட நிலையில் சென்னை மாநகராட்சி திரும்பவும் தி. மு. க. வசம் வந்தது, பெறுதற்கரிய வெற்றியாகவே அப்போது பேசப்பட்டது.

அந்த வெற்றியினையொட்டி 5-4-1964-இல் விழா ஒன்று ஏற்பாடாயிற்று, சென்னை வண்ணாரப் பேட்டையில். அதில், பங்கு கொண்டிட்ட காலஞ்சென்ற நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி அவர்கள் எனக்கும், என்.வி.என்., திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோருக்கும் கேடயங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

அந்த நாளில் திரையுலகில் கதாநாயகர்களாகவே காலடி எடுத்து வைப்பவர்களுக்கு நடிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது; பாடவும் அவர்கள் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். பின்னணிக் குரல்கள் எல்லாம் முன்னணிக்கு வந்து முழங்கிடாத காலம் அது.

அவ்வாறு இசை, நடிப்பு இரு கலைகளிலுமே ஈடுபாடு கொண்டு பெரும் புகழ் குவித்தவர்களே பி.யு. சின்னப்பா, எம்.கே. தியாகராச பாகவதர் முதலானோர். அவர்களைப் போலவே நடிப்பு, இசை இரண்டிலுமே புலமை பெற்றவராகத் தன்மானத்திராவிடர் இயக்கத் திற்குக் கிட்டிய தனித் தாரகையாக— ஒளியினை உமிழ்ந்தவரே கே. ஆர். ராமசாமி.

ஒருவர் சிறைக்குச் சென்றிட்டால்-அதுவும் கிரிமினல் வழக்குகள் தொடுக்கப்பட்டுச் சிறைக்குச் சென்றிட்டால்-அவரைப் புறக்கணித்து விடுதல்- புறங்கூறித் திரிதல்- திரும்பிப் பாராமல் முகத்தைத் திருப்பிக் கொள்ளல்- இவையெல்லாம் முதிராத ஒரு மனித சமுதாயம் கையாண்டிடும் இயல்பான போக்குகளோ. அத்தகைய போக்குகளாகிய தளைகளை விட்டுத் தம்மை நீக்கிக் கொண்டு சிறை சென்றவரின் அருமை பெருமைகளை நினைவு கூர்ந்து- மற்றவர்க்கும் நினைவூட்டிக்-கடமை யாற்றிடக் கிளம்புவதற்குத் தனியானதோர் நெஞ்சுரமே வேண்டும்.

திரு. கே. ஆர். ராமசாமி அவர்களுக்கோ அந்த நெஞ்சுரம் நிரம்பவே இருந்தது.

இல்லியென்ருல் தந்தை பெரியாரின் கசப்பு மருந்துக் கருத்துக் களுக்கு நகைச்சுவைத் தேன் தடவி அவற்றை வெள்ளித்திரை மூலம் அள்ளி வழங்கிய கலைவாணரின் சிறந்த பணிகளை மறந்திடாமல் ஏதோ ஒரு சூழ்நிலையில் கெட்ட கனவைப்போல் சிறை செல்ல நேர்ந்திட்ட அவருடைய பெயர் மக்களின் மனத் திரையை விட்டு மறைந்திடா வண்ணம் 'கிருஷ்ணன் நாடக சபா' என்கிற ஓர் அமைப்பினையே கே. ஆர். ஆர். தோற்றுவிப்பாரா? அதன் மூலம் தஞ்சை இராமநாதன் செட்டியார் கலைக் கூடத்திலும் பிற் இடங்களிலும் அண்ணுவின் 'ஓர் இரவு', 'வேலைக்காரி'-முதலான நாடகங்களைப் பல வாரங்கள் அவர் நடத்தியதை-அவரும் அவற்றில் நடித்ததை-யார் தான் மறந்திட இயலும்?

அத்தகு நிகரற்ற நெஞ்சுரம் கொண்ட நடிப்பிசைப் புலவரின் கையால் வண்ணையம்பதி வெற்றி விழாக் கூட்டத்தில் கேடயங்களைப் பரிசாகப் பெற்றிட்ட போது நான் பெருமகிழ்ச்சியை அடைந்தேன்.

அப்போது இவ்வாறு நான் குறிப்பிட்டேன் :

''கேட்டயர் அளிக்கிறார்களே' என்றாலே 'எதிரிகள் தாக்குதல் அதிகமாக இருக்கிறது' என்பதுதான் பொருள். அந்தத் தாக்குதலிலிருந்து தாங்க வேண்டுமென்பதற்காகவே இந்தக் கேடயங்கள்.

''நமக்கு வெற்றி கிடைக்கும் இதே நேரத்தில் காங்கிரசுக்கும் காமராசருக்கும் தோல்விமேல் தோல்வி கிடைக்கிறது.

''கடலை சாப்பிடுவதைப் பார்த்திருப்பீர்கள்; முதலில் நல்ல கடலையாகச் சாப்பிட்டுவிட்டுக் கடைசிக் கடலையைச் சாப்பிடும்போது அது எண்ணெய்க் கடலையாக-கசப்புக் கடலையாக இருக்கும். அந்தக் கசப்புச் சுவையைப் போக்க, அடுத்தவர் வைத்திருக்கும் கடலையில் 'நல்ல கடலை ஒன்று தா!' என்று கேட்டு வாங்க வேண்டிய நிலை இருக்கும்.

''அது போலத்தான் அரசியலில் இதுவரையில் நல்ல கடலை சாப்பிட்டு வந்த காமராசர், இப்போது கசப்புக் கடலையைச் சாப்பிடத் துவங்கியிருக்கிறார். அந்தக் கசப்புச் சுவை போக்கக் காமராசர் அடுத்தவரிடம் ஒரு நல்ல கடலையைக் கேட்டாலும் கொடுப்பதற்கு ஆளில்லாத நிலைமை உருவாகி வருகிறது...''

-அன்று நான் சாதாரணமாகக் கூறிய உவமை எந்த அளவுக்குப் பொருத்தமுடையது என்பதனை இந்த நாட்டின் அரசியல் வரலாறு பின்னர் காட்டிக் கொண்டு தான் வந்திருக்கிறது-வருகிறது.

மதுரையில் நடைபெற்ற சட்ட எரிப்பு அறப்போரினையொட்டி என் மீது வழக்குத் தொடரப்பட்டது அல்லவா? அது சம்பந்தமான நீதிமன்ற விசாரணையின் பொருட்டு அடிக்கடி அந்தப் பாண்டி மாநகருக்குச் செல்வதும் சென்னைக்குத் திரும்புவதுமாக அலைந்த வண்ணம் இருந்தேன்.

1964 ஏப்ரல் 10-ல் மதுரைக்குப் போன நானே நீதி மன்றக் கட்டடத்திற்குச் சென்றதோடு நின்றிடவில்லை; ஒரு பள்ளிக் கட்டடத்தையும் பார்வையிட்டேன். மனப் பாரத்தோடு-மாளாத் துயரோடு.

ஏனெனில் அச்சமயம் 'சரசுவதி வித்யாலயா'—என்னும் அந்தப் பெண்கள் பள்ளிக் கட்டடத்தின் மேல் மாடி இடிந்து விழுந்து முப்பத்தைந்து இளம் மாணவிகளின் உயிர் ஒரே நேரத்தில் திடீரென்று போயிற்று. 139 மாணவிகள் பெருத்த காயங்களுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நெஞ்சையே குலுங்கிடச் செய்திட்ட கொடூர நிகழ்ச்சிதான் இது! தங்கள் தலைமீது மரணத்தின் தூதுவனாய் மாடிக் கட்டடம் பாய்ந்து வந்தபொழுது அந்த

இளந்தளிர்கள் எப்படியெல்லாம் நடுநடுங்கினவோ - துடிதுடித்துச் செத்தனவோ!

அந்தச் சம்பவம் நடந்த சில நாட்களுக்கெல்லாம் மதுரை சென்றிட்ட எனக்குத் தங்கள் உதிரத் துளிகளைப் பறி கொடுத்துக் கதறிடும் பெற்றோருக்கு ஆறுதல் கூறிடாமலும், பள்ளிக் கட்டடத்தைப் பார்வையிடாமலும் திரும்புவதற்கு மனமே வந்திடவில்லை.

அத்துடன் பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு உதவும் பொருட்டு மதுரை மாவட்டக் கலெக்டரால் திரட்டப்பட்ட நிதிக்குத் தி. மு. கழகத்தின் சார்பில் ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்கிற செய்தியினையும் அப்போது நான் அறிவித்தேன்.

99

புரட்சித் தீபம் அணைந்தது

இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞராக மலர்ந்து புரட்சிப் பொறிகளைப்-புதுமைச் சிந்தனைகளைத்-திரட்டுப் பாலொத்த தேன் தமிழ்ச் சொற்களிலே வாரி வீசியவண்ணம் இருந்த அணையாத கவிதைக் கனலாம் பாவேந்தர் பாரதிதாசன் 21-4-1964-இல் சென்னையிலே இயற்கை எய்தினார்.

ஈன்ற தமிழன்னையே இதயங்குமுறிக் கதறிப் புலம்பிட இலக்கிய உலகமே இடிந்து துவண்டு ஏங்கிப் பதறிட-உலகிலே எந்த மூலையில் தமிழ் பேசிடுவோர் இரைந்து கிடந்தாலும் அங்கெல்லாம் இருளின் நிழல் வேகமாய்க் கவிந்திட - தம்முடைய உடல் வாழ்வை விட்டுப் பிரிந்தார் அந்த ஒப்பற்ற மாக்கவிஞன்.

பாளைச் சிரிப்பு-
பசு நெய்யின் நறுமணம்
வாளைமீன் துள்ளல்-
வரிப்புலியின் கனல் பார்வை-

-எல்லாமே இணைந்திட்ட கவிதைச் சுரங்கமே பாரதிதாசன்.

பாற்கடலைப் பற்றிப் புராணங்கள் பகர்ந்திடக் கேட்டிருக்கிறோம் பாரதிதாசனோ 'பாக்கடலாகவே' பரந்து விரிந்து தமிழ் மண்ணின் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார்.

அந்தக் கடலிலே-
உவமையழகு-
உணர்ச்சித் துடிப்பு-
புதுமை நோக்கு-

புரட்சி வெடிப்பு-

-அனைத்துமே அலைகளாகப் பொங்கியெழுந்து சீறிப் பாய்ந்தன-சிலம்பமும் ஆடின.

அவருடைய உருவமே மிடுக்கானது; அவர் தம் உள்ளமோ அதை விட மிடுக்கானது; அந்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய

சொல்லாட்சியோ எல்லாவற்றையும் விட மிடுக்கானது; இழிதகை மையை-ஈனச் செயல்களை-மிதித்துத் துவட்டக்கூடியது

''கொலை வாளினை எடடா-மிகு
கொடியோர் செயல் அறவே!''

-என்பன போன்ற புரட்சி தெறித்திடும் வரிகளை இன்னெருவரால் புனைந்திடத்தான் முடியுமா?

''சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு.
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைத்த
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்
கள்?''- எனக் கேட்டு,

''காண்ப தெல்லாம் தொழிலாளி செய்தான்-அவன்
காணத் தகுந்தது வறுமையா?
பூணத் தகுந்தது பொறுமையா?''

-என்றெல்லாம் தொழிலாளர் தோழராய் உரத்த குரல் எழுப்பிச் சமதர்மப் பூங்காவை சமைத்திட அவர் துடித்த துடிப்பினை யாரே மறுத்திட முடியும்?

''தட்டுப்படாதபெரும்-பொருட்கொரு
சாதியும் உண்டோடா!-படுவாய்
சாதியும் உண்டோடா!
மட்டற்ற செம்பொருட்கே-முரண்படும்
மதங்கள் உண்டோடா!''

-என்று சாதிச்சழக்குகளைச்-சாத்திரச் சடங்குகளை-ஆத்திரத்துடன் சாடிய ஆண்மையாளர்- அரிமாவும்-அவரே!

''கோரிக்கை யற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரில் பழுத்த பலா!-மிகக்
கொடியதென் றெண்ணிடப்பட்டதண்ணே குளிர்
வடிகின்ற வட்ட நிலா!''

-என்று பெண்டிர்க்காகக் கண்ணீர் வடித்திட்ட பேரன்புத் தாயுமாவார் அவர்!

''தமிழ் எங்கள் உயிர் என்பதாலே-வெல்லுந
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!''

-என்று போர்ப்பரணி பாடிய வீர மறவரும் அவரே ஆவார்!

திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கி என்னுலியன்ற தொண்டினை இயற்றி அதன் ஓராண்டு நிறைவு விழாவினை நான் நடத்திய காலை; அதனை வாழ்த்திடும் முகத்தான், அவர் வரைந்தனுப்பிய வீரங்கொப்பளித்திடும் வரிகள் இன்றைக்கும் என் இதயத்திலே ஈரங்காய்ந்திடாமல்தான் எழுச்சியினை-இனமொழி, நாட்டுப் பற்றினைச்-சூடேற்றிய வண்ணமே உள்ளன.

இவ்வாறு செந்தமிழ் வளர்ச்சிக்கும்-இந்தி எதிர்ப்பினுக்கும்-தொழிலாளர் நலனுக்கும்-தோகையர் வாழ்வுக்கும்-மொத்தத்தில் திராவிட இன நலனுக்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அந்தப் பாட்டுலகப் பகலவன் மறைந்தது, தமிழ் மண்ணிற்குப் பேரிழப்பாகவே முடிந்தது-காரிருளையே தந்தது.

'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா !
காடு கமழும் கற்பூரச் சொற்கோ !
கற்பனை ஊற்றுழ் கதையின் புதையல் !
திறம்பாடவந்த மறவன்; புதிய

அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் 'படை மருந்து' !
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன் !
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன் ! '

-என்றெல்லாம் பாரதியாரைப் பற்றிப் பாடினாலும் அந்தவைரி வரிகள் தமக்கே பொருந்திடுமாறு வாழ்ந்திட்ட பூரட்சிப்பாவலரினை!

''ஆசைக் குழந்தைகளே !
அன்பு மனையாளே !
ஓசைப் படாமல் இருப்பீர்;
ஒதுங்கிநிற்பீர் !

துன்பத்தைக் கொஞ்சம் சுவை
பார்க்கப் போகிறேன்
இன்பத்தை நீட்டாதீர்
என்னிடத்தில்-''

-என்று சொல்லாமல் சொல்லித் துயில் கொண்டு விட்டார் பாமாலை பல தந்திட்ட அந்தப் பாமலை !

சென்னை அரசினர் மருத்துவமனையில் இறந்திட்டார் என்கிற செய்தி எட்டியதுமே நானும் நண்பர்களும் விரைந்திட்டோம் அவர் இல்லத்திற்கு; அவருடைய காலடிகளிலே பூமாலைகளோடு-கண்ணீர் மாலைகளையும் காணிக்கையாக்கினேம் இறுதி அஞ்சலியாக.

கழகத்தின் கொடிகள் எல்லாம் மூன்று நாட்கள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன துக்கத்தின் அறிகுறியாக.

ஆனால் அவர் தோன்றி வாழ்ந்த புதுவையிலே அன்றிருந்த காங்கிரஸ் அரசோ எந்த மரியாதையும் செலுத்தவில்லை. கட்சிக் கொடிகளை இறக்குகின்ற மரியாதையைக் கூடக் காங்கிரஸ் கட்சி காட்டிடவில்லை.

1969-இல் உதயமாகிய தி. மு. கழக அரசுதான் புதுவை மாநிலத்தின் புரட்சிக் கவிஞருக்குச் சகல விதமான அரசு மரியாதை களையும் தெரிவித்தது.

அவர் பிறந்த வீட்டை அரசே விலைக்கு வாங்கி நினைவுச் சின்ன மாக்கி அங்கே நூல் நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

ஆண்டுதோறும் அவர் பிறந்த நாளுக்கு அரசாங்க விடுமுறை தந்து விழா எடுத்து வருகிறது.

அவர் பாடியுள்ள 'வாழ்வினிற் செம்மையைச் செய்பவள் நீயே!' என்ற பாடலை அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்த் தாய் வாழ்த்து என ஆக்கியது நமது கழகப் புதுவை அரசு.

''பாரதி பாடென்று சொன்ன
வுடன் பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி
புகழ்ந்த புலவன்...

கனக சுப்புரத்தினம் என்று காத தூரம் இருந்த பெயரைப் பாரதி தாசனென்று கச்சிதமாய்ச் சூட்டிக் கொண்டான்...

களம் சென்று தமிழ்காக்கக்
கச்சு இதமாய்க் கட்டிக்
கொண்டான்..
நிமிர்ந்த நோக்கு-
நெரித்த புருவம்...
நீர்வீழ்ச்சி ஓசை-நெற்
கதிர்க்கட்டு மீசை...

பாட்டெழுதும் வித்தையிலே
பாரதி-ரசவாதம் கற்றவனும்-
இவனைப்
பார்; அதிரசவாதம் கற்றவனும்-
அத்துணை இனிப்பு; இவன் பாட்டில்...
விஞக்குறியா?...
வெடிக்கும் எரிமலையா?
புரட்சிக்கவிஞனெனப்
புவியொப்பி மாலைபோடப்
போதாதோ இவ்வரிகள்?...
இவனோர்
சுருட்டுக்கவிஞன்-புகைச்
சுருட்டுக்கவிஞன்-இவன்
புரட்டுக்கவிஞனவான்;
மூடப்பழக்கமெலாம் தலைகீழ்ப்
புரட்டுக்கவிஞனவான்...
அமளி துமளி ஆர்ப்பாட்டம்
அணிவகுப்பு!
அமைதியிலே உலகுவாழப்
புதுவைக்குயில்-கூவாதோ?
கருத்துக் கவிஞன்; சற்றுக்
கறுத்த கவிஞன்
காலக்கவிஞன்: முக்காலக் கவிஞன்...
அவன்

சுவையாய்த் தமிழுக்கு அருவியின் பாடல்;
அமைவாய்க் கண்ட அற்புதம் என்னே!
இருண்ட வீட்டில்
குடும்ப விளக்கேற்றி வைத்தார்;
இசையமுது பொழிந்து, அதற்குப்
'பாண்டியன் பரிசு' பெற்றார்...நமக்குக்
குறிஞ்சித்திட்டுமுண்டு 'குயில்'
இதழ் நடத்தும்போது...
கவிதை;
'அழகின் சிரிப்'பாலே தமிழியக்கம் கவர்ந்துவிட்டார்...
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார்...அவர்
காதல் நினைவாலே கவிப்
பெண்ணை வாடவிட்டுச் சாவின்
'எதிர்பாராமுத்'தத்தால் பிரிந்துவிட்டார்...

என் ஆசான் பாரதியைப் பார்ப்பேன் எனப்
பறந்து விட்டார்...”

பம்பாயில் நடைபெற்ற கவியரங்கில் பாரதிதாசனைப் பற்றி நான் பாடிய கவிதை வரிகளில் சிலவே இவை!

சென்னையில் இயற்கை எய்திய புரட்சிக் கவிஞரின் சடலம் மறுநாள் 22-4-1964 அன்று புதுவைக்குக் கொண்டு செல்லப் பட்டு அங்கே பெருமாள் கோவில் தெருவிலுள்ள அவரது இல்லத்திலே பார்வைக்கு வைக்கப்பட்டது.

1964-ஆம் ஆண்டில், அண்ணு அவர்களின் பெரு முயற்சியால் ரூ. 25,000 கொண்ட பொற்கிழியும், பொன்னாடையும் பாவேந்தருக்கு வழங்கப்பட்டன அல்லவா? அதே பொன்னாடை அவருடைய சடலத்தின் மீது, இறுதி நாளிலும் போர்த்தப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ள நானும் சென்னையிலிருந்து புதுவை சென்றேன். நாவலர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., டி.கே. சண்முகம் முதலான தலைவர்களும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களும் ஊர்வலத்திலே கலந்து கொண்டனர்.

பாவேந்தரின் மறைவினை ஒட்டி அடியிற்கண்டவாறு ஓர் இரங்கல் செய்தியினையும் அப்போது நான் விடுத்திருந்தேன்:

“புரட்சிக் கவிஞர் மறைந்து விட்டார்-

புதுவைக் குயில் பறந்து விட்டது!”

“தமிழகத்தில் ‘குடும்ப விளக்கை’ ஏற்றி வைத்தார்-‘பாண்டியன் பரிசை’ வழங்கினர். ‘அழகின் சிரிப்பை’ அள்ளிக் கொட்டினர். அவரது ‘எதிர்பாராத முத்தம்’ பெற்ற கலை அழகி அன்றலர்ந்த செந்தாமரையானாள்.”

“கடவுள் பெயரால்-மதத்தின் பெயரால்-இழைக்கப் படும் கொடுமைகளைச் சாடினர்.”

“பகுத்தறிவு புரியின் காவலர்களாக அவரது பழைய கவிதை வரிகளை நிறுத்தி வைத்துவிட்டு, அவர் போய் விட்டார்.”

“பாரதிதாசன்- என்பது இனி ஒரு தனி மனிதரின் பெயரல்ல-தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத் தொகுப்பின் பெயர்.”

“அந்தப் பாரதிதாசனை என்றென்றும் நம்மிடையே வைத்துப் போற்றுவோம்.”

100

நேரு மறைந்தார்

மதுரை சட்ட எரிப்பு அறப் போர்த் தொடர்பாக என் மீதும், என்.வி.என். மீதும் மதுரை கழக முன்னணியினர் மீதும் தொடரப் பட்டிருந்த வழக்கில் 8-5-64-இல் மதுரை மாவட்ட நீதித் துறை மாஜிஸ்டிரேட் அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன்படி, எனக்கும் என்.வி.என். அவர்களுக்கும் ஆறுமாதக் கடுங்காவல், முத்து அவர்களின் தலைமையில் சட்ட எரிப்பிலே ஈடுபட்ட ஐவர் அணியினருக்கு ஓராண்டுக் கடுங்காவல். மன்னை நாராயணசாமிக்கு ரூ. 200 அபராதம்-கட்டத் தவறினால் இரண்டு மாதக் கடுங்காவல். ஐவர் அணி மட்டும் தண்டனையை ஏற்றுச் சிறைக்குச் சென்று விட்டது. எனக்கும், மற்றத் தோழர்களுக்கும் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்துச் சென்னை உயர்நீதி மன்றத்தில் 'அப்பீல்' செய்யப்பட்டது.

அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, என்னையும் மற்ற தோழர்களையும் பொறுப்பில் விடுவித்திட ஆணை பிறப்பிக்கப் பட்டது.

சென்னையை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முதற்களமாகத் தேர்ந்தெடுத்து, அங்கே ஆட்சி மொழி பற்றிய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவினை எரித்திட அண்ணா திட்டமிட்டிருந்ததை அறிந்து அவரை முன்கூட்டியே கைது செய்து ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையையும் பரிசாக அளித்திட்டதல்லவா காங்கிரஸ் அரசு?

விசையொடிந்த தமிழினந்தான் வீறுகொள்ள- வேற்றுமொழி ஆதிக்கம் தோற்று ஓட- வெங்கொடுமைச் சிறை வாசத்தை ஏழாவது முறையாக ஏற்றிட்ட அண்ணா-1964 ஜூன் 13-இல் விடுதலை செய்யப்பட்டார்.

அன்று விடியற்காலையிலேயே, தமிழகத்திற்கு 'விடிவு காலம்' கொணர்வதற்காக வந்துதித்த அண்ணாவையும் அவரது குழுவினரையும் வரவேற்றிடச் சென்னை மத்தியச் சிறைச்சாலை வாயிலுக்கு நானும் மற்றத் தோழர்களும் சென்றுவிட்டோம்.

ஏராளமான மலர் மாலைகள்- கைத்தறி ஆடைகள் சிறை மீண்டதியாகத் திருவிளக்குகளுக்கு அணிவிக்கப்பட்டன. அப்போது கழகக்

கண்மணிகள், தாய் முகம் கண்ட சேய்களாகவே மாறி ''இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! அண்ணு வாழ்க! அறப்போர் வீரர்கள் வாழ்க!'' என்று உவகை மேலிட உற்சாகம் பொங்கிட- எழுப்பிய முழக்கங்கள் விண்ணையே பிளப்பதாக எதிரொலித்தன நெடுநேரம்!

''உலகின் மனச்சாட்சியாகவே அவர் விளங்கினர்''—என்று பிரிட்டிஷ் ஏடான 'டிரிபியூன்' வர்ணித்திடும் அளவுக்கு வையகம் எங்கணும் புகழ் மணக்க வாழ்ந்திட்டவர் நடுநிலைமைக் கொள்கைக்காக வாதிட்டவர்-அடிமைத் தளையை அறுத்தெறியப் போரிட்டவர் - பண்டித ஜவகர்லால் நேரு.

அவர், 1964 மே மாதம் 27-ஆம் நாள் இயற்கை எய்திவிட்டார் என்கிற செய்தி உலகையே சோகத்தில் ஆழ்த்திவிட்டது.

மாவீரன் கென்னடி மறைந்து ஆறு திங்களே ஆகியிருந்தன; அந்த அதிர்ச்சித் தீ அணைந்திடும் முன்பே - ஆறுத் துயரிலிருந்து மீண்டிடும் முன்பே - நேருவின மரணம் ஜனநாயக நெஞ்சங்களுக்கும் - சமாதான உணர்வுகளுக்கும் - பேரிடியாக வீழ்ந்தது.

அவர் கொண்டிருந்த சில கொள்கைகளிடம் - சிற்சில சமயங்களில் அவரிடம் கொப்பளித்திட்ட கோபதாபங்களிடம் கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது எழுந்திட்ட போதிலும், அவற்றுக்காகக் கண்டனக் கணைகளைத் தொடுத்திட்ட போதிலும், அவருடைய தியாகத் தழும்புகளைச் - சீர்திருத்த எண்ணங்களைக் - கிழக்கையும் மேற்கையும் உலக அமைதிக்காக இணைத்திட முயன்றிட்ட அவரது இடையருத முயற்சிகளை - நான் உயர்வானவையாகவே மதித்து வந்திருக்கிறேன்.

நேருவைப் பற்றி ஒரு கணம் நினைத்திடும் பொழுது—

குழந்தைகளைக் கண்டால் நேருவும் குழந்தையாகவே மாறிவிடுபவர் தான்; ஆனால் அறிவுத் தெளிவிலே அவர் குழந்தையாக இருந்ததில்லைதான்.

தம் நெஞ்சத்தில் ரோஜாவை வைத்துக் கொள்வதில் அவருக்கு எப்போதும் அலாதியான ஆசையே; ஆனால் வஞ்சத்தை ஒத்த முள்ளினை அவர் ஒரு போதும் அங்கே வைத்துக்கொண்டதும் இல்லைதான்.

அவர் உணர்ச்சிவசப்படக் கூடியவரே; ஆனால் மற்ற மனிதர்களின் உணர்வுகளை மதித்திடுவதற்கு அவர் ஒரு நாளும் மறுத்ததும் இலலை மறந்ததும் இல்லைதான்.

இலட்சியங்களை முழங்கிடுவதில் அவர் எப்போதுமே வேகம் கொண்டவர்தான்; அதே சமயம் அவற்றை நிறைவேற்றுவதில் வெறி பிடித்தவரும் இல்லைதான்.

''சோஷலிசம்'' அவருக்குச் சுவையான பொங்கல்தான்; அதற்காகச் சுத்தி 'அரிவாளைக்' கொண்டு அதனைச் சமைக்கவோ சுவைக்கவோ அவர் நினைத்ததும் இல்லைதான்.

ஜனநாயக நெறி நின்றே சமதர்மப் பூங்காவைச் சமைத்திட முடியும் என்று உறுதியாக நம்பியவரே நேரு.

அத்தகைய சிந்தனைக் கதிரொளியை அவருக்குத் தந்திட்டவரும் மேனாட்டுத் தத்துவ மேதை பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்களே!

இந்தியத் துணைக் கண்டத்தில் மற்றவர்களுடைய வெறுப்பினைப் பொருட்படுத்தாமல், கடவுள் மறுப்பினைத் துணிந்து துணிந்து சொல்லி தந்தை பெரியார் அவர்கள் எப்படிப் பகுத்தறிவுப் பகலவனைத் திகழ்ந்திட்டாரோ, அவ்வாறே மேலை நாடுகளில் தமக்கென்று புதிய பாதையினை வகுத்துக்கொண்டு புதுமைச் சிந்தனைப் பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தவரே பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள்.

இங்கிலாந்தில் தோன்றி 'சோஷலிச' சித்தாந்தங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த அவர் ஒரு முறை சோவியத் நாட்டிற்குச் சென்றார். கார்ல் மார்க்சின் கனவு நனவாகிப் பொதுவுடைமைத் தத்துவம் முதன் முதலாகப் பூத்துக் குலுங்கிடத் துவங்கிய பூமியல்லவா சோவியத் நாடு? ஆனால் அதைப்பார்த்துவிட்டுத் திரும்பிய பின்னரோ 'சோஷலிசம்' வன்முறை மூலம் வளர்க்கப்படுவதை வன்மையாகவே அவர் கண்டித்தார். அதனை ஜனநாயக வழியிலும் சாதிக்கலாம் என்று எடுத்துரைத்தார். 'ஜனநாயக-சோஷலிசம்' என்கிற சொல்லையே உருவாக்கினார். அவருடைய அந்தக் கோட்பாட்டினைத்தான் இந்தியாவிலும் கொணர்ந்திட முயன்றிட்டார் நேரு.

சோஷலிசத்தின் தந்தை பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் தான்; அதனை இந்திய மண்ணில் தளிர்த்திடச் செய்ய முயன்றவர் நேருதான். அவர் மறைந்திட்ட போது சென்னைச் சிறையிலிருந்த அண்ணா அவர்களைச் சந்தித்து நேருவின் மறைவை எடுத்துக் கூறினேன். சிறையில் இருந்தவாறு அண்ணா அவர்கள் நேரு மறைவு குறித்து அனுதாபச் செய்தியொன்று வெளியிட்டார்.

அத்தகைய மாமேதை - மத வெறியில்லாத பகுத்தறிவாளர்- மறைந்தார் என்று அறிந்ததும் ஆருத்துயரில் நான் ஆழ்ந்திட்டேன். நான் அப்போது நேரு பற்றி வானொலியில் அடியிற்கண்டவாறு பேசினேன் : 'கீர்த்தி நிலைத்தது' என்று தலைப்பு.

''மே திங்கள் இருபத்து ஏழாம் நாளன்று நம் செவிகளை அந்தச் சோகச் செய்தி தாக்கிற்று. செய்தி அன்று அது; செந்தீ

ஜனநாயகப் பாதுகாவலர் ஜவகர் கால்மாகிவிட்டார்-நம்பத்தான் முடியவில்லை. ஆனால் நடந்து விட்டதே! மறைவது இயற்கை. மண்ணுவது திண்ணம். மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள். இப்படி இந்த ஆறுதல் வார்த்தைகளாலும் அணைபோட்டுத் தடுக்க முடியாத சோக வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது.

''அத்தகைய பெருஞ்செல்வத்தை இழந்திருக்கிறோம். நம்பிக்கை நட்சத்திரம் மறைந்துவிட்ட ஏமாற்றத்தில் பெருமூச்சு விடுகிறோம். கடும் புயலில் சிக்கிய படகாகத் தவிக்கிறது நாடு. உலகத் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.

''உலகம் வல்லூறுகளின் வேட்டைக் காடாக - நாய் நரிகள் விருந்துண்ணும் ரணகளமாக மாறிவிடக் கூடாது எனப்பாடுபட்டு, அவர் பறக்கவிட்ட வெண்புறா, சிறகடித்துத் துடிதுடிக்கிறது. அவர் மறைந்த செய்தி கேட்டு! இமயம் முதல் குமரி வரையில் உள்ளோர் இதயங்களில் எல்லாம் இடம் பெற்றிருக்கும் உண்மையை உத்தமர் காந்தியாருக்குப் பிறகு பெற்றிருந்த ஒரே மனிதர் - ஒரே தலைவர் - பண்டித நேரு. அவர் இன்றில்லை. அவர் பேணி வளர்த்த ஜனநாயகக் கொள்கை இருக்கிறது. அதனை மேலும் சீர்பெறச் செயல்படுத்துவதுதான் இருப்பவர்கள் மறைந்தவருக்குச் செய்யும் மரியாதையாகும். மறைந்தவர் இந்த மண்ணுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இன்னும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத பணிகளும் இருக்கின்றன.

''அவர் தொட்ட பணிகளைத் தொடர்ந்து வெற்றி காண்பதுதான் அவருக்கு உளமார அமைக்கும் நினைவுச் சின்னமாகும். ஜனநாயகச் சோலையில் - பகுத்தறிவு மேடை கட்டிச் சமாதானக் கொடியை உலகமறிய உயர்த்திப் பிடித்தவர் மறைந்த உத்தமர் நேரு. அவருக்கு நாம் காட்டுகின்ற நன்றி, அந்தச் சோலை வாடாமல் மேடை சரியாமல் பாதுகாப்பதேயாகும். இன்னும் எத்தனையோ வேலைகளை நாடு அவரிடம் எதிர்பார்த்தது. அதற்குள் இயற்கை தன் வேலையை முடித்துக்கொண்டது. கிரீடம் நொறுங்கிவிட்டது. கீர்த்தி நிலைத்துவிட்டது, வாழ்க நேருவின் பெயர்!''

அன்று (27-5-1964) மாலை. மதுராந்தகம் ஊராட்சிப் பேருந்து நிலையத் திறப்பு விழாவிலே முக்கியமான பங்கினை ஏற்றிட நான் அழைக்கப்பட்டிருந்தேன். நேருவின் மறைவினையொட்டி உடனே அதை ரத்துச் செய்திடும்படி சொல்லிவிட்டேன்.

ஏடுகளுக்கு இரங்கற் செய்தியினை விடுத்ததுடன் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்; தற்காலிகத் தலைமையமைச்சர் குல்சாரிலால் நந்தா, திருமதி இந்திரா

காந்தி—ஆகியோருக்கு அடியிற்கண்டவாறு ஒரு தந்தியையும் அனுப்பி வைத்தேன்.

"நம் பேரன்புக்குரிய பண்டித நேரு அவர்களின் திடீர் மறைவு கேட்டு ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்தேன்; என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தலைமையமைச்சர் நேருவின் குடும்பத்தாருக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்."

2-6-1964 அன்று, நேருவின் மறைவினை யொட்டி இரங்கல் தெரிவித்திடும் வகையில் சென்னை கோகலே மண்டபத்தில் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடாகியிருந்தது மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பங்கேற்றிட்ட அதில் நானும் கலந்து கொண்டேன். அப்போது நான் அச்சம் பொருந்திய சில எண்ணங்களை அடியிற்கண்டவாறு எடுத்துரைத்தேன்:

"மாவீரர் நேரு அவர்கள் 74 ஆண்டுகள் வாழ்ந்தார்; தம் வாழ்நாளில் 9ஆண்டுகள் சிறையிலிருந்திருக்கிறார். 17 ஆண்டுகள் தலைமை அமைச்சராக இருந்திருக்கிறார்.

"இந்தப் பதினேழு ஆண்டை எதிர்பார்த்து அவர் அந்த ஒன்பது ஆண்டுச் சிறை வாழ்வை ஏற்கவில்லை. 'நம் கடமையைச் செய்வோம்; நடப்பது நடக்கட்டும்' என்றுதான் தியாகங்களைச் செய்தார்.

"அவருக்கு நாட்டு மக்கள்தான் ஆண்டவன்: அவர்களுடைய நெஞ்சந்தான் ஆலயம்; பொதுத் தொண்டுதான் பூசை-நைவேத்தியம்—எல்லாம்!

"புயலில் சிக்கிய படகாக நாட்டை ஆக்கி விட்டு அவர் மறைந்து விட்டார். 'நேரு இல்லையே!' என்று துக்கப்படும் இதே நேரத்தில் இன்னும் எதை எதையோ நினைத்து வேதனைப்பட வேண்டியும் உளளது.

"அவர் இருந்த நேரத்திலேயே இந்தி பேசாத மக்களுக்குத் தந்த உறுதி மொழியை ஊனப்படுத்தி விட்டார்கள். அவர் போன பிறகு அந்த உறுதி மொழியே உருக்குலைந்து போகுமோ என்ற ஐயம் நம்மை அச்சுறுத்துகிறது. இப்பிரச்சினை எப்படித் தீருமோ எனத் தேம்பியழும் நிலையில் நம்மை விட்டுவிட்டு மாவீரர் மறைந்து விட்டார்."

101

அன்பகம் – தமிழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் மக்கள் மனத்திலே ஆழமாக வேருன்றி ஆல்போல் தழைத்திடும் வேளையிலேயே, கட்சிக்குத் தேவையான நிர்வாக அமைப்பு வசதிகள் நிரந்தரமாக அமைந்திடும் வண்ணம் சில காரியங்கள் இன்றியமையாதவை என்றும் எண்ணப்பட்டது.

அந்த நோக்கோடுதான் கழகத்தின் தலைமை நிலையம் இயங்குவதற்கென்று வட சென்னை-ராயபுரத்தில் ஒரு கட்டடம் வாங்கப்பட்டு, அதுவே 'அறிவகம்' என்றும் அழைக்கப்பட்டது.

மிகக் குறுகிய காலத்தில் பல ஆயிரம் கிளைகளும் பல லட்சம் உறுப்பினர்களுமாகக் கழகம் வளர்ந்து கொண்டிருந்த வேகத்தில் அந்த 'அறிவகக்' கட்டடம் தலைமை நிலையம் இயங்குவதற்குச் சிறிய ஒன்றுகவே தோன்றியது.

எனவே தென் சென்னைப் பகுதியிலும் கழகத்திற்கு என்று ஒரு கட்டடம் வாங்குவது தேவையென்று கருதப்பட்டது. அவ்வாறே தேனும்பேட்டையில் ஒரு புதிய கட்டடம் வாங்கப் பட்டது.

15-6-64-இல் அதற்குத் திறப்பு விழா சிறப்போடு கொண்டாடப் பட்டது. கழகத்தின் பொருளாளர் என்கிற முறையில் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்குமாறு அண்ணு அவர்களையும், விழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்குமாறு நாவலர் அவர்களையும் நான் கேட்டுக் கொண்டேன்.

கட்டடத்திற்கு 'அன்பகம்' என்று பெயர் சூட்டினர் அண்ணு.

அப்போது அவர் சிந்திய சில சொற்கள் இன்னும் என் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குளுமையைப் பாய்ச்சிப் புளகமுறச் செய்கின்றன.

''இந்த அழகிய கட்டடம் நமது கழக வளர்ச்சியில் மேலும் ஓர் அத்தியாயம் ஆகும். முதலில் வட சென்னையில் வாங்கிய கட்டடத்துக்கு 'அறிவகம்' என்று பெயர் சூட்டினேம். இந்த கட்டடத்திற்கு 'அன்பகம்' என்று பெயர் சூட்டுகிறேன்.

தம்பி கருணாநிதி அவர்களைப் பொருளாளராகப் பெற்ற அன்றே இதைப் போன்ற பொருட்களை எல்லாம் கழகத்திற்கு அவர் சேர்ப்பார் என்று நம்பினேன்.''

—இந்தச் சொற்களைக் கேட்டதும் என்னுள் எழுந்திட்ட இன்பப் பூரிப்பினை எழுத்திலே வடித்திட இயலாது. தன்னுடைய தாய் உச்சி மோந்து கொஞ்சிடும் போது ஒரு சேய்க்கு உண்டாகக்கூடிய உவகை உணர்வினை நானும் அன்று அடைந்திட்டேன்.

'சென்னை மாநிலம்' என்ற பெயரைத் 'தமிழ்நாடு' என்று மாற்றம் செய்ய இந்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றினைச் சகோதரர் இராம. அரங்கண்ணல் சட்ட மன்றத்திலே கொண்டு வந்தார்.

ஆளுங் காங்கிரஸ் கட்சியினர் அதனை ஏற்றிடவில்லை; ஏற்காதது மட்டுமல்ல; ஏளனமும் புரிந்தனர்.

''தமிழ்நாடு' என்று பெயரை மாற்றி விட்டால் சோறு வருமா? வீடு கிடைக்குமா?" எனெல்லாம்கூட எகத்தாளமாக கேட்டனர்.

அந்தச் சொல்லிலே புதைந்து கிடக்கின்ற தன்மான உணர்வினைத் - தாய் மொழிப்பற்றைத் - தாயகப் பாசத்தை அவர்கள் இழித்தும் பழித்தும் ஏகடியம் பேசினர்.

கழகத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய அமைச்சர் திரு வெங்கட்டராமன் அவர்களோ, ''தமிழ்நாடு என்று சொன்னால் வெளி உலகில் இருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்? 'மெட்ராஸ்' என்றால்தான் புரியும். அதுமட்டுமல்ல; 'மெட்ராஸ்' என்று சொன்னால்தான் சர்வதேச அரங்கத்தில் கேட்கிற நேரத்தில் பெருமையாக இருக்கிறது.

– என்றெல்லாம் கூசாமல் அடுக்கினார் கூர் ஒடிந்த வாதங்களை.

வெளிநாடுகளுக்கு - ஏன் ஐக்கிய நாடுகள் மன்றத்திற்கே அப்போது அடிக்கடி சென்றிடக் கூடிய வாய்ப்பினைப் பெற்றிருந்தவர்தான் திரு வெங்கட்டராமன். ஆனால் ஆப்பிரிக்க மேற்குக் கடற்கரை நாடொன்று - 'கோல்ட் கோஸ்ட்' என்று வழங்கப்பட்ட நாடு ஒன்று 'காணா' என்று தன் பெயரினை இன உணர்வோடு மாற்றிக் கொண்ட வரலாற்று உண்மைகளை எல்லாம் மறந்து விட்டவர் போலத்தான் அவர் மறுப்பினைத் தெரிவித்தார், 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்திற்கு.

இந்தியாவிற்குள்ளேயே எத்தனையோ அமைப்புகள்-ஊர்கள்-மாநிலங்கள்-மொழிப் பற்றோடு பெயர் மாற்றம் பெற்றிடவில்லையா? ஏன், இந்தியாவே 'பாரதம்' என்றும்- (India that is Bharath) அழைக்கப்படவில்லையா? எல்லாருக்கும் எளிதில் தெரிந்த 'காசி'யோ 'வாரணாசி'யாக மாறி விடவில்லையா? 'பார்லிமென்ட்' என்பதும் 'லோக் சபா' ஆகிவிடவில்லையா? 'இந்தியாவின் வாசல்' என்பார்கள்

பம்பாயை. அந்தப் பம்பாய் மாநிலத்திலிருந்து 'குஜராத்' பிரிந்து போன பின்னர் அதனை 'மராட்டியம்' என்று மாற்றி அழைத்திட வில்லையா?

இந்த உண்மைகளையெல்லாம் வேண்டுமென்றே ஒதுக்கித் தள்ளி விட்டுத்தான் ஆளும் காங்கிரசாரும் அமைச்சர்களும் தமிழ்ப் பற்றில்லா தவர்களாக மட்டுமல்ல, தமிழையே பழிப்பவர்களாகவும் தங்கள் தரத்தினைக் குறைத்துக் கொண்டனர். தமிழுக்காகத் 'தமிழ்நாடு' பெயருக்காகக் குரல் கொடுத்த கழகத்தையும் குறைவாக மதித்தனர்; இளக்காரமாய் ஏசினர்.

அப்போது சட்டமன்றத்திலே கழகத்தின் சார்பில் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு செல்லப்பட்டதற்கு இன்னொரு பின்னணியும் உண்டு.

இந்திய நாடாளுமன்றப் பேரவையில்-ராஜ்ய சபாவில் இத்தகைய 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப் பட்டது.

அப்போது பதிலளித்த உள்துறைத் துணையமைச்சர் திரு. ஹஜர் நாவிஸ், ''பெயர் மாற்றத்திற்கு ஆதரவாக மாநில அரசு எப்போ தாவது அவர்களுடைய கொள்கையை வலியுறுத்தினால் அதனை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு பரீசீலிக்கும்" - என்று குறிப்பிட்டிருந்தார்.

1961-ல் அப்போது சட்ட அமைச்சராக இருந்த திரு. ஏ. கே. சென் அவர்களும், இதேவிதமான பதிலை-மாநில அரசிடமிருந்து பெயர் மாற்றங்குறித்துக் கோரிக்கை வருமானால் அந்தக் கோரிக்கையை நாங்கள் கவனிக்கிறோம்'- என்கிற பதிலை அளித்திருந்தார்.

1963-லும் அத்தகைய பதிலே மத்திய அமைச்சர்களால் தரப் பட்டது.

இவ்வாறு டில்லியில்-மத்திய அரசாங்கத்திலே இருப்பவர்கள், சென்னை மாநிலம் 'தமிழ்நாடாக' மாறுவது பற்றிய கோரிக்கைக்குச் செவி சாய்த்திடச் சித்தமாக இருந்திட்ட போதிலும், இங்கே தமிழ கத்தை ஆண்டிட்டவர்களுக்கு அந்தத் தாராளமான மனப்பான்மை-தன்மானந் தழுவிய தாய்மொழிப்பற்று-தினையளவும் இல்லை. எனவே தான் கழகத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

23-7-64-இல் திரு. இராம. அரங்கண்ணல் அவர்களால் கொண்டு செல்லப்பட்ட அந்தத் 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைக் காங்கிரஸ் அரசினர் ஏற்றிட மறுத்துவிட்டதால் அவர்களுடைய போக்கிற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் வகையில் கழக உறுப்பினர் களாகிய நாங்கள் சட்ட மன்றத்தை விட்டு வெளி நடப்புச் செய்தோம்.

எங்களோடு அப்போது சுதந்திரக் கட்சியினர் மட்டுமே வெளியேறி வந்தனர்.

102

எதிர்ப்புக் கனல்

இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்து நடைபெற்றிட்ட அறப்போரின் தொடர்ச்சியாகக் கோவையில் மத்தியத் தந்தி அலுவலகத்தின் முன்பு 28-7-1964 அன்று மறியல் போர் நிகழ்ந்தது. அதிலே ஈடுபட்ட நாவலர் அவர்களும், எஸ். ஏ. இராசமாணிக்கம், காலஞ்சென்ற ப. கோபால், பி. எஸ். சானகிராமன் முதலானவர்களும் கைது செய்யப் பட்டனர்.

அந்த மறியலிலே பங்கேற்றிடச் செல்லவிருந்த நாவலர் அவர் களுக்கு வழியனுப்பு விழா ஒன்றும் ஜூலை 26-இல் சென்னை திருவல்லிக் கேணியில் நடைபெற்றது. அதிலே கலந்து கொண்ட நான் இவ்வாறு குறிப்பிட்டேன்.

இந்தி எதிர்ப்புக் கனலை அணையவிடாமல் காத்திடும் பெரும் பொறுப்பு தி.மு. கழகத்தின் கையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

"கிராமங்களில் தாய்மார்கள் இரவு நேரத்தில் அடுப்பை அணைக்கும் போது அதில் சிறிதளவு கனல் இருக்குமாறு வைத்து விட்டுத்தான் அடுப்பை அணைப்பார்கள். மீண்டும் அடுப்புப் பற்ற வைக்கத்தான் அவ்விதம் அடுப்பில் கனலை விட்டிருப்பார்கள். அந்தக் கனல் பெரிதாகிக் கூரையில் பிடிக்காத வண்ணம் ஜாக்கிரதையாகவும் இருப்பார்கள்.

"கிராமத்துத் தாய்மார்களைப்போல் இந்தி எதிர்ப்புக்கனலை நாம் அணைந்துவிடாமல் காப்பாற்றி வருகிறோம்.

"நாம் இந்தி எதிர்ப்புக்காக அறுத்துத் தந்த தசை நார்கள் கொஞ்சமல்ல; உடைத்துத் தந்த கபாலங்கள் கொஞ்சமல்ல. தி.மு. கழகத்தின் போராட்டங்கள் அனைத்துமே வீர முத்திரைகள் பொறிக்கப்பட்ட போராட்டங்களாகும்.

"அயல் மொழி ஒன்றின் ஆதிக்கக்கொடுங்கரம் வரம்பு மீறி நீண்டிடும் பொழுது, ஓர் இனத்தவரின் வாழ்க்கையையே அது பறித்திடும் பொழுது அதனை முறியடித்திட எதிர்ப்புக் கனல் மூண்டெழுவது இயற்கையே.

"அத்தகைய கனல் இங்கு மட்டுமல்ல, உலகின் பல்வேறு பகுதி களிலும் அவ்வப்போது கொழுந்து விட்டுத்தான் எரிந்து வந்திருக் கிறது.

''ஆங்கில ஆதிக்கத்தை விரட்டி அடித்து விடுதலை பெற்றிட அயர்லாந்து மக்களைத் திரண்டெழச் செய்ததும் அந்த எதிர்ப்புக் கனல்தானே.

''பாகிஸ்தானின் ஆதிக்கத்தினின்றும் தங்களை விடுவித்துக் கொண்டிட வங்கதேச மக்களைப் பொங்கியெழத் தூண்டிவிட்டதும் அந்த எதிர்ப்புக் கனல்தான்.''

''வளமெல்லாம் மலிந்து முன்பே வலிமை பெற்றுத் திகழ்ந்திட்ட அமெரிக்காவிற்கே அறைகூவல் விடுத்திடும் வண்ணம் சாதாரணத் தொழிலாளர் இயக்கத்தாலேயே உருவெடுத்த சோவியத் ரஷ்யாவை ஒரு வல்லரசுக் கோட்டையாகவே வளர்த்துக் காட்டிய ஸ்டாலினை முதல் முதல் பொது வாழ்க்கையிலே ஈடுபடுத்தியதுதான் எது? தம்முடைய தாய் மொழியாம் ஜார்ஜிய மொழியை இன்னொரு மொழி இரண்டாந் தரம் ஆக்க விடுவதா என்கிற எதிர்ப்புக் கனல்தான்.

''இன்றைக்கும், ஏன், பல ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே கூட, ஈழத் தமிழர் நெஞ்சங்களிலே கொழுந்து விட்டு எரிவதும் அதே எதிர்ப்புக் கனல்தானே!''

நான் திருவல்லிக்கேணியில் நாவலருக்காக எடுக்கப்பட்ட 'வழியனுப்பு விழா'விலே உரையாற்றிய இரண்டு, மூன்று நாட்களுக் கெல்லாம், வேல்ஸ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு வீர இளைஞர் பற்றிய சுவையான செய்தியொன்றினை ஏடுகள் எல்லாம் வெளியிட்டிருந்தன.

அவரும் அப்படித்தான் எதிர்ப்புக் கனலை எழுப்பியிருக்கிறார்; ஒரு தி. மு. க. மறவரைப் போலவே தீரமாக நடந்து கொண்டிருந்திருக் கிறார். அவரைப் பற்றி வெளிவந்த செய்தி இதுதான்:

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்தின் ஒரு பகுதி ஆகியவற்றை அங்கங்களாகக் கொண்டதே United Kingdom என அழைக்கப்படுகின்ற பிரிட்டானிய நாடு (Great Britain). அங்கே வேல்ஸ் பகுதியிலே வாழ்வோருக்குத் தங்கள் தாய்மொழி புறக் கணிக்கப்படுகிறதே என்கிற நெஞ்சப் பொருமல் நெடுங்காலமாகவே உண்டு.

அவ்வாறு புழுங்கித் தவித்துக் கொண்டிருந்தவர்களில் வயது இருபத்தொன்றே ஆன ராபர்ட் கிரிபித்ஸ் என்னும் வேல்ஸ் இளைஞரும் ஒருவர். அவர் பி. ஏ. பட்டத் தேர்வில் வெற்றி பெற்றார். அந்தப் பட்டத்தினைப் பெறுவதற்காகப் பட்டமளிப்பு விழாவுக்கு மற்ற இளைஞர்களைப் போலவே அவரும் சென்றார். தன்னுடைய பெயர் அழைக்கப்பட்டுத் தான் மேடைக்குச் சென்றவுடன் அவர் விழா மண்டபத்திலே குழுமியிருந்தவர்களையெல்லாம் அதிர்ச்சியிலே வீழ்த்தி விட்டார், ''எனக்கு இந்தப் பட்டம் வேண்டாம்!'' என்று அவர் அடுக்கிக் காட்டிய காரணங்கள் எல்லோருடைய சிந்தனையையும் கிளறி விட்டன. விழிகளை அகலமாக்கின.

வேல்ஸின் தேசிய மொழியான 'வேல்ஸ்' மொழிக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகளை-மதிப்பிற்குரிய இடத்தினைக் கல்லூரி நிருவாகிகள் கொடுக்க மறுத்து விட்டனராம். அவர்களுடைய போக்கினை எதிர்த்துக் கண்டிக்கும் பொருட்டே தனக்குத் தரப்படும் பட்டத்தை உதறித் தள்ளுவதாக உரக்க முழக்கமிட்டார் அந்த வேல்ஸ் இளைஞர். தன்னுடைய கண்டனப் பேச்சையும் தன் தாய் மொழியிலேயே நிகழ்த்தினர். அதனை அறியாத மற்றவர்கள் புரிந்து கொள்ளும் பொருட்டுத் தன் கண்டனத்தை ஆங்கிலத்திலும் அவர் கூறினர்.

—இந்த நிகழ்ச்சியினை இங்கே எதற்காகச் சுட்டிக் காட்டுகிறேன் தெரியுமா?

அந்த வேல்ஸ் இளைஞரைப் போல இன்னொரு மொழியின் ஏகாதிபத்தியத்தைச் சுட்டெரிக்க வேண்டிய எதிர்ப்புக்கனலை எந்தக் காலத்திலும் அணைந்துவிடாமல் தமிழினத்தைச் சார்ந்தவர்கள் எழுச்சியோடு விழிப்போடு காத்திடவேண்டும் என்கிற கடமையினை நினைவு படுத்திடத்தான்!

1964-ஆகஸ்டுத் திங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு எனக்கு அழைப்பு வந்தது. ஆனால் சிங்கள அரசோ நான் அங்கே செல்வதற்குத் தடைவிதித்து விட்டது. அதனைக் கண்டித்து இலங்கை நாடாளுமன்றத்தில் திரு. நவரத்தினம் என்னும் தமிழரசுக் கட்சி உறுப்பினர் கேள்விக் கணை தொடுத்திருக்கிறார்.

அதற்கு இலங்கை நாடாளுமன்ற ஆளுங்கட்சித் தலைவராக அப்போது இருந்த திரு சி.பி. டிசில்வா அளித்திட்ட விடையோ விந்தையானதாகும்:

''இந்தியாவில் தி. மு. கழகம் தடை செய்யப்பட்டு அதன் உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்படவில்லையா? அப்படித்தடை செய்யப்பட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் இலங்கை வருவதை அரசாங்கம் விரும்பவில்லை'' என்றார் அவர்.

அந்தத் தவருன தகவலை உடனே மறுத்திடத் தவறவும் இல்லை திரு. நவரத்தினம்:

''தி. மு. கழகம் ஒரு போதும் தடை செய்யப்படவில்லை. இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகக் கட்சியாகத் தி. மு. கழகம் விளங்கி வருகிறது. அது பாராளுமன்றக் கட்சியாகவும் இயங்கி வருகிறது. மத்தியப் பாராளுமன்றத்திலும் மாநிலச் சட்ட மன்றத்திலும் அதன் உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

''அடுத்த பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் தமிழக ஆட்சியைக் கைப்பற்றவும் கூடும். தென்னிந்தியாவில் இந்தி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்துத் தி. மு. கழகம் போராடி வருகிறது. பிரிவினை, மற்றும், சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் தி. மு. கழகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை."

—இலங்கைத் தமிழர் திரு. நவரத்தினத்திற்கு 1964-லேயே ஏற்பட்ட அரசியல் தெளிவு கூட, அதற்குப் பிறகு எத்தனையோ ஆண்டுகளாகியும் இங்கேயுள்ள சில ஏடுகளுக்கும் மாற்றுக் கட்சியினருக்கும் ஏற்படவில்லையே என எண்ணும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

அந்த ஆண்டு ஆகஸ்டு இறுதியில் எனக்குத் திடீரென்று உடல் நலம் குன்றியது. எங்குமே அசைந்திடக் கூடாதென்பது மருத்துவர் கட்டளை; என்றாலும் இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவெடுத்த காலத்திலேயே அதற்கு உறுதுணையாய் நின்று, சிறை சென்று பின்னர் பெரிய புராணம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையெல்லாம் வரைந்து, பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதில் ஆர்வம் காட்டி, அண்ணாவின் 'திராவிடநாடு' இதழிலேயும் பணியாற்றிக் கடந்த 26-1-74 அன்று காஞ்சியில் இயற்கை எய்திய ஈழத்தடிகளுக்கு 3-9-64 அன்றைய தினம் பொன்னாடை போர்த்திப் பணமுடிப்பு வழங்கிடும் விழா ஏற்பாடாகியிருந்தது. உடல் நலிவால் நான் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் அதிலே கலந்து கொள்ளாமல் என்னால் இருந்திட முடியவில்லை.

அதைப் பற்றி அண்ணா அவர்களே குறிப்பிட்டார்கள்:

''...அவருக்குப் பொன்னாடை போர்த்துவதற்காகக் கருணாநிதி வந்திருக்கிறார். நேற்று இவரைப் பார்த்த போது-டாக்டர்கள் கூறிய குறிப்பையும் கருணாநிதி இருந்த இருப்பையும் பார்த்துவிட்டு இன்றையக் கூட்டத்திற்கு 'வா' என்று கூட நான் அழைக்கவில்லை. இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட ஈழத்தடிகளைப் பாராட்ட வேண்டும்

என்கிற கடமையுணர்ச்சியால் உந்தப்பட்டு வந்திருக்கிறார். அவர் அதிகம் பேசமாட்டார்; பேச அனுமதிக்கப் போவது இல்லை. உடல் நிலையும் பாராது கருணாநிதி வந்திருக்கிறார் என்றால் எதற்கு? இந்தி எதிர்ப்புப் போர் முதன் முதல் நடந்த போது அவர் மாணவராய் இருந்தார். ஈழத்தடிகளுக்கு நடைபெறும் பாராட்டு விழாவில் கலந்து கொள்ள அவர் வந்திருப்பது பெருமை தருவதாகும்."

—விழாவில் கழகத்தின் சார்பில் பொருளாளர் என்கிற முறையில் ஈழத்தடிகளுக்குப் பொன்னாடை போர்த்தி, ரூபாய் ஐயாயிரம் கொண்ட பண முடிப்பையும் வழங்குகின்ற பேறு எனக்கே கிட்டியது.

103

பூம்புகார் படம்

செப்டம்பர் பதினேழாம் நாள், சீர்திருத்தச் சிற்பியாம் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் என்பதை அனைவரும் அறிவார்கள். தி. மு. கழகம் பிறந்த நாளும் அந்த நாள்தானே!

1964-ஆம் ஆண்டு மலர்ந்திட்ட அந்த நாளோ, என் சிந்தையிலே செந்தேனை நிரப்பிடும் சிறப்பு நிகழ்ச்சியொன்று நடைபெறும் நாளாகவும் அமைந்துவிட்டது.

அன்றுதான் நான் கதை, உரையாடல் தீட்டிய-மேகலா பட நிறுவனத்தாரால் உருவாக்கப் பெற்ற 'பூம்புகார்' திரைப் படம் சென்னை மிட்லண்ட் தியேட்டரில்-பத்திரிகையாளருக்கும், புலவர் பெருமக்களுக்கும், கலையுலக நண்பர்களுக்கும் போட்டுக் காட்டப்பட்டதாகும். சிலப்பதிகாரக் காப்பியத்தைத்தான் புதுவடிவம் கொடுக்க முயன்றிட்டேன் வெள்ளித் திரைக்கேற்ப.

மேலை நாடுகளில் பைபிள் கதைகளை வைத்து எத்தனையோ படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சிசில் பி-டெமிலி ஏராளமான பொருட்செலவில் 'டென் கமாண்ட்மெண்ட்ஸ்' என்னும் படத்தினை ஒரு முறையல்ல, இரு முறை தயாரித்து வெளியிட்டு உலகையே வியப்பில் ஆழ்த்தினர். இராமாயணம், மகாபாரதம் இதிகாசங்களும் ஏராளமான படங்களுக்குத் தாராளமாகக் கதைக் கருத்திருக்கின்றன கடலுக.

தமிழ்க் காப்பியங்கள் வேறு எந்த மொழி இலக்கியங்களுக்கும் இளைத்தவையோ சளைத்தவையோ அல்ல. அவை வற்றாத கற்பனைச் சுனைகளாக-வளமான கதைப் புதையல்களாக-வண்ண வண்ண ஓவியங்களாக-வாழ்நெறி காட்டி வந்துள்ளன பன்னெடுங்காலமாகவே.

அவற்றிலிருந்து பல அருமையான கருப் பொருள்களைப் பின்னணியாக வைத்து நாமும் ஏன் படம் எடுக்கக் கூடாது என்கிற எண்ணம் நெடுநாட்களாகவே எனக்கு உண்டு. அந்த எண்ணத்தின் விளைவுதான் சிலப்பதிகாரத்தின் புதுப் பிறவியான 'பூம்புகார்.'

முன்பொருமுறை சிலப்பதிகாரத்தை வைத்துக் 'கண்ணகி' படம் வெளியிடப்பட்டது. நடிப்பிலே மட்டுமின்றிப் பாடுவதிலும் தமக்கென்று தனி முத்திரைகள் பதித்துக் கொண்டிருந்த பி. யு. சின்னப்

பாவும், கண்ணும்பாவும் அதில் அருமையாக நடித்திருந்தனர். இளங்கோவன் அவர்கள் எழில் கொஞ்சும் தமிழில் வசனம் எழுதியிருந்தார். ஆனால் அந்தப் படம் புராணப்படம் போலத்தான் வெளிவந்தது.

நான் 'பூம்புகாரை' உருவாக்க முற்பட்டபொழுது, அந்தப்பழைய படத்தைப் பற்றிய எண்ணங்களும் என் மனத்தில் மின்னலிட்டன.

சிறைப் பறவையாக அடைபட்டிருந்த போதுதான், என் சிந்தையில் கருக் கொள்ளத் தொடங்கிற்று 'பூம்புகாருக்' குரிய திரைக் கதை.

ஒரு காப்பியத்தைத் தழுவித் திரைப்படம் எடுத்திடும் பொழுது, எத்தனையோ சிக்கல்கள் இடையிலே குறுக்கிடும். அத்தகைய இடையூறுகளை நானும் அப்போது சந்திக்க நேர்ந்தது உண்டு.

சிலப்பதிகாரம் எண்ணற்ற வகைகளில் சிறந்திருக்கிறது என்ருலும், இளங்கோவடிகளின் ஓர் அற்புதமான கற்பனைத் திருப்பம் என்கருத்தினை வெகுவாகக் கவர்ந்து விட்டது. அந்தக் காலத்தில் காவியங்களை—இதிகாசங்களை—இயற்றியவர்கள் பெரும்பாலும் அரச குடும்பங்களை வைத்தே கதைகளைப் பின்னினர்கள். ஆனால் அரச குடும்பத்திலே பிறந்தவராக இருந்திட்ட போதிலும், சுக போகங்களைத் துச்சமென மதித்துத் துறவியாக மாறிவிட்ட இளங்கோவடிகளோ, மற்ற இலக்கியப் படைப்பாளர்களின் வழக்கமான கதைப் போக்கிற்கு முழுக்குப் போட்டு விட்டுச் சாதாரணக் குடிமக்களையே தம்முடைய கதைக்குத் தலைவன்—தலைவியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஏழை நடுத்தர மக்களின் வாழ்க்கை முறைகளை, வளையாத கற்பை, வறுமையை, அந்த வறுமையிலும் குன்ருத வைரச் செம்மையை வடித்துக் கொடுத்துள்ளார் வண்ண ஓவியங்களாக. இளங்கோவடிகளின் இந்தப் புதுமைக்கதைப் போக்கே என் இதயத்தைப் பெரிதும் ஈர்த்தது காந்தமாக.

இவ்வாறு சாதாரணக் குடிமக்களின் ஆசைகளை - அவலங்களை, உணர்ச்சிகளை, உள்ளப் போராட்டங்களை— ஓவியமாக்கிக் காட்டிடும் ஒரு காவியக் கதையில்— ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டும் பிறர் எண்ணிடும் அளவுக்கு இழித்துரைக்கப்பட்டிருப்பார்களா என்கிற ஐயப்பாடு என்னுள் எழுந்தது.

அதற்குத் தகுந்த மாதிரி, அப்போது நிதி அமைச்சராயிருந்த மொரார்ஜி தேசாய் தங்கக் கட்டுப்பாடு சட்டம் ஒன்றினைக் கொணர்ந்திருந்தார். அதனால் ஆயிரக்கணக்கான பொற்கொல்லர்கள் வேலை வாய்ப்பினை இழந்து வீதிகளிலே பிச்சையெடுத்திடும் அளவுக்கு விழி நீரை வெள்ளமாக்கிக் கொண்டிருந்த வேளை அது. அந்த வேதனை நெஞ்சங்களிலே வேல் பாய்ச்சிடா வண்ணம், திரைக்கதையின் போக்கில் சிறிய மாற்றம் செய்வதும் என் கடமையெனக் கருதினேன். சமூக அமைப்பு என்கிற ஆலமரத்தின் விழுதுகளாக விளங்கிடும்

பலவேறு வகுப்புகளில் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பாரும் இழிவுக்கோ ஏளனத்திற்கோ இரையாக்கப்படுவது மனிதப் பண்பாட்டிற்கே இழுக்கு என்கிற எண்ணமே என்னைத் திரைக்கதையிலே சில புதுமை களைப் புகுத்திடத் தூண்டியதாகும்.

படத்தைப் பார்த்த புலவர் பெருமக்களும் சரி, கலையுலக நண்பர்களும் சரி, என்னுடைய நல்லெண்ணத்தைப் புரிந்து கொண் டவர்களாகவே பாராட்டுக்களையும் பொழிந்தார்கள். இலட்சிய நடிகர் என்னருமைச் சகோதரர் எஸ். எஸ். ராஜேந்திரன் தன் திறமையனைத்தையும் அதில் வெளிப்படுத்தியிருந்தார்.

தமிழர்களின் பெருமையையும், பண்பாட்டையும் எடுத்துக் கூறும் படம்; கடந்த மூன்று மணி நேரத்தில் இப்போதுள்ள சூழ்நிலை யையே மறந்து அந்தச் சிலப்பதிக்காரத்திலேயே இருந்தோம்"— என்றார் அப்போதையக் காங்கிரஸ் ஆட்சியின் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்லப்பாண்டியன்.

"....இந்தப் படத்தில் பொற்கொல்லர் சமூகத்தைப் பழியிலிருந்து காப்பாற்றியிருக்கிறார்; இது பாராட்டுக்குரியது; நல்ல தமிழ் பேசும் நல்ல தமிழ்க் காப்பியம்"— என்றார் நாடகக் கலைவேந்தர் அவ்வை தி.க. சண்முகம்.

"...கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரைப் பற்றி உயர்ந்த எண்ணமும், மதிப்பும், மரியாதையும் ஏற்படும் வகையில் படம் அமைந்திருக்கிறது. படத்தில் செய்துள்ள மாறுதல்கள் பாத்திரங்களின் பண்பைக் குறைக்காமல் பாத்திரங்களின் மதிப்பை உயர்த்தியுள்ளன. சின்னஞ்சிறு மாறுதல் என்னும் அலைகளெல்லாம் கடந்து ஒரு பெரிய இலக்கியக் கடலை இத்திரைப் படத்தில் கண்டோம்" - என்றார் டாக்டர் மு. வரதராசனார்.

...கவுந்தியடிகள் வாயிலாகச் சிறந்த தத்துவ வசனங்களைக் கலைஞர் எழுதியுள்ளார். 'மனச் சாட்சி உறங்கும் போது மனக் குரங்கு ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது' என்ற வசனம் அதற்கு உதாரணம். தொழிலுக்காக எடுக்கப்படும் படங்கள் சில; தொண்டுக்காக எடுக்கப் படும் படங்கள் சில: குற்றமற்ற படமாகத் தமிழ்த் தொண்டுக்காக எடுக்கப்பட்ட படம் இது! என்றார் சிலம்புச் செல்வர் ம.பொ சி.வஞானம் அவர்கள்.

—இவ்வாறு தமிழ் இலக்கியக் கடலிலே மூழ்கி முத்தெடுத்திடும் வித்தகர்களை 'பூம்புகார்' படத்தினைப் போற்றிய பொழுது உள்ளூர எனக்குப் பெருமிதமே உண்டாயிற்று!

இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்திலே நாடக கலையை வளர்ப்பதற்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு அயராது உழைத்திட்ட ஆன்றோர்கள் பலர். அவர்களிலே முதலிடம் பெறத் தக்க முதுபெருங் கலைஞர் சங்கரதாஸ் சுவாமிகள்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வித்தகராய் விளங்கிய அவர், வளமான தமிழில் வசனம் வரைந்ததோடு நின்றிட வில்லை. கதாபாத்திரங்கள் கவிதை நடையிலேயே உரையாடிடவும் உணர்ச்சி பொங்கப் பாடிடவும் கூடத் தம்முடைய எழுத்தாற்றலை இயக்கினார் உத்வேகத்தோடு.

சங்கரதாஸ் சுவாமிகளுக்கு அடுத்தபடியாகத் தமிழ் நாட்டில் நாடகக் கலை வரலாற்றில் தமக்கென ஒரு சிறப்பான இடத்தினைத் தேடிக் கொண்டவர் பம்மல் சம்பந்த முதலியார்.

'நாடகப் பேராசிரியர்' என்றே நாட்டு மக்களால் கொண்டாடப் பட்டார் அவர். மத்திய அரசினால் 'பத்ம பூஷணம்' என்னும் பட்டமும் வழங்கப் பெறறுப் பாராட்டுப் பூனலிலே திளைத்திட்ட அவர் 24-9-64-ஆம் நாள் இயற்கை எய்தி விட்டார், கலையுலகை இருளிலே ஆழ்த்தி விட்டு.

ஆங்கிலக் கல்வியினைப் பழுதறப் பயின்று பி.ஏ. பட்டதாரி ஆகி சட்டக் கல்வியும் கற்றுத் தீர்ப்புக்களை வழங்கிடும் நீதிபதியாகச் சிறந் திட்ட நிலையிலும், நாடகக் கலையின்பால் தமக்குள்ள நாட்டத்தை விட்டிடவில்லை· அவர் 'சுகுண விலாச சபா'- என்னும் நாடகக் குழு ஒன்றினைத் தோற்றுவித்து அதற்கென நாடகங்கள் தீட்டியதுடன் அவற்றிலே அவர் நடித்தும் காட்டினார். புகழையும் நாட்டினார்.

அரசாங்கப் பணியில் ஈடுபட்டு ஓய்வு பெறுகின்றவர்கள் அத்துடன் தங்கள் வாழ்வே ஓய்ந்து விட்டதாக உள்ளம் உடைந்திடுவர்: உருக் குலைந்து நலிந்திடுவர். நீதிபதியாகப் பணி புரிந்து ஓய்வு பெற்றிட்ட சம்பந்த முதலியாரோ அவர்களுக்கெல்லாம் ஒரு விதிவிலக்காகவே விளங்கினார். விரைந்து செயல்பட்டார். ஏறத்தாழ நூறு நூல்களுக்கு மேல் எழுதியும் குவித்திட்டார் வேகமாக.

புராண நாடகங்களையே பார்த்துக் கொண்டிருந்த மக்களிடையே சமூக நாடகங்களைத் தவழ விட்டு வயிறு குலுங்கிடச் சிரிக்க வைத்து ஒரு புதிய பாணியினைப் புகுத்திய பெருமையும் முதன் முதல் அவரையே சார்ந்ததாகும்.

அவருடைய 'மனோகரா' நாடகத்தினைத் திரைக்கேற்ற கதையாக்கி அதற்கு உரையாடல் தீட்டும் பேறு எனக்குக் கிட்டியது.

நான் எத்தனையோ திரைப்படங்களுக்கு உரையாடல் தீட்டியிருக்கிறேன்; அவற்றில் சம்பந்த முதலியாரின் 'மனோகரா' நாடகத்தைத் திரைக்கேறப மாற்றி அமைத்து நான் வரைந்திட்ட வசனம், என் நெஞ்சில் முழுமையாகப் பதிந்து விட்டது என்றே கூறலாம்.

எனவே 'நாடகத் தந்தை' பம்மல் சம்பந்த முதலியார் சாக்காட்டின் மடியிலே சரிந்திட்டார் என்கிற செய்தியினை அறிந்ததும் நான் அடைந்திட்ட வேதனைக்கு அளவே இல்லை.

அதனையே இரங்கற் செய்தியாக அப்போது இவ்வாறு நான் விடுத்தேன்:

''நமது தாயகத்தின் முதுபெரும் கிழவர் - நாடக இலக்கியத்தின் மேன்மைக்கு அரும்பாடுபட்ட - அண்ணல் - நீண்ட நெடு நாட்கள் தமிழ் தொண்டாற்றிய பெரியார் - நிறை வாழ்வு வாழ்ந்த பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டுத் தமிழ் உலகம் கண்ணீர் வடிக்கிறது.

அவரது மனோகரா நாடகத்துக் கதாபாத்திரங்கள் அன்பையும், பாசத்தையும், உணர்ச்சி குமுறல்களையும் வெளிப்படுத்தும் அற்புதப் படைப்புகள். அவரைத் தமிழர்கள் மறக்க மாட்டார்கள். அவரது கலைத் ''தொண்டு தமிழன்னையின் மணி முடியிலே பதிக்கப்பட்ட மாணிக்கமாகும். அவர் புகழ் வாழ்க! அவர் பெயர் நெடிது நிலைத்திடுக!'

104

அரசியல் மாற்றங்கள்

1964-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், உலக அரங்கிலே குறிப்பாக சோவியத் ரஷ்யாவில் திடீரென்று நிகழ்ந்தேறிற்று ஓர் அரசியல் மாற்றம்.

அங்கே தலைமை அமைச்சராகவும், பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் கொலுவேறிக் குவலயத்தின் கவனத்தையே ஈர்த்திட்ட குருஷ்சேவ் யாருமே எதிர்பாராத வகையிலே இறக்கப் பட்டு விட்டார் பதவிகளிலிருந்து.

ஏழைத் தொழிலாளியின் மகனுய்ப் பிறந்திட்ட போதிலும் இடையருத உழைப்பினுல் - இடிந்திடாத நெஞ்சினுல்-கட்சி வளர்ச்சிக் கென்றே தம்முடைய வாழ்வைக் காணிக்கை ஆக்கிக் கொண்டு ஆற்றல் ஒன்றினுலேயே அவனி மெச்சிட ஏற்றம் பெற்றிட்டவர் குருஷ்சேவ்.

சோவியத் ரஷ்யாவை வல்லரசுக் கோட்டையாக வளர்த்துக் காட்டிய வன்மை வாய்ந்த சிற்பி ஜோசப் ஸ்டாலின்தான் என்ருலும், தமது நாட்டையும் தம்மோடு நட்புறவு கொண்ட மற்ற பொதுவுடமை நாடுகளையும் எவருமே எளிதில் நெருங்கிட முடியாதபடி ஓர் 'இரும்பு திரையினை — ஒப்புரவை ஏற்காத ஒதுக்கத்தினைத் - விரித்து வைத்த வரும் அவரே. அவருடைய மறைவுக்குப் பின்னர் அந்த இரும்புத் திரையினைக் கிழித்தெறிந்து, சோவியத் மண்ணில் பிற நாடுகளின் தோழமை சுடரொளி வீசிட வித்திட்டவர் குருஷ்சேவ் அவர்களே!

அவருடைய நகைச்சுவை வெடிகளும், சமாதான சகவாழ்வுக் கொள்கையும் (Peaceful Co-existence) என் நெஞ்சினை நிரம்பக் கவர்ந்திருந்தன.

1956-இல் இந்திய சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண் டிருந்த காலை ரயில் பெட்டித் தொழிற்சாலையைப் பார்வை யிட்ட அவர், "அளவுக்கு அதிகமாக இவ்வளவு இரும்பினை இப்படி வீணடிப்பானேன்?"—என்று வெளியிட்ட கருத்துக்கள் பெரும் சலசலப்பையே உண்டு பண்ணின. இந்த நாட்டுத் தொழில் துறையில் இந்தியாவிடம் அவர் வைத்திருந்த — வளர்த்துக் கொண்டிருந்த —— ஆழமான தோழமை உணர் வினுல்தான் நெய்வேலி அனல் மின்சாரத் திட்டம், பிலாய்

உருக்காலைத் திட்டம், அங்கலேசுவா பெட்ரோல் ஊற்று தோண்டிடும் திட்டம் முதலானவற்றிற்குக் கணிசமாகக் கிடைத்தது ரஷ்ய உதவி.

கரடு முரடாய்க் கற்பாறையாய்க் காட்சி அளித்திட்ட பொதுவுடைமைத் தத்துவமும் கசியக் கூடியதே — கனியக் கூடியதே— என்று உலகுக்குக் காட்டியவர் குருஷ்சேவ். அதன்மூலம் தம்முடைய ரஷ்ய நாட்டுக்கு ஐக்கிய நாடுகள் மன்றத்திலும் அதனுடைய பல்வேறு உறுப்பு நாடுகளிலும் அளப்பரிய செல்வாக்கினைத் தேடி அளித்திட்ட வரும் அவரே.

அவர் திடீரென்று பதவித் துகில் உரியப்பட்டது பாரெங்கும் திகைப்பினையே கொடுத்தது. அவர் செயல்களில் எனக்குப் பிடிக்காதது, ஸ்டாலின் கல்லறையை அகற்றியதுதான்!

சோவியத் நாட்டில் இவ்வாறு அரசியல் மாற்றம் நிகழ்ந்திட்ட அதே சமயத்தில்தான் இன்னொரு வல்லரசான பிரிட்டனிலும் ஓர் அரசு மாற்றம் ஏற்பட்டது. ஜனநாயக நெறிப்படி அங்கே பதின்மூன்று ஆண்டுகள் கழித்துத் தொழிற் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. ஹெரால்டு வில்சன் புதிய தலைமை அமைச்சராகப் பொறுப்பினை ஏற்றார்.

''உணவு கிடைக்காததால் மக்கள் வெள்ளரிக்காயை உண்ணு கிறார்கள்; ஆகவே உணவு அதிகம் வேண்டுமென்று டில்லியை எதிர்த்துப் போரிடப் போகிறேன்''—

—என்று பஞ்சப் பரணி பாடி மத்திய அரசின் உணவுக் கொள் கையைச் சாடினார் ஒருவர்.

அவர் ஆடவரும் அல்லர்; ஒரு பெண்!

அவர் எவரும் அறிந்திடாத ஏழையும் அல்லர்; ஒரு மாநிலத்தின் முதலமைச்சர்.

அந்த குரல் எழுந்ததும் குசராத் மாநிலத்தில் அல்ல; உத்தரப் பிரதேசத்தில்!

இப்போது அல்ல; 1964-இல்.

ஆம்: அன்று அவ்வாறு உணவுப் பஞ்சத்தினைப் படம் பிடித்துக் காட்டி உரிமை முழக்கத்தை முரசொலித்தவர் உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக இருந்து, அண்மையில் மறைந்திட்ட திருமதி சுசேதா கிருபளானி அவர்கள்தான்.

அதே நேரத்தில் இங்கே தமிழகத்தின் நிலைமை என்ன? அப்போது தமிழக அமைச்சர்கள் கூறிய சமாதானங்கள்— சாரமற்ற வாதங்கள் தான்—என்ன?

105

பிரெஞ்சுக் கதை

அரிசிப் பஞ்சம் என்பது வேறு எந்தக் காலத்திலும் இப்படி இருந்ததே இல்லை என்று இயம்பிடும் அளவுக்குக் கடுமையாயிருந்த வேளை அது!

''சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்!—வெறும்
சோற்றுக்கு வந்ததிந்தப் பஞ்சம்''

—என்னும் கவிதை வரிகளின் காட்சிச் சாலையாகவே அன்று கலங்கிப் புலம்பிற்று தமிழகம்.

கொட்டும் மழை- கொதிக்கும் வெயில்- என்றெல்லாம் பார்த்திடாமல் ஒட்டிய வயிறு நிறைந்திட ஒரு படி அரிசி கிடைத்திட்டாலே போதும் என்று கடைகளின் முன்னே கடுந்தவம் புரிந்தனர் மக்கள்.

கண்கள் பஞ்சடைய- கவலையால் நெஞ்சொடிய- கால்கள் இற்று விழ-கைக்குழந்தை பிருண்டி அழ மணிக்கணக்குப் பாராமல் மைல் கணக்கில் கியூவில் நின்றார் மகளிரெல்லாம்!

மறு நாள் காலை ஏழு மணிக்குக் கடை திறந்ததும் அரிசி வாங்கிட முடியாதா என்ற ஆசைக் கனவுகளோடு முதல் நாள் இரவு பத்து மணிக்கே கடைகளின் முன்னே படுத்துக்கொண்டு விடுவர் மக்கள்.

பொழுது விடியும்; கனவுகள் கலையும்; கடைகள் திறக்கும். ஆனால் அரிசி போய்ச் சேராது 'கியூ'வில் நின்றிட்ட அத்தனை பேருக்கும்! வெற்றுப் பையோடு வீடு திரும்புவர் மக்கள்; பற்றி எரியும் பசி கொண்ட வயிறு; ஆனால் பற்ற வைக்க முடியாமல் பொட்டிழந்த பூவையாய்- விதவைக் கோலம் பூண்டு வெறிச்சோடிக் கிடக்கும்- நெருப்பறியா அடுப்பு!

வறுமைக் கொடுஞ்சுவை வாழ்வையே நசுக்கிடப்-பொசுக்கிடப் பொறுமை இழந்திட்ட மக்கள், சில இடங்களில் கடைகளில் புகுந்து கொள்ளையடித்தேனும் அரிசியைக் கொண்டு செல்லவும் துணிந்திட்டனர். அரிசியை ஏற்றிக் கொண்டு லாரிகள் எங்காவது செல்வது தெரிந்தால் அவற்றை வழிமறித்து மடக்கித் தங்கள் வயிற்றுப் பசியினைத் தீர்த்திடவும் அவர்கள் முனைந்தனர். அவ்வாறு அரக்கோணத்தில் வழிமறிப்பு நடந்த போது துப்பாக்கிச் சூடே நிகழ்ந்தது.

கடைகளைச் சுற்றி அரிசி கேட்டு முற்றுகையிட்ட மக்கள் தடியடிக்கும் ஆளாயினர்; தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர். அத்தகைய சூழ்நிலையில் அரிசிக்காகக் 'கியூ'வில் நின்றிருந்த ஒரு தாய் தன் குழந்தையையும் 'காவு' கொடுத்தாள் சாவுக்கு!

இப்படிப் பஞ்சக் கொடுமைகளில் மக்கள் பரிதவித்து வாடிடும் போது அன்றையக் காங்கிரஸ் ஆட்சியாளர்களோ கண்ணிருந்தும் பாராமல் காதிருந்தும் கேளாமல்தான் நடந்து கொண்டனர். எதிர்க் கட்சியினர் நிலைமைகளை எடுத்துச் சொன்னால் அவர்கள் ஏளனமும் புரிந்தனர்; ஏறுமாறுகவும் பேசினர்.

''அரிசிப் பஞ்சம் என்பது வீண் புரளி!''—என்று அடித்துப் பேசினார் ஓர் அமைச்சர்.

''அரிசிப் பஞ்சமே பத்திரிகைக்காரர்கள் ஏற்படுத்தியது!'' என்று துணிந்து சொன்னார் இன்னொரு அமைச்சர்.

முதல்வராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்களோ தமக்கே உரிய சமர்த்தோடு- சாதுரியத்தோடு—

''உணவுப் பற்றாக் குறையே இல்லை; உணவுப் பொருள் ஏராளமாக இருக்கிறது. இங்கே பதுக்கலும் இல்லை- பதுக்கல் இல்லாமலும் இல்லை''—என்றெல்லாம் சாதிக்க முற்பட்டார்: தடம் புரண்டும் பேசினார்.

காங்கிரஸ் அமைச்சர்களின் இந்தக் கூற்றுகளைக் கேட்டிட்ட பொழுது பிரெஞ்சுப் புரட்சியின் போது நடைபெற்ற சில நிகழ்ச்சிகளே என் நினைவில் நிழலாடின.

அங்கே புரட்சிப் பூகம்பம் வெடித்துக் கொண்டிருந்த வேளையில் கோலேந்திய லூயி மன்னனைக் குரங்கினும் கீழாக ஆட்டிப் படைத்திட்ட அரசி மேரி அண்டாய்னெட்டோ ஆணவத்தின் மொத்த வடிவமாகவே மக்களைப் பற்றி அலட்சியமாகப் பேசினாள்.

ஒரு நாள் அரண்மனைக்கு வெளியே பட்டினியால் வாடிய மக்கள் பட்டாளம் போல் திரண்டு வந்தனர். 'அய்யோ, பசிக்குதே!' என்று அழுதனர்; அலறினர்.

அரசியோ ''என்ன அங்கே காட்டுக் கூச்சல்?'' என்று அதட்டல் போட்டாள் பணியாளனை நோக்கி.

''ரொட்டி கிடைக்காமல் தின்டாடும் மக்கள் உங்களிடம் முறையிட வந்திருக்கிறார்கள்''—என்றான் அவன்.

மேரி அண்டாய்னெட்டோ கேலியாகச் சிரித்திட்டாள்.

''ரொட்டி கிடைக்காவிட்டால் என்ன? 'கேக்' வாங்கித் தின்னச் சொல்லேன்!'' என்று கிண்டலாக மொழிந்திட்டாள்.

அதற்குப் பிறகு வெடித்திட்ட விளைவுகள் அரசியலிலே காலூன்றி நிற்க விரும்பிடும் அத்தனை பேருக்குமே அருமையான பாடங்கள்!

ஆனால் அந்தப் பாடங்களையெல்லாம் மறந்து விட்டவர்களாகவே நடந்து கொண்டனர் காங்கிரஸ் அமைச்சர்கள்.

உணவு நெருக்கடியோ மக்களின் குரல் வளையையே நெரித்திடும் வண்ணம் உச்சக் கட்டத்திற்குப் போய்க்கொண்டே இருந்தது. அந்தக் கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போலக் கோவையில் காவல் நிலையத்தின் முன்னால் அரிசி கேட்டுக் குரல் எழுப்பிய ஒரே குற்றத்திற்காகப் பரிசாகப் பாய்ந்து சென்றன துப்பாக்கிக் குண்டுகள். பசிக் கொடுமையால் செத்துக் கொண்டிருந்த மக்களுக்காகப் பரிந்து பேசிடப் -பரிகாரம் தேடிடச்- சென்ற முன்னாள் காவல் துறை அதிகாரி திரு. அர்ச்சுனன் பரிதாபமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

19-10-1964-இல் நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு சென்றேன் சட்ட மன்றத்தில். கோவையில் அரிசிக்காக அவதியுற்றிடும் மக்களுக்காக வாதாடிய முன்னாள் போலீஸ் அதிகாரி அர்ச்சுனன் சுட்டுக் கொல்லப்பட்டதை யொட்டி நாட்டிலே ஏற்பட்டுள்ள பரபரப்பையும் ஐயப் பாட்டையும் பற்றி விவாதம் நடத்திட வேண்டும் என்று அப்போது கேட்டுக் கொண்டேன். கோவை நிகழ்ச்சி குறித்து நீதி விசாரணைக்கு ஏற்பாடாக வேண்டும் என்றும் வற்புறுத்தினேன்.

முதல்வர் பக்தவத்சலம் அவர்களோ கோட்டைக்கு வெளியே நாட்டிலே நிலவிடும் கொந்தளிப்பு பற்றி விவாதித்திட முடியாது என்று மறுத்து விட்டார். நீதி விசாரணைக்கான கோரிக்கையையும் ஏற்க முடியாது என்று அழுத்தமாகக் கூறிவிட்டார்.

இலங்கை வாழ் தமிழர்களைப் பொறுத்த மட்டில், 1964-ஆம் ஆண்டு அதிலும் குறிப்பாக அக்டோபர் திங்கள்-அவர்களுடைய இதயமே எரிந்து கருகிட, கனலை அள்ளிக் கொட்டிய காலப் பகுதியாகும்.

ஏனெனில் அந்தச்சமயம்தான், அவர்களுடைய வயிற்றெரிச்சலிலே எண்ணெய்யை வார்த்து - வாழ்க்கையிலே மண்ணைப் போட்டு வடிவம் எடுத்திட்டது ''சாஸ்திரி - சிரிமாவோ ஒப்பந்தம்.''

நேருவின் காலத்திலே இலங்கைத் தலைமை அமைச்சராக இருந்த சர் ஜான் கொத்தலவாலாவினால் சாதிக்க முடியாத ஒன்றைத் திருமதி சிரிமாவோ பண்டார நாயகா எளிதில் சாதித்துக் கொண்டு விட்டார் திரு. லால்பகதூர் சாஸ்திரியாரிடம்.

இரு நாட்டுத் தலைமை அமைச்சர்களும் புது டில்லியில் 29-10-64-இல் கையொப்பமிட்ட அந்த ஒப்பந்தம் பத்து வயதுச் சிறுவனின் முதுகிலே பத்து மூட்டை நெல்லை ஏற்றிடுங்கொடுமை போலத் தமிழகத்தின் மீது தாங்கொணாத பளுவைச் சுமத்திடவே வழியை வகுத்திட்டது.

இலங்கையில் பல்லாண்டுக் காலமாகவே குடியுரிமை மறுக்கப்பட்டுத் திரிசங்கு சொர்க்கத்திலே திண்டாட விடப்பட்டிருப் போரின் எண்ணிக்கை ஏறத்தாழப் பத்து லட்சம் ஆகும்.

ஒப்பந்தப்படி, இவர்களில் ஐந்தே கால் லட்சம் பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு விடுவர் பதினைந்து ஆண்டுகளில் - பல தவணைகளில்! மூன்று லட்சம் பேருக்கு மட்டும் இலங்கை அரசு ஏதோ கொஞ்சம் இரக்கத்தைச் சிந்திக் 'குடியுரிமை' வழங்கிடும். எஞ்சிய ஒன்றரை லட்சம் பேர்களின் கதியோ பின்னரே முடிவு செய்யப்படும்; உடன்பாடு காணப்படும்.

வேறு எந்த நாட்டிலாவது இப்படிப் பத்து லட்சம் மக்கள் குடியுரிமை (citizenship) மறுக்கப்பட்டு - நாடற்றவர்கள் ஆக்கப்பட்டு- அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் வீடு, வாசல்களை இழந்து வெளியேற்றப்பட்டதாக வரலாறு உண்டா?

ஆயினும் தமிழராகப் பிறந்திட்ட ஒரே காரணத்தினால் கூடு பிய்த்தெறியப்பட்ட குருவிகளாகத் தத்தளிக்க நேர்ந்தன அம்மக்கள்.

முன்பே பர்மாவிலிருந்து அகதிகளாக வந்த தமிழர்களின் எண்ணிக்கையே பாரமாக அழுத்திக் கொண்டிருப்பது போதாதென்று இலங்கையிலிருந்தும் அதுவும் இத்தனை லட்சம் பேர் வருகிறார்கள் என்றால் எப்படித் தாங்கிட இயலும் தமிழகத்தால்?

இதைப் பற்றி அன்று இந்த மாநிலத்திலே கொலு வீற்றிருந்தவர்களோ, மத்தியில் கோலோச்சியவர்களோ தொலை நோக்கோடு சிந்தித்துப் பார்த்தார்களா? இலங்கைத் தமிழர்களின் தலைவர்களைத்தான் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கு யோசனை கேட்டார்களா? ஏதும் இல்லை.

ஈழ பூமி ஏற்றம் பெற்றிட - எழில்வளங்கொஞ்சிட - தோட்டக் காடுகளிலே துவண்டு நலிந்து அட்டைகள் உறிஞ்சிட, ஆயிரம் ஆயிரம் நோய் வந்து தீண்டிட, தங்கள் உழைப்பினைக் கொட்டினர். உதிரத்தைச் சிந்தினர் தமிழர்கள். அவர்கள் துரத்தப்படுகிறார்கள் என்றதும் துடிப்புற்றுப் - பதைப்புற்றுக் - கடுகளவேனும் கருணையைக் காட்டினரா காங்கிரசார்? அந்த அநீதியைத் தடுத்து நிறுத்திடத்தான் கொடுத்தனரா தங்கள் குரலை?



தி. மு. கழகம்தான் 'சிரிமாவோ - சாஸ்திரியார்' ஒப்பந்தம் தீங்கானது. இலங்கைத் தமிழர் சிக்கலுக்குச் சரியான தீர்வு ஆகாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தது. அன்றைய ஆளுங்காங்கிரஸ் அமைச்சர்களின் போக்கினைப் பற்றிச் செஞ்சியிலே 1-12-64-இல் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நானும் அடியிற்கண்டவாறு குறிப்பிட்டேன் :

''.....அனுதைகளாக விரட்டப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் பற்றிக் கேட்டால், லால்பகதூர் சொல்கிறார் : 'உங்கள் பக்தவத்சலமும், இராமையாவும் (அப்போதைய அமைச்சர்கள்) சொல்லித்தான் ஒப்பந்தம் செய்தேன்' என்று! தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளையும் கலக்காமல் இலங்கைத் தமிழர்களின் தலைவர்களையும் அவமதித்து இந்த ஒப்பந்தம் செய்யச் சொன்னது யார்? புதிதாகக் காங்கிரசுக்குப் போயிருக்கும் நண்பர் (திரு ஈ. வே. கி. சம்பத்) சொல்கிறார் : 'இலங்கையிலிருந்து வருகிற தமிழர்களை வரவேற்க வேண்டாமா' என்று, 'வருகிறோம்' - என்று கூறி அவர்கள் வரவில்லையே! 'அய்யோ, எங்களைத் துரத்துகிறார்களே! இந்த அநீதியைக் கேட்பாரில்லையா?" என்று அலறியபடியல்லவா அவர்கள் இங்கே தள்ளப்படுகிறார்கள் ?

நான் குறிப்பிட்ட அந்த அநீதி சிறு கதையாக முடிந்திடாமல் தொடர்கதையாகத்தான் நீண்டிடும் போலத் தோன்றுகிறது.

நெப்போலியன் ஒரு முறை ''ஃபிரான்ஸ் நாட்டின் இளைஞர்கள் நல்ல முறையில் கல்விப் பயிற்சி பெறுவதற்கு என்ன தேவை?''- என்கிற வினாவினை எழுப்பினான்.

அதற்கு ''நல்ல தாய்கள்''-என்கிற விடை கிடைத்ததாம். அதனைக் கேட்டு நெஞ்சம் குளிர்ந்திட்ட நெப்போலியன் - ''இந்தத் தாய் என்கிற ஒரு வார்த்தையிலேயே ஒரு கல்வித்திட்டமே பொதிந்து கிடக்கிறதே...நம்முடைய ஃபிரான்ஸ் நாடு நல்ல அன்னையரை அடைந்திருந்தால், அது நல்ல பிள்ளைகளையும் பெறும்" என்று வியப்போடும் கூறினானும்.

ஐரோப்பாக் கண்டத்தையே அதிர்ந்திடச் செய்தவன்-அரிமா நிகர்த்த அஞ்சா நெஞ்சினன் நெப்போலியன்-அன்னையர் குலத்திடம் எத்தகைய மதிப்பினை வைத்திருந்தான் என்பதனை அவனுடைய இந்த வார்த்தைகளிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

106

பிறந்தவூரில் சிறந்த தொண்டு

தமிழகத்திலும் இரண்டு அருமையான வைர வரிகள் உலவ வருவதை யாவரும் அறிவர்.

''தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை;
தந்தைசொல் மிக்கதோர் மந்திரம் இல்லை''

— என்பதையே குறிப்பிடுகிறேன்.

எனைப் பொறுத்த வரையில் எனை ஈன்ற அஞ்சுகத் தாய்தான் எனக்கு இணையில்லாப் பெருங்கோயில்!

என் தந்தை முத்துவேலரின் கவிதை நடைக் கனிவுமொழியே எனக்கு முத்தான மந்திரச் சொல்!

இவர்கள் இருவரின் பெயர்களும் நின்று நிலைத்திடுமாறு ஏதாவது ஓர் அறப் பணியினை ஆற்றிட வேண்டும் நினைவுச்சின்னம் எழுப்பிட வேண்டும் - அதுவும் நான் பிறந்த மண்ணிலேயே அதனைத் தோற்றுவித்திட வேண்டும் என்கிற பேரவா நெடுநாட்களாகவே என் நெஞ்சில் அலை மோதியதுண்டு.

என்னுடைய பிறந்த ஊரான திருக்குவளை பற்றித் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

''நினைக்கிறேன் இனிக்கிறது;
நெஞ்சமெல்லாம் மணக்கிறது!''

— என்று பாலில் கரைந்திடும் சீனி போல இனிமையான நினைவுகளில் என்னுள் நானே மூழ்கிடும் வண்ணம் கழனி வளங்கொஞ்சும் தஞ்சாவூர்க் கதம்ப மாலையில் தானும் ஒரு சிறிய மல்லிகை மலராய் எழில் சிரிக்கத் திகழ்வதே திருக்குவளைச் சிற்றூர்.

அங்கேதான் என் அன்னை - தந்தையர் பெயர்களில், என் தமக்கை மகன் முரசொலி - மாறனின் துணையோடு ஒரு மருத்துவமனை அமைப்பது என்று முடிவு செய்தேன்.

'முத்துவேல் - அஞ்சுகம்
தாய் - சேய் நல விடுதி'

— என்னும் பெயரில் எழுந்த அதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள்தாம் அடிக்கல் நாட்டினார்கள்.

கட்டடம் முடிவுற்ற நிலையில் 12-11-1964-இல் திறப்பு விழாவை நடத்தினேம் சிறப்பாக.

நாவலர் விழாவுக்குத் தலைமை ஏற்றிட, அன்றையத் தமிழக முதல்வர் திரு பக்தவத்சலம் அவர்களே அந்தத் தாய்-சேய் நல விடுதியைத் திறந்து வைத்தார்.

ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் அரசியல் அரங்கிலே எத்தனையோ கருத்து மோதல்கள், காரசாரமான வாதங்கள் வெடித்திட்ட போதிலும், சாதாரண ஏழை, எளியவரிக்கு நன்மை பயத்திடும் பொதுப்பணி-அறப்பணி-என்று வந்திடும் பொழுது, வேற்றுமை உணர்வுகளுக்கெல்லாம் விடை கொடுத்துவிட்டுக் காரியமாற்றிடலாம் என்பதனைக் காட்டுவதாகவே விளங்கிற்று விழா.

அந்தத் தாய்-சேய் நல விடுதியைத் தொடர்ந்து, உயர் நிலைப் பள்ளி-நான் பிறந்த வீட்டில் ஒவியக் கூடம் போன்ற இன்னும் பல தேவைகளும் சீரிய அமைப்புகளும் நிறைவேற்றப் பட்டுள்ளன திருக் குவளையில்.

எந்த ஓர் அரசியல் கட்சிக்கும், அதன் நடைமுறைச் செலவுகளுக் கென்று பணம் தேவைப்படத்தான் செய்கிறது! அதுவும் காங்கிரசைப் போல் பணக்காரர்களின் பாடிவீடு ஆகிவிட்ட ஒரு பெரிய கட்சியைப் பதவியை விட்டு இறக்கும் பொருட்டு ஏறத்தாழ எல்லாத் தொகுதி களிலுமே- எல்லாத் தேர்தல்களிலுமே- போட்டியிடத் துணிந்துவிட்ட ஓர் எதிர்க்கட்சிக்கு ஏற்படக் கூடிய பிரச்சாரச் செலவுகளைப் பற்றிச் சொல்லவே தேவை இல்லை.

எனவே, கழகத்தின் ஆணி வேரான தலைமைக் கழகம் வலுவோடு அமைந்திட நிதிப் பற்றுக்குறை இல்லாத நிலைமையினைத் தோற்று வித்தல் இன்றியமையாதது என்பதனைப் பொருளாளர் என்கிற முறையில் நான் எண்ணினேன்.

அந்தச் சமயம் கழகத்தின் நிதி நிலையிலும் நெருக்கடி ஏற்பட்டி ருந்தது.

அவ்வப்போது நடைபெற்றிட்ட இடைத்தேர்தல்கள்,மாநகராட்சித் தேர்தல்கள் ஆகியவற்றின் பிரச்சாரச் செலவுகள் இந்தி எதிர்ப்புப் போராட்டச் செலவுகள், சில வழக்குகளுக்கான செலவுகள், இடையில் புதிய கட்டடம்(அன்பகம்) வாங்கிய செலவு-ஆக எல்லாம் கூடிக் கழகப் பொருளாதாரத்தில் முடக்கத்தை உண்டாக்கியிருந்தது.

'நம் நாடு' நாளிதழ் வேறு மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் வரை இழப்புக்கு உள்ளாகிக் கொண்டிருந்தது.

இந்த நிலைமைகளையெல்லாம் சுட்டிக் காட்டி, அறிக்கை யொன்றினை உருவாக்கிப் பொதுக் குழுவின் பார்வைக்கு வைத்தேன். அதனை நன்றாக ஆராய்ந்த பின்னர், 'நம் நாடு' வளர்ச்சிக்கென ஒரு நிதியும் தலைமைக் கழகத்திற்கென ஒரு நிதியும் திரட்டித்தான் ஆக வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தது கழகம். அதன்படியே நிதி திரட்டிடும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன.

சென்னை மாநகரம் முதல் தமிழகத்தின் மூலை முடுக்கிலுள்ள சாதாரணச் சிற்றூர்கள் வரை ஆங்காங்கே கழக முன்னணியினரும் தொண்டர்களும் உண்டியல்கள் குலுக்கிப் பொது மக்களிடம் நன் கொடைகள் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அவ்வாறு உண்டியல் ஏந்திடும் நாளாக 1964-டிசம்பர் ஏழாம் நாளைத் தேர்ந்தெடுத்து, அறிக்கை வெளியிட்டார் அண்ணா.

மற்றவர்களைப் போலவே நானும் அந்த நிதி திரட்டும் பணியிலே ஈடுபட்டேன்.

நண்பர்கள் புடைசூழ 7-12-64 அன்று காலை ஒன்பது மணி அளவில் சென்னையில் அன்பகத்திலிருந்து புறப்பட்டோம், உண்டியல் ஏந்தி, தேனாம்பேட்டை கடை வீதி, பாண்டி பசார் ஆகிய பகுதிகளில் 11-30 மணி வரை நிதி திரட்டினோம்... பின்னர் மீண்டும் நான்கு மணி அளவில் அதே பணியினைத் தொடர்ந்திட்டோம்.

வழியெங்கும் பொதுமக்கள் வெள்ளமெனத் திரண்டுநின்று உண்டியலை நிரப்பினர்; 'எங்கள் விழிநீரைத் துடைத்திடக்கூடிய ஒரே துணை தி.மு.கழகமே!' என்கிற தங்கள் நம்பிக்கையையும் தாங்கள் அளித்திட்ட காசுகளின் மூலம் அவர்கள் வெளிப்படுத்தினர்.

அறிஞர் அண்ணா அவர்கள் நிதி கேட்டு அறிக்கை விடுத்த நாளுக் கும் தோழர்கள் உண்டியல் ஏந்திய நாளுக்குமிடையில் மிகக் குறுகிய காலமே இருந்துங்கூட, கழகத்தின் தேவைகளைக் கழகத்தினர் நற்பணி



கலை—மக்கள் நினைவில் கொள்ளத் தவறுவதில்லை என்று சொல்லும அளவுக்கு நிதி திரண்டிருந்தது.

ஒரே நாளில் அதுவும் உண்டியல் மூலம்-ஒரு காசு இரண்டு காசாக ஏறத்தாழ எண்பதாயிரம் ரூபாய் வரை குவிந்தது, மற்ற மாற்றுக் கட்சிகள் அத்தனைக்குமே வியப்பினை அளிப்பதாகவே அமைந்தது.

நடனக் கலை நம் தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாகவே உள்ளத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க விட்டிடும் மிக உயர்ந்த கலையாகவே வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலேயே நடனக் கலையின் பல்வேறு கூறுகள் ஆழ்ந்த நுணுக்கத்துடன் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. நடனக் கலையின் பேரரசியாகவே மாதவி மங்கை நல்லாள் ஒப்பரியப் புகழின் உச்சியினை எட்டினாள்; அதனை அந்தச் செந்தமிழ்க் காப்பியம் செப்பிச் சிறப்பதையும் யாவரும் அறிந்திடுவர்.

இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்-ஆகிய முத்தமிழும் ஒளிமுத்தாய்த் திகழ்வதே நடனக்கலை.

ஆனால் அந்த நடனக் கலையோ பண்டையத் தமிழின் மரபுகளை—பழக்க வழக்கங்களை-வரலாற்றுப் பெருமைகளைப் படம் பிடித்துக் காட்டிடும் நிலைமையினின்றும் தடம் மாறி, இடைக்காலத்தில் வந்து இடம் பிடித்துக் கொண்ட புராண இதிகாசக் காட்சிகளை மட்டுமே சித்திரிப்பது என்ற நிலைக்கு இன்று திசைமாறி வந்துவிட்டதைக் காண்கிறோம்.

இப்படிப் பழைமைக் கதைகளையே ஆடிக் காட்டுவதோடு நில்லாமல் இக்காலச் சமுதாயச் சீர்கேடுகளைத் - தலைவர்களின் அரும்பணிகளை - அவர்களுடைய தியாகங்களைப் புதுமை நோக்கோடு கலையிலே புகுத்தினால் என்ன என்கிற எண்ணமும் எனக்கு உண்டு.

இதனையே திருமதி சத்யவாணிமுத்து அம்மையாரின் மகள் மரகதமணியின் நடன அரங்கேற்றத்திற்கு 12-12-64-இல் தலைமை தாங்கியபொழுது அடியிற்கண்டவாறு குறிப்பிட்டேன்:

"குழந்தைகளுக்கு நடனம் கற்பிக்கிற பொழுது புராணங்களிலிருந்து அவிநயத்திற்காகப் பாடல்களைப் பயன்படுத்துகிறார்கள் உதாரணமாகக் கண்ணனை, சிவன்பற்றிய பாடல்களைப் பயன்படுத்துகிறார்கள். ஏன் 'பாவ' உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கத்தக்க-அவிநயத்திற்

கேற்ற- சொற்கள் அவற்றில் அமைந்திருக்கின்றன என்ற காரணத்தால்தான் கண்ணன் குழல் வாசிப்பதுபோலவும், சிவன் கோபாவேசம் கொண்டு கண்கள் நெருப்பாக மாறுவதுபோலவும் 'பா' வத்தால் காட்ட முடிகிறது.

''பா'' வ உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் பாடல்கள் பழங்காலப் புராணங்களிலே - இதிகாசங்களிலே - மட்டுந்தானு ீஇருக்கின்றன? இல்லை. தேடித் தேடிப்பார்த்தால் துருவித்துருவிப் பார்த்தால்- இன்றைய தினம்கூடச் சமுதாய அமைப்புகளைச் சித்தரித்துக் காட்டும் எத்தனையோ பாடல்கள் இருப்பதையும் காணலாம். அப்படிப்பட்ட நல்ல பாடல்களைத் தேர்ந்தெடுத்து நடன ஆசிரியர்கள் பயிற்சி அளிக்க வேண்டும்.

''பழமையான பாடல்களே வேண்டும் என்று நான் மறுப்பதாகக் கிஞ்சிற்றும் கருத வேண்டாம். அவைகளும் இருக்கட்டும்; அத்துடன் புதுமையும் தொடரட்டும்.

''சமுதாயத்தைச் - சரித்திரத்தைச் சித்தரிக்கும் நிகழ்ச்சிகளில் 'பா' வ உணர்ச்சி வருமா என்று கேட்கக்கூடும். உத்தமர் காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட காட்சியை நல்ல 'பாவ'த்தோடு நடித்துக் காட்டிட முடியாதா? பேத்திகளின் தோள்களிலே அவர் கைகள் இரண்டையும் போட்டுக்கொண்டு செல்வதை 'பாவ' உணர்ச்சியோடு காட்ட முடியாதா? முடியும். அப்போது துப்பாக்கி ஏந்திக்கொண்டு ஒருவன் ஆக்ரோஷமாக வருவதை, குண்டு பாய்ந்து காந்தியார் விழுவதை, உயிரிழப்பதை, எல்லாவற்றையுமே காட்ட முடியும். அந்தக் காட்சியில் ஆக்ரோஷம், அமைதி, துடிதுடிப்பு, சோகம் - அத்தனை உணர்ச்சிகளையும் ஒருசேர வெளிபடுத்த முடியும்.

''முதுகொடிய மூட்டை சுமக்கும் தொழிலாளி படும் தொல்லையை- முதலாளி அவனைச் சவுக்கால் அடிக்கும் கொடுமையை- தடனக் காட்சிகளிலே கொண்டு வர முடியாதா?

''இப்படிப்பட்ட் அன்ருட நிகழ்ச்சிகளை 'பாவ' உணர்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்திக் காட்டி, கலையின் மூலம் நல்ல கருத்துகளை நாட்டுக்குப் பயன் தரத்தக்க வகையில் அமைக்க வேண்டும். மீண்டும் சொல்கிறேன். பழமையும் இருக்கட்டும். புதுமையும் சேரட்டும்!''

107

துக்க நாள்

1964-ஆம் ஆண்டின் இறுதி நாட்கள் தனுஷ்கோடிப் பகுதி மக்களுக்கு வாழ்வின் இறுதியையே கொண்டு வந்து சேர்த்திடும் நாட்களாகிவிட்டன.

24-12-64-இல் திடீரென்று கோரப் புயல் வீசியது; கொந்தளித்தது வங்கக் கடல்.

அந்தப் புயலும் பொங்குமாங்கடலும் வீடு வாசல்களை மட்டுமல்ல; மனிதர்களையும் விழுங்கின நூற்றுக்கணக்கில். ஏறத்தாழ ஐந்நூறு பேராவது அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று அப்போது மதிப்பிடப்பட்டது.

தமிழகத்தோடு இணைந்திருந்ததுதான் தனுஷ்கோடி. ஆனல் அதை இணைத்து வைத்திருந்த பாம்பன் பாலத்தை விழுங்கிவிட்டது பயங்கரக் கடல். வெறும் கம்பங்களே காட்சியளித்தன. தனுஷ்கோடியும் துண்டிக்கப்பட்டு இரண்டாயிரம் அடி நீளமும், ஐந்நூறு அடி அகலமும் உள்ள சின்னஞ்சிறு திட்டாகவே அது மாறிவிட்டது. அதிலே உணவு, உடை, உறைவிடம் எல்லாம் பறி கொடுத்து விட்ட நிலையில் தினம் டாடித் தத்தளித்தனர் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள்.

புயல் வீச்சால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி புரிந்திடும் உயர் பணியில் வழக்கம் போலத் தி.மு.கழகமும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

''இந்த ஆண்டு தென்னகத்திற்கு ஒரு சோகமயமான -துக்ககர மான- வருந்தத்தக்க ஆண்டாகும்.....''

—இவ்வாறு 1965-ஆம் ஆண்டினைத் தொலை நோக்கோடு வருணித்தவர், வெடித்திடப் போகும் எரிமலை பற்றி முன்கூட்டியே சூசகமாகச் சொன்னவர் யார் தெரியுமா?

கழகத்தைச் சார்ந்திட்ட எவருமே அல்லர்; மூதறிஞர் ராஜாஜி அவர்களே!

9-1-65 தேதியிட்ட 'சுயராஜ்யா' ஏட்டிலேயே மேற்கண்டவாறு தம்முடைய 'ஆரூடத்தை' அறிவித்திருந்தார் அவர்.

அவருடைய ஊகப்படியேதான் தமிழகத்தை ஆண்டவர்கள் தனல் காடாக ஆக்கினர் நாட்டை. 1965-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே இங்கே கோரப் புயல் வீசிற்று; குண்டுகள் பாய்ந்தோடின; குமுறும் எரிமலைகள் வெடித்தன; குருதி வெள்ளத்திலே மிதந்தனர் பலர்!

இப்படி நாட்டையே துப்பாக்கிகளின் வேட்டைக் காடாக ஆக்கிக் கொந்தளிப்புகள் கொழுந்துவிட்டு எரிந்திட எண்ணெய்யை வார்த்து விட்டது எது?

மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டமே!

1965 ஜனவரி 26 முதல் இந்தியை ஆட்சி மொழியாக ஆக்கியே தீருவது என்பதில் அழுத்தமாக இருந்தனர் டில்லியில் உள்ளோர். அவர் களுடைய பிடிவாதப் போக்கினுல் விளைந்திடக்கூடிய அநீதியை-அக்கிரமத்தை-மேலே குறிப்பிட்ட அதே ஏட்டில் ஆணித்தரமாகவும் சாடினுர் ராஜாஜி.

''தென்னக மக்கள் தாமாக விரும்பாதவரை அவர்கள்மீது நாங்கள் ஒரு போதும் இந்தியைத் திணிக்க மாட்டோம்'' என்பது நேருவின் சாசனம்! ஆனுல், பிரிட்டானியப் பேரரசன் ஜானின் 'மாக்னே கார்ட்டா'வுக்கு ஒப்பான அந்த வாக்குறுதிக்கு மாறுபட்ட ஒரு சட்டம் செயலாவதைத்தான் 1965 ஜனவரி 26 காணப் போகிறது.

''நல்ல நாட்டுப் பற்றுள்ள- நுண்ணறிவுள்ள இந்தியக் குடிமக்கள் மூன்று கோடிப் பேரை-கோபம் கொண்ட பிரிவினைக் காரர்களாக மாற்றும் சட்டமே இது.

''கட்டாயமாக அரசியல் அமைப்புச் சட்டத்தின் பதினேழாம் பிரிவு—ஆட்சி மொழி பற்றிய பிரிவு—அரபுக் கடலிலே தூக்கி எறியப் படவே வேண்டும்!''

—இத்துணை கடுமையாகக் கண்டனக் கணைகளைக்— கருத்தாழம் மிக்க வாதங்களை முதறிஞர் ராஜாஜி போன்றவர்கள் கொடுத்திட்ட போதிலும், மத்தியிலே கோலோச்சிய கோமான்கள் கேடு பயக்கும் காரியங்களிலேயே ஈடுபட்டனர். தென்னக மக்களின் எதிர்காலத்தையே சுட்டெரித்திடும் வகையிலேயே சுற்றறிக்கைகளை விட்டுக் கொண் டிருந்தனர்— மாநில அரசுகளுக்கு.

மத்திய அரசின் மொழித் திணிப்பால் மனம் கொதிப்புற்ற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற் குழு 8-1-65-இல் சென்னை 'அறிவக'த்திலே கூடிற்று. அப்போது ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றியது.

(அ) 1965 ஜனவரி 26-ஆம் நாளாகிய குடியரசு நாளின் முக்கியத்துவத்தைத் தி.மு. கழகம் உணர்ந்திருந்த போதிலும், தென்னக மக்களின் விருப்பத்தையும் நலத்தையும் சீரழிக்கக் கூடிய விதத்தில் அந்த நாளே இந்தித் திணிப்பு நாளாக இந்தியப் பேரரசினர் மேற்கொண்டிருப்பதாலும், அந்த நாளில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்தா விட்டால் தென்னகம் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளது என்று இந்திய அரசினரால் திரித்துக் கூறப்படும் என்பதை உணருவதாலும், அந்த நாளில் தென்னக மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியையும், மனக் கொதிப்பையும் காட்டுவதன் அறிகுறியாக அந்த நாளைத் துக்க நாளாகக் கொள்வது என்றும்,

(ஆ) அன்று எல்லா ஊர்களிலும் கண்டனக் கூட்டங்கள் நடத்துவது என்றும்,

(இ) துக்க நாளின் அறிகுறியாக அன்று கறுப்புக் கொடிகள் கட்டுவது, கறுப்புச் சின்னம் அணிவது என்றும்,

—இச்செயற்குழு முடிவு செய்திருக்கிறது.

இந்தத் தீர்மானம் பற்றி அறிந்தவுடனேயே அனலெக்கக்கினர் ஆளும் காங்கிரசார்.

'குடியரசு நாளில் துக்கம் கொண்டாடுவதா? அது துரோகச் செயல் அல்லவா?' என்றெல்லாம் அவர்கள் தூற்றினர். சீற்றத்தைக் கொட்டினர்.

மிகுந்த பொறுப்புணர்வோடு பொருத்தமான சொற்களைக் கொண்டே செயற்குழுவின் தீர்மானம் தீட்டப்பட்டது. குடியரசு நாளின் தனிச் சிறப்பினைக் குறைத்திட வேண்டும் என்பது அதன் குறிக்கோள் அல்ல.

மத்திய அரசினர் அந்த ஆண்டுக் குடியரசு நாள் முதல் இந்தியைக் கொலுவேற்றியே தீர்வது என்பதில் குறியாக இருந்திடாமல், வேறெரு நாளைத் தங்களுடைய திணிப்பு முயற்சிக்குத் தேர்ந்தெடுத்திருந்தால், அந்த 'வேறெரு நாளைத்'தான் துக்க நாளாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கும் கழகம். ஆனல் டில்லியிலே இருந்தவர்கள் அதில் பிடிவாதத்தையே காட்டினர். எனவே, அந்தக் குறிப்பிட்ட குடியரசு நாளையே துக்க நாளாகக் கொண்டாடுவதைத் தன் கடமையாகக் கருதிற்று கழகம்.

இந்த உண்மை நிலையினை உணர்ந்திட மறுத்து நாங்கள் வேண்டுமென்றே குடியரசு நாளை அவமதிப்பதாகக் குற்றஞ் சாட்டினர்

க்ரங்கிரசார். அத்துடன் 'துக்கம் கொண்டாடுபவர்கள் கைது செய்யப் படுவார்களா? அவர்கள்மீது தேசத்துரோக வழக்குப் போடப்படுமா?' என்றெல்லாம் சட்ட மன்றத்திலும் கேள்விகளை எழுப்பினர். அவற்றுக்கு விடையளிக்க முற்பட்ட அப்போதைய முதல்வர் பக்தவத்சலம் அவர்களும்,

"குடியரசு தினம் புனிதமானது; அன்று துக்க நாளாகக் கொண்டாடுவது தவறு; இது நாட்டுக்குத் துரோக மனப்பான்மையைக் காட்டுவதாகும். இது பற்றிச் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கும்" என்று உறுதியாக அறிவித்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் திரு பக்தவத்சலனுர் எந்தக் கட்சியினைச் சார்ந்தவரோ அதே காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்திட்ட வர்கள் மேற்கு வங்க மாநிலத்திலே சில ஆண்டுகளுக்கு முன்னர் இதே குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடினர்.

அச்சமயம் வங்கத்துக்குச் சொந்தமான 'பெருபாரி' பகுதியை வங்க மக்களைக் கலந்து ஆலோசிக்காமலேயே பாகிஸ்தானுக்குத் தாரை வார்த்துத் தந்திட உடன்பட்டு விட்டது இந்தியப் பேரரசு; அந்த அடாத செயலுக்குக் கண்டனம் தெரிவித்துக் கசப்பினைக் காட்டிடவே குடியரசு நாளில் துக்கத்தைக் கடைப்பிடித்தனர் மேற்கு வங்கக் காங்கிரசார்.

இதில் இன்னும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது என்னவெனில், அந்தத் துக்கக் கொண்டாட்டத்திலே முக்கியப் பங்கெடுத்துக் கொண்ட வர்களில் அந்த மாநில முதல்வர் டாக்டர் பி.சி. ராய் அவர்களே முன்னிலையில் நின்ருர் என்பதே!

அவருக்கு மட்டும் குடியரசு நாளையே துக்க நாளாகக் கொண் டாடும் துணிவு எப்படி வந்தது? அதன் மூலம் மாநில மக்களின் உணர்வுகளை மதிக்காத மத்திய அரசின் சர்வாதிகாரச் செயல்களைத் தட்டிக் கேட்டிடும் தைரியம் எங்கிருந்து வந்தது?

அதற்குக் காரணம், காங்கிரசின் தூண்களில் ஒருவராகவே திகழ்ந்திட்ட டாக்டர் பி.சி. ராய்க்குத் தன்மான உணர்வு இருந்தது தாயகப் பற்று இருந்தது. அதனால்தான் மற்றவர்களோடு சேர்ந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்திட வேண்டிய வேளையிலே கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டார், வெறுப்பின் அறிகுறியாக!

அவருடைய துணிவும், சொந்த மண் உணர்வும், தன்மானமும், தாய்மொழிப் பற்றும் தமிழகக் காங்கிரசாருக்கு இல்லாமற்போன தால்தான் இழிமொழிகளை- எரிச்சல்களைக்—கழகத்தின்மீது வாரிக் கொட்டினர் கடுமையாக.

அந்த நேரத்தில், அவர்கள் எங்கள்மீது சுமத்திய பழியிலே பசை இல்லை என்பதையும், குடியரசு நாளை வேண்டுமென்றே அவமதித்திடும் எண்ணம் எங்களுக்கு அறவே இல்லையென்பதை யும் சென்னை, 66-வது வட்டத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலே நான் இவ்வாறு விளக்கினேன்:

...ஆங்கிலக் கதையொன்றில் வில்லியம் டெல் என்ற ஒரு வில் வீரனுக்குச் சோதனையொன்று வந்தது. தன்னுடைய குழந்தையின் தலையில் வைக்கப்படும் ஆப்பிள் பழத்தை அவன் அம்பு எய்து பிளக்க வேண்டும் என்பதே அந்தச் சோதனை. பழத்தின் கீழே இருப்பது குழந்தை என்கிற நினைப்பு வீரனுக்கு வந்திருந்தால் அவனுடைய வில் நடுங்கியிருக்கும்-நாண் நடுங்கியிருக்கும்-அம்பு நடுங்கியிருக்கும்-குழந்தை மாண்டிருக்கும். ஆனால், ஆப்பிள் பழத்தைப் பிளக்க வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தை மட்டுமே கொண்ட வீரன் அம்பெய்கிறான்-பழம் பிளக்கப்படுகிறது-குழந்தைக்கு ஏதும் சேதம் ஏற்படாமல்.

''இங்கே குடியரசு நாள் என்பது குழந்தை! அதன் தலையிலுள்ள நச்சுப் பழம் இந்தி; தி. மு. கழகமோ குறி பார்ப்பதில் கெட்டிக்காரக் கட்சி; குடியரசு நாளுக்கும் அவமதிப்பு வராமல் இந்தி ஏகாதிபத்தியத் தையும் பிளந்திடத் தவறுமல் தி. மு கழகம் அம்பு எய்து வெற்றி பெறும் திறமை பெற்றது. இதைத் தி. மு. கழகம் குடியரசு நாளை அவமதிக்கிறது' என்று கூறித் தூண்டிவிடும்-உசுப்பிவிடும்-உத்தமர் களுக்குக் கூறிக் கொள்ளுகிறேன்.''

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்திலே மட்டுந்தான் இந்தித் திணிப்பினை எதிர்த்துக் குடியரசு நாள் துக்கநாளாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டதா என்றால் அப்படியும் இல்லை.

மேற்கு வங்கத்தில் 'வங்கப் புனர் கதன் பரிஷத்' என்னும் தேசிய வாதிகளின் அமைப்பு ஒன்றும் இங்கே கழகம் மேற்கொண்ட தீவிர முடிவினைப்போலவே தானும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிச் செயலாற்றிட முனைந்தது.

''...புனிதமான குடியரசு நாளில் பன்னிரண்டு கோடிப் பேர் மட்டுமே பேசும் இந்தியை 32 கோடி மக்கள் மீது திணிக்க அரசாங்கம் முயல்வதால் இந்தி பேசாத மக்கள் அனைவரும் இரண்டாந்தரக் குடிமக் களாக அவமானத்தில் உழல நேரிடும். எனவே முறைகெட்ட வகையில் ஆதிக்கப் பீடத்தில் ஏறி இருக்கும் இந்தியை அந்தப் புனித மான அரியாசனத்திலிருந்து இறக்குவதற்கு இந்தி பேசாத மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நீடித்த போராட்டம் நடத்த வேண்டியது

அவசியமாகும். ஆகவே, இந்தி மட்டும் இந்திய நாட்டின் ஆட்சி மொழியாவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மேற்கு வங்கம் முழுவதிலும் ஜனவரி 26 முதல் ஒரு வார காலத்திற்கு எதிர்ப்பு வாரம் (Protest week) அனுசரிக்கப்படும்."

கழகம் நிறைவேற்றிய தீர்மானத்திற்குக் கடுமையான கண்டனம் தெரிவித்த காங்கிரசார், வங்க மாநிலத்தில் தேசிய வாதிகள் மேற் கொண்ட முடிவைப் பற்றி மட்டும் வாயையே திறக்கவில்லே. எப்படித் திறப்பார்கள்?

'இட்லர் மட்டும் இரண்டாம் உலகப் போரிலே வெற்றியை எட்டிப் பிடித்திருந்தால்...இந்த உலகத்தின் நிலேமை எப்படியெல்லாம் மாறியி ருக்கும்? மக்களாட்சி நெறி முறைகள் மண்ணேடு மண்ணுகப் புதைக்கப் பட்டிருக்க மாட்டாவா?' என்றெல்லாம் சிற்சில சமயத்தில் நான் எண்ணிப் பார்ப்பதுண்டு, மனத்திற்குள்ளேயே.

அந்த அளவிற்கு ஆங்காரத்துடன் போரினேத் தொடுத்து உலகையே அதிர்ச்சிக்கு ஆட்படுத்திக் கொண்டிருந்தான் இட்லர். 'அவனுடைய நாசிப் படைகள் அதோ ஆலந்தைப் பிடித்து விட்டன-போலந்தை விழுங்கி விட்டன-அதோ பெல்ஜியத்தைக் கைப்பற்றி விட்டன-பிரான்சை நெருங்கி விட்டன' என்று ஒவ்வொரு நாளும் செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்த நேரம் அது.

கடலிலே சின்னஞ்சிறு மீன்களேயெல்லாம் தின்று கொழுத்திடும் திமிங்கிலத்தைப் போல, ஐரோப்பாக் கண்டத்தின் சிறிய சிறிய நாடு களேயெல்லாம் தனக்கு இரையாக்கி ஏப்பமிட முற்பட்டு விட்டான் ஜெர்மனியை ஆண்டிட்ட இட்லர்.

அவனுடைய நாடு பிடிக்கும் நச்சு எண்ணம் இங்கிலாந்து நாட்டுக்கும் நீண்டது; இலண்டனிலே குண்டுமாரி வீசிடவும் தூண்டியது. அதனல் பிரிட்டானிய மக்கள் அடைந்திட்ட பேரதிர்ச்சி-பெரும்பீதி-கொஞ்ச நஞ்சமல்ல.



ஆயினும், மாவீரன் நெப்போலியனையே 'வாட்டர்லூ' வில் வீழ்த்துவதற்கு இங்கிலாந்தில் ஒரு நெல்சன் தோன்றியிருந்ததைப் போலவே, இட்லரின் கொட்டத்தை அடக்குவதற்கென்றே சர் வின்ஸ்டன் சர்ச்சில் பிறந்திருந்தார் இங்கிலாந்தில்! அவர் மட்டும் பிரிட்டானியத் தலைமையமைச்சராக அப்போது இல்லாமற்போயிருந்தால், தன்னுடைய பல காலனி நாடுகளுக்கு விடுதலை வழங்கிடும் நாடாக விளங்கியிருக்காது பிரிட்டன்; தானே விடுதலைக்குப் போரிடும் அடிமை நாடாகவே ஆகியிருக்கும் ஜெர்மனியின் இட்லருக்கு. அது மட்டுமா? பிரான்ஸ் முதலான பெரும்பாலான நாடுகளில் இன்றைய உருவங்களெல்லாம் சிதைக்கப்பட்டிருக்கும் சின்ன பின்னமாக.

அத்தகைய இருண்ட நிலைகள் ஏற்பட்டிடா வண்ணம் இரண்டாம் உலகப் போரினை ஒரு முடிவுக்குக் கொணர்ந்து, இட்லர் தானே வெருண்டோடி வீழ்ச்சியினைத் தழுவி மறைந்திடும் வகையில் 'வியூகம்' வகுத்திட்டவர்—யுகத்தோடு செயலாற்றியவர்—வின்ஸ்டன் சர்ச்சிலே! அவர் காட்டிய வெற்றிக்குரிய 'V' குறியைக் கண்டே, தளர்ந்து கிடந்த மக்கள் எல்லாரும் தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நின்றனர்; பொங்கியெழுந்தனர் புலிகளாக; புறமுதுகிட்டு ஓடச் செய்தனர் நாசிப்படைகளை!

இவ்வாறு உலகையே 'இட்லர்' என்னும் எரிதழலிலிருந்து மீட்டவரும் இலக்கியத்துக்காக நோபல் பரிசைப் பெற்றவருமான சர்ச்சில் அவர்கள் தம்முடைய தொண்ணூருவது வயதில் 21-1-65 இல் சாவின் மடியிலே வீழ்ந்து விட்டார், இந்தத் தரணியையே சோகத் தணலில் தள்ளிவிட்டு!

சர்ச்சிலின் உயிர் பிரிந்தாலும், அவர் பெயர் மறையவே மறையாது; உலக அமைதித் தாயின் மணிக் கழுத்திலே அது வைர மாலையாக ஒளியை வீசிக்கொண்டேதான் இருக்கும். வையகம் உள்ளவரை-வரலாறு உள்ளவரை அவருடைய புகழ் வாடாத மல்லிகை; வற்றுத நறுஞ்சுனை; அணையாத திருவிளக்கு.

குடியரசு நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

அது தமிழர்களின் சூடிகெடுக்கும் நாளாக மாறிவிடக் கூடாதே, இந்தித் திணிப்பின் காரணமாக என்கிற கவலையால்தான் அதனைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப் பட்டது கழகம்.

எனினும், இந்த நாளில் வன்முறைச் செயல்கள் தலைதூக்கிடா வண்ணம் அமைதி காட்டிட-அறவழியிலேயே குமுறலெவெளிப்படுத்திடப்-பொதுமக்களுக்கும் கழகத்தவருக்கும்-எடுத்துச் சொல்வதில் அண்ணா

வும் மற்றக் கழக முன்னணியினரும் அமைதி செலுத்தினோம்; இந்தி எதிர்ப்பு எழுச்சிக்கு ஆதரவைத் திரட்ட ஆங்காங்கே கூட்டங்கள் நடத்திய அதே வேளையில் வன்முறைக்கு வழி வகுத்திடக் கூடாது என்பதையும் நாங்கள் வலியுறுத்தினோம்.

என்ருலும் அன்று நாட்டை ஆண்டவர்கள் எங்கள் நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ளத் தவறினர். 'தலைவர்களைச் சிறையிலே தள்ளிவிட்டால் தொண்டர்கள் சரியாகி விடுவார்கள்' என்று தப்புக் கணக்குப் போட்டனர்; தாண்டவமாடிற்று அடக்குமுறை!

108

காராக்கிரகம் விழுங்கிற்று எங்களை

பேரறிஞர் அண்ணா, 25-1-65 நள்ளிரவில் கைது செய்யப் பட்டார். குளித்தலையில் கூட்டத்தை முடித்துக் கொண்டு கோவை நாக்கிக் கண்டனக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் பயணம் செய்துக் கொண்டிருந்த என்னை இரவு ஒரு மணி அளவில் பசுபதிபாளையத்தில் வழியிலே வந்து வளைத்துக் கொண்டனர் காவல் துறையினர். மற்ற கழக முன்னணியினருக்கும் பரிசாகக் காத்திருந்தது சிறைவாசம்.

தங்கத் தமிழகம் கொந்தளிக்கும் கடலாகவே மாறிக் கொண்டி ருந்தது.

மாணவ மணிகள் இன்றைய இளஞ்செடிகள்; நாளையப் பழ மரங்கள்.

இந்தி ஏகாதிபத்தியமோ அந்தச் செடிகள் பல தீய்ந்திடவும்-மாய்ந் திடவும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கிற்று கொடூரமாக!

உடல் வளத்திற்கு ஊட்டச் சத்து போல-மனவளத்திற்குக்-குண லத்திற்கு-உரமாய் அமைந்ததே கல்வி.

அந்தக் கல்வித் தேனைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய மலர்களிலி ருந்து திரட்டிச் சேமித்துக் கொள்வதே உயிர் மூச்சாய் ஒரே குறிக் கோளாய்-அமைந்திட வேண்டும் மாணவ மணிகளுக்கு.

எனினும், அந்தக் கல்வியிலேயே கலப்படம் நிகழ்ந்திடும் பொழுது —நஞ்சே கலக்கப்படும் பொழுது—தாய்மொழிக்குரிய தனி இடமே தகர்க்கப்படும்பொழுது--மாணவர்களால் எப்படி இருந்திட முடியும் மவுனமாக?

தனிப்பட்ட சச்சரவுகளுக்காகவும், தங்களுக்குள்ளேயே வெடித் திடும் கோப தாபங்களுக்காகவும், தேவையற்ற முறையில் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டு மாணவர்கள் படிப்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள் என்றால், அது தவறானதுதான்-தவிர்க்கப்படவும் வேண்டியதுதான்.

ஆனால் ஒரு நாட்டின் விடுதலை, மொழியுரிமை, இனநலன் -முதலான பொது இலட்சியங்களை ஊனப்படுத்திட-அவற்றின் உருவையே சிதைத்திட-சில தீய சக்திகள் முற்படும் பொழுது, பொது

நல நோக்கோடு அவற்றை எதிர்த்துப் பொருதி மாண்வ மணிகள் கொதித்து எழுவது இயற்கைதானே!

இந்தித் திணிப்பினுல் தங்கள் எதிர்காலமே இருண்டிடப் போகிறதே என்கிற அச்சத்திற்கு - அதிர்ச்சிக்கு ஆளான மாணவச் செம்மல்களும், அவ்வாறே அப்போது ஏகாதிபத்திய வெறியர்களின் தீதான மொழித் திட்டங்களேயெல்லாம் ''தூள், தூள் ஆக்குவோம்!'' என்று தோள் தட்டிக் கிளம்பினர் வீராவேசத்தோடு!

1965 ஜனவரி 25-இல் தமிழகம் எங்கணும் உள்ள மாணவர் இந்தித் திணிப்பிற்கு எதிர்ப்பினைத் தெரிவித்து ஆங்காங்கே மாபெரும் கண்டன ஊர்வலங்களே நடத்தினர்.

சென்னையில் எல்லாக் கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர் அணி அணியாக நேப்பியர் பூங்காத் திடலில் வந்து கூடினர். ஐம்பதாயிரத் திற்கும் மேற்பட்ட அவர்கள் அனைவரும் பின்னர் ஒரே பெரும் படை யாக-ஒரே ஊர்வலமாகத் தமிழக அரசின் தலைமைச் செயலகம் அமைந் துள்ள கோட்டை நோக்கிச் சென்றனர். இந்தி ஏகாதிபத்தியத்தினைத் தடுத்திட வேண்டிக்கொள்ளும் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினைக் கொடுத்திட முயன்றனர் அமைச்சர்களிடம்.

பின்னர், அன்று மாலை 5-30 மணியளவில் சென்னை மெரீனு கடற் கரையில் மாணவர்கள் கூட்டம் நடைபெற்றது. அங்கே வெள்ளமெனத் திரண்டிருந்த இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் முன் னிலையில் சில இந்தி மொழிப் புத்தகங்களுக்கு எரியூட்டப்பட்டது, எதிர்ப்பின் அறிகுறியாக.

அரசுக் கட்டிலில் அமர்ந்திருப்போரின் கவனத்தைக் கவர்ந்திட ஊர்வலங்கள் செல்வதும், கூட்டங்கள் நடத்துவதும் மக்களாட்சி நெறி யிலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே. சட்டம்-ஒழுங்கு குலைந்திடா வகையில் அமைதியாகவே அவை நடைபெறும் வரையில், அவற்றைத் தடுத்திட முனைவது ஜனநாயக உணர்வாகாது; சர்வாதி கார வெறியே ஆகும்.

அத்தகைய வெறியாட்டங்களுக்கே தங்களே உரிமையுள்ள வர்களாக ஆக்கிக்கொண்டு மாணவர்தம் எழுச்சியினை இழித்துப் பேசியதோடு நின்றிடாமல் அழித்தொழிக்கவும் வன்முறையில் இறங்கிவிட்டனர் அன்றையக் காங்கிரசார்.

மதுரையில், வடக்கு மாடவீதி வழியாக மாணவர்கள் ஊர்வலம் சென்றபோது, அர்பன் ஜில்லா காங்கிரஸ் குழு அலுவலகத்தின் முன்னுல் காங்கிரஸ்காரர்கள் அரிவாள், ஈட்டி முதலான ஆயுதங்களு

டன் பாய்ந்து வந்து மாணவர்களைத் தாக்கினர். ஒரு கல்லூரி மாணவர் படுகாயம் அடைந்து உயிர் ஊசலாடும் நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த மதுரைச் சம்பவம் உடனே மாநிலமெங்கும் பரவிற்று காட்டுத் தீயாக. அமைதியாக அறப் போரிலே ஈடுபட்ட மாணவர்களின் நெஞ்சிலே ஆத்திரக் கனலையே அது மூட்டிவிட்டது.

அன்று (25-1-65) இரவுதான் அண்ணவும், நாவலரும், நானும் மற்றக் கழக முன்னணியினரும் ஆங்காங்கே இரவோடு இரவாகத் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டோம்.

குடியரசு நாள்-

குமுறிடும் இதயங்களை-

வெளிப்படித்தும் அவலக் காட்சிகளுடனேயே விடிந்தது.

தமிழகத்தில் மட்டுமின்றிக் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், வங்காளம் முதலான மற்ற மாநிலப் பகுதிகளிலும் அந்நாள் துக்க நாளாகவே கொண்டாடப் பெற்றது.

அன்று கழகக் கண்மணிகள் கறுப்புச் சின்னங்கள் அணிந்து தத்தம் இல்லங்களிலே கறுப்புக்கொடி ஏற்றித் தங்கள் வேதனையினை வெளிப் படுத்தினர். அமைதிக்கும் பங்கம் விளைவித்திடும் முறையில்-பொது மக்களுக்குக் குந்தகம் உண்டாக்கிடும் போக்கில்-எத்தகைய வன்முறை யிலும் இறங்கிடவில்லை அவர்கள்.

என்ருலும்-

பொது இடங்களுக்குப் போகாமல் அவரவர்களுக்குச் சொந்தமான இடங்களில் மட்டுமே நின்று கழகத்தவர் துக்கங்கொண்டாடிய போதிலும், கறுப்புச் சின்னங்களும், கறுப்புக் கொடிகளும் காங்கிர சாரின் கண்களை உறுத்தின போலும்! எனவே, வேண்டுமென்றே வீண் வம்பு இழுப்பதற்கு என்றே அவர்கள் ஏவி விட்டனர், 'குண்டர் படை'



ஒன்றை! காவல் துறையினரால் கட்டவிழ்த்து விடப்பட்டது அடக்கு முறையும்!

இதனால், தெருவிலேயே நடமாட முடியாதபடி கறுப்புச் சின்னம் அணிந்த கழகத் தோழர்கள் துரத்தித் துரத்திப் பிடிக்கப்பட்டனர். சோதனைகளுக்கும், சுடு மொழிகளுக்கும் ஆளாயினர் பொதுமக்களும் இந்தக் கெடுபிடிகளிலிருந்து தப்ப முடியவில்லை.

சென்னை, இராயபுரத்திலே உள்ள கழகத்தின் தலைமை நிலையமான 'அறிவக'த்தின் மாடிமீது ஏற்றப்பட்டிருந்த கறுப்புக் கொடியை அறுத்தெறிந்தார்கள் காங்கிரசார். வாயிலில் கட்டப்பட்டிருந்த தட்டிகளும் சுவரெட்டிகளும் பிய்த்தெறியப்பட்டன; தீ வைத்துக் கொளுத்தப் பட்டன.

'முரசொலி' அலுவலகத்தின் முன்பும் குண்டர்கள் வந்து கூச்சல் போட்டவாறே கற்களை வீசினர். கலகம் விளைவித்தனர். அங்கே ஏற்றப்பட்டிருந்த கறுப்புக் கொடியும் இறக்கப்பட்டது. உள்ளே பணி புரிந்துகொண்டிருந்த துணையாசிரியர்கள் சிலர் தடியடிக்கு ஆளாகிக் கைதும் செய்யப்பட்டனர்.

அதேபோல், நுங்கம்பாக்கம், அவென்யூ சாலையில் உள்ள அண்ணா அவர்களின் இல்லத்தின் முன்பும், தேனாம்பேட்டையில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் இல்லத்தின் முன்பும், கோபாலபுரத்தி லுள்ள என்னுடைய வீட்டின் முன்பும் கறுப்புக் கொடிகளை இறக்கிக் கலவரங்களை உருவாக்கிட முயன்றனர் சிலர்.

இவ்வாறு கழகத்தவர் பலர் தாக்குண்ட போதும், அவர்களுடைய இல்லங்களின் முன்னால் கலவரங்கள் மூண்டபோதும் பாதிக்கப்பட்டவர் களுக்குப் பாதுகாப்புத் தந்திடவில்லை காவல் துறையினர்; மாறுக வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். ஒருசில அதிகாரிகளோ தாங்களே சென்று கறுப்புக்கொடிகளை இறக்கியிருக் கிறார்கள். பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்? 'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே' என்கிற பாட்டுக்கேற்ப, அன்றையக் காங்கிரஸ் ஆட்சியின் ஆணைப்படிதானே அவர்கள் செயலாற்றிட வேண்டும்?

109

நெஞ்சைப் பிளந்திடும் நிகழ்ச்சிகள்

துக்க நாள் கொண்டாடிய காரணத்திற்காகச் சொல்லொணாத் தொல்லைகளுக்குக் கழகத்தினர் உள்ளாக்கப்பட்ட அதே வேளையில்-

நெஞ்சையே பிளந்திடக் கூடிய சம்பவங்கள் சிலவும் நிகழ்ந்து விட்டன அந்தக் குடியரசு நாளில்.

'இந்தி ஏகாதிபத்தியக் கொடுமையால் மற்ற மொழிக்காரர்கள் எல்லாரும் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்படப் போகிறோமே- குறிப்பாகத் தமிழினத்தவரின் கலை, இலக்கியம், கலாச்சாரம் அத்தனையும் அழிவைச் சந்திக்க நேரிடுமே - இந்தியால் தென்னாட்டவரின் எதிர்காலமே இருளடையப்போகிறதே என்கிற உண்மையினை எடுத்துச் சொன்னாலும், மத்திய அரசிலே உள்ளவர்கள்தான் ஆணவத்தோடு ஏற்க மறுக்கிறார்கள் என்றால், இங்கே மாநிலத்திலே உள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்களும் டில்லிக்கே தாளம் போடுகிறார்களே- நேருவின் வாக்குறுதி காற்றிலே பறக்க விடப்படுவதற்கும் கவலைப்படாமல் இருக்கிறார்களே!'-என்றெல்லாம் நெஞ்சம் வெந்திட்ட 'சிங்கத் தமிழன்' சின்னச்சாமி திருச்சியிலே நெருப்பிலே வெந்திட்டதுயர நிகழ்ச்சி பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்தத் தியாகச் செம்மலின் அடிச்சுவட்டிலேயே தே. மு. சிவலிங்கம் என்னும் கழகத் தோழர், சென்னை - கோடம்பாக்கம் - அண்ணாநகர் அருகில் 26-1-65 காலை 3-30 மணிக்குத் தம் உடல் மீது பெட்ரோலை ஊற்றிக்கொண்டு செந்தணலிலே வெந்து மடிந்தார்.

அதே முறையில் 27-1-65 விடிவதற்கு முன்னர் பின்னிரவு இரண்டு மணியளவில் அரங்கநாதன் என்னும் கழகத் தோழர் சென்னையை அடுத்த விருகம்பாக்கத்திலே தீக்குளித்து மாண்டார்.

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை செல்லும் வழியிலுள்ள கீரனூரைச் சேர்ந்த முத்து என்னும் இளைஞரோ மேலே குறிப்பிடப்பட்ட தோழர்களைப் போலத் தீக்குளிக்காவிட்டாலும் வேறு வகையில் தம் உயிரைத் தியாகம் செய்து விட்டார் இந்தித் திணிப்பை எதிர்த்து.

இந்த மூன்று தோழர்களின் தியாகத்தையும் குறிப்பிட்டுத் தென்னாட்டவரின் இந்தி எதிர்ப்பு வாதத்தில் பொருள் உள்ளது

எனபதை விளக்கி உலகப் புகழ்பெற்ற அமெரிக்க 'டைம்' (Time) ஏடு கட்டுரை ஒன்றையே அப்போது வெளியிட்டது.

அதில் காணப்படும் சில வரிகள் வருமாறு:

''...தென்னிந்தியாவில் உள்ள திருச்சி அருகே இருபது வயதுள்ள உணவு விடுதி ஊழியரான கீரனூர் முத்து என்பவர் மூட்டைப்பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டுவிட்டார். இப்பகுதியில் நடந்த மூன்றுவது தற்கொலையாகும் இது.

''இதற்கு முன் இரண்டு இளைஞர்கள் இவரைப் போலவே தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டனர். வியட்நாமியர் முறையில் இவர்கள் தங்கள் உடலில் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திக் கொண்டனர். இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மூவரும் இந்தித் திணிப்பை எதிர்த்தவர்கள்.

''காங்கிரஸ் ஆளும் கட்சி, இந்தியாவின் 15-ஆவது குடியரசு நாளன்று இந்தியை ஆட்சி மொழியாக்கிக் கொண்டாட்டம் நடத்தியது. புதிய சட்டத்தின்படி இனி ஆட்சி நடவடிக்கைகள் இந்தியில் நடத்தப்பட வேண்டும். ஆனால் தென்னிந்தியாவில் 11 கோடி மக்களுக்கு மேல் 4 திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இந்த நான்கு மொழிகளையும் பேசும் மக்கள் இந்த (இந்தித்திணிப்பு)ச் சட்டத்தை வெறுத்து எதிர்க்கின்றனர்.

''இந்தியை எதிர்க்கும் தென்னாட்டவர்களின் வாதத்தில் பொருள் உள்ளது. கல்வியறிவுள்ள இந்தியர்களின் உண்மையான ஒரே பொது மொழி ஆங்கிலம்தான். தென்னாட்டினருக்கு இந்தி வரி வடிவம் மாபெரும் இடையூறு ஆகும். இந்தி (தேவ நாகரி லிபி) எழுத்துக்கள் தொடர்ச்சியான வளைவுகளும், கோடுகளும் மேலே எழுந்து விரியும் உயிர்க் குறியிடுகளும் நிறைந்து மேற்கோட்டுடன் எழுதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களோ எழில் நுட்பம் மிக்க சுருள்களும் வளைவுகளும் பொருந்தியவை.

—இவ்வாறு தமிழின் தனிச்சிறப்புக்கள் பற்றியும். அமெரிக்க 'டைம்' ஏட்டினர் போன்ற வெளிநாட்டினரே தாங்களும் விளங்கிக் கொண்டு மற்றவர்களுக்கும் விளக்கங்களை அடுக்கினாலும்-இங்கே கொலுவேறியிருந்த காங்கிரசின் கோமான்களோ இந்தி ஏகாதிபத்தியத்துக்கு வெண்சாமரம் வீசுவதையே தங்களுக்குத் தலையாய பெருமை என்று கருதினர். மத்திய அரசிடம் நல்ல பெயர் வாங்கிவிட்டால் போதும் என்கிற நைப்பாசையுடன் துப்பாக்கிச் சூடுகள் நடத்திடவும் துணிந்து விட்டனர் மாணவச் செல்வங்கள் மீது!

அந்த அறப் போரின்போது குண்டு மழை பொழிந்து குருதி வெள்ளத்தைப் பெருக்கி உயிர்களைக் குடிக்கின்ற கொடுமை தொடங்கியது முதன் முதல் அண்ணாமலை நகரில்தான்!

இந்தித் திணிப்பினை எதிர்த்திடவும், மதுரையிலே மாணவர் ஒருவர் வெட்டப்பட்ட வன்முறைச் செயலைக் கண்டித்திடவும், ஊர்வலம் ஒன்றை நடத்தினர். சிதம்பரம்-அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள்.

27-1-65 அன்று காலை ஏறத்தாழ 9-30 மணியளவில் அவர்கள் ஊர்வலமாகக் கிளம்பிச் சிதம்பரத்தில் நான்கு பெருந் தெருக்களையும் வலம் வந்திட முற்பட்டனர். ஆனால், புகைவண்டி நிலையத்தருகில் நெருங்கிடும்பொழுதே தடுத்து நிறுத்தப்பட்டனர். தடை இருப்பதாகக் கூறப்பட்டது.

"அப்படித் தடை விதிக்கப்பட்டிருந்தால் அதனை மீறி ஊர்வலம் நடத்துவதையே தமிழ் காக்கும் இலட்சியம் பூண்ட எங்களுடைய தன்மானக் கடமையாகக் கருதுகிறோம்; வேண்டுமானால் நீங்கள் கைது செய்து கொள்ளுங்கள்'-என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் மாணவத் தளபதிகள்.

அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன; தடியடிகள் நடத்தப்பட்டன; மாணவர்கள் தாறுமாறாகத் தடுக்கி விழும் வகையில் ஓட ஓட விரட்டப்பட்டனர். திடீரென்று துப்பாக்கிக் குண்டுகள் வெடித்தன.

சிவகங்கையைச் சேர்ந்தவரும், பி.எஸ்சி., வகுப்பில் பயின்று வந்தவருமான இராசேந்திரன் என்னும் மாணவர் குண்டுகள் பாய்ந்து அந்த இடத்திலேயே மாண்டார்.

1965-அறப்போரில் துப்பாக்கிச் சூடுகள் எத்தனையோ இன்னுயிர்களைச் சுவை பார்த்தன; ஆயினும் தாய்மொழியின் தன்மானத்தைக் காத்திட தன் ஆருயிரையே முதல் காணிக்கையாக-முதல் களபலியாகத் -தந்து மறைந்திட்ட தியாகச்சுடர், இராசேந்திரனே!

சிதம்பரம் அண்ணாமலை நகரில் நடந்த அந்தத் துப்பாக்கிச்சூட்டில் இளங்கோவன் என்னும் மாணவரும் குண்டுகள் பாய்ந்து சிகிச்சைக்காகக் கடலூருக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால், போகும் வழியிலேயே அவரும் மடிந்துவிட்டார்.

தமிழ்ப் புலவர் வகுப்பில் பயின்றுகொண்டிருந்த நெடுமாறன் என்னும் மாணவர், தமது வலது தோளில் குண்டு பாய்ந்த நிலையில் குருதி வெள்ளம் சொட்டச் சொட்டச் சிதம்பரம் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார்.

மதுரை நிகழ்ச்சியால் மனம் கொதிப்புற்ற தமிழக மாணவர் நெஞ்சிலே அண்ணுமலைநகர் துப்பாக்கிச் சூடு மேலும் ஆத்திரக் கனலையே தூண்டிவிட்டது; துடித்தெழச் செய்தது!

"குண்டு பாய்ந்து எலும்பொடிந்து
குருதியெல்லாம் போயினும்-
மண்டை இரண்டாய் உடைந்து
சிதறி மண்ணின் மீது சாயினும்-
பண்டை எங்கள் தமிழைக் காக்கும்
படையை விட்டே ஓடவோ?"

—என்று மாணவச் சிங்கங்கள் பரணி பாடினர்; புறநானூறு படைத்தனர்.

அண்ணுமலை நகரிலே அருமை மாணவர் இராசேந்திரனின் உடல் மண்ணிலே சாய்ந்திட்ட பிறகும்-இளங்கோவனின் உயிர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகிய பின்னரும்-

தடியடி தர்பார் தடைப்படவில்லை; அடக்குமுறைக் கொடுந்தீ அடங்கிடவில்லை; துப்பாக்கிகள் வெடிப்பதும் ஓய்ந்திடவில்லை.

இந்திப் பேயின் இரத்தப் பசி எள்ளளவும் தணிந்திடவே இல்லை' அது மேலும்மேலும் இரை தேடியே அலைந்தது, இரக்கமே இல்லாமல்.

இதற்கிடையில் குடியரசு நாளுக்கு முந்தின நாள் இரவு கைது செய்யப்பட்ட அண்ணு அவர்களும் கழக முன்னணியினர் சிலரும் யாரும் எதிர்பாராத வகையில் 1965 பிப்ரவரி முதல் தேதி விடிவதற்கு முன்னர் இரண்டு மணி அளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

திருச்சி துணைச் சிறையிலே அடைக்கப்பட்டிருந்த நானும் 'மற்ற நண்பர்களும் பிப்ரவரி 2-ம் நாள் மாலை ஆறு மணி அளவில் விடுதலை செய்யப்பட்டோம்.

ஆனல், டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் 1-2-65-இல் மதுரையிலே கைது செய்யப்பட்டார். இந்தியை எதிர்த்துப் போராடுமாறு மாணவர்களைத் தூண்டி விட்டார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுக் கூண்டுக்கிளி ஆக்கப்பட்டார் அவர்.

தமிழ் மீது தணியாக் காதல் கொண்ட பேராசிரியர் இலக்குவனருக்குத் தன்மான இயக்கக் கொள்கைகளிடமும் அடிநாள் தொட்டுத் தனியானதோர் ஈடுபாடு உண்டு. அகில உலகமும் அறிந்திடும் வண்ணம் தொல்காப்பியத்தை ஆங்கிலத்திலே யாத்தளித்த பெருமை அவரைச் சார்ந்திடுவதாகும். 'குறள் நெறி' ஏட்டின்

வாயிலாக அவர் எழுப்பிய குரல் தமிழுக்கு அரண் செய்வதாகவே அமைந்திருந்தது. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கருத் தரங்கு மிகக் கோலாகலமாகச் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே நடைபெற்ற சமயம்; பிழையானதொரு கருத்தினைப் பெற்றிடும் வகையில், பிராமி எழுத்துக்களிலிருந்து தான் தமிழ் எழுத்துக்கள் தோன்றின என்றும், தமிழுக்கு என்று தனிச் சிறப்பான எழுத்துக்கள்கிடையாது என்றும் தம்முடைய கல்வெட்டு ஆராய்ச்சியின் மூலம் நிறுவிட முயன்றார் ஒருவர். அந்த வேளையில் அவர் ஒன்றரை மணிக்கு மேல் ஆற்றிய ஆராய்ச்சியின் சொற்பொழிவை ஒன்றரை நிமிடத்திலேயே தம்முடைய வாதத்திறல் பொடிப் பொடியாக்கித் தமிழின் தன்மானத்தைக் காத்துப் பிறமொழி அறிஞர்களின் கை தட்டலைப், பாராட்டுதலைப் பெற்றிட்ட ஒரே தமிழ்ப் பேராசிரியர் இலக்குவனாரே!

என்பால் உள்ளார்ந்த அன்பு கொண்ட அவர் சிறைப்பட்டார் என்கிற செய்தி அறிந்ததும் நான் மிகவும் வருந்தினேன்.

அவர் கைது செய்யப்பட்ட கொடுமையும் மாணவர் உலகின் மனக் கொதிப்பை அதிகமாக ஆக்கியது.

தமிழகத்திலே சுழன்றடிக்கத் தொடங்கிய இந்தி எதிர்ப்புச் சூறாவளி இந்தி பேசாத பிற மாநிலங்களிலும் வெகு வேகமாகத் தாவலாயிற்று-தழுவலாயிற்று.

கருநாடக (மைசூர்) மாநில மாணவர்கள் படிப்பு நிறுத்தம் செய்து ஆங்காங்கே ஊர்வலங்கள் நடத்தினர்: உண்ணா நோன்பும் மேற் கொண்டனர் சட்ட மன்றத்தின் முன்பு; அன்றைய மைசூர் முதல்வர் திரு. நிஜலிங்கப்பாவிடம் மனு ஒன்றையும் அளித்தனர், இந்தித் திணிப்பைக் கண்டித்து.

ஆந்திராவில் ஐதராபாத், விசாகப்பட்டினம், திருப்பதி, மதனப்பள்ளி, சித்தூர், அனந்தப்பூர் முதலான பல இடங்களிலும் மாணவர்கள் படிப்பு நிறுத்தத்தில் ஈடுபட்டுத் தடியடிகள், கண்ணீர்ப் புகை முதலான அடக்குமுறைத் தாண்டவங்களுக்கெல்லாம் ஆளாயினர். நெல்லூரில் துப்பாக்கிச் சூடே நடைபெற்று இருவர் மாண்டிட, அறுவர் இரத்த வெள்ளத்திலே மிதந்தனர்.

மேற்கு வங்க மாநிலத்திலோ ஒரு வார காலத்திற்கு இந்திப் படக் காட்சிகளே ரத்துச் செய்யப்பட்டன. கல்கத்தாவில் சட்ட மன்றத்தின் முன்பும் ஆளுநர் மாளிகை முன்பும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஜாதவ்பூர் பல்கலைக்கழக மாணவர்கள் ஜாதவ்பூர் நகரிலிருந்து பத்து மைல் தொலைவும் ஊர்வலமாகவே வந்து அந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கு பெற்றனர். தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் தந்தை பெரியாரும், தி. மு. கழகமும் செய்ததைப் போல, வங்காளப் பகுதியிலும் இரயில் நிலையப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துக்கள் எல்லாம் அழிக்கப் பட்டன, புரட்சியாளர்களால்.

அசாம் மாநிலத்தில் அகர்தலா போன்ற இடங்களில் தமிழக மாணவர்களுக்கு ஆதரவு அளித்திடும் வகையில் பொது வேலை நிறுத்தம் மட்டுமல்ல, கடையடைப்புகளும் நடைபெற்றன.

கேரள மாணவர்களும், ஊர்வலம், உண்ணாநோன்பு- போன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டனர். அங்கே எழுத்தாளர்களும் பத்திரிகை யாளர்களும் ஒரு குழுவாக இணைந்து அஞ்சல் நிலையங்களின் முன்பு மறியல் செய்தனர்.

நாடெங்கணும் இவ்வாறு மாணவ மறவர்கள் போர்க்கோலம் பூண்டிட்ட அதே வேளையில் இந்தியாவின் மூத்த தலைவர்கள் பலரும், ஏன் மத்திய அமைச்சர்கள் சிலரும்கூட இந்தித் திணிப்பினைக் கண்டித்துத் தங்கள் எதிர்ப்புக் குரலை எழுப்பிடவும் தவறவில்லை.

முன்னாள் மத்தியக் கல்வி அமைச்சர் எம். சி. சாக்ளா, முன்னாள் மத்திய உருக்கு அமைச்சர் சஞ்சீவ ரெட்டியார், தமிழகத்தின் ஆளுநராக இருந்த ஸ்ரீபிரகாசா, பேராசிரியர் என்.ஜி. ரங்கா, சாகித்திய அகடமியின் தலைவர் சுனித் குமார் சாட்டர்ஜி, சர் சி. பி. இராமசாமி அய்யர், சர் பி. டி. ராசன், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் -முதலான பல அறிஞர்கள் இந்திக் கொள்கையைப் பற்றி மத்திய அரசை எச்சரித்தனர்.

ஆட்சி மொழி பற்றிய விதியினை அரசியல் அமைப்புச் சட்டத்திலே திருத்தாவிட்டால், நேருவின் உறுதிமொழிக்கும் சட்ட வடிவம் தரப்படா விட்டால், இந்தியா பல துண்டுகளாகச் சிதறுண்டு விடும் என்று

இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்களும் கண்டனக் கணைகள் தொடுத்தன.

இவ்வாறு எச்சரிக்கைகள்-எதிர்ப்பு முழக்கங்கள்—படிப்பு நிறுத்தங்கள்-உண்ணா நோன்புகள்-என்று இந்தியாவே பதற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும், பதறிடவில்லை மத்திய அரசு; மக்களின் உயிர்களைப் பதம் பார்க்கவும் பறித்திடவும் தவறிவிடவில்லை, அப்போது தாண்டவமாடிய அடக்குமுறை.

1965 பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் தமிழகத்திலே துப்பாக்கிக் குண்டுகளின் வெடிச் சத்தங்களே விண்ணைப் பிளந்தன; எதிரொலித்தன. 'ஒரே நாளில் ஒன்பது இடங்களில் துப்பாக்கிச் சூடு!- பதினைந்து இடங்களில் துப்பாக்கிச் சூடு!' என்றெல்லாம் செய்திகள் வரும் அளவுக்குக் குருவிகளைப் போலச் சுட்டுத் தள்ளப்பட்டனர் பொது மக்கள். இதனால் 'பொள்ளாச்சியில் பத்துப் பேர் சாவு! குமாரபாளையத்திலே பதினைந்து பேர் சாவு!'- என்றெல்லாம் மாண்டவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று.

இப்படிச் சுட்டுப் பொசுக்குவதிலேயே அன்றையத் தமிழக அரசு தன்னுடைய மட்டில்லா மதிப்பை உயர்த்திக் கொண்டிடும் வேளையிலே-

தமிழ்நாட்டைச் சார்ந்த மத்திய அமைச்சர்களான திரு சுப்பிரமணியமும், திரு அளகேசனும் தங்கள் பதவிகளைத் துறப்பதாகக் கடிதங்கள் தந்து அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தினர்.

மாணவர்களோ குமுறிப் புழுங்கிடும் நிலையினைக் கடந்து வெடித்திடும் எரிமலையாகவே வீறு நடை போட்டனர்! வீர மரணத்திற்குத் தங்களுடைய உயிர்களை விலை கொடுக்கவும் அவர்கள் தயாராகி விட்டனர். மாயவரம் மாணவன் சாரங்கபாணி தன் உடலுக்குத் தீ வைத்துக் கொண்டு, ஏ. வி. சி. கல்லூரிக்கு எதிரிலேயே கருகிச் செத்தான். இத்துடன் தீக்குளித்தவர்கள் எண்ணிக்கை மட்டும் ஆறு பேர். இந்தியை எதிர்த்து நஞ்சருந்தி மாண்டவர்கள் மூன்று பேர்.

ரயில்கள் நிறுத்தப்பட்டன; பேருந்துகள் கொளுத்தப்பட்டன; தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன; தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. அந்த உணர்ச்சித் தீக்கொழுந்திலே உயிர்களைப் பறிகொடுக்க நேர்ந்த அதிகாரிகள் சிலரும் உண்டு.

அதே சமயம் இந்தியாவில் தமிழ் இனமே வீழ்ச்சிப்பாதாளத்தில் வீழ்ந்து விடப் போகிறதே -என்று ஆத்திரங்கொண்ட போலீஸ்காரர் ஒருவர், மதுராந்தகம் சப் ஜெயிலைத்தாம் காவல் காத்திடும் கடமையினைக் கூட மொழிப்பற்றால் ஒரு கணம் மறந்து விட்டு- அருகில் இருந்த

அஞ்சலகப் பெயர்ப் பலகையில் காணப்பட்ட இந்தி எழுத்துக்களைச் சுட்ட மறக்கவொண்ணா நிகழ்ச்சியும் உண்டு.

அப்போது தமிழகம் கட்டுப்படுத்தவே முடியாத அமளிக் காடாகவே பற்றி எரிந்தது. சவக் கிடங்காகவே மாறிக் கொண்டிருந்தது!

அத்தகைய மோசமான நிலைமைகளுக்கு என்ன காரணம்? யார் பொறுப்பு?

இந்தி ஏகாதிபத்திய வெறியர்களின் பிடிவாதப் போக்கே அதற்குக் காரணம் என்றாலும் முதல்வராக இருந்த பெரியவர் பக்தவத்சலனாருக்கும், மற்றும் காங்கிரஸ்காரர்கள் சிந்திய சில சொற்களுக்கும் அன்றையச் சுடுகாட்டு நிலைமைகளுக்கும்- பூகம்ப வெடிகளுக்கும்- பொறுப்பு உண்டு.

''மாணவர்களை நான் சந்திக்க மாட்டேன். அவர்களை எதற்காக நான் பார்ப்பது?''

''மாணவர்கள் கல்லூரிக்கு வராவிட்டால் போகட்டும்; எனக்கு ஐந்து கோடி ரூபாய் மிச்சம்.''

''தி. மு. கழகத்தில் உள்ளவர்கள் கோழைகள்.''

''தீக்குளிக்கிறவர்கள் வறுமையால் செத்திருக்கலாம்; அல்லது யாராவது கொலை செய்து நரபலி கொடுத்திருக்கலாம்.''

-என்றெல்லாம் எடுத்தெறிந்து பேசினார் திரு. பக்தவத்சலனார்.

''கறுப்புக் கொடி காட்டினால் கையை வெட்டுவோம்; காலை முறிப்போம்!''

''கறுப்புடை அணியும் பெண்களை நிர்வாணமாக்கித் துரத்து வோம்.''

''அண்ணாதுரையின் தலையை வெட்டிக் காமராசர் காலடியில் வைப்போம்.''

-என்றெல்லாம் அறைகூவல் விடுத்தனர்- அடாத செயல்களில் இறங்கினர்- ஆளுங்காங்கிரசார்.

இப்போது புரிகிறதல்லவா, நீரோடையாய்க் குளிர்ந்து கிடந்த தமிழகம் நெருப்புக் காடாய்க் கொழுந்து விட்டது ஏன் என்று?

இந்தி வெறியர்களின் எடுப்பார் கைப்பிள்ளையாக மத்திய அரசு இயங்கிடலாமா? மற்ற மொழியினரின் உரிமைகளைப் பறித்திடும் வகையில் இந்தியை மட்டுமே ஆட்சி மொழியாகத் திணித்திடலாமா?

-எரிகிற எதிர்ப்பினை -எரிச்சலை -இந்தி பேசாதோர் எல்லாருமே வெளிப்படுத்திட விழைந்தனர் என்ருலும் அந்த எதிர்ப்பு, மொழிப் புரட்சியாக மூண்டு எழுந்தது தமிழகத்தில்தான்; அதற்குத் தங்கள் உயிர்களையே விலையாகப் பலி கொடுத்தவர்களும் தமிழ் இனத்த வர்கள்தான்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு கோடியிலேயே அந்தப் புரட்சி வெடித்தது- புதிய வரலாற்றைப் படைத்தது- என்ற போதிலும் குவலயத்தின் கவனத்தையே ஈர்த்திடும் வகையிலேயே அது எழுச்சி மிக்கதாய் நடைபெற்றது.

அதைப் பற்றி அமெரிக்காவிலிருந்து வெளி வரும் 'நியூயார்க் டைம்ஸ்' ஏடே தலையங்கம் தீட்டிற்று. அதனுடைய எல்லாக் கருத்துக் களையுமே நம்மால் ஏற்றுக் கொள்ள இயலா தெனினும் அடியிற்காணும் சில வரிகள் குறிப்பிடத்தக்கனவே ஆகும்.

"இந்தியா மிகப் பெரிய பிரச்சினைகளைச் சுமந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும் இந்தியாவில் இன்று மிகவும் எழுச்சி மிக்கதும், உணர்ச்சி ஊட்டக் கூடியதுமான பிரச்சினை என்னவெனில் இந்தி ஆட்சி மொழி ஆக்கப்பட்டிருப்பதை எதிர்த்துச் சென்னை மாநிலத்தில் நடைபெறும் உக்கிரமான எதிர்ப்பே ஆகும். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பிரச்சினையை ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. பிரிட்டிஷார் தங்கள் வலையை வீசி ஒரு நாடாக ஆண்டு, பொது மொழியாக ஆங்கிலத்தைப் பயன் படுத்தாத காலம் வரை இந்தியா ஒரு நாடாக இருந்ததே இல்லை. எந்த நாட்டிலும் மொழி மிகப் பெரிய உணர்ச்சி பூர்வமான பிரச்சினை ஆகக் கூடிய சக்தி பெற்றது. ஸ்பெயின் ஓர் உதாரணம் ஆகும். தீக் குளித்து மாண்ட மதராசிகள் வியட்நாமிய முறையைப் பின்பற்றி இருந்தாலும் அவர்கள் புராதன இந்திய சம்பிரதாயத்தையே கடைப்பிடித்துள்ளனர். 'எதிரிக்கு உன்னுல் தரப்படும் மிக மோசமான தண்டனை என்னவென்ருல், உன்னையே வருத்திக் கொள்வது, அல்லது உன்னையே கொன்று கொள்வது' என்பதே அந்தச் சம்பிரதாயம்—"

'நியூயார்க் டைம்ஸ்' இவ்வாறு தீட்டியதைப் போலவே அமெரிக்காவிலிருந்து வரும் 'டைம்' ஏடு தமிழக மொழிப் புரட்சி பற்றிய கட்டுரை வெளியிட்டதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.

ஐக்கிய நாடுகள் மன்றத்திலும் கூட இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய பேச்சு அடிபட்டது.

சென்னைக் கல்லூரிகளின் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியினை வெளிக்காட்டிடும் வகையில் 8-2-65 அன்று ஒரு நாள்

அம்டையாள உண்ணு நோன்பு மேற்கொண்டனர். வகுப்புகளுக்குச் சென்றிடாமல் அவர்கள் புரிந்த அந்த அறப்போரில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பங்கு கொண்டனர்.

12-2-65-இல் தமிழ்நாடு எங்கணும் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. அன்று சென்னை உட்படப் பல நகரங்கள் பாலை வனங்களாகவே வெறிச்சோடிக் கிடந்தன.

பெட்டிக் கடை முதல் பெரிய நிறுவனம் வரை எதுவுமே திறக்கப்படவில்லை. திரைப்பட நிலையங்கள், உணவு விடுதிகள் எல்லாமே மூடிக் கிடந்தன. பேருந்துகள், கார்கள், லாரிகள் எவையுமே ஓடிடவில்லை. மக்களின் வழக்கமான வாழ்க்கை இயக்கமே செயலற்றுத் தேக்கமடைந்து முடங்கிப் போயிற்று.

இந்திக்கு எதிரான புரட்சி இயக்கம் பொது மக்களிடையே இத்தகைய செல்வாக்கினைப் பெற்று வெற்றிக் கனியினைக் கொய்திடுவதைக் காணக் காணக் காங்கிரஸ் ஆட்சியாளரோ வெறுப்பின் உச்சிக்கே சென்றனர். விவேகத்தை இழந்தனர்; வீசினர் அடக்குமுறை எரியீட்டிகளை; அவர்கள் அவ்வாறு பொறுமை இழந்ததன் விளைவாகத் தான் நாடெங்கிலும் ஒப்பரிய உயிர்கள் பலவற்றைக் குடித்திட்ட துப்பாக்கிச் சூடுகள்-சுடுகாட்டுக் கொடுமைகள்!

படுகாயமுற்றோர் - பரிதாபமாக உயிரிழந்தோர் பட்டியல் நாளுக்கு நாள் நீளமாகிக்கொண்டே செல்வதைக் கண்ட அண்ணு அவர்களின் நெஞ்சமோ பதறிற்று. தூய உள்ளத்துடனும் தொண்டாற்றும் பண்புடனும் ஒரு கடும் போராட்டத்துக்குத் தம்மைக் காணிக்கை ஆக்கிக் கொண்டு விட்ட மாணவர்களைப் பாராட்டிய அவர்,

''போர் முனையில் தொடர்ந்து பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருப்பது மட்டுமே சிறந்த போர் முறை ஆகாது; அவ்வப்போது அமைப்புகளைத் திருத்திக் கொள்வதும், பிடித்த இடங்களைப் பயன்படுத்திக் கொள்வதுமே நல்ல போர் முனையின் சிறப்புகளாகும்''

-என்று எடுத்துக் காட்டிக் கிளர்ச்சிகளையும் நேரடி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

ஆளவந்தார்களின் அலட்சியப் போக்கால் - ஆணவப் பேச்சால்- ஆங்காரம் அடைந்திட்ட மாணவ மணிகளும் கிளர்ச்சிகளின் விளைவுகள் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தனர்; போராட்டத்தையும் ஒத்தி வைத்திட இசைந்தனர்.

'அப்பாடா! புயல் ஓய்ந்தது.' என்று என்னைப் போன்றவர்கள் நெடுமூச்செறிந்தோம், நிம்மதி வந்திடப் போவதாக நினைத்து.

ஆனால் அடுத்த ஒரு வாரத்திற்குள்ளே!

இரவோடு இரவாக என்னை நோக்கிப் பாய்ந்தது இந்தியப் பாதுகாப்புச் சட்டம்; பருந்தாகத் தூக்கிச் சென்றது பாளையங் கோட்டைக்கு.

110

மறக்க முடியுமா?

என் வாழ்க்கைப் பாதையில் மறக்க ஒண்ணாத திருப்பு முனைகளிலே ஒன்றுதான் 1965 பிப்ரவரி பதினாறு.

மறுநாள் காலையிலே மலர்ந்திட வேண்டிய நாளேட்டுக்குரிய என் சம்பந்தப்பட்ட வேலைகளை விரைந்து முடித்துவிட்டு, 'முரசொலி' அலுவலகத்திலிருந்து நான் வெளியே வந்தபொழுது—

நள்ளிரவை நோக்கி நகர்ந்த வண்ணம் இருந்தது சென்னை மாநகர்.

'விடிந்தால் என்னென்ன இடிச் செய்திகள் இதயத்தைப் பிளந்திடுமோ? எங்கெங்கே துப்பாக்கிச் சூடுகள் நடந்திடுமோ? எத்தனை மங்கல மங்கையர் குங்குமம் இழப்பரோ? எத்தனை காளையர் காராக்கிரகம் ஏகுவரோ?' - என்றெல்லாம் எண்ணங்கள் சுழன்றிடக் கோபாலபுரத்திலுள்ள என் இல்லம் நோக்கிச் சென்றேன் உள்ளம் கனத்திட.

அங்கே...! எனக்கே காத்திருந்தது அரசாங்க அழைப்பு!

வேறு சில காவல்துறை அதிகாரிகளுடன் தம்முடைய கடமையினை ஆற்றிட வந்திருந்தார் சென்னை நகர உதவிப் போலீஸ் கமிஷ்னர்; என்னிடம் சில கேள்விக் கணைகளையும் அவர் தொடுத்தார். மறுநாள் காலை 'முரசொலி'யில் வெளிவருவதற்கென்று 'ஒரு கண்ணில் சுண்ணும்பு' என்னும் தலையங்கத்தையும், 'நீட்டோலை' என்னும் அரசியல் மடல் ஒன்றையும் நான் தீட்டியிருந்தேன். அவற்றின் 'புரூப்'களைத் தந்திட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். எழுத்து வடிவில் கேட்டாலன்றி அவற்றை அளித்திட இயலாது என்று நான் மறுத்துவிட்டேன். உடனே தம்மோடு வரவேண்டும் என்றார்.

''பெட்டி, படுக்கைகளுடனேயே நான் புறப்படலாமா?''

—என்று வினவினேன் சிரித்துக்கொண்டே.

அவரும் அதற்குச் சரி என்று தலையசைத்தார் முறுவலுடன். பின்னர் வீட்டினுள் சென்று பெட்டி, படுக்கைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

''போகலாமா?'' என்றேன், காவல் துறை அதிகாரிகளை நோக்கி.

''போகலாம்''- என்றனர்.

அழுகை வெள்ளத்துக்கு அணை போட்டு நின்றிருந்த குடும்பத்தாரிடம் விடை பெற்றுக்கொண்டு போலீஸ் வண்டியிலே ஏறிக்கொண்டேன்.

எழும்பூரில் உள்ள காவல் துறைக் கமிஷனர் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அப்பொழுது இரவு மணி பன்னிரண்டு.

அங்கும் அந்த உயர் அதிகாரி - 'முரசொலி' ஏட்டிலே நான் நீட்டிய தலையங்கங்கள் பற்றியும், வெளியிட்ட செய்திகள், கட்டுரைகள் பற்றியும் விடாமல் வினா அம்புகளைத் தொடுத்தார். இரவு மணி 1-30 வரை விசாரணை நீடித்தது. பிறகே உறங்குவதற்கு இடம் கொடுத்தனர்.

16-2-65 அன்று இரவே, நான் கைது செய்யப்பட்டு விட்ட தகவலை அப்போது காஞ்சியிலிருந்த அண்ணா அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மணி நேரங்கூடச் சரியாகத் தூங்கிடவில்லை. மீண்டும் எழுப்பிப் போலீஸ் லாரியிலே என்னை ஏற்றினர்.

அப்போது விடியற்காலை 4-30 மணிகூட ஆகியிராது.

என்னைச் சுமந்துகொண்ட வாகனம் சென்னையைப் பின்னுக்கு தள்ளிவிட்டு எங்கோ பறந்தது வேகமாக.

பனி கொட்டியது.

குளிர் நடுங்க வைத்தது.

தெற்குத் திக்கினை நோக்கியே லாரி ஓடிக்கொண்டிருந்தது. எந்தச் சிறையிலே தள்ளப் போகிறீர்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. தெரிவிக்கவும் இல்லை காவல் துறையினர்.

17-2-65 காலை 8-30 மணி அளவில் திண்டிவனம் தென்பட்டது. உளுந்தூர்ப்பேட்டையும் தாண்டியாயிற்று.

'ஒரு வேளை திருச்சி சிறைக்குத்தான் கொண்டு செல்வார்களோ?'

பழைய நினைவுகள் - நிகழ்ச்சிகள் படமாய் விரிந்தன மனத்திரையில்.

இதற்கு முன்னர் பெரும்பாலும் நெடுநாட்கள் சிறைப்பறவையாய் நான் அடைபட்டுக் கிடந்ததும் திருச்சியிலே தான்.

மும்முனைப் போராட்டம் -

கல்லக்குடி-

தண்டவாளத்திலே தலை-

அதற்காக ஆறு மாதச் சிறை-

—இப்படிப் பொங்கிப் புரண்டன நெஞ்சின் அலைகள்.

ஏன், இருபது நாட்களுக்கு முன்னர், குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடக் கழகம் எடுத்திட்ட முடிவினையொட்டிக் கைதான போது கூடத் திருச்சிக்குத் தான் கொண்டு வந்து சப்-ஜெயிலிலே என்னைத் தள்ளினார்கள்.

'இப்போதும் அப்படித்தான் இருக்கலாமோ?' - என்றுதான் எண்ணிடத் தோன்றியது எனக்கு.

ஆனால் நான் நினைத்தவாறு திருச்சி சிறை எனக்குக் கிட்டவில்லை இந்த முறை.

நடுப்பகல் 12 மணி அளவில் திருச்சியில் நுழைந்திட்ட போலீஸ் லாரி நேரே ஆயுதப்படைப் போலீஸ் முகாமிற்குச் சென்றது. அங்கே எனக்கு மதிய உணவு வழங்கினார்கள். பின்னர் தொடங்கிற்றுப் பயணம்.

நேரம் செல்லச் செல்ல எனக்கு நெஞ்சிலே வலி கண்டு தாங்கொணாத அளவுக்கு அதிகரித்துக் கொண்டே போயிற்று. அதற்கு லாரிப் பயணமும் ஒரு காரணம்; முந்திய இரவில் உறக்கமும் சரியானபடி இல்லையல்லவா?

ஒருவர் நீண்ட நெடுந் தொலைவு பேருந்துப் பயணம் புரிந்தாலே உடல் அலுக்கை வாட்டி வதைத்திடும். குலுங்கக் குலுங்க உடம்பைத் தூக்கிப் போடும் லாரிப் பயணம் என்ருலே கேட்க வேண்டுமா அவதிக்கு?

எனக்கு நெஞ்சு வலி கண்டதற்குக் கிஞ்சிற்றும் இரக்கமற்ற முறையிலே குதித்துக் குதித்து ஓடிக் கொண்டிருந்த லாரியையே நான் குறை கூறிட வேண்டும்.

இதைப்பற்றி நண்பர் ப.உ. சண்முகம் பின்னர் சட்ட மன்றத்திலே இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிருர்.

...இங்கே (சென்னையில்) கைது செய்யப்பட்ட கலைஞர் கருணாநிதி நெஞ்சு வலியுடன் போலீஸ் லாரியில் அழைத்துச் செல்லப் பட்டிருக்கிருர். நான் கேட் றேன் : அவரை அழைத்து செல்லப் போலீஸ் லாரி தான் உங்களுக்குக் கிடைத்ததா? அவர் தி மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக நான் கேட்கவில்லே; எங்கள் கட்சியிலே அவர் ஒரு முக்கியமான தலைவர் என்பதற்காகக் கூடக் கேட்கவில்லே; சட்ட மன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறைக்காவது, அவரை ஒரு காரிலே அழைத்துச் செல்லக் கூடாதா? அப்படியென்ன இந்த சர்க்காருக்கு வசதி வாய்ப்பு அற்று போய் விட்டது? இதயமற்றவர்களே, இந்த நிலைமை ஏன்? நானூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிறைச்சாலேக்கு நெஞ்சு வலியோடு போலீஸ் லாரியிலே அழைத்துச் செல்வது எந்த வகையிலே நியாயம்''

என்னைப் பொறுத்தவரை சிறைக்குள்ளே தங்குகின்ற வகையிலாவது இத்துணைக் கொடுமையான வலி ஏற்படாத வகையிலே கொண்டு போகக் கூடாதா என்று தான் நான் எண்ணினேன். எம்பி எம்பிக் குதிக்காதபடி லாரியை மெதுவாகவேனும் ஓட்டியிருக்க லாம்.

மற்றபடி, துன்பத்தைக் கூட்டிச் சுமக்கத் துணிந்திட்ட ஒரு தொண்டனுக்குத் தான் ஏறிச் சென்றிடும் வாகனம் காராய் இருந்தால் என்ன? லாரியாய் இருந்தால் என்ன? கட்டை வண்டியாய் இருந்தால் என்ன? 'ஜட்கா' வண்டியாய் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்று தான். வாகனம் எதுவாக அமைந்த போதிலும், அவனுடைய பாதை மாறிடப் போவதில்லே; பயணமும் நின்றிடப் போவதில்லே?

என்னை ஏற்றிச் சென்றிட்ட லாரி மதுரையை அடைந்த பொழுது மாலே 4-30 மணி இருக்கலாம். ஆயுதப் படைப் போலீஸ் முகாமுக்கே என்னை முதலில் கொண்டு சென்ருர்கள். நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களுக்கு மத்தியிலே நான் காவலில் வைக்கப்பட்டேன்.

நெஞ்சுவலியோ நிமிடத்திற்கு நிமிடம் என்னை துடியாய்த் துடிக்கச் செய்தது. எனவே, எனக்கு சிகிச்சை அளிக்கும் பெரருட்டு அரசாங்க மருத்துவமனையிலிருந்து டாக்டர் ஒருவர் வரவழைக்கப் பட்டார்.

அவரோ என் நிலைமையைப் பார்த்து விட்டு மேற்கொண்டு என்னைப் பயணத்தில் ஈடுபடுத்துவது என் உடல் நலனுக்கு உகந்தது அல்லவென்று உறுதியாகக் கூறி விட்டார். அவருடைய அறிவுரையைப் புறக்கணிக்க முடியாத நிலையில் என்னை மதுரை மத்தியச் சிறைச் சாலைக்கு இட்டுச் சென்றனர்.

இரவிலோ மேலும் கடுமையாயிற்று வலி; மார்பை இறுக்கிப் பற்றிக் கொண்டு நான் தவித்த தவிப்பு-துடித்த துடிப்பு— கொஞ்சம் நஞ்சமல்ல. வேதனையின் விளிம்பிற்கே நான் விரைந்த வண்ணம் இருந்தேன்.

மறுபடியும் அரசாங்க மருத்துவ மனையிலிருந்து இரண்டு டாக்டர்கள் அழைத்து வரப்பட்டார்கள், எனக்குச் சிகிச்சை அளித்திட உறக்கம் வருவதற்கென்றே ஊசியும் போடப்பட்டது.

நான் இப்படி நெஞ்சு வலியோடு போராடுவதை நேரிலே கண்டும் கூட என்னை மதுரைச் சிறையிலேயே வைத்திட மனம் வரவில்லை காவல் துறையினருக்கு.

18-2-65 விடியற்காலை மறுபடியும் என்னை லாரியிலே ஏற்றினர். மதுரையை விட்ட பிறகும் தென் திசையை நோக்கியே தீராத பயணம்.

ஆனால் இப்போது புதிய தகுதிகள் சில என் பயணத்திற்குப் பொலிவேற்றின. என்னுடைய லாரிக்கு முன்னே ரிசர்வ் போலீஸ் லாரியும் பின்னே ஒரு ரிசர்வ் போலீஸ் லாரியும் அணிவகுத்து வந்தன.

அண்ணாவின் மூன்று தாரக மந்திரங்களில் ஒன்றான கட்டுப் பாட்டினைக் கண்ணே போல் கருதக் கூடியவன் - அதனைக் கடுகளவு கூட மீறத்துணிவில்லாதவன்- என்கிற உண்மை காவல் துறையினருக்குப் புரிந்திட வில்லையோ என்னவோ? எனக்குரிய கட்டுக் காவலை மிகுதிப்படுத்தியிருந்தனர் தங்களுடைய கடமை உணர்வின் காரணமாக.

வழியிலே கயத்தாறு; கட்டபொம்மனின் காலடிச் சுவடு பதிந்திட்ட வீரஞ்செறிந்த மண்.

நெல்லை நகரின் எல்லையை அடைந்திட்ட பொழுது இன்னொரு ஏற்பாடும் என்னை வியப்புக் கடலிலே வீழ்த்தியது அங்கிருந்து நகர் நெடுகிலும் பாளையங்கோட்டைச் சிறை வரையிலும் இருப்புத் தொப்பி அணிந்த போலீசார் இருமருங்கிலும் சுவர் எழுப்பியது போல் வரிசையாக நின்றனர்.

'ஓர் எதிர்க்கட்சித் தொண்டனுக்குக் கூட இவ்வளவு கோலாகலவர வேற்பா? அரசாங்க அணி வகுப்பு மரியாதையா?' என்று உள்ளூற எண்ணிச் சிரித்துக் கொண்டேன் நான்.

111

புனித பூமியாம் பாளையங்கோட்டை

வேளா வேளைக்கு உணவு அருந்தாமல் கூட என்னால் வெறும் வயிற்றோடு இருந்திட முடியும்; ஆனால் நாளைக் கடத்திடவே முடியாமல் தவியாய்த் தவிப்பேன், நண்பர்கள் முகங்காண முடியா விட்டால்.

அதனால் தான் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறை படு மோச மான மனத்துயரத்தையே விருந்தாகப் படைத்தது எனக்கு!

என்றாலும் அந்தக் 'கூண்டுக்கிளி' வாழ்க்கையும் பெருமிதத்தையே கொடுத்தது ஒரு விதத்தில்.

தான் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு வரலாற்றுப் பெருமை நிரம்ப உண்டு.

இதே பாளையங்கோட்டையில் தான் வெள்ளையருக்கு எதிராக விடுதலை முழக்கம் எழுப்பிய ஊமைத்துரையும் அவரது தோழர்களும் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

தங்கத்தரணி என்று பெயர் பெற்ற வங்காள மண்ணிலே விடுதலை இயக்கம் வேர்விட்டுச் செழித்திடப் பாடுபட்ட தலைவர்களிலே முன்னணி வீரராய்த் திகழ்ந்திட்டவர் 'தேசபந்து' சித்தரஞ்சன தாசர் அந்த மூதறிஞர் ஒரு காலத்தில் முடக்கிப் போடப்பட்டதும் இதே பாளைச் சிறையில் தான்.

கனல் தெறித்திடச் சுதந்திர உணர்ச்சிகளைக் கம்பீரமாகப் பரப்பி- முதன் முதல் 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் ஒப்பரிய புகழ் மகுடமும் புனைந்து- செக்கிழுத்த செம்மலாய் ஒளி வீசியவர் வ.உ. சிதம்பரனார். அவர் ஒரு சமயம் சிறைபட்டுக் கிடந்ததும் இதே பாளையங் கோட்டை மண்ணில்தான்.

பிற்படுத்தப்பட்டுப் பெரும் பள்ளத்தினில் கிடந்த முக்குலத்தோர் எல்லாரும் முன்னேற்ற நிலையடைய, தம்முடைய தூய்மைமிகு தொண்டால்- சொல்லாற்றலால்- எழுச்சியூட்டிய ஏந்தல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். அவர் சிறைபட்டுக் கிடந்ததும் இதே ஊரில் தான்.

'இவ்வாறு இமயம் நிகர்த்த பெருமனிதர்கள்- ஏகாதிபத்தியக் காரிருளை விரட்டிய எழு ஞாயிறுகள்-குகைப் புலிகளாக உலவிய

கொட்டடிப் பகுதிக்குத் தானி நாமும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக் கிறேம்' என்று எண்ணிய மாத்திரத்தில் என் உள்ளம் பூரித்தது: உடல் புல்லரித்தது.

முன்பொரு சமயம் வெள்ளையர் ஆண்டிட்ட காலத்தில் பெரிய மதனிர்களுக்குரிய மத்தியச் சிறையாக விளங்கிய அந்த பகுதிப் பின்னர் பதினெட்டு வயதுக்குக் குறைந்த இளங்குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளியாக மாற்றப்பட்டுவிட்டது.

சிறுவர்களுக்கான சிறைச்சாலை என்பதால் அங்கே விளையாட்டு அரங்கங்களும் உண்டு; கொட்டடிக் கதவுகளும் திறந்தே இருக்கும்.

ஆனால், என்னைக் கைதியாக அடைத்துவிட்ட பின்னரோ, அந்தச் சிறுவர் சிறைச்சாலையின் திறந்திருந்த கதவுகளும்கூட மமதையாளர்களின் உதடுகளைப் போல இறுக்கி மூடிக்கொண்டு விட்டன கடுமையான காவலுடன்.

நெல்லை-நாகர்கோவில் நெடுஞ்சாலையில் அமைந்திருந்த அந்தச் சிறைச்சாலையிலே தனிமைத் தணலிலே தள்ளப்பட்ட எனக்கு உடல் நலமும் உருக்குலைந்த வண்ணமே இருந்தது. நாள்தோறும் மருத்துவர்கள் வந்து சிகிச்சை அளித்தனர். உடல் நோயைவிட நமக்குத் தெரிந்த முகங்களையே காண முடியவில்லையே என்கிற உள்ள நோய்தான் தொல்லைப்படுத்தியது மிகுதியாக.

ஐந்தாவது நான் வழக்கறிஞர் திரு நாராயணசாமி முதலியார் (ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி), திரு இரத்தினவேல் பாண்டியன் (இப்போது உயர் நீதிமன்ற நீதிபதி) ஆகியோர் என்னைச் சந்திக்க வந்தனர்.

பானைச் சிரிப்பு—
பார்ப்பதற்கு அழகானது;
பளபளப்பாய்-பல அடுக்கு
மணிச்சரமாய்—ஒளி வீசுவது!
நான் இருந்த—



பாளைச் சிறை—
தென் பாண்டிப் பாளைச் சிறை—
பார்ப்பதற்கு அழகானதல்ல;
பார்வைக்கும் வேலை தருவதல்ல—

—வார்டர் ஒருவரைத் தவிர வேறு மனித முகங்களையே பல நாட்களுக்குக் காட்டாததால்!

பாளையங்கோட்டையில் நான் அடைபட்டுக்கிடந்த சிறைப்பகுதி 'குவாரன்டைன்' — என்று அழைக்கப்படுவதாகும். இளங் குற்றவாளிகள் பள்ளிக்கு வெளியேதான் அது அமைந்துள்ளது. அங்கே நாற்பது அறைகள் உள்ளன; அவற்றில் ஒன்று மட்டுமே எனக்காக ஒதுக்கப்பட்டது. மற்ற முப்பத்தொன்பதிலும் முழுமையாக நிரம்பி வழிந்தது தனிமை - வெறுமை! மனிதர்கள் அல்லர்!

காலையில் விழித்ததும் கண்ணிலே படுவது புளிய மரம்— கனி இழந்த இலையுதிர்ந்த புளிய மரம்!

உடனே கயத்தாற்றில் கட்டபொம்மன் தொங்கவிடப்பட்ட அந்தப் புளியமரமும் என் கண்ணுக்குப்படும்; புறக்கண்ணுக்கு அல்ல - அகக் கண்ணுக்கு!

செங்கதிரோனின் தங்கக் கதிர்கள்—கரங்கள்—தழுவி எடுக்கும் பூமிக்குழந்தையை. அந்த வெளிச்சத்தின் சாயல் மெல்லப் படர்ந்து வரும், நான் இருக்கும் வெறிச்சோடிய பகுதியிலும்.

பின்னரே நான் வெளியே வரும் பொருட்டுக் கதவைத் திறந்து விடுவார்கள். சிறைக் கதவை அல்ல—அறைக் கதவை!

சின்னஞ்சிறு கூட்டிலிருந்து சற்றுப் பெரிய கூண்டுக்கு வந்துவிட்ட உணர்வே மேலோங்கி நிற்கும்.

பகலிலோ வேக வைக்கும் வெயில்; வேகமாகப் போக மறுக்கும் பொழுது.

அதனால் உடல் புழுங்கும்; உள்ளமும் புழுங்கும்.

இரவு ஒன்பது மணிக்கு மறுபடியும் அறைக் கதவைப் பூட்டி விடுவார்கள்; என்னை உள்ளே வைத்துத்தான்!

பசுந்தளிர்ப் பருவத்தில் எத்தனையோ வேடிக்கையான விடுகதைகள் போட்டு மகிழ்வது எனக்கு வாடிக்கை.

''அந்தரான காட்டில் சொக்கன் பந்தடிக்கிறான்'— என்பதும் அவற்றிலே ஒன்று. ஒரு நாள் அந்தச் 'சொக்கன்' என் பக்கமும் பந்தடிக்க வந்து விட்டான்! ஆம்; அணில் ஒன்று நான் இருந்த சிறைக் கோட்டம் வந்து சேர்ந்தது! மனித முகம் காணுமல்

மனந்தவித்துப் புழுங்கிய நான், அணில் முகத்தைக் கண்டதும் அகங்குளிர்ந்தேன்; முகம் மலர்ந்தேன்; ஆறுதலும் மிக அடைந்தேன். அதனைக் கனிவோடு கையில் எடுத்து அறையிலே உள்ள 'கப்-போர்டில்' படுக்க வைத்தேன்.

ஆனால் பாவம், அதுவும் என்னைப்போல் ஒரு நோயாளி! காக்கையோ, குருவியோ கொத்தியதால் அதன் உடலில் காயம்; என்னைப் போல் உள்ளத்தில் அல்ல! காரணம் அதற்கு அரசியல் தெரியாதே!

அதன் வேதனைக்கு மருந்து போட்டேன். தின்னப் பழம் கொடுத்தேன். ஆயினும் 'விடுதலை'யை விட வேறெதுவும் அதற்குப் பிடிக்கவில்லை. அந்த விஷயத்தில் நானும் திரு பக்தவத்சலமாக விரும்பிடவில்லை. எனக்கு இருதயம் இருந்து தொலைக்கிறதே! அதனால் அந்த அணிலை விடுவித்துத் தோட்டத்துப் பக்கம் அனுப்பி விட்டேன்.

அணில் என்னைப் பிரிந்து சென்று விட்டது. நான் அதனைப் பிரிந்து விட்டேன். அதற்கு என்னைப் பற்றி நினைவிருக்காது. அதன் நோய்க்கு அளித்த மருந்தோ வாய்க்கு அளித்த கனிகளோ அதன் ஞாபகத்திற்கு வரப் போவதில்லை. ஆனால், நான் பிரிந்திட்ட அணிலின் முதுகில் உள்ள மூன்று கோடுகள் மட்டும்,

கடமை—
கண்ணியம்—
கட்டுப்பாடு—

என்னும் மூன்று சொற்களாக என் உள்ளத்தில் முழங்கிக் கொண்டிருக்கும்; நான் எங்கிருந்தாலும் அந்த முழக்கம் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 30 (1) பிரிவின்படிதான் நான் கைது செய்யப்பட்டுப் பாளையங்கோட்டைச் சிறையிலே முடக்கப்பட்டேன். அந்தச் சட்டப்படி—அந்தப் பிரிவின்படி—முதன் முதல் கைது செய்யப்படும் பேறு பெற்றிட்ட கழகத் தொண்டன் நான்தான் என்பது குறிப்பிடத்தக்கது:

அதற்கு அடக்கு முறையை அவிழ்த்து விட்ட அரசுத்தரப்பிலே கூறப்பட்ட காரணம், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே மாணவ மணிகளை ஈடுபடுத்துவதில் நான்தான் முன்னணியில்-முனைந்து நின்றேன்; அவர்களைத் தூண்டி விட்டேன் என்பதாகும்.

1965 - ஜனவரி-26 குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்பதே கழகம் எடுத்திட்ட முடிவாகும்; அதற்குக் கட்டுப்பட்டே நானும் மற்றக் கழக முன்னணியினரும் கண்ணியத்துடன் கடமையாற்றிடப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டிட-எழுத்து மூலமும் பேச்சு மூலமும் முற்பட்டோம்.

மாணவச் செம்மல்களோ, அந்தக் குடியரசு நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே இந்தியை எதிர்த்துக் கண்டன ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்துவது என்றும், தட்சிண பாரத இந்திப் பிரச்சார நூல்களைச் சென்னைக் கடற்கரையிலே தீயிட்டுக் கொளுத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றி விட்டனர். அதன்படியே செயலிலும் இறங்கி விட்டனர்.

மாணவர்களின் அந்த எழுச்சி தானாகப் பீரிட்டடித்த ஊற்றுப் பெருக்கே அல்லாமல், இன்னொருவர் கொண்டு வந்து ஊற்றிய நீர் அல்ல.

ஆயினும் அரசுத் தரப்பினரும் ஆளுங்காங்கிரசைச் சார்ந்தவர்களும் மாணவர் போராட்டத்துடன் கழகத்தையும்-குறிப்பாக என்னையும் முடிச்சுப் போட்டுப் பேசுவதிலேயே முழுகவனமும் செலுத்தினர். கிளர்ச்சிக்குரிய நியாய உணர்வினைத் திசைதிருப்பிச் சாதிப்பதையே ஒரு கேளிக்கையாகவும் மேற்கொண்டனர்.

உண்மையென்ன வெனில், எந்தக் காரணத்திற்காகக் கழகம் குடியரசு நாளைத் துக்க நாளாக அறிவித்ததோ அதே காரணத்திற் காகவே அறப்போரில் ஈடுபட்டனர் மாணவர்கள். அவர்களில் பலர்— கழகத்தின் கொள்கைகளில் - அண்ணாவின் அறிவொளியில் - ஈடுபாடு மிகுந்தவர்களாகவும் இருந்தார்கள்.

அந்தத் தொடர்பினையே ஆதாரமாகக் காட்டிக் களங்கம் கற்பித்திட முனைந்தனர் காங்கிரசார். மற்றபடி கிளர்ச்சி புரிந்திடுமாறு மாணவர்களைக் கழகம் தூண்டிவிடவும் இல்லை; அவ்வாறு ஒரு கட்சி வந்து தூண்டிவிடும் அளவுக்கு உணர்ச்சி பட்டுப் போன நிலையில் மாணவர்களும் இல்லை.

அதே சமயம் அரசு அவிழ்த்து விட்ட அடக்கு முறை-துப்பாக்கிச் சூடுகள்-காரணமாக அமைதியாகத் தொடங்கிய மாணவரின் அறப் போர் எரிமலையாக வெடித்திட்டபோது-அதனைப் பயன்படுத்திக் கொண்டு சமூக விரோதிகள் வன்முறைகளுக்கும் வழி வகுத்தபோது-போராட்டத்தைக் கைவிடுமாறு அறிவுரைகள் வழங்கி அறிக்கை வெளியிட்டவர் அண்ணா அவர்களே.

தங்களைச் சந்திப்பதற்கு அன்று முதல்வராக இருந்த திரு. பக்தவத்சலனார் மறுத்தாலும், அவரும் அவரைச் சார்ந்தவர்களும்

உதிர்த்த கடுமொழிகளாலும் ஆத்திரமடைந்த மாணவர்கள் இந்தித் திணிப்பைக் கைவிடுவது பற்றி எத்தகைய உறுதி மொழியும் அரசுத் தரப்பிலிருந்து வராத நிலையில் எப்படிப் போராட்டத்தை நிறுத்துவது என்று தயங்கினர்.

அந்த வேளையில் கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட மாணவத் தலைவர்கள் சிலர் - எல். கணேசன் போன்றவர்கள் என்னுடன் கலந்துரையாடியதுண்டு.

மாணவர்களின் மனக் குமுறலை மக்கள் மன்றம் முழுமையாக உணர்ந்து கொண்டு விட்ட நிலையில், இந்தச் சிக்கலுக்குத் தீர்வு கண்டிடும் பொறுப்பினைப் பெரியவர்களிடம் விட்டு விடவேண்டும் என்பதே அண்ணாவின் விருப்பம் - வேண்டுகோள்.

என்னை மாணவத் தலைவர்கள் சந்தித்த போது அண்ணாவின் அந்தக் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடப்பதே கழக மாணவரின் தலையாய கடமையாகும் என்பதையே அழுத்தமாக நான் வலியுறுத்தினேன். கிளர்ச்சிகள் நீடிக்க நீடிக்க வெடித்திடும் குண்டுகள், குடித்திடும் உயிர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்வதையும் சுட்டிக் காட்டினேன்.

அமைதி சோலையாக விளங்கிய தமிழகம் அமளிக் காடாக மாறி விட்டதே-சட்டம், ஒழுங்கு குலைந்து சாக்காடு செல்லும் பிணங்களின் தொகை பெருகி வருகிறதே என்கிற பெருங்கவலையின் உந்தலால்தான் மாணவர்கள் போராட்டத்தைகைவிட வேண்டும் என்று அண்ணா வலியுறுத்தினர்; நானும் எடுத்துரைத்தேன் நல்லெண்ணத்துடன்.

ஆனால் கனிக்குலைக்கும் கனற்பொறிக்கும் வேறுபாடு காணத் தெரியாத காங்கிரஸ் அரசோ மாணவர்களைத் தூண்டி விட்டேன் என்று என் மீதே குற்றத்தைச் சுமத்தியது; பாளையங்கோட்டைக் கொட்டடியிலும் பூட்டிக் களித்தது.

நான் அவ்வாறு தனிமைத் தணலிலே தள்ளப்பட்டுக் கிடந்தாலும் 'மாணவர்களின் நிலை என்ன ஆகுமோ? இன்னும் எத்தனை உயிர்கள் இந்தித் திணிப்பிற்கு அணையெழுப்பிட - இந்த மண்ணிலே இரத்தஞ் சிந்திட வேண்டுமோ? எலும்புகளைத் தந்திட வேண்டுமோ?' என்றெல்லாம் என் நினைவுகள் அலை மோதிய வண்ணமே இருந்தன.

ஆனால் நான் பாளைச் சிறைக்குச் சென்ற ஒரு வாரத்திற்கெல்லாம் இனிக்கும் செய்தியொன்று என் செவிக்கு எட்டியது.

தமிழக மாணவர்களின் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டக்குழு தனது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் காலவரையின்றி ஒத்தி வைத்து விட்டது என்பதே அந்தச் செய்தி.

112

ஏன் பாதுகாப்புச் சட்டம்?

எழுத்துலகச் சிற்பிகளிலே என் இதயங்கவர்ந்திட்ட மேதைகளில் ரஷ்ய மண்ணில் தோன்றிய லியோ டால்ஸ்டாயும் ஒருவர். அவருக்கு அடுத்தபடியாக என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கியே.

"எனக்கு மனிதனை விடச் சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் தான் - மனிதன் மட்டுமே தான் - எல்லாப் பொருள்களுக்கும் எல்லாக் கருத்துக்களுக்கும் படைப்பாளி. அவனே அற்புதங்களைச் செய்வோன்; அவனே இயற்கைச் சக்திகளின் எதிர்காலத் தலைவன்; நான் மனிதனுக்குத் தலைவணங்குகிறேன். ஏனெனில் மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறு எதையும் காணவில்லை''- என்று மனிதகுல மாண்புக்காகவே வாழ்ந்தவர்- இலக்கிமிச் செல்வங்களை வடித்துக் கொடுத்தவர் மாக்சிம் கார்க்கி.

மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் தான் அவர் பிறந்த நாள்.

அவருடைய இலக்கியப் படைப்பாகிய 'தாய்' என் சிந்தனைக்கு ஊட்டிய எழுச்சிக்கு எல்லையே இல்லை.

நான் பாளைச் சிறையில் இருந்தபோது அந்த நூலை முன்றுவது முறையாகப் படித்தேன். அதில் வரும் வாலிபன் பாவேலுடன் அந்தத் 'தாய்' எந்த அளவுக்குப் பங்கு கொண்டு தன் மகனின் பணி கண்டு பூரிக்கிறாள் என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

'அந்தத் தாய் போலத்தானே என் தாயும் இருந்தார்கள்!' என நினைத்தேன்.

என் நெஞ்சம் நெகிழ்ந்தது; கண்கள் கசிந்தன.

சிறையில் நான் அழுதது அப்போதுதான்.

கார்க்கியின் அற்புதப் படைப்பான அந்த இலட்சிய வீரன் பாவேல் கொடி ஏந்திக்கொண்டு இராணுவத்தை ஊடுருவி முன்னேறுகிறான், அமைதியாக - அசைவற்ற மனத்தோடு! அடடா... அந்தக் கட்டம்...!

'பாவேலாக நாம் இருந்திருக்க வேண்டுமே!' என்று எண்ணங்கள் மின்னுகின்றன.

என்னைக் காண்பதற்காக 2-3-65 அன்று மாறன் வந்தான் பாளைச் சிறைக்கு. என் தோளிலும் மார்பிலும் தொற்றிக் கொண்டு விளையாடியவன் அல்லவா?

அவனைப் பார்த்ததுமே விம்மியது நெஞ்சம்! கண்களோ குளமாயின. பாசத்தால் கட்டுண்டு பேச முடியாமல் திணறினோம் இருவருமே.

எங்கள் சொந்தக் குடும்ப நிலை-கழகக் குடும்ப நிலை- ஆகியவை பற்றிச் செய்திகள் பலவற்றைத் தெரிந்து கொண்டேன்.

ஒற்றைப் பறவையாய் நான் ஒடுங்கிக் கிடப்பதென்னிவற்றால் அன்பு நெஞ்சங்கள் பல வெளியே வருந்துகின்றன என்பதையும் நான் அறிந்து கொண்டேன்.

அந்த நாட்களில்-

என்னை இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது எந்த வகையிலே நியாயமாகும் என்கிற கேள்வி அடிக்கடி தமிழகச் சட்ட மன்றத்திலே எதிரொலித்திருக்கிறது.

என்னைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றுவது ஒன்றுதான் அரசாங்கத்தின் குறி என்றால் அதற்கு சி. ஆர். பி சி. 151 பிரிவுப்படியே என்னைச் சிறைப்படுத்தி இருக்கலாம். ஆனால் 'ஹேபியஸ் கார்பஸ்' மனு வந்தால் அதற்குத் தகுந்த முகாந்திரம் சொல்ல வேண்டும் அரசாங்கம். அதிலிருந்து தப்பிக்கவே இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என் மீது ஏவி விடப்பட்டது.

அதன் மூலம் சட்டமன்றத்தில் கலந்து கொள்ளக்கூடிய என்னுடைய அடிப்படை உரிமை பறிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டும் பொருட்டுச் சட்டமன்றத்திலே உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறார் நண்பர் மாதவன். ஆனால் அது தள்ளுபடி செய்யப் பட்டு விட்டது.

அந்தச் சமயம் தருமபுரி இடைத் தேர்தலும் வந்து குறுக்கிட்டது. திருவண்ணாமலையிலே தோல்வியைத் தழுவிச் சோகத்தில் மிதந்திட்ட காங்கிரசார், தருமபுரியிலே எப்படியாவது கழகத்தைத் தோற்கடித்து வஞ்சம் தீர்த்துக் கொள்வது என்று வரிந்து கட்டி நின்றார்கள்.

அதைப் பற்றிச் சட்ட மன்றத்திலேயே குறிப்பிட்ட அன்பில் தருமலிங்கம்.

..."தருமபுரித் தேர்தல் வருகிறது; அவரை (கருணாநிதியை) வெளியே விட்டு வைக்கக்கூடாது என்று உள்ளே போட்டு விட்டார்கள் என்பதாக ஜனங்களே பேசிக் கொள்கிறார்கள்"

—என ஆட்சியாளரின் உள் நோக்கத்தையே அம்பலப் படுத்திச் சாடியிருக்கிறார்.

நெஞ்சு வலியால் துடித்திட்ட என்னை நானூறு மைல்களுக்கு அப்பால் லாரியிலேயே கொண்டுபோய்ச் சிறை வைத்திருப்பது பற்றி அரசாங்கம் 'வெள்ளை அறிக்கை'யே தந்திட வேண்டும் என்று வாதித் திட்டிருக்கிறார் நண்பர் ப. உ. சண்முகம்.

நாவலர், பேராசிரியர், மதி, சி. பி. சிற்றரசு, என். வி. என். முதலான பல கழக முன்னணியினரும் சட்டப் பேரவையிலும் மேலவையிலும் என்னைப் பாளைச் சிறைக்கு அனுப்பியது அறத்தின் பாற்பட்டதல்ல என்று ஆணித்தரமாகப் பேசியிருக்கின்றனர்.

புதுடில்லி நாடாளுமன்றத்திலும் என்னைக் கைது செய்தது தவறு என்று நண்பர் செழியனும் கடுமையாகச் சாடியிருக்கிர்.

நீலநாராயணன், டி. கே. கபாலி, மைனர் மோசஸ் முதலான கழகத் தோழர்கள் என் மீதுள்ள பாசப் பெருக்கின்காரணமாக என்னை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் சுவரொட்டிகளை அடித்துச் சென்னை வீதியெங்கும் ஒட்டியிருக்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் மகுடம் புனைந்ததைப்போல அண்ணை அவர்களே நாடாளுமன்ற-ராஜ்ய சபாவில் இப்படிக் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

"கழகப் பொருளாளரும், சட்ட மன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கருணாநிதி இப்பொழுது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்பது நாட்டின் பாதுகாப்புக்காக அல்ல; காங்கிரஸ் கட்சியின் பாதுகாப்புக்காகவே பயன்படுத்தப் படுகிறது என்று எனக்கு முன்பு பேசிய பூபேஷ் குப்தா கூறினார். அந்தக் குற்றச்சாட்டுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?"

-அண்ணாவின் இந்த விருப்புக்கு எந்த நேர்மையான விடையையும தந்திடவில்லை மத்திய அமைச்சர்கள்.

காலம் ஓடிக் கொண்டிருந்தது; நான் வாடிக் கொண்டிருந்தேன் இரத்த அழுத்தத்தால்.

ஆள் அரவமே இல்லாத பாளைச் சிறையில் அணிலாவது துணைக்கு வந்ததே என்று ஆறுதலடைந்திட்ட நான் அது பிரிந்தோடியதும் மீண்டும் தனிமையில் தவித்தேன்; எனினும் கார்க்கி போன்றவர்களின் கருத்து மணிகளை என் நெஞ்சிலே குவித்தேன்.

'பாவேலைப் போன்ற இலட்சிய வீரர்களுக்கு எத்தனை 'பாளைகள் தன் கதவுகளைத் திறந்தால் என்ன? பாம்பாக விழுங்கினால் என்ன?'

-என்ற நெஞ்சுரத்தோடு நாட்களைக் கழித்தேன்.

''சுவர்க்கத்திலே என்னைச் சிறை வைத்தாலும் நான் அதன் பளிங்குச் சுவர்களைத் தாண்டி வெளியேறவே விரும்புவேன். எனக்குச் சுதந்திரமே தேவை''

—என்ரூர் டிரைடன் என்னும் ஓர் அறிஞர்.

கற்பனைச் சுவர்க்கச் சிறையே ஒருவருகுக் கசப்பினை அளித்திடும்போது-கற்பனைக்கும் எட்டாத கடுந்துயர்த் தனிமைச் சிறை கண்ணுறக்கத்தையே பறித்திடும் அளவுக்குக் கட்டு விரியன்களை காட்சி கொடுத்திடும் கொடுமைச் சிறை-கரும்புத் தோட்டமாகவா இனித்திடும் எனக்கு?

எனினும் பாளைச் சிறையிலே நான் பெற்ற அனுபவங்கள் பல; கற்ற பாடங்களும் பல.

மற்றச் சட்டங்களின்படிக் கைது செய்யப்பட்டு 'ஏ' வகுப்பிலும், 'பி' வகுப்பிலும் வைக்கப்படுபவர்களைவிடப் பாதுகாப்புச் சட்டப்படிக் கைதானவர்களுக்கு அதிகமான சலுகைகள்-மிகுதியான வசதிகள்-தரப்படுவதுதான் சாதாரணமாக வழக்கம்.

வழக்கத்திற்கு மாருன காரியங்களைச் சந்திப்பதே-மனச் சங்கடங்களைத் தாங்கிக் கொள்வதே-என் வாழ்க்கைப் பயணத்திற்கும் வாடிக்கை ஆகிவிட்டது. பாளையங்கோட்டையும் அதற்கு விலக்கல்ல.

பொதுவாக ஒருவர் 'ஏ' வகுப்பு, அல்லது 'பி' வகுப்புக் கைதியாக இருந்தால் அவரைக் கவனித்திட 'சி' வகுப்புக் கைதிகளில் ஒருவரை 'ஆர்டர்லி'யாகப்- பணியாளராக- அனுப்பி வைப்பார்கள் சிறை அதிகாரிகள்.

அந்த 'ஆர்டர்லி'க்கு அறையைப் பெருக்குதல், தட்டுகளைக் கழுவுதல் போன்ற சிறு சிறு வேலைகள் தரப்படும். ஆனால் நான்

பாளையங்கோட்டைச் சிறையில் இருந்தபோது சாதாரணமான ஒரு பாதுகாப்புக் கைதிக்குக் கிடைத்திருக்கக்கூடிய அந்தப் பணியாள் வசதி கூட எனக்குக் கிட்டவில்லை.

ஏனெனில் நான் இருந்த இடம் 'பார்ஸ்டல் சிறை'-என அழைக்கப்படும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி. அங்கு பெரிய கைதிகள் இல்லை. இளந்தளிர் மாணவர்களே இருந்தனர்.

எனவே, அவர்களில் யாரையும் பணியாளாக அனுப்ப-முடியவில்லை அதிகாரிகளால். பாளையங்கோட்டை சப்-ஜெயிலிலிருந்துதான் யாரை யாவது வரவழைத்திட வேண்டும். அதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டும், நான் அந்தச் சிறையை விட்டுச் சென்னைக்கு வரும்வரை அது நிறைவேறிடவே இல்லை.

அன்றைய பக்தவத்சலனார் அரசு, பாதுகாப்புச் சட்டத்தை என் மீது பாயவிடுவதில் எடுத்துக்கொண்ட அவசரத்தை-அக்கறையை-ஒரு பாதுகாப்புக் கைதிக்குத் தந்திட வேண்டிய சாதாரணச் சலுகைகளை வழங்குவதில் கூடச் செலுத்திடவில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே இத்தனையும் எடுத்துக் காட்டிட விழைந்தேனேயல் லாமல், வேறல்ல. எனக்குப் பணியாள் வசதி இல்லாததால், எந்தவித மான இழப்பும் இல்லை; இன்னலும் இல்லை; ஏக்கமும் இல்லை; எரிச்சலும் இல்லை.

மாறுகத் தனக்குத்தானே உழைத்துக்கொள்வதில் உள்ள தனி இன்பத்தைத் துய்த்திடச்-சுவைத்திடப்- பாளைச் சிறை ஒரு பக்குவப் பள்ளியாக அமைந்ததாகவே நான் கருதுகிறேன்.

தனிமைச் சிறையிலே நான் தனித்துக் கிடந்த நிலையிலும், எனக்கு இனிமை வழங்கியவை பெருமை வாய்ந்த எழுத்து வேந்தர்கள் தீட்டிய சில அருமையான நூல்களே.

திருநெல்வேலி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மூலமாகப் பல புத்தகங்களை அப்போது படித்துச் சுவைத்திடும் வாய்ப்புக் கிட்டியது எனக்கு.

என் மனத்தைக் கவர்ந்திட்ட ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கி படைத்திட்ட 'தாய்' நூலைப்பற்றி முன்னரே குறிப்பிட் டிருக்கிறேன்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்திய மண்ணில் ஆழமாக-அகலமாக-வேரூன்றச் செய்வதற்காக ஆர்வத்தோடு செயலாற்றிய வாரன் ஹேஸ்டிங்ஸ் பற்றிய புத்தகம் ஒன்றும் எனது படிப்புத் தாகத்துக்கு விருந்து படைத்தது பாளைச் சிறையில்.

வெள்ளையர் ஆட்சியாம் 'கொள்ளைமாளிகை'க்கு அடித்தளம் அமைத்தவன் ராபர்ட் கிளைவ்தான் என்றாலும், அதன்மீது வலிமை வாய்ந்த சுவர்களை எழுப்பியவன் வாரன் ஹேஸ்டிங்ஸ். அதற்காகவே அவன் ஏற்றிப் போற்றப்பட்டான் இங்கிலாந்து மக்களால். எனினும் அவன் இங்கே இழைத்திட்ட குற்றங்கள் ஏராளம்; அவை பற்றிய வழக்கு ஒன்று பிரிட்டானிய பிரபுக்கள் சபையில் நெடுங்காலமாக விவாதிக்கப்பட்டது. 1788-ஆம் ஆண்டு முதல் 1795-ஆம் ஆண்டு வரை-ஏறத்தாழ ஏழாண்டுக் காலம் அந்த வழக்கு நடைபெற்றது.

அப்போது ஹேஸ்டிங்ஸ் மீது கேள்விக் கணைகளைச் சரமாரியாகத் தொடுத்துத் தத்தளிக்கச் செய்தவர் எட்மண்ட் பர்க்.

உலகிலேயே தலைசிறந்த பேச்சாளர்கள்- குறிப்பாக, நாடாளுமன்ற விவாத விற்பன்னர்கள்-யார், யார் என்ற பட்டியல் ஒன்று உருவாக்கப் படுமானால் அதன் முதன் வரிசையிலேயே இடம் பெறத்தக்க-நா-நயம் மிக்க 'பேச்சுப் புலி'-எட்மண்ட் பர்க். அவரோடு வாதத்தில் மோதியவர்கள் மூக்குடைபடாமல் தப்பவே முடியாது.

அப்படித்தான், ஹேஸ்டிங்ஸ் பற்றி எட்மண்ட் பர்க் அடுக்கடுக்காகக் குற்றங்களைச் சுமத்தியபோது குறுக்கிட்ட ஒருவரும் செம்மையாக வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார், அடியிற்கண்டவாறு:

"……நீங்கள் ஹேஸ்டிங்ஸ் தவறு செய்தார் என்று திட்டுகிறீர்களே! ஆனால், இந்தியாவில் ஹேஸ்டிங்சுக்காக வாரணாசி (காசி)யில் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் நடத்துகிறார்களே!"

-என்று குத்தலாகக் கேட்டாராம் குறுக்கிட்டவர்.

உடனே எட்மண்ட் பர்க் என்ன பதிலடி கொடுத்தார் தெரியுமா?

"அபிஷேகம் நடத்துவதில் ஆச்சரியம் இல்லை; இந்திய மக்களே அப்படித்தான்! நன்மை செய்யும் கடவுளுக்கு மட்டும் அவர்கள் கோயில்கள் கட்டுவதில்லை; அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களுக்குரிய தெய்வங்களுக்கும் அவர்கள் கோயில் கட்டுகிறார்கள்!"

பர்க்கின் இந்தச் சொற்கள்-இந்தியாவைப் பற்றிய படப்பிடிப்பு-எனக்குச் சிரிப்பைக் கொடுத்தது, சிந்தனையையும் கிளறிவிட்டது, ஹேஸ்டிங்ஸ் பற்றிய நூலைப் படித்தபோது.

'தொத்து நோய்களையே தெய்வங்களாகத் தொழுதிடும் பகுத்தறிவற்ற பழக்கம் சமூக வாழ்வில் மட்டும்தானா? அரசியல் துறையிலும் அந்த அறியாமைப் போக்கு பற்றிக் கொண்டு படர்ந்திடவில்லையா?' என்று என்னால் எண்ணாமல் இருந்திட முடியவில்லை அப்போது.

பாளைச் சிறையில் என்னோடு பழக வந்தது அணில் என்று முன்பு குறிப்பிட்டேன்.

அணில் மட்டும் அல்ல.

மூட்டைப் பூச்சியும் என்னிடம் மோகங்கொண்டு திளைத்தது; முத்தமிட்டுக் களித்தது-உடம்பெங்கும் துளைத்தது.

தேள் ஒன்றும் என்னைச் செல்லமாகக் கொஞ்சிட ஓடிவந்தது!

அதுவும் போதாதென்று, புதர்கள் சூழ்ந்த அந்தச் சிறையினுள்ளே பாம்பும் வந்தது என்னைப் பார்ப்பதற்கு!

அந்தக் கட்டுவிரியன் பாம்பைக் கண்டது முதல் என் கண்ணை விட்டு ஒடியே விட்டது உறக்கம்; சின்னச் சின்னக் கண்ணாடித் துண்டங்களையே ஆடையாய் அணிந்தது போன்ற விரியன் பாம்பு, இரவிலே எந்த நேரத்திலே என்னிடம் உறவு கொள்ள வந்திடுமோ என்று உள்ளுற எனக்கு நடுக்கம்!

அதைவிட ஒரு கொடுமையான தகவல் கழகக் காளை எம். இராசாங்கத்தைப் பற்றியது.

மதுரை மாவட்டத்தில் கூடலூரில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே ஈடுபட்டார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார் அந்த மறவர்குல மாணிக்கம்.

ஒரு சட்ட மன்ற உறுப்பினராக இருந்தும்கூடச் சொல்லொணாத கொடுமைகளுக்கெல்லாம் சிறையிலே உள்ளாக்கப்பட்டிருக்கிறார் அவர்.

'.....இராசாங்கத்தைப் பார்த்தேன்; சதையெல்லாம் பிய்க்கப் பட்டிருந்தது. மூன்று தடவை மயக்கம் போட்டு விழுந்த அவரைத் தண்ணீர் கொடுத்து எழுப்பி அடித்திருக்கிறார்கள். இதுதான் முறையா?"

-என்று திரு மூக்கையா தேவர் அவர்களே 9-3-65-இல் சட்ட மன்றத்தில் சாடிடும் அளவுக்குத் துடிக்கத் துடிக்க அடித்திருக்கிறார்கள். இராசாங்கத்தை. கண்ணைக் கட்டிக் குப்புற வீழ்த்தித் தாக்கியிருக் கிறார்கள்; இடுப்பிலே 'எலெக்ட்ரிக் ஷாக்'கே கொடுத்தார்களாம், தாகந்தாங்காமல் அவர் தண்ணீருக்காகக் கெஞ்சியபோது சிறுநீரையே தந்தார்களாம்.

இந்தி ஏகாதிபத்தியத்தைத் தடுத்து நிறுத்திட எப்படியெல்லாம் காடுந்துயரின் எல்லைக்கே சென்று உயிர்களையே காணிக்கையாக்க கொடுத்திருக்கிறார்கள் நம் கழகக் கண்மணிகள்?

'இராசாங்கத்துக்கா இத்தனை சித்திரவதைகள்?' என்று நான் பாளைச் சிறையில் இருந்தவாறே பதறிய வேளையில் என் நெஞ்சையே

பாளம் பாளமாக வெடித்திடச் செய்யக்கூடிய இன்னொரு செய்தியும் என்னை எட்டியது.

மாயூரம் ஏ. வி. சி. கல்லூரியில் பி. ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சாரங்கபாணி என்னும் மாணவர் தீக்குளித்து மாண்டதே என்னை அவ்வாறு திடுக்கிடச் செய்தது.

கீழப்பழவூர்-சின்னச்சாமி
கோடம்பாக்கம்-சிவலிங்கம்
விருகம்பாக்கம்-அரங்கநாதன்
அய்யன்பாளையம்-வீரப்பன்
ரங்கசமுத்திரம்- (சத்தியமங்கலம்) முத்து
ஆகியோர் தீக்குளித்தும்,
கீரனூர்-முத்து
விராலிமலை-சண்முகம்
கோவை-பீளமேடு-தண்டபாணி

ஆகியோர் நஞ்சுண்டும், இந்தித் திணிப்பினை எதிர்த்துத் தங்கள் இன்னுயிரை ஈந்தது போதாதா?

மாணவமணி மாயூரம் சாரங்கபாணியும் செந்தழலுக்குத் தன்னுடைய உடலைத் தந்து மறைந்து விட்டாரே என்று நான் அடைந்திட்ட துயருக்கு அளவே இல்லை.

தமிழகத்துச் செய்திகள் தாம் இப்படித் தாங்கொணாத வேதனையைத் தந்தன என்றால், டில்லிச் செய்திகளோ அவற்றை விடக் கொடுமையாக வேல் கொண்டு தாக்கின.

1937-இல் முதறிஞர் ராஜாஜியால் இந்தி திணிக்கப்பட்டதால் தான் தென்னக மக்களின் எண்ணத்திலே பிரிவினை உணர்ச்சியே முகிழ்த்தது; பின்னர் தீயாக மூண்டெழுந்தது.

ஆனால், 1962-இல் சீனப் படையெடுப்புக்குப் பின்னர் இந்தியாவுக்கு வெளி நாடுகளால் ஏற்படக் கூடிய விபத்தையும், அதனால் உள்நாட்டில் ஏற்படக்கூடிய விளைவுகளையும், வேறு பல சிக்கல்களையும் சீர்தூக்கிப் பார்த்துத் தன்னுடைய பிரிவினைக் கொள்கையைக் கைவிட முன்வந்தது தி. மு. கழகம்.

அதற்குப் பிறகு இந்தியா இரண்டுபடுவதை விரும்பவும் இல்லை-வலியுறுத்தவும் இல்லை-கழகம்.

தென்னாட்டில் ஏற்பட்ட இந்த நலலெண்ணம்தான்-பெருந்தன்மைதான்-இந்தியாவை மேலும் ஒரு பிரிவினைக்கு இலக்காக்காமல் காப்பாற்றியது என்பதனை நடுநிலைமை உள்ள எவருமே ஒப்புக் கொள்வர்.

இந்தி வெறியர்களோ இந்த உண்மையினை உணர்ந்திருந்தும் இந்தியா எக்கேடு கெட்டால் என்ன- எப்படிச் சிதைந்தால் என்ன என்கிற போக்கில், தங்களுடைய மொழி ஆதிக்கத்தை நிலை நாட்டுவதிலேயே முனைப்பாக இருந்தனர்- இன்றும் இருக்கின்றனர்.

இல்லையென்றால்—

"மொழிச் சிக்கலைத் தீர்க்க நாட்டை இரண்டு பிரிவுகளாக ஆக்குக!"

—என்று நாடாளுமன்றத்திலேயே இந்திக்காரர்கள் குரல் கொடுப்பார்களா?

அவ்வாறு பிரிவினை வாதம் பேசியவர் டாக்டர் ராம்மனோகர லோகியாதான்.

இந்தியாவில் சமதர்மப் பூங்காவைச் சமைத்திடும் பொருட்டுத் துடிப்பராகத் தொண்டாற்றியவர் என்கிற அளவில் அவரிடம் எனக்கு நிரம்ப மரியாதை உண்டு. எனினும், நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட அவரே இந்தித் திணிப்பு என்னும் கோடரி கொண்டு இந்தியாவைத் துண்டாடுவதற்கும் தூபம் போடுவார் என்று நான் எதிர்பார்த்திடவே இல்லை.

"மொழிச் சிக்கலுக்குச் சுமுக நிலை காண்பதற்காகத் தேவையானால் இரு பிரிவாகவே பிரித்துவிடலாம் இந்த நாட்டை. ஆங்கிலத்திற்குச் சாதகமாக உள்ள மாநிலங்கள் தங்கள் அலுவல்களை ஆங்கிலத்தில் நடத்திக் கொள்ளட்டும். இந்திக்குச் சாதகமான மாநிலங்கள் இந்தியை ஆட்சி மொழி ஆக்கிக் கொள்ளட்டும். அப்படிச் செய்தால் இந்தி பேசும் மண்டலத்தில் உள்ளவர்கள் வெற்றிகரமாக நிருவாகத்தை நடத்திச் செல்வதைக்கண்டு இந்தி பேசாத மண்டலத்தில் உள்ளவர்களும் வெட்கப்பட்டு, இந்தியைப் பிறகு ஏற்றுக் கொள்வார்கள்."

24-2-65-இல் நாடாளுமன்றத்திலே லோகியா எடுத்து வைத்த இந்த வாதத்தைப் படித்தபோது, விளக்கவொண்ணாத வேதனையிலேயே மூழ்கினேன் நான்.

கனடா நாட்டிலும் இந்தியாவைப் போலவே மொழிச்சிக்கல் உண்டு. அங்கே குவபெக் மாநிலத்தவர் பிரெஞ்சு மொழி பேசுவோர் ஆவர். ஆங்கிலம் பேசுவோரால் தங்கள் உரிமைகள் பாதிக்கப்படுவதை எதிர்த்து அவர்கள் உரக்கக் குரல் எழுப்பி வருகிறார்கள். மொழிச் சிக்கலை ஆராய அமைக்கப்பட்ட 'ராயல் கமிஷன்', ஆங்கிலம் பேசுவோர் நிதானமாக நடக்கத் தவறினால், பிரெஞ்சு மொழியினரைக் கொண்ட குவபெக் மாநிலம் கனடாவிலிருந்து பிரியும் ஆபத்து காத்திருக்கிறது"-என்று அப்போது அறிக்கை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையைக் கண்ணுற்றதும்,

'கனடா'வில் உள்ள ஆங்கில வெறியர்களைப் போலத்தானே இந்தி வெறியர்களும் நடந்து கொள்கிறார்கள்! இந்தியாவை இரண்டாக உடைத்தாவது இந்தியைக் கொலுவேற்றிடக் குதிக்கிறார்கள்!"

—என்று என்னுள் வருந்திடாமல் இருக்க முடியவில்லை.

113

மாறனும் கைது என அண்ணு கூறினர்

தமிழகச் செய்திகள்-டில்லிச் செய்திகள்-உலகச் செய்திகள் ஆகிய எல்லாமே இப்படிச் செந்தேளாக வந்து என்னைக் கொட்டிக் கொண்டிருந்த போது-

சென்னையில் 'முரசொலி' யைக் கவனித்துக் கொண்டிருந்த என் மருமகன் மாறன் 25-3-65-இல் இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டான் என்கிற செய்தியும் என்னை வந்து எட்டியது.

காலை மலர்ந்தது

கூகைகளின் அலறலுக்கிடையே ஒரு குயிலின் மதுரகானம்.

குளவிகளின் ரீங்காரக் கூச்சலையும் மீறி ஒரு கிளியின் மழலை மொழி.

—என்று சொல்லிடத் தக்க வகையிலே, செந்தேளாய்க் கொட்டிய செய்திகளுக்கு நடுவே செந்தேனுகவும் எனக்கு இனிப்பினை வழங்கிற்று ஒரு செய்தி.

'பாளைச் சிறைக் கோட்டத்திற்கே வந்து என்னைப் பார்க்கப் போகிறாம் அண்ணு!'

அதனைக் கேள்வியுற்றதுமே என் உடலிலே ஏற்பட்ட புல்லரிப்பு என் உள்ளத்திலே பொங்கி வழிந்திட்ட பூரிப்பு! அடடா! அதனை எப்படித்தான் நான் எழுத்திலே வடித்திடுவேன்.

அன்று காலை ஏறத்தாழப் பத்து மணி இருக்கும்-

நான் அடைபட்டுக் கிடந்திட்ட அறையின் கதவு திறந்து கொண்டது. விடுதலையை முன்னிட்டல்ல; வேறொரு பகுதிக்கு நான் அழைத்துச் செல்லப்படுவதற்காக.

அங்கோ-

எத்தகைய ஒப்புவமைகளை இணைத்துக் காட்ட முற்படினும் அத்தனைக்கும் பொருத்தமாக மட்டுமல்ல; அவற்றுக்கு அப்பாற்பட்டும் இமயமென நிமிர்ந்து நிற்கும் என் இதயதெய்வமான அண்ணு வந்திருந்தார் என்னைக் காண்பதற்காக.

அவரைக் கண்டதுமே கசிந்தன கண்களில்; கனத்தது நெஞ்சம்-பாசத்தால். பலநாள் பிரிவிற்குப் பின்னர் தாயைப் பசுவைப் பார்த்ததும்

தாவிக் குதித்தாடும் இளங்கன்றுக என் இதயம் விம்மிற்று இன்பப் பூரிப் பால். அதேசமயம், இனம் விளங்கிடாத தவிப்புணர்ச்சி ஒன்றும் எங்கள் உதட்டுக் கதவுகளை இறுக்கி மூடி வேடிக்கை பார்த்தது.

சில நொடிகளே அந்தச் சஞ்சலம் தழுவிய தவிப்பு. பின்னர் இருவருமே பிரிவாற்றுமையால் பீரிட்டெழும் கலக்கத்திற்கு விடை கொடுத்து விட்டு உரையாட முற்பட்டோம்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 41 (5) பிரிவின்படி மாறன் கைதானது பற்றியும் 'முரசொலி' மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது பற்றியும் எனக்கு முதல் முதல் தகவல் தெரிவித்தவர் அண்ணு அவர்கள்தாம்.

அடக்கத்தின் பிறப்பிடமான அவர் வேதனைகளை அடக்கிக் கொண்டுதான் என்னோடு உரையாடினார். அவருடைய கவலை கப்பிய அந்தக் கனிவான முகம் இன்றும் என் முன்னே காட்சியளித்த வண்ணமே இருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தக் குறுகிய காலத்தில் அண்ணு என்னைப்பற்றி, என் உடல் நலம் பற்றி, எனக்கு வழங்கப் படும் வசதிகள் பற்றியே-அக்கறையோடு விசாரித்தார். நாளை வெளி நடப்புகளைப் பற்றி-அப்போது நடைபெறவிருந்த தர்மபுரித் தேர்தலைப் பற்றி-அதற்காகக் கழகம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் பற்றி ஆர்வத்தோடு வினுக்களை அடுக்கினேன்.

"தர்மபுரித் தேர்தலில் காங்கிரசார் பணத்தை அள்ளி வீசுவார்களே அண்ணு! அங்கு நாம் வெற்றி பெறவேண்டுமென்றால் வெகுவாகப் பாடுபட வேண்டும்! என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? யார், யார் தருமபுரி சென்று வந்தனர்? நீங்கள் எப்போது செல்லப் போகிறீர்கள்?"

--இப்படியெல்லாம் நான் விடாமல் கேட்டிடவே, கவலைக் கருமுகில் மூட்டம் போட்டிருந்த அவர்தம் முகத்திலும் புன்னகை மின்னிற்று.

"அந்தக் கவலையெல்லாம் உனக்கு எதற்கு? தோழர்கள் திறமை யாகச்-சுறுசுறுப்பாக-மெத்த ஆர்வத்துடன்-தேர்தல் காரியங்களைக் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். நீ உன் உடல் நலத்தைக்கவனித்துக் கொள்; ஏதேனும் உடல் நலக் குறைவு இருப்பதாகத் தோன்றினாலும் உடனேமருத்துவர் சேவை என்பதைத் தெரியப்படுத்து. அலட்சியமாக இருந்து விடாதே!"

—என்றெல்லாம் ஆறுதல் மொழிகளைத் தாய்மை உணர்வோடு தந்திட்டார்!

நேரமோ வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. சிறை அதிகாரிகள் தங்கள் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டனர் அதன் பொருள் விளங்கிற்று எங்கள் இருவருக்குமே.

அண்ணா புறப்பட்டார். நானும் அவரிடம் விடை பெற்றேன். அவர் என்னைப் பார்த்தபடியே வெளிப்புற வாயிற்படியை நோக்கி நடந்தார். நான் அவரைப் பார்த்தபடியே என் அறை நோக்கி அடிகளை எடுத்து வைத்தேன்.

அவரை அப்போது சந்தித்ததில்-அவர்தம் அறிவுரைகளை ஆறுதல் மொழிகளைக் கேட்டு மகிழ்ந்ததில்-என் இதயத்திற்குத் தனியானவோர் எழுச்சி-இனிப்பு-புத்துணர்ச்சி-புளகாங்கிதம் எல்லாமே ஏற்பட்டன.

அன்று மாலையே திருநெல்வேலியில் நிகழ்ந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அண்ணா,

" 'என் தம்பி' கருணாநிதி தனிமைச் சிறையில் கிடக்கும் இந்த இடம்தான் இனி எனக்கு யாத்திரை செய்ய வேண்டிய புனித பூமி" என்று உணர்ச்சி பொங்கிடக் குறிப்பிட்டு விட்டு மேலும் பேசும் போது, "என் தம்பி கருணாநிதியைப் பார்த்து விட்டுத் தான் வருகிறேன். இங்கே பேசியவர்கள் 'கருணாநிதி தனிமைச் சிறையில் தவிக்கிறார்' என்று சொன்னார்கள். தவறாகச் சொல்லி விட்டார்கள். தம்பி கருணாநிதியைத் தனிமைச் சிறையில் தள்ளுமளவுக்குக் கொடியவரல்ல பக்தவத்சலம். பாம்பும், பூரானும் நெளிகிற பாழ் சிறையில் தான் கருணாநிதியைப் பூட்டி வைத்திருக்கிறார்கள்.

"நெஞ்சத்தில் பூட்டி வைக்க முடியாத நிகழ்ச்சியொன்றை நினைவு படுத்துகிறேன். நான் கருணாநிதியைப் பார்த்த போது, அவர், 'அண்ணா நலமா?' என்று கேட்பார் என்று கருதினேன்.

'அண்ணி சுகமா? பரிமளமும், இளங்கோவனும், கௌதமனும், பாபுவும் சௌக்கியமா?' என்று கேட்பார்-என்று நினைத்தேன்.

'கோபாலபுரம் போனீர்களா?'

'குடும்பத்தைப் பார்த்தீர்களா? இல்லாளும் செல்வங்களும் நலமா?' என்று கேட்பார் என்று எண்ணினேன்.

ஆனால் கருணாநிதி இதையெல்லாம் கேட்கவில்லை.

என் குடும்பத்தைப் பற்றியோ தன் குடும்பத்தைப் பற்றியோ எதுவும் விசாரிக்கவில்லை.

கருணாநிதி கேட்ட முதல் கேள்வி:

'என்னண்ணே, தருமபுரி எப்படி இருக்கிறது?'

'கழகம் வெற்றி பெற்று விடுமா? என்பதுதான்' என்றும் கூறினார்.

அவரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த 3-4-1965 நாளிட்ட 'காஞ்சி' இதழில் 'தம்பிக்கு மடல்' பகுதியிலும் என்னைப் பற்றி - நான் பாளைச் சிறையிலே அடைக்கப்பட்டிருப்பது பற்றித்-தம்முடைய ஆற்றெணாத் துயரிலே தோய்த்துத் தம் எண்ணங்களைத் தீட்டியிருக்கிறார் அண்ணா.

அவற்றில் சில வருமாறு:

'பாதுகாப்புச் சட்டப்படி சிறைப்பிடித்து வைத்திருப்பதால் மிக்கப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் திட்டம் போலும்! அதனால் தான் பக்கத்திலே உள்ள இளம் குற்றவாளிகளுக்கான சிறைக் கோட்டத்தில் பல நூறு பேர் இருக்க, கருணாநிதிக் காகவே ஒரு பெரிய தனிச் சிறையை ஒதுக்கி அதிலேயும் தனியாக வைத்திருக்கிறார்கள்.

'சென்னையிலிருந்து நானூறு கல் தொலைவில் பாளையங் கோட்டையில் தனிமைச் சிறையில் போட்டடைத்துக் கொடுமை செய்வதனைத் தமிழகம் கேட்டுத் தத்தளிக்கிறது; விம்முகின்றனர் தாய்மார்கள்; 'இப்படி ஓர் ஆட்சியா?' என்று கேட்டுத் துடிக்கின்றனர் முதியோர்கள். நம்மை இத்துணைத் துச்சமாக எண்ணிவிட்டனரே என்றெண்ணி வேதனைப்படுகின்றனர் இளைஞர்கள்; அறம் அறிந்த வர்கள் பதறுகின்றனர்; சட்டம் தெரிந்தவர்கள் இதற்குப் போதுமான நியாயம் இல்லை என்று எடுத்துரைக்கின்றனர். கழகத் தோழர்கள் கலக்கம் அடைந்துள்ளனர்; முதலமைச்சர் பக்தவத்சலனார் மட்டும் நிற்கிறார், கற்பாறை போல.

'என்ன குற்றம் செய்தான் அந்தப் பிள்ளை? இவர்களின் (காங்கிரஸ் ஆட்சியாளரின்) குணத்தை அம்பலப்படுத்தி எழுதினான். எழுதினால் என்ன? ஆட்சியாளர் குடியா முழுகி விடும்?

'கருணாநிதியின் பேச்சுக்கும், எழுத்துக்கும் ஆட்சியாளர்கள் எத்துணை அஞ்சுகிறார்கள் என்ற நினைப்பு எழுகிறது. ஒரு வெற்றிப் புன்னகை தன்னாலே மலர்கிறது.

'கழக வளர்ச்சியை அரசினர் கண்டு கலங்கிடும் வண்ணம் பேச்சாலும், எழுத்தாலும் பணியாற்றியதற்காகக் கழகம் என்ன விதத்தில் நன்றியைத் தனது கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்வது?

ஒன்று இருக்கிறது; கற்கோட்டையுள் அடைக்கப்பட்டுள்ள கருணாநிதிக்குக் கழகத் தோழர்கள் காட்டக்கூடிய நன்றியறிவிப்பு, தருமபுரித் தேர்தலில் கழகம் வெற்றி பெற வேண்டும். அந்தச் செய்தி செந்தேனாகி எத்துணை கொடுமை நிறைந்த தனிமைச் சிறையினையும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக ஆக்கிடும். அந்த வெற்றியைப் பெற்றுத் தருவதைவிட அடக்கு முறையால் தாக்கப்பட்டு நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தனிமைச் சிறையில் பாஞ்சாலங்குறிச்சிச் சீமையில் அடைக்கப்பட்டிருக்கும் கருணாநிதிக்குக் கழகம் தரக்கூடிய மகிழ்ச்சிப் பொருள் வேறெதுவும் இருக்க முடியாது.

'சிறைக் கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ உறுதி பன்மடங்கு கொண்டவர்களாவது மட்டுமல்ல; தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம் பற்றிய எண்ணம் - இவைகளைக் கூட மறந்துவிடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப்பற்றிய எண்ணம் எழுப்பிவிடும் ஆசை, அச்சம், கவலை, கலக்கம், பிரிவாற்றுமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவும், ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது சிறைச்சாலை; இது பற்றியே ஆன்றோர் சிறைச் சாலையை அறச்சாலை என்றனர்.

'பாளையங்கோட்டைச் சிறை வாயிலில் கண்டேன், இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை;

'அங்குப் பொறிக்கப்பட்டிருப்பது என்ன?

'தன்னை வெல்வான்
தரணியை வெல்வான்!'

'காஞ்சி' இதழில் அண்ணாவின் இந்தக் கருத்து மணிகளை கண்டதும் என் நெஞ்சம் விம்மிற்று. பெருமிதத்தால், பாளைச் சிறை வந்து என்னைப் பார்த்து விட்டுத் திரும்பிய அண்ணாவின் மனக் கேணியில் என் மீதான பரிவுணர்ச்சி எந்த அளவுக்கு ஊற்றெடுத்து வழிந்துள்ளது என்பதனை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. என் விழிகள் குளமாயின.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 30(1) பிரிவின்படி என்னைப் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைத்திட்ட அளவிலேயே காங்கிரஸ் ஆட்சியாளரின் அடக்கு முறைப் பசி அடங்கிடவில்லை.

'முரசொலி'யில் வெளியான சில கட்டுரைகள், படங்கள் ஆகியவற்றைக் காரணம் காட்டி, அதே பாதுகாப்புச் சட்டம் 41 (5)- பிரிவின் படியும் என் மீது வேறொரு வழக்கினையும் தொடுத்தனர்.

அதன் விசாரணையை முன்னிட்டுப் பாளையங்கோட்டையிலிருந்து கைதியாகவே என்னைச் சென்னைக்குக் கொண்டு சென்றனர்.

114

எனக்கும் விடுதலை!

ஒவ்வொரு நாளும் பொதுக் கூட்டங்களிலோ வேறு நிகழ்ச்சி களிலோ ஆயிரம், இலட்சம் என்று மனித முகங்களையே பார்த்துப் பார்த்துப் பரவசமுற்றிடும் எனக்கு இந்த உலக ஒட்டமே எப்படி இருக்கிறது என்று புரிந்திடாத நிலையில் - விரைந்து பறந்திடும் வண்டி, வசகனுதிகள் கூட எப்படி இயங்குகின்றன என்று அறிந்திட முடியாத நிலையில் இருண்ட நாட்கள் தனிமைச் சிறையில்.

ஆனால் அத்துடன் என்னுடைய பாளைச்சிறை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்றுஎன்னால் நம்ப முடியவில்லை. இன்னொரு வழக்கிலும் என்னைச் சிக்கிடச் செய்து மேலும் மேலும் இரும்புக் கம்பி களுக்கு அப்பால் விருந்து வைத்திடும் நோக்கோடு தானே என்னை அழைத்துச் சென்றனர் அப்போது!

அதனால் தான் நான் பாளையங்கோட்டையிலிருந்து புறப்படும் போது அங்கிருந்தவர்களிடம், "போய் வருகிறேன்; என் அறையைக் காலியாகவே வைத்திருங்கள்" என்று கூறி விட்டு வந்தேன்.

ஆனால் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளோ மீண்டும் என்னைப் பாளைச் சிறைக்குக் கொண்டு போய்ச் சேர்த்திடவில்லை.

4-4-1965 அன்று பாளையங்கோட்டையைப் பிரிந்து, புகை வண்டியில் ஏற்றப்பட்ட நான் 5-4-1965 காலை சென்னை எழும்பூர் நிலையத்தில் இறக்கப்பட்டேன்.

ஆயுதந் தாங்கிய காவல் துறையினர் இருபுறமும், அணி வகுத்து நின்றிட - ஆர்வந் ததும்பிடும் கழகத் தோழர்கள் சற்றுத் தொலைவில் நின்று கரங்களை அசைத்துத் தங்கள் அன்பு முகத்தைக் காட்டிட சென்னை மண்ணிலே அடி வைத்திட்ட நான், விடுதலைக் காற்றினை நுகர்ந்திட முடியாமல் மீண்டும் போலீஸ் வேனிலே ஏற்றப்பட்டேன்; அதுவரை குற்றப் பத்திரிக்கை தயாரிக்கப்படாததால் நீதிமன்ற ஆணைப்படி சென்னை மத்தியச் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டேன்.

மூன்று நாட்கள் கழித்து 8-4-65 அன்று, பாதுகாப்புச் சட்டம் 41 (5) பிரிவின் கீழ் 'முரசொலி' மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணையை முன்னிட்டு எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்துக்கு என்னைக் கட்டுக்காவலுடனேயே இட்டுச் சென்றார்கள். என்னிடமும் மாறனிடமும் குற்றப் பத்திரிகைகள்

தரப்பட்டன. மறுபடியும் வழக்கு ஏப்ரல் 24ஆம் நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சென்னைச் சிறைச் சாலையிலும் என்னைத் தனிமையில் தான் தவிக்க விட்டனர் ஆட்சியாளர்கள்.

திடீரென்று ஒருநாள் என்னைத் திக்குமுக்காடிடச் செய்தது நெஞ்சு வலி; அடிக்கடி தலைச்சுற்றலும் ஏற்பட்டு என்னை அலைக் கழித்தது. இரத்த அழுத்தமும் குறைந்து காணப்பட்டது. ஒரு நாள் மயக்கமுற்றே விழுந்துவிட்டேன். நெஞ்சு வலியும் நின்றிடாமல் பல நாட்களாக நீடித்துக் கொண்டே இருந்ததால் சென்னை மத்திய மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று டாக்டர் இரத்தினவேலு சுப்ரமணியம் அவர்களிடம் காண்பித்தனர். நான் மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டுமென்று அவர் கூறினர். அதை ஏற்றுக் கொள்ளாமல் மீண்டும் சிறைச்சாலைக்கே திரும்பினேன்.

தமிழகத்தை ஆண்டிட்ட திரு பக்தவத்சலனார் அரசுக்கு எப்படித் அந்தத் திடீர் ஞானோதயம் உதயமாயிற்றோ, தெரியவில்லை.

பாதுகாப்புச் சட்டத்தில் 30(1)பி. பிரிவினை அது ரத்துச் செய்திட முடிவெடுத்தது. அதனால் அந்தப் பிரிவின் கீழ் பாளைச் சிறையிலே அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடந்திட்ட நானும் விடுதலைக் காற்றினை துகர்ந்திடும் வாய்ப்பினைப் பெற்றவன் ஆனேன்.

நான் விடுதலை அடைந்திடப் போகும் செய்தி எப்படித்தான் தான் வெளியே பரவிற்றோ?

ஆயிரக்கணக்கான கழகக் கண்மணிகள் - முன்னணித் தலைவர்கள்-வரவேற்புப் பாயிரம் பாடிட வந்திருந்தனர் சிறையின் வாயிலுக்கே.

தனிமைச் சிறையிலே நான் அடைந்திட்ட அல்லலெல்லாம் என் நெஞ்சைவிட்டு அகன்றிடும் வண்ணம், கனிவு முகங்காட்டி எனை கரம் பற்றி வரவேற்றனர் அருமைத் தோழர்கள்.

சிறையிலிருந்து விடுதலை பெற்றிட்டபிறகு சிறை பற்றிய என் எண்ணங்களைத் தெரிந்துகொண்டிடச் செய்தியாளர்கள் என்னை மொய்த்தனர்; முற்றுகையிட்டனர்.

இந்தியாவின் எல்லையில் ஒருபுறம் செஞ்சீனமும், மறுபுறம் பாகிஸ்தானும் மிரட்டிக்கொண்டிருந்த இருட்டு வேளை அது.

அந்த நேரத்தில் உள்நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்வினை உருவாக்கிடும் வகையில் மாறுபட்ட கருத்து மலர்களையும் ஒரே மாலையாகப் பின்னிடும் போக்கில்-தன்னுடைய செயல்

திட்டங்களைத் தீட்டி வெளிப்பகையினை வீழ்த்திட முனைவதே எந்தப் பொறுப்புள்ள அரசுக்கும் பொருத்தமான நடவடிக்கையாக இருந்திட முடியும்.

வெளியிலிருந்து ஊடுருவிப் பாய்ந்து வரும் விபத்தினைத் தடுத்திடவும், அந்த விபத்துக்கு வெண்சாமரம் வீசிடும் உள்நாட்டுப் புல்லுருவிகளை ஒழித்திடவும்தான் பாதுகாப்புச் சட்டம் பயன்பட்டிட வேண்டுமேயல்லாது நாட்டுப் பாதுகாப்பிலே நாட்டம் உள்ளோரையும் அந்தச் சட்டத்தால் நசுக்க முற்படுவது எந்த விதத்திலே ஜனநாயக நெறிக்கு ஏற்புடையதாகும்?

ஆனால், திரு பக்தவத்சலனார் அரசோ, இந்தச் சாதாரண அரசியல் அறத்தினைக் கூடக் காற்றிலே பறக்க விட்டுவிட்டுத்தான் ஆத்திரத்துடன் காரியமாற்றிற்று; காராக்கிருகத்தில் தள்ளிற்று கழகக் கண்மணிகளை; அதுவும் காரணம் ஏதும் கூறுமலே.

எனவேதான், என்னை வந்து சந்தித்த செய்தியாளர்களிடம் ''...இந்த விடுதலையில் உண்மையாகவே எனக்கு மகிழ்ச்சி இல்லை. பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டுள்ள கழகத் தோழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். பத்திரிகைகள்மீது தொடுத்துள்ள வழக்குகளைச் சர்க்கார் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாக அண்மையில் நடந்த கிளர்ச்சியில் தொடர்பு சிறிதுமற்ற கழகத் தோழர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளையெல்லாம் சர்க்கார் வாபஸ் வாங்க வேண்டும். அப்போதுதான் வெளியே இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியும்''

—என்று குறிப்பிட்டேன்.

அண்ணா அவர்களும், கழகத் தோழர்களுக்கு ஓர் ஆணை பிறப்பித்தார்கள, அறிக்கை வாயிலாக.

''பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்ட கழகத் தோழர்களை விடுதலை செய்க!''

—என்னும் கருத்தமைந்த தந்திகள் இந்தியத் தலைமையமைச்சர் திரு லால்பகதூர் சாஸ்திரிக்கும் தமிழக முதல்வருக்கும் இலட்சக் கணக்கில் அனுப்பப்பட்டன.

தனிமைச் சிறையிலிருந்து விடுதலை பெற்றிட்ட எனக்குப் பிணியின் சிறை மீண்டும் என்னைப் பெருத்த வேதனைக்கு உள்ளாக்கிற்று.

நெஞ்சு வலி போதாதென்று கண் வலியும் எனக்குக் கடுந்துயரைக் கொடுத்தது. சென்னை மத்தியக் கண் மருத்துவமனை மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். பத்து நாட்களாவது நான் அலைச்சல் ஏதுமின்றி

பூர்ண ஒய்வு எடுத்திட வேண்டும் என்று வற்புறுத்திவிட்டனர். அந்த வாஞ்சை மிக்க வற்புறுத்தலை என்னால் புறக்கணித்திட முடியவில்லை. அதனால் அப்போது திட்டமிட்டிருந்தபடி, தஞ்சை, திருச்சி, சென்னை, புதுக்கோட்டை, திருக்கடையூர், திருமுல்லைவாயில் ஆகிய இடங்களில் ஏற்பாடாகியிருந்த கழகக் கூட்டங்களில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை.

கண்ணை வலி வந்து தீண்டியதைப் போலவே காதையும் தீண்டிற்று ஒரு தீச்செய்தி. ஆம்-தீப்பிடித்த செய்தி!

சென்னையிலே 21 - ஆவது வட்டத்திலும், 87 - ஆவது வட்டத்திலும் கொடூரமான தீ விபத்துக்கள் ஏற்பட்டுக் குலை நடுங்கச் செய்து விட்டன பல குடும்பங்களை. ஒரு முதியவர், நான்கு குழந்தைகள் - ஆக ஐந்து உயிர்கள் இரையாகிவிட்டன எரிதழலுக்கு. பல கால் நடைகள் கருகி மடிந்துவிட்டன. 130 குடிசைகள் சாம்பலாகி விட்டன.

செய்தியறிந்ததும், சகோதரர் அரங்கண்ணல், அப்போதைய மாநகராட்சி மேயர் சிட்டிபாபு, ஆகியோருடன் விபத்து நடந்த இடங்களுக்கு விரைந்து சென்றேன்.

கண்ணீரும் கம்பலையுமாகக் கதறித் துடித்திட்ட ஏழை மக்களைக் கண்டதுமே நெஞ்சிலே பற்றியெரிந்தது வேதனை நெருப்பு:

பாதிக்கப்பட்ட மக்கள் மாநகராட்சிப் பள்ளிக் கட்டடங்களில் தங்கிடவும், அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கிடவும் உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கழகத் தோழர்கள் நிவாரண வேலைகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டுச் செயலாற்றினர்.

குடிசைகளை நெருப்புக்குப் பலி கொடுத்துவிட்டுத் திண்டாடும் குடும்பங்களின் துயரினைத் துடைத்திடும் நோக்கில் தலைமைக் கழகத்தின் சார்பில் ஆயிரம் ரூபாய் நன்கொடையாகவும், அப்போது அளிக்கப்பட்டது. மீதி வசூல் முழுமும் நிறையத் தொகை நிவாரண நிதிக்குத் தரப்பட்டது. பின்னர் குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைத்திடும் எண்ணத்திற்கான கரு அப்போதுதான் முகிழ்த்தது எனக்கு.

115

பாராட்டுக் கோட்டை

பாலையங்கோட்டைச் சிறையிலிருந்து வெளி வந்த என்னைப் பாராட்டுக் கோட்டைமீது அமர்த்திக் களித்திடும் ஆர்வம் ததும்பிற்றுக் கழக நண்பர்களிடம்.

மாநாடுகளுக்கு நிகரான கூட்டங்களை மாநிலம் எங்கணும் ஆங்காங்கே ஏற்பாடு செய்தார்கள் அவர்கள்.

இயக்கத்தின் இலட்சிய கீதங்களை இசைத்திடவும்- எதிர் முகாம்களில் இருப்போரின் எதேச்சாதிகாரப் போக்கினை இடித்துரைக்கவும்- அந்தக் கூட்டங்களை ஒரு வாய்ப்பாகக் கருதியே அவற்றிலே கலந்து கொண்டேன், தோழர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு.

சென்னை. நுங்கம்பாக்கம், ஏரித் திடலில்தான் முதல் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அதிலே கலந்து கொண்ட அண்ணா அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்:

...' கரும்பைக் கத்தியால் வெட்டாமல் கடித்துச் சாப்பிடும்போது, சுவையுள்ள சாறு வரும்; அதோடு கரும்பு குத்துவதால் ஈறில் பட்டு இரத்தமும் வரும். இரத்தத்தைப் பார்த்ததும், 'ஐயோ, ரத்தம்!, என்று பயப்பட்டாலும், கரும்பின் சுவையுள்ள சாற்றைச் சுவைக்கும் போது அது தெரிவதில்லை. அதுபோல், தம்பி கருணாநிதியைச் சிறைச் சாலையில் அடைத்தபோது, கரும்பைத் தின்றபோது வந்த ரத்தத்தைக் கண்டு, 'ஆ! ரத்தம்!' என்று கூறியது போல, 'தம்பியை அடைத்து விட்டார்களே!' என்று எண்ணினேன். ஆனால் கரும்பின் சுவையை அனுபவித்தது போல், பாதுகாப்புச் சட்டத்தைத்தானே போட்டாய்; வேறு எந்தச் சட்டமும் பலிக்கவில்லை என்று கண்டு கொண்டாயா? சபாஷ்!' என்று ஆட்சியாளர்களைக் கேட்கும் மகிழ்ச்சி உணர்வுதான் வந்தது."

அண்ணாவின் இந்த உவமை நயம் கன்னல் சாறுகளே எனக்கு இனிப்பினை வழங்கிற்று.

தன்றியுரை ஆற்றிய நான்.

மறைந்த மாவீரர் பன்னீர் செல்வம் தனது தோளுக்கிட்ட மாலையைப் பெரியாரின் தாளுக்கிட்டார். இன்றும் என் கழுத்தில் விழுந்த மாலைகள் அனைத்தையும் என் அண்ணனின் காலுக்குப் போடப்பட்ட மாலைகள் என்றுதான் நான் கருதுகிறேன்''

— என்று கூறினேன்.

வேலூர் நகராட்சியும் எனக்குப் பாராட்டு வழங்கிச் சிறப்பித்தது.

நெல்லை மாநகர் தந்த வரவேற்போ எனக்கு எல்லையற்ற புல்லரிப்பையே தந்தது. எந்தப் பாளையங்கோட்டைச் சிறையிலே நான் பாதுகாப்புச் சட்டத்தால் சிறகொடிந்த பறவையாக முடக்கப்பட்டுக் கிடந்தேனோ அதே பாளையங்கோட்டை வீதிகளிலே ஆயிரக்கணக்கான பொதுமக்கள் புடைசூழ்ந்து நின்றிட பவனி வந்திட்டபோது இரண்டு மாதச் சிறை வாழ்வுக்கே இத்தனை அன்புப் பரிசா என்று என்னால் எண்ணாமல் இருந்திட முடியவில்லை.

பெங்களூர் நண்பர்களின் அன்பு வெள்ளமோ பொருள்களின் உருவத்திலேயும் பொங்கி வழிந்தது.

கர்நாடக மாநிலத் தோழர்களின் அன்புக் கட்டளைக்கேற்ப 1-6-65-இல் நான் பெங்களூர் போய்ச் சேர்ந்தேன்.

புகை வண்டி நிலையத்திலேயே திரளாக வந்திருந்து வரவேற்பளித்தனர் கொள்கை மறவர்கள்.

அன்று மாலை 5-30 மணியளவில் மைக்கோ தொழிற்சாலை ஊழியர்கள் பெங்களூர் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் எனக்குத் தேநீர் விருந்தளித்தனர்.

இரவு ஏழு மணி அளவில் சிவாஜி நகரில் கர்நாடகமாநிலத் தி. மு. க. அமைப்பாளர் நண்பர் திராவிடமணி எம். சி. தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு சோழன் எம். சி. முதலான தோழர்கள் பாராட்டு மழை பெய்து என்னைத் திணறிடச் செய்தார்கள்.

62 நாட்கள் பாளையங்கோட்டைச் சிறையிலே பக்தவத்சலனுர் திருவருளால் நான் பாதுகாப்புக் கைதியாக இருந்ததை எடுத்துக் காட்டிடும் வகையில் அந்தக் கூட்டத்தில் 62 பொருள்களைப் பரிசாக அளித்தார்கள் தங்கள் அன்பின் சின்னங்களாக.

அவற்றைப் பெற்றுக்கொண்ட நான் குறிப்பிட்டேன் :

...இந்தப் பரிசுகளைப் பார்க்கும்போது, 'மீண்டும் நீங்கள் சிறை செல்ல வேண்டும்; அதற்கு உபயோகமாக இந்தப் பொருள்களைக் கொடுத்திருக்கிறோம்'-என்பதற்கு அறிகுறியாகத்தான் இவைகளைத் தந்திருக்கின்றீர்களோ என எண்ணுகிறேன்.

''சிறைக்கு ஏற்ற - சிறையிலே அனுமதிக்கக்கூடிய பொருள்களான பெட்டி, படுக்கை, தண்ணீர் வைக்க கூஜா ஆகியவற்றைத்தான் எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள்.

''தி. மு. கழகத்தில் தலைவர்களும் தொண்டர்களும் 'மீண்டும், எப்போது சிறைக்குப் போகலாம்?' என்ற எண்ணத்திலேயே சிறையிலிருந்துவெளி வருகிறார்கள். மீண்டும் மீண்டும் அவர்கள் சிறைக் அனுப்பப்படுவார்கள்'- என்கிற நிலையில்தான் தி. மு. கழகத் தோழர்களின் வாழ்க்கையும் இருக்கிறது.

கர்நாடக மாநிலத்து அன்பு உள்ளங்களின் அருமையான பரிசுப் பொருள்கள், தனிமைச் சிறையிலே உண்டான மனப்புண்ணுக்குத் தடவிய மருந்தாகவே தோன்றின; விருந்தாகவே மகிழ்வூட்டின.

கூடத்திலே எரிந்திட வேண்டிய குத்துவிளக்கைக் கூடையைப் போட்டு மூடிடலாமா?

மேடையிலே இன்னிசை எழுப்பிடும் வீணையை மீட்டாமலே பரண்மேல் போட்டுத் தூசுகள் மூடும்படிச் செய்திடலாமா?

சிந்தனைக் கதிர் பரப்பும் இலட்சிய மறவர்களைச் சிறையினுள் தள்ளி வைப்பதும் அத்தகைய கொடுமைதான்!

அதுவும், தாய்மொழியைக் காத்திட, தாயகத்தைப் பேணிட தங்கள் இன்னுயிரையும் தந்திடத் தயங்காத தி. மு. கழகக் கொள்கைத் தங்கங்கள் காரணம் கூறப்படாமலே காராக்கிரகத்தில் அடைக்கப் பட்டது கொடுமையின் கொடுமுடிக்கே சென்றுவிட்ட ஜனநாயகக் கொலையே ஆகும்.

எனவே, கழகத் தோழர்களுக்கு எவ்வாறேனும் விடுதலை வாங்கித் தந்திட முடியாதா என ஏங்கித் தவித்திட்ட நான், முதலமைச்சரையே அப்போது தேரில் சந்தித்திட நினைத்தேன். அதற்காக 1965-ஜூன் 9-இல் அவர்தம் இல்லத்திற்கு ஏகினேன்.

காலை சுமார் பத்து மணி இருக்கும். என்னைக் கண்டதும் புன்னகை சிந்தி வரவேற்றார் திரு பக்தவத்சலனார். அரை மணிநேரம் அவருடன் உரையாடினேன். அப்போது—

''பாதுகாப்புச் சட்டப்படிக் காவலில் வைக்கப்பட்டுள்ள கழகத் தோழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். அவர்களில் டாக்டர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய தொண்டு பொதுமக்களுக்கு இன்றியமையாததாகும்... கழகத் தோழர்கள் சமூக விரோதிகள் அல்லர்; எனவே அவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்''

—என்றெல்லாம் எடுத்துரைத்தேன். முதல்வர் பக்தவத்சலனாரோ, ''இதுபற்றிக் கவனிக்கிறேன்'' என்று சுருக்கமாகச் சொன்னார். ஆனால் அவரது புன்னகை மட்டும் பெரிதாக இருந்தது.

சென்னை 47-ஆவது வட்டம் �ழட்டேரியில் உள்ள சிங்காரவேலர் மன்றத்தினர் பத்தாவது ஆண்டு விழாவையும் எனக்குப் பாராட்டு விழாவையும் 1965-ஜூனி 24-இல் ஒருசேரக் கொண்டாடினர்.

தந்தை பெரியார் அவர்கள் தன்மான இயக்கத்தைத் தோற்றுவித்த காலத்தில்-பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பிட முற்பட்ட நேரத்தில்-படிப்பறிவாளர்களாகத் திகழ்ந்தவர்களே பெரியாரின் பாதையைக் கண்டு பயந்தனர். அதில் நடைபோடுவதை நினைத்தாலே நடுங்கினர்.

அவ்வாறு கல்வி கற்றவர்களே மூளைக்கு வேலை கொடுக்க மறந்து முடமாகிக் கிடந்திட்ட வேளையில்—

முகிலைக் கிழித்தெழுந்த முழு மதியாக - நம்பிக்கை இருளை விரட்டிடும் ஒளிப் பிழம்பாகத் தந்தை பெரியார் அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் மா. சிங்காரவேலர் அவர்களே!

உறுப்புகள் உடைந்துவிட்ட சமுதாய யந்திரத்தைச் செப்பனிட்டுச் சீராக்க வந்த ஒப்பற்ற சிந்தனைச் சிற்பி அவர்.

பகுத்தறிவுக் கருத்துக்கள் நிரம்பிய நூல்களை அந்தக் காலத்திலேயே அவர் இயற்றினர்.

அந்த நூல்களை மாணவப் பருவத்தில் படிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது அந்த நூல்களால் உற்சாகம் பெற்றேன். உண்மை ஒளி கிடைக்கப் பெற்றேன்.

சுயமரியாதை இயக்கத் துவக்க காலத்தில் சிங்காரவேலரின் சீர்திருத்தக் கருத்துக்கள் பெரியாரின் பாசறைக்குப் படைக் கருவிகளாகவே பயன்பட்டன.

அவருடைய நினைவாக இயங்கும் மன்றத்தின் ஆண்டு விழாவிலே கலந்துகொண்ட நான், அவர்தம் அருமை பெருமைகளை எடுத்துரைப்பதில் பெருமிதமே அடைந்தேன்.

116

அந்தோ! போளூரார்!

பாளைச் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின் நான் கலந்துகொண்ட பாராட்டுக் கூட்டங்களில் கோவைக் கூட்டம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கழகக் கண்மணிகள் பலர் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றியதன் விளைவாக அங்கே சிதம்பரனார் பூங்காத் திடலே திரைகடலாய்க் காட்சியளித்தது; இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் எனைக் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

அந்தக் கூட்டத்தில், தேர்தல் நிதிபற்றிய முக்கியமான வேண்டு கோள் ஒன்றினை நான் விடுத்தேன்.

அடுத்த, 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதியான அண்ணாவின் பிறந்த நாளன்று பத்து லட்சம் ரூபாயைத் தேர்தல் நிதியாக அவரிடம் தந்திடும் பொருட்டு அந்த ஆண்டு (1965) செப்டம்பர் முதல் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய இல்லங்களில் உண்டியல் வைத்து தினந்தோறும் தங்களால் இயன்ற காசுகளை அதில் போட்டு அந்த உண்டியல்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

என்னைப் பொறுத்தமட்டில் அதே 1965 செப்டம்பர் ஒன்றாந்தேதி முதல் என்னைக் கூட்டங்களுக்கு அழைப்பவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் குறைந்தது ஐந்நூறு ரூபாயாவது அளித்தால்தான் நான் அவற்றில் கலந்துகொள்வேன் என்பதையும் குறிப்பிட்டேன்.

என் வேண்டுகோள் வீணாகி விடவில்லை. துளித் துளியாகத் தேனைத் திரட்டிடும் தும்பிகளாகவே ஆர்வத்துடன் கடமையாற்றினர் கழகத் தோழர்கள். நானும் கண்டிப்புடனேயே செயல்பட்டேன், கூட்டங்களுக்குப் பணம் வாங்குவதில். இதனால் நிறையக் குவிந்த வண்ணமிருந்தது தேர்தல் நிதி.

அதிர்ச்சி அளித்திடும் சம்பவம் ஒன்று 1965 ஆகஸ்டு இறுதியில் நிகழ்ந்தேறிவிட்டது. கழகத்தின் நாடி நரம்புகளில் ஒருவராய் ஓடியாடி உழைத்திட்ட செயல்வீரர்- தீரமறவர்- போளூர் சுப்பிரமணியம் அவர்கள் கார் விபத்தில் சிக்குண்டு படுகாய முற்றுக் கண்களை மூடி விட்டார் திடீரென்று.

அவரும் ப உ சண்முகம் முதலான தோழர்களும் காரில் சென்றிருக்கின்றனர் சென்னையை விட்டு. எதிரே வந்த பயணியர் பஸ் ஒன்று மோதியதால் காட்டுப்பாக்கம் அருகே அந்த விபத்து நிகழ்ந்து விட்டது. உடனே படுகாயமுற்ற தோழர்கள் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். அங்கே தான் தம்முடைய குடும்பத்தையும் கழகத்தையும் துயர வெள்ளத்திலே தள்ளி விட்டுவிட்டு அந்தச் சுய மரியாதைச் சுடர் அணைந்து விட்டது!

நீதிக் கட்சிக் காலந்தொட்டே பொதுத் தொண்டுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் சுப்பிரமணியம். திராவிடர் கழகமும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகமும் வட ஆற்காடு மாவட்டத்தில் வேர்விட-விழுதுவிட-தலையாய பொறுப்புக்களையெல்லாம் ஏற்றுத் தளராமல் பணியாற்றிய அவர் பலமுறை சிறைக்குச் சென்று தியாகத் தழும்புகளையும் அவர் ஏற்றிட்ட தீரச்செம்மல்.

கொள்கைப் பிரச்சாரத்திற்காக அண்ணா தீட்டிய 'சந்திரோதயம்' நாடகத்திலும் போளூரார் நடித்திருக்கிறார்.

அவரைப் பற்றி வேடிக்கையான நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வருகிறது. அண்ணா எழுதிய சமுதாயக் கொடுமைகளைச் சித்திரிக்கும் நாடகமாகிய 'சந்திரோதயத்'தில் துரைராஜ் என்னும் பாத்திரத்தை அண்ணா ஏற்பார். துரைராஜ் ஒரு கட்டத்தில் ஜமீன்தாராக நடிக்கும் போது - அண்ணாவுக்கு வேலைக்காரனாக வேடம் புனைந்து நடித்தவர் போளூரார்.

ஒருமுறை நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் பொழுது காட்சி முடிந்து திரைக்குப் பின்னால் சென்றவர் அடுத்த காட்சியைப் பற்றி நினைவில்லாமலே தம்முடைய வேடத்தைக் கலைக்க முற்பட்டு விட்டார். மறு காட்சி தொடங்கியதும் 'ஜமீன்தார்' அண்ணா தம் பணியாளை அழைத்தார். போளூராரும் அவசரம் அவசரமாக ஓடினார் மேடைக்கு. அவரைப் பார்த்ததுமே அண்ணா அதிர்ச்சி அடைந்து விட்டார், ஏனெனில் போளூரார் முகத்தில் மீசை இல்லை! முந்தின காட்சிகளில் இருந்த ஒட்டு மீசை திடீரென்று அழிந்து விட்டதை ரசிகர்கள் கண்டு பிடித்து விட்டால் என்ன ஆவது? அது நகைப்பொலிக்கு இடம் கொடுத்து விடாதா? கவலையளித்திட்ட அந்த நிலைமையை உடனே கரிப்புக்குரிய காட்சியாகத் தாமே மாற்றி விட்டார் அண்ணா.

தம்முடைய இதழ்க்கடையிலே முறுவல் இழைந்தோடப் போளூராரையே இமைக்காமல் நோக்கினார் அவர்.

"ஏண்டா மண்டு, எங்கே மீசையைக் காணோம்? அதுக்குள்ளேயே ஷேவ் பண்ணிக் கொண்டாயா?"—அண்ணாவின் இந்த திடீர்

உரையாடலைக் கேட்டதும் 'குபீர்' என்று சிரிப்பு வெடித்தது ரசிகர்களிடமிருந்து! அந்த ஆரவார அலைகளிலேயே மீசையைப் பற்றிய போஸ்ரரின் மறதி மறைந்து விட்டது.

கழகத்தைக் கட்டி காத்திட—அதனுடைய லட்சியக் கதிர்கள் பாமர மக்களிடமும் எழுச்சியினை ஊட்டிட-கலைத்துறையில் ஈடுபாடு கொண்டு எண்ணற்ற பணிகளை ஆற்றியவர் போஸ்ரர் சுப்பிரமணியம்.

அவர் கார் விபத்தில் மடிந்திட்ட செய்தி காதுக்கு எட்டியதும் என் கண்கள் குளமாயின.

மறைந்த மாவீரர்களை மறந்திடாமல் அவர்தம் குடும்பத்தினருக்கு ஏதேனும் இயன்றதைச் செய்து விட வேண்டும் என்பதை ஒரு கடமையாகவே கருதிப் பணியாற்றி வந்திருக்கிறது கழகம்.

அந்த முறையில் போஸ்ரர் சுப்பிரமணியம் அவர்களின் துணைவியார் பின்னர் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

போஸ்ரரார் குடும்பத்திற்கு மட்டும் தான் என்று இல்லை. இன்னும் எத்தனையோ தியாகத் திருவிளக்குகளின் குடும்பங்களுக்கும் தன்னாலியன்றதைச் செய்திருக்கிறது கழகம்; செய்து கொண்டும் வருகிறது.

எடுத்துக்காட்டாக,

முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

வழக்கறிஞர் இரை. இளம்வழுதி,

கோவை கோபால்,

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர்.

நடிகர். ஒ. ஏ. கே. தேவர்.

—இவர்தம் குடும்பங்களின் துயர் துடைத்திட-பெயர் நிலைத்திட-ஆவன புரிந்திருப்பதையும் கூறலாம்.

இதிலே நான் மகிழத்தக்கது என்னவெனில், நானி கழகத் தலைவனாகப் பொறுப்பில் உள்ள காலத்தில் இந்தக் கொள்கை மறவர்களுடைய குடும்பங்களுக்கு உதவிடும் வாய்ப்புக் கிட்டியதே என்பதுதான்.

117

பாகிஸ்தான் உதயம் எப்படி?

1965 செப்டம்பர் திங்கள் தொடங்கிய பொழுதே இந்தியா மீது படையெடுப்பை நடத்திற்று பாகிஸ்தான்.

காஷ்மீரில் உள்ள சாம்ப் பகுதியில் தான் முதன் முதலாகத் தன் ஊடுருவலை-உக்கிரமான தாக்குதலைத் தொடங்கிற்று அது. அமெரிக்க டாங்கிகள் போன்ற பலமான படைக்கருவிகளுடன் திடீரென்று எல்லைக் கோட்டைத் தாண்டி அதன் துருப்புகள் இந்தியாவுக்குள் நுழைந்திடக் கூடுமென்று எவருமே எதிர் பார்த்திடவில்லை! எனவே, அதிர்ச்சியினை அளித்திட்டது அதனுடைய ஆக்கிரமிப்புச் செயல்; இந்த நாட்டுக்கு மட்டுமல்ல், அமைதியை விழைந்திடும் எல்லா நாடு களுக்குமே!

காஷ்மீரம் என்னும் கனி, தன் கைக்குக் கிட்டிடவில்லையே என்கிற ஏக்கம்- ஏமாற்றம்- என்றைக்குமே பாகிஸ்தான் உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருக்கும் போலும்! அதனால்தான் சந்தர்ப்பம் சரியாக இருப்ப தாகத் தான் கருதுகின்ற பொழுதெல்லாம் அது தாக்குதலைத் தொடங்கி விடுகிறது இந்தியா மீது.

இந்தப் பரந்த துணைக் கண்டத்தில் இப்படிப் பகைமைக் கனல் அவ்வப்போது பற்றிக் கொண்டு எரிவது மிக மிக வருந்து தற்குரியதே.

இத்தகைய நீடித்த புகைச்சலுக்கு- போர் மூட்டத்திற்குப் பொறுப் பாளிகள் யார்? அன்று வெள்ளையரை வெளியேற்றிட விடுதலை இயக்கத் திலே தீவிரப் பங்கு கொண்டு காங்கிரசுக்காரராகவே கடுமையாக உழைத்திட்ட முகமதலி ஜின்னா அவர்களைத் தனி நாடு கேட்கும் அளவுக்கு விரக்தியின் விளிம்புக்கே விரட்டியடித்த 'விவேகிகள்' தான்!

பாகிஸ்தான் தோற்றமே ஒரு விந்தையான அரசியல் சம்பவமே!

எடுத்த எடுப்பிலேயே அப்படி ஒரு தனிநாடு வேண்டும் என்று ஜின்னாஅவர்கள் கோரிக்கை எழுப்பிடவில்லை. இஸ்லாமியர்கள் பெரும் பான்மையாக உள்ள மாநிலங்களிலும் அவர்கள் புறக்கணிப்புக்கு இலக்காகி விடக் கூடாதே என்பது தான் அவர் தம் கவலையாக இருந்தது; அதுவே குறிக்கோளாக மாறியது. அதற்காகக் கூட்டாட்சித் தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தந்த மாநிலமும் சுயாட்சி

அமைப்பாக (Autonomous body) இயங்கிட வேண்டும் என்பதையே அவர் வற்புறுத்தி வந்தார்.

1929 மார்ச்சிலே அவர் உருவாக்கிய ஒரு தீர்மானத்தில் காணப் படும் அடியிற்கண்ட இரண்டு பிரிவுகள் அவர்தம் உள்ளக்கிடக்கையினை நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன;

(1) மாநிலங்களுக்கு எஞ்சிய அதிகாரங்கள் உள்ள கூட்டாட்சி முறையில் தான் வருங்கால அரசிலமைப்பு வடிவம் அமைந்திட வேண்டும்.

(2) ஒரே சீரான அளவிலான மாநில சுயாட்சி எல்லா மாநிலங் களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் ஜின்னு அவர்களின் இந்தக் கருத்து கசப்பையே அளித்தது காங்கிரசுக் தலைவர்களுக்கு. எனவே ஏற்றுக் கொள்ள மறுத்தனர் அவருடைய கோரிக்கையை.

முஸ்லீம் மக்களின் முன்னேற்றத்தையே தம்முடைய மூச்சாக- அவர்களுக்கென்று தனி நாடு கேட்பதையே முக்கிய தமது இலட்சிய மாக-அவர் உழைத்திட முற்பட்டதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் கடைப்பிடித்திட்ட சில கொள்கைகளும் காரணம் என்று தெரிகிறது. தம் உள்ளத்தை முள்ளென உறுத்திய அந்தக் கொள்கைகளைப் பற்றி 1937-இல் நடைபெற்ற லக்னே— முஸ்லிம்லீக் மாநாட்டிலும் இவ்வாறு தலைமையுரையில் குறிப்பிட்டிருக்கிறார்:

"இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் மேலும் மேலும் புறக் கணிக்கப்படுவதற்குத் தற்போதைய காங்கிரஸ் தலைமையே- குறிப் பாகக் கடந்த பத்தாண்டுக் காலமாகப்- பொறுப்புடையதாகும். இந்தி தான் இந்தியா முழுமைக்கும் தேசிய மொழியாக இருக்க வேண்டும்; 'வந்தேமாதரம்' பாடல் தான் எல்லார் மீதும் திணிக்கப் பட வேண்டும். காங்கிரஸ் கொடியைத் தான் எல்லாரும் மதிக்க வேண்டும்; அதற்குக் கீழ்ப் படிய வேண்டும். (இவையே காங்கிரசார் கொள்கைகள்!)"

மாநில சுயாட்சித் தத்துவம் மறுக்கப்பட்டது-

இந்தி- தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது— முதலானவையே ஜின்னுவுக்கு ஆத்திர மூட்டின இந்திய ஒருமைப்பாட்டுக்கும் அந்த நாளில் வெடி வைத்தன - என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

நேரு அவர்களும் மத்திய அரசு 'ஆண்டை'யாகவும், மாநில அரசு 'அடிமை'யாகவும் அமைந்திடாமல் - இரு அரசுகளும் ஏரிலே

கூட்டப்பட்ட இரட்டைக் காளையாக இந்தியாவை இயக்கிச் செல்ல வேண்டுமானால் அதற்கு மாநிலங்களுக்கு சுயாட்சி (Autonomy) தருவது இன்றியமையாததே என்பதனை இதயபூர்வமாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி 1945-ஆம் ஆண்டு இந்திய மக்கள் முன் வைத்த தேர்தல் பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

''இந்தியக் கூட்டாட்சி என்பது, அதன் பல்வேறு பகுதிகள் விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். பகுதிகளுக்கு (அதாவது மாநிலங்களுக்கு) அதிகபட்ச சுதந்திரம் அளிப்பதற்காக எல்லாருக்கும் பொதுவான, முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்தபட்ச அதிகாரத்தைக் கூட்டாட்சி (மத்திய) அரசுக்கும் தேவைப்படும் பகுதிகள் (அதாவது மாநிலங்கள்) விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரம் கொண்ட பொதுப்பட்டியலும் இருக்கலாம்."

இந்த அடிப்படையிலேயே நேரு அவர்கள் 1947 - ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபையில் முன்மொழிந்த தீர்மானத்திலும் மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்படும் அதிகாரங்களைத் தவிர, மற்ற எல்லா அதிகாரங்களும் சுயாட்சி உள்ள மாநிலங்களுக்கே உண்டு என்பது வலியுறுத்தப்பட்டது. அத்தீர்மானத்தின் பகுதியாவது:

''இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப் பகுதிகளும் வேறு வெளியில் உள்ள பகுதிகளில் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும். அரசியல் நிர்ணயசபை தீர்மானிக்கிறபடியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்பொழுதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் அப்பகுதிக்கே அளிக்கப்படும்."

இவ்வாறு இந்தத் தீர்மானம் கூறியது. பண்டித நேரு அவர்களும் காங்கிரஸ் கமிட்டியும் ஏற்றுக் கொண்ட கருத்துக்கும் மாறுக திடீரென மாநில சுயாட்சிக் கோரிக்கை தூக்கியெறியப்பட்டதன் வாயிலாக ஜின்னாவின் பிரிவினை முழக்கம் பலப்பட்டு அதன் காரணமாகப் பாகிஸ்தான் தோன்றியது.

பாகிஸ்தான் உதயம் பற்றி அபுல்கலாம் ஆசாத் அவர்கள் நூலிலிருந்து நமக்குக் கிடைத்திடும் வரலாற்றுப் படக் காட்சி-படிப்பினை – இதுதான்.

தாம் ஒரு இஸ்லாமியத் தலைவராகச் செல்வாக்குப் பெற்றிருந்தும்கூட இந்தியா துண்டாடப்பட்ட பிறகு பாகிஸ்தானுக்கே ஏகிடாமல் நேருவின் நெருங்கிய நண்பராகவே தொடர்ந்துவாழ்ந்து இந்திய அமைச்சராகவும் ஏற்றம்பெற்றிருந்தவரே அபுல் கலாம் ஆசாத். அவருக்குப் பாகிஸ்தான் பிரிந்து சென்றது அறவே பிடிக்கவில்லைதான். எனினும் அப்படியொரு தனிநாடு முகிழ்த்தமைக்கு மாநில சுயாட்சிக் கொள்கை மறுக்கப்பட்டதே காரணம் என்பதையும் மறைத்திடவில்லை அந்த மாமேதை.

இதிலே வேடிக்கை என்னவென்றால் எந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் பாகிஸ்தான் உருவெடுத்ததோ, அதே கோரிக்கையை அதே பாகிஸ்தானியத் தலைவர்கள் நிராகரித்த தால்தான் பின்னர் 'பங்களா தேஷ்' என்னும் புதிய நாடும் உதயமாயிற்று!

இவ்வாறு, 'அன்றையக் காங்கிரஸ் தலைவர்கள் சற்றுத்தொலை நோக்கோடு நடந்திருந்தால் பிரிவினை உணர்வே தலையெடுத்திருக்காதே - பாகிஸ்தான் பிரிந்து போயிருக்காதே-அதன் விளைவாகப் பகைமை நெருப்பும் அவ்வப்பொழுது பற்றிக் கொண்டு எரியாதே!' - என்றெல்லாம் என்னைப் போன்றவர்கள் எண்ணினாலும் 1965— செப்டம்பரில் பாகிஸ்தான் இந்தியா மீது படையெடுத்ததை நானே மற்றக் கழகத் தோழர்களோ கண்டிக்கத் தவறிடவில்லை.

சில நாட்களுக்கு முன்னர்தான் நம்மைச் சிறைக் கோட்டத்திலே தள்ளிக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் சித்திரவதை செய்தார்கள் என்கிற சிந்தனைகளுக்கெல்லாம் இடம் தந்திடாமல் - மத்திய - மாநில அரசுகள் எடுத்திட்ட போர் நடவடிக்கைகளுக்கெல்லாம் முழு ஒத்துழைப்பு நல்கிட முனைந்து பாடுபட்டோம் நாங்கள்.

எதிரிப் படைகளை முறியடித்து முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தியப் படை வீரர்களுக்கும், பின்புலமாக இந்தியா முழுமையும் ஒரே அணியில் - ஒருமித்த குரலில் - திரண்டு நிற்கிறது என்பதனை எடுத்துக்காட்டிடும் வகையிலும், பொது மக்களுக்கு எழுச்சியூட்டும் விதத்திலும் கழகத்தின் சார்பில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. போர் நிதியும் கொடுக்கப்பட்டது.

22-9-65 - இரவு சென்னை வானொலி நிலையத்திலிருந்து 'நெருக்கடி நிலையில் மக்கள் கடமை' என்பது குறித்து நானும் உரையாற்றினேன், இந்தியா வென்றிட எல்லாத் தரப்பினரின் ஆதரவையும் வேண்டி.

அந்தப் போரில் இறுதி வெற்றி இந்தியாவுக்கே கிட்டிற்று; பாகிஸ்தான் படுதோல்வி கண்டது. பலத்த சேதங்களுக்கும் அது

இலக்காயிற்று. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட டாங்கிகள் போன்ற சக்தி வாய்ந்த படைக் கருவிகளையெல்லாம் பயன்படுத்தியும்கூட-சென்சீனத்தின் மறைமுகமான ஆதரவு பெரும் அளவில் இருந்தும் கூட—பாகிஸ்தான் ஈடு கொடுக்க முடியவில்லை இந்தியப் படைகளிடம். நம்முடைய வீரமறவர்கள் புதிய புறநானூறு படைத்துக் காட்டினர், புவியே வியந்திடும் அளவுக்கு.

இந்தியா அவ்வாறு வெற்றிக் கனியினைக் கொய்ததில் அப் போதைய தலைமை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் தீரம் மிகுந்த தலைமைக்கும் - விரைந்து எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும் - பெரும் பங்கு உண்டு என்பதையும் குறிப்பிடவே வேண்டும்.

இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு எத்துணைதான் ஒத்துழைப்பு நல்கியும் கூட, இந்தித் திணிப்பினை எதிர்ப்போர் மீது பாதுகாப்புச் சட்டத்தினைப் பாய விடுவதற்கு மட்டும் பக்தவத்சலனார் அரசு மறந்திடவே இல்லை.

அதனால்தான், 1965 அக்டோபர் திங்களில் திரு சி.பா. ஆதித்தனார் கைது செய்யப்பட்டார், பாதுகாப்புச் சட்டப்படி. குறைந்த கல்வி அறிவு கொண்டவர்களும், நாட்டு நடப்பினை அறிந்திடும் வகையில் நாளிதழ் களை நடத்தி நிறைந்த எண்ணிக்கையில் விற்பனையாகுமாறு செய்து, தமிழ்ப் பத்திரிகை உலகிலேயே பெரும் புரட்சி செய்த பெருமைக் குரியவர் ஆதித்தனார். அவர் கைதான செய்தி அறிந்ததும் இந்தி ஏகாதிபத்தியத்தின் கோர வெறியினால் அவரைப் போன்ற முதியவர் களும் வதைபட வேண்டியுள்ளதே என்று நான் வருந்தினேன்.

சுயமரியாதை இயக்கத்தின் தூண்களில் ஒருவராக அயராது பணியாற்றிக்கொண்டிருந்த 'குத்தூசி' குருசாமி அவர்கள் 1965 அக்டோபர் திங்களில் திடீரென்று இயற்கை எய்திவிட்டார். மாரடைப்பு வடிவில்தான் மரணம் அவரைத் தழுவிக் கொண்டது.

தஞ்சை மாவட்டம் பேராவூரணிக்கருகிலுள்ள குருவிக்கரம்பை என்னும் சிற்றூரில் ஒரு 'வைதிகக்' குடும்பத்திலே பிறந்திட்ட போதிலும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே எப்படி அவர் பத்தாம் பசலிக் கொள்கைக்கு 'வைரி' ஆனார் - பகுத்தறிவு வாதங்கள் மின்னிடும் 'வைரம்' ஆனார் என்பதே வியப்புக்குரியதாகும்.

அதற்குக் காரணம், பெரியாரின் கொள்கைகளுக்குள்ள பேராற்றலே!

வாய் வீரம் பேசிடுவோர் அனைவரும் செயல் வீரராய் வாழ்ந்திடுவ தில்லை. நெருக்கடி நேரங்கள் வந்திடும்பொழுது பலரும் வழுக்கிக் கொண்டு ஓடிவிடுவர். அத்தகையோர் அல்லர் 'குத்தூசி' குருசாமி.

பட்டதாரியான அவர், இன்னொரு பட்டதாரி ஆசிரியையான குஞ்சிதம் அம்மையாரைப் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே கலப்பு மணமே புரிந்துகொண்டார். அந்தப் 'புரட்சித் திருமணம்' சாதிச் சழக்குகளுக்குச் - சனுதனச் சடங்கு முறைகளுக்கு அடிக்கப்பட்ட சாவுமணியாகவே அன்று பெருமிதத்தோடு பேசப்பட்டது. பிற்காலத்தில் சீர்திருத்தத் திருமணங்கள் - கலப்பு மணங்கள் பெரு மளவு நிகழ்வதற்கு அது முன்னோடியாக விளங்கிற்று என்ருலும் மிகையில்லை.

திருமணத்திலே புரட்சி புரிந்திட்ட 'குத்தூசியார்' - தம்முடைய குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதிலும் புரட்சி செய்யத் தவறிட வில்லை. சமதர்மக் கொள்கைகளின் முதல் தாயகமாய்த் தலையெடுத்த ரஷ்ய நாட்டைப்போலவே இந்த நாடும் தழைத்திட வேண்டும் என்கிற வேட்கையை வெளிப்படுத்துகின்றவராய்த் தம் பெண் குழந்தைக்கு 'ரஷ்யா' என்ற பெயரிட்டார். பழமைக்கு மண்டியிட மறுத்துப் புதுமைச் சிந்தனைகளைப் பரப்பிடப் புறப்பட்ட புத்தரிடம் தமக்குள்ள ஈடுபாட்டினை எடுத்துக் காட்டும் வகையில் தம்முடைய ஆண் பிள்ளைக்குக் 'கவுதமன்' என்றும் பெயர் சூட்டினர்.

நகைச்சுவையை ஒரு கைவந்த கலையாகவே அவர் எழுத்திலே காட்டினர். வெறும் பொழுதுபோக்குக்காகவே வேறு சிலர் நகைச் சுவையைக் கையாண்ட வேளையில், சிந்தனையைக் கிளறிவிடும் சீரிய நோக்கோடு கசப்பு மருந்துக்கு மேலே தடவப்படும் இனிப்புச் சுவை யாகவே அதனை அவர் பயன்படுத்தினர்.

'விடுதலை,' ஏட்டின் ஆசிரியராக விளங்கிய அவர் 'பல சரக்கு மூட்டை' என்னும் தலைப்பில் 'குத்தூசி' என்னும் புனை பெயரில் இந்தச் சமுதாயத்தின் அழுகல்களை - அலங்கோலங்களைக் குத்திக்குத்திக் காட்டிய எழுத்தோவியங்கள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

'விடுதலை'க்கு மட்டுமின்றி முன்னதாகப்'புதுமை முரசு', 'ரிவோல்ட்' (ஆங்கில ஏடு) ஆகியவற்றுக்கும், இறுதிக் காலத்தில் 'குத்தூசி' இதழுக்கும் ஆசிரியராக அமர்ந்து அரும்பணியாற்றியவர் குருசாமி.

பெரியார் பாசறையிலே பெரும் படைக்கலனாய் நிமிர்ந்து நின்று, தன்மானக் கருத்துக்களைத் தவழ விட்டுப் பெருமை தேடிக் கொண்ட அந்தச் சுயமரியாதைச் சுடர் திடீரென்று அணைந்துவிட்டமை. எனக்குச் சொல்லொணுத துயரினையே தந்தது. அவர் தம் இல்லம் சென்று என் இரங்கலைத் தெரிவித்துக் கொண்டேன்.

வெளியுலகைப் பொறுத்தவரை திகைப்பூட்டும் செய்திகள் பலவற்றை இந்தோனேஷியா அப்போது தந்துகொண்டிருந்தது.

அங்கே 'ராட்சகர்' என்று போற்றப்பட்ட டாக்டர் சுகர்ணோவுக்கு எதிராக ராணுவமே கிளர்ந்தெழுந்து விட்டது.

தம்முடைய 'போகர்' அரண்மனைக் காவற்படைத் தலைவர் உதாங் மூலம் அந்த ராணுவப் புரட்சியை முளையிலேயே கிள்ளி எறிந்திடத் தான் முயன்று பார்த்தார் சுகர்ணோ. ஆனால் முடியவில்லை.

அந்நியக் காலனி ஆதிக்கத்தினை அறுத்தெறிந்து இந்தோனேஷியாவுக்கு விடுதலையை வாங்கிக் கொடுத்த வித்தகர்தான் டாக்டர் சுகர்ணோ. அதனால்தான் அந்நாட்டு மக்கள் அவரைத் தங்கள் வழிகாட்டியாக-என், தெய்வமாகவே-வழிபட்டார்கள்; வாழ்த்தினார்கள்.

விடுதலையை வாங்கி கொடுத்து விட்டதாலேயே எந்தக் கெடுதலையும் எத்துணைப் பெரிய மனிதராக-கட்சியாக- இருந்தாலும் இறுமாப்போடு செய்திடத் துணியலாமா?

சுகர்ணோ இத்தகைய துணிச்சலைப் பெற்றார்; மக்களின் கருத்தைத் தூசென மதித்தார். அங்குள்ள பொதுவுடைமைக் கட்சியினர் போட்ட சுருக்கிலே மாட்டிக்கொண்டார். குறிப்பாக ஏ. என். அய்டிட் என்னும் கம்யூனிஸ்டு தலைவர் ஆட்டு வித்தபடியெலலாம் அவர் ஆடத் தொடங்கினர். நாளடைவில் ஜனநாயகமே அவருக்கு எட்டிக்காயாய்க் கசந்தது; 'செஞ்சீனமே' கலங்கரை விளக்கமாகக் காட்சியளித்தது.

அதனால்தான், இந்தோனேஷியா விடுதலைக்குப் போராடிய காலத்திலே உலக அரங்கிலே அதற்கொரு செல்வாக்கினை உருவாக்கிடும் பொருட்டு, இந்தியத் தலைவர் ஜவாகர்லால் நேரு ஆசிய மாநாடு ஒன்றினைக் கூட்டி ஆதரவு அளித்திட்டதையும், நேருவோடு தாம் கொண்டிருந்த நெருக்கமான தோழமையையும் கூட அறவே மறந்து விட்டுச் செஞ்சீனத்தைத் திருப்திப்படுத்திட வேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காகப் பாகிஸ்தான் நம் நாட்டின்மீது படையெடுத்த வேளையில் இந்தியாவையே பகைத்துக்கொள்ளும் அளவுக்கு தம் பாதையை மாற்றிக் கொண்டுவிட்டார் சுகர்ணோ.

இந்தியாவைப் போன்ற, இந்தோனேஷிய நாட்டினரும் பெரும் பாலும் மக்களாட்சி நெறிமுறைக்கே மதிப்பளித்துப் பழகியவர்கள். எனவே, தங்களுடைய தலைவர் அங்குள்ள பொதுவுடைமைக் கட்சியினரோடு புதிய மோகம் கொண்டுவிட்டதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை; பொறுத்துக்கொள்ளவும் முடியவில்லை. அவர்களின் கருத்தினைப் பிரதிபலித்திடும் வகையில்தான் கடுமையாகக் கிளர்ந்தெழுந்து விட்டது ராணுவப் புரட்சி. சுகர்ணோவின் அதிகாரக் குவிப்புகளையும் அது கட்டுப்படுத்த முற்பட்டது.

ஒரு நாட்டின் விடுதலைக்குப் போராடிய வீர மறவர் என்கிற அளவில் டாக்டர் சுகர்ணோவிடம் எனக்கு எப்போதுமே பெருமதிப்பு உண்டு.

ஆனால், தம்முடைய தலைவர் இப்படிக் கம்யூனிஸ்டுகளின் கைப்பாவை ஆகிவிட்டாரே என்று இந்தோனேஷிய மக்கள் இதயங் குமுறிடும் அளவுக்கு இவர் திசை மாறியிருக்கக் கூடாது என்றும் நான் அப்போது எண்ணியது உண்டு.

இதனால் கம்யூனிசமே கறை படிந்ததாக நான் கருதுவதாகப் பொருள் இல்லை.

'ஏழையின் சிரிப்பில்

இறைவனைக் காண்போம்!'

—என்கிற எங்களுடைய இனிய முழக்கமே பொதுவுடைமைத் தத்துவத்துக்கு நாங்கள் அளித்துள்ள புதிய விளக்கந்தான்.

அத்துடன் தம்முடைய தத்துவம் தழைத்திடக் கார்ல்மார்க்ஸ் வகுத்திட்ட வழி முறைகளிலே எனக்கு ஒரு சில கருத்து மாறுபாடு இருந்தபோதிலும், ஏழைகளே வாழவைக்க எண்ணிய அவர்தம் இலட்சியக் கருவிடமும், அதனை உரமிட்டு வளர்த்தே முதலாளித்துவ நாடுகளுக்கு அறைகூவல் விடுத்திடும் வகையில் சோவியத் நாட்டினை முன்னேற்றி விட்டாரே என்று ஸ்டாலினிடமும்-எனக்கு அளவற்ற ஈடுபாடு உண்டு. அதன் காரணமாகவே என்னுடைய பிள்ளைகளில் ஒருவனுக்கு 'ஸ்டாலின்' என்றே பெயர் சூட்டியும் உள்ளேன்.

ஒரு தத்துவத்தை மதிப்பது என்பது வேறு; அந்தத் தத்துவத்தின் செயல் முறையிலிருந்து—செயல்படுத்துகிறவர்களிடமிருந்து-மாறுபாடு கொள்வது என்பது வேறு. அந்தந்த மண் வளத்திற்கு ஏற்பவே பொதுவுடைமைப் பூங்கா மலர்ந்திட வேண்டும்.

இந்தப் பின்னணியில்தான், டாக்டர் சுகர்ணோ வீழ்ச்சிப் பாதாளம் நோக்கி விரைந்து சரிந்திட்ட வேளையில், 'அங்குள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்களிடம் இன்னும் சற்று நிதானமாகவே அவர் நேசக் கரம் நீட்டியிருக்கலாமே!'-என்று நான் நினைத்தேன்.

118

பிச்சைக்காரர் ஒழிப்பு

நான் எழுதிய 'பூமாலை,என்னும் கதை திரைப் படமாக எடுக்கப் பெற்றது. 'மேகலா' பட நிறுவனத்தின் சார்பில் உருவான அதற்கு நானே திரைக்கதை அமைத்து, உரையாடலும் தீட்டியிருந்தேன்.

1965-அக்டோபர் இறுதி வாரத்தில் தமிழகம் எங்கும் 'பூமாலை' திரையிடப்பட்டது.

அதனுடைய துவக்க விழாக்காட்சி கோல்டன் படப்பிடிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

அறிஞர் அண்ணா அவர்கள் தம் குடும்பத்தினருடன் வருகை புரிந்து சிறப்பித்தார். மற்றக் கழக முன்னணியினரும் வந்திருந்தனர்.

தமிழகத்தில் எத்தனையோ இயக்கங்கள்-கட்சிகள்-தோன்றிய போதிலும் பேச்சுக் கலைக்குப் பேரெழிலைப்-பெரும் வரவேற்பினைப் பெற்றுத் தந்திட்ட பெருமை தி. மு. கழகத்திற்கே உண்டு. கழகத்தைச் சார்ந்தவர் பேச வருகிறார் என்றால் படலென்னத் திரண்டு விடுவர் மக்கள். கல்லூரிகளில், பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ மணிகளுக்கும் சுவையான சொற்பொழிவினைக் கேட்கும் ஆர்வம் ததும்பி வழியும். தங்கள் இலக்கிய மன்றங்களுக்கு எங்களை அழைத்திட வேண்டும் என வற்புறுத்துவர்.

ஆனால், அந்த நாட்களில் கல்லூரி முதல்வர்களுக்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் எங்களை அழைப்பதென்றாலே எங்கே 'கட்சி அரசியல்' பேசிவிடுவோமோ என்கிற கலக்கம்.

'கட்சி அரசியலுக்கு' அப்பாற்பட்டும் கொடுக்கப்பட்ட தலைப்பினை ஒட்டியே இலக்கியச் சொற்பொழிவினை நிகழ்த்திடவும் கழகத்தவரால் இயலும் என்பதனையும் எத்தனையோ தடவைகள் மெய்ப்பித்திருக்கிறோம்.

அவ்வாறு இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றிடும் வாய்ப்புகள் 1965-நவம்பர் திங்களில் எனக்கு அடுத்தடுத்துக் கிட்டின.

சென்னை-கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் பாரதியார் விழாவில் கலந்து கொண்டு அவர்தம் சிறப்பியல்புகளை-சீர்திருத்த எண்ணங்களை-இந்தியையும்-சம்ஸ்கிருதத்தையும் வடநாடுவரை சென்று அவர்

பயின்றிருந்தபோதிலும் செந்தமிழே பிறமொழிகளை விடத் தேனென இனிப்பது எனக் கூறிய அவருடைய தெளிவினைப்-பல்வேறு சான்றுக ளுடன் பாராட்டிப் பேசினேன்.

சென்னை விக்டோரியா மாணவர் விடுதி தமிழ் மன்றத்தினர் நடத்திய பாரதிதாசன் விழாவிலும் பங்கு கொண்டு உரையாற்றினேன். அப்போது—

"...பாரதிதாசன் தாழம்பூவைப் போன்றவர். தூரத்திலிருந்து மணத்தை அனுபவிக்கலாம்; பக்கத்தில் சென்று தடவிப்பார்த்தால் முள்தான் கையில் ஏறும். மணம் என்று சொன்னது அவரது கவிதை களை முள் என்று சொன்னது தனிப்பட்ட பாரதிதாசனின் குணங்களை. (எனினும்) அவர் கவிதைகளில் உவமை உண்டு; உண்மை உண்டு; அத்தனையும் 'உண்டு' (அருந்தி) ஊமை பேசுவான்; கூனன் நிமிர்வான்; குருடன் விழி பெறுவான்!"

—என்று குறிப்பிட்டேன்.

அடுத்து சட்டக் கல்லூரி தமிழ் இலக்கியப் பேரவையில், 'குறளோ வியம்' என்னும் தலைப்பில் உரையாற்றினேன். அப்போது—

"சொல் வணக்கம் ஒன்னார்கள் கொள்ளற்க வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்"

—என்னும் குறட்பாவை விளக்கி, வில்லின் வணக்கமும் விரோதி யின் வணக்கமும் ஒன்றே என்பதை எடுத்துக் காட்டினேன்.

அவ்வாறு தொடர்ந்தாற் போல் ஒரே திங்களில் நான் நிகழ்த்திய இலக்கியச் சொற்பொழிவுகளில், திருமதி முத்துலெட்சுமி ரெட்டியார் அவர்கள் சென்னையில் தோற்றுவித்து நடத்திய 'அவ்வையகம்' விழா ஒன்றில் கலந்து கொண்டு ஆற்றிய சொற் பொழிவு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அங்கே நான் சென்ற போது, அந்த நிறுவனத்தின் அமைப்பாள ராக மூதாட்டி முத்துலெட்சுமி ரெட்டி முதலில் என்னை 'வந்தனம்' என்று வரவேற்றார். பிறகு, "ஓ! இது 'வணக்கம்'-என்று கூறும் காலமல்லவா? இவ்விதம் தமிழ் வளர்வது தேவைதான்" என்றும் கூறினார்.

அங்கு குழந்தைகளைச் சந்தித்திட்ட போதுகூட முதலில் அவர்கள் 'நமஸ்தே'! என்றார்கள். அவர்களை விடக் சற்று வளர்ந்த சிறுமிகள் பின்னர் 'வணக்கம்'! என்றார்கள்.

இந்த சொற்களை நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்ட நான், என் சொற்பொழிவுகளிலும் அவற்றைக் குறிப்பிட்டேன்.

'வணக்கம்' என்பது வளர்ந்துள்ள நிலையில் இப்போது இருக்கிறது. 'நமஸ்தே' குழந்தைகள் நிலையில் அதாவது அறிவு வளர வேண்டியதைக் காட்டும் நிலையில் இருக்கிறது!'' என்று கூறினேன்.

அதே விழாவில் அவ்வையாரின் ஒரு பாட்டைப் பற்றியும் இவ்வாறு குறிப்பிட்டேன்.

''...இட்டார் பெரியார்; இடாதார் இழிகுலத்தார் என்று கூறி உலகில் இரண்டு சாதி இருப்பதாக அவ்வையார் வகுத்துக் காட்டியுள்ளார். இது பற்றிப் புதுமைப்பித்தன் கூறும் போது, இந்த இரண்டு சாதியோடு மூன்றாவது சாதியும் இருக்கிறது. பிச்சை தருபவர் ஒரு சாதி; பிச்சை தர மறுப்பவர்கள் ஒரு சாதி; இன்னொரு சாதி கூட உண்டு; அது பிச்சை எடுக்கும் சாதி' என்று அழகாகச் சொன்னார்.''

தமிழகத்தில் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான புதுமைப்பித்தன் வேடிக்கையாக அல்ல; வேதனையோடு குறிப்பிட்ட அந்த 'மூன்றாவது சாதி' பற்றி நான் அந்த அவ்வையக விழாவிலே எடுத்துரைத்தது அந்த மூன்றாவது பிச்சைக்கார சாதி வளர்ச்சிக்கு மூடுவிழா நடத்த வேண்டும் என்கிற என்னுடைய எண்ணத்தையும் எதிரொலிக்க வேண்டும் என்பதற்காகத்தான்

அந்த நோக்கோடுதான் பின்னால் என் பிறந்த நாள் ஒன்றிலேயே பிச்சைக்காரர் மறுவாழ்வுத்' திட்டத்தினைத் தொடங்கி அதற்கு நிதி, திரட்டுவதிலும் ஈடுபட்டேன்.

'குடந்தை' என்றதுமே கொள்கைக் குன்றும் கே. கே. நீலமேகம் அவர்களுடைய நினைவே நம் நெஞ்சத்திலே மின்னும்.

நீதிக் கட்சிக் காலந்தொட்டுப் பொது வாழ்விலே ஈடுபட்டுப் பகுத்தறிவுக் கதிர்களைப் பரப்பிடுவதில், முன்னணியில் நின்றிட்ட அந்த முதியவர் 17-12-1965 அன்று விடியற்காலையில் இயற்கை எய்தி விட்டார்.

நீண்ட காலமாகத் திராவிடர் கழக நிர்வாகக் குழுவின் துணைத் தலைவராக இருந்து பணியாற்றினர். வயதிலே முதியவராய் இருந்த போதிலும், இளந் தொண்டர்களை மதித்து அவர்களுக்கு எழுச்சியூட்டி அவர்கள் உணர்ச்சிப் பிழம்புகளாய் உருவெடுத்திட உறுதுணையாய் ஊன்று கோலாய்ச் செயலாற்றினர். தஞ்சை மாவட்டத்திலே கழக வளர்ச்சிக்குத் தளவரிசை போட்ட பெருமை அவரையே சாரும்.

திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தனியாகப் பிரிந்திட்ட வேளையில் அண்ணாவின் அடிச்சுவட்டிலேயே தம்முடைய அரசியல் பயணத்தையும் அவர் தொடர்ந்தார்.

புதிய இயக்கத்தில் பெரும்பாலும் எல்லாருமே அப்போது இளைஞர்கள்; அண்ணுவை விட வயதில் குறைந்தவர்களாகவே இருந்தார்கள். ஆனால் குடந்தைப் பெரியார் கே. கே. நீலமேகமும், சேலத்துப் பெரியார் ஜி.பி. சோமசுந்தரம் அவர்களுமே வயதிலே மூத்தவர்கள்.

அவ்வாறு, அண்ணு தமக்கு இளையவராக இருந்த போதிலும் அவர்களிருவருமே அண்ணுவை 'அண்ணு' என்றே அழைத்தனர். அவருடைய தலைமையை மதித்தனர்.

தி.மு.கழகத்தின் துவக்கக் கூட்டம் சென்னை ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற போது மழை வந்து விட்டது. கூட்டம் கலையத் தொடங்கியது. அப்போது கே. கே. நீலமேகம் கண்ணீர் மழையே பொழிந்து கேட்போரின் நெஞ்சம் நெக்குருகிடப் பேசினர். அவருடைய உருக்கமான உரையினைக் கேட்டுக் கொண்டே சென்றவர்கள் உள்ளம் மாறினர். மழையில் நனைந்தாலும் பரவாயில்லை என்று மறுபடியும் வந்தமர்ந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

மூதறிஞர் ராஜாஜிஅவர்கள் மத்தியஅமைச்சரவையில் துறை ஏதும் ஒதுக்கப்படாத அமைச்சராக (Minister without portfolio) இருந்த சமயம் தஞ்சை மாவட்டத்துக்கு வந்தார். அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுகின்ற அறப் போருக்கு திட்டமிட்ட பொழுது நானும் கே. கே நீலமேகமும் நெருங்கி விவாதித்திட வேண்டிய சந்தர்ப்பங்கள் பல நேர்ந்தன.

தி.மு. கழகத்தின் தொடக்க காலத்தில் அதன் பொருளாளராகவும் கே.கே. என். இருந்திருக்கிறார்.

அந்தச் சுயமரியாதைத் தூண் சாய்ந்தது என்று அறிந்ததும் நான் அதிர்ச்சியடைந்தேன். அன்றே குடந்தைக்கு விரைந்தேன்.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் அந்நாடு இந்தியாவிடம் காட்டி வந்துள்ள பங்காளிக் காய்ச்சல்-பகைமைப் புகைச்சல் - படை யெடுப்பு ஊடுருவல் ஆகியவை பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்த இரண்டு ஆசிய நாடுகளுமே இப்படி வெறுப்பு மலையிலே அமர்ந்து கொண்டு எப்போதுமே எரிச்சலை உமிழ்ந்த வண்ணம் இருப்பது, அவற்றின் எதிர்காலமே ஒளி வாழ்வைப்-பொருளாதார முன்னேற்றத்தைப் - பொசுக்கி விடுமே என்ற கவலை அடைந்திட்ட நாடுகளில் சோவியத் ரஷ்யாவும் ஒன்று.

அதனுடைய தலைநகராகிய மாஸ்கோ ஐரோப்பா கண்டத்திலே அமைந்திட நேர்ந்திட்ட போதிலும், அதன் பெரும்பாலான பகுதிகள்

ஆசியா கண்டத்திலேயே பரந்துகிடக்கின்றன. எனவே சோவியத் தலைவர்களிடம் 'ஆசிய உணர்வு'ம் மேலோங்கி நிற்பதிலே ஆச்சரியம் எதுவும் இல்லை தான்.

அந்த உணர்வின் உந்தலினாலேயே, ஆசிய நாடுகளான இந்தியா-பாகிஸ்தான் இரண்டையும் இணைத்து வைத்திடும் பெரும்பணியில் தன்னையும் இணைத்துக் கொண்டது போலும் சோவியத் ரஷ்யா! அதற்காக அது தேர்ந்தெடுத்த இடமும் ஆசியப் பகுதியில் உள்ள தாஷ்கண்ட் நகரமே!

சோவியத் ஒன்றியத்தில் வற்றாத வளங்கொழிக்கும் மாநிலம் உஸ்பெகிஸ்தான். அதன் தலைநகரந்தான் தாஷ்கண்ட். பசுஞ்சோலைகள், பழத் தோட்டங்கள் புடைசூழ்ந்திட அமைதி வழிந்திடும் நகரினை இந்தியா-பாகிஸ்தான் அமைதி மாநாட்டுக்குத் தேர்ந்தெடுத்ததும் ஒரு வகையில் பொருத்தமானதே!

1966 ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில் நடைபெற்ற அந்தத் தாஷ்கண்ட் மாநாட்டுக்கு இந்தியாவின் சார்பில் தலைமையமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி சென்றார்; பாகிஸ்தான் சார்பில் அதன் அதிபர் அயூப்கான் போனார்.

இவ்விருவருக்கும் நடுநாயகமாக- இணைப்புப் பாலமாக- அமர்ந்து, கருத்துப் பரிமாற்றங்கள் கசப்பின்றிக் கனிவோடு நடந்திட அயராது பாடுபட்டார் சோவியத் ரஷ்யாவின் தலைமை அமைச்சரான கோசிஜின்.

ஒரு வாரத்துக்கு மேல் பேச்சு வார்த்தைகள் நீடித்தன; இறுதியில் உடன்பாடொன்றும் கையெழுத்தாயிற்று.

இந்தியத் துணைக் கண்டப் பகுதியில் அமைதிப் பூங்காற்று அழகுடன் உலா வந்திட அந்த ஒப்பந்தம் ஓரளவேனும் உதவிடப் போகின்றது என்று எல்லாருமே ஆறுதல் அடைந்திட வேண்டிய நேரத்தில இந்தியாவை மட்டுமின்றி உலகையே இடியெனத் தாக்கிற்று அந்த இறப்புச் செய்தி!

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தத் தாஷ்கண்ட் உடன் பாட்டிலே கையெழுத்திட்டு விட்டுத் தம் விடுதிக்குத் திரும்பிய சில மணி நேரத்திற் கெல்லாம் நள்ளிரவில் மாரடைப்பால் காலமாகிவிட்டார் மாமனிதர் லால்பகதூர் சாஸ்திரி.

எளிமைக்கும், அதே சமயம் இதயத் துணிவுக்கும் பெயர் பெற்ற லால்பகதூர், திடீர் என்று இறந்தார் என அறிந்ததும்- திடுக்கிடாத நெஞ்சங்கள் இல்லை; கண்ணீர் வடித்திடாத கண்களும் இல்லை!

அவருடைய உடல் தாஷ்கண்டிலிருந்து இந்தியாவுக்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்டது. அவ்வாறு அங்கே விமானத்தில் ஏற்று வதற்கு முன்னர், பீரங்கி வண்டியிலிருந்து சாஸ்திரியின் சவப் பெட்டி யினைத் தங்கள் தோளிலே தூக்கிச் சுமந்தவர்கள் சோவியத் தலைமை யமைச்சர் கோசிஜின், இந்திய அமைச்சர்களான ஒய். பி. சவான், சுவரண் சிங்- ஆகியோர் மட்டுமல்லர்; இந்தியாவை எதிரியாகவே கருதிப் பழக்கப்பட்டுவிட்ட அயூப்கானும் தம் கண் கலங்கிட இந்தியத் தலைமையமைச்சரின் சவப் பெட்டியைத் தம் கனமான தோளிலே சுமந்து வந்தார்.

இந்தச் செய்தியினை அறிந்தபோது 'இறுகிவிட்ட இரும்பு நெஞ்சங் களையும் இளக வைத்திடும் ஆற்றல்- அங்கே ஆணவம் என்னும் இருள கற்றி அன்பை ஒளிரவிடும் வல்லமை-இறப்பு ஒன்றுக்குத்தான் உண்டு போலும்'- என்றே எண்ணிக் கொண்டேன் நான்.

சாஸ்திரி அவர்களின் இழப்பு குறித்து அடியிற்கண்டவாறு ஓர் இரங்கற்செய்தியையும் அப்போது நான் வெளியிட்டேன் :

''சற்று ஆறுதல் அளிக்கத் தக்க சமாதானச் செய்தியை உலகிற்கு வழங்கிய ஒளி நகராம் தாஷ்கண்ட், அடுத்த சில மணி நேரங்களில் இப்படி ஓர் அதிர்ச்சியையும் தந்து உலகை இருளில் ஆழ்த்துமென்று எதிர்பார்க்கவே இல்லை.

''நேர்மை, உறுதி, துணிவு, தன்னல மறுப்பு, ஓயாத உழைப்பு- இவைகளால் புகழ் மகுடம் சூட்டிக்கொண்ட லால்பகதூர் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

''களத்தில் கடமையாற்றும் ஒரு போர் வீரனின் உயிர் போலவே அவர் உயிரும் பிரிந்துவிட்டது.

''மறக்க முடியாத ஒரு வரலாற்றுச் சம்பவத்தோடு தம்முடைய மரணத்தையும் பிணைத்துக் கொண்ட அந்த மறக்க முடியாத தலைவ ருக்கு இறுதி வணக்கத்தைக் கண் கலங்கத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் இயற்கை எய்தியதும் ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாயிற்று, இந்திய அரசியலில். நேருவின் இடத்தினை நிரப்பிட எந்தத் தலைவர் வந்திடப் போகிறாரோ என்கிற அச்சம் எல்லாருடைய நெஞ்சையும் நெருடியது. அந்த நேரத்தில் மொரார்ஜி தேசாயின் பலத்த எதிர்ப்பையும் முறியடித்து தலைமைய மைச்சர் ஆனார் லால்பகதூர் சாஸ்திரி.

நெஞ்சுறுதியால் மட்டுமின்றி நேர்மையாலும்- எதிர்க்கட்சிகளின் பலக் குறைவையே தமக்குப் பலமாக்கிக்கொள்ள முயலாத பண்பாட்

டாலும- நாட்டிலே தெருக்கடி நிலைகள் தோன்றிடும்பொழுது அவர்களுடைய பக்குவமான அறிவுரைகளையும் கலந்துரையாடிப் பெற்றிடும் ஜனநாயக முதிர்ச்சியாலும் தம்மை ஒரு தகுதி மிகுந்த பிரதமராகக் குறுகிய காலத்திலேயே உருவாக்கிக் கொண்டவர் லால்பகதூர் சாஸ்திரி.

அவருடைய திடீர் மரணமோ முன்னேவிடத் திகைப்பூட்டும் பதற்ற நிலையையே தோற்றுவித்தது அரசியல் அரங்கில். இப்போதும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவதிலிருந்து பின் வாங்கிடவில்லை மொரார்ஜி தேசாய்; முன்னேவிடக் கட்சியளவில் அவர்தம் செல்வாக்குக் கூடியிருப்பதாகவே கூறப்பட்டது. எனினும் திருமதி இந்திரா காந்தியே வெற்றி பெற்றார்.

பிரதமர் பதவிக்காக நடைபெற்ற அந்த ஆண்டுத் தேர்தல்களிலும் மொரார்ஜி தேசாய் தோல்வியைத் தழுவிடும் சூழ்நிலைகளை உண்டாக்கியவர் காமராசரே என்னும் கருத்தும் அப்போது நிலவியது!

இந்திய ஜனநாயகம் ஏற்றுக் கொண்டுள்ள 'கட்சி-அரசியல்' மரபினையொட்டியே காங்கிரஸ்கட்சியைச் சார்ந்திட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்திராகாந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது உண்மை; எனினும், மற்ற மாநிலங்களில் உள்ள அவரது கட்சிக்காரர்களே அன்றைக்கு வெளிப்படுத்திய ஒரு குமுறல் வரலாற்றையும் நான் இங்கே மறைத்திட விரும்பவில்லை.

'உத்தரப் பிரதேச மாநிலமே பிரதமர் பதவியைக் குத்தகை எடுத்துக் கொள்வதா?'

-என்பதே அந்தக் குமுறல்.

119

பிராவ்தாவுக்கு என் பேட்டி

'பிராவ்தா' என்றதுமே அது உலகப் புகழ் பெற்ற ஏடுகளில் ஒன்று என்பதனை நாளேடுகள் படிப்பதில் நாட்டமுடையோரி அனைவரும் அறிந்திடுவர்.

சோவியத் ரஷ்ய அரசாங்கத்தின் அதிகார பூர்வமான ஏடு மட்டுமல்ல, ஆதிகம் விற்பனையாகின்றன ஏடும் ஆகும் 'பிராவ்தா'.

அதனுடைய தலைமை ஆசிரியர் குழுவினைச் சார்ந்தவர்களான தோழர் ஒலக்-பி-ஸ்கால்கின், தோழர் அய்யுரி கோல்ட்பெர் ஆகிய இருவரும் 16-2-1966 அன்று மாலை சென்னை, கோபாலபுரத்தில் உள்ள என் இல்லத்தில் என்னைப் பேட்டி காண வந்தனர். ஒரு மணி நேரத்திற்கு மேல் என்னிடம் உரையாடிக் கொண்டிருந்த அவர்கள் சில சுவையான வினுக்களைக் கொடுத்தனர். நானும் அவர்களுக்குத் தகுந்த முறையில் விடையளித்தேன்.

அந்த வினுக்களும் விடைகளும் என்னைப் பொறுத்தவரையில் எப்போதுமே நினைவுகூரத் தக்கவையே. அன்றிருந்த நாட்டின் நிலவரங்கள் - எதிர்க்கட்சி நிலையிலே கழகம் மேற்கொண்ட இலட்சியப் பயணங்கள் - அவற்றின் காரணமாகக் கழகத்தவர் அனுபவித்த 'காராக்கிருகக்' கொடுமைகள் - முதலான பல்வேறு நிலைமைகளையும் நான் அந்த சோவியத் பத்திரிகை ஆசிரியர்களிடம் ஓரளவு எடுத்துக் காட்டிட முயன்றிட்டேன்.

அந்த வினு-விடைகளில் ஒரு சில வருமாறு:

கேள்வி: தி. மு. கழகம் இந்த மாநிலத்தில் காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சியாக இருப்பதாக அறிகிறோம். கழக வளர்ச்சிக்கு முக்கிய அடிப்படைக் காரணங்கள் என்ன?

நான்: 18-ஆண்டுக் காலமாகக் காங்கிரசுக் கட்சியே ஆட்சி நடத்திய போதிலும் மக்களின் அடிப்படையான இன்றியமையாத தேவைகள் நிறைவு செய்யப்படாமல் உள்ளன. மக்களின் இன்னல்கள் குறைவதற்குப் பதில் பெருகியே உள்ளன.

சமதர்மத்தை இலட்சியமாகக் கொண்ட போதிலும் அது செயலளவில் அமுல் நடத்தப்படாமல் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

பெருகிக் கொண்டே போகின்றன. பங்குகள் உப்படப் பெருந் தொழில்களை-ஆலைகளைத் தேசிய மயமாக்குவதற்குப் பதிலாகப் பெரும் லாபம் தரக்கூடிய அந்தத் தொழில்களைத் தனியார் துறைக்கே விட்டிருப்பதால் பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வு குறைவதற்குப் பதிலாகப் பெருகியுள்ளது.

மொழிக் கொள்கையில், இந்தி பேசாத பகுதி மக்களுக்குக்-குறிப்பாகத் தமிழ் நாட்டுக்குப் பெரும் அநீதி இழைக்கப் பட்டுள்ளது. இதைச் சாதாரண மக்கள் முதல் மூதறிஞர்கள் வரை எடுத்துச் சொல்லியும் இந்த அநீதியைப் போக்க (காங்கிரஸ்) ஆட்சி மறுக்கிறது.

(1) சொல்லளவில் உள்ள சமதர்மத் திட்டத்தைச் செயல் படுத்தாதது.

(2) பொருளாதாரம், வர்த்தகம், தொழில் அமைப்பு ஆகிய துறைகளில் தமிழ்நாட்டைப் புறக்கணித்து மத்திய ஆட்சி ஓரவஞ்சனையாக நடப்பது.

(3) மொழிக் கொள்கை.

-ஆகிய காரணங்களினால் காங்கிரஸ் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். தி. மு. கழகத்திடம் மக்கள் ஆதரவு காட்டுவதற்கு இவைகளும் காரணங்கள் ஆகும்.

கேள்வி: சோஷலிசக் கொள்கையில் தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் (பெரியவர் மணலி அவர்கள் புதிய கட்சி தோற்றுவிப்பதற்கு முன்னரே உள்ள வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியைக் கருத்தில் கொண்டே இது கேட்கப்பட்டது)-உங்கள் தி. மு. கழகத்துக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன?

நான்: தமிழ் நாட்டில் நாங்கள் தான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்று முன்பொரு முறை எங்கள் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநில மாநாட்டில் கூறியிருக்கிறார். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எங்களைப் பொறுத்த வரை மக்களின் அடிப்படை உரிமைகளில் அரசினரின் தலையீடு குறைவாக இருக்கும். இதுதான் கம்யூனிஸ்டுக் கொள்கைக்கும் எங்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமை.

கேள்வி: தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் குறைகளை எப்படிப் போக்குவீர்கள்?

நான்: நிச்சயமாக ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமதர்ம ஆட்சி மலரச் செய்வோம். சோஷலிசத்தைச் செயல் முறையில் காட்டுவோம்

மத்திய அரசில் குவிந்திருக்கின்ற அதிகாரங்களைப் பரவலாக்கி, மாநில ஆட்சிக்குரிய உரிமைகளைப் பெற்று, தொழில் வளர்ச்சித் துறையில் காட்டப்படும் பாரபட்சப் போக்கினை நீக்கப் பாடுபடுவோம்.

மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் 'தேசிய மொழி'கள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகள் ஆக வேண்டும் என்பது தி. மு. கழகத்தின் கொள்கை. வளமற்ற-பண்படாத-இந்தி மொழி ஒன்றே மத்திய ஆட்சி மொழி என்பதைத் தி. மு. கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும், மக்களும் எதிர்க்கின்றனர். இன்று வெறும் கிளர்ச்சியாக-மாநில மக்கள் போராட்ட மாகவுள்ள இந்தி எதிர்ப்புப் போராட்டம், தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் மாநில அரசுக்கும்-மத்திய அரசுக்குமிடையே நடைபெறும் போராட்டமாக- 'ஆட்சி மட்ட அளவு'ப் போராட்டமாக - இருக்கும்.

கேள்வி: நாட்டை ஒன்றுபடுத்த இந்திமொழி தேவை என்று கருதப்படுகிறதா?

நான்: அப்படிக் கருதினால் அது தவறு. இந்தி மொழி மூலம் தான் நாட்டை ஒன்றுபடுத்த முடியும் என்று சொல்வது உண்மையான வாதம் அல்ல! விடுதலைப் போராட்டத்திற்கு மொழிப் பிரச்சினை குறுக்கே நிற்க வில்லை. இந்தி மொழி மூலம் சுதந்திர போராட்டம் நடைபெறவில்லை, மாறாக ஆங்கிலமே அதற்குப் பயன்பட்டது.

கேள்வி: திராவிட முன்னேற்றக் கழகத்தின் இறுதி இலட்சியம் என்ன?

நான்: சமுதாயத் துறையில் சமத்துவம் - பகுத்தறிவு; பொருளாதாரத் துறையில் சமதர்மம்; அரசியலில் ஜனநாயகம்.

கேள்வி: உங்களுடைய இந்த இறுதி இலட்சியத்தைப் பாராளுமன்ற ஜனநாயக முறை மூலமே அடையத்தான் விரும்புகிறீர்களா? அல்லது வேறு வழி முறைகளைக் கையாளுவீர்களா?

நான்: மக்களுடைய வாக்குகளைப் பெறும் பாராளுமன்ற ஜனநாயக முறையையே பெரிதும் விரும்புகிறோம் - கடைப்பிடிக்கிறோம்



என்றாலும் அதையே முழுக்கவும் நம்பியிராமல் இடையிடையே மக்கள் குரலை அரசு அறியச் செய்ய, கிளர்ச்சிகளும் போராட்டங்களும் அவசியம் என்று கருதி அவற்றிலும் ஈடுபடுகிறோம்.

கேள்வி: குறிப்பாக அப்படி நடைபெற்ற போராட்டங்கள்?

நான்: இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் விலைவாசி உயர்வை எதிர்த்துப் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுடன் சிறை சென்றிருக்கிறோம்.

மொழிக் கிளர்ச்சியில் பலத்த அடக்கு முறைக்கு ஆளாகியிருக்கிறோம்.

இந்திதி திணிப்பை எதிர்த்து அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு அத்தியாயத்தைப் பொது இடங்களில் கொளுத்தி ஆண்டுக்கணக்கில் கழகத்தினர் சிறைச்சாலை ஏகியிருக்கின்றனர்.

கேள்வி: தி. மு. கழகத்தவராகிய நீங்கள் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லித் தனி நாடு கேட்டீர்களா?

நான்: திராவிட நாடு கேட்டது உண்மை; அது இப்போது கைவிடப்பட்டுவிட்டது.

கேள்வி: இந்திய — சோவியத் நல்லுறவில் உங்களுக்கு நாட்டம் உண்டா?

நான்: உறவு கொள்வதை யார்தான் வெறுப்பார்கள்? என் மகன் ஒருவனுக்குக்கூட 'ஸ்டாலின்' என்று தான் பெயர்.

அந்தப் பேட்டியின் போது 1966-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்த நிலவரப்படி, கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை-கழகக் கிளைகளின் எண்ணிகை கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்கள்-ஆகியவை பற்றிய தகவல்களையும் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர் 'பிராவ்தா' ஏட்டினர்.

சென்னையில் கூடிய கழகப் பொதுக் குழு எடுத்த முடிவிற்கிணங்க 1966 பிப்ரவரி 20 முதல் 27 வரை 'கழகக் கொடி வாரம்' கொண்டாடப் பட்டது கோலாகலமாக.

தேர்தல் நிதிக்குப் பணத்தைத் திரட்டவும் அதன் மூலம் தி. மு. கழகத்திடம் எண்ணற்ற ஏழை மக்களுக்குள்ள ஈடுபாட்டைக் காட்டிடவும் வளர்த்திடவுமே அவ்வாறு கொடி வாரம் கொண்டாட ஏற்பாடு செய்யப் பட்டது.

தேர்தல் சின்னமாம் உதயசூரியனும் அறிஞர் அண்ணாவின் உருவமும் பதிக்கப்பட்ட நான்கணா, ஒரு ரூபாய் விலையுள்ள கொடி வில்லைகள் ஆயிரக்கணக்கில் தயாரிக்கப்பட்டன. அவற்றின் விற்பனையைத் துவக்கிட-அதன் மூலம் மக்களுக்கு அரசியல் விழிப்பு உணர்ச்சியை ஊட்டிட - கழக முன்னணித் தோழர்கள் தமிழகத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் சென்றனர்.

அந்தக் கொடி வாரத்தின் போது நானும் நெல்லை மதுரை, கோவை, பெருந்துறை, இடைப்பாடி முதலான பல இடங்களில் கொடி விற்பனையில் ஈடுபட்டேன்.

120

அன்றைய தண்ணீர்த் தட்டுப்பாடு

தண்ணீர்ப் பஞ்சம் தமிழ்நாடெங்கும் தலை விரித்தாடிக் கொண்டிருந்த நேரம் அது. தெருவோரங்களில் தீய்கின்ற வெயிலில்-குடி நீர்க் குழாய்களை நோக்கிப் படையெடுத்த வண்ணம் இருக்கும் குடங்களின் அணிவகுப்புகள். சொட்டுத் தண்ணீர் கூடச் சொட்டிடாது, குழாய்களிலிருந்து! அதனால் எரிச்சல் உற்றிடும் ஏழைகள் அன்று ஆண்டவர்களைத் திட்டித் தீர்த்த வண்ணமே திரும்பிடுவர் தம் இல்லங்களுக்கு.

1966-மார்ச் முதல் வாரத்தில் சட்ட மன்றத்திலே தாக்கல் செய்யப் பட்டிருந்த வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவாதத்திலே கலந்து கொண்ட நான் தண்ணீர்ப் பஞ்சத்தால் மக்கள் தவித்துப் புழுங்கிடும் நிலையினை எடுத்துரைத்தேன் விரிவாக;அந்த அவல நிலையினை அகற்றிட அரசாங்கம் என்ன நடவடிக்கைதான் எடுத்திருக்கிறது என்று அழுத்த மாகவே கேள்விக் கணைகளைத் தொடுத்தேன்.

''.....18 ஆண்டுகளாக (காங்கிரசார்) ஆட்சியில் உணவுக்குப் பஞ்சம்! விலைவாசி விஷம்போல் ஏறுகிறது! இதையெல்லாம் தாங்கிக் கொண்டலும் இந்த 'தர்மவான்கள்' ஆட்சியில், தாகத்திற்குத் தண்ணீராவது கிடைத்ததா என்றால் அதற்கும் பஞ்சம்.

''சென்னை நகருக்கு 200 மைல் தொலைவில் உள்ள காவிரியிலிருந்து குடிநீரை, தி. மு. கழகப் பொறுப்பில் உள்ள மாநகராட்சி மன்றம் கொண்டு வரவில்லை என்று (காங்கிரசார்) கூட்டம் போட்டுக் கேட்கிறார்களே—நான் பொறுப்புள்ள இடத்திலிருந்து பொறுப்பானவர்களை (அமைச்சர்களை)க் கேட்கிறேன்: 'ஏன் இதுவரை சென்னை நகருக்குக் குடி தண்ணீர் கொண்டு வரவில்லை?'

''சென்னை நகரில்தான் இப்படியென்றால் காவிரியும் கொள்ளிடமும் வலம் வரும் திருச்சியில் குடிநீர்ப் பிரச்சினையை ஏன் தீர்க்கவில்லை? காங்கிரஸ் நகராட்சியில் உள்ள தஞ்சையிலும் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவில்லையே?

''கோவை சிறுவாணித் திட்டம் நமது எல்லையிலிருந்து, இரண்டு பர்லாங் தொலைவில்தான் உள்ளது. அந்தத் திட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்தத்-தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அரசாங்கம் தவறி விட்டது. அதனால் இன்று கோவை மக்கள் வண்டிகளில் வரும் தண்ணீரை நகராட்சி உறுப்பினர்கள் வழங்கியுள்ள ரேஷன் கார்டு மூலம் பெற வேண்டிய நிலையுள்ளது.

-இவ்வாறு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் என்கிற முறையிலே நான் அன்றைக்குத் தொடுத்திட்ட கேள்விகளைப் பின்னர் பொதுப் பணித்துறை அமைச்சராக-முதலமைச்சராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட நிலையிலும் நான் மறந்திடவில்லை.

குடிநீர்ச் சிக்கலுக்கு எப்படியாவது விடிவு காண மாட்டோமா எனிகிற தாகத்தோடுதான் அந்தத் தாகம் தீர்க்கின்ற பணியிலே என்னை நானே வேகமாக ஈடுபடுத்திக் கொண்டேன்.

அந்த முறையில்தான் 1969-இல் நான் முதலமைச்சர் பொறுப் பேற்ற உடனே சென்னை மாநகரம் கொடுமையான தண்ணீர்ப் பஞ்சத் தால் தவித்திட்ட பொழுது ஒரே வாரத்திற்குள் பத்தாயிரத்துக்கு மேற் பட்ட பம்புகள், துளைக்கிணறுகள் மூலை முடுக்குகளில் எல்லாம் இறக்கப் பட்டுக் குடிநீர் கிடைக்காத இடமே இல்லை என்கிற நிலை உருவாக்கப் பட்டது. அந்த விரைவான நடவடிக்கையைக் கண்டு சென்னை மக்கள் அடைந்திட்ட வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. ஆனந்த விகடன்' போன்ற ஏடுகளும் அந்தத் திட்டத்தை அப்போது வெகுவாகப் பாராட்டின.

சென்னைக்குக் காவிரி நீரைக் கொண்டு வரும் பொருட்டு, வீராணம் நீர்த் திட்டமும் வகுக்கப்பட்டது. அது விரைந்து செயலாக்கப்பட்டும் வருகிறது. கோவையை மறந்திடாமல்-சிறுவாணித் திட்டம் சீராக நிறைவேறிடக் கேரள அரசோடும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் எந்தப் பகுதியிலுமே குடிதண்ணீர்ப் பஞ்சம் தலை காட்டவே கூடாது என்பதற்காகக் 'குடிநீர் வாரியம்' ஒன்றும் அமைக் கப்பட்டுள்ளது. அதற்கென்று கோடிக் கணக்கிலும் பணம் ஒதுக்கப் பட்டுள்ளது.

சிங்கப்பூர்-மலேசியா போன்ற கீழை நாடுகளிலும் உள்ள தோழர் களுக்கு நான் அங்கெல்லாம் வருகை புரிந்திட வேண்டும் என்கிற வற்ருத ஆசை நெடு நாளாகவே உண்டு. எனக்கு அடிக்கடி அழைப்பு விடுத்த வண்ணம் இருந்தனர்.

குறிப்பாக, சிங்கப்பூரில் உள்ள 'மணி மலர் சங்கம்' என்னும் அமைப்பினர் நான் அங்கே வரவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

எனக்கும் அந்த அன்பு நெஞ்சங்களை நேரிலே கண்டு அளவளா விடும் ஆசை இல்லையா என்ன?

எனவே, அவர்களுடைய அழைப்பினை ஏற்றுக் கொண்டேன். 1966 மார்ச் திங்களில் அங்கு செல்வதற்கான எல்லா முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன.

மலேசியா அரசும் நான் அந்த நாட்டுக்கு வரலாம் என்பதற்கு அனுமதி வழங்கி விட்டது. இந்த வகையில் இலங்கை அரசை அது பின்பற்றவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது!

ஆனால் இந்திய அரசுக்கோ என்னை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திட விருப்பமே இல்லை.

'இப்போது மலேசியா செல்ல அனுமதி இல்லை' என்று அறிவித்து விட்டது.

என்னைப் பொறுத்த மட்டிலும், காங்கிரஸ் அரசாங்கம், அன்று கடைப்பிடித்த கொள்கைகளை-விதிக்க முற்பட்ட தடைகளைக்-காரணம் இல்லாமல் அடைந்த கலக்கத்தை-எண்ணி எண்ணிச் சிரிப்புத்தான் வந்தது!

தீரம் மிகுந்த சீக்கிய மக்களுக்கும் தங்களுடைய பஞ்சாபி மொழி புறக்கணிக்கப்படுகிறதே என்கிற மனக்குறைபன்னெடுங் காலமாகவே உண்டு. இந்தி மொழி பேசிடுவோரின் ஏகாதிபத்திய வெறிக்கு எதற்காக நாம் இரையாகிட வேண்டும் என்கிற 'உரிமை உணர்வு' நெருப்பாகவே கனன்ற வண்ணம் இருந்தது அவர்கள் நெஞ்சத்தில். அதனுடைய விளைவுதான் 'பஞ்சாபி சுபா' என்னும் அவர்களுடைய தனி மாநிலக் கோரிக்கை.

பஞ்சாபி மக்கள் நலனைப் பாதுகாக்கத் தோற்றுவிக்கப்பட்ட 'அகாலி தளத்' தின் தலைவரான மாஸ்டர் தாராசிங் அவர்களும், அவருடைய சீடரான சாந்த் பதே சிங் அவர்களும் எவ்வளவோ எடுத்து சைத்தும் மத்திய அரசு மதித்திடவில்லை, மக்களின் கருத்தை.

இந்தியாவின் பிற மாநிலங்கள் எல்லாம் மொழிவழியாகத் திருத்தி யமைக்கப்பட்ட போதும் கூடப் பஞ்சாபி மொழியினரின் கோரிக் கைக்குக் கொஞ்சம் கூடக் காது கொடுத்திடவில்லை காங்கிரஸ் ஆட்சி யாளர்கள்.

அமைதி வழியிலே சென்று, அறநெறியிலே நின்று-எந்தக் கோரிக் கையை எழுப்பினாலும் அதனை அலட்சியப்படுத்தி அடக்கு முறைகளை ஏவி விடுவதுதான் காங்கிரசாருக்கு எப்போதுமே வாடிக்கை. அதுவும் இந்தி மொழிக்காரர்களுக்குத் திருப்திதரும் வகையில் நடப்பதைத் தானே தங்கள் இனிக்கும் லட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ளனர் டில்லி பில் உள்ளோர்!

எனவே பஞ்சாபி மொழிக்காரர்களின் நெஞ்சக் குமுறலைப் பற்றி அவர்கள் பாராமுகமாய் இருந்ததில் வியப்பென்ன இருக்கிறது!

எனினும் மாஸ்டர் தாராசிங்கும் சாந்த் பதே சிங்கும் எத்தனை காலத்திற்குத்தான் பொறுமைக் கூட்டுக்குள்ளே புழுங்கிச் சாவது என்று ஆர்த்தெழுந்தனர்.

முதலில் மாஸ்டர் தாராசிங் உண்ணு நோன்பை மேற்கொண்டு அறப்போரைத் தொடங்கினார். தனி மாநிலக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மொழி உரிமைகளைப் பாதுகாத்திடும் வகையில் ஓர் உடன்பாடு காண முன் வந்தது மத்திய அரசு. அதனுடைய வாக்குறுதிகளை நம்பிப் பண்டித நேரு அவர்களின் வார்த்தைக்கு மதிப்பளித்து, தம்முடைய கிளர்ச்சிகளை நிறுத்திக் கொண்டார் தாரா சிங். ஆனால் அந்த உடன்பாடு நியாயமான முறையில் நிறைவேற்றப்படவில்லை. நேரு மறைந்த பின்னர் அதைப்பற்றிக் கவலைப்படுவோரும் யாரும் இல்லை.

அதனால் உள்ளம் உடைந்திட்ட சாந்த் பதே சிங் 1966 மார்ச் திங்களில் இறக்கும் வரையில் உண்ணு நோன்பு மேற்கொள்ளப் போவதாகவும், குறிப்பிட்ட நாளுக்குள் 'பஞ்சாபி சுபா' அமைக்கப்படாவிட்டால் தீக்குளித்து உயிர் துறக்கப் போவதாகவும் சூளுரைத்தார். அவர்தம் முடிவைக் கேட்டு நாடே அதிர்ச்சியுற்றது.

"எந்த நோக்கத்திற்காக இங்கே கழகத்தவர் மொழிப் போரிலே ஈடுபட்டுள்ளோமோ அதே நோக்கத்துக்காகத்தானே-இந்தி ஆதிக்கத்திலிருந்து விடுபடத்தானே- தனி மாநிலம் கோரி சாந்த் பதே சிங் தம் இன்னுயிரை ஈந்திடவும் முன் வந்துவிட்டார்! அந்த உத்தமர் உயிர் பிழைத்திட வேண்டுமே என்று என் போன்றவர்கள் மிகவும் கவலை கொண்டோம்.

அவர்தம் உறுதிப்பாடு-உள்ளத்திண்மை-காங்கிரசாரின் அலட்சியப் போக்கினையும் அசைத்திடத்தான் செய்து விட்டன. இறுதியில் தங்கள் பிடிவாதத்திலிருந்து இறங்கி வரும்படிதானே ஆயிற்று காங்கிரஸ் ஆட்சியாளரின் நிலைமை.



'பஞ்சாபி சுபா' தனி மாநிலம் அமைத்திடத் தலைமை அமைச்சரே வாக்குறுதி வழங்கி, வேண்டுகோள் விடுத்த பின்னரே சாந்த் பதே சிங்கும் தன் உயிர்த்தியாக முயற்சியைக் கைவிட்டார்.

இந்த விவேகமான முடிவை முன்பே விரைந்து அறிவித்திருந்தால் எத்துணை நல்லபெயர் ஏற்பட்டிருக்கும் மத்திய அரசுக்கு என்று என்னுல் அப்போது எண்ணுமல் இருக்க முடியவில்லை.

தோன்றிய கால முதல் தூண்டா மணி விளக்காய்த் தொன்மைச் சிறப்பெல்லாம் சுடர்வீசி நின்ருலும்-'கன்னி' இளமையிலும் கலையாத தலை மகளாம் அன்னைத் தமிழுக்கு அகிலமெல்லாம் புகழ் உண்டு; இன்றல்ல பன்னெடுங்காலந் தொட்டே..

அந்தப் புகழ் மணத்தினை இக்காலப் போக்கிற்கு ஏற்ப மாநாட்டு வடிவிலே மேலும் பரப்பிட அரிய முயற்சியொன்றினை மேற்கொண்டனர் அயல்நாடுகளில் உள்ள தமிழ் அறிஞர்கள்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும் வகை செய்தல் வேண்டும்''

—என்னும் பாரதியின் கனவும் நனவாகிடும் வண்ணம் கடமையாற்றிட முற்பட்ட குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவர் மறைத்திரு தனிநாயக அடிகள்.

அவர்தம் பேரார்வத்தாலும், மலேசியா-சிங்கப்பூர் நாடுகளில் வாழும் செந்தமிழ்ச் செம்மல்களின் தீவிரமான உழைப்பாலும்-முதலாவது உலகத் தமிழ்க் கருத்தரங்க ஆராய்ச்சி மாநாடு மலேசியா நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் 1966 ஏப்ரல் திங்களில் கூட்டப் பெற்றது.

அப்போது மலேசியாவின் தலைமை அமைச்சராக இருந்த துங்கு அப்துல் ரகுமானே மாநாட்டினைத் திறந்து வைத்தார்.

அப்போது அவர் தமிழின் உயர் தனிச் சிறப்பினை வியந்து உரைத்ததாகக் கூறப்படும் சில கருத்துக்கள் எப்போதுமே நம் உள்ளத்தைப் புல்லரிக்கச் செய்வனவாகும்.

உலகம் முழுவதுமே பல்வேறு நாடுகளிலும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர் வாழ்கிறார்கள் என்ருலும் தென் கிழக்கு ஆசிய நாடுகளிலேயே மலாய் தீபகற்பத்தில்தான் தமிழகத்திலிருந்து சென்றவர்கள் பெரும் எண்ணிக்கையில் குடியேறியிருக்கிறார்கள். எனவே மலேசியாப் பள்ளிகளிலும், பல்கலைக் கழகத்திலும் தமிழ் பாட

மொழியாகவே பயிற்றுவிக்கப் படுகிறது. வாழ்க்கைக்கு வழிகாட்டியான திருக்குறள் மலாய் மொழியிலும் சீன மொழியிலும் மொழி பெயர்க்கப் படுவதாகவும் துங்கு அப்துல் ரகுமான் அந்த மாநாட்டிலே அறிவித் திருந்தார்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்!' என்னும் அழகிய தமிழ் வரியில் பொதிந்துள்ள உலகந்தழுவிய ஒப்புரவு உணர்ச்சியினையும் அவர் அப்போது உவகை வெள்ளத்தில் மிதந்து பாராட்டியிருக்கிறார்.

அந்த முதல் உலகத் தமிழ் மாநாட்டுக்கு அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், இலங்கை, ஆஸ்திரேலியா முதலான மொத்தம் 37 நாடுகளிலிருந்து இருநூறு தமிழ் அறிஞர்கள் சென்றார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து அன்றைய முதல்வர் திரு பக்தவத்சலனார் தலைமையில் குழு ஒன்று சென்றது. மாநாட்டிலே கலந்து கொள்ள எதிர்க் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அதில் இடம் பெற்றிருந்தார்.

மலேசியா அமைச்சர்கள் சம்பந்தன், மாணிக்கவாசகம் ஆகியோரின் ஆதரவோடு- ப்ழைய 'பொன்னி' ஏட்டின் ஆசிரியரான முருகு சுப்பிரமணியம் போன்றவர்களின் இடையருத முயற்சியோடு- ஏற்றமும் எழிலும் பூத்துக் குலுங்கிட நடைபெற்ற அந்த மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் இங்கே தமிழகத்திலே இருந்த என் போன்றவர்களுக்கெல்லாம் பெருமிதத்தைப்-பெருமகிழ்ச்சியையே அளித்தன.

அவ்வாறு உலகத் தமிழ் மாநாட்டினை முதலில் நடத்திய பெருமையை மலேசியா நண்பர்கள் தட்டிச் சென்றுவிட்டாலும் இரண் டாவது மாநாட்டினைத் தமிழகத்திலேயே நடத்துவதற்கான அழைப் பினை விடுத்து விட்டு வந்தார் திரு பக்தவத்சலம்.

ஆனால் அந்த மாநாட்டினைக் கோலாகலமாக- வரலாற்றுச் சிறப்புமிக்கதாய்- வையக அறிஞரெல்லாம் வாழ்த்திடும் வண்ணமாய்- நடத்திக் காட்டும் அரிய வாய்ப்பு, செந்தமிழுக்காகச் சிறைக்கு மட்டு மல்ல- தீக்குளிக்கவும் அஞ்சிடாத தியாகத் திருவிளக்குகளைக் கொண் டுள்ள தமிழகத்தின் தி.மு. கழக அரசுக்கே பின்னர் கிட்டியது.



121

வள்ளுவருக்கு ஏற்றம்

தேர்தல் நிதியாகப் பத்து லட்சம் ரூபாயைத் திரட்டிட வேண்டும்-திரட்டமுடியும்-என்னும் கருத்தினைக் கழகத் தோழர்களிடமும் தலைவர்களிடமும் சிந்தித்துத்தான் நான் தெரிவித்தேன் என்றாலும், அவ்வளவு பெருந்தொகையினை, அத்துணைக் குறுகிய காலத்திற்குள் குவித்திட முடியுமா என்னும் கேள்விக்குறி என் நெஞ்சினைக் குடைந்தெடுத்ததும் கொஞ்ச நஞ்சமல்ல.

எனினும் சோர்வுச் சூருவளியில் சாய்ந்திடும் மன மரத்தைத் தாங்கி நிமிர்த்தும் சூட்டுக்கோலும் தன்னம்பிக்கைதானே!

அந்தத் தன்னம்பிக்கையுடன் பலப் பல திட்டங்களையும் வகுத்துக் கொண்டு, துவளாத செயல் மறவர்களின் துணையோடு சுற்றுப் பயணங்களையும் இடைவிடாமல் மேற்கொண்டேன் நிதி திரட்டிட.

அத்தகைய நீண்ட நெடும் பயணங்களில் ஒன்றுதான் 1966 ஏப்ரல் 21-லிருந்து மே-முதல் நாள் வரை நான் புரிந்திட்ட கோவை மாவட்டச் சுற்றுப் பயணம்.

குருச்சான்வலக என்னும் குக்கிராமத்திலே தொடங்கிக் கோவைப் பெருநகர் வரை சென்று அந்தப் பயணத்திலே நாள் ஒன்றுக்கு 15 கூட்டங்கள் வீதம் 150 கூட்டங்களில் ஏறத்தாழ பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைச் சந்தித்தேன், ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூட!

கொங்குச் சீமையின் மூலை முடுக்குகளில் எல்லாம் பொங்கி வழிந்தது பொது மக்களின் கழக ஆதரவு, கூட்டங்கள்-கொடியேற்று விழாக்கள் என்று திறமுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் நிதியளிப்பு நிகழ்ச்சிகளில் போட்டி போட்டுக் கொண்டு ஆடவரும், பெண்டிரும் காசுகளை மட்டும் அள்ளித்தரவில்லை. தங்களிடமுள்ள அணிமணிகள்- கப்மல், கொலுசு, வளையல், கணையாழிகள் போன்ற வைகளையெல்லாம் கூடக் கழற்றித் தந்தனர். கோழிகள், புருக்கள், முயல்கள், முட்டைகள் முதலானவையும் கொடுக்கப்பட்டன. அவையெல்லாம் உடனுக்குடன் ஏலம் விடப்பட்டு அந்தத் தொகைகள் தேர்தல் நிதியிலே சேர்த்துக் கொள்ளப்பட்டன.

நானே கூட்டங்கள், கொடியேற்று விழாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் நிதிகளைப் பெற்றுக்கொள்வதோடு நின்றிடவில்லை. யாராவது எனக்கு விருந்து பறிமாறிட-சிற்றுண்டி வழங்கிட-என் கையெழுத்துப் பெற்றிட-என் கையினைக் குலுக்கிட-என் அருகே அமர்ந்து புகைப் படம் எடுத்துக் கொள்ள ஆர்வம் காட்டும்போது அவைகளுக்கும் கட்டணங்கள் விதித்துத் தேர்தல் நிதிக்குத் தென்பூட்டினேன்.

என்னுடைய இந்தக் கட்டண ஏற்பாடுகள் சில விந்தையான நிகழ்ச்சிகளைச் சந்திக்கவும் வைத்தன.

அப்படித்தான் கண்ணமநாய்க்கனூரிலிருந்து எஸ். வி. மில் செல்லும் வழியில் எனக்குத் தாங்கொணாத தாகம் ஏற்பட்டது. அடுத்து வந்த ஒரு தோட்டத்தருகே காரை நிறுத்தினேன். வழியில் கார் நிற்பதனையும் அதில் நான் அமர்ந்திருப்பதையும் அறிந்து கொண்டுவிட்ட அந்தத் தோட்டத்து நண்பர் எலுமிச்சைச் சாறு பிழிந்து 'சர்பத்' கொண்டு வந்தார். தாகந்தீர்த்திட வந்த அவரைப் பார்த்து.

''நான் சர்பத் குடிக்க வேண்டுமென்றால் நீங்கள் தேர்தல் நிதிக்குப் பத்து ரூபாய் கொடுக்க வேண்டும்''- என்று வேடிக்கையாகக் கேட்டேன்.

''என்னய்யா கிண்டலா பண்ணுகிறீர்? மத்தியானம் மூன்று மணி வெய்யிலில் தாகத்தால் தவிப்பீரே என்று தண்ணீர்கூட அல்லாமல் சர்பத்தே கொண்டு வந்திருக்கிறேன், இரக்கப்பட்டு' இதற்கு நீர் காசு தருவதை விட்டுவிட்டு என்னிடமே கட்டணம் கேட்கிறீரா?''

—என்று என்னைத் திருப்பிக் கேட்டிருந்தாலும் நான் வாய டைத்துப் போயிருக்க வேண்டியதுதான்.

அந்தப் பண்பாடுடைய நண்பர்-கழகத்தைப் பற்றியோ, கட்சி அரசியலைப் பற்றியோ அதிகம் அறிந்தவராகக் காணப்படாத அந்தக் கிராமத்து மனிதர்-என்னுடைய வினவுக்கு - விடையேதும் பகர்ந் திடவில்லை. முறுவல் பூத்திட்ட முகத்துடனே தம் வீட்டுக்கு விரைந்து சென்றார்; திரும்பி வந்தார் பத்து ரூபாய் பணத்தோடு. அதனை என்னிடம் நீட்டியவாறே,

''சீக்கிரம் கர்பத்தைக் குடிங்க!'' என்று தாய்மையுணர்வோடு அவர் வேண்டிக் கொண்டபோது என் நெஞ்சம் கரைந்தது நெக்குருகி.

சிற்றூராகட்டும், பேரூராகட்டும், தாரை, தப்பட்டை முழங்கிடத் தாய்மார்கள் ஆரத்தி எடுத்திட - எனக்குத் தரப்பட்ட வரவேற்புகள் கரைகடந்த உற்சாகத்தையே ஊட்டின. மற்ற மாவட்டங்களைப்

போலவே கோவையும் எனக்குத் தூரமில்லை என்கிற உண்மையையும் முதன் முறையாக அவை உணர்த்தின. நானும் அதுவரை அத்தனை நாட்கள் தொடர்ந்தாற் போன்று பங்கேற்றுப் பயணம் மேற்கொண்டதில்லை.

உழைப்புத் திலகமென ஒளிர்ந்திட்ட மாவட்டச் செயலாளர் உடுமலைநாராயணன் அவர்களின் திட்டமிட்ட ஏற்பாடுகளால் கொங்குநாட்டுக் கொள்கை மறவர்களின் முயற்சிகளால் என்னுடைய அந்தச் சுற்றுப் பயணத்தின்போது ரூபாய் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு தேர்தல் நிதியாகத் திரட்டிட முடிந்தது.

ஒரே சுற்றுப் பயணத்தில் - ஒரே மாவட்டத்தில் அதுகாறும் இத்துணைப் பெருந் தொகையைத் தேர்தல் நிதியாக அடைந்ததில்லை. எனவே, மற்ற மாவட்டங்களில் நிதி திரட்டும் அரும் பணிக்குத் தூண்டுகோலாகவும் அமைந்தது அந்தத் தொகை.

வாழ்வுக்கு வழி வகுத்த தமிழ்த் தலைவன் - உலகப் பெரும் புலவன் - மக்களாட்சித் தத்துவம் உரைத்திட்ட மாமேதை - 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பேசிய பகுத்தறிவுப் பகலவன் - 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்!' என்று ஆண்டவனுக்கே அறைகூவல் விடுத்திட்ட புரட்சிப் பொறி, திருவள்ளுவருக்குச் சென்னை மயிலாப்பூரில் 2-6-1966 அன்று சிலையொன்று திறந்து வைக்கப்பட்டது.

தமிழினத்தில்- தமிழகத்தில்- பிறந்த போதிலும் தாரணிக்கே பொதுமறை வழங்கிய புதுமைச் சிற்பி திருவள்ளுவர். அவர் ஏற்றி வைத்திட்ட திருவிளக்கை - தேன் தமிழ்த் திருக்குறளைத் - திக்கெட்டும் பரப்பிடும் பணியையும் தன் ஒப்பற்றக் கடமையாய்க் கருதிச் செயல்பட்டு வந்துள்ளது தி. மு. கழகம். மற்றக் கட்சிகளும், அமைப்புக்களும் சமயக் கவிஞர்களையும், சாதித் - தலைவர்களையுமே போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், திருவள்ளுவரின் சால்பு - தகைமை - தகுதி முதலானவற்றை இனங்கண்டு தெரிந்து அவரை ஏற்றிப் போற்றிட முதன் முதல் குரல் கொடுத்த பெருமையும் தன்மானத் திராவிட இயக்கங்களையே சாரும்.

வழிகாட்டிகளை மறந்திடாமல், அவர்தம் வழி நடந்திடும் பேராற்வத்துடன்தான், சட்டமன்றத்தில் நுழைந்ததும், வள்ளுவருக்குச் சிறப்புச் செய்யாதது ஏன் என்று வாதிடவும் முற்பட்டோம் காங்கிரஸ் ஆட்சியாளரிடம். சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படத்தினைத் திறந்து வைத்திட வேண்டும் என்று நானும், திருவள்ளுவர் நினைவாக அரசாங்கம் விடுமுறை நாள் விட வேண்டும் என்று புலவர்

கோவிந்தனும், சென்னை மயிலாப்பூர் பகுதியில் திருவள்ளுவருக்குச் சிலை வைத்திட வேண்டும் என்று சகோதரர் அரங்கண்ணலும் அவ்வப் போது கோரிக்கைகளை முன் வைத்தோம்.

காங்கிரஸ் ஆட்சியாளர்களோ எங்கள் கோரிக்கைகளில் பொதிந் துள்ள நியாயஉணர்வினைப் பொருட்படுத்த மறுத்தனர். புறக்கணிக்கவும் துணிந்தனர். ஆனால் எங்கள் வற்புறுத்தல் வலுப்பெறவே, திரு. பக்தவத்சலனார் முதல்வராக இருந்த காலத்தில், நான் முன்னரே குறிப்பிட்டவாறு, திருவள்ளுவர் படம் திறந்து வைக்கப்பட்டது சட்ட மன்றத்தில்.

ஆனால் சிலை எழுப்பிட மட்டும் செயல்பட மறுத்து விட்டது காங்கிரஸ் அரசு.

எனவே, தி.மு. கழகத்தின் நிருவாகப் பொறுப்பிலிருந்த சென்னை மாநகராட்சியே அந்தச் செந்நாப் போதாரின் சிலை சமைத்திடும் சீரிய பணியினை மேற்கொண்டது.

அந்தச் சிலைதான் 2-6-66-இல் சென்னை மயிலாப்பூரில் திறந்து வைக்கப்பட்டதாகும்.

தத்துவ வித்தகராம் வள்ளுவருடைய சிலையினைத் தத்துவ ஆராய்ச்சியில் தாகங்கொண்ட அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே திறந்து வைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

'தத்துவ ஞானிகளே நாட்டின் தலைமகன்களாகக் கோலோச்சிட வேண்டும்' என்னும் பேரறிஞன் பிளேட்டோவின் கனவை நினைவாக்கப் பிறந்தவர் போலத் தம்மை அறிவுக் கூர்மையால் உயர்த்திக் கொண்ட ஆற்றலாளர் டாக்டர் இராதாகிருஷ்ணன். இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், இரவீந்திரநாத் தாகூருக்கு 'டாக்டர்' என்னும் இலக்கியச் சிறப்புப் பட்டத்தினை வழங்கிட விழைந்த போது, தன்னுடைய மரபுகளையெல்லாம் தானே ஒதுக்கி வைத்துவிட்டுக் கவிஞரின் இருப்பிடத்திற்கே-சாந்தி நிகேத'னுக்கே சென்று-தன் சார்பில் பட்டம் அளித்திடத் தன், பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அது அனுப்பியது டாக்டர் இராதா கிருஷ்ணனைத்தான்.

அத்தகைய அறிஞர், மேதைகளுக்கெல்லாம் மேதையான திருவள்ளுவர் சிலையினைத் திறந்திட முன் வந்தது என் போன்றவர் களெல்லாம் பழைய நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து மகிழ்ந்திடத்தக்க வகையிலே அமைந்திருந்தது.

அந்த விழாவிற்கு அப்போதைய முதல்வர் திரு பக்தவத்சலனாரே தலைமை தாங்கிடவும், சென்னை மாநகராட்சித் தி.மு.க.வினர் பெருந் தன்மையோடு ஏற்பாடு செய்திருந்தனர்.

நானும் எதிர்க்கட்சித் தலைவர் நாவலரும், மற்றும் கழக முன்னணியினரும் அவ்விழாவிலே பார்வையாளராகக் கலந்து கொண்டோம்.

தமிழராக பிறந்திட்ட ஒவ்வொருவரும் பெருமிதம் அடைந்திடத் தக்க வகையிலே அந்தச் சிலை திறப்பு விழா பெருஞ்சிறப்போடு நடந்து என்ன பயன்?

தமிழ் நாட்டார் இதயம் எல்லாம் குமுறிக் கொந்தளித்திடும் வண்ணமே, தன்னுடைய வழக்கமான அலட்சியப் போக்கினைக் காட்டிற்று மத்திய அரசின் செய்திப் படத்துறை.

சிங்காரச் சென்னை மாநகரில் திருவள்ளுரின் சிலையை திறப்பதைத் தான் தலையாய நிகழ்ச்சியாக மேற்கொண்டு தில்லியிலிருந்து புறப்பட்டு வந்திருந்தார் குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன்.

ஆனால், மத்திய அரசு செய்திப் படத் துறையினரோ, அவர் கலந்து கொண்ட மற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் படம் எடுத்துக் காட்டினர். வள்ளுவர் சிலை திறப்பு விழாவை மட்டும் வேண்டுமென்றே படம் பிடிக்காமல் விட்டு விட்டனர்.

அவர்களுடைய அந்த ஓரவஞ்சனைச் செயலுக்கு ஒரே காரணந் தான் அப்போது புலப்பட்டது.

'திருவள்ளுவர் சிலை திறப்பு நிகழ்ச்சியினைச் செய்திப் படத்திலே சேர்த்து விட்டால், மற்ற மாநிலக்காரர்களும் அதனைப் பார்ப்பார்கள் பிறகு, எந்தச் சமயத்தையும் சார்ந்திடாமல் எந்தச் சாதியையும் ஏற்றிடாமல், பொதுமை நோக்கோடு புதுமைக் கருத்துக் கதிர்களைப் பரப்பிய வள்ளுவரைப் பற்றி-அவருக்குச் சிலை எழுப்பியதன் மூலம் தன் திறமையையும், பெருந்தன்மையையும் வெளிப்படுத்திய சென்னை மாநகராட்சியைப் பற்றி-அதன் நிர்வாகத்தினைக் கைப்பற்றி விட்ட தி.மு. கழகத்தின் வளர்ச்சியைப் பற்றி-இந்தியா முழுவதுமே அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடுமே! அதற்கு இடந் தரலாமா? —என்கிற பொல்லாங்கான நினைப்பினால் தான் பொலிவோடு நிகழ்ந்திட்ட அந்தத் தமிழகச் சிறப்பு நிகழ்ச்சியினைத் செய்திப் படத் துறையினர் புறக்கணித்திடத் துணிந்திருக்க வேண்டும்.

இல்லையென்றால், தங்களுடைய அலட்சியப் போக்கிற்கு வேறு என்ன காரணத்தைத் தான் அவர்கள் இயம்பிட இயலும்?

இதைப்பற்றி முதல்வர் பக்தவத்சலனார், மத்திய அரசிடம் தமிழ் மக்களின் இதயக் குமுறலை வெளிப்படுத்திட வேண்டும் என்று 'முரசொலி'யில் நான் அப்போது தலையங்கமே தீட்டினேன்.

ஆனால் மத்திய செய்திப்பட துறையினர் திருந்திய அறிகுறியே தென்படவில்லை. தமிழக நிகழ்ச்சிகளை அலட்சியப் படுத்துவதையே தொடர்ந்து கடைப்பிடித்தனர்.

அந்த அவமதிப்பினைத் தாங்கிட முடியாததால்தான், பின்னால் தமிழக ஆட்சிப் பொறுப்பைத் தி.மு.கழகம் ஏற்றுக் கொண்டபோது, மாநிலத்திற்கென்று தனியாகச் செய்திப் படப்பிரிவு ஒன்றைத் தோற்று வித்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலை உருவெடுத்தது.

இந்திய பூபாகமே திகைப்புக் கடலிலே திணறிடும் வண்ணம்; 1966-ஜூன் திங்கள் முதல் வாரத்தில் ஒரு செய்தியினை வெளியிட்டார் அப்போதைய மத்திய நிதியமைச்சர் திரு சுசீந்திர சவுத்திரி.

122

நாணயம் கெட்டது

அதன் படி இந்திய ரூபாய் நாணயத்தின் மதிப்பு திடீரென்று 36.5 சதவிகிதம் குறைக்கப்பட்டு விட்டது.

அதனால் ஏற்பட்ட பரபரப்பு- குழப்பம்- பொருளாதாரச் சீர்குலைவுகள்-பொருள்களின் விலைவாசி ஏற்றங்கள் - அளவிடற்கரியன.

அதுவரை ஓர் அமெரிக்க டாலருக்கு ரூ.4.76 கொடுத்தால் போதும்; நாணய மதிப்புக் குறைப்புக்குப் பின்னரோ அதே டாலருக்கு ரூ-50 தர வேண்டியதாயிற்று.

ஒரு ஸ்டர்லிங் பவுனுக்கு அதுவரை ரூ. 15 இணையாக இருந்தது. அந்த நிலைமை மாறி ரூ. 21 கொடுக்கும் அளவுக்கு ரூபாயின் மதிப்புக் குறைந்தது.

பொதுவாக ரூ. 100 கொடுத்து வரவழைத்துக் கொண்டிருந்த எந்த அந்நியப் பொருளுக்கும் ரூ. 157-50க்கு மேல் கொடுக்க வேண்டிய நிலைமை உருவாயிற்று.

எனவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்கால முடிவில் அயல் நாடுகளுக்கு இந்தியா திருப்பித் தரவேண்டிய கடன் தொகை ரூ. 2269 கோடியுடன் மேலும் ரூ. 1500 கோடி கூடுதலாகத் தந்திட வேண்டிய இடர்ப்பாட்டுக்கு இலக்காகிட நேர்ந்தது, நாட்டின் மொத்தப் பொருளாதாரம்.

அந்த நாணய மதிப்புக் குறைப்பால்- வெளிநாட்டுப் பத்திரிக்கைகளின் விலையெல்லாம் அடுத்த நிமிடமே உயர்த்தப்பட்டன. விமானம் உயரப்பறப்பதைப் போன்றே வெளிநாடுகளுக்குரிய விமானக் கட்டணங்களும் உடனே உயரப் பறந்தன. பம்பாய், கல்கத்தா முதலான பெரு நகரங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ இறக்குமதி ஆகும் அத்தனை பொருள்களும் மின்னல் வேக விலையேற்றம் பெற்றன.

இந்தியா விடுதலை பெற்ற அந்தப் பதினெட்டு ஆண்டுக் காலத்தில் இரண்டாவது முறையாக 1966-இல் நாணயத்தின் மதிப்புக் குறைக்கப்பட்டது. 1949-இல் முதல் நாணய மதிப்புக் குறைப்பு மேற்கொள்ளப் பட்டது. உலகப் போரால் ஏற்பட்ட சீர்குலைவுகளைச் சரிகட்ட மற்ற நாடுகளைப் பின்பற்றி முதலில் நாணயக் குறைப்புச் செய்ததற்குப் போதுமான முகாந்

திரம் இருந்தது. ஆனால், இந்த இரண்டாவது முறை நடவடிக்கைக்கு எத்தகைய தர்க்கரீதியான காரணங்களையும் தந்திட முடியவில்லை மத்திய அரசால்.

எனவேதான், காங்கிரஸ் கட்சியிலேயே இருந்த கிருஷ்ண மேனன் போன்ற தலைவர்களே அரசின் திடீர் நடவடிக்கைக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்தனர்.

வெளி நாடுகளின் வற்புறுத்தலால் நாணய மதிப்பைக் குறைக்க வில்லை என்று அரசுத் தரப்பிலே கூறப்பட்டாலும், அமெரிக்க அரசும், உலக வங்கியும் வற்புறுத்தியதாலேயே அத்தகைய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாக அப்போது பரவலாகப் பேசிக் கொள்ளப்பட்டது.

அப்போது 'முரசொலி'யில் தீட்டிய தலையங்கத்தில் இவ்வாறு நான் குறிப்பிட்டிருக்கிறேன்:

...நாணய மதிப்பைக் குறைப்பது என்பது பல்வேறு நாடுகளிலே கடைப்பிடிக்கப்பட்ட ஒன்று எனினும், அவர்கள் புத்திசாலித்தனமாகப் புளியங்கொம்பைப் பிடித்துத் தப்பித்துக் கொண்டவர்கள்; இங்குள்ள வர்கள் முருங்கைக் கொம்பைப் பிடித்துக்கொண்டு 'இதுதான் புளியங் கொம்பு' என்று முரட்டுத்தனமாகச் சாதிப்பவர்களாயிற்றே! பண மதிப்புக் குறைப்பு என்பது அரிதாகப் பயன்படுத்தப்பட வேண்டிய முறை. அடுத்தடுத்துப் பல தடவை பணமதிப்புக் குறைப்பு ஏற்படு மானால் மக்கள் நாணயத்தின் மீதுள்ள நம்பிக்கையை இழப்பர்.

''...எப்படியோ யார் வைத்த கொள்ளியோ-வீடு வேகிறது!... பதினெட்டு ஆண்டுக் காலப் 'பிளவைக்கட்டி' இன்று பண மதிப்புக் குறைப்பு' என்னும் சிகிச்சையால் உடைத்துக் கொண்டு சீழும் இரத்தமும் சிந்துகிறது! இனி எந்தச் சிகிச்சையும் பயன்படாது. புரை யோடி விட்டது. கபாலத்தைக் குடைந்து கொண்டு போய்விட்டது. இனி அறிவிலாவது மதிப்பைக் குறைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது காங்கிரஸ் தர்பாரின் கடைசி முயற்சியாக இருக்கட்டும்!"

1966-இல் செய்யப்பட்ட நாணய மதிப்புக் குறைப்பினால் ஏற்பட்ட விளைவுகள்தான் பின்னால் விலைவாசி ஏற்றத்தை இறக்க முடியாமலே செய்து விட்டது என்பது நிபுணர்கள் பலரின் கருத்து.

திருச்சி-தஞ்சை வட்டாரத் தி. மு. க. மாநாடு 1966-ஜூன் திங்கள் 14, 15 நாட்களில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் பெருஞ்சிறப்போடு நடைபெற்றது. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தான் மாநாட்டுத் திறப்பாளர்.

தி. மு. கழகத்தின் அந்தக் காலத் தூண்களில் ஒருவரான மறைந்திட்ட பெரியவர் கே. கே. நீலமேகம் அவர்களின் நினைவுப் பந்தலில்—

தீக்குளித்த 'சிங்கத் தமிழன்' சின்னச்சாமி [illegible]ங்கில்—சீர்மல்கிட நிகழ்ந்தேறிய அந்த மாநாட்டில் நான் மட்டும் கலந்து கொள்ளவில்லை.

பாதை தவறிடத் தயங்காத ஒருவரது பாதகச் செயலே என் நெஞ்சினில் நெருப்பை அள்ளிக் கொட்டிக் கால்களையும் கட்டிப் போட்டுவிட்டது-திருச்சி மாநாட்டுக்கு அப்போது நான் செல்ல முடியாதபடி.

தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் பதவிக்கு இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் போட்டியிட்டார். அவருக்கு எதிராகக் காகா ராதாகிருஷ்ணன் மாற்றுக் கட்சியினரால் நிறுத்தி வைக்கப் பட்டார்.

கழகத்தைச் சார்ந்தவர் எவராயினும் எஸ். எஸ். ஆரைத்தானே ஆதரிக்க வேண்டும்? அதுதானே கட்சிக்குக் காட்டக் கூடிய நன்றி; நாணயம்; கடமை; கட்டுப்பாடு?

ஆனால், கழகத்தின் 'முக்கியப் புள்ளிகளில்' ஒருவராகக் கருதப் பட்ட ஒரு 'தீவிரவாதியோ'-சொந்தக் கட்சிக்காரரையே தோற்கடித் திடும் நோக்கோடு-சூதுகள் நிறைந்த போக்கோடு-சுழன்று பணியாற் றினர். மாற்றுக்கட்சி நண்பர் வெற்றியைப் பெற்றிட வேண்டி மறைமுக வேலைகள் அத்தனையிலும் மனங்கூசாமல் அவர் ஈடுபட்டார். அள்ளிவிட்டார் பணத்தை; அனுபபி வைத்தார் கார்களை; எப்படி யாவது இலட்சிய நடிகரைத் தோல்விப் படுகுழியிலே நெட்டித் தள்ளிட வேண்டும் என்கிற நீங்காத ஆசை-நெறி பிறழ்ந்த வெறி-அவருக்கு!

இவ்வளவுக்கும் அவர் கழகம் மேற்கொண்ட அறப்போர்களிலே கலந்து கொண்டு சிறைக்குச் சென்றவரா? தியாகத் தழும்புகளை ஏற்றவரா? கருஞ்சட்டையைக் கழற்ற மாட்டேன் என்று கொள்கைப் பிடிப்போடு நின்றமைக்காகக் கொலை மிரட்டலுக்கு இலக்கானவரா? 1965-இல் இந்தித் திணிப்பினை எதிர்த்துத் தன்னுடைய வீட்டு மாடியில் கொடி ஏற்றி துக்கம் கொண்டாடிய துணிச்சலுக்காக அன்றையக் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் அச்சுறுத்தலுக்குத்தான் ஆளாக்கப்பட்ட வரா? ஏதும் இல்லை!

எந்தத் தியாக முத்திரைக்கும் இடம் கொடாமலே கழகத்தின் முன் வரிசையில் இடம பிடித்துக்கொண்டவரே அவர் அவருக்குள்ள பெருமையெல்லாம, ஆயிரக்கணக்கான கழகக் கலைமணிகள் 1965 அறப் போரில் ஈடுபட்டுத தங்கள உயிரைப பறிகொடுத்து-உதிரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த காலத்திலும், கோவா கடற்கரையில் காதற் காட்சிகளில நடிக்கத்தயங்காதவர் என்பதே!

அந்த 'அரிய மனிதர்' திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள்தானே சொந்தக் கட்சிக்காரர் ஆயிற்றே என்கிற நிதானம் கூட இல்லாமல் இலட்சிய நடிகரைத் தோற்கடிக்க முயன்றிட்டார்.

கட்சிக் கட்டுப்பாட்டையே குலைத்திடும் அவர்தம் கண்ணியமற்ற செயல் கண்டு என் நெஞ்சம் புண்பட்டுப் புலம்பிற்று.

நான் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் இருந்த போது எழுந்திட்ட எண்ணங்களைத் தொகுத்துப் 'பாளை நினைவுகள்' என்னும் தலைப்பில் 'முரசொலி' பொங்கல் மலர் ஒன்றில் கட்டுரை தீட்டியிருந்தேன். அதில்,

'கழகத்தால் தனக்கு என்ன லாபம் என்று கருதுபவன் புற்று நோயைப் போன்றவன்: தன்னால் கழகத்திற்கு எந்த அளவுக்கு லாபத்தைத் தேட முடியும் என்பவன் கழகத்திற்கு இரத்த நாளத்தைப் போன்றவன்.

—என்று குறிப்பிட்டிருந்தேன்.

நடிகர் சங்கத் தலைவராக இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது கழகத்திற்குப் பெருமை என்று கருதிட வேண்டிய நண்பர் எம். ஜி. ஆர். கழக வேட்பாளரை எதிர்த்தே வேலை செய்வதைக் கண்டதும் இரத்த நாளமாக இயங்கிட வேண்டியவர் எப்படியோ மாறிவிட்டாரே -என்று அப்போதே நான் எண்ணிக்கொண்டேன், எரிச்சலும் அடைந்தேன்.

அவர்தம் அடாத செயலுக்கு அணை போட்டிட வேண்டாமா என்று அண்ணா அவர்களிடமும் முறையிட்டேன்.

நடிகர் சங்கத் தேர்தலில் எம். ஜி. ஆரால் ஆதரிக்கப்பட்ட மாற்றுக் கட்சி நண்பர் தோற்கடிக்கப்பட்டு இலட்சிய நடிகரே வெற்றி பெற்று விட்டதால், பிரச்சினைகளைப் பெரிதாக்கிட வேண்டாம் என்கிற பெரும் போக்கில் அண்ணா அமைதியாக இருந்து விட்டார்.

ஆயினும் கட்சிக் கட்டுப்பாட்டுக்கே களங்கம் விளைத்திட்ட எம். ஜி. ஆரின் செயல், நெருஞ்சி முள்ளிலும் கொடுமையாக என் நெஞ்சினை உறுத்திற்று. அதனால்தான் அவர் பங்கேற்றிடும் நிகழ்ச்சிகளில் சில காலமாவது நாமும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருப்போமே என்கிற எண்ணத்தில் திருச்சி-தஞ்சை வட்டார மாநாட்டிற்கு நான் செல்லாமல் சென்னையிலேயே தங்கி விட்டேன்.

அதே ஜூன் திங்கள் 18, 19 தேதிகளில் தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவினர் சார்பில் சிறப்பு மாநாடு ஒன்று தஞ்சையில் நடைப்பெற்றது.

எழுச்சிப் பிழம்புகளாய்-எரிமலைச் சிகரங்களாய்-தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமின்றி வெளி மாநிலங்களிலிருந்தும் எண்ணற்ற மாணவ இளஞ்சிங்கங்கள் அங்கே திரண்டிருந்தனர்.

ஆனால். அந்த மாநாட்டிற்கு முன் கூட்டியே என்னால் சென்றிட முடியவில்லை. காரணம், மாநாடு தொடங்கிய முதல் நாளான 18-6-66 மாலையில் தென்காசியில் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் ஒன்றில் நான் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. அடுத்த நாள் 19-6-66 காலையிலோ மதுரையில் டாக்டர் இலக்குவனார் துவங்கிய 'குறள் நெறி' நாளிதழ் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றிடவும் ஒப்புக் கொண்டிருந்தேன்.

மதுரை நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நான் தஞ்சைக்கு விரைந்து சென்ற போது மாநாடே முடியுந்தறுவாயில் இருந்தது.

அண்ணா அவர்கள் வீணைக் குரலில் தேனில் குழைத்தெடுத்த செந்தமிழ்ச் சொற்களில் வீர முழக்கம் புரிந்து கொண்டிருந்தார் தானைத் தளபதியாக.

அலைகடலின் ஓசையும் அடங்கிவிட்டதோ என்னும்படியாக அண்ணாவின் விளக்கவுரையினை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர் மாணவ மணிகள். அந்த அமைதியான கடலினூடே நான் மேடையை நோக்கி மெள்ள ஊர்ந்திட முற்பட்டேன்.

அண்ணா அவர்கள் பங்கேற்றிடும் எந்தப் பொது நிகழ்ச்சியிலும் அவர்தான் இறுதி உரையாற்றுவார். அவருக்குப் பின்னர் எவர் பேச முற்படினும் அது எடுபடவே எடுபடாது.

அன்றையத் தஞ்சை மாணவர் மாநாட்டிலும் அண்ணா பேசத் தொடங்கிய பின்னரே நான் சென்றதால் எனக்குச் சொற் பொழிவு நிகழ்த்திடும் சுமை குறைந்தது என்றே நான் எண்ணிக் கொண்டேன்.

ஆனால், அண்ணா அவர்களோ தம்முடைய சொற்பொழிவோடு மாநாட்டினை முடிவிற்குக் கொணர்ந்திடவில்லை. அந்த

வாடிக்கையை வழியனுப்பி வைத்துவிட்டு என்னையும் பேச அழைத்திட்டார் இப்படிச் சொல்லி:

"...நான் இத்துடன் முடிக்கவில்லை! தம்பி தொடர்கிறான்!"

அந்தச் சொற்களைக் கேட்டதும் என் உள்ளமும் உடலும் புல்லரித்தன; எதிரே குழுமியிருந்த மாணவச் சிங்கங்களோ கொள்ளை மகிழ்ச்சியுடன் கரவொலி எழுப்பினர்.

என் உரையைத் தொடங்கும்பொழுதே இவ்வாறு குறிப்பிட்டேன்:

"அறிஞர் அண்ணா அவர்கள் பேசிவிட்ட பிறகு நான் பேசுவது என்பது எனக்கு மிகவும் சங்கடமாகவே இருக்கிறது.

"அறிஞர் அண்ணா அவர்கள் பேசிவிட்டார்கள் என்றால்- தமிழ் நாடே பேசிவிட்டதாக அர்த்தம்....தமிழ்த் தாயே பேசிவிட்டதாகப் பொருள்; மாணவர்களின் பொங்கும் உணர்ச்சியே பிரதிபலித்துவிட்டதாகவும் பொருள்."

—நான் இப்படி அண்ணாவின் பெருமையினைப் பாராட்டிப் பெருமிதத்தோடு உரையாற்றிய அந்த மாணவ மாநாட்டில், அச்சமயம் கட்சிக் கட்டுப்பாட்டையே கறைப்படுத்திய எம்.ஜி.ஆர். இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

123

காகித ஓடம்

தீவிரமான அரசியல் பணிகளுக்கு என்னை நானே ஆட்படுத்திக் கொண்ட பொழுதே திரைப் படங்களுக்கு உரையாடல் தீட்டுவதை,, அந்த உரையாடல்களிலே கழகக் கொள்கை மணத்தைக் கமழ விடுவதை ஒரு கடமையாகவே நான் கொண்டிருந்தேன் என்பதை முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

'அவன் பித்தனு?' திரைப்படம் என் கலைத் துறைப் பணிக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும். இலட்சிய நடிகர் எஸ். எஸ் இராசேந்திரன் நடித்த உமையாள் புரொடக்ஷன்சாரின் தயாரிப்பான அப்படம் 1966 ஏப்ரல் 29-இல் தமிழகம் எங்கணும் திரையிடப்பட்டது.

அதில் இப்படி ஓர் உரையாடலையும் எழுதியிருந்தேன்:

''ஒற்றுமை பேசி வேற்றுமை வளர்ப்போர்-
ஊரையடித்து உலையில் போடுவோர்-
ஒருவர் தேவைக்கே இவ்வுலகு
உண்டென்று கூறுவோர்-
உழைத்தும் கூலி கொடார்-
உண்ணச் சோறிடார்
வண்ணத் தமிழ் அழிப்போர்
வளர் தொழில் வாழாது கெடுப்போர்-
ஏமாற்றக் கற்றவர்
ஏமாறி இளைத்தவர்-
இவர்களுக்கு மத்தியில்
கொள்கைச் சிங்கங்கள்
கொடுமை கண்டு அஞ்சாத
இலட்சியத் தங்கங்கள்
இவர்கள் அத்தனை பேரும்
பைத்தியக்காரர்கள் என்றால், நானும் பைத்தியக்காரன்தான்!"

சில நேரங்களில் சில மனிதர்களைச் சந்திக்கும் பொழுது, சிந்திக்கும் பொழுது இந்த 'அவன் பித்தனு?' உரையாடல் என் நெஞ்சிலே வந்து அலை எழுப்புவது உண்டு!

அந்தப் படத்துக்கு அடுத்தபடியாக நான் திரைக் கதை உரை யாடல் தீட்டி வெளியிட்ட படம்: 'மறக்க முடியுமா?' என் தமக்கை மகன்



முரசொலி மாறன் முதன் முதலாக இயக்குநராக அறிமுகமானது அந்தப் படத்தின் மூலம்தான். இன்னொரு தமக்கை மகன் அமிர்தம் அந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர்.

இதில் குறிப்பிடத்தக்க இன்னொரு சிறப்புச் செய்தியும் உண்டு. மெல்லிசை மன்னர் இராமமூர்த்தி அவர்களின் இசை அமைப்பில் நான் ஒரு பாடலையும் அந்தப் படத்திற்கென்று தீட்டியிருந்தேன்.

'காகித ஓடம் கடலலை மேலே போவது போலே மூவரும் போவோம்'

அந்தப் படத்தில் வரும் உள்ளத்தை உருக்கிடும் ஒரு காட்சிக் கேற்பவே இந்தப் பாடலை நான் உருவாக்கியிருந்தேன். பின்னால், பல ஆண்டுகள் கடந்த பிறகும் கூட எல்லாருடைய இதயத்தையும் தொட்டிடும் அளவுக்கு அது செல்வாக்குப் பெற்றிடும் என்று அப்போது நான் எண்ணவே இல்லை.

ஒருவருடைய உள்ளத்தில் பீரிடும் உணர்ச்சி வெள்ளத்திற்கு உண்மையான வடிவம் மட்டும் கிடைத்துவிட்டால் அது மற்றவர் மனத்திலும் நிலையான இடத்தைப் பெற்றுவிடும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே எனக்குக் காட்சி தருகிறது இந்தக் 'காகித ஓடம்' பாட்டு.

கலை விருந்திலே நாட்டங்கொண்ட மக்களைக் களிப்புக் கடலிலே ஆழ்த்திட- அதே நேரத்தில் அவர்தம் அன்புக் காணிக்கையாகத் தேர்தல் நிதிக்குப் பணமும் திரட்டிட முப்பெரும் கலை விழாக்களை மூன்று நாட்கள் நடத்துவது சென்னையில் என்று திட்டமிட்டோம்.

அண்ணாவின் பிறந்த நாளையொட்டியே 1966 செப்டம்பர் 16, 17, 18 ஆகிய தேதிகளில் அந்தக் கலை நிகழ்ச்சிகள் விழிகளுக்கும் சிந்தனைக்கும் விருந்து படைத்தன. பல்லாயிரக்கணக்கில் மக்கள் மட்டுமல்ல, பணமும் வந்து குவிந்திட்ட அந்த விழாக்களில் நண்பர் நாகூர் அனிபாவின் இசை, குமாரி விஜயாவின் கதா காலட்சேபம், குடந்தை சீனிவாசனின்

வில்லுப் பாட்டு, கழக முன்னணியினரின் கற்கண்டுச் சொற்பொழிவுகள், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரனின் 'எதன்பாண்டி வீரன்' நாடகம்-முதலான பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன.

மூன்றாவது நாள் விழாவில் நான் எழுதி நடித்த 'காகிதப் பூ' நாடகமும் அரங்கேறிற்று.

அந்த முப்பெரும் விழாக்கள் மட்டும் ரூபாய் 67 ஆயிரத்தை அள்ளித் தந்தன தேர்தல் நிதியாக. அந்தத் தொகையோடு முன்பே திரட்டப்பட்டிருந்த ஐந்து லட்சம் ரூபாயையும் சேர்த்து அவற்றுக்குரிய பாங்க் ரசீதுகளை ஒரு சந்தனப் பேழையில் வைத்துப் பொருளாளர் என்கிற முறையில் கழகத்தலைவர் அண்ணா அவர்களிடம் அளித்தேன்.

'இன்னும் நான்கு மாதங்களுக்குள் நாலரை லட்சம் திரட்டிப் பத்து லட்சம் எல்லையை எட்டிட வேண்டும்!' என்கிற எண்ணமும் அச்சமயம் மின்னலெனப் பாய்ந்திட்டது என் நெஞ்சினில்; ஒரு விதத்தில் அது எனக்குக் கலக்கத்தையும் கொடுத்தது.

எனினும், 18-9-66-இல் அந்த முப்பெரும் கலை விழாவில் முதன் முதல் அரங்கேற்றம் பெற்றிட்ட என்னுடைய 'காகிதப் பூ' நாடகம் என் கனவை நனவாக்கிடும், என் கவலை தீர்க்கும் மருந்தாக்கிடும் என்கிற உள்ளுணர்வும் எனக்கு நம்பிக்கை ஊட்டிடத் தவறவில்லை அப்போது. ஏனெனில் எடுத்த எடுப்பிலேயே, தொடக்க நாளிலேயே பொது மக்களிடமிருந்து கிடைத்திட்ட உற்சாகமிகுந்த வரவேற்பு நான் எதிர்பார்த்ததற்கு மேல் அமைந்திருந்தது.

எனவே, 'காகிதப் பூ' வைக் கொண்டே தேர்தல் நிதி என்னும் மாலையை மேலும் தொடுத்து முடித்திடத் தீர்மானித்தேன். தமிழகம் எங்கணும் பல ஊர்களில் அந்நாடகம் நடத்தப்பட்ட ஒரே நாளில் திருச்சியில் ரூ. 13 ஆயிரம், கடலூரில் ரூ. 6 ஆயிரம், கள்ளக்குறிச்சியில் ரூ. 10 ஆயிரம், மன்னையில் ரூ. 12 ஆயிரம், தஞ்சையில் ரூ. 10 ஆயிரம் என்கிற வேகத்தில் பண வசூலுக்கும் அது வழி வகுத்தது.

சிறிய விதை பெரிய மரமாய் உருவெடுப்பதைப் போல, ஒரு சிறு நிகழ்ச்சி அரிய திட்டம் ஒன்றுக்கு அடித்தளம் அமைத்து விடுவதும் உண்டு.

என்னுடைய வாழ்க்கையில் நான் அப்படிச் சில நெஞ்சுருக்கும் நிகழ்ச்சிகளைக்-காட்சிகளைச் சந்திக்க நேர்ந்ததும் உண்டு. சந்தர்ப்பம் வாய்த்திட்ட போது அவற்றுக்கு நான் பரிகாரம் தேடிட முற்பட்டதும் உண்டு.

1966 செப்டம்பர் திங்கள் இறுதியில் கரூர் நகரில் தேர்தல் நிதி யளிப்புக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக நான் சென்றிருந் தேன்.

பல தோழர்கள் கழகத்தின்பால் உள்ள பிடிப்பால், பேரன்பால், தேர்தல் நிதி அளித்திட முண்டியடித்துக் கொண்டு முன் வந்தனர்.

அவர்களுடைய உற்சாகமான தொடையளிப்புப் போட்டியிலே நான் உள்ளம் பறி கொடுத்து நின்றிட்ட வேளையில் உண்டியலை ஏந்திக் கொண்டு மெள்ள மேடை எறி வந்தனர் இரண்டு தோழர்கள்.

கழகத்தை எப்படியேனும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியே தீருவது என்னும் ஆர்வங்கொண்டு அயராது உழைத்திடும் இலட்சக் கணக்கான மக்கள் வெள்ளத்திலே தாங்களும் சிறு துளிகளாகப் பணத்தைச் சேமித்து அவர்கள் தந்திட்ட அந்த உண்டியலைப் பெற்றுக்கொண்ட போது என் சிந்தை நெகிழ்ந்தது; நீரிலும் மிதந்தன என் கண்கள்!

காரணம், நிதியளித்திட வந்திட்ட பழனிச்சாமி, தங்கராஜ் ஆகிய இரு தோழர்களில் தங்கராஜ் என்பவர் கரம் இழந்து பரிதாபமாகக் காணப்பட்டார். அவர் உண்டியலைத் தந்திட முயன்ற காட்சி உள்ளத்தையே வெடித்திட வைப்பதாக உருக்கிற்று.

இப்படி எத்தனை எத்தனை இளைஞர்கள் முதியவர்கள் கரம் இழந்து, காலொடிந்து, உடல் ஊனமுற்று நடைப்பிணங்களாக நாள்தோறும் போராடிக் கொண்டிருக்கின்றனர் வாழ்க்கையோடு!

இவர்கள் எல்லோரும் ஓரளவேனும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிட -கவலைத் தீயைத் தாண்டி வந்திட-ஏதேனும் நிவாரணம் தேடிச் சுமைதாங்கியாய்த் தொண்டாற்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

கரூரிலே மட்டுமின்றி, இன்னும் பல இடங்களிலே நான் காண நேர்ந்திட்ட அத்தகைய அவலக் காட்சிகளே, பிறகு முதலமைச்சர் பொறுப்பினை நான் அடைந்திட்ட பின்னர் 'ஊனமுற்றோர் மறு வாழ்வுக்கான திட்டம்' ஒன்றினை உருவாக்கிட அடித்தளமாய் அமைந்தன என்றாலும் மிகையில்லை.

நெல்லை நகராட்சியினைத் தி. மு. கழகம் கைப்பற்றிவிட்டதே என்கிற தீராத ஆத்திரத்தால், அன்றையக் காங்கிரஸ் ஆட்சியினர் திடீரென்று அதனைக் கலைத்து விட்டனர் ஆதாரம் ஏதுமின்றி.

அந்த நியாயமற்ற அரசின் நடவடிக்கையை எதிர்த்து நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்திட நிதி திரட்டிட உதவுமாறு நெல்லை

நண்பர்கள் கேட்டுக் கொண்டனர். அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப 1966 அக்டோபர் 30-இல் நெல்லை சங்கீத சபாவில் 'காகிதப் பூ' நாடகம் நடத்தப்பட்டது ரூ 8500 வரை வசூல் ஆயிற்று.

அந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பும் வழியில் திண்டிவனம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களிலும் நிதி நிகழ்ச்சிக்காகக் 'காகிதப் பூ' நாடகத்தில் நான் நடிக்கும்படி ஆயிற்று.

அச்சமயம் வழக்கத்திற்கு மாறாக என் குடும்பத்தினரும் என்னுடன் பயணம் புரிந்தனர்.

அந்தப் பயணத்தின் போதும், வேறொரு நிகழ்ச்சிக்காகக் குடும்பத்தினர் மதுரை சென்றிருந்த நிலையில்தான் திரும்பும் வழியில் அவர்களையும் என்னோடு இணைத்துக் கொண்டேன்.

1966 அக்டோபர் முதல் நாள் திண்டிவனத்தில் 'காகிதப் பூ' நாடகம் மற்ற ஊர்களையெல்லாம் மிஞ்சிடும் வகையில் ரூ. 13, 250 வரை வசூல். மறுநாள் காலை தம்முடைய மழலைச் செல்வங்களுடன் நண்பர் இரை. இளம்வழுதி அவர்கள் என்னைக் கண்டிட வந்தார் திண்டிவனத்திற்கு. இரண்டு குடும்பங்களும் அன்றே செஞ்சி, சாத்தனூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களித்துமிட்டு, திருக்கோயிலூர் சென்றோம்.

அக்டோபர் மூன்றாம் நாள் திருக்கோயிலூரிலிருந்து சென்னைக்குப் புறப்பாடு.

அதற்குமேல் இயற்கைக்குப் பொறுக்கவில்லை!

மதுராந்தகத்தைக் கடந்தபோது சீறிடும் கோரப் புயல் எங்கள் காரை மடக்கிப் போட்டு விட்டது. அதனுடைய சுழல் வீச்சினால் படாத பாடு பட்டன மரம் மட்டைகள் செடி கொடிகள் எல்லாம்!

எங்கள் காருக்கு எதிரிலேயே ஒரு மரம் முறிந்து விழுந்து விட்டது. அதனுடைய கிளைகளை அப்புறப்படுத்தி விட்டுக் காரை நகர்த்திட முயன்றிட்டபோது,

மறுபடியும் ஒரு பெரிய மரமே விழுந்தது, எங்களைச் சிறை வைப்பது போல.

இனியும் பயணத்தைத் தொடர்ந்திட முயல்வது அறிவுடைமை ஆகாது; முடியவும் முடியாது என்கிற நிலையில் சாலையிலேயே தேங்கி நின்று விட்டோம்.

கொம்பு சுற்றி அடித்திடும் கோரப் புயலில் காரின் கதியே என்ன ஆகுமோ என்கிற கலக்கம் வேறு எங்கள் நெஞ்சைக் கனக்கச் செய்தது.

சிறிது நேரம் சென்று சாலையிலிருந்து ஒரு கல் தொலைவு உட்பகுதியில் உள்ள கருங்குழி பயணிகள் விடுதிக்குச் சென்றோம். உணவு வாங்கி வரக் காரை மதுராந்தகம் அனுப்பினோம்.

போன காரோ திரும்பி வரவில்லை. பாதையின் குறுக்கே மரம் விழுந்து விட்டதால் கார் வர முடியாமல் மதுராந்தகத்திலேயே நின்று விட்டது. காரோட்டியும் வர இயலாத அளவுக்குக் கடும் புயல் நாங்கள் இருந்த விடுதியைச் சுற்றிலும் எல்லா மரங்களுமே விழுந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் முழுதும் பசியோடு போராட்டம். குழந்தைகள் துடித்துப் போனார்கள். விடுதி முழுவதும் குளம் போலத் தண்ணீர். உட்காரவும் இடமில்லை. ஒரு சிறிய கட்டிலில் ஐந்து பேர்—நான், துணைவி, அமிர்தம், செல்வி, தமிழரசு ஆகியோர் அமர்ந்து கொண்டோம்.

இரவு பத்து மணி இருக்கும்.

அந்தப் பகுதியில் வீடிழந்த ஆதித் திராவிட மக்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் அந்த விடுதியில் எங்களோடு அடைக்கலம் புகுந்தனர்.

அவர்களில் ஒரு சகோதரிக்குப் பிரசவ வேதனை. அவரைச் சுற்றிப் பரிதாபத்திற்குரிய ஒரு குடும்பம். ஒரே அழுகை. அந்தத் தாய்க்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இரவு முழுவதும் தூக்கம் ஏது? அமிர்தத்திற்கு உடல்நலிவு ஏற்பட்டு ஏதோ ஒரு மாத்திரையைச் சாப்பிட, அது 'அலர்ஜி' ஆகி உடம்பெல்லாம் வீங்கி விட்டது. இப்படி இரவு முழுதும் பசி பட்டினியோடு பயங்கர வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டிருந்தோம்.

பொழுது விடிந்தது: புயலும் ஓய்ந்தது. மழை மட்டும் கொட்டிக் கொண்டிருந்தது அப்போது "அண்ணே" என்ற ஒலியுடன் இரண்டு, மூன்று பேர் விடுதிக்குள் ஓடி வந்தனர்.

மதுராந்தகம் ஆறுமுகமும் கழக நண்பர்களும் கையில் சில உணவுப் பொட்டலங்களுடன் அலறித் துடித்து எங்களருகே வந்தனர். நாங்கள் பட்ட வேதனை கண்டு, அவர்கள் கண்கள் குளமாயின. அதுதானே எங்கள் கழகத்தின் குடும்பப் பாசம்! எப்போதுமே தொண்டாற்றும் பண்பு கொண்ட தோழர் ஆறுமுகமும், ஏனைய மதுராந்தகம் தோழர்களும் விடுதியில் விழி நீர் பெருக்கிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தனர்.

பின்னர், விடுதியிலிருந்து மதுராந்தகம் நோக்கி மழையில் நனைந்தவாறு நடக்கத் தொடங்கினோம். மதுராந்தகம் ஏரியின்

கரைகள் உடைந்து வெள்ளம் பல முனைகளில் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது. ஏரி மிகவும் பழுதுபட்டுப் போவதுடன் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று ஆறுமுகம் கவலை தெரிவித்தார். இன்னும் சில மாதங்களில் அண்ணா தலைமையில் ஆட்சி உருவாகி, நான் பொதுப்பணி அமைச்சர் பொறுப்பேற்று, அதே கருங்குழி விடுதியில் மாவட்ட அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி, மதுராந்தகம் ஏரி உட்படப் பல ஏரிகளின் சீர் திருத்தப் பணிகள் பற்றி முடிவுகள் எடுப்பேன் என்று அப்போது யாரும் கருதியிருக்க முடியாது. ஆனால் அதுவே சில மாதங்களில் நடந்து விட்டது.

இயற்கைப் புயலால் ஒரு முறை கருங்குழி விடுதியில் வாட்டம்! அடுத்து வீசிய அரசியல் புயலால் அதே கருங்குழி விடுதியில் பொதுப் பணிக்கான கூட்டம்.

மூன்றாவது பொதுத் தேர்தல் மூலம் 1962-இல் தேர்ந்தெடுக்கப் பட்ட தமிழகச் சட்டமன்றத்தின் இறுதிக் கூட்டம் 9-11-1966 அன்று நடைபெற்றது.

124

காமராசரைக் காப்பாற்றியவர்

இந்த மாநிலத்தில் ஏறத்தாழ இருபதாண்டுக் காலம் தொடர்ந்தாற் போல் கோலோச்சிக்கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி, சட்டமன்றத்தில் "Treasury Bench" என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறதே அந்த ஆளுங்கட்சிப் பகுதியில் அமர்ந்திட முடிந்திட்ட கடைசி நாள் அதுதான்.

அடுத்து வரப்போகும் பொதுத் தேர்தல் மூலம் புதிய சட்டமன்றம் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் நிலையில் பழைய சட்ட மன்றம் முடிவுறுந் தறுவாயில் நடைபெறும் இறுதி நாள் கூட்டத்தில் ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் ஒன்றையொன்று பரஸ்பரம் பாராட்டிக்கொள்வதே வாடிக்கை.

நானும் அன்றைய தினம் 'பாராட்டு வழங்கிடும் பணி'யில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்கிற முறையில்.

ஆனால் தனிப்பட்ட முறையில் அமைச்சர் பெருமக்கள் சிலரின் ஆற்றலைப் போற்றிய அளவில் என் நெஞ்சம் நிறைவு பெற்றிடவில்லை. அது பழைய சட்ட மன்றத் தொடரின் இறுதி நாள் கூட்டமாயினும், எதிர்க்கட்சிப் பொறுப்பினை ஏற்றிட்ட நிலையில் பொதுமக்களின் இன்னல்களை-கண்ணீர் வெள்ளங்களை இதயப் பொருமல்களைப்-எரிமலைக் குமுறல்களை எதிரொலிக்காமல், போற்றிப் பாசுரம் மட்டுமே பாடிவிட்டு அமர்வது எனக்குரிய ஜனநாயகக் கடமையாகாதே என்கிற உள்ளுணர்வும் ஊற்றெனப் பொங்கிற்று என் உள்ளத்தில்.

அதனால்தான், நண்பர் மாதவன் கொண்டு வந்த "சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டபபடி செல்லத்தக்கதாக்கிடும்" தீர்மானம் போன்ற எத்தனையோ கழக உறுப்பினர்களின் தனி நபர் மசோதாக்களையெல்லாம் தங்களுக்கிருந்த பெரும்பான்மை பலத்தால் தள்ளுபடி செய்து தோற் கடித்துவிட்ட காங்கிரஸ் ஆட்சியாளர்களின் தவறான போக்கினைச் சுட்டிக்காட்டிடவும் அன்றைய தினம் நான் தவறிடவில்லை.

அதனுடன், அச்சமயம் வீசிய கோரப்புயலினை நேரில் சந்தித்தவன் எனக்குள் நிலையில், வீடுவாசல்களை இழந்து, விழிநீர் பெருக்கி, வேதனையே

உருவமாகிவிட்ட பொதுமக்களுக்கு விரைந்து செய்திட வேண்டும் நிவாரணப் பணிகளை என்று வேண்டுகோள் விடுத்தேன் ஆட்சியாளர்க்கு. புயலின் போது சாலைகளில் விழுந்துவிட்ட மரங்களை அப்புறப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட இலாகாவினர் காட்டிய 'ஆமை வேகத்தையும்' சாடினேன் அப்போது.

அந்த இறுதி நாள் சட்டமன்றக் கூட்டத்தில் இப்படியும் குறிப்பிட்டேன்:

...பாராட்டுவது வேறு, குறைகளைச் சுட்டிக்காட்டுவது வேறு இரண்டையும் குழப்பிக்கொள்வது அரசியல் தெளிவாகாது.

''ஆண்டவன் என்ற ஒருவன் இருந்து, நான் அவனைச் சந்தித்தால் அவனைப் பார்த்து நான் கேட்கிற வரம இதுவாகத்தான் இருக்கும். முதலமைச்சர் பக்தவத்சலத்தைப் போன்று சுறுசுறுப்பைக் கொடு!' என்றுதான் கேட்பேன். அந்த வரத்தைக் கேட்ட பிறகு, அடுத்த வரமாக 'முதலமைச்சர் அவர்களுடைய பிடிவாத உள்ளத்தைப் போக்கி விடு!' என்று அந்த ஆண்டவனைப் பார்த்துக் கேட்டிருப்பேன்!

''...முதலமைச்சர் (திரு பக்தவச்சலம) அவர்களுக்கு எங்களிடம் ஒரு குறை உண்டு. எதிர்க்கட்சி நல்ல அனுபவம் பெறவில்லை. என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; அதற்கான அனுபவத்தை அளிக்கும் வகையில் அந்த இடத்தை (எதிர்க்கட்சி இடத்தை) இந்தச் சட்ட மன்றத்தில் பிடித்துக்கொண்டு அடுத்த தடவை எதிர்க்கட்சி அனுபவங்களையெல்லாம் எங்களுக்குச் சொல்லித்தர வேண்டும் என்று அவர்களை நான் பணிவன்புடன் சபா நாயகர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.....''

ஆனால், அடுத்து நடைபெற்ற நான்காவது பொதுத் தேர்தல் காங்கிரஸ் கட்சிக்கே புயலாக-பூகம்பமாகப் போய்விட்டதால் 'என்னர்' என்னுடைய எண்ணம் ஈடேறவில்லை.

திரு. பக்தவத்சலனர் அவர்கள் சட்ட மன்றத்துக்கு வெளியே இருந்தே எதிர்க்கட்சிப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு விட்டார் தீவிரமாக. —

வன்முறையை மேற்கொள்ளும் வன்களுர்கள் மக்களாட்சி நெறி முறைக்கே வைரிகள். அந்தச் சமுதாயப் புல்லுருவிகளைச் சாடுவதற்கோ அவர்தம் அடாத செயல்களைத் தடுப்பதற்கோ என்றைக்குமே நமது கழகம் தயக்கம் காட்டியதில்லை. இதில் கட்சி வேறுபாடுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக கொள்வதும் இல்லை.

அவ்வாறுதான் 1966-நவம்பர் திங்களில் திரு காமராசர் அவர்கள் புது டில்லியிலே தாக்கப்பட்டார் என்கிற செய்தி அறிந்ததும் எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டேன்.

வடநாட்டில் பசுவை வதைக்கக்கூடாது என்கிற இயக்கம் ஒன்றை நடத்தினர் சிலர். பசுவைக் காப்பாற்றப் புறப்பட்ட அவர்களோ புலியினும் கொடியவர்களாக மாறிவிட்டார்கள்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக, இரண்டு தலைமை அமைச்சர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வழிவகுத்து 'king maker' ('அரசரையே உருவாக்குபவர்') என்னும் பெயர் பெற்றவராகத் திரு காமராசர் நிகரில்லாச் செல்வாக்கு பெற்றிருந்த நேரம் அது.

அவர்மீது, அந்த வன்முறைக் கும்பலுக்கு என்னதான் அத்துணைக் காழ்ப்போ, கசப்போ, கோபமோ, குமுறலோ தெரியவில்லை

'பசுவைக் கொல்லாதே' என்று முழக்கமிட்டுச் சென்ற அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் காமராசரைக் கொல்லவும் துணிந்து விட்டவர் களாக அடாத செயல்களில் இறங்கி விட்டனர். அவருடைய வீட்டை நாற்புறமும் சுற்றி வளைத்துக் கொண்டு கற்களை வீசிக் கதவுகளை உடைத்துக் கண்ணாடி சன்னல்களை நொறுக்கித்தீ வைத்திடவும் முனைந்து விட்டனர்.

அவர்களுடைய தாக்குதலைச் சமாளித்திட முடியாமல் காமராசரின் சமையற்காரரும் அடிபட்டு விழுந்து விட்டார். காமராசரோ ஓர் அறையினுள்ளே உள்தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு தவித்திட வேண்டிய நிலை.

இந்தச் செய்தி டெல்லியில் இருந்த நமது கழகத் தோழர் ஒருவருக்கு எட்டியது. விரைந்தோடினார், காமராசர் இருந்த இல்லத்திற்கு. ஆர்ப்பாட்டக்காரர்கள் அறியா வண்ணம் அவர் தங்கியுள்ள அறையருகே சென்றார். கதவைத் தட்டினார். ஆனால் எவனாவது வன்முறையாளனைத் தான் இருப்பானோ என்கிற எண்ணத்தில் கதவைத் திறந்திடவில்லை காமராசர்.

உடனே தமிழில் பேசினார் கதவைத் தட்டியவர். அந்தத் தமிழைக் கேட்டதும் தைரியம் வந்து விட்டது காமராசருக்கு! கதவைத் திறந்து விட்டார். அடுத்த கணமே அவருடைய கையைப் பற்றி இழுத்துக் கொண்டு வேறொரு பாதுகாப்பான இடத்துக்கு இட்டுச் சென்றார்.

அவர் மட்டும் அந்த நேரத்தில் அங்குச் சென்றிடாமல், துணிச்ச லோடு செயல்படாமல் போயிருந்தால்... நினைத்தாலே நெஞ்சம் பதறக் கூடிய நிலைதான்!

அன்று அந்தக் கொலை வெறியர்களிடமிருந்து காமராசரை மீட்ட கோதண்டபாணி என்னும் பெயருடைய அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அரிய தொண்டர்களில் ஒருவர்.

அந்தப் புதுடில்லி நிகழ்ச்சியைப் பற்றி 'ரசொலி' 8-11-66 இதழில் தீட்டிய தலையங்கத்தில் இவ்வாறு நான் குறிப்பிட்டேன்.

''...அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் டெல்லிப் பட்டணத்தில் திரு காமராசர் அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கெதிரே ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் நில்லாமல்; வீட்டுக்கே தீயிட்டுக் கொளுத்தியிருக்கிற கொடுஞ்செயலையும் காணுகிற நேரத்தில் பண்புடைய அரசியல்வாதிகள் பதறவே செய்வர்.

'பசுவதைத் தடுப்புச் சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று இரக்கத்தின் அடிப்படையில் கொள்கையை முழக்குகிறவர்கள், இப்படிப்பட்ட இரக்கமற்ற செயலில் ஈடுபட்டிருப்பது கண்டிக்கத் தக்கதாகும்.''

இதில் இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா?

காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருந்திட்ட போதிலும் காமராசர் தாக்கப்பட்டார் தறுக்கர்களால் என்கிற தகவல் எட்டியதுமே தவியாய்த் தவித்திட்டோம், தி.மு. கழகத்தைச் சார்ந்திட்ட அனைவருமே. ஒரு கழகத் தொண்டர் அவர் தம் உயிரினைக் காப் பாற்றிட துடியாகத் துடித்து ஓடியிருக்கிறார்; என்னைப் பேசன்றவர்கள் தயங்காமல் தொடுத்திட்டோம் கண்டனக்கணைகளை. ஏன்? இரத்த பாசம் தழுவிய இன்பப்பற்றுல்-மொழிப் பற்றுல்.

ஆனால் அதே சமயத்தில் இங்கே தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அறிஞர் அண்ணாவின் உயிரையே பறித்திடக் குண்டர்கள் ஏவி விடப்பட்டனர். அந்தக் கொலை முயற்சி நூலிழையில் தவிர்க்கப்பட்டது. அந்த வன்முறைச் சம்பவம் பற்றிக் கண்டனம் தெரிவித்திட இங்குள்ள எந்தக் காங்கிரஸ் தலைவரும் கடுகளவு கூடக் கவலைப் படவில்லை.

கண்டனந்தெரிவிப்பது இருக்கட்டும்; கிண்டலாவது செய்யாமல் இருக்கலாம் அல்லவா, வன்முறையாளர்களால் தாக்கப்படும் கழகத்தவரை? அதுவும் இல்லை.

அண்ணாவுக்கு வந்திட்ட ஆபத்து ஒருபுறம் இருக்க, நாவலர் தேனியில் உயிர் தப்பியபோதும் சரி, நான் செஞ்சி-கோட்டைபுரத்தில் கொலை வெறியர்களிடமிருந்து மீண்டபோதும் சரி, எங்கள்மீது அள்ளி வீசப்பட்ட ஏளனங்கள், ஏகடியங்கள்தான் எத்தனை, எத்தனை?

கட்சி வெறி இருக்க வேண்டியதுதான்; அதற்காக நடுநிலைச் சிந்தனையையே படுகுழியில் தள்ளிடும் அளவுக்கு —வன்முறை நிகழ்ச்சி களைக் கூடக் கண்டிக்கத் தயங்கிடும் அளவுக்குப் பெரிய மனிதர்களின்

கண்ணை மறைத்திட வேண்டுமா, கருத்தைச் சிதைத்திட வேண்டுமா அந்தக் கட்சி வெறி?

மராட்டியத்திலும், குஜராத்திலும் உள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களைச் சந்தித்திடவும், பம்பாய் ஆமதாபாத் முதலான நகரங்களில் தேர்தல் நிதியளிப்புக் கூட்டங்களில் கலந்துகொண்டிடவும் 12-11-66 காலை 9-10 மணி அளவில் சென்ட்ரல் நிலையத்திலிருந்து கிளம்பிய புகைவண்டியில் புறப்பட்டேன் சென்னை விட்டு.

நான் பம்பாய்ப் பெருநகரத்தை அடைவதற்குள்ளேயே வழியில் குண்டக்கல், பூனு, கிர்க்கி, கல்யாண் முதலான இடங்களில் கழகத் தோழர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்து தங்கள் அன்பு மழையிலே என்னை நீராட்டித் திளைத்தனர்.

பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் ரயில் நிலையத்தினுள் புகை வண்டி நுழைந்தபோதே கழகத் தோழர்கள் எழுப்பிய வாழ்த்து முழக்கங்கள் அந்த வண்டியில் பயணம் புரிந்திட்ட அத்தனை பேருடைய கவனத்தையுமே ஈர்த்திடும் வண்ணம் எதிரொலி எழுப்பின.

கரங்களிலே கழகக் கொடியினை ஏந்தி, ஆயிரக்கணக்கில் அந்தப் புகை வண்டி நிலையத்தையே ஆக்கிரமித்து நின்றிட்ட காளையர்களைக் கண்டபோது, நான் மராட்டிய மாநிலத்திற்குத் தான் வந்திருக்கிறேனா, இல்லை, தமிழகத்திலேதான் இருக்கிறேனா என்கிற உணர்வு என்னுள் எழுந்தது.

அந்தப் புகை வண்டி நிலையமே அதிர்ந்திடும் வகையில் எனக்கு வழங்கப்பட்ட வரவேற்பினை, அணிவிக்கப்பட்ட மாலைகளைக் கைத்தறி ஆடைகளைப் பல வடநாட்டுக்காரர்களும் கூட ஏன் வெளிநாட்டுக்காரர் களும்கூட வேடிக்கை பார்த்தனர் வியப்போடு.

பின்னர், திறந்த காரில் அமர்ந்தவாறே கழகத் தொண்டர் படையினரின் அணிவகுப்பைப் பார்வையிட்டேன்.

பம்பாய் சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் நான் தங்கிக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர் கழகத் தோழர்கள்.

ஆனால், ரயில் பம்பாயை அடைவதற்குத் தாமதமாகி விட்டதால், என்னால் விடுதிக்குச் சென்று களைப்புக்கு விடை கொடுத்திட ஒய்வு எடுக்க முடியவில்லை.

மாலை நான்கு மணிக்குத் திட்டமிட்டபடியே கிளம்பிய ஊர் வலத்தில் உடனடியாக நான் கலந்துகொள்ளும்படி ஆயிற்று.

மாதுங்கா-'போதர்' கல்லூரிக்கு எதிரிலிருந்துதான் ஊர்வலம் புறப்பட்டது. மூன்றரை மைல் கடந்து தாராவியைச் சென்று அடைந்தது.

வழியெங்கணும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது.

மாதுங்காவும் தாராவியும்தான் பம்பாயில் தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்திடும் பகுதிகள். அவர்கள் அங்கே கூட கோபுரங்களிலே கோலாகலமாக வாழ்ந்திடவில்லை. குடிசை வாழ் மக்களாகவும் அவர்கள் குடல் எரிந்திட-உடல் நலிந்திடத்-தங்கள் வாழ்க்கை வண்டியினைத் தள்ள முடியாமல் தள்ளிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

தமிழகத்திலிருந்து சென்ற என்னைக் கண்டதும் அவர்களுக்குத்தான் எத்துணை அன்புப் பெருக்கு! இதய மலர்ச்சி! அதனை வெளிப்படுத்திடும் வகையில் வழிநெடுக இருபுறங்களிலும் நின்றவாறும், தங்கள் இல்லங்களில் இருந்தவாறும், முதியவர், பெண்டிர், குழந்தைகள் எல்லாரும் என்னை நோக்கிச் செய்த கையசைப்புகளை-உற்சாகக் கண் பார்வைகளை -என்னவென்று சொல்வேன்!

பல தோழர்கள் காரில் சென்றுகொண்டிருந்த என் கரத்தினைக் குலுக்கிட முண்டியடித்துக்கொண்டு வந்தனர். அவர்களைக் கட்டுப்படுத்திடத் தொண்டர் படையினர் முற்பட்டபோது, அவர்கள் வேறொரு யுக்தியை கையாண்டனர். தேர்தல் நிதி அளித்திட்டால் தாராளமாகக் கை குலுக்கலாமே எனக்கருதி, ஒவ்வொரு ரூபாயாக வழியெங்கும் தேர்தல் நிதி அளித்து என் கையைத் தொட்டுவிட்டுச் சென்றனர்.

ஆங்காங்கே தென்பட்ட அலங்கார வளைவுகள்-என் தலைமீது பொழியப்பட்ட மலர் மாரிகள்-என்னுடைய பயணக் களைப்பையெல்லாம் கூடப் பறந்தோடச் செய்துவிட்டன.

மக்களோ கட்டுப்படுத்த முடியாத அளவுக்குக் கடலெனத் திரண்டிருந்தனர்.

அந்தக் காட்சியினைக் காண்பதற்கு மாற்றுக் கட்சியினருக்குப் பொறுக்க முடியவில்லை போலும்!

எனவே கூட்டம் நடைபெறுமல் செய்யும் பொருட்டு, முன்பே காவல் துறையினரை அணுகித் தடை விதித்திடுமாறு விண்ணப்பித்திருக்கின்றனர். கடைசி நேரத்தில் அந்தக் கூட்டத்திற்குத் தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாய்க் கழகக் கண்மணிகள் போலீஸ் கமிஷனரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கிக் கூறிய பின் அந்தத் தடையுத்தரவு நீக்கப்பட்டுக் கூட்டம் நடந்திட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இத்துணை இடர்களை வினைவித்தது போதாது என்று நான்கு செத்த நாய்களைக் கூட்டம் நடக்கும் இடத்தருகே கொண்டு வந்து போட்டிருக்கின்றனர் காங்கிரசார்.

தாராவிவாழ் மக்களுக்கு நாற்றம் ஒன்றும் புதிதல்ல. சாக்கடை ஓடிடும் வீதிகளிலேயே நடமாடிப் பழக்கப்பட்ட அவர்களுக்கு, தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வரும் பிண நாற்றத்தையே வாழ்நாளெல்லாம் சகித்துப் பழக்கப்பட்ட அவர்களுக்கு, அந்தச் செத்த நாய்களின் நாற்றந்தானு அவர்களுடைய கழகப் பற்றைக் குறைத்திடப் போகிறது? கூட்டத்திற்கு வராதபடி தடுத்திடப் போகிறது?

எனவே பல்லாயிரக்கணக்கான எண்ணிக்கையில் அங்கே திரண்டுதான் இருந்தனர் பொதுமக்கள். தேர்தல் நிதியினையும் வாரி வாரி வழங்கினர். பன்னிரண்டாயிரம் ரூபாய்வரை தேர்தல் நிதியாக என்னிடம் வழங்கப்பட்டது.

ஒரு தோழர் புதுமையான இத்தாலியக் கோழி ஒன்றைத் தேர்தல் நிதிக்கு அளித்தார். அதனை ஏலம் விட்டதில் ரூ. 192 வரை போட்டி போட்டுக்கொண்டு தோழர்கள் எடுத்தனர்.

இவ்வாறு பம்பாய்த் தோழர்கள் கரட்டிய ஆர்வமும் அக்கறையும் எனக்குப் பன்மடங்கு உற்சாகம் ஊட்டின.

இந்தியாவிலேயே ஆலைகள் நிறைந்திட்ட- ஆடைகள் நெய்து குவிக்கின்ற- நகரமாம் ஆமதாபாத்துக்கு நான் வரவேண்டுமென்றும் வற்புறுத்தினர் அங்குள்ள கழகக் கண்மணிகள்.

அவர்களுடைய அழைப்பினை ஏற்று 14-11-66 அன்று காலை ஏழு மணி அளவில் பம்பாயிலிருந்து ஆமதாபாத்துக்குப் புறப்படும் விமானத்தில் சென்றிட நான் ஆயத்தமானேன்.

ஆனால் விமானமோ குறிப்பிட்ட நேரத்தில் கிளம்பிடவில்லை. ஏதோ பழுது பட்டிருப்பதாகவும், பதினெரு மணிக்குத் தான் அது புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

காலை 8-20 மணிக்கே ஆமதாபாத்தை அடைந்திட வேண்டிய நான் திட்டமிட்டபடி செல்ல முடியாமற்போனதால் பம்பாய் விமான நிலையத்தில் இருப்பே கொள்ளாமல் தவியாய்த் தவித்தேன். குஜராத் மாநிலத்தில் வாழும்கொள்கைத் தங்கங்கள் குறித்த நேரத்தில் நான் வராமையால் ஏமாற்றத்துக்கு இ[illegible]க்காகி இருப்பரே என்கிற கலக்கமும் என்னை வாட்டிற்று.

மணி பதினென்றைத் தாண்டிற்று; அப்படியும் பறந்திடவில்லை விமானம், முன்னர் முழங்கிய அறிவிப்புப்படி.

'பகற்பொழுது முழுவதும் பயனில்லாமல் கழிந்து விட்டதே!' என்கிற வேதனை வேலெனத் துளைத்தது என் நெஞ்சினை.

மாலை ஐந்து மணி அளவில்தான் பின்னர் விமானம் கிளம்பிற்று பம்பாயிலிருந்து.

நான் ஆமதாபாத்தை அடைந்திட்ட பொழுது இரவு மணி ஏழு.

எனினும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தோழர்கள் என் வருகைக்காகக் காத்திருந்தனர். வாழ்த்தொலிகள் எழுப்பி வரவேற்றனர்.

காலை ஏழு மணிக்கே ஆமதாபாத் விமான நிலையத்துக்கு அலை அலையாய் வந்து விட்ட இலட்சிய வைரங்கள் அவர்கள்; ஏறத்தாழப் பன்னிரண்டு மணி நேரம் கால் கடுத்திடக் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

கொளுத்தும் வெயில்; பசியால் கொதிக்கின்ற வயிறு; எனினும் கழகத்தின்பால் அவர்கள் கொண்டிருந்த பாசம் குன்றிடவில்லை! அதனால்தான் வெட்ட வெளியான அந்த விமான நிலையத்தில் ஆடவர்கள் மட்டுமின்றி அருப்புகளைச் சுமந்திட்ட அன்னையரும் நின்றிருக்கின்றனர் வெகு நேரமாக!

தமிழ்ப் பெருங்குடியினர் அவ்வாறு பெருந்திரளாய்க் குழுமியிருந்ததைக் கண்ட விமான நிலைய அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் தங்கள் ஆச்சரியத்துக்கு அணை போட்டுக் கொள்ள முடியவில்லை போலும்!

"தி. மு. கழகத்தின் வளர்ச்சி ஆமதாபாத்திலேயே இப்படி என்றால், தமிழகத்தில் எப்படி இருக்கும்!" என்று இரண்டொருவர் வாய் விட்டே தங்கள் வியப்பினை வெளிக்காட்டியிருக்கின்றனர், நம் கழகத் தோழர்களிடம்.

ஆமதாபாத்தில் மணிநகர் என்பது தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்திடும் பகுதியாகும். அங்கு நான் சென்றிட்ட போது, ஆடி வெள்ளம் போல் ஓடி வந்தது மக்கள் கூட்டம். அதனைக் கட்டுப்படுத்தி எனக்கு வழியமைத்துக் கொடுப்பதற்குள் காவல் துறையினரும் கழகத் தொண்டர்களும் படாதபாடு பட்டனர்.

மணிநகர் வட்டத் தி.மு. கழகத்துக்குச் சொந்தமான இல்லத்தைப் பார்வையிட்ட பின் அதில் இரு வண்ணக் கொடிகளை ஏற்றி வைத்து விட்டு இன்னொரு புதிய இல்லத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டுவிட்டுத் தேர்தல் நிதியளிப்பு விழாக் கூட்டத்தில் உரையாற்றிட நான் விரைந்து சென்றேன்.

ஆமதாபாத்தில் காங்கரியா அம்பிகா ஆலை 2-ஆம் எண் அருகில் அருகில் அழகிரி அண்ணன் அவர்கள் பெயரால் அமைந்திடும்

திடலில்தான் அந்தத் தேர்தல் நிதியளிப்பு விழா சிறப்பாக நடை பெற்றது. தேர்தல் நிதியாக ரூ. 11,500 கிடைத்தது.

மறுநாள் நான் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஆமதாபாத் திலுள்ள செய்தியாளர்கள் என்னைப் பேட்டி காண வந்தனர். சிக்கலான கேள்விகளையெல்லாம் தொடுத்தனர். எனினும் தக்க விடைகளை அளித்தேன். தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த சமயமாதலால், கேள்விகள் பெரும்பாலும் அந்தத்திசை நோக்கியே அமைந்திருந்தன. தமிழகத்தில் காங்கிரஸ் கப்பல் கவிழ்ந்து விடுமோ என்கிற கலக்கமும் அவர்கள் தொடுத்திட்ட வினுக்களில் தொனித்தது.

அந்தச் செய்தியாளர்களுக்கிடையே நான் அளித்திட்ட விடை களின் சுருக்கம் இதுதான்:

''...தமிழகத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக், சுதந்திரா ஆகியவற்றுடனும், பிற கட்சிகளுடனும் தி.மு. கழகம் தேர்தல் உடன்பாடுகளைச் செய்து கொள்ளவிருக்கிறது; பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்துள்ளன. ஆனால் யார் யாருக்கு, எந்தெந்த இடங்களை ஒதுக்குவது என்பது இதுவரை முடிவாகவில்லை.

''மக்களின் மனோநிலையைக் கணித்துப் பார்த்திட முயன்றதில் வருகின்ற (1967) பொதுத் தேர்தலில் தமிழக மாநில சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அதிகமான இடத்தைப் பெறும் என்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் பெறக்கூடிய இடங்கள் இவ்வளவுதான் என்று குறிப்பிட்டுச் சொல்லி விட முடியாது.''

சிவசேனை பற்றியும் என் கருத்தினைக் கேட்டனர் அச்செய்தி யாளர்கள். அந்தக் கேள்விக்கு இப்படித்தான் நான் பதில் சொன்னேன்:

''மராட்டியர்களிடம் தமிழர்களுக்கு என்றுமே அன்பு உண்டு. அவர்களது வீரத்தை மதிக்கிறோம்; 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்று சிவாஜியின் வரலாற்றை எழுதித் தாமும் வேடம் பூண்டு நாடகமாக நடத்தி தமிழகமெங்கும் சிவாஜியின் வீரத்தைப் புகழ்ந் துரைத்த பெருமை எங்கள் தலைவர் அண்ணாவுக்கு உண்டு.

''மராட்டியர்களிடம் எங்களுக்குப் பற்றே தவிர வெறுப்புக் கிடை யாது. மேலும் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு, வெளி மாநிலங்களுக்குச் சென்றிருப்பது யாரையும் சுரண்டுவதற்காக அல்ல. அவர்கள் சுரண்டுவது தங்கள்வரண்ட தோலையும் எண்ணெய்இல்லாத தலையையுந் தானே தவிர வேறு யாரையும் அல்ல. அவர்கள் உழைத்துக் கூலி

வாங்கும் தொழிலாளிகள்; தங்கள வாழ்வை நகர்த்தத்தான் அவர்களி வெளி மாநிலங்களுக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே தமிழர்களைக் காப்பாற்றுவது மராட்டிய அரசாங்கத்தின் கடமையாகும்.''

என்னுடைய இந்தக் கருத்து விளக்கம் சற்றுத் திகைப்பையே கொடுத்திருக்கலாம் அந்தச் செய்தியாளருக்கு. ஏனெனில், தமிழர்களைத் தாக்கிடும் சிவசேனைமீது நான் சீற்றத்தைக் காட்டுவேன் என்றே அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம்; அன்றையச் சூழ்நிலையில் அது இயற்கையும் கூட.

நானே தங்களுடைய மாநிலத்தில் மற்ற மாநிலத்தவரின் ஆதிக்கம் ஓங்குவதா என மனங்குமைந்திட்ட சிவசேனையையோ அதன் தலைவர் பால் தாக்கரேயையோ வசை பாடிடவில்லை; தரம்தாழ்ந்து தனிப் பட்ட முறையில் இழித்துரைத்திடவில்லை. மாருக மராட்டியமக களின் மன்னர் சிவாஜியின் மாட்சிமையையே போற்றிப் புகழ்ந்தேன். அத்தகைய உன்னத பரம்பரைக்கு உரிமையுள்ளவர்கள் ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஊறு விளைவிக்கலாமா என்று சிந்திக்குமாறுதான் அச் செய்தியாளர்கள் கூட்டத்தில் கேட்டுக் கொண்டேன்.

பின்னர் ஆமதாபாத் நகரைவிட்டு 15-11-66 அன்று பிற்பகல் 12-10 மணியளவில் பம்பாய் வந்து சேர்ந்தேன் விமானம் மூலம்.

பம்பாயில் மன்கூர்டு என்னும் இடத்தில் 16-11-66 அன்று சிறப்புக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடாகியிருந்தது.

துறைமுகத் தொழிலாளிகள் பெரும் எண்ணிக்கையில் உறைந் திடும் பகுதியே மன்கூர்டு. அங்குள்ள தோழர்களின் ஆர்வமோ கங்கு கரையற்றுப் பொங்கி வழிந்தது; போட்டி போட்டுக் கொண்டு தேர்தல் நிதி வழங்கினர். அறுபது வயது மூதாட்டி ஒருவரும், கோழி ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார் தேர்தல் நிதிக்கு. அங்கே கூட்டம் முடிவுறுவதற்கு இரவு 12-30 மணியாயிற்று.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பெருமைக்குரியதாகும்.

18-11-66 அன்று அச்சங்கத்தினர் எனக்கு வரவேற்பு அளித்தனர், வற்ருத வாஞ்சையோடு.

சங்கத்தின் பொறுப்பாளராகச் செயலாற்றிய திரு கந்தசாமிக்கு நான் எங்கே அரசியல் பற்றிப் பேசி விடுவேனே என்கிற அச்சம் போலும்! என்னை விமான நிலையத்தில் கண்டு அழைத்த போதும், தொலைபேசியில் உரையாடிய போதும் அதனை அவர் சூசகமாகத் தெரிவித்தார்.

அந்த அருமை நண்பரின் அச்சம் அவசியமற்றதாகவே எனக்குத் தோன்றியது.

எனவே அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் இவ்வாறு எடுத்து வைத்தேன் என் எண்ணத்திற்கு சரியென்று பட்டதை:

''இலக்கியமும் அரசியலும் பிரிக்க முடியாதவைகளாகும். இலக்கியத்திலிருந்து அரசியலைப் பிரிக்க வேண்டுமென்றால் தமிழ் இலக்கியத்தில் அறமாக விளங்கும் திருக்குறளில் சில பக்கங்களைக் கிழித்து விட்டுத்தான் படிக்க வேண்டும்.....''

தமிழர்களின் ஒப்பற்ற இலக்கியமாய்ப் - பொது மறையாய்ப் - புத்தொளி பரப்புவது திருக்குறள். அதிலேயே அரசியலைப் புறக்கணிக்காதது மட்டுமல்ல. நடுநாயகமான சிறப்பிடத்தையே அதற்கு வழங்கியிருக்கிறார் வள்ளுவர். அதனைக் கருத்திற்கொண்டே அரசியல் என்றதுமே அஞ்சி நடுங்குவோருக்கு, அருவருப்பைக் காட்டுவோர்க்குத் தெளிவினை அளித்திடவே, அந்த வரவேற்புக் கூட்டத்தில் அவ்வாறு பேசினேன்.

பம்பாய், ஆமதாபாத் நிகழ்ச்சிகளை ஒருவாருக முடித்துக் கொண்டு 19-11-66 மாலை ஆறு மணி அளவில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தபோது என்னைத் திணறிடச் செய்தது இங்குள்ள நண்பர்களின் வரவேற்பு.

125

இலக்கியத்தில் பிரச்சாரமா?

'இலக்கியத்தைப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தலாமா?' என எதிர்ப்புக் குரல் கொடுப்போரும் இந்த நாட்டில் இல்லாமல் இல்லை.

ஏதாவது ஓர் இலக்கினை வகுத்துக் காட்டி அதனை நோக்கி மனித மனத்தை இட்டுச் சென்று சிந்திக்கத் தூண்டுவதற்காக எழுதப்படுவதே இலக்கியம்.

அவ்வாறு ஓர் எழுத்தாளனை, கவிஞனை தேர்ந்தெடுக்கின்ற இலக்கு மனிதப் பண்பாட்டுக்கு மணம் சேர்ப்பதாகவும் இருக்கலாம். சமுதாய அழுக்குகளைச் சலவை செய்வதாகவும் விளங்கலாம். அரசியல் இருட்டில் ஒளியேற்றுவதாகவும் அமையலாம்.

இத்தகைய அடிப்படை நோக்கங்களைப்—பொதுத் தேவைகளை - உன்னிப்பாக ஊன்றிப் பார்க்க மறுப்பவர்கள்தான் இலக்கியத்தில் பிரச்சாரமா - என்கிற வறட்டுக் கேள்வியினை எழுப்புவார்கள் என்பது என் கருத்து.

என்னைப் பொறுத்தவரை மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டிடத் தடுமாறும் நெஞ்சங்களுக்குத் தக்கதோர் வழிகாட்ட அடாத செயல் புரிவோரின் அழுக்கு நினைவுகளை அகற்றிட ஏற்புடைய கருவியாகத் திகழ்வது இலக்கியமே.

அதுவும் நாடக இலக்கியம்போல விரைந்து மனமாற்றம் உண்டாக்கக்கூடிய ஆற்றல் வேறு எதற்கும் அவ்வளவாக இல்லை.

அதனால்தான் அரசியல் கருத்துக்களைப் பண்பாடு கெடாமல் தரம் தாழாமல் அள்ளித் தெளிப்பதற்கு நாடக இலக்கியத்தை நல்லதோர் கருவியாக - வல்லமை வாய்ந்த சக்தியாக - நான் பயன்படுத்திட எண்ணினேன்:

அந்த வகையில் நான் எழுதிய நாடகங்களில் ஒன்றுதான் 'மணி மகுடம்'. மக்களாட்சி நெறிமுறையே மலர்ந்திட வேண்டும். அதற்குரிய மதிப்பினையும் அளித்திட வேண்டும் என்பதனை வலியுறுத்தி எழுதப்பட்டதே அந்த வரலாற்று நாடகம். அரசியல் பயணத்தில் சந்திக்கக்கூடிய சக்திகள், சந்தேகங்கள், திருட்டுத்தனங்கள், அவற்றையும் மீறிய தியாகச் சுடர்கள் முதலான பல கோணங்களையும் சித்திரிக்க முயன்றிருந்தேன் அந்நாடகத்தில்.

ஆயிரக்கணக்கான மேடைகளில் பல ஆண்டுகள் நடிக்கப் பெற்ற அதனைத் திரைப்படம் ஆக்கிட விழைந்தார் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன். அதற்கு என் இசைவினை அளித்ததுடன் திரைப்படத்திற்கேற்ற உரையாடலையும் தீட்டித் தந்தேன்.

அந்த 'மணிமகுடம்' திரைப்படம் 9-12-66-இல் வெளியிடப் பட்டது. அதனையொட்டிச் சென்னை காமதேனு தியேட்டரில் விழா ஒன்றும் நடைபெற்றது.

அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள். சிலம்புச் செல்வர் ம.பொ. சி., டாக்டர் மு. வரதராசனார், ஏ. எல். சீனிவாசன், சி.பா. ஆதித்தனார், டி.கே. சண்முகம், நாரண துரைக்கண்ணன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

தலைசிறந்த தமிழ் எழுத்தாளரான திரு நாரண துரைக்கண்ணன் பேசும் பொழுது-

''நல்ல வசனமும் நல்ல கதையும் உள்ள படம் இது. ஜனாதிபதி பரிசுக்குரிய படம் இது. நிச்சயம் இதற்கு ஜனாதிபதி பரிசு கிடைக்க வேண்டும்!" என்று கூறினார்.

அதைப் பற்றி அண்ணா அவர்கள் தமது பின்னுரையில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

''இந்தப்படத்திற்கு ஜனாதிபதி பரிசு கிடைக்க வேண்டும் என்று இங்கே பேசியவர்கள் கூறினார்கள். இப்படத்திற்கு இங்கே பேசிய கருத்துச் செல்வர்கள் அளித்த (பாராட்டுப்) பரிசு ஜனாதிபதிப் பரிசைவிடப் பெருமைவாய்ந்தது. இவர்கள் ஜனாதிபதியாக இல்லாத தாலேயே ஜனாதிபதியாகும் தகுதி பெறுதவர்கள் என்று பொருள் அல்ல.

''இந்தப் படத்திற்கு ஜனாதிபதி பரிசு கிடைப்பதற்குள் இப்போதே பத்து ஜனாதிபதிகளின் பரிசுகள் கிடைத்து விட்டன!''

திரைப்படங்களுக்கு ஜனாதிபதி பரிசுகள் அறிவிக்கப்படும் பொழுதெல்லாம் அண்ணா 'மணி மகுடம்' விழாவிலே உதிர்த்திட்ட அந்த மணி மொழிகள் என் செவிகளில் எதிரொலிப்பது உண்டு.

நகைத் தொழிலாளர் மாநாடு ஒன்று சென்னையில் 26-12-66 அன்று நடைபெற்றது.

வழக்கறிஞர்கள் ந. கணபதி, சுப்பையா, அதியமான் முதலானவர் களின் முயற்சியோடு நிகழ்ந்திட்ட அம் மாநாட்டில் வெள்ளிக் கேடயம் ஒன்றை வழங்கினார்கள். 'பூம்புகார்' படத்தில், நகைத் தொழிலாளிகள் மீதுள்ள பழியைத் துடைத்திடும் வகையில் உரையாடல் தீட்டியதற் காகவே அந்தப் பரிசு எனக்கு அளிக்கப்பட்டது.

126

விருகம்பாக்கம் மாநாடு

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் சென்னை விருகம் பாக்கத்தில் நடைபெற்ற நான்காவது பொது மாநாட்டுக்குச் சிறப்பான இடமுண்டு.

நாட்டு மக்களின் கவனத்தையெல்லாம் ஈர்த்திடும் வகையில் மாற்றுக் கட்சிகளைச் சார்ந்த அனைவரும் மலைத்திடும் அளவில் நான்கு நாட்கள் நடைபெற்றிட்ட அந்த மாபெரும் மாநாடு 1966 டிசம்பர் 29-இல் தொடங்கிற்று.

அண்ணா அவர்கள் தலைமை தாங்கிய அந்த மாநாட்டினைத் திறந்து வைத்து உரையாற்றிடும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. கொடியேற்றிடும் பொறுப்பு காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. கழகத்தின் வளர்ச்சிக்கென தங்கள் உயிரையே காணிக்கையாக்கிய தீரமறவர்களைத் - தியாகிகள் கோட்டத்தினைச் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு திறந்து வைத்தார். கலைக் கண்காட்சியினைத் திறந்து வைத்திடும் பொறுப்பைத் திரு ஏ. கோவிந்தசாமி ஏற்றிருந்தார்.

அந்தப் பொது மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகச் சென்னை தீவுத் திடலை விட்டுப் புறப்பட்ட அன்றைய ஊர்வலத்தில் ஏறத்தாழ முன்று லட்சம் பேராவது கலந்துகொண்டிருப்பர். அது சென்றிட்ட பாதையின் இருமருங்கிலும் மாடிக் கட்டடங்களிலும் மரக்கிளைகளிலும் அமர்ந்த வண்ணம் அதன் அணிவகுப்பு மாட்சியினைப் பார்த்துக் களித்திட்டோர் பல லட்சம் இருப்பர்.

கழகத்தின் அறப் போராட்டங்களை, கதியற்ற மக்களின் கண்ணீர் வெள்ளங்களை, அதிகார வெறி கொண்டோரின் அடக்குமுறை அச்சுறுத்தல்களை, சதிகாரர் சிலரின் மொழி ஏகாதிபத்திய முயற்சிகளை எழில் மேலிடச் சித்தரித்திடும் நூற்றுக்கும் மேற்பட்ட அலங்கார 'டிரக்' வண்டிகள், ஐந்நூற்றுக்கும் அதிகமான பஸ், லாரிகள், பத்தாயிரத்துக்கும் கூடுதலான மிதி வண்டிகள் ஊர்வலத்தைக் கண் கொள்ளாக் காட்சி ஆக்கின.

தீவுத் திடலுக்கும் பொது மாநாட்டிற்கென விருகம்பாக்கத்தில் பொலிவோடு அமைக்கப்பட்ட 'நீலமேகம் நகருக்கும்' இடையே ஊர்வலம் சென்றிட்ட பாதையின் நீளம் ஏழு மைல் இருக்கலாம்;

ஊர்வலத்தின் நீளமோ ஐந்து மைல் இருக்கும்! ஊர்வலம் ஓர் இடத்தைக் கடந்திட இரண்டு மணிநேரம் பிடித்தது.

தொண்டர் படைத் தலைவராகக் கே.எம். கண்ணபிரான் தானைத் தளபதிபோல் உடுப்பணிந்து ஊர்வலத்தை நடத்திச் சென்றார். நடிகர்கள் எம். ஆர். ஆர். வாசு, ஆனந்தன் ஆகியோரும் குதிரை மீது அமர்ந்து ஊர்வலத்தில் வந்தனர்.

மாநாட்டுத் தலைவர் அண்ணா அவர்களும், தலைமை நிலையச் செயலாளர்களும், மாநாட்டுப் பொறுப்பாளர் நாவலரும், கொடியேற்றும் காஞ்சி கல்யாணசுந்தரனாரும், வரவேற்புக் குழுத்தலைவர் நீலநாராயணனும், நானும் தேர்போல் அழகுற அமைக்கப்பட்டிருந்த ஓர் ஊர்தியில் அமர்ந்து சென்றோம்.

பிற்பகல் 3-30 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் இரவு 9-30 மணிக்குத்தான் போளூர்—சுப்பிரமணியம் பெயரில் அமைந்த மாநாட்டுப் பந்தலை அடைந்திட முடிந்தது.

சுதேசமித்திரன், மெயில், இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற கழகச் சார்பற்ற ஏடுகளே ஊர்வலச் சிறப்பினை உளந்திறந்து அப்போது பாராட்டின.

'சென்னை நகரில் தி.மு.க.வின் செல்வாக்கு எவ்வளவு என்பதைப் பற்றி வோட்டுப் பெட்டிதான் தீர்ப்பளிக்க முடியும். பிப்ரவரி (1967) கடைசி வாரத்தில் அந்தத் தீர்ப்புத் தெரிந்து விடும். ஆனால், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களே மாத்திரம் வைத்துக்கொண்டு தீர்ப்பளிக்க முடியுமென்றால், நகரில், தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்லிவிடலாம். அவ்வளவு பிரும்மாண்டமான முறையில் இன்று ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.'

—என்று 'தினமணி' ஏடே ஊர்வலத்தைப் பற்றித் தீர்க்க தரிசனத்தோடு வர்ணித்திருந்தது.

நெருங்கிக் கொண்டிருக்கும் பொதுத் தேர்தலில் பொதுமக்களின் நேசக்கரம், நெஞ்சார்ந்த ஆதரவு எந்தக் கட்சியின்பால் நிற்கிறது என்பதற்குரிய படப்பிடிப்பாகவும் விளங்கிற்று அந்த பவனி; எனவே மாற்றுக் கட்சி நண்பர்கள் மருண்டிடத் தக்க வகையிலேயே அன்றைய ஊர்வலத்தின் மாட்சிமை அமைந்திருந்தது என்றாலும் மிகையில்லை.

மாநாடு நடைபெறுவதற்கு ஒரு திங்களுக்கு முன்னர், மாவட்டங்கள்தோறும் ஆங்காங்கே நிகழ்ந்த தேர்தல் நிதியளிப்புக் கூட்டங்களில் கலந்துகொண்டுவிட்டு நான் சென்னைக்குத் திரும்பிய சமயம்.

வழக்கம்போல் அண்ணா அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்த என்னை,

''ஏறு, காரிலே!''

—என்றார் அவர்.

''எங்கே அண்ணு, எதற்கு அண்ணு?''

—என்றெல்லாம் விஞக்களே ஷீசவில்லே நான்; அவர்தம் பரந்த முகத்தையே பார்த்தேன்.

''மாநாட்டுக்காக ஓர் இடத்தைப் பார்த்து வைத்திருக்கிறேன். அதை உனக்கும் காட்டிவிட வேண்டும் என்று நினைத்தேன். அங்கே தான் இப்போது நாம் போகிறோம்''

—என்றார் அண்ணு.

கார் பறந்தது.

சில மைல்கள், சில மணித்துளிகள் கடந்திட்ட பிறகு, கார் நின்றது, சாலையில் ஓர் ஓரமாக.

அண்ணு இறங்கி நடந்தார்; நானும் அவரைப் பின் தொடர்ந்தேன்.

ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு பரந்த வெளி.

அதனைக் காட்டி—

''இதுதான் மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம்'' என்றார்.

எனக்கே சற்று மலைப்பாக, திகைப்பாகவே இருந்தது. ஏனெனில் பார்க்கும் இடமெங்கும் பள்ளங்கள், மேடுகள், குன்றின் முகடுகள் போல் கற்களின் குவியல்கள். இடையிடையே இரண்டாள் உயரத்திற்கு மேல் மரம், செடி, கொடிகள், கள்ளிப் புதர்கள்!

அந்தப் பகுதியின் அலங்கோலத்தைப் பார்வையால் அளந்திடும் போதே அண்ணு மேலும் தொடர்ந்தார்:

''இங்குதான் மாநாட்டை நடத்தியாக வேண்டும். நாவலரிடத்தில் சொல்லிவிட்டேன். என்.வி.என். இடமும் இந்த இடத்தைக் காட்டி விட்டேன். மற்றவர்களும் பார்த்துவிட்டனர். நீயும் பார்த்துக்கொள். இந்த இடம் மாநாடு நடைபெறுவதற்குரிய எழிலான பூமியாக மாற வேண்டும்.''

அண்ணு ஆணையிட்டு விட்ட பிறகு அதற்கு அட்டியேது? தயக்கம் ஏது? புதர்கள் மண்டிக் கிடந்த அந்த மலைப்பாங்கான மண், புதுமைச் சிந்தனைகள் மண்டிடும் பொலிவு மிக்க 'நீலமேகம் நகர்' ஆக மாற்றப் பட்டு விட்டது, மாநாட்டிற்காக! அதுவும் பதினைந்தே நாட்களுக்குள்!

இதைப்பற்றி, மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் என்னுடைய திறப்புரையின்போது இவ்வாறு குறிப்பிட்டேன்:

''தண்பார்களே! காடாகக் கிடந்த இந்த இடத்தைக்-கரு நாகங்கள் ஊர்ந்துகொண்டிருந்த இந்த இடத்தைத் தொட்டால் தேளும், தீண்டினுல் நட்டுவாக்கிளியும் வரவேற்றுக் கொண்டிருந்த இந்த இடத்தைப் பதினேந்தே நாட்களில் எழில் மிக்க பூமியாக, நீங்கள் எல்லாரும் அமர்ந்து களிக்கும் இடமாக, மாநாட்டுப் பந்தலாக மாற்றி யிருக்கிறேம். இதே நேரத்தில், அறிஞர் அண்ணு ஆணையிட்டால் காங்கிரஸ் ஆட்சியினுல் காடாகிப் போய்விட இந்த நாட்டை, ஏன் எழில் மிக்க பூமியாக மாற்ற முடியாது என்று என்னரும் நண்பர்களே, நீங்களே ஒரு முறை கேட்டுப் பாருங்கள்!

''நீங்கள் கேட்கின்ற இந்தக் கேள்விகளின் எதிரொலி, நாடாளு கின்ற காங்கிரஸ்காரர்களின் செவிப் பறைகளேத தட்டட்டும். அவர்க ளெல்லாம் தம் காலம் முடிவடைந்து விட்டது என்ற கணக்கைப் பார்த்துக் கொள்ளட்டும்; பிரிவு உபசாரப் பத்திரத்தைத் தமிழ் நாட்டு மக்களிடமிருந்து வாங்கக் காங்கிரஸ் ஆளவந்தார் தயாராகிக் கொள்ளட்டும்.

''இதைத்தான், காடாகிக் கிடந்த இந்த நிலம், எழில் பூமியாக மாற்றப்பட்ட இந்தச் சிறு சரித்திரம் நமக்கெல்லாம் சொல்லிக் கொண் டிருக்கிறது.''

அந்த விருகம் பாக்கம் மாநாடு இயக்கத் தோழர்களுக்கு விறுவிறுப் பான எழுச்சியினே ஊட்டியதோடு வேற்று முகாம்களில் உள்ளோரும் வியப்புக் கடலில மிதந்திடும் வண்ணம் பல்வேறு சிறப்பியல்புகளேக் கொண்டதாகவும் விளங்கிற்று.

ஒரு தனிப்பட்ட கட்சியினர் நடத்திய மாநாடுதான் எனினும் பிற தோழமைக் கட்சிகளேச் சார்ந்திட்ட அரும் பெரும் தலைவர்களான—

மூதறிஞர் ராஜாஜி

காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

முதலானேரும்,

கேரள மாநிலத் தலைவர்களான

முகமது கோயா

பாஃபகி தங்கல்

—ஆகியோரும் அந்த மாநாட்டின் பெருமைக்கு மகுடம் சேர்த்தனர்.

அப்போது மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வெளியிட்ட ஒரு கருத்து எப்போதும் என் செவிகளிலே எதிரொலிப்பது உண்டு;

''இப்போதைய (இந்தியப்) பொருளாதாரம் மிகவும் சீர் கெட்டிருக்கிறது. காங்கிரசின் அரசியல் அழுகிய பழமாக ஆகிவிட்டது. அதை அகற்ற வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சிகள் உடன்பாடு செய்து கொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சி அணி நிச்சயம் வெற்றி பெறும்.

''எனது வாழ்நாளில் எனது கட்சியை அல்லது கூட்டத்தைச் சேராத மக்கள் என்னிடம் இவ்வளவு பற்று வைத்திருப்பதை நான் பார்த்ததே கிடையாது. அதை நான் இப்போது என் கண் முன்னால் காண்கிறேன்.

''தி. மு. க. தம்பிகளுக்கும் அவர்களது பேரன்மார்களுக்கும் எனது மனப்பூர்வமான ஆசி.''

முன்னாள் கவர்னர்ஜெனரல் அவர்களின் இந்த உளந்திறந்த உரையினைக் கேட்டு நாங்கள் அடைந்திட்ட புளகாங்கிதத்திற்கு—பூரிப்பிற்கு எல்லையே இல்லை.

சீரிய சிந்தனையாளர்கள், நேரிய திறமைசாலிகள் மாற்று முகாம்களிலே இருந்தாலும் அவர்களை மதித்திடக் கூடிய மனப்பக்குவம் தி. மு. கழகத்திற்கு எப்போதும் உண்டு. ராஜாஜி அவர்களின் அந்த மாநாட்டு உரை கழகத்தின் கண்ணியப் பண்பாட்டுக்கு வழங்கப்பட்ட அரிய சான்றிதழாகவே அமைந்திருந்தது

அந்த மாநாட்டில்தான் கழகப் பொருளாளர் என்கிற முறையில், பொதுமக்களிடமிருந்து திரட்டிய ரூபாய் பதினெரு லட்சம் தேர்தல் நிதியினை அண்ணா அவர்களிடம் காணிக்கையாக அளித்திடும் பேற்றினையும் பெற்றேன்.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், தேர்தல் நிதிக்கென முன்னர் வகுத்துக் கொள்ளப்பட்ட இலக்கு பத்து லட்சம்தான். அத்தனையே முழுமையாகத் திரட்டிட முடியுமா என்று நானே நெஞ்சம் குழம்பிய நேரங்களும் உண்டு. அந்த இலக்கினையும் தாண்டி ஒரு லட்சம் கூடுதலாகவே கிடைத்ததை எண்ணும் போது எல்லாருக்குமே வியப்பு ஏற்பட்டதில் வியப்பென்ன இருக்கிறது!

இதைப்பற்றி அண்ணா அவர்களே மாநாட்டில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

''...பதினெரு லட்சம் ரூபாயைத் தம்பி கருணாநிதி என்னிடம் தந்தார். தான் பேசும் போது 'அந்தத் தொகையைச் சேர்க்க முடியுமா என்று என் விழிகள் வியப்பால் விரிந்தன' என்றார்.

''தம்பி! உனக்கு 'நிதி' என்று பெயரிட்டார்களே உன் தாயார், சும்மாவா இட்டார்கள்? 'தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பொருள் உள்ளவை' என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். உன் தாயார் உனக்கு 'நிதி' என்று பெயரிட்டதே, உன்னை நாட்டு மக்கள் நிதியாகப் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று தான். இன்றைக்கு இந்தக் காட்சியைப் பார்க்க நேர்ந்திருந்தால், உனக்கு இட்ட பெயர் வீணாகி விடவில்லை' என்று உன் தாயார் எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார்!

''ரூபாய் பத்து லட்சம் கேட்டதற்கு பதினெரு லட்சமே கொடுத் திருக்கிறாய்! ஆனால் மக்கள் சிக்கவேண்டிய நேரத்தில் உன்னிடம் சிக்கியிருந்தால் நீ இன்னமும் அதிகம் சேர்த்திருப்பாய்!''

-அண்ணா இவ்வாறு கூறியதுடன் நின்றிடவில்லை

1967-பிப்ரவரித் திங்களில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. கழக வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டபொழுது என் பெயரையே மாற்றியும் அழைக்க லானார் அந்தப் பாசக் கடவுள்.

மற்ற வேட்பாளர்களைப் பொறுத்தமட்டில் அந்தந்தத் தொகுதி களைக் குறிப்பிட்டு அவைகளுக்குரிய வேட்பாளர்களின் பெயர்களையே சொல்லி வந்தார் அவர்.

''சைதாப்பேட்டை.....''

என்று கூறிவிட்டுக் கணப்பொழுது அமைதியாக இருந்தார்.

பின்னர் ''பதினெரு லட்சம்!'' என்றார்.

அந்த இரு சொற்களும் என்னைத்தான் குறிக்கின்றன என்பதைக் குறிப்பால் உணர்ந்துகொண்டுவிட்ட மாநாட்டினர் உற்சாகத்தோடு கரவொலி எழுப்பியதை என்றைக்குமே என்னால் மறந்திட இயலாது.

இதில் வேடிக்கை என்னவெனில், மாநாட்டில் அறிவிக்கப் படும் வேட்பாளர் பட்டியலில் என்னுடைய பெயரும் இடம் பெறும் என்று நான் எதிர்பார்த்திடவே இல்லை. அண்ணாவும் முன்கூட்டியே தம் முடிவினை எனக்குத் தெரிவித்திடவும் இல்லை.

அதற்கு முக்கியமான காரணம் ஒன்றும் இருந்தது.

1967-பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியினை வீழ்த்திடத் தவறி விட்டால், பிறகு எதிர்க்கட்சியினர் எந்தக் காலத்துக்குமே தலையெடுத் திட முடியாது. எதேச்சாதிகாரப் போக்கினை அந்தக் கட்சி குத்தகைக்கு எடுத்துக்கொண்டுவிடும் என்கிற அச்சம் என் போன்றவர்களின் உள்ளத்தைக் குடைந்த வண்ணமே இருந்தது.

1965 இந்தி எதிர்ப்புப் போரிலே அமிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைக் கொடுமைகளாலும் அரிசிப் பஞ்சத்தாலும் ஆற்றொணாத் துயரக் கடலில் அமிழ்ந்து கொண்டிருந்த தமிழக மக்கள் கரையேறிடக் கிட்டிய கட்டு மரமாகக் கருதி நம்பிக்கை வைத்தது கழகத்திடமே.

அந்த நம்பிக்கை நாசமாகாமல் காத்திடவும் ஜனநாயகம் சவக் குழிக்குச் சென்றிடாமல் தடுத்திடவும் எப்போதுமே விழிப்புடன் பணியாற்றினுல்தான் தேர்தலில் வெற்றி பெற்றிட முடியும் என்று எனக்குத் தோன்றிற்று.

நொடிப் பொழுது கண்ணயர்ந்தாலும் இடி விழுந்துவிடும் கழகத்தின் எதிர்காலத்தில்! எனவே நானும் ஒரு சில முன்னணியினரும் வேட்பாளராகப் போட்டியிட்டு எங்கள் தொகுதிகளுக்குள்ளேயே முடங்கி நின்று எங்கள் கவனத்தைக் கருத்தைக் காலத்தை வீணடித்து விடாமல், நாங்கள் வெளியேயிருந்த மற்ற வேட்பாளர்களின் வெற்றுக்காக எல்லாத் தொகுதிகளிலுமே வேலைகள் செய்திடுவதையே நான் விரும்பினேன். என் எண்ணத்தை அண்ணு அவர்களிடமும் வெளியிட்டேன்.

அதனுல்தான், வேட்பாளர் பட்டியல் விருகம்பாக்கம் மாநாட்டில் அறிவிக்கப்படும் வரை எனது நிலை என்ன என்பது பற்றி சந்தேக மாகவும் இருந்தது.

ஆனல் என்னைவிட அதிகம் சங்கடப்பட்டவர்கள் காங்ரஸ்காரர்கள் தான். 'தேர்தலில் நிற்கிறுனு, இல்லையா? என்பதைக்கூடச் சொல்லித் தொலைக்காமல் இருக்கிறுனே!' என்பதுதான் அவர்கள் அடைந்திட்ட சங்கடம்.

அத்துடன், நான் சென்னையிலேயே நிறுத்தப்படுவேன் என்பதும் எனக்கு முன் கூட்டியே தெரியாது.

அவ்வாறு நான் சென்னை-சைதாப்பேட்டையில் வேட்பாளராக நிறுத்தப்பட்டதற்கும் ஒரு காரணம் இருந்தது.

தலைமைக் கழகம் திரட்டியுள்ள தேர்தல் நிதியினைச் சீராகச் செலவு செய்யப் பொருள்களை முறையாக வழங்கிடப் பிரச்சாரக் கருவிகளை, காரியங்களை ஒழுங்குபடுத்திடப் பொருளாளராகிய நானும் சென்னை யிலேயே தங்கியிருப்பதுதான் தக்க ஏற்பாடாகும் என்று அண்ணு கருதியிருக்கிறுர். அத்துடன் சைதாப்பேட்டை உள்ளிட்ட தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியிலேயே அண்ணு அவர்களும் வேட்பாளராகப் போட்டியிட்டதால் அந்தத் தேர்தல் வேலைகளையும் நான் அருகில் இருந்தால் இன்னும் செவ்வனே செய்திட முடியும் என்றும் கருதப்பட்டது. எனவேதான் சைதாப்பேட்டைத் தொகுதியில் அப்போது நான் நிறுத்தப்பட்டேன்.

1967-பிப்ரவரி திங்களில் மூன்று கட்டங்களாகத் தமிழகத்தில் தேர்தல் நடைபெறவிருந்தது.

வாக்களித்திடும் நாட்கள் நெருங்க நெருங்க அரசியல் பிரச்சாரச் சூடும் அதிகமாகிக்கொண்டே போயிற்று. காங்கிரசாட்சியினரின் அமளிகளும் ஆத்திரமூட்டும் செயல்களும் அளவில்லாமல் நீண்டு கொண்டே இருந்தன. அவற்றின் உச்சகட்டமாகத் தான் என் உயிருக்கே உலை வைத்திடக் குறி வைத்த கோட்டூர் நிகழ்ச்சி என் வாழ்க்கைப் பயணத்திலே குறுக்கிட்டது!

127

கோட்டூரில் கொலை வெறியரிடையே

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் முதற்கட்டமாக 15-2-67-ஆம் நாள் சென்னையில் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதற்கு முதல்நாள் இரவு சென்னை நகரில் இருபாராளுமன்றத் தொகுதிகளிலும் உள்ள எல்லா சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் சென்று கழகத் தொண்டர்களை ஊக்கப் படுத்தி விட்டுத் தியாகராய நகர்த் தொகுதியில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் தேர்தல் அலுவலகத்திற்கு இரவு பதினெரு மணிக்கு வந்தேன்.

அப்போது மூன்று கார்கள், என் காரைத் தொடர்ந்து வந்து வேறு ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டதை நான் கவனித்தேன். எனினும் அதனை அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. பிறகு, அங்கிருந்து மயிலாப்பூர்த் தொகுதியில் அரங்கண்ணல் அவர்களின் தேர்தல் அலுவலகம் சென்றேன். அங்கே தோழர்கள் டி.கே. கபாலி, வேலு முதலிய நண்பர்களுடன் நிலைமைகளை விவாதித்து விட்டு இறுதியாக நான் போட்டியிடும் சைதாப்பேட்டைத் தொகுதிக்குக் கோட்டூர் வழியாகச் செல்லத் தொடங்கினேன். நான் தியாகராய நகரில் கண்ட அதே மூன்று கார்களும் என் காரைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. என் காரில் காஞ்சிமணிமொழியார், வெங்கிடங்கால் சந்தானம். வாழைக் கரை ராஜகோபால் ஆகியோர் இருந்தனர்.

கோட்டூரில் மாநகராட்சி மகப்பேறு இல்லத்திற்கு முன்னால் என் காரை நிறுத்தி அருகேயுள்ள தேர்தல் அலுவலகத்திற்குச் செல்வதற்குக் கீழே இறங்கினேன். அதற்குள் எங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த மூன்று கார்களிலுமிருந்து பளபளக்கும் பயங்கர ஆயுதங்களுடன் கொலை வெறிக் கூச்சல் போட்டுக் கொண்டு குண்டர்கள் பலர் குதித்தோடி வந்தனர். மணிமொழியார், சந்தானம், ராசகோபால் ஆகிய மூவராலும் கட்டாயமாக மகப்பேறு மருத்துவ மனைக்குள் நான் தள்ளப்பட்டேன். மருத்துவமனையின் கதவைத் தாழிட்டுக் கொண்டு அந்த குண்டர்களைத் தடுத்து நின்றனர் மூவரும். அதற்குள் கதவுகள் நொறுங்கின.

மருத்துவ மனையில் இருந்தவர்கள் போலீசுக்கு 'போன்' மூலம் தகவல் கொடுத்தனர். அதற்குள், ஓர் இளம் கழகத் தோழன், என்னைக் கொல்லைப்புறமாக இழுத்துக் கொண்டு அந்தக் காரிருளில் ஓடினான்.

குய்யோ! முறையோ!' என்று ஒரே சப்தம். என் காலில் முட்கள் ஏறின. ''வெட்டு! குத்து! விடாதே பிடி!'' என்று காட்டுக் கூச்சல்! அப்பப்பா! அந்தப் பயங்கர இரவை இன்றைக்கு நினைத்துக் கொண்டாலும் தூக்கம் வருவதில்லை. முதியவர் மணிமொழியார் முறுக்கேறிய காளை போல் அந்த முரடர்களை எதிர்த்து நின்ற காட்சியை எப்படி மறக்க முடியும்?

எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் கதவு நொறுக்கப் பட்டவுடன் மணிமொழியாரும், மற்றவர்களும் என்னை காப்பாற்றத் துடியாய்த் துடித்து, அந்தப் பயங்கர இருளில், ''கலைஞரே! கலைஞரே'' என்று கத்துகிறார்கள். என்னை அழைத்துக் கொண்டு ஓடுகிற இளைஞனே, என் வாய் திறக்க முடியாமல் என் வாயைப் பொத்திக் கொண்டு தேம்பித் தேம்பி அழுகிறான். முரடர்களின் கொலை வெறிக் கூச்சல் நாலா பக்கமும் கேட்கிறது. கழக இளைஞன் என்னை ஒரு குடிசைக்குள் இழுத்துச் செல்கிறான்.அந்தக் குடிசையில் ஒரு வாலிபன், அவர் மனைவி, அவர்களின் பச்சிளங்குழந்தை, 'மினுக் மினுக்' என்று எரியும் ஒரு சிறிய விளக்கு.

அந்த வாலிபன் பெயர் சாரங்கன். நான் உள்ளே வந்ததும், குடிசைக் கதவு தாழ் போடப்பட்டது. அழைத்து வந்த இளைஞன் கொல்லை வழியாகப் போய் விட்டான். என்னை அங்குள்ள ஒரு கயிற்றுக் கட்டிலின் கீழ் படுக்க வைத்துப் பழந்துணிகளைப் போட்டு மூடி விடுகிறார்கள். அப்போது குழந்தை அழத் தொடங்குகிறது. அதே நேரம் பக்கத்தில் உள்ள குடிசைகளில் நான் இருக்கிறேனா என்று குண்டர்கள் ஊளையிட்டுக் கொண்டு சோதனை நடத்துகிறார்கள். குடிசைகளின் கூரைகளில் தடி கொண்டு தாக்குகிறார்கள். சரமாரி யாகக் கற்கள் விழும் ஓசை! ''அய்யோ !அய்யோ!'' என்ற தாய்மார்களின் சப்தம்!

அந்த நேரத்தில்தான் நானிருக்குமிடத்தில் குழந்தை அழுகிறது. உடனே அதன் தாய் குழந்தையின் வாயை மூடிக் கொள்கிறாள். ''அய்யோ, வேண்டாம்! குழந்தையைத் தொந்தரவு செய்யாதீர்கள்!'' என்று நான் கெஞ்சுகிறேன். அந்தத் தாய், என் பேச்சைக் கேட்கவில்லை. அந்தச் சகோதரி என் மீது காட்டிய பாசத்தை வாழ் நாள் முழுவதும் என்னால் மறக்க முடியாது. குழந்தையின் வாயைப் பொத்திய கையை எடுக்கவே இல்லை. சாரங்கனும் என் அருகிலேயே உட்கார்ந்துகொண்டு பதைபதைப்பாக மூச்சு விடுவது என் காதில் விழுகிறது.

வெளியில் என்ன நடக்கிறது? மணிமொழியார், சந்தானம், ராசகோபால் என்ன ஆனார்கள்? ஒன்றுமே புரியவில்லை. கடைசியாகக் குண்டர்கள் நானிருக்கும் குடிசைக்குள் நுழைந்து

விட்டால் நான் ஒரு கறுப்புக் கந்தல் துணியுடன் வேறுபக்கமாக இருளில் மறைந்து ஓடவும் நண்பர் சிரிங்கன் திட்டம் போட்டு அதற்கேற்ப என் உடைகளையும் மாற்றி வைத்துவிட்டார். அதே பதைப்புடன் நள்ளிரவிலிருந்து விடியற்காலை ஐந்து மணிவரையில் அந்தக் குடிசைக்குள் இருந்திருக்கிறேன்.

இதற்கிடையில் வீட்டார்கள் கதறியிருக்கிறார்கள். அண்ணா நாவலர், இரவு முழுவதும் தூங்கவில்லை. அவர்களது எந்த முயற்சிக்கும் அன்றையப் போலீஸ் அதிகாரிகளிடமிருந்து என்னைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அண்ணா விழிகளில் நீர் வழிந்து கொண்டேயிருந்ததாம். விடியற்காலை ஐந்து மணிக்குக் குடிசைக்கு வெளியே இரண்டொரு போலீசாரின் பூட்ஸ் ஒலி கேட்டது. நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் குரல் கேட்டது. அவருக்கே உரிய இனிய சாரீரத்தில், "மூனு கானு!" என்று உரத்த குரல் எழுப்பிக் கூப்பிட்டார். பிறகு குடிசையிலிருந்து வெளியே வந்தேன். நடிகமணி நாராயணசாமி, முரசொலி மாறன், மைனர் மோசஸ், அரங்கண்ணல், டி. கே. கபாலி, பரிமளம், இளங்கோ. ஆனந்தம் மற்றும் கழகத் தோழர்கள் இருந்தனர். அங்கிருந்து புகார், கொடுக்க அடையாறு காவல் நிலையத்துக்குச் சென்றோம்.

நடந்தவைகளையெல்லாம் நான் அங்கு எழுதிக் கொடுத்திட்ட அதே வேளையில் இன்னொரு வேதனை கலந்த வேடிக்கைக்காட்சி என்னை அதிர்ச்சியில் ஆழ்த்திற்று. என்னுடன் கோட்டூருக்கு வந்த வெங்கிடங்கால் சந்தானம், ராசகோபால் ஆகிய இருவரும் இன்னும் சில தோழர்களும் கைதிகளாக அங்கே கருணப்பட்டனர். எங்களைத் துரத்தி வந்த வெறியர்கள் கொடுத்திட்ட பொய்யான புகாரின் பேரிலேயே அந்தக் கொடுமை நிகழ்ந்திருக்கிறது. நான் உடனடியாக அடையாறு காவல் நிலையத்தில் இருந்தவாறே போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரலுக்குத் தொலைபேசியிலேயே விவரங்களை எடுத்துச் சொல்லி விளக்கினேன். என்னுடன் காரில் வந்த என் நண்பர்கள் இருவரை மட்டும் கைது செய்துவிட்டு என்னையும் மணிமொழியாரையும் கைது செய்யாதது ஏன் என்றும் கேட்டேன்.

என் வினவுக்குச் சரியான விடையளித்திட முடியாத காவல் துறையினர், நண்பர்கள் சந்தானம், ராசகோபால் ஆகிய இருவரை மட்டும் பின்னர் பொறுப்பிலே விடுவித்தனர்.

என் உயிரைக் குடித்திடக் கோட்டூரில் நிகழ்ந்திட்ட கொலை முயற்சிக்கு ஏற்கனவே திட்டங்கள் தீட்டப்பட்டுத்தான் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பின்னர் நான் தெரிந்துகொண்டேன். சைதைத் தொகுதியில ஒரு புதிய வீட்டின்

,கிரகப்பிரவேச' விழாவின் போதுதான் அந்தச் சதிப்பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன.

எவ்வாறே, கழகத் தோழர்களின் விழிப்புணர்ச்சியால், விரைவான நடவடிக்கையால், குடிசைவாழ் குடும்பம் ஒன்று என்மேல் கொண்டிட்ட பாசத்தால் மாற்றரின் சதித் திட்டத்தில் மண் விழுந்தது.

ஆனால் அப்போது காவல் துறையினைச் சார்ந்த அதிகாரிகளில் ஒரு சிலர் நடந்து கொண்ட முறை எனக்கு வியப்பையே அளித்தது.

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தமிழகப் போலீஸ் துறைக்கு எப்போதுமே நற்பெயர் உண்டு. அதுவும் அந்தத் துறையில் பணியாற்றிடும் சாதாரணப் போலீஸ்காரர்களிடம் எனக்கு அளப்பரிய அனுதாபம் உண்டு. அதனால்தான் அன்றாட வாழ்க்கையில் அவர்களைத் திண்டாட வைத்திடும் தொல்லைகளை, சோதனைகளைச் சித்திரித்துக் காட்டினேன், எனது 'உதயசூரியன்' நாடகத்தில். அதன் காரணமாகவே காங்கிரஸ் ஆட்சியாளரின் தடைக்கும் அந்த நாடகம் இலக்காயிற்று. பின்னால் நான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் அதுவரை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டதில்லை என்று சொல்லிடத்தக்க வகையில் 'காவல் துறை ஆய்வுக் குழு' (போலீஸ் கமிஷன்) ஒன்றினை அமைத்ததும், அண்ணா பிறந்த நாளில் தீரம் மிகுந்த போலீசாருக்கு 'அண்ணா பதக்கம்' வழங்கிட ஆவன செய்ததும், அதற்கு முன் இல்லாத அளவுக்குப் பல சலுகைகளைத் தந்திட முற்பட்டதும் காவல் துறை நண்பர்களிடம் எனக்குள்ள பரிவினால்தான்.

ஆனால், கோட்டூர் நிகழ்ச்சியைப் பொறுத்த மட்டிலோ, எல்லாரையும் குறைகூறிட முடியாது என்றாலும், ஒன்றிரண்டு அதிகாரிகள் நடந்துகொண்ட முறை அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட பண்பாட்டுக்கும் பாரபட்சமற்ற தன்மைக்கும் உகந்ததாக இல்லை. மற்றவர்களும் அன்றைய அரசின் ஆணைப்படி நடந்துகொண்டனர்.

நான் உயிர் பிழைத்து வந்த மறுநாள் சாரங்கனையும் அவர் மனைவியையும் வீட்டுக்கு அழைத்து வந்தேன். சாரங்கனின் மனைவியின் காலில் என் மனைவி விழுந்து "தாலி பாக்கியம் கொடுத்த தாயே!" என்று நன்றி செலுத்திய நிகழ்ச்சியை எப்படி விவரிப்பது? அண்ணா அவர்கள் சாரங்கனையும் அவர் மனைவியையும் அவர் இல்லத்திற்கு அழைத்து அண்ணியாரின் கையால் சாரங்கன் துணைவிக்குப் புடவைகளைப் பரிசாக வழங்கினார். "என் தம்பியைக் காப்பாற்றினாய் அப்பா!" என்று சாரங்கனைத் தட்டிக் கொடுத்தார் அண்ணா, தழுதழுத்த குரலில்.

தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுத் தொகுதி தொகுதியாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டதால் உடலும் உள்ளமும் அலுப்புற்றுச் சோர்வடைந்து கொண்டிருந்த நிலையில் ஓர் இனிப்புச் செய்தியும் என்னை வந்து எட்டியது.

இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ்' ஏடு உலகப் புகழ் பெற்ற பத்திரிகைகளில் ஒன்றாகும். அதில் என்னுடைய 'காகிதப் பூ' நாடகத்தைப் பற்றி வந்த பாராட்டுரையே என் 'நெஞ்சில்' தேனை வார்த்திட்ட செய்தியாகும்.

7-2-67 நாளிட்ட அந்த லண்டன் 'டைம்ஸ்' ஏட்டில், 'விழாக் கோலத்தில் சென்னை' என்னும் கட்டுரையில் அடியிற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"...தமிழக ஆட்சியின் எதிர்ப்புச் சக்திகளில் முன்னணியில் நிற்பது திராவிட முன்னேற்றக் கழகம். அது தேர்தல் பிரச்சாரம் செய்யும் முறையே வேறானது. மிகப் பெரிய திடல் ஒன்றின் மூலையில் திரளான மக்கள் அமர்ந்து திறந்தவெளி அரங்கில் நடைபெறும் ஒரு நாடகத்தைப் பார்க்கிறார்கள். அதனைப் பார்த்துப் பார்த்து உள்ளம் உருகுகிறார்கள்; மனம் திறந்து வாய்விட்டுச் சிரிக்கிறார்கள்!

"இந்த நாடகம் 'காகிதப்பூ' -திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஒருவரால் எழுதப்பட்டுத் தமிழகம் முழுவதும் நடிக்கப் படுவ தாகும். கதராடை உடுத்தி, உழைப்பின் சிறப்பு பற்றிய போலிப் பேச்சுக்களால் மக்களை மயக்கி வாக்குகள் பெற முயலும் காங்கிரஸ்காரர் களாக இந்த நாடகத்தின் வில்லன், நகைச்சுவைப் பாத்திரங்கள் காட்டப்படுகின்றன.

"இந்த நாடகம், தொழில் முறைத் தயாரிப்புப் போலவே இருக்கிறது; நேரம் போவதே தெரியவில்லை. கருத்தும் தெளிவாக இருக்கிறது."

இங்கிலாந்து ஏட்டின் இந்தப் புகழுரை எனக்குத் தனிப்பட்ட முறையில் கிட்டிய பெருமையாக மட்டும் கருதிடாமல் கழகத்தின் வலிமைக்கு அயல்நாட்டார் அளித்திடும் பாராட்டிதழாகவே நான் அப்போது நினைத்துக் களித்தேன்.

1967 பொதுத் தேர்தல் மிகுந்த பதற்றமான, பரபரப்பான சூழ்நிலையிலேயே நடைபெற்றது.

இந்தியா விடுதலை பெற்ற பின் இருபதாண்டுக் காலம் 'தட்டிக் கேட்காவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்கிற போக்கில் எதேச்சாதிகாரமாக ஆட்சியின் சுவையினை அனுபவித்துப் பழகிவிட்ட காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற உரிமையை அவ்வளவு சுலபத்தில் விட்டு விடுவதா என்கிற வெறியோடு தேர்தல் களத்திலே குதித்தது; அந்தக் கட்சியைச் சார்ந்திட்ட ஆட்சியாளர்களோ அடக்குமுறைகள் அத்தனை யையும் அவிழ்த்து விட்டு 'இந்தத் தேர்தலோடு எந்த எதிர்க்கட்சியும் -குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இனி எக்காலத்திலும் தலையெடுக்க முடியாதபடி செய்துவிடுவோம்!' என்கிற எண்ணத்துடன் ஈடுபட்டனர்.

தோழமைக் கட்சிகளின் துணையோடு கழகமும் முனைந்து பாடு பட்டது, காங்கிரசை ஆட்சிக் கட்டிலை விட்டு அகற்றிட, ஜனநாயகப் பெருந்தீபம் அணையாமல் காத்திட!

எனினும் வெறியர்களைத் தூண்டிவிட்டுக் கழகத் தோழர்களையும், தோழமைக் கட்சி நண்பர்களையும் உருட்டல், மிரட்டல்களுக்கு உள்ளாக்கித் துன்புறுத்திடும் வேலை தொடர்ந்து நடத்தப்பட்டது.

கோட்டூரில் என் மீது ஏவப்பட்ட கொலை முயற்சி குறிதவறிப் போய்விடவே நான் எங்கே சென்றாலும் என்னை எப்படியாவது தீர்த்துக் கட்டிவிடுவது என்பதில் தீவிரமாய் இருந்தனர், வன்முறையையே பிழைப்பாய்க் கொண்டிட்ட வஞ்சக நெஞ்சினர்.

அதனால்தான், கடலூரிலும் 20-2-67 அன்று நான் தாக்குதலுக்கு இலக்காகிடும் நிலை ஏற்பட்டது.

15-2-67 அன்றே நான் வேட்பாளராகப் போட்டியிட்ட சைதாப்பேட்டைக்குரிய முதற்கட்டத் தேர்தல் முடிந்துவிட டது. எனினும் 18-2-67, 21-2-67 ஆகிய நாட்களில் முறையே இரண்டாவது, மூன்றாவது கட்டத் தேர்தல்களுக்குரிய தொகுதிகளிலும் பிரசாரம் புரிந்திட நான் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற் கொண்டேன்.

அவ்வாறு மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களுக்குச் சென்று விட்டுச் சென்னை திரும்பிடும் வழியில் கடலூரில் இறங்கினேன்.

முன்பே அடிக்கடி வந்து வாட்டிடும் நெஞ்சு வலி அப்போதும் என்னை வேதனைக்கு ஆட்படுத்தியது. அதனையும் தாங்கிக் கொண்டு அங்குள்ள தேர்தல் நிலவரங்களை அறிந்திடக் கழகப் பணிமனைகளைப் பார்வையிடச் சென்றேன். அச்சமயம் முன்று, நான்கு கார்கள் என்னைப் பின்தொடர்ந்தே வந்தன. காரில் இருந்தவர்கள், "கருணாநிதியே திரும்பிப் போ! இல்லையென்றால் வெட்டுவோம், குத்துவோம்!" என்று அநாகரிகமாகக் கூச்சலிட்டனர்.

அவர்களைப் பொருட்படுத்தாமல், என் பணியினைத் தொடர்ந்திட்ட நான் எனது அருமை நண்பர் வழக்கறிஞர் இளம்வழுதி அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். அப்போது என்னுடன் முன்னாள் மேயர் அ. பொ. அரசுவும் இருந்தார். அங்கும் அந்தக் கார்கள் வந்தன. காரில் இருந்தவர்கள் கீழே இறங்கிக் காட்டுக் கூச்சல் எழுப்பினர். இல்லத்தை முற்றுகையிட்டுக் கல்மாரி பொழிந்தனர்.

உடனே உள்ளூர்ப் போலீசுக்குத் தகவல் தரப்படடு அவர்களும் வந்தனர். ஆயினும் அங்கே உரக்க முழங்கப்பட்ட கொலை வெறிக் கூச்சலை அடக்கிடவோ வன்முறைப் போக்கினரை அங்கிருந்து அகற்றிடவோ போலீசார் எதுவும் செய்திடவில்லை. நண்பர் இளம் வழுதி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கூட அமைதிக்குரிய நடவடிக்கை எதுவுமே எடுக்கப்படவில்லை.

இதற்குள் கடலூரில் உள்ள கழகத் தோழர்கள் திரண்டு விட்டனர். எனினும் எதிர் நடவடிக்கை எதிலும் ஈடுபட்டு விடாமல் அறவழியில் அமைதி காத்து நின்றனர்.

நிலைமை மேலும் மோசமாகி விடாமல் தவிர்த்திடச் சென்னையில் உள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடம் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டார் இளம்வழுதி. நானும் ஐ. ஜி. யிடம் எடுத்துரைத்தேன் அங்குள்ள பதட்டமான நிலைமையினை.

பின்னர், பெரிய போலீஸ் அதிகாரிகள் இளம்வழுதி இல்லத்துக்கு விரைந்து வந்து வெறியோடு நின்றிருந்த வன்முறைக் கும்பலை விரட்டியடித்தனர். அதன் பிறகு, எனக்குத் தகுந்த போலீஸ் பாதுகாப்பு அளித்துத் தென்னற்காடு மாவட்ட எல்லைவரை கொண்டு வந்து விட்டனர்.

இவ்வாறு கொலை முயற்சிகள் என்னை நிழலெனத் தொடர்ந்த போதும் என் நெஞ்சம் குலைந்திடவில்லை, என் கழகப் பணி தளர்ந்திடவில்லை.

அடுத்த சில நாட்களில் வெளிவரத் தொடங்கிய தேர்தல் முடிவுகளும், கழகம் 'கோட்டை'யைப் பிடிப்பதைக் காங்கிரசால் தடுத்திட முடியாது என்பதையே அறுதியிட்டுக் காட்டின.

128

கூட்டணியும் கேலிச் சித்திரமும்

'எந்தக் கட்சியும் தன் இலட்சிய மனத்தினை இழந்திடத் தேவையில்லை; தன்னுடைய கொள்கை, கொடி, குறிக்கோள்களை விட்டுக் கொடுத்திட வேண்டியதில்லை. அதே சமயம், தோழமை உணர்வுடன் அந்தந்தத் தொகுதிகள் அளவில் மட்டும் உடன்பாடு செய்து கொண்டு எதிர்ப்புச் சக்தி அனைத்தையும் ஒருமுனைப்படுத்திக் கொண்டு இணைந்து நின்று பொருதினால் தேர்தல் களத்திலே வெற்றி பெற்றிடலாம் உறுதியாக என்கிற நம்பிக்கையோடுதான் நான்காவது பொதுத் தேர்தலில் தோழமைக் கட்சிகள் ஒன்று சேர்ந்தன.

திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, முஸ்லிம் லீக், தமிழரசுக் கழகம், ஃபார்வேர்டு பிளாக் (முன்னேற்றக் கட்சி), மார்க்சீயக் கம்யூனிஸ்ட், பிரஜ்ஜா சோஷலிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட் ஆகிய கட்சிகள் அந்த அணியில் அங்கம் பெற்றன.

இந்திய அரசியலில் அதிகார பலம் மிகுந்த ஆளுங்கட்சியை வீழ்த்திடும் பொருட்டு எதிர்க்கட்சிகள் பல இணைந்து நின்று தத்தம் கொள்கை, கொடிகளை விட்டுக் கொடாமலே தொகுதி அளவில் மட்டும் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டு இத்துணை ஒற்றுமையோடு தேர்தல் களத்தில் ஈடுபட்டதாக அதுவரை வரலாறு இல்லை.

இவ்வாறு தோழமைக் கட்சிகள் தோளோடு தோள் நின்று தேர்தலில் போட்டியிடுவதால் தங்களுடைய செல்வாக்கு மேலும் மேலும் தூள்தூள் ஆகிடுமே என்கிற அச்சமும் ஆளும் காங்கிரசாரை அளவுக்கு மீறிக் குடைந்தெடுத்திருக்கிறது. அதன் விளைவாக எழுந்தவையே என் மீதும் மற்ற தோழர்கள் மீதும் ஏவி விடப்பட்ட வன்முறை வெறியாட்டங்கள்.

அரசியல் களத்தில் நேரடியாகக் குதித்து விட்ட கட்சிக்காரர்கள் தான் அப்படிக் கண்ணியத்தைக் கழற்றி வைத்து விட்டு நடந்து கொண்டார்கள் என்றால், சில ஏடுகளும் தங்கள் நாகரிக நடைக்கு—நடுநிலைமைப் போக்குக்கு மூடு விழாக் கொண்டாடும் முறையில் ஓட விட்டன, தங்கள் பேனா முனைகளை. தரம் தாழ்ந்த நிலையில் கேலிச் சித்திரங்களையும் வெளியிட்டன.

மக்களின் மனத்தில் எத்தகைய மாசுகள் படிந்தால் என்ன; நம்முடைய விற்பனை பெருகினால் போதும் என்கிற வியாபார நோக்கு ஒன்றையே பிழைப்பாகக் கொண்ட ஏடுகள் சில நஞ்சையே மையாக்கிக் கொண்டு, நடந்தவற்றையே திரித்து வெளியிட்டு, நரகல் நடையில் நாராசக் கடை விரிப்பது பற்றி நான் என்றைக்குமே கவலைப் பட்டது இல்லை.

ஆனால், 'ஆனந்த விகடன்' ஏட்டிலேயே இழிவான கேலிச் சித்திரங்கள் வெளிவந்தபோது என் போன்றவர்களால் வேதனைப் படாமல் இருந்திட முடியவில்லை.

தமிழகத் திரையுலகில் புதுமையான உத்திகள் பலவற்றைப் புகுத்திச் 'சந்திரலேகா', 'ஔவையார்' போன்ற படங்களைத் தயாரித்ததன் மூலம் தமக்கென்று ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தவர் பெரியவர் எஸ். எஸ். வாசன். தம்முடைய இளமைக் காலத்தில் தந்தை பெரியார் அவர்களை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு அவர் தம் அறிவுரைப்படியே ஏடு ஒன்றைத் துவங்கிடும் துணிவினையும் பெற்றவர் அவர்.

திரு. வாசன் அவர்கள் கண்ணியம் மிகுந்தவராக விளங்கினார் என்பதாலேயே அவர் நடத்திடும் 'ஆனந்த விகட'னில் பணியாற்றிடும் அத்தனை பேருமே தங்கள் முதலாளியின் பெருமையில் மூளி ஏற்படாமல் க்ஷணித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? அவர்களில் ஒன்றிரண்டு பேர் தங்கள் உள்ளத்தில் விஷயத்தையே விருட்சமாக வளர்த்துக் கொண்டு விட்டார்கள்—ஜனநாயக நெறியின் வேரையே அறுக்கத் துணிந்து விட்டார்கள்—என்பதை விளம்பரப்படுத்துவது போலத்தான் அப்போது 'ஆனந்த விகட'னில் வெளியாயிற்று ஒரு கேலிச் சித்திரம். அதில் மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா, காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., மார்க்சீயப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி ஆகியவர்கள் கழுதைமீது ஏறிக் கொண்டு கோட்டை நோக்கி சவாரி செய்வதாகத் தீட்டியிருந்தார்கள் கீழ்த்தரமாக.

கேலிச் சித்திரம் என்பது வெறும் கேளிக்கைச் சித்திரமாக மட்டும் இல்லாமல் சிந்தனையைக் கிளறிவிடும் சித்திரமாகவும் அமைந்திடல் வேண்டும். அத்துடன் கண்ணியப் பண்பாட்டையே கேவலப்படுத்தும் சித்திரமாக அது வெளி வருவதும் கூடாது. அதனால் சம்பந்தப்பட்ட ஏட்டுக்கும் பெருமை இல்லை, அதைத் தீட்டியவருக்கும் சிறப்பில்லை.

நச்சு நோக்கோடு வரையப்படும் கேலிச் சித்திரங்கள் ஓவியக் கலையையே கொச்சைப் படுத்தும் அழுகிய கறைகளாகவே ஆகிவிடுகின்றன. சில சமயம் கொதிப்பையும் கொடுக்கின்றன, பொது மக்கள் மனத்துக்கு.

1967 பொதுத் தேர்தலின் போது 'விகடன்' வெளியிட்ட அந்தக் கேலிச் சித்திரமும் கொதிப்பைத்தான் கொடுத்தது பொது மக்களுக்கு.

ஆனால், மூதறிஞர் ராஜாஜி அவர்களோ அதனைப் பார்த்து விட்டு—

''காங்கிரஸ் வசமுள்ள இந்தக் 'கோட்டை'யைப் பிடிக்கக் குதிரை தேவையில்லை. ஒரு கழுதையே போதும் என்று காங்கிரஸ் கட்சியினர் கருதினால்கள் போலும்! எதிலே ஏறிப் போனால் என்ன? கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தால் சரி!" என்று வேடிக்கையாக வெளியிட்டார் தம் கருத்தினை.

வாக்காளர்களின் கவனத்தைக் கவர்ந்திடும் பொருட்டு, தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கழகமும் சில சுவரொட்டிகளை வெளியிட்டது.

ஆனால் வறுமையிலே வாடிய நாட்டு மக்களின் வாட்டத்தைக் காட்டுவனவாக-இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்து எரிதழலில் வெந்திட்ட இளைஞர்களின் சோக வரலாற்றைச் சொல்லுவனவாக – அந்தச் சுவரொட்டிகள் அமைந்திருந்தனவேயன்றித்-தனிப்பட்ட தலைவர்களைத் தரக் குறைவான முறையில் தாக்கிடும் போக்கில் அவை நீட்டப் படவில்லை.

எனினும் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கண்களை உறுத்தி விட்டன அந்தச் சுவரொட்டிகள்; எனவே அவற்றை உடனுக்குடன் அகற்றியே தீர வேண்டும் என்று ஏவி விடப்பட்டனர் காவல் துறை யைச் சார்ந்தவர்கள்.

அதே சமயம் 'விகட'னில் வெளிவந்த விஷம் தோய்ந்த கேலிச சித்திரமும் பெரிய அளவில் சுவரொட்டிகளாகத் தயாரிக்கப்பட்டு நாடெங்கும் ஒட்டப்பட்டன காங்கிரஸ்காரர்களால். கண்ணியம் மிகுந்த ராஜாஜி, அண்ணா போன்ற தலைவர்களைக் கழுதை மீது சவாரி செய்வதாகக் கேவலப்படுத்திடும் அந்தக் கேலிச் சுவரொட்டிகளைப் பற்றிக் கவலையே படவில்லை அன்றைய ஆட்சியாளர்கள்; அவற்றை அப்புறப்படுத்திட எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுத்திடவும் இல்லை.

பத்திரிகையில் சித்திரமாக வந்த போதே பதறித் துடித்தது எங்கள் நெஞ்சம். அதுவே பெரிய அளவில் சுவரொட்டியாகவும் பரிணமித்து விட்டது என்றால், அதனை அகற்றுவதற்கும் ஆவன செய்யப் படவில்லை என்றால் அந்த இதயக் குமுறலை எங்களால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் இத்தகைய ஓரவஞ்சனைப் போக்கு களையெல்லாம் ஊன்றிச் சிந்தித்துத் தான் — பொது மக்களின் உள்ளக்கிடக்கையையும் ஓரளவுஉணர்ந்துகணித்திட்ட முறையில்தான்– மயிலாப்பூர் பகுதியில் 10-12-1967-இல் நிகழ்ந்த தேர்தல் கூட்டத்தில் ஆணித்தரமாக அறைகூவல் விடுத்தேன் அடியிற்கண்டவாறு:

''.. கழுதைப் படம் போட்டு ராஜாஜியை உட்கார வைத்துச் சித்திரம் தீட்டியிருக்கிறார்களே! அது மக்கள் மனத்தைப் புண்படுத்தாதா? யார் இந்த ராஜாஜி? இந்தியா சுதந்திரம் பெறற போது இந்தியர

வின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் நானே அவர் மாண்டு மறைந்தால் அரசாங்க மரியாதைகளுடன் அடக்கம் செய்யப் பட வேண்டிய பெரியவர். சட்ட சபைக்குள்ளே வந்து பார்த்தீர்களானால் மகாத்மா காந்தியினுடைய படம் இருப்பதைக் காணலாம். அதற்கு நேராக ராஜாஜியின் படம்; ஆள் உயரத்திற்கு உள்ள ராஜாஜி படத்திற்கு மேல், 'மனிதரில் மேலோன்' என்று எழுதப்பட்ட வாசகம்.

''அந்தத் திருவுருவப் படத்தை அங்கே மாட்டி வைத்துக் கொண்டு சட்ட மன்றத்திலே காங்கிரஸ் கட்சி தன்னுடைய செயல்களை ஆற்றுகின்றது. இங்கே கழுதை மீது ஊர்வலமிட்டு ஒரு படம். ஒன்று அந்தப் படத்தைக் கழற்ற வேண்டும். அல்லது இந்தப் படத்தை எடுக்க வேண்டும்.

''எவ்வளவு அரசியல் அநாகரிகமும் காட்டுமிராண்டித்தனமும் கழிசடைப் புத்தியும் இருக்குமேயானால் இந்த நாட்டினுடைய தகுதி மிக்க தலைவர்களை—தமிழக மக்களின் இதய சிம்மாசனத்திலே நிரந்தரமாகக் கொலு வீற்றிருக்கும் தலைவர்களை- மூதறிஞர் ராஜாஜியை- பேரறிஞர் அண்ணாவை- சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யை- காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களை- ராமமூர்த்தியைப்- பல கோடி மக்களின் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும், மரியாதைக்கும், வணக்கத்துக்கும் உரிய தலைவர்களைக் கழுதை மீது வைத்துப் படம் போடுவதற்குத் துணிவீர்கள்; அதை மற்றவர்கள் பார்த்துக் கொண்டு மவுனமாக இருக்க வேண்டுமா? நாங்கள் நாட்டு நிலையைச் சித்திரித்துப் படம் போட்டால் அதை எடுக்க மட்டும் ஓடோடி வருகிறீர்களே!

''எவ்வளவு நாளைக்கு இந்த அதிகாரம் செய்ய முடியும் ஆட்சியாளர்களே! அதிகாரிகளே! இன்னும் ஆறே நாள்! அதிகாரம் மாறும்!''

உணர்ச்சிக் கொந்தளிப்பின் உச்சத்தை எட்டிய நிலையில் தான் நான் அப்படி உரைத்திட்டேன். என்றாலும், தமிழகம் எங்கணும் தேர்தல் நிதிக்காகவும் பிரச்சாரத்திற்காகவும் பயணம் மேற்கொண்டதன் பயனாக என் உள்ளத்தின் அடித்தளத்தில் வளர்ந்த வண்ணம் இருந்த தன்னம்பிக்கையின் அழுத்தமும் என்னுடைய அந்த அறை கூவலுக்குக் காரணமாகும்.

10-2-67-இல் தான் நான் அவ்வாறு பேசினேன், அடுத்த ஆறுவது நாளில் தான் -15-2-67-இல் தான்- பொதுத் தேர்தல் தொடக்கம்.

அதன் முடிவு, நான் உரைத்ததே உண்மை என்கிற வகையில் பின்னர் அமைந்திடும் என்று அப்போது காங்கிரஸ்காரர்களோ, ஏன் கழகத் தோழர்களோ கூட முழுமனதோடு நம்பிடவில்லை.

ஆயினும், கழகம் என்றாலே அலட்சியப் பார்வை வீசிக் கொண்டிருந்த அதிகார வட்டத்தில் எனது மயிலாப்பூர் அறை கூவல் ஒரு கலக்கு கலக்கவே செய்தது என்பதைப் பிறகு நான் அறிந்து கொண்டேன்.

129

ஆட்சியை மாற்றிய தேர்தல் முடிவுகள்

"இன்னும் ஆறே நாள்! அதிகாரம் மாறும்!" என்னும் சொற்களே எதிர்க்கட்சி முகாமிலிருந்து கேட்ட பிறகும் காங்கிரஸ் ஆட்சியாளர்களால் எப்படி அமைதியாக இருந்திட முடியும்?

எனவே, என்னை எவ்வாறேனும் கைது செய்திட வேண்டும் என்று ஆலோசனை செய்திருக்கிறார்கள் மேல் மட்டத்தில்.

அவ்வாறு ஆலோசனை நடைபெற்றது உண்மைதான் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதைப் போலவே முதல்வராக இருந்த திரு பக்தவத்சலம் அவர்களும்,

"...அதிகாரிகளைப் பற்றிப் பேசி வரும் கருணாநிதி மீது அதிகாரிகளே நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று சென்னைக் கூட்டம் ஒன்றில் பகிரங்கமாகவே குறிப்பிட்டார்.

அது காவல் துறையினருக்கு முதல்வர் விடுத்த மறைமுகமான ஆணையாகவும் அப்போது கருதப்பட்டது. எனவே தேர்தலுக்கு முதல் நாள் காலையிலிருந்தே 'முரசொலி' அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, "கருணாநிதி கைது செய்யப்பட்டு விட்டாராமே, உண்மையா?" என்று விசாரிக்கத் தலைப்பட்டு விட்டனர் ஏராளமான நண்பர்கள்.

நானே கைதாவது பற்றிக் கடுகளவும் கவலைப்படாமல் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தேன்.

எரிச்சலுற்ற காங்கிரஸ்காரர்கள் என்னைச் சிறைப்பறவை ஆக்கிடவே சிந்தித்த போதிலும் உடனடியாகக் கைது செய்தால், தேர்தலில் காங்கிரசுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்றும் பயந்திருக்கிறார்கள். ஆயினும் தேர்தல் முடிந்தவுடன் என்னைக் கைது செய்து விடுவது என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

அதிகார வட்டத்தில் என்னைக் கைது செய்வதற்குரிய ஆலோசனைகள் அலை மோதுவதை எப்படியோ கண்டு பிடித்துவிட்ட செய்தியாளர்கள் என்னை அணுகி, என் கருத்தினைக் கேட்டனர். அவர்களுடைய விருப்பங்களுக்கு, "என்னைக் கைது செய்து, என் மீது வழக்குப் போடும் நன்னாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!" என்று விடையளித்தேன்.

ஆனால் அந்த நன்மைள் எனக்குப் பின்னர் வாய்த்திட வாய்ப்பு இல்லை-தேர்தல் காற்று காங்கிரசுக்கு விரோதமாகத் திசை மாறி விட்டது!

1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அதன் தோழமை கட்சிகளுக்கும் பூந்தென்றலாகவே வீசியது; காங்கிரஸ் கட்சிக்கோ பொல்லாத புயலாகவே மாறியது!

அந்த மாபெரும் மாளிகையின் நெடிதுயர்ந்த தூண்களாய் விளங்கிய பலர் தோல்வியையே அப்போது தழுவிட நேர்ந்தது.

அரசியல் திறனுய்வாளர்களின் கணிப்புகள் ஆருடங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அமைதிப் புரட்சியாகவே நடைபெற்று விட்டது தமிழக ஆட்சி மாற்றம்.

அப்போது தமிழகச் சீட்டமன்றத்தின் மொத்த இடங்கள் 234. திருமங்கலம் தொகுதியில் கூட்டணி வேட்பாளர் திடீரென்று இறந்து விட்டதால் அந்த ஒரு தொகுதி நீங்கலாக எஞ்சிய 233 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் 173 இடங்களில் மட்டுமே போட்டியிட்டு 138 இடங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸ் கட்சியோ எல்லா இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தி வைத்தும், 49 இடங்களையே அடைந்திட முடிந்தது. நாடாளுமன்றத் தைப் பொறுத்த மட்டில் போட்டியிட்ட 25 இடங்களையுமே கைப்பற்றி விட்டது கழகம். இது இந்தியாவில் வேறு எந்தக் கட்சிக்குமே கிட்டிடாத வரலாற்றுச் சாதனையாகும்.

அகில இந்தியாவிலும் மலையென வளர்ந்து நின்ற காங்கிரஸ் அப்படி நிலை குலைந்து சரிந்திடும் என்றோ, 'மாநிலக்கட்சி' தானே என்கிற அலட்சியப் பார்வைகளுக்கு ஆளான தி. மு. கழகம் ஆளுகின்ற தகுதியினை எய்திடும் என்றோ எவருமே அன்று எதிர்பார்த்திடவில்லை.

அந்தத் தேர்தலில் தமிழக அமைச்சர்களில் ஒரே ஒருவரைத் தவிர மற்ற அத்தனை பேருமே தோல்வியைச் சந்தித்தார்கள்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இரண்டு தடவைகள் இந்தியப் பிரதமர்களின் ஒருமனதானத் தேர்வுக்கு வழிவகுத்தவர் என்னும் பெருமைச் சிறகை விரித்துக் கொடி கட்டிப்பறந்து கொண் டிருந்த திரு. காமராசரே சட்ட மன்றத்துக்குப் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

அகில இந்தியத் தலைவர் நிலைக்குத் தேசியத் தலைவராக (National Leader) உயர்ந்திட்ட பின்னரும் அந்த அளவிலேயே நின்றிடாமல் மறுபடியும் மாநில அளவில் தம்மைச் சுருக்கிக் கொண்டு கோலோச்சிட எண்ணிய அவரது குறுகிய ஆசையை அவருடைய விருதுநகர்த் தொகுதி மக்களே நிறைவேற விடவில்லை.

இவ்வாறு காங்கிரஸ் கலைந்ததும், கழகம் ஆட்சியைக் கைப்பற்றியதும் உலக நாடுகளின் கவனத்தையெல்லாம் கூடக் கவர்ந்தன. வெளிநாட்டு ஏடுகள் பல வெவ்வேறு கோணங்களில் நின்று அந்தத் தேர்தல் முடிவுகள் பற்றி வியப்பினைத் தெரிவித்தன; விமரிசனங்களை வெளியிட்டன.

''காங்கிரசின் தேர்தல் தேல்விகளால் இந்திய ஜனநாயகம் உயிர் வாழும் என்பது மட்டுமல்ல; நல்ல ஆரோக்கிய உருவத்தோடு செயல் படும் என்றும் இந்தத் தேர்தல் முடிவால் தெரிகிறது. இதனால் தட்டிக் கேட்பாரற்ற ஓர் அரசியல் சக்தி மறைந்து விட்டது! புதிய உறவுகள் மக்கள் ஆதரவுடன் கிளம்பத் தொடங்கிவிட்டன. இதுவரை முன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி பெரிய கொள்கைப் பிரச்சினைகளைக் கூடத் தான் மட்டுமே ரகசிய அறை களுக்குள் முடிவு செய்து வந்தது. மாநில அரசுகளைக் கட்சிக் கிளைகளாக வே கருதி வந்தது! அந்த நிலை இப்பொழுது மாறிவிட்டது!'' —என்று கருத்துத் தெரிவித்தது 'லாஸ்ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' என்னும் அமெரிக்க ஏடு.

''இந்தியாவின் இயற்கையான மாநில நோக்கும் காங்கிரஸ் ஆட்சியின் மதர்ப்பான போக்கினால் வளர்ந்த இன மொழி எதிர்ப் புணர்ச்சியும் தேர்தலின்போது வெகுவாகக் காணப்பட்டன. தமிழகத் தில், இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி ஆவதை மிக வன்மையாக எதிர்த்து வந்த தி. மு. கழகத்தின் வெற்றி இதற்குச் சரியான முன் உதாரணமாகும்!''

-என்று 'மெய்னிச் சிம்பன்' எனனும் ஜப்பானிய ஏடு தனக்குத் தோன்றிய முறையில் மதிப்பீடு செய்திருந்தது.

பொதுத் தேர்தல் நடைபெறத் தொடங்கிய ஒரு வாரம் கழித்தே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. முதற்கட்ட அறிவிப்புகளே கழகத்துக்கு வெற்றி முரசு கொட்டுவனவாக அமைந்துவிட்டன.

நான் வேட்பாளராக நின்று போட்டியிட்ட சைதாப்பேட்டைத் தொகுதியில் தேர்தல் முடிவு 23-2-67 மாலையில் அறிவிக்கப்பட்டது.



அந்த வெற்றிச் செய்தியினைக் கேட்டவுடன் வாக்குகள் எண்ணப்பட்ட இடத்திற்கு வெளியே திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் உற்சாக ஆரவாரம் செய்தனர். வெடிகளை வெடித்து வாழ்த்துக்களை முழங்கினர்; அந்தக் காட்சிகளை இந்தியச் செய்திப்படத் துறையினரே அப்போது படமாக்கினர்.

எனது வெற்றியினைக் கொண்டாடிய அந்தப் பல்லாயிரக் கணக்கான பாச நெஞ்சங்களில் அன்புப் பிடியிலே சிக்கி நான் படாத பாடு பட்டேன். அதே மக்கள் வெள்ளத்திற்கிடையே ஒலிபெருக்கியைப் பொருத்திக் கொண்டு அப்போதே சைதைத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு என் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டேன்:

"சைதைத் தொகுதிப் பெருமக்களும், கழகத் தொண்டர்களும், கூட்டணித் தோழர்களும் எனக்கும் என் தலைவர் அண்ணா அவர்கட்கும் அளித்துள்ள பெரும்பான்மை வாக்குகளுக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குக் கிடைத்த வாக்குகள் 53,000; என்னை எதிர்த்த காங்கிரஸ் நண்பருக்கு 32,000 வாக்குகள் கிடைத்துள்ளன. 32,000 பேர் என் மீது ஏதோ சில குறை கண்டு எனக்கு வாக்களிக்கத் தவறியிருக்கிறார்கள். அவர்கட்கும் சேர்த்து திருப்தி ஏற்படும் வகையில் இந்தத் தொகுதிக்காக நான் பணி புரிவேன். இந்த வெற்றியை நான் இப்போது அதிக ஆர்ப்பாட்டத்துடன் கொண்டாடினால் வெற்றிவாய்ப்பை இழந்தவர்கட்கு மனம் புண்படும். ஆகவே அமைதியாகக் கலைந்து செல்ல வேண்டுகிறேன். தாய்மார்களுக்கும் சகோதரிகளுக்கும் என் நன்றியை அவர்களது பொன்னடிகளில் குவிக்கிறேன்."

எருதுபட்ட புண்ணிலே காக்கை வந்து குந்துவது மட்டுமல்ல; குத்துவதும் உண்டு தன் அலகினால்.

அத்தகையை அநாகரிக மனப்போக்கு அரசியலில் தலையெடுத்திடக் கூடாது என்று எண்ணியதாலேயே வெற்றி ஆரவாரம் செய்திடாமல் தத்தம் வீட்டுக்கு அமைதியாகத் திரும்புமாறு என்னைச் சுற்றிச் சூழ்ந்து நின்ற மக்கள் வெள்ளத்தை அன்போடு வணங்கிக் கேட்டுக் கொண்டேன். அவர்களும் மதிப்பளித்துக் கலைந்து சென்றனர்.

தேர்தல் முடிவுகள், தி.மு. கழகமே தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் வாய்ப்பினைப் பெறப் போகிறது என்று தெரிவித்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே-

23-2-67-இரவு முதலமைச்சர் ராஜாஜி அவர்களைச் சந்திக்கச் சென்றார் அண்ணா.

அவருடன் நானும், நாவலர், மதி, அரங்கண்ணல் முதலானோரும் போனோம்.



ராஜாஜி அவர்களுக்கு அறிஞர் அண்ணு மாலே அணிவித்தார். அப்போது சுதந்திரா உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் வெற்றி குறித்தும், புதிதாக அமையவிருக்கும் அமைச்சரவை குறித்தும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துக்களே வழங்கினர் ராஜாஜி

26-2-67 அன்று சென்னே தியாகராய நகர் எஸ். ஜி. எஸ். திருமண மண்டபத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. கழகச் சட்ட மன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அனேவரையும் வரவேற்றார். கூட்டத் திற்கு அறிஞர் அண்ணு அவர்கள் தலேமை தாங்கிட வேண்டுமென்று சிந்தனேச் சிற்பி சி. பி. சிற்றரசு முன்மொழிந்தார். நான் அதனே வழி மொழிந்தேன்.

தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட் டார்கள். அண்ணு-அவர்கள் அறிவுரைகள் பல பகர்ந்தார்கள்.

எதிர்க்கட்சியாக இருந்த தி. மு. க., ஆளுங்கட்சியாக மாறிய நிலேயில் முதன் முதல் கூடிய கூட்டமாதலால், மண்டபத்தின் வெளியேயும் உள்ளேயும் பெரும் பரபரப்பு காணப் பட்டது.

தென் சென்னே நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அண்ணு புது டில்லிக்கே போய்வி வாரா அல்லது தமிழகத்தில் புதிய அமைச்சரவையைத் தாமே அமைக்கப் போகிறாரா என்கிற அரசியல் ஊகங்களும் அப்போது பலமாக உலவின

1-3-67 அன்றுதான் அத்தகைய ஊகங்களுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அன்று காலே பத்து மணி அளவில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர் களின் கூட்டம் ராஜாஜி மண்டபத்தில் நடை பெற்றது.

பேரறிஞர் அண்ணு அவர்கள் தமிழகச் சட்ட மன்ற தி. மு. கழகக் கட்சித் தலேவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அதன் மூலம் புதிய அமைச்சரவையில் தலேமைப் பொறுப்பினே ஏற்றிடும் தகுதியினே அரசியல் சட்டப்படி அவர் பெற்றார்.

முதலமைச்சர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றைய தினமே ஒரு முதல்தரமான முதல் மரபினை உருவாக்கிட முற்பட்டார் அண்ணா. எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் சந்தித்து அவர்களது வாழ்த்தினைப் பெற முற்பட்டதைக் குறிப்பிடுகிறேன்.

தேர்தல் களத்தில் தி. மு. கழகத்தையும் அதன் தோழமைக் கட்சிகளையும் எப்படியும் தீர்த்துக்கட்டி விடுவது என்றே முனைந்து பாடுபட்டது காங்கிரஸ் கட்சி. ஆனால் பலித்திட வில்லை.

'தமிழாய்ந்த தமிழ்மகனே

தமிழ் நாட்டின் முதலமைச்சாய்

வருதல் வேண்டும்!

-என்னும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கனவே நனவாயிற்று.

தமிழ்த் தாயின் தலைமகனும் அண்ணா அவர்களின் தலைமையில் வளர்ந்து விட்ட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கொலு வேற்றிடும் வாய்ப்பினைப் பெற்ற வரலாற்றுச் சிறப்பினைப் பலரால் அப்போது தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. உள்ளூற அவர்கள் பொருமினர்கள்; புழுங்கினர்கள்.

அந்தப் புழுக்கத்தின் வெளிப்பாடாகத்தான் தி. மு. கழக வெற்றி பற்றிச் செய்தியாளர்கள் கருத்தினைக் கேட்டபோது முன்னாள் முதல்வர் பக்தவத்சலம்.

"விஷக் கிருமி பரவி விட்டது!" என்று தம் முடைய வெறுப்பை யெல்லாம் ஒன்றுய்த் திரட்டி உமிழ்ந்து விட்டார்.

வெறும் வாயையே மெல்லுவதில் வல்லவர்களான செய்தியாளர் கள் இப்படி அவல் கிடைத்தால் சும்மா விடுவார்களா?

என்னை வந்து சூழ்ந்து கொண்டு, 'பக்தவத்சலம் இப்படிப் பாடியிருக்கிறாரே வசைப் புராணம், அதற்கு என்ன பதில் தரப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு-

"...காங்கிரசை ஆதரித்துப் பேசிய சொற்பொழிவாளர்களும் கலைஞர்களும் காங்கிரஸ் தலைவரை மேடையில் வைத்துக் கொண்டே எத்துணை அநாகரிகமாக உரையாற்றினார்கள் என்பதை நாடு அறியும் அதற்கும் சேர்த்து நாடு அளித்திட்ட தீர்ப்பே இந்த நல்ல முடிவாகும். இத்தனைக்கும் பிறகும் பக்தவத்சலம் அவர்கள் விஷக்கிருமி போன்ற சொற்களைப் பயன் படுத்தியது அவர்களது கட்சி சமீப கால மாக வளர்ந்து வருகிற பண்பாட்டுக்கு எடுத்துக் காட்டாகும்!"

என்று கருத்துத் தெரிவித்தேன் நான்.

தி. மு. கழகத்தை அவர் அப்படி நெருப்புச் சொற்களால் எரித்திடும் நிலைக்கு இறங்கிய பிறகும் புதிய அமைச்சரவைக்கு வாழ்த்தினைப் பெற வேண்டிய மாற்றுக் கட்சித் தலைவர்களின் பட்டியலில் பக்தவத்சலம் அவர்கள் பெயரை அண்ணா நீக்கிடவில்லை.

1-3-67 அன்று அண்ணா, நாவலர், நான் ஆகிய மூவரும் அவரது இல்லத்திற்குச் சென்றோம். அவர் தம் ஆதரவையும் வாழ்த்தையும் அளித்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம். "தி. மு. கழகத்தை நான் விஷக் கிருமி என்று சொல்ல வில்லை" என்ற கருத்துப் பட சில விளக்கங்களைப் பெரியவர் பக்தவத்சலம் பின்னர் செய்தி ஏடுகளுக்குத் தந்தார்.

தொடர்ந்து தமிழக மேலவைத் தலைவராயிருந்த மாணிக்கவேலரையும் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களையும் நாங்கள் மூவரும் சந்தித்தோம்.

அண்ணா அவர்கள் புதிய ஆளுங்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற பின்னர் ஆளுநர் மேதகு உஜ்ஜல் சிங் அவர்களைச் சந்திக்கப் புறப்பட்டார். நாவலரும், நானும் உடன் சென்றோம்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முதன் முதலாக அப்போதுதான் நாங்கள் ஆளுநரைச் சந்திக்கச் செல்கிறோம். அந்த முதல் சந்திப்பின் போது ஓர் ஆளுநரை எத்தகைய மரியாதைகளுடன் சந்தித்திட வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

எங்களுடைய கார் சைதாப்பேட்டை மர்மலாங் பாலத்தை விரைந்து கொண்டிருந்த வேளையில்—

'வெறுங்கையோடா கவர்னரைச் சந்திப்பது?' என்னும் உணர்வு எழுந்தது. பாலத்தைக் கடந்ததும் ஒரு கடையின் பக்கம் காரை நிறுத்தி எலுமிச்சம் பழம் ஒன்றை வாங்கிக் கொண்டோம்.

அதுவோ வற்றிப்போன பழம்! இதைப் போய்க் கொடுப்பதா என்று எண்ணினாலும் எங்களுக்கு வேறு வழியில்லை. கைக்குள்ளேயே மற்றவர்கள் கண்ணுக்குப் படாமல் அதனை வைத்திருந்த அண்ணா ஆளுநரைச் சந்தித்ததும் அவர் காத்தினுள்ளே அவசரமாகத் திணித்து விட்டார்.

130

தந்தையைச் சந்தித்தோம்!

1967-மார்ச் 2-ஆம் நாள் காலை பத்து மணி அளவில் தான் அந்த ஆளுநர் சந்திப்பு நடைபெற்றது. ஏறத்தாழ அரை மணி நேரம் புதிய அமைச்சரவை பற்றியும், சட்டமன்றங்களின் இரு அவைகளின் கூட்டம் பற்றியும் அப்போது உரையாடினோம்.

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பிய நாங்கள் திருச்சி நோக்கி எங்கள பயணத்தைத் தொடங்கினோம்.

நாங்கள் திருச்சிக்குச் சென்றது எங்களை வளர்த்து ஆளாக்கி விட்ட தந்தை பெரியாரைச் சந்தித்திடத்தான்.

1949-இல் தந்தையைப் பிரிந்திட்ட தனயன்கள், பசுவிடந் திரும்பிடும் இளங்கன்றுகளாகப் பாசப் பிணைப்புடன் சென்றிட்டோம்.

திருச்சி சென்றதும், உடனிருக்கும் அன்பிலும் உடன் வந்தார். பெரியார் மாளிகை'யில் அடி வைத்த பொழுது—

கடந்த கால நினைவுகள் காட்டாறெனப் பொங்கிப் புரண்டன. ஈரோடு நகரில் 'குடியரசு' ஏட்டில் பணியாற்றியகாலை பெரியாரின் குடும்பத்தில் ஒருவனாக நான் கருதப்பட்டேன். கலந்து பழகினேன். அண்ணாவுக்குப் பிறகு பெரியாரது வீட்டிலேயே தங்கி உணவுண்டு ஏட்டையும் கவனித்துக் கொண்ட பெருமை எனக்குண்டு. மணியம்மை யார் உணவு பரிமாறிட, நண்பர்கள் கருணானந்தம் ஜனார்த்தனம், தவமணிராசன் ஆகியோர் உடன் அருந்திட, அய்யாவோ நகைச்சுவை விருந்தும் பரிமாறிடுவார். பெரியார் பொழிந்திட்ட பாசப் பெருக்கினை எப்படித்தான் மறந்திட இயலும்.

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அய்யாவின் பக்கத்தில் போய் அமர்ந்த பொழுது பாசவெள்ளம் கண்ணீராகி விழிகளுக்குத் திரையிட்டது. குரல் தழுதழுத்தது; நாவும் ஏழ மறுத்தது: என்ன பேசுவதென்றே எனக்குத் தெரியவில்லை.

தனயன்களின் நிலையே தந்தைக்கும்!

"என்னைக் கூச்சப்பட வைத்து விட்டீர்கள்!"

என்று பெரியார் குழறிடும் குரலில் கூறினர். கண்ணீர் பொழிவதில் குழந்தையாகவும் மாறினர்.

அமைச்சர் பொறுப்பினை ஆற்றிடும் சூழ்நிலை உருவாகிய காரணத் தால், 'முரசொலி'யின் ஆசிரியர் பொறுப்பினை விட்டிடும் நிலைக்கும் நான் தள்ளப்பட்டேன். தம்பி மாறன் 4-3-67 முதல் அதன் ஆசிரிய ராக என்னுடைய சுமையினை ஏற்றுக் கொண்டார்.

பள்ளியில் பயின்றிட்ட காலத்திலேயே துண்டுப் பிரசுரமாய் 'முரசொலி'யை நான் தோற்றுவித்தேன். 1957-இல் அதற்குப் பத்திரிகை வடிவம் தந்தேன். பின்னர் இருபதாண்டு காலம் அதனைப் பேணி வளர்த்திட, பெரிய ஏடாய்க் கழக முரசாய் ஆக்கிட, நான் பட்டிருக்கும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு வெள்ளி விழாக் காலம் என் மடியிலே 'முரசொலி' தவழ்ந்து கிடந்தது. அமைச்சர் பதவியோ அதன் ஆசிரியர் பதவியைப் பறித்துக் கொண்டது.

1967-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் நாலாம் நாளி அன்று, தம்முடைய தலைமையில் இயங்கிடப் போகும் அமைச்சரவையின் பட்டியலை அண்ணா அவர்கள் ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களிடம் அளித்தார். அண்ணாவின் தலைமையில் நாங்கள் எட்டுப் பேர் அமைச் சரவையில் இடம் பெற்றோம்.

நாவலர் கல்வி அமைச்சராகவும், நான் பொதுப் பணித்துறை அமைச்சராகவும், மதி உணவமைச்சராகவும், சத்திய வாணிமுத்து அரிசன நலத்துறை அமைச்சராகவும், ஏ. கோவிந்தசாமி வேளாண் மைத் துறை அமைச்சராகவும், மாதவன் சட்ட அமைச்சராகவும், சாதிக் சுகாதார அமைச்சராகவும், முத்துச்சாமி உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பொறுப்புக்களை ஏற்றோம்.

எங்களுக்குத் தரப்பட்ட துறைகளைப் பற்றி அப்போது நான் அடியிற்கண்டவாறு குறிப்பிட்டதும் நினைவில் நிழலாடுகின்றது.

"எனக்குப் பொதுப்பணித்துறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாவலருக்குக் கல்வித் துறை; மதியழகனுக்கு உணவுத் துறை, எந்தத் துறை ஒதுக்கப்பட்டாலும் அதை நாங்கள் சரிவர நிருவகிப்போம் என்ற தெம்பு ஏற்படக் காரணம், அண்ணாதுரை தான்!

''அந்தத் 'துரை யை நம்பித்தான் இந்தத் 'துறைகளே நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அந்தத் 'துரை'யை நம்பினால் தான் நாடு முன்னேறும்; நாட்டில் உள்ள ஏழை மக்கள் வாழ்வில் விடிவு ஏற்படும்.''

புதிய அமைச்சரவை 6-3-67 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் பதவி ஏற்றது. அண்ணா உட்பட அமைச்சர்கள் அனைவரும் தமிழிலேயே 'உளமார' உறுதி மொழி எடுத்துக் கொண்டோம்.

1967 மார்ச்சு ஆரும் நாள் உண்மையிலேயே ஜனநாயகத் திருநாள்.

அதைப் பற்றி 'முரசொலி' ஏட்டில் இப்படியொரு பெட்டிச் செய்தி அப்போது வெளியிடப்பட்டது.

''பொங்கு மணி மார்பும் — பொரு தடக்கை வாளும் ஏந்தி அரசுகளே வீழ்த்தி வெற்றி முரசுகளே முழக்கினான் அன்றையத் தமிழன்.

பொங்கும் விழி நீரும் பொறுக்க முடியா வறுமையும் தந்த அரசை வீழ்த்தி ஜனநாயக வெற்றி முரசை முழக்கினான் இன்றையத் தமிழன்.

அந்த வெற்றி முரசின் நாதமாய்-வீர முழக்கத்தின் கீதமாய் ஒலிப்பது:

''அண்ணா முதலமைச்சர்! அண்ணா முதலமைச்சர்'' என்பதுதான்.

''தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்.''

—என்று ஏங்கியவாறு பாடினார் புரட்சிக் கவி பாரதிதாசன்.

அந்தக் கவியின் கனவு நிறைவேறும் நாள் மார்ச் 6-ஆம் தேதி.

இந்தப் புவி மாந்தர் புளகாங்கிதம் அடையும் நாள் மார்ச் 6-ஆம் தேதி.

தமிழன்னை ஆனந்தக் கண்ணீர் விட்டு அண்ணலின் உச்சி மோந்து முத்தமிட்டு மணி மகுடத்தைச் சூட்டிய நாள் மார்ச் 6-ஆம் தேதி.

அந்நாள் அல்லவோ நமது திருநாள்! நாட்டின் திருநாள்!

தமிழுக்கு இனிப்பான எதிர்காலம் வந்தது தோழர்களே என்று இனிப்பு வழங்கிடுவீர் நாடெங்கும்!

'ஏழைக் குலத்தில் உதித்த ஒரு தமிழன் ஏறுகிறான் அரசுக் கட்டில்! இனி ஏழைக்கு வாழ்வு வந்தது!' என்று கூறி இனிப்புப் பொங்கல் தருவீர் தோழர்களே!

தந்தை பெரியார் அவர்களுக்கும் எங்களுக்கும் ஏற்பட்டிருந்த பாசப் பிணைப்பு இறுக்கமானது; இணையற்றது; பதினெட்டு ஆண்டு காலம் ஏதோ சிறிய இடைவெளி. ஆனால் அந்தப் பிரிவை அறுத்து

போன உறவு அறுந்ததுதான் என்று எதிர் முகாம்களில் இருந்தோர் எக்களிப்பிலே மிதந்தனர். திருச்சியில் பெரியாருடன் நாங்கள் மேற் கொண்ட சந்திப்போ அவர்களது கனவைக் கலைத்தது; கற்பனையைக் கவிழ்த்தது.

'நீரடித்து நீர் விலகிடுமா?' என்கிற முறையில் எங்கள் சந்திப் புக்குப் பிறகு பெரியார் அவர்கள் அடியிற்கண்டவாறு ஓர் அறிக்கை வெளியிட்டார்கள்:

"உண்மையாகச் சொல்கிறேன். காமராசரைத் தவிர்த்துக் காங்கிரசில் இருக்கும் எவரையும் விட தி. மு. க. வின் தலைவர்கள்-தரத்தில் இருக்கும் எல்லாரிடமும் எனக்குக் கவர்ச்சி இருக்கிறது. அவர்கள் (தி. மு. க) என்னிடம் துவக்கம் முதல் இன்று வரை தாட்சண்யமாக (நாகரிகமாகவே) நடந்து வந்திருக்கிறார்கள்.

"நான் அவர்களை (ரிசர்வேஷன்) மீதி இல்லாமல் எவ்வளவு கண்டித்துக் கடுமையான குறைவான வார்த்தைகள் பயன் படுத்திய காலத்திலும் இவர்களில் (தி. மு. க. தலைவர்களில்) ஒருவர் கூட என்னைக் கடிந்தோ, குறை கூறியோ எந்த விதமான குற்றஞ் சாட்டியோ, தரக் குறைவாகவோ ஒரு வார்த்தையைக் கூடச் சொன்னது கிடையாது. இதை நாங்கள் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களில் (தி. மு. க.) சிலரை அதிகமாகச் சந்திக்க நேரவில்லை என்றாலும், அப்படி நேர்ந்த போது பழைய முறையிலேயே நடந்து கொண்டிருக்கிறார்கள்."

6-3-67 நாளிட்ட 'விடுதலை'யில் வெளியான இந்த அறிக்கை கழகத் தவர்களுக்கு அகமகிழ்ச்சியையும் காங்கிரசாருக்கு அதிர்ச்சியையும் அளிப்பதாகவே அமைந்திருந்தது.

அமைச்சர் பொறுப்பினை ஏற்றிட்ட என் நெஞ்சினை அன்னையின் நினைவு ஆக்கிரமித்துக் கொண்டது. நான் பதவியேற்ற காட்சியினைப் பார்க்காமல் போய் விட்டார்களே என்று என் இதயம் புலம்பிற்று.

அவர்களுடைய கல்லறைக்குச் சென்று கண்ணீர் வெள்ளத்தைக் காணிக்கையாக்கி வாழ்த்தினைப் பெற்றிட விரும்பினேன்; திருவாரூர் நோக்கிக் கிளம்பினேன்.

திருவாரூரை அடுத்த காட்டூரில் தான் என் அஞ்சுகத் தாயின் கல்லறை அமைந்திருக்கிறது. 8-3-67 அன்று அங்கு போய்ச் சேர்ந்தேன். எத்தனை எத்தனையோ பழைய நினைவுகள் படமென விரிந்தன.

கழகம் ஈடுபடும் எந்த எந்தத் தேர்தல்களையினும்—ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தல்களாக இருக்கலாம்—அல்லது சென்னை

மாநகராட்சி மன்ற மேயர் தேர்தலாக இருக்கலாம்—அவைகளைப் பற்றிய விவரங்களையெல்லாம் பேரப் பிள்ளைகளின் வாயிலாகவும், வீட்டுப் பிள்ளையாகவே வளர்ந்திட்ட விசுவாசமிக்க செயல்மணிப் பையன் வாயிலாகவும் தெரிந்து வைத்துக் கொண்டு அண்ணுவையும் என்னையும் மற்றும் கழக முன்னணியினரையும் சந்திக்கும் போதெல்லாம்—

''இத்தேர்தல்களில் கோட்டை விட்டு விடாதீர்கள். நம்ப கழகம் எப்படியாவது ஜெயிக்க வேண்டும்'' என்று புன்னகை தவழ எங்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த என் தாயார், இப்போது நாங்கள் கோட்டையைப் பிடித்து வெற்றிக் கொடி நாட்டியபோது உயிரோடு இருந்திருந்தால் எவ்வளவு பூரித்துப் போயிருப்பார்கள் என்று எண்ணி னேன். கண்கள் குளமாகி விட்டன.

131

பதவியெனும் புதிய சட்டை

அன்னையின் கல்லறையைத் தொழுதிடச் சென்ற என்னை திருவாரூர் பொதுக் கூட்டமொன்றில் பேசிடத்தான் வேண்டுமென்று தென்னன் முதலான நண்பர்கள் வற்புறுத்தி விட்டனர். ஒப்புக் கொண்டு உரையாற்றிய நான் இவ்வாறு குறிப்பிட்டேன்:

''.. என்னைப் பற்றி இங்கே பேசிய தோழர்கள் திருவாரூருக்கு நான் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறினர்கள். தெருவெல்லாம் சென்று விளையாடும் பிள்ளை கடைசியில் தாயின் மடிக்குத் திரும்புவதைப் போலக் - களமெல்லாம் சென்று போரிடும் வான் கடைசியில் உறைக்கு வருவது போல நான் திருவாரூருக்கு வருகிறேன்.

''நான் பிறந்தது திருக்குவளையென்றாலும் அங்கே இருந்தது 12 ஆண்டுகள்தான். ஏறத்தாழ 20 ஆண்டுக் காலம் திருவாரூரில் வாழ்ந்திருக்கிறேன். ஒரு பெண் பல ஆண்டு காலம் தாய் வீட்டில் வாழ்ந்திருந்தாலும் திருமணம் ஆன பிறகு புகுந்த வீட்டிற்குச் சொந்தமாகி விடுவதுபோல் நான் திருக்குவளையில் பிறந்தாலும், திருவாரூருக்குச் சொந்தமானவன்; திருவாரூர் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற காரணத்தால் நான் தஞ்சை மண்ணுக்குச் சொந்தமாகிவிட்டவன். தஞ்சை மாவட்டத்துடன் அதிகத் தொடர்பு கொண்டுள்ள நான் இந்த நேரத்தில் உங்கள் காலடிகளில் என் நெஞ்சார்ந்த அன்பைக் குவிக்கிறேன்.

''நீங்கள் அதை மிதித்தாலும் அந்த அன்பு இதயத்தின் மீது மெல்லக் கால் வைத்தாலும் அதனால் ஏற்படும் உணர்வை வலியென்று கருதாமல் வாய்ப்பாகக் கருதி நான் உங்களுக்குப் பாடுபட்டிருக்கிறேன். என் கண்கள் குளமாகும் விதத்தில் உருக்கமான பழைய நாள் நிகழ்ச்சிகளை மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி இங்கே எடுத்துக் கூறினர்.

''திருவாரூர்த் தெருக்களில் விளையாட்டுத்தனமாக நான் பேசிய பேச்சுக்களைக் கேட்டு, 'தம்பி!' என்று அழைத்து உற்சாகமூட்டி முதுகில் தட்டிக் கொடுத்த மன்னையின் முரட்டுக் கரங்கள் இப்போது என் நினைவுக்கு வராமல் இல்லை. தோழர் தென்னன் வீட்டுத் திண்ணையில் நாங்கள் பேசிய அரசியல் கருத்துக்கள் என் நினைவுக்கு வராமல் இல்லை. நம்முடைய விஜயராகவனின் 'ராயல் அன் கோ'

சோடா பாக்டரியில் உட்கார்ந்து கழக வளர்ச்சிக்குப் போட்ட திட்டங்கள் என் நினைவுக்கு வராமல் இல்லை.

''பழைய பாக்கியைப் பிறகு தருகிறேம், இன்றைய பாக்கியை நாளைக்குத் தருகிறேம்; அடித்த 'முரசொலி' பத்திரிகையைத் தாருங்கள்'' என்று கருணாநிதி அச்சகத்தில் உட்கார்ந்து தோழர் ஜமாலோடு நடத்திய போராட்டம் என் நினைவுக்கு வராமல் இல்லை.

''சிறு வயதில் இதே திருவாரூரில் நான் என் நண்பர்களுடன் விளையாடிய நிகழ்ச்சிகள் என் நினைவுக்கு வராமல் இல்லை. நான் மறந்தாலும் நமது எதிர்க்கட்சி நண்பர்கள் 'திருவாரூர்த் தெருவில் விளையாடிய பையன்தானே இந்தக் கருணாநிதி?' என்று சுட்டிக் காட்டுவதற்கும் தவறுவதில்லை. அவர்கள் அப்படிக் கூறுகிற காரணத்தால் எனக்கு மிகுந்த அடக்கம் ஏற்படுகிறது. அதற்காக அவர்களுக்கு நன்றி.

''இன்று போட்டுக் கொண்டிருக்கிற புதிய சட்டை அமைச்சர்' பதவி; நாளைய தினம் கழற்றி எறிந்து விடலாம். நான் உங்களுக்கு அண்ணனாக, தம்பியாக, உங்களுக்குச் சொந்தக்காரனாக இருப்பது முன்பு இருந்தது—என்ற எதிர்காலத் தொடர்பில் அல்ல. அந்தச் சொந்தம் நிகழ்காலத்திலும் இருக்கட்டும்; எதிர்காலத்திலும் தொடரட்டும்; தயவு செய்து 'கலைஞராக இருந்தவர்' என்று சொல்லாதீர்கள். இப்போதும் எப்போதும் அப்படி இருப்பவன்தான்!''

நான்காவது பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் வெற்றி வாகை சூடியது குறித்து வெளிநாட்டு ஏடுகள் சில வெளியிட்ட கருத்துக்களை முன்னரே எடுத்துக் காட்டியிருக்கிறேன். அந்த நேரத்தில் இந்திய ஏடுகளும் அரசியல் அறிஞர்களும் கழகத்தின் வெற்றியை எந்தெந்தக் கோணங்களில் நின்று அலசினர், அணுகிப் பார்த்தனர் என்பதும் எண்ணி மகிழத் தக்கதாகும்.

''...இருபது ஆண்டுக் கால காங்கிரஸ் கட்சியின் ஆட்சியும் திரு. காமராசரது தலைமையும் இந்த (தமிழ் நாடு) மாநிலத்தில் ஒரு முடிவுக்கு வந்தன. தமிழ்நாட்டில் தி. மு. க. ஆளுங்கட்சியாக உதயமாகியிருப்பது தமிழ் நாட்டு அரசியலை; மேலை நாட்டில் உள்ள மிகச் சிறந்த ஜனநாயகங்களோடு ஒப்பிடச் செய்கிறது' என்று கருத்துத் தெரிவித்தது 'இந்துஸ்தான் டைம்ஸ்'.

'...பண்பாட்டுத் துறையில் தி.மு.க. நிச்சயமாகத் திட்டவட்டமாக மேலானது. 1965-ஆம் ஆண்டைய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது மந்திரி சபையால் கையாளப்பட்ட முறை மாணவர்கள் நினைவில் பசுமையாக இருந்திருக்கிறது... தி.மு. கழகம் விடாது செய்த

பிரச்சாரம் காங்கிரஸ் சவப்பெட்டி மீது கடைசி ஆணியையும் அடித்துவிட்டது''

—என்றது யு.என்.ஐ. செய்தி நிறுவனம்.

'...புதிய நாடாளு மன்றத்தில் தி. மு. கழகத்தினர் 25 பேர் இருப்பர்; அக்கட்சி நிறுத்திய அத்தனை பேரும் வெற்றி பெற்றனர். இது ஒரு சாதனை (ரிகார்டு) ஆகும்!'

—என்றது 'பேட்ரியட்' ஏடு.

'மற்ற இடங்களில் ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கிறதாயினும் சென்னையில் மட்டுமே 'பார்லிமெண்டரி ஜனநாயகம்' வெற்றி பெற்றிருக்கிறது... இது மட்டில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு அதாவது இந்தியா முழுவதுக்கும் வழிகாட்டியாக அமைந்திருப்பது பற்றி நாம் பெருமைப்படலாம்...பதவியேற்கும் தி.மு.க. கட்சித் தலைவர்களின் ஆரம்ப உரைகள் நம்பிக்கை அளிப்பவைகளாகவே இருக்கின்றன'

—என்றது 'தினமணி'.

'தமிழகத்தில் வேட்டு முழக்கத்தை வென்றது ஒட்டுச்சீட்டு!' என்றது 'பிளிட்ஸ்'

'தி.மு.கழகமோ இன்னும் போராடும் இயக்கமாக உள்ளது. ஆளும் (காங்கிரஸ்) கட்சியின் சினத்தையும் —ஏன், பகிரங்கப் பரிகாசத் தையும் கூடக் கடந்த இருபது ஆண்டுகளாகத் தைரியமாகச் சமாளித்து வந்துள்ளது அதன் தேர்தல் பணிகள் உணர்ச்சி கொண்டனவாயும் தொண்டு மனப்பான்மை நோக்கம் வாய்ந்தவையாகவும் இருந்தன'

—என்றது 'கரண்ட்.'

'தி.மு.க. வாய்ச் சவடால் அமைப்பு என்றும் தீவிரவாத அரசியல் கட்சி என்றுமிருந்த கருத்தை அழிக்க திரு. சி. என். அண்ணாதுரை முயன்று வந்தார். தமிழக வாக்காளர்களில் கணிசமானோர் அவரது கட்சிக்கு அமோக வாக்களித்திருக்கும் அம்சம் அவர் தமது முயற்சியில் வென்றுவிட்டார் என்பதையே நிருபிக்கிறது' என்றது 'ஸ்டேட்ஸ் மென்.'

'பொதுத் தோதலில் தி.மு.கழகத்தின் வெற்றி இந்திக்காரர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகும். வட நாட்டுக்காரர்கள் இந்தியைக் கடவுளாக நினைப்பதை இனி விட்டுவிட வேண்டும்' என்றார் அலகாபாத் நீதிபதி திரு. எஸ். எஸ். தவான். இவர் பின்னர் ஆளுநராகவும் ஆனவர்.

''அகில இந்திய அடிப்படையிலோ மாநில அளவிலோ காங்கிர சுக்கு எதிராக உறுதியாகப் போட்டியிடக்கூடிய வேறு எந்தத்

தனிக்கட்சியும் இன்னும் நெடு நாளைக்குத் தோன்ற இயலாது என்றே காங்கிரஸ் தலைவர்கள் எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனால் அதற்கு மாறான அதிசயம் சென்னையில் நிகழ்ந்துள்ளது. தி.மு.க. இங்கு இருந்தது. தாமதமின்றி அக்கட்சியை மக்கள் பதவிப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்து விட்டனர்"

—என்றார் முன்னாள் லெப்டினென்ட் கவர்னர் திரு. க. சந்தானம்.

அந்தப் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி கவிழ்ந்தது போலவே இந்தியாவின் வேறு சில மாநிலங்களிலும் அது வேரோடு சாய்ந்தது. எதிர்க் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றன.

கேரளாவில் திரு ஈ. எம். எஸ். நம்பூதிரிப்பாடும், மேற்கு வங்கத்தில் திரு. அஜாய் முகர்ஜியும், பஞ்சாபில் திரு. குர்நாம் சிங்கும், ஒரிசாவில் சிங்தேவும், பீகாரில் திரு பி. பி. சின்காவும் முதல்வர்களாக அமைச் சரவை அமைத்தனர்.

இவ்வாறு ஆறு மாநிலங்களில் தான் எதிர்க்கட்சிகள் காங் கிரசிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றின என்றாலும் இந்தியா முழுவதிலுமாக அறுபது சதவிகிதமான வாக்குகள் காங்கிரசுக்கு எதிராகவே விழுந்திருந்தன.

தி.மு.கழகத்தைப் பொறுத்த மட்டில் வாக்குகள் பெற்ற வகையில் ஒரே மாநிலத்தில் தான் போட்டியிட்டது என்றாலும் அகில இந்தியக் கட்சிகள், மாநிலக் கட்சிகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஒப்பு நோக்கியதில் ஐந்தாவது இடத்தைப் பிடித்த பெருமையினை அது பெற்றது.

அந்த நேரத்தில் அண்ணா வெளியிட்ட ஓர் அரிய கருத்தும் அகில இந்திய அரசியல் கட்சிகள் அனைவரும் தங்கள் இதயத்திலே பதிய வைத்துக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

"மக்கள் இது வரையில் ஒரே கட்சி-காங்கிரஸ் கட்சிதான் ஆள முடியும் என்று நம்பியிருந்தார்கள். அதை மாற்றி இன்று எதிர்க்கட்சி களிடம் ஆட்சியைக் கொடுத்திருக்கிறார்கள். அதைக் காப்பாற்ற விட்டால் மக்களுக்கு நம்மிடமுள்ள நம்பிக்கை நசித்துப் போய்விடும். ஆகவே நிலையான ஆட்சிக்கு உறுதி எடுத்துக் கொள்வோம்"

—என்றார் அண்ணா.

அத்துடன் மேற்கு வங்கத்தில் எதிர்க்கட்சி அமைச்சரவையில் இடம் பெற்ற நிலையிலும் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் ஜோதி பாசு போன்றவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டபோது—

''மத்திய அரசிடம் உரிமைக்காகப் போராட வேண்டும்: அதே நேரத்தில் இந்தியாவின் கட்டுக்கோப்பைக் கலைத்துவிடக் கூடாது'' என்றும் அவர் கூறினார்.

இதே உணர்வோடுதான் முதலமைச்சர் அண்ணா அவர்கள் சேலம் இரும்பாலைக்காகச் 'சேலம் எழுச்சி நாள்' கொண்டாடிய போது மத்திய அரசுக்கு மாநிலத் தேவையை உணர்த்தும் நாளாக அது அடக்கத்துடன் கொண்டாடப்பட்டது; ஒரு மோதல் என்கிற அளவில் அது முன்டெழவில்லை.

ஆனால் அண்ணா அவர்களின் எச்சரிக்கைப்படி விழிப்போடு இயங்கிட மற்ற மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சி ஆட்சிகள் தவறி விட்டன. அதனால்தான் காங்கிரசுக்கு எதிராக எழுந்த ஆட்சிகள் அனைத்தும் பிற இடங்களில் நாளாவட்டத்தில் கவிழ்ந்தன. கழக ஆட்சி ஒன்றுதான், அண்ணா காலத்திலும் அவருக்குப் பிறகும் நிலைத்து நிற்கிறது; ஐந்தாவது பொதுத் தேர்தலிலும் முன்னை விட அதிகத் தொகுதிகளைக் கைப்பற்றி நீடித்துக் கோலோச்சுகின்றது.

தி மு. கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதும் மக்களின் துயர் துடைத்திடும் பணிகளில் முனைந்து ஈடுபட்டது.

உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிட, அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றிட, தொலைதூர பஸ் கட்டணங்களைக் குறைத்திட, தொழிலாளர் கோரிக்கைகளை நிறைவேற்றிட உடனடி நடவடிக்கை களைக் கழக அரசு உற்சாகத்துடன் மேற்கொண்ட வேளையில் திடுக்கிடும் உண்மை ஒன்று எல்லாருடைய உள்ளத்தையும் உருக்கிற்று.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுத் தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்பதற்குள் உள்ள இடைக்காலத்தில் 'காபந்து சர்க்கார்' நடத்திக் கொண்டிருந்த முன்னாள் முதல்வர் பக்தவத்சலனார் இந்தி எதிர்ப்புச் சம்பந்தப்பட்ட முக்கியமான பைல்கள் சிலவற்றை எரிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்.

அவரது தவருன நடவடிக்கையை அறிந்து தமிழகமே பரபரப்பில் ஆழ்ந்தது. பீகாரிலும் மேற்கு வங்கத்திலும் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தபோதும் பைல்கள் சில ஒடி ஒளிந்தன என்னும் செய்திகள் அப்போது உலவிடத்தான் செய்தன என்றாலும் தமிழகத்தில் அதற்கு முன் 'பைல் எரிப்பு' நடைபெற்றதாக வரலாறு இல்லை. எனவே அது மிகுந்த பதைப்பினை இங்கே ஏற்படுத்தியது.

இதிலே; வேதனைக்குரியது இந்த எரிப்பு வேலைக்கு வருத் தம் ஏதும் தெரிவிக்காதது மட்டும் அல்ல, அது சரியே என்றும் திரு பக்தவத்சலனார் வாதித்ததுதான்; அதுவும் என்னைத் தொடர்புபடுத்தி வாதித்தார்.

''தமிழ் நாட்டில் ஆட்சி மாறப்போகிறது; நான் போலீஸ் மந்திரியாவேன். அப்போது இந்தப் போலீஸ் அதிகாரிகளைப் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று பத்திரிகைகளில் படித்ததாகவும் ஆகவேதான் இந்தி எதிர்ப்புப் பையல்களை, முக்கியமாக என் சம்பந்தப்பட்ட பையல்களை எரிக்க அவர் உத்தரவு போட்டதாகவும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக இட்டுக்கட்டி பையல் எரிப்பு வேலையில் ஈடுபட்ட பக்தவத்சலனுர் பற்றிப் பத்திரிகை நிருபர்களிடம் நான் கூறினேன்:

''நான் போலீஸ் மந்திரியாவேன் என்றே போலீஸ் அதிகாரிகளை அப்போது பார்த்துக் கொள்கிறேன் என்றே கூறவே இல்லை. முன்னுள் முதலமைச்சர் இப்போது கூறியிருப்பது அப்பட்டமான பொய்யுரையாகும். வெள்ளைக்காரன் பாணியில் பையல்களைக் கொளுத்தியதாக அவர் கூறியிருக்கிறார். அது வேண்டுமானுல், அவரது செயலுக்குப் பொருத்தமானதாகும்; தாம் செய்துவிட்ட ஒரு தவறுக்கு அவர் காட்டுகின்ற காரணம் பெருந் தவருனதாக இருக்கின்றதே என்று நான் மெத்தவும் வருத்தப்படுகிறேன்.''

அவருடைய செயலுக்காக எவ்வாறேனும் அவர் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர்.

அண்ணு அவர்களோ தமக்கே உரிய பெருந்தன்மை காரணமாக முன்னுள் முதல்வர் மீது எந்த நடவடிக்கையும் எடுத்திடாமல் விட்டு விட்டார்.

இந்தியா முழுமையிலும் நான்காவது பொதுத் தேர்தல் நாற்பது சதவிகிதம் வாக்குகளையே காங்கிரஸ் கட்சி பெற முடிந்தபோதிலும் நாடாளுமன்றத்தில் அது கூடுதலான இடங்களைக் கைப்பற்றி யிருந்தது. எனவே, அக்கட்சியினைச் சார்ந்திட்ட திருமதி இந்திரா காந்தி அம்மையாரே மீண்டும் தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் படும் வாய்ப்பினைப் பெற்ருர்.

இந்திரா காந்தி முதல் முறை பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது நிலவிய அரசியல் நிலைமைகள் அவரே இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டபோது அடியோடு மாறிவிட்டன. முன்னர் கேரளம் ஒன்றைத் தவிர பிற எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சியே கோலோச்சிக் கொண்டிருந்தது. இப்போதோ மேலும் ஐந்து மாநிலங்கள் காங்கிரஸ் பிடியினை உதறி விட்டு எதிர்க்கட்சிகளின் ஆட்சியை ஏற்றுக் கொண்டன.

இதனுல், மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆண்டதால் அந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, தான் பாட்டு

பாடுவதற்கேற்பவே மாநிலங்களே நாட்டியம் ஆடிட வற்புறுத்துகின்ற கட்டளை பிறப்பிக்கின்றன மத்திய அரசின் போக்கில் சற்று மாற்றம் ஏற்பட்டது.

இத்தகைய மாறுபட்ட அரசியல் நிலைமை மாளாத ,மண்டையிடி'யாகவே இந்திரா காந்திக்குத் தொந்தரவு தரப்போவதாக அன்றைய அரசியல் வல்லுநர்கள் 'ஆரூடங்கள்' கணித்தனர். ஆனால், நாளாவட்டத்தில் எதிர்க்கட்சிகளின் மாநில அரசுகள் அவருக்கு ஒத்துழைப்பையே ஈந்திட-அவர்தம் சொந்தக் கட்சியினரே அவரைத் தொலைத்துக் கட்டிட அணி திரண்டனர். அதனுடைய விளைவே பின்னர் காங்கிரஸ் பேரியக்கத்தில் விழுந்து விட்ட 'சிண்டிகேட்' 'இண்டிகேட்' என்னும் பிரிசல் வெடிப்புகள்

தமிழகத்தில் புதிய சட்ட மன்றம் 15-3-67இல் கூடியது. தற்காலிகப் பேரவைத தலைவராக அமர்த்தப்பட்ட திரு பி. கே. மூக்கையாத் தேவர் புதிய உறுப்பினர்களுக்குப் பதவி உறுதி மொழி செய்து வைத்தார். இரண்டு நாட்கள் கழித்து முறைப்படியான சட்டப் பேரவைத் தலைவராகத் திரு சி. பா. ஆதித்தனரும் துணைத் தலைவராகப் புலவர் க. கோவிந்தனும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தமிழக ஆட்சித் துறைகளில் தமிழர்களுக்குரிய தகுதிமிகு இடங்கள் காங்கிரஸ்காரர்களால் தரப்படவில்லையே என்பதுதான் தமிழ் மக்களின் ஏக்கமாக உருவெடுத்து எரிச்சலாகக் கொழுந்துவிட்டது. அவர்களுடைய ஏக்கத்தை நீக்கிட - எரிச்சலைத் தணித்திட-உடனடியாக ஏதேனும் செய்திட வேண்டும் என்னும் ஆர்வத் துடிப்பு எங்கள் உள்ளத்தினுள் அலை மோதிக் கொண்டே இருந்தது.

அதனுடைய விளைவாக முதற்கட்டமாக அடுத்து வந்த தமிழ்ப் புத்தாண்டு நாளில் (14-4-1967-இல்) தமிழக அரசின் தலைமைச் செயலகம் இயங்குகின்ற புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் 'தமிழப் அரசு தலைமைச் செயலகம்' என்னும் ஒளியுமிழ்ப் பெயர்ப் பலகை அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அந்தப் பெயர்ப் பலகையில் அரசின் இலச்சினையைச் சுற்றிலும் காங்கிரஸ் ஆண்ட காலத்தில் 'மதராஸ் கவர்ன்மெண்ட்' என்று ஆங்கிலத்திலும் 'சத்தியமேவ ஜயதே' என்று வடமொழியிலும் சொற்கள் பொறிக்கப்பட்டிருப்பது வழக்கம்; அந்த வழக்கத்திற்கு விடை கொடுத்துத் - 'தமிழக அரசு' — 'வாய்மையே வெல்லும்', என்னும் இனிய தமிழ்ச் சொற்கள் இலச்சினையைச் சுற்றி இடம் பெற்றிடவும் அப்போது முதன் முதலாக ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர் அந்த முறையே இலச்சினையில் தொடர்ந்து கையாளப்பட்டது.



ஓர் அரசுக்குக் கொடி எப்படி உயிர் போன்றதோ அப்படியே இலச்சினை (Emblem) என்பதும் ஒரு தனித் தன்மைக்குச் சாட்சியமாய் ஒளிர்ந்திடும் சிறப்புமிகு சின்னமாகும். அத்தகைய உன்னதமான இலச்சினையிலும் அன்னை மொழி ஆட்சி செய்வதுதானே அறமாகும், முறையாகும். எனவேதான் மேலே குறிப்பிட்டவாறு அழகிய தமிழ்ச் சொற்கள் இலச்சினையைச் சுற்றிலும் மாலையாக அணிவிக்கப்பட்டன.

அசோகர் காலத்துக் கல்வெட்டுகளும் தூபிகளும் இல்லாமற் போயிருந்தால் அந்த மவுரியப் பேரரசனின் மாட்சியினை, மனிதத் தன்மையினை நம்மால் உண்மையாகவே உணர்ந்திருக்க முடியுமா? டில்லியிலே உள்ள 'குதுப்மினார்' கூறிடும் சரித்திரச் சான்றுகள் தான் எத்தனை! எத்தனை! ஆக்ராவில் அமைந்துள்ள ஷாஜஹானின் தாஜ்மகால்தான் எத்தகைய எழில் கொஞ்சும் காதல் காவியத்துக்கு அழிவில்லா ஓவியக் கோவிலாய் ஒளி வீசுகிறது!

இவற்றைப் பற்றியெல்லாம் படித்தவர்கள் மட்டுமல்ல; நேரில் பார்த்துக் களிப்பவர்களும் கூடத் தி. மு. கழகம் சான்றோர்களுக்குச் சிலையெடுத்தால், கல்லறை கட்டிமுடி நினைவுச் சின்னங்களை நிறுவினால் ஏளனஞ் செய்வதிலும், ஏசல் கணைகள் தொடுப்பதிலும் ஈடுபடுவது உண்டு.

அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல்தான் பல வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுறுத்தும் வடிவங்கள் சமைப்பதையும் தன் கடமையாகக் கொண்டு செயலாற்றி வந்திருக்கிறது கழகம்.

ஏனெனில்—

வரலாறு என்னும் அருமையான தங்கப் பழைக்குத் திறவு கோலாய்த் திகழ்பவையே சிலைகள், கல்லறைகள், ஸ்தூபிகள், நெடிய தூண்கள்.

இதே சரித்திர உணர்வோடுதான் கழகத்தோழர்கள் இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்து வெந்தீயில் வெந்து கருகிய சிங்கத்தமிழன் சின்னசாமிக்கு ஒரு நினைவுத் தூண் எழுப்பினர். திருச்சி - தென்னூர் இடுகாட்டில் அந்த மாவீரனின் கல்லறையில் அமைந்த அந்நினைவுத் தூணை 16-4-67-இல் நான் திறந்து வைத்தேன். அப்போது சின்னச்சாமியின் தாயார் தங்கம்மாள், மனைவி கமலா, மகள் திராவிடச் செல்வி ஆகிய மூவரும் அங்கே வந்து நின்ற காட்சி, வெள்ளமெனத் திரண்டு வந்திருந்த கூட்டத்தை விம்மி விம்மி அழச் செய்தது. தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைத் தேடிக் கொண்ட அந்தத் தியாக மறவனின் அன்னையார் எனக்கொரு பூமாலை அணிவித்தார்கள்; அப்போது கண்ணீர் மாலையைத்தான் என்னால் காணிக்கை ஆக்கிட முடிந்தது.

132

கலை மாமணியானேன்

திருச்சியில் அச்சமயம் நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிட நேர்ந்தது. அவற்றில் பஸ் தொழிலாளர்கள் வழங்கிய வரவேற்பு விழாவில் நான் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமைச்சர்களுக்கு வரவேற்பு என்பது உண்மையில் விழா எடுப்போர் குவிக்கும் கோரிக்கைகளுக்கு அமைச்சர்கள் வழங்கும் வரவேற்புத்தான்.

பொதுப் பணித்துறை அமைச்சரான என்னிடமும் அப்படித்தான் அன்று கோரிக்கைகள் வந்தன.

கொடுக்கப்படும் கோரிக்கைகள் நியாயமானவையாயும் நிறைவேற்றத் தக்கனவாயும் இருக்குமாயின் அவற்றைப் புறக்கணிப்பதிலே பொருளும் இல்லை; புத்திசாலித்தனமும் இல்லை; அத்துடன் உடனடியாக நிறைவேற்றத்தக்க கோரிக்கைகளையும் ஊறுகாய் போட்டு உருவழியச் செய்வதைப் போல மிகக் கொடிய ஊறும் தீங்கும் வேறு இல்லை.

எனவேதான் அன்று திருச்சியில் என் முன் இருபத்திரண்டு கோரிக்கைகள் எழுப்பப்பட்ட போது அவற்றில் பதினொன்று கோரிக்கைகளை ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கை உடனே நிறைவேற்றுவதாக அந்த இடத்திலேயே அறிவித்தேன்.

என்னுடைய உடனடியான முடிவுகள் தொழிலாளர்களிடம் உற்சாகமான வரவேற்பை ஆரவாரத்தைப் பெற்றன. என்னுடைய விரைந்த நட்வடிக்கை பலருக்கு வியப்பையும் அப்போது அளித்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகச் சட்ட மன்றத் தேர்தலுக்குப் போட்டியிடாமல் தென் சென்னைத் தொகுதியில் வேட்பாளராக நின்று நாடாளு மன்றத்துக்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

தமிழகத்தின் முதல்வர் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அவர், இந்த மாநிலத்தின் சட்ட மன்றத்தில் உள்ள இரண்டு அவைகளில் ஏதேனும் ஒன்றில் அரசியலமைப்புச் சட்டப்படி ஆறு மாதங்களுக்குள் உறுப்பினர் ஆகிவிட வேண்டும்.

அதன் பொருட்டுச் சென்னை மாநகராட்சித் தொகுதிக்கென மேலவையில் (Legislative Council) ஒதுக்கப்பட்டுள்ள இடம் அச்சமயம் காலியாக இருந்ததால் அந்த இடத்திற்கு அண்ணா போட்டியிட்டார். 22-4-67-இல் நடைபெற்ற அந்த மேலவை இடைத் தேர்தலில் அண்ணா அவர்களே வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் தம் முதலமைச்சர் பதவி சட்டப்படி முறைப்படுத்தப்பட்டது.

கழகத்தவரும் பொது மக்களும் நெஞ்சம் களித்திட வெற்றிக் கனியினைக் கொய்து நின்றிட்ட அண்ணா, அன்று மாலையே தம்முடைய கரத்தால் எனக்கொரு விருதும் வழங்கினார்.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கி ஊக்கமூட்டும் பணியினை விடாது செய்து வருகிறது. அந்த ஆண்டு திரைப் படத் துறையில் 'சிறந்த வசனகர்த்தா' விருதுக்கு என்னைத் தேர்ந்தெடுத் திருந்தார்கள்.

கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் விருது வழங்கும் விழா 22-4-67 மாலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் நிகழ்ந்தது.

அவ்வை டி. கே. சண்முகம் அவர்கள் கலைஞர்களை அறிமுகப் படுத்திட, அண்ணா அவர்கள் விருதுகளை வழங்கினார்கள்.

என்னுடைய முறை வந்து பெயர் அறிவிக்கப்பட்டு நான் எழுந்து சென்றபோது எனக்குரிய விருதை உடனே என்னிடம் அளித்திடவில்லை அண்ணா; தாமே அந்த மாலையை அணிந்து கொண்டார். தன் உயிருக்குயிரான சேயிடம் வேடிக்கை காட்டிடும் தாயைப் போலவே அண்ணா விருதணிந்து நின்றிட்ட அந்த வியத்தகு கோலத்தைக் கண்டு ராஜாஜி மண்டபமே ஆரவாரத்தால் அதிர்ந்தது. சில நொடிகள் சென்ற பின்னர் அந்த மாலையை எடுத்து எனக்கு அணிவித்தார்.

"...கலைஞர் கருணாநிதி அவர்கள் கலையில் ஈடுபாடு கொண்டு எதையும் நேர்த்தியாகச் செய்வது போலவே, ஆட்சியிலும் கலையின்

நேர்த்தியை இணைத்துக் காரியமாற்றி முன்னேற்றம் கண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் விருது பெறுவதால் நான் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் பெருமை அடைவதை நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்''

—என்று உளந்திறந்து அப்போது அண்ணா பாராட்டினார்.

நன்றியுரை நவின்றிட்ட நான்,

''...கடந்த மார்ச் 6-ஆம் நாள் பொதுப்பணி அமைச்சராக இதே மண்டபத்தில் நான் உறுதி மொழி எடுத்துக்கொண்ட அந்த நாளைவிட விருது பெற்ற இந்த நாளே நான் பெருமைக்குரிய நாளாகக் கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாகப் பாசமுள்ள அண்ணாவின் கையால் விருது பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே நான் பெருமையடைகிறேன்''

—என்று குறிப்பிட்டேன்.

அண்ணாவை அடுத்து நான் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட பின்னர் நண்பர் எஸ். டி. சுந்தரம் அவர்களைச் செயலாளராகக் கொண்டு இயங்கும் அந்தச் சங்கீத நாடக சங்கமே பிறகு 'இயல், இசை, நாடக மன்றம்' என மூன்று தமிழையும் வளர்க்கக் கடமைப்பட்டது என்கிற வகையில் புதுப் பெயரினை தமிழ் பெயரினைப் பூண்டது.

மே-நாள். தொழிலாளர்களுக்கு மேன்மை தரும் நன்னாள்: மேதினியெங்கும் கொண்டாடப்படும் பொன்னாள்.

1967-ஆம் ஆண்டு விடுமுறை உண்டு என அண்ணாவால் அறிவிக்கப்பட்ட அந்த மே முதல் நாளில், ஓர் அரிய கடமையை ஆற்றினேம் என்று நானே நெஞ்சாரக் களித்திடக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

காங்கிரசார் ஆண்ட காலத்தில் 1964-இல் பஸ் தொழிலாளர் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அது தொடர்பாக 63 தொழிலாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுப் பின்னர் 52 பேர் வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். எஞ்சிய பதினெரு தொழிலாளர்கள் வேலை தரப்படாமல் பழி வாங்கப்பட்டு விட்டனர்.

மூன்றாண்டுகளாக மன்றாடியும் முன்னாலிருந்த ஆட்சியினர் அந்தத் தொழிலாளர்கள் மீது கருணையே காட்டிடவில்லை. தி. மு. கழகம் அரசுப் பொறுப்பினையேற்றுப் போக்குவரத்துத் துறை எனக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் பழி வாங்கப்பட்ட நண்பர்கள் என்னிடம் வந்து முறையிட்டார்கள்.

உடனே அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேரையும் மீண்டும் அலுவலில் அமர்த்துமாறு அந்த மே நாளில் ஆணை பிறப்பித்தேன்.

'காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன்

காணத் தகுந்தது வறுமையாம்!

பூணத் தகுந்தது பொறுமையாம்!'

—என்னும் வைர வரிகளைக் கேட்டுக் கேட்டுத் தொழிலாளர்களோடு தொழிலாளியாகக் கலந்து வாஞ்சையை வளர்த்துக் கொண்டவர்களில் நானும் ஒருவன். அந்த வற்றாத வாஞ்சையினால்தான் தொழிலாளர்களுக்கு ஒரு துயரம் எனில் அதை உடனே துடைத்திட வேண்டும் என்னும் துடிப்பு இயற்கையாகவே எழுவதுண்டு. அந்த முறையினால்தான் பழிவாங்கப்பட்ட தோழர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள ஆணை பிறப்பித்தபோது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று.

நான் முதல்வர் பொறுப்பை ஏற்ற பின்னர் அதே மே முதல் நான் சம்பளத்தோடு கூடிய அரசாங்கப் பொது விடுமுறை நாளாக (Negotiable Insrtuments Act) 1969-இல் அறிவிக்கப்பட்டது எனபது குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் (அதாவது 1967 மே நாளில்) ஏழை நடுத்தர மக்களின் துயரை துடைத்திடும் இன்னொரு பணி பற்றியும் அண்ணாவின் அரசு அறிவித்து அதில் ஈடுபடத் தொடங்கிற்று.

சென்னை-கோவை ஆகிய பெரு நகரங்களில் 'ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்னும் திட்டம் சோதனை முறையில் செயல்படுத்தப் பட்டது. வருவாய் குறைந்தோர் அரிசியை வாங்கி உண்பதைத் தவிர வேறு வழியில்லாதோர் இத்தகைய ஏற்பாட்டால் அந்த இரு பெரும் நகரங்களிலும் பெரும் பயன் அடைந்தனர்.

நாளடைவில் இந்தத் திட்டத்தின் நோக்கம் விழுமியதாயினும் அதனால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு கட்ட அரசால் இயலவில்லை. மற்ற நகரங்களில் உள்ள மக்களும் ''சென்னை-கோவை நகருக்கு மட்டுந் தானா அந்தத் திட்டம்?'' என்ற கேள்விக் கணை தொடுத்தனர். அண்ணா காலத்தில் அந்தச் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கப்பட்டது. நான் முதலமைச்சர் ஆன பிறகு, ரூபாயின் மதிப்புப் பெருமளவு குறைந்து விட்டதாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உணவுப் பண்டங்கள் உட்பட மற்றையப் பொருள்களின் விலைகள் உயர்ந்து விட்டதாலும், ஏனைய சூழ்நிலைகள் பலவற்றை எண்ணிப் பார்த்தும் அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

133

குடிசை மாற்று–கூவம் திருத்தம்-குடிநீர் வருகை

ஆனால் அதற்கு ஈடு செய்திடும் வகையில் குடிசை மாற்று வாரியத்திட்டம் உருவாக்கப்பட்டது. அதன் கீழ் பல அடுக்குகள் கொண்ட மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு மாதம் 50 ரூபாய் 60 ரூபாய் வாடகை கொடுக்கக்கூடிய வீடுகளில் 10 ரூபாய் 15 ரூபாய் மட்டுமே வாடகை தந்தால் போதும் என்று ஏழை, எளியவர்கள் குடியிருக்க வசதி செய்யப்பட்டது. இப்படிக் குறைந்த வாடகையே வசூலித்ததால் மாதம் அவர்களுக்கு 40ரூபாய் மிச்சப்படுவதற்கு வகை காணப்பட்டது. இதனால் படியரிசித் திட்டம் போனதால் பாதிக்கப்பட்ட ஏழைகள் குடிசை மாற்று வாரியத்தால் அதிகமான பயன்களை அடைந்தனர்.

அதே நேரத்தில் படியரிசித் திட்டம் கொணர்ந்ததால் அரசுக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்த ஆறு கோடி ரூபாய் இழப்பையும் ஈடுகட்டிக் கொள்ளவும் முடிந்தது.

பொதுப்பணித் துறை அமைச்சராக நான் பொறுப்பேற்றிருந்த காலத்தில் எத்தனையோ உடனடி நடவடிக்கைகள், விரைவான முடிவுகள், புதிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன என்றாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக-முக்கியமான ஒன்றிரண்டை மட்டும் தொட்டுக் காட்டினால் போதும் என்றே நினைக்கிறேன்.

நான் அமைச்சரானவுடன், சென்னை அடையாறு-எல்பின்ஸ்டன் பாலத்தின் ஆபத்தான நிலை என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. உடனே அதனைப் பார்வையிடச் சென்றேன். அந்தப் பாலமோ இரண்டொரு நாட்களிலேயே இடிந்து விழுந்து விடும் போல் இருந்தது. உடனடியாக அதற்கு முட்டுக் கொடுத்துப் பாதுகாத்திடும் பணியினை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கூறினேன். அதுகாறும் ஆண்ட காங்கிரஸ் ஆட்சியாளர்களோ அந்தப் பாலம் விழுந்து விடாதபடியும் பாதுகாப்புத் தரவில்லை. அடுத்து வந்த பொதுத் தேர்தலில் தாங்கள் விழுந்துவிடாதபடி தங்களையும் பாதுகாத்துக் கொள்ளவில்லை. அவர்கள் விழுந்து விட்டதால், பாதிப்பு ஏதுமில்லை. ஆனால் பாலம் திடீரென்று விழுந்திருந்தால் எத்தனை உயிர்கள் பலியாகியிருக்கும்!

அந்தப் பாலம்தான் நான் முதலமைச்சரான பிறகு எழில் கொஞ்சும் வகையில் அகலமாகக் கட்டப்பட்டு 'திரு. வி. க. பாலம்' என்னும் புதிய பெயரினையும் பூண்டு என்னால் திறந்து வைக்கப்பட்ட தாகும்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு!'

—என்று பாரதியார் பெருமிதத்தோடு பாடிச் சென்றார்.

ஆனால் அந்த வள்ளுவரின் வாய்மொழிகளை, வைர வரிகளைத் தங்கள் உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு அவற்றின் வழி நடப் போர் எத்தனை பேர் என எண்ணிப் பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும்

பகுத்தறிவுப் பெட்டகமாய், பண்பாட்டின் விளைநிலமாய் பிறர் வகுத்தறியா நெறியையெல்லாம் வகைப்படுத்திய பெருங்கணக்காய் வையம் முழுமைக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்கே வள்ளுவம்! அது தரணியெங்கும் பவனி வருவது ஒருபுறமிருக்க, முதலில் தமிழகத்தி லாவது வலம் வந்தால் அது எத்தனை பேருடைய வாழ்வில் ஒளியினை ஏற்றி வைக்கும் என்று நான் எண்ணினேன்.

தெருவெல்லாம் திருவள்ளுவர் சிந்தனை முழங்கிடத் திருக்குறள் வரிகள் பரவிட பஸ்கள் மிகுந்த பயனுள்ள கருவியாக எனக்குப்பட்டது.

எனவே, ஒவ்வொரு அரசுப் பேருந்து வண்டியிலும் பயணம் புரிவோரின் பார்வையை ஈர்த்திடும் வகையில், திருக்குறள் பொறிக்கப் பட்ட பலகையும், திருவள்ளுவர் படமும் வைப்பதற்கு ஆவன செய்தேன்.

அன்னைத் தமிழிடம் பற்றுக் கொண்ட அனைவராலும் இத்திட்டம் வெகுவாகப் பாராட்டப் பெற்றது.

அதே போல்,

மாநிலமெங்குமுள்ள பொதுப் பணித்துறையைச் சேர்ந்த தங்கும் விடுதிகள் அனைத்திலும் வள்ளுவர் படமும் திருக்குறளும் அமைக்கப் பெற்றன.

இலை நடுவே செல்லும் நரம்பினைப் போல, ஊரின் நடுவே ஆறு ஓடுவதும் ஒரு தனியான அழகுதான்; செழுமைதான்.

அந்த அலாதியான இயற்கையின் வனப்பைத் திருவாரூரில் கண்டும் நான் திளைத்திருக்கிறேன். தேம்ஸ் நதிக்கரையில் உள்ள இலண்டனில் நின்றும் நான் ரசித்திருக்கிறேன்.

நான் முதன் முதலில் சென்னையில் அடிவைத்த பொழுது கருநாகம் போல் படுத்துக் கிடக்கும் ஓர் ஆறு என் கண்ணில் பட்டது. 'கூவம்' என்கிற பெயரில் நகரின் நடுவே கரையோ துறையோ இல்லாமல் அது காட்சி அளித்தது, அதன் படுகைப் பகுதியிலோ ஏழைகளின் குடிசைகள்; பக்கத்திலேயே குப்பை மேடுகள்; கழிவு நீர்க்குழிகள்· நாற்றமோ மூக்கைத் துளைத்துக் குடலையே பிடுங்கும்.



ஆறு என்று பேர் படைத்தும் அது அப்படி நாறும் என்று நாம் எதிர் பார்க்கவே இல்லை. சில சுருங்கிய நெஞ்சங்களில் சுரந்திடும் அழுக் காற்றினும் கொடிய அழுக்கு ஆறுக, ஏன், சென்னை நகருக்கே ஓர் இழுக்கு ஆறுகவே அது தோற்றம் அளித்தது; நோய்களின் தொட்டி லாகத் தொல்லையும் கொடுத்தது.

'கடற்கரை அழகு படைத்த தமிழகத் தலைநகருக்கு இப்படியும் ஒரு களங்கம் வந்து வாய்த்திட வேண்டுமா? இந்தக் கூவம் ஆற்றையே ஏழில் கொழிக்கும் ஆறுக மாற்றிட முடியாதா? அதற்கு ஏன் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஆவன செய்திடவில்லை?' என்றெல்லாம் நான் எண்ணி னேன். ஏங்கினேன்.

பொதுப்பணித் துறை அமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்டதும் கூவத்தை எப்படிச் சீரமைப்பது என்பது குறித்து ஓயாமல் சிந்தனை செலுத்தினேன். பொறியியல் வல்லுநர்களுடன் கலந்துரையாடிப் பெரிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

கூவத்தில் நீரோட்டம் நிலையாக இல்லாத காரணத்தால்தான் அழுகிய பொருள்கள், கழிவு நீர்கள், கொசுக்கள், முதலானவற்றின் தேரோட்டம் 'சிறப்பாக' நடைபெறுகிறது என்பது தெரிந்தது! எனவே பருவமழை பெய்யாத, பெருக்கில்லாத காலங்களில் கடல் நீரை ஆற்றுக்குள் புகவிட்டு ஓட்டத்தை நிலையாக இருக்கச் செய்வதற் காக அணையொன்று கட்டுதல், மணலிட்டு இடையிடையே மேடுகள் எழாதவாறு மணல் உறிஞ்சிகளை அமைத்தல், கழிவு நீர் சாக்கடை நீர் சேரவொட்டாமல் தடுத்திடச் சென்னையையே ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஆங்காங்கே கழிவு நீர் அமைப்புகளை ஏற்படுத்துதல், ஆற்றின் போக்கை ஒழுங்குபடுத்திக் கரை வகுத்துக் கரையின் இரு மருங்கிலும் சாலைகள் அமைத்தல், பூங்காக்கள் நிறுவுதல், உல்லாச மாய்ப் பொழுதினைக் கழிப்பதற்கேற்பக் கூவத்திலேயே படகுகள் விடுதல், அதற்காக அழகான படகுத் துறைகளை அமைத்தல் முதலானவை அந்தச் சீரமைப்புத் திட்டத்தின் முக்கியமான கூறுகளாகும்.

196?-செப்டம்பரில் அந்தக் ''கூவம் நதிச் சீரமைப்புத்திட்டம்'' முதலமைச்சர் அண்ணா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அப்போது அவர் குறிப்பிட்ட சொற்கள் வருமாறு:

''வெகுகாலமாகவே துர்நாற்றம் பிடித்து ஆறு என்று ஏசப்பட்டு வந்துள்ள இந்த ஆறு இன்று மிகுந்த பாக்கியம் செய்துள்ளது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து சென்னைக்குப் புதிதாக வந்து போகக் கூடியவர்கள் அவரவர் ஊர் சென்றதும் இந்த ஆற்றின் துர்நாற்றம் பற்றியே பேசுவார்கள். புறப்படுகிற இடத்தில் தூய்மை யாகவே உள்ள இந்த ஆறு அலைந்து வளைந்து அழுக்கைச் சேர்த்துக் கொள்கின்றது. 'கடலோடு போ!' என்று நகர மக்கள் அதை விரட்டுகிறார்கள். கடல் அலையோ 'நீ இங்கே வராதே!' என்று விரட்டுகின்றன. ஆக, இந்தப் பலமான போராட்டம் பல காலமாகவே நடைபெற்று வருகின்றது. இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கக் கூடியதே இந்தத் திட்டம்.

''முதல் பட்ஜெட் தயாரிக்கும் போதே இந்தத் திட்டத்துக்குப் பணம் ஒதுக்கும்படி என்னுடைய தம்பி கருணாநிதி என்னைத் துளைத்துக் கொட்டி விட்டார். 'ஒதுக்கியிருக்கிறேன்' என்று சொல்லியும் அது பட்ஜெட்டில் இருக்கிறதா என்று பார்த்த பின்னரே திருப்தி அடைந் தார்.. நகருக்கு எழில் தோற்றத்தையும், வாணிபப் பெருக்கையும் அளித்திடக் கூடியது இந்தத் திட்டம். இதனை நிறைவேற்றிச் சென்னையைச் சிங்காரத் திருநகராக்குவதே நமது கடமை.''

—அண்ணாவின் வார்த்தைகளிலிருந்தே எத்துணைக் கேவலமான முறையில் சென்னையின் அழகைச் சீரழித்தது அன்றையக் கூவம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தமிழகத்தின் கலையழகைப் பருகிட விரும்பி வந்திட்ட வெளிநாட்டவரையெல்லாம் விரைந்து விரட்டியடித்திடும் 'பெரும் புண்ணியத்தையும்' கூவம் ஆறு அப்போது தன் வயிற்றிலே கட்டிக் கொண்டிருந்தது!

அத்தகைய அருவருக்கத்தக்க காட்சிகளை அகற்றிடவும், சென்னை மாநகரத்தை அழகுத் திருநகராய் மாற்றிடவுமே கூவம் சீரமைப்புத் திட்டத்தில் நான் குறியாக இருந்து செயலாற்றினேன். பொறியியல் வல்லுநர்களின் ஒத்துழைப்போடு அதை நிறைவேற்றிட முடிந்ததில் என் நெஞ்சிற்கு ஏற்பட்டுள்ள நிறைவுப் பெருமிதம் நிகரற்றது என்றால் அது மிகையில்லை.

இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய ஜனநாயக நாட்டில் சமதர்மமும் தழைத்திட வேண்டுமென்றால், நாட்டுடைமைக்

கொள்கைக்கு நல்ல வேர்ப்பிடிப்பு வேண்டும்; தனியாருடைய ஆதிக்கத் தீ மேலும் மேலும் தாவாதபடி தடுத்திட வேண்டும்.

தி.மு. கழகத்தைப் பொறுத்தமட்டில் சமதர்மப் பூங்காவைச் சமைப்பதையே தன்னுடைய இதயகீதமாய், இலட்சிய தீபமாய் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அதனால்தான் கழகம் ஆட்சி பீடத்திலிருந்திடத் தொடங்கியதும் நாட்டுடைமைக் கொள்கையைச் செயற்படுத்துவதில் நாட்டஞ் செலுத்தியது.

முதற்கட்டமாகச் சில பேருந்து வழித் தடங்கள் தேசியமயம் ஆக்கப்பட்டன.

கடலூர்—சேலம்

சென்னை—சென்றாயன்பாளையம்

காஞ்சிபுரம்—விழுப்புரம்

ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

காஞ்சிபுரம்-விழுப்புரம் வழித்தடத்தில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பஸ்ஸின் வெள்ளோட்டத்தை அண்ணு பிறந்த மண்ணில் நான் தொடங்கி வைத்தேன்.

நல்ல காரியங்கள் நடைபெறும் பொழுது வேண்டுமென்றே எதிர்ப்புக்குரல் எழுப்புவதும் சிலருக்கு வாடிக்கையான பொழுது போக்காகும். சமதர்ம கோட்பாட்டுக்குத் தக்க வலிமை சேர்த்திட பஸ்களை நாட்டுடைமை ஆக்க முற்பட்ட போதும் அப்படித்தான் எரிச்சலில் உமிழ்ந்தனர் சிலர்.

"பஸ் அதிபர்கள் தேன் கூடு போன்றவர்கள்; அவர்கள் மீது கை வைத்தால் ஜாக்கிரதை!" என்று சட்ட மன்றக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கடுமையாக எச்சரித்தார்.

காஞ்சிபுரத்தில் நாட்டுடைமை பஸ்ஸின் வெள்ளோட்ட விழாவில் கலந்து கொண்ட நான் அவருக்கு இப்படித்தான் விடையளித்தேன்.

"...அந்தத் தேன் கூட்டை எப்படி எடுக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். அதற்குப் போட வேண்டிய முக்காடுகளையெல்லாம் போட்டுக் கொண்டுதான் தேன் கூட்டைத் தீண்டுவேன். இந்தக் கலையை நன்கு கற்றவன் நான். நாங்கள் தேனைத்தான் எடுப்போமே தவிர தேனீக்களை கசக்கிப் பிழிய மாட்டோம். பஸ் அதிபர்களைத் தொல்லைப் படுத்த மாட்டோம்."

பொதுப்பணித் துறை அமைச்சராக நான் பொறுப்பேற்றிருந்த காலத்தில் எனக்குப் பேருவகை அளித்திடும் வகையில் செயலாக்கப்

பட்ட திட்டங்களில் 'வீராணம் காவிரி நீர்த் திட்டமும்' குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

மக்கள் தொகை பெருகப் பெருக, சென்னை மாநகரத்தைக் குடிநீர்ச் சிக்கல் இடியெனத் தாக்குவதும் வழக்கமாகி விட்டது. அதனைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி பொன்னி நதியிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவது தான் என்று தோன்றியது.

ஆனால் எந்த இடத்திலிருந்து காவிரி நீரைத் திருப்புவது என்பது பெருங்குழப்பத்தைக் கொடுத்தது. முதலில் ஜேடர் பாளையத்திலிருந்து நீர் கொண்டு வரும் திட்டம் பற்றிச் சிந்திக்கப் பட்டது. அதற்குத் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நான்காயிரம் ஏக்கர் நன்செய் நிலத்தையும் மூவாயிரம் ஏக்கர் புன்செய் நிலத்தையும் பெருந்தொகை கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. எனவே ஜேடர்பாளையம் திட்டம் கைவிடப்பட்டது.

பிறகு வீராணம் ஏரியே தகுந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.

வீராணம் ஏரி காவிரியாற்றின் பாசனத் தொடரில் ஒரு கூறு. அது ஒரு பாத்திரம் போலப் பெரிய நிலையிலிருந்து நீரை அள்ளி யெடுத்துக் கொள்ள உதவும் ஒரு வசதி.

மேட்டூரிலிருந்து வரும் காவிரி நீரை வீராணம் ஏரியின் வழி யாகச் செலுத்தி, மின்விசை இறைவைகளால் ஏற்றிக் குழாய்கள் மூலமாகச் சென்னைக்குக் கொண்டு வரும் வகையில் திட்டம் உருவாக்கப் பட்டது. 139 மைல் தூரம் குழாய்கள் வழியாக நீரைத் திருப்பிவிடும் இந்தத் திட்டத்தால் வீராணம் ஏரியையே நம்பிக் கொண்டிருக்கும் பாசனப் பகுதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்குரிய வழி, துறைகளே மேற்கொள்ளவும் தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது.

சென்னைக்குக் குடிநீர் கொண்டு வந்திடும் இந்தச் சீரிய திட்டத்தை 30-10-67 அன்று சென்னை - சைதாப்பேட்டையில் அண்ணா அவர்கள் துவக்கி வைத்தார்கள். என்னுடைய தலைமையில் நடைபெற்ற அத்த விழாவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டதும் என் நினைவில் அலை மோதுகிறது:

"...எங்கெங்கு தேவையோ அங்கே செல்வது காவிரியின் இயல் பாக உள்ளது. கன்னட இலக்கியத்தைக் காட்டிலும் தமிழ் இலக்கியத் தில் தான் காவிரி பற்றிப் பலபடக் கூறப் பட்டுள்ளது. திராவிட நாகரிகத்தின் தொட்டிலாக அது சித்திரிக்கப்பட்டுள்ளது.

''நமக்குப் பண நெருக்கடி எவ்வளவு அழுத்தமாக இருந்த போதிலும் பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி வந்து அணுகிய நேரத்தில் அவர் தாம் மேற்கொண்ட பணியை முடித்திட எப்படி அணுகுவார் என்பதை உங்களில் சிலர் அறிந்திருப்பீர்கள். காவிரி நீர்த் திட்டத்துக்காக அவர் என்னை அணுகிய நேரத்தில் தயக்கம் காட்டாது அதற்கான நிதியை ஒதுக்கித் தரும் மகிழ்ச்சியான நிலையே எனக்கு ஏற்பட்டது.''

பொதுமக்களின் துயரினைத் துடைத்துத் தேவைகளை நிறைவேற்றிடத் தி. மு. கழக அரசு எத்துணை ஆர்வத்துடன் செயலாற்ற முற்பட்டது என்பதை எடுத்துக் காட்டிடவே வீராணம் காவிரி நீர்த் திட்டம் பற்றியும் இங்கே குறிப்பிட விழைந்தேன்.

அமைச்சராக நான் பணியாற்றிய காலத்தில் எனக்கு ஒதுக்கப் பட்டு இருந்த துறைகளைப் பொறுத்த மட்டில் உருவாக்கப்பட்ட ஒரு சில முக்கியத் திட்டங்களை - எடுக்கப்பட்ட ஒரு சில நடவடிக்கைகளை - மட்டுமே மேலே குறிப்பிட்டேன்.

134

அண்ணன் முடித்த பணிகள்

அதே சமயம், கழகத்தின் நீண்ட நாள் இலட்சியங்கள் சில வற்றை நிறைவேற்றிடும் வகையில், அண்ணாவின் தலைமையில் அமைந்த அரசு இன்றியமையாத சில திட்டங்களைத்-தீர்மானங்களைத் தீட்டியது; சட்டங்களை இயற்றியது.

அவற்றில் தலைசிறந்தவையாக குறிப்பிடத்தக்க மூன்று:

ஒன்று; 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம்.

இன்னொன்று: சுயமரியாதைத் திருமணச் சட்டம்.

மூன்றாவது: இந்தி ஒழிப்புத் தீர்மானம்.

இந்த மாநிலத்தின் பெயர் 'மதராஸ்' என்று அழைக்கப்பட்டதைத் 'தமிழ்நாடு' என்று மாற்றிப் பெயர் சூட்டும் தீர்மானத்தை 1967 ஜூலை 18-ஆம் நாளில் சட்டப் பேரவையில் கொணர்ந்தார், அண்ணா.

தீர்மானத்தின் வாசகம் வருமாறு:

''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம்மாநிலத்தைக் குறிப்பிடும் பெயர் 'தமிழ்நாடு' என மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை உறுதியாகக் கருதுவதுடன், இது குறித்து அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேவையான, திருத்தங்கள் அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இப்பேரவை பரிந்துரைக்கின்றது.''

இந்தத் தீர்மானம் எதிர்ப்பு எதுவும் இன்றி ஒருமனதாகவே நிறை வேற்றப்பட்டது. அப்போது சட்டப் பேரவை உற்சாகத்தின் உச்சிக்கே சென்று உணர்ச்சிப் பிழம்பாய் மாறியிருந்தது.

தமிழ்த் தாயின் நெஞ்சங் குளிர்ந்திடத்தக்க தீர்மானத்தை நிறை வேற்றி விட்டோம் என்கிற பூரிப்பில் எல்லா உறுப்பினர்களின் உள்ளத் திலும் உவகை வெள்ளம் பொங்கி வழிந்தது. அதனைப் புரிந்து கொண்ட அண்ணா அதுவரை சட்டமன்றத்திலேயே நடந்திராத ஒரு வழக்கத்திற்கும் திடீரென்று அடிகோலினார். தம் இருக்கையிலிருந்து எழுந்து நின்று மாண்புமிகு ஆசிரியர் அவர்களை நோக்கி—

''சட்டமன்றத் தலைவர் அவர்களே! வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்ற இந்த நன்னாளில் நான் ''தமிழ்

நாடு" என்று சொல்வதற்கும் வாழ்க என்று அவை உறுப்பினர்கள் சொல்வதற்கும் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

பேரவைத் தலைவர் உடனே அதற்கு ஒப்புதல் அளித்தார்.

அதன் பின்னர், 'தமிழ் நாடு' என்று அண்ணா உரக்கக் குரல் எழுப்பவும், எல்லா உறுப்பினர்களும் 'வாழ்க' என்று முழக்கமிட்டனர். அவ்வாறு மூன்று முறை முழங்கப்பட்டது.

தமிழகச் சட்டமன்ற வரலாற்றிலே அத்தகைய முழக்கம் எதிரொலித்தது அதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த அருமையான வேளையில் எங்கள் நினைவுகள் எல்லாமே மறைந்திட்ட மாபெரும் தியாகி சங்கரலிங்க நாடாரை நோக்கியே அஞ்சலி செலுத்தின. ஏனெனில் 'மதராஸ்' என்றுள்ள இம்மாநிலப் பெயரைத் 'தமிழ் நாடு' என்று மாற்ற வேண்டும் என்பதையே கோரிக்கையாக வைத்து எழுபது நாட்களுக்கு மேல் உண்ணா நோன்பிருந்து உயிரையே காணிக்கை ஆக்கி மறைந்த உத்தமர் அவர். காங்கிரஸ் கூடாரத்திலே வளர்ந்த பழுத்த காந்தியவாதியான அவருக்கு அழுத்தமான தமிழ்ப் பற்றும் இருக்கிறதே என்று நாங்கள் ஆச்சரியப் பட்டதுண்டு.

அவருடைய கட்சிக்காரர்கள் ஆண்ட காலத்திலேயே இந்தத் 'தமிழ் நாடு' பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேறியிருந்தால் அவர் தம் இன்னுயிர் அத்துணை விரைவில் மண்ணில் மறைந்திருக்காதே என்று அப்போது என்னால் எண்ணாமல் இருந்திட முடியவில்லை.

அடுத்து, கழக அரசு பெருமிதப்படும் அளவுக்கு இயற்றப்பட்ட ஓர் அமைதியான சட்டம் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' ஆகும்.

இதற்கொரு நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியே உண்டு.

தந்தை பெரியார் அவர்களே இந்தச் சுயமரியாதைத் திருமண முறையைத் தமிழகத்தில் முதன் முதல் தவழ விட்ட தாய் ஆவார். புரியாத மொழியில் பகுத்தறிவுக்குப் பொருந்தாத சாத்திரச் சடங்குகளுடன் நடைபெற்றுக் கொண்டிருந்த பழைய திருமண முறை ஒன்றை புறக்கணித்து விட்டுப் புரிந்த தாய்மொழியில் வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியைக் கூறிக்கொண்டு மந்திரம் ஏதும் ஓதுதல் இன்றி மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டாலே போதும் என்கிற புதிய சீர்திருத்தத் திருமண முறை ஒன்றைத் தோற்றுவித்தார் பெரியார்.

தொடக்கத்தில் இந்தப் புதிய மண முறைக்கு எழுப்பப்பட்ட தடைச் சுவர்கள், சொல்லடிகள், கல்லடிகள், ஏராளம் அவற்றையெல்லாம்

மீறிப் பல்லாயிரக்கணக்கான ஆடவரும பெண்டிரும் சுயமரியாதைத திருமண முறைப்படியே தங்கள் இல்லறத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

ஆனால், சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குச் சட்டப்படி சொத்துரிமை முதலான பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. ஒன்றிரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்ட போது அத்தகைய திருமணமே செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பெரியாரின் வழியில் புதிய மணமுறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களுக்கு இது பெரும அதிர்ச்சியையே கொடுத்தது. குறிப்பாகத் தாய்க்குலத்தினர் தலையில் புழுவெனத் தவித்திடும் நிலையே உருவெடுத்தது. அதனைத் தவிர்த்திட வற்புறுத்தி. சீர்திருத்தத் திருமணங்களுக்கும் சட்டப் பாதுகாப்புத் தந்திட வேண்டும் என்று எதிர்க் கட்சியாக இயங்கியபோதே சட்ட மன்றத்தில் தி.மு. கழகம் குரல் கொடுத்தது. காங்கிரஸ் ஆட்சியாளர்களோ அதற்குக் காது கொடுக்க மறுத்தனர். இத்துணைக்கும் அப்போது பெரியாரின் ஆதரவு அவர்களுக்குப் பெரும் அளவில் இருந்தது. எனினும் அவரால் உருவாக்கப்பட்டு 30, 40 ஆண்டுகளாக வளர்ந்துவிட்ட ஒரு புதிய சமுதாய முறைக்குச் சட்ட வடிவந் தருவதற்கு உடன்பட மறுத்தது மட்டுமல்ல, உதாசீனப்படுத்துவதற்கும் துணிந்தனர்.

தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏறறதுமே சுயமரியாதைத் திருமண முறைக்குச் சட்ட வடிவம் தருவதைத் தனது முக்கியமான செயல் திட்டங்களில் ஒன்றுக மேற்கொண்டது. அதற்குரிய மசோதாவைச் சட்ட அமைச்சர் நண்பர் மாதவன் 1967 ஜூலைத் திங்களில் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்தார். அவருடைய தலைமையிலேயே அமைந்த ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டுப் பின்னர் சட்டமாக நிறைவேறியது.

கழக அரசு பூரிந்திட்ட சாதனைகளில் இதுவும் ஓர் இலட்சிய சாதனை என்பதில் எள்ளளவும் மிகையில்லை.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கழக அரசு பூரிந்திட்ட கொள்கை வழிச் சாதனைகளில் குறிப்பிடத்தக்க இன்னொன்று, இந்தி ஆதிக்கத்தினை அடியோடு ஒழித்திடும் வகையில் 'தமிழ்நாட்டில இந்தி இனி இல்லை' என்று 23-1-1968 அன்று சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும்.

அது உருவெடுப்பதற்கு உரம் ஊட்டிடும் போக்கில் மத்திய அரசின் துநடவடிக்கைகளும் அப்போது திசை மாறிச் சென்றன.

1967 டிசம்பரில் டில்லி நாடாளு மன்றத்தில் மத்திய அரசு ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா ஒன்றைக் கொண்டு வந்து நிறை வேற்றிக் கொண்டது. அதன் மூலம் இந்திக்காரர்கள் தங்கள் தாய் மொழியான இந்தி மொழியை மட்டுமே படித்துவிட்டு எத்தகைய உயர்ந்த உத்தியோகத்துக்கும் சென்று விடலாம்; ஆங்கிலம் கற்றிட வேண்டிய அவசியம் இல்லை; அதே சமயம் இந்தி பேசப்படாத பகுதி களைச் சார்ந்தவர்கள் தங்கள் தாய் மொழி ஒன்றை மட்டுமே படித்தால் போதாது; இந்தியையும் அவர்கள் கண்டிப்பாகக் கற்றிருந்தால்தான் மத்திய அரசு உத்தியோகங்களில் அவர்களுக்கு இடம் கிடைக்கும். இணைப்பு மொழியான ஆங்கிலத்தையும் பயின்றால்தான் அவர்களுடைய எதிர்கால நலனுக்கு ஏற்றது.

இவ்வாறு இந்திக்காரர்களுக்குக் கண்ணில் வெண்ணெயையும், இந்தி பேசப்படாத மக்களுக்குச் சுண்ணும்பையும் தடவுகின்ற ஓரவஞ்சனை ஏற்பாடு வழக்கம்போல் உள்ளக் கொதிப்பையே கொடுத் தது தமிழ் மக்களுக்கு. இதனால், மனக் குமுறலுக்கு இலக்கான மாணவ மணிகள் கிளர்ச்சிகளில் இறங்கினர். பூரட்சிக் கொடி ஏந்தினர். மத்திய அரசின் சொத்துக்களைச் சேதாரப்படுத்திக் காட்டி யாவது தங்களுடைய எதிர்ப்பினைத் தெரிவித்திட வேண்டும் என்கிற அளவிற்கு அவர்களுடைய கோபக்கனல் கொழுந்து விட்டு எரிந்தது; அது இரயில் பெட்டிகளை எரித்திடும் அளவிற்கும் தாவிற்று. இடையிலே வன்முறையாளர்களும் மாணவர் வேடத்தில் ஊடே புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டிட முற்பட்டனர்.

ஒரு நாளி நண்பகல் சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தை மாணவர்கள் முற்றுகையிட்டிருப்பதாகவும், அந்தப் பெரிய நிலையமே எரிதழலுக்கு இரையாகலாம் என்றும் எனக்குத் தகவல் வந்தது.

உடனே சென்டிரல் நிலையத்துக்குப் புறப்பட்டேன். 'ஆதிரத் தின் உச்சியில் கிளர்ச்சிக்காரர்கள் எத்தகைய அசம்பாவிதத்திலும் ஈடுபடலாமே? உயிருக்கே ஆபத்தாக முடிந்து விடுமே?' என்று சிலர் என்னைத் தடுக்க முயன்றார்கள். நானோ கேட்கவில்லை. மாணவச் செம்மல்களை நேரில் சந்தித்துப் பேசினால் அவர்கள் மனத்தை மாற்றிட முடியும் என்கிற நம்பிக்கையுடனேயே சென்றேன்.

சென்டிரல் நிலையமோ மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தால் ஆரவார முழக்கங்களால் அதிர்ந்த வண்ணமே இருந்தது. நாங்கள் சென்றதும் மாணவர்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களை நோக்கி—

''...நீங்கள் நடத்துகின்ற கிளர்ச்சியும் காட்டுகின்ற உணர்ச்சியும் தூய்மையானவை; மதிக்கத்தக்கவை; தமிழகத்தின் குரலே எதிரொலிப்பவை. இந்த நேரத்தில் இன்னொன்றையும் மறந்து விடாதீர்கள். தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அரசு 'இந்தி வரட்டும்' என்று கூறுகிற காங்கிரஸ் அரசு அல்ல; இந்தியை எதிர்த்துக் களம் பல கண்ட கழக அரசு. ஆகவே அரசாங்க ரீதியில் இந்தியை எதிர்த்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஜனநாயக முறையில் எடுத்தே தீரும். அதற்கிடையே உங்கள் கிளர்ச்சியின் தன்மையை வேறு திசையில் திருப்பவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடவும் விஷமிகள் முயன்று வருகிறார்கள். அவர்களுடைய நோக்கம் சட்டம்-ஒழுங்கு குலைந்து விட்டதாகக் கூறிக் கழக அரசைக் கவிழ்ப்பதுதான். அந்தப் போலி வேடதாரிகளுக்கு மாணவர்கள் பலியாகலாமா?" என்றெல்லாம் உருக்கமாகக் கேட்டுக் கொண்டேன்.

சிறிது நேரத்தில் மாணவர்களிடையே அமைதி நிலவிற்று. எத்தகைய அசம்பாவிதச் செயல்களிலும் ஈடுபடாமல் அவர்கள் கலைந்து சென்றனர்.

இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு 25-12-67-இல் 'மெயில்' ஏடு ஒரு தலையங்கமே தீட்டியிருந்தது. அதில்—

'...திரு கருணாநிதி, சென்னை-சென்ட்ரல் நிலையத்துக்குச் சென்று நாட்டின் பொதுச் சொத்துகளைச் சேதமடையச் செய்யும் முயற்சியிலிருந்து மாணவர்களைப் பின்னடையச் செய்தார். உள்ளபடியே கருணாநிதி சிறப்புமிகு சுயத் துணிவைக் காட்டினார்"

—என்று தன் கருத்தினைத் தெரிவித்திருந்தது.

டில்லியிருந்து வெளியாகும் ஸ்டேட்ஸ்மன் ஏடும் 24-12-67 தேதிய தன் தலையங்கத்தில் அடியிற் கண்டவாறு குறிப்பிட்டிருந்தது:

''...ரயில்வே டெல்லியின் சொத்து இல்லை; மாறுக மொத்த தேசத்திற்கும் உரியது என்று மாணவக் கிளர்ச்சியாளர்களுக்கு நினைவு

றுதீதவதறகாகச் சென்னை-மத்திய ரயில்வே நிலையத்திற்குச் சென்றி
ருக்கிறார் திரு கருணாநிதி; அதன் மூலம் தன்னு ...ய தனித் துணிச்
சலுக்கு ஒரு நல்ல உதாரணத்தைப் படைத்திருக்கிறார்!''

கழகத்தைச் சார்ந்த நாங்கள் நாட்டின் மொத்த நலனையும் கருத்தில் கொண்டு காரியமாற்றிய போதிலும் இந்தியைத் திணித்திடும் தன் திட்டத்தை விட்டுக் கொடுக்க மத்திய அரசு முன் வரவில்லை. இதனால், எதிர்ப்புக் கிளர்ச்சிகள் வலுத்த வண்ணமே இருந்தன.

சட்டம்-ஒழுங்கு முற்றிலும் குலைந்து நிலைமை கட்டுக்கடங்காமல் போவதற்கு முன்னர் மொழிச் சிக்கலுக்கு உடனடியாகத் தீர்வு கண்டிடத்தான் வேண்டுமென்று கழக அரசு உணர்ந்தது.

ஆனவே 23-1-1968 அன்று தமிழகச் சட்ட மன்றத்தின் அவசரக் கூட்டம் ஒன்று கூட்டப் பெற்றது. அதில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை முன் மொழிந்தார் அண்ணா.

''...மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

''தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டுத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது.

''என். சி. சி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்தி ஆணைச் சொற்களை நீக்கி விடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால், என். சி. சி. போன்ற அணிகளைக் கலைத்து விடவும் இந்த மன்றம் தீர்மானிக்கிறது.''

அண்ணா கொண்டு வந்த அந்தத் தீர்மானத்தின் மீது உரை யாற்றிய காங்கிரஸ் குழுத்தலைவர் திரு கருத்திருமன் —

''இப்போது மாணவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காகச் சட்ட மன்றத்தை அவசரம் அவசரமாகக் கூட்ட வேண்டுமா?'' எனிறு கேட்டார்.

அவருக்குத்தான் அண்ணா இப்படி விடையளித்தார்;

''மாணவர்கள் யார்? அவர்கள் நம் ரத்தத்தின் ரத்தம். சதையின் சதை; நம் எதிர்காலத்தின் உருவங்கள்.''

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்த இந்தி ஒழிப்புத் தீர்மானம், மாணவ மணிகளின் மனச்சுமையை இறக்கி அவர்தம் எதிர்காலத்தையே ஒளி மயம் ஆக்கிய பெருமைக்குரியதாகும்.

அந்தத் தீர்மானம் தமிழக வரலாற்றிலே வைர வரியாகப் பொறிக்கத்தக்கது; கழகத்தின் புகழ் மகுடத்திற்குப் பொன்னெளிரியைச் சேர்த்து நிற்பது.

அமைச்சர் நிலையில் நான் என் கடமைகளை ஆற்றிக்கொண்டிருந்த வேளையில் திருச்சி வானொலி நிலையத்தார் அழைப்பொன்றை விடுத்திருந்தனர்.

135

கவியரங்கேறினேன்

அந்த ஆண்டு (1967) ஆகஸ்டுப் பதினைந்து விடுதலை நாளை யொட்டிக் கவியரங்கம் ஒன்று நடைபெறுவதாகவும் அதற்கு நான் தலைமை தாங்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அந்த அழைப்பினைக் கண்டதும் கவிதைக் கலை தொடர்பான பழைய நினைவுகள் - நிகழ்ச்சிகள் - என் நெஞ்சினுள்ளே அலை அலையாகப் பாய்ந்து வந்தன.

கவிதை என்பது -

துடித்தெழும் உணர்ச்சியில் வெடித்திடும் ஊற்று;
கற்பனை வானின் மின்னல் கீற்று;
கலையெழில் வழிந்திட முளைக்கும் நாற்று;
கன்னல் மொழியில் மணக்கும் காற்று;
இயற்கைக் கவிஞரரம் என்னருந்தந்தை
வயலில் உழுதார்; வளம்
பெறக் கற்பனை
வயலிலும் உழுதார்; வக்கணைக் கவிதைப்
பயிரையும் வளர்த்தார்; பலாச்சுளைப் பாடல்கள்
பலப்பல தந்தார்.

தந்தை வழியே தனயன் எனக்கும்
சிந்தை சென்றிடச் சிறுசிறு கவிதை
பூத்திடும் செடியாய்ப் பொலிந்திடும் வேட்கையால்
யாத்திட முயன்றேன் அரும்புப் பாட்டுகள்!

மாணவனாகப் பயின்று கொண்டிருந்த காலத்திலேயே எனக்குத் தெரிந்த நடையில் - வடிவில் - நான் இப்படிக் கவிதைகளை எழுதத் தொடங்கிவிட்டேன்.

அந்த மாணவருலகு எத்தகையது என்பது குறித்தும் நான் அந்த நாளில் இப்படிக் கவிதைச் சரங்களைத் தொடுத்திட முனைந்திருக்கிறேன்.

மாழுச்சியுள்ள மாணவனின் தாயின்
ஏறுநடைச் சிங்கந்தான்!
கோழித்துவிட்ட உமிகள்தான்
குள்ளநரிக் கூட்டத்தார்!
பழித்துவிட்டான் பகுத்தறிவால்
பக்தி, மதம், பலகடவுள் எல்லாம்
பாழ்! பாழ்! பாழ்!

என்னுடைய அரும்புப் பருவத்தில், என் இதயங் கவர்ந்திட்ட அரும் பெரும் தலைவர்களில் சர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களும் ஒருவர் ஆவார். இலண்டன் சென்று 'பாரிஸ்டர்' பட்டம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பிய பின், நீதி மன்றங்களிலே வாதத் திறமையைக் காட்டுவதில் தாம் நிகரற்றவர் என்பதைப் பல சமயங் களில் நிரூபித்துக் காட்டியவர் அவர். அதே சமயம் நீதிக் கட்சித் தலைவராகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பெரும் பாடு பட்டவர்; தஞ்சை மாவட்ட ஆட்சிக் கழகத் தலைவராகவும் பல ஆண்டுகள் அவர் பணியாற்றியிருக்கிறார்.

இந்தியை எதிர்த்துத் தந்தை பெரியார் அவர்கள் வெல்லாரி இருட் சிறையில் அடைக்கப்பட்டிருந்த வேளையிலேயே அவர் நீதிக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், 1938-இல் சென்னையில் கூடிய அக்கட்சியின் மாநாட்டுக்கு நேரில் வந்து பெரியாரால் தலைமை தாங்கிட முடியவில்லை. அப்போது தலைவருக்குரிய இருக்கையில் அவரது படத்தை வைத்து அதற்கு மாலையிட்டு, இந்தப் படத்தைப் பார்த்தே நம் தலைவர் இங்கே இருப்பதாக எண்ணிக் கொண்டு நாம் இந்த மாநாட்டை நடத்துவோம்!' என்று புரட்சி புரிந்தவரும், பன்னீர் செல்வமே! அவர் தம் ஆற்றலை- அறிவுக் கூர்மையைப் பயன்படுத்திக் கொள்ள விழைந்திட்ட ஆங்கிலேய அரசு அவரை இலண்டனுக்கே அழைத்தது.

புதிய பொறுப்பினை ஏற்றுக் கொள்ள அவர் பயணம் புரிந்திட்ட விமானமோ பாதி வழியில் ஓமான் கடலில் விழுந்து நொறுங்கி விட்டது. பன்னீர் செல்வம் அவர்களின் திடீர் மறைவினால் தமிழகமே அதிர்ச்சியுற்றுக் கண்ணீர்க் கடலிலே தத்தளித்தது; தவித்துப் புலம்பியது. ஆருத்துயரில் ஆழ்ந்திட்ட நானும் 1940-இல் இப்படி இரங்கற்பாவொன்றை இயற்றினேன்.

கோமானே! உமையெண்ணி
யாம் உகுத்த கண்ணீர்
ஓமான்கடல் ஆயிரத்தை
வெற்றி கொள்ளும்!

வாழ்வை முடித்துக் கொண்டவர்களுக்காக வருந்தி இவ்வாறு இரங்கற் கவிதைகளே எழுதிய நான் வாழ்வை தொடங்குகின்ற புது மண மக்களுக்காகவும் வாழ்த்துப்பாக்கள் பலவற்றை அப்போது வரைந்து தந்திருக்கிறேன்.

ஈரோடு நகரில் தந்தை பெரியாரின் 'குடியரசு' ஏட்டில் நான் பணியாற்றிய சமயம்; அங்கே லூர்துசாமி என்னும் நண்பருக்கு என் எழுத்துக்களில் அளவில்லாத ஈடுபாடு. மடலாக வரைந்திடும் கார்டுகள் மூலமும் இயக்கக் கொள்கைகளைப் பரப்பிட வேண்டும் என்று அவர் எண்ணினார். அதற்காக, இரண்டே வரிகளில் நறுக்குத் தெறித்தாற் போல் உணர்ச்சித் துடிப்போடு நயமான கவிதைகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அவர்தம் விருப்பத்தை நிறைவேற்றிடச் சில வரிகளே எழுதிக் கொடுத்தேன்.

'பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம்

ஈரோடுப் பூகம்பத்தால் இடியுது பார்'! என்று பெரியாரையும்,

''துடுக்குமிகக் கொண்டலையும், துணிவுமிக்க ஆரியந்தான்

அடுக்குச் சொல் அண்ணுவால் அலறித்தான் சாகுதடா'' என்று அறிஞர் அண்ணுவையும்,

'புனிதகையா புதுக் கருத்தா புரட்சிக் கனலா?

எல்லாம் உண்டு. எங்கள் கவிஞன் வாழ்க!, என்று பாவேந்தர் பாரதிதாசனையும், நான் பாராட்டி எழுதிய வரிகள் குறிப்பிடத்தக்கன.

'ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை;

மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று!'

-என்னும் வரிகளும் கார்டுகளில் பொறிப்பதற்கென்று எழுதப் பட்டவையே.

இத்தகைய பாட்டுத் துணுக்குகளையும், வேறு சில பாட்டுக்களையும் தொகுத்துப் பின்னர் நூலாக வெளியிட்டேன்.

ஆனால் அந்தச் சின்னஞ்சிறு நூலுக்குக் 'கவிதை அல்ல' என்றே தலைப்புக் கொடுத்தேன்.

இது பலருக்குத் திகைப்பினைக் கொடுத்தது!

உண்ண உண்ணத் தெவிட்டாத கன்னல் தமிழ்ச் சுவையில் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்ட நான் இலக்கண இலக்கிய மரபுகளைப் பிற்காலத்தில் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்திட்ட போதிலும், என் இளமைப் பருவத்தில் முறையாக அவற்றைப் பயின்றிட முடியவில்லை. எனவே அந்த நாட்களில் மற்றவர் நெஞ்சத்தைத் தொட்டிடும் வகையில் துடித்தெழும் உணர்ச்சிகளை வடித்து எடுத்தால் போதும் என்றே என் எழுது கோலை நீட்டினேன். என்னுடைய அந்த எழுத்துக்களில் கவிதை வடிவமும் காணப்பட்டது என்ருல், அது என் தந்தையார் முத்துவேலர் தம் உதிரத்தோடு உதிரமாய் எனக்கு ஊட்டி விட்டுச் சென்ற 'மூதாதையர்கள் சொத்து' என்றே சொல்ல வேண்டும்.

என்னுள் இயற்கையாக ஊற்றெடுத்துப் பீரிட்ட உணர்ச்சிகளின் உருவங்களாகிய அந்தக் கவிதை வரிகளில் முறையாகத் தமிழைப் பயின்றவர்கள் எங்கே குறை காண நேரிடுமோ என்னும் அச்சத்தின் காரணமாகவே-

'கவிதையல்ல' என்று அந்த நூலுக்குத் தலைப்புக் கொடுத்தேன்.

நன்முகத் தமிழைப் பயின்று தேர்ச்சி பெற்ற நாவலர் அவர்களே இதற்கு முன்னுரை நல்கிச் சிறப்புச் செய்தார்கள்.

திருச்சி வானெலி நிலையத்தார் என்னைக் கவியரங்கத் தலைமை ஏற்க அழைத்திட்ட போது இந்தப் பழைய நினைவுகள்தான் படச் சுருளாய் என் மனத்திரையில் விரிந்தன.

5-8-67 காலையில் அந்தக் கவியரங்க நிகழ்ச்சி பொது மக்கள் முன்னிலையில் நடத்தப்பட்டு 13-8-67 அன்று இரவு 9-30 மணிக்கு ஒலிபரப்பப்படுவதற்காகப் பதிவு செய்யப்பட்டது. கட்டபொம்மன், மருதுபாண்டியர், பாரதியார், வ. வே. சு. அய்யர், வ. உ. சிதம்பரனர் ஆகியோரைப் பற்றி ஐந்து கவிஞர்கள், 'தமிழகம் தந்த விடுதலைப் போர்வீரர்' -என்னும் தலைப்பில் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர். அந்த விடுதலை வீரர்கள் குறித்துத் தலைவர் என்கிற முறையில் நானும் கவிதைகளைப் பாடினேன். அந்தப் புதுமையான நிகழ்ச்சி சிறப்புற அமைந்திட வழிவகுத்தவர்- வரவேற்றவர்- அப்போது திருச்சி

வானொலி நிலைய இயக்குநராக இருந்த திரு எம். எஸ். கோபால் ஆவார்.

என்னைப் பொறுத்தமட்டில் அந்த வானொலிக் கவியரங்கம் என் நெஞ்சில் தேனலைகளைப் பாய்ச்சிய புதிய அனுபவமே ஆகும். ஏனெனில் அதுகாறும் நான் ஏடுகளில்தான் கவிதைகளை எழுதி வந்தேனேயல்லாமல் மேடையேறிக் கவிதைகளை அரங்கேற்றியதில்லை.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அடிக்கடி என்னைக் கவியரங்கத் தலைமை ஏற்க வைத்துக் களிப்படைவதில் கழக நண்பர்கள் மிகுந்த ஆர்வங்காட்டத் தலைப்பட்டனர். அதுவரை தமிழகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நூறு பேர்களுக்கு மத்தியில் எப்போதாவது நடைபெற்றுக் கொண்டிருந்த நிலைமை மாறி, அடுத்தடுத்துப் பல இடங்களில் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்திழுக்கும் அளவுக்குக் கவியரங்கங்கள் நிகழத் தொடங்கின

வானொலிக் கவியரங்கத்திற்குப் பிறகு நான் முதல் முதல் மேடையேறிப் பொதுமக்கள் முன்னிலையில் கவியரங்கத் தலைமை ஏற்றது 17-9-1967-இல் சென்னையில் நடைபெற்ற 'அண்ணா பிறந்த நாள் கவியரங்கமே' ஆகும்.

அதற்கு வருகை புரிந்திருந்த டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் உளந்திறந்து இப்படிப் பாராட்டினார்கள்:

''சங்க காலத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகால் பெருவளத்தான், நெடுஞ்சேரலாதன் போன்றோர் வீற்றிருந்து இத்தகைய கவிஞர்கள் போன்றவரெல்லாம் நாக்கவி பாட மக்களெல்லாம் கேட்டிருந்து மகிழ்ந்தார்கள். அந்தநிலை இப்போது தான் தமிழகத்துக்கு வந்திருக்கிறது. அமைச்சராகவுள்ள கலைஞர் அவர்கள் இங்கு தலைமை தாங்கி நடத்தியபோது கூறிய கவிதை வரிகளைக் கேட்டு நான் தேனில் விழுந்த வண்டுபோல் மயங்கிக் கொண்டிருந்தேன். உள்ளபடியே கலைஞர் அவர்களைப் பெரும் புலவர்மணி என்றே கூறலாம். அவர்களுடைய கவிதையாற்றல்- கற்பனைத் திறம்- செயல் திறமை எல்லாம் தமிழ்நாட்டுக்குக் கிடைத்துள்ளன. அவர்கள் உள்ளவரை தமிழ்நாடு வருந்தாது. தமிழ், ஆட்சிதான் நடைபெறும்; தமிழ்ப் பகைவர்களும் திருந்தி நம் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்று நம்புகிறேன்."

—தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் எதிராகச் சிற்சில நேரங்களில் சில தவருன சக்திகள் தலையை நீட்டிட முற்படும் பொழுது, டாக்டர் இலக்குவனார் அவர்கள் எடுத்துரைத்தவற்றைத்தான் நான் எண்ணிக் கொண்டு காரியமாற்றுவதுண்டு.

சென்னையில் சிறப்புக் கவியரங்கம் நடைபெற்றதைத் தொடர்ந்து தஞ்சையிலும் அண்ணு பிறந்த நாள் கவியரங்கத்துக்கு அங்குள்ள நண்பர்கள் ஏற்பாடு செய்து விட்டனர்.

24-9-1967 அன்று அதில் கலந்து கொள்ளும் பொருட்டு முந்தின நாள் இரவு 2-30 மணி அளவில் சென்னையிலிருந்து காரில் புறப்பட்டேன். நண்பர் கவிஞர் ஆனந்தமும், மதுரை முத்துவும், புலவர் பொன்னிவளவனும் உடன் வந்தனர்.

பரணூரை நெருங்கிடும் போது என் காரில் பழுது ஏற்படவே வேருெரு காரில் நாங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். விடியற்காலை சுமார் ஐந்து மணி இருக்கலாம், தொழுப்பேடு என்னும் ஊருக்கு அப்பால் இரண்டு மைல் தூரத்தில் ஓங்கூர் ஆற்றுப் பாலத்துக்கு அருகில் திடீரென்று விபத்துக்குள்ளாயிற்று அந்தக் கார்

ஒரு டிராக்டர் வந்து மோதியதில் கார் தரைக்கு மேல் தூக்கி எறியப்பட்டது. தலைகீழாக இரண்டு, மூன்று முறை புரண்டு விழுந்து நொறுங்கி விட்டது. அந்த விபத்தில் நானும் மற்ற நண்பர்களும் உயிர் தப்பியதே ஆச்சரியத்திலும் ஆச்சரியந்தான்! கார் கவிழ்ந்த வேகத்தில் எனக்கு மூக்கிலும் நெற்றியிலும் முழங்காலிலும் பலமான அடி; மேலுதடு பிளந்தே விட்டது. முகத்திலும் அரையங்குலம் ஆழத்திற்குக் கண்ணுடித் தூள்கள் புதைந்து விட்டன. ஆனல் தலைகுப்புறக் கார் கவிழ்ந்த பிறகு என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது. பின்னல் ஜீப்பில் வந்துகொண்டு இருந்த பாதுகாப்புப் போலீசார், காருக்கு அடியில் இரத்த வெள்ளத்தில் மிதந்து கிடந்த என்னைச் சிரமப்பட்டு மீட்டிருக்கிருர்கள்.

பின்னர், திண்டிவனம் மருத்துவமனைக்கு ஜீப்பில் எடுத்துச் செல்லப்பட்டு அங்கே முதலுதவி அளிக்கப்பட்டேன். அங்கிருந்து ஆம்புலன்ஸ் வண்டியில் சென்னைக்குக் கொண்டு சென்ருர்கள். இடையிலேயே சென்னையிலேயே பெரிய மருத்துவமனை டாக்டர்களும் நரம்பு சிகிச்சை நிபுணரும் எதிரே வந்து என்னை ஏற்றி வந்த ஆம்புலன்ஸ் வண்டியைச் சாலை ஓரத்திலேயே நிறுத்தி வைத்து எனக்குச் சிகிச்சை அளித்தார்கள். வழியில் செங்கற்பட்டு மருத்துவமனையிலும் சிகிச்சை நடைபெற்றது.

செங்கற்பட்டைத் தாண்டி ஆம்புலன்ஸ் சென்று கொண்டிருந்த பொழுது.

'அண்ணு வந்திருக்கிருர்!'

என்னும் சொற்கள் என் செவிகளிலே அலை மோதின; ஆறுதல் அளித்தன.

முகம் முழுவதும் பலமான கட்டுகளுடனும், வீங்கிய உதடுகளுடனும் இரத்தம் தோய்ந்த சட்டையுடனும் இமைகளையே திறக்க முடியாமல் கிடந்த என்னால் அப்போது கையைத் தான் சிறிது அசைத்திட முடிந்ததே தவிர, அண்ணனைக் கண்ணால் கண்டிட முடியவில்லை. தழுதழுத்த குரலில், 'தைரியமாக இரு!' என்று அவர் உரைத்திட்ட சொற்கள் என் வேதனையை எல்லாம் மறக்கச் செய்யும் மாமருந்தாகவே அப்போது ஒலித்தது. சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நான் பல நாட்கள் சிகிச்சை பெற்ற பின்னரே உடல் நலந் தேறி வீடு வந்தேன்.

தஞ்சைக் கவியரங்கின் பயணத்தில் இப்படிக் கார் விபத்தைச் சந்திக்க நேர்ந்திட்ட போதிலும் அந்த நிகழ்ச்சி நிறைவேறாமல் போய்விட்டதே என்னும் ஏக்கம் என் நெஞ்சில் அலை பாய்ந்த வண்ணமே இருந்தது. மறுபடியும் அங்கே கவியரங்கத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி அதில் கலந்து கொண்ட பின்னரே என் மனத்துக்கு ஆறுதல் உண்டாயிற்று.

136

உலகத் தமிழ் மாநாடு

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, இணையில்லாச் சிறப்போடு, எடுப்போடு, எழிலோடு சங்க காலமே தமிழகத்தில் தழைக்கத் தொடங்கிவிட்டது என்று பொதுமக்கள் அனைவருமே பூரித்திடும் வகையில் 1968 ஜனவரி முதல் வாரத்தில் பொலிவோடு நிகழ்ந்தேறியது.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்னும் பாரதியின் கனவு நனவாகிடும் வண்ணம் பார் முழுவதும் தமிழின் அருமையை - பெருமையை ஆய்ந்துணர்ந்த அயல் நாட்டு அறிஞர் பெருமக்கள் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்னைக்கு வருகை புரிந்தனர். இந்தியாவிலேயே வெளிமாநிலங்களிலிருந்து 30 அறிஞர்களும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 190 அறிஞர்களும் மாநாட்டில் பங்கு கொண்டிட வந்திருந்தனர்.

1968 ஜனவரி நான்காம் நாளில் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு (Seminar) சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அங்கே தான் அறிஞர் பெருமக்கள் தங்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தனர். அவற்றின் மீது விவாதங்களை நடத்தினர். விளக்கங்களை அளித்தனர்; அடைந்தனர்.

அந்த அளவோடு உலகத் தமிழ் மாநாட்டின் பணியினைச் சுருக்கி விடுவது கழக அரசுக்கு உகந்ததாகப் படவில்லை.

பொதுமக்களுக்கும் எழுச்சி-மகிழ்ச்சி ஏற்படுகின்ற வகையில் வேறு பல சிறப்பு நிகழ்ச்சிகளையும் இணைத்தால்தான் மாநாட்டுக்கு முழுப் பொலிவும், அதனால் உருவான பயனும் விளைந்திட முடியும் என்பதை உணர்ந்தோம்.

எனவே, உலக அறிஞர்கள் குழுமிய ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலாமற் போன ஏனைய தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் முதலானோர் பங்கேற்றிடும் வண்ணம் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், கலைக் கண்காட்சி முதலானவை நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சென்னையில் 'நீவுத் திடல்' என வழங்கப் பெறும் பகுதி "பூம்புகார்" நகராகப் புது வடிவம் பூண்டது. கலை நேர்த்தியோடு கவினழகு மிளிர்ந்திட அமைக்கப்பட்ட அந்நகரில்தான் இலட்சக்கணக்கான பொதுமக்கள் கண்டு களித்திடும் வண்ணம் நிகழ்ச்சிகள் பல நடந்தேறின.

4-1-1968-இல் தான் முறைப்படியான ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு தொடங்குவதாக இருந்த போதிலும், ஜனவரி முதல் நாளி முதற்கொண்டே மாநாட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகள் சென்னை மாநகருக்குத் திருவிழாக் கோலத்தினைத் தரத் தொடங்கிவிட்டன.

தமிழைக் காத்தல், தன்மானக் கொள்கைகளைப் பரப்புதல் ஆகிய வற்றை இலட்சிய விளக்குகளாய்க் கரத்தினில் ஏந்திப் பொதுமக்கள் நலத்திற்கே தம் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்து, தி.மு.கழகத்தைத் தோற்றுவித்து, ஆட்சிப் பீடத்தையும் அடைந்து காட்டித் தம்முடைய அரும் பெரும் கொள்கைகள் காற்றோடே கலந்து போய்விடாமல் செயல் வடிவம் பெற்றிடவும் சீராகப் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை, முன்னர் 'மவுண்டு ரோடு' என்று அழைக்கப் பெற்ற தற்போதைய 'அண்ணா சாலை'யில் 'ரவுண்டானா, பகுதியில் நிறுவப் பட்டது.

ஐக்கிய நாடுகள் மன்றத்தில் தம் பேச்சாற்றலை வெளிப்படுத்தி இந்தியாவின் பெருமையையும் நிலை நாட்டிய டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் ஜனவரி முதல் நாள் அன்று அண்ணாவின் சிலையைத் திறந்து வைத்தார்.

அந்த நிகழ்ச்சியினைத் தொடர்ந்து ஜனவரி இரண்டாம் நாளில் சென்னைக் கடற்கரையின் நெடுக ஆங்காங்கே,

திருவள்ளுவர்
அவ்வையார்
கண்ணகி
கம்பர்
வீரமா முனிவர்
ஜி. யு. போப்
கால்டுவெல்
வ. உ. சிதம்பரனார்
பாரதியார்
பாரதிதாசன்

ஆகியோருடைய சிலைகள் திறந்து வைக்கப்பெற்றன.

ஜனவரி மூன்றாம் நாள், காலை, பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் கலைப் பொருட்காட்சியை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அன்று பிற்பகல் 2-30 மணியளவில் மாபெரும் ஊர்வலம் ஒன்று 'பூம்புகார்' அமைந்த தீவுத் திடலை விட்டுக் கிளம்பியது.

ஊர்வலத்தின் முன்னே நான்கு யானைகள் ஒன்றன் பின் ஒன்றாய்ச் செல்லத் - தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றினை - வீரத்தினை - விவேகத்தினை - விளக்கிடும் அழகோவியங்கள் தீட்டப்பட்ட அலங்கார ஊர்திகள் இருபத்தேழு சென்னையின் முக்கிய வீதிகளில் கண் கொள்ளாக் காட்சியாய்க் காட்சியரங்குகளாகப் பவனி வந்தன.

உலகத் தமிழ் மகாநாட்டைத் துவக்கி வைத்திட வந்திருந்த டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள், முதலமைச்சர் அண்ணா அவர்களுடன் அண்ணாசாலை கலைக் கல்லூரியை ஒட்டி அமைக்கப்பட்ட தனிப் பந்தலில் அமர்ந்து அந்த மாபெரும் ஊர்வலத்தைக் கண்டு களித்து மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்.

தமிழகம் எங்கணுமிருந்து கடலெனத் திரண்டிருந்த இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் விழிகளுக்கு விருந்தளித்த அந்த ஊர்வலம் ஊர்ந்து கொண்டிருந்த இனிய வேளையில் தான் ஓர் இனிப்புச் செய்தியும் என் செவியை வந்து எட்டியது.

கலைத் துறையிலும், கட்சிப் பணியிலும் இணைந்து நின்ற என் இன்னுயிர்த் துணையான ராஜிக்கு எங்கள் அன்பின் சின்னமாகக் கனிமொழி பிறந்தது என்பதே அந்த இனிப்புச் செய்தி.

ஊர்வலம் கடற்கரையினை வந்தடைய இரவு ஏழு மணிக்கு மேல் ஆயிற்று. அதன் பின்னர் இலட்சக் கணக்கில் திரண்டிருந்த மக்களின் முன்னிலையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தலைமையை அண்ணா அவர்கள் ஏற்றிட, அப்போது இந்தியாவின் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் ஜாகீர் உசேன் மாநாட்டினைத் திறந்து வைத்து அரியதோர் உரையாற்றினார். திரு காமராசர் அவர்களும் வரவேற்புரையாற்றினார்

மறுநாள் முதற்கொண்டு பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ஆராய்ச்சிக் கருத்தரங்கும், தீவுத் திடலில் எழுப்பப்பட்ட பூம்புகார் நகரில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் கோலாகலமாய் நடைபெற்றுக் கொள்ளையின்பம் கொடுத்தன.

எட்டுத் திக்குமிருந்தும் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 450 அறிஞர்கள் வந்திருந்தார்கள்: 'ஏதோ ஒரு மண்டபத்தில் தாங்கள்

மட்டும் கலந்துரையாடிக் கலைந்துப் போயினர்' என்று அமைந்திருக்க வேண்டிய அந்த மாநாட்டை இருபது இலட்சம் மக்களும் திரண்டு நின்று கூர்ந்து நோக்கிடும் அளவுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்த தன்னை தீவுத் திடல் 'பூம்புகாரில்' நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளே.

அந்தச் சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும், குறிப்பாக அந்த மாபெரும் ஊர்வலமும் என்னுடைய மேற்பார்வையிலும், நாவலர் மேற்பார்வையிலும் நடந்தேறின. கலைத்துறையிலே உள்ள பெரியவர்களான திரு. எஸ். எஸ். வாசன், ஏ. வி. எம். செட்டியார், நாகிரெட்டி. ஏ. எல். சீனிவாசன் போன்றவர்களின் ஒத்துழைப்பு எங்கள் முயற்சிகளுக்கு உறுதுணையாய் நின்றது.

அத்துடன், திரைப்படத் தயாரிப்பாளர்கள் உலகத் தமிழ் மாநாட்டையும் அதன் கவின் மிகு ஊர்வலத்தையும் வண்ணப் படங்களாக எடுத்திட முன் வந்தனர். அந்தத் திரைப்படத்தில் வரும் ஒவ்வொரு காட்சிக்கும் நானே விளக்கவுரை எழுதி நானே பேசியும் உள்ளேன்.

ஊர்வலம் பற்றிய எனது கவிதை நடை விளக்கவுரையை கேட்டு விட்டுப் பெரியவர் எஸ் எஸ். வாசன் அவர்கள் அப்படியே என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு உச்சி மோந்தார்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு எழில் குலுங்கிடத் தமிழன்னையின் இதயங்குளிர்ந்திட இனிது நிகழ்ந்தேறிய பின்னர் மாநாட்டுக்கு வருகை புரிந்திட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வழியனுப்பி வைத்திடும் முறையில் விருந்தொன்றுக்கும் 18-1-1968-இல் ஏற்பாடு செய்யப்பட்டது.

137

எனது நாடகக் காப்பியம்

அந்த விருந்தின்போதே நான் எழுதிய 'சிலப்பதிகார நாடகக் காப்பியம்' என்னும் நூலின் தமிழ்ப் பதிப்பு, ஆங்கிலப் பதிப்புகளின் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

நாடகக் கலை வெறும் பொழுதுபோக்குக் கலை மட்டும் அல்ல; மனித உணர்வுகள் புழுதி படியாமல் பொலிவு பெற்றிட உதவும் புதுமைக் கலையும் ஆகும்.

உறைந்துவிட்ட பனிக்கட்டி உள்ளங்களையும் உருகவைத்து உலர்ந்துவிட்ட உணர்ச்சிகளுக்கெல்லாம் பசுமையூட்டி நலிந்துவிட்ட விறகுகளாகப் புகைந்தவாறே நகைச்சுவையை மறந்தவர்களையும் சிரிக்க வைத்துச் சிந்தையைக் கிளறிவிடும் விந்தைக் கலையும் நாடகமே.

அதனால்தான் முத்தமிழில் ஒரு கூருக முத்தான ஓர் இடங் கொடுத்து நாடகத் தமிழை வளர்க்க முயன்றிருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

எனினும் மேடைகளிலே மேன்மையுற்றுச் சிறந்த அளவுக்கு நூல் வடிவிலே இலக்கியத் தகுதியோடு நாடகத் தமிழ் வளர்ந்திடவில்லை என்பது என் பணிவான கருத்தாகும்.

கிரேக்க நாடகப் பேராசிரியன் சோபக்ளிஸ், ஆங்கில நாடகப் பேராசிரியன் ஷேக்ஸ்பியர், பிரெஞ்சு நாடகப் பேராசிரியன் மோலியர் முதலானவர்களைப் பற்றிக் கேள்வியுறும் பொழுதெல்லாம் நம்முடைய தமிழிலும் மற்ற இலக்கியங்கள்- குறிப்பாக இயற்றமிழ் வளர்ந்திட்ட அளவுக்கு, நாடகக் காப்பியங்கள் இயற்றப்படவில்லையே என்று நான் ஏங்குவதுண்டு.

சிலப்பதிகாரம் ஒரு வகையில் நாடகக் காவியமாகத் தோற்ற மளிப்பதுதான்; அதன் கதை மேடைகளில் நடிக்கப்பட்டும் வருவதுதான். ஆயினும் சிலப்பதிகாரத்தில் நாடக உணர்வு (Dramatic sense) இருக்கிறதே அல்லாமல், 'நாடக வடிவம்' (Dramatic shape) இருப்பதாகக் கூறமுடியாது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'மனோன் மணியம்' ஒன்று மட்டுமே இந்த வகையில் பாலவனத்தில் தென்

படும் சோலை வனமாய் நமக்கு ஆறுதல் அளிக்கிறது. அவரைப் பின்பற்றி ஒரு சிலர் நாடகக் காப்பியங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக உருவாக்கிட முயன்றிட்ட போதிலும் பொதுமக்களின் நெஞ்சங்களிலே நிலையான இடம் பிடித்திடும் வகையில் அவை அமைந்திடவில்லை. திரு பம்மல் சம்பந்த முதலியார் பல தமிழ் நாடகங்களை எழுதினாலும் அவை காப்பிய வடிவமோ கவிதை நடையோ பெறவில்லை.

சிலப்பதிகாரத் தேன் சுனையில், தீராத ஆசையுடன் அடிக்கடி மூழ்கித் திளைத்திடும் எனக்கு, அந்தக் கதைக்கே நாடகக்காப்பிய வடிவம் தந்தால் என்ன என்று தோன்றியது.

அந்த எண்ணத்தின் விளைவாக எழுந்ததே என்னுடைய 'சிலப்பதிகார நாடகக் காப்பியம்' நூல்.

தமிழர்கள் மட்டுமே சிலப்பதிகார அருமை பெருமைகளை அறிந்திருந்தால் போதுமா, மற்ற மொழிக்காரர்களும் மற்ற நாட்டவரும் அதன் பழச்சாறு சுவையினைப் பருகித் திளைத்திட வேண்டாமா என்றும் சிந்தித்தேன். ஆங்கில மொழியில் புலமை மிக்கவரான திரு டி. ஜி. நாராயணசாமி அவர்களைக் கொண்டு நான் எழுதிய தமிழ் நூலையே மொழிபெயர்க்குமாறு ஏற்பாடு செய்தேன்.

அந்த நூல்களின் வெளியீட்டு விழாதான் 18-1-1968-இல் உலகத் தமிழ் மாநாட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்ட வழியனுப்பு விருந்தோடு இணைந்து நடைபெற்றது.

முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கி என்னை உளந்திறந்து பாராட்டியதுடன், "இந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கே மகுடம் சூட்டுவது போல் இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது"

—என்றும் குறிப்பிட்டார்கள்.

'சிலப்பதிகார நாடகக் காப்பியம், தமிழ் நூலை அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட, அதனை இலங்கை அமைச்சரின் துணைவியார் திருமதி திருச்செல்வம் பெற்றுக்கொண்டார்; ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை ஆஸ்திரேலிய நாட்டினைச்சேர்ந்த திரு. ஜோர்தான் என்பவர் பெற்றுக்கொண்டார்.

அப்போது அண்ணா அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

".....தமிழில் உள்ள காப்பியங்களும் செய்யுள் நூல்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றால், உருவத்திலேயும், நாடக வடிவத்திலேயும், கட்டுரைவடிவத்திலேயும் பல நூல்கள் நமக்குத் தேவைப்

படுகின்றன. அந்த வகையில் தம்பி கருணாநிதி சிலப்பதிகாரத்தை நாடக உருவில் தந்திருக்கிறார். தமிழ் கற்ற அனைவரும் இதனைப் பாராட்டுவார்கள். தம்பி கருணாநிதியின் சிறந்த தமிழ் நடை அனைவரும் உணர்ந்தது; அவரது நடையில் இலக்கிய அறிவும், கலைத் திறனும் இருக்கும். அவர் இந்நாடகக் காப்பியத்தை எழுதுவதற்கு முற்றிலும் பொருத்தமானவர்."

அண்ணாவின் இந்தக் குளுமை மிகு சொற்கள் என் உள்ளத் திற்கும் உடலுக்கும் புல்லரிப்பையே கொடுத்தன; மேலும் பல நூல்களை இயற்றிட வேண்டும் என்னும் ஆர்வத்தையும் அளித்தன.

அண்ணல் காந்தியடிகளுக்கு அகில முழுவதும் அழியாப் புகழ் வாங்கிக் கொடுத்தது அவர்தம் அகிம்சை நெறியே.

அவருடைய அடிச் சுவட்டிலேயே நடை போட்டு உலகில் பல்வேறு பகுதிகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரிமைக் குரல் எழுப்பிய தலைவர்கள் பலரும்கூட 'காந்தி' என்னும் அடைமொழிக்கு உரியவரா னார்கள். காந்தியடிகளின் வழித்தோன்றலாகவே அவர்கள் கருதப் பட்டார்கள்; மதிக்கப்பட்டார்கள்.

அவ்வாறு மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்குப் பெற்றவர்களில் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் அவர்களும் ஒருவர் ஆவார். அமெரிக்க நீக்ரோ இனத்தவரின் ஒரே ஆறுதலாய், ஒரே ஊன்றுகோலாய் ஒளி வீசி உயர்ந்து நின்றவர் லூதர் கிங். அண்ணல் காந்தியடிகளையே தம்முடைய மானசீகக் குருவாக வரித்துக்கொண்டு, கவிழ்ந்துகொண்டு இருகரும் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைப் படகுகளை நிமிர்த்தும் பொருட்டு அகிம்சை நெறியினை விட்டு அணுவும் பிறழாமல், அறப் போர்களில் ஈடுபட்ட அறிஞர் அவர். அதற்காகவே உலகப் பெரும் பரிசான நோபல் பரிசுக்கும் உரியவரானவர்.

'அமெரிக்கக் காந்தி' என்றே அழைக்கப் பெற்ற அந்த அறநெறிச் செல்வர், கயவன் ஒருவனால், 1968 ஏப்ரல் 5-இல் சுட்டுக் கொல்லப் பட்டார்.

அவருடைய திடீர் மரணம் உலகம் முழுவதையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

மார்ட்டின் லூதர் கிங் மறைவைக் கேட்டு நானும் மனமாத் துயர டைந்தேன்.

"வன்முறையை ஒழிக்கப் புறப்பட்ட நன்னெறியாளர்கள் கடைசியில் வன்முறைக்கே தங்கள் வாழ்க்கையைப் பலி கொடுக்க வேண்டுமா?" என்று என்னால் அப்போது எண்ணாமல் இருக்க முடிய வில்லை.

எனனுடைய மகன் முத்துவுக்கும் இசைச சிதநர் சிதம்பரம ஜெயராமன் அவர்களின் மகள் சிவகாமசுந்தரிக்கும்—

என்னுடைய மகள் செல்விக்கும் என் தமக்கை மகன் செல் வத்துக்கும் ஒரே நாளில் திருமணம் நடைபெற்றது.

அறிஞர் அண்ணு அவர்களின் சீரிய தலைமையில் 1968—ஏப்ரல் 12-இல் நிகழ்ந்தேறிய திருமண விழாவுக்கு ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர் களும், அனேத்துக் கட்சித் தலைவர்கள் பலரும் வருகை புரிந்து சிறப் பளித்தது ஒருபுறமிருக்கத் தந்தை பெரியார் அவர்களும், மூதறிஞர் ராஜாஜி அவர்களும் தங்களுடைய தள்ளாத வயதிலும், என்பால் உளள தளராத பாசத்தினுல் வாழ்த்துரைக்க வந்ததுதான் மண விழா வுக்கே மகுடம் பூனந்தது போல் அமைந்திருந்தது.

இலட்சியப் பாதைகள் வெவ்வேறு திசைகள் நோக்கி விரிந்து சென்றபோதிலும், அவை இதயப் பிணைப்பையே வெட்டியெறியும் வாள் ஆக வேண்டியதில்லே.

இதற்கு எடுத்துக்காட்டாகவே கொள்கைப் பிடிப்பில் எதிரும் புதிருமாய், இரு துருவங்களாய் விளங்கியபோதிலும், உள்ளக் கலப்பில், ஒன்றிய தோழமையில், உயர்ந்த நண்பர்களாகவே பெரியாரும் ராஜாஜியும் திகழ்ந்தனர்.

எங்கள் குடுமபத்தில் நடைபெற்ற திருமண விழாவின் போது, மேடையிலே அவாகள இருவரும் அடுத்தடுத்து அமர்ந்து அளவளாவிய காட்சி மண விழாவுக்கு வந்திருந்தோர் அனைவருக்கும் அளவற்ற மகிழ்ச்சிப பொங்கலேப் பரிமாறிற்று.

'தூத்துக்குடியிலிருந்து டிம்பக்ட்டு வரை, டிம்பக்ட்டுவிலிருந்து டாஸ்மேனியா வரை தமிழர்கள் எங்கெங்கு வாழ்கின்றனரோ அங்கெல்லாம் அவர்களது இதயத்திலே அரியணை அமைத்துக்கொண்டு, மாமன்னராய் ஆட்சி செலுத்துகின்றவர்' என்றெல்லாம் 'இல்லஸ் டிரேட்டட் வீக்லி' ஏட்டினுல ஏற்றிப் போற்றப்பட்ட அண்ணு அவர்களோ அவர்தம் அறிவுக் கூர்மைக்காகத் தமிழினத்தைச் சாராத அமெரிக்கா களும் அழைத்திடும் காலம் கனிந்து வந்தது.

அமெரிக்க அரசின் அழைப்பினையும், தங்கள் பல்கலேக்கழகத்தில் ஐந்து நாட்களுக்குக் குறையாமல் தங்கள் மாணவர்களோடு கலந்துரை யாடிட வேண்டும் என்ற யேல் (Yale) பல்கலேக் கழகத்தாரின் வேண்டு கோளையும் ஏற்று 15-4-1968 அன்று சென்னையிலிருந்து அமெரிக்கா நோக்கி விமானப் பயணம் மேற்கொண்டார் அண்ணு. 'யேல்' பல்கலேக் கழகத்துக்கும், தமிழகத்துக்கும் வித்தையான ஒரு வரலாற்று பிணைப்பு உண்டு.

அந்தப் பல்கலைக் கழகம் சாதாரண நிலையில் கல்லூரியாக மட்டும் இருந்த காலத்தில் தொடர்ந்து நடத்தப்படவே முடியாத அவல நிலைக்கு ஆளாயிற்றும். அப்போது அந்தக் கல்லூரி வளர்ச்சிக்கு நன் கொடை வேண்டி உலகின் பிற பகுதிகளுக்கெல்லாம் கடிதங்கள் வரைந்திருக்கிறார்கள் அதன் நிர்வாகிகள்.

அச்சமயம் சென்னை மாநிலத்தில் ஆளுநராக இருந்த 'யேல்' என் பவருக்கும் அக்கடிதம் கிடைத்திருக்கிறது. ஆனால், அது வந்த வேளையில் அவரால் உடனடியாகப் பணம் அனுப்ப முடியவில்லை. அதற்குப் பதிலாக மூன்று பொதி பருத்தியையும், படங்களையும், புத்த கங்களையும் அனுப்பி அவற்றை ஏலத்துக்கு விட்டு அதில் வரும் பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு அவர் எழுதியிருந்தாராம். அந்தப் பொருட்களை ஏலம் விட்டதன் மூலம் ஐந்நூறு டாலர்கள் கிடைத்திருக் கின்றன. கருகிப் போய் விடுமோ என்று கருதப்பட்ட அந்தக் கல்லூரிப் பயிரை நீராக நின்று காப்பாற்றியது அந்தப் பணம்.

அதே கல்லூரிதான் பின்னர் விழுதுகள் பல இறங்கிய ஆலமரமாய் விரிவடைந்து பல்கலைக் கழகமாகவும் பரிணமித்திருக்கிறது. நன்றியு ணர்வைக் கொன்றிடாத அதன் நிர்வாகிகள், முதல் முதல் தங்கள் வேண்டுகோளுக்கிணங்கிப் பொருட்களை அனுப்பி வைத்த சென்னை கவர்னரான 'யேல்' அவர்களைச் சிறப்பித்திட விழைந்து, தங்களுடைய பல்கலைக் கழகத்தின் பெயரையே அவருடைய பெயரால் அழைக்கலா யினர்.

இந்த வரலாற்றுப் பிணைப்பினைத் தொட்டுக் காட்டிய அண்ணு, ''.....அமெரிக்க அரசு என்னை அழைத்தாலும் யேல் கலைக் கழகம் என்னை அழைத்தாலும் உள்ளபடியே அன்றொரு நாள் தமிழகத்திலிருந்து சென்ற பரிசுப்பொருட்கள் தாம் என்னை அங்கு அழைப்பாகக் கருதுகிறேன்!''

என்று வேடிக்கையாக அப்போது குறிப்பிட்டார்கள்.

அமெரிக்க அரசின் சிறப்பு விருந்தாளியாகவும், சென்றிருந்த அண்ணு அங்கு பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டு மகிழ்ந்ததுடன், 'யேல்' பல்கலைக் கழகத்திலும் திட்டமிட்டபடி ஐந்து நாட்கள் தங்கியிருந்தார். திணற அடிக்கும் மாணவர்களின் கேள்விக் கணைகளையெல்லாம் சிரமப்படாமல் முனை முறிந்திடச் செய்து விடையளித்திட்ட அவர், திருக்குறள் வகுப்பும் அவர்களுக்கு நடத்தியிருக்கிறது.

எத்தனையோ தமிழர் தலைவர்கள் அதற்கு முன் அமெரிக்கா சென்றிருக்கிறார்கள். ஆனால் எவருக்குமே திருக்குறளைப் பரப்பிடும் எண்ணம் எழுந்ததில்லை. அண்ணுவோ அமெரிக்க மாணவர்களுக்குத்

'திருக்குறள்' வகுப்பு நடத்தியதன் மூலம் ஒரு புதிய வரலாறே படைத்துவிட்டார். அவர்தம் அறிவின் ஆழத்தை - கூர்மையைக் - கேள்வியுற்றதோடு மட்டுமின்றி நேரிலும் கண்டு வியந்து, 'யேல்' பல்கலைக் கழகம் 'செஃபெல்லோஷிப்' என்னும் பட்டத்தை வழங்கியது.

அதுகாறும் அமெரிக்க அறிஞர்கள் மட்டுமே அந்தப் பட்டத்துக்கு உரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணா ஒருவர்தாம் அந்தச் சிறப்பினைப் பெற்ற முதல் வெளி நாட்டுக்காரர்.

அமெரிக்கச் செய்தியாளர்கள் எல்லாரும் ஆச்சரியக் கடலில் மூழ்கிடும் வண்ணம் இந்தியாவின் பெருமையே ஏற்றம் பெற்றிடும் வகையில் கட்சி மாச்சரியங்களையெல்லாம் கடந்து கருத்துக் கதிர்களை உதிர்த்த அண்ணா அவர்களைச் சென்ற இடமெல்லாம் ஆர்வம் ததும்பிட வரவேற்றிருக்கின்றனர் அமெரிக்க மக்கள். ஆனால், அடுத்த சில மாதங்களிலேயே அந்தச் சிறப்புமிகு இந்தியத் தலைவர் தங்கள் நாட்டுக்குத் திரும்பி வருவார், சிகிச்சை பெறுவார், பின்னர் தங்கள் விழிகளையே குளங்களாக்கி விம்மிடச் செய்வார் என்று அப்போது அவர்கள் எப்படி அறிவார்கள்?

அமெரிக்கா சென்றிருந்த அண்ணா திரும்பும் வழியில் ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவிட்டு, 12-5-1968 அன்று இரவு தாயகம் வந்தடைந்தார்.

138

ஹிம்மத்' ஏட்டுக்குப் பேட்டியளித்தேன்

மூன்று நாட்கள் கழித்து வடநாட்டிலிருந்து வெளியாகும் 'ஹிம்மத்' (Himmat) ஆங்கில ஏட்டின் ஆசிரியர் திரு லாலா என்பவர் என்னைப் பேட்டி கண்டிடச் சென்னைக் கோட்டைக்கு வந்தார்.

அவர் எழுப்பிய சில வினாக்களும் அவற்றிற்கு நான் அளித்த விடைகளும் வருமாறு:

கேள்வி : இந்தியாவின் மொழிச் சிக்கலுக்குத் தாங்கள் சொல்லும் தீர்வு என்ன?

நான் : எங்கள் தலைவர் அண்ணா அமெரிக்காவிலும் இங்கும் சொல்லியிருப்பதைப் போன்று மொழிப் பிரச்சினையையே 25 ஆண்டுகளுக்குத் தள்ளி வைத்துவிட வேண்டும்.

கேள்வி : மத்திய மாநில உறவு பலப்படுவதற்குத் தாங்கள் கூறும் யோசனை என்ன?

நான் : வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, செய்திப் போக்கு வரத்து போன்ற ஒருசிலவற்றை மட்டும் மத்திய அரசு எடுத்துக் கொண்டு மீதியுள்ள அதிகாரங்களை மாநில அரசுக்குத் தருவது மத்திய மாநில அரசுகளின் உறவு பலப்பட வழி வகுக்கும்; உண்மையான தேசிய ஒருமைப்பாடும் ஏற்படும்.

கேள்வி : தங்களுடைய இந்த யோசனைக்கு மற்ற மாநிலங்களின் ஆதரவு இருக்கிறதா?

நான் மற்ற மாநிலங்களிலுள்ளவர்களிடம் இந்த எண்ணம் இருக்கிறது. அதை ஒன்று சேர்த்து உருவாக்கி யார் எழுப்புவது என்பதுதான் பிரச்சினை.

கேள்வி : தமிழகம் இந்தியாவுக்கு எந்த வகையில் வழிகாட்ட விரும்புகிறது?

நான் வேற்றுமையுணர்ச்சி களையப்பட்டு, ஒன்றுமையுணர்ச்சி ஏற்பட வேண்டுமானால் பிறரது நியாயமான உணர்ச்சிகளை மதிக்கும் மனப்பக்குவம் ஏற்படவேண்டும். இந்தியாவில் இப்போது வேற்றுமையுணர்ச்சி களையப்படத் தமிழகத்தின் நியாயமான மொழியுணர்ச்சியைப் பிறர் மதிக்க வேண்டும். அப்படி மதிப்பதன்

மூலம் நியாய உணர்ச்சியை மதித்தோம் என்கிற மன நிறைவும் உண்மையான ஒற்றுமையுணர்வும் நாட்டில் ஏற்படும். இதுதான் தமிழகம் காட்டும் வழியாகும். இதைத் தொடர்ந்து இன்னொரு முக்கியமான நடைமுறைச் செயலிலும் இந்தியாவுக்குப் புதிய தமிழகம் ஒரு செய்தியைத் தருகிறது.

இப்போதிருக்கும் நிலைக்கு மாறுக விவசாயத்திற்கு முதலிடமும் அதனைத் தொடர்ந்து தொழில் வளர்ச்சிக்கு அடுத்த இடமும் தரப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். அதை நடைமுறைப் படுத்தியும் வருகிறோம். எங்களோப்போன்று நாட்டின் பிற பகுதியினரும் விவசாயத்திற்கு முதலிடம் காட்ட முன் வரவேண்டும்.

மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்கள், நான் முதல்வராகப் பொறுப்பேற்றதற்கு முன்பே, பொதுப்பணித் துறை அமைச்சராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த காலத்திலேயே என் உள்ளத்தில் ஆழமாக வேர்விடத் தொடங்கிவிட்டன என்பதற்கு 16-5-1968-இல் 'ஹிம்மத்' ஆசிரியருக்கு நான் அளித்திட்ட இந்தப் பேட்டியும் ஒரு சான்றாகும்.

சிலை என்பது அந்தச் சிலைக்குரியவரின் சீரிய பணிகளுக்கு தியாகத் தழும்புகளுக்கு மற்றவர்கள் காட்டிடும் நன்றியின் சின்னமேயாகும்.

பேரறிஞர்கள், பெருந் தலைவர்களுக்கு எழுப்பப்படும் சிலைகள் வருங்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக ஊக்கமளிப்பது உண்டு.

அதனால்தான், உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபொழுது பல ஆன்றோர்களுக்குச் சிலையெழுப்பிடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது தி. மு. க. அரசு.

ஆனால் எனக்கே அப்படியொரு சிலையெழுப்பிடும் முயற்சியில் கழகத் தண்பர்கள் ஈடுபடக்கூடும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

சென்னை - 'ஜெமினி ஸ்டுடியோ'வை ஒட்டியுள்ள ஐந்து சாலைகளும் சந்திக்கின்ற பரந்த பகுதியில் என்னுடைய சிலையை எழுப்பி எனது பிறந்த நாளான 3-6-1968 அன்று அண்ணா அவர்களின் கரத்தாலேயே அதனைத் திறந்து வைப்பதென்றும் கழகத் தோழர்கள் திட்டமிட்டு விட்டனர்; அதற்கு அண்ணாவின் ஒப்புதலையும் அவர்கள் பெற்றுவிட்டனர்.

செய்தி அறிந்த நான் திகைப்படைந்தேன். அருமருந்தன்ன தண்பர்களின் அன்புப் பெருக்கை, ஆர்வத் துடிப்பை நான் உணர்ந்து

கொண்ட போதிலும், ஐம்பது வயதினைக்கூடத் தாண்டாத எனக்குச் சிலையெழுப்பிடும் ஏற்பாடு பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

''.....நண்பர்களுடைய அன்புக்கு என் நன்றியுணர்வைக் காணிக்கை ஆக்குகிறேன். சிலையைத் திறந்து வைக்கப் பெருமனதுடன் ஒப்புதல் அளித்த அண்ணன் இருக்கும் திக்கு நோக்கி வணக்கம் செலுத்துகிறேன். சிலை அமைப்பது போன்ற பெருமைகளுக்கான தகுதியை நான் பெறவில்லை என்பது அடக்கத்தில் காரணமாக அல்ல; திறந்த மனத்துடன் தெரிவிக்கும் உண்மை நிலையும் ஆகும். நாட்டுக்கும் இலக்கியத்துறைக்கும் நான் செய்யவேண்டிய கடமைகள் இன்னும் ஏராளமாக உண்டு. அதற்குள் நண்பர்கள் அவசரப்படுவது சரியுமல்ல; முறையுமல்ல.....கழகத்தினர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பேணிக் காத்து வருவதும் கழகத்துக்கு வெற்றிகளைத் தேடித்தருவதும் அந்த வேலைகளில் என்னையும் ஊக்குவிப்பதும்தாம் அவர்கள் எனக்கு அமைக்கிற சிலைகளாகும்; தருகிற பிறந்த நாள் பரிசுகளாகும்.. ''

என்னுடைய இந்த வேண்டுகோளுக்குப் பிறகே, என் விருப்பத்திற்கிணங்க எனக்குச் சிலையெழுப்பிடும் முயற்சியினை நண்பர்கள் கைவிட்டார்கள்.

திருச்சி மாவட்டக் கழகத் தோழர்கள் என்னுடைய 45-ஆவது பிறந்த நாள் விழாவினை 9-6-1968 அன்று கோலாகலமாகக் கொண்டாடினர். அதில் நானும் பங்கு பெறத்தான் வேண்டுமென்று அன்பில், பரஞ்சோதி, எம். எஸ். மணி முதலான நண்பர்கள் வற்புறுத்திவிட்டனர்.

அந்த விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு அந்த ஞாயிற்றுக்கிழமை இரவே, திருநெல்வேலி விரைவு ரயில் வண்டியில் திருச்சியிலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்டேன்.

நள்ளிரவு இரண்டு மணி இருக்கும்.

இரயில் வண்டி அரியலூரைத் தாண்டி, 'ஓட்டக்கோயில்' என்னும் இரயில் நிலையம் நோக்கி வந்துகொண்டிருந்தது.

அப்போது திடீரென்று ஒருவன் நான் பயணம் புரிந்து கொண்டிருந்த இரயில் பெட்டிக்குள் தாவி விழுந்தான், அவசர அவசரமாக.

அவனது முகத் தோற்றமே அவனொரு முறையான மனிதன் இல்லை என்பதைக் காட்டிக் கொடுத்தது.

அரசியல் அரங்கில் கீழ்ள மனம் கொண்டோரைச் சில சமயம் என்னால் கண்டுபிடிக்க முடியாமற்போனாலும், அந்தச் சமூகத் திருடனை எப்படியோ என்னால் சரியாக இனம் காண முடிந்தது.

அவன் தப்பியோடி விடாதபடி, உடனே அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தேன். இரயில் நின்றது. என் மெய்க்காவலர்களும் ஏனைய அதிகாரிகளும் விரைந்தோடி வந்தனர். அந்தத் திருடனைப் பிடித்துக் கூவல் தீறையினரிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் விசாரித்ததில், பிடிபட்டவன் பெயர் ஆல்பர்ட் என்றும் திருச்சியைச் சேர்ந்தவன் என்றும், அவன் ஏற்கெனவே பல திருட்டு வழக்குகளில் ஈடுபட்டுத் தண்டனை பெற்றவன் என்றும் தெரியவந்தது.

பூஞ்செடிகளை அரித்து அழித்திடும் பூச்சிகளாகச் சமுதாயத்தைக் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்ட ஒரு புல்லுருவியைப் பிடித்துக் கொடுத்ததில் உண்மையிலேயே எனக்கு அப்போது ஒரு விதப் பெருமிதமே உண்டாயிற்று.

139

அண்ணனைப் பற்றியது நோய்!

ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி உவகை வெள்ளத்திலே மிதந்து பீடுநடை போட்டுக் கொண்டிருந்த தமிழகத்தில்-

1968-செப்டம்பர் திங்கள் தொடக்கத்திலேயே துயர் நிழலொன்று படரத் துவங்கிற்று.

அண்ணு அவர்கள் வயிற்று வலி தாங்காமல் அவதிப்படலானார்.
உதிராத மலர் இல்லை;
உலராத பனி இல்லை;
புதிரான வாழ்க்கை யிதில்;
புதையாத பொருள் இல்லை;
ஒலியாத சங்கில்லை;
ஒடுங்காத மூச்சில்லை;
இயற்கை நியதிகளில் இறப்பும் ஒரு கூறு அன்றே?
ஆனால்—
அந்த இறப்பு—

எளிதாகவே வந்து மனிதரை ஏந்திச் சென்றால் எத்துணை இனிமையாக இருக்குமென அடிக்கடி நான் எண்ணிக் கொள்வது உண்டு.

வாழும் பொழுதுதான் மனிதன் வடிக்கின்றான் கண்ணீர் என்றால்-துடிக்கின்றான் துயர் நெருப்பில் என்றால்-மாளும் பொழுதாவது மரணம் அவனுக்கு மலர் மெத்தையாக மாறக்கூடாதா? வசதியாக-வேலாக. அவனை அது குத்தத்தான் வேண்டுமா? வன்னெஞ்சக் கழுகாக அவனை அது கொத்தத்தான் வேண்டுமா?

அண்ணுவைக் கொடுமைப்படுத்திய நோயை எண்ணிடும் பொழுதெல்லாம் கண்ணீர் பொங்குகிறது; கனக்கிறது நெஞ்சம்!

முதன் முதலில் வயிற்று வலிதான் அண்ணுவை வந்து வாட்டியது. வீட்டிலேயே இருந்து மருந்துகளை அவர் அருந்தினார். டாக்டர் இரத்தினவேல் சுப்ரமணியம் கவனித்து வந்தார்.

அப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினர், அண்ணு அவர்களுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கப் போவதாக அறிவித்திருந்தனர்.

அந்தப் பட்டத்தினை நேரில் சென்று பெற்றுக் கொள்வதே முறையாகும் என்று நினைத்தார் அண்ணு. பிணியோ அவருக்குப் பெரும் வேதனை கொடுத்துக் கொண்டிருந்தது. அதனால் அந்தச் சமயம் பயணம் எதுவும் மேற்கொண்டால் அது அவரது உடல் நலனுக்கு மேலும் ஊறு விளைத்திடுமே என்கிற அச்சத்தில் பட்டம் பெற்றிட அண்ணுமலைநகர் செல்வது அவ்வளவாக உகந்தது அல்ல என்று மற்றவர்கள் அண்ணுவிடம் சொல்லியிருக்கின்றனர், டாக்டரும் தடுத்திருக்கிறார். ஆனால் அண்ணு அவர்களோ தம் எண்ணத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை.

அந்த நிலையில் அண்ணியார் அவர்கள் என்னை அழைத்தார்கள்.

"நாங்க எவ்வளவோ சொல்லியும் அவங்க பிடிவாதமா இருக்கிறீங்க. நீங்க சொன்னால்தான் உன் அண்ணனி கேட்பாங்கன்னு எனக்குத் தோணுது!" என்றார்கள்.

நான் உடனே அண்ணுவிடம் சென்றேன்.

"இப்போ அண்ணுமலை தகருக்குப் போக வேண்டாம். கொஞ்சம் அசைந்தாலும் அலுக்கை தாங்காது என்கிறபோது அவ்வளவு தொலைவு பயணம் போனால் உடம்பு எதுக்கு ஆகும்? அந்த அவதியைப் பிறகு எப்படித் தாங்க முடியும்? சிகிச்சைகளை ஒழுங்காகச் செய்து கொள்வதும் தடுமாறிப் போகுமே! 'டாக்டர்' பட்டத்தை வேறு யாராவது உங்கள் சார்பில் போய்ப் பெற்று வந்தால் போகிறது."

என்னுடைய வார்த்தைகளைக் கேட்டதும்,

"அப்படியா சொல்கிறாய்?...ம் என்று மெலிந்த குரலில் முனகிய அண்ணு, என்னைப் பார்த்துப் புன்னகை பூத்தார்.

அந்தப் புன்னகையிலேயே என்னுடைய வேண்டுகோளுக்கு என் அண்ணனி இசைந்து விட்டார் என்பதைக் கண்டு கொண்டேன்-களிப்புற்றேன்.

''அது சரி, நாம் எல்லாரும் சென்னையிலேயே தங்கிவிட்டால் எப்படி? நாலும் சுற்றுப்பயணம் போகாமல், நீயும் சுற்றுப் பயணம் போகாமல் இருக்கலாமா? கூடாது; நீ உடனே உன் திட்டப்படிச் சுற்றுப் பயணம் போய் வா!'' என்ருர் கனிவோடு.

அவர்தம் அன்புக் கட்டளையை ஏற்றுத் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி தொகுதி நோக்கிப் பயணம் புறப்பட்டேன் நான்.

குற்ருலத்தில் கலையரங்கம் ஒன்று கட்டப்பெற்றது. 3-9-1963 அன்று கலைவாணர் பெயர் சூட்டி அதனைத் திறந்து வைத்திடச் சென்ற நான், குற்றலத்தையொட்டிய தென்காசியில் வேறு சில நிகழ்ச்சிகளி லும் கலந்து கொண்டேன்.

பின்னர் அங்கிருந்து காரைக்குடி நோக்கி நான் போய்க் கொண் டிருந்தபோது வழியில் மதுரை புகைவண்டி நிலையத்தில் அதிர்ச்சி அளித்திட்க் கூடிய தொலைபேசிச் செய்தியொன்று எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது. சென்னையிலிருந்து டாக்டர் இராமமூர்த்திதான் பேசினர்.

''அண்ணுவைப் பரிசோதனை செய்து பார்த்தோம். புற்று நோய்க் கான அடையாளம் இருப்பதாகத் தெரிகிறது.''

இந்தச் சொற்களைக் கேட்டதுமே என் நெஞ்சம் பதறிற்று; கண்ணீர் பெருகிற்று.

''வரக்கூடாத நோய் வந்து விட்டதே :அண்ணு! அதுவும் உங்க ளுக்கா அந்த நோய்!''

என்று வாய் விட்டுக் கதற வேண்டும் போல் நான் துடியாய்த் துடித்தேன்.

மற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் உடனடியாக ரத்து செய்து விட்டு அன்று இரவே நான், அரங்கண்ணல், மதுரைமுத்து ஆகியோர் கண்ணீர் மாலையுடன் சென்னைக்குத் திரும்பினேம். சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை யெல்லாம் ரத்துச் செய்துவிட்டுத் திரும்புமாறு நாவலர் அவர்களுக்கும் செய்தி அறிவிக்கப்பட்டு, அவரும் அவ்வாறே வந்து சேர்ந்தார்.

சென்னைப் பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த அண்ணுவைக் கண்டதும் துயரம் என் தொண்டையை அடைத்தது என் இதயமே தூக்க முடியாத சுமையாக எனக்குக் கனத்தது.

சோதனை செய்த மருத்துவ வல்லுநர்கள், அண்ணுவின் உணவுக் குழாயில் சதை வளர்ந்திருப்பதாகக் கூறினர்கள். அதனை அறுவைச்

சிகிச்சை மூலம் அகற்றிட வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினர்கள்.

அத்தகைய அறுவைச் சிகிச்சை சென்னையில் வசதிப்படாது என்று தோன்றியதால் அண்ணா அமெரிக்கா சென்று வருவதே அவசியமான தாகக் கருதப்பட்டது. அதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற் கொள்ளப்பட்டன.

1968 செப்டம்பர் 8-ம் நாள்.

இருண்டு கிடந்த தமிழ் மண்ணிலே எழு ஞாயிருய் ஒளிக் கதிர்களை உலவ விட்ட எத்தனை எத்தனையோ இலக்கியக் கரு வூலங்களை - இலட்சிய முழக்கங்களைப் - பாயவிட்ட அறிவுப் பெரும் புனலாம் அண்ணா அவர்களுக்கு 'இலக்கியப் பேரறிஞர்' என்னும் பொருள் தரும் 'டாக்டர்' பட்டத்தினை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்துச் சிறப்பித்தது; அதன் மூலம் தானும் சிறப்புப் பெற்றது.

முன்னர் நான் குறிப்பிட்டதைப் போலவே, முற்றிவிட்ட நோயின் காரணமாக அண்ணாவால் நேரில் சென்று அந்தப் பட்டத்தினைப் பெற்றுவர முடிந்திடவில்லை. நாவலர் அவர்களே அண்ணாவின் சார்பில் சென்று அப்போதைய ஆளுநர் உஜ்ஜல்சிங் வழங்கிய அந்தச் சான்றிதழை வாங்கி வந்தார்.

செப்டம்பர் பத்தாம் நாள் சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்காவுக்குப் புறப்பட்டார் அண்ணா.

அவரைத் தங்கள் உள்ளக் கோவிலில் ஒரு பெரும் ஆற்றலாய் ஏற்று வழிபடும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வழியனுப்பி வைத்திட வெள்ளமென நிரம்பி வழிந்தனர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில்.

ஆளுநர் உஜ்ஜல்சிங், அமைச்சர் பெருமக்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாருமே அண்ணாவுக்கு வாழ்த்துக் கூறிட அங்கே வந்திருந்தனர்.

எனினும், தம்முடைய தள்ளாத வயதிலும் தள்ளுவண்டியில் அமர்ந்தபடி, சமுதாயப் பொதுப்பணியில் தமக்குத் தனயனாக விளங்கிய அண்ணாவை வழியனுப்பிடத் தந்தைப் பெரியார் அவர்கள் வந்து காத்திருந்தது, அங்கே குழுமியிருந்தோர் அத்தனை பேருடைய நெஞ்சங்களையும் நெகிழச் செய்தது.

நான், நாவலர், ஏனைய சில நண்பர்களும், விமானத்திலேயே பம்பாய் வரை சென்று அண்ணாவை வழியனுப்பி வைத்து விட்டுத் திரும்பினோம்.

அவருடன் அண்ணியார், பரிமளம், க. இராசாராம், இரா. செழியன், டாக்டர் சதாசிவம் ஆகியோர் அமெரிக்காவுக்குச் சென்றனர்.

பம்பாய் விமான நிலையத்துக்கு மராட்டிய முதல்வர் திரு வி. பி. நாயக், தம் துணைவியாருடன் வந்து அண்ணாவை வழியனுப்பியதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் தம்முடைய பிறந்த நாளின்போது அண்ணா தமிழகத்தில்தான் இருந்திருக்கிறார். அவருக்காக விழாக்களை எடுப்பதில் கழகத் தோழர்கள் கரைகடந்து களிப்புக் கடலிலே மிதந்திருக்கிறார்கள்.

ஆனால் அந்த ஆண்டு அண்ணா பிறந்த நாளிலோ எல்லா நிகழ்ச்சிகளும் எழுச்சியோடு கொண்டாடப்பட்ட போதிலும், ஏதோ ஓர் இனம் விளங்காத இருண்ட நிழல், அண்ணாவுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என்கிற ஏக்க நிழல், இடையிடையே எங்கள் இதயங்களில் படராமல் இல்லை.

அண்ணாவின் பிறந்த நாளையொட்டி மதுரையில் 16-9-68-இல் கவியரங்கம் ஒன்று நடைபெற்றது. அதற்கு நான் தலைமை யேற்றேன்.

அதனையடுத்து செப்டம்பர் பதினாறு, பதினேழு தேதிகளில் முறையே தஞ்சை, திருச்சி நகரங்களில் அண்ணாவின் திருவுருவச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. நானும் நாவலரும் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம்.

நியூயார்க் - மெமோரியல் மருத்துவமனையில் 16-9-68 அன்றுதான் அண்ணாவுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

அதே நாளில்தான் தஞ்சையில் மணிக்கூண்டு அருகே அவர் தம் அழகான சிலையை, அமர்ந்தவாறே நூலைப் படிப்பதுபோன்ற சிலையை- நாவலர் தலைமையில் நான் திறந்து வைத்தேன்.

அப்போது இவ்வாறு குறிப்பிட்டேன் :

"……அமெரிக்க நாட்டிலே ஆப்ரகாம் லிங்கன் பிறந்தார் கென்னடி இருந்தார்; ஆனால் ஓர் அண்ணா பிறக்கவில்லையே என்று அமெரிக்கர்கள் ஏங்கினார்கள் போல் இருக்கிறது; அவர்களின் ஏக்கத்தைப் போக்கும் விதத்தில் இன்று அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ள அண்ணாவைத் தமிழ்த் தாய் மீண்டும் அங்கே பிரசவித்திருக்கிறாள்.

"இன்று அமெரிக்காவில் பிறந்திருக்கும் அண்ணா அவர்களுக்கு ஒரு நாள் வயதாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தை இன்னும்

நூற்றாண்டு காலம் நலமுடனே வாழவேண்டும் என்று வாழ்த்துகிறோம். இந்த இதய வாழ்த்துக்களைப் பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் நியூயார்க் மருத்துவ மனையிலிருக்கும் அண்ணா அவர்களுக்குக் காற்றின் வழியாக அனுப்புகிறோம்!"

கொடுமையான நோய்க்கு இரையாகிக் கடுமையான அறுவைச் சிகிச்சைக்கும் ஆளாகிவிட்ட அண்ணா அதிலிருந்து மீண்டும் பிழைத்து வருவது புத்துயிர் பெற்றுப் புதுப்பிறவி எடுத்து வருவதைப் போன்றது என்பதையே அவ்வாறு நான் குறிப்பிட்டேன்.

மாலையே இல்லாமல் எங்காவது வரவேற்பு வைபவம் உண்டா?

எத்தனையோ அற்புதங்கள் அரசியல், சமூக, கலை, இலக்கிய அரங்குகளிலே நிகழ்த்திக் காட்டிய அண்ணாவின் வாழ்க்கையில் அந்த அற்புதமும் நடைபெற்றது.

மாலையே அணிவிக்க முடியாத மனத்தவிப்புடன் இலட்சக் கணக்கான மக்கள் கடல், அண்ணா அவர்களுக்கு ஒரு முறை மகத்தான வரவேற்பு அளித்தது.

அமெரிக்க நாட்டிலுள்ள நியூயார்க் மருத்துவ மனையில் உலகப்புகழ் பெற்ற டாக்டர் மில்லர் அவர்களின் திறமையான சிகிச்சையின் காரணமாகத் தேறித் திரும்பி வந்த அண்ணா அவர்களுக்குத்தான் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 6-11-68 அன்று அத்தகைய விந்தையான வரவேற்பு வழங்கப்பட்டது.

ஏறத்தாழ அறுபது நாட்கள் அவர் தம் திருமுகம் காணாமல் சோக உருவங்களாய் உலவிய கழகத் தோழர்கள், அண்ணா விமானத்திலிருந்து தலையை நீட்டியதுமே மழை கண்ட பயிர் போல மகிழ்ச்சி தாங்காமல் துள்ளிக் குதித்தனர்; "அண்ணா வாழ்க!" என்னும் முழக்கங்கள் விமான நிலையமே அதிர்ந்திடும் அளவுக்கு அலைகளை எழுப்பின.

குடை பொருத்தப்பட்ட திறந்த 'ஜீப்' வண்டி அண்ணாவுக்காக விமான நிலையத்தில் காத்திருந்தது. விமானத்திலிருந்து இறங்கி அண்ணா தாமே அதில் வந்து ஏறிக்கொண்டார். குடையின் கீழ் அவர் வசதியாக அமர்ந்துகொள்ள, நான் அருகில் நின்றிருக்க, தாவலரும் மற்றவரும் உடனிருக்க, அங்கிருந்து மெள்ளக் கிளம்பிற்று அந்த ஊர்தி.

மீனம்பாக்கத்திலிருந்து நுங்கம்பாக்கம் வரை வழிநெடுகக் கண் கொள்ளாக் காட்சியாக வண்ண வண்ணத் தோரணங்கள், வரவேற்பு வளைவுகள், வளையாத வற்றாத வாழ்த்தை உள்ளங்கள் இலட்சக் கணக்கில்.

வீடு வந்து சேர்ந்ததும் அண்ணு மாடிக்குச் சென்றார்.

சில நொடிகளில் நண்பர் பொன். சொக்கலிங்கம் என் அருகே வந்து என்னே மாத்திரம் அண்ணு மாடிக்கு வரச் சொல்வதாகக் கூறினர்.

நான் மேலே சென்றேன். என்னே அமருமாறு கூறிய அண்ணு நாம் அணிந்திருந்த சட்டையை மேலே தூக்கி அறுவைச் சிகிச்சை நடைபெற்றிருந்ததைக் காட்டினர்.

அதனைக் கண்டதும் எனக்கு நெஞ்சமே வெடித்து விடும் போல் இருந்தது. வேதனை தாங்க முடியாமல், விம்மலை அடக்க முடியாமல் அண்ணுவை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதேன். அவரும் என்னைத் தழுவிக்கொண்டு அழுகையை அடக்க முடியாமல் தவித்தார்.

தாய்ப் பறவையும் குஞ்சும் போல அந்தத் தழுவலிலேயே அண்ணுவும் நானும் குமுறிக் குமுறிக் கரைந்தோம்.

பின்னர் நீண்ட நேரம் தாட்டின் நிலைமை, கட்சியின் நிலவரம் முதலானவை குறித்து உரையாடினோம்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று மனமார நம்பிய அண்ணு மறுபடியும் அரசாங்க அலுவல்களில் ஆழ்ந்திடலானார்.

சில நாட்கள் ஓய்வெடுத்துக்கொண்டு பிறகு அலுவலில் ஈடுபடலாமே என்று எவ்வளவோ நாங்கள் எடுத்துச் சொல்லியும், எங்கள் வார்த்தைகளைக் கேட்க மறுத்து விட்டார், அந்தத் தொண்டின் மணிவிளக்கு.

அது மட்டும் அல்ல—

நலிவுற்றிருக்கும் தம் உடல் நிலைக்கு ஏற்பச் சில வசதிகளைச் செய்துகொள்ளவும் அவர் மறுத்துவிட்டார்.

உலவிடத் தோட்டம் சூழ்ந்த விசாலமான வீட்டில், குளிர் சாதன அறையில் இருப்பதே அண்ணுவின் உடலுக்கு ஏற்றது என்று அண்ணுவுக்குச் சிகிச்சையளித்த டாக்டர் மில்லர் சொல்லியனுப்பியிருந்தார். அவரது ஆலோசனைப்படியே இருபது நாட்களுக்குள் அமைச்சர் ஏ கோவிந்தசாமி அவர்கள் இருந்த இல்லம் மாற்றி அமைக்கப் பட்டது.

அண்ணுவும் அந்த வீட்டை வந்து பார்த்தார். சோபாவில் உட்கார்ந்து பார்த்தார்.

'இந்த சோபாவைவிட ஏழையின் நெஞ்சில் எனக்காகப் போடப் பட்டிருக்கும் சோபா உயர்ந்தது; இந்த விசாலமான கட்டடத்தைவிட

ஏழையின் குறுகலான குடிசையில் எனக்காகத் தரப்பட்டிருக்கும் இடம் பெரியது!' என்று எண்ணினேன் போலும் அண்ணு.

''இந்த வீடு எனக்கு வேண்டாம்" என்று அறிவித்து விட்டார்.

சென்னை மாநிலம் என்றிருந்ததைத் 'தமிழ்நாடு' என மாற்றிப் பெயர் சூட்ட வேண்டுமெனத் தமிழகச் சட்ட மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை டில்லி நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டதையொட்டி 'தமிழ்நாடு' மகிழ்ச்சி விழா நாடு எங்கணும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

சென்னையில் 2-12-68 அன்று அந்த விழா நடைபெறுவதற்கு ஏற்பாடாயிற்று. அதில் நானும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., சி. பா. ஆதித்தனர் ஆகியோரும் கலந்து கொண்டோம்.

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய பின்னர் வேறு எந்தப் பொது நிகழ்ச்சியிலுமே பங்கேற்காமல் இருந்திட்ட அண்ணு, அந்தப் பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாவில் மட்டும் முதன் முதலாகக் கலந்து கொண்டார். மருத்துவ வல்லுநர்கள் தடுத்தும்கூட அவரால் விழாவுக்கு வராமல் வீட்டிலேயே இருந்திட முடியவில்லை.

அதுபற்றி விழாவிலேயே அண்ணு இவ்வாறு குறிப்பிட்டார்:

''...நான் இந்த மகிழ்ச்சி விழாவில் கலந்துகொள்ள முடிவெடுத்த போது, 'நீங்கள் கூட்டத்தில் பேசக்கூடாது; அதிக நேரம் பேசினால் உடலுக்கு ஊறு நேரிடும்' என டாக்டர்களும், நண்பர்களும் தடை விதித்தனர். 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழா நடைபெறும் இன்றைய தினம் நான் பேசுவதாலேயே இந்த உடலுக்கு ஊறு நேருமென்றால் இந்த உடல் இருந்தே பயனில்லை என்று கூறி, எனது வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவேண்டும்' என மருத்துவர்களிடமும் நண்பர்களிடமும் கேட்டுக் கொண்டேன்.

''இத்தகைய வாய்ப்பு ஒருவரது வாழ்க்கையில் ஒரு முறை தான் வரும்; பல முறை வருவதில்லை!"

அண்ணுவின் இந்த உருக்கமிகு உரையைக் கேட்டதும் அரங்கில் குழுமியிருந்தோர் அனைவரது விழிகளுமே குளமாயின.

140

கலைவாணர் சிலை திறந்தோம்!

சிரிப்பு விருந்தளித்தார்; சிந்தனை மருந்தளித்தார். பட்டு விரிப்பொத்த உள்ளத்தால் பாசவெள்ளம் பாயவிட்டார். நரிப்போக்குத் துளியுமிலா நகைச்சுவையின் மாமன்னர்; எரிப்பாக ஒருசொல்லும் இயம்பாத என்.எஸ்.கே.

அவருக்குச் சென்னையில் சிலை எழுப்பிட வேண்டும் என்கிற ஆசை எங்கள் எண்ணத்தில் அலை மோதிக்கொண்டிருந்த போதிலும், அது ஈடேறுமலே போய் விட்டது பல ஆண்டுகளாக.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு எழிலோடு நடந்து முடிந்த சமயம். அந்த மாநாட்டு ஊர்வலக்காட்சிக் குழுவினர் ஊர்வலத்தைப் படமாக்கி வெளியிட்டதில் கிடைத்த மிச்சப் பணத்தை என்ன செய்வது என்று என்னிடம் கேட்டனர்.

"கலைவாணர் அவர்களுக்குச் சிலை வைக்கலாமே!" என்று என் எண்ணத்தை வெளியிட்டேன். உடனே அதனை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

சென்னை தியாகராயநகரில் வாணி மகாலுக்கு அருகில் நான்கு சாலைகளும் சந்திக்கும் பரந்த இடத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் கம்பீரமான முழுத்தோற்ற உருவச்சிலை அமைக்கப்பட்டது.

இருபதாயிரம் ரூபாய் செலவில் எடுப்பாக எழுப்பப்பட்ட அந்தச் சிலை 1969 ஜனவரித் திங்களில், பொங்கல் திருநாளில் என்னுடைய தலைமையில் திறந்து வைக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால் யாரைக்கொண்டு சிலையைத் திறப்பது என்று சிந்தித்தபொழுது, அண்ணாவே எங்கள் கண்ணெதிரில் தோன்றினார். கலையுலகையே இருள் மூட்டம் கவிந்திடும் வகையில் கலைவாணர் சிறைப்பட்டிருந்த காலத்தில், அவரைப்பற்றி மற்றவர் எல்லாரும் மவுனம் சாதித்த வேளையில் அவரையும் எம்.கே. தியாகராஜ பாகவதரையும் விடுதலை செய்திடத்தான் வேண்டும் என்று விடாமல் தமது 'திராவிட நாடு' இதழில் அஞ்சாமல் கோரிக்கை எழுப்பிய கரம் அண்ணாவின் கரமே அல்லவா? அந்தக் கரத்தைக் கொண்டே கலைவாணர் சிலையைத் திறந்து வைப்பதே பொருத்தமான செயலாக எங்களுக்குத் தோன்றியது.

அண்ணு அவர்களோ உள்ளூற மறுபடியும் வாட்டத் தொடங்கிய நோயின் காரணமாக உருவமே மாறி, இளைத்து மெலிந்து, பழைய தெம்பை, கம்பீரத்தை இழந்துகொண்டிருந்த சமயம். எனினும், ஓய்வு கொள்வதற்காக அவர் காஞ்சி செல்லும் வழியில் அப்படியே கலைவாணர் சிலையைத் திறந்து வைத்துவிட்டால் நன்றாக இருக்குமே என்று என் கருத்தினை வெளியிட்டேன். மறுத்திடவில்லை அவர்; உடனே ஒப்புக்கொண்டார். டாக்டர்கள் தடுத்திட்ட போதிலும், அந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விருப்புடன் இசைந்தார்.

சிலை அமைக்கப்பட்ட இடத்திற்கு இருவரும் ஒன்றாகவே சென்றோம்.

கலைவாணர் சிலையினைத் திறந்து வைத்திட அண்ணாவால் வரமுடியுமோ, வரமுடியாதோ என்று ஐயப்பாடு கொண்டிருந்தவர்களுள் ஜெமினி அதிபர் திரு எஸ். எஸ். வாசன் அவர்களும் ஒருவர். அண்ணாவை நான் அழைத்துக்கொண்டு வந்ததால் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார் அவர்.

"இப்போதுதான் நல்ல நேரம் வந்திருக்கிறது கலைவாணர் சிலையைத் திறப்பதற்கு!" என்று உணர்ச்சிப் பெருக்கோடு உரைத்தார்.

அதைப்பற்றி அண்ணா அவர்கள் தம்முடைய சொற்பொழிவினூடே நகைச்சுவை மிளிர்ந்திட இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

...திரு வாசன் அவர்கள், இப்போதுதான் நல்ல நேரம் வந்திருக்கிறது' என்று கூறினார். வாசன் குறிப்பிட்ட நேரம் ராகுகாலமோ எமகண்டமோ இல்லாத நேரம் என்ற பொருளில் இல்லை. அவருடைய நண்பர்களான நாங்கள் ஆளவந்திருக்கின்ற நல்ல நேரத்தைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார்."

அண்ணா கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி கலைவாணர் சிலை திறப்பு விழாதான். அதற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதை எண்ணும்பொழுது, ஏதோ ஒரு வகையான வியப்பும் உண்டாகிறது.

இதில் இன்னொரு பொருத்தமான வேடிக்கை என்னவென்றால், கலைவாணர் தாம் இறப்பதற்கு முன்னால் இறுதியாகப் பங்கேற்ற பொது நிகழ்ச்சி அண்ணா படத்திறப்பு விழாதான். அண்ணா அவர்கள் கடைசியாகக்கலந்துகொண்ட பொது நிழ்கச்சி கலைவாணர் சிலை திறப்பு விழாதான்!

இருவர்தம் இதயப் பிணைப்புக்கு, எல்லையில்லாத நட்பின் ஆழத்துக்கு, எத்தகைய அருமையான எடுத்துக்காட்டுகளாக அமைந்து விட்டன அந்த இரு விழாக்களும்!

''ஓர் இலையின் மேலுள்ள பனித்துளிபோல- உனது வாழ்க்கை என்பது காலத்தின் விளிம்புகளில் நடனமாடிக் கொண்டிருக்கட்டும்!''

என்ருர் கவியரசர் ரவீந்திரநாத தாகூர்.

பனித்துளி மறையக் கூடியது.

ஆனல் அண்ணு தமிழினத்தின் எழுச்சிக்காக, ஏற்றத்திறகாகப் புரிந்துள்ள பணிகள் மறையக் கூடியனவா?

காலங்கள் மாறலாம்.

தமிழக மண்ணில் அண்ணு பதித்து விட்டுச் சென்றுள்ள கால்டிச் சுவடுகள் மாறுமா என்ன?

உறக்கமும் இறப்பும் ஒன்றே என்ருர் திருவள்ளுவர்.

அந்த மீளாஉறக்கம் எங்கள் அண்ணனே அத்துணை விரைவில் வந்து அணுகும் என்று எவருமே எதிர்பார்த்திடவில்லே.

டாக்டர் மில்லர் அவர்கள் புற்று நோயைக் கடல் நண்டுக்கு ஒப்பிட்டார். அந்தக் கடல் நண்டு அண்ணுவின் மென்மையான உடம் பிற்குள் எத்தனேயோ வளேகளே வெளியே தெரியாமலே தோண்டிக் கொண்டிருந்திருக்கிறது.

டாக்டர்கள் அதனே 'செகண்டரி' என்று சொன்னர்கள்.

மறுபடியும் தாங்கொணுத வலி அண்ணுவைத் தாக்கத் தொடங் கிற்று.

உடனடியாக வேலூர் மருத்துவமனேக்குக் கொண்டு செல்ல முடிவெடுத்தோம்

அண்ணு அதற்கு உடன்படவில்லே.

''சென்னேயில் அரசாங்க மருத்துவ மனே இருக்கும் போது அதை விட்டுவிட்டு வேலூரில் உள்ள தனியார் மருத்துவ மனேக்குச் செல்வது நாமே நம்முடைய அரசு மருத்துவ மனேயை மதிக்காதது போல ஆகி விடும்'' என்ருர்.

பொதுவாகத் தனியார் துறைகள் தளிர்ப்பதை விட, ஏழை எளிய வர்களுக்குப் பயனளிக்கக் கூடிய அரசாங்கத் துறை ஆக்கம் பெறுவதிலேயே அண்ணுவுக்கு அக்கறை மிகுந்திருந்தது என்பதனேயே அவருடையவாதம் புலப்படுத்தியது.

ஆயினும், அவருக்கு வந்துற்ற கொடிய நோய்க்குச் சிகிச் சையளித்திட வேலூரில் சில புதிய கருவிகள் வந்திருப்பதைக் கூறி அங்கே அழைத்துக் கொண்டு சென்றிட ஆவன செய்தோம்.

எங்களுடன் உரையாடிய அண்ணா குளியலறைக்குச் சென்றார். அங்கே அவர் கீழே விழுந்து மூர்ச்சையானார். ஓடிப் போய்த் தூக்கி நிமிர்த்தினோம். இனி வீட்டிலேயே வைத்திருப்பதில் பயனில்லை என்பதனை உணர்ந்து சென்னை-அடையாற்றில் உள்ள புற்று நோய் மருத்துவ நிலையத்துக்கு அவரைக் கொண்டு சென்றோம்.

டாக்டர் சி. எஸ். சதாசிவம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மருத்துவ வல்லுநர்கள் குழு அண்ணாவின் உடல் நிலையைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கொண்டது.

அமைச்சர்களாகிய நாங்கள் அத்தனை பேரும் எங்கள் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளையெல்லாம் ரத்துச் செய்து விட்டு அண்ணாவின் அருகிலேயே தங்கி விட்டோம்.

கழகத் தோழர்களும் பொதுமக்களும் சுமக்க வொண்ணா இதய வேதனையைச் சுமந்தவர்களாக அலை அலையாக அடையாறு நோக்கிப் படையெடுத்த வண்ணம் இருந்தனர்.

பம்பாயில் உள்ள 'டாட்டா நினைவுப் புற்று நோய்' மருத்துவ நிலையத்தில் பணியாற்றும் டாக்டர்கள் இருவர் சென்னைக்கு வரவழைக் கப்பட்டனர், அண்ணாவைப் பரிசோதனை செய்வதற்காக.

நிலைமை என்ன ஆகுமோ என்கிற அச்சம் எங்கள் நெஞ்சங்களை வாட்டிடவே அண்ணாவுக்கு முன்னர் சிகிச்சையளித்த டாக்டர் மில்லரையே அமெரிக்காவிலிருந்து வரவழைப்பது என்று முடிவெடுத் தோம்.

21-1-1969 அன்று நியூயார்க்கிலிருந்து டாக்டர் தியோடர் மில்லர் அவர்கள், தமக்குத் துணையாக டாக்டர் ஹென்ஸ்கே என்னும் இன்னொரு அமெரிக்க டாக்டரையும் அழைத்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தார்.

நான்கு நாட்கள் சென்னையில் தங்கி சிகிசசைகள் செய்தார்.

ஆனால்-

எத்தனை சிகிச்சைகள் செய்தென்ன? எத்துணை சக்தி வாய்ந்த மருந்துகளையெல்லாம் உலகின் எந்த மூலையிலிருந்தும் வரவழைத்துப் புகட்டி என்ன?

எத்தனை விழிமணிகள் இணைக் கூடுகளையே மூடிடாமல், திறந்த படியே இருந்தென்ன?

எத்தனை இதயங்கள் விம்மி வெடித்து,

'ஓ, இரக்கமற்ற சாவே! எங்கள் அண்ணனின் உயிருக்குப் பதிலாக என்னுடைய உயிரை எடுத்துக் கொள்ளேன்!'

என்று கதறிப் புலம்பிக் காணிக்கை செலுத்திட முன் வந்தென்ன?

141

இதயத்தைத் தந்திடு, அண்ணு!

1969-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவு. உலகமே அமைதியில் புதைந்து கொண்டிருக்கும் வேளை.

ஆஞல் அடையாறு மருத்துவ மனையைச் சுற்றிலுமோ இலட்சக் கணக்கான மக்கள் கடல் வெட வெடக்கச் செய்யும் கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் அண்ணுவைப் பற்றிய நற்செய்தி கேட்டிட ஆர்வத்தோடு அலை மோதிக் கிடக்கிறது.

பன்னிரண்டு மணியும் தாண்டி பிப்ரவரி மூன்றும் நாளி தொடங்குகிறது.

மணி 0.22.

திடீரென்று ஒரு பேரதிர்ச்சி-பிரளயம்.

இறப்புக்கு இரக்கம் ஏது?

அதற்கு அண்ணுவின் இன்னுயிர் மீது அதற்குள் என் தான் அத்துணை விருப்பமோ? வெறிப் பாய்ச்சலோ?

எத்தனை எத்தனையோ ஏழை எளிய உயிர்களைக் கரையேற்றிடப் புறப்பட்ட ஒரு மாபெரும் கருணைக் கப்பல் திடீரென்று கவிழ்ந்து போயிற்று!

எத்தனை எத்தனையோ இருண்ட மனக்காடுகளில் எல்லாம் சிந்தனை ஒளிக்கதிர்களைப் பரப்பிய ஒரு நந்தா விளக்கு திடீரென்று அணைந்து விட்டது!

நாடே கண்ணீர்க் கடலாய் மாறிற்று; கதறிக் கதறிப் புலம்பிற்று.

'அண்ணு இறந்து விட்டார்' என்ற சொற்களையே கேட்கப் பொறுக்காத சிலர் அந்தக் கணமே தங்கள் உயிரினைத் துறந்து அவரைத் தேடிச் சென்றனர்!

அண்ணுவின் சடலத்தையாவது காண மாட்டோமா என்ற ஆற்ருெணுத் துயருடன் சென்னை நோக்கி வந்த ரயிலின் உள்ளே இடங்கிடைக்காமல் மேற்கூரையிலும் ஏறி வந்த இலட்சியத் தங்கங்கள்

முப்பதுக்கும் மேற்பட்டோர் சிதம்பரம் அருகே தங்கள் தலைகளையே காவு கொடுத்து மாண்டனர்.

இறுதி அஞ்சலி செலுத்திட இதுகாறும் வேறு எந்தத் தலைவருக்குத் தான அப்படியொரு மக்கள் வெள்ளம் சென்னையை நோக்கிப் பாய்ந்து வந்தது?. இனி எந்தத் தலைவருக்குத்தான் அப்படியொரு வெள்ளம் பாயப் போகிறது?

இராஜாஜி மண்டபத்திற்குக் கொண்டு வரப்பட்ட அண்ணாவின் சடலத்தைக் கண்டிடச் சுவர்களின் மீது ஏறி அப்படியே நீர்க் குழாய் களையும் தாவித் தாவி எத்தனையோ ஆடவர்கள் மட்டுமா, பெண்களும் கூட இடுப்பொடிந்து விழுந்தார்களே! படிகட்டுகளிலே மேலேறி வர முடியாமல் புரண்டு உருண்டார்களே! எத்தனையோ பேர் மயங்கி விழுந்தார்களே! மடிந்தும் போனார்களே!

எல்லாத் துறைகளிலுமே புதிய வரலாறு படைத்திட்ட அண்ணா தமது மரணத்திலும் அப்படியொரு வரலாற்றைப் படைத்து விட்டார்!

அவருடைய இறுதிப் பயணமுந்தான் எத்துணை பிரம்மாண்டமான அழுகைக் காவியமாய் அமைந்து போயிற்று! மவுண்ட்ரோடில் செம்பட்டு விரிப்பாகச் சிரித்துக் கிடந்த அந்த ரோஜாப் பூக் குவியலெல் லாம் அண்ணாவின் சவப்பெட்டி கடந்து சென்ற பின்னர் இலட்சக் கணக்கான காலடிச் சுவடுகள் பட்டுக் கன்னங்கரேல் என்று கரியாகி விட வில்லையா?

பிறப்பும் இறப்பும் கலந்த வாழ்க்கையின் தத்துவத்தையே கரியாகிப் போன சிவந்த ரோஜாக்கள் பிரதிபலிப்பதாக அப்போது நான் கருதிக் கொண்டேன்.

அண்ணா அவர்கள் மீளா உறக்கத்தில் ஆழ்ந்ததும் குடும்ப வழக்கப் படியே அவர் தம் சடலத்தை எரிப்பதற்கே முதலில் எண்ணப்பட்டது.

கிருஷ்ணம்பேட்டை சுடுகாட்டில் தகனம் செய்யப்படும் என்று விடியற்காலை வெளியான ஏடுகளிலும் செய்தி வந்து விட்டது.

ஆனால் எங்களுக்கென்னவோ பத்தோடு பதினொன்றாக அவர் அவ்வாறு எரிக்கப்படுவது உகந்ததாகப் படவில்லை.

தமிழினத்தையே தலை நிமிர்த்திடச் செய்து கலங்கரை விளக்கமாக வழிகாட்டிய, ஒளியூட்டிய அண்ணா அவர்களுக்குக் காலாகாலத்திற்கும் அழியவே அழியாத ஒரு நிலையாய நினைவுச் சின்னம் எழுப்புவதே முறையான நன்றிக் கடன் ஆகும் என்று நம்பினோம். அதற்கு அவர் தம் சடலத்தை எரிக்காமல் புதைக்கச் செய்து அங்கே கல்லறை எழுப்புவதே சரி என்றும் கருதினோம்.

அந்தக் கருத்தினை அண்ணியார் மற்றும் அண்ணுவின் குடும்பத் தினரிடம் தெரிவித்தபோது அவர்கள் எல்லோருமே அதனை ஏற்றுக் கொண்டனர்.

உடனே வங்கக் கடற்கரையோரத்தில் அந்தத் தங்கக் குணத் தலைவரின் சடலம் தங்குவதற்குரிய இடம் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

புதர்கள் மண்டிக் கிடந்த இடம்தான் அது எனினும்—

'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது'
என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கவிஞெழுகும் கல்லறை எழுப்பப்பட்டுப் புதுமை அழகு கொழிக்கும் நினைவுச்சின்னம் உள்ள-இடமாக அணையா விளக்கு அமைந்த நெடுந்தூண் நிற்கும்" இடமாக அது மாற்றப்பட்டுவிட்டது.

சென்னைக்குச் செல்பவர்கள் அண்ணு சமாதி அழகினைப் பருகிடாமல் திரும்ப மாட்டார்கள் எனச் சொல்லிடும் அளவுக்கு அந்த நினைவு நெடுந்தூண் ஒளிவீசி நிற்கிறது.

தமிழக முதல்வராக இருந்த அண்ணு அவர்களின் மறைவு இந்தியா முழுவதையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியதால் இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியும் மற்ற மாநில முதலமைச்சர்களும், ஏனைய அரும்பெரும் தலைவர்களும் வெளிநாடுகளின் தூதுவர்களும் இரங்கற் செய்திகளை அனுப்பிய வண்ணம் இழிந்தனர்.

மத்திய அரசின் சார்பில் அண்ணுவின் சடலத்துக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திட அமைச்சர் ஒய். பி. சவான் அப்போது வருகை புரிந்தார்.

அரசாங்க மரியாதைகளுடன் அண்ணுவின் சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில் ஆட்சி யந்திர ஓட்டத்தில் தேக்கம் ஏற்படாமல் இருந்திட அரசாங்க அளவில் இன்னெரு ஜனநாயகக் கடமையையும் நிறைவேற்ற வேண்டி யிருந்தது.

இந்திய அரசியல் சட்ட விதிகளின்படியும் மரபுகளை ஒட்டியும், அண்ணு மறைந்த பின் அரை மணி நேரத்திற்கெல்லாம் உடனடியாகப் புதிய தற்காலிக அமைச்சரவையொன்று அன்றிரவே கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் அமைக்கப்பட்டு, பதவி ஏற்பு உறுதி மொழி எடுத்துக் கொண்டது.

நாவலர் அவர்கள் தற்காலிக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். மற்ற அமைச்சர்கள் அனைவரும் அந்தந்தத் துறைகளு டனேயே புதிய அமைச்சரவையில் இடம் பெற்ருேம்.

அடுத்தாற்போல் நிலையான அமைச்சரவை அமைப்பதற்குரிய சட்டமன்ற தி. மு. கழகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று 10-2-1969 அன்று சட்டமன்ற விடுதியில் கூடியது. காலஞ் சென்ற அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் அதற்குத் தலைமை தாங்கினார்.

தேர்தல் நடைபெற்று முடிந்த பின், வெளியே காத்துக் கொண்டு இருந்த செய்தியாளர்களிடம்-

"தி. மு. க. சட்ட மன்றக் கட்சியின் தலைவராகத் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்"

-என்று நாவலர் அவர்கள் தெரிவித்தார்கள்.

கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் அன்று மாலையே தமிழக முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். மற்ற அமைச்சர்களும் என்னைப்போலவே தமிழில் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அந்த நிகழ்ச்சி முடிவுற்றதும் நேரே அண்ணா சாலைக்குச் சென்று எங்களையெல்லாம் அரசியலிலே வளர்த்து ஆளாக்கிவிட்ட எங்கள் இதயக் கோவிலிலே இறைவனுக்கே கொலுவேறிவிட்ட அறிஞர் அண்ணா அவர்களின் அழகுச் சிலைக்கு மாலை அணிவித்தேன். கடற் கரையிலுள்ள கல்லறையிலும் மலர் வளையம் வைத்து வணங்கினேன்.

பின்னர் கோட்டைக்குச் சென்று முதலமைச்சருக்குரிய அந்த இருக்கையை அணுகிய போது-

'அண்ணா இருந்த இருக்கையல்லவா?'

—என்று எண்ணிய அளவிலேயே அவருடைய மறைவினால் பீரிட்ட துளாத்துயரம் என் மனத்தை அழுத்தியது. என் கண்கள் கலங்கின.

அதன்பின் தலைமைச் செயலகத்திலிருந்து நேரே அடையாறு சென்று அங்கே நண்பர் கி. வீரமணியின் இல்லத்தில் தங்கியிருந்த தந்தை பெரியார் அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டேன்.

மூதறிஞர் இராஜாஜி, காயிதே மில்லத், காமராசர், பக்தவத்சலம் ஆகியோரது இல்லங்களுக்குச் சென்று அவர்களது வாழ்த்துக்களையும் பெற்றேன்.

பதவி என்பது பொது மக்களுக்குப் பணியாற்றக் கிடைத்திட்ட ஒரு கருவிதான். அந்தக் கருவியை முறையாக, நெறியாக முழுப்பலன் விளைவிப்பதற்காகப் பயன் படுத்துவதைப் பொறுத்துத் தான் அந்தப் பதவிக்கும் பெருமை, அதனை ஏற்பவருக்கும் பெருமை.

என்னைப் பொறுத்தமட்டில் அண்ணாவின் அடிச்சுவட்டில், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் முயற்சியில் என் நெஞ்சம் கூறும் நீதிக்கேற்ற முறையில் முதலமைச்சர் பொறுப்பினை நிறை வற்றுவதற்கு என்னாலானவரை முயன்று வந்திருக்கிறேன்.

எதிர்க்கட்சி நிலையில் இருந்த காலத்தில் என்னென்ன கழக இலட்சியங்கள் எதிரொலிக்கப்பட்டனவோ அவற்றையேதான் நான் முதலமைச்சரான பிறகும் செயற்படுத்திட முனைந்திருக்கிறேன்.

அமைச்சர்கள், கழகத் தோழர்கள், அதிகாரிகள் ஆகியோரது ஒத்துழைப்புடன் கடந்த ஐந்தாண்டு காலத்திற்குள் என்னென்ன காரியங்கள், எத்தகைய இடையூறுகள், தடைக் கற்களுக்கிடையே நடைபெற்றன என்பது உங்கள் யாவருக்கும் தெரியும்.

அவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக 'நெஞ்சுக்கு நீதி' இரண்டாம் பாகத்தில் பின்னர் எழுதலாம் என எண்ணியுள்ளேன்.

என்னைக் கைதியாக்கிச் சூழ்ந்து கொண்டிருக்கும் கடமைகளின் பெருஞ்சுமையால் காலத்தின் அருமையால் எனக்குச் சிறிது ஓய்வு தேவைப்படுகிறது.

வெகுவேகமாகப் பல நிலையங்களில் நிற்காமலே ஓடிவந்த விரைவுப் புகை வண்டி கூட இடையில் ஒரு பெரிய சந்திப்பில் களைப்பாற்றிக் கொள்ள நீரோ நிலக்கரியோ டீசலோ ஏற்றிக்கொள்ளச் சிறுபொழுது நின்று புறப்படுவது உண்டு.

அப்படித்தான் கொஞ்சம் இடைவேளை எனக்கும் தேவைப்படுகிறது.

சிறிது இளைப்பாறிய பின்னர் 'நெஞ்சுக்கு நீதி'யின் நீடித்தபயணம் இரண்டாம் பாகமாகத் தொடர்ந்து நடைபெறும் என்பதை உறுதியாகக் கூற விரும்புகிறேன். ஒன்றை மட்டும் இங்கே நான் தெளிவாகப் பதிய வைப்பதும் என் கடமையாகும். நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின்போதும் அண்ணா அவர்களைப்பற்றிய நினைவே எனக்கு ஊன்றுகோலாய்த் துணைபுரிகிறது.



அவருடைய இதயத்தை இரவலாகப் பெற்றுக் கொண்ட உணர்வோடு தான் நான் ஒவ்வொரு கணமும் நடை போடுகிறேன்.

அண்ணு அவர்களின் மறைவையொட்டி வானொலி மூலம் நான் என்ன அஞ்சலி செலுத்தினேனே அந்த ஒலி முழக்கங்கள் என் செவியிலும் எதிரொலித்த வண்ணமே இருக்கின்றன... வானொலியில் என்னுடைய அந்த இரங்கற்பாவைக் கேட்டுவிட்டு,

''அன்புள்ள திரு. கருணாநிதி அவர்களுக்கு,

அண்ணுவின் இதயத்தை இரவலாகக் கேட்டிருக்கிறீர்கள். அது இதுவரை எந்தக் கவிஞருக்கும் தோன்றுத கற்பனை''

-என்று திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் உளந் திறந்து மடல் விடுத்தாரே, அதுவும் என் நினைவில் நிழலாடிக்கொண்டே யிருக்கிறது.

அந்தக் கவிதை வரிகளுடனேயே இந்த 'நெஞ்சுக்கு நீதி' முதற்பாகம் முடிவுக்கு வருவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகிறேன்:

எம் அண்ணு.....இதய மன்னு
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று பகர்ந்தாயே
எமைவிடுத்துப் பெரும்பயணத்தை ஏன் தொடர்ந்தாய் ?
உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே!
என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி விட்டாய் ?
நிழல் நீதான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல்தேடப் போய்விட்டாய்; நியாயந்தானு ?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து எனச் சொல்லிக் கடற்கரையில்
உறங்குதியோ...?

நாத இசை கொட்டுகின்ற நாவை ஏன் சுருட்டிக்கொண்டாய் ?
விரல் அசைத்து எழுத்துலகில் விந்தைகளைச் செய்தாயே, அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய் ?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்துள்ளேன்
இன்று
மண்மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல் தடுப்பதென்ன
கொடுமை!
கொடுமைக்கு முடிவுகண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய் ?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்!
கடற்கரையில் காற்று வாங்கியது போதுமண்ணா
எழுந்துவா எம் அண்ணா!
வரமாட்டாய், வரமாட்டாய்
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா — நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அன்னை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா

வணக்கம்

முதற்பாகம் முற்றிற்று